1654

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோ
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்
யாச்சரிய மோதா னவர்க்கு."

விவேக சிந்தாமணி

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் ப

ந்தகம். 1. 1892ளூ மேமீ. இ... க்க

அறிவு இன்றியமையாததென்பது.

திருக்குறள்.

"அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்"

ருவன் என்று பிறந்தானோ அன்றுமுதலா
அறிவைச் சம்பாதிக்கத்தொடங்கி அதை
தோறும் பெருக்கிக்கொண்டேவரும் இயல்
று யிருக்கிறானென்பதை யாவரும் எளி
உணர்வார்கள்.

ருப்பிடம்விட்டுப் பெயரவறியாத இளங்
தை இருந்து, தவழ்ந்து விளையாடி, நிற்க
கக்கற்றுத், தாய்தந்தையர் இன்னாரென்
நீர் இன்னது நெருப்பு இன்னதென்றும்
த்தறியுமுன் படும் துன்பங்களையும், அத்து
ங்களுக்குப் பின்னிடாமல் அக்குழந்தை
றறை மேற்கொண்டு கடந்துசெல்லச் செ
அழகமைந்து ஊக்கமுற்று அறிவில் விருத்
டைவதையும் காண்போர் ஊகிக்கக்கூடிய
என்னவெனின்:—எவ்வளவுபேரறிவுடை
ரெனினும் அவரும் அவ்வறிவைப் பிறவி
யே பெற்றவரல்லரென்பதும், அவ்வளவு
ம் அவர் வருந்தி உழைத்தே அடைந்தி
வேண்டும் என்பதுமே. இதை ஒருதார
த்தால் விளக்கிக்காட்டுவோம். மரமும் செ
கொடியும் முளைத்துக் காடுபோற் கிடந்த
விடத்தை, மனோகரமான "பீபிள்ஸ்பா
என்னுமிடமாக்கி இச் சென்னைவாசிக
அளித்தவரும், 'வரும்படிவரி' இந்நாட்
ஏலாதவரியென்று மேலதிகாரிகளோடு
போராடினவருமான 'ஸர்சார்ல்ஸ்ட்ரெவ
என்னும் 'கவர்னர்' பிரபுவின் மனைவியி
பிறந்தோராய் "லார்ட் மெகாலே" என்று
வர் இருந்தார். அவர் இந்திய 'கவர்னர்ஜ
ஆலோசனைசபையில் ஒருகாலத்து 'மெ
உத்தியோகம் வகித்திருந்தார். அவர்
கீர்த்திபெற்ற கல்விமான்; உலகம் திகை
படியான பேரறிவைப் பெற்றிருந்தார்.
டைய அறிவு ஒரு புருடாயுளுள் அடைவ
அஸாத்தியமென்று எண்ணத்தக்க அள
ருந்தது. இவ்வறிவை அவர் பிறவியிற்
வரல்லர். மிக்க புத்திகூர்மையும் ஞாபக
யும் இயல்பிலுடையரேனும் இரவும் ப
விடாமல் மிக்க பொறுமையோ டுழை
அவர் பேரறிஞரானர்.

பொருள்களி னியல் புணர்ந்து அவற்றைப்
பயன்படச்செய்யுமறிவும், நோயில்லாவுடலும்,
வறுமையில்லா வாழ்வும், குற்றமற்ற நடையும்,
தானுகர்ந்து பிறர்க்குதவும் குணமும், ஆகிய
இவையெல்லாம், சரியான உழைப்பின்றி, எளி
தில் வருவனவல்ல. இவற்றுள் முதற்சொல்லிய
அறிவே மற்றைநான்கையும் கைகூடுவிப்பதாம்.
அவ்வறிவோ கல்லுழைப் பின்றி வாரா தென்
பது திண்ணம். சிலர் செல்வராயே பிறக்கக்

* 'பார்க்' - உத்தியான வனம்.

அறிவாலல்லது தம்

வ்வொருவரும் ஏதேனு
ாண்டேயிருக்கிறார்கள்,
ா அறிவைச் சம்பாதித்
க்கிறார்களென்னின்,—அ
ல் எல்லாவேலையும் வேலை
யும் அறிவல்ல; நல்ல நிலவ
த்தில் நமது சீர்திருத்தம்
ஏதேனுமொன்று உண்டாய்க்
க்கிறது. அவ்வாறுண்டாவன
-குப் பயன்படாவாம்; பயன்ப
ருப்ப எவிச் சில பயன்படுவனவற்றையும்
க்கு மென்பது நிச்சயம். ஆகவின், அந்நில
முள்ள தோட்டத்துக் குரியவன் கடமை
தனின்:—அதைச் சரியானபடி ...
, அதில் விசேடமாய்ப் பயன்படுவனவற்
உண்டாக்குதலன்றி அத்தோட்டம் சிறந்து
களிக்க அமையும்படி அப்பயன்படுவனவற்
இன்னது, இன்ன அளவில், இன்னவிடத்
இருக்கவேண்டு மென்று ஒழுங்கு படுத்த
வேண்டுமென்பதே. அறிவின் பயிற்சியும்
தன்மையதேயாம். சரியான வழியில் ...
முழைத்துப்பயன்படுமறிவைத்தேடி ...
வறிவு நமக்குவேண்டுங் காலையில் எண்ணிய
தவும்படி அதை ஒழுங்கு படுத்தி வைத்த
வேண்டும். ஆகவே, நாம் முற் சொல்லிய
, நோயில்லாவுடலைத்தந்து, வறுமையில்லா
ழ்வையளித்து, மறுவற்ற மார்க்கத்தைக்
ட்டி, உலகத்துக்கு உபகாரியாக்கு மறிவே
ன்படுமறிவாம்; இவ்வறிவைக் கொடுக்கும்
முப்பே நல்லுழைப்பாகும்.

சிலர் "உழைப்பினால் விசேஷப் பிரயோசன
மொன்று மில்லை; உழைத்தாலும் உழைக்காவி
ட்டாலும் வருவது தானேவரும்; வாராதது
ஒருநாளும்வாராது" என்று சொல்லிக்கொண்டு
காலத்தை வீணாகப் போக்கிச் சோம்பித்திரி
கிறார்கள். இப்படிப்பட்ட சோம்பேறிகளைப்
போல் குலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்பு
வேறில்லை. சோம்பியிருத்தல் தெய்வசம்மதமா
ன காரியமன்றென்று நம்மைச் சூழ்ந்துள்ள ஒவ்
வொருபொருளும் முறையிடுகின்றது. இப்பூமி,
நாடோறும் தன்னைச்சுற்றியும், வருடந்தோறும்
சூரியனைச்சுற்றியும் ஓய்வின்றிச் செல்லாகின்ற
து. காற்றோ பூமியிலுலவித்தீயவற்றைத் தூர
தில் நீக்கிச் சீதோஷ்ணங்களை மிதப்படுத்திச்
சரித்துக்கொண்டே யிருக்கிறது. தண்ணீர்,
சிலவிடத்து நதியாகவும், சிலவிடத்துக் கட
லாகவும் அசைவிலேயே நிற்கின்றது. சூரிய
னும் பூமியினின்றும் நீரை யிழுத்தவண்ணமா
யிருக்கிறான். அமைந்திருக்கும் மலைச்சிகரங்க
ளோ தொழிலற் றிருப்பனவாய்க் காணப்படி
னும் எப்பொழுதும் வேலையிலேயே யிருக்கின்
றன: அவற்றில் ஆவியாய் எழுப்பப்பட்
இறுகித் தரையின்மீது அருவியாய்ப் ...
கின்றது. பிராணிகளில் வேலையற்றிருப்பன
யில்லை. அற்பப் பிராணிகளும் தம்மிரையை
தின்னுமுன் அதைத்தேடிச் சம்பாதிக்க
... ஆகவே, எல்லாமுழைத்தே ஜீவ
... மென்பது தெய்வத்தின் ஏற்பாடென
... மனிதன் இதற்கு விலக்கான
னல்லன்; எந்நிலைமையிலும் அவனும் உழை
தே தீரவேண்டும்; வேலைசெய்யாச் சோ
பேறி ... சரீரத்துக்கும் சுகத்துக்கும்
... தன்னையன்டியிருக்கும்
... நீங்கு விளைக்கின்றான்.

... சிலர், உழைத்தால் எப்பொழுது
மியவாறு பயனுண்டாகிறதென்பது நிச்ச
மில்லையென்றும், அதிர்ஷ்டசாலிகளாகி
க்குமாத்திரம் நற்சமயம் வாய்க்கச் சி
பயனுண்டாகிறதன்றி, மற்றவர்களுக்கு
டுக்கிலலையென்று மெண்ணித் தம்முயற்சி
குறைக்கிறார்கள். அவ்வாறுசெய்வது ...
று; ஏனெனின், நற்சமயம் வாய்க்கப்
பெரும்பய னடைந்த அதிர்ஷ்டசாலிக ளெ
படுவோரின் சரித்திரத்தைப்பார்த்தால் அ
ளில் அநேகர் பலகஷ்டங்களிலகப்பட்டுத்
மை மேலெழும்பவொட்டாமல் தடுத்த
இடையூறுகளை விலக்கித் தமக்குப் பிர
மாயிருந்தவைகளை யெல்லாம் அநுகூ
மாக்கிக் கொண்டவர்களாகக் காணப்படுகிறா
இதை இரண்டோருதாரணங்களால் விள
காட்டுவோம்.

உலகத்துக்குப் பரமோபகாரமாகப்
வண்டியை யுண்டாக்கி, அதைக் கொண்டு
நுவதற்கு வேண்டிய எல்லா அங்கங்க

ஒன்று குறையாமல் ஏற்பாடுசெய்த "ஸ்டீவன்
ஸன்" என்பவர் நிலக்கரிச்சுரங்கத்து ஒரு நெ
ருப்பு வேலைக்காரரின்குமாரர்; சிறுவராயிருந்த
பொழுது மாடு மேய்த்துக்கொண் டிருந்தார்.
ஒருவரும் கணிக்காத இத்தாழ்மையான நிலை
மையிலிருந்து பெரிய உலோகோப காரியாவத
ற்கு எவ்வளவோபிரயாசைப்பட்டு எத்தனையோ
இடையூறுகளுக்கு வருந்தி அவற்றைக்கடந்து
போந்திருக்கவேண்டுமென்பது எளிதில் யாவ
ரும் ஊகிக்கக்கூடியதே. மிக்க கீர்த்திபெற்றுச்
சிறந்து விளங்கிய ரஸாயன சாஸ்திரக்ஞரான
"பாரடே" * என்பவரின் சரித்திரமும் இதை
புத போன்றதே; அவர் ஒருகொல்லன் புதல்வர்;
இளமையில் புஸ்தகம் கட்டுபவனிடத்தில் வே
லை கற்றுக்கொள்ள அமர்ந்து முன்னுக்கு வந்
தார்.

இவர்களன்றிச் சில வருஷங்களுக்குமுன் இங்
கிலாண்டில் 'போஸ்ட் மாஸ்டர் ஜனரல்' உத்
தியோகத்திலிருந்து இறந்துபோன 'பாஸெட்'†
என்பவர் சர்வகலாசாலையிற் கல்விகற்றுத்தேறி
யபின் "இவர் உலகத்தில் அநேக விசேஷகாரி
யங்களைச் செய்பவல்லவர்" என்று பிறரும்,
"நாமே இம்மகனைப் பெற்றுப் பெரும்பேறு பெற்
றோம், இவனால் எனக்கு எல்லாப்பெருமையும்
கிடைக்கலாம்" என்று தந்தையும் எண்ணி
யிருக்குங்காலத்தில், மிக்க பாவியமான (உடு-ம்)
வயதில் தாமும் தம் தந்தையும் வேட்டைக்
குப் போனவிடத்தில், தந்தை தூரத்தில் ஒரு
செடிமுழையில் மிக்க ஒளிவீசும் கண்களோடு
ஒருபறவை மறைந்து நிற்கிறதென்று மயங்கி
அறியாமல் அத்திசை நோக்கிச்சுடவே, சுட்ட
துப்பாக்கியினின்றும் இரண்டு ஈய ரவைகள்
செடிமறைவில் நின்ற தம்மகனது இரண்டுகண்
களிலும்பாய, இரண்டுகண்களையும் இழந்துஉல
கத்தையே இழந்தவர்போ லானார். அதன்
பின்னர், தம்மால் பெரும் பயனடையலாமென்
று எதிர் பார்த்திருந்த தம் தந்தை "என்மகன்
உலகிற்கு உபகாரியாகாமலே போகும்படி அவ
னுக்கு நானே இத்தீங்கு விளைத்தேனே" என்று
மனம் வருந்தித் துயருறுவண்ணம் தம் கண்
ணால் ஆகவேண்டியவற்றை, பிறரொருவர்
கண்ணால் செய்வித்துக்கொண்டு, கண்ணிருப்
பவன்போலேயே இவர் வேலைசெய்ய உறுதி
செய்துகொண்டார். அவ்வுறுதிப்படியே உழை
த்து வேலைசெய்து, 'பார்லிமென்ட்' ஜனப்பிரதி
நிதி சபையில் முக்கியமானவரில் ஒருவராகவும்
ஆனார். இவர், அடிமுதல் நுனிவரையில் செவ்
வையாய் ஆராய்ந்தன்றி, ஒன்றையும் பேசார்,
ஒன்றையும் நடத்தார்; இவர் இந்தியாவின்மேல்
மிக்க அபிமானமுள்ளவர்; இத்தேசத்து வரு
ஷாந்தர வரவுசெலவு கணக்குகளைக் குறித்துப்
'பார்லிமென்ட்' சபையில் பிரசங்கமுண்டாகுங்
காலத்தெல்லாம், இவர் அவ்விதமான கணக்கு
களில் வெகு நிபுணராகையால், லக்ஷம்கோடிக்
கணக்கான தொகைகள் அநேகங்களைக்குறித்து
நல்ல நிச்சயமான அறிவோடு பேசுவார்; ஞாப
கக்குறிப்பு ஒன்றுமின்றிச் சிலவேளைகளில்
ஒருமணி இரண்டுமணி நேரம் அநேக விஷயங்
களடங்கிய பிரசங்கங்கள் செய்வார்; இவர்,
இவ்வாறு செய்வது தமக்குள்ள ஞாபக சக்தி
யாலல்லவென்றும், சொல்லவேண்டியவற்றை
ஒருவாறு காரணகாரிய சம்பந்தத்துடன் மன
த்து ஒழுங்கு படுத்திப் பிரசங்கிக்கத் தொடங்
கினால், ஒவ்வொன்றும் உரிய காலத்தில் உரிய
வார்த்தைகளால் வெளிப்படும் என்றும் சொல்
லுவார். இவர் சரித்திரத்தை ஊன்றிப் பார்ப்
போர் யாவர்க்கும் எந்நிலைமையிலும் "முயற்சி
யுடையோர் இகழ்ச்சி யடையார்" என்பது
செவ்வையாய் விளங்கும்.

அதிர்ஷ்டசாலிக ளெனப்படுவோரின் காரிய
மிவ்வாறிருக்க, அதிர்ஷ்டமில்லாதவ ரெனப்
படுவோரில் அநேகர் வாய்த்த சமயத்தைப்
பயன்படுத்தாமல் வீணாக்கினவர்களாகக் காண
ப்படுகிறார்கள்.

இன்னும் சிலர், புத்திவன்மை எல்லாவிதத்
திலும் சிறந்ததாயிருந்தாலல்லவோ உழைப்பி
னால் முதன்மையாய் வரக்கூடும்; உலகிற்குப்
பேருபகாரியாகவு மாகக்கூடும்; அத்தன்மை
யான புத்திவன்மை யில்லாதவரின் பிரயத்த
னத்தால் பிரயோசனமொன்று மில்லை யென்று
எண்ணுகிறார்கள். அப்படி நினைப்பதும் சரி
யன்று. எல்லாருக்கும் புத்திவன்மை எல்லா
விதத்திலும்சிறந்ததாயிருத்தல்இல்லையென்பது
மெய்யே; ஆதலால் எல்லாரும் முதன்மையாய்

* Faraday, † Heury Fawcot.

165411
3L
165411 Rm 211, M92 M92.1-2

வருதல் கூடாதகாரியமே. உலகத்துக்குப் பேருபகாரிகளாய் எங்கும் கீர்த்திபெற்று விளங்குபவர் சிலரேயாம். ஆயினும், புத்திவன்மை சிறிதுமில்லாது பிறப்பவரே யில்லையாகையால் உலகமுழுவதும் மதிக்கத்தக்க காரியஞ்செய்தல் எல்லாருக்கும் கூடியதன்றெனினும், ஒவ்வொருவரும், தம்மூராரும் தம்மை யறிந்தோரும் நன்குமதிக்கும்படி நடந்துகொள்ளக் கூடுமாதலின் பரோபகாரியாயிருத்தல் யாவராலும் சாத்தியமென்பது நிச்சயமே. ஆனால் ஒவ்வொருவரும் தமக்குச் சிறிதேனுமுள்ள புத்திவன்மையைச் செவ்வையா யுபயோகித்து, வாய்த்த சமயங்களை வீணாக்காது பயன்படுத்தி, நல்லறிவைத்தேடி, அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளல் வேண்டும். அப்படிச் செய்பவரே தமக்குரிய கடமையைச் செய்பவராவார். இது யாவராலும் செய்யக்கூடியதே.

முற்சொல்லியவையன்றி, எல்லோரும் ஒருக்காலும் மறவாது கருத்தில் வைக்கவேண்டியது வேறொன்றுளது; அஃதாவது உள்ளும்புறமும் ஒத்திருத்தலேயாம். வெளித்தோற்றத்தில் மிக்க அறிவுடையோர்போன்றும், நன்னடையோர் போன்றும், உலகோபகாரிகள் போன்றும் வேடம்பூண்டொழுகுவோர் பலர். இவ்வேடம் சிறிதுகாலம் பலிப்பதுபோற் காணப்படினும் சமயத்தில் மோசஞ்செய்யுமென்பது நிச்சயம்; அஃது உண்மையைப் புறத்தாக்கி ஆற்றொணா அவமதிப்பை விளைவிக்குமாகையால், வெளித்தோற்றத்துக்கேற்க உள்ளத்தூய்மையும் இருத்தல்வேண்டும். அஃதவ்வாறு அமைந்திருக்குமிடமே நன்னெறியுள்ளவிடமாகும். நன்னெறியே நன்குமதிப்புக்குக் காரணமாம். இந்நன்னெறியையும் அதனாலுண்டாகும் நன்குமதிப்பையும் யாவரும்பெற வல்லவரேயாம்.

இதுவரையிற் சொல்லியவற்றால் யாம் வற்புறுத்துவது யாதெனின்,—எல்லாரும் உள்ளும் புறமும் ஒத்துத் தம்மைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படச் செய்துகொள்ளக் கூடுமென்பதும், இதுவே எல்லாருக்கும் முக்கியக்கருத்தாயிருக்கவேண்டுமென்பதும், இதற்கு அறிவைச் சாதனமாய் அடையவேண்டுமென்பதும், சோம்பலின்றித் தமக்கு இயற்கையிலுள்ள புத்திவன்மையைச் சரியானபடி உபயோகிப்பவருக்கே நல்லறிவுண்டாகுமென்பதும், நல்லறிவைப்புகட்டும் புத்தகங்களைப்படித்தலிலும், நல்லாரோடிணங்கலிலும், பொருள்களின் குணங்களை நன்காராய்தலிலும், இயற்கைவன்மையை உபயோகப்படுத்துவதே அறிவுக்குரிய உழைப்பென்பதும் யாவரும் நன்குணரவேண்டுமென்பதே.

இயற்கையிலுள்ள புத்திவன்மையைவாய்த்த சமயத்துக்குத் தக்கபடி உபயோகித்து, அறிவையடைந்து, அதை யுக்தாயுக்தமுணர்ந்து பயன்படச்செய்வதே விவேகமெனப்படும். இவ்விவேகம் சிந்தித்ததைக்கொடுக்கும் இயல்பினதாகையால் இது சிந்தாமணி யேயாம். ஆதலின் இவ் விவேகசிந்தாமணியை யாவரும் பெற்றுப் பயன்படல் வேண்டுமென்று யாம் எப்பொழுதும் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். நாராயணசாமி ஐயர்.

தமிழ்ப் பாஷைப் பயிற்சி.

[தமிழ்ப்பாஷை சிறந்ததும் இனியதுமென்று அப்பாஷாபண்டிதர்கள் அதைப்பற்றிப் பேசுங்கால் பெருமைகொண்டாடினும், அப்பாஷைப் பயிற்சி தற்காலந் தமிழைச் சுயபாஷையாக வுடையாருள்ளும்விர்த்தியடையாமல் க்ஷீணித்துவருகிற விஷயம் யாவரும் அறிந்ததேயாம். யாவரும் அறிந்தும், அப்பாஷையை அநாதரவு செய்வதுபிசகென்று பல்லோர்கூறியும், அதை யாதரித்து அப்பாஷையின் பயிற்சியை விர்த்தி செய்யவும், கற்றறிந்தோர் தாமறிந்தவற்றைச் சாதாரண ஜனங்களும் அறியும்படி அப்பாஷையில் தெரிவித்து, தற்காலத்தெங்கும் எல்லாரும் அறியவேண்டிய அவசியமான பலமுக்கிய விஷயங்கள், கருத்துகள், அபிப்பிராயங்களைத் தெள்ளிதாகத் தெரிவித்து, உபயோகமான அறிவைச் சனங்களுக்குள் பரவச் செய்வது சாத்தியமாகும்படி அப்பாஷையையே காலதேச மாறுபாடுகளுக்கு ஏற்க வழக்கத்தில் விர்த்தி செய்யவும், பலர் ஒன்று சேர்ந்து பெருமுயற்சி செய்து பயன்விளைவித்ததைக்காணோம். இவ்வித முயற்சி செய்ய நம்முள் தக்கோர் பலருளர். ஆனால் அவர்கள் ஒத்து நின்று ஒருங்

காக உழைப்பதே அரிதாயிருக்கிறது. உழைக்கவேண்டுமென்று ஒருகால் நல்லெண்ணங்கொண்டு எடுத்த முயற்சியும் ஆரம்பத்தில் அடிப்போட்டதோடு நின்றது. இப்பொழுது தமிழ்ப்பாஷை சீர்பெற்றுப் பரவி முற்றும் பிரயோசனப் படுவதற்கு வேண்டிய அம்சங்கள் பலவற்றுள் முக்கியமானவை இரண்டு. முதலாவது நம்மில் கற்றோருக்குள் தமிழ்ப்பாஷாப் பயிற்சி பரவி விர்த்தியடைய வேண்டும். அவர்கள் முயற்சியால் உபயோகமான அறிவைப்பரவச் செய்வதற்கவசியமான, சாதாரண ஜனங்களுக்கும் விளங்கத்தக்க சுலபமான வசனநடை தமிழில் விர்த்தியடைந்து வழக்கத்துக்கு வரவேண்டும். இதற்குப் பழங்காலத்துப் பண்டிதர்கள் உதவி விசேஷமாகப் பிரயோசனப் படாது. அவர்கள் தங்கள் சுபாஷையின் அருமைபெருமையைக் கொண்டாடும் செருக்கில் உபயோகத்தை மறந்து, வர்ணனையும் வெறுஞ் சொற்பிரயோகங்களும் நிறைந்த 'உயர்நடை'யையே உசிதமாகப் பாவித்தனுசரிப்பார்கள். அல்லது விருத்தங்களும், அந்தாதி, கலம்பகம் முதலிய வெறுங்கவிகளும் பாடப்புறப்படுவார்கள். இவையெல்லாம் அவைமட்டில் நல்லவையேயாயினும் இக்காலத்துக் கேற்றவை யல்ல. காலவியற்கை முன்போலின்றி மாறி விட்டது. காலம் வரவரக் கஷ்டகாலமாய் வருகிறது. ஜனங்களில் பெரும்பான்மையர்க்குப் படிப்பில் மனோரதியமான சந்தோஷ மனுபவிப்பதற்குப் போதுமான அமயமும் அவகாசமுமில்லை. உலகில் அறிவும், ஞானமும் அதிகமாக விர்த்தியாகி, இத்தேசத்திலும் அவையுள்ளவர்க்கே வயிற்றுப் பிழைப்புக்கு வழியகப்படுவது சாத்தியமாக ஆய்விட்டது. காலஸ்திதி இப்படியிருப்பதால் யாவரும் உபயோகமானதும் லாபமளிப்பதுமான அறிவையே தேடுகிறார்கள். அவ்விரண்டுந் தரும்அறிவு தற்காலம் பெரும்பாலும் ஆங்கிலேயபாஷை மூலமாகவே பெறுவது எளிதாக விருக்கிறது. ஆகையால் இங்கிலீஷ் படித்தவர்கள் அப்பாஷையிலுள்ள புஸ்தகங்களையே மேன்மேலும் வாசிக்கப் பிரியம் கொண்டவர்களாகிறார்கள். தமிழ்ப் பாஷைப் பயிற்சி பல விதத்திலும் அசட்டை செய்து விடப்பட்டதால் அப்பாஷையில் அவர்களுக்குச் சாதாரணமாய்த் தேர்ச்சியின்றிப் போய்விட்டது. இங்கிலீஷ் படிக்காத ஜனங்களுக்கு நித்தியப்படி ஜீவனத்துக்குபயோகமான அறிவு பலவகையில் வேண்டிய தவசியமாயிருந்தும், சுயபாஷையில் அவர்கள் தாமாக வாசித்துக் கிரகிக்கத்தக்க உபயோகமான புஸ்தகங்கள் அதிக மின்மையால், அவர்கள் அறிவையடைய ஆவல் கொண்டும் ஏற்ற வழியின்றித் தவித்துச் சும்மா இருந்து விடுகிறார்கள். இப்படித் நிராப்பொறியாகச் சும்மாவிருக்கவேண்டி நேரிடுவது வழக்கபலத்தால் சோம்பற்றனமாகமாறி அறிவையடைய வேண்டுமென்கிற ஆசையே இல்லாமற் போகிறது. அப்படி யேதாவது கொஞ்சநஞ்ச மிருக்கும் ஆசை வேதாளக்கதை, மதனகாமராஜன் கதைகளும், 'தன்னானே'ப் பாட்டுப் புஸ்தகங்களும் வாசிப்பதில் திர்ப்தி யடைந்து, தமிழில் புஸ்தக மூலமாய் அறியத்தக்க அறிவு அவ்வளவேயென்று, அவர்கள் அறிவு நிலை அந்தமட்டில் நிற்கிறது. கொஞ்சம் அதிக விவேகமும் புத்திவன்மையு மிருந்தால் சமய, புராணாதி நூல்களிலும், வீண்கட்டுக்கதைகளிலும் சென்று நஷ்டமடைந்து சோர்ந்து விடும். இப்படி இங்கிலீஷ்படித்தவர்களுக்கும் தமிழ்ப் படித்தவர்களுக்கும் சாதாரணமாய்த் தமிழ்ப் பாஷை தற்காலத்துக் குபயோகமான அறிவை யூட்டக் காரியத்தில் பிரயோசன மற்றதாகப் போகிறது. இதனால் நமது ஜனங்களுக்கும் தேசத்துக்கும் விளையும் தீங்குகள் அற்பசொற்பமல்ல. அவற்றைப் பற்றிப் பேசப் புகின் மிகப் பெருகும். படித்தவர்களெல்லார்க்கும் உபயோகமான அறிவைப்பரவச் செய்யப் பிரயோசன மில்லாத ஸ்திதியிலிருக்கும் பாஷை, மற்றெல்லாவற்றிலும் உபயோகத்தையும் லாபத்தையும் பெரிதாக நாடிநடக்கும் 19-ம் நூற்றாண்டினிறுதியான இக்காலத்தில், சீக்கிரம் கவனிக்கப்படாவிடிற் சீரழிந்து, சிறப்புக் கெட்டுச் சிதறிப் போகுமென்பதற்குக் கேட்பானேன்? தமிழ்ப்பாஷை சீரழிந்துசிதறிப்போகாதிருக்க அவற்றிலுள்ள ஆதிநூல்களையும்சிறந்த கிரந்தங்களையு மழிந்து போகாமற் காப்பாற்ற வேண்டியதவசியமென்பதிற் றடையில்லை. அத்தோடு அப்பாஷை ஜனங்களால் படித்துக்

கொண்டாடப்படவேண்டுமானால் தற்கால அறிவையூட்டத் தகைமையுடையதாக அதைச் செய்யவேண்டியதும் அவசியமேயாம். முற்சொன்னவழியிற் சிற்சிலர் சிரமப்பட்டுழைத்துத் தமிழ்ப்பாஷையைக் காத்தவரென்னும் கீர்த்திக்குப் பாத்திரராய் வருகிறார்கள். பின்சொன்ன வழியிலுழைப்போரும் சிற்சிலராங் கங்கேயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மூலைக்கொருவராகச் சிதறுண்டு கிடக்க அவர்கள் ஒவ்வொருவர் செய்யு முயற்சியும் அவரவர்களையறிந்தார்க்குள்ளே சுழன்று அந்தமட்டோடு அழுங்கி விடுகிறது. தமிழ்ப்பாஷையைச் சனப்பிரீதிக் கிசைந்ததாகச்செய்து விர்த்திக்குக் கொண்டுவர இரண்டு அம்சங்களிருக்கவேண்டியது அத்தியாவசியகம். ஒன்று: இங்கிலீஷிற் கற்றறிந்தாராயிருப்பதோடு தமிழிலும்தேர்ச்சி பெற்றோர் சாதாரண ஜனங்களுக்குப் புலப்படு நடையில் உபயோகமான விஷயங்களைப்பற்றி யெழுதுவதோடு, தமிழிற் பயிற்சியில்லாத இங்கிலீஷ்படித்தவர்கள் அப்பாஷையயின்று அதில் ஒருவாறு தேர்ச்சியடைய வகையுங்காட்டி யெழுதவேண்டியது முதலவசியம். அவர்கள் எழுதினவை ஓர் சிறுபுஸ்தகமாகவோ பிரசங்கமாகவோ வெளியிடப்பட்டு, மிகவும் நெருங்கி வரையறுக்கப்பட்ட சிறுவட்டமான சிலர் நடுவே மட்டும் வழங்கி யழுங்காது, படித்தோர் பாமரர் யாவராலும் படிக்கப்பட்டு நாடெங்கும் வழங்கிவரத்தக்க வசதிவேண்டிய திரண்டாவ தவசியம். அத்தியாவசியகமான இவ்விரண்டு முக்கியாம்சங்களும் ஒருங்குபொருந்தியிருந்தால்தான் நாடெங்கும் அறிவுபரவி, கற்றோரும் மற்றோரும் கருத்திற் கலந்து, நமது தேசத்தார் தமக்குள் தாமே பிரிவினை யடையாது, கற்றவர் போனவழி மற்றவர் பின்தொடரவும், பின் தங்கினோரை முன் செல்லவைக்கக் கற்றவர் கவனித்துழைக்கவு மாக இப்படி எல்லவரும் ஒருமித்து முன்னகர நம்மவர் ஜாதிமொத்தத்தில் சீரடைந்து முன்னுக்கு வர வழியுண்டாகும். இந்த இரண்டு அம்சங்களையும் பொருந்த அமைத்து மேலே சொன்ன விதம் ஓர் வழி பிறப்பிக்க வேண்டுமென்று தான் "அறிவைப்பரவச் செய்யும் ஏற்பாடு" ஒன்று தயார் செய்து அவ்வேற்பாட்டுப்படி இந்த விவேகசிந்தாமணியையும் வெளிக்கொண்டுவரலானோம். இதை வெளிக்கொண்டுவரத் துணியுமுன், பெரியோர் பலரையும் கண்டு பேசி, அவர்கள் ஆலோசனையை மேற்கொண்டு அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டோம்; அறிவுக்குறைவிடமாகிய அறிஞர் பலரிடத்தும் சென்று நேரிலும் கடிதமூலமாயும் அவர்களிடத்துள்ள அறிவைச் சனங்களுக்கு ஊட்ட இவ்வேற்பாட்டுக் கிசைந்துதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். நாடெங்குமுள்ள விவேகிகளுக்கெல்லாம் விண்ணப்பம் செய்து அறிஞர் பலரெழுதும் விஷயங்களைத் தாங்கள் வாங்கி வாசிப்பதுடன் பண்டைப்பழக்கத்தின் விசையால் படிப்பிற் பிரியமற்றுக் கிடக்கும் சாமான்ய ஜனங்களுக்கும் படித்துக்காட்டி வலுவிலூட்டி அவர்களுக்குச் சிறுகச் சிறுகப் படிப்பில் பிரிய முண்டாக்கி விடக் கேட்டுக்கொண்டோம். இவ்விரு தரத்தாரிலும் நமது வேண்டுகோளுக் கிசைந்து வாக்களித்தோர் பலர். அவர்கள் வாக்கை நம்பி அவ்விருதரத்தார்க்கும் நடுவிலிருந்து அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தில் அவர்களுக்குப் பணியாளாகவிருந்துழைக்கத் துணிந்து இக்காரியத்தில் இறங்கிவிட்டோம். இனி நம்மைக் கரையேற்றிவிட்டாலும் அல்லது நட்டாற்றிற்கைவிட்டு வேடிக்கைபார்த்தாலும் அதனால்வரும் பாபபுண்ணியம் அவர்களதே. நம்மட்டில் நமது கடமையைச் செய்து வரச் சிறிதும் தளரோம். நமது வேலை சிறப்பதும் சிறக்காததும் நம்மனோர் இச்சத் விஷயத்தில் ஒத்துநின்று நமக்குக் கைகொடுத்துதவும் உதவியின் அளவினதாகவிருக்கும். நம்மவரில் கற்றோர் மற்றோர் எல்லாரும் இது விஷயத்தில் ஒத்து நின்று உதவிபுரிந்து அறிவைப் பரவச் செய்யச் சுத்த இருதயத்தோடுழைக்கவேண்டுமாய் இன்றொருகால் அவர்களெல்லார்க்கும் விண்ணப்பம் செய்து கொண்டு, "தமிழ்ப்பாஷை" விஷயமாய் ம-ா-ா-ஸ்ரீ, த. சரவண முத்துப் பிள்ளை யவர்கள் பி. ஏ. இயற்றிய உபந்நியாசம் ஒன்றை இப்பத்திரிகையிற் பிரசுரிக்கவென்று அவர்கொடுத்த அநுமதிப்படிக்குக் கீழே பிரசுரிக்கிறோம்.-ப-ர்.]

தமிழ்ப்பாஷை *

(த. சரவணமுத்துப்பிள்ளை யவர்கள் பி. ஏ. இயற்றியது.)

யாதொருபாஷையாயினும் அதன் தாரதம்மியத்தை யெடுத்துரைப்பானொருவன் அப்பாஷையைக் கசடறக்கற்றவித்துவானா யிருத்தலவசியமாக, இவ்விஷயத்தைப் பற்றி யான் பேசத்துணிந்தது யாதுகாரணம் பற்றியோ வெனில், இவ்விஷயத்தைப்பற்றிப் பேசத்தக்க வலிமை சார்ந்த வித்துவான்கள் பலரும் மௌனமாயிருத்தலினாலே யானும் பிறதேயம் புகுவோர்க்குச் சிறுகுழந்தையும் வழிகாட்டுவது போலேயும், சங்கீதவித்துவான் வீட்டிற் றவழுங்குழந்தையுங் கைக்குவந்தவா தாளந்தட்டி வாய்க்கு வந்தவா பாடிக்களித்தல்போலேயும் பேசத்துணிந்தே னன்றிப் பிறிதொருகாரணம் பற்றியன்றென்க.

தமிழின் சிறப்பெடுத் துரைப்பதென்? அதன் உற்பத்தியை நோக்குங்காலத்தே அதன் மகிமை யுள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெற்றெனப்புலப்பட வில்லையா வெனக்கடாவுவாருமுளர். தமிழி னுற்பத்தியாதோ வெனப் பண்டிதரை வினவுவோமேல் அதைப்பற்றிப் பல கொள்கைக ளிருப்பதாகத் தெரியும். சத்த சமுத்திரத்தையு மோருழுந்தளவாக்கி யுள்ளங்கையில் வைத்துப் பானஞ்செய்தருளிய அகத்தியமகாமுனிவரா லன்றோ தமிழியற்றப்பட்டதென்பா ரொருசாரார். சூரபத்மனை வேல்கொடு தடிந்து அமரர் தம்மிடரை யடியோடு களைந்த சுப்பிரமண்ணிய சுவாமியாலன்றோ தமிழியற்றப்பட்டதென்பார் மற்றொருசாரார். திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளன்றோ தமிழிற் காதிநாயகரென்றறைவோ ரனேகர். ஆகவே தமிழின் மகிமை தானே புலப்படுகின்றதென நமது தமிழ்ப்பண்டிதர் மனமகிழ்ந்திருக்கின்றனர். ஆயின் அவர் செய்தபாவமோ தமிழ் செய்த புண்ணியமோ யாதோ வறிகிலேன், தற்காலத்து அவர் மாற்றம் அவைக்கேறுது போகின்றது. ஆங்கிலேய பாஷை கற்று அனுவேனு மாங்கிலேயசாஸ்திரங்களிற் பயின்றோர்க்கு அவர் கூற்று நகை விளைக்கின்றது. யாதொருபாஷையாயினும், அது எவ்வளவு அற்பமாயிருந்தபோதினும், அது ஒருவனாற் சிருஷ்டிக்கப்பட்டதென்பதைத் தற்காலத்துக் கைக்கொள்ளார். அதுநிற்க, சிவபெருமானே தமிழ்ப்பாஷையைச் சிருஷ்டித்தாரென வைத்துக் கொள்வோம். அதனாற் றமிழ் பெற்ற பயன் யாதோ? தமிழ் மாத்திரம் தானா கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டது? மறுபாஷைகள் யாவராற் சிருஷ்டிக்கப் பட்டனவோ? அன்றித் தாமே முளைத்தனவோ? சகல பாஷைகளுங் கடவுளாற் சிருஷ்டிக்கப் பட்டனவாயின், தமிழ் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என உரத்துக் கூறுவதனால் தமிழ்பெற்ற ஊதியமென்னோ? அற்றன்று, தமிழ் கடவுள் பேசும்பாஷையென்பாராயின் மறுபாஷைகள் கடவுட்குத் தெரியாதா? மறுபாஷைகள் பேசுவோரிடத்துக் கடவுள் பேசவேண்டுமாயின் தமிழிலேயா பேசுவார்? அல்லது மொழிபெயர்ப்பதற் கொருவரை வைத்திருக்கின்றனரா? அல்லது அவரவரிடத்து அவரவர் பாஷையே பேசுவராயின் தமிழைக் கடவுள் பேசினார் என்பதனால் தமிழ்க்கென்னபயன்? அதுவுமன்றி கடவுள் ஹீப்ரு பாஷை பேசினாரெனக் கிறிஸ்தவரும், அராபி பாஷை பேசினாரென மகமதியருங் கூறில் அவர்க்கு யாது சமாதானஞ் சொல்வரோ? அவர்சொல்வது பொய், யாம்சொல்வது மெய்யெனப்பன்முறை வற்புறுத்திக் கூறுவர்போலும்.

அதுநிற்க, கடவுள் தமிழையியற்றினாரென்பதற் கத்தாட்சி யாதென நமது பண்டிதரை வினவுவோமேல், வடகலை தென்கலை வரையறவுணர்ந்த சிவஞான மகாமுனிவர் காஞ்சிபுரா

*[இவ்வுபந்நியாசம் சென்னைத் துரைத்தன பாடசாலைத் தமிழ்ச் சங்கத்தின் முன்வாசிக்கத் தயார் செய்யப்பட்டது. அங்கு வாசித்ததை அப்படியே அவர் "நண்பர்பலர் அச்சிட்டுத் தரும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் அச்சிடத் துணிந்தேனன்றிப் பிறிதொரு காரணம் பற்றி அச்சிட்டே னல்லன்" என்று அவர் முகவுரையிற் கூறியிருக்கிறார். அப்படி யச்சிட்ட உபந்நியாசம் பாஷையின் நோக்கமிது, தமிழ்ப்பாஷையிருக்கும் நிலை, அதை விர்த்தி செய்யவேண்டிய விதம், தமிழ்ப் பாஷையிலுள்ள இலக்கியங்கள், அவற்றைப்பற்றித் தெரிந்த சுருக்கமான விவரங்கள் ஆகிய இம்முக்கிய விஷயங்களைப் பற்றி தமிழ்ப்பாஷையில் சிரத்தையுள்ள எல்லோர்க்கும் பிரதமத்தி லுபயோகமான அறிவை யூட்டுவதாயிருப்பதால் அக்காரணம் பற்றி அதை யாவருமறிய விவேகசிந்தாமணியில் பிரசுரிக்கவேண்டிக் கொண்டோம். அதற்கிசைந்தபடி அவர் பேருடன் அவ்வுபந்நியாசத்தின் முக்கிய பாகங்களை இங்கே பிரசுரிக்கிறோம்.-ப-ர்.]

னைத் தவ்வாறு கூறினானன்றோ? முருக மூர்த்தி திருவருள்பெற்ற கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத் தவ்வாறு கழறிப்போந்தன ரன்றோ? சோமசுந்தரர் துணையடிபரவும் பரஞ்சோதி மாமுனிவரும் திருவிளையாடற்புராணத் தவ்வாறு கூறியிருக்கின்றனரன்றோ வென்பார். அதையும் நம்பாது நெருக்கிக் கேட்போமேல் உடனே,

> வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
> தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தக்
> குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
> கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.
>
> இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
> இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
> இருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
> விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ.
>
> கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
> பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
> மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
> லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.
>
> தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
> யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
> கண்டதும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
> தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

என இன்னும் பல பாட்டுகளைச் சொல்லி நமது வாயை யடக்குவர். இதனால் தமிழின் மகிமை உரூபிக்கப்பட்டதாகாது. ஆனால் வேறெவ்விதமாகத் தான் தமிழின் சிறப்புக்கூறலா மென்னின், என் சிற்றறிவுக் கெட்டியவா றொருவாறு கூறுகின்றேன்.

மனிதர் தம் மனக்குறிப்பை யொருவர்க் கொருவர் அறிவிப்பதற்கு மூன்று வழிகளுள்ளன: 1, சைகை. 2, பேச்சு. 3, எழுத்து. மனிதர் சீர் திருந்துவதற்குமுன் தம் மெண்ணங்களைச் சைகையினாலேயே யறிவித்தனர். தற்காலத்தும் திவாந்தரங்களிலுள்ள சீர்திருந்தாத சில சாதிகளுள் சைகையே பெரும்பாலும் வழங்குகின்றது. சில சாதிகளிடத்தில் பாஷையிருந்தும் பேசும்பொழுது சைகைசெய்யாவிடின் அவர் பேச்சுப் பிறர்க்குவிளங்காது. அமெரிக்காவிலுள்ள ஒரு சாதியார் இருட்டில் பேசமாட்டார்கள். தம்வீட்டிற் கொருவர் வந்தால் முதல் விளக்குக் கொளுத்திப் பிறகு தான் பேசுவார்கள். அதுவுமன்றித் தற்காலத்திலுள்ள சீர்திருந்திய சாதிகளுள்ளும் நன்றாய்த்திருந்திய பாஷையிருந்தும் சைகையும் கூடவழங்குகின்றது. நாவல்லமையிற் சிறந்தோரென்று பேரெடுத்தோர் பெரும்பாலும் சைகையின்றிப் பேசார். அவர்பேசும்பாஷை மதுரமாயுந் தெளிவாயு மிருந்த போதினும் அவர் கூறும்பொருள் அவர் சைகையினால் நமக்குத் தெற்றெனப் புலப்படுகின்றது. எழுத்தோ, 1. படமெழுதல், 2. பேசும் பாஷையை யெழுத்தினா லெழுதலென இருவகைப்படும். படமெழுதலுஞ் சீர்திருந்தாத சாதிகளிலேயே வழங்குகின்றது. ஒருவன் வந்தானென எழுத வேண்டுமாயின் ஒருமனிதன் நடப்பதுபோலெழுதுவார்கள். இவ்வழக்கம் சீர் திருந்திய சாதிகளுட் பெரும்பாலு மிலாது சிறு பான்மை காணலாம். ஒரு சண்டையைப் பற்றிப் பிரசங்கஞ் செய்வோ ரொருவர் சண்டை செய்வது போலெழுதப்பட்ட வொருபடத்தைக் காட்டிப் பிரசங்கிப்பராயின் படமெழுதலும் சிறுபான்மை வழங்குகின்றதன்றோ? ஆயின் சீர்திருந்தியசாதிகளுள் பெரும்பான்மையும் வழங்குவது பேசலும் அதை எழுத்தால் எழுதலுமே. ஆகவே திருந்திய பாஷையுடைத்தா யிருத்தல் சீர்திருத்தத்திற் கடையாளமாகின்றது. நம்முன்னோராகிய தமிழரும் பல்லாயிரவருடங்கட்கு முன்னே தமிழ்ப்பா பாஷையையுடையோராயிருந்ததாகத்தெரியவருகிறது. எக்காலத்துத்தமிழ்ப்பாஷையைப்பெற்றனரோ யார்க்குந் தெரியாது. பரதகண்டத்தின் தென்பாகத்தில் திராவிடரிருந்தனர். பரதகண்டத்து முன்வசித்தோர் திராவிடரென்றும், ஆரியர்இமயமலைகடந்துஇந்தியாவிற்குவந்தன்மேல் அவர்கள் வடபாகங்களைப் பிடித்துக்கொள்ளத் திராவிடர் தெற்கே வந்தனர் என்றுஞ் சொல்வார். ஆயின் அக்காலத்துத் திராவிடர் யாதுபாஷை பேசினர்களோ யாமறியேம். திராவிடபாஷையெனத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்முதலிய பலபாஷைகட்கும் பொதுப்பெயராயினும் ஆரியர் பெரும்பாலும் தமிழையே திராவிடமெனக் கூறிவந்த தாகத்தோற்றுகிறது. மற்றுந் திராவிடபாஷைகளைப் பார்க்கினும் தமிழ்முந்தியதென்பது திண்ணம். தற்கால திராவிடபாஷைகளுக்குமுன் இவையாவற்றிற்கும்பொதுவான பாஷையொன் றிருந்திருக்கலாம். அது ஆங்காங்கு திருந்திய பொழுது ஓரிடத்தில் தமிழாயும், ஓரிடத்தில்தெலுங்

காயும், மற்றோரிடத்திற் கன்னடமாயும் மாறுபட்டிருக்கலாம்.

அதுநிற்க, தமிழ் சமஸ்கிருதத்தினின்றும்பிறந்ததென்று சொல்வோர்க்கு விடை யாதென்பிரேல், அவர் அவ்வாறுகூறற்கு நியாயம் யாதென யான் வினவுவேன். சமஸ்கிருதபதங்கள் சில தமிழிலிருந்தால் தமிழ் சமஸ்கிருதத்தினின்றும் பிறந்ததாமா? தமிழ் எழுத்துகளும் சமஸ்கிருத எழுத்துகளும் சிறுபான்மையொத்திருந்தால் தமிழ் சமஸ்கிருதத்தினின்றும் பிறந்ததாமா? இவை காரணமன்றேல் வேறுயாது காரணம் பற்றியோ? தமிழிலக்கணத்திற்கும் சமஸ்கிருத இலக்கணத்திற்கு மிருக்கும் பேதத்தைநோக்கும்போதே தமிழ்வேறு சமஸ்கிருதம்வேறெனத்தெற்றெனப் புலப்படுமே. இந்தியா முழுவதும் முற்காலத்து ஒரே பாஷை வழங்கி, அப்பாஷை வடபால் பாலியாகவும், தென்பால் தமிழாகவும் திருந்தப், பாலி பின்னுந் திருந்திச் சமஸ்கிருத மாயிற்றெனக் கூறுவோர் கொள்கை சரியெனத்தோற்றுகின்றது. அது சமஸ்கிருதத்திற்கும் தமிழிற்கு முள்ள சம்பந்தங்களை நன்றாய்விளக்கும். இலத்தீனுக்கும் இங்கிலீஷுக்குமுள்ள சம்பந்தமே சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்குமுள்ளது. ஆயின் இலத்தீனிலிருந்து வந்த சொற்களைநீக்கி இங்கிலீஷ் எழுதுவது கஷ்டமாயிருக்க சம்ஸ்கிருதபதமில்லாது தமிழிற் காவிய மெழுதுவது சுலபமாயிருக்கின்றது. அதற்குச் சிந்தாமணி, கலிங்கத்தோணை முதலிய நூல்களே யான்றவுதாரணமாம். சமஸ்கிருதத்தினால் தமிழ் மிகவுந் திருந்தியது நிச்சயமே. ஆயினுமென்? சமஸ்கிருதந் தெற்கு வருமுன்னேயே தமிழ் மிகவுந் திருந்தியிருந்ததாகத் தோற்றுகிறது. தமிழிலிருக்கும் பழைய நூல்களில் வடமொழிச்சொல் அபூர்வமாய் வருதலே யிதற்குச்சாட்சியாம். திராவிடபாஷைகள் சகலத்தினும் முந்தியது தமிழே. அவைகள் யாவற்றினுஞ் சிறந்ததும் தமிழே, ஆங்கிலேயபாஷையில் அரிவரிவரமுன் தமிழ் திருந்தியபாஷையா யிருந்ததாயின் தமிழ் பழைய பாஷையென்பதற் கத்தாட்சி வேறு வேண்டுமோ?

அதுநிற்க, இப்பாஷைக்குத் தமிழெனும் பெயரெவ்வாறு வந்ததெனச் சற்று விசாரிப்போம்.

திரவிடம் என்னும் வடமொழிச்சொல் தமிழ் என மரீஇயிற்றென்பார் ஒருசாரார். தமிழ் என்னுமொழியே திரவிடமாயிற்றென்பார் மற்றொரு சாரார். தமிழ் என்னுமொழிக்கு இனிமையெனு மர்த்தமுண்டாகையால் தமிழ்ப்பாஷையின் இனிமைபற்றித் தமிழெனும் பெயர்வந்ததென்பார் தமிழ்ப்பஷாபிமானிகள். "இதழ், இமிழ், உமிழ், கமழ், கவிழ், குமிழ், சிமிழ், என ழகரப்பேறு பெற்ற பதங்கள்போலத் தமிழ்என்னுஞ் சொல் பொருள் குறித்த தமியென்னும் வினையடியாற் பிறந்து, வினைமுதற்பொருண்மை உணர்த்தியவிகுதிகுன்றித், தனக்கிணையில்லாப் பாஷை என்னும் பொருள் பயப்பது" என்பார் மற்றொரு சாரார், தென்மொழியென்னுந் தொடர்மொழியே, தென்மொழி, தெம்மொழி, தமிழ் என மரீஇயற்றென்பார் போப்(Dr. Pope) துரையவர்கள். திரவிடம், தமிழ், என்னும்இரு சொல்லும் திரமிடம் என்னும்மொழியிலிருந்து பிறந்தன வெனப் பலநியாயங்காட்டிக் கூறுகின்றனர் கால்ட்வெல் பாதிரியார் (Rev. Caldwell). * இவற்றுட் பின்னைய விரண்டிலொன்றே சரியாயிருக்க வேண்டுமென என் சிற்றறிவுக்குத் தோற்றுகின்றது. ஆகவே யாதுகாரணம்பற்றியோ தமிழ் எனும் பெயருடைய இப்பாஷை, திரவிடபாஷைகளி லொன்றாயும், மற்றைய திரவிடபாஷைகள் யாவற்றிற்கு முந்தியதாயும், அவற்றிற் சிறந்ததாயும், சமஸ்கிருதத்திற்குக் கீழ்ப்படியாததாயும், பல்லாயிர வருடங்களாகத் தென்னிந்தியாவில் வழங்கி வருகின்றது. தற்காலத்து இந்தியாவில் 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' எனு நான்கெல்லையுள்ளும், ஈழதேயத்துவடக்குமாகாணம், கிழக்கு மாகாணங்களில் முக்கியமாயும், மற்றைய மாகாணங்களிற் சிறுபான்மையும், இரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும், ஆபிரிக்காக் கண்டத்தின் தென் முனையிலும்

* சென்னைத் துரைத்தன பாடசாலைச் சமஸ்கிருதாசிரியர் அப்பர்ட் (Dr. Oppert) துரையவர்கள் இந்தியாவில் முற்காலத்து மள்ளர் எனுஞ் சாதியாரிருந்தனரென்றும், அவர் பாஷைக்கு மள்ளபாஷையென்று பெயரென்றும், அப்பெயர் திருவென்னு மடைசேர்த்து திருமள்ள என்று வழங்கியிருக்க வேண்டுமென்றும், திருமள்ள எனும் பதத்திலிருந்தே திரமிளம், திரவிடம், தமிழ் எனும் மூன்று மொழிகளும் பிறந்தனவென்றுங் கூறுகின்றனர்.

வழங்குகின்றது. ஏறக்குறைய நூற்றுநாற்பத்தைந்து இலட்சம் சனங்களினாற் பேசப்படுகிறது. ஏறக்குறைய ஐம்பத்தெண்ணாயிரத்தைந்நூறு சொற்களையுடையதாக விருக்கின்றது. இதுவே தமிழாகிய நம்முடைய சுயபாஷை. இதைநோக்குங்காலத்து 'அம்ம! இதன் பெருமைக்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ' எனத் தோற்றுகின்றது. ஆயினும் ஒரு விரலை நீட்டி இதுபெரிதோ சிறிதோவென்பது வினாவழுவாகுமாகையாலும், ஓர்ஆயுதம் தகும்தகாதென்பது அது செய்யுந்தொழிலை நோக்கி யாகலானும், தமிழின் பெருமையை நிலைநிறுத்த இன்னுஞ்சற்று விசாரிப்போம்.

ஒருவன் தன் மனக்குறிப்பை மற்றோர்க்கறிவிப்பதற்குப் பாஷை முக்கியகருவியாகின்றது. ஆகவே நமது மனக்குறிப்பை மற்றோர்க்கு எப்பாஷையிற் சுலபமாயும், தெளிவாயும், மதுரமாயும், பலவிதமாக வற்புறுத்திக் கூறமுடியுமோ அப்பாஷையே மிகவுஞ் சிறந்த பாஷையென்றுரைக்கவேண்டும். ஆங்கிலேய பாஷையையுந் தமிழ்ப்பாஷையையு மொத்து நோக்குங்காலத்து இரண்டிற்குமுள்ள தாரதம்மியம் * கரதலாமலகம் போல் தெள்ளிதிற் புலப்படுகின்றது.

ஆங்கிலேயபாஷையிற் சுலபமாகச் சொல்லக்கூடிய தொன்றைத் தமிழிற்கூறுவது மிகவும் வருந்தமாயிருக்கின்றது. ஆயின் அதைக்கொண்டு யாம் தமிழ் எளியபாஷையெனக் கூறத்தகாது. நமக்கோ தமிழ்ப்பாஷை நமது சொந்தப்பாஷையாயிருந்தபோதினும் நன்றாகத் தெரியாது. அநேக † மாணவர்க்கு ஆங்கிலேயபாஷைதெரிந்தளவேனுந்தமிழ்தெரியாது. அது சிலர்தமிழிற் பேசுவோர்க்கு இங்கிலீஷில் விடையளிப்பதிலிருந்தும், தமிழ்பேசும்பொழுதும் ஆங்கிலேய மொழிகளைக் கணக்கின்றிக் கலப்பதிலிருந்தும் காணலாம். அவர்கள் வாசித்த தமிழ் ஆண்டாண்டு சர்வகலாசாலைப் பரீக்ஷைகட்குப் பாடமாக ஏற்படுத்திய பாகங்களே. அவர்களறிந்த தமிழ்ச் சொற்களும் அப்பாகங்களிற் காணப்பட்டவைகளே. ஆகையினால் ஒரு விஷயத்தைத் தமிழிற் கூற முடியாதெனல் அறியாமையாகும். தற்காலத்து நமக்குள்ள அறிவுடன் சொல்லமுடியாத ஒருவிஷயம் இன்னுஞ் சில நூல்களைப் பார்த்தபிறகு சுலபமாகச் சொல்லமுடியலாம். தமிழிலுள்ள நூல்கள் யாவற்றையுந் தவறாது கற்றுணர்ந்தோரே இவ்விஷயத்தைச்சொல்ல முடியாதென உறுதியாய்க் கூறலாம். ஆங்கிலேய பாஷையின் நிலைமையைப் பார்த்துப் பிறகு தமிழைப்பார்த்தால் சூரியனைப்பார்த்துப் பின் சந்திரனைப் பார்ப்பது போலாம். சூரியனுடைய பிரகாசத்தினாலே சூரியனைப் பார்த்தவுடன் கண்பொறித் தட்டி மற்றொரு பொருளுஞ் சிறிது நேரந் தெரியாதது போலவே ஆங்கிலேய பாஷையைப் பார்த்தவுடன் அதன் பிரகாசத்தினால் நமது கண் மறைந்து தமிழின் ஒளி தெரியாது போகவுங் கூடும். ஆயினு மிங்கிலீஷளவு தமிழ் சிறந்ததெனக் கற்றறியா மூடருஞ் சொல்லார்.

மண்ணுலகத்து மாந்தரும் மற்றை ஜீவ ஜெந்துக்களும் பிறந்து வளர்ந்து முதியோராவது போலவே பாஷையும் பிறந்துவளர்ந்து முதிர்கின்றது. எச்சாதியார் சீர்திருந்தி யிருக்கின்றனரோ அவரது பாஷையும் திருந்தியிருக்கும். எப்பாஷை திருந்தி யிருக்கின்றதோ அப்பாஷை பேசுவோருந் திருத்தமுடையோ ரென்பதற் கையமில்லை. ஆங்கிலேயர்க்குந் தமிழர்க்கும் எவ்வளவு பேத மிருக்கின்றதோ அவ்வளவு பேதம் ஆங்கிலேய பாஷைக்குந் தமிழ்ப் பாஷைக்கு மிருக்கின்றது. ஆயிரவருஷ காலமாக ஆங்கிலேயர் எப்படி நாளுக்குநாள் திருந்திக்கொண்டு வருகின்றனரோ அப்படியே அவர் பாஷையு மபிவிர்த்தியாகிக்கொண்டு வருகின்றது. தமிழுந்தமிழர் சீர்திருந்தியகாலத்துத் திருந்தி, அவர் பின்வாங்கத் தானும் பின்வாங்கி, அவருறங்கத் தானு முறங்கியது. ஆகவே தற்காலத்து இங்கிலீஷுக்குந் தமிழுக்கும் அளவிறந்த பேத முண்டாதற்கிடமாயிற்று. நம்மனோர் விழித்தெழுந்து மறுபாஷைகளைக் கற்றுத் தமிழைத் திருத்துவரேல் தமிழுஞ் சிலவருடத்தில் மிகவுந்திருந்துமன்றோ! ஆங்கிலேய பாஷையளவு சிறப்புடைத்தாக வருதற்குத் தடைதானென்னே!

இதுகாறும் தமிழ்ப்பாஷையைப்பற்றிப்பேசினோம்; இனிமேல் தமிழ்ப்பாஷையி லிருக்கும் இலக்கியங்கள் யாவை அவற்றின் குணகுணங்கள் யாவையெனச் சிறிதுவிசாரிப்போம்.

(இன்னும்வரும்.)

* உள்ளங்கைநெல்லிக்கனி (கர + தலம் + ஆமலகம்.)
† மாணாக்கர்.

சரீரப்பயிற்சி.

(பி. ஏ. பட்டதாரி ஒருவர் எழுதியது.)

சரீரத்தை இகழ்ந்து, அதைப் பலவிதவருத்தங்களுக்கும் உள்ளாக்கினால், ஆத்துமாவின் நிலையை விருத்திசெய்து சுவர்க்கத்தை அடையலாமென்றஎண்ணம், நம்மவர்களுக்குள் உள்ள தப்பெண்ணங்களில் ஒன்று. இவ்வெண்ணத்தால் விளைந்த தீங்குகள் பலவற்றையும் நாம் இப்பொழுது அனுபவிக்கிறோம். முதலில், இதைத் தப்பெண்ணம் என்று சொன்னதற்குக்காரணம் கூறவேண்டுமே. "சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம்" என்றபழமொழி யாவருக்குந் தெரிந்தது தான். ஆனால் அதன் பொருள் முழுவதையும் சிலர்தான் ஆராய்ந்து பார்த்திருப்பார்கள். நம்முடைய விஷயத்தை ஒட்டிப்பார்க்கின், சுவர் சரீரமாகவும், சித்திரம் ஆத்துமாவாகவும், விளங்கும். இதென்னபுதுமை! சரீரத்தை ஆத்துமாவினும் சிறப்பித்துக்கூறி, அதை இன்றியமையாத சுவராகவும், ஆத்துமாவை உபகுணமாகிய சித்திரமாகவும் கூறுகின்றீரே என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அப்படியன்று; சரீரமானது மனிதர்களாகிய நமக்கும், யானைமுதல்பூதக்கண்ணாடியினால் நோக்கினும் அரிதிற்புலப்படும் பிராணிகளீறான அநேக கோடி ஜீவஜந்துக்களுக்கும் பொதுவாயிருக்கிறது. ஆத்துமாவோ, அப்படியன்று; கீழ்ப்பட்ட பிராணிகளுக்கு, நமக்குள்ளதைப்போன்ற ஆத்துமா இருப்பதாக நம்புவதற்கு இடமில்லை; சித்திரம் இல்லாச் சுவர்கண்டிருக்கிறோம். ஆனால் ஆதாரமாகிய சுவரில்லாச் சித்திரம் கண்டதில்லை; ஆனதினால் தான் சரீரத்தைச் சுவருக்கும், ஆத்துமாவைச் சித்திரத்துக்கும் உவமித்துக் கூறினோம். இதனால்சரீரம் ஆத்துமாவினுஞ்சிறந்ததென்று நினைக்கவேண்டாம்; கீழ்ப்பிராணிகளுக்கு அப்படியிருக்கலாம். கிடைத்தற்கு அரிய மானிடஜன்மத்தையடைந்த நமக்கு அப்படியன்று. இரண்டையும் ஒரு வண்டியிற் பூட்டப்பட்ட இரண்டு எருதுகளுக்குச் சமானமாய்க் கூறலாம். ஓர் எருதினால் மாத்திரம் அப்பண்டி ஓடாது. அது போலவேசரீரத்தை முற்றிலும் இகழ்ந்துஆத்துமவிருத்தியை மாத்திரம் தேடுவதினால் நம்முடைய காரியம் சித்தியாகாது. இரண்டையும் நாம்உடைத்தாயிருக்கிறபடியால், இரண்டையும் சமமாகப்பாவித்து, விருத்திசெய்ய வேண்டும். ஆதலினால் சரீரத்தை இகழ்ந்து, வருத்தி, ஆத்துமாவையாத்திரம்விருத்திசெய்வது நம்முடைய புத்திக்கு அழகன்று.

நாம் தப்பு என்று காட்டிய இவ்வெண்ணத்தால் விளைந்திருக்கிற தீங்குகளைப்பற்றிக்கொஞ்சம் பேசுவோம். இத்தேசத்தவர் ஒருவரையும் ஐரோப்பியர் ஒருவரையும் பார்க்கும்பொழுது சரீரபேதம் நன்கு விளங்குகின்றது. பெரும்பான்மையும் ஐரோப்பியர்கள் நம்மவரைப் பார்க்கினும் உயர்ந்தவர்களாயும், அகன்ற மார்புள்ளவர்களாயும், அதற்குத் தக்க அவயவங்களுள்ளவர்களாயு மிருப்பதோடுகூட, நம்மவர்கள் 'உளி சிறிதாயினும் மலையைப் பெயர்த்துவிடும்' என்று சொல்வதற்கு இடமின்றி, மிகுந்த சரீரபலம் உள்ளவர்களாயு மிருக்கிறார்கள். நாம் மாத்திரம் இரையின்றி ஒடுங்கிச் சுருங்கிப்போன பூனைகள்போ லிருப்பதற்கு, இது தவிர்த்துள்ள காரணங்களைப்பற்றி அவகாசத்திற் பேசுவோம். இவ்வெண்ணத்தினாலுண்டாகும்நடக்கை ஒருமுக்கியகாரணம் என்பதற்குச்சந்தேகமில்லை. இதனால் நாம் கெடுவதுமன்றி, அவரைபோட்டால் துவரைமுளையா என்ற பழமொழிப்படி நம்முடையபிள்ளைகளும் பூனைக்குட்டிகளா யிருக்கிறார்களே தவிர புலிக்குட்டிகளாகிறதில்லை. சரீரபலம் அரிதாயிருப்பதால் மனதைரியமும் அரிதாகவே யிருக்கிறது. சரீரப்பாடுபட்டுச் சம்பாதித்துச் சாப்பிடுவது மேற்சாதிகளில் அருமருந்தபோ லிருக்கின்றது. ஏழைகள் சத்திரங்களிலும், மடங்களிலுமாவது சாப்பிடுகிறார்கள். வேறுவிதமாய்ப் பிச்சையெடுத்தாவது பிழைக்கிறார்கள்; சரீரப்பாடுபடுகிறதில்லை.

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற்பரந்து
கெடுக வுலகியற்றி யான்" * என்றார் நாயனாரும்.

*(இதன் பொருள்.) "இவ்வுலகைப் படைத்தவன், இதன்கண் வாழ்வார்க்கு, முயன்று உயிர்வாழ்தலையன்றி, இரந்தும் உயிர்வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமந்து கெடுவானாக" -பரிமேலழகர்.

இப்படி மானத்தைவிட்டுப் பிச்சை யெடுப்பதிலும் சரீரமுயற்சி இழிவானதென்று எண்ணுவது ஏனோ தெரியவில்லை. சரீரத்துக்குப் பலத்தை அளித்து, வாழ்நாட்களைப்பெருக்கி, ஊண் உடை முதலியவற்றிற்கு வேண்டிய பொருளையும் கொடுக்கக்கூடிய சரீர முயற்சிகள் எத்தனையோ இருக்கின்றனவே. உதாரணமாக, தோட்டங்களினால் வரும் பலனை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். நம்முடைய உணவுக்கு வேண்டிய காய்கனிகளையும், ஊண் சமைப்பதற்கு வேண்டிய விறகுகளையும், கோடைகாலங்களில் குளிர்ந்த நிழலையும், விற்று முதலாக்கக்கூடிய பல பொருள்களையும் கொடுக்கின்றன. அப்படியிருக்க, இவ்வளவு செய்யக்கூடிய ஒரு தோட்டத்திற் பாடுபட்டுச் சுகமாய் ஒருவரை யெதிர்பாராமல் வாழ்வதை விட்டுவிட்டு, தோட்டங்களி லுண்டாகும் காய்கறி முதலியவற்றை விலைக்குவாங்கி ஊண்கழிக்கும் தனவான்கள் வீடுகள்தோறும் நாய்போல் திரிந்து பற்காட்டிப் பற்காட்டிப் பிழைப்பது ஏனோ? வேலை செய்வது இழிவென்ற எண்ணம் என்றைக்கு அழியுமோ? அதுவொழிந்தாலன்றோ அதனால் விளையும் தீங்குகள் நீங்கும்.

சரீர முயற்சி அவசியம்; சரீரவிருத்திக்கு முயற்சி அவசியமானது. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு தன் சரீரத்துக்குத் தகுந்த வேலைகளைக் கொடுத்து அவ்வேலைகளால் உண்டாகும் நஷ்டங்களுக்கு ஈடாகப் போதுமான உணவை யளித்துத் தன் சரீரத்தைப்போஷிக்கிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அவன் தேகம் பலத்தையும், திடத்தையும் பெறும் என்பது யாவரும் தெரிந்திருக்கவேண்டிய விஷயம். இப்பொழுது நாம் பேசுவது சரீரமுயற்சிக் கடுத்த உழவுமுதலிய தொழில்களைச் செய்து பிழைக்கும் கீழ்சாதிகளைப்பற்றி யன்று. கீழ்சாதிகளுக்குச் சரீர முயற்சியிருந்தும் சரீர பலம் அதிகமாக இல்லையே என்று கேட்கலாம். கீழ்சாதிகளைச் சேர்ந்த அநேகர்கள் மிக்க சரீர பலம் உள்ளவர்களாய்த்தா னிருக்கிறார்கள். மற்றவர்களுடைய பலக்குறைவுக்குக் காரணமென்னவெனின், ஊண்பொருட்டு அவசியமாய் அவர் செய்யவேண்டியதா யிருக்கும் வேலைகளால் நேரிடும் சரீர நஷ்டங்களுக்கு ஈடான உணவு அவர்களுக்கில்லை. அவர்களுடைய ஏழைமையே பலக்குறைவுக்குக்காரணம். அப்படியிருந்தும் மேல்சாதிகளில் தனவான்களாயிருந்துகொண்டு உண்பதும் உறங்குவதுமே உயிர்வாழ்க்கையின் பயனெனவெண்ணி நாள் கழிக்கும் பருத்த தொந்திப் பண்டாரங்களைப் பார்க்கிலும் அவர்களுக்குப் பலம் அதிகமாயிருக்கிறதென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும். நாம் பேசுவது ஆகாரத்துக்காக வேலை செய்ய வேண்டியது அவசியமா யில்லாதவர்களைப் பற்றித் தான். அவர்கள் கோபிக்க வேண்டிய தில்லை. அவர்களுடைய நன்மைக் காகத்தான் சொல்லுகிறோம். ஆயுள் விருத்தியைத் தீமையென்று நினையாரென்பது திண்ணம். நாம் சொல்வதெல்லாம் அவர்களுடைய ஆயுள் விருத்தியின் பொருட்டும், அவர்கள் உயிரோடிருக்குமட்டும் நோயின்றிச் சுகமாய் வாழும்பொருட்டுந்தான். அவர்கள் அங்ஙனம் வாழ்வதற்குச் சரீரமுயற்சி அவசியமானது. ஆனால் சரீரமுயற்சி யின்றியமையாத ஏழைசனங்கள் செய்யும் தொழில்களைச் செய்வது தங்களுக்கு இழிவென்று சில தனவான்கள் நினைக்கலாம். அவர்களுக்குத் தக்க சரீர முயற்சிகளைப்பற்றி அடுத்தமுறை பேசுவோம்.

கிருஷிகம்.

பஞ்சமுண்டாவதேன்?

(வியவசாய வித்தியா சாலையிற் சுற்றுத்தேறிய ஒருவர் எழுதியது.)

சிலகாலமாகக் கர்நூல், கடப்பை, செங்கற்பட்டு, வடஆர்க்காடுமுதலிய அநேக ஜில்லாக்களில் அடிக்கடி யுண்டாகும் பஞ்சங்களைப்பற்றி எல்லாருக்குந் தெரியும். ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்து சிந்திக்கும் ஒவ்வொருவரும் இப்படி யடிக்கடி யுண்டாகும் பஞ்சத்தை நிவர்த்திப்ப தெவ்விதமென நினைத்திருக்க வேண்டும். பஞ்சத்தினாலுண்டாகும் பரிதாப நிலைமையைப்பற்றி நினைக்குந் தோறும் எமது வயிறு பகீர் பகீரென்று பற்றியெரிகின்றது. ஐயோ! எத்தனையோ குடிகள் சாப்பாட்டுக்கு வகையின்றிச் சாகிறதைப் பார்க்கிறோம். கிருஷிகருக்குக் கண்ணுக்குக் கண்ணாயிருக்கும் உழவு காளைகளைக் காப்பாற்ற வகையின்றியும், தங்

களுக்குப் போஷணைக்காக வேண்டியும், குறைந்த விலைக்கு விற்றுப் போடுவார்கள். விதைக்காக வைத்திருக்கும் தானியத்தையும் விற்று தற்கால சாந்தியாக வயிற்றை அரைகுறையாகவாவதுநிரப்பப் பிரயாசைப்படுகிறார்கள். இவ்வளவோடு போனாற் போதாதா? இருக்கிறவீட்டையும் விற்று விட்டு, மிகுந்திருக்கும் பானைசட்டிகளைக் கட்டித் தலைமேல் தூக்கிக்கொண்டு கூலிவேலை செய்து பிழைக்கக் கூடிய விடங்களுக்குப் போவதையும் நாம் கண்டிருக்கிறோம். இராஜாங்கத்தாருக்குக் கொடுக்க வேண்டிய பகுதிப்பணம் கட்டவகையற்றுப் போவதால் சிலசமயம் அந்நிலங்களையவர்கள் வந்தவிலைக்கு ஏலம்போட்டு விடுவதால், பஞ்சநிவர்த்தியான பின் குடிகள் தம் தம் கிராமங்களுக்குத் திரும்பிப்போம்போது அவர்கள் நிலங்களை அயலார் ஆட்சி செய்கிறதைப்பார்த்து, பழைய பிழைப்புக்கும் வழியின்றிப் பரதவிக்கின்றார்கள். ஒரு பகுதியோர் இப்படியிருக்க, மற்றொரு பகுதியோர் அநேகவருஷங்களாக அன்னத்துவேஷமென்னும் வியாதியால் பிடிக்கப்பட்டவர்கள் போல் மிக மெலிந்து எலும்புந் தோலுமாய்க் காணப்படுகிறார்கள். வேலைசெய்யவும் சக்தியற்று, உணவுக்கும் வழியற்று, ஓரிடத்திற் கிடந்தபடியே இறந்துபோவதைக் காணும் எவர்தான் பரிதாபப் படமாட்டார்கள்!! இப்பரிதாபத்தைப் பற்றி எழுதப் புகுந்தால் விரியும்; என்றாலும் பஞ்சத்தினாலுண்டாகும் பல வகைக் கேடுகளை நம்மவர் மனதிற் பதிக்க வேண்டும்.

இப்படி யடிக்கடி யுண்டாகும் பஞ்சத்தைத் தடுத்துக் குடிகளைக் காப்பாற்ற வழியிருக்கின்றதா? என்னசெய்தால் இப்பஞ்சங்களை நிவர்த்திக்கலாம்? அநியாய அரசர்களின் ஆளுகை தவிர்ந்து, உலகப்பிரசித்தமாய் தர்ம துரைகளென்று வழங்கிவரும் ஆங்கிலேயரின் ஆட்சியில் ஆரியவர்த்த மென்னும் இப் பரதகண்டம் வந்தும் வெகுகாலமாயிற்று. ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கும், ஒரூரிலிருந்து மற்றொரு ஊருக்கும் போகத்தகுந்த பாதைகளென்னும் நாமதேயமே யிலலாதிருந்த விடத்தில், எங்கேபார்த்தாலும் புகைவண்டிப் பாதைகளும், படகுகள் பாய் விரித்தோடக் கூடிய பல கால்வாய்களு முண்டாயிருக்கின்றன. தூர தேசங்களுக்குப்போய் வருவது பிரம்மப்பிரயத்தனமா யிருந்தது போய், இப்போது வெகு சீக்கிரத்தில் சுலபமாய் முடியக்கூடியதா யிருக்கின்றது. கிருஷிகர் விளைவிக்கும் தானியங்களின் விலையும் அதிகப்பட்டிருக்கின்றது. தரிசாய்க்கிடந்த அநேக காம்பு நிலங்களிப்போது பயிர்செய்யப் படுகின்றன. இப்படி யெல்லாமிருந்தும் இத்தேசத்தி லுண்டாகும் பஞ்சந் தொலைய வழியில்லையே! சென்ற இருபது வருஷங்களாய் வருஷந்தவறாமல், ஒரு ஜில்லா தப்பினாலும் மற்றெந்த ஜில்லாவிலாவது பஞ்சமுண்டாயிற்றென்று கேட்காமலிருக்க வில்லையே. இனியென்ன சொல்லலாம்? எக்காரணத்தால் பஞ்சமுண்டாகின்றது?

முதல், பஞ்சமென்றாலென்னவென்று பார்ப்போம். நிலங்களின் விளைவுமிகக் குறைந்தும், சில விடங்களில் தீய்ந்துபோயு மிருப்பதால், ஜனங்கள் எல்லாருக்கும் அவசியமாய் வேண்டிய உணவுகூடக் கிடையாம லிருப்பது பஞ்சம். இப்படியாவது எதனால்? நமது கிருஷிகரின் தப்பிதமோ? அல்லது தெய்வாதீனமோ? நமது விதிப்பயனோ? எது?

ஏறக்குறைய மூவாயிர வருடங்களாய் நாகரீக மடைந்திருக்கும் நமது முன்னோர்கள் செய்து வந்த காரியங்களாலுண்டான அனுபோகத்தை யடைந்திருக்கிறோம். இன்னமாதம் இன்னதேதியில் இன்னபயிர் இன்னஇன்ன நிலத்தில் விதைக்க வேண்டுமென நமது கிருஷிகருக்குத் தெரியும்; மழை பெய்த வுடன் உழவு வேலைசெய்து நிலத்தைப் பண்படுத்த வேண்டுமென்றும் தெரியும். பயிர்களுக்கு வேலிபோடுவதி லுண்டாகும் பிரயோஜனத்தை கண்டறிந் திருக்கின்றார்கள். சில வகைகளில் ஒவ்வொன்றின் விசேஷத்தையும் பற்றிப் பேசுவார்கள். ஆழஉழுவது நன்மையெனச் சொல்லுவார்கள். சில நிலங்களில் ஆழஉழுவது பிசகென்று அனுபவ பூர்வமாய் அறிந்திருக்கிறார்கள். "ஆறுநாளில் நாறுழவு உழுவதைப்பார்க்கிலும், நாறுநாளில் ஆறுழவு உழுவது மேல்" என்னு மிதுபோன்ற அநேகம் விதிகளைப் பழமொழிகளாகச் சிறுவர்களும் பேசி வருகின்றார்கள். இப்படியிருந்தும், அவர்களுக்குத் தெரிந்த

பல காரியங்களை அனுபோகத்தில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக் கூடாமல் தடைசெய்யுங் காரியங்கள் அனேக மிருக்கின்றன. நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தக்க கருவிகளில்லாமை யொன்று; மூடபக்தி மூடவைராக்கியம் மற்றொன்று; திரவியமில்லாமையும், வட்டிக்குக் கடன்கொடுக்கும் செட்டிகளின் தொந்தரவுமாகிய இவைகளும் கூடச்சேர்ந்து கொள்ளுகின்றன. மழை யின்மையா லுண்டாகும் கெடுதியோ எல்லாருக்குந் தெரிந்தே யிருக்கிறது. காலசுபிக்ஷக் குறைவினால் பஞ்சமுண்டாவதாக விருந்தாலும், அப்படி மழைகளுண்டாகாமல் நின்று போவதற்கும் காரணங்களுண்டு. அவைகளையும், பஞ்ச நிவர்த்திக்காக நாம் செய்யவேண்டிய பற்பல காரியங்களையும் அடுத்தசஞ்சிகையிற் கவனிப்போம்.

சரித்திரம்.

(ஒருவர் எழுதியது)

தற்காலத்தில் நமதுபிள்ளைகள் பாடசாலைகளில் வாசிக்கும் பாடங்களென்னென்னவென்று நாம் கவனிப்போமானால் கணிதம் பூமிசாஸ்திரம் தர்க்கம் வானசாஸ்திரமென்னும் பற்பல பாடங்களுடன் சரித்திரமும் ஒரு பாடமாகச் சொல்லுவார்கள். ஒன்றுமறியாத சாதாரண ஜனங்களுக்குச் சரித்திர மென்றால் சாதாரண கதையென்று அர்த்தமாகும்; மற்றும்சிலருக்கு யாதோஒருவரைப்பற்றியும், அவர் பிறப்புவளர்ப்பு முதலிய காரியாதிகளைப்பற்றியும் சொல்லிவரும் பாடமெனப் பொருள்படும். ஆனால், சரித்திரமென்றாலென்ன? அது ஒருவர்மனமிசைந்தபிரகாரம் எழுதிவைத்த கட்டுக்கதையுமல்ல, ஒருமனுஷனைப்பற்றி மட்டும் பேசும் ஜீவியசரிதமுமல்ல, ஆனால் என்னவெனிலோ ஒருதேசத்தைப்பற்றியும், அதன்நிலப்பாங்கு, பட்டினங்கள், கிராமங்கள் இவைகளின் நிலைமை, இவைகளில்வசிக்கும் ஜனங்களின் தன்மை, அவர்களின் பற்பல ஜீவனத்தொழில்கள், இராஜாங்கத்தின்சீர், உத்தியோகஸ்தரின் செயல்கள், தேசத்தின் வர்த்தகநேர்மை, பற்பல அரசரின் சிறப்பு, அயல்தேசத்தரசருடன் செய்யும் யுத்தம், ஜனங்களின் கல்வித்தரம் முதலிய பற்பல முக்கியவிஷயங்களைத் திரட்டிச் சேர்த்திருக்கும் நூலெனச் சொல்லலாம்.

இப்படிப்பட்ட பாடத்தைப் படித்ததனால் பலனென்ன? இன்னகாலத்தில் இன்னதேசத்தை இன்னார் இவ்விதமாய் அரசாண்டார். அத்தேசத்தின்குடிகள் இவ்விதமா யிருந்தார்கள்; என்று நாம் வாசிப்பது நேரப்போக்குக்கு வேறுவழியில்லாமலோ? அல்லது, ஒன்று இரண்டு மூன்று முதலிய எண்ணிறந்த எத்தனையோ விஷயங்களை நாம்வாசித்து நம்முன்னிற்பதித்து வருவதால் புத்தி விசாலித்து ஞாபகசக்தி வரவர அதிகமாகும் என்பதற்கோ? நமதுதேசத்தாரும், கைத்தொழிலும், வர்த்தகமும், அரசரின் தாராதரமும் இவ்வாறிருக்கின்றது; அயல்தேசத்தின் காரியாதிகள் எப்படி யிருக்கின்றனவென்று அறியவேண்டும் என்னும் வீண்விருப்பத்தின் மிகுதி யாலோ ? மற்றெதனால்? யோசிக்க வேண்டும்.

இவையொன்றுமல்ல; நமதுஜன்மத்தின் பலன்வீணாய்ப்போகாமல்பிறருக்குப்பிரயோஜனப்படும்படி நாம் நடந்துகொள்ளவேண்டிய விதமெதுவென்று நமக்குக் கற்பிப்பது சரித்திரம். சரித்திரபுஸ்தகத்தில் எழுதியிருக்கும் ஒவ்வொருகாரியமும் நமது ஜீவகாலத்தில் எப்போதாவது நமக்குப் பிரயோசனப்படாமற் போகாது. எப்படியெனில், திப்புசுல்தான் என்பவரின் பூர்வஸ்திதியென்ன? அவரது பெற்றோர்கள்யாவர்? அவருன்னதபதவியடைந்த மார்க்கமெது? என வாசித்தறியு மொவ்வொருவரும், ஏழையாயிருந்த யாரானாலும் ஒருவன் தன்முயற்சியால் உயர்ந்த ஸ்தானத்துக்கு வரக்கூடும் என்றறிந்து, அப்படி தானும்நடக்கப் பிரயாசப்படுவானென்பதில் சந்தேகமில்லை. கொலைபாதகஞ்செய்யக் கொஞ்சமேனும்அஞ்சாமல் குடிகளைச்சஞ்சலப்படுத்தும் கொடுங்கோலரசரின் காரியாதிகளை வாசிப்பவர்களுக்கு ஜனங்களின்மேல் தயாளகுணமும், கெட்ட அரசரின் மேல் வெறுப்புமுண்டாவது சகஜம். தாங்கள் அவ்வரசரைப் போல்கெடுதிசெய்யாமல்நன்மையே செய்யவும் முயலுவார்கள். இதிருக்க, தைரியசாலிகளால் நடத்தப்படும் வீரவைராக்கியச் செய்கைகளை நாம்வாசிக்கையில் நமக்குத்தெரியாமல் நாம் தைரியசாலிகளாவோம். பரோபகாரிகளாயிருந்த பற்பலரின் சமாசாரம் நமக்கெட்டுமானால் நாமும் அப்படியே பரோபகாரம்செய்ய விருப்பமடைகிறோம். ஒருதேசத்தின் கைத்தொழிலும் வர்த்தகமும் இப்படிப்பட்டதென்று நாமறிந்தால் நம்தேசத்தின் காரியாதிகளை விர்த்திசெய்துக்கொள்ளத் தகுந்த சாதனமாகவுமிருக்கும். இதுவன்றி ஒருதேசத்தார் முதலில் எப்படியிருந்தார்கள்? அவர்கள் வரவர எப்படி விர்த்தியடைந்து க்ஷேமமாய் ஜீவித்தார்கள்? என்னும்விஷயங்களை நாம் விடாது கவனிப்போமானால் நாம் விர்த்தியடையும்பொருட்டுச் செய்யவேண்டிய காரியங்களென்னவென்று தெளிவாய்விளங்கும். இவ்விதமாகவே ஒரு தேசத்தின் சரித்திரத்தை நன்றாய் அறிந்து கொண்ட ஒருவருக்குண்டாகும் விசேஷவிர்த்தி இவ்வளவென்று சொல்லமுடியாது. இதனால் ஒருவர் அவசியமாய்ப் படிக்கவேண்டிய பலசாஸ்திரங்களில் சரித்திரம் முக்கியமானது. அதிலும் ஒருவரின் சுயதேசத்தின் சரித்திரமோ வெகு முக்கியம். நமது ஸ்திதியை முன்னமே நன்றாயறிந்துகொண்டு அப்பால் நமக்கும் பிறர்க்குமுள்ள பேதாபேதங்களின்னதெனத் தெரிந்து, நமது மேன்மைகளைப்பற்றி ஆனந்தங்கொள்ளவும், நமது தாழ்மைகளையும் குற்றங்களையும் அறிந்து மனங்குன்றி நம்மைச் சீர்படுத்திக்கொள்ளவும் கூடும். ஆகையால், முதல்முதல் நாம் வாசிக்கவேண்டியது இந்துதேசச் சரித்திரம். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணாக்கருக்கு மட்டும் சரித்திரம் வாசிப்பது அவசியமெனச் சிலர் எண்ணக்கூடும். என்றாலும் அது தப்பபிப்பிராயம். விசேஷ கல்வியறிவில்லா தவர்களுங்கூடத் தங்கள்காரியாதிகளைச்சீர்படுத்திக்கொள்வதற்குச் சாதனமாயிருக்கும்சரித்திரத்தைஎல்லாரும் வாசியாதிருக்கலாமா? எல்லாரும் வாசிக்கவேண்டும். இதன்பொருட்டு இந்துதேசச் சரித்திரத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய் இப்பத்திரிகையில் பிரசுரித்துவருவோம்.

இகபர சுகம்.

இவ்வுலகத்திலுள்ள எல்லா மதஸ்தரிலும் ஓர் பகுதியோர் இகசுகத்தைப் போற்றியும், மற்றோர் பகுதியோர் பரசுகத்தைப் போற்றியும் வருகிறார்கள். எப்படியெனில், ஒருவகுப்பார் "நாமிவ்வுலகத்தில் உண்பது, காண்பது, கேட்பது, முகருவது, ஸ்பரிசிப்பது ஆகிய இச்செய்கைகளா லடையும் சுகத்தைத்தவிர வேறென்ன சுகத்தைக்கண்டோம்" என்கிறார்கள். மற்றொரு வகுப்பார் "சீசீ, இதென்ன சுகம்? இதெல்லாம் சிற்றின்பம்; பேரின்பம் என்பது வேறேயிருக்கிறது. அதையடையமுயலவேண்டும். சிற்றின்பத்தில் சற்றும் மனதைச் செலுத்தாமல் பரமாத்மாவைத் தியானித்து வைராக்கியமா யிருந்தால் பரசுகம் வெளியாகும்" என்கிறார்கள். இவ்விருவகையாரில் யார் சொல்வது சரியோ, யார் சொல்வது தப்பிதமோ, அதைக்கண்டு பிடிக்கவேண்டும்.

முதல் முதல் இகமென்றும், பரமென்றும், வெவ்வே றுலகங்க ளிருக்கின்றனவா? என்று பார்த்து, அப்பால் சுகமென்றும் துக்கமென்றும் வெவ்வேறிருக்கின்றதாவெனவும் அறிந்தால் பிற்பாடு நமது முக்கிய வினாவாகிய "இகபரசுகத்தை ஒன்றாய் ஒருவரடையக்கூடுமா?" என்பதைத் தீர்மானிக்கலாம். இவைகளைப் பற்றி நாம் யோசிக்கும்போது அனுபவ பூர்வமாய் ஓர் பொருள் இருக்கிறது என்று அறிவதொன்றும், இதின்னபடியா யிருக்கலாமென்று யூகித்து அறிவது ஒன்றுமாக, இவ்விரண்டுகாரியங்களிருக்கின்றன. அவைகளைத்திருஷ்டாந்தங்களால் விவரித்துக்காட்டுவோம். "நாமிப்போது ஜீவிக்கிறோம்" என்பது நமக்கு வாஸ்தவமெனத்தெரிந்தகாரியம். "நாமிறந்துபோனால் மறுபடி ஜனனமெடுப்போம்" என்பது இன்னபடியிருக்குமென்று ஒருவர் கொள்ளும் அபிப்பிராயம். இதுபோலவே, இவ்வுலகத்தில் சிலர் சந்தோஷமாய் ஜீவிக்கிறார்கள் என்பதும், சிலர் விசனத்தோடு காலங்கழிக்கிறார்களென்பதும் நமக்கு அனுபவ பூர்வமாய்த் தெரிந்தகாரியம். ஆனால் இவ்வுலகத்தி லிருப்பதுபோலவே மற்றொரு உலகத்தில் அல்லது மற்றொரு ஜன்மத்திலுங்கூட சிலர் சுகமடையவும், சிலர் துக்கப்படவுமாக இருக்கும் என்று சொல்வது, நமக்கு அனுபவ பூர்வமாய்த் தெரியாவிட்டாலும் சில காரணங்களால் யூகித்தறியும் காரியம். "சுறை விதைத்தால் சுறைமுளைக்கும்" என்பது நமக்கு அனுபவத்தில் தெரிந்தகாரியம். அதேவிதமாய்

இந்த ஜன்மத்தில் அல்லது இவ்வுலகத்தில் நன்மைசெய்தால், அடுத்த ஜன்மத்தில் அல்லது பரலோகத்தில் நாம் சுகமடையலாம், என்பதும்; இந்த ஜன்மத்தில் அல்லது இவ்வுலகத்தில் தீமை செய்தால், அடுத்த ஜன்மத்தில் அல்லது பரலோகத்தில் துக்கப்படுவோம் என்பதும், எல்லாருக்கும் சிற்சில காரணங்களால் தோன்றுகிற அபிப்பிராயம்.

இப்படியாய் இகம், பரமென இரண்டு உலகமிருக்கின்றதென்றும், சுகம் துக்கமென்றும் இரண்டிருக்கின்றதென்றும், நன்மைசெய்தால் சுகமடையலாமென்றும், தீமைசெய்தால் துக்கமுண்டாகுமென்றும், இகத்தில் நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோமோ அதற்குத் தக்கபடி பரத்திலும் பலன்கிடைக்குமென்றும் அனேகருடைய நம்பிக்கை. இந்த அபிப்பிராயம் சரியாகவே யிருக்கலாம். சரியல்லவென்று தீர்மானமாய்ச்சொல்ல இடமில்லை. ஆகையால் தற்காலத்துக்கு மேற்சொன்னவைகளெல்லாம் இருக்கின்றன வென்று வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் இகத்திலும் பரத்திலும் நாமடையக்கூடிய எவ்விதபலனையும் அடைய வேண்டியதற்கு வழி யின்னதென்று கண்டு பிடிக்க வேண்டாமா ?

இவ்விஷயம் முக்கியமானதென்று எல்லாரும் அறியவேண்டும். எப்படியெனில், இவ்வுலகத்தைப்போல் மறு உலகம் ஒன்றும், இந்த ஜன்மத்தைப்போல் மறுஜன்மம் ஒன்றுமிருக்குமாகில், நாம் இந்த உலகத்திலும் இந்த ஜன்மத்திலும் எப்படி சுகமடைய வழிதேடுவோமோ, அப்படியே, மறுஜன்மம், மறு உலகங்களில் சுகமடைய வழி யின்னதென்று கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகின்றதல்லவா ? மேலும் அந்த வழிகளை யுணர்ந்தபின் அவைகளில் நாம் நடத்தலும் அவசியமல்லவா ? சிறுவயதிலேயே இவ்விஷயங்களைக் கவனித்து நல்வழியில் நடவாதவர்களுக்கு இதனால் ஒரு பயனுமிராது. இவ்வுலகத்தில் எத்தனைகோடி ஜனங்கள் தீராத அவஸ்தையுடன் காலங் கழிக்கின்றார்கள் ! எத்தனைபேர் வியாதியில் வருந்துகின்றார்கள் ! எத்தனைபேர் சம்பாதித்ததைச் சீக்கிரத்தில் வீண்வழிகளில் செலவழித்துப் பிற்காலத்தில் சாப்பாட்டிற்கு வழியற்று வாடித்திரிகின்றார்கள் ! இவர்களெல்லாம் இகத்தின்பயனையடைந்தவர்களெனச் சொல்லலாமா ? இகத்தில் சுகமனுபவித்தார்களா? இல்லையே. ஆகையால், இகத்தில் சுகமடையும் வழிகள் யாவை? பரத்தில்சுகமடையும்வழிகள்யாவையென்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியது அவசியம்.

நாமிவ்வுலகத்தில் காண்கிற பற்பல காக்ஷிகளால் நமக்குத்தெரிவதென்ன ? ஓர் பக்கத்தில் வியாபாரமும், வியாபாரிகளும், மற்றோர் பக்கத்தில் சமுத்திரத்தில் சப்பலோடுவதும், ஓரிடத்தில் வயல்களில் வேலைசெய்யும் கிருஷிகரும், மற்றோரிடத்தில் யந்திரங்களும் காருகசாலைகளும் அவைகளில் உழைக்கும் கூலியாட்களும், மன உழைப்பு மிகுதியாயுள்ள மந்திரிகளும், பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணாக்கரும், அவர்களுக்குக் கல்விபோதிக்கும் உபாத்தியாயரும், கலெக்டரும், நியாயாதிபதிகளும், சோம்பேறிகளாய்ப் பிச்சையெடுத்துத் திரியும் பிச்சைக்காரரும், சிறைச்சாலைகளில் வெகுநாளாய் வருத்தமுறும் ஜனங்களும், பொலீஸ் சேவகரும், போர்ச்சேவகரும், குருக்களும், வேர்வைசொட்ட உலையின்முன்னின்று வேலைசெய்யும் கருமானும், சந்தோஷமாயிருக்கும் சிலரும், வியாதியிலழுந்தி அவஸ்தைப் படுகிறவரும், பாலரும் விருத்தாப்பியரும், ஏழைகளும் செல்வர்களும், இன்னும் எவ்வளவோ பேதாபேதங்களும் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் இருக்கின்றன வென்பதற்குச் சந்தேகமில்லை. இவைபோன்ற எத்தனையோகோடி காரியாதிகள் இவ்வுலகத்தில் நடந்து வருகின்றன. ஆழ்ந்து சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இவைக ளிருப்பதாகத் தெரிவது மல்லாமல், அவைகள் ஏதோ சில காரணங்களால் அப்படியாகின்றனவென்று நன்றாய்ப் புலப்படும்.

இவ்வுலகத்தை யுண்டாக்கி நடத்திவரும் ஒரு பரம்பொருள் உண்டென்பது வாஸ்தவமென நம்பினாலும் நம்பாவிட்டாலும், இவ்வுலகத்தில் நடக்கும் காரியங்கள் எல்லாம் ஒருவிதமாகவும், மாறுதலின்றியும் நடக்கின்றன என்பது எல்லாருக்குந்தெரியும். ஏதோசிலஇயல்புவிதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் இவ்வுலகம் அடங்கி அவ்வாறே நடந்தேறி வருகிறதெனத் திட்டமாய்த் தெரிகிறது. அவைகளைத்

தடுக்கவும் மாற்றவும் எவராலும் கூடாது. அவைகளுக்கு அடங்கி நடத்தல் நமது கடமையாகும். அவ் வியல்பு விதிகள் எவை வயெனக் கண்டறிந்தால், அதுவே இகபரசுகம் இரண்டையு மடையவேண்டியதற்கு வழி யிதுவென்று காட்டுவதாயிருக்கும்.

இவ்வுலகத்தில் ஒருவர் சுகிக்கவும் மற்றொருவர் துக்கிக்கவும் காரணமென்ன ? ஒருவர் பல்லக்கேறிச் செல்லவும் மற்ற நால்வர் அப்பல்லக்கைத் தூக்கிச் சுமந்துபோகவும் காரணமென்ன ? ஒருவர் இருந்தவிடத்தி லிருந்துகொண்டே இறகுகொண்டு இரண்டு கடிதங்களெழுதிவிட்டு இரண்டாயிரம் பொன் சம்பாதிக்கவும், மற்றொருவன் நாள்முழுவதும் வெயிலிற் கிடந்து பிரயாசையுடன் உழைத்தும் இரண்டு அணாவும் கிடைப்பது அருமையாயிருப்பதின் காரணம் யாது? ஒருவர் இலக்ஷாதிபதியா யிருந்தும் அவருடைய செல்வத்தை யனுபவிப்பதற்குசந்ததியில்லாமற்போவதேன்? ஒருவருக்கு சமையல் அறையொன்று, சாப்பாட்டறை ஒன்று, சினேகிதனைக்காண ஓர் அறை, படுக்கையறையொன்று, விளையாட்டாய்க் காலங்கழிக்க ஓர் பங்களா, சாமான்களைச் சேர்த்துவைக்க ஓர் பண்டகசாலை, தோட்டம் துறவு இவையெல்லாம் இருக்க, மற்றொருவருக்கு இருக்கவும் தலைசாய்க்கவும் ஒரு கெஜ இடங்கூட இல்லாம லிருப்பதேன் ? இப்படியெல்லாம் இவ்வுலகத்திலுள்ள மனிதரில் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இருக்கும் இலக்ஷக் கணக்கான பேதங்களுக்கு முகாந்திரமென்ன ? இவைகளை ஆராய்ந்தறிவது இகசுகத்தையடைய வழிகாட்டும். திடீரென நோக்கினால் காரணமொன்றும் தென்படாது. தீரயோசித்தால் ஒவ்வொன்றுக்கும் தகுந்த காரணமிருப்பதாக வெளியாகும். மேலும் இப்பேர்ப்பட்ட காரணங்கள் உலகத்தோர் எல்லாருக்கும் ஓரேவிதமாகவும், மாறுதலில்லாமலும் சம்பவிக்குமெனவும் விளங்கும்.

(இன்னும் வரும்.) J. D. R.

கற்புநிதி சரித்திரம்.

முற்காலத்தில், புஷ்பபுரம் என்னும் பட்டணத்தில் பங்கயக்கண்ணன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் தன் பராக்கிரமத்தினால், தன் பேர் கேட்டமாத்திரத்திலேயே அயல் வேந்தர்கள் கிடுகிடென்று நடுங்கும்படி, செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்கு புருருவன், துற்குணன் என்று இருவர் மக்கள் இருந்தார்கள். இவர்களிருவரையும், தன் சமீப பந்துவாகிய சம்புமாலி யென்பவனையும் தன் சேனைத்தலைவர்களாக நியமித்திருந்தான். மூவர்களும் சமவயதுள்ளவர்களா யிருந்தபடியால் ஒருவருக்கொருவர் வெகு இஷ்டத்துடனும் சரசத்துடனும் நடந்துகொண்டு வந்தார்கள். மூவர்களுக்கும் கலியாணம் முடிந்திருந்தது. இராசகுமாரர்கள் இருவரும் ஒரே அரண்மனையில் வாசஞ்செய்தபடியால் அவர்களுடைய மனைவிகளிருவரும் ஒருவருக் கொருவர் மிக்க அன்புபாராட்டி சகோதரிகளைப்போ லிருந்தார்கள். ஆனால் சம்புமாலியோ கோட்டைக்கு வெளியே ஓர் அரண்மனையிலிருந்தான். அவன் மனைவிக்குக் கற்புநிதி யென்று பெயர். அவள் பாண்டியதேசத்துச் சேனாதிபதியின் புத்திரி. அத்தேசத்து அக்காலத்து மாதர்களைப்போல் சிறந்த கல்வித் தேர்ச்சியுடையவள். அவளுடைய அழகைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. ஆனால் அழகிருந்தென்ன? கல்வியினால்தான் பயனென்ன ? நல்லகுணமன்றோ முக்கியமாய் வேண்டியது. குணமில்லா விட்டால் முருக்கின் பூவுக்குச் சமானமேதவிரவேறன்று. அழகுடனும் கல்வியுடனும் குணமும் அமைந்தால், பொன்மலர் நாற்றம் பெற்றதுபோன்றும். கற்புநிதியின் குணத்தைப்பற்றிச் சொல்லப்புகின் நமக்குத் திருப்தி வருமளவும் புகழ்வதற்கு இடம் போதாது. தன் தாய் தந்தையரிடத்து அளவற்ற பக்தியும் அன்பு முள்ளவளாயும், தன் னுடன்பிறந்தோர், தோழிகள் முதலானவர்களிடத்து மிக்க வாஞ்சையுள்ளவளாயும், தன் கணவனிடத் துக் கரைகாணுக் காதலுள்ளவளாயும், தன் ஜீவகாருணியத்தின் மிகுதியால் "கஞ்சத்தின்(தாமரையின்) அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்களை" யுடையவளாயுமிருந்தாள். இராசகுமாரர்களின் மனைவிகள் சிற்றின்பப் பிரியர்களாயும், கல்வித்தேர்ச்சி யில்லாதவர்களாயும், பெருமையும் அகங்காரமுமுள்ளவர்களாயு மிருந்தபடியால், [illegible]

களுடன் இப்பெண்மணி அதிகமாய்ப் பழகுகிறதில்லை. மேலும் இப்பெண்மணி இராசவம்சத்தினளாயினும் தன் வேலைக்காரரைக் கருருடனும் தாக்ஷிணியத்துடனும் மேற்பார்ப்பதுமன்றி தானும் அவர்களுடன் தன்னாலியன்ற வேலைகளைச் செய்வாள். இப்படித் தன் மனமகிழக் கணவனுடன் கற்புநிதி வாழ்ந்திருக்கு நாளில், ஆப்கானிஸ்தான் தேசத்தை ஆண்டுவந்த ஒரு மிலேச்ச அரசன் அனேக நாடுகளை வென்றுகொண்டு புஷ்பபுரத்தின் பேரிலும் படையெடுத்து வந்தான், பங்கயக்கண்ணன் அவனுடன் போர்புரியப் புறப்படும்பொழுது சேனைத்தலைவர்களி லொருவனாகிய கற்புநிதியின் புருஷனும் போகவேண்டிய தாயிற்று. அடங்காத் துக்கமுடையவளாயினும் தன்கணவனைச் செல்வதினின்றுந் தடுக்கவில்லை. அவன் புறப்படுமுன், ஜீவகாருணியமுள்ள இப்பெண் மாணிக்கம், தன்கீழுள்ள சேனாவீரர்கள் வீண்கொலை, கொள்ளை, பெண்களின் கற்பை யழித்தல், தீயிடுதல் முதலான யுத்தங்களில் நடக்கும் கொடுந்தொழில்க ளொன்றுஞ் செய்யாமல் காத்துக்கொள்வதாகத் தன் நாயகனிடத்திலிருந்து ஓர் வரம்பெற்றுக்கொண்டாள். பின் தன் துக்கத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு சத்காரியமாகச் செல்லும் தன் புருஷனை சிரித்தமுகத்துடன் வழியனுப்பினாள்.

ஐந்தாம்நாள் பகலெல்லாம் யுத்தம்செய்து களைத்து சாயங்காலம் ஆறுமணிக்கு சேனைத்தலைவர்களாகிய புரூருவன், துற்குணன், சம்புமாலி யென்ற மூவர்களும், உல்லாசமாய் ஓர் கூடாரத்திலிருந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வீற்றிருந்த கூடாரம் புஷ்பபுரத்துக்கு வெளியே ஓர் காதவழிக் கப்பாலிருந்தது. பல சங்கதிகளையும் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்பொழுது ஏதோ தங்கள் மனைவிகளுடைய ஞாபகம் வந்தது. பின்னடந்த சம்பாஷணை யாதெனில்:—

துற்குணன்:—அண்ணா! நம்முடைய மனைவிகளைப்போல் ஒருவரும் கிடையாது, ஆ! ஆ! அவர்களுக்குள் உள்ள அன்பே அன்பு! இருவரும் அப்படியே யிருக்கிறார்களே அவர்களைப்போலு எப்பொழுதும் சந்தோஷகரமான மனதையும் சிரித்த முகத்தையு முடையவர்களுமுண்டோ?

புரூருவன்:—நாம் கண்டதிற்குளில்லை. கற்புநிதியைப்பார். பெருங்கவலை யுடையவள்போலும் குதூகல மற்றவளாயுமிருக்கிறாள், சம்புமாலிக்குக் கோபமோ? இல்லையே? உள்ளதைத் தானே சொல்லுகிறேன். நாம் இல்லாத காலத்து பிரிவாற்றாமையால் விசனமுண்டாவது இயல்பு. ஆனால் நாம்கூடவிருந்தால் ஆனந்தக் கடலில் ஆழ்வதன்றோ தகுதி. அதின்றி, கற்புநிதி நாட்டியங்களிற் சேராமலும், விருந்தினங்களில் ஒதுங்கி நடந்துகொண்டு மிருக்கிறாள்.

சம்புமாலி:— ஆனால் இப்பொழுது உங்களுடைய மனைவிகள் வெகு விசனத்துடன் அழுதுகொண் டிருப்பார்களோ?

துற்குணன்:—அதற்கும் சந்தேகமோ நாங்களில்லாவிட்டால் அவர்களுக் கெப்படிச் சந்தோஷமுண்டாகும், உன் மனைவிதான் ஒருவேளை சந்தோஷமாயிருப்பாள்.

புரூருவன்:—வீண்வார்த்தை யேன்? போய்ப் பார்த்தால் தெரியுமே. என்றான்

உடனே மூவர்களும் ஒருவருக்கும் தெரியாமல் குதிரைகளின்பேரி லேறிக்கொண்டு புஷ்பபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

நகரத்தையடைந்து வடக்குக் கோட்டைவாசல்வழியாய்க் கோட்டைக்குட் புகுந்து இராசகுமாரர்களினது அரண்மனையைச் சமீபிக்கும்பொழுது சங்கீதசப்தம் காதில் விழுந்தது. விரைவுடன் அருகி, அரண்மனைக்குள் திடீரெனச் செல்ல, எங்கேபார்த்தாலும் புருஷர்களும் பெண்களும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு நடனஞ்செய்வதையும், பலவித வாத்தியங்கள் முழங்குவதையும், புஷ்பங்களும் சந்தனம் முதலிய வாசனை திரவியங்களும் மிதெங்குஞ் சிதறிக்கிடப்பதையும் கண்டு வெட்கமுற்று வெறுப்புடன் வெளியே வந்துவிட்டார்கள். கொஞ்சநேரம் ஒன்றுஞ்சொல்லாமல் திகைத்து நின்றபின், துற்குணன் சொன்னதாவது:—

"இதற்கோ கிசிவேளையில் அவசரமாய் வந்தோம்! 'சேலைகட்டிய மாதரைநம்பினால் தெருவில்நின்று தியங்கித் தவிப்ப' ரென்பது நிசமாயிற்றே." என்றான். அதற்கு சம்புமாலி-"நாமறிந்த பொருள் ஒன்றைக்கொண்டு அறியாப் பொருள் யாவற்றையும்பற்றி யொன்று சொல்லுதல் தப்பன்றோ? இரண்டுபெண்கள் நம்பிக்கைக்கு விரோதமாய் நடந்தால் மாதர்களையே நம்பக் கூடாதென்று சொல்லுதல் பொருந்துமோ?

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"—என்னும்

வள்ளுவர் மொழியை மறந்தனையோ? அல்லது கற்புள்ள பெண்களே கிடையாரென்று நினைத்தனையோ?" என்றான்.

துற்குணன்:— உலகத்திற் கற்பிருக்கலாம். ஆனால் உன் வீட்டிலும் எங்கள் வீட்டிலும் இல்லையென்பது திண்ணம்.

சம்புமாலி:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? என் மனைவியாகிய கற்புநிதியை இங்கே பார்த்தாயா?

துற்குணன்:—இங்கே யில்லாவிட்டால், உன் வீட்டில் இதைவிடப் பெரிய விருந்துகளும் நடனங்களும் செய்துகொண்டிருப்பாள்.

சம்புமாலி:—நான் அவளை யறிந்தமட்டும் அப்படிச் செய்யமாட்டாளென்று நம்புகிறேன். போய்ப்பார்ப்போம் என்றான்.

கோட்டைக்கு வெளியே சம்புமாலியின் அரண்மனை வாயிலில் வந்தவுடன் கதவு தாட்போட்டிருந்தது. நிசப்தமா யிருந்தபடியால் வேலைக்காரர்கள் யாவரும் நித்திரைபோய்விட்டார்களென்று அறிந்தார்கள். சற்றுநேரம்சென்றபின் கல்லையும் கனியச்செய்யும் குரலோடு கற்புநிதி கம்பராமாயணத்தில் இராவணனால் தூக்கிக்கொண்டு போகப்பட்ட சீதாதேவியினது புலம்பலைப் பாடினாள்:—

"செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே! பொழிலே! வனதே வதைகாள்!
'அஞ்சேல்' எனநல் குதிரேல் அடியேன்
உஞ்சால் அதுதான் இழிபோ உரையீர்"

(செஞ்சேவகனார் = இராமர் ; மஞ்சு = மேகம் ; பொழில் = தடாகம்; அஞ்சேல் = பயப்படாதே; நல்குதிரேல் = சொல்லின்; உஞ்சால் பிழைத்தால்.)

அவளுடைய தற்கால நிலைமைக்கு அப்பாட்டின் பொருத்தத்தைக்கண்டு வியந்து, கதவைத் திறக்கச்சொல்லி சம்புமாலி உட்செல்ல, கற்புநிதி ஆனந்தபரவசமானாள். இராசகுமாரர்களிருவரும் அதிக வெட்கத்தை யடைந்து வெளியே நின்றார்கள். பிற்பாடு மூவரும் திரும்பியுத்தகளத்திற்கு வந்து விட்டார்கள். நாம் இது வரையில் இராசகுமாரர்களது குணத்தைப்பற்றி யொன்றும் சொல்லவில்லை. நம்முடைய விஷயத்துக்கு துற்குணனைப்பற்றி மாத்திரம் சொன்னாற்போதும். அவனுக்கு அப்பெயரே தக்கது. கற்புநிதியினது நடக்கையைப் பார்த்ததுமுதல் அவன் பொறாமை கரைகடந்துபோய் விட்டது. துற்குணருக்கு சற்குணரைக்கண்டாற் பொறாமையுண்டாவது இயல்பே. முடியுமானால் அவர்களுடைய நற்குணத்தைத் தங்களாலானமட்டுங் கெடுக்க முயற்சி செய்வதும் துற்குணரது சுபாவந்தான், அன்றியும் துற்குணன் இதற்கு முன்னமேயே கற்புநிதியினுடைய அழகைக்கண்டு மயக்குற்றவனாயிருந்தான். இந்தக்காரணங்களால் அவள் கற்பை யெப்படியாவது அழித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் மறுநாள்இரவில் சாமநேரத்துக்குப் பின் ஒருவரும் அறியாமற் புறப்பட்டு நடுநிசியில் புஷ்பபுரத்துக்கு வந்து சம்புமாலிவீட்டின் கதவைத் தட்டினான். ஒரு தாதி கதவைத்திறக்க, இராசகுமாரன் அவசரமான இராச்சிய காரியமாய் புஷ்பபுரத்துக்கு வந்ததாயும், கோட்டைக் கதவுகள் அடைத்தாய் விட்டதினால் இரவுதங்கிப்போக அவ்வீட்டுக்கு வந்ததாயும், கற்புநிதிக்குச் சொல்லி அனுப்பினான். அப்பெண்மணி இப்பாவியின் எண்ணங்களை அறியாளாய், தன் பிராணநாயகனது சிநேகிதனும், சமீப பந்துவுமான துற்குணனது வரவைக்கேட்டு மகிழ்ந்து, எழுந்துவந்து உபசரித்து, தன்நாயகனது க்ஷேமத்தையும் வீரச்செயல்களையும்பற்றிப் பலவாறு வினவிக் களித்த பின்பு, அவ் விராசகுமாரன் நித்திரை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி வேலைக்காரருக்குச் சொல்லி விட்டு, அந்தப்புறத்திலுள்ள தன் ஏகாந்த சயனத்துக்குச் சென்றாள். பள்ளியறையில், தன்நாயகனது கீர்த்தியைப் பரவச் செய்து, காப்பாற்றி, தன்னிடம் அவரை சீக்கிரம்கொண்டு சேர்க்கும்படி கடவுளைப் பிரார்த்தித்தபின், அப்பெண்மணி நித்திரைபோனாள், கொஞ்சநேரம் துற்

யானபின் துர்சொப்பனங்களால திடுக்கிட்டு விழித்தாள். விழிக்கவே, தன் கட்டிலருகே உருவின வாளுடன் தன்னால் மேன்பட்ட அதிதியென்று உபசாரம் செய்யப்பட்ட துற்குணன் நிற்பதைக் கண்டாள். முதலில் கூச்ச லிடக் கூடாதக்கு எழவில்லை. பூனையைக்கண்ட கிளியைப்போல் குழறியழுதாள். பின்பு மனதைக் கொஞ்சம் தேற்றிக் கொண்டு, கட்டிலைவிட்டுக் கீழேயிரங்கி ஒருபக்கமாய் நின்று கொண்டு,

"இராசகுமாரரே! இந்த வேளையில் அந்தப்புறத்தில் நான் தனிமையாய் நித்திரைசெய்யும் அறைக்கு வரவேண்டிய தென்ன?" என்று கேட்டாள். அதற்கு துற்குணன்:—"கரும்புத் தோட்டத்துக்குள் மதம்பிடித்தயானை செல்வதற்குக் காரணம் சொல்லவும் வேணுமோ" என்று கேட்டான்.

'ஈய்ந்தன சலாகையன்ன உரைவந்து கதுவ முன்னம்
தீய்ந்தன செறிகன் உள்ளம் திரிந்தது செவ்தசோரி
பாய்ந்தன கண்கள் என்றும் பரிந்திவள் உயிர்க்கும் பெண்மைச்
சேய்ந்தன அல்லசெவ்ய மாற்றங்கள் இனையசொன்னுள்."
—கம்பன்.

[சலாகை=நாராசம்; கதுவுதல்=பற்றுதல்; சோரி=இரத்த மழை; உயிர்கும்—பெருமூச்சுவிட்டாள்; மாற்றம்=சொல்]

கற்புநிதி அடங்காக் கோபங்கொண்டு.—

"அடே துஷ்டா! நான் தனித்திருக்கிறேனென்று தகாதவார்த்தைகளெல்லாம் பேசுகிறாயோ? என் பிராணநாயகரிதை யறிந்தால் உனக்கு என்னகதி அமையுமென்பதைப் பற்றிச் சற்று யோசித்துப்பார். தனித்திருந்தாலென்ன? கற்பரசியாகிய தமையந்தியினால் வேடன் எரிபட்டு நீறானது அறியாயோ? உன் பாழான எண்ணங்களை யொழித்துவிடு.

"மற்றொருவர்க்காய் மனைவாழும், தாரங்கொண்டார் என்றிவர் தம்மைத்தருமம் தான், ஈருங்கண்டாய்"

வீணாகக் கெட்டுப் போகாதே என்றாள். அது கேட்ட துற்குணன, பின்னும் பெரும்பொருள், ஆடையாபரணங்கள், அரசாட்சி முதலிய வற்றைப் பற்றிப் பேசியும் இகழ்ச்சியே பதில் கிடைப்பதைக் கண்டு கோபங்கொண்டு, வாளாற் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான். கற்புநிதி, தன் தலையணையின் கீழ் காவலுக்காக எப்பொழுதும் வைத்திருக்கும் உடைவாளைத் திடீரென்று எடுத்து உருவிக்கொண்டு, தன் வேலைக்காரர்கள் விழிக்கும படி கூச்சலிட்டாள். துற்குணன் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நிற்கையில், கதவைத் திறந்துகொண்டு வேலைக்காரர்களும் தாதிகளும் ஓடிவந்தார்கள். தங்கள் எஜமானி நிற்பதையும் துற்குணன் நிலையையுங் கண்டு, குறிப்பறிந்து, துற்குணனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு சிலர் போக, சிலர்கற்புநிதியின் கட்டளையை எதிர்பார்த்திருந்தார்கள். உடனே கற்புநிதி கொஞ்சம் கோபம்அடங்கி வாளை எறிந்துவிட்டு தன் கணவனை உடனே யழைத்துக்கொண்டு வரும்படி சேவகர்களை அனுப்பினாள். அப்படியே சூரியோதயமாய் கொஞ்சநேர மானவுடன் சம்புமாலி வந்து சேர்ந்தான். கற்புநிதி தன் நாயகனிடத்தில் நடந்தவைகளை எல்லாம் சொல்லி, கட்டுண்டு அடைபட்டிருந்த சண்டாளனையும்காட்ட, சம்புமாலி இராசகுமாரனைக் கடினமான காவலில் வைத்துவிட்டு, சங்கதிகளை அரசனுக்குத் தெரிவித்தான். நீதியினின்று தவறாத அரசன்

"தன்குற்றம் நீக்கி பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் * இறைக்கு?"

என்னும் வள்ளுவர் வாக்கை மனதிற் கொண்டு தன்மகனை சிரச்சேதஞ் செய்து விடும்படி உத்தரவு செய்தான்.

"தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்† துணை
கொள்வர் பழி நாணுவார்" [யாக்

என்பது பொய்யாமோ? ஆனால் கற்புநிதி இத்தண்டனையைக் கேட்டவுடன், தன்னால் ஒருவனுக்கு மரணம் வருவதைக்குறித்து விசனம் அடைந்து அரசனை மரணதண்டனையை நீக்கி விடும்படி வேண்டிக் கொண்டாள். சம்புமாலியும் வெகுகால நேசத்தை நினைத்து இரங்கி, மரண தண்டனையை நீக்கும்படி அரசனைப் பிரார்த்தித்தான். அப்படியே அரசன் மரண தண்டனையை நீக்கினபோதிலும், துற்குணன் தன்னாட்டி லிருந்தால் கேடே விளையுமென்று நினைத்து, அவனுக்கு சொற்ப திரவியம் கொடுத்து தேசத்துக்கு வெளியே எங்கே யாவது போகும்படி துரத்தி விட்டான், "அடாதது செய்தார் படாததுபடுவார்." பின்பு கற்புநிதியும் சம்புமாலியும் வெகுநாள் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள், கற்புநிதியினது கற்பின் சிறப்பும், தயாளகுணமும் இன்றைக்கும் புகழ்ந்து பேசப்படுகின்றன.

பேரீ.

* இறை—அரசன். † தினை—அளவு.

ஆரியதர்மம்.

ஆரியதர்மமானது ஞியான கர்மங்களை அடங்கியதா யிருக்கிறது.

ஞியானமாவது:—

1. ஆண்டவர் ஒருவர்தான்.

2. சகலசிருஷ்டியும் அவரால் செய்யப்பட்டது. ஆகையால், அவர் நம்முடைய தந்தையா யிருக்கிறார்.

3. அவர் எவ்விடத்திலும் உள்ளவர்.

4. அவர் எல்லாவற்றையும் காண்பவர்.

5. அவர் சக்திக்கு அளவு இல்லை.

6. அவர்எல்லாமறிந்தவர்.

7. அவர் நம்மை எல்லோரையும் காப்பாற்றுகிறார்.

8. நம்முடைய தாய் தந்தையர்களைப் பார்க்கிலும் அதிக அன்புடன் நம்மை வளர்க்கிறார்.

9. சரீரத்தையும், புத்தியையும், நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் நாம் சுகமாக இருக்கவேண்டுமென்றே அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

கர்மங்களாவன:—

1. நம்முடைய தந்தையின் பிரஜைகளாகிய நாம் எல்லோரும் ஒருவரோடொருவர் அன்புடன் கூடி நடக்கவேண்டும்.

2. மற்றவர்களுடைய சுகத்தைப் பார்த்து சந்தோஷத்தையும், துக்கத்தைப் பார்த்து துக்கத்தையும் நாம் அடையவேண்டும்,

3. எந்த ஜந்துவினிடத்திலும் கொடுமை செய்யக்கூடாது.

4. உண்மை பேசவேண்டும்.

5. இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

6. எல்லாரிடத்திலும் கிருபை யுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

7. எந்தவிஷயத்தையும் நிரயோசிக்கவேண்டும்.

8. எல்லாருக்கும் ஆதித்தியம் செய்யவேண்டும்.

9. ஒருவருடைய சொத்தையும் அபகரிக்கக் கூடாது.

10. ஒருவருக்கும் தீங்கு செய்யக்கூடாது.

11. பெரியோர்கள், தேவதைகள், ரிஷிகள் முதலியோரை வந்திக்க வேண்டும்.

12. வித்துவான்களை கௌரவிக்கவேண்டும்.

13. அன்னியர்களுடைய தப்பிதங்களைப் பார்த்து கோபியாமலிருக்க வேண்டும்.

14. டம்பமா யிருக்கக்கூடாது.

15. இதரரை ஈனமாய் எண்ணக்கூடாது.

16. தாய் சகோதரி இவர்களிடத்தில் மரியாதையோடும் பிரீதியோடும் நடக்கவேண்டும்.

17. பொதுவில் ஸ்திரீ ஜாதியை மரியாதையோடு நடத்தவேண்டும்.

18. ஆசாரியரை மரியாதையோடு நடத்தவேண்டும்.

19. செய்யவேண்டிய கடமைகளைக் கிரமமாகச் செய்யவேண்டும்.

20. சுத்தமா யிருக்கவேண்டும்.

21. ஆஹார விஹாரங்களிய் கிரமமா யிருக்கவேண்டும்.

22. கிரந்தங்களைச் செவ்வையாய்ப் படிக்கவேண்டும்.

23. நல்ல நடைத்தையுடன் இருந்து கடவுளை பஜிக்கவேண்டும்.

24. முடிவில் பிறருக்கும், தனக்கும், ஆண்டவருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச்சரியாய் செய்யவேண்டும்.

இந்த கட்டளைப்படி நடந்தால், இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகம் அடையலாம்.

மொத்தத்தில் இதரர்களுக்கு தீங்குசெய்யாமல் தான் சுகமடையும் பொருட்டுச் செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்யவேண்டும். எல்லாருக்கும் நன்மை செய்வதையே கற்கவேண்டும். ஆண்டவனைத் தொழவேண்டும். சகல ஜந்துகளுக்கும் நன்மை செய்யவேண்டும். ஆண்டவர் நமக்கு நன்மை செய்வார்.

இரகுநாதராவ்.

பத்திரிகாசாரம்.

விசேஷக்குறிப்புகள்.

"அறிவைப் பரவச் செய்வதற்கான ஏற்பாடு."

அறிவைப் பரவச் செய்யும் சபை(ஏஜன்ஸி) யார் வெளிப்படுத்திய வரலாற்றுப் பத்திரிகையில் கண்டிருக்கும் "அறிவைப் பரவச் செய்வதற்கான ஏற்பாடு" இன்னதென்று யாவருக்கும் விளங்க அவ்வேற்பாட்டுச் சுருக்கத்தைஇப்பத்திரிகையின் கடைசியில் பிரசுரித்திருக்கிறோம்.இவ்வேற்பாட்டைகனம் பொருந்திய ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர் அவர்கள் முதலாகப்பார்வையிட்டுக் காரியசாத்தியமானதென்றும்,காரியத்தில் நிறைவேற்றப்பட்டால் ஜனங்களுக்குஅதிகநன்மை பயக்குமென்றும்மேலானஅபிப்பிராயம்கொடுத்திருக்கிறார்கள். இவ்வேற்பாடுகாரியத்தில் நிறைவேறி விர்த்தியடைவதைக் கனம் பொருந்திய கவர்னர் முதலாக அதிசிரத்தையோடு நோக்கிவருவார்கள். கனம்பொருந்திய கவர்னர் வென்லாக் பிரபு அவர்கள் இச்சபை (ஏஜன்ஸி) யார் வெளிப்படுத்திய விண்ணப்பத்தை மிகப் பிரீதியோடு படித்துப் பார்த்து, ஜனங்களுக் கறிவையூட்டி அவர்கள் நிலைமையைச் சீர்படுத்த வேண்டுவதவசிய மென்பதைப் பற்றி இச்சபையாரோடு முற்றும் ஒருமனப் பட்டவராயிருக்கிறாரென்றும், ஆகையால் இவ்வேற்பாடு காரியத்தில் விர்த்தியடைவதை அதிக சிரத்தையோடுநோக்கி வருவாரென்றும் சொல்லி அவர் அந்தரங்ககாரியதரிசியைக்கொண்டு ஷை சபை (ஏஜன்ஸி) காரியதரிசிக்குக் கடிதமெழுதுவித் திருக்கிறார்.

பத்திரிகை பரவ வில்லையே!

இந்த "அறிவைப் பரவச் செய்வதற்கான ஏற்பாடு" அம்பல மேறு முன் ஒரு நிருப நேசர் "நமது நாட்டில் பத்திரிகைகள் கிராமங்கள் தோறும் பரவ வில்லையே! அதின் குணம் இன்னதென்று கிராமாந்திரங்களின் ஜனங்களுக்குப் போதித்த போதிலும் கவனிக்கமாட்டேன் என்கிறார்களே!..." என்று சொல்லிப் பரிதபித்துப் புலம்பிப் பத்திரிகைகளுக் கெழுதினார். அவர் சொன்னது வாஸ்தவமே. நமது நாட்டார் பத்திரிகையின் பயன் இன்னதென்றும் அதை விடாது படித்துவருவதால் விளையும்நன்மை யின்னதென்றும் நன்றாய் அறிய வில்லை தான்.

"கரும்பு தின்னக் கூலி"

கிராமாந் திரங்களில் பத்திரிகையைப் பரவச் செய்வதைப்பற்றி "இதற்கு எந்த வித முயற்சி யெடுத்த போதிலும் கரும்புதின்னக் கூலியும் கொடுப்பதுபோலிருக்கிறதே" என்று அவர் சொன்னதும் ஒருவாறு வாஸ்தவமே. ஆனால் அதற்கு என்ன செய்கிறது! இடீரென்று கிராம வாசிகளை யெல்லாம் பத்திரிகைகள் வாங்கிப் படிக்கும்படி செய்வது முடியாத காரியமாம். பத்திரிகைகள் பரவி விர்த்தியாவது ஜனங்களுள் கல்வி பரவி யிருப்பதற்குத் தக்கபடி யிருக்கும். அப்படிப் பார்த்தாலும் நமது நாட்டில் கல்வி பரவி யிருப்பதற்குத் தக்கபடி பத்திரிகைகள் பரவி யிருக்கின்றனவோ வென்றால், அதுவும் இல்லை. பிரதமவித்தை பரவச் செய்வது எத்தேசத்திலும் சர்க்காருடைய கடமை. அதற்குமேல் பொதுவிஷய அறிவும் உயர்தரக்கல்வியும் பரவி யபிவிர்த்தியாவது ஜனங்கள் கவர்ன்மெண்டார் இருவரும் சேர்ந்து ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாக வுழைப்பதால் ஆகவேண்டுமேயன்றி இருவரில் எவர் முயற்சி குன்றினும் காரியம் பலிக்காதாம்.

பாடசாலைகளும், பத்திரிகைகளும்.

கவர்ன்மெண்டார் மேற்சொன்ன கொள்கையை மேவிட்டே உயர்தரக் கல்வி யபிவிர்த்தி வேலையினின்றும் கொஞ்சம் கொஞ்சமாய் விலகி அவ்வேலையை அந்தரங்கநபர்கள் வசத்தி லொப்புவித்துஅதற்கு அவர்கள் "கிராண்டு" கொடுத்துக் கொஞ்சம் சகாயம் செய்வதே தங்கள் கடமையாக நினைத்து நடந்து வருகிறார்கள். கல்வி யபிவிர்த்தி விஷயத்தில் பாடசாலைகளைப்போல் பத்திரிகைகளும் காரியத்திற் கிசைந்த ஓர் கருவியேயாம். அங்ஙனமாக, பத்திரிகைகளைப் பரவச்செய்ய ஒத்தாசை செய்வதும் கவர்ன்மெண்டார் கடமைகளில் ஒன்றேயாம். பத்திரிகைகள் பரவிப் பலப்படப்பட ஜனங்களுக்கு அறிவும் ஞானமு மகன்று அவர்கள் சுதந்திரத்தை யதிகப்படுத்திக் கொள்ளவும் அதிகாரிகள் அக்கிரமத்தை யடக்கவும் சக்தியுள்ளவர்களாக ஆகிறார்கள். இதனால் பத்திரிகைக ளதிகமாகப் பலப்படப் பார்ப்பது கொடுங்கோற் பிரியரான சில அதிகாரிகளுக்குப் பிரியமாயிருக்கிறதில்லை. இது இத்தேசத்தில் மட்டு மல்ல. இங்கிலாந்திலு மிப்படியே நடந்து வந்தது. ஆனால் அந்தக் காலங்களெல்லாம் இப்பொழுது போயின. இத்தேசத் துத்தியோகஸ்தர்களில் சிலர் அப்படியிருந்தாலும் கவர்ன்மெண்டார் பத்திரிகைகளுக்குதவிசெய்வது அவர்கள் கடமையே.

கவர்ன்மெண்டார் உதவி.

நமது கவர்ன் மெண்டார் ஒரு விதமாகப் பத்திரிகைகளுக்கு உதவியும் செய்து வருகிறார்கள். அவ்வுதவி பத்திரிகைகளுக் குபயோகமான சமாசாரங்களைக் கொடுத்துதவுவதிலும் பத்திரிகை விர்த்தியாவதற்கு வேண்டிய சாதகங்களை யமைத்துக் கொடுப்பது முதலான இவ்விதங்களிலும் புரியப்பட்டு வருகிறது. இவ்வழிகளில் அவர்கள் செய்யத்தக்கது இன்னும் எவ்வளவோ இருக்கிறதாயினும் இதுவரையில் செய்திருப்பதை மறப்பது நன்றன்று.

ஜனங்களுக்கு அக்கரை வேண்டும்.

பத்திரிகை ஜனங்களுக்குள் பரவி விர்த்தியடையவேண்டுமானால்ஜனங்களுக்கே கொஞ்சம் அக்கரை யிருக்கவேண்டும். ஜனங்களுக்கு அக்கரை யில்லா விட்டால் அவர்கள் பத்திரிகைகளை வாசித்துப் பயன்படுவதெப்படி? குதிரையைத் தண்ணீர்த் துறைக்குக் கொண்டுபோக நம்மாலாகும். அது மனதுவைத்துக் குடித்தாலன்றி அதைக் குடிக்கும்படிசெய்ய முடியுமோ? அதுபோல கிராமஜனங்களுக்குப் பத்திரிகைகளை வாசிக்க வேண்டுமென்கிற அக்கரை யில்லாவிட்டால் கவர்ன்மெண்டாரும் மற்றவர்களும் செய்யும் உதவி என்னத்திற் காகும்?

விவேகிகள் கடமை.

ஜனங்களில் விவேகிகளாயிருப்பவர்மட்டும் இக்காரியத்தில் அவர்கள் கடமையையுணர்ந்து அக்கடமைப்படி நடக்க இசைந்து முன்வருவார்களானால் ஆளுக்குக் கொஞ்சமாக இதுவிஷயத்தில் எவ்வளவோ நன்மை செய்து விடலாம். அதற்குமட்டும் மற்ற ஜனங்களுக்கு அக்கரை யிருக்க வேண்டாமா? அதுதானே யில்லையென்று ஆத்திரமாய்ப் பதில்சொல்லத் துடிப்பார்கள் சிலர். அதற்கு நாம் அவர்கள் கேட்குமுன்னே பதில் சொலுகிறோம்.

கரும்பின் உபமானம்.

தற்காலம் கிராமாந்திரங்களிலுள்ள ஜனங்களு மற்ற சாமான்ய ஜனங்களும் பத்திரிகை வாங்கி வாசிப்பதில் அக்கரை யற்றிருக்கிறார்களென்பது வாஸ்தவமென்று நாம் முன்னமே ஒப்புக்கொண்டோம். ஆனால் அவர்கள் அக்கரையற் றிருப்பது, பெரும்பாலும் அவர்களுக்கு இதுவிஷயத்தில் அக்கரையூட்ட ஒருவரில்லாததினாலேயே யன்றி வேறல்ல. கரும்பின் உருசி தெரியாத ஒரு மனிதனிடம் சென்று இந்தக் கரும்பைத் தின்னப்பா நன்றாயிருக்குமென்றால், அவன், ஆகா என்று உடனே வாங்கித்தின்பானோ? "இதென்னடா! ஏதோ மரம்போலிருக்கும் கொம்பைக் கொண்டுவந்து கொடுத்து இதைத் தின்றுபார் உருசியாக விருக்குமென்கிறான். இவன் ஏதோ வீணில் வேலையற்று நம்மைவேடிக்கைசெய்யப்பார்க்கிறான்" என்றுதான் சொல்வான். அவன்முன் கரும்பின் உருசி தெரிந்த சிலர் அதைத்தின்று சக்கையை உமிழ்ந்து ஆ! ஹா! எவ்வளவு தித்திப்பா யிருக்கிறதென்று நாக்கைத் தட்டிச் சந்தோஷப் படுவார்களானால்,அதைப் பார்த்திருக்கும் அந்நியனும்,இதென்ன! இவர்கள் இந்த வெறும் கொம்பைத் தின்று இவ்வளவு சக்கையை யுமிழ்ந்து தித்திக்கிறதென்று நாவைத்தட்டி யானந்திக்கிறார்களே! இதில் ஏதோ இருக்கிறதுபோ லிருக்கிறது. அதைப் பார்ப்போமென்று" தானாக அதைத் தின்றுபார்க்க முயலுவான். அப்படிபோல ஒவ்வொரு கிராமத்திலும் பத்திரிகையின் குணத்தையறிந்தவர்கள் ஒன்றுகூடி ஒரு ஏற்பாடுசெய்து முயற்சித்தால் அனேகமாய் ஒவ்வொரு கிராமத்திலும் பத்திரிகை பரவும்படி ஏற்பாடு செய்யலாம்.

வித்தியா விஷயக் கூட்டங்கள்.

சென்ற மார்ச்சு ஏப்ரல் மாசங்க ளிரண்டிலும் வித்தியா விஷயமாகக் கூடிய கூட்டங்கள் பல. இந்தக் காலத்தில் அபிஷியல் வருஷம் முடிந்து புதுவருஷமாரம்பிப்பதோடுவித்தியாஸ்தாபனங்கள் முதலியனவும் வருஷோற்சவம் கொண்டாடும் காலமாக விருக்கிறது. இவ்வுற்சவங்கொண்டாடுங்காலங்களில் சாதாரணமாக மிகவும் உன்நத பதவிகளிலிருப்பவர்கள் அக்கிராசனத்தை வகிக்கவாவது, உபந்நியாசம் செய்யவாவது அழைக்கப்படுவதுவழக்கமாதலால் முக்கியமான பல விஷயங்களைப்பற்றிப் பிரதமஸ்தர் சொல்லும் அபிப்பிராயங்கள் இக்காலத்தில் சாதாரணமாக வெளியாவது வழக்கம், இந்த வருஷம் இப்பேர்ப்பட்டவிஷயங்களில் மிகவிசேஷமாய்க் கவனித்துப் பேசப்பட்டது வித்தியாவிஷயமாம். இதன்முக்கியத்துக்கேற்க இது உயர்பதவியிலும் அதிகாரத்திலுமுள்ளவர்களால் விசேஷகவனஞ்செலுத்திப் பேசப்பட்டது நம் மனதுக்குச் சந்தோஷத்தைத் தருவதாயிருக்கிறது.

கிறிஸ்தியன் காலேஜ் வருஷோற்சவம்

சென்னையிலுள்ள கிறிஸ்தியன் காலேஜ் என்னும் வித்தியாசாலையின் வருஷமகோற்சவம் கொண்டாடப்பட்ட காலத்தில் கனம்பொருந்திய கவர்னர் அக்கிராசனாதிபதியாக விருக்க அழைக்கப்பட்டார். அந்த ஸ்தானத்திலிருந்து அவர் பேசவேண்டிநேரிட்டதில் வித்தியாவிஷயத்தைப்பற்றிப் பலவாறு சிந்தித்து அவர் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

சரீரப்பயிற்சியின் முக்கியம்

கனம்பொருந்திய கவர்னர் அச்சமயம் அக்கிராசனத்திலிருந்து பேசினதில் சரீரப்பயிற்சி செய்ய வேண்டியதின் முக்கியத்தைப்பற்றி மிகவற்புறுத்திப் பேசினார்.

‘கிரிக்கெட்’ என்னும் பந்து விளையாட்டு சரீரப்பயிற்சிக்கேற்றதென்று அதைப்பற்றி மெச்சி சென்னை மைதானத்தில் வித்தியாசாலைகளில் படிக்கும் மாணாக்கர்கள் பலர் அப்பந்து விளையாட்டில் பிரியம் வைத்தாடிப் பழகுகிறதைப்பார்க்க அவருக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று சொன்னார். ஏனென்றால் “தேகாப்பியாசம் செய்து சரீரதிடத்தை விர்த்தி செய்யாமல் மனப்பயிற்சி மாத்திரம் செய்து மூளையைமாத்திரம் விர்த்திசெய்யப்பார்த்தால் எந்தச்சாதியையும் விர்த்திக்குக்கொண்டுவருவது கூடாதகாரிய” மென்று அவர் மிகவும் உண்மையாய் நம்புவதாகச் சொன்னார். இது வாஸ்தவமே. ‘கிரிக்கெட்’ என்பது ஆங்கிலேயர் மிகவும் பிரீதி வைத்துள்ள ஆண்மையும் தைரியமும் தரும் விளையாட்டு. ஆங்கிலேய சேனாதிபதிகளிலெல்லாம் மிகப் பிரக்கியாதி பெற்ற வெல்லிங்டன் பிரபு ‘ஆங்கிலேயர் போர் முகத்தில் பெற்ற வெற்றிகளெல்லாம் அவர்கள் ‘கிரிக்கெட்’ பந்து விளையாடுவதில் பெற்ற வலியாலும் தைரியத்தாலுமே அவர்களுக்குக் கிடைத்தன’ என்று சொன்னார். கிரிக்கெட்டைப்போல் சிறந்த வெளியில் ஓடியாடி உக்கிரமாய் விளையாடத்தக்க சுதேச விளையாட்டுகளுமிருந்தன. அவையெல்லாம் அப்பியாசமின்றி விடப்பட்டனவால் இத்தலைமுறைவாலிபர்களுக்கு அவையின்னவென்று கூடத்தெரியாமற் போய்விட்டன.

சுயபாஷைப் பயிற்சியைப் பற்றி மிஸ்டர் க்ரிக் சொல்லியது.

சென்னை வித்தியாபிவிர்த்தி யிலாகாத்தலைவர் மிஸ்டர் எச். பி. க்ரிக் எம். ஏ. அவர்கள் சென்ற மார்ச்சுமீ 31உ வியாழக்கிழமை சென்னை கல்விச் சங்கத்தில் நூதனமாய் வித்தியாப் பட்டம் பெற்ற வித்தியார்த்திகளுக்குச் செய்த பிரசங்கத்தில் சுயபாஷைப்பயிற்சியைப்பற்றிப் பின்வருமாறு உருக்கமாய்ப் பேசிப்பிரசங்கித்தார்:—

“உங்கள் கடமை இங்கிலீஷ்ப் பாஷையைப் பயின்று மேற்றிசையாருடைய எண்ணங்கள் அபிப்பிராயங்களை யெல்லாம் அறிந்து கிரகித்துக்கொள்ள வேண்டியது மட்டுமல்ல. நீங்கள் கற்ற கல்வியையும் உபயோகமான அறிவையும் பரவச்செய்ய வேண்டுமென்கிற விருப்பம் உங்களுக்கிருக்கிற தன்மையானால் நீங்கள் கற்றுக் கிரகித்துக்கொண்ட விஷயங்களை உங்களுடைய சொந்த பாஷையில் வழக்க நடையில் தீரமாகத் தெரிவிக்கும் சக்தியிருக்கவேண்டும். அந்தச் சக்தி யுள்ளவர்கள் உங்களில் வெகு சொற்பமாக வாவதிருப்பார்களோ வென்றுஐயமுறுகிறேன். சாஸ்திர சம்மந்தமான கருத்துகளையும் விஷயங்களையும் பற்றி ஜனங்களுக்கு அவர்கள் சுயபாஷையில் சொல்லிக் கொடுப்பதால் தற்காலம் அதிக நன்மை விளையச் செய்யலாமென்று எண்ணுகிறவர்களில் நான் ஒருவனல்ல. ஏனென்றால் சாதாரண ஜனங்களுக்கு மேல்தேசத்தார் கண்டு பிடித்து அநுஷ்டித்து வரும் சாஸ்திரசம்மந்த மானவிஷயங்களைப் பற்றிச் சுயபாஷையில் சொல்லிக்கொடுக்கத் துவங்குமுன் அந்தஜனங்களை, அவர்கள் சுயபாஷையிலே மேல்தேசத்தார் முறைப்படி கல்வி கற்பித்துப்பழக்கவேண்டும். அப்படிப் பழக்கா விட்டால் அவர்கள் நீங்கள் சொல்வது எவ்வளவு இனிமையாக விருந்தபோதிலும் காதுகொடுத்துக் கவனித்து கேட்டுப் பயன்படத்தக்கவர்களாக மாட்டார்கள். ஆனால் இப்படி மேற்றிசை முறைப்படி வித்தை போதிக்கப்பட்டுப் பழகினவர்கள் தொகை இப்பொழுது அதிகயாகிக் கொண்டுவருகிறது. அவர்களுக்கு உங்களுக்குத் தெரிந்தவற்றில் உபயோகமான அறிவைப் பரவச்செய்ய அவர்களை நோக்கிச் சுயபாஷையில் பேச உங்களுக்குச் சக்தியிருக்கவேண்டும். ஐரோப்பாவில் புத்தி விவேகமும் செல்வாக்கு சிரேஷ்டமுமுள்ள மனிதர்களுடைய எண்ணங்கள் அபிப்பிராயங்களெல்லாம் மொழிபெயர்த்து ஜனங்களுக்கு அவர்கள் பிறந்து வளர்ந்த சொந்த பாஷையில் எழுதிப்பிரசரிக்கப்பட, அதனால் ஜனங்களின் வாழ்வு நடைகளும், உயரெண்ணங்கள் அபிப்பிராயங்களும் மாறுபட்டு நூதனமான வழக்கங்களும் ஏற்பாடுகளும் தலை யெடுக்கத் துவங்கினது போல், இத்தேசத்திலும் அவ்விதமாக நேரக்காணினும் காணலாம். இந்தியாவிலுள்ள ஜனங்கள் அவர்களுடைய பலவேறுபட்ட பாஷைகளோடு பதவியிலும் செல்வத்திலும் எப்போதாவது உன்னத ஸ்தானத்துக்கு வரவேண்டுமானால் அவர்களுள் இங்கிலீஷ்ப் படிக்கத் தெரிந்த ஜனங்கள் இப்பொழுதிருப்பதைவிட ௧௰-அல்லது ௨௰-மடங்கு அதிகமாகவிருக்கவேண்டும். இவ்வளவு அதிகமான இங்கிலீஷ் தெரிந்த ஜனங்கள் ஆண், பெண்ணாகிய இருபாலாரிலு மிருக்கவேண்டு மென்பது எனது உறுதியான அபிப்பிராயம். ஆனால் பெரும்பான்மையான சாமான்ய ஜனங்கள் சீர்பட்டு மறு ஜனனம் கிடைத்தது போல் விர்த்தியாக ஒவ்வொரு சுயபாஷையும் இங்கிலீஷ் பாஷை மூலமாகக் கற்கப்படும் கல்வி யறிவை அச் சொந்த பாஷையில் தெள்ளிதாகத் தெரிவிக்கக்கூடியபடி விர்த்தியாக வேண்டிய தவசிய மென்பதும் நான் திரமாய் நம்பும் உறுதியான விஷயமாய் இருக்கிறது. சுயபாஷைகள் இப்பொழுதிருக்கிறபடி மேற்றிசை வித்தை சம்மந்தமான விஷயங்களையும் எண்ணங்களையும் விள்ளத் தெரிவிக்க இசைந்ததாக விர்த்தியாகி யிருக்

கிறதாகத் தெரியவில்லை. சாஸ்திர சம்மந்தமான சிறு புஸ்தகங்களைச் சுயபாஷை யொன்றில் மொழிபெயர்க்கும்வேலையை மேற்பூண்டு யத்தனித்தோரே அதிலுள்ள கஷ்டங்களை யறியவல்லார். அந்நிய பாஷையிலுள்ள விஷயங்களையும் கருத்துகளையும் சுயபாஷைகளில் தெரிவிப்பது எவ்வளவு கஷ்டமாக விருந்தபோதிலும் அவ்வேலையைச் செய்தே தீரவேண்டிய தன்றி வேறு விதியில்லை. ஏனெனில் வரவர விர்த்தியாகும் தென்னிந்தியாவிலுள்ள லக்ஷக்கணக்கான சாமான்ய ஜனங்கள் எப்போதாவது இங்கிலீஷ்ப் பேசத்தக்கவர்களாவார்களென்றாவது, அவர்கள் படித்து அறிவை விர்த்தி செய்துகொள்ள அங்கிலேய பாஷையிலுள்ள புஸ்தகங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்களென்றாவது எண்ணுவது சுத்த முட்டாள்தனமே. சுயபாஷையிலெழுதப்பட்ட பத்திரிகைகளும், சிறு புத்தகங்களும், துண்டுக் காகிதங்களும் தமிழில் வரவர எவ்வளவு அதிகமாக வேண்டியிருக்கின்றனவென்ப தொன்றினாலே ஜனங்கள் அவர்கள் சுயபாஷையில் ஏதாவது வாசிப்பதற்கு வேண்டுமென்று விரும்புகிறார்களென்பதும், இவ்விருப்பம் வரவரப் பரவி வருகிறதென்பதும் பிரத்தியக்ஷமாக விளங்கும். கனவான்களே! உங்களிடத்துள்ள கல்விச்சுடர் வெளிச்சத்தில் சிலகிரணங்களாவது உங்களிடமிருந்து சென்று சுற்றியுள்ள இடங்களில் பரவி அறியாமை யென்னும் காரிருளால் மூடப்பட்ட மாந்தர்க்கு விவேக வெளிச்ச முண்டாகச் செய்யவேண்டு மென்றால் நீங்கள் கற்றவற்றை உங்கள் சுயபாஷையில் இலகுவும் தெளிவுமான நடையில் எழுதுவதற்கு வேண்டிய அளவு சுயபாஷையில் விற்பத்தியடையத் தவறாதேயுங்கள்.”

பள்ளிக்கூடச் சம்பளங்கள்.

சென்னைக் கவர்ன்மெண்டார் இவ்விராஜதானியிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளிடமிருந்து பள்ளிக்கூடச் சம்பளம் வாங்குவதைப்பற்றி நூதனமாய்ச் சில விதிகளேற்படுத்தி, இந்த வருஷம் ஜனவரிமீ ௧உ யிலிருந்து அவை யூர்ஜிதத்துக்கு வரத்தக்கனவாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். இப்புது விளம்பரம் டிசம்பர்மீ ௩௰-ந்தேதிபோட்டு ஜனவரிமீ ௫உ கெஜட்டில் முதல் முதல் வெளியிடப்பட்டது. டிசெம்பர்மாசக் கடைசியோடு காலஞ் சென்ற “ஸ்கூல்பீநோடிபிகேஷன்” என்னும் நிர்ப்பந்த ஏற்பாடு ௧௮௮௭௵ ஜனவரிமீ ௧௧உ பிறப்பிக்கப்பட்டது. இக்கொடிய விதி ஊர்ஜிதத்தி லிருந்த சென்ற ௫-வருஷ காலமாக இதனால் வித்தியாபி விர்த்திக்கு விளைந்த இக்கட்டுகள் இடையூறுகள் இவ்வளவவ்வளவில்லை, இப்பொழுது காலஞ்சென்ற பழைய விளம்பரப்படி கவர்ன்மெண்டுதவி பெறுவதற்காக வித்தியாபி விர்த்தியிலாகாதாரரால் அங்கீகரித் தேற்றுக்கொள்ளும்படி விரும்பும்பாடசாலைகளெல்லாம் அவ் விளம்பரத்தில்கண்ட விகிதப்படி பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூல் செய்ய வேண்டிய தவசியமென்று ஏற்படுத்தி நிர்ப்பந்தித்ததால் அந்தரங்க நபர் முயற்சியா லங்கங்கே தலையெடுக்க ஆரம்பித்த சுதேச பாடசாலைகள், பிள்ளைகளிடமிருந்து பெற்றோரால் கொடுத்து நிர்வகிக்கக்கூடாத விகிதப்படி சம்பளம் வாங்கவேண்டிய தாகவாவது, இல்லாவிட்டால் கவர்ன்மெண்டார் உதவியின்றிப்பாடசாலையை நடத்த வேண்டிய தாகவாவது நேரிட்டது. இதில் எந்தவழி போனாலும் வில்லங்கமே விளைவதாயிருந்ததால் நூதனமா யேற்பட்ட பாடசாலைகள் இந் நிர்ப்பந்தத்தில் தலைதூக்கி நிற்கமாட்டாமல் கைவிடப்பட்டுக் கலைந்துபோயின. இழுத்துப் பறித்துக் கொண்டு நின்ற மற்றப் பாடசாலைகளில் அனேகம் இவ்வில்லங்கஸ்திதியி லிருந்து தப்பித்துக் கொள்ள பொய்க்கணக்கு, பொய்ரிஜிஸ்தர் வைத்துப் பிள்ளைகளிடம் குறைந்த சம்பளம் வாங்கி, வித்தியாபி விர்த்திலாகாதாரர் பார்வைக்கு அவர்கள் விதித்த விதிப்படி தனிக்கணக்கு, தனிரிஜிஸ்தர் ஜோடித்துக் காட்டுவதுமாகப் பொய் புரட்டுச்சொல்லி யேமாற்றிப்பிழைத்து வந்தன. இந்த வீண் நிர்ப்பந்தத்தால் விளைந்த தீங்குகளும், நடந்த பொய்புரட்டு, மோசங்களும் கொஞ்ச மில்லை. ஸ்கூல் மானேஜர் முதல் பள்ளிக்கூடத்து வாத்தியார், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள், அவர்கள் பெற்றோர்கள் வரையில்எல்லாரும் சேர்ந்து பொய் சொல்லவும் மோசம் செய்யவும் பயில வேண்டியதாகவிருந்தது. இவ்விதியால் வித்தையை அபிவிர்த்தி செய்ய ஏற்பட்ட இலாகாவில் கவர்ன்மெண்டார் பொய் புரட்டு மோச மிவற்றை யதிகம் அபிவிர்த்திசெய்து வந்தார்கள். அவ்விளம்பரத்தின்கொடுமையையும் அதனால் விளையும் தீங்கையும் பற்றி ஜனங்களும் மற்ற வித்தியாவிற்பன்னர்களும் முறையிட்டுக் குறை கூறியதற் கெல்லாம் கவர்ன்மெண்டார் காது கொடா திருந்தமையால், இத்தேசத்தார் அவர்கள் வழக்கப்படி இதுவும் தலைவிதியே என்று சும்மா இருந்து விட்டார்கள். இவ்விளம்பரத்துக்குக் குறித்த ௫-வருஷ ஆயிசு கழிந்ததும் கவர்ன்மெண்டார் தாங்களாகவே முன் வந்து ஒரு விளம்பரத்தால் இக் கெடுவிதியை யடியோடே துடைத்து விட்டது அவர்களுக்குக் கீர்த்திதரத்தக்கதே. இந்நூதன விளம்பரத்தால் கவர்ன்மெண்டார் இதற்கு முன் இது விஷயமாய்ப் பிறப்பித்த விளம்பரங்களை யெல்லாம் ரத்துசெய்து விட்டு, வித்தியாபிவிர்த்தி யிலாகாதாரரின் சொந்த விசாரணையிலாவது, முனிசிபால்டிகள் “லோகல் போர்டுகளின் விசாரணையிலாவதிருக்கும் காலேஜு

கள், ஹைஸ்கூல்கள், மிடில்ஸ்கூல்கள், ப்ரைமெரிஸ் கூல்கள் அல்லது அவற்றிற்குப் புதிதா யேற்பட்டிருக்கும் பேரின்படி, 'அப்பர் செகண்டரி' லோயர் ஸெகண்டரி, 'ப்ரைமெரிஸ்கூல்' டிபார்ட்மெண்டுகள் ஆகிய இவற்றில் வசூல்செய்யப்படவேண்டிய சம்பள விகிதங்களை மட்டும் குறைந்தது இவ்வளவாக விருக்கவேண்டுமென்று ஏற்படுத்திவிட்டு, மற்ற சுதேச, மிஷனரி பாடசாலைகள், காலேஜ்கள், எல்லாவற்றிலும் அந்தந்த ஸ்கூல் மானேஜர்கள், அல்லது விசாரணைக்கர்த்தர்கள் யுக்தப்படி சம்பளம் வாங்கப் படலாமென்று விட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு அல்லது முனிசிபல் லோகல்போர்டு பாடசாலைகளிலும் மிகவும் பின்னடைந்த இடங்களிலுள்ளவற்றில் குறைந்த சம்பளம் வாங்க கவர்ன்மெண்டார் விதிக்கலாமென்று கண்டிருக்கிறது. அந்தரங்க நபர்கள் விசாரணையி லிருக்கும் பாடசாலைகளில் வசூல்செய்யப்படும் சம்பளம் அப்பாடசாலை மானேஜர்களின் யுக்தப்படிக்கு விடப்பட் டிருக்கையில் அவ்வித பாடசாலைகளுக்கு "கிராண்ட்-இன்-எய்ட் கோடு"ப்படி கவர்ன்மெண்டார் திரவிய உதவி செய்வதற்காக அப் பாடசாலைகளின் வருமானம் அப் பாடசாலைகளிலுள்ள மாணுக்கர்களின் மொத்தத் தொகையை யறிந்து அவர்களிடமிருந்து கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கும் பிரமாண விகிதப்படி சம்பளம் வசூல்செய்தால் என்ன ஆகுமென்று பார்த்து, வரும் தொகையில் ௧௦௦-ல் ௩௦ விகிதம் தள்ளுபடி செய்து நிர்ணயிக்கப்படும். அப்படி வரும் தொகையின் பேரில் கவர்ன்மெண்டார் கிராண்ட் இன்-எய்ட் கோடில் கண்ட விதிகளின்படி கிராண்டு கொடுப்பார்கள். இப்புது ஏற்பாட்டுப்படி கவர்ன்மெண்டார் சம்பளம் வசூல்செய்ய விதித்திருக்கும் விதி யென்னவென்றால் காலேஜ்களிலும், 'அப்பர் செகண்டெரி' 'லோவர்செகண்டெரி' டிபார்ட்மெண்டுகளிலும் படிக்கும் மாணுக்கர்கள் சம்பளம் செலுத்த ஸ்கூல் வருஷம் கோடைகால விடுமுறை, மாரிகால விடுமுறை ஆகிய இவ்விரு விடுமுறைகளால் பிரிக்கப்பட்ட இரண்டு பகுதியாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பகுதி யல்லது ௩-மாசத்துக் குரிய சம்பளம் ஒருதடவையிலாவது பலதடவைகளிலாவது செலுத்திவிட வேண்டும். இப்படி ௩-மாசத்துக்குக் குறைந்து மாசவாரியாகச் சம்பளம்வாங்கப்படமாட்டாது. ப்ரைமெரிஸ்கூல் டிபார்ட்மெண்டில் மட்டும் மாசவாரி சம்பளம் வாங்கப்படும். மேற்படி உயர்தர டிபார்ட்மெண்டுகளில் வாங்கப்பட வேண்டிய பகுதி சம்பளம் பகுதியாரம்ப முதலிலே செலுத்தப்படவேண்டும். பலதடவைகளில் செலுத்துவதா யிருந்தால் முழுதும் செலுத்தினாலன்றி மாணுக்கர் பேர் ரிஜிஸ்தரில் வைத்துக்கொள்ளப் படமாட்டாது. எந்தப் பகுதியிலாவது, சம்பளம் பாக்கியி ழுந்துபோய், அப்புறம் சிலகாலம் கழித்து அம்மாணுக்கர் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேரவருவாரானால், பழம்பாக்கியோடு அம்மாணுக்கர் பள்ளிக்கூடம் விட்டதேதிமுதல் சேரவிரும்பும் தேதிவரையிலு முள்ள பகுதிகளுக்கும், சேரப்போகிற வருஷப் பகுதிக்கு முள்ள சம்பளங்களைச்சேர்த்துக்கொடுத்த பிறகு தான் சேர்த்துக் கொள்ளக்கூடும். ப்ரைமெரி ஸ்கூல்களில் ஒவ்வொரு மாசத்துச் சம்பளமும் முன்னதாகவே வாங்கி விடப்படும். ஒருமாசத்தில் குறைநாள் ஏதாவதிருந்தால் அதற்கும் முழுமாசச் சம்பளமே வசூல் செய்யப்படும். காலேஜ்களிலும் ஹைஸ்கூல் களிலும் வருஷப்பகுதி சம்பளம் ஒரே தடவையாகவாவது ௪-தடவைகளாகவாவது வாங்கப் படலாம். ஒரேதடவையிலானால் பள்ளிக்கூடம் திறந்த மூன்றுநாளுக்குள்ளும் ௪-தடவைகளிலானால் முதல்தடவை மேற்குறித்த தவணையிலும் அடுத்த மூன்று தடவைபாகமும் அடுத்து வரும் ப்ரைமெரி ஸ்கூல்களில் அந்தந்தமாசம் ௧௫-உக்குள் வசூலாய் விடவேண்டும். மூன்றுமாசங்களில் அந்தந்த மாசம் ௧௫-ந்தேதிக்குள்ளும் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த தவணைகளில் செலுத்தத் தவறினால் ரூபாய்க்கு ௨-அணுவுக்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படும். அப்புறம் ௧௦-நாளாகு முன்னும் பணம் செலுத்தப்படாவிட்டால் மாணுக்கர் பேர் ரிஜிஸ்தரிலிருந்து அடித்துவிடப்படும். மறுபடியும் சேர்த்துக் கொள்கிறதாயிருந்தால் இதற்குமுன் செலுத்த வேண்டிய எல்லாத் தொகைகளோடு ரூபாய்க்கு ௪-அணுவுக்கு அதிகப்படாமல் அபராதமும் செலுத்த வேண்டு முன் மாணுக்கர் யாராவது ஸ்கூலைவிட்டுப்போனால், வாசிக்காத நாளைக்குச் சம்பளத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்க பாத்தியமில்லை. ஆனால் ஸ்கூல் அதிகாரிகள் இஷ்டம் வைத்தால் வாசிக்காத நாளைக்குள்ள சம்பளத்தைத் திருப்பி விடலாம். கவர்ன்மெண்டு விசாரணையிலும், முனிசிபாலிடி லோக்கல் போர்டார் விசாரணையிலு முள்ள பாடசாலைகளுக்குக் கவர்ன்மெண்டார் விதித்திருக்கும் பிரமாண விகிதம் பின் வருமாறு:—

காலேஜ் டிபார்ட்மெண்டு.		ஒருவருஷப்பகுதிக்குச்சம்பளம். ரூ.	அ.
எம். ஏ. பரீக்ஷைக்கு		20	0
பி. ஏ-க்கு எல்லாப்பாடங்களுக்கும்	...	36	0
,, பாஷைப்பிரிவுக்கு மட்டும்	...	18	0
,, விஷய பிரிவுக்கு மட்டும்	...	20	0
எப். ஏ-க்கு	...	30	0

செகண்டரி டிபார்ட்மெண்டு.				ரூ.	அ.
6-வது பாரம் அல்லது வகுப்பு			...	19	0
5-வது	,,	,,	...	17	0
4-வது	,,	,,	...	15	0
3-வது	,,	,,	...	11	0
2-வது	,,	,,	...	9	0
1-வது	,,	,,	...	7	0
ப்ரைமெரி டிபார்ட்மெண்டு.				மாசம்.	
4-வது	ஸ்டாண்டார்ட்		...	0	12
3-வது	,,	,,	...	0	9
2-வது	,,	,,	...	0	6
1-வது	,,	,,	...	0	4
குழந்தைகள்	,,	,,	...	0	2
ப்ரைமெரி இங்கிலீஷ் ஸ்கூல்கள்.					
4-வது	ஸ்டாண்டார்ட்		...	0	8
3-வது	,,		...	0	6
2-வது	,,		...	0	3
1-வது	,,		...	0	2
குழந்தைகள்	,,		...	0	1

இவ்விகிதங்கள் குறைந்த விகிதங்களாதலால் இதற்கு மேற்பட்டு எந்தஸ்கூல்களில் வேண்டுமானாலும் வசூல் செய்யலாம். இவ்விதிப்படி சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜின் சம்பளம் இவ் விகிதத்தை விட ௧௦௦-க்கு ௧௫ அதிகமாக உயர்த்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காலேஜ் டிபார்ட்மெண்டிய ஸ்கூல் வருஷப் பகுதி யாரம்பத்தில் ஒரே தடவையாகச் செலுத்தி விடுகிறவர்களுக்கு மேற்குறித்த தொகையில் ஒரு ரூபாய் குறைத்து வாங்கிக் கொள்ளப்படும். சுதேச பாஷாபாடசாலைகள் பாலிகாபாடசாலைகள் இவற்றிற்கு இவ்விதிகள் எதுவும் ஏற்காவாம்.

"இந்தியன் மாகஸின் அண்ட் ரிவியூ."

"நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்" சங்கத்தார் "இந்தியன் மாகஸின் அண்ட் ரிவியூ" என்னும் மாதாந்தரப்பத்திரிகையொன்று பிரசுரித்துவருகிறார்கள். அப்பத்திரிகை ஒரு பாரம் 8-ப் பக்கமுள்ள புஸ்தக ரூபமாய் மாதந்தோறும் லண்டனில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அதில் அச்சங்கத்தார் நோக்கத்துக் கிசைந்த விஷயங்கள் பல பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. ஷை சங்கம் இந்தியாவில் கல்வி யபிவிர்த்தி, ஜன சீர்திருத்த விர்த்தியிவைகளுக் கனுகூலமாக ஏற்பட்டுழைத்து வருகிறது. இச்சங்கத்தார் மாதாந்தரப் பத்திரிகையாகிய "இந்தியன் மாகஸினின்" ஏப்ரல் மாதத்து சஞ்சிகையொன்று நம் முன்னிருக்கிறது. இதிலுள்ள பொருளடக்கங்களில் இந்தியா கவர்னர் ஜெனரலாயிருந்த வாரென் ஹேஸ்டிங்ஸ் என்பவர் இன்னார் என்பதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள வித்வான்கள் சிலருக்குள் உண்டான பேதத்தைப்பற்றி மிஸ்டர் பாக்ஸ் என்பவர் எழுதினது முதல் விஷயமாயிருக்கிறது. இரண்டாவது, நமதுதேச பூர்வீக கிரந்தங்களிலிருந்து "லோபியைச் சீர்திருத்தினவழி" யென்று ஒருகதை 'ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி' யென்னும் வித்வ சங்கத்தாரின் பத்திரிகையிலிருந்தெடுத்துப் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது. அக்கதையின் சாராம்சம் இது:—

"முன்னொரு காலத்தில் பிரமதத்தன் காசிராஜாவாக அரசாண்டு கொண்டிருக்கையில் அவருடைய பிரதம பொக்கிஷதாரனாக விருந்தவன் இல்லீசன் என்னுமொருவன். இவனுடைய முன்னோர்கள் அவ்வுயர் பதவியிலிருந்து தானதர்மங்கள் தாராளமாகச் செய்து நற்பேரும், கீர்த்தியும் பெற்றிருந்தார்களாயினும், அவர் வமிசத்திலுதித்து அவர் பதவிக்கு வந்த இல்லீசன் என்னும் இவன்மட்டும் மிகலோபியாக விருந்தான். அவன் முன்னோர் கட்டிய தர்ம சத்திரங்களை யெல்லா மிடித்து நாசமாக்கி விட்டு தனது அளவற்ற செல்வத்தில் அரைக்காசும் செலவிடாது, தானு முபயோகிக்காது, குவித்துவந்தான். இப்படி யிருக்கையில் பரமபதமடைந்த அவன் பிதா தேவலோகத்தில் தேவதூதனாக விருக்கையில், தன் பிள்ளை செய்யும் லோபித்தனத்தைக்கண்டு அவனுக்குப்புத்தி புகட்டுவதாகச் சொல்லி அவனைப்போல் உருவெடுத்துக்கொண்டு பூமியில் அவதரித்து, உண்மையான இல்லீசன் தனியிடமொன்றில்குடித்து வெறித்துக் கிடக்கையில் இராஜசமுகத்தின் முன் இல்லீசன்போல் சென்று தன் சொத்துக்களையெல்லாம் ராஜாவை யேற்றுக்கொள்ளும்படி விண்ணப்பம் செய்துகொண்டான். ராஜா தன்பொக்கிஷதாரனைப் பார்த்து உம்மிலும் அதிகமான செல்வம் எம்மிடத்துள்ளதாதலால் உமது எனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். "அப்படியானால் என் செல்வத்தை எனக்கிஷ்டமானபடி ஏழைஜனங்களுக்கு வாரி விட்டுவிடுவேன், நீர் கேட்கக் கூடாதென்றான்" மாயமாய்வந்த இல்லீசன். அரசன் அப்படியே செய்கவென்னவும், இம்மாய இல்லீசன் தன் மகன் வீட்டுக்குவந்து சேவகர்களைக்கூப்பிட்டு 'என்னைப்போல் யாராவது வேஷம் போட்டுக்கொண்டு இந்தவீடு தன்னதென்று உள்ளே நுழையவந்தால் அவனை அடித்துதைத்துத் துரத்திவிடுங்கள்' என்று கட்டளையிட்டு விட்டு உள்ளேசென்று இல்லீசன் பெண்சாதி பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டு என்னிஷ்டப்படி இப்பொருள்களையெல்லாம் வாரிக்கொடுத்து தர்மம்செய்யப்போகிறேன் என்றான். அவர்களும் இது அவன் குணக்குகளி லொன்றென்று எண்ணிச் சரியென்றிருந்தார்கள். ஊரில் தண்டோராப்போட்டு ஏழை எளியவர்க ளெல்லாம் வந்து வேண்டிய பொருள்கள் வாரிக்கொண்டுபோகலாமென்று தெரிவித்தான். இப்படி எல்லா ஜனங்களும் வாரிக்கொண்டுபோகையில் ஒருவன் இக்கொடைகளுக்காக இல்லீசனைப் புகழ்ந்துகொண்டுபோன வசனங்கள் எங்கேயோ ஒரு புறத்தில் மயங்கிக்கிடந்த உண்மையான இல்லீசன் காதில்விழ அவன் குடிமயக்கமெல்லாம் உடனே பறந்தோட, தன் ஆஸ்திகளை யெல்லாம் அரசன் கொள்ளை விட்டுவிட்டானென்று எண்ணி அந்த ஆளைப்பிடித்து மடக்கி என் ஆஸ்தியை என் வாரிக்கொண்டு போகிறாயென்று கேட்டான். அதற்கு அவன், இல்லீசன் தன் இல்லத்திலிருந்து வேண்டுமென்று வந்தவர்க்கெல்லாம் தாராளமாக வாரிக்கொடுக்க நீ யாரடா அவன் வந்து வழியை மறைக்கிற

தென்று கொடுத்தான் தவடையில் பலமாக. இப்படி பலபேரிடத்துப் பெரும்பூசை பட்டபின் அவன் சொந்தவீட்டுக்குப் போக அங்கேயும் வாசற்காப்போர் இவனை யாரோவென்று அடித்துத் துரத்த, அரசனிடம்போய் முறையிட்டுக் கொண்டான். அரசன் இவன் முறைபாட்டைக்கேட்டு சற்று முன்வந்த இல்லீசன் யாரென்று மற்றவனை வருவிக்க, இருவரில் உண்மையான இல்லீசன் இன்னானென்று காணக் கூடாமல் மயங்கித்தா னென்றும் தீர்ப்புச் சொல்லக்கூடாம லிருப்பதைத் தெரிவித்தான். இல்லீசன் பெண்டுபிள்ளைக ளெல்லாரையும் சாக்ஷி கூற, மாயமாய்வந்த இல்லீசன் அவன்தெய்வத்தன்மையால் உண்மையான இல்லீசனுக்கும் தனக்கும் சிறிதும் வித்தியாச மில்லாதபடி தானே உண்மையான இல்லீசனென்று சிலர் சொல்லுமாறு செய்துகொண்டான். அரசன் இது விஷயத்தில் தான் உதவி செய்ய அசக்தனாயிருப்பதைத் தெரிவிக்கவும் உண்மையான இல்லீசன் தன் பொருளெல்லாம் கொள்ளை போய்விட்டதென்று மூர்ச்சித்துக் கீழே விழ, மாயமான இல்லீசன் வாயுவாகமாறி அரசனுக்குத் தன் உள்ளக் கருத்தை அசரீரிவாக்கால் தெரிவித்து தன் மகனுக்கும் புத்திபுகட்டி அந்திரஸ்தானமானான். அதுமுதல் இல்லீசன் அவன் லோபகுணத்தைவிட்டு எல்லாருக்கும் தாராளமாய் ஈகையளித்து நல்ல தாதா வென்று பேர்பெற்று வாழ்ந்தான்." என்பது கதை.

இதன்றி இந்தியாவைப் பற்றியுள்ள சிலபுஸ்தகங்களைப்பற்றி யெழுதிய அபிப்பிராயக் குறிப்புகளும் இந்தியாவில் வித்தியாபிவிர்த்தி சம்மந்தமான சில விஷயங்களைப் பற்றிச் சில குறிப்புகளும் அப்பத்திரிகையிலடங்கி யிருக்கின்றன.

"கிறிஸ்தியன் காலேஜ் மாகஸின்."

சென்னை கிறிஸ்தியன் காலேஜ் பண்டிதர்களால் நடத்தப்பட்டுவரும் இம்மாதாந்தரப் பத்திரிகையின் ஏப்பிரல் சஞ்சிகையில் மா-ா-ஸ்ரீ வி. வெங்கையா எம். ஏ. அவர்கள் நமது நாட்டில் அங்கங்கேயுள்ளபூர்வீககட்டடங்கள், கோவில்கள்முதலான வற்றில் திராவிடபாஷையிலும் சமஸ்கிருதத்திலும் வெட்டப்பட்டிருக்கக் காணப்படும் பூர்வீக சிலாசாஸனங்களைக் குறித்துத் தொடர்ச்சியாக எழுதி வரும் விஷயம் வாசிக்க இனிமையானதும், நமது முக்கியஸ்தலங்கள் பலவற்றைக் குறித்துப் பூர்வீகமாயுள்ள சில விஷயங்களைத் தெள்ளிதாக வெடுத்துப் போதிப்பதாகவுமிருக்கிறது. அந்த சஞ்சிகையிலே பண்டிதர் எஸ். எம். நடேசசாஸ்திரியாரவர்கள் நீலகிரிஜில்லாவிலுள்ள 'வடுகர்' என்னும் பூர்வீகஜாதியாரைப்பற்றி யெழுதுகிறார். இவர்கள்வடகோயமுத்தூர் மைசூர் இந்தப் பாகங்களிலிருந்து வந்ததால் 'வடகர்', 'வடுகர்' என்று பேர்வந்ததாகத் தெரிகிறது. பண்டித நடேசசாஸ்திரியார் அவ்'வடுகர்' நீலகிரி ஜில்லாவில் குடியேறின விவர முதற்கொண்டு அவர்கள் ஜாதி, யேற்பாடு, கட்டுப்பாடு, மற்ற ஆசார வழக்கங்கள், விசேஷகுணங்கள், நடை, உடை பாவனைகள் இவற்றைப் பற்றி விசாரித்து, விவரமறிந்து எழுதி யிருக்கிறார். இத்தேசத்திலுள்ள பல ஜாதிகளின் வழக்க விசேஷங்களைத் தெரிய விரும்புவோர்க்கு 'வடுகர்' ஜாதியைப்பற்றி இவர் எழுதி யிருக்கும் விஷயங்கள் வாசிக்க மிகப் பிரியம் தருவதாயிருக்கும்.

சில முக்கியப் பிரமாணங்கள்:—திருவாங்கூர் ஹைகோர்ட் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ சேஷய்யங்கார் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:—

1. ஒருவன் அதி புத்திமானா யிருக்கலாம். ஆனால் அவனுடைய சதாசாரப் பிரவர்த்தி விர்த்திசெய்யப்படாத பட்சம் அவனுடைய ஜீவிதம் பயங்கரமான பராஜெயமாக்கும். பைரன், லான்டர் என்னும் கவிகளைப்போல் அவன் ஆபத் பிரயோசனமாய் ஆகாச தீபம்போல் உபயுக்தனா யிருந்தானென்றாலும் ஒருகாரியம் அவசியமுண்டு. அது பணமோ, தேகசக்தியோ, சாமர்த்தியமோ, யசஸோ, சுவாதந்திரியமோ, அரோகதையோ? அல்ல; நல்ல நடத்தையாக்கும்.

2. பக்தியிலிருந்து சதாசாரத்தை வேறு பிரிக்கிறதற்குக் கூடாது. சதாசார வாக்கியங்களை நிஷ்டையோடு அனுசரித்து நடக்கிறவர்க்கு ஜீவிதத்தை விவரிக்கக் கூடியாது ஜீவிதம் சக்தியை ஜெனிப்பிக்கிற விவேக மாக்கும். அது ஈசுவரனுடைய பரியாய பதமாக்கும். அதி விசிஷ்டமான சதாசாரத்தினுடைய உற்பத்தி ஸ்தானத்தை போஷிப்பிக்கிறது ஈசுவரனுக்கும்.

3. பாலர்கள் கிரகிக்கிறதற்கு அதிகம் கொதிப்போடு கூடியிருக்க வேண்டிய சில குணங்களை விவரிக்கலாம்.

4. அனுசரிப்பு—ஒருஜெனக்கூட்டத்தில் நல்ல ஸமாசிகனாயிருக்க வேண்டுமென்று ஆக்கிரக முள்ளவன் அனுசரிக்கிறதற்குப் படிக்கவேண்டும்.

5. சத்தியவாதி—பாலர்கள் சுபாவத்தினாலே சத்தியவாதிகளாக்கும். ஆனால் அவர் 1. சோம்பலினாலும், 2. விரதாடம்பரத்தினாலும், 3. பயத்தினாலும், பொய் சொல்லுகிறதற்கு இடம்வருகிறது. சதாசாரநிரதை அதிகம் அபூர்வமா யிருக்கிறது. ஆனால் அது ஜனஸமுதாயத்திற்கு வேண்டும் குணங்களில் அத்தியந்தம் புருஷயோக்கியமாயிருக்கிறது.

6. ஒருக்ஷணமும் சோம்பலாயிருக்கக் கூடாது; காலம் க்ஷணாவஸ்தை ஆகையால் உடன் உடனே செய்யவேண்டியதை செய்து தீர்க்கவேண்டும்.

7. ஸங்கோசத்தை தகிக்கவேண்டும். விசாலமான ஸகா அனுபோகப்வேண்டும்.

8. அதிசயிக்கத் தக்கதாய் ஒன்றுமில்லை யென்றுள்ள ஆஷண சுபாவத்தை ஸர்வபரித்தியாகம் செய்யவேண்டும்; அதனால் பூசிக்கிறதற்கு படிக்கவேண்டும்.

9. எதிலும் மிதமாயிருக்க பரிச்சியம் செய்யவேண்டும்.

10. மனுஷனுடைய மகத்வம் அவனிடத்திலிருக்கிற ஸ்திதியை அவலம்பித்திருக்கிறது. அதனால் தன்சம்பாத்தியத்திற்குமட்டும்மனசுவைக்கக்கூடாது.

11. பரிச்சிரம சுபாவம் வேண்டும். அதிப்பிரவர்த்தியில்தானே விக்னம் வருகிறதென்று எண்ணி புத்திமான்கள் ஒரு பிரவர்த்தியிலிருந்து திரும்பிவிட்டுவிடலாகாது.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

இப்பக்கம் சிறுவருபயோகத்துக்காக வென்று தனியாக வைக்கப்பட்டுள்ள தென்பது இப்பக்கத்தில் மேலேயெழுதப்பட்டிருக்கும் தலைப்பெயரைப் பார்க்கத் தெரியும். நம்மையாளும் வெள்ளைக்காரர்கள் தேசமாகிய இங்கிலாந்து என்று சொல்லப்படும் சீமையிலே ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒன்று அல்லது பல பத்திரிகைகள் வாங்கி வாசிப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்திலுள்ளவர்க ளெல்லாம் ஒருமிக்க உட்கார்ந்து சந்தோஷமாகச் சாப்பிடும்பொழுது மனோவிர்த்திக்குக் காரணமான பத்திரிகைகளை வாசித்து உலகவிவகாரங்களில் அவர்கள் அறிவை யதிகமாக விர்த்திசெய்து கொள்வார்கள். வீட்டில் மூத்தோர் பலரும் பத்திரிகையைவாசித்து அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சிறு பிள்ளைகளும் அவர்களைப்பார்த்து தாங்களும் அதை வாசித்து தங்களுக்குத்தெரிந்தவற்றைப் பேசவேண்டுமென்று ஆசைப்படுவது குழந்தைகளுக்கு சுபாவமே. மேலும் அத்தேசத்துப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தேகபோஷணையைக் கவனிப்பதுபோல் அவர்களின் மனோவிர்த்தி விஷயங்களையும் தாங்களே நேரில் கவனிப்பது தங்கள் கடமையென்று உணர்ந்து அந்தப்படி நடப்பவர்கள். இது காரணங்கள் பற்றி அத்தேசத்துப் பத்திரிகைகள் பலவற்றிலும் குழந்தைகளுக்கு உபயோகமான விஷயங்களைப்பற்றிப் பேசத் தனியாக இரண்டொருபக்கம் விட்டு வைப்பது வழக்கம். இந்த விவேகசிந்தாமணிப் பத்திரிகை அறிவைப் பரவச்செய்வதற்கென்று ஏற்பட்டதால் இதிலும் அந்தமாதிரி சிறுவர்க்குபயோகமான விஷயங்களைப்பற்றி எழுத இரண்டொருபக்கம் விட்டுவரவேண்டுமென்று மாயாண்டி யாகிய நான் பத்திராதிபரை மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். அவர் இவ்வேற்பாடு நல்லதுதானென்று சொல்லி இதற்காக இரண்டொருபக்கம் தனியாக விட்டுவருவதாகச் சொன்னதோடு, அதற்கு வேண்டியவிஷயங்களைப் பார்த்துத் திரட்டிப் பதிப்பிக்கும்வேலையையும் எனக்கேஅளிப்பதாகச் சொன்னார். நான் மாயாண்டி என்று வெளிவந்தது முதலில் அறிவைப் பரவச் செய்யும் விஷயமாகவே யாதலால், இன்று குழந்தைகளாயிருந்து நாளைக்குப் பெரியவர்களாகி நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரத் தக்கவர்களான சிறுவர்களுக்கு பத்திரிகை வாசிப்பதில் உற்சாகம் பிறக்கும்படி அவர்களுக்கு உபயோகமான விஷயங்களை எனக்குத்தெரிந்த மட்டும் தக்கவர்களைக்கொண்டு திரட்டி வெளியிடுவதைவிட அதிக சந்தோஷம் தரத்தக்க வேலை வேறு என்னவிருக்கிறது? ஆகையால் பத்திராதிபருக்கு வந்தனம்சொல்லி இப்பக்கத்தைச் சீர்படுத்திப் பதிப்பிக்கும் என்வேலையை ஒப்புக்கொண்டேன். இந்தத்தடவை பத்திராதிபர் எனக்குப் போதுமான அவகாசம் கொடுக்காமையால் என்விருப்பப்படி இப்பக்கத்தைச் சித்திரப்படுத்திப் பதிப்பிக்கக் கூடவில்லை. ஆனாலும் என் கடமையில் பின்வாங்கக் கூடாதென்று சிறுவர்களுக்கு உபயோகமானதாக நான் வாசித்துச் சேகரித்த சிலவிஷயங்களைக் கீழே பதிப்பிக்கிறேன். இப்பக்கத்தை வாசிக்கும் சிறுவர் சிறுமியர் இதில் கண்ட விஷயங்களைப் பற்றி எழுதவேண்டுமானால் விவேகசிந்தாமணி ஆபீஸில் மாயாண்டிக்குக் கொடுப்பது என்று எழுதினால் எனக்கு வந்து சேரும். இப்பத்திரிகையை வாங்கும் பெரியோர் இப்பக்கமிருப்பதைச் சிறுவர்க்குக்காட்டி இதை வாசிக்க அநேகம் சிறு தோழர்களை எனக்குச் சேர்த்துக் கொடுப்பார்களென்று கோருகிறேன். இந்த முறை நான் முதல் முதல் என் சிறு தோழர்களுக்கென்று பொறுக்கி யெடுத்த விஷயம்:—

"சுத்தம்."

"சுத்தம் கெட்டவள் சுகம் கெட்டவள்," "சுத்தியுள்ளவள் பத்தியுள்ளவள்" என்னும் வாக்கியங்கள் நமது நாட்டார் அறியவேண்டிய

நன் மொழிகள். இவைகளைக் கவனித்து இவற்றின்படியே நடப்பவரோ வெகு சொற்பம் என்று விசனத்துடனே அறிக்கையிடுகிறேன். அநேகர் சுத்தம் இன்னதென்று அறிந்திருந்தும், அசுத்தத்தை அணுவாகிலும் தங்களைவிட்டு அகற்றாதிருக்கிறார்கள். சிலர் வெளிக்குச் சுத்தமாயும் உள்ளே அசுத்தமாயும் இருக்கிறார்கள். சுத்தம் பலவிதம்.

"சுத்தத்திலெல்லாம் முந்தின சுத்தம் சரீர சுத்தம். இவ்வகைப்பட்ட சுத்தமே சரீர சுகத்துக்கு அவசியம் வேண்டியது. சில நாளாக நமது உடம்பைக் கழுவாமலும், துணியைத் துவைக்காமலும் இருப்போமேயாகில், நம் மேல் வீசும் துர்நாற்றம் எவ்வளவு பரிமளமாயிருக்கும் என்று எளிதில் அனுமானித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட ஊத்தை மக்கள் தங்கள் உடம்பைக்கெடுப்பதுமன்றி, தாங்கள் இருக்கும் வீட்டையும் குப்பையினாலும் கூளத்தினாலும் நிரப்பிவைக்கிறார்கள். அதினால் விஷக்காற்று எங்கும் வீசி, ஊரிலே அம்மை வாந்திபேதி முதலிய தொத்து வியாதிகள் உண்டாவதற்கு இடம் உண்டாகிறது. இப்படியாகச் சரீரத்தைச் சுத்தமாய் வைக்காதவர்கள் தங்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெரும் கஷ்டத்தை வருவிக்கும் பாதகராயிருக்கிறார்கள். சரீர சுத்தத்தோடு சம்பந்தமானது சுத்தவஸ்திரம் உடுக்குதல். சிலர் சுத்த வஸ்திரம் உடுக்காததற்கு எளிமையை விசேஷித்த காரணமாக எடுத்துரைக்கிறார்கள். "சுத்தமாயிருக்கவேண்டும், சுகமாயிருக்கவேண்டும் என்று கையில் பொருளுடைய கனவான்கள் வெகு இலேசாய்ச் சொல்லிவிடலாம், கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கிற எங்களுக்கு அல்லவோ சுத்தமாயிருப்பதின் வருத்தம் தெரியும்" என்று எளியோர் எதிர்த்து வாதாடுவார்கள். இவர்கள் "கந்தையானாலும் கசக்கி உடு, கூழானாலும் குளித்துக்குடி" என்னும் பெரியோர் வாக்கை மறந்து பேசும் வம்பர்களாயிருக்கிறார்கள். எளிமை அசுசிக்குக் காரணமல்ல. நாம் உடுப்பது கிழிந்தவஸ்திரமாயிருந்தாலும், சிறு கந்தையாயிருந்தாலும் அதைத் துவைத்துச் சுத்தமாக உடுத்திக் கொள்ளலாம். வேறு சிலர் தலையில் ஏராளமான பேன்களும், உடலில் அள்பாரம் அழுக்கும் [illegible] அலைப்பிள்ளைப்பானையில் ஆ மூக்கு வெந்நீர்வைத்து, அங்கையால் அள்ளி அப்படியும் இப்படியும் ஊற்றி" காலில் இரண்டு தேய்ப்பும் முகத்தில் இரண்டு தேய்ப்புமாக உடல்முழுவதையும் அலம்பிவிடும் அழும்பராயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் போல் இதை வாசிக்கும் எனது சிறுதோழர் தோழிகளில் எவரும் இருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். நாம் உண்கிற உணவும் குடிக்கிற கூழும் நமது உடலிலே ஒட்டவேண்டுமானால் நம்மிடம் முந்த முந்த காணப்படவேண்டியது சுத்தமே. மேலும் நமதுடலை எப்போதும் சுத்தமாய் வைத்திருந்தால், எண்ணி முடியாத நோய்களுக்கு இடமிராது. இவற்றையெல்லாம் எனது நேசச் சிறுவர்கள் சீர்தூக்கிப் பார்த்து எப்போதும் சுத்தமாயிருக்க முயலுவார்களென்று நம்புகின்றேன்"

"கொடும்புலி."

நான் சில தினங்கள்முன் பலபத்திரிகைகளை வாசித்துக்கொண் டிருந்தேன். அப்பொழுது ஒன்றில் கொடும்புலி எனத் தலைப்பெயரிட்ட கடிதமொன்றைப் பார்த்து வாசித்தேன். அதில் காட்டில் வசிக்கும் கொடும்புலியைத் தவிர மனிதர்களிலும் கொடும்புலிகளுண்டென்று சொல்லியிருந்ததைப் பார்த்து அவர்கள் யாரோ அப்படிப்பட்ட ஜீவனைபார்க்க அதிசயமாயிருக்குமென்று மிகஆவலோடு மேலே வாசித்து அப்புலிகளைத் தேடிக்கொண்டு போனேன். போகவே, நான் கண்டுபிடித்த கொடும்புலிகள் என்னவாக விருந்தன தெரியுமோ? உங்களுக்கு இன்னும் தெரியாவிட்டால் கீழே வாசியுங்கள்:—

"சண்டைக்காரி ஒரு கொடும்புலி. இவள் யாரைக் கண்டாலும் சினந்து பார்ப்பாள், அதட்டிப் பேசுவாள், நாய்போல் குரைப்பாள், புலிபோல் பாய்வாள். இவளைக் கண்டால், பெரியோருக்கும் பயம், பிள்ளைகளுக்கும் பயம், மனிதருக்கும் பயம், மிருகங்களுக்கும் பயம். இவ்ளால் அண்டைவீட்டாருக்குச் சஞ்சலம், அடுத்த வீட்டாருக்கு நடுக்கம், எதிர்த்த வீட்டாருக்கு இடி. இவள் மனிதர் அண்டாதமனைக் குரங்கு, ஒற்றைக்காட்டு ஓரி, பாழுங்காட்டுப் பல்லி."

எனது சின்னஞ் சிறு தோழிகளே இப்பேர்ப்பட்டவளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? மனுஷப்புலியில் இது மிகவும் பயங்கரமான ஒரு கொடும்புலிதானே. உங்களில் யாராவது சண்டைபோடும் குணமுள்ளவர்களாக விருந்தால் உங்களைப்பற்றி பிறர் இப்படிச் சொல்லி நடுங்குவது உங்களுக்கு என்னமாயிருக்குமென்று நன்றாக யோசித்துப்பாருங்கள். பெண்கள் எப்படியிருக்க வேண்டு மென்பீர்களோ? கீழேவாசியுங்கள்:—

"பெண்களுக்கு அழகு சாந்தம். பார்வையில் சாந்தமும் வாக்கில் சாந்தமுமாய் இருப்பவளே பெண். இவள் புருஷன் எத்தனை கோபக்காரனாயிருந்தாலும், இவளது முகத்தைப் பார்த்தவுடனே பெட்டிப் பாம்புபோல்அடங்கிவிடுவான். இவளது அமர்ந்த மொழியைக்கேட்டவுடனே அவனுடைய அகங்காரம் எல்லாம் ஆனந்தமாய் மாறிவிடும், அவனுடைய ஆதரமெல்லாம் மாதுரியமாகி விடும்."

இன்னொரு கொடும்புலி யாரென்று பார்க்கையில்

"சண்டைக்காரிக்கு அக்காள் சமுசயக்காரி. இவள் கொடுமை புலிக்கொடுமைக்கு மேல். அவளுக்கு யாவர் பேரிலும் சமுசயம். தான் கட்டியிருக்கும் வஸ்திரத்தின் பேரிலும் அவளுக்குச் சந்தேகம் பிறப்பதுண்டு. அவள் தான்கண்ட பேருக்கெல்லாம் களவாணிப் பட்டம் கட்டுவாள். ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் சோடுகட்டிப் பேசுவதே அந்த மூர்க்க மங்கையின் முக்கிய அணிகலம். இத்துர்க்குணம் பிடித்த மாதரிடத்தில் வாழ்வு தரிகொள்ளுமா? அவர்கள் இருக்கும் வீடு ஈடேறுமா? அங்கேசீர்கேடும்தாறுமாறும் வளர்ந்தேறுமேயன்றி வேறல்ல."

என்று வாசித்தேன். இதற்கு ஒருதாரணம் சொல்லி இதை யெழுதியவர் இப்படிப்பட்ட "சமுசயக் காரிகள் வீட்டில் வாழுவதிலும் கொடும்புலி வாழும் காட்டிலே சாவது உத்தமம்" என்கிற முடிவுக்கு வந்ததைக்கண்டேன். இதுவும் வாஸ்தவமே யென்று நினைத்துக் கொண்டு மூன்றாவது கொடும்புலி யாரென்று பார்க்க அது கோபக்காரி யென்று கண்டேன். அவளைப்பற்றி நான் படித்ததைக் கீழே வரைகிறேன்; நன்றாகவாசித்துப் பாருங்கள்:—

"கோபக்காரி ஒருகொடும்புலி. கோபத்திலே அவள் செய்கிறதின்னதென்றும் அறியாள்; பேசுவதின்னதென்றும் அறியாள்; கடைசியாக தான்கொண்ட கணவனையும் தனது கொடிய கோபத்தினால் கொன்றுபோடுவாள். அவளைப் பார்ப்போர் யாவரும் 'அடா, அப்பா, யாவருக்கும் அடங்காத பெரும்பிடாரி வருகிறது' என்று பயந்து ஓடுவார்கள். இப்படிப்பட்ட பெண்கள் இருக்கும் வீட்டில் உண்டாகும் பணநஷ்டத்துக்கும் கனநஷ்டத்துக்கும், காலநஷ்டத்துக்கும், வேலை நஷ்டத்துக்கும்கணக்குமில்லை, வழக்கு மில்லை. புருஷரை எதிர்த்துப் பேசி, எப்போதும் சண்டைசெய்யும் சாந்தமற்ற பெண்களைக் குறித்து

"எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோபம்பிறந்தபின் அதைத் தொலைப்பதைப்பார்க்கிலும், கோபம் வருமுன் அதைத் தடுப்பதுபுத்தி. "பூவைக் கிள்ளிவிட்டால் காயில்லை, கனியில்லை. கோபத்தைத் தொலைத்தால் ஏச்சில்லை, பேச்சில்லை, குத்தில்லை, வெட்டில்லை. கனத்துக்கும் மோசமில்லை, பணத்துக்கும்மோசமில்லை. சினந்தாப்போல் அறுத்த மூக்கு சிரித்தாப்போலே ஒட்டாது. முனிந்தாப்போலே இடித்தவீடு குளிர்ந்தாப்போலே எழும்பாது. ஆகையால் பெண்கள் கோபத்தைத் தொலைத்துப் பொறுமையைப் பூண்டுகொள்வது நன்மை."

கடைசியில்: "இத்தேசப் பெண்களைக் கொடும்புலிகளாக்கும் காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை இரண்டு: அறிவீனமும் அஞ்ஞானமுந்தான். கல்விகற்றுப் புத்தி தெளிவடைந்தோர் தங்களைச் சீர்படுத்திக்கொள்ளும் வழிக்குள்ளாவார்."—என்றுசொல்லி முடிவு கட்டியிருந்தது. இவையெல்லாம் வாஸ்தவமே. இங்கேசொன்ன குற்றங்களெல்லாம்புருஷர்களுக்கும் ஆகாதவையே. பெண்களுக்குப் பெண் புத்தி சொல்லி யெழுதியிருந்ததைப்பார்த்துநான் அப்படியே எடுத்துரைத்தேன். இதை வாசிக்கும் சிறுவர் சிறுமிகள் இவ்விஷயங்களை மனதில் வைத்து தங்களிடத்தில் கெட்டதாயுள்ளதை யாராய்ந்து நீக்கி நல்லதாயுள்ளதை யறிந்துகைப்பற்றி தங்கள் குணத்தையும் நடத்தையையும் சீர்திருத்திக்கொண்டு வருவார்களென்று நம்புகிறேன்.

மாயாண்டி.

அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாடு.

1. சென்னை, திருவல்லிக்கேணியில் தபாலாபீசுக்கு அருகில் மார்ச்சு'மீ 1௳ யிலிருந்து அறிவைப் பரவச்செய்யும் ஏஜன்ஸி அல்லது காரிய விசாரணைச்சங்கம் என்று ஒருசபை ஏற்படுத்தி யிருக்கிறோம். சுருக்கமாகத் தமிழில் அதற்கு "அறிவைப் பரவச்செய்யும் சபை" என்று பெயர் கொடுத்திருக்கிறோம்.

2. இச்சபையின் நோக்கங்கள்:—

(i) நாட்டுப்புறங்களில் பத்திரிகைகளைப் பரவச்செய்து அதுமூலமாக ஜனங்களுக்குப் படிப்பில் பிரியமுண்டாகும்படி செய்யவேண்டுமென்பதும்,

(ii) கிராமாந்திரங்களிலுள்ள ஜனங்கள் படிப்பதில் பிரியம்வைத்து பத்திரிகைகளையும் சிறுபுஸ்தகங்களையும் வாசிக்க ஆவல் கொண்டபின் அவைகள் சுலபமான விலைக்கு அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்து, பத்திரிகைகளாலும் சிறுபுஸ்தகங்களாலும் ஜனங்களுக்கு அறிவையூட்டி, விவேகத்தை விசாலிக்கச்செய்து, பொதுவிஷயங்களில் அவர்களுக்கு அக்கறை யுண்டுபண்ண வேண்டுமென்பதும்,

(iii) இன்னும் பலவிதத்திலும் கிராமாந்திரஜனங்கள் நிலமையை அவர்கள் சொந்தமுயற்சியால் விருத்திக்குக் கொண்டுவர என்னஎன்ன வழி வகைகளுண்டோ அவைகளை யெல்லாம் தேடவேண்டுமென்பதும், ஆகிய இவையே.

3. இந்நோக்கங்களை நிறைவேற்ற,

(i) விவேகசிந்தாமணி யென்று அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையொன்று பிரசுரித்து வரப்படும்.

(ii) சென்னையிலுள்ள அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி) சம்மந்தமாக நாட்டுப்புறங்களிலுள்ள ஒவ்வொரு சிறு பட்டிணம், கிராமங்களிலும் அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தில் ஆசைவைத்து ஊருக்குபகாரமாக அவரவர்கள் சத்தியானுசாரம் கஷ்டப்பட்டுழைக்க இஷ்டமுள்ளவர்களெல்லாரையும் ஒன்றுசேர்த்து, புண்ணியம் தரும் இப்பொதுவிஷயத்தில் அவர்கள் ஊக்கம் வைத்துழைக்கும்படி உற்சாகமூட்டிவர உபகாரசங்கம் என்று ஒரு சங்கம் ஏப்பிரல்மாசம் முதல் ஏற்படுத்தப்படும்.

(iii) இச்சங்கத்துக்கு மெம்பர்களாக விருப்பவர்களெல்லாரும் ஊருக்குழைத்து உபகாரம்செய்ய இஷ்டமுள்ளவர்களென்று தாமாக வலுவில்வந்துழைத்து அதற்காக ஏற்படும் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளடங்கி யுழைப்பவர்களாக விருப்பார்களாதலால் அவர்களெல்லாரும் உபகாரிகள் என்று அழைக்கப்படுவார்கள்.

[அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தில் இஷ்டப்பட்டுழைக்கச் சம்மதமுள்ளவர்களாக அவர்கள் பேரை ரிஜிஸ்தர் செய்து கொண்டவர்களெல்லாரும் இச்சங்கத்துக்கு முதல்மெம்பர்களாக எடுத்துக் கொண்டு அவர்கள் பேர் நமது உபகாரிகள் ரிஜிஸ்தர் புஸ்தகத்தில் பதிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் உபகாரிகளாகச் சேர விரும்புகிறவர்களும் அவர்கள் பேர்களைச் சீக்கிரத்தில் எழுதித் தெரிவித்தால் அறிவைப் பரவச்செய்வதற்கான பத்திரிகை வெளியாகுமுன் அவர்கள் பேரும் நமது புஸ்தகத்தில் ரிஜிஸ்தர் செய்து கொள்ளப்பட்டு, புண்ணியம்தரும் இப்பொதுவிஷயத்தில் ஆதிமுதல்சேர்ந்துழைக்கும் அபூர்வ கௌரவம் பெறுவார்களாவார்கள்.]

4. இவ் வுபகாரசங்கத்துக்கு நாடு நகர் எங்குமுள்ள கிராமங்கள் சிறு பட்டிணங்கள் எல்லாவற்றிலும் உபகாரிகள் இருக்கவேண்டும்.

5. உபகாரிகளாக இருப்பவர்கள்,

(i) அறிவின்பயனையறிந்து அதையடையப் பேராவா உள்ளவர்களாக விருக்க வேண்டும்.

(ii) தாம் அறிவையடைய ஆவலாயிருப்பதோடு தாமறிந்தமட்டில் அவ்வறிவைத் தம்மைச் சுற்றியுள்ளாரிடம் பரவச்செய்யவேண்டுமென்கிறநல்லெண்ணமும், அவ்வெண்ணத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உபகார சிந்தையு முடையவர்களாக விருக்க வேண்டும்.

(iii) பொதுவிஷயத்தில் பாடுபட்டுழைக்கப்பூர்ண சிந்தையுடையவர்களாக விருக்கவேண்டும்.

(iv) அவரவர்களிருக்குமிடங்களிலுள்ள ஜனங்கள் சோம்பேறிக்கூட்டங்கள் போட்டு வீண்வம்புகள் பேசுவதில் விருதா காலக்ஷேபம் செய்வதைத் தடுத்து, ஓழிந்த வேளைகளில் 10 - பேர் ஒன்றுகூடி ஊருக்குபயோகமான விஷயங்களைப் பற்றிப்பேசி, பொது விஷயங்களில் அறிவையூட்டித் தங்களுக்குள்ள விவேகத்தை விசாலிக்கச்செய்யும் உபயோகமான பத்திரிகைகள், புஸ்தகங்கள் இவற்றை வாசிக்கும்படியான சத்காலக்ஷேபம் செய்யும்படி தூண்டப் பின்னடையாது பிரயாசைப் படுகிறவர்களாகவிருக்க வேண்டும்.

[ஜனங்கள் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக இப்படிச் சத்விஷயங்களில் பிரவேசிக்கச் செய்யத் திருப்பிவந்தால், காலக்கிரமத்தில் 10-பேர் ஒத்து வருகிறவர்களைக்கொண்டு ஒழுங்கான ஒருசபை ஏற்படுத்தி அதில் பத்திரிகைகளைத் தருவித்து வாசிப்பதோடு, கிராம க்ஷேமத்தைக் குறித்தும் பொதுவிஷயங்களைப்பற்றிப் பேசி, பொதுவான குறைகளை நிவர்த்திசெய்து கொள்ள வழிதேடி வரலாம்.]

அறிவைப்பரவச்செய்வதற்கென்று நாம்பிரத்தியேகமாக வெளிக்கொண்டுவந்திருக்கும் இவ் விவேகசிந்தாமணியென்னும்பத்திரிகைநிலைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து முடித்து, நாட்டுப்புறங்களிலுள்ள பட்டிணங்கள், கிராமங்கள் எல்லாவற்றிலுமிருந்து வேண்டிய உபகாரிகளும்முன்வந்து அவர்கள் பேரை ரிஜிஸ்தர் செய்து கொள்வார்களானால், அவர்கள் கிராமப் பொதுவிஷயங்களுக்குழைக்கும் வழியின்னதினிய தென்று எடுத்துக்காட்டி, நமதுஜன சிரேஷ்டர் பலரோடும் நேரிற் பேசி யோஜித்து, அப்போதப்போது ஆகவேண்டிய காரியங்களைப்பற்றி நம் பத்திரிகை வாயிலாக விவரங்கூறி, புத்திபுகட்டி வருவோம்.

> "கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
> பெற்றோ மெனவுகந்து பின்புகழ்ப்பர்—மற்றோர்கள்
> மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
> யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE ... 6 - APR. 9 ... MADRAS.

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892௵ ஜூன்௴. இலக்கம். 2.

வித்தியாப்பியாசம்.

எந்ததேசத்திலும் எக்காலத்திலும் நாகரீகத்துக்கு உண்மையான காரணம் வித்தை. நாகரீகமாவது மனிதன் சுகத்துக்குவேண்டியவைகளைத்தேடிக்கொள்ளும் சக்தியைக்கொடுக்கும் நிலைமை. மனிதனது சுகம் காலத்துக்குத்தக்கபடி வித்தியாசப்படும். அநாகரீகமான மனிதர்களுக்குள் சுக உணர்ச்சி அதிக மில்லை. மிலேச்ச ஜாதிகளுக்குத் தேகமறைய வஸ்திரம் வேண்டுமென்றுதோன்றாது. நல்லவீடுகளாவது, நல்ல உணவு முதலானவைகளாவது வேண்டுமென்ற உணர்ச்சி உண்டாவதில்லை. நாகரீகம்பெற்ற தற்கால மனிதஜாதிக்கும் நாகரீகமற்ற பூர்வ மனிதர்களுக்கும் இப்போது அந்நியதேசங்களில் வசிக்கும் மிலேச்ச ஜாதிகளுக்குமுள்ள வித்தியாச மிவைதான். புத்தித்தேர்ச்சிக்கும் சரீர சௌக்கியாபிவிர்த்திக்கும் வேண்டிய வழிபாடு சாதகங்களை இக்காலத்து மனிதர் ஓயாமல் தேடிக் கொள்ளுகிறார்கள். மனம்போனவழியில்விர்த்தியடைவதே லட்சியமாக உழைப்பது எப்போதும் இயல்பு. நாகரீகத் தேர்ச்சிபெற்ற ஜாதிகளில் பேர்போனவர்கள் ஐரோப்பியர். ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, இடலி இந்த ராஜ்ஜியங்கள் முக்கியமாகப் பேர் போனவை. இத் தேசங்களின் ஜனங்கள் சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் இருந்த ஸ்திதியில் இப்போது இருக்கவில்லை, மனிதசமூக ஸ்திதிக்கு வேண்டிய எல்லா வழிகளிலும் வேற்றுமை அடைந்து வருகிறார்கள். துரைத்தனம், கைத்தொழில், வியாபாரம், உணவு, உடை, முதலியவைகளில் முன்னிருந்தது போல் இப்போதில்லை. ரயில், தந்தி, கைத்தொழில் யந்திரம், நீராவிக்கப்பல், மதம், கொள்கை முதலியவற்றிலும் வேற்றுமையே உத்தேசமாக உழைக்கிறார்கள். ஊக்கத்தாலும் அறிவுநுட்பத்தாலும் புதிது புதிதான காரியங்களையே செய்யவேண்டுமென்ற அவாமேலிட்டு, பல அந்நிய தேசத்தாரோடும் தூரதேசத்தாரோடும் அச்சம் அருவெறுப்பில்லாமல் பழகித் தங்கள் நன்மையை விர்த்திபண்ணுகிறார்கள். நாகரீகம் பெற்ற ஜாதிகளுக்கு வேறு தேசத்தாரோடு பழகுவதில் சங்கோசமாவது அச்சமாவதில்லை. இவ்வாறு அந்நியசகவாசப் பலனாலும் தங்கள் புத்திப் பயிற்சியின் பலனாலும் அவர்கள் நிலை பலவிதத்தில் மாறிக்கொண்டே வரும். இவ்வாறு மாறுதலின் உத்தேசம் தங்கள் ஜாதியார்க்கும் பிரதிமனிதனுக்கும் சுகம் விர்த்தியாக வேண்டுமென்பதே யாம். ஏற்கனவே தனிகரானவர் இன்னும் தனஞ் சேர்ப்பர். ஏழைகள் ஏழ்மை குன்றிச் சீர்படுவர். தனவான்கள் ஏழைகளது துக்கத்தைநீக்க முயலுவர்; ஏழைகள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே திருந்தும் வழியை அவர்களுக்குப் போதிப்பர்.

இவ்வாறு ஐரோப்பிய தேசங்களில் நடந்து வருகின்றது. நடந்து வருவதற்கு வித்தியாபிவிர்த்தியே காரணம். நாகரீகமற்ற தேசங்

களில் ஜனங்களுக்குள் அறிவுபரவ வேண்டுமென்ற பொறுப்பு ஒருவர்க்கு முண்டாவதில்லை. ஐரோப்பிய தேசங்களில் நூறுவருஷங்களுக்கு முன்னால் படிப்புத் தெரிந்தவர் மிகவும் சொற்பம். அரசனைச் சேர்ந்த சிற்றரசர்களும் வர்த்தகர்களும் கொஞ்சம் படித்திருப்பார்கள். மற்ற சாதாரண ஜனங்கள் அனேகர் அக்ஷரமே தெரியாதவர்களாயிருப்பார்கள். ஏழைகளுக்குப் படிப்பே வேண்டியதில்லையென்பது ராஜதந்திரிகளது அபிப்பிராயம். ஏழைகளுக்குப் படிப்புவந்தால் தனவான்களான மேல்ஜாதிகளை மதிக்க மாட்டார்களென்பதும் அபிப்பிராயம். ஏழைகள் பணக்காரர்களை மதிக்கவேண்டிய கட்டாயம் இல்லையென்பதும், எவனுக்கும் தன்மனவலியும் தேகவலியும் தன்னுடைய சுதந்தரம்; அவைகளால் உண்டாகும் நன்மை எவ்வளவோ அவ்வளவுக்கும் அவனுக்குப்பாத்தியமுண்டு; அந்தப் பாத்தியம் அவனவனுக்குக்கடவுள் அளித்தது; அதைத் தடுக்க அதிகாரம் எவனுக்குமில்லை: என்ற இந்தத்தாற்பரியம் பழையநாள் ராஜதந்திரிகளுக்கும் சட்ட நிரூபகருக்கும் உண்டானதில்லை. நம்மவர்களுக்கும் உண்டானதேயில்லை. அங்கிலேய ஜாதியார் இந்தத்தேசத்தில் நிலையூன்றின வரையில் கீழ்ஜாதிகளுக்கு அறிவுப்பேறு அளிக்கவேண்டுமென்ற பொறுப்பாவது எண்ணமாவது நம்மரசர்க்கு உண்டானதேயில்லை. அரசர்களும் அவர்கள் மந்திரிகளும் தங்கள் சகவாச யோக்கியமான உயர்வகுப்பினருக்குமாத்திரம் ஞானம் உண்டாக்கக் கவலை கொண்டவரேயன்றி மற்றத் தாழ்வகுப்பினருக்கு மடமையேஇலட்சணம் என்று ராஜ்ஜியபாரம் பண்ணிவந்தார்கள். அரசர்களுக்கு ஆலோசனை சொல்லிவந்த பிராமணர்களும் இந்த அபிப்பிராயத்தை வளர்த்து ஸ்திரப்படுத்தினார்கள். ஹிந்துதேசத்தில் முற்காலத்தில் படிப்புத் தெரிந்தவர்கள் யார்? பிராமணர்கள்வித்தியாப்பியாசப் பிரயத்தனம் செய்வர். சூத்திரர்களிலும் சிலர் செய்வர். சூத்திர அரசர்கள் தலையெடுத்த காலத்தில் சில சூத்திரர்களுக்கு மத சம்பந்தமான நூல்களைப் படிக்க வழி உண்டு பண்ணினார்கள். இவ்வாறு அங்கங்கே சிற்சிலர் அறிவினராயினரே யன்றி, ஜாதிமுழுவதும் படிப்புள்ளவர்களாய் விருத்திபெற வேண்டுமென்ற தாற்பரியம் உதித்ததே கிடையாது. நம்முடைய வழக்கப்படி, ஸ்திரீகளும் சூத்திரர்களும் வைதிகவித்தைக்குப் பாத்தியஸ்தர்களல்லர். இந்தப்புராதன தாற்பரியத்தினாலே கீழ்ஜாதியார்படிப்பற்றவர்களாயிருந்ததும், அவர்களுக்குப் படிப்பு தகாததென்று கருதப்பட்டதும் விளங்குகிறது. நமது பூர்வீக ராஜாக்கள் வெகு தர்மசீலர்களாயிருந்தும், கோவில், பசு, பார்ப்பினர் இவர்களுக்குப் பலவித நன்மைகள் செய்துவந்தும், சாதாரண ஜனசமூகமுழுவதுக்கும் வித்தை கிடைப்பிக்க முயன்றவர்களேயல்ல. அங்கங்கேகிராமங்களில்பள்ளிக்கூடங்களிருந்ததுண்டு. ஆயினும் இவைகளில் கிடைக்கக்கூடிய அறிவு அற்பமானதாயிருந்ததன்றி, இகபரசாதகத்துக்குத் தக்கதாயு மிருந்ததில்லை. துரைத்தனத்தாரும் இப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடங்களை ஆதரித்ததுமில்லை. இவ்வாறு ஜனங்கள் மடமையில் அழுந்தியிருந்தபடியால், நமதுதேசம் நாகரீக விர்த்திக்கு அநுகூலமான ஸ்திதிக்கு வந்ததில்லை.

இந்தியாதேசம் ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் என்ன ஸ்திதியில் இருந்ததோ இப்போதும் அதே ஸ்திதியி லிருக்கின்றது. அங்கிலேய துரைத்தனம் நிலைத்த பிறகு கொஞ்சம் மாறுதல்கள் உண்டாய் வருகின்றன; அதற்கு முன்னால் நமது தேசம் யாதொரு திருத்தமுமின்றி நாளுக்குநாள் ஹீன ஸ்திதியையே அடைந்து வந்ததென்று சொல்லலாம். ஐரோப்பியர்களைப்போல் நாமும் பலதேசங்களைக் கட்டியாண்டும், பல தேசங்களோடு வியாபாரம் செய்தும், கைத்தொழில், துரைத்தனச்சீர், ஐக்கியம் இவைகளால் சீர்த்திபெற்றிருக்கலாமே! ஏன் இல்லை? தேசத்தில் படிப்பு விர்த்தியாகாமல், ஜனங்கள் மடமையால் மூடப்பெற்று,மூடபக்தியும் வீண்பயமும் உண்டானவர்களாய், வரவர ஹீனஸ்திதியையே பின்தொடர்ந்தார்கள். ஆகையால் நாகரீக அபிவிர்த்திக்கு வித்தை முக்கியகாரணம்.

இதை யறிந்துதான் ஐரோப்பிய ராஜதந்திரிகள் வித்தையின்பொருட்டு வெகு திரவியம் செலவுசெய்துவருகிறார்கள்; ஐரோப்பியதேசங்கள் ஒவ்வொன்றிலும், அமெரிக்கா தேசங்களி

லும், பிரதிமனிதனும் படித்தே தீரவேண்டுமென்று சட்டஞ் செய்திருக்கிறார்கள். ஏழையானாலும் செல்வவானானாலும் ஒவ்வொருவனுடைய பிள்ளையும் இன்ன வயதுமுதல் இன்ன வயது வரையில் பொதுப் பள்ளிக்கூடத்தில் படிக்கவே வேண்டும், படிப்பிக்கா விட்டால் பெற்றவருக்கு அபராதம் என்ற சட்டத்தை நிரூபித் திருக்கிறார்கள். ஆனால் மிகவும் ஏழையா யிருக்கிறவரும் தினவருமானமே யில்லாதிருக்கின்றவரும், பிள்ளையைப் படிப்பிக்க வேண்டிய செலவு முதலான பளுவை யெப்படிப் பொறுப்பார் என்னில், அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஐரோப்பியதுரைத்தனத்தார்கள் சகாயம் செய்திருக்கிறார்கள். சம்பளம் வாங்குகிறதில்லை,புஸ்தகம் முதலானதும் வாங்கிக் கொடுப்பார்கள். சிலதேசங்களில் படிக்கிற பிள்ளைகளுக்கு உணவு முதலான செலவையும் தகப்பனுக்கு வைக்கிறதில்லை. படிக்குங் கால அளவில் பிள்ளைக்கு நேரிடும் சகல செலவையும் தகப்பனிடத்திலிருந்து கவர்ன்மெண்டார் அல்லது ஸ்தலஸ்தாபனங்கள் வகித்து வருகிறார்கள். இப்படிப் படிப்பதற்கு ஆகும் செலவு பொது ஐவேஜியிலிருந்து கிடைக்க வேண்டுமென்பது விசிதமாகிறது. படிக்கும் பிள்ளைக்கு நேரிடும் செலவைத் தகப்பன் கொடாவிட்டால், குடிகளிடம் வசூல் செய்யும் வரிப் பணத்திலிருந்துதானே கொடுக்கப்பட வேண்டும். அதாவது, நமது ஊர்ப்பறையருக்காவது தொழிலாளிகட்காவது வித்தியாலாபம் கிடைக்கவேண்டுமானால், மற்ற ஜனங்கள் அந்தச் செலவை வகிக்கிறதாக ஆகிறது.

இது நியாயமா? இது அவசியமா? என்பதில் அபிப்பிராய பேதமுண்டு. ஆயினும் பெரும்பான்மையோர் நியாயமென்றும் அவசியமென்றுமே தீர்மானித்து அனுஷ்டித்து வருகிறார்கள். ஏனென்றால், ஐரோப்பியர் அபிப்பிராயப்பிரகாரம், ஏழைகள் ஏழைகளா யிருக்கிறது ஏழைகளது குற்றமல்ல.செல்வவானுக்கு செல்வமுண்டாவது அவனுக்காகஉழைக்கும் ஏழையினாலேயல்லாமல் அவனாலேஉண்டாகவில்லை. சகலஐசுவரியத்துக்கும் கிருஷியே காரணம். கிருஷிக்கு ஆதாரம் உழைப்பு; இந்தஉழைப்பு உழைக்கிறவன் வேலைக்காரன், பண்ணையாளே யல்லாமல், எஜமானென்று சொல்லப்படுகிறவனல்ல. ஆனால் பணச்செலவில்லாமல் உழைப்புமாத்திரம் பிரயோஜனப் படாது. பூமியும் பணமும் வேண்டும். ஆகையால் கிருஷியினாலுண்டாகும் பலனை பூமிக்குடையவன்,பணம் போட்டவன், உழைப்பவன் இம்மூவரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். பங்கிடுவதில், அவரவருக்குண்டாகும் சிரமத்துக்கும் நஷ்டத்துக்கும் தக்கபடி பார்த்தால், உழைப்பவனுக்கே அதிகப்பங்குகிடைக்கவேண்டும்.இப்படிகிடைக்காமல், உழைப்பவனை ஏமாற்றி, அவனுக்கு ஜீவனத்துக்கு மாத்திரம் போதுமானதைக் கொடுத்துக்கொண்டு வருவது வழக்கமாயிருக்கிறது. இந்த வழக்கம் உழைப்பவனுக்கு அதிக அநீதி செய்வது. இந்த அநீதியை ஒருவாறு நிவிர்த்தி செய்யும்பொருட்டு,துரைத்தனத்தார் அநீதியால் லாபம் பெறும் தனவான்களிடம் வரியாகப் பணம் வசூல்செய்து,கீழ் வகுப்பினனுக்குச் சகாயம்செய்து வருகிறார்கள். ஆகையால் மேற்குறித்தபடி படிப்பு விஷயமாய்ச் சட்ட மேற்பட்டிருப்பது கிரமமே யொழிய அக்கிரமமல்ல.

மேலும் தேசத்தில் மடமை மேலிட்டிருப்பதினாலேயே, துன்மார்க்கம்மேலிட்டிருக்கிறது. களவு,குடி, பொய்,வழக்கு,அழுக்காறு முதலான இழிகுணங்கள் மடைமையாலேயே வழங்கி வருகின்றன. இந்தக் குற்றங்களைச் செய்யும் ஏழைகள் சொற்பவித்தைபெற்றவர்களாய் ஏதேனும் ஒருதொழிலைப் பின்தொடர்வார்களானால், இவைகள்மிகவும் குறைவு பட்டுவரும். களவு, குடிமுதலான துன்மார்க்கங்கள் குறைந்திருக்குமானால் தேசத்திலுள்ளஎல்லாருக்குமே க்ஷேமமுண்டாகுமானதால்,எல்லாரும் அந்தக்ஷேமத்துக்குக் காரணமாயிருக்கிற வித்தியாபிவிர்த்திக்கு ஆகும் செலவைக் கொடுக்கலாம்; கொடுக்கா விட்டால், எல்லாநன்மைக்கும் பொதுவாகப் பாத்தியப்பட்டிருக்கும் துரைத்தனத்தார் கட்டாயம்பண்ணிப் பணம் வசூல்செய்து மேற்படி அபிவிர்த்தியைச் செய்து வரலாம். இவ்வாறு குறிக்கப்பட்ட நியாயத்தினாலேயே ஐரோப்பிய தேசங்களில், குடிகள் வரிப்பணத்திலிருந்து செலவிட்டு,ஏழைகளுக்கும் வித்

கட்டாயமாய்ச் செலவின்றி வித்தை ஊட்டிவருகிறார்கள்.

இங்கிலாந்து தேசத்துச் சட்டங்களின் பிரகாரம், எந்தத் தகப்பனுடைய பிள்ளை ஐந்தாவது வயதுக்கும் பதின்மூன்றாவது வயதுக்கும் மத்தியில் குறிப்பிட்ட பரீட்சை யொன்றில் தேறாமலும் ஸ்கூலில் கிரமமாகப் படிக்காமலு மிருக்கிறானோ, அந்தத் தகப்பன் ஐந்து ஷில்லிங்குக்கு* மேற்படாமல் அபராதத்துக்கு உள்ளாவான். பிள்ளையின் பதின்மூன்றாவது வயதுக்கும் பதினாலாவது வயதுக்கும் மத்தியில் குறிப்பிட்ட பரீட்சையில் தேறாமலும் பள்ளியில் வாசிக்காமலுமிருப்பானானால அந்தப் பிள்ளையினுடையதகப்பனும் மேற்குறித்த அபராதத்துக்கு உள்ளாவான். எந்தத் தகப்பன் குடியனாயும் துன்மார்க்கனாயும் இருந்து பிள்ளையினுடைய வித்தையை முற்றிலும் அசட்டை செய்து விடுகிறானோ அந்தப் பிள்ளையைக் கட்டாயப்படுத்திக்கைத்தொழில்போதிக்கும் பகற்பாடசாலையில் சேர்த்துவிடலாம். தகப்பனுக்கு அடங்காமல் திரிகிற பிள்ளைகளை அப்பேர்ப்பட்ட பிள்ளைகளுக்கென்றுபிரத்தியேகமாய் ஏற்பட்டிருக்கும்பள்ளிக்கூடத்தில்கட்டாயப்படுத்திச்சேர்த்துவிடலாம். திருட்டு, களவுமுதலானதொழிலில் அமர்ந்திருக்கும் தகப்பனுடையபிள்ளை பதினாலுவயதுக் குட்பட்டிருப்பானானால் அல்லது அவனே துன்மார்க்கத் தொழிலில் பிரவேசித்திருப்பானானால் அப்பேர்ப்பட்ட பிள்ளையையும் ஒரு கைத்தொழில் பாடசாலையில் சேர்த்துவிடலாம். பதின்மூன்று வயதுக்குக் குறைந்தாவது, அல்லது பதினாலுவயதுக்குக் குறைந்த பரீட்சை தேறாமலாவது, இருக்கும் பையனை எந்த முதலாளி தன் கைத்தொழிற்சாலையில் வேலைக்காகச் சேர்த்துக் கொள்ளுகிறானோ அந்த முதலாளி இரண்டு பவுன் முதல் ஐந்து பவுன் வரையில், சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி, அபராதத்துக்கு உள்ளாவான். இம்மாதிரி கட்டாயத்தின்மேல் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படும் பிள்ளைகள் வித்தையோடுகூட உணவையும் பெறுகிறார்கள்; தொழிலொன்றும் கற்பிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூடத்துக்குச் சரியாக வரத் தவறிப்போனால் பிள்ளைக்குத் தண்டனையுண்டு; பிள்ளையை பெற்றோர் வராமல் தடுப்பார்களானால் பெற்றோர்க்கும் அபராதமுண்டு. கொஞ்சநாள் முன்னால் பிரதமவித்தை போதிக்கும் கீழ்தரபாடசாலைகளில்சம்பளமேவாங்குகிறதில்லையென்று ஒருசட்டமும் செய்யப்பட்டது. இப்படி வித்தைக்குவேண்டியசாதகங்கள்பலவாறாகஏற்பட்டிருப்பினும்,இங்கிலாந்துதேசத்துப் பெரும்பட்டணங்களில்,தெருத்தெருவாய்சிறுவாலிபர்கள் சமாசாரப் பத்திரிகைகள் நெருப்புப் பெட்டி முதலான வஸ்துக்களைவிற்றுப் பிழைத்துப் படிப்பில்லாமலே காலந்தள்ளி வருகிறார்கள். அனேகம் பிள்ளைகளை, கேவலம் சிறுபிராயத்தில், திருடவும், இரக்கவும் தெருக்களில் பெற்றோர் அனுப்பி விடுகிறார்கள். இப்படிச் செய்பவர்கள் முக்கியமாய்த் திருடர்களும் துன்மார்க்கர்களுமாவார்கள். தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதைவிட இப்படித் தெருக்களில் துறத்துவது தங்களுக்கு லாபமாயிருப்பதால், பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப இஷ்டப்படுவதில்லை. இந்தப்பிள்ளைகளுடைய கதி என்னாகும் என்பதைக் கவனிப்பதுமில்லை.

பிரான்சு,ஸ்விட்ஜர்லாந்து,இடலி,இந்ததேசங்களில்கீழ்த்தரப்படிப்புப்பயிற்றுவிக்கப் பிள்ளைகளிடம் சம்பளமேவாங்குவதில்லை.ஜர்மனிதேசத்தில்,தகப்பன் சம்பளம்கொடுக்கத்தகுந்த ஸ்திதியிலிருக்கிறானென்று தெரிந்தால்சம்பளம் வாங்கப்படும். ஆகிலும் இப்பேர்ப்பட்ட ஸ்திதியிலில்லையென்றுரூபிப்பது சுலபமானதால்,வெகுபேர் தப்பித்துக்கொண்டுவிடுகிறார்கள்.சம்பளம்வாங்கப்பட்டாலும், வெகுசொற்பந்தான் வாங்கப்படும். அனேகபெரிய பட்டணங்களில்பிரதம வித்தைபயிலச் செலவே யில்லை. ஸ்வீடன், நார்வே இந்த தேசங்களில் பிரதம வித்தையும் மத்தியதர வித்தையும் செலவில்லாமலே கிடைக்கும். எந்தத் தகப்பன் தன் பிள்ளையை பள்ளிக்கு அனுப்புவதால் நஷ்டத்தை அடையும்படியான ஸ்திதியிலிருக்கிறானோ அவன் இந்த நஷ்டத்துக்கு ஈடாக பொதுப்பணமாகிய வரிப்பணத்திலிருந்து உதவி பெறுவதுமுண்டு. பெல்ஜியதேசத்தில் எவன் தான்ஏழையென்று வெளிப்படையாகச் சொல்லுகிறானோ அவனுடைய பிள்ளை செலவில்லாமல் வித்தை பெறக்

* 20 ஷில்லிங்கு கொண்டது ஒரு பவுன்.

கூடும். டென்மார்க் என்ற தேசத்தில், பதினாலு வயது வரையில் பள்ளிக்குப் போக வேண்டியது கட்டாயம். அனேகம் ஸ்கூல்களில் சம்பளமே வாங்குவதில்லை. ஆயினும் பெற்றோர்கள் அனேகர் சம்பளம் வாங்கும் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புவது பெருமையாக நினைக்கிறார்கள். எவ்வளவு ஏழையானாலும் பிள்ளையைப் பட்டினி போடுவானேயன்றி படிப்பில்லாமல் நிறுத்த மாட்டான்.

அமெரிக்காதேசத்தில் எந்தக்கிராமமானாலும், இருபது பிள்ளைகள் சேருகிறதாயிருந்தால் பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிப்பது கட்டாயம். இன்னும் உயர்ந்த மத்தியதர பள்ளிக்கூடங்களுமுண்டு; அவைகளிலும் சம்பளமே வாங்குகிறதில்லை. சம்பளம் வாங்காதிருப்பதுடன், பிள்ளைகளுக்குப் புஸ்தகங்களும், பலகை, காகிதம் முதலானவைகளும் இனாமாகவே கொடுக்கும்படியான ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காதேசம் குடியரசு நாடாகையால், பிரதிமனுஷனுக்கும்,எளியோனானாலும், தனிகனானாலும், ராஜ்யதந்திரத்தில் பங்கு செலுத்தும் சுதந்தரம் உண்டு. ஆகையால் ராஜ்ய அதிகாரிகள் தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் வித்தை பயிற்றுவிக்க வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். தேசாபிமானமாகிய பெருங்குணத்தை விர்த்திபண்ணுவது படிப்பினுடைய முக்கியகருத்தென்பது அவர்களுடைய கொள்கை. ஜனங்களுக்குத் துரைத்தனத்தார்செய்யக்கூடிய நன்மைகளில் வித்தையைவிடப் பெரு நன்மை யில்லை, அப்பேர்ப்பட்ட நன்மையை ஜனங்களுக்குத் துரைத் தனத்தார் இனாமாக அளிக்கும்போது, துரைத்தனத்தினிடத்தில் ஜனங்களுக்கு அபிமானமுண்டாவது இயல்பு. எல்லாப் பள்ளிக்கூடங்களும் அவ்வவ்விடத்து ஜனசமூகத்தாலேயே மேல்விசாரணை செய்யப்பட்டு நடத்திவரப் படுகின்றன.

இந்தியா தேசமாகிய நமது தேசத்தில் வித்தியாபிவிர்த்தி செய்வதைவிட அவசியமான முயற்சி வேறொன்றில்லை. தனம், ஒழுக்கம், தைரியம், தேசாபிமானம் முதலிய லட்சணங்கள் நமது தேசத்தாருக்கு வேறு எவ்விதமாயும் உண்டாகக் கூடியதில்லை. ஆகிலும் அங்கிலேயர் ஆதியில் வித்தியாசாலைகள் ஸ்தாபித்தபோது இந்தக் கருத்துக்கொண்டு ஸ்தாபித்ததாகத் தெரியவில்லை. முக்கியமாய் ஸர்க்கார் உத்தியோகத்துக்கு வேண்டிய அங்கிலேய பாஷையின் அறிவை ஹிந்துக்களுக்குப் போதிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிருந்ததாகத்தெரிகிறது. எண்ணம் எப்படியிருந்தாலும் இதுவரையில் அங்கிலேய துரைத்தனத்தாரின் முயற்சியால் நமக்கு உண்டாயிருக்கும் நன்மைக்கு அளவில்லை. ஆகிலும் இதுவரையில் மேல்தரபடிப்பையே கவனித்து வந்தார்களேயன்றி சாதாரண ஜனங்களுடைய வித்தியாலாபத்தை அதிகமாகக் கோரவில்லை. இப்போதுதான் சிலகாலமாக கீழ்த்தர வித்தையையும் கவனித்து வருகிறார்கள். லார்ட் ரிப்பன் ராஜப்ரதிநிதியாயிருந்தகாலத்தில்,அவர் 'கமிஷன்'* ஒன்றுஏற்படுத்தி, பிரதமவித்தை விர்த்தியாவதற்குவேண்டிய ஆலோசனை சொல்லும்படி கற்பித்தார். கற்பித்தும், முடிவாய்ச்சொன்ன ஆலோசனை ஐரோப்பிய அமெரிக்கா ஏற்பாடுகளுக்கு ஒவ்வினதாகத் தேறவில்லை. கவர்ன்மெண்டார் செய்த தீர்மானமாவது: "ஜனங்களுக்கு வித்தையூட்டும் பொறுப்பை நாம் பூர்ணமாக அங்கீகரிக்கிறோம். அங்கீகரித்தும், எங்கள் பொக்கிஷ ஐவேஜுக்குத் தக்கபடியே நிறைவேற்ற முடியும். இவ்வாறு அரை குறையாக நிறைவேற்றுவதிலும், கவர்ன்மெண்டாரின் முறைமை யென்ன வென்றால், துரைத்தனத்தாரல்லாமல் மற்றவர்கள் செய்யும் முயற்சியோடு போட்டிபோடாமல், முதலில் வழியை மட்டும் காட்டி, ஜனங்கள் தாங்களே வித்தியா ஸ்தாபனங்களை நாட்டி நடத்தச் சக்திபெற்றதும், துரைத்தனத்தார் வித்தியாப்பிரயத்தினத்தினின்றும் விலகி விடுவார்கள். திரவிய சகாயமட்டும் செய்வார்கள். மற்றச்சம்பந்தம் ஒன்றும் வைத்துக்கொள்ள மாட்டார்கள்."

இப்படி இந்தியா கவர்ன்மெண்டார் செய்த தீர்மானத்துக்கும், ஐரோப்பிய அமெரிக்கா தேசங்களில் நாம் மேற்குறித்தவாறு நடந்தேறிவரும் ஏற்பாடுகளுக்கும் வித்தியாசமுண்டு. ஜனங்களுக்கு வித்தைப்பயிற்சி செய்விப்பதில் பணச்செலவைக் கவனிப்பது தகாது. எவ்வ

* ஒரு விஷயத்தைப்பற்றி விசாரித்தறிந்து தெரிவிக்க அதிகாரம் பெற்று நியமிக்கப்பட்டவர்களுக்கு இங்கிலீஷில் 'கமிஷன்' என்று சொல்கிறது.

ளவு செலவானாலும் அப்பொழுப்பை துரைத்தனத்தார் வகிப்பது நியாயமும் கடமையுமாமென்பது அவர்கள் கருத்து. இங்கே, வித்தை அபிவிர்த்தியானாலும் ஆகாவிட்டாலும் கவர்ன்மெண்டார் எவ்வளவு திரவியம் இந்த விஷயத்துக்காக மிருக்கலாமோ, அவ்வளவுக்குத் தான்பிரஜைகள் பாத்தியப்பட்டவர்கள் என்று நினைக்கிறார்கள். இதனால் இத்தேசத்தில் வித்தியாபிவிர்த்தி அதிக மாகவில்லை.

சில ஐரோப்பிய தேசங்களில் எழுத வாசிக்கத் தெரியாதவன் ஒருவனேனும் இல்லவே யில்லை. இங்கிலாந்து தேசத்தில் இப்படித் தெரியாதவன் நூற்றுக்குப் பத்துப் பேர் தான் உண்டு. நமது தேசத்திலேயோ எழுதப்படிக்கத் தெரிந்தவன் நாற்றுக்குப் பத்துப் பேருந்துமே லில்லை. நூறு ஜனங்களில் 90-பேர் கையெழுத்துப் போடத்தெரியாதவரா யிருப்பார்கள். மேலும்,பள்ளிக்கூடங்களில்எவ்வளவு பேர் படித்து வருஷா வருஷம் தயாராகிறார்களோ,அந்தத்தொகையைவிட ஜனப்பிறப்புஜாஸ்தியாவதால், எழுதப் படிக்கத்தெரியாத ஜனங்களின் தொகை மொத்த ஜன சங்கியையின் தாமாஷாப்படி ஜாஸ்தியாய் வருகிறது. அதாவது, பத்து வருஷத்துக்கு முன்னால் எழுதப் படிக்கத் தெரியாதவர் 100 - க்கு 90 - ஆனால் இப்போது 100-க்கு 91-ஆகும்.

சம்பளம்வாங்கிப்படிப்பிக்கும்ஸ்திதியே இப்படியிருக்கும்போது, சம்பளம் வாங்காமலே ஏழைகளைப்படிப்பிக்கக் கவர்ன்மெண்டார் எத்தனிப்பார்களென்று நாம் நினைக்கவேவேண்டியதில்லை. நமதுதேசம்சுத்த ஏழைத்தேசமானதால் தர்மப்படிப்பை முற்றிலும் ஸ்தாபிப்பது முடியாது. பிள்ளைகளிடம் சம்பளம்வாங்காமல் இருக்கலாமேயொழிய,போதிக்கும்வாத்தியார்கள்இனமாகப் போதிக்க மாட்டார்கள். மற்றச் செலவுகளும் உண்டு. இந்தச் செலவுகளுக்கு வேண்டியதொகை வரிவசூல்செய்தே கிடைக்கக்கூடியது. அதாவது, ஜனங்களே கொடுக்க வேண்டும். நமதுதேசத்தில் ஏழைஜனங்கள் கோடிக்கணக்காயுண்டு. இந்தக் கோடிக் கணக்கான ஜனங்களுக்கு இனமாகக் கல்விபயிற்றுவிக்க வேண்டுமானால், கோடிக் கணக்கான திரவியச்செலவு செய்யவேண்டும். இவ்வளவு செலவையும் வரியாகக் கொடுக்க நமது தேசத்தாருக்கு சக்தியில்லை யென்பது திண்ணம். ஆகிலும், சில பெரிய பட்டணங்களில் ஆரம்பஞ் செய்து பார்க்கலாம். ஆகிற செலவைக் கவர்ன்மெண்டார் பாதியும் முனிசிபாலிடியார் பாதியுமாக ஒப்புக்கொள்ளலாம். இவ்வாறு தர்மப்படிப்பைத் தவிர, கவர்ன்மெண்டார் வித்தை விஷயமாய் ஜனங்களுக்குச் செய்ய வேண்டியது வேறொன்றுமுண்டு.

ஐரோப்பாவில் ஏழைஜனங்களுக்குக் கைத்தொழில் பயிற்றுவிக்காத தேசமில்லை. நமது தேசத்தில் இந்தப்பயிற்சி எங்குமில்லை. இது வரையில் நமது தொழிலாளிகள் தங்கள் தங்கள் பெற்றோர் அல்லது மற்றத் தொழிலாளிகள்கூடச் சேர்ந்து வேலை கற்றுக்கொண்டு தேறிவந்தார்கள். இனி இவ்வாறு அடையும் பயிற்சி போதாது. ஐரோப்பியருடைய போட்டி மேலிடுவதால், நமது தேசத்து எல்லாத் தொழிலும் யந்திரங்களால் நடத்த வேண்டி வருகிறது. இப்படிப்புதிதாய் நேரிடும் வேற்றுமைக்கு அனுகுணமாக முன்போல அனுபோகத்திலேயே கிடைக்கும் அறிவு போதாமல், புஸ்தகங்களின் மூலமாயும் தொழிற்சாலைகளில் கற்றுக்கொள்ளுவதினாலும், தேர்ச்சிபெற அவசியம் மிகுந்து வருகின்றது. பழைய கைத்தொழில்கள் அழிந்துபோயின; புதிதாக துணி நெய்தல், காகிதம் செய்தல், நெருப்புக்குச்சி,மெழுகுவர்த்தி, ஸோப் * முதலானவை தயார்செய்தல், இம்மாதிரியான புதுத்தொழில்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் முன்போல தொழிலாளிகளால் தங்கள் தங்கள் வீட்டில தனியாகச்செய்யப்படாமல், ஏராளமானமுதல் வைத்து, யந்திரசாலைகள் ஸ்தாபித்து, முதலாளிகள், மேல் விசாரணை செய்வோர், தொழிலாளிகள் இவர்கள் ஒரு கூட்டமாய்ச்சேர்ந்துழைத்து பெரும்அளவாய்த் தயாராகவேண்டி யிருக்கின்றன. இந்தப்புதுமைக்குத்தக்க வித்தையை நமது தொழிலாளிகள் புதிதாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். இது கவர்ன்மெண்டார் சகாயமன்றி நிறைவேறத்தக்கதல்ல.

ஜி. சுப்பிரமணிய அய்யர்.

* சவுக்காரம்.

நகைப்பைத்தியம்.

ஹிந்துக்களுக்குள் ஆபரணங்கள் நிமித்தமுண்டாகும் தீங்குகளும் அவைகளைப்பற்றிய தர்ம்ம சித்தாந்தங்களும்.

உத்தமகுணங்களும் தர்ம்மங்களுந் தழைத்தோங்கி வந்த பாதகண்டமாகிய நமது தேசத்தில் நகையாசைமீறிப் பைத்தியம்போல் மாறி ஸ்திரீகளையும் புருஷர்களையும் ஆட்டத் தொடங்கியிருப்பதாலும் அதன் தோஷங்கள் இப்போதே சொல்லி முடியாததாகையாலும், அது மேன்மேலும்அதிகரிக்காமல் இப்போதே தடுக்கவேண்டியது கட்டாயமென்றுணர்ந்து இப்பிரபந்தம் எழுதலானேன். இதிற்கண்ட அபிப்பிராயத்திற் சேரக் கூடிய ஒவ்வொருவரும் அதை எந்தமட்டில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியுமோ அந்தமட்டிற் கொண்டுவரவேண்டுமென்று பிரத்தியேகமாகப் பிரார்த்தித்துக்கொள்கிறேன். ஆற்றுவெள்ளம்போல இப்போது அணைகடந்து புறண்டழிக்கும் ஆபரணப் பைத்தியத்தின் சக்தியை ஆரம்பத்தில் தடுப்பது கடினமாக இருந்தாலும் அவ்வருத்தத்தை யோசிக்காமல் எறும்பூரக் கல்லுந் தேயுமென்ற பழமொழிப்படி ஒவ்வொருவரும் முயற்சி செய்தால் கருதியவண்ணம் சித்தியாகு மாகையால், நம்மால் என்ன வாகுமென்று மனந்தளராமல் ஒரேதிர்மானச் சித்தமாக முயற்சி செய்து இதிற்கண்ட அபிப்பிராயத்தைக் கொண்டு செலுத்தவேண்டும்.

நகைப்பைத்தியம் பிடித்தது இப்போது பத்திருபது வருஷமாகத்தான். அதற்குமுன் நகையாசை யிருந்தாலும் பைத்தியம்போல் ஆழவில்லை, ஆகையால் சமீபகாலத்தில் முளைத்து வேரூன்றிவரும் தீங்கைக் களைவது ஒரு கடினமான வேலையென்றெண்ணலாகாது. தொன்றுதொட்டு வந்த தோஷமாக இருந்தால் ஒரு வேளை மிகுந்த சிரமம் எடுக்கவேண்டிவரும். அவ்வாறில்லாமையால் அதை நிவர்த்திக்கவெண்ணும் ஒவ்வொருஉத்தமபுருஷனுக்கும்மனம் ஊக்கமடைவதற்குக் காரணமா யிருக்கிறதேயன்றி தளர்வதற்குக் காரணமில்லை.

I. நகையுற்பத்தி.

முற்காலத்தில் அநாகரீகமான காட்டுஜனங்கள் அஞ்ஞானம் நிறைந்து மிருகப்பிராயமாய் விலங்குகள்கொன்று சுட்டுஞ்சுடாமலுந் தின்று சஞ்சரித்து வருங்காலத்தில்,அலங்காரஞ் செய்துகொள்ளும்பொருட்டு பற்பல எலும்புகளாலும் மரக்கட்டைகளாலும் கற்கரடுகளாலும் தாழ்ந்த உலோகங்களாலும் ஆபரணங்கள் நிர்மித்து அணிந்துகொண்டார்கள். பிற்காலத்தில் நாகரீகம் பெருகப்பெருக, அறிவு கூடக்கூட, ஆபரணங்கள்குறைந்து சீரானஸ்திதியையடைந்து அங்கிலேயர்முதலிய அன்னியதேசத்தவர்கள் சர்வ க்ஷேமங்களையும் மேம்பாடுகளையும் பெற்றிருக்கிறார்கள். அநாகரீகங்கூடி அறிவு குறைந்திருக்கும் நிலைமைக்குரித்தானது நகையென்றும் அநாகரீகங்குறைந்து அறிவு கூடியிருக்கும் நிலைமைக்குரித்தானது நகையின்மையென்றும் ஏற்படுகிறது. இந்த சித்தாந்தத்தைப் பலவகைப் பிரமாணங்களால் பிற்பாடு தெளிவாகவும் விஸ்தாரமாகவும் காண்பிக்கலாம்.

தற்காலத்தில் அலங்காரத்திற்கு மாத்திரமல்லாமல் மற்றநேக காரணங்கள் நிமித்தமாகவும் நகையை உபயோகப்படுத்தியும் பெருக்கியும் வருகிறார்கள்:—

(க) வரவெல்லாஞ் செலவாகாமல் செட்டாய்க் காரியநடக்கும்பொருட்டு ஆபரணாசையை வளர்த்தல்,
(உ) செட்டாய்ச்செலவுசெய்து மிகுதிவருகிற தொகை கைவிட்டுப் போகாமல் முதல் சேர்த்தல்,
(ங) அன்பில்லாப் பெண்டீரை யன்பின்வழி செலுத்தி வசப்படுத்தல்,
(ச) மனைவியின்மேல் புருஷனுக்குள்ள அன்பை திருஷ்டாந்தப்படுத்திக் காட்டல்,
(ரு) அந்தஸ்தைக் காப்பாற்றல்,
(சு) பெருமை சம்பாதித்தல்,
(எ) வழி யாத்திரையில் திடீரென்று நேரிடுஞ் செலவுக்கு வழிதேடல்,
(அ) உலகவழக்கம் அனுசரித்தல்,
(கு) வேதவாக்கியங் காப்பாற்றல்,
(ய) கடன்காரரை மோசப்படுத்தல்,
(யக) தட்டார்களுக்குப்பிழைப்புக்கொடுத்தல்,

(௰௨) உலகவாழ்க்கை அநிச்சயமென்றும் கண்டது காக்ஷியென்றும் ஓர் கொள்கை யனுசரித்தல்,

(௰௩) காது மூக்குகளி லுள்ள துவாரங்கள் அடைபட வேண்டுமென்றல்,

(௰௪) நாகரீகம்பெற்ற அந்நிய இராச்சியத்தவர்க்குள்ளும் நகை நடமாட்டமுண்டென்று உதாரணங்காட்டல்,

(௰௫) நகைப்பெருக்கம் நாகரீக அங்கமாக நினைத்தல்,

(௰௬) தேகத்தில் சுவர்ணம் இருந்தால் சுத்தமென்று மொழிதல்,

(௰௭) ஒரு குன்றுமணிப் பொன்னணிய ஒரு கோடிப் புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமென்று நினைத்தல்,

(௰௮) தேகத்திற் பொன்னில்லாமல் ஸ்திரீகளைப் பார்க்கக்கூடாதென்று கூறல்,

(௰௯) நாளுக்குநாள் நகை பெருகிக்கொண்டிருப்பதால் அது எவ்வளவோ கெடுதலென்று பட்டாலும், அதை நிறுத்தமுடியாதென்று அனுசரித்தல்,

(௨௰) சம்பாத்திய சக்தியில்லாத ஸ்திரீகட்குக் கையிருப்பாக ஏதாவது செய்யவேண்டுமென்று சமாதானங் கூறல்,

(௨௧) நகையில்லாவிட்டால் நல்ல வரன் கிடையாதென்றும், கிடைத்தாலும் மாமி முதலோர்கள் அன்பாய் நடத்தமாட்டார்களென்றும் எண்ணுதல்,

(௨௨) பெண் இராச்சியமாகையால் பெண்களிஷ்டப்படி நடக்கவேண்டுமென்றுநினைத்தல்,

(௨௩) நகை யணிவதால் இராச்சியத்திற்குத் தோஷமென்னவென்று தர்க்கித்தல்,

(௨௪) ஆலயங்களில் சுவாமிக்கும் அம்மனுக்கும் இட்டிருக்கும் ஆபரணங்களைக் காண்பித்துச் சகல ஆசாபாசங்களுங் கடந்த தெய்வசொரூபத்திற்கே ஆபரணம்வேண்டுமானால் கேவலம் ஆசாபாசங்களி லாழ்ந்திக் கிடக்கும் மானுடஜென்மத்திற்கு ஏன் கூடாதென்று வழக்காடுதல்,

(௨௫) அலங்காரக் கைத்தொழில் பேணாவிட்டால் மாண்டுவிடுமாகையால், ஆபரணக் கைத்தொழில் மாளாதிருக்கும் பொருட்டுப் பேணுதலென்றல்,

(௨௬) மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பானாகையால் நகையினால் மனிதர் கஷ்டப்பட ஈசுவரன் செய்யப்போகிறானாவென்று நினைத்தல்,

(௨௭) ஈசுவரசிருஷ்டியிற் காணப்பட்ட பொன், வெள்ளி முதலிய உலோகங்கட்கும் நவரத்னங்கட்கும் என்ன உபயோகமென்றும் மடக்கிக் கேட்குதல்,

(௨௮) கையாலாகாதவன்றான் நகை யென்னத்திற்கென்று ஆக்ஷேபிப்பானென்று இகழ்தல்,

(௨௯) மிகுதி வைக்கும் பொருளை கடன்காரரிடம்கொடுத்தால் மோசம்போமாகையால் நகையிற் சற்று நஷ்டம் வந்தாலும் அதிற்போட்டுத் தேகத்தி லணிந்துகொண்டால் முழுமையும் மோசம்போகாம லிருக்குமென்று நகையில் முதலிட்டுக் காப்பாற்றலென்றல்.

மேற்கூறியகாரணங்கள்தான் பிரதானமாக ஆபரணம் உபயோகிப்பதற்கும் பெருக்குவதற்கும் ஆதாரமாக ஜனங்கள் சொல்லிவருகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி நகையாவலுள்ள ஜனங்களுடன் வாயாடினால் இன்னும்சிலகாரணங்கள் வெளிப்படலாம்.

மேற்கூறிய காரணங்கள் என் கைக்கொள்ளக்கூடா? மேற்கண்ட காரணங்கள் தர்மசாஸ்திரங்கட்கும் சர்வஜனங்களின் பொது நன்மையைப்பற்றிய லௌகிக தர்ம்மங்கட்கும் விரோதமாக விருந்தாலும், சரீரசுகத்திற்கும் ஆத்மரக்ஷைக்கும் விரோதமா யிருந்தாலும் அவைகளைத் தள்ளிவிடவேண்டும். சத்தியம் சமாதானத்துக்கும், அபிவிர்த்திக்கும், பொதுக்காரணமாயுள்ளது. நகைப் பெருக்கத்தாலும், நகையாசையாலும், சத்தியம் குன்றி அசத்தியம் மேலிடுமாகில், நகையாசையைத் தொலைக்கவேண்டும். அதுபோலவே இரக்கம், தயை, உதவி, காருண்யம், பந்து அபிமானம், முதலியஉத்தமகுணங்கள் குன்றினால் அப்போதும் நகையாசையை விடுக்கவேண்டும். சண்டை, சச்சரவு, மனஸ்தாபம், கடுமொழி, வஞ்சனை, வெளியில் அலைந்துவரும் புருஷனுக்கு அன்பாதரவில்லாமல் முகம் சுண்டி, மனம் குன்றி, இணக்கமின்றி உபேக்ஷைகாட்டும் தன்மை, முதலிய துர்க்குணங்கள் நகைப்பேராசையால் வருமாகில் உடனே நகையாசையை வேரோடறுக்கவேண்டும். ஆபரண இச்சையால், கொலை, களவு, காமம், கட்குடி, முதலிய மகாபாதகங்கள் நேரிடுமாகில் அதை ஒருநிமிஷங்கூட வைக்காமல் களையவேண்டும். குரோதம், லோபம், மதம், மாச்சரியம் முதலிய துர்க்குணங்கட்கும் ஆதாரமாக விருக்குமாகில் அப்போதும் கூடாதென்று விலக்கவேண்டும்.

நகையால் உசிதமில்லாத கலியாணம் நேரிட்டு அதனால்வியாதியும் பலஹீனமும் அங்கஹீனமும் பொருந்திய சந்ததிகள் உண்டாவதற்குங் காரணம் ஏற்பட்டால் நகையாவலில்லாமற் செய்யவேண்டும். ஆபரணப் பைத்தியத்தால் வைதவ்வியம், விபசாரம், மானவமானமில்லாத்துணிவு, நாணக்குறைவு, சாகாசம் முதலிய தீமைகள் நேரிட்டால் அவைகள் விலகும் பொருட்டு அதை உடனே கைவிடவேண்டும்.

போக்கிய பதார்த்தங்கள் விளைவிக்கக்கூடியதும் அடைவிக்கக் கூடியதுமான, ஜீவிதமுதல்கள் * சேத்தமுதலாக மாறுவதற்குச் சார்புவரும் பக்ஷத்தில் அப்போதும் நகையின்மேல் இச்சை யொழிக்க வேண்டும். ஆத்மவஞ்சனைக்கும் பரஹிம்சையில் அலக்ஷியத்திற்கும் காரணபூதமா யிருக்குமாகில் அவை நிமித்தமாகவும் நகைப் பேராவலை யொழிக்க வேண்டும். ஐக்கியபத்திய மின்றிச் சுவய காரியபுத்தி மேலிட்டு மேனோக்கிழுந்து பொறாமை, கோள் முதலிய துற்குணங்கள் ஜனிக்குமாகில், அப்போதும் ஆபரணப் பைத்தியத்தைத் தள்ள வேண்டும். நகை யாசையால் சாஸ்திரம் மேம்பாடடையாமல் தடைப்பட்டு நாளுக்கு நாள் குன்றிப்போவதற்கு இடம்வந்தால் அவ்வாசை கெடுதலென்று நீக்கவேண்டும். நகைப்பித்தால் தெய்வபக்தி குறையுமாகில் அது உதவாதென்று ஒழிக்கவேண்டும். நகையில் அழுந்திக்கிடக்கும் முதலெல்லாம் ஜீவித முதலாக்குவதால் பஞ்சம் முதலிய வறுமை நோய்கள் நீங்குமாகில் அப்பெரிய லாபத்தை உத்தேசித்து அலங்காரம் பெரிதென்றெண்ணாமல் வறுமைநோய் நீங்கும் வழி தேடவேண்டும்.

எஸ். இராமசுவாமி அய்யர்.

* பலவகை முயற்சியில் செலுத்தப்பட்டு க்ஷயமடையாமலிருக்கக் கூடியதும் உபரியாக லாபம் கொடுக்கக் கூடியதுமான முதலுக்கு 'ஜீவிதமுதல்' என்று பெயர். அவ்வாறு லாபம் கொடுக்கக்கூடிய முயற்சியில் செலுத்தப் படாமல் நாளுக்கு நாள் க்ஷயம் வரக்கூடிய முதலுக்கு 'சேத்தமுதல்'என்று பெயர்.

தமிழ் மொழி வளர்த்தல். *

அல்லது

தமிழ் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள்.

கனவான்களே !

இன்று நான், உங்கள் அனுமதிப்படி, மேற்கூறிய விஷயத்தைத்தொட்டு நினைத்ததை உபந்நியாசம் செய்யுமுன் இம்மாதிரிச்சங்கம், இப்படிப்பட்ட விடத்தில், இப்படிப்பட்ட காலத்தில், கூடிய பெருமகிழ்ச்சியைக் குறித்துச் சிறிது வெளியிடுவேன். இத்தகைய சபையொன்று இதற்கு முன்னமே கூட வேண்டுமென்ற எண்ணம் இந்தச்சபையிலுள்ளவர்களிற்பெரும்பான்மை யோருடைய ஞானத்தில் உதயமாயிருந்தது மன்றி, அதற்கு வேண்டிய பெருமுயற்சிகளும் அவர்முன் செய்யாதொழிந்திலர். ஆகிலும், ஏதேது காரணங்களாலோ, அது அப்போது பிரத்தியக்ஷத்தில் கை கூடினதாகவில்லை. அது இப்போதுதான் தெய்வவருள் பிறந்து, சபையோருடைய நற்காலமேலீட்டினாலும், அவர்களுடைய தவப்பேறும் முயற்சியும் வலிமையும் ஒன்று சேர்ந்ததனாலும், காரியமாய் நிறைவேறக்கண்டோம். ஏற்கனவே, இந்த மலையாள நாட்டில், தமிழ்மொழியின் அருமை பெருமைகளை அறியத்தக்கவரேனும், அறிந்தவரேனும், அகப்பட்டுக்கொள்வது அரிது. அகப்பட்டாலும், அப்படித் தமிழில் அபிமானமும் விற்பத்தியுமுடையோர் ஒருங்கு சேர்ந்து, ஒரேயிடத்தில் வந்து, ஒரே பொது

* இது திருவனந்தபுரம் தமிழ் பயில்சங்கத்துமுன் ஓர் உபந்நியாசமாக இயற்றி வாசிக்கப்பட்டது.

நோக்கத்தோடு, பாடுபட்டுழைக்கக் காண்பது அரிதினுமரிதே. அது அப்படியிருக்கையால், இப்பொழுது இந்த ஒரே கூரையின்கீழ் இந்த சபை நிறைந்து சபா ரத்னங்களாய் வீற்றிருக்கும் கனவான்களை இந்த மகத்தான காரியத்திற்குத் தலைகொடுத்துழைக்க, அன்போடு கூடியிருக்கக் காணப்பெற்ற காட்சி இந்த ஊர் செய்த தவமோ, மற்று யார் செய்த தவமோ அறிகிலேன். பசுமரங்கள் தழைத்து, நீர்வளம் நிலவளம் பொருந்திய இவ்விராஜ்ஜியத்தில் இத்தனை கண் குளிரும்படியான காட்சி அரிதே. தேனைவடித்துச் சொரிந்தாலும், அதைக் கனிவர்க்கங்களோடு பிசைந்து உண்டாலும், அது இஷ்டர்கள் ஒன்றுசேர்ந்து பொதுநல விஷயமாக முன்னிட்டுப்பேசும் இன்பக்கிளர்ச்சிக்கு ஒருபோதும் ஒப்பாகாது. எத்தனை அன்னசத்திரம் கட்டினும், எத்தனை லக்ஷம் பேருக்குப் போஜனம் அளிப்பினும், இந்தப்புண்யத்திற்கு ஈடு ஒன்றுமில்லை. ஏனெனில், அன்னம் அன்று பசிகேட்கும்; கல்வி, நின்று, ஆத்ம பசியைக்கேட்கும். என்றும்அழிவில்லாத செல்வம் கல்விச்செல்வமே. என்றும் கெடாத விளக்கு கல்விவிளக்கே. கல்வியினும், சுயபாஷையில் கல்வியை வளர்க்குதல் யாவருக்கும் இனிதே. இப்படிப்பட்ட காரியத்திற்காகவாம் இங்கு நாம் இந்தச்சபையாகச் சமைந்தது. இது ஒரு கேவல சங்கதியன்று. ஆழ, அகல, அமர்ந்து யோசித்தால், இது போன்ற கூட்டத்தின் பிரயோஜனங்கள் நினைக்க நினைக்க வளரும். ஊக்கம், ஒற்றுமை, விடாமுயற்சி, பொது நன்மை நோக்கம், சுதேசாபிமானம் இத்தனையும் சேர்ந்தால் முடியாதபொருள் இவ்வுலகத்திலுண்டோ? இல்லை. பொதுநன்மையிற்சிறந்த தர்மமும் பேறும் உலகத்திலுண்டோ? இல்லை. உலகத்தில், கல்வியின்றிப் பொதுநன்மைநாடுவது சாத்தியமோ? இல்லை. கல்வியில், சுயபாஷையில் கல்விகற்கும் பெருமை மற்றெதிலுமுண்டோ? இல்லை. ஆகையால், நேசர்களே, நாம் எடுத்திருக்கும் காரியம் இவ்வளவு மகத்துவமுடையது. அதிற் செய்யவேண்டிய நடபடிகள் கடல்போல்விரிவுடையன. கடலும் பலதுளியாகையால், இந்தச்சபைபோன்ற அனேக சபைகள் இத்தென்னாடு எங்கும் தழைக்கப்பெற்றால், நாம் எண்ணமிடுங் காரியமெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனி யாகும். அனேகம் காரியங்களை முன்னிட்டு அனேகம் சபைகள் கூடுகின்றார்கள். அவைகளில், சில தழைக்கின்றன, சில இருந்தவிடந் தெரியாமல் அதோகதியாய்ப்போகின்றன. சபையோர் மனமும் செய்கையும் காலத்தோடு ஒத்துக்கூடினால், சபை ஆழவேரூன்றி, அகலக்கிளைவிட்டு, ஓங்கியுயர்ந்து உல்லாசமாய் வளரும். அன்னவர் மனமிரண்டுபட்டு, வருத்தமான வேலைநேர்ந்து வரும்போது, 'சட்டி சுட்டது, கை விட்டது' என்று சலித்தால், முயற்சி குன்றி, வலியற்று, சபை அடியோடே சாயும். ஆகையால், கனநேசர்களே, தெய்வ கிருபையாலும், நாம் செய்த தவத்தினாலும் இங்கு சேர்ந்த இத்திருவனந்தைத் தமிழ் பயில் சங்கமாகிய பசுஞ்செடியை, நாம் ஒவ்வொருவரும் தண்ணிய நீராகிய மன ஒற்றுமையால், எந்நேரமும் ஆதரித்து, மேன்மேலும் தழைத்து வளரச்செய்து, கேட்போர்க்கு இன்பம் பழுத்து, கூடியிருப்போருக்கு அறிவென்னும் குளிர்நிழலைக் கொடுக்கும்படி செய்ய முயலுவீர்களென்று, அனந்தரம் பிரார்த்தித்துக் கொண்டு, இன்று நான் மேற்கொண்ட விஷயத்தைக்குறித்து என் சிற்றறிவில் தோன்றிய சில மெய்ம்மொழிகளை இந்தச் சபைக்குக் காணிக்கை யாக்குகிறேன். அதைப் பொறுமையுடன் கேட்பீர்களாக:—

தமிழ் மொழியை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்களை எடுத்துக் கூறுமுன், அப்படிச் செய்வது இக்காலத்தில் அவசியமோ, இல்லையோ என்ற சந்தேகம் இங்கொருவருக்கும் தோன்றவில்லையாயினும், பிரசங்கமுறையில் அதைப் பற்றி விவகரிப்பது பொருந்தாத ஒன்றன்று. ஆகவே, அதைப்பற்றிக் கவனிக்கும்போது, ஆதியில், தமிழென்னும் இனிய மொழி இத்தென்னிந்தியாவிலுள்ள எல்லோரும் வீட்டிலும், நாட்டிலும் அநாதிகாலமாய் வழங்கிவந்ததும், இப்போது வழங்கி வருவதுமான நம் தாய் பாஷையென்பது சொல்லாமலே விளங்கும். ஸம்ஸ்கிருதம் முதலியபாஷைகள் பூர்வகாலத்தில், விசேஷமாய் வடஇந்தியாவிலும் சிறுபான்மை தென்னிந்தியாவிலும் சிறந்து வழங்கிவந்திருந்தும், அது எத்தனையோ காலத்திற்கு

முன் யாது காரணத்தாலோ பேசும்பாஷையாயிருந்த வாழ்வு அகன்றது. அது எவ்வளவோ பெருமையுடையதாயிருந்தும், அது இப்போது அம்மொழியிற் கல்விபயின்ற பண்டிதர்களிடம் மட்டுமே சிறுபான்மை வழக்கத்திலிருப்பதே தவிர, வீட்டிலும் வெளியிடத்தும் உலாவி நிலைபெறும் தன்மையதாயில்லை. இது மிகவும் விசனிக்கத் தக்கதே. இத்தென்மொழியோ, அப்படியின்றி, முற்காலத்தைப் போல், இப்பொழுதும் ஜனங்களுக்குத் தாய் பாஷையாகவே இருக்கின்றது. ஒரு பெரியவர் சொல்லியதுபோல் "நம்மைப்பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ், நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ்." எத்தனைதான் அங்கிலேயம் முதலிய அன்னிய பாஷைகளைப் படித்தாலும், வீட்டில்வந்தால், நமக்குத் தமிழன்றி வேறொன்றுக்கும் இடமில்லை. மறுபாஷை கற்பது, கடலைக்காணப்போவதுபோல், பார்ப்பதற்கேயன்றி அநுபவிப்பதற்கல்ல. கடல்வெள்ளம் பார்க்க எத்தனை அழகாயிருந்தாலும், அதன் உப்பு அதை விட்டு ஒருபோதும் போகாது. எப்போதும் கடற்கரையிலிருக்கலாமென்றாலோ, அதுவும் முடியாது. நாம் உண்டு, உடுத்து, உறங்கி, உற்சாகம் கொள்ள வேண்டுமானால் வீட்டுக்கு வரவேண்டும். நாடுசுற்றியும், "திரைகடலோடியும்," தேடிய பொருளைக் கொண்டு, பழபடி உள்ளக்களிப்புடன் வீட்டுக்குத் திரும்புதல்போல, உண்மைத் தேசாபிமானிகள், அந்நிய பாஷைகள் இப்போது எவ்வளவுதான் சிறப்புற்றிருந்தாலும், அதில் எவ்வளவு அறிவாகிய பொருளடங்கியிருந்தாலும், அதில் அவர் எவ்வளவு விற்பத்தியடைந்த நிபுணராயிருந்தாலும், அவ்வறிவையெல்லாங்கொண்டே தங்கள் சுயபாஷையை முன்னுக்குக் கொண்டு வருபவரே யொழிய, அதைப் பழமையென இகழ்ந்து கைவிடுவாரல்லர். அப்படிக் கைவிடுவது, உலகத்திலுள்ள பலநூறு தேசங்களில், உலகமுண்டான காலந்தொட்டு, ஒரு தேசத்திலும், ஒருகாலத்திலும் ஈ எறும்புதொட்டு ஒருஜாதியிலும் நடந்ததாயில்லை. ஆகையால் இப்போது தமிழ்மொழி நம் தாய்பாஷையாயிருப்பதனாலேயே அதை அபிவிர்த்தி செய்வது அவசியமேயென்று கடைப்பிடிக்கலாம்.

இரண்டாவது, இத்தமிழ்ப் பாஷையே விர்த்தியடையத்தக்க அவ்வளவு [illegible] பாஷையோ, அன்றோ, என்று பார்க்குங்கால், இவ்விஷயத்தில் அதன் சிறப்பும் பெருமையும் இவ்வளவு அவ்வளவு என்று வரையறுக்க முடியாது. தமிழ் என்னும் மொழிக்கு இன்பம் என்னும் பொருள் படுவதனாலேயே, அப்பாஷையைப் பேசுவோர்க்கு அது விளைவிக்கக்கூடிய இன்பத்தின் அளவை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். அன்றியும், இப்பாஷையில், அநாதிகாலந்தொட்டு, பற்பல விஷயங்களைப் பற்றி அரிய பெரிய வித்வான்கள், தங்கள் அறிவிற்றோன்றிய உண்மை மொழிகளைச் சேமித்து வைத்த பெட்டகங்களுக்கு ஒப்பான திவ்ய கிரந்தங்களின் தொகையும், அவைகளிலடங்கிய மாதுரிய சாதுரியங்களும், உண்மைக் கருத்துகளும் எடுத்துரைக்கப் போனால், அவை சொல்லிலும் அடங்காது, ஏட்டிலும் அடங்காது, எண்ணிலுமாகாது, மற்றெவராலுமாகாது. இதனால், அது எவ்வளவு விரிவும் அமைப்பும் உடைய பாஷை யென்று பட்டப்பகல் வெட்டவெளிச்சமாகத்தெரியும். ஸம்ஸ்கிருதத்துடன் தோழமையுற்றுச் சேர,சோழ,பாண்டிய அரசர்களால் தொன்று தொட்டு ஆதரிக்கப்பட்டு, மூன்று மகாசங்கங்களில்கூடிய மகாவித்வான்களாலும் ஔவை, திருவள்ளுவர், கம்பன், பட்டணத்தடிகள், தாயுமான சுவாமிகள்முதலான அளவிறந்தகவிச்சிங்கங்களாலும் வளர்ச்சியுற்று, நெடுங்காலம்சிறப்புற்றோங்கிவருகிறஇம்மகாபாஷை இக்காலத்தில்மட்டும் அபிவிர்த்தி செய்யத்தக்க தன்றென்று வெற்றுரை பிதற்றுவோர், (இக்கடல்சூழ்ந்த உலகத்திலுண்டெனில்,) அவர் பித்தராயிருப்பார் போலும்! அப்படிச்சிந்தையற்றுப்பிதற்றித்திரியும்பேதைகளைப்பற்றி இங்கு எடுத்துக் கூறுவதற்கு எவ்வாற்றானும் காலம் நெருங்கவில்லை. ஆகவே, தமிழ்மொழி, முன் பெரியோர்களால் ஆதரிக்கப்பட்டுச் சிறப்புற்று வந்ததுபோல், இக்காலத்திலும், இக்காலத்துப் பெரியோர்களாலும் சாமான்னியராலும், தங்களாலாகுமட்டும் ஆதரிக்கத்தக்கபாஷையேயென்று இதனால்விளங்கும்,

மூன்றாவது, இத்தமிழ்மொழி இதுவரைக்கும் எவ்வளவோ பெருமையுற்றிருந்தும், அது இப்போது பலகாரணங்களால் அ[illegible] [illegible] உறறு நோக்கினால், அதை நாம் இப்பொழுது எவ்வளவோவருந்திப் பாடுபட்டுக் கைதூக்கி நிலைபெறச்செய்ய வேண்டியது அவசியம். அது சுயபாஷையாயிருப்பதனாலும், நல்லபாஷையாயிருப்பதனாலும் அதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய அவசியத்தை இரட்டிக்கின்றது. கனவான்களே, இக்காலத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரையில் அங்கிலேயபாஷை கற்கப்போனது நமது சுயபாஷையைத் தலையெடுக்க வொட்டாமற் செய்கின்றது. அதில், தாம் கற்கும் கல்வி தினையளவேயாயினும், அதைப் பனையளவாகவெண்ணி, அங்கிலேயபாஷையே தங்கள் உடன்பிறப்புப் போலவும், மற்றச் சுயபாஷைகளைப் பேசினால், காஞ்சிரங் காயைச் சுவைப்பதுபோலக் கசப்பாயிருக்குமென்றும் பாவித்து, எப்போதும் இங்கிலிஷ் பேசுவதிலேயே, மகாவிகடன் சொன்னதுபோல, "சறுக்கிவிழுந்து மண்டையுடைந்தாலும்," அதைப் பெருமையென்று செருக்குவார் அனேகர், அனேகர்! இவர்களுக்கு என்றுதான் நல்லறிவு பிறந்து, சுயபாஷாபிமானம் முதலியன உண்டாகின்றனவோ, அது ஈசனுக்கேவெளிச்சம். அங்கிலேயபாஷை, முக்கியமாய், நம்மையாளும் நீதிபராகிய அங்கிலேய ராஜாங்கத்தார் பாஷையா யிருப்பதனாலும், அதில் அனேக அறிவு விளக்கத்திற்கேற்ற நூல்களிருக்கின்ற காரணத்தாலும், அன்றியும், இப்போது இந்தியாதேசம் முழுதும் ராஜாங்க விஷயமாகவும் மற்றும்சில துர்லபமான பொதுநோக்கங்கள் விஷயமாகவும், முற்காலஸம்ஸ்கிருதம் போல் பொதுபாஷையொன்று சிறுபான்மையில் அவசியமா யிருக்கின்றதாலும், நாம் இயன்ற அளவுக்கு அதைக் கற்கவேண்டியது அகத்தியந்தான், தடையில்லை. அந்தப்பெருதவியையும் பெரும்பாக்கியத்தையும் நான் வாக்காலிகழ்ந்து கைவிடுவேனல்லேன். ஆனாலும், நண்பர்களே, அதற்கு எவ்வளவு அவசியமிருந்தாலும் அதற்காகசுயபாஷையைக்கைகழுவவிடவேண்டுமோ? 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடலாமா'? 'குளிக்கப்போனவர் சேற்றைப்பூசிக் கொண்டு வருவது,' அழகோ? இப்படிச் சொல்லுவதனால் நான் [illegible]யம்படித்த நன்றியை மறந்து விட்டேனென்று சபையோர் தப்பெண்ணங் கொள்ளக் கூடாதென்று தாழ்மையாய் எச்சரிக்கை செய்துகொள்ளுகிறேன். இல்லை, இல்லை. யார்மறந்தாலும் அதை நான் மறவேன். ஏனெனில், அவ்வங்கிலேயமின்றி நான் இப்போது இவ்வாறு எடுத்துரைக்கத் துணிவு பெறமாட்டேன். அவ்வங்கிலேயம் முன்இருந்த நிலையும் அது காலாந்திரத்தில், அத்தேசத்தோருடைய முயற்சியினால் வளர்ச்சியுற்று, இப்போதிருக்கின்ற அற்புத நிலையும், பார்த்த பயனன்றோ, இப்போது என்னை இம்மொழிகள் சொல்லத் தூண்டியது? மேலும், எவ்வளவுதான் மற்றொரு பாஷையைப் படித்தாலும் அதனால் நம்முடைய சுயபாஷையைக் கைவிடக்கூடாதென்ற உட்கோளுக்கு அங்கிலேயரே சாட்சி பகர்வார்கள். அதெப்படியென்றால், நம்மை இப்போது அங்கிலேயர் ஆண்டுவருவதுபோல முன் அவர்களையே 'நார்மன்ஸ்' என்னும்ஜாதியார் அடக்கியாண்டு வந்தபோது, அவர் அங்கிலேயநாட்டில் 'நார்மன்' பாஷையை நிலைநிறுத்தப் பார்த்தும் முடியாமல், ராஜாங்க பாஷையுங்கூட அங்கிலேயமாய்த்தான் இருக்க வேண்டுமென்று, அங்கிலேய ஜனங்கள் தமது சுதேசாபிமானத்தாலும், ஊக்கத்தாலும், ஒற்றுமையாலும் ஒரேபிடியாய்க் கடைப்பிடித்துச் சாதிக்கவில்லையா? முன்னமே நமக்குச் சுயபாஷாபிமானம் இருக்கவேண்டியதுபோக, நம்மையாளும் பெரியவர்களே, நமக்கு இவ்விதமாயும், இப்போது நேரிட்டு அங்கங்கே சொல்லியும், புத்தி புகட்டிவரும்போதும் அதைக்கேளாமல், "சுயபாஷை மாண்டாலும் நமக்கென்ன" "எல்லாம் அங்கிலேயமாய்ப் போனாலும் வருங்குறையென்ன" என்று ஏமாறியிருக்கத் தலைவிதியோ? ஆகையால், கனவான்களே, இவ்வெல்லாக் காரணங்களாலும், நம்முடைய பாஷையை, எவ்விதத்திலும், எல்லாவிதத்திலும், முன்னுக்குக்கொண்டு வருவதற்கு இதுவே சமயம்! நம் துரைத்தனத்தாருடைய கருணையும் நீதியு மமைந்த ஆளுகையிலேயே இதை நாம் சாதித்துக் கொள்ளாவிட்டால்

பின் எப்போது சாதித்துக்கொள்ளுகிறது? காற்றுள்ளபோதே யன்றோ தூற்றிக்கொள்ள வேண்டும்? மேல்வருங்கதி யின்னபடி என்றதை யாராலெடுத்துரைக்க வசமாகும்? நாம் எதையும் உண்மையாய், திண்மையாய், ஓயாமற் கேட்டால், அதற்கு அங்கிலேயர் கருணையோடிசைந்து, நமக்கு அனுகூலம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். கல்விச்சாலைகளில் சுயபாஷைகளை இப்போதைப்போல் "சிரட்டைநீரைக்கொண்டு சமுத்திரம் இன்னபடி" என்பது போலவன்றி ஏராளமாய்ச்சொல்லுவிக்கும் அவசியத்தை நாம் உண்மையோடு குறையிரந்து கொண்டால், அந்த அபேக்ஷை நடக்காத தொன்றன்று. இந்தப்படி நம் சுயபாஷைகள் கைதாழ்ந்து வருவதற்கு அங்கிலேயப் பயிற்சியே ஒருகாரணமாயிருந்தும், அதுவே இரண்டுகாரணங்களாகத் தீர்கின்றது. அதுஎப்படியென்னில், நம்மவர் அங்கிலேயம் படிப்பதே சுயபாஷைக்குச் சற்று தளர்ச்சியைக் கொடுப்பதுடன் இங்கிலீஷ்படித்த நம்மவர் சுயபாஷையை மறந்தோ, அல்லது, வேண்டுமென்றோ, அல்லது, சுயபாஷையை யறியாமலிருப்பதனால் அத்தனைக்கும் அங்கிலேயம் பாடமேறியிருக்குமென்ற பொய்யான அவஸ்தைபாராட்டியோ, அல்லது, அங்கிலேயம்படித்த முதிர்ச்சியில் தங்கள் வாழ்வு அதற்கே போதுமானதாய் மற்றொன்றுக்கு நேரமில்லையென்ற வெறுஞ்சாக்குச் சொல்லியோ, அதைக் கைவிடுவதனால், அதற்குக் கடைசியாக அவர்களிடமாய் வரக்கூடிய ஒருசகாயமும் அற்றுப்போகின்றது. இவ்விரண்டுகாரணங்களும் போதாமல் அங்கிலேயத்தில் யாதொரு சம்பந்தமுமின்றி, பழமையே பெரிது, இப்போது நடக்கிறதெல்லாம் கலியின் சேஷ்டையென்று வாளாவிருக்கும் கர்னாடகருடைய (விலக்குகளொழிவாக) சிற்றறிவும், குறுகியஎண்ணமும், பொதுநலநோக்கக்குறைவும், சோம்பலும்சேரவே, சுயபாஷைத் தளர்ச்சிக்கு மூன்றாவது காரணம்பிறந்து, சுயபாஷை பாடையேறும் நிலைமையில்வந்து விடுகிறது. இத்தனை இடையூறுகளின் மத்தியில், இன்று இங்கு கூடியகனவான்களைப்போன்ற பொதுநலப்பிரியர்கள் சுயபாஷைகளை (இவ்விடத்தில் தமிழை) முன்னுக்குக் கொண்டுவர, எவ்வளவு ஊக்கத்துடனும் உறுதியுடனும் உழைக்க வேண்டியதென்று தானேவிளங்கும்.

இந்தப்படியாக, தமிழ் பாஷையை அபிவிர்த்திசெய்யவேண்டியது அவசியமென்ற மூன்றுகாரணங்கள் வகுத்துக்காட்டினேன். அவை யாவன:—

முதலாவது, தமிழ் நம் தாய்பாஷையாயிருப்பதனாலே,

இரண்டாவது, தமிழ்மொழி, விர்த்தி செய்வதற்கு ஏற்றபாஷையாயிருப்பதினாலே,

மூன்றாவது, அது, பலகாரணங்களால், தற்காலம் கைதாழ்ந்து வருவதனாலே.

இது நிற்க, இனித் தமிழ் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள் இன்னவையென்று, எனக்குத்தோன்றிய மட்டும் எடுத்துக்கூறுவேன்.

(இன்னும்வரும்)

தி. லக்ஷ்மணபிள்ளை.

அங்கிலேயரின் குணகுணங்கள்.

அங்கிலேயர் நமது தேசத்தைக் கைப்பற்றியாளத்தொடங்கி சுமார் ௧௦௦-வருஷங்களாகின்றன. சென்ற ௫௦-வருஷகாலமாக இத்தேசத்தில் உத்தியோகம் காரணமாகவும், வர்த்தகம் காரணமாகவும், இன்னும் பல ஜீவனவகை காரணமாகவும் இங்குவந்து வசிக்கும் ஐரோப்பியர்தொகை ஏராளமானதென்றே சொல்லத்தகும். அப்படியிருந்தும், அவர்கள் நம்மோடும், நாம் அவர்களோடும் தங்கு தடையின்றித் தாராளமாய்க் கலந்து பழகுவது சிறிதுமின்மையால், இரு தேசத்தாரும் ௨௦, ௩௦-வருஷகாலம் வரையில் ஒரே தேசத்தில் ஒரே இடத்தில் வசித்துக்கொண்டிருந்த போதிலும், ஒருவர் மற்றொருவருடைய குணகுணங்களை உள்ளபடியறியச் சிறிதும் வகையின்றிப் போய்விட்டது. இதனால் இருஜாதியாரும் இத்தேசத்தில் என்றென்றைக்கும் அந்நியர்களாகவேயிருந்து ஜீவித்து வருகிறார்கள். நாம் அங்கிலேயஜாதியாருடைய குணகுணங்களை யுள்ளபடியறியவேண்டுமானால், அவர்கள் சொந்ததேசத்திற்குச் சென்று அவர்கள் மத்தியில் வசித்

துக்கொண்டு அவர்களோடு கலந்து பழகிவரவேண்டும். அங்கிலேய ஜாதியாருடைய பிரபல்லியமான ஒரு குணமென்னவென்றால், அவர்கள் எப்போதும் அந்நியர்களைக் கண்டால் எளிதில் அவர்களோடு கலந்து பேசாமல் மௌனம் சாதித்து, அவ்வந்நியர்களை நெருங்காமல் ஒதுங்கிநிற்பதாம். இந்த ஓரிக்குணம் அந்நிய தேசத்திலிருக்கும் போதும், அந்நியர்கள், பரிச்சியமில்லாதவர்களிவர்களைக் கண்டபோதும் மட்டும் வருகிறதேயன்றி, தங்கள் சொந்த தேசத்திலும் தங்களுக்குத் தெரிந்தவர்கள் பழகினவர்களைக் கண்டவிடத்தும் வருகிறதில்லை. அப்பொழுது அவர்கள் வெகு சல்லாபமாயிருந்து தங்களுக்கு இயற்கையான குணங்களை எல்லாம் ஒளிக்காது காட்டி யொழுகுவார்கள். இது அவர்களுடைய ஜாதிக்கே இயல்பான குணமாயிருத்தலால் பொதுவாய் அவர்களுடைய குணகுணங்களை யறிந்துகொள்ள நாம் அவர்களோடு முதலில் நெருங்கிப் பழகவேண்டும். அப்படிக்கில்லாமல் தூர நின்று பார்த்தால் அவர்கள் குணகுணங்கள் உள்ளபடி நமக்குச் சிறிதும் விளங்காது; அவர்களைப் பற்றி நம் புத்திக்குப்படும் அபிப்பிராயங்களெல்லாம் தப்பாயிருக்கும். இத்தேசத்தில் இருஜாதியாரும் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழக வகையின்றி, தூரத்திலிருந்தபடியே ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரைப்பற்றி மதிக்க முயல்வதால், இரு ஜாதியாரும் ஒருவரைப் பற்றியொருவர் வீணே தப்பபிப்பிராயங்கள் கொண்டு ஆளுவோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் அதிக அனுதாபமின்றி யிருக்கவும், சில சமயங்களில் ஒருவரை யொருவர் தூஷித்துத் தூற்றவும் ஹேது உண்டாகிறது.

இதுநிற்க, நாம் அங்கிலேயரின் குணகுணங்களை யுள்ளபடி யறியவேண்டுமானால், அவர்கள் தேசத்திற்குச் சென்று அவர்களோடு கலந்து பழகியே யறியவேண்டுமென்று சொன்னோம். அப்படி அத்தேசத்துக்குப் போய்ப் பார்த்து வரும் பாக்கியம் நம் தேசத்தார் எல்லோருக்கும் கொடுத்து வைக்கப்படவில்லை. நம் தேசத்தவரில் கற்றுத்தேர்ந்து கைப்பொருளுள்ளவர்களும் அத்தேசத்துக் குளிர் பனிக்கும், இத்தேசத்துக் குருட்டாசாரங்களுக்கும் பயந்து சமுத்திரத்தைக் கடந்து போக அஞ்சி நிற்கிறார்கள். இவ் விடையூறுகளுக்குத் துணிந்து அத்தேசத்துக்குப்போய்வரும் பாக்கியம்பெற்ற நம் தேசத்தார் சிலர், அவர்கள் நடுவேயிருந்து பழகிய பின், அவர்களைப்பற்றிக்கொள்ளு மபிப்பிராயங்கள், நாமித்தேசத்திலிருந்து அவர்களைப் பற்றிக்கொள்ளும் அபிப்பிராயங்களைவிட மேலானவையாகவேயிருக்கின்றன. ஆகையால் நம்மவர்களிலே இங்கிலாந்துக்குப் போய் அங்கிலேயரோடு நெருங்கிப் பழகிவந்தவர்கள் அவர்களைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள்கிறார்களென்று சற்று விசாரிப்பது ஒக்கும். இந்த விசாரம்செய்து நாம் ஆய்ந்து தேறும் விஷயங்களையும் அபிப்பிராயங்களையும் சமயம் நேர்ந்துழி இப்பத்திரிகையில் வெளியிட்டுவருவோம்.

இப்பொழுது இது விஷயமாய் நாம் ஆய்ந்தறிந்த ஒரு புத்தகத்தைக்குறித்துப்பேசுவோம். நமது தேசத்தவரில் ஒருவரும் பெங்காளவாசியுமாகிய பாபு டி. என். முகர்ஜி யவர்கள் ௧௮௮௬-ம் ௵ லண்டனில் வைக்கப்பட்ட பெரிய பொருட்காக்ஷி சாலைக்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட காக்ஷிப்பொருள்களுடன் இத்தேசத்துக்குப் பிரதிநிதியாக இந்தியா கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்டுச் சென்றார். அவர் இத்தேசத்தை விட்டுச் சென்று இங்கிலாந்தில் ௮-மாசகாலம் தங்கியிருந்து, அத்தேசத்தாருடன் ஒட்டியுறவாடி அவ்விடத்துள்ள பல விசேஷங்களையும் பார்த்துக்கொண்டு, ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் சிலவற்றையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு, இந்தியா வந்து சேர்ந்தார். அவர் இத்தேசத்துக்குத் திரும்பிவந்தும் ஆங்கிலேய தேசத்திலும் ஐரோப்பாவிலும் அவர் பார்த்தறிந்த விஷயங்களையும், அவ்விடத்து ஜனங்களைப்பற்றி யவருக்குப்பட்ட அபிப்பிராயங்களையும் காகிதத்தில் வரைந்து அச்சிட்டு, அவற்றை ஒரு புஸ்தகரூபமாய் வெளிப்படுத்தி யிருக்கிறார். அங்கிலேயருடைய குணகுணங்களையும், அவர்களுடைய தேச ஜன ஆசாரங்களையும், அவர்கள் குடித்தன ஏற்பாடுகளையும் பற்றி இவர் நோட்டம் செய்து அறிந்தபின் வெளிப்படுத்தியிருக்கும் விஷயங்கள் நம்மவர் கவனிக்கத் தக்கனவாக விருக்கின்றன.

“குணநாடிக் குற்றமுநாடி மிகைநாடி மிக்கக் கொளல்” என்னும் மூத்தோர் வாக்கியப்படி நம்மவர்கள் அவர்களிடத்திலுள்ள குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்தறிந்து இவ்விரண்டில் அவர்களிடத்து மிகுதியாயுள்ளது எது வென்று பார்ப்பார்களானால், குற்றத்திலும் குணமே மிகுந்திருக்கக் காணுவார்கள். நாம் அவர்கள் குணம் குற்றம் இரண்டையும் சரிசமமாக ஆராய்ந்து பார்க்கையில் குற்றமாயுள்ளதை விலக்கிக் குணமாயுள்ளதைக் கிரகித்துக் கொள்ள மனமுடையவர்களா யிருப்போமாயின், அவர்களிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் மிகவுளவெனக் காணப்படும். அப்பாடங்கள் இன்னவென்பதைப் பற்றி மேலே சொன்னவர் கண்டெழுதி யிருக்கும் அபிப்பிராயங்களைக் கொண்டு ஆராய்ந்து நம்மவர் புத்தி போதனைக்காகக் கீழே சில அம்சங்களை யெடுத்தெழுதுகிறோம்.

தன்னயமறுப்பு.

தன்னயமறுப்பு, அதாவது சுயநயம் பாராட்டாமை. இக்குணம், அங்கிலேயருக் குண்டென்று நாம் சொல்லவந்தால் இத்தேசத்தில் அவர்களை யறிந்தவர்கள் நம் வார்த்தையைச் சிறிதும் நம்பார்கள். ஆயினும் இக்குணம் அவர்களிடத்தில் அதிகமாயுண்டு. எவ்விதத்தில்? நிச்சயமாய்ப் பிறனொருவனுடைய நயத்தை நாடித் தன்னயத்தை மறக்கும் விதத்தில் அல்ல; அக்குணம் நமக்கேயுண்டு. அங்கிலேயர் சுயநயம் பாராட்டாதவர்களென்று பின்னெவ்வாறு சொல்லலாமெனிலோ, அவர்கள் தேசத்துக்குப்பொதுவாய் ஒரு நன்மை செய்யும் விஷயத்தில் அங்கிலேயரைப்போல் தன்னயம் பாராட்டாதவர்களுலகத்திலில்லை யென்றுணரத்தகும். ஒருவன் நித்தியப்படி அயலார் அந்நியரோடு பழகுவதில் என்ன தான் சுயகாரியப் புலியா யிருப்பினும், தன் தேசப்பொது விஷயமாய் ஒரு நன்மை செய்ய வேண்டுமென்று ஒரு காரியத்தை மேற் போட்டுக்கொண்டால், அது விஷயத்தில் தன்னுஸ்தியை எல்லாம் வேண்டுமானாலும் அடமாறிவிட்டு, [illegible] மேற்போட்டுக்கொண்ட காரியம் கைகூடினால் அதுவே ஒரு பெரிய கிதாப்பாக எண்ணி மனமுவந்து திருப்தியடைவான். இப்படித் தன் தேசக்ஷேமார்த்தம் தன்னயத்தைப் பாராட்டாமல்விட்டு, கடைசியில் கஷ்டகதியடைந்த தனவந்தர்கள், தேசோபகாரிகள் எத்தனையோ பேர்கள் அத்தேசத்திலிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கிராமத்திலும் அவரவர்கள் நிலைமைக்குத் தக்கபடி பொதுநலஞ் செய்துவரும் பரோபகாரிகள் எத்தனையோபேர்களிருக்கக் காணலாம். தமது ஆஸ்தியை எல்லாம் இழப்பதன்றி அவர்கள் மனம் வைத்துப் பரோபகாரம் செய்யும்வகையில் உயிரையும் பறிகொடுக்க வேண்டிவந்தால் அதற்கும் பின்னடையார்கள். உலகப்பிரசித்தியாய்ச் சரித்திரத்தில் பேர்போன *ஹாம்ப்டன், †காப்டன் இவர்களைப்போல அவரவர்கள் சக்திக்குத் தக்கனமட்டும் அவர்களிருக்குமூர்களில் அல்லது வசிக்குமிடங்களில் பரோபகார சிந்தையோடு பொதுநலமுயற்சி செய்து வருபவர்கள் அத்தேசத்தில் ஏராளமாய் உளர். இப்படிப்பட்டவர்கள் பொதுநல விஷயமாய்த் தன்னயம் பாராட்டாது பல கஷ்டங்களுக்கும் உள்பட்டு ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டால், அவர்கள் தாங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பற்றி பெருமை பேசிப் புகழ்ந்துகொள்வதில்லை. ஏனெனில், இவர்களைப்போல் தன்னஷ்டத்தைப்பாராமல் பொதுநலத்துக் குழைப்பவர்கள் அத்தேசத்தில் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். அவர்களுக்கு நடுவே ஒருவன் தான் செய்த நற்காரியத்தைப்பற்றிப் புகழ்ந்துகொள்ளும் புகழ்ச்சியென்னத்துக்காகும். நிர்வாண தேசத்திலல்லவோ கோவணங்கட்டினவன் நாகரீகனுவான். எல்லோரும்உடல்மறைய ஆடையுடுக்கும்தேசத்தில் ஒருவன் மட்டும் தான் உடைதரித்திருப்பதைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டால் அது என்னமாயிருக்கும். அப்படியேதான் அங்கிலேயதேசத்தில் பரோபகாரிகள் நிலைமையும். இப்படி அங்கிலேயரில் பெரும்பாலார் பொது ஜனக்ஷேமத்தைக்கூடியமட்டில் தங்கள்சொந்த க்ஷேமத்தை மறந்துழைத்துவரும் பெருந் தன்மையுடையவர்களாயிருப்பதாற்றான் அச்சாதி

* Hampden † Cobden

யார் உலகெங்கும் பிரக்கியாதி பெற்று இப்புவியில் மற்றெல்லாத் தேசத்தாரையும்விடக் கீர்த்திப்பிரதாபத்தில் மேன்மை பெற்றுச் சிறந்து வாழ்கிறார்கள்.

தரும சிந்தை.

இக்குணத்திலும் அவர்கள் முன்சொன்னது போலவே யிருப்பார்கள். அத்தேசத்தில் ஒருவன் என்ன ஐசுவரியவானானாலும், தன் வீட்டு வாசலில் பசி பொறாது வந்தவனுக்கு 'ஐயோ!' என்று இரங்கி அரைக்காசுங் கொடுக்க மாட்டான். இப்படிப்பட்டவர்களை நாம் கல்நெஞ்சுள்ள குரூரர்களென்றே கசந் துரைப்போம். தனியாக ஒருவனுக்குப் பிச்சை கொடுக்கச் சிறிதும் மனம் வராத இவர்கள், பாடசாலைகளுக்கென்றும், வைத்திய சாலைகளுக்கென்றும், விநோதசாலை, புத்தகசாலை முதலிய இன்னும் பொதுநலப் பிரயோசனமான ஸ்தாபனங்களுக்கென்றும் ஆயிரம் பதினாயிரமாகவும், லட்சம் பத்துலக்ஷமாகவும் கணக்கு வழக்கின்றிக் கொடுப்பார்கள். இப்படி லக்ஷக்கணக்காய்த் தர்மஞ் செய்கிற ஒருவனிடத்தில் தெருவில் போகும் பிச்சைக்காரன் எவனாவது "ஐயா, ஒரு காசு" என்று கையை நீட்டினால் அவனுக்கு அரைக்காசும் கொடுக்காதொழிவதோடு அவனைப்பிடித்து உடனே போலீசாரிடம் ஒப்புவித்து விடுவான். இதற்கெல்லாம் காரணமென்னவெனில், அங்கிலேயர் எப்போதும் எல்லா விஷயத்திலும் ஒரு நியமம் ஏற்படுத்திக்கொண்டு, அனுஷ்டானத்தில் அந்த நியமந் தவறாது நடந்து கொள்ளுபவர்கள். பிச்சை கொடுக்கட்டும், அல்லது ஒரு விருந்து செய்யட்டும், அல்லது வேடிக்கை செய்யட்டும், அல்லது வேறு என்னதான் செய்யட்டும் எல்லாவற்றிற்கும் அததற்கேற்ற நியமம் ஒன்றுண்டு. காரியத்தில் என்னகேடு வருவதாயினும் அந் நியமம் தவறாது நடந்துகொள்ளப் பார்ப்பார்கள். நம்மிடத்தில் அந்த ஏற்பாடு சுத்தமாகவில்லை. பிச்சை பாத்திர மறிந்திட வேண்டுமென்பது அவர்களுடைய கொள்கையாக விருப்பதுடன் நம்முடைய சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அக்கொள்கைப்படி அவா கொள்கிறார்கள். நாமோ பிச்சை யிடும் பொழுதும், மற்றப்படி வேறு தான தர்மம் செய்யும் பொழுதும் அக்கொள்கையை மனதில வைத்துச் சிறிதும் நடப்பதில்லை. நாம் பாத்திரமறிந்து பிச்சை கொடுக்காமையால் தினம் எத்தனையோ அபாத்திரமானவர்களுக்குப் பிச்சை கொடுத்து, தேசத்தில் வீணாகச் சோம்பேறித்தனத்தை விருத்தி செய்கிறோம். நாம் இப்படி அபாத்திரர்களுக்குக் கொடுக்கும் பிச்சையால் நமக்கு தருமம் விளையுமென்று வீணாய் மனோராச்சியம் செய்து கொள்கிறோம். வாஸ்தவத்தில் இப்படி நாம்கொடுக்கும் பிச்சையெல்லாம் உற்றுப்பார்க்கப் போனால் "காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக் கொள்வது" போல பாபத்தை விலைக்கு வாங்குவதற்குச் சமானமே யொழியவேறில்லை. அங்கிலேயர் செய்யும் தருமமெல்லாம் பொதுநலத்தை நாடிச்செய்து வருகிறார்கள். ஒருநாழிகை வேலை செய்யத் தக்கவனுக்கு நாம் ஒருகாசு பிச்சை கொடுத்தால் அந்தக்காசைக்கொண்டு அவன் பிழைத்துப் போகிறான். அவன் செய்யக்கூடிய ஒருநாழிகை வேலை தேசத்துக்குப் பயன் விளைக்காது விருதாவில் தானே போகிறது. இப்படி ஒருகாசு தருமம் கொடுக்கத் தக்கவர்களெல்லாம் தங்களாலான தொகையை ஒருங்குசேர்த்து, வயிற்றுக்கின்றி வருந்தப்படும் ஏழைகளையும் அப்படியே ஓரிடத்தில் கூட்டி, அவ்வேழைகளில் ஆணோ, பெண்ணோ அவரவர்கள் சக்திக்குத் தக்கபடி அவர்களாலாகும் வேலையை வாங்கிக் கொண்டு, அத்தொகையை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் அது, எல்லாருக்கும் எவ்வளவு சாதகம் விளைப்பதாயிருக்கும் யோசித்துப் பாருங்கள்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்லியின்னும் விளங்கவைப்போம். நமது குக்கிராமங்களில் தினந்தோறும் பொழுது விடிந்தது முதல் உச்சி நேரம்வரையில் எத்தனை தடியர்கள் பிச்சைக்குவருகிறார்கள். இவர்களில் பாம்பாட்டிகளென்றும், குடுகுடுப்பாண்டிகளென்றும், கல்லுளிமங்கன்களென்றும் வருகிறவர்கள் நல்ல கொட்டாப்புளித்தடியர்கள்; ஒவ்வொருவனும் ஓ-ஆள் வேலை ஒருமிக்கச் செய்வான். கிராமத்திலன்ன [illegible] வீட்டுக்காரரும் இவர்களுக்கு ஒரு பிடியரிசி போடுகிறார்கள். இப்படி ஒருநாளைக்குக் குறைந்தது பத்துப் பேர்கள் பிச்சைக்குவந்தால் ௧௦-ப்பிடி யரிசியாகிறது. ஒரு கிராமத்தில் சுமார் ௧௦௦-வீடுகளிருக்குமானால் அக்கிராமத்தார் மொத்தத்தில் ஒரு நாளைக்குச் செய்யும் தர்மம் நாம் மேலே சொல்லி வந்த கணக்கையே வைத்துக் கொண்டு பார்த்தால் நூற்றுப்பத்து=ஆயிரம் பிடி அரிசியாகிறது. ஒரு ஆழாக்குக்கு ௫-பிடி வைத்துப்பார்த்தால், ௧,௦௦௦-பிடி அரிசியும் குறைந்தது ௨௫-படி யரிசி யாகிறது. இந்த கிராமத்தார் தினந்தோறும் ௨௫-படி யரிசி தருமத்தில் செலவழிக்கிறார்கள். இந்த ௨௫-படி யரிசியையும் பிடிப்பிடியாய் பெறுகிறவர்களோ வெறுந்தடியன்களா யிருக்கிறார்கள். இத்தடியர்கள், வீட்டுக்குப் பிடியாகவாங்கித் தின்று விட்டு, கொட்டாவி விட்டுத் தூங்குகிறார்கள்; அல்லது திருட்டுப் புரட்டு மோசம் முதலிய குற்றங்கள் செய்து இன்னும் வயிறுவளர்க்கப் பார்க்கிறார்கள். இந்த ௧௦௦-வீட்டுக்காரர்களும் வீட்டுக்கு ஒருபிடியரிசியாகக் கண்டபடி விருதாவில் கொடுப்பது மொத்தமாய்ச் சேரும் ௨௫-படி அரிசியை ஒருங்கு சேர்த்து (அக்கிராமத்துக்குப் பொதுப் பிரயோசனமான ஒரு வேலை யாரம்பித்து) பிச்சைக்குவரும் தடியர்களிடத்தில் நாலுமணிநேரம் வேலைவாங்கிக் கொண்டு ஆளுக்கு ஒருபடியரிசி கூலியாகக் கொடுத்துவந்தால் ஒரு நாளைக்கு பத்துப் பேர்களிடத்தில் ௮-மணி நேரத்துக்குமேல் வேலை வாங்கலாம். இந்தவேலை வீணாகத் தானே போகிறது. இவ் வேலையை வீணாகப் போக விடுவதைக் காட்டிலும் இவர்களிடத்தில் நாம் சொன்னபடி வேலை வாங்கி கிராமத்துக்குப் பொதுவான பாடசாலைக்கு இருப்பிடமாக ஒரு கட்டடம் கட்டக்கூடாதா? அல்லது கிராமத்தார் ஒன்றுகூடிப் பொதுவிஷயத்தைப்பற்றிப் பேச ஒரு சாவடி கட்டக்கூடாதா? இன்னும் அவரவர்கள் புத்தி யுக்திக்குத் தோன்றியபடி கிராமத்துக்குப் பொதுப் பிரயோசனமான தோட்டம், நந்தவனம் முதலிய வேலைகள் எவ்வளவோ செய்துகொள்ளக் கூடாதா? கிராமத்தாரிடத்தில் ஒற்றுமையும் கட்டுப்பாடு மிருந்து, பொதுவிஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொண்டு அவற்றில் தமது புத்தியையும் காலத்தையும் செலவிடத்தக்க பொது நன்மை நாடிகளு மிருந்தால், இவையெல்லாம் தானே நடக்கும். இன்னும் எத்தனையோ உபகாரமான காரியங்களும் எளிதில் செய்து முடிக்கப்படும். நம்மவர்களுக்குள் ஒற்றுமை, கட்டுப்பாடு, பொதுநலத்துக் குழைக்கும் தன்மை இவையில்லாததினால் இப்படி எத்தனையோ பொருளும் காலமும் வேலையும் தக்கபடி உபயோகிக்கப்படாமல் விருதாவில் கழிந்துபோய், தேசத்தில் வறுமையும் சோம்பேறித்தனமும் மேலிட்டு வருகின்றன. இப்படி கண்மூடித்தனமாய் நாம் பிச்சையிட்டு வருவதினால் எத்தனையோ ஜனங்கள் வீண்காலப் போக்கு செய்து வயிறுவளர்த்து வருகிறார்கள். நாம் உதாரணமாக மேலே கணக்குப்போட்டுக் காட்டியதுபோல் இத்தேசத்தில் கண்மூடித்தனமாய் பிச்சையிடுவதால் இந்தியா முழுமைக்கும் ஒரு நாளைக்கு ௧௧-கோடி மணிநேரம் வீண்போகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தை வீண்போகவிடாமல், ஒரு நாளைக்கு இந்தியா முழுமையிலும் ௧௧-கோடி மணி நேரத்திலாகும் வேலை இச்சோம்பேறிகளிடத்திலிருந்து வாங்கப்பட்டு வந்தால் தேசக்ஷேமத்துக்கு அவசியமான கைத்தொழில்வேலைகள் எவ்வளவு நடந்துவரக் கூடும்; அதனால் இத்தேசம் நாளடைவில் எவ்வளவு விர்த்திக்குவரலாம், யோசித்துப்பாருங்கள். இதை எல்லாம் கணக்குப்பார்த்து நம் க்ஷேமவிர்த்திக் குபயோகப்படுத்திக் கொள்ளாமல் நம்தேசத்தார் க்ஷீணதிசை யடைந்து வருகிறார்கள், அங்கிலேயரும் அவர்களைப் போல் வளம்பெற்ற மற்ற ஐரோப்பியர் அமெரிக்கரும் இவைகளையெல்லாம் மனதில் வைத்து நுட்பமாய்க் கணக்குப் பார்த்து ஒரு காசானாலும், அரைமணி காலமானாலும் பயனின்றிக் கழியவிடாமல் பிரயோசனத்தையே நாடி உபயோகித்து வருவதால் அவர்கள் வரவர ஐசுவரியவிர்த்தி யடைந்து மேம்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். இதிலிருந்து நாம் தருமஞ் செய்வதில் அங்கிலேயரிடத்திலிருந்து கற்கும் பாடத்தை மனதில் வைத்து நடக்கவேண்டும்.

C. V. S.

சரித்திரம்.

இந்துதேசத்தின் பூர்வ ஸ்திதி.

ஒரு தேசத்தின் சரித்திரத்தை எழுதப்புகும் ஒவ்வொருவரும் அத்தேசத்தின் பூர்வஸ்திதியையும், அத்தேசத்தார் வர வர எப்படி விர்த்தியடைந்தார்கள் என்ற பற்பல விஷயங்களைப் பற்றியும் எழுதும்போது வாஸ்தவமாக உள்ளதை உள்ளபடி எழுதுவதற்கு அவசியமான சமாசாரம் கிடைப்பது அரிது. இக்காரணத்தால் சிலர் தங்கள் தங்கள் மனதிற்குத் தோற்றிய விதமாய் தற்கால சரித்திரத்தை வைத்து முற்காலத்திலிவ்விதமாய்த்தா னிருக்கவேண்டுமென்று யூகித்து எழுதுவார்கள். மற்றும் சிலர் அயல் தேசத்தவர்கள் அக்காலத்தில் என்ன ஸ்திதியிலிருந்தார்களென்று விசாரித்து அதே மாதிரியாக இவர்களு மிருக்கலா மென்று நினைத்து அப்படியே எழுதுகிறார்கள். இவ்விதமாய் எழுதப்பட்ட சரித்திரம் என்ன பிரயோஜனமாகும்? ஆனால் பூர்வத்தில் வசித்த ஜனங்கள் தங்கள் தங்கள் காரியாதிகளை எங்கேனும் எழுதி வைத்திருக்கிறார்களா? முதலில் எழுதுவது வாசிப்பது என்னும் விஷயங்களே அவர்களுக்குத் தெரியாதே! உலகத்தின் நாகரீகம் உயர்ந்து மிகுந்த காலத்திலல்லவோ ஜனங்கள் எழுதப்படிக்கவழி கண்டு பிடித்தார்கள். ஆகையால், மற்றெப்படி நமது தேசத்தின் பூர்வ சரித்திரத்தை அறிவது?

பூர்வத்தில் எழுதவாசிக்கத் தெரியாத காலத்தில் மனிதர் தங்களுக்குத் தெரிந்த காரியாதிகளைத் தங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவித்து, அப்பிள்ளைகள் பெரியவர்களானவுடன் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லி இவ்விதமாய் சமாசாரங்கள் தலைமுறை தத்துவமாய்த் தற்கால ஜனங்களுக்குத் தெரிகிறதுண்டு. அப்படித் தெரிந்த காரியங்களை மனிதர் எழுதவாசிக்கத் தெரிந்தவுடன் புஸ்தகமாக எழுதி வைப்பது சகஜம். அப்படி எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களை வைத்து இப்போது எழுதிவிடலாமல்லவோ? அனேக சாஸ்திரங்கள் நமது தேசத்தில் சமஸ்கிருத பாஷையில் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. புத்தி சாதுரியத்தில் சிறந்தவர்களென்று நமது முன்னோர்களை மெச்சும்படியாய் அனேக கிரந்தங்களை எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதியிருக்கும் சாஸ்திரங்களில் நமது தேசத்தின் சரித்திரத்தில் ஏதாவது ஒருபாகமெழுதப் பட்டிருக்கிறதா வென எங்குந் தேடியும் அகப்படவில்லை. 'இராஜதரங்கணி' என்னும் காஷ்மீர தேசத்தைக் குறித்து ஒரு சமஸ்கிருத பண்டிதர் எழுதியிருக்கும் சரித்திரம் அன்றி வேறு புஸ்தகங்க ளெங்குமில்லை. இதனால் நமது பூர்வீகர் சரித்திரமென்பதையே எழுதவில்லையோவென விசாரித்தால், அவர்கள் எழுதியே யிருப்பார்கள். ஆனால்நமது தேசத்தின்மேல் அடிக்கடி படையெடுத்துவந்த மகம்மதியர் முதலான அயல் தேசத்தவர்கள் அச்சரித்திர புஸ்தகங்களை ஹதமாக்கி விட்டார்களென்றே மதிக்க வேண்டியதாயிருக்கிறது. மற்ற விஷயங்களில் பாண்டித்தியமடைந்திருக்கும் நமது முன்னோர்கள் இவ்விஷயத்தில் மட்டும் முயற்சி செய்யா திருந்தார்களென்று எண்ண இடமில்லை.

இப்படி நமது தேசத்தின் சரித்திரத்தைப் பற்றிய கிரந்தங்கள் நம்மிடத்திலில்லாமற்போகவே, நமது பூர்வீக சரித்திரத்தைப் பற்றிய அறிவு நமக்குண்டாவதற்கு வேறுவழி யென்னவிருக்கிறது? இதைப்பற்றி யோசித்தால், நமது தேசத்துக்கு வியாபார விஷயமாகவும் பற்பல காரியமாகவும் வந்துபோன அன்னிய தேசத்தவர்கள் நம்மைப்பற்றி எழுதியிருக்கும் காரியாதிகளை நாம் சேர்த்து சரித்திரமாக எழுதவேண்டியதாயிருக்கிறது.

பூர்வீகர் என்றும்கௌரவமுடையவர் என்று பொருள்படும் ஆரியர் என்னும் ஓர் வகை ஜனங்கள் முதல் முதல் இந்தியாவுக்கு வடபாகங்களில் உற்பத்தியாய் நாளாவர்த்தியில் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்னும் நாலு பக்கங்களிலும் பரவி ஆங்காங்கு குடியேறினார்களென்பது ஓர் ஐதீகம். ஐரோப்பிய ஜாதியார் எல்லாரும் இவ்வகுப்பினர் தான். தற்கால ஹிந்துக்களும் இவ்வகுப்பினர் தான் என்று சொல்லும்படியாக நமது பூர்வீக பாஷையான சமஸ்கிருதத்தி லுள்ள வார்த்தைகளுக்கும், ஐரோப்பியரின் பூர்வபாஷைகளான 'லத்தீன்' 'கிரேக்' பாஷைகளிலுள்ள வார்த்தைகளுக்கு மிருக்கும் சம்பர்க்கத்தினால் வெளியாகும். இவ்விதமாக ஆரியர் இந்துதேசத்துக்கு முதல் முதல் வந்து குடியேறும்போது இவ்விடத்தில் ஓர் வகையான இராக்ஷதர் இருந்ததாக வெளியாகிறது. ஆரியரின் கூட்டமதிகமாகவே, அந்த இராக்ஷதர் மலைகளிலுங் காடுகளிலும்போய் வசித்தார்கள். அப்படி யிருந்தவர்கள் தற்கால மலைவாசிகளாகிய 'காண்டு'ஜாதியார் முதலானவர்களெனத் தெரியவருகிறது.

இவ்விதமாக முதல் முதல் இந்தியாவில்வந்து குடியேறின ஆரியர் எவ்வித ஜீவனம் செய்து பிழைத்தார்களென்றால், காட்டு மிருகங்களைப் பட்சித்தும், ஆட்டுமந்தைகளை வளர்த்தும், அப்பால் நிலத்தில் தற்செயலாய் முளைத்துக்காய்த்திருக்கும் அனேகவித கனிகளைப் புசித்தும், அப்பால் நிலத்தில் பற்பலவிதப் பயிரிட்டும் ஜீவித்தார்கள். பொதுவாக அவர்களைப் பற்றி இம்மட்டும் தான் சொல்ல இடமிருக்கிறது. அப்பால் அவர்கள் விர்த்தியானவிதமே இப்படிப்பட்டதென்று இப்போது அறியவழியில்லை. அனேக காலத்துக் கப்பால் அயல் தேசத்தவர்கள் நம்முடன் வந்து கலந்தபோது நாமிருந்த ஸ்திதியை யவர்கள் சொல்ல நமக்குத் தெரிந்த சரித்திரத்தை இனி யெழுதுவோம்.

மாதர்மஞ்சரி.

ஸாரா மார்ட்டின் சரித்திரம்.

o

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள."*—குறள்.

ஒரு பரோபகாரமான விஷயத்தின் பொருட்டு, நம்முடைய உதவியை, அவ்விஷயத்தில் முயற்சி செய்யும் ஒருவர் கோரும்பொழுது, "எனக்கு சாவகாசமில்லை" யென்றும், "நான் ஏழை" யென்றும், சொல்வதற்கு நாக்கு எழுவதை யறிந்திருக்கிறோம். ஆனால், உலகத்தை நம்மாற் கூடியமட்டும் விருத்தி செய்வதற்கு, காலசவகாசமும் பொருளும் அத்தியாவசியம் ஆனவைகளல்ல என்றும், அவை யில்லாமலே, ஒரு சத்காரியத்தை முடிக்க விரும்பினோர், தங்களால் இயன்றமட்டும் முயற்சிசெய்தால், சிறிதாயினும் பயனை அடைவார்களே யொழிய, இகழ்ச்சியை அடையமாட்டார்களென்றும், பின்வரும் சரித்திரத்தால் அறிந்துகொள்ளலாம்.

ஸாரா மார்ட்டினென்னும்பெண்மணி கிரேட் யார்மௌத் என்னும் பட்டணத்துக் கடுத்த கேயிஸ்டர் என்னும்கிராமத்தில், 1791-ம் வருஷத்தில் பிறந்தாள். அவள் உடுப்புகள் தைத்து விற்பதினால் கிடைக்கும் அற்ப இலாபத்தைக்கொண்டு ஜீவனஞ்செய்யும் ஏழையாயினும், ஆச்சரியப்படத் தக்க சிறந்த நன்மைகளுக்கும் விருத்திக்கும் காரணமாயிருந்தாள். அவள் முயற்சிசெய்தது சிறைச்சாலைகளின் நிலைமையை விருத்திசெய்யும்பொருட்டே. தானாகவே விரும்பிப்படித்தது தவிர வேறு கல்விப்பயிற்சி யில்லாதவளாயும், ஒருநாள் வேலைசெய்யாவிட்டால் அன்றை ஜீவனத்துக்கு வேறு வழி யில்லாதவளாயு மிருந்த இந்த ஏழைப்பெண், தன் சுயபுத்தியினாலும் இரக்கமுள்ள மனதினாலும் மாத்திரம் சிறைச்சாலைகளிலுள்ள தீங்குகளையும் துன்பங்களையும் கண்டு, அவைகளுக்காக மனம்நொந்து, அவைகளை நீக்கும்பொருட்டு ஏற்படுத்தின விலக்குகளைப் பற்றி யோசித்தால், ஆச்சரியமும் மனமகிழ்ச்சியும் உண்டாகின்றன. தன்னூர்ச் சிறைச்சாலையில் இவள் ஏற்படுத்தின ஏற்பாடுகளே, அவ்விஷயத்தை நன்குணர்ந்த பரோபகாரிகள், தத்துவ சாஸ்திரிகள், இராச்சியாதிகாரிகள் முதலியவர்களால், அங்கிலேய தேசமெங்கும் சிறைச்சாலைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஸாராமார்ட்டின் சிறைச்சாலைகளைப் போய்ப்பார்க்கத் தொடங்கினபொழுது, அவைகளில், குற்றவாளிகளின் குணத்தையும் புத்தியையும் விருத்திசெய்வதற்கான ஏற்பாடுகள் ஒன்று மில்லை. இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்கள், தேவதாவிஷயமான பிரசங்கங்கள், போதனைகள்,* ஒன்றும் அப்பொழுது கிடையாது. சாந்தகுணமுள்ள இச்சிறிய தையற்காரி இதையெல்லாம் மாற்றிவிட்டாள்.

ஒருபெண்பிள்ளை தன்குழந்தையை அடித்து மிருகத்தனமாக நடத்தினாள். அவளைச் சிறைச்சாலையில் அடைத்தார்கள். இரக்கத் துடனும், துக்கத் துடனும், அப்பெண்பிள்ளையைப் பார்க்கும் பொருட்டு, ஸாராமார்ட்டின் முதல் முதல் சிறைச்சாலைக்குப் போனாள். அவளுக்கு அப்பொழுது இருபத்தெட்டு வயது. ஒருவருடைய சிபாரிசுக் கடிதமு மின்றிச் சிறைச்சாலைக் கதவைத் தட்டினாள். யாரிடத்திலாவது தன் னெண்ணத்தை வெளியிட்டால், சிறந்த புத்தி யுள்ளவர்கள்போல், "நீ உன் வேலையைப்பார்; அந்தப் பெண் பிள்ளையின் துற்செய்கையைப் பற்றி உனக்கேன் கவலை" என்று போதிப்பார்களெனப் பயந்து, தன் நினைவை, கூடக்குடியிருந்த தன்பாட்டியாரிடத்திற்கூடச் சொல்லவில்லை. முதலில் சிறைச்சாலைக்குள் விடமாட்டோ மென்று சொல்லி விட்

---

* அருள் ஒழிந்த பொருளால் வருஞ் செல்வங்கள் இழிந்தாரிடத்தும் உளவாதலால், அருளால் வருஞ் செல்வமே செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது.

* இவையெல்லாம் இங்கிலாந்துதேசத்துச் சிறைச்சாலைகளிலும், இன்னும் சில தேசங்களிலுள்ள சிறைச்சாலைகளிலும் மாத்திரம் இருக்கின்றன, இந்தியாதேசத்தில் இல்லை. என்று வருமோ?

டார்கள். ஸாரா மறுபடியும்வேண்டிக்கொண்டாள். பிற்பாடு உள்ளே விட்டார்கள். அவள், குற்றவாளியாகிய பெண்பிள்ளைமுன் சென்றவுடன், அப்பெண்பிள்ளை "இங்கு என் வந்தாய்?" என்று கோபத்துடன் கேட்டாள். ஸாரா தன் இரக்கத்தையும், நல்ல எண்ணத்தையும் பற்றிச் சொன்னவுடன், அவளுக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. தன் செய்கை கெட்டதென்று உணர்ந்து, வெட்கத்தையும் விசனத்தையும் அடைந்து, அதற்குப் பின்பாவது தான் நல்லவழியில்நடப்பதற்கு உதவிசெய்யும் பொருட்டு ஸாராவை வேண்டிக்கொண்டாள். ஆந்தோ! எத்தனை ஆத்துமாக்கள் நல்லபுத்தி சொல்வாரின்றியும், சன்மார்க்கத்தைக் காட்டுவாரின்றியும், இரக்கப் படுவாரின்றியும் குற்றக் கடலில் ஆழ்ந்து மூழ்கிப் போகின்றன.

அந்நாள்முதல் தன்மரணம் வரை ஸாரா மார்டின் கிரேட்யார்மௌந் சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகளை நல்லவழிக்குத்திருப்பும்பொருட்டு உழைத்தாள். தையல்வேலையினால் தினம் முக்கால் ரூபாய் சம்பாதித்தாள். வாரத்தில் ஒருநாள் வேலையை விட்டு விட்டுக் குற்றவாளிகளுக்காக உழைக்கவும், மேலும் எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாள் அவர்கள் பொருட்டுக்காலத்தைச்செலவழிக்கவும் தீர்மானம் செய்துகொண்டு, அவர்களுக்கு எழுதவாசிக்கச்சொல்லிக் கொடுக்கத்தொடங்கி, தான் அவர்களுக்குப் புஸ்தகங்களை வாசிப்பதுமன்றி, கதைகளும் சொல்லிவந்தாள்.

அன்றியும், ஞாயிற்றுக்கிழமைதோறும் ஒருமித்துக்கூடி, மதவிஷயமான புஸ்தகங்களை வாசித்து, சுவாமியைத் துதித்து வணங்கும்படிக்கு ஏற்பாடு செய்து, தானும் அவர்களுடன் சேர்ந்து தொழுது வந்தாள். முதலில் அநேகர் "அதனாற் பிரயோசனமில்லை" யென்று சொன்னார்கள். அதற்கு ஸாரா "அதனால் எனக்குப் பிரயோசனமிருக்கிறது ; உங்களுக்கேன் இருக்கக்கூடாது? நான் அநுபவத்தினாற் பேசுகிறேன் ; நீங்கள் அப்படிப் பேசவில்லை," என்றுசொன்னாள். தான் அவர்களுக்கு மேல்அதிகாரியாக இருக்கவேண்டுமென்று அவள் சிறிதும் விரும்பவில்லை. தானும் அவர்களுடன் உழைத்தாளே தவிர வேறில்லை: அவர்களுக்குப் பக்தி விஷயமாய்ப் பிரசங்கித்து வந்தாள். குற்றவாளிகள் கூட அவள் பிரசங்கங்களை ஆவலுடனும் கவனிப்புடனும் கேட்டு மகிழ்ந்தார்கள். அவள் பேரிலிருந்த அன்பினால், அவள் சொன்னபடி செய்தார்கள். கொடிய பாதகர்களும் அவளிடத்தில் தௌஷ்டகமாய்ப் பேசத்துணியவில்லை.

பிற்பாடு, தண்டனை யடைந்தவர்கள் சோம்பலாயிராமல் வேலை செய்யும்படி தூண்ட நினைத்தாள். இரண்டு கனவான்கள் அவள் முயற்சியைக் கண்டு மகிழ்ந்து இருபது ரூபாய் கொடுத்தார்கள். அதை ஆவலுடன் பெற்றுக்கொண்டு, குழந்தைகள் உடுப்புகளுக்காகும் துணிகளை அப்பணத்தைக் கொடுத்து வாங்கி, மாதிரி உடுப்புகள் தன் சிநேகிதரிடத்திலிருந்து இரவல்வாங்கி, அவ்வுடுப்புகளைப்போல் துணிகளைத் தைக்கும்படி தண்டனையடைந்த பெண்பிள்ளைகளுக்குச் சொன்னாள். அப்படித் தைக்கப்பட்ட உடுப்புகளைவிற்று, கிடைத்த இலாபத்தை, வேலை செய்த பெண்பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். இவ்விதமாய் மொத்தத்தில் ஐயாயிரம் ரூபாய்க்கு உடுப்புகள் தைத்து விற்கப்பட்டன. இதனாலுண்டான பயன் இருவகைப்பட்டது. குற்றவாளிகள் வீண்பொழுது போக்காமல் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். அன்றியும், அவர்கள் விடுதலைபெற்று வெளியே போகும்பொழுது, ஜீவனத்தின் பொருட்டு பழையகுற்றங்களைச்செய்யும்படி நேரிடாமல், அடைபட்டிருந்த காலத்திற்செய்த வேலைகளாற் கிடைத்த இலாபப்பொருளை முதலாகக்கொண்டு, நாணயமாய்ப் பாடுபட்டுப் பிழைப்பதற்கும் இடமாயிற்று.

ஸாராமார்ட்டின் இவ்விஷயத்தை வெகுமுக்கியமென்று நினைத்தாள். விடுதலை யடைந்த பின்னும், "குற்றவாளி" யென்று மற்றவர்களால் இகழப்பட்டு விலக்கப்படுதலினாலும், ஒரு பக்கமும் வேலைகிடையாததினாலும், தரித்திரத்தின் சகிக்கமுடியாக்கொடுமையினாலும், மறுபடியும் குற்றத்தையே செய்தாயினும் பிழைக்க விரும்புபவர் அநேகர். இப்படிப் பட்டவர்களுக்கு ஸாரா பலவிதமாய் உதவிசெய்தாள். மற்றவர்களிடத்திற் சொல்லி அவர்களுக்கு வேலை ஏற்படுத்துவித்தாள்; அவர்களுக்குப் பழைய வேலைகளை வாங்கிக்கொடுத்தாள்; அவர்களுக்கு முதலில் வேண்டிய கலப்பை, மண்வெட்டி, கோடரி முதலிய ஆயுதங்கள் வாங்கும்பொருட்டு, கொஞ்சம் பணமும் தன் கையிலிருந்து கொடுத்தாள்.

பொறுமையுடன் அநேக வருஷங்களுக்கு உழைத்தபின், அவள் கீர்த்தியெங்கும் பரவிற்று. தன் பாட்டியார் மரணத்துக்குப்பின், அவள் கிராமத்தை விட்டுவிட்டு, கிரேட்யார்மௌந்பட்டணத்தில் இரண்டு அறைகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அங்கேயிருந்தாள், தன் பாட்டியார் விட்டுப்போன சொற்பவரும்படி தன் செலவுக்குப் போதாமற் போனாலும், தன் கொள்கையின் பேரிலுள்ள ஆசைப்பெருக்கால் தையல்வேலையை விட்டுவிட்டாள். கனவான்களனுப்பின கொடைப் பணங்களில், தன்சொந்தச் செலவுக்கென்று குறிப்பிட்டவையை மாத்திரம் தான் எடுத்துக்கொண்டு; மற்றவை யாவற்றையும் குற்றவாளிகளை நல்வழிக்குக்கொண்டுவருவதிலேயே செலவிட்டாள். அப்பட்டணத்தார் நன்றி யறிதலுடன்

அவளுக்குக் கொடுப்பதாகச் சொன்ன சம்பளத்தைத் தான் பெற்றுக்கொண்டால், குற்றவாளிகள் தன்னைக் கூலிக்காரியாக நினைத்து, சிறைச்சாலை அதிகாரிகளுடன் சேர்த்து, தனக்குப்பயந்து, அன்பை மறந்து விடுவார்களென் றெண்ணி, மறுத்து விட்டாள். 'சம்பளத்தை வாங்கிக்கொண்டு என்னமாய் முடிகிறது என்றுபார்' என்றோருக்கு, "நான் எதற்காக ஜீவிக்கிறேனோ அதற்குத் தீங்கு விளைக்கக்கூடிய சோதனை செய்வது, கத்தியின் கூர்மையைச் சோதிக்கும்பொருட்டு குழந்தையின் கழுத்தில் வைப்பதுபோலாகும்; எனக்குக்குறையொன்றுமில்லை" என்று பதிற்சொன்னாள்.

அடுத்த வருஷத்தில் அவள் வியாதிகளால் துன்பப்படுத்தப் பட்டாள். அப்பட்டணத்தார் சம்பளமாகவின்றி தங்களுக்குப் பேருதவி செய்தவளுக்கு இனாமாக, வருஷத்திற்கு 150 ரூபாய் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அவள் அதற்குப் பின் வெகுநாள் ஜீவிக்கவில்லை. அப்படியிருந்தும், தான் சாவதற்குச் சிலமாதங்களுக்கு முன் வரையும் தன் உழைப்பை நிறுத்தவில்லை. அவள் சாவதற்குச் சற்றுநேரத்துக்கு முன் "சுவாமிக்கு வந்தனம்! சுவாமிக்கு வந்தனம்!" என்று இருமுறைசொன்னாள். அவளை அவள் பிறந்த கேயிஸ்டர் கிராமத்திற் புதைத்தார்கள். கிரேட்யார்மௌத்பட்டணத்தார் அவள்பெயரைநிலைநிறுத்தும் பொருட்டுத் தங்கள் வேதக்கோவிலில் அவள் ஞாபகசின்னமாக ஓர் ஏற்பாடு செய்தார்கள். "பொருட்செல்வம்" நிறைந்த தனவான்கள் அநேகர் புகழின்றிப் பெயரின்றி மாண்டு போயிருக்கிறார்கள். "அருட்செல்வம்" நிறைந்த ஸாரா மார்ட்டின் என்னும் ஏழைத் தையற்காரியின் பெயர் எங்கும் புகழப்படுகின்றது.

பணமும் சவகாசமுமின்றி, மனவிருப்பத்துடனும் பொறுமையுடனுஞ் செய்யப்படும் காரியங்கள் 'பலதுளி பெருவெள்ளம்' ஆய்ப் பெருகுகின்றன. பொறுமை யிருந்தால் சிற்றுளியைக்கொண்டு பெரிய மலைகளையும் பெயர்த்து விடலாம்.

"மெய்*வருத்தம்பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்†
எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார், — செவ்வி
அருமையும்பாரார், அவமதிப்புங் கொள்ளார்,
கருமமே கண்ணாயினார்"

பேரேரீ.

சாவித்திரி சரித்திரம்.

— o —

முதலாவது அதிகாரம்.

என்பிறப்பையும் குழந்தைப்பருவத்தையும் பற்றி நான் பிற்பாடு கேள்வியுற்றவையைத்தான் கூறக்கூடும். அவையென்னவெனில், நான் திருநெல்வேலி ஜில்லாவில் கோவிந்தப்புரமென்னும்கிராமத்தில் சுப்பய்யருக்கும் இலக்ஷ்மியம்மாளுக்கும்முதற்புத்திரியாகவும்இரண்டாவதுகுழந்தையாகவும் பிறந்தேன். நான் பிறப்பதற்கு ஏழு வருஷங்களுக்கு முன்பாக என் தமையனாகிய கோபாலன் பிறந்தான். அவன் முதற்குமாரனானதினாலும், அவர்களுடைய கலியாணத்துக்கு அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு ஜனித்ததினாலும், என்தாய்தந்தையர் கோபாலனை வெகு அருமைபாராட்டிவளர்த்து வந்தார்கள். முதற்புத்திரியாகிய நான் பிறந்தவுடன் அவர்கள் ஆனந்தத்தையடைந்து சாவித்திரி யென்னும் என் பாட்டியாரின் பெயரை எனக்கிட்டு, அப்பாட்டியாரைப் போல் மிக்க செல்வத்தில் வெகுநாள் வாழும்படி யென்னை ஆசீர்வதித்ததுமன்றி, என்னை என் மாமனாகிய சுந்தரமய்யரின் புத்திரன் கிருஷ்ணனுக்கு விவாகம் செய்து கொடுப்பதாகவும்தீர்மானஞ்செய்து விட்டார்கள். அந்தோ! தாயாரின்னா ரென்றறியாப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தயாராயிருந்தான்.

என் குழந்தைப் பருவத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கும் பொழுது, எனக்கு முதல் முதல் ஞாபகத்துக்கு வருகிறது துக்கமானதாகவேயிருக்கிறது. என் மூன்றாவது வயதில் என் தாயார் இறந்து போய் விட்டாள். அவள் குணத்தைப்பற்றிக்கேள்விதானேயொழிய நானறியேன். இவ்வளவு வருஷங்களுக்குப் பின் நினைத்துப்பார்க்கும் பொழுது, அவள் பிரேதத்தை மயானத்துக்குத் தூக்கிக்கொண்டு போகையில் நான் தூக்குபவர்களின் காலைக்கட்டிக்கொண்டு அழுததும், என் தகப்பனார் கண்ணீர்பெருக, அவள் ஊருக்குப்போவதாயும், எனக்குப் பிரியமாயுள்ள பக்ஷணங்கள் வாங்கிக்கொண்டு சீக்கிரம் வந்து விடுவாளென்றும் சொல்லி, என் கண்ணீரைத் துடைத்து, எனக்கு வாழைப்பழம் வாங்கிக்கொடுக்கும்படி ஒருத்தியிடத்து விட்டு விட்டுப் போனதும் ஞாபகத்துக்கு வருகின்றன. நான் அவள் வரவை யெதிர்பார்த்து மயானத்துக்குப் போகிற வழியிலுள்ள ஆலமரத்தடியில் அடிக்கடி போயுட்கார்ந்து கொண்டிருப்பேனாம். பிற்பாடு பிறர் சொல்வதைக்கேட்டு நானும் "அம்மா செத்துப்போய்விட்டாள்" என்று சொல்லத்தொடங்கி விட்டேன். அவ்வயதிலேயே தாயாரை யிழந்தமையால் நான் பட்டகஷ்டங்களைப் பற்றிநினைக்கையில் என்மனம் பதைபதைக்கின்றது.

என் தாயார் இறக்கும்பொழுது என் தகப்பனாருக்கு ஐம்பதுவயது. அவர் பதினெட்டு வயதுள்ளவாலிபராயிருக்கும் பொழுது நான்கு வயதுள்ள ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொண்டாராம். அப்பெண் பத்தாவது வயதில் வைசூரியினாலிறந்து போய்விட்டாளாம். பிற்பாடு அவர் என்தாயாரை

* உடம்பு. † தூங்கார்.

மணம்புரிந்துகொண்டாராம். அவர்களிருவரும் மிகப் பிரியமுள்ளவர்களாயிருந்ததாக எங்கள் பந்துக்கள் சொல்வதுண்டு.

என் தாயாரிறந்த மறுவருஷத்தில் அவர் மற்றொரு பெண்ணைக்கலியாணம் செய்துகொண்டார். அவ்விவாகத்தைப்பற்றி என்ஞாபகத்திலிருந்தும், பிறர் சொல்வதிலிருந்தும் விவரித்துக் கூறுகிறேன். என் தமையனாகிய கோபாலனுக்கு விவாகம்செய்யவேணுமென்று தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பெண்ணை ஒப்பந்தஞ்செய்தார்கள். அப்பெண்ணின் தாய் தந்தையர்கள், தாங்கள் பத்து வருஷங்களாகப்பேணி வளர்த்ததற்குக் கூலி கிடைக்கக் காலம் வந்து விட்டதென்று நினைத்து, நகைகளும் பணமுமாக ஆயிர ரூபாய் கொடுத்துவிட்டால் தங்கள் பெண்ணை விற்று விடுவதாகச் சொன்னார்கள். என் தகப்பனார் அதற்குச் சம்மதித்து, முகூர்த்தம் வைத்தபின், தனக்கானால், பெண்விலை யென்ன வென்று கேட்க, அவர்கள் சமயத்தைத் தப்பவிடக் கூடாதென்றெண்ணி, விசனத்தை யடைந்த தங்கள் பெண் மனதைத்தேற்றித் தங்களுக்கு இரண்டாயிர ரூபாய் கொடுத்து விடவேண்டு மென்றும், தங்கள்பெண் பெயருக்கு அவ்வளவு விலையுள்ள நிலங்களையெழுதி வைத்துவிடவேண்டுமென்றும் சொல்ல, அப்படியே அதே முகூர்த்தத்தில் மருமகளாகவிருந்தவள் மனைவியாய்விட்டாள். இதைச்சொல்லும்பொழுது விசனமும் வெட்கமும் பொறுக்கமுடியவில்லை. இப்படிப்பட்ட விவாகங்களைத்தடுக்க இதனாலுண்டான தீங்குகளைச்சொன்னாற் போதுமல்லவா?

அதே வருஷத்தில் எனக்கும் என் தமையனுக்கும் கலியாணம் செய்து விடுவதாக யோசித்து, அவனுக்கு வேறொரு பெண்ணைத்திட்டஞ் செய்து, முகூர்த்ததினத்தைக் குறித்தானபின், கலியாணத்துக்கு வேண்டிய முயற்சிகளெல்லாஞ்செய்துகொண்டிருக்கையில், என் கணவனாக நியமிக்கப்பட்டிருந்த கிருஷ்ணன் என்பவன் ஆற்றில் நீந்தி விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று வந்தவெள்ளத்தாலிழுத்துக்கொண்டு போகப்பட்டு இறந்ததாகக்கடிதம் வந்தது. எனக்கு அதைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் மனம் பதறுகிறது. அம்மரணம் ஒரு வாரத்துக்குப்பின் நேரிட்டிருந்தால், என் கதியென்னமாய்முடிந்திருக்கும்! என் வாழ்நாளெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாய்க்கழிப்பதிற் சுகமென்ன? ஒரு குற்றமுஞ் செய்யாத குழந்தைக்கு அவ்விதியையுண்டுபண்ணினவர்களுக்கு எக்கதியமையும்? இதெல்லாம் அறிந்திருந்தும் குழந்தைப்பருவத்திலேயே கலியாணம் செய்தல் புத்தித்தாழ்வன்றோ?

கலியாணம் நடக்கவில்லை. கோபாலனும் திருநெல்வேலிக்குப் படிக்கப்போய்விட்டான்.

எனக்கு ஆறுவயதாகும்பொழுது என்சிறியதாயாராகிய தஞ்சாவூர்ப்பெண் எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு அப்பொழுது பதின்மூன்றுவயது. அவள் அழகுள்ள பெண்; தணிந்த விலையுள்ள சேலைகள் கட்டிக்கொள்ளமாட்டாள். தன்னைச் சிங்காரஞ் செய்து கொள்வதில் வெகு விருப்பமுடையவள். நடையுடைபாவனைகளெல்லாம் புதுமாதிரியாகவே யிருந்தன. அவளுக்கு எழுத வாசிக்கத்தெரியும். வந்து சிலநாள்களுக்குள் அவள் குணம் வெளிப்பட்டது. தானே வீட்டில் ஏகாந்தமாய் ஆளவேண்டுமென்ற எண்ணத்துடன், என் தாய்இறந்தநாள்முதல் வீட்டுவேலைகளைப் பார்த்துக்கொண்டு என்னை அன்புடன்வளர்த்துவந்த என் அத்தையைப்பற்றித், தன் புருஷனிடத்திற் கோட்சொல்லத்தொடங்கி, சிலநாள்களில் அவளைத் துரத்திவிட்டாள். அப்புண்ணியவதி வெகு விசனத்துடன், நான் அழுவதைக்காணப்பிரியமின்றி, வெளியே விளையாடப்போயிருக்கும் பொழுது, தன்னூருக்குப்போய்விட்டாள். நான் வீட்டுக்கு வந்தவுடன் "அத்தையம்மாள் எங்கே?" என்றுகேட்டேன். அதற்கு என்சிறுதாயாகியசெங்கமலம் "அத்தையுமில்லை, பாட்டியுமில்லை. முண்டையொழிந்தாள். சனியன் தொலைந்தது" என்றாள். நான் கோவென்றழுதேன். அதற்கு அவள் "என்காலின்கீழ் முட்டாதே. எங்கேயாவது ஒழி." என்று சொல்லிக்கொண்டே பிடித்திழுத்து முதுகிலடித்து வெளியே தள்ளிவிட்டாள். நான் தெருவில் விம்மி விம்மி யழுதுகொண்டு நின்றேன். அப்பொழுது என் தகப்பனார் வந்தார். அவர் ஒன்றும் கேட்க வில்லை. திரும்பிக் கூடப்பார்க்கவில்லை. என் துக்கம் அதிகரித்தது. அப்பொழுது தான் நான் அனாதை யென்றறிந்தேன். "அம்மா செத்துப்போனாள்" என்பதின் பொருள் அப்பொழுது தான் தெரிந்தது. குளத்திற் போய் விழுந்து இறக்கலாமென்று நினைத்தேன். 'ஆனால் தவளை கடிக்குமே. கிணத்திற் போய் விழுந்துவிடுவோமென்றால் ஆமை கடிக்குமே. ஒரு விஷயமும் தெரியாது; என்ன செய்கிறது! இவ்வித யோசனைகளில் அழுகை மாறிவிட்டது. பிற்பாடு என்தோழியாகிய சேஷி தம்பிக்கு வைசூரிகண்டிருந்ததனால் அவள் வீட்டுக்குப் போகக்கூடாதென்று என் அத்தையம்மாள் சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. வைசூரியினாலிறக்கலாமென்றுநினைத்து அங்கேபோகப்புறப்பட்டேன். சேஷி வீட்டு வாசலிற் போனவுடன் வேப்பிலைகள் சிதறிக்கிடப்பதைக்கண்டுபயந்து திரும்பிவிட்டேன். சாயங்காலம் சாப்பாட்டுவேளை வந்தவுடன், பசிமுன்னிழுக்க, வெட்கம் பின்னிழுக்க, மெள்ள மெள்ள வீட்டருகே சென்றேன். தெருத்திண்ணையில் வீற்றிருந்த என் தகப்பனார், "சாவித்திரி! உள்ளேபோய்ச் சாப்பிடு" என்றார். நான் தலையைக் கவிழ்ந்துகொண்டே வீட்டுக்குட் சென்றேன். உடனே செங்கமலம் என்ற என் சிறுதாயார் "எடுத்துப்போட்டுக்கொண்டு தின்னு," என்றாள். என்கண்களிற் கண்ணீர் தளும்பிற்று. ஒன்றுஞ் சொல்லாமல் சோற்றுப்பானையிலிருந்து எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டபின், எச்சிலைச்சுத்தி செய்து விட்டு திகைத்து நின்றேன். பிற்பாடுசெங்கமலம்கோபத்துடன்சொன்னதாவது:—

"வயிற்றை நிரப்பிக்கொண்டு மண்ணுருப்போல் நிற்கின்றாயே! சும்மா கள்ளக்காளைபோல் திரியநினைக்கிறாயோ? அது நடவாது. குடத்தை யெடுத்துக்கொண்டு போய் வாய்க்காலிலிருந்து தண்ணீர் மொண்டுவா." என்றாள்.

நான் அதுவரை செல்வப் பெண்ணாகவே வளர்ந்தேன். தாயில்லாப் பெண்ணாதலால் யாவரும் தாய் போலிருந்தார்கள். வேலை செய்தறியேன். ஆயினும், செங்கமலத்தைக் கோபமூட்டப் பயந்து குடத்தையெடுத்துக்கொண்டு வாய்க்காலுக்குச் சென்றேன். தண்ணீர் மொண்டானவுடன் குடத்தைத் தூக்கமுடியவில்லை. ஓர் வயதான பெண்பிள்ளை யிரக்கப்பட்டுக் குடத்தை யிடுப்பில் தூக்கிவைத்தாள். நான் அடிமேலடிவைத்து வருத்தத்துடன் நடந்துவரும்பொழுது, அத்தையம்மாளைப்பற்றி நினைக்கக் குடம் கைதவறிக் கீழே விழுந்து விட்டது. திரும்பவும் வாய்க்காலுக்குச் சென்று நீர் மொண்டுகொண்டு வீடு வந்து சேர்ந்தேன். செங்கமலம் "இவ்வளவு நேரமென்ன?" என்று வினவ, நான் நடந்ததைச் சொன்னேன். உடனே யவள் ஆவலுடன் குடத்தைத் திருப்பிப் பார்க்க அது அடியில் அதுங்கியிருந்தது. நானதைப் பார்க்கவில்லை. அதற்காக அவளென்னை யடித்துத் திட்டினாள். நான் மனதிற்குள் பதில் வைதுகொண்டேனே யொழிய ஒன்றுஞ் சொல்லவில்லை. அன்றுமுதல் வர வர அடிகளும் குட்டுகளும் கிள்ளுகளும் வசவுகளும் சகசமாய் விட்டன. அவையில்லா நாள் அரிதாய்விட்டது. நான் கஷ்டப்பட்டதோடு தீர்ந்துவிட்டதா? செங்கமலத்தால் என் தகப்பனார் பட்ட கஷ்டத்தை வேறொரு புதிய அதிகாரத்தில் தான் கூறவேண்டும்.

சாவித்திரி.

தமிழ்ப்பாஷை.

தமிழ்ப்பாஷை யிலுள்ள இலக்கியங்கள்.

(த. சரவண முத்துப்பிள்ளை பி. ஏ. அவர்கள் இயற்றியது.)

தமிழ்ப் பாஷையினாதி யாவர்க்குந் தெரியாதது போலவே தமிழிலே முதன்முதலெழுதப்பட்ட நூல்கள் யாவை, அவை யெவராலெழுதப்பட்டன, எக்காலத் தெழுதப்பட்டன இவையாவும் யாவர்க்கும் தெரிவரிதா யிருக்கின்றது. தேச சரித்திரங்க ளில்லாமையானும், முற்காலத்தைய நூல்களில்லாமையானும், பிற்காலத்து நூலாசிரியரும் முற்காலத்தைப்பற்றி யெழுதாமையானும், தமிழ்ப் பாஷையின் பூர்வசரித்திரம் பேரிருட்டா யிருக்கின்றது.

அகத்தியம். அகத்திய ரியற்றிய அகத்தியம் என்னும் பேரிலக்கணமே தமிழின் முன்முத லெழுதப்பட்ட நூலென்பர் அனேகர். அகத்தியம் பன்னீராயிரஞ் சூத்திரங்கொண்ட தென்றும், இயல், இசை, நாடகம் என்னும் முத் தமிழ்க்கு மிலக்கணங் கூறிய தென்றுங் கூறுகின்றனர். தமிழ்ப்பாஷை தொடங்கியவுடன் ஒரு பேரிலக்கணந் தமிழிலெழுதிய விந்தை நம் பண்டிதர்மார்க்கே புலப்படும். யாதொரு சிறு காரியத்திற்கும் சூத்திரமெடுத்துக் காட்டும் பண்டிதர் வித்துவான்கள் முதலியோர் "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலில்" என்னுஞ் சிறுநன்னூற் சூத்திரத்தை மறந்து தமிழிலிலக்கிய முண்டுபடுதற்கு முன்னேயே அகத்தியர் தமிழிலே யொரு பேரிலக்கண மெழுதினாரெனக் கூறலும் ஒருபெரும் விந்தையே. ஆயினுமென்? சப்தசமுத்திரத்தையுமோருழுந்தளவாக்கியுள்ளங்கையில்வைத் தாசமனஞ் செய்தருளிய அகத்தியர்க்கு இலக்கியமின்றி யிலக்கணமெழுதல் ஒரு பெருங்காரியமோ வெனச் சமாதானங்கூறலும் பண்டிதர் பாண்டியத்திற் கெட்டியதன்றி சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நமக்கும்புலப்படும் பொருளோ?

தொல்காப்பியம். அகத்திய ரியற்றியதாகக் கூறப்படும் பன்னீராயிரம் சூத்திரங்களுட் தொல்காப்பியரா லெடுத் தாளப்பட்ட சிலவும், உரையாசிரியர்களா லெடுத்தாளப்பட்ட சிலவுந் தவிர மற்றவையாவு மிறந்து போயினவாகத் தோற்றுகின்றது. இவ் வகத்தியர்க்கு தொல்காப்பியன், அதங் கோட்டாசான், துராலிங்கன், செம்பூட் சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன் கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் எனப் பன்னிரு மாணாக்கரிருந்ததாகவும், அவர் தம்பேரைக்கொண்டு வெவ்வேறு பன்னிரண் டிலக்கணங்களும், அனைவருமொருங்கு சேர்ந்து புறப்பொருட் பன்னிரு படலமென ஒருநூலு மியற்றினதாகக் கூறுவர், அவற்றுட் தொல்காப்பியமொன்றே நமக்குக் கிடைத்தது. தொல்காப்பியம் தற்காலத்துள்ள மற்றைய தமிழ் நூல்களைப் பார்க்கிலும் மூந்தியதாகத் தோற்றுகின்றது. இதுவே தமிழிற்குச் சிறந்த இலக்கணம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னு மைந்தையும் பற்றிச் சொல்லும் இந்நூலில் வடமொழிப்

பதங்க ளருமையாயிருத்தலே இது முதியதென்ப
தற்கோ ரத்தாட்சியாகும். இதற்கு இளம்பூரணர்,
கல்லாடர், பேராசியர், சேனுவரையர், நச்சினார்க்
இனியர்என ஐவர்உரைசெய்தன ரெனக்கூறல் வழக்
கம். ஆயின் இளம்பூரணருரையில் எழுத்ததிகாரமும்
சேனுவரையருரையில் சொல்லதிகாரமுமே வழங்கு
கின்றன, கல்லாடருரையும் பேராசிரியருரையுங்
காணேம். நச்சினார்க்கினியருரையே சகலத்திற்கும்
பிந்தியதும், தொல்காப்பிய முழுவதற்கு முள்ளதும்,
நச்சினார்க்கினிய ருரைவல்லபம் கூறிற் பெருகுமாத
லின்விட்டனன். அவர்பேரா யவர்குணத்தை நன்று
விரிக்கின்றது. இவரது உரையையு மிறந்துபோகாத
படி. காத்து நமக்கச்சிட்டளித்த ஸ்ரீமத் - சி. வை.
தாமோதரம்பிள்ளையவர்கட்குத் தமிழர்யாவரும் என்
றும் நன்றியறிவுடையோரா யிருத்தல்வேண்டும்.
இவராலேயே தொல்காப்பியமுஞ்சேனுவரையமுமச்
சிடப்பட்டது. தொல்காப்பிய மிக்காலத் தெழுதப்
பட்டதெனக் கூறமுடியாது. ஆயிரம் வருடங்கட்கு
முன்னென்பார் சிலர். மூவாயிரம் வருடங்கட்கு
முன்னென்பார் சிலர். இருபதினாயிரம் வருடங்கட்கு
முன்னென்பாரு முளர்.

முந்தமிழ்ச்சங்க மிருந்த காலம்.

இக் காலத்திலேயே முத்த
மிழ்ச்சங்க மிருந்ததாகக் கூறு
கின்றனர். முதற்சங்கங் கட
ல் கொள்ளப்பட்ட மதுரையி
லிருந்த தெனவும், சங்கமிருந்தார் ஐஞ்ஞூற்று
நாற்பத் தொன்பதின்மர் எனவும், நாலா யிரத்து
நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினா ரென
வும், பாடப்பட்டவை வேத்துணையோர் பரிபாட
லும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரை
யுமென இத்தொடக்கத்தன வெனவும், இடைச்சங்
கம் கபாடபுரத்தி லிருந்ததெனவும், சங்கமிருந்தார்
ஐஞ்ஞூற்ருென்பதின்மரெனவும், மூவாயிரத் தெழு
நூற்றுவர் பாடினாரெனவும், பாடப்பட்டவை கலி
யுங்குருகும் வெண்டாளியும், வியாழமாலை யகவலு
மென இத்தொடக்கத்தன எனவும், கடைச்சங்கம்
வடமதுரையிலிருந்ததெனவும், சங்கமிருந்தார் நாற்
பத்தொன்பதின்மரெனவும், நானூற்று நாற்பத்தொ
ன்பதின்மர் பாடினாரெனவும், பாடப்பட்டவை எட்
டுத் தொகையும், பேரிசையுஞ், சிற்றிசையுமென்
றித்தொடக்கத்தன வெனவும் வித்துவான்கள் கூறு
வர். ஆயின் உள்ளதையுள்ளபடி கூறல் தமிழ்ப்பண்
டிதர் குணமன்மையின் உண்மையும் அவர்வாயில்
வரும்பொழுது உண்மை நிறம்மாறிப் பொய்யாகின்
றது. ஆகவே சங்கங்களைப்பற்றிக் கூறுவனவற்றுள்
உண்மை யெவ்வளவு, பொய்புளுகு எவ்வளவெனக்
கண்டுபிடிக்கத்தொடங்கல் பகீரதப் பிரயத்தனமா
கும். இச்சங்கங்களுள் ஒவ்வொன்று பல்லாயிர வரு
டமிருந்ததாகவும், இச்சங்கங்களில் சிவன், சுப்பிரம
ணியர் முதலிய கடவுளர் சங்கத்தவராய் வீற்றிருந்
தன ரெனவும், இச்சங்கங்கட்குத் தெய்வீகமான சங்
கப்பலகை யொன்றிருந்த தாகவும், இவ்வித பல
கதைகளைக் கூறுவதனால் உள்ள உண்மையும் மறை
ந்துபோகின்றது. கடைச்சங்கத்தி லியற்றப்பட்டன
வாகக் கூறப்பட்டவற்றுட் சிலவே தற்காலத்து வழ
ங்கும் நூல்களுட் பழையன.

பஞ்ச காவியங்கள்.

இக்காலத்து நூல்களிற் சிற
ந்த காவியம் ஐந்து: சிந்தா
மணி, சிலப் பதிகாரம், மணி
மேகலை குண்டலகேசி, வளை
யாபதி யென்பன. இவற்றுள் சிந்தாமணியும் சிலப்
பதிகாரத்தி லொருபாகமுமே அச்சிடப்பட் டிருக்
கின்றன.* திருத்தக்கதேவரியற்றியசிந்தாமணி பதின்
மூன்றிலம்பகத்தில் சீவகனது கதையைக் கூறுவது,
நச்சினார்க்கினியரா லுரை செய்யப்பட்டது. சொல்
லழகும் பொருளழகும் நிறைந்துள்ளது. ஆங்கிலேய
ராலும் மிகவுஞ் சிறந்ததெனக் கணிக்கப்பட்டது.
தமிழிற்சிறந்தகாவியங்களுள் முக்கியமானதொன்று.
மூவாயிரத்துநூற்று நாற்பத்தைந்து செய்யுட்கொ
ண்டது. கற்கக்கற்க இன்பம் பயப்பது. சேரர்குலத்
துதித்த இளங்கோவடிகளியற்றிய சிலப்பதிகாரம்
கோவலன் கதையைக் கூறுவது, புகார்காண்டம்,
மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று
பிரிவுள்ளது. கற்றோர் சிலராற் சிந்தாமணியி னின்
றுஞ் சிறந்ததெனக் கூறப்பட்டது. புகார்காண்ட
மே அச்சிடப்பட்டது. * மணிமேகலை சிலரிடத்துக்
கையெழுத்துப் பிரதியாயிருக்கின்றது. வளையாபதி,
குண்டலகேசி யிரண்டும் இருக்கின்றனவோ இறந்து
பட்டனவோ தெரியாது. இவையன்றிச் சமண ரிய
ற்றிய யசோதரகாவியம், உதயணன் காதை, நாக
குமாரகாவியம், சூளாமணி,நீலகேசியெனச் சில சிறு
காவியங்களுள. இவற்றுள் சூளாமணி ஸ்ரீமத். சி.
வை. தாமோதரம்பிள்ளை யவர்களால் அச்சிடப்பட்
டிருக்கின்றது. சொற்சுவை நிறைந்துள்ளது. தற்
காலத்துச் சிறு கிரந்தங்களுள் அதற்குச் சமானமா
னது ஒன்றுங்காணேம். மற்றவற்றுள் யசோதரகாவி
யம் முன்னொருவரா லச்சிடப்பட்டிருக்கின்றது. மற்
றவை யச்சிடப்படவில்லை.

இக்காலத்து மற்ற காவியங்கள்.

இவை யன்றி, நற்றிணை,
குறுந் தொகை, ஐங்குறு நூ
று, பதிற்றுப் பத்து, பரிபா
டல், கலித் தொகை. அகநா
னூறு, புறநானூறு என எட்டுத் தொகைகளுள்ளன. இவற்றுள் நல்லந்துவனார் கலித்தொகை
யொன்றுமே யச்சிடப்பட்டிருக்கின்றது. 'கற்றறிந்
தோரேத்துங் கலி' யென்னும்பொழுதே யதன்சிறப்
புத் தோற்றுகின்றது. மற்றத் தொகைகளுட் சில
கையெழுத்துப் பிரதியாக விருக்கிறதாகக்கேள்வி.
சில இறந்தனபோலும். இவையுமன்றி, திருமுருகாற்
றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்
படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு,
மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு
பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்துப்பா
ட்டுகளுண்டு. இவையாவும் ஒன்றாய் நச்சினார்க்கி
னிய ருரையுடன் ஸ்ரீமான் வே. சாமிநாதையரவர்
களா லச்சிடப்பட்டிருக்கின்றன. சிந்தாமணிக் குயிர
ளித்த புண்ணியவாளனு மிவரே. தமிழிலுள்ள சிறு
பாட்டுக்களிற் சிறந்தவை யிவைபத்துமே. இவை
யன்றி, நாலடி, நான்மணி முதலிய பதினெண் கீழ்க்
கணக்கெனக் கூறப்படும் பதினெட்டும் சங்கத்திற்குச்
சேர்ந்ததாகவே கூறுவர். இவற்றுட் பல நீதிநூல்
களே. கல்லாடரியற்றிய கல்லாடமென்னுஞ் சிறந்த
நூலுமிக்காலத்திற்குச் சேர்ந்ததாகவே யிருக்கவேண்
டும். அது அக்காலத்திலேயே பேர்பெற்ற நூலா
யின், இக்காலத்ததன் மகிமையை யேன் சொல்ல
வேண்டும். ஆனால் அதையாரு முபயோகிப்பதைக்
காணேம்.

(இன்னும்வரும்.)

---

* [இவை யிரண்டும் கும்பகோணம் காலேஜ் ம-ா-ா-ஸ்ரீ, வே. சுவ
ாநதய்யர் அவர்களால் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டிருக்
கின்றன. சிந்தாமணி வெளியாகி இரண்டு வருஷகாலமாகிறது. சிலப்ப
திகாரம் அச்சிலிருக்கிறது. பெரும்பாலும் அச்சிட்டாய்விட்டது. சீக்
கிரத்தில் வெளிபிடத்தயாராகும்.—ப-ர்.]

தேகாப்பியாசம்,

—o—

ஓடுவதாலுண்டாகும் பயன்:— தேகாரோக்கியத்
துக்கும் சரீரதிடத்துக்கும் ஆஸ்பதமானதேகாப்பியா
சங்கள் எல்லாவற்றிலும் ஓடுவது மிகவும் எளிதும்,
விசேஷமும், சிலாக்கியமுமான தேகப்பயிற்சி யென்
றுயாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓடு
வதைவழக்கமான தேகாப்பியாசமாகச்செய்து வருகி
றவர்களுக்குஉருவழகும்,அசைவழகும்,மேனியழகும்
தானேயுண்டாகும்.ஓடுவதினால் நரம்புகளுக்குப் போ
துமான அசை வுண்டாகி அவை இறுகிப்பருத்து பல
ப்படக்காரணமாகிறது; சுவாசத்தை வேகமாக உள்
வாங்கி அடக்கிவிடவேண்டியிருப்பதால் சுவாசப்பை
தாராளமாக அதன் தொழிலைச் செய்து அதுநன்ருக
பலப்படவும், இரத்தத்தைச் சுத்திகரிக்கும் அதன்
தொழிலை நன்ருகச் செய்யவும் இட முண்டாகச்
செய்கிறது. அன்றி இரத்தாசயத்தி லிருந்து இரத்த
ஓட்டம் வேகமாக ஓடவும், அதனால் இரத்தாசயமும்
இரத்த நரம்புகளும் நன்ருக பலப்பட்டு தேகத்தி
லுள்ள அசுத்தங்களைச் சீக்கிரத்தில்வெளிப்படுத்தவும்
சக்தியுடையனவாகின்றன. அன்றி ஓடும்பொழுது
தேகத்திலுள்ள உறுப்புகளெல்லாம் அதது அமைந்
திருக்க வேண்டிய ஸ்தானத்தில் சரியாய் அமைந்தி
ருக்க நேரிடுகிறது. தோள்கள் பின்னிட்டு மார்விரிகி
றது. இடுப்பு மேலுடலைத் தாங்கி நிற்பதால் சிறந்து
பலப்படுகிறது. கால்கள் அவை அமைந்திருக்கவேண்
டிய மாதிரியில் சரியாக அமைகின்றன.

பூர்வீகர்களான கிரேக்கர்களுக்குண்டாயிருந்த புஜ
பல பராக்கிரமமும், அவர்கள் உடம்புக்கட்டழகும்
அவர்கள் விடாது செய்துவந்த தேகாப்பியாசங்களா
லும் அத்தேகாப்பியாசங்களில் ஓடுதல் அதிகவழக்க
மாக விருந்ததாலுமே வந்ததென்பதற்கு சந்தேகமில்
லை. இன்றைக்கும் அதிகமாகஓடியுழைக்கப்பழகும்
மனிதன்தன் தேகத்தை அவ்வளவாக அசைக்காதவ
னைவிடதேகக்கட்டில்அழகமைந்துசுறுசுறுப்பில்மிகு
ந்தவனுகவிருப்பதைக்காணலாமே. இதற்குக்காசுப
ணமொன்றும்செலவில்லையாலும் இதைஅப்பியசிப்ப
தற்கவசியமானவெட்டை வெளிநிலத்துக்கு எங்கும்
குறைவில்லையாலும் இதையாரும் அப்பியசிக்கலாம்.

ஓடுவதற்கு அடுத்தமேலான தேகாப்பியாசம் நடத்
தலாம். ஓடுவதால் தேகத்துக்குண்டாகும் சுகிர்தம்
இந்த அப்பியாசத்தாலும் கொஞ்சம் மட்டாக உண்
டாகும். ஓடுவதற்குக் கூடாதவர்கள் காலை மாலைக
ளில் நீண்டதூரம் நடை சவாரி போவது தேகா
ரோக்கியத்துக்கு அனுகூலமாம்.

வளர்பிராயமான சிறுவர்களும், வாலிபப்பருவமு
டையவர்களும் அவரவர் தேகமும் அவயவங்களும்
கட்டிறுகி உறுதிப்பட்டு அழகாய் ஓங்கிவளர கருடி
வித்தை கசரத்துவித்தைகள் செய்யப் பழகிவருவது
மிகவும் நலமாம். இதற்கு சாதகமான சுதேச கச
ரத்து வித்தைகள் பலவிருக்கின்றனவென்பது நாட்
டுப்புறத்திலுள்ள நமது ஜனங்களுக்குத் தெரிந்தே
யிருக்கும்.

இவையன்றி அங்கிலேயர் பழகும் கருடிவித்தை
களும் அநேக மிருக்கின்றன. அவை யொவ்வொன்
றும் குறித்த ஓர் அவயவம், மூட்டு,அல்லது நரம்பை
வலிக்கச்செய்து பலப்படுத்தி உறுதியுண்டுபண்ணத்
தக்கதாக விருக்கிறது. இவ்வித்தைகள் இப்பொ
ழுது சாதாரணமாக இத்தேசத்துப் பாடசாலைக
ளில் இதற்கென்றேற்பட்ட போதனுசிரியர்களால்
மாணுக்கர்களுக்கு வலிகட்டாயமாய்க் கற்பிக்கப்
பட்டுவருகின்றன. தேகாப்பியாசத்தின்முக்கியத்தை
யும், தேகமனோசுகத்துக்கும்திடத்துக்கும் தேகாப்பி
யாசம் வேண்டியதின் அவசியத்தையும் அறியாத
நம்மனோர் இதை அனுவசியமென்று சொல்லி இதை
ப்பற்றி அசிரத்தையாகவும் அருவருப்பாகவும் பேசு
வதுண்டு. அது பிசகு. தெரியாமையால் அவர்
கள் அப்படி பேசுகிறார்கள். பின்வருவதை வாசித்து
யோசித்துப் பார்த்தால் அவர்கள் கொண்டது தப்
பெண்ணமென்று விளங்கும்.

"வெகுகாலத்திற்குமுன் இருந்தோர் நிலைமை யுத்தத்திற்கே இடம் கொடுத்து வந்ததினால் அவர்கள் கேவலம் மிருகப் பிராயமான தேக பலமானது மனோபலத்திலுஞ் சிறந்ததென்றெண்ணித் தேகாப்பியாசம் மாத்திரஞ் செய்துவந்தார்கள்:

தேகாப்பியாசந்தான் வித்தையின் உத்தேசம் என்றும், ஒன்றைப் பலமாய்த் தாக்கி எப்படிப்பட்ட உழைப்பிற்கும் பின் வாங்காதவனே வித்தையில் தேர்ந்தவன் என்றும் அவர்கள் எண்ணி யிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் சூரரென்றும் கௌரவமுடையவர்களென்றும் பேர் பெற்ற சிற்சிலர் வாசிக்கத் தெரிந்திருந்ததினாலேயே பண்டிதர்களென்று எண்ணப்பட்டார்கள். மேலும் அவர்கள் கையெழுத்துப்போடத்தக்க அளவு எழுதப்பயின்றிருந்தால்எல்லாரும் அவர்களை மந்திரவாதிகளென்று சந்தேகப்படுவார்கள்.

நாகரிகம் விருத்தி ஆக ஆக படிப்பும் கலைக்கியானமும் மனிதனுடைய நிலைமையைத் தாழ்த்த மாட்டாவென்றும் தேகவலியுள்ள சூரனொருவன் படிப்பாளியாயுமிருந்தால் அதன் கௌரவம் அதிகரிக்க அது இடங்கொடுக்கிறதென்றும் மனிதர் புத்தியிற்பட்டது.

பொறுமையும் கல்வி விருத்திக்கு ஒரு துணையாயிருந்தது. எப்படியென்றால், அக்காலத்தில் மடங்களிலுள்ள துறவிகள் மாத்திரம் கல்விமான்களாயிருந்ததினால் தேகபலமாத்திரம் உடையவராய்ப் புத்தி பலமில்லாத மற்றவர்களிடத்தில் அத்துறவிகளுக்குச் செல்வாக்கு அதிகரித்துவர இடமிருந்தது.

இப்படியே நாளாவட்டத்தில் அங்கிலேயர் புத்தி பெருகிப் பலப்பட்டது. மனமுயற்சியின் விருத்தியைத் தடுக்க முயன்றகாலம் போயிற்று.

பிறகு இம்மனமுயற்சி அதிகரித்து, இன்றுவரையில் அவ்வாறே யிருக்கின்றது.

குளிரானதேசத்தில் உஷ்ணம் குறையாமலிருக்கும்படிக் கண்ணாடிக் கூடமைத்து அதில் வெள்ளரிக்காயை முற்றுவிப்பதுபோல் இக்காலத்தில் குழந்தைப் பருவமுதல் மிகவருந்தி மனோவிருத்தி செய்துவருகிறார்கள், தேகத்தைப் பாதுகாக்காமல், அது தானே திடப்படட்டுமென்று விட்டுவிட்டு மனமுயற்சியிலேயே கவலையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

அந்தகரணங்களின்தொழில் பாவங்களைக்குறித்து இப்புஸ்தகத்திற் சொல்வது அவசியமன்று. மனிதஜன்மங்களில்தேகபோஷணைமுக்கியமானதென்றும் மனோ வியாபாரத்திற்குத் தேகசுகம் உடந்தையானதென்றும் ஜனங்களுக்கு வரவரத் தெரிகின்றன.

தேகசுகந் தப்பினால் மூளையும் நல்லநிலை குலைகிறது. அதனால் மனோவியாபாரம் தடைப்படுகிறது. வியாதி உபத்திரவத்தால் புத்தியின் வலி குறைந்து, கற்பனாசக்தி ஒளிமங்குகிறது. பெரும்பாலும் சரீர உழைப்பின்மையால் அஜீரணம் நேரிடுகிறது. ஒருகாலுண்டாகும் அஜீரணத்தால் ராஜ்யநஷ்டம் நேரிடவும் கூடும்; நேரிட்டதாயுஞ்சொல்லிருக்கிறது.

தேகமும் புத்தியும் நாம்பெற்ற பெருஞ்செல்வம்; அவைகளைச் சரியாய்க் கையாளுவது நமது கடமை ஆகையால் அவ்விரண்டையும் கூடுமான அளவு நாம் பயிற்சி செய்யவேண்டுமென்று ஜனங்கள் இப்பொழுது அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்; இது வெகு நல்லது.

சிறுவர்களுக்குக் கற்பிக்கும் வித்தைகளில் சிலம்பப் பயிற்சி வெகு சிறந்ததென்பது என்னுடைய கருத்தாகையால் மற்றப் பாடங்களோடு இதையும் கிரமமாய்க்கற்பித்து வருகிறேன். இச்சிலம்பப் பழக்கத்தால் தேகசுகம் அதிகரிப்பதும், மனவெழுச்சியுண்டாவதும் தவிர வேறொரு நன்மையுமுண்டு— கருடி பழகினவனுக்கு இடுக்கண் வேலைகளில் மனோதைரியம் குறைகிறதில்லை.

மற்றவர்களுக்குச் சிறிதேனும் பிடிப்பில்லாத விடத்தில் பழக்கத்தினாலே கருடி பழகினவன் கைகால்கள் கைச்சுக் கையுறைபோலப்பலமாய்ப் பிடித்துக்கொள்ளுகின்றன. மற்றவர்கள் நாம் இறப்பது நிச்சயமென்று நினைக்கு மிடத்தில் இவனுக்கோ கொஞ்சமேனும் பயமில்லை. தேகாப்பியாசத்தின் பிரயோசனம் இன்ன இன்னவென நாம் சந்தேகமறத் தெரிந்திருந்தும் நமது தேகத்தைக் கொஞ்சமேனும் பயிற்சிசெய்யாதிருத்தல் வெகு ஆச்சரியகரமாயிருக்கிறது. நம்மவர்களில் ஆயிரம் பேரில் ஒருவன்கூட எதையேனும் கையினால் பிடித்துத் தொங்கும்பொழுது காலைக் கையிருக்கும் இடத்திற்கு உயர்த்தச்சக்தியற்றவனாயிருக்கிறான். என்றாலும் அப்படிச் செய்கிறது கருடி வித்தையில் முதல் அப்பியாசமாம்.

அங்கிலேயர் கையிலும் காலிலும் வலியமைந்தவர்களாயினும் இடுப்பிலும் முதுகிலும் பலம் குறைந்தவர்கள். பழைய பிரதிமைகளில் வெகு அழகாய்த் தோன்றும் இடுப்பைச்சூழ்ந்திருக்கும் பலமான நரம்புகள் நமக்கு இல்லாதது போலத் தோன்றுகிறது.

இந்த நரம்புகள் பருத்திருப்பதினாலேயே இன்னான் கசரத்துப் பழகினவனென்று அங்கிலேயர் இடுப்பைப்பார்த்து நான் சொல்லமாட்டேன்.

ஒருவன் தேகவலியுள்ளவனாயிருப்பதற்கு நரம்பு அதிக புஷ்டி யடைந்திருக்க வேண்டுமென்பது அவசியம் அன்றென்றுநாம் அறியவேண்டும்.

கசரத்துப் பண்ணுகிறதினால் முதலில் நரம்புகள் பெருக்கின்றன, ஆயினும் சிலநாள் சென்றபின்பு நரம்புகள் சிறந்து அழுத்திக் கம்பிபோலாகின்றன. ஏனெனில் நரம்பின் சந்துகளில் கொழுப்பு அதிகமாக ஏறுகிறதில்லை."

மேற்கண்டவை கருடிவித்தை பழகிப் பிள்ளைகளுக்கு அவ்வித்தைகளைப் போதிப்பதில் கீர்த்தி பெற்ற ஒருவர்* எழுதியவாக்கியங்கள். தேகாப்பியாசத்தின் முக்கியத்தையும் அவசியத்தையும் பற்றி இவர் சொல்லியிருப்பதைவிட நாம் அதிகமாய்ச் சொல்லி வற்புறுத்த நிமித்தமில்லை.

ஹிந்து மதத்தின் கட்டளைகள்.

சுருதீஸ்மிருதிகளின்படி.

1. மெய்பேச வேண்டும்.
2. கடமைகளை சரியாய் நிறை வேற்றவேண்டும்.
3. அத்தியயனஞ் செய்ய வேண்டும்.
4. ஆசாரியருக்கு குருதக்ஷிணை கொடுக்க வேண்டும்.
5. அவரை கௌரவிக்க வேண்டும்.
6. மாதாவை கௌரவிக்க வேண்டும்.
7. பிதாவை கௌரவிக்க வேண்டும்.
8. அதிதியைப் பூஜிக்க வேண்டும்.
9. பெரியோர்களை மதிக்கவேண்டும்.
10. சிரத்தையோடு அல்லது எவ்விதமா யாவது கொடுக்க வேண்டும்.
11. நிர்த் துஷ்டமான நடத்தையோடு நடக்க வேண்டும். வேறுவிதமாய் நடக்கக் கூடாது.
12. ஆசாரியருடைய நடத்தையா யிருந்தபோதிலும் நிர்த்துஷ்டமா யிருக்கிறதைமட்டும் அனுசரிக்க வேண்டும். வேறு நடத்தையை அனுசரிக்கக் கூடாது.
13. சந்தேக விஷயத்தில் சாஸ்திரம் தெரிந்தவர்கள் எப்படி செய்கிறார்களோ அப்படி நடக்க வேண்டும்.
14. சத்தியத்தை விடவேண்டாம்.
15. தர்மத்தை விடவேண்டாம்.
16. க்ஷேமத்தை பால்மாரிக்கக்கூடாது.
17. பாக்கியத்தை பால்மாரிக்கக் கூடாது.
18. படிப்பையும் குருஉபதேசத்தையும் பால்மாரிக்கக் கூடாது.
19. தேவபிதிருக்களுடைய சேவையைப் பால்மாரிக்கக் கூடாது.
20. புரத்தியாருடையசொத்தை ஆசிக்கக்கூடாது.

ஸ்ரீகீத சாஸ்திரப்படி.

21. பயபக்தியோடு பகவானை பூஜிக்கவேண்டும்.
22. தானஞ் செய்யவேண்டும்.
23. தபம் அதாவது ஆலோசனை செய்யவேண்டும்.
24. சாஸ்திரத்தின்படி நடக்கவேண்டும்.
25. பகவானை சரணம் அடையவேண்டும். அவர் உன்னை காப்பாற்றுவார்.
26. பகவானை நம்பினால் அவர் உன்னுடைய யோகக்ஷேமத்தை வகிப்பார். அவர் இஷ்டம் நிறைவேறும்.

ஸ்ரீபாகவதப்படி.

27. பகவான் சிருட்டித்தவர்களுக்கு சந்தோஷமானதும் ஹிதமானதுமான வற்றை செய்வதினாலே பகவானை பூஜிக்கவேண்டும்.
28. சத்தியத்தை பகரவேண்டும். உபதேசிக்க வேண்டும்.
29. சத்தியத்துடனும், தயையுடனும் எல்லோரையும் நடத்தவேண்டும்.
30. தபசோடும், சுசியோடும் இருக்க வேண்டும்.
31. பொறுமையுடன் நடக்க வேண்டும்.
32. விவேகத்துடன் நடக்க வேண்டும்.
33. சமம் அதாவது மனசை ஜயிக்க வேண்டும்.
34. தமம் அதாவது இந்திரியங்களை ஜயிக்க வேண்டும்.
35. அஹிம்ஸையுடன் நடக்க வேண்டும்.
36. பிர்ம சாரியத்துடன் நடக்க வேண்டும்.
37. தானபரனாகி யிருக்க வேண்டும்.
38. வித்தையை அப்பியஸித்துக் கொண்டிருக்க வேண்டும்.
39. மனோவாக்குக் காயங்கள் ஒரு வழிப்பட்டிருக்க வேண்டும்.
40. சந்துஷ்டனாக இருக்கவேண்டும்.
41. பெரியோர்களை சேவிக்கவேண்டும்.
42. பிரபஞ்ச விஷயத்தில் ஆசை யன்னியிலிருக்க வேண்டும்.
43. உபயோகமற்ற செய்கைகள் வீண் என்று அறியவேண்டும்.
44. மவுனமாக இருக்கவேண்டும்; அதாவது வீண் வார்த்தைகளைப் பேசக்கூடாது.
45. தன்னைத்தான் அறியவேண்டும்.
46. எல்லோருக்கும் கொடுத்துப்பிறகு தான் புசிக்கவேண்டும்.
47. தன்னைப்போலவும், தனக்குப்பெரியோர்களைப் போலவும் எல்லாரையும் பார்க்கவேண்டும்.
48. பகவான் குணகதைகளை கேட்கவேண்டும்.
49. அதுகளை உபதேசிக்கவேண்டும்.
50. அவரை ஸ்மரிக்கவேண்டும்.
51. பகவானை சேவிக்கவேண்டும்.
52. பயபக்தியுடன் அவரிடத்தில்நடக்கவேண்டும்.
53. தன் தாஸ்யத்தை பகவானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும்.
54. தன்னுடைய ஸக்கியத்தை ஸமர்ப்பிக்க வேண்டும்.
55. பகவானுக்கு தன்னைத்தான் ஸமர்ப்பிக்கவேண்டும்.

ஆர். [illegible].

* George Forrest.

விசேஷக் குறிப்புகள்.

—o—

அமெரிக்காவிலுள்ள 'சிக்காகோ' பட்டணத்து தபாலாபீஸில் தபால் முத்திரை குத்தும் மின்சார யந்திரங்கள் 4 - இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 6 - ஆள்வேலை செய்கின்றது. ஒரு யந்திரம் ஒரு மணி நேரத்தில் 28,000 கடிதங்களுக்கு முத்திரை குத்துமாம். இப்படிப்பட்ட யந்திரங்கள் 4 - இருந்து வேலை செய்து வரும் ஆபீஸில் போக்குவரத்தாகும் தபால்கள் எவ்வள விருக்கு மென்பதை நாமே யோசித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

இங்கிலீஷ் கால்வாயில் இரண்டு ஸ்திரீகளும் ஒரு மனிதனும் ஒரு சிறு படகிலேறிச் செல்கையில் ஒரு புகைக்கப்பல் அச்சிறு படகின் மேல் தாக்க அது தலை கவிழ்ந்து போய் விட்டது. படகிலிருந்த மனிதன் படகு உடைந்த பலகை யொன்றைப் பிடித்துக் கொண்டு தப்பித்துக்கொண்டான். மற்றஸ்திரீகள் இருவரும் ஒருவரை யொருவர் கட்டிப்பிடித்துக்கொண்டு தவித்தார்கள். அப்பொழுது அவர்களில் ஒரு ஸ்திரீ படகிலிருந்து விழுந்தகுடையொன்றைத் தாவிப்பிடித்துச் கொள்ள அக்குடை விரிந்து அவர்களை மூழ்கிப்போக விடாமல் தாங்கிக்காப்பாற்றிற்று. தண்ணீரில் விரித்தகுடை இருவரைத் தாங்கிக்கொண்டு அமுங்காது மிதந்ததற்குக் காரணம் என்ன வென்று யோசித்துப் பாருங்கள்.

மாக்ஷிமை தங்கிய நமது மஹாராணியார் அவர் பரிவாரங்களில் இந்தியர்கள் சிலரைத்தமது பணியாள்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில வருஷங்கள் முன் லண்டனில் நடந்த பொருட்காக்ஷிக்கு இத்தேசத்தி லிருந்த பல விலை பொருள்கள், செய்பொருள்கள் போனவையோடு பல ஜாதி மதஸ்தர்கள், தொழிலாளிகளும் கை காக்ஷி சாலையில் மாதிரி காட்டுவதற்காகக் கொண்டுபோகப்பட்டார்கள். அப்பொழுதுமுதல் மஹாராணியார் அவர்கள் தமது இந்திய பிரஜைகள் மீது அவருக்குள்ள பிரியத்தைக் காண்பிக்க இந்தியர்களில் சிலரை தமது அரண்மனை சேவகத்தி லமைத்து வைத்துக் கொண்டார்கள். அவர்களோடு தாம் நேரில் பேசவேண்டு மென்று இவ்வளவு முதிய பருவத்தில் முன்ஷி வைத்துக்கொண்டு ஹிந்துஸ்தானி பாஷையும் பேசக் கற்றுக்கொண்டார்கள். இப்பொழுது மஹாராணியார் இந்திய பணியாள்களை தாமே நேரில் அவர்கள் சுய பாஷையில் கட்டளைகளிடவும், அப்பாஷையில் சாதாரணமாகப்பேசவும் கூடுமானபாஷாபிவிர்த்தியடைந்திருக்கிறார்கள். எங்கே போனாலும் மஹாராணியார் அவர்களை விட்டுப்போவதில்லை. அவருடைய அரண்மனையில் அவர்களுக்காகத் தனியிடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். வெளியில் போகும் பொழுதும் அவர்களைத் தமது பரிவாரத்தோடு அழைத்துக்கொண்டு போவதன்றி அவர்கள் ஜாதி மத ஆசாரப்படி அவர்களுக்குத் தனியாக சாப்பாடு முதலியவை தேடிக்கொடுக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். இது அரண்மனை உத்தியோகஸ்தர்கள், காரியஸ்தர்களுக்கு அதிக தொந்தரவா யிருக்கிறதென்று அங்கிலேய பத்திரிகைகளினால் தெரிய வருகிறது. இருந்தாலும் மஹாராணியாரவர்கள் அவருடைய இந்திய பணியாள்களிடம் அதிக அபிமானமுற்றவராகக்காட்டி வருவதால் அரண்மனை உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு இடையூறு ஒன்றும் செய்யத்துணியாது, அவர்கள் கூடவிருப்பதால் தங்களுக்கு விளையும் துன்பங்களைப்பற்றி மட்டும் முறுமுறுத்துப் பேசிவருகிறார்களென்று தெரிகிறது.

"கிறிஸ்தியன் காலேஜ் மாகஸின்"

இப்பத்திரிகையின் ஜூன் மாதத்துச் சஞ்சிகையில், ஹாக்கஸ் என்பவர், கிரேக்கிய தத்துவஞானியாகிய ஸாக்ரேட்டிஸ் என்பவரின் சரித்திரத்தி லிருந்து, இத்தேசத்துச் சிறுவர்கள் கற்றுக்கொள்ளக் கூடியவைகளைப் பற்றி யெழுதியிருக்கிறார். இஞ்ஞானி தன்தேசத்துக் குலாசாரங்களும் மதாசாரங்களும் நிலையின்றித் தள்ளாடிக்கொண்டிருந்த காலத்தில், அவ்வபாயத்தி னின்றும், தன்தேசத்தை விடுவித்தார். அதே அபாயத்தின் வாய்ப்பட்டுப் பரிதபிக்கும் நம்முடைய இந்தியாதேசத்தைக் காக்க விரும்பும் தேசாபிமானிகளும், அவருடைய கொள்கைகளை யநுசரிக்கவேண்டும். அவைகளிற்சிலவாவன:—

(1) தன்மனசாக்ஷிக்கு விரோதமாய் நடக்கக் கூடாது.

(2) அறிவைச் சம்பாதிக்க விரும்பின், தன் அறியாமையை முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். எல்லாம் தெரிந்தவர் போல் பிதற்றலாகாது. தெரியாத விஷயத்தைப்பற்றிப் பேசப்புகலாகாது.

(3) சாதி பேதத்தைக் கொண்டு உண்மையை ஒளிக்கலாகாது. தாழ்ந்த சாதியாரையும் மெய்யறிவைப் போதித்துச் சீர்திருத்த வேண்டியது நம்முடைய கடமை.

(4) மரணம் நேரிடுங்காலத்தும் உண்மையைக் கைவிடலாகாது. கஷ்டங்களுக்கு அஞ்சிக் கடமையை அசட்டை செய்யலாகாது.

இஞ்ஞானி, எழுபதாவது வயதில், மூடர்களால் துன்பப்படுத்தப்பட்டு, பொய் சொல்லி உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மறுத்து விஷத்தைக் குடித்து மரித்தார்.

இச்சஞ்சிகையில் ஜான் லாஸரஸ் என்பவர் திருக்குறளைப்பற்றி யெழுதியிருக்கிறார்.

ம-ா-ா-ஸ்ரீ பி. வீரராகவலு நாயுடு நமது ஹிந்து ஜன சமூகத்தின் முற்கால தற்கால நிலைமையைப் பற்றி உற்று ஆராய்வோருக்குப்படும் சில அம்சங்களைப் பற்றி யெழுதி அங்கிலேய ஜாதியார் மேம்பட்டு வாழ்ந்து விர்த்தியடைவதற்கும், நாம் அதற்குமாறாகவிருப்பதற்கு காரணமாயும் சில பேதாபேதங்களை யெடுத்துக்காட்டிச் செய்த பிரசங்கமென்றும் இச்சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

என் சின்னஞ்சிறு நேசர்களே! இந்த விசை உங்களுக்கு வாசிக்க எதைப்பற்றி யெழுதலாம்? போன விசை 'நோடும்புலி' யென்று தலைப்பெயரிட்டுக் கொண்டு மனுஷரில் புலிபோல் கொடுமையானவர்கள் என்று சொல்லப்பட்ட சிலவகையாரை யெடுத்துக்காட்டினேன். புலிக்குள்ள குணங்களில் கொடுமை ஒன்று. இது அம்மிருகத்தின் தீயகுணம். புலியை இன்னொரு விதத்திலும் உபமானமாகக் கூறுவதுண்டு. அதாவது அதற்குள்ள தேகவலியும் தைரிய பராக்கிரமமுமே யாம். "அவன் புலி" யென்றால் புலியைப்போல் தைரிய பராக்கிரமமுள்ள சூரன் என்று அர்த்தம் கொள்ளும். புலியைப்பற்றி இவ்வளவு பழக்கமாகப் பேசுகிறேனே. நீங்கள் எல்லாரும் புலியைப் பார்த்ததுண்டோ? புலி ஓர்காட்டுமிருகம். உங்களுடையவும் என்னுடையவும் முப்பாட்டனார்களிருந்தகாலத்தில் கிராமந்திரங்களிலுள்ள ஜனங்கள் புலி போன்ற காட்டு மிருகங்களை யடிக்கடி பார்த்திருப்பார்கள். ஏனென்றால் அப்பொழுது கிராமங்களுக்குச் சமீபத்தில் பெரியகாடுகள் அதிகமாக விருந்தன. அவைகளில் வசிக்கும் புலி, ஓநாய் முதலான கொடியகாட்டுமிருகங்கள் அடிக்கடி அந்திப் பொழுதில்கிராமங்களில்நுழைந்து இரைதேடவருவதுண்டு. இராக்காலங்களில் குடியானவர் தொழுவத்தில் கட்டியிருக்கும் ஆடுமாடுகளையும் பல சமயங்களில் குஞ்சு குழந்தைகள் மனிதர்களையும் அடித்துத்தின்று விட்டுப்போய்விடும். புலிகளில் நரமாமிசந்தின்று உருசிகண்ட ஜாதிக்கு நரமாமிசம் தின்னி* என்றுபெயர். இவ்வகைப் புலிகள் ஆடுமாடுகளிருந்தாலும் மோப்பத்தால் மனிதர் இருக்குமிடம் அறிந்து சென்று அவர்களையே கொன்று தின்னப்பார்க்கும். முன் காலத்தில் குடிஜனத்தொகை அதிக நெருக்கமின்றி ஜனங்கள் குடியிருப்பு ஸ்தலங்களைச் சுற்றிச் சமீபத்தில் அடவிகள்† அதிகமாக விருந்தனவால் அவற்றிலுள்ள காட்டுமிருகங்கள் கிராமங்களில்பிரவேசித்து குடிகளின் கால்நடைகளைச் சேதம்செய்து, அவர்களை இன்னும் பலவித அபாயங்களுக்கும் உள்ளாக்கி வந்தன. இப்பொழுது அந்தக்காலமெல்லாம் போய் புலியைப்பார்ப்பதும் அருமையாய் விட்டது. இதேனென்றால் நம்மையாளும் அங்கிலேயர்அரசாக்ஷியில் முன் அடவியாக விருந்த நிலங்கள் வரவர அழிபட்டு சாகுபடி நிலங்களாக மாறிவிட்டன. கவர்ன்மெண்டாரும் ஜனங்களை வதைக்கும் காட்டு மிருகங்களை வேட்டையாடிக் கொல்வோருக்கு வெகுமதி கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவைகளை அநேகஞ்செய்து விட்டார்கள். இன்னமும் காடடைப் பிரதேசமான இடங்களில் அதம்செய்து வருகிறார்கள். நாடு நகரங்கள் விசாலப்பட்டுப் பரவி நாகரீகமும் விர்த்தி ஆக ஆகக்காட்டுமிருகங்களுடைய உபத்திரவம் கட்டோடே யொழிந்து வருகிறபடியால், இக்காலத்துச் சிறுவர்கள் முற்காலத்தவர்களைப்போல் அவைகளைக் காண்பது கூடாமையாக விருக்கிறது. இப்படியே யிருந்து விட்டால் இன்னும் சில தலைமுறையில் நாடு நகரங்களில் பிறந்து வளரும் சிறுவர்களுக்கு புலி, சிங்கம், இவை யெல்லாம் ஒற்றைக்கொம்பு மிருகம் போல் கட்டுக்கதைப் பிராணிகளாகப்போய் விடுமல்லவா? அப்படிப்போனால் ஜனங்களுக்கு அபூர்வமான இயற்கைப் பிராணிகளைப் பற்றியுள்ள அறிவு இல்லாமற்போய் விடுமல்லவா? அப்படிப் போகாதபடி அபூர்வமான பிராணிகள் வஸ்துக்கள் இவற்றின் இயல்பு விவரங்களைப்பற்றிக் கற்போர் நேரில் பார்த்துப் புத்திவிர்த்தி யடையவென்று கவர்ன்மெண்டார் விநோதசாலைகளும் மிருகாதி யதிசய சாலைகளும் எற்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளைப்பற்றி இங்கு விரித்துரைக்கிற் பெருகும். உங்களில் சிலர் உங்கள் பெற்றோரோடு இம்மிருக சாலைகள் எதையாவது போய்ப்பார்த்திருக்கலாம். ஆனால் உங்களில் பெரும்பாலார் புலியென்று சொல்லக்கேட்டதன்றி அதைப்பார்த்திருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் உபயோகத்துக்காகப் புலியின் படமொன்று சம்பாதித்து வந்ததைக் கீழே அச்சிட்டுக் காட்டுகிறேன்.



'ஸர்க்கஸ்வித்தை'

இந்தவிசை எனது சிறுதோழர் தோழிகளுக்குச் சொல்லவேண்டிய முக்கிய விஷயம் இன்னொன்றுண்டு. என் சிறு நேசர்களே! நீங்கள் 'ஸர்க்கஸ்' என்கிற வார்த்தையைக் கேள்விப்பட்டிருப்பீர்களோ?

*Man-Eater. † மரஞ்செடி படர்ந்த காடுகள்.

'ஸர்க்கஸ் வித்தை' யென்றால் என்ன தெரியுமோ? சென்னப் பட்டணத்திலுள்ள சிறுவர்களெல்லாம் இவ்விரண்டையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. 'ஸர்க்கஸ்' என்பது ஒரு இங்கிலீஷ்வார்த்தை. இதற்கு முதலர்த்தம் குதிரையோடும் 'வையாளி வீதி.' இதிலிருந்து ஆனையேற்றம், குதிரை யேற்றம், இன்னும் பல கருடி வித்தை கஸரத்துவித்தைகள் செய்யும் விளையாட்டு இடத்துக்குப்பேராய் வழங்குகிறது. இப்பேர்ப்பட்ட வேடிக்கை விநோதமான சாமர்த்திய வித்தைகள் தான்'ஸர்க்கஸ்வித்தை'.இவ்வித்தையாடிகளைத்தான் ஸர்க்கஸ்கம்பெனி' யென்று சொல்வது. இந்த ஸர்க்கஸ் வித்தையாடிகள் நமதுகிராமங்களில் வந்து வித்தையாடும் வித்தையாடிகளைப் போலவே ஊரூருய்ச் சுற்றி வித்தையாடி வருவார்கள். ஆனால் இவர்கள் அவர்களைப்போல் கேவலமாக விருக்கிறதில்லை. அங்கிலேயர்கள் அவர்கள் அநுசரிக்கும் எந்தத்தொழிலையும் கௌரவ முள்ளதாகச் செய்துகொள்வதுபோல், இந்த வித்தையாடிகளும், அவர்களுக்கேற்ற தளவாடங்களோடு வெகுகௌரவமாய்ச் சென்றுபோன விடங்களில் யாவரும் அவர்களை மதிக்க வித்தையாடிவருகிறார்கள். இவர்கள் தாங்கள் செய்யும் வித்தைக்குவேண்டிய குதிரை, நாய், குரங்கு முதலிய பலவித மிருகங்களை வித்தையாடப் பழக்கி அவர்களோடுகூடக் கொண்டு போவதோடு அவர்கள் வித்தையாட மிகவும் பெரிதான கூடாரமொன்றும், அதைச்சுற்றி வேடிக்கைபார்க்கவரும் ஜனங்கள்உட்கார நாற்காலி 'பெஞ்சி'கள்முதலானவையும்தங்கள் சொந்தத்தில் தயார்செய்து போகு மிடங்களெல்லாம் கொண்டுபோகிறார்கள். நமது வித்தையாடிகளைப்போல் நடுத்தெருவில் கூத்தாடிவிட்டு ஒருகாசுக்கு வயிற்றி லடித்துக்கொண்டு வளையவளைய வருகிறதில்லை. அவர்கள் கூடாரத்தைச்சுற்றி மறைவுகட்டியிருக்கும். உள்ளே போகிறவர்களுக்கு அவர்கள் உட்காரும் இடம், வசதி, சௌகரியம் இவைக்கேற்க ரூ 4,3,2,1,½ என்று பலவிதமாகக் கட்டணம் விதித்து வாசலில் சீட்டுவிற்பார்கள். அவர்கள் வரவைப் பிரமாதப்படுத்தி அவர்கள்செய்யும் வித்தைகளைப் புகழ்ந்து அதிசயமான சித்திரப்படங்கள் முதலானவைகளை தெருச்சுவறுகளில் ஒட்டி செலவைப் பார்க்காமல் கண்டோர்மனதைக் கவரும்படி விளம்பரஞ் செய்வார்கள். இல்லாத ஆடம்பரங்களெல்லாம் செய்வார்கள். செய்து கடைசியில் ஆயிரம் பதினாயிரமென்று சம்பாதித்துக்கொண்டு போவார்கள். "செய்வன திருந்தச்செய்'' என்னும் நமது ஔவை வாக்கியத்தை யுணர்ந்து நடப்பவர்கள் இவர்களோ? நம்மவர்களோ? அருமைச் சிறுவர்களே! நீங்களே உங்கள் சிறு புத்தியைக்கொண்டு யோசித்துச் சொல்லுங்கள்.

இப்படிப்பட்ட 'ஸர்க்கஸ் கம்பெனி' யென்னும் இங்கிலீஷ் வித்தையாடிகள் இச் சென்னைப்பட்டணத்தில் வந்து 2-வாரமிருந்து வித்தையாடினார்கள். இப்படிப்பட்ட வித்தையாடிகள் பெரியபட்டணங்களிலன்றி நாட்டுப்புறப் பட்டணங்களில் வந்து வித்தையாடுவதில்லையால் இவர்கள் ஆடும் வித்தைகள் இன்னவை யென்பதைப்பார்த்து நாடெங்கு முள்ள என் சிறு தோழர் தோழிகளுக்குச் சொல்லவேண்டுமென்று மாயாண்டியாகிய எனக்கு ஒருஆசை யுண்டாயிற்று. ஆகவே, விவேக சிந்தாமணி பத்திராதிபரைக்கண்டு அந்த 'ஸர்க்கஸ் கம்பெனி' மானேஜருக்கு என் கருத்தைத் தெரிவித்து ஒருகடித மெழுதச்சொன்னேன். அக்கடிதத்தைப்பார்த்ததும் அந்த மானேஜர் பத்திராசிரியர்பேருக்கு மரியாதை டிக்கெட்டொன்று அனுப்பினார். அங்கிலேயர் மரியாதையறிந்தவர்கள் என்பதற்கு இது ஓர் உதாரணமாம். அந்த டிக்கெட்டில் பத்திராதிபரோடுஅவர் பெருமாட்டியையும் உள்ளேவிட எழுதியிருந்தது. (வெள்ளைக்காரர் ஸ்திரீகளிடம் எப்போதும் கனிசம் பாராட்டுவதற்கு இது ஒருஅடையாளம் பார்த்தீர்களா?) பத்திராசிரியர் எனக்காக எழுதிக்கேட்டதால் அந்த டிக்கெட்டை என்னிடம் கொடுத்தார். நான் என்னோடு என் சிறுதோழி ஒருத்தியையும் கூட அழைத்துக்கொண்டு ஸர்க்கஸ்கூடாரத்துக்குப்போனேன். அங்கேபோய் நான் பார்த்த ஆட்டங்களில்மிக அதிசயமானவை குதிரை யேற்ற ஆட்டங்களே. மற்றவையெல்லாம் கருடிவித்தையும், கஸரத்து வித்தையும், கோணங்கி, நாய், குரங்கு இவைகள் ஆடும் வேடிக்கை விளையாட்டுகளுமே. அங்கே நடந்த கஸரத்து வித்தைகள் மிகநன்றாக விருந்தன. ஆனால், அவை நமதுவித்தையாடிகள் தெருவில்வந்து ஆடும் வித்தைகளை விட அருமை யானவையாக வில்லை. அவர்களைவிட இவர்கள் மிகநன்றாகவும் ஒழுங்காகவும் ஆடப் பழகி யிருந்தார்கள். அங்கே நடந்த குதிரை யேற்ற வித்தைகள்தான் மிகவும் அதிசயமாக விருந்தன. அந்த அதிசயத்தை உணர அவ்வித்தைகளை நேரில் பார்க்கவேண்டும். அவர்கள் செய்யும் குதிரை யேற்ற வித்தைகளில் சிலவற்றைச் சித்திரித்து அவர்கள் போட்டிருந்த படங்களின் அச்சுகளைவாங்கி உங்களுக்கு விளங்கத் தெரிவிக்க உத்தேசித்திருந்தேன். ஸர்க்கஸ் மானேஜரும் அப்படங்களெழுதிய அச்சுக்கட்டைகளை, அவர் ஆட்டங்களைப் பார்க்கக்கூடாத இப்பத்திரிகையை வாசிக்கும் சிறுவர்கள் சந்தோஷத்துக்காக இதில் பதிப்பித்துக் காட்ட இரவல் கொடுப்பதாகச் சொன்னார். அவர் திடீரென்று பெங்களூருக்குப் போக நேரிட்டதால் அந்த அச்சுக்கட்டைகள் கிடைக்காமற்போய்விட்டன. அதைப்பற்றி நான் விவரமாயெழுத விருந்ததையும் விட்டுவிட நேரிட்டது. அவ்வாட்டங்களைப் பார்த்த ஒரு சிறுதோழியை அவள்கண்ட சாக்ஷியைப்பற்றி நமது சிறுவர் பக்கத்துக்கு எழுதச்சொன்னேன். அவள் எனக்கு எழுதிய கடிதத்தை அப்படியே பிரசுரிக்க அவள் சம்மதிக்கவில்லை. ஆதலால் அவள் எழுதினதை மனதில்வைத்துக் கூடியவரையில் அவள் எழுதியதுபோலவே நானும் எழுதுகிறேன்:—

''நாங்கள்போகிறதற்குள்3-ஆட்டம்ஆய்விட்டது. ஆனாலும் நான் பார்த்தமட்டும் சொல்கிறேன். ஆடுகிற இடம் 60-அடி அகல முள்ளது. அதைச்சுற்றி நிறைச்சலும் மேலே கூடாரமும் போட்டிருந்தது. அந்த தொண்டிக்குள் 20-அடி அகலமுள்ள வளைவான இட மிருக்கிறது. அதைச்சுற்றி ஒருமுழ உயரம் 2-அடி அகலத்துக்கு சுவர் எடுத்திருக்கிறது. மற்ற இடங்களிலெல்லாம் நாற்காலி போட்டிருக்கிறது. நடுவிலுள்ள வளைவுக்குள் ஒருகுதிரையின்மேல் 8-வயதுள்ள பையன் ஒருவன் ஏறிக்கொண்டு அதைச்சுற்றி ஓடுகிறான். அந்தப் பையன் ஜேணம் ஒன்றுமில்லாத அக்குதிரையின் முதுகுமேலேறிக்கொண்டு ஆடுகிறதும், குதிக்கிறதும், பின்னையும்குதிரை ஓடும்பொழுதே பாய்ந்து ஏறுகிறதும், அவன் மேலே ஏறி ஆடுகையில் மற்றவர்கள் குதிரையைச் சவுக்கால் அடிக்கிறதும், அது வேகமாக ஓடும் பொழுது ஏணிபோலுள்ள சட்டக்கதவுகள் மூன்றைக் கொண்டுவந்து குறுக்கேவைக்கிறதும், அந்தக் குதிரை ஓடிவந்து அக்கதவுகளை யெல்லாம் தாண்டிக் குதித்துக்கொண்டு ஓடுகிறதும், அந்தப் பையனும் குதிரைமேலே யிருந்துகொண்டு ஒரு பாய்ச்சலாக மேலே பாய்ந்து உடனே ஓடுகிறகுதிரையின் முதுகிலேயே நின்றபடி குதிக்கிறதும், இப்படியாக மிகவும் ஆச்சரியமாக ஆடிவிட்டு உள்ளே போகிறான். 18-வயதுள்ள பெண் ஒருத்திவந்து அவன் மாதிரி குதிரைமேலிருந்து விளையாடிவிட்டுப் போகிறாள். அப்படியே அவளைவிடப் பெரிய இன்னொரு பெண்ணும் வந்து குதிரைமேலேறி ஆச்சரியமான வேடிக்கைகள் செய்து சவாரி செய்து போகிறாள். அதேபெண் இரண்டு கம்பத்தில் கட்டிய இரும்புக் கம்பியிலேறி கீழே விழாமல் அதன்மேல் ஒத்தைக் காலால் நிற்கிறாள். அப்படியும் இப்படியும் ஆடுகிறாள். அதில் நடக்கிறாள். உட்கார்ந்து எழுந்திருக்கிறாள். அதில் சாய்ந்து கொள்கிறாள். மறுபடியும் எழுந்திருக்கிறாள். இவ்வளவும் கையை தூரவைத்துக்கொண்டு ஒரு விரற்கடை யகல முள்ள அக்கம்பியில் கீழே விழாமல் செய்கிறாள். அப்புறம் கோணங்கிகள் வந்து வேடிக்கை செய்கிறார்கள். எல்லாரும்சிரிக்கப்பரிகாசமாய்ப்பேசிக்கொள்கிறாள். கடைசியில் நடுவிலுள்ள வளைவான பள்ளத்தைத் தண்ணீரால் நிறப்பி அதில் படுகுகளை விட்டு விளையாடுவதும், மீன்பிடிப்பதும், கடைசியில் எல்லாரும் அதில் தவறி விழுந்து, அப்புறம்தள்ளாடித்தத்தளித்துக்கொண்டு கரை யேறிப்பிழைக்கிறதுமாக நடிக்கிறார்கள். இதோடு ஆட்டம் முடிந்து போகிறது.''

இந்த விஷை நான் சிறுவர்க்கான பக்கத்தை வளர்த்தி இப்பத்திரிகையில் அதிக இடத்தை அடைத்துக்கொண்டேனென்று பத்திராசியர் முறுமுறுக்கிறார். ஆகையால் நான் உடனே விடை பெற்றுக்கொண்டு என் கடையை இந்த மட்டோடு கட்டுகிறேன்.

மாயாண்டி.

அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி.)

உபகார சங்கம்.

நமது விண்ணப்பத்தில் குறித்தபடி அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தில் நம்மோடு
ஒத்துழைக்க உடன்பட்டு உபகாரிகளாக அவர்கள் பேரை ரிஜிஸ்தர் செய்துகொண்டவர்களுக்
கெல்லாம் வரலாற்றுப் பத்திரிகையோடு விவேக சிந்தாமணி முதல் சஞ்சிகையும் மாதிரிக்காக
அனுப்பியிருக்கிறோம். அறிவைப் பரவச்செய்வதற்கான ஏற்பாட்டின் சுருக்கத்தையும் விவேக
சிந்தாமணியின் கடைசியில் பிரசுரஞ்செய்தோம். அதை வாசித்துப்பார்த்து அதில் கண்டிருக்
கிற விதிகளுக்குள்பட்டு உபகாரிகளாக உழைக்கப் பிரிய முள்ளவர்க ளெல்லோரும் பின்வருகிற
படி வாக்குறுதி கொடுத்து நமக்குக் கடிதமெழுதக் கேட்டுக்கொள்கிறோம்.

"ஐயா;—''அறிவைப் பரவச்செய்யும் சபை ஏற்பாடு" இன்னதென்று நான் வாசித்துக்
கிரகித்துக்கொண்டேன். அதில் கண்டிருக்கிறபடி அறிவைப்பரவச்செய்யும் விஷயத்தில் மேற்
பாட்டுக் குள்பட்டு ஒத்துழைக்க மனப்பூர்வமாகப் பிரியமுள்ளவனாக விருக்கிறேன். உபகாரிகள்
உழைக்கவேண்டிக்கோரப்படும் விஷயங்களில் என்னாலானமட்டும் இஷ்டப்பட்டுழைக்கக் கட்டுப்
பட்டவனா யிருப்பதோடு, அப்படிப்பட்ட விஷயங்கள் எதிலாவது ஒத்துழைக்க எந்தக்காரணத்

இனுலாவது எனக்குக் கூடாமையாக நேரிட்டால் அதற்குள்ள காரணகாரணங்களை எழுதித் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாக விருப்பேனென்றும் இதனால் வாக்குறுதி செய்து கொடுக்கிறேன். ஆகையால் என்பேரையும் உபகாரசங்கத்தில் சேர்த்துழைக்கும் ஒருவராகப் பதிவு செய்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
பேர். ______________
விலாசம். ______________"

இதுவரையில் உபகாரிகளாகச் சேர்ந்தவர்களும் சேரப் பிரியமுள்ளவர்களும் ஷை. வாக்குறுதிநாமாப்படிக் கையொப்பம் செய்து திருவல்லிக்கேணியிலுள்ள அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி) காரியதரிசிக்கு அனுப்பக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த வாக்குறுதி நாமாக்கள் வந்ததும் இவ்வுபகாரசங்கத்து மெம்பர்கள் மாதந்தோறும் செய்யவேண்டிய உபகாரம் இன்னதென்று அடுத்த சஞ்சிகையிலிருந்து அவர்களுக்குத் தெரிவித்து வருவோம். இந்த மாசத்தில் உபகாரிகள் செய்தவேலைகள் இன்ன வென்பதைப் பற்றிச் சிலரிடமிருந்து நமக்கு ரிபோர்ட்டு வந்திருக்கிறது.

திருவனந்த புரத்திலிருக்கும் நமது உபகாரி வயது மிகச்சென்றவராயினும் (57 - வயதென்று எழுதுகிறார்.) இது விஷயத்தில் மிக ஊக்கத்தோடும் உற்சாகத்தோடு முழைத்து வருகிறார். விவேகசிந்தாமணி வெளியானதும் மொத்தமாக 20, 30 காபிகள் தருவித்துத் தெருக்கள் தோறும் சென்று தக்கவர்களுக்குக் கொடுத்துக் கையொப்பம் சேர்த்து அவர்களை நேரில் இது விஷயத்தில் ஒத்தாசைசெய்ய உற்சாக மூட்டி வந்ததன்றி நமது ஏற்பாட்டிற் கண்டபடி திருவனந்த புரத்தில் கிளைச்சபை யொன்றும் கூட்டி விவேகசிந்தாமணியைக்கொண்டு ஓர் பிரசங்கம் நடத்தி நமக்கு ரிபோர்ட்டனுப்பி யிருக்கிறார். அவர் அனுப்பிய ரிபோர்ட்டு இது:—

திருவல்லிக்கேணியில் ஸ்தாபிதமாயிருக்கும் அறிவைப்பரவச்செய்யும் சபையுடைய கிளைச்சபை 1067௵ ஆனி௴ 7௳ ஞாயிற்றுக்கிழமை யன்று திருவநந்தபுரம் பென்ஷன் ஓவர்ஸியர் இரங்கநாதபிள்ளையவர்கள் வீட்டில் கூடியது.

1. ஹைகோர்ட்டு வக்கீல் சேஷையங்கார் அக்கிராசனராயிருந்தார். 13-மாணாக்கரும்5-பெரியவர்களும் கூடியிருந்தனர்.

2. சீப் எஞ்சினீர் ஆபீசு ஹெட் கிளார்க்கு சுப்பையாப்பிள்ளை விவேகசிந்தாமணியை வாசித்தார்.

3. அதற்கு இரங்கநாதபிள்ளை வியாக்கியானம் உரைத்தார்.

4. அறிவு இன்றியமையாத தென்பதைக்குறித்து வாசித்துக்காட்டி அர்த்தம் பண்ணினதில் மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் மனசில் சில நூதன அறிவு பரவினதால் பாலகர் அகமகிழ்ந்து ஈஸ்வரனுக்கு ஸ்துதி செலுத்தினர்.

5. ஷை சபையின் காரியதரிசி சுவாமிநாத ஐயரவர்கள் அறிவை பரவச்செய்யும் சபை என்ற ஆலம் விதையை நட்டு மூன்று மாசமாகிறது. அதில் ஒரு கிளை 500 மயில் தூரமான திருவனந்தபுரத்துக்கு வளர்ந்து எட்டி கிளைச்சபை ஒன்றை ஸ்தாபித்திருக்கிறது. ஸ்ரோச்சு என்னும் பட்டணத்தில் ஏகதேசம் 12 நாழிகைத்தூரத்தில் ஒரு பெரியவட விருக்ஷம் நிற்கிறது. அது ஏகதேசம் 4 ஏக்கர் விஸ்தாரத்தில் படர்ந்திருக்கிறது. அதினுடைய அடியில் 10,000 பேர் உட்கார குளிர்ந்த நிழலுண்டு. அது போலவே இந்த கிளைச்சபையும் 10,000 பேருக்கு அறிவென்னும் சிரேஷ்ட தண்ணிழலை கொடுக்கவேண்டுமென்று ஸ்வாமியையும், பிறகு சுவாமிநாதய்யரவர்களையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்''

சென்னையிலுள்ள அறிவைப்பரவச்செய்யும் சபை மெம்பரும் அதன் உபகாரியுமாகிய பண்டிதர் கே. கோபாலாசாரியார் அவர்கள், தஞ்சாவூர் ஜில்லாவில் சில விடங்களை நேரில் விஜயஞ்செய்து இச்சபைக்கு ஒத்தாசையாக மிகவுழைத்துவந்திருக்கிறார். அவர் நாச்சியார்கோவில். மன்னார்குடி, ஏனங்குடி முதலான விடங்களில் அநேகரை நேரில் கண்டு பேசி விவேகசிந்தாமணிக்கு அநேகமான கையொப்பங்கள் சேர்த்துவந்திருக்கிறார். மன்னார்குடியில் இவரோடொத்து நின்று இவருழைத்ததற்கு ஒத்தாசையாக விருந்துதவிய முனிசிபல் சேர்மேன் வெங்கடராமய்யர் அவர்களுக்கும் மற்ற கனவான்களுக்கும் நாம் இருதயபூர்வமாய் வந்தனமளிப்பதோடு அவர்கள் இதுவிஷயத்தில் உற்சாகம் குன்றாது விடாமுயற்சியோடுழைத்து வருவார்களென்று கோருகிறோம்.

நமது புதுவாயல் உபகாரியும் இது விஷயத்தில் அதிக சிரத்தையோடுழைத்துவருகிறதாகச் செய்தியெட்டியிருக்கிறது.

பாளையங்கோட்டை,சங்கரநயினார்கோயில்,இவ்விடங்களிலுள்ள நமது உபகாரிகளும் இது விஷயத்தில் பாடுபட்டுழைத்துவருகிறார்களென்று அறிகிறோம். மற்ற உபகாரிகளும் இச்சபைக்காக அவரவர்களுழைக்கும் உழைப்பையும் அதன் பயனையும் அப்போதைக்கப்போது நமக்கு எழுதித்தெரிவிப்பார்களென்று கோருகிறோம்.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு.''

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6-APR.93
MADRAS.

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892௵ ஜூலை௴. இலக்கம். 3.

இல்லாண்மை.

இல்லாண்மை— அதாவது, இல்லத்தை ஆளுந்தன்மை— என்பது இல்வாழ்க்கைக்கணின்று வாழ்பவர் யாவர்க்கும் இன்றியமையாத இயல்புகளை எடுத்துக்கூறும் நூல். அது உண்டிகளின் வகைகளை எடுத்துரைத்து அவைகளை நன்காக அமைக்குந் திறங்களை விளக்கிக் காட்டும்; உடைகளின் வகைகளைத் தெரிந்து சொல்லி, அவைகளைப்பேணும் முறையினையும், பழுதுநேரின் அதனைத்திருத்தும்விதத்தினையும், அழுக்கடையின் அதனைப் போக்கும் வழிகளையும் புலப்படுத்தும்; இல்லமமைத்துக்கோடும் நெறியினையும் அதில்வாழ்பவர்களுக்குநோயுண்டாகாவண்ணம் அதனைத் தூய்தாயும் நல்லகாற்றினையுடையதாயும் வைத்திருக்கும் வழிவகைகளையும்,நோயுண்டாகில்நோயாளிகளை *உழையிருந்து மருந்தியற்றுந்திறத்தினையும்எடுத்துப்பேசும்; குழந்தைகளை வளர்க்கும்விதத்தினையும் வேலைக்காரரை ஆளும் முறைமையினையும்,பசுமுதலிய விலங்குசாதிகளைக் காக்குந் தன்மையினையும் சொல்லும்;நாடோறும் வரவு செலவுக்கணக்கெழுதி, செலவினை வருவாய்க்குத்தக மட்டுப்படுத்தி நடக்குந்தன்மையினையும் உணர்த்தும்.

நாம் பெரும்பாலும் இல்லத்திலேயே நமது காலத்தின் பெரும்பாகத்தைக் கழிக்கின்றோம்; அதனால் நமது உடல்நோயின்றியிருப்பதற்கும், நோயடைந்து துன்பமுழப்பதற்கும் பெருங்காரணம் இல்லமாகின்றது. ஆகவே இல்லத்தை நோய்முதலணுகாதபடி போற்றுவது நமது கடனாம்; அவ்வாறு போற்றாது †மடிந்திருப்போமாயின், நமது இல்லத்தில் நிகழும் நோய்கட்கெல்லாம் நாமேகாரணமாகி, நமக்கும் நம்மையடைந்தார்க்கும் மாறாத்துயரை வருவிப்போம்.

"உண்டிகொடுத்தோருயிர் கொடுத்தோரே
உண்டிமுதற்றே உணவின்பிண்டம்"*

என்று ‡குடபுலவியனார் கூறியபடி, உண்டி உயிர்க்கு இன்றியமையாதது; உண்டியொழியின் உயிரழியும். அவ்வுண்டியே நமது பகுதிக்கொத்த அளவிற்றன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நமது பகுதியோடும் காலவியல்போடும், சுவை வீரியங்களாற் றம்முள்ளும் மாறுபடுமாயினும் நோய்க்கு முதலாகும். ஆதலால் உண்டியின் வகையும் அதனையமைக்குந் திறனும் அதனைப்பழுதுறாது போற்றுமாறும் வல்லராதல் நம்மெல்லார்க்கும் ஒருதலையான் வேண்டப்படும் என்பது சொல்லாமலேயமையும். அங்ஙனமாக, உண்டியமைத்தலே தம்மொரு தொழிலாகவுடைய பெண்களுக்கு அதனுணர்வு ஒன்றுகல்ல தென்பதற்கு ஐயமுமுளதேயோ?

உண்டிக்கொக்க உயிர் கொண்டெய்த்தற்கு உடையும் ஒருகாரணமேயாம். அது குளிரா

* உழை—பக்கம்.

† மடி—சோம்பல்.

* உணவின் பிண்டம் உண்டிமுதற்றாதலான் உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என மாறிக் கூட்டுக. உணவானாகிய உடம்பு உணவைமுதலாக வுடையது; ஆதலால் உணவுகொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவர்கள் என்பதுபொருள்.

‡ ஒரு தமிழ்ப்புலவரின் பெயர்; புறநானூற்றிற் காண்க.

லும் வெப்பத்தாலு முடம்பு துன்பமுறாதபடி
போற்றுகின்றது மன்றித் தோலின்மேல் மற்
றொரு ‡மீக்தோல்போல் போர்க்கப்பட்டு நமது
உடலிலுள்ள வெப்பம் புறம்போகாதபடி காக்கி
ன்றது. இவ்விரண்டு தொழிற்கும் ஏற்றதகுதியு
டைய தன்றி,நமதுடை உடலோடுபொருந்துமி
டத்து அதற்குத்தீங்கிழைக்காத பொருளினலா
னதாயும், உடலின்தொழிற்பாட்டிற்குச்சிறிதும்
இடையூறு விளைக்காததாயும் இருத்தல் வேண்
டும். இவ்வியல்புகளிற்குறையுமாயின் உடையும்
உடம்பைநோயுறுத்தற் காரணமாகும்.

இளையோரே வளர்ந்து முதியோ ராதலா
லும் இளமையிற் பழகிய பழக்கமே முதுமை
யினும் நிலைபெற்று நிற்றலாலும் நமரெல்லாம்
நற்குண நற்செய்கைகளாற் சிறந்து ஓங்கு புகழ்
செய்து ஒளி நிறுத்தலை விரும்புவேமாயின்
நமதுமக்களை இயல்பினல் வளர்த்தலே நமக்
குத்தலையாய தொழில். காணங்களெல்லாம்
நுண்மையவாயிருக்கின்ற குழவிப்பருவம் சார்
ந்ததன் தன்மைத்தாய் மாறும் *எண்படதத்த
தாதலினுலும்,அப்பருவத்தில்குழவிகள்தாமாக
ஒன்றை அறியவும் செய்யவும் வல்லனவல்ல
வாதலாலும், புகுகின்ற முதுமைப் பருவத்தில்
நல்லராதலும் அல்லராதலும் அப்பருவத்தி
லேயே நிச்சயிக்கப்படுதலாலும், குழவிகள்
நோயின்றியும், சார்ந்த பொருள்களால் தீங்
கடைதலின்றியும் வளர்தற்கு யாம் †கடப்பாடு
டையேம். பசுவின்பால் முதலியன நமக்குண்டி
யாதலின்அவை கேடுறாதவண்ணம் பசுவினை
நோயின்றிப்பாதுகாத்தலும், அவற்றின்தொழு
வத்தில் நீரும் சாணமும்நின்றுதேக்கி நமதுஇல்
லத்தின் தூய்மைக்குக் கேடுவிளைக்காதபடி
போற்றுதலும்செய்யத்தக்கன. நமக்குஊர்தியா
யுதவும் குதிரை முதலியவும், உழைபிருந்துவே
ண்டு தொழிலியற்றும் வேலையாளரும் பசுவைப்
போலவே போற்றப்படவேண்டும். இவைகளிட
த்துச்செய்யுங் கடமைகளில் யாம்சிறிது குன்
றுவேமாயினும் அதனல் நமக்கும் நம்முயற்சிக்
குமே துன்பமு மிடையூறும் வந்து நேரும்.

பணத்தைச் செலவழித்தலில் புத்தியாயி
ருத்தல் யாவர்க்கும் இன்றியமையாதது; வறி
யராயினும் செல்வராயினும் இயன்றமட்டில்
செலவைச் சுருக்கவேண்டும். உயிர் வாழ்விற்கு
ஒருதலையான் வேண்டிய பொருள்களெல்லா
வற்றையும் வருவாயில் எத்துணைச் சிறிய பொ
ருள்கொண்டு தேடுதல்கூடுமோ அவ்வாறு தே
டி, எஞ்சிய பணத்தைப் பிணி மூப்பிற்கென்று
சேர்த்துவைத்தல்வேண்டும். யாவரேயாயினும்
ஒவ்வொரு பொருளையும் முழுவதும் பயன் படு
வித்தலும் ஒன்றையேனும் வீண்படுத்தாமை
யும் ஒவ்வொருவர்க்கும் கடனும்.

இதுகாறும் கூறியவாற்றல் இல்லாண்மை,
பொதுவகையால் மக்கள்யாவர்க்கும், சிறப்புவ
கையால் பெண்பாலார்க்கும்,பயன்படுநூலாமா
றுதெற்றெனப்புலப்படும். அங்ஙனமாகவும்,இல்
லாண்மையால் யாதுபயன்? இந்நூல் தோன்று
முன்னர் நம்பெண்பாலார் இல்வினை ஆளும்
முறைதெரியாதிருந்தனரோ? இந்நூல் தோன்
றிய பின்னர்த்தான் அடிசில் ஆக்கவும் கறிய
மைக்கவுங்கற்றுக்கொண்டாரோ?எம்மனோரை
யெல்லாம் குழந்தைப்பருவத்தில் இயல்பாய்
வளர்த்துக் கல்வி பயிற்றுது விட்டு விட்டன
ரோ? என்று வினவுவாருளராயிற் கூறுவாம்.
இந்த நூல் புதிதாய் உண்டானதொன்றென்று
வது இதுதோன்ற முன்னரே நமது பெண்பா
லார் எல்லாம் சமையல் தொழிலினையும், குழந்
தைகளை வளர்த்தலையும், பசுக்காத்தலையும்,
பொருள் செயல் வகையினையும் கைவிட்டிருந்
தாரென்றுவது கூறுவாரில்லை. சிற்பநூல்தோன்
றமுன்னரே கோயில்கட்டினர்இல்லாது மில்லை;
இலக்கண நூல் தோன்ற முன்னரே வழுவின்
றிப் பேசுபவரு மெழுதுபவரு மில்லாது
மில்லை; அதுபோலவே பாகநூல் தோன்று முன்
னர்ச் சமையல் செய்பவரும் பொருணூல்
தோன்று முன்னர்ப் பொருள்செய்பவருமில்லா
மலில்லை. அவ்வக்காலத்தில் நன்குசமைத்தாரும்
நன்றுபொருள் செய்தாருமிருந்தனர். ஆயினும்
ஒருதொழிலை நூலுதவியின்றிச் செய்வார்க்கும்
நூலுதவிகொண்டுசெய்வார்க்கும் வேற்றுமையு
ண்டு; நூலின்றித் தொழில் செய்வார் செயல் வ
ரையறைப்பட்டு நின்றுவிடும். நுண்ணிய அறி
வும்ஆள்வினை*யுமுடைய ஒருசிறியோர் நூலுத
வியின்றியே, அவ்வுதவிபெற்றோரைப் போலத்

‡ மீக்தோல்—மேற்றோல்.
* எண்படதத்த—எளியநிலைமையுடையது,
† கடப்பாடு—கடமை,

* இடைவிடாதமுயற்சி.

தம் அறிவின்வன்மையாலும் பழக்கத்தின்பெரு
மையாலும் ஒரு சிலவற்றைச் செய்து முடிப்பி
னும்,உலகினுள்பெரும்பாலார்தாம்செய்வதற்கு
விதிவிலக்குகளறியவேண்டுபவராயுளர். அத்
தகையோர்க்கு இது போன்ற நூல்கள் இன்றி
யமையாத குறையாயுள்ளன. அன்றி, நூலுத
வியின்றித் தொழில் செய்வோர் தாமே யாவு
மாராய்ந் தறிந்தோரல்லர்; தொழில் செய்யும்
வகைகளையும் அவைக்குவேண்டும் காரணங்
களையும் தம்மின் முன்னோரிடத்திருந்து கேட்
டறிந்தோரே யாவர். அவருள்ளும் கேட்ட
போது முழுப்பொருளையுங் கவர்ந்து கொள்ளா
தாரும், கேட்டு மறந்துபோயினரும், கேட்ட
போது திரித்துணர்ந்தாரும் பலருளர். ஆத
லால் அவர்க்கு மெல்லாம இந்நூல் பயன்படு
வதொன்றேயாம்.

தீ. த. கனகசுந்தரம்பிள்ளை.

நிலவரி செட்டில்மெண்டு.

எந்தவழியால் நிலவரி ஏற்படுத்துகிறார்களோ
அந்தவழிக்குச் செட்டில்மெண்டெனப் பெயர்.
அவ்வரி ஏற்படுத்துகிறவர்களுக்குச் செட்டில்
மெண்டு உத்தியோகஸ்தர்களென்று பெயர்.
வரி ஏற்படுத்தும் வழிகளின் உள்விஷயங்கள்
ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொருவித
மாயிருக்கும். இந்தியாவில் வழங்குகிறபடி,
செட்டில்மெண்டு என்ற பதத்தின்மொத்த அர்த்
தமியாதென்றல், நிலத்தினின்றும் வரக்கூடிய
வரும்படியை செவ்வையாய் அறிந்துகொள்ளப்
படுவதென, இந்தியாவில். சில வருடங்களுக்கு
முன் இராஜப்பிரதிநிதி சபையில் மெம்பராக
விருந்து இந்தியாவின் சரித்திரத்தை நன்குண
ர்ந்து இப்பொழுது சீமையிலிருக்கும் ஸர். டபி
ல்யூ ஹண்டர் அவர்கள் எழுதியிருக்கிறார்.

நம் தேசத்திலுள்ள பலதொழிலுடையோரு
ள்ளும் கிருஷித்தொழிலுடையோரின் தொகை
மிக்க விசாலித்தது. அரசாங்கத்தோருக்கு நம்
தேசத்திலிருந்து வரும் வருமானம் யாவற்றுள்
ளும், நிலத்திலிருந்து வருவது மிக்க அதிகமுள்
ளது. ஆதலால் இந்துக்களிற் பெரும்பான்மை
யோருடையவும் அவர்களது பின் சந்ததியோ
ருடையவும் சுகதுக்கங்களும் இலாபநஷ்டங்க
ளும் 'செட்டில்மெண்டால்' முடிவுபெற வேண்
டியிருக்கிறது. தஞ்சைஜில்லாவில் செட்டில்
மெண்டு வகுப்பாரில் ஒரு வகுப்பார் சிறிதுகா
லமாய் வேலை செய்துகொண்டு வருவது யாவ
ரும் அறிவர். அவர்கள் இஜ்ஜில்லாவிற்குச்
செய்ய நிர்ணயித்திருக்கும் தீர்மானத்தையும்
அதிலுள்ள வித்தியாசத்தையும் எடுத்துத் தர்க்
கித்து வரைவதின்முன்னர், 'செட்டில்மெண்டு'
நம்மிராஜதானியில் நிலை பெறுவதற் கேற்பட்
டுள்ள சரிதத்தை ஒருவாறு சுருக்கி எழுதுகி
றேன்.

பூர்வத்தில் நம்முன்னோர்கள் ஒவ்வொரு கிரா
மத்தையும், கிராமத்தி லுள்ளோருக்குள் பொ
துவாக வைத்துக்கொண்டு, அவர்களுக்குள்
ஒருவரைத் தலைவராய் ஏற்படுத்திக் கொள்வ
துண்டு. ஒரு கிராமத்திலிருந்து அரசனுக்கு
வரவேண்டிய இறை முழுவதற்கும் கிராமத்
தோர் ஏகமாய்க் கட்டுப்பட் டிருப்பார்களே
யன்றி, ஒவ்வொருவருக்குந் தனித்தனி வரி
ஏற்பட்டிருக்கமாட்டாது.கிராமத்தலைவன்மாறு
லறுவடையானவுடன் அரசிறையைச் செலுத்
திவிட்டுப் பிந்தி, கிராமத்தாருக்குள் பங்கிட்டுக்
கொடுப்பதுண்டு. அரசனது பகுதியைச் செ
லுத்திக்கிராமப்பொதுச்செலவுஞ் செய்வதற்கு
முந்தி,கிராமத்தின்ஐவேஜியைக்கிராமப் பொது
ஐவேஜியாக எண்ணவேண்டுமே ஒழிய ஒருவர்
மற்றொருவருக்குத் தெரியாமல் எடுத்துக்கொ
ண்டுபோக வொண்ணுது.

இவ்விதம் அரசிறை செலுத்திக் கொண்டு
அவ்வவ்வூர் நியாயங்களை அவ்வவ்வூரிலே கிரா
மத்தலைவன், கிராமத்துப் பஞ்சாயத்தின் உத
வியோடு, சரிவரத் தீர்த்துக்கொண்டு, செழிப்
புற வாழும் காளில் ஆட்டுக்கிடையில் ஓநாயின்
கூட்டங்களும், பசுக்கிடையில் வேங்கைப்புலி
யினங்களும், ஒன்று பத்து நூறு ஆயிரமாய்
மேல்விழுந்து கவ்விக் கொலைபுரிதல் ஒக்க,
711-ம் ஆண்டுதொட்டு 1526-ம் ஆண்டுவரை
யில் அயல்தேயத்து மகம்மதியக் கள்ளர்களும்,
கொடுங்கோலரசர்களும் நம் தேயத்தின்மீது
படையெடுத்துவந்து அழகிய நாடுகளைச் சின்
னபின்னப் படுத்தினர். அவர்களிற் சிலர் பிர
ஜைகள் இன்புறச் சுகமே வாழச் சகிக்காத
வர்களாய், பேராசைபூண்டு, ஒன்று அல்லது
பல கிராமங்களைச் சேர்த்து ஒருவனிடத்தி

லொப்புவித்து, இறை வசூல்செய்யும்படி செய்தார்கள். அப்படி வசூல்செய்பவனை ஜமீன்தாரென அழைப்பதாயினர். மேற்கண்ட 800-வருடகாலங்களில் அனேக மகம்மதிய நாட்டரசர்கள் இந்தியாவிற்கு வருவதும், சிலபாகத்தை ஜயிப்பதும், சிலநாள் அரசாள்வதும் பல விடங்களை அக்கினிவாதைகளுக்குள்ளாக்கித் தம்தம் ஜனனாடேகுவதும்,நாடேகுவதற்குமுந்தி,மாற்றரசர், வேற்றரசர் பகைக்குத் தம்மை இரையாக்குவதாயு மிருந்தார்களேயன்றி தேசமுழுவதையும் ஜயித்து இராஜாங்கத்தை நிலைநிறுத்தி, செங்கோல் செலுத்த வேண்டுமென்ற அவாவுடையவர்களாய் இராச்சியபரிபாலனஞ் செய்தார்களென்று சாற்ற, சரித்திரங்களில் ஒருவித ஆதாரமுங் காணோம். நம்முடைய முன்னோர்கள் அரசிறை கொடுத்துவந்த ஏற்பாட்டைப் பலவழியாலுங் கெடுத்ததோடு நில்லாது, தேசத்தில் பூர்வத்திலிருந்த ஏற்பாட்டை யன்றி, வேறு மார்க்கங்களால், வரி வசூல் செய்யலாமென்பதையும், வசூல் பண்ணுபவர்களையும், காளடைவில் நம் நாட்டில் நிலைபெறவும் விட்டு விட்டுப் போயினர்.

இந்த மகம்மதியர்களுக்குப்பின் முகலாய ரெனப் பெயர் பூண்டுவந்த மகம்மதிய சக்கரவர்த்திகளில் மூன்றாவதான அக்பர் நாளில், அவரின்கீழிருந்த இந்துமத மந்திரியாகிய இராஜா தோடர்மால் என்பவரால், தேசமளக்கப்பட்டு, செட்டில்மெண்டு முடிக்கப்பட்டது. அபுல்பாஸிலென்னும் மற்றொரு மந்திரியால் எழுதிய இந்தியா சம்பந்தமான சில அளவு புத்தகத்தை ஆதியாக வைத்துக்கொண்டுதான் அங்கிலேய துரைத்தனத்தார் இந்தியாவை யளக்கப் புறப்பட்டனர். அக்பர் நில வரும்படியைப் பலவாறாய் நிதானித்து மூன்றிலொரு கடமை வாங்கிக்கொண்டு வந்தார். இவர் நாளில் பணம் வசூல்செய்வதைச் சிற்றரசர்களுக்குள்ளும், செல்வாக்குள்ள மற்றவர்களுக்குள்ளும், ஒப்புவிப்பதாயினர். இருதிறத்தினரையும் ஜமீன்தாரெனவே அழைப்பதாயினர்.

இந்த 'முகலாய' சக்கிரவர்த்தியின் ஆளுகைக்குப்பின் 200-வருஷங்கள் கழிய, அங்கிலேயநாட்டிலிருந்த ஐக்கிய சங்கத்தோருக்கு இந்தியாவை ஆளவேண்டிய பாக்கியமும், பொறுப்பும் மேன்மேலு மதிகரிக்க, பூர்வச் சக்கிரவர்த்திகளுக்குப் பிரஜைகள் எவ்வாறு கிஸ்தி செலுத்தி வந்திருக்கிறார்களென்று விசாரணை செய்யத் தலைப்பட்டனர். 1769-ம் ஆண்டில் அது சம்பந்தமாய் மிகக் கடுமையுள்ள உத்திரவுகள் பல பிறப்பித்தார்கள். கம்பெனி வேலையாளரோ சிற்றரசர்களோடும், மாற்றரசர்களோடும், யுத்தசன்னத்தராய் ஒருபாலும், வியாபாரத்தில் துண்டுவர்த்தகஞ் செய்வதில் ஒருபாலும், சொந்தப்பணத்தை வட்டிக்குக் கொடுப்பதி லொருபாலும், தங்கள் காலத்தைச் செலவழிப்பதில் மிக்க ஊக்கமுள்ளவர்களா யிருந்தார்களே யொழிய, கம்பெனியார் உத்திரவைக் கவனித்து அதற்கேற்க வொன்றுஞ் செய்தார்களில்லை. அதன்பொருட்டே, தேசத்திற் பணம் வசூல்செய்ய முன்வருபவர்களிடத்தில் கம்பெனியார் சாரவேண்டியதாய் விட்டது. குடிகளாவது, கிராமத்தலைவர்களாவது கிஸ்தி செலுத்தும் வலிமையும் நம்பிக்கை யுடைமையும் வாய்ந்தவர்களாய்க் காணப்படவில்லை. முன்வரவுமில்லை. கம்பெனியாருக்கு ஜமீன்தாரர்களைக்கொண்டே பணம் வசூல்செய்வ தவசியமாய்விட்டது. 1793-ம் வருஷத்தில் இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாயிருந்த 'காரன்வாலிஸ் பிரபு' பெங்காளத்தில் பெரும்பாலும் ஜமீன்தாரர்களைக் கொண்டே இறைவாங்கும்படி ஏற்பாடுசெய்து செட்டில்மெண்டு முடித்துவிட்டார்.

இந்த ஜமீன் ஏற்பாடு, நடக்கும் நூற்றாண்டின் துவக்கத்தில் நமது இராஜதானியிலும் சில காலம் அனுஷ்டானத்திலிருந்தது. 1799-ம் ஆண்டில் சீரங்கபட்டணம்யுத்தகளத்தில்'டிப்பு சுல்தான்' மாளவும் மைசூர் இராஜ்ஜியம் இப்பொழுது இருக்கிறது போக,பாக்கி மகாராஷ்டிரர், நிஜாம், அங்கிலேயர் மூவரும் பங்கிட்டுக் கொண்ட சில காலத்திற்குள் ஆற்காட்டின் நவாப்பினது நாடுகளாகிய கர்நாடக இராஜாங்கமும், தஞ்சைசமஸ்தானமும் அங்கிலேயராளுகையில் வந்துவிட்டன. அதாவது இப்பொழுது இருக்கும் சென்னை இராஜதானிமுழுவதுமென்றே சொல்லவேண்டும். இந்த இராஜதானியில் நிலவரிவசூல் செய்வதெப்படி என்பது சீமையில் வர்த்தகச்சங்கமெம்பர்களொவ்வொ

ருவர் யோஜனைக்கு மெட்டியது. அவர்களுக்கு பங்காளத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிற ஜமீன் ஏற்பாட்டின்படி வரிவசூல் செய்வதே நலமெனத்தோன்றி அவ்வாறே சென்னையிலுஞ் செய்யும்படி அந்தராஜாங்கத்தாருக்குத் தெரிவித்தனர். சென்னைராஜதானியில் நல்ல ஜமீன்கள் கிடையாவென்பது நம்மவர்கட்கு நன்றாய்த் தெரியும். இராஜாங்கத்தார் ஜமீனுள்ள விடங்களில் ஜமீன்களுக்குள்ளும் இல்லாவிடங்களில் நூதனமாய்ச் சிலரை நியமனஞ்செய்து, அவர்களின்கீழ் ஒன்றல்லது பல கிராமங்களை உட்படுத்தியும்,வரிவாங்க எத்தனித்தனர். ஆதிமுதல் ஜமீனை யுள்ளவர்கள் தங்கள் கடமையைச் சரிவரப் புரிந்தனர். புதிதாய் ஏற்படுத்தப்பட்டவர்கள் வேலைக்கு முற்றிலும் அநருகர்களாய்க் காணப்பட்டார்கள். இராஜவருமானம் மிகவும் பாக்கிவிழ ஆரம்பித்தது. அரசிறை மந்திரிகளுக்கு வேறு எவ்வழியாலும், வரி வசூல்செய்வ தவசியமெனத் தோன்ற நேர்ந்தது.

1800-ம் வருஷத் துவக்கத்தில் சிற்சிலவிடங்களில் 'ரயித்துவாரி' ஏற்பாட்டை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விட்டார்கள். சென்னபட்டணத்தில், சிறந்த கல்லில் மேம்பாடு பெற வேலைசெய்துள்ள, சிரேஷ்டரொருவர் அழகமைந்த அசுவத்தின்மீது வீற்றிருக்கக் காண்கின்றோமன்றோ? அவர் சென்னையில் கவர்னராயிருந்த 'ஸர். தாமஸ் மன்ரோ' வென்று நமக்கு நன்றாய்த் தெரியுமே. இவர்தான் 1820-ம் ஆண்டில் 'ரயித்துவாரி' ஏற்பாடு இராஜதானி முழுதும், நிலைபெறுதற்குண்டான முயற்சிசெய்தவர். அது அவ்வாறே அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது.ரயித்துவாரி ஏற்பாடின்னதென்று கவர்ன்மெண்டார் சொல்வதைவிட நான் தெளிவாக எழுதப்போவதில்லை. அதனால் "ஒவ்வொரு பட்டாதாரனும் பூமிக்குச் சுதந்தரமுள்ளவனாவதோடு, சர்க்காருக்குக் கிஸ்தி நேரில் செலுத்துகிறவனாகிறான். அவனது நிலங்களை உட்குத்தகை விடவும், சீதனமாய்க் கொடுக்கவும், பெந்தகம்வைக்கவும், சுத்தக்கிரயசாஸனமூலமாய் விற்கவும், அதிகாரமுண்டாகிறது. அவனுக்கு ஏற்பட்டவரியை அவன்செலுத்துமளவும் பூமியைவிட்டு ஏகச்சொல்ல இராஜாங்கத்தாருக் கதிகாரமில்லை. அவன் வருஷந்தோறும் தன்நிலங்களை அதிகரிக்கவும், குறைக்கவும் இஷ்டமுண்டானால் நிலத்தைத் தரிசுபோட்டுப் புறம்பே போகவுமிடங்கொடுக்கிறது. காலநிலைபோதாத காலத்தில் முழுவதிற்காகிலும், ஒருபாகத்திற்காகிலும் கிஸ்தியை ரிமிஷன் செய்துகொடுக்க, அதாவது வரியைத் தள்ளிக் கொடுக்க, அரசாங்கத்தார் கடமைபூண்டிருக்கின்றார்கள். வரியைத் தானியமா யில்லாமல் பணமாக ஏற்படுத்தியதோடு நில்லாது அவர்கள் நினைத்தவாறு உயர்த்த வேனுந் தணிக்க வேணும் இடங்கொடுக்கவில்லை. ஆனால் புன்செயை நன்செயாக்குவதற்கும் ஒருபோகம் விளையும் நிலத்தை இருபோகமாக்குவதற்கும் தண்ணீர்த் தீர்வைபோடலாம். மிராசுடையோர் சுயமே பாடுபட்டு செய்நேர்த்தி செய்துவிளையும் அதிக விளைவை இராஜாங்கத்தோர்கவனிக்கவேகூடாது" இந்த ரயித்துவாரி ஏற்பட்டால் கவர்ன்மெண்டார், ஜனங்களுக்குக்கொடுத்திருப்பதாக வரையும் சுதந்தரங்களும் பாத்தியங்களும் சென்னைவாசிகளுக்கு உண்மையில் அங்கிலேயராலளிக்கப்பட்டனவா? அல்லது நிலத்தில் பாடுபடுவோர் தொண்டுதொட்டு, புத்திர பவுத்திர பரம்பரையாய்ஆண்டனுபவித்து வந்தனவா? வென்பதை, விவரித்து இங்குயான் நீள நினைந்து எழுதப் போவதில்லை.

இப்படி ஒரு ஏற்பாட்டால் இராஜதானிமுழுவதும் வரிவசூல்செய்ய, ஆலோசனை சபையிலுள்ள சென்னைக்கவர்ன்மெண்டார் தீர்மானித்தும், அவர்களெண்ணம் முற்றிலும் நிறைவேறவில்லையென்பதுநம்மிராஜதானியில் தற்காலம் ஒன்றல்லது இரண்டுஜில்லாக்களின் இறைகொள்ளும் ஏற்பாடு ஒன்றிற்கொன்று மாறுபட்டிருப்பதையும், நிலவரியைப் பல வழியால் வசூல் செய்துகொண்டு வருவதையும் நோக்கின் நன்குற விளங்கும். இப்பொழுது ஒவ்வொரு ஜில்லாவின் இறைகொள்ளும் வழியை எடுத்தெழுதுவதாக உத்தேசமில்லை. தஞ்சை ஜில்லாவின் ஏற்பாட்டைச் சொல்லிவிட்டால் போதுமானது. தஞ்சை ஜில்லாவிலுள்ளோர் தற்காலம் அரசிறை செலுத்தும் விதந்தான் 'மொத்தம் பைசல்' எனப் பெரும்பான்மையோருக்கு நன்றாய்த்தெரியும். இந்தமொத்தம் பை

சலுக்கு முந்தியிருந்ததற்கு 'ஒழுங்கேற்பாடு' எனப்பெயர். அதை எவ்வாறு ஜில்லாவில் பரவ விட்டார்களென்றால்:—ஒவ்வொரு கிராமத்திற்கும் விளையக்கூடிய நெல்லிவ்வளவென்று அறிந்துகொள்ள அமானியில் கண்டு முதலான நெல் தொகையையும் முந்திய இராஜாக்கள் நாட்களிற் கண்டு முதலான நெல் தொகையையும் ஒப்புநோக்கி ஒருவித முடிவிற்கு வந்து, அந்த முடிவாகத் தீர்மானஞ்செய்த நெல்லினின்றும், கிராமச் செலவு நீக்கி, பாக்கியுள்ளவற்றில் அருவி பாய் நிலங்களுக்கு 100 - க்கு 50 வீதமும், மானவாரி நிலங்களுக்கு 100 - க்கு 55 வீதமும், மிராசுவாரம் நீக்கிப்பாக்கியுள்ளவற்றையும், கிராமாதிகாரிகளுக்கு ஏற்பட்ட சுதந்தரத்தையும் கூட்டி, கவர்ன்மெண்டார் வாங்குவதானார்கள். இந்தத் தீர்வையை நெல்லாக வசூல்செய்வ தில்லை. ஒவ்வொரு மாகாணத்திலும் விற்றிருக்கும் ஐந்துவருஷ தானிய விலைச் சராசரியை யெடுத்துக்கொண்டு, ஜமாபந்தி காலத்தில் விற்கிறவிலை ஷைவிலைக்கு 100 க்கு 10 அதிகமிருந்தால், அதைச் சேர்த்துக் கொண்டும், 100க்கு 5 கம்மியாயிருந்தால் சராசரி விலையினின்றுங் குறைத்துக் கொண்டும் அந்த விலைப்படியுள்ள பணத்தை வசூல்செய்வதானார்கள்.

மொத்தம் பைசலால் தஞ்சைஜில்லாவிற்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியைவிட அதிகப்படுத்துவது, இராஜாங்கத் தாருக்குப் பிந்தி அலட்டையும், நஷ்டத்தையும்-பெண்டுபிள்ளைகள் குழந்தை குட்டிகள் உற்றார் உறவினர் மற்றுமுள்ளோருடனும், நெற்றிவியர்வை நிலத்திற் சொட்டச்சொட்ட, அல்லும் பகலும் ஊணுறக்கமின்றி, தங்கள் செயலாற் றடுக்க வொண்ணாத ஆற்றுவெள்ளம், மழைவெள்ளம், காலந்தப்பி வீசுங்காற்று, அதிகக்காற்று, ஜல அருந்தல்போன்ற பல விஷயங்களைக் கருதிக்கருதி, பூரண கர்ப்பிணியைப் பாது காப்பதுபோல் வேறு வேலைகளில் மனதைச் செல்லவிடாது, ஒரே கவலையாய்த் தங்கள் நெல்விளைவு கழனிகளைப் புரக்கும், அனேக இலட்சம் பிரஜைகளின், வாணாளைக்குன்றச்செய்து நித்திய தரித்திரர்களாய் ஆக்குவதற்கு மார்க்கத்தையும் விளைப்பதாய் முடியுமே யொழிய, காருண்ய மகாராணி மனப்பூர்வ தயாளசிந்தையின் பலனைக் கிருஷித் தொழிலுடையோ ரடைவார்களென்பதற்கு எட்டுணை யேனுமிடமில்லை. இது என்னுடைய சொந்த அபிப்பிராயமட்டுமன்று. சென்னையில் மிகத் திறமை வாய்ந்து இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்த, 'ஸர் சார்லஸ் டிரிவிலியன்' இராஜ்ஜிய பரிபாலனக் கொள்கையை நன்குற வுணர்ந்த சமர்த்தர். அவர் அன்று சாற்றிய மொழி யாதோ வென்றால், "தஞ்சை ஜில்லாவில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கிற உன்னத செட்டில்மெண்டைக் கெடுப்பது எவ்வழியாய்ப் பார்ப்பினுந் தப்பென்றே தீர்மானிக்கவேண்டும். அதாவது, பொன்முட்டையிடுகிற வாத்தைக் கொலைபுரிந்து (ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாய் எடுப்பதைவிட, ஒரேநாளில் ஏகமாய் எல்லாவற்றையும் எடுப்ப தொக்க) முட்டைபெற வுத்தேசிப்பதாகும். ஏனெனில், இடைவிடாத உழைப்பினுடையவும், முதலாகப் போட்ட ஏராளமான திரவியத்தினுடையவும் பயனாகிய பணத்தின் பெரும்பாகத்தை ஸர்க்கார் பொக்கிஷத்திற்குச் சேர்க்க அடிக்கடி செய்யும் செட்டில்மெண்டுவேலை, இன்னுமொரு ஐம்பது வருடத்திந்து அவர்கள் பயப்படவும் நிலத்தில் நம்பிக்கை வைக்காமலிருக்கவும் தகுந்தகாரணமாயிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் தஞ்சாவூருக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற தீர்வையே போதுமானதென்பதுதான்." இவ்வாறு புகழப்படும் 'மொத்தம்பைசல்' 1830ம் ஆண்டில் ஜில்லாவின் சில பாகங்களில் மட்டுமிருந்தது. 1859ம் ஆண்டில் ஒழுங்கேற்பாட்டை மாற்றி ஜில்லா முழுவதிற்கும் ஏற்படுத்தி விட்டார்கள். அப்பொழுது ஜனங்களுக்கு மிகக் கஷ்டமாயும், அந்த ஏற்பாட்டின் கீழ் மிராசுடைமை அதிக வருத்தமுள்ளதாயுங் காணப்பட்டது. அன்று ஜில்லா கலெக்ட்டரா யிருந்த 'கிண்டர்ஸ்லி'யின் பேரைக் கேட்டா லழுதபிள்ளை வாய்மூடுமென்பது உண்மையைவிட அதிகமாகக் காணப்படினும் ஒருவாறு வாஸ்தவமே. ஜனங்களோ மாரியம்மன் காளியம்மன்களை எவ்வாறு பூஜித்துநடுங்குவரோ, அவ்வாறே, கிண்டர்ஸ்லியின் பெயருக்கு நடுக்கமுற்றனர். ஆனால் பிந்தி கவர்ன்மெண்டார், ஆறு, ஏரிகளிற்கட்டிய அணைகளாலும், வலைபோல் பின்னிய ரஸ்தாக்களாலும், ரெயில் முதலியதுகளாலும், நிலங்களின் வரும்படி முற்றிலும் மோசமாய்க் குறைந்துபோகாமல், தானியவிலை முன்னைவிட அதிகமாய் விற்றுக்கொண்டு வந்தபடியால், மிராசுடையோர் பலரும், பெருங்கடனாளிகளாயிருந்தும், முன்னளவு கஷ்டமில்லாமலிருந்து கொண்டிருக்கிறார்கள். அனேக விடங்களில் வருத்தம் நிவர்த்தியாகாமலு மிருந்து கொண்டிருக்கிறது. 'கிண்டர்ஸ்லி'யின் பெயர், தற்காலம் கெட்டிக்காரனுக் குபயோகப் படுத்துகிறார்கள், இவன் 'கிண்டர்ஸ்லி'யென்றால் ஒவ்வொன்றின் பகுப்பையும் நன்றாய் அறியக்கூடிய சமர்த்தனென்றாகும். அவர்நாளில்முந்தி சாகுபடி செய்யப்பட்ட நிலங்களையும், மொத்தம் பைசலனுஷ்டானத்திற்கு வருகிற காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களையும் ஒத்துப் பார்த்தார்கள். ஒவ்வொரு கிராமத்தின் விளைவையும் அவைகளினடுத்த கிராமங்களின் விளைவையும் ஒத்துப்பார்த்தார்கள். 'ஒழுங்கு' ஏற்பாட்டின் தானிய விளைவு சராசரிபோடுவதற்கு முன்னர் அமானியிலிருந்த நிலங்களினின்றும் சுபிக்ஷ காலத்தில் விளைந்த நெல்தொகையையும், கெடுதற் காலத்தா லுண்டாகிய பஞ்ச விளைவையும், நன்றாய் மனதிற்கு வாங்கினார்கள். அமானியிலிருந்த நிலங்களின் கண்டுமுதல் சராசரியை மிகக் கவனித்தார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடையவும், பென்ஷன்வாங்கிய அனுபவ முதிர்ந்தவர்களுடையவும், அபிப்பிராயங்களை அவர்களுக்குச்சுயமேதெரிந்தவிடங்களுக்கும், கேள்வியாலறிந்துகொண்ட விடங்களுக்கும், வாங்கினார்கள், மிராசுதார்களைத்தனித்தனியும் ஒரு இடத்தில் கூட்டியும் வேண்டியமட்டில் விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதமாகப் பலவாறாய் விஷயங்களைச் செவ்வையா யறிந்துகொண்ட பின்னர் தான் 'மொத்தம் பைசல்' செய்தார்கள்.

இது ஒருபால் நிற்க, 1855-ஸூல்சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு அனுஷ்டானத்திலிருக்கிற செட்டில்மெண்டுக்கு முந்தி, நடக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிலமளந்த கணக்கும் வரும்படிக் கணக்கும், கர்[illegible] முதலியவர்களால் முடித்தவைகளாயிருப்பதால், அவநம்பிக்கை யுண்டாக்கத் தலைப்பட்டன. உடனே சீமையிலுள்ள வர்த்தக சங்கத்தாருக்கு இராஜதானியில்செட்டில்மெண்டு செய்யவேண்டுமென்று எழுதினார்கள். 1851-ம் வருஷத்தில் அவர்களும் ஒப்புக்கொண்டு அவ்வாறேசெய்ய உத்திரவுசெய்து விட்டார்கள். அதன்பேரில் தான் 1858-ம் ஆண்டில் 'சர்வே டிபார்ட்டுமெண்டு' ஏற்பட்டது. அது முதல் அவர்கள், ஒவ்வொரு ஜில்லாவாக முன்னே அளந்து கணக்குத் தயார்செய்து கொண்டு போகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து பின்னே 'செட்டில்மெண்டு' உத்தியோகஸ்தர்கள் செட்டில்மெண்டு செய்துகொண்டு போகிறார்கள். சர்வே டிபார்ட்டுமெண்டையும், செட்டில்மெண்டு டிபார்ட்டுமெண்டையும் ஏற்படுத்தியதின் நோக்கத்தையும் உத்தேசத்தையும் பற்றி, சென்னைக்கவர்ன்மெண்டார் என்ன வெளியிட்டிருக்கின்றன ரென்றறிந்துகொள்வ தவசியம். அவர்கள்வரைவதாவது:—"ஒவ்வொருவருக்குந் தாங்கள் செலுத்தவேண்டிய கிஸ்தி இன்னதென்று நிச்சயப்பட்டுப்போய் விடும். ஏமாற்றியாவது இலஞ்சங் கொடுத்தாவது ரிமிஷன்கள் கவரன்மெண்டாரிடத்திலிருந்து, பயிர்த்தொழி லுடையோர் பெற இடமில்லாமற் போய்விடும். ஆகையால் கெஞ்சிக் கூத்தாடியாவது இலஞ்சங் கொடுத்தாவது ரிமிஷன் செய்துகொள்ளலாமென்ற வெண்ணம் ஜனங்களிடத்திலிருந்தும், ஏராளமானபணத்தைஜனங்களிடத்திலிருந்து வாங்கலா மென்ற வெண்ணம் உத்தியோகஸ்தர்களிடத்தி லிருந்தும், விட்டு நாளுக்குநாள் அகன்றிடவு மிடமுண்டாகும். அப்பொழுது மிராசுதாரர்கள் ஒரு வித கஷ்டமுமின்றி அதிகத்தொகை சர்க்காருக்குக் கொடுக்க இடமுண்டாகும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிற் பலருக்கு இலஞ்சமாய்க்கொடுக்குந் தொகையினின்றும், ஜனங்களை மீட்பதோடில்லாமல், கவர்ன்மெண்டை ஏமாற்றிச் சொற்பவரி செலுத்துபவர்களுக்கு அதிகக் கிஸ்தி செலுத்தும்படியும், அநீதமாய் அதிகவரி செலுத்திக்கொண்டு வருபவர்களுக்குக் குறைத்துச் செலுத்தும்படி. செய்யவும் ஏற்பட்டுப்போய் விடும். இம்மட்டோ? அதிக [illegible] [illegible] ஜாஸ்தியு மில்லாமல், நிதானத் தீர்வை, அடிக்கடி (புது செட்டில்மெண்டால்) மாறாமல், சாசுவதமாய் ஏற்படும் பொ

ழுது, நிலத்தில் மிராசுதார்களுக்கு அதிக மோசமுண்டாகும். தற்காலம் கிருஷித்தொழில் மிகவும் ஈனஸ்திதியிலிருந்துகொண்டிருக்கிறது. நேராகவும், சார்பாகவும் பற்பலவரிகள் நிலத்தின்மேல் போடப்பட்டிருக்கின்றன. இத்தகை யதிங்கினின்றும் நிலத்தைத் தப்பித்து விடும்பொழுது, மிராசுடையோர் மாத்திரமன்று, மற்றும் பணமுடைய பல்லோரும் தங்கள் திரவியத்தை நிலத்தில் போடவுந்தானே தூண்டுதல் உண்டாகும். மேலுமதிகத் தீர்வையுந் தப்பான கணக்கும் சாகுபடியில் பொய்க்கணக்குக்கொடுக்க அதிகவிடங் கொடுக்கின்றன. இவ்வித மோசம் அதிகமாய்த் தேசத்திலிருப்பது அடிக்கடி தகவலுக்கு வந்திருக்கிறது. இலஞ்சம் வாங்குகிற கீழ் உத்தியோகஸ்தர்களினுதவியாலே இவ்வாறுநடந்துகொண்டு வருகிறதென்பது ரிவினியூ உத்தியோகஸ்தர்களுக்கு நன்றாய்த்தெரியும். வரியைக் குறைத்து விட்டால் சர்க்கார்ப்பணத்தை ஏமாற்றுவதற்கு அவ்வளவு இடங்கொடுக்காது. ஏனெனில் உத்தியோகஸ்தர்களுக்கு இலஞ்சங்கொடுக்கத்தூண்டுதலில்லாமற்போய் விடுமன்றோ. தப்பில்லாமலளந்து தெளிவுறவும் சுலபமாயும் கணக்கு ஏற்படுத்திவிடின், மோசஞ்செய்வதற்கு முடியாதகாரியமாய்ப் போய்விடும். அன்றி ஒருவிசை செய்துவிட்டால் ஆபத்தாய் முடியும்.

“ரஸ்தாக்களும் தேசத்திற்கு இன்னும் வேண்டிய சௌகரியங்களும் நாளுக்குநாளதிகரித்துப்பரவவும், தங்கள்ஜனனநாட்டைத் துறந்து கடல் கடந்து அயல்தேசம்போக என்றும் விருப்புடையோ ரல்லராயிருந்தும், தரித்திரத்தினிமித்தமும், வேலை யகப்படாததினிமித்தமும், கடல்கடக்கும்படி நேரிடுகிற சாந்தமும் ஸாத்வீககுணமும் பொருந்தி, மிக்க உழைப்பாளிகளாயுமுள்ள, ஜனங்களால், சாகுபடிக்கு வாராத அனேக தரிசு நிலங்களுள்ள இச்சென்னைஇராஜதானியில், விவசாயத்தொழில் விர்த்திக்கு வரும்படியாகத் தணிந்த தீர்வையை ஏற்படுத்தி விட்டால், அனேக நிலங்கள் சாகுபடிக்கு வந்துவிடுமென்பதில் யாதொரு சந்தேகமில்லை. இப்பொழுது அனேக நிலங்களுக்கு சரிவரக கஸ்து செலுத்தாமலே கவர்ன்மெண்டை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். அந்த நிலங்களுக்குக் கிரமமான தீர்வையை ஏற்படுத்த வேண்டுமென்பது இந்த செட்டில்மெண்டின் நோக்கங்களிலொன்று. உத்தேசப்படி செட்டில்மெண்டு செய்வதானாலதிககாலம் பிடிக்கும். சர்வே அளவும் செட்டில்மெண்டும் இந்த இராஜதானிக்குச் செய்துமுடிக்க 15-அல்லது 20-வருடங்களுக்குக் குறையா. ஒவ்வொரு வருஷத்திலும் இராஜதானியின் வரும்படியில் 15-அல்லது 20-ல் ஒருபாகந்தான் சீர்திருத்தப்பட்டு வரும். இப்பொழுது இராஜதானியிருக்குங் கெட்ட நிலைமையை யோசிக்குங்கால் புது செட்டில்மெண்டால் இராஜாங்கத்தின் வரும்படி அதிகரிக்குமே யொழிய குறையாது. ஜனங்களுக்கோ லாபம்மிகப்பெருகும். ஸர்க்காரிறையோ இப்பொழுதை விட இரண்டல்லது மூன்று பங்கு அதிகரிக்கும். ஜனங்களோ, கஷ்டமில்லாமலும் வருத்தமில்லாமலும் தம்தம் வரியைச்சுலபமாய்க் கொடுக்கப் பிரியப்படுவார்கள்.”

இத்தகைய கவர்ன்மெண்டாரது அபிப்பிராயத்தையும், ஸர். சார்ல்ஸ்டிரிவிலியன் துரையவர்களது தீர்மானத்தையுங் கலந்து செய்யும் ஏற்பாடே தஞ்சைக்குப் பொருந்தியதென்று நிச்சயமாய்க் கூறலாம். அதாவது புதுசர்வே அளவும், அனுஷ்டானத்திலிருக்கிற மொத்தம் பைசலால் ஏற்பட்டிருக்கிற தீர்வையுமே இராஜாங்கத்தாருக்கும் பிரஜைகளுக்கும் ஏற்ற செட்டில்மெண்டாகும்.

கோட்டூர் ஜி. ஸ்ரீநிவாஸ முதலியார்.

மாதர் மஞ்சரி.

II. சகோதரி டோரா சரித்திரம்.

“அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.*”—குறள்.

சரீரபலத்தையே நீதியாகக்கொண்டு, பிறர் தம்மாற்படுங் கஷ்டங்களைப்பற்றிச் சிறிதும் நினையாமல், தத்தம் நயத்தையுஞ் சுகத்தையுமேகருதிமுடித்தல், மிருகசாதிகளுக்குள் இயல்

* “அன்பிலாதார் பிறர்க்குப் பயன் படாமை[illegible] புடையார் அவற்றானே யன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்” பரிமேலழகர்.

பாயிருக்கின்றது. நரி தன் கலியாண முழக்கத்தில் நண்டின் பிராணாவஸ்தையைப் பற்றிச் சிறிதும் நினைக்கிறதில்லை; அதுபோலவே வேட்டை முழக்கத்தில், நாய், நரியின் கஷ்டங்களுக்கு இரங்குகிறதுமில்லை. ஆனால் நாகரீகமுள்ள மனிதனோ சுயநயத்தோடு பிறர் நயத்தையும் பாராட்டு மியல்பினனாயிருக்கின்றானாயினும், உற்றுப்பார்க்கின் சுயநயத்தின்பொருட்டே பிறர்நயத்தைப் பாராட்டுகின்றானென்று கூறுவர் சிலர். இது பெரும்பாலும் மெய்யே.

“தருமம் தானம் என்று உலகு அறியுங்
கருமம் அனைத்துஞ், செய்பவன் கருத்தைக்
காணின், நாணமாம். அவரவர் தனக்கா
எண்ணிய எண்ணம் எய்துவான், பலவும்
பண்ணுவர் புண்ணியம்போல. எல்லாந்
தன்னயங் கருதியன்றித், தனைப்போற்
பின்னொருவனை யெணிப்பேணுவ ருளரோ”*

இக்கொள்கையுடைய சிலர், முற்றிலும் பரோபகாரமாகவே செய்யப்படுஞ் செய்கைகளையுங் கூடச் செய்பவர்களுக் குண்டாகும் சந்தோஷமாகிய சுயநயத்தின் பொருட்டே செய்யப்பட்டனவெனக் கூறுவர். அப்படியாகின், பிறர் சந்தோஷத்தைத் தானும் மனங்குளிர அனுபவித்துப், பிறர் கஷ்டங்களின் பொருட்டுத் தானும் வருந்தி யுழைத்தலே, பரோபகாரத்தின் பண்பாம். அதுவே மனிதர்களுக்கும் மிருகங்களுக்கு முள்ள முக்கிய பேதமாம். தன்னயத்தை மட்டுங் கருதுவோனை மிருகங்களுக்கு மேலாகக் கூறுதல் தப்பன்றோ? இச்சரித்திரம் பரோபகாரிகளிற் சிறந்த ஓர் பெருமாட்டியைப் பற்றியது.

டோரா பாட்டிஸன் என்னும் பெருமாட்டி இங்கிலாந்து தேசத்தில்‘யாற்க்’ மாகாணத்தில் 1832-ம் வருஷத்திற் பிறந்தாள். அவள் உயர்ந்த வம்சத்தினள்; சிறந்த கல்விப்பயிற்சியுடையவள்; அழகும் நற்குணமும் மிகுந்தவள்; வேட்டை முதலிய விளையாட்டுகளில் விருப்பமுடையவள்; உல்லாச மனத்தினள்; தன்னிஷ்டப்படி நடக்க இச்சையுள்ளவள். கடைசியிற் [illegible] குணத்தினால் விளைந்த நன்மைகளையுந் தீங்குகளையும் இச்சரித்திரத்தில் அறிந்து கொள்ளலாம்.

டோரா 1856-ம் வருஷத்தில், பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் பெருமாட்டி கிரீமியா யுத்தத்திற் காயப்பட்ட வீரர்களைச் சௌக்கியப்படுத்த வுழைக்கும் உழைப்பைப் பற்றிக் கேள்வி யுற்றுத் தானும் வெளியே சென்று பரோபகாரமா யுழைக்க வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் அவளுடைய தாய் தந்தையர்கள் அதைத் தடுத்து விட்டார்கள். அது முதல் டோரா தன் வீட்டில் வீண்பொழுது போக்குவதை வெறுத்து, வெளியே போகச் சமயம்பார்த்துக் கொண்டிருந்தாள். சில வருஷங்களாக இதைப்பற்றித் தன் தகப்பனோடு வாதாடி முறண்டிப், பின்பு 1861-ம் வருஷத்தில் அவர்சொல்லைமீறிக்கொண்டு வீட்டை விட்டுப்போய் விட்டாள். போகவே, அவர் அதுவரையும் உடுப்புகளுக்காகவும் கைப்பணமாகவுங் கொடுத்துவந்த சொற்ப திரவியத்தை மாத்திரம் கொடுத்துக்கொண்டு வந்தார். சாப்பாடு வீட்டு வாடகைமுதலிய செலவுகளுக்குப் பணம் மறுத்து விட்டார். டோரா அதன் பேரில், உல்ஸ்டன் என்னுங் கிராமத்தில், ஓர் சிறு குடிசையை யமர்த்திக்கொண்டு ஒரு வேலைக்காரிகூட வில்லாமல், மூன்று வருஷங்களாய்ப் பள்ளிக்கூடம் வைத்து ஜீவனஞ் செய்து கொண்டு வந்தாள். அவளிடத்திற் கல்விகற்ற குழந்தைகளெல்லாம் அவள் சொற்படியே நடந்தன. அவள் அன்பு அவ்வளவு சக்தியுள்ளது. அவ்விடத்திலுங்கூடத் தன் பள்ளிக்குழந்தைகளின் சுற்றத்தார் யாராவது பிணிகளால் வருந்தப்பட்டபொழுது, தான் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தாள். சுற்றுமுள்ள ஜனங்களெல்லாம் அவள்உயர்ந்த குணமுள்ள சீமாட்டியென்று அறிந்துகொண்டபோதிலும், அவள்தன் வீட்டுவேலைகளை யெல்லாந் தானேசெய்து கொள்வதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். கற்றுணர்ந்த பெருமாட்டிகள் வேலை செய்வது இழிவல்லவென்பது அவர்கள் புத்திக்குப் புலப்பட வில்லை. சுத்தத்தையும் ஒழுங்கையும் விளக்கும் வேலைகளைப் பார்க்கினும், அழுக்கும் ஒழுங்குத் தப்பும், “பெருமாட்டி” என்ற பெயருக்குப் பாத்திர முள்ள மாதின் மனதைப், பதின்மடங்கு வருத்துகின்றன.

* மனோன்மணீயம் I, 5, 84-90.

டோரா தன் மனம்போன போக்கெல்லாம் போக விருப்ப முடையவளென்று கூறினோம். தான் மிகவும் நேசித்த தகப்பனாரை மீறிநடந்த மனது யாருக்கு அடங்கும். தானாகவே வர வர அடக்கிக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அப்படியிருந்தும் அவள் ஒரு "சகோதரிகள் கூட்டத்திற்" சேர்ந்தாள். இப்படிப்பட்ட சங்கங்கள் இத்தேசத்திற்கிடையா. இங்கிலாந்து முதலிய சில தேசங்களில், ஒரேமதக் கொள்கைகளுள்ள சில பெண்பிள்ளைகள், பரோபகாரமா யுழைக்கும் பொருட்டு, ஓர்சங்கம் ஏற்படுத்திக் கொண்டு தங்களுக்குள்ளேயே அதிகாரிகளை நியமித்தானபின், அவ்வதிகாரிகள் கட்டளைகளையே வேதவாக்காகக்கொண்டு அச்சங்கத்து மாதர்கள் நடப்பார்கள்*. என்ன காரணமிருந்தபோதிலும் கட்டளைகளைச் சிறிதும் மீறக்கூடாது. இவ்வழக்கம் வருவதற்காகச் சோதனைகள் செய்வதுண்டு. ஒருநாள் "சகோதரி" டோரா சங்கத்துமாதர்களுக் கெல்லாம் படுக்கைகள் போட்டாள், உடனே ஒரு "சகோதரி" மேலதிகாரியின் உத்தரவின்படி படுக்கைகளை யெல்லாங் குலைத்துவிட்டு, டோராவை மறுபடியும் படுக்கைபோடும்படி கட்டளையிட்டாள். புதிதாய்ச் சேர்ந்த "சகோதரி" யொருத்தி வீடெல்லாந் துப்பரவு செய்தானபின், மற்றொருத்தி மேலதிகாரியின் கட்டளைப்படி மண்ணையுஞ் சாம்பலையுங் கொண்டுவந்து சிதறுவாள். புதுச் "சகோதரி" சிறிதும் முறுமுறுக்காமல் மறுபடியுஞ் சுத்திசெய்யவேண்டும். இவ்விதக் கட்டளைகளாலுண்டாகும்நன்மைகளைப்பார்க்கிலுந் தீங்குகள் மிகுதியானவையென்று யோசிப்போருக்குத்தெரியவரும்.

1865-ம் வருஷத்தில் சங்கத்தார் அவளை 'வால்ஸால்' என்னுங் கிராமத்து 'ஆசுபத்திரி' யில் பணிவிடைகள் செய்யும்படி யனுப்பினார்கள். ஒரு வருஷத்துக்குள் டோராவை யவ்விடம்விட்டு மாற்றினவுடன், வால்ஸால் கிராமத்தார் அவள் அன்பையும் உதவியையும் உணர்ந்து, சங்கத்தாருடன் வாதாடினார்கள். அச்சமயத்தில், தன் தகப்பனார் வெகு அசௌக்கியமாயிருப்பதாயும், தன்னைப் பார்க்க மிகவும் விரும்புவதாயும், டோரா கேள்விப்பட்டாள். உடனே யவள் தன் தகப்பனாரைப் போய்ப் பார்க்க விடை கொடுக்கும்படி சங்கத்தாருக்குத் 'தந்தி' யடித்தாள். சங்கத்தார் உடனே, தகப்பனாரைப் பார்க்கப் போகக் கூடாதென்றும், அயல் ஜில்லாவிலுள்ள ஓர் பிணியணிக்குப் பணிவிடைசெய்யப் போகும்படிக்குங் கட்டளை யிட்டார்கள். அந்தோ! டோரா அக்கொடிய கட்டளைப்படி நடந்தாள். அவள்தகப்பனார் அவளைப் பாராமலிறந்தார்.

மனிதர்களுக்குப் புத்தியிருப்பது, தாங்கள் அப்புத்தியைப் பிரயோசனப் படுத்தும்பொருட்டே யொழிய, மற்றவர் சொற்படி குருட்டுத்தனமாய் நடப்பதற்கல்ல. புத்தி யுள்ளமட்டும் நாம் செய்யுங் காரியங்களுக்கு நாமே யுத்தரவாதிகளாகிறோம். நாம் பெற்ற புத்தி யாகிய விளக்கை யணைத்துவிட்டு, பிறரால் நடத்தப்படுதல் பாவமே. டோரா அப்படிச் செய்ததற்கு அவள் பட்டமனவருத்தமே போதுமான தண்டனையாயிருந்தது. அவள் 1875-ம் வருஷத்தில் சங்கத்தை விட்டுவிட்டாள். காரணங் கேட்டோருக்கு "நான் ஒருபுத்தியுள்ளபெண்பிள்ளை, இஷ்டப்படி யாளப்படும் வீட்டுச் சாமான்களிலொன்றல்ல" வென்று சொன்னாள்.

தன் தகப்பனார் இறந்தமுதல் டோரா 'வால்ஸால்'கிராமத்துப்பிணியாளிகளுக்காகவும் அநாதைகளுக்காகவும் உழைத்துவந்தாள். சொந்தமனக்கவலைகளையும்விசனங்களையும்மறக்கும்பொருட்டு, தன்வேலையைவெகுஆவலுடன் செய்தாள். காயங்களைச் செவ்வையாக ஆற்றக்கூடிய தாதியாக வேண்டுமென்பதே யவளுடைய முக்கியவிருப்பம். வேலைக்கூடங்களில்நெருப்புப்படுவதாலுண்டாகும்புண்களை யாற்றுவதில், அவள் சாமர்த்திய முள்ளவளாயிருந்தாள். ஒரு வயது சென்ற வைத்தியர் அவளுக்குச் சொல்லிக் கொடுத்து வந்தார். ஒருவிசை யவரையுங்கூட மிஞ்சிவிட்டாள். ஒரு கூலிக்காரன் வலதுகை விகாரமான சேதத்தை யடைந்தது. டோராவின் குருவாகிய வைத்தியர், மனிதன் பிழைக்

* இவர்கள் சங்கத்திற்சேரச் சில சடங்குகளுண்டு. அச்சடங்குகளின்படி சேர்த்துக்கொள்ளப்பட்ட மாதர் ஒவ்வொருவருக்கும் 'சகோதரி' என்கிற பட்டப்பேர் கொடுத்தழைப்பார்கள்.

கவேண்டுமானால் அவன்கையைப் பூராவாய் அறுத்தெடுத்து விடவேண்டுமென்று சொன்னார். டோரா, கையையும் மனிதனையுஞ் சொஸ்தப்படுத்துவதாகச் சொல்லி, இரவும் பகலும் தூங்காமல் மருந்துகள் போட்டு, கடைசியில் சொஸ்தப்படுத்தி விட்டாள். அவள் குரு மற்ற வைத்தியர்களுடன் டோராவைப் புகழ்ந்தார். சௌக்கியப் படுத்தப்பட்ட மனிதனுக்கு ஊரார் "சகோதரிகை" யென்ற பட்டப்பெயரைக் கொடுத்தார்கள். பிற்பாடு ஒருவிசை டோரா அசௌக்கியமா யிருக்கும் பொழுது, அம்மனிதன், ஒரு காதவழிக்கப்பால் இருந்த போதிலும், தினமொருதரம் வந்து மணியையடிப்பான். வேலைக்காரி வந்தவுடன் "சகோதரி சௌக்கியமோ?" வென்று கேட்டு, பின், "அவள்கை' மணியை யடித்தது" என்று சொல்லச்சொல்லி விட்டு, காதவழிக் கப்பாலுள்ள வீட்டுக்கு நடந்து போவான். நெருப்புப் புண்களிலுண்டாகும் கெட்ட நாற்றத்துக்கு அவள் சிறிதும் அஞ்சுகிறதில்லை. ஒருவிசை மற்றத் தாதிகளும் வைத்தியர்களுங்கூட மனம்பொறுக்காமல் வெளியேபோய்விடத் தான் மாத்திரமிருந்து பணிவிடை செய்தாள். கதைகள் சொல்லியும், பரிகாசமாய்ப் பேசியும், நோயாளிகளின் மனதைத் தேற்றுவாள். நித்திரைமத்தியில் நோயாளிகள் கூப்பிடுவதுபோற் சொப்பனங்கண்டு விழிப்பாள். நோயாளிகளெல்லாம் அவளைத் தாயைப்போல் நேசித்தார்கள்.

ஒருகாலத்தில் வைசூரி கொடுமையாய்ப் பாவித்தது. தான் வைசூரி காணப்படாதவளாயிருந்த போதிலும், அஞ்சாமல் வைசூரி மத்தியிற் பணிவிடைகள்செய்து வந்தாள். ஒருமனிதன் கொரேமாய்ப் பாதிக்கப்பட்டான். அவன் சிநேகிதர்களும் பந்துக்களுங்கூட வீட்டைவிட்டோடி விட்டார்கள். ஒரு பெண்பிள்ளைமாத்திரம் பயங்கரமான அம்மனிதன்கூட விருந்தாள். டோரா வந்தவுடன் மெழுகு வத்தியில்லாததைக்கண்டு, வாங்கிக்கொண்டு வரும்படி அப்பெண்பிள்ளை கையிற் பணங்கொடுத்தனுப்பினாள். அப்பெண்பிள்ளையோ நல்ல சமயமென்றறிந்து ஓடிப்போய் விட்டாள். டோரா மாத்திரம் அவன் வேண்டுகோளின்படி இராமுழுவதும் அவனுடன் இருட்டில் வீற்றிருந்து, காலையில் அவன் இறந்து போனபின் வெளியே சென்றாள். அவளைக்கண்ட மாத்திரத்தில் யாவரும் சந்தோஷத்தையும், மனதைரியத்தையுமடைந்தார்கள். அவள் ஆறுமாதம் வைசூரி 'ஆசுபத்திரி' யில் வேலைசெய்தாள். வைத்தியர்கள் வரும்பொழுது தவிர மற்றப் பொழுதெல்லாம் நோயாளிகளுடன் தனியே யிருக்கும்படி நேரிட்டது. சரியான உதவி யில்லாததினால் அவளே முக்கியமாயுள்ள வேலைகளையெல்லாஞ் செய்தாள். ஒருநாளிரவில் ஒரு வைசூரி நோயாளி கம்பீர ஜன்னிபிறந்து படுக்கைவிட்டெழுந்து வெளியே புறப்பட்டான். டோரா வாசலிற் கைகளைவைத்து மறைத்துக் கொண்டாள். அவன் எதிர்க்கத் தலைப்பட, டோரா விடிந்து வைத்தியர் வருமளவும், அவனைப் பலத்தினால் படுக்கையிற் கிடத்திப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. வைசூரிகண்ட நோயாளிகள் உடம்பழுகி அவர்கள் மேல் புழுக்கள் நெளியும்பொழுதுங்கூட, அருவருப்பின்றிப் பணிவிடைகள்செய்து வந்தாள். அவள் மனோதைரியத்தைப்பற்றி அநேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குடிவெறிகொண்ட ஒருமனிதன் 'ஆசுபத்திரி'க்கு வந்து, இரவெல்லாம் அங்கே கழிக்க விரும்புவதாகச் சொன்னான். என்ன சொல்லியும் கேளாததினால், டோரா வழியை மறித்துக்கொண்டு நின்றாள். அம்மனிதனோ அவள் முன்பாகச் சாவகாசமா யுட்கார்ந்து கொண்டான். மற்றத்தாதிகள் பயந்து ஓடிப்போய் விட்டார்கள். டோரா வழிவிட மாட்டாளென்றறிந்து, அம்மனிதன் சமையலறை வாசலுக்கு ஓடினான். டோரா ஓடிப்போய் அதையும்மறைத்துக்கொண்டாள். அவன் தன்னை அடிப்பானென்று எண்ணினாள். அப்படியின்றி, அவன் அவள் தைரியத்தைமெச்சிக்கொண்டே வெளியேபோய் விட்டான்.

டோரா நோயாளிகளின் சரீர நோய்களைச் சொஸ்தப் படுத்தினதுந் தவிர, அவர்களுடைய ஆத்தும விருத்தியையுங் கோரினாள். அவள் மூலமாய்த் துன்மார்க்கத்தைவிட்டுச் சன்மார்க்கத்தில் நடக்க முயன்றவர் அநேகர். அவள் பரோபகாரச்சிந்தையையும் அன்பையுங்கண்டு துஷ்டர்களுங்கூடச் சாந்தகுண முள்ளவர்களா

ஞர்கள். கெட்ட நடத்தைகளுள்ள ஓர் நோ
யாளி தூங்கி விழிக்கும்பொழுது, அன்பே உரு
வெடுத்துத்தன்படுக்கையருகே தன்க்ஷேமத்துக்
காகத் தேவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்
பதைக்காணு வானுயின், அவன் மனம் உருகு
மல்லவா? இவ்விதமாயும், அன்புள்ளார் மட்டும்
அறியும் பலவித நற்செய்கைகளாலும், டோரா
அப் பட்டணத்தாரைத் தனக்குக் கடமைப்
படுத்திக்கொண்டாள்.

டோரா நாற்பத்திநாலு வயதானவளாயிருக்
கும்பொழுது, தான் ஓர்கொடிய நீராநோயால்
பிடியுண்டிருப்பதை யறிந்தாள். அவளுடைய
மனோதைரியமும் முறண்டும் இதிலும் வெளிப்
பட்டன. சரீரதிடத்திற் சிறந்தவளாயும், நோ
யாளிகளுக்குத் தாய்போன்றவளாயு முள்ள
இப்பெண்மணி தனக்குவந்த நோயைவெளியிட
லாகாதென்றுநினைத்து ஒருவரிடமுஞ் சொல்ல
வில்லை. நோயின் துன்பங்களை யெல்லாம் இரக
சியமாய்ச் சகித்துக்கொண்டு, தன் வேலைகளைக்
குறைபடாமற் செய்துவந்தாள். தன் வருத்தத்
தை நன்குமறைக்கும் பொருட்டும், தானிறப்ப
தற்குமுன் தன்னாற்கூடியமட்டும் நன்மை செய்
வதற்காகக் கீர்த்திபெற்ற வைத்தியர்களிடம்
வேலை கற்கும் பொருட்டும், கொஞ்ச காலத்
துக்கு லண்டன்* பாரிஸ்† முதலிய பட்டணங்க
ளுக்குப் போயிருந்தாள். 1878-ம் வருஷத்தில்
டோரா வால்ஸாலுக்குத் திரும்பி வந்தாள்.
அதே வருஷத்தில் அப்பட்டணத்து மேலதி
காரி (Mayor) அவள்பெயரால் ஒருபுது 'ஆசுபத்
திரி' யேற்படுத்தினார். அப்பொழுது அவள்
வெகு அசௌக்கியமா யிருந்தாள். தான் சாகு
மளவும் எப்பொழுதும்போல் உல்லாசமாய்ப்
பேசிக்கொண்டிருந்தாள். அதே வருஷத்தில்
'சகோதரி டோரா' இறந்துபோனாள். ஜனங்க
ளின் விசனம் இவ்வள வவ்வளவன்று. பக்தியு
டனும் நன்றியறிதலுடனும் அனேக ஞாபகச்
சின்னங்கள் ஏற்படுத்தினார்கள். கூலிசெய்து
பிழைக்கும் ஜனங்கள் சுத்தவெள்ளையான
பளிங்குக் கல்லினால் (Marble) அவளைப்போல்
ஓர் சிலையடித்து நிறுத்தினார்கள்.

இச்சரித்திரத்தால் நாம் முக்கியமா யறியக்
கூடிய தொன்றுளது. சாதாரண ஜனங்கள்
பாக்கியவான்களாக மதிக்கும் தன்னயமே கரு
தும் தனவான்களில், யாரேனும், டோரா தன்
பரோபகாரங்களில் அடைந்த ஆநந்தத்தில் ஓர்
சிறுபங்காயினும் அடைகிறார்களென்று நினைக்
கிறீர்களோ? எவனொருவன் தன்னயத்தையே
பாராட்டித் தன் மனங்களித் தலையே முக்கிய
மாகக்கொண்டு நடக்கிறானோ, அவனெண்ணம்
நிறைவேறுகிறதில்லை. நிறைவேறினும் அது புக
ழத்தக்கதன்று. பிறரைக் களிக்கச் செய்வதில்
தான் மகிழ்ச்சியடைதலே பரோபகாரத்தின்
பண்பாம். அந்நற்குணமுண்டாயின் வருத்தந்
தோன்றாது. பிறருக்குழைப்பதே முக்கிய சந்
தோஷமாய் விடும். இதனால் தன்னயத்தை
இகழ வேணுமென்பது பொருளல்ல. தன்ன
யத்தைமட்டுங் கருதலாகாது. அப்படிச்செய்
தல் "அன்புடையார்" செய்கையல்ல. "அன்
புடையார் என்பு முரியர் பிறர்க்கு."

பேரேசி.

* அங்கிலேய தேசத்தின் இராஜதானி. உலகத்தி
லுள்ள பட்டணங்களி லெல்லாம் பெரிது.

† பிரான்ஸ் தேசத்தின் இராஜதானி.

தமிழ்ப்பாஷை.

தமிழ்ப் பாஷையிலுள்ள இலக்கியங்கள்.

(ச. சரவணமுத்துப்பிள்ளை பி. ஏ. அவர்கள் இயற்றியது.)

(57-வது பக்கத் தொடர்ச்சி.)

இவை தோன்றியகாலத்தே
திருவள்ளுவர்குறள். தோன்றிப் பொருளில் இவை
யாவற்றிற்குஞ் சிறந்ததும், தமி
ழ் எனுமாது உச்சியிற்றரிக்குஞ்சூடாமணியெனச்சொ
ல்லக்கூடியதும், தமிழின்பெருமையை யெங்கும் பர
வச்செய்ததும், சாதிபேதம்மதபேதமின்றி யாருமெக்
காலத்துங் கைக்கொள்ளக் கூடியதும், தமிழர்க்குப்
பெருஞ்செல்வமாயதும் திருவள்ளுவரியற்றிய திருக்
குறளே. இந்நூல் லத்தீன் பாஷையிலிருவராலும்
பிரான்சிலொருவராலும், ஜர்மேனிய பாஷையிலொ
ருவராலும், ஆங்கிலேயபாஷையில் மூவராலும்
மொழிபெயர்க் கப்பட்டுளதாயின் இதன் பெருமை
யையானோ எடுத்துரைக்கவல்லேன்; தமிழ்வேதமெ
ன்னும் பெயருமிதற்குத் தகுந்ததே; இவ்விதநூல்
வேறொருபாஷையிலு மில்லையாயின் இதனாற்றமிழு

டையம்பெருமை யிவ்வளவிற்றெனவெடுத்துரைக்க
ற்பாற்றோ! இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு
என்னும நான்கில் அறம், பொருள், இன்பமென்னும்
மூன்றையுமே 1330 குறளிற்கூறுவது. வீட்டைப்
பற்றி யேன்கூறவில்லையோ தெரிதலரிது. வள்ளுவர்
நான்கையும்பற்றி யெழுதியிருப்பார்; வீட்டுப்பாகம்
இறந்துபோயிருக்க வேண்டுமென்பர் சிலர். அறம்,
பொருள், இன்பம் மூன்றும்பாடி வீட்டைப்பற்றிப்
பாடுமுன் வள்ளுவர் இறந்திருப்பர் என்பர் சிலர்.
அநுபவத்தைக்கொண்டு அறம், பொருள், இன்பம்
என்னும்மூன்றையும் பற்றியுறுதியாச் சொல்லியவர்
வீட்டைப்பற்றி யுறுதியாச்சொல்ல முடியாமையின்
எழுதாது விட்டனர் என்பர்சிலர். இந்நூல் சகல
சாதிகளிடத்திலும், சகலமதத்தரிடத்திலும், பரம்ப
வேண்டுமென்னும் விருப்புடையோராய், சகலர்க்கும்
பொதுவான அறம், பொருள், இன்பம் என்னுமூன்
றையும்சொல்லி வீடு சகலர்க்கும் பொதுவாகாமை
யின் கூறாது விட்டனர் என்பர் ஒரு சாரார். அஃ
தெவ்வாறாயினுமாகுக, அது இற்றைக்காயிர வருடங்
கட்கு முன் குறள் போன்ற ஒருநூல் இயற்றியதமி
ழர் மிகவுஞ் சீர்திருந்தியிருந்தனர் என்பதற்கான்ற
அத்தாட்சியாகும். ஆயின், இவ்வள்ளுவர் எங்கிருந்த
னரோ, யாது தொழிற்செய்தனரோ, எம்மதத்தின
ரோ, எக்காலத்திருந்தனரோ இவை யாருமறியா
மறைபொருளா யிருக்கின்றன. மயிலாப்பூரி லிருந்த
னர் என்றும், நெய்தற்றொழில் செய்தன ரென்றும்
பெரும்பான்மையும் சொல்வர். சைவர்கள் இவரைச்
சைவரென்பர். வைணவர் வைணவரென்பர். போப்
(Dr. Pope) துரை கிறிஸ்தவர் என்பர் போலும்.
சமணர் இவரைச் சமணரென்றே கூறுவர். இக்காலத்
திலேயே திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முத
லிய நிகண்டுகளும், பவணந்திமுனிவரியற்றிய நன்
னூலும் எழுதப்பட்டன எனக்கூறுவர். இத்துடன்
தமிழணங்கின் வாலிபதிசையும் பூர்த்தியாயிற்றெ
னக் கூறல்வேண்டும். இவற்றிற்கும், இவற்றிற்குப்
பின்வரும் மற்றைய நூல்களுக்குமுள்ள பேதத்தை
நோக்குங்காலத்து, இவ்விருகாலத்துக்கு மிடையில்
இருநூறு முந்நூறு வருடங்கள் சென்றிருக்க வேண்
டுமெனத் தோற்றுகின்றது. ஆயின் இடையேசென்ற
இக்காலத்து நூல்கள் எழுதப்பட்டனவோ, எழுதப்
பட வில்லையோ, இல்லையேல் அது யாது காரணம்
பற்றியோ, இவை யார்க்கும் புலப்படா.

கம்பராமாயணம்.

இற்றைக்கு ஏறக்குறைய ஆயிர
வருடங்களுக்கு முன்னே தமி
ழில் இராமாயணம்பாடப்பட்ட
தென்பர் சிலர். சமஸ்கிருதத்
திற்கு வான்மீகியும், கிரேக்கருக்கு
ஹோமரும், ஆங்கிலேயர்க்குமில்டனும் போலத்
தமிழுக்குக் கம்பருளர். உலகத்திலுள்ள மலை
கள் யாவற்றிற்கும் இமயமலை யெவ்விதமோ அவ்வி
தமே தமிழிலுள்ள கவிகள் யாவர்க்குங் கம்பர். கம்
பரின் அறிவும், கம்பரின் வாக்குவல்லபமும் இவ்வள
விற்றென அளவிடற்பாலனவோ? சிறந்தகவி யொ
ருவர்க்கு வேண்டியகுணங்கள் யாவையோ அவையா
வுங் கம்பரில் நிறைந்திருக்கின்றன. மற்றுந் தமிழ்க்க
விகளிலுள்ள குறைகள்கம்பரிலும் ஆங்காங்கே தோற்
றுகினும் இதரதேயக் கவிகளிலுள்ள நற்குணங்கள்
யாவும் கம்பரில் காணப்படுகின்றன. தமிழிலக்கியத்
தின் மகிமை நம்பாதவொருவற்குக் கம்பராமாயண
மொன்றுமே தமிழின் மகிமையை நிலைநிறுத்தும்
இதரதேயத்து முக்கிய கவிகளுடன் சம ஆசனத்
திலுட்காருந்தகைமை யுடையவர் கம்பரே. தமிழ
ணங்கினுச்சியிலணியும் இரத்தினச்சூடாமணி திருக்கு
றளாயின், அவ்வணங்கின் மார்பில்துலங்கும் நவரத்
தின மிழைத்த மகரகண்டிகை கம்பராமாயணமென்
பதற்குச் சிறிதுமைய முளதோ? கம்பர் வான்மீகத்
திலிருந்தபடி இராமாயணத்தை மொழி பெயர்த்த
வரல்லர். இராமாயணக் கதையை யெடுத்துக்கொ
ண்டு தானொரு இராமாயணமியற்றியவரோ. வான்மீக
இராமாயணத்திற்கும கம்பராமாயணத்திற்கும்கதை
யிலேயே பலவிடத்திற் பேதமிருக்கின்றன. இரண்டு
இராமயணத்தையும் பார்த்தோர் சிலர் கம்பராமாய
ணமே சிறந்ததென்பர். கதைசொல்லும் விதத்தி
லும், வர்ணனையிலும், ஒருவரோ டொருவரைப் பே
சச்செய்யும் விதத்திலும் கம்பருக் கிணையானோர்
தமிழில் வேறு யாவர்? அதுவுமன்றிக் கம்பராமாய
ணத்தை யெங்கெடுத்துப் பார்க்கிலும் அங்கங்கே
அற்புதமாயிருக்கும். சிலகாலத்துக்கு முன் யான் கம்
பராமாயணம் வாசிக்கத்தொடங்கிப் பாலகாண்டம்
வாசித்தபொழுது இராமாயணத்திற் பாலகாண்டமே
சிறந்தபாகமென நினைத்திருந்தேன். பின் அயோத்
தியாகாண்டம் வாசிக்கும் பொழுது பாலகாண்டத்
தைப் பார்க்கிலும் அயோத்தியகாண்டமே சிறந்த
தென்றேன். பின் ஆரணியகாண்டத்திற்கு வந்த
பொழுது சந்தேகமின்றி ஆரணியகாண்டமே சிறந்த
தென்றேன். யுத்தகாண்டம் வரைக்கும் வாசித்தோ
ரொருவர் யுத்தகாண்டம் மற்றெல்லாக் காண்டத்
தைப்பார்க்கினுஞ் சிறந்ததென்றார். இவ்விதங் க
தின் சிறந்ததெது சிறவாததெது? ஆதிதொடங்கி யந்
தம்வரையும ஆனந்தக்கடலா யிருக்குமாயின் அதன்
சிறப்பை யெடுத்துரைக்க யானோ வல்லேன்? தமி
ழிலிருக்கும் நூல்களிற் கம்பராமாயணத்தைவிட மற்று
யாவு மழிந்தபோதிலும், கம்பராமாயண மொன்று
மே தமிழுக்கு அளவிறந்த பெருமை கொடுக்குமா
யின், கம்பராமாயணம் இத்தன்மைத்தெனச் சொ
லற்பாலதோ! அதுநிற்கக் கம்பர்யார்? அரசன் என்

பார் ஒரு சாரார். வேளாளனென்பார் மற்றொரு சாரார், வைணவனென்பர் வைணவர், சைவன் என்பர் சைவர். சமணனென்பார் யாருங்காணேம். 'கற்றோர்கவியுட் பெரிதாந்தமிழ்க் கம்பநாடன்' சரித்திரமே இவ்வாறிருக்கின் தமிழ்ப்புலவர்சரித்திரம் எங்கு கண்டு பிடிப்பேம்? இராமாயணம் முழுவதும் கம்பரால் பாடப்பட்டதன்று. பாலகாண்டமுதல் யுத்தகாண்டம் வரைக்குமே கம்பர் பன்னீராயிரத்துச் சொச்சச்செய்யுளாற் செய்திருக்கின்றனர். உத்தரராமாயணம் அவர்காலத்து வசித்த ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டுள்ளது. அவர்காலத்து வசித்த புகழேந்திப் புலவரால் நளவெண்பா வென்னும் திவ்விய கிரந்த மியற்றப்பட்டது.

ஔவையார்.

இக்காலத்திற்கு முன் எட்டுத்தொகை, பத்துப்பாட்டுத் தோன்றிய காலத்திருந்த ஔவையாரையும் யாம் கவனியாதுவிடக்கூடாது. ஔவையார்இயற்றியபெருங்கிரந்தமில்லாது போயினும் யாம்அனைவருஞ் சிறுவயதிற் கற்ற ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றை மறத்தலரிதாயிருக்கின்றதே. அதுவுமன்றி ஔவையார் பெண்ணென்ற பொழுதே அவர்பெயரை யாம் எப்பொழுதும் மனதில்வைத்திருக்க வேண்டியதாயு மிருக்கிறது. முற்காலத்தில் பெண்கல்வி யிருந்ததற்கும் இது அத்தாட்சியாகின்றது.

தேவாரங்கள்.

இராமாயணம்முதலிய தோன்றிய காலத்திற்கு முந்தியே தமிழ்ப்பாஷைக்குச்சிறந்த பாக்கியமாகிய தேவாரங்களெழுதப்பட்டன. இவை அப்பர், சுந்தரர், சம்பந்தரொனு மூவராலெழுதப்பட்டன. இவர்மூவரில்பிந்தியவர் சுந்தரரே. யாவுங்கடவுள்மேல் துதியாகக்கூறப்பட்டனவேனும் தமிழ்ப்பாஷையின் வல்லபத்தையும் இனிமையையுந் தெற்றெனக்காட்டக்கூடியவை இவைகளே. வாசிப்போர் மனதையுருக்கும் வல்லமை தமிழிற்கில்லை யென்போர்க்குத் தேவாரப் புத்தக மொன்றைக் கையிற்கொடுத்தல் நன்மருந்தாகும். தேவார மேதேனு மொன்றைப் பண்ணுடன் சொல்லுங் காலத்து நிரீச்சுரவாதிக்கும் மனமுருகுமாயின் தேவாரத்தின் சிறப்பைச்சொல்லவும் வேண்டுமோ? மாணிக்கவாசகரியற்றிய திருவாசகமு மித்தன்மையதே. திருவாசகம் தேவாரத்திற்கு முந்தியதே போலும். இத்தன்மையதான வைணவர்க்குச்சிறந்த திருவாய் மொழியும் ஏறக்குறைய இக்காலத்திலேயே தோன்றியது.

பாரதம், நைடதம்.

இவை யாவற்றிற்கும் ஐந்தாறு நூற்றுண்டிற்குப் பிந்தியே தமிழில் பாரதமும் நைடதமுமெழுதப்பட்டன. இதற்குமுதல்சங்கத்தார் காலத்தெழுதிய பெருந்தேவனார் பாரதமே வழங்கியிருக்க வேண்டும். அது வெண்பாவாலும், வசனத்தாலு மியற்றப்பட்டது. பின், வில்லிபுத்தூரர் இயற்றியது விருத்தப்பாரதம். இது மிகவும் நல்ல நூலாயினும் தமிழிலிருக்கும் முக்கிய நூல்களிலொன்றன்று. வில்லிபுத்தூரர் பாரதக் கதையைச் சுருக்கி யெழுதியது மன்றி, முடியவும் எழுதவில்லை. பாரத யுத்தம் முடிய வில்லிபுத்தூரர் பாரதமும் முடிகின்றது. சமஸ்கிருதத்திற்கு வியாசர் பாரதம் எவ்வளவு கீர்த்தி பெருக்கிற்றோ அதிற் பாதியேனும் தமிழிற்கு வில்லிபுத்தூரர் பாரதஞ் செய்ய வில்லை. அதிவீரராம பாண்டிய னியற்றிய நைடதம் பலராலும் புகழப்பட்ட தேனும் மிகவுஞ் சிறந்த நூலன்று. தமிழிலக்கியம் கற்கத் தொடங்குவோர்க்கு முதலில் மிகவும ஆனந்தங்கொடுப்பது நைடதம். ஆயின் அதன்சிறப்புவரவரக்குறையும். அதிவீரராமன்மற்றுங் கவிகளைப்பார்த்துத் தன் யுக்தி வல்லபத்தாற் செய்ததுவே யொழிய நைடதம் கம்பரைப் போன்ற ஒரு மகாகவியினு லியற்றப்பட்ட நூலன்று. நைடதந்தவிர அதிவீரராமன் காசிகாண்டமும், கூர்மபுராணமும், வெற்றிவேற்கையும் இன்னுஞ் சிலசிறு நூல்களு மியற்றினான். இக்காலத்திலேயே ஈழதேயத்தி லிருந்த மகாகவியாகிய அரசகேசரி யென்பவரால் இரகுவம்மிசந் தமிழிலியற்றப்பட்டது. அது மிகவும் சிறந்தநூலே; ஆயின் அது இந்தியாக்கரையில் மிகவும் வழங்கக்காணேம். இக்காலத்து, சமஸ்கிருதம் மிகவும் பிரபல்லியமடைந்த தென்பதும், தமிழ்வித்துவான்கள் பலரும் சமஸ்கிருதங் கற்று அதிலுள்ளபடி தமிழிற் கிரந்தமியற்றத் தொடங்கினரென்பதும், சிறந்தகவிகளாகிய அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரர், அரசகேசரி முதலியோர் சமஸ்கிருத நூல்களைத் தமிழிலெழுதுவதில் திருப்தியடைந்திருந்தமையே காட்டும்.

புராணங்கள்.

இனிப் புராணத்தைப் பற்றிச் சற்று விசாரிப்போம். புராணந் தொடங்கியகாலத்திலேயேதமிழுக்கும் அஷ்டமத்திற் சனிவந்தது. தமிழ் மகிமையிழந்ததற்கும்; சிறந்த காவியமுதலியவை யெழுதப்படாது போயதற்கும், புராணமே முக்கியகாரணமென யான் நினைக்கின்றேன். தமிழிலெழுதக்கூடிய பெருநூல்களில் மிகவுஞ் சுலபமா யெழுதக்கூடியது தலபுராணமே. பிற்காலத்துத் தலபுராணங்கள் கணக்கற்றுப் பெருகியதும் இதனாலேயே. இப்புராணங்கள் எழுதப்பட்டிருக்கும் பாஷையிலிருந்தும், இப்புராணங்களிற் கூறப்படும் விஷயங்களிலிருந்தும், தமிழணங்கிற்கு வாக்குமாறிய விருத்தாப்பியகாலம் வந்தது தோற்றும். புராணகாலத்தை யிருகூறாகப் பிரிக்கலாம். முற்கூற்றில்வரும் புராணங்கள் மிகவும் சிறந்தவைகளே. மேற்கூறிய குற்றங்கள் இவற்றிற்குப் பொருந்தா. இப்புராணங்களை இயற்றியோர், இராமாயணம், சிந்தாமணிமுதலிய நூல்களை மாதிரியாக வைத்து எழுதினவர்களாகையால் இப்புராணங்களும் மிகவுஞ் சிறந்திருக்கின்றன. பரஞ்சோதிமாமுனிவரியற்றிய திருவிளையாடற் புராணமும், சிவஞான முனிவரியற்றிய காஞ்சிப்புராணமும், கச்சியப்ப முனிவரியற்றிய தணிகைப் புராணமும், கச்சியப்ப சிவாசாரிய ரியற்றிய கந்தபுராணமுமே புராணங்களுட் சிறந்தன.

திருவிளையாடற்புராணம் சிவபெருமானது அறுபத்துநாலு திருவிளையாடலையும் பற்றிக்கூறும். இதிலேயே பாண்டியரது சரிதமும் தமிழ்ச்சங்கத்தின் சரிதமுங் கூறப்பட்டுள்ளது. இது மிகவும் பழநூலன்று.

பெரியபுராணம் அறுபத்துமூன்று சிவனடியார்களின் சரித்திரத்தைக் கூறுவது. இது சேக்கிழார் சுவாமிகளாலியற்றப்பட்டது; சைவர்களால் மிகவும் கொண்டாடப்படுவது.

காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம் இரண்டும் தலபுராணம். இவை பிற்காலத்தன.

கந்தபுராணம் ஸ்ரீ கைலாயபதியாகிய சிவபெருமானின் திருக்குமரர் சுப்பிரமணியக்கடவுளின் சரித்திரத்தைக் கூறுவது. புராணங்களுட்சிறந்த திதுவெனச் சொல்லவேண்டும். இதைப் பெருங்காப்பியமெனல் மிகவும் பொருந்தும். கம்பராமாயணத்திற்குச் சற்றே கிட்டவரும் மகத்துவத்தையுடையது. கற்றறிந்தோர்க்கு மிகவுமாநந்தங் கொடுக்கும் வல்லமைத்து. சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை ஏராளமாய் நிறைந்துள்ளது. ஆங்கிலேயர்முதலிய பிறசாதியார்க்குத் தமிழின் மகிமைக் கெடுத்துக் காட்டாக நூல்காட்டவேண்டுமேல் முதல்இராமாயணம், இரண்டாவது கந்தப்புராணம் எனக் காட்டக்கூடிய தகைமைத்து தமிழ்நூல்களிற்சிறந்தவற்றுள் முக்கியமானதொன்று. பதினாயிரத்துச் செய்யுட்கொண்டது. இது தென்னிந்தியாவில் மிகவும் வழங்காமைக்கும், நமது சர்வ கலாசாலையாரால் எடுத்தாளப்படாமைக்கும் காரணம் யாதோ அது என் சிற்றறிவுக் கெட்டிலது.

தாயுமானவர் பாடல்.

இரண்டொரு நூற்றூண்டிற்கு முந்தி யிருந்த தாயுமானவர் பாடல்களும் சாமான்னிய மானவை யல்ல. வேதாந்தக்கடலைக் கரைகண்டுணர்ந்து வேதாந்த முழுவதையும் செவிக்குமதுரமான பாக்களாற் பாடியருளின தாயுமானவர் தமிழிற்கோர் சிறந்த ஆபரணமன்றோ? கற்றோர்தவிரக் கல்லாமூடர் வாயிலும் சாதாரணமாய்வருவது தாயுமானவர்பாட்டன்றோ? தாயுமானவரைக் கொண்டன்றோ அனேக ஏழைப் பண்டாரங்கள் வயிறு வளர்க்கின்றனர்?

பிற்கூற்றுப் புராணங்கள்.

புராணங்களை யிரு கூறுகப் பிரித்து முற் கூற்றைப் பற்றிச் சிறிது சொன்னேன். பிற் கூற்றுப் புராணங்களின் காலமே தமிழுக்குங் கலிகாலம். விருத்தாப்பிய மடைந்த தமிழணங்கிற்குப் பஞ்சப்புலனும் இக்காலத்துக் கெட்டன போலும். இப்புராணங்களே தமிழைப் பாழாக்கின பெரும்பேருடையன. ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரைபோலவும், ஊமைக்குளறுவாயன் மகாவித்துவானென்பது போலேயும், தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்ட னென்பது போலேயும், காரிகை கற்றுச் சொற்றொடர்க்கப் பழகினோர் யாவரும் புராணமெழுதத் தொடங்கின் தமிழென்ன பாடு தான் படாது? தமிழிலிருக்கும் புராணங்களோ நூற்றுக்கணக்கா யிருக்கின்றன. ஆயினவை நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது போகிப்பண்டிகையில் அக்கினிவளர்த்தற்கே தக்கனவாயின், இப்புராணங்களிருக்கின்றனவென்று யாம் மகிழவும் வேண்டுமோ? இப்புராணிகர்தமிழிற்காவது உலகத்திற்காவது யாது நன்மைதான் செய்தனரோ! இவற்றை நினைக்குந்தோறும் எனக்கு மனம் புழுங்கு கின்றது; காணுந்தோறுங் கண்கலங்குகின்றது. அந்தோ! இந்நிலைமை தமிழுக்கும் வரவேண்டுமோ! புராண காலத்தின் முற்கூற்றிற் சிறந்த புராணங்கள் சில வெடுத்துக் காட்டினேன். இப்பிற் கூற்றிலும் சிறந்த புராணங்கள் சிலவுளவேனும் எடுத்துக் காட்டிற் பெருகுமாதலின் காட்டாது விட்டனன்.

கோவை.

இதுநிற்க, கோவையென்னும் பெயருடைத்தாய், அகப்பொருண்மேலதாயியற்றப்படும் நூல்கள் தமிழிற் சிலவுள. இவ்வித நூல்கள்வேறு யாதொருபாஷையிலு மிருப்பதாக யான் கேள்விப் பட்டிலேன். இவை தமிழ்க்கே உரியன. இவற்றுட்பலவுளவேனும், மாணிக்கவாசக ரியற்றிய திருக்கோவையாரும், பொய்யாமொழிப் புலவரியற்றிய தஞ்சைவாணன் கோவையுமே மிகவும் பலராலும் வாசிக்கப்படுவன.

மற்றுமுள்ள கிரந்தங்கள்.

முற்கூறிய இலக்கண நூல்களன்றி 'யாப்பருங்கலம்' 'யாப்பருங்கலக்காரிகை' என்னும் யாப்பிலக்கணங்களும், 'தண்டியலங்காரம்' 'மாறனலங்காரம்' என்னும் அணியிலக்கணங்களும் பழைய கிரந்தங்களே. ஆயின் எக்காலத்திற்குரியனவோ அறியேன்.

பிற்காலத்திய தமிழிலக்கணங்களுள் வைத்தியநாதநாவலரியற்றிய இலக்கண விளக்கமும், ஈசான தேசிகரியற்றிய இலக்கணக்கொத்தும், சுப்பிரமணிய தீக்ஷிதர் இயற்றிய பிரயோகவிவேகமும், சிவஞான சுவாமிகளியற்றிய தொல்காப்பியச், சூத்திரவிருத்தியும், இலக்கணவிளக்கச் சூறாவளியும் சங்கரநமச்சிவாயப் புலவர் எழுதிய நன்னூல்விருத்தியுமே சிறந்தன.

சாவித்திரி சரித்திரம்.

இரண்டாவது அதிகாரம்.

என் அத்தையம்மாளைத் துரத்தியான பின் செங்கமலம் தன் ஊருக்குக் கடிதம் எழுதினாள். அடுத்த வாரத்தில், அவளுடையதாய்தந்தையர்களும், உடன்பிறந்தவர்களும் வந்துசேர்ந்தார்கள். செங்கமலத்தின் தாய் ஒரு கொடிய நீலி. பொல்லாத சூதுக்காரி. ஒருவருக்கும் பயப்படமாட்டாள். அவள் கருத்தையெதிர்க்க ஒருவரும் துணியமாட்டார்கள். சாந்தகுணமுள்ள அவளுடைய கணவர், அவள் முன்பு, பூனையைக் கண்ட எலிபோல் பதறி நடப்பர். அவளுடைய குழந்தைகளோ அம்மா சொல் தட்டமாட்டார்கள். அவர்கள் செங்கமலத்தைப் பார்த்துப்போக வந்தார்களென்று நான் நினைத்திருந்தேன். அப்படியன்று; மறுநாள் நடந்த சமபாஷணையால், வந்ததின் கருத்து வெளிப்பட்டது.

சாயங்காலம் நாங்கள் எல்லோரும் சமையல் அறைப்பக்கத்தில் தலைவாரிக்கொண்டு உட்கார்ந்திருந்தோம். என் தகப்பனாரும், செங்கமலத்தின் தகப்பனாரும், நாங்கள் இருந்த இடத்திலிருந்தே அவர்களுடன் பேசும்படிக்கு, நடையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். செங்கமலத்தின் தாயாகிய விசாலாக்ஷி அம்மாள் பேசத்தொடங்கினாள்:—

"ஓய்மாப்பிள்ளை! இப்பொழுதுதங்கம்விலையென்ன?"

"பவுன் பதினைந்து ரூபாயாகவிருக்கிறது. விலை உயரலாம்; இறங்குவதற்கு இடமில்லை."

விசாலாக்ஷி:—"ஆனால் உயர்வதற்குமுன்பாகச்செங்கமலத்துக்குஓர் பவுன்மாலை செய்துபோடவேண்டும் வெறும் கழுத்து விகாரமாயிருக்கிறது.எங்கள் ஊர்த்தட்டான் நல்லவேலைக்காரன். நகைகள்வெகுநேர்த்தியாய்ச் செய்கிறான். சங்கரய்யர்பெண் காமாக்ஷிக்கு அறுநூறு ரூபாயில் ஓர் பவுன்மாலை அவள் புருஷன் செய்து போட்டிருக்கிறான். அவனுக்கு மாதம் மூந்நூறு ரூபாய் கிடைக்கிறது." பெருமூச்சுவிட்டுக்கொண்டு: "செங்கமலத்தை முதலில் அவனுக்குக் கேட்டார்கள். அதிஷ்டம் வேண்டாமா? இனிமேற் சொல்விக் கதையென்ன? என்னிடத்தில் அறுநூறு ரூபாய் கொடும், நான்செய்து அனுப்புகிறேன்."

என் தகப்பனார்:—"இரண்டு மூன்று வருஷம் கழித்துப் பார்ப்போம். சாவித்திரிக்கும், கோபாலனுக்கும் கலியாணம் செய்ய வேண்டியிருக்கிறது. பணமோ கையிலில்லை. இந்தச் சமயத்தில் நான் அறுநூறுரூபாய்க்கு எங்கே போகட்டும். அன்றியும், என் தரத்திக்கு, அறுநூறு ரூபாய்க்குப் பவுன் மாலைசெய்தால் ஊரார் கைதட்டிச் சிரிப்பார்கள். பண்ணைக் கிருஷ்ணய்யர் பெண்ணுக்குக் கூட மொத்தம் அறுநூறு ரூபாய்க்கு நகையில்லையே. அப்படியிருக்க—"

விசாலாக்ஷி:—"அப்படியுமிருந்தது, இப்படியுமிருந்தது! கிடக்கிறான் கைம்பெண்டாட்டி! பண்ணையாரென்றால் எனக்கென்ன? இவனைப்போல் நூறு பண்ணையாரை நான் பார்த்திருக்கிறேன். என் குழந்தை செங்கமலத்தைவிட இவன் பெண் உயர்த்தியோ? என்குழந்தை இந்தவயதில் நகையில்லாம லிருப்பதோ சரி? உம்முடைய குழந்தைகளுக்குக் கலியாணம் செய்தாலும் செய்யாமற் போனாலும் எனக்கென்ன? பவுன்மாலை யிப்பொழுது செய்துதீரவேண்டும்."

என்தகப்பனார்:—"பவுன் மாலைசெய்வதற்குத்தடையொன்றுமில்லை. இப்பொழுது முடியாதென்றுதான் சொன்னேன். சர்க்கார்த்தீர்வை கூடச்செலுத்தியாகவில்லை," என்றார். உடனே செங்கமலத்தின் தமக்கை யொருத்தி சொன்னதாவது:— "அம்மா! வீண் பேச்சுப்பேசுவதேன்? நான் அப்பொழுதே சொல்லவில்லையா? இவர்கள் வீட்டுக்குக் காளைபோல் உழைப்பதற்குச் செங்கமலத்தை விட்டுவிட்டோம். அவளுக்கேது நகை? சோறுபோட்டாற் போதாதா? செல்லக்குழந்தை கோபாலனுக்கு அருமைக் கலியாணம் செய்ய வேண்டாமா?" என்று கொடுமையாய்ச் சொன்னாள். கோபாலனைத் தூஷித்தவுடன், எனக்கு அடங்காக் கண்ணீர் பெருக, நான் கோபத்துடன் முன்பின் யோசியாமற் சொன்னதாவது:—"கோபாலன்எங்களுக்குஅருமைதான். அவன் எங்கேயோபோய் வாசித்துக் கொண்டிருக்கிறான். அவனைப்பற்றியேன்பேசுகிறீர்கள்?"என்றேன். உடனே விசாலாக்ஷியம்மாள், அன்பாய்ப் பேசுவதுபோல் "அம்மா! தங்கப் பெண்ணே! சாவித்திரி! நீயும் அருமைதானே?" யென்று கேட்க, செங்கமலம், "சீ! சீ! அவள் எருமை"யென்றாள். எனக்குக் கோபமும் வெட்கமும் அதிகரிக்க, நான் சொன்னதாவது:—"நானும் அருமையாய்த்தான் வளர்ந்து வந்தேன். உங்கள் செங்கமலம் இந்தவீட்டுள் காலெடுத்துவைத்த நாள்முதல், கலகமேதவிர வேறில்லை. அவள்தான் என் அத்தையம்மாளையும் துரத்தி, என் அருமையையும் கெடுத்தாள். அவளைவிட அருமையாய்த்தான் என்னை வளர்த்து வந்தார்கள். தேவடியாள் மினுக்கு மினுக்கிப் பெண்களை விற்பது எங்களுக்குத் தெரியாது." என் தகப்பனார் "வாயை மூடிக்கொண்டிரு" என்று கோபமாய்ச் சொன்னார். மற்றவர்கள் எல்லோரும், "சாவித்திரியை விற்றால் உழக்குத் தவிடுகூடக்கிடைக்காது"என்றும், "மாட்டுக்குப் புல்லறுக்கக் கூட உதவமாட்டாள்" என்றும், "அவளேன் புல்லறுக்க வேணும்? இராணி மகன் அவளைத்தான் கலியாணம் செய்துகொள்ள

விரும்புவதாகக் கடிதம் வந்திருக்கிறது" என்றும், "சீ! உனக்குத்தெரியாது, இராணிமகனுக்குக் கலியாணம் ஆய்விட்டது, பொய் சொல்லாதே, இராணி பேரனுக்குத்தான் இவளைக் கலியாணம்செய்து கொடுக்கப் போகிறார்கள்" என்றும், பலவிதமாய்க் கேலி பண்ணிக்கொண்டிருந்தார்கள். நான் ஓர் மூலையில் அழுதுகொண்டுநின்றேன். என் தகப்பனார் தலையைக் கவிழ்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தார்.

கொஞ்சநேரத்துக்குப் பின் விசாலாக்ஷியம்மாள் மறுபடியுஞ் சொன்னதாவது:— "மாப்பிள்ளை! இதெல்லா மிருக்கட்டும். நீர் பணம் தரவேண்டாம். கலியாணத்துக்குமுன், செங்கமலத்தின் பெயருக்கு இரண்டாயிர ரூபாய் விலையுள்ள நிலம் எழுதிவைத்தீரே; அந்த நிலத்தின் இதுவரையுள்ள வருமானத்தைக் கொடும். அதைக் கொண்டு பவுன்மாலை செய்து கொள்ளுகிறோம்."

என்தகப்பனார்:—அந்த நிலவருமானத்தை நீக்கிவிட்டால், சோற்றுக்குக் கூடப்போதாதே." என்று கண்ணீர் ததும்பச் சொன்னார்.

விசாலாக்ஷி:—"அடிசெருப்பாலே, ஆற்றுக்கு அப்பாலே! நன்றாய்ச்சொன்னாய்!சோற்றுக்கில்லாத கைம்பெண்டாட்டிக்கு இரண்டாம் கலியாணம் ஏனோ? இவனுக்கோ என் பெண்மணியைக் கொடுத்தேன்! கழுதைக்குத் தெரியுமோ கற்பூரவாசனை? என் பெண்ணுனக்குச் சோறும் போட்டுக்கொண்டு அடியும்பட்டுக் கொண்டிருப்பாளென்று நினைத்தாயோ?. சென்ற செவ்வாய்க்கிழமை யிராத்திரி யேன் அடித்தாய்?" என்று கேட்டாள்.

[அடித்தசங்கதி எனக்கு அதுவரையும் தெரியாது.]

என் தகப்பனார்:—"உங்கள் பெண்ணிடத்திலே யே கேளுங்கள். நான் சாயங்காலம் கொல்லைவழியாய் வரும்பொழுது, இறைப்பாத்திக்குப் பக்கத்தில் செங்கமலம் இராமய்யருடன் பேசிக்கொண்டிருந்தாள். இராமய்யருடைய குணம் உங்களுக்குத் தெரியாது. அவர் கெட்ட நடத்தையுள்ள துஷ்டர். இந்த ஊர்க் குலப்பெண்கள் ஒருவரும் அவருடன் பேசமாட்டார்கள். யோக்கியர்கள் அவரைத் தங்கள் வீட்டுக்குள்வர வொட்டார்கள். அப்படிப்பட்ட மனிதனிடத்தில், அயலூர்ப் பெண்ணாகிய செங்கமலம் பேசிக்கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் இராமய்யர் திடுக்கிட்டு ஓடிவிட்டார். நான் செங்கமலத்தைக் கேட்க, இராமய்யருக்கும் அவள் தமையன் சாமிநாதனுக்கும் இஷ்டமென்றும்,ஆகையால் தஞ்சாவூரிலிருந்து கடிதம் வந்ததோ வென்று கேட்டுக்கொண்டிருந்ததாயும் சொன்னாள். நான் அதெல்லாம் கூடாதென்று சொல்ல, அவள் கேட்காமல் தகாதபடி பேசினதினால் அடித்தேன்."

விசாலாக்ஷி:—"இந்தக்கிழட்டுப்பிணத்தைக் கட்டியழவும் வேண்டாம்; அடிபடவும்வேண்டாம். ஒரு வேளையில்லா விட்டால் ஒருவேளை கொன்று விடுவன். செங்கமலம்! உன்னிலத்தை விற்று விட்டு நம்மூருக்குப்போவோம்வா,அவன்எக்கேடுகெட்டாவது இரந்து குடிக்கட்டும்." என்று சொல்லிக்கொண்டேயெழுந்திருந்தாள். செங்கமலம், "அம்மா! நிலம் விற்குகிறவரையும் இராமய்யர் வீட்டிலிருக்கலாம்" என்று சொன்னாள். அப்படியே அவர்கள் இராத்திரியே இராமய்யர் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

விசனகரமானதை விவரித்துக் கூறவேண்டாம். என்தகப்பனார் வியாபாரத்திற் சம்பாதித்தபொருளைக் கொண்டு வாங்கின நிலமானதால், அவர்கள் விற்றதைத்தடுக்க முடியவில்லை. சமாதானஞ் செய்யும் பொருட்டுத் தன்னிடத்தில் வந்த ஊர் கிரகஸ்தர்களுக்கெல்லாம், விசாலாக்ஷி யம்மாள், தன் மகளை விட்டு விட்டுப்போனால் என் தகப்பனார் கொன்றுவிடுவாரென்று போக்குச்சொல்லிவிட்டு, நிலம் விற்ற பணத்தை யெடுத்துக்கொண்டு, தன்மகளையுங்கூட்டிக்கொண்டு ஒரு வாரத்தில் தஞ்சாவூர்போய்ச் சேர்ந்தாள்.

செங்கமலம் போகவே யென் அத்தையம்மாள் வந்தாள். அவள் வந்தவுடன் என்னை மாரோடணைத்துக்கொண்டு அழுகையில், எனக்கு ஆநந்தக்கண்ணீர் பெருகிற்று. ஆனால் தகப்பனாரோ, அதுமுதல் வெகு துக்கத்தில் ஆழ்ந்திருந்தார். வெளியே போகிறதில்லை. தான் பாடுபட்டுத்தேடிய பொருளும், தான் ஆசைப்பட்ட பெண்டாட்டியும் போனதுமன்றி, அவமானமும், தரித்திரமும்வந்து சேர்ந்தன. அவர் முக்காடு போட்டுக்கொண்டு படுத்திருக்கும் பொழுதாவது, அல்லது தலையைக் கவிழ்ந்து கொண்டு பெருமூச் செறியும்பொழுதாவது, அவரைப் பார்த்தால் எனக்குக் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகிவிடும். ஐயோ! இறந்துபோன தாயாருக்குத் துக்கப்பட்டதைப் பார்க்கிலும், உயிரோடிருந்த தகப்பனாருக்கு நான் அதிகமாய்த் துக்கப்பட்டேன்.

செங்கமலம் வந்து கொஞ்சநாள் முதல், அவர் என்னிடத்தில் அதிகமாய்ப் பேசுகிறதில்லை. அவள் போனபின்பும், துக்கத்தினாலும், அவளால் நான் பட்டகஷ்டங்களை நினைத்தும், முன்போலவே, கொஞ்சி விளையாடிப் பேசாமலிருந்தார். ஒரு நாள் அவருக்கு ஒருகடிதம் வந்தது. நான் தபாற்காரனிடத்திலிருந்து அதைவாங்கி அவர்கையிற் கொடுத்துவிட்டு, மூக்குக்கண்ணாடியுங் கொணர்ந்து கொடுத்தேன். அவர் அதை வாசித்துவிட்டுக் கீழே யெறிந்தார். நான் பதறிக் கொஞ்சதூரத்தில் நின்றேன். அவர் அதை மறுபடியும் எடுத்து வாசித்து முன்போலவே யெறிந்

துவிட்டு, கைகளால் தலையைத் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். நான் அவருக்குக் கண்ணீர் பெருகுவதையறிந்தேன். எனக்கும் கண்ணீர் பெருகிற்று. அவர்பெருமூச்சு விடுவதை யென்னாற் பொறுக்க முடியவில்லை. நான் கடிதத்தை மறந்து விட்டேன். அவரைக் கட்டிக்கொண்டால், துக்கம் தணியுமென்று நினைத்தேன். உடனே ஓடிப்போய் அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டேன். இருவரும் ஒன்றுஞ் சொல்லாமல் விசித்து விசித்து அழுதோம். அவர் தன்மாரோடு என்னை யிறுகத் தழுவிக் கொண்டார். கொஞ்ச நேரத்துக்குப் பின் நான் அழுதுகொண்டே சொன்னதாவது:—“அப்பா! நீர் ஏன் விசனப்படுகிறீர்? நீரே,விசனப்பட்டால் நானென்ன செய்வேன்? அத்தையம்மாள்,செங்கமலத்தால் தரித்திரம் வந்ததென்று சொன்னாள். நமக்குச் சாப்பாட்டுக்குக் காணாதா? திருவனந்தபுரம் வியாபாரத்திற் கிடைக்கும் பணம் நமக்குப்போதுமே. எங்கள் கலியாணத்திற் கென்ன: என்னைக் கன்னிகாதானம் செய்ய வேண்டாம்; எனக்கு ரூபாய் வாங்கினால், அதுவே என் கலியாணச் செலவுக்கும், கோபாலன் கலியாணத்திற்கும் போதும். பிற்பாடு கோபாலன் சம்பாதிக்கமாட்டானா?“நீர் வீணாய் மனதை புண்படுத்திக் கொள்ள வேண்டாம்” என்றேன். அவர் என்னை முன்னிலும் இறுகத்தழுவிக்கொண்டு அதிகமாய் அழுதாரேயொழிய ஒன்றுஞ் சொல்லவில்லை. அதற்குள் அத்தையம்மாள் வாய்க்காலிலிருந்து வந்து சேர்ந்தாள். அவள் எங்களிருவரையும் பார்த்தவுடன் மனம் நடுங்கி, “அப்பா! சுப்பயா! என்ன விசேஷம்? எது கடிதம்? கோபாலன் சௌக்கியமோ?” என்றுகேட்டாள். எனக்கு அப்பொழுது தான்கடிதம் ஞாபகத்திற்கு வந்தது. என் தகப்பனார் பதிற்சொல்வதற்கு முன், ஒரு நிமிஷத்தில் என் மனம் பட்டதுன்பம் சொல்லிமுடியாது. அவர் மறுமொழி, நடுக்காட்டில் தாகத்தினாற் களைத்து விழுந்த பிரயாணிக்குத் தண்ணீர் எப்படியிருக்குமோ, அப்படி யெனக்கிருந்தது. அவர்சொன்னதாவது:—“கோபாலன் சௌக்கியமாயிருக்கிறான். திருவனந்தபுரம் வியாபாரம் முழுகிப்போய் விட்டதாய்க் கடிதம் வந்திருக்கிறது. சொற்பவருமானமும் போயிற்று. இந்தவீடும், ஒரு சிறு வயலுந்தான் மீந்தன. ஐயோ! என் கோபாலனும், சாவித்திரியும், என்ன செய்வார்கள்.” என்று நெற்றியிற் புடைத்துக்கொண்டு கீழேசாய்ந்து விழுந்து விட்டார்.

சாவித்திரி.

*சுவர்க்க நீக்கம்
(மொழிபெயர்ப்பு)

முகவுரை.

இந்நூல் இங்கிலீஷ் பாஷையில் ‘மில்ட்டன்’ என்னும் மஹாகவியாற் செய்யப்பட்டுள்ள பெருங்காவியம். சகலமனுஷ ஜாதியாருக்கும் மூல பிதா மாதாக்களென்னும் ஆதாம் ஏவாளாகிய ஆதிமக்கள், ஏதேன் தேசத்திற் பலவளங்களுமலிந்து மனோகரமாய் விளங்கிய ஓர் சிங்காரவனமே சுவர்க்கமாக அச்சுவர்க்கத்தில் இனிதாக வாழ்ந்த காலத்திலே, கடவுள் தின்னக்கூடாதென்று விலக்கியிருந்த விலக்குமரக் கனியைச் சாத்தான துவஞ்சனையி லகப்பட்டு மயங்கித்தின்று தேவகட்டளையை மீறிப் பாவஞ்செய்ததனால், *நித்தியத்துவம் நீங்கி மரணத்துக்குஞ் சகல துன்பங்களுக்கும் (அவர்களும் அவர்கள் மூலமாக அவர்கள் சந்ததியாராகிய எல்லாமனிதரும்) உள்ளாகி, அச்சுவர்க்கத்தினின்றும் நீக்கப்பட்ட விஷயத்தைக் கூறுவதனால் சுவர்க்க நீக்கமெனப் பெயரிடப் பெற்றது. தேவகுமாரன் யேசுகிறிஸ்துவென்னு நாமத்தோடு மனுஷனாக அவதரித்துச் சாத்தான் செய்த சோதனையைக்கடந்து, அவனைச் செயித்து, பாவநிவாரணஞ் செய்து, அவர்களிழந்திருந்த சுவர்க்கவாழ்வை யவர்களுக்கு மீட்டுக் கொடுத்ததைக் கூறும் ‡‘சுவர்க்கமீட்சி’ யென்னும் நூலும்மேற்கூறிய மகா கவி செய்ததே. இவ்விரண்டு நூலும், அங்கிலேயபாஷையின் சிறந்த கருத்துகளன்றி மற்றும் அனேக ஐரோப்பிய பாஷைகளின் சிறந்த கருத்துக்களும் †ஒருங்குவதியு மிடமாகி, கிறிஸ்தியாது வேதசாரத்தை யுள்ளடக்கி,அவ்வேதத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளிரண்டுமே சொற்சுவை பொருட்சுவை நிறைந்து பல அலங்காரங்கள் மலிந்து நவரசங்கொழிக்குங் காவியங்களாக உரு வெடுத்தாற் போன்றன வென்று புகழப் பெற்றவைகள். ஆயினும் இவற்றுள்‘சுவர்க்கநீக்கம்’ காவியலட்சணத்தில் மிகவுஞ் சிறந்தது. சுவர்க்க நீக்கத்திலும், முதலிரண்டு காண்டமே ஆரம்பமுதல் அந்தம்வரையும் அதியுன்னத கவி சாதுரியங்கள் இடைவிடாது நெருங்கத் தொடுத்தமைக்கப்பெற்ற பேராச்சரியகரமான உயர்வொப்பற்ற சிறந்த காவியப்பகுதிகள். மற்றைப் பத்துக் காண்டங்களிலும் ‘சுவர்க்கமீட்சி’யிலும் அவ்வளவு சிறந்த அற்புத வித்துவ சாமர்த்தியங்கள் இடையிடையே தோன்றுகின்றனவே யன்றி யெங்கும் ஒப்பக் காணப்படவில்லை. அங்கிலேய காவியங்களி யாவற்றினு மேலானதென்று சொல்லுதல், இச்சுவர்க்க நீக்கத்துக் கோர் சிறப்பன்று; பரந்த உலகின்கணுள்ள பல பாஷைகளிற் சிறந்த காவியங்களெவற்றினு மேம்பட்டதென்று அனேக வித்வான்களால் வியந்து கொண்டாடப்பெற்றது. முதலில் லத்தின் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுப் பின்பு கிரேக்க, பிராஞ்சிய, இத்தாலிய, உலாந்திய, ஜெர்மானிய, ஆர்மீனிய,ஸ்பானிய,போர்த்துகீஸிய, ருஷிய, சுவேதேனிய, ஐஸிலாந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டதன்றித் தமிழிலும் இதன் கருப் பொருளடங்கிய ‘ஆதிநந்தவனப்பிரளயம்’என்னும் பெயரையுடைய நாடகமொன்று வேதக்கண்ணுஐயர் இயற்றியிருக்கிறாரென்றும், இதன் முதற்காண்டம் யோவான் சாமுவேல்ஐயரால் வசனரூபமாகச் செய்யப்பட்டிருக்கிற தென்றும், தோமாஸ் வேதநாயகநாடார் தாம் இதற்குப் பூங்காவனப் பிரளயம் என்று பெயர் கொடுத்துத் தமிழில் அம்மானையாக மொழிபெயர்க்க முயன்று அச்சேற்றியிருக்கும் முதலிரண்டு காண்டங்களின் மொழிபெயர்ப்படங்கிய புஸ்தகத்திற் கூறியிருக்கிறார். யானும் முதற்காண்டத்தை விருத்தப்பாவில் மொழிபெயர்த்திருக்கிறேன். இன்னம் வேறு யார்யார், எந்தெந்த ரூபமாக, இந்நூல்முழுவதையுமாவது, ஓர்பகுதியையாவது, தமிழாக்கி யிருக்கிறார்களோ அறியேன். இவ்வாறிருக்கவும், இப்போது முதற்காண்டத்தையும் பின்பு கூடுமானால் மற்றக் காண்டங்களையும் தமிழில் வசனரூபமாக எழுதக் கருதுகின்றேன். ஏனெனில், இந்த அரும்பெருங்காவியம், பலராலும் பலரூபமாக மொழிபெயர்க்கப் பட்டாலும், அவைகளொவ்வொன்றையும் வாசிப்போர்க்கு நூதனம் நூதனமான இனிமையைத்தந்து மகிழ்விக்கு மென்பதனாலும், ஒரு மொழிபெயர்ப்பிற் றோன்றாதொழிந்த அலங்காரங்கள் மற்றொன்றிற் றோன்றலாமென்பதினாலுமே. இராமாயணம் பாரத முதலிய நூல்கள் ஹிந்துக்கள் பொழுது போக்குக் குபயோகமாகுதல் போல, இந்நூல், தென்னிந்தியா, யாழ்ப்பாணமுதலிய தமிழ் வழங்குந் தேசங்களிலுள்ள அனேக ஆயிரரான கிறிஸ்தியர்கள் காலக்ஷேபத்திற் குதவுமென்பதிற் சந்தேகமில்லை. சிந்தாமணி முதலிய சமண நூல்களை, அவற்றிலுள்ள மதவிரோதங் கருதாது நூல்வனப்பை நோக்கும்படி, மற்றச் சமயத்தவர்கள் விருப்பத்துடன் படித்து மகிழ்தல்போல, இதனையேக சமயிகளல்லாதவர்களும் வாசித்தானந்தமடைவார்களென்று நம்புகின்றேன்.

முதனூலையும் அதன் வியாக்கியானங்களையும் நேராகப் பார்த்தறிதற்குக் கருவியாகிய அங்கிலேய பாஷா ஞானமில்லாதவர்கள், நூலின்விஷயத்தையும் நூலெழுதுவதில் நூலாசிரியர்க்கிருந்த நோக்கங்கள் நன்குவிளங்கும் அவர் சரித்திரத்தையும் அறிந்த பின் மொழிபெயர்ப்பை வாசிப்பது நலமாதலால், அவைகள் முதலிலெழுதப்படும்.

இந்நூலின் கருத்துக்கள் நன்றாக விளங்கும்படி செய்யப்பட்டிருக்கிற அருமையான பல வியாக்கியானங்களின் உதவியைக் கொண்டு இம்முகவுரையும் மொழிபெயர்ப்பும் எழுதப்படுகின்றன. அவ்வியாக்கியான கர்த்தாக்கள் பலருக்கும், அவர்களுள் விசேஷமாக ‘டேவிட் மேஸன்’ பண்டிதருக்கும் டாக்டர் பிராட்ஷாவுக்கும் எனது வந்தனங்களுரியன. பல தேசங்களிலும் பலகாலங்களிலும் முதன்மைபெற்று விளங்கிய பாவலருள் முதற்பாவலர் அன்றெனின் அவர்களு ளொருவரெனச் சகலபண்டிதர்களாலும் நன்கு மதிக்கப்பெற்ற மில்ட்டனுருடைய நூல்களுட் சிறந்த இக்காவியத்தின் மொழிபெயர்ப்பைத் தனது அருமைப் பத்திரிகைவாயிலாக யாவரும் வாசித்தறியும்படி பிரசுரஞ்செய்யச் சம்மதந்தந்த விவேகசிந்தாமணிப் பத்திராதிபருக்கு எனது அத்தியந்த வந்தனங்களுரியன.

வே. ப. சு.

தமிழ்மொழி வளர்த்தல்
அல்லது
தமிழ்ப்பாஷையை அபிவிர்த்திசெய்யும் மார்க்கங்கள்.

முதலாவது, நம்தேசத்துச் சிறுவர்களுக்குத்தமிழ்ப்பாஷையில் உயர்தரக் கல்வி பயிற்றுவிக்கும்படி, தகுந்த ஏற்பாடுகளுடன் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது. இது எவ்வளவோ முக்கியமான விஷயமாயிருந்தும், அனேகர், இதன் பெருமையை அறியாமல் அசட்டையாக இருக்கின்றார்கள். இதைப் பற்றிக் கவனிக்காமலிருந்தால், அதனாலுண்டாகும் கேடு ஒரு இடத்தைப் பிடிப்பதன்று, நமது நாடு முழுவதும் பிடிப்பது; ஒருநாளைக் கேடன்று, பல ஆயுள் முழுவதும் நஷ்டம். ஏனென்றால், ‘அஞ்சில் அறிந்ததே அறுபதிலும்,’ ‘பிஞ்சிலிருந்ததே பெரிதானபிறகும்,’ ‘விளையும்பயிர் முளையிலே தெரியும்’ ‘முதற்கோணலானால் முற்றுங் கோணல்’ என்றிருக்கின்றபடியால். குழந்தைகளுக்கு அச்சிறுபோதிலே நாம் தமிழில் தாற்பரியம் உண்டாகச் செய்யாவிட்டால், அவர்கள் முதிர்போதில், தமிழ் நம்முடைய பாஷையோ, இல்லையோ என்று சந்தேகிக்கும்படியான நிலைமையிலும் வந்து விடுவார்கள். அப்புறம் அதைப்பற்றி எவ்வளவுதான் புத்திபுகட்டினும், ‘செவிடன்காதிற் சங்குஊதினது’ போலாகும். ‘கழுதைக்குத்தெரியுமோ கஸ்தூரிவாசனை’யென்றிருக்கிறதே. அனேகர், தற்காலத்தில், தங்கள் குழந்தைகளை இங்கிலீஷ்படிக்க ஐந்துவயது ஆறுவயதிலேயே அனுப்பிவிடுகிறார்கள். தந்தையார் தமது குழந்தைகளுக்குத் தமிழில் கல்வி கற்பிக்கவேண்டுமே என்ற சிந்தனையே சற்றுமில்லாமல், “ஏனய்யா, உம்முடைய பையன் தமிழ் வாசிக்க வேண்டாமோ? அது நம்முடைய சுயபாஷை யல்லவோ?’ என்றொருவர் கேட்டால், அதற்கு அவர்: ‘எல்லாம் சரிதான். தமிழினாலே இப்போது நமக்கு ஆகவேண்டியதென்ன?’

* நித்தியத்துவம்—என்றுஞ்சாகாத்தன்மை.
‡ Paradise Regained.
† ஒருங்குவதிதல்—ஒன்றுசேர்ந்தமைந்தல்.
* Paradise Lost.

இங்கிலீஷ் அல்லவோ படிக்கவேண்டும்? அதனாலல்லவோ நமக்குப் பிழைப்பு? தமிழ்ப்பாஷை வேண்டுமென்றால் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் கொஞ்சம் தமிழும் சொல்லிவைக்கிறார்களே, அதுபோதாதா? அல்லாவிட்டால், தமிழை அவன் தானே படித்துக் கொள்ளட்டும். தமிழ்ப் படிப்புத்தான் என்ன வெகுதொல்லையா? அரிச்சுவடி, எண்சுவடி இரண்டும் படித்து, சாதாரணமாய் எழுத வாசிக்கத் தெரிந்தால், எந்தச் சபையிலும் முந்தியிருக்கலாமே. அவ்வளவும் போதாதா?' என்றும் கேட்கிறார். தமிழைப்பற்றி இவ்வளவு மூடமும், அசட்டையும் தகப்பனுக் கிருந்தால், மகனுக்கு அதில் இருமடங்கு அஜாக்கிரதையும், மூடமும் இருக்குமென்று சொல்லாமலே அமையும். "நச்சுமரம் நல்லகனியைத் தருமா?" "வேப்பமரத்தில் மாம்பழம் பறிக்கலாமா?" ஆகவே, பையன் தமிழென்கிற ஞாபகமேயில்லாமல் அங்கிலேயம் கற்கப் போகின்றான். போனாலோ, அங்கே தமிழ்மொழியை அருமருந்துபோலச் சிறிது எடுத்துப் பரிமாறுவதைக் கேட்கும்போது, பையன் "இவ்விடத்திலிருந்து எப்படித் தப்பிக் கொள்ளலாம்? முனுஷியார் மணிநேரம் எப்போது தொலையுமோ?" என்று மனங்கசியப் பிரார்த்திக்கும் நிலைமையிலிருக்கிறான். குப்பு (class) வகுப்பாக எப்படியாவது தப்புவித்துக்கொண்டு மேல் வகுப்புக்குப் போய்விட்டானானால், யூனிவர்ஸிற்றி (University) என்றொரு புலி அங்கே குந்திக்கொண்டிருப்பதைப் பார்த்து, தட்டுக்கெட்டுத் தடுமாறி, வேர்த்து விருவிருத்து, இதனிடத்தில் நம்முடைய பருப்பு வேகாது, இனித் தமிழ்ப்பாஷையை, ஆமணக்கெண்ணெய் உட்கொள்வதுபோல, பல்லைக் கடித்துக்கொண்டாவது சற்றுநாள் உட்கொள்ள வேண்டுமேயென்று அதன்பிறகு தன்னையறியாமல் அவசியம் தோன்றி 'நெல்வாங்கிப் போகுமட்டும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்றபடி மனமில்லாமல் படிக்கத் தொடங்குகிறான். இவ்விதமாக அப்பாடசாலையில் அவனுக்கு எம்மட்டில் தமிழ்க்கல்வி விர்த்தியாகுமென்று ஊகித்துக்கொள்ளுங்கள். படித்துப் பரிக்ஷை கொடுத்துத் தீர்ந்தால், தான் அதுவரைக்குந் தமிழில் வாசித்த இம்மியை அபக்கென்று வெளியே கக்கிவிட்டுப் போகிறான். எங்கேயென்றால், தன்தகப்பன் முதலில் எதை உத்தேசித்து தன்னை அங்கிலேயம்படிக்க வைத்தாரோ அதற்கு. அதாவது, அனேக வருத்தத்துடன், சிபார்சுதேடிச் சேர்ந்து கச்சேரியில் ஏதாவது ஒரு மூலையில் முடங்கிக்கொண்டு வெள்ளைக் காகிதத்தில் இறகு ஓட்டும் விஷயத்தில் தன் சாமர்த்தியத்தை யெல்லாம் செலுத்துகிறான். ஆனால் அவன் முன் இங்கிலீஷ் பாடசாலையில் அறிந்த அறிவும் கற்ற கல்வியும், அவனுக்கு அங்கே எள்ளளவாவது பிரயோஜனமாகிறதில்லை. வேதாந்தத்திற்கும், கச்சேரி யந்திர வேலைக்கும் எத்தனைதூரம்? தான் இங்கிலீஷில் அறிந்த அறிவை ஜனங்களுக்குத் தமிழிலெடுத்துரைத்துஜனோபகாரம் செய்யலாமென்றாலோ, அதற்கு அவன் தமிழென்ற பெருவழியில் நடமாடினதேயில்லை. தம்பி தமிழில் வாய் திறந்துவிட்டால், கைத்தாளம்போட ஆயிரம் பேர் வேண்டிவரும். இந்தப்படியாக, தன்பாஷை தெரியாமல், பிறபாஷை படித்தும் பயன்படாமல், தனக்கும் சுகமின்றி, பிறர்க்கும் சுகமின்றியாக்குவன்றோ தகப்பன் முதல்முதல் பையனைத் தமிழ்ப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமலிருந்தது? இப்படி முன்பின் யோசித்தறியாமல் அனேகர் நடக்கின்ற காரணத்தால், தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் அடியோடே எடுபட்டுப்போகின்றன.

குழந்தைகளின்றித் தமிழ் உபாத்தியாயர்கள் என்னசெய்வார்கள்? தூங்குவார்களா? அதற்கு வீடல்லவோ இடம்? ஆகையால், தகப்பன் புத்தியால், அதாவது புத்தியின்மையால், தன் பையன்கெட்டு, இப்படி அனேகம் சிறுவர்கள் கெடுவதால், பிற்காலம் தமிழ்நாடு முழுவதும் தமிழ்ப்பாஷையாகிய சுயபாஷைவிட்டு, பிறபாஷையும் கெட்டு, ஜனங்கள் அல்லோல கல்லோல மடைகிறார்கள். சினேகிதர்களே! இதனால் விளையும் தீங்கு சிறிதோ? ஊகித்துப் பாருங்கள்! இந்தக்காரியத்தை அற்பமென்று தள்ளிவிடவேண்டாம். "குடரைப்பிடுங்கிக் காண்பிக்கும்போது வாழைநாரென்று" தள்ளாதேயுங்கள். 'தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கும்போது, பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்யும்'' நீதியை விடுங்கள், விடுங்கள்! இந்தத் திருவனந்தபுரம் பட்டணத்தையே உதாரணமாக எடுத்துப் பார்ப்போம். இதில், தமிழைச் சுயபாஷையாக வுடையவர் அனேகருளர். ஆகிலும், பத்து வருஷத்திற்கு முன் இங்கு தமிழ்க்கல்வியிருந்த சீரில், அது ஐந்து வருஷத்திற்குமுன் இருந்ததில்லை. ஐந்து வருஷத்திற்கு முன்னிருந்த நிலைமையில் அது இப்போது காணப்படவில்லை. முன் எட்டுப் பத்துப் பள்ளிக்கூடங்கள் இருந்த இவ்விடத்தில் இப்போது தமிழ்ப்பள்ளிக்கூடம் காண்பது குதிரைக்குக் கொம்புகாண்பது போலிருக்கிறது. தமிழ்ச் சங்கமென்பதுமில்லை, தமிழ்ச் சங்கத்தினுடைய மணமுமில்லை. இப்படிப்பட்ட பெரிய பட்டணங்களிலேயே தமிழ்ப் பாடசாலைகளாவது, தமிழ்ச்சங்கங்களாவது தழைக்கக் காண்பது அரிதானால், இவ்விஷயத்தில் நாஞ்சிநாடு முதலிய நாட்டுப்பிரதேசங்களின் கதி அதோகதிதான் என்பதும் சொல்லவேண்டுமா? அதிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சிற்றூரிலும் தமிழ்ப்பயிற்சி எவ்வளவு பரிதாபமான நிலையிலிருக்க வேண்டும்! அந்தோ! அந்தோ! திருவிழா, சதிறென்றால் ஆயிரக்கணக்காய்ப் பணத்தைக் கொட்டியளக்கும் ஜனங்களுக்கு எல்லாப் பாக்கியத்திற்கும் ஊற்றாகி, உடந்தையாயிருக்கின்ற இந்தக்கல்வி அபிவிர்த்தி விஷயம் மாத்திரந்தானா பாவம்செய்தது? உலகத்தில் பெரியதர்மங்களுள் இதுவும் ஒரு அரிய தர்மமென்ற உண்மையை ஜனங்கள் அகக்கண்திறந்து அறிந்திலரோ? இதுவோ தேசாபிமானம்! இதுவோ பாஷாபிமானம்! இப்படியோ அஞ்ஞானக்கடலில் ஆழ்ந்துகிடக்கும் பாமரகோடிகளைக் கரையேற்றி விடுகிறது! இப்படியோ தாழ்ந்துகிடக்கும் பரதகண்டத்தை முன்னிருந்த அற்புதநிலையில் எழக் கைதூக்கி விடுகிறது! சுயபாஷாபிமான முடைய கனவான்களே! தனவான்களே! நீங்கள் மற்ற விஷயங்களிற் செலுத்தும் கவனத்தில் நூற்றிலொரு பங்காவது இம்முக்கியமான விஷயத்திற் செலுத்தக்கூடாதா? அன்னியபாஷைகள் கைசேர்ந்தால் தலைகொடுக்கிறவர்கள், தமிழாகிய நம்தாய் தலையெடுக்காமல் மெலிந்து சோரும்போது, கையாவது கொடுத்து ஆதரிக்கவேண்டாமா? அத்தாய் நம்மையும் நம்முன்னோரையும் எத்தனையோகாலம் இனிமையான அமிர்தம் தந்து ஊட்டி வளர்த்ததை மறந்தீரோ? நீங்கள் என்ன என்ன எண்ணிக்கொண்டு இப்படி வாயும் கையுமில்லாப்பூச்சிகள்போல வாளா இருக்கிறீர்களோ அறியேன். இன்னும் தூங்கவேண்டாம்! இன்னும் மோசம்போக வேண்டாம்! எழுமின்! எழுமின்! வேலைதொடுமின்! இவ்விஷயத்தில் இப்போது கூடியசங்கம்போல அனேக சங்கங்கள் ஆங்காங்கே கூடச்செய்து இனியாவது இவ்விஷயத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு தமிழ்ப்பாடசாலைகளை எங்கும் ஸ்தாபிப்பதை எதிர்பார்த்துக்கொண்டே தமிழ்ப் பாஷாபிவிர்த்திக்கேற்ற இன்னுமொரு வழியைப்பற்றிச் சிந்திப்போம்.

இரண்டாவது, தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்ய மற்றொருபாயம் என்னவென்றால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய கல்வி அபிவிர்த்திக் கென்று ஸ்தாபித்திருக்கும் யூனிவெர்ஸிற்றி சம்பந்தமாக விருக்கின்ற பாடசாலைகளில் தமிழை இப்போதிருப்பதைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பயிற்றுவிக்கும்படி ஏற்பாடு செய்தல். இதில் தமிழைப்பற்றிப் பேசுவது மற்றைய சுயபாஷைகளுக்கும் ஒக்கும். இப்போது நடந்துவருகின்ற ஏற்பாட்டின்படி மாணாக்கருக்குச் சுயபாஷையில் பயிற்சி என்று சொல்லத் தக்கவையொன்று அடைவதற்கு ஏலாது. பதினைந்து நாழிகையில் ஒருநாழிகையாவது, திருப்திகரமாய், சுயபாஷைவிஷயத்தில் கவனம் செலுத்தப்படுகிறதென்று நினைக்கவும் இடமில்லை. இதற்குள் மாணாக்கர் எவ்வளவு தமிழ்கற்கக்கூடும்? கடைசியாக, வருஷாந்தரப் பரீக்ஷையில் 'மொழிபெயர்ப்பு' என்ற ஒரு துறை யிருக்கின்றபடியால், அனேகர், அதாவது பெரும்பான்மையோர், 'டெக்ஸ்ற்றாக' (text) வைத்திருக்கும் பாடங்களை வருத்தமென்று படியாமல், மேற்சொல்லிய 'மொழிபெயர்ப்பு' என்னும் ஒரு திருக்கூத்துச் செய்துவிட்டு, அந்தத்துறைவழியாகப் பிழைத்தேன், பிழைத்தேன்' என்று பரீக்ஷையில், தப்பித்துக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவழிக்கோ, தமிழ்மாது கடாக்ஷம் செய்யப்போகிறாள்! இதுநிற்க, இப்போது கவர்ன்மெண்டார் இந்தியாவில் அங்கிலேயப் படிப்பை, வேரோடும் கிளையோடும், ஏற்படுத்தி விட்டபடியால், மாணாக்கரது சுயபாஷைக்குப் பெருமிடையூறு நேரிட்டிருப்பதைப் பற்றி, பம்பாயில் ஒரு ஐரோப்பிய கனவானை "கவர்ன்மெண்டார் பத்துவருஷத்திற்கு முன்னமே அறிந்து அந்த ஏற்பாட்டை மாறுபாடு செய்யாமல் இதுகாறும் சும்மாவிருந்தது மிகுந்த ஆச்சரியமே! அன்றியும் இந்தப் பக்ஷ பாதத்தை இப்போதாவது ஞானம் பிறந்து கட்டோடே ஒழிக்காவிட்டால் ஜனங்களுக்குக் கவர்ன் மெண்டாரால் நேரிடும் விபத்துக்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல,'' என்று தைரியமாய் எடுத்துப் பேசினதை "ஹிந்து" என்னும் பத்திரிகையில் நம்மவரிற் சிலர் வாசித்திருப்பாரே. அதைக் குறித்து அப்பத்திரிகாசிரியராகிய மகானுடைய அபிப்பிராயமும் அறிந்திருப்பாரே. பின்னும், இவ்விஷயத்தைப் பற்றி 'இந்தியன் நாஷனல் மாகஸின்' என்னும் பத்திரிகையில், மற்றொரு ஐரோப்பிய கனவான் சுயபாஷைப் பயிற்சியைக் குறித்து எழுதியபாகத்தில், "கவர்ன்மெண்டார்இந்துக்களுக்குச்சுயபாஷைப் பயிற்சியைக் கொடுக்கவேண்டுமென்று வெகுநாள் நான் கூப்பிட்டுச்சொல்லியும் அதைக்காட்டுக்கூப்பாடாக எண்ணிவிட்டார்களே! சுயபாஷைப்பயிற்சி நடத்தாவிடின், இராஜாங்க காரியமும் செம்மையாகாது, ஜனங்களுக்கும் குணமுண்டாகாது'' என்று அனேக முகாந்தரங்களுடன் சொல்லியிருப்பதைச் சிலர் பார்த்திருக்கலாம். பின்னும் கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் விஷயத்தைப்பற்றி, ஜனங்கள் பம்பாய்கவர்னர், 'ரே' பிரபுவைக் (Lord Reay) கேட்டுக்கொண்டதில், அவ்விஷயமாகவும் (Science) ஜடசாஸ்திர விஷயமாகவும் சுயபாஷைகளில் கிரந்தங்களில்லாமையைப்பற்றி அந்தப்பிரபு மிகுந்த பரிதாபமாய்ச் சொல்லியிருப்பதும், "மற்றப்படி கவர்ன்மெண்டார் கைத்தொழிற் சாலைகளேற்படுத்த அத்தியந்த ஆயத்தமாயிருக்கின்றோ மானாலும், சுயபாஷையில் அந்தக் கிரந்தங்களில்லாக் குறையால், நீங்கள் விசாரித்தது நடக்காமலேயிருக்கு'' மென்றுசொன்னதும் பிரசித்தமாகத் தெரியவரும். இப்படி ஐரோப்பிய கனவான்களே, இந்தப்பெரிய பிசகையுணர்ந்து, அதனால் வருமிடையூறுகளையும் பகிரங்கமாய் வெளியிடுகை

றென்றால், நம்மவர் மாத்திரம் இதற்கு வாயில்லாப் பூச்சிகள்போல, ஏன் மௌனம் சாதித்து நிற்கவேண்டும்? முன் 'ஹிந்து' பத்திரிகையிற் சொல்லியிருந்தபடி, நம்முடைய சிறுவர்களை ஆங்கிலேய பாடசாலைகளுக்குச் சிறுவயதிலேயே அனுப்புகின்றோம். அப்படி இளம்பிராயத்தில் அப்பியசிக்கப் போகின்றவருக்கு, அங்கிலேயச் சிறுவரைப்போலன்றி, தெரியாத அன்னியபாஷையில் வா, போ, என்பதுமுதல் அனந்தம் வார்த்தைகளைப் புதிதாகக் கற்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி வார்த்தையைக் குட்டிப்பாடம் போடும் வேலையே-மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையாகிற வரையில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எடுத்துக் கொண்டால்தான் அப்புறம் நான்கு வார்த்தையாவது சேர்த்துப் பேசுவதற்காகின்றது. இவ்வாறு, அங்கிலேயச்சிறுவர் டள்ளிக்கு வைக்கும்போதே சுயமாக அறிந்திருக்கிற வார்த்தைகளைப் படிப்பதற்கு, நம்மவருக்கு ஏறத்தாழப் பத்துவருஷம் பிடிக்கின்றது. கனவான்களே, எவ்வளவுக்குக் கற்றாலும் அதில் பிழையறப் பேசுவதும் எழுதுவதும் அரிது. நாம் எவ்வளவு வாசித்தாலும், நம்மை அங்கிலேயர் அதிலொருபொருட்டா யெண்ணமாட்டார்கள். அவர் அதில் நம்மையொருபொருட்டாயெண்ணுவது நமக்கொரு பெருமையுமல்ல, எண்ணாதது ஒரு குறைவுமல்ல. தமிழ் படித்த அங்கிலேயர் தமிழில் எவ்வளவு திருத்தமாய்ப் பேசுவார்களென்று அனைவரு மறிவோமே. அப்படியிருக்கையால்நம்மவர் அங்கிலேயத்தில்பூரணராகாதது ஒருகுறைவல்ல, அங்கிலேயப்படித்துத்தேறிய நம்மவர் அங்கிலேயத்தில் நூலெழுதப் புகுவது கடல்வெள்ளத்தில் ஒருபடிசுத்தவெள்ளத்தை விடுவது போலாகும். முன்னமே ஓங்கியுயர்ந்த அலைக்கு ஓத்தாசை எதற்கு வேண்டும்? நாம் அங்கிலேயம் படிப்பது காலக்ஷேபத்திற்காகவும் அறிவு விர்த்திக்காகவுமே யென்று யாவரும் ஒப்புக்கொள்ளுவோம். அதிற் பின்னதாகிய அறிவுமாத்திரம் நன்றாகப் புகட்டுவிக்கப்படுகிற தென்று அனேகமாகச் சொல்லலாம். ஆனால் அதிலும், 'இளமையிற்கல்' என்ற முதியோருரைப்படி நமது சிறுவர்கள் இளமையில் அறிவிலும், பொருளிலும் மனம்பயிலவேண்டியதை விட்டு, தெரியாத அந்நியபாஷையில், தலையும் வாலுமில்லாத வார்த்தைப் பயிற்சியிலேயே வெகுகாலம் கழிக்கும்படி நேரிடுகின்றதால், அத்தனை காலமும் பயன்தராமல் நஷ்டமாகவே போகின்றது. அத்தனை காலம் எப்போது நஷ்டமானதோ அப்போது அதற்குத்தகுந்த கைப்பொருளும் நஷ்டம், மன உழைப்பும் நஷ்டம். இவ்வளவு காலமும், பொருளும், பிரயாசையும் வீண்போகாமல் சிக்கனஞ்செய்து சிறுவர்களுடைய அரும்பிராயமான இளம்பிராயத்தை அறிவுபயிலுங்காலமாகச் செய்யவேண்டியது முறையும், அத்தியாவசியமுமன்றோ? அப்படியானால், அவ்வுத்தேசத்தைச் சாதித்துக் கொள்ளுவதற்கு வழியெப்படி? பாடசாலையில் வாசிக்கப் போகுமுன்னே வீட்டில் சிறுவர்கள் சுயமாகவே அறிந்திருக்கும் தங்கள் சுயபாஷையை அதற்காகஉபயோகப்படுத்திக்கொள்வதன்றோ உசிதமான மார்க்கம்? இதுவே மிகவும் எளிதானமார்க்கம். இதுவேகாலத்திற்கும், தேசத்திற்கும், இயற்கைக்கும், நியாயத்திற்கும், பாஷாபிமானத்திற்கும் ஒத்துவரும் மார்க்கம்! மேற்கூறிய நஷ்டத்திற்கெல்லாம் இதுவே நிவர்த்தியாகும் சுயபாஷையும் இதனாலேயே தலையெடுக்கும்! அங்கிலேயத்தில் பயிற்றுவிக்கும் அறிவைத்தானே சுயபாஷையிற் பயிற்றுவித்தாலென்ன? கனம்குறைந்து போகுமோ? அப்படிச்செய்வது கண்ணியக் குறைவென்று நினைப்பவர் சுயபாஷாபிமான மற்ற வெள்ளறிவாளரேயன்றி உண்மைப் பாஷாபிமானிகள் அப்படிநினையார். ஆகில், இதற்குச் சுயபாஷையில் தகுந்த நூல்களும் சில வார்த்தைகளும் தற்காலத்தி லில்லையேயென்று சிலர் வாதிப்பார்கள். இது முற்றும் உண்மையே என்று வைத்துக்கொண்டாலும், அது அப்பாஷைக்கோர் குறைவன்று. ஏனெனில் நூலெழுதும் நூலாசிரியர்மட்டும் கிடைக்கும் பக்ஷத்தில் இக்குறைவு ஏது? அங்கிலேய பாஷையே அப்படி நூலெழுதுவோரின் திறத்தினாலும், அவர் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கேற்றபடி அப்போதப்போது (Greek, Latin,) முதலிய பாஷைகளிலிருந்து புதிதாயேற்படுத்திக்கொண்ட வார்த்தைகளாலும் முன்னுக்கு வந்ததேயொழிய, அது தானாக வளர்ந்து வந்ததன்றே. பாஷையும் தாவர வர்க்கங்களைப் போலவே பேணினாலன்றி வளருவதன்றே. இதற்கு (Chaucer) என்னும் அங்கிலேய வித்வான் நூலெழுதியகாலத்தில் அங்கிலேய பாஷையினுடைய சிறுமையும் அதற்கு ௪ அல்லது ௫ நூற்றாண்டுகளுக்குள்ளாக அங்கிலேய நூலாசிரியர்களால் அது பெற்ற விரிவும் அமைப்புமே போதுமான திருஷ்டாந்த மாகும். ஆகையால், சுயபாஷையில் நூதன நூலெழுதுவோராவது, அல்லது அங்கிலேய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்வோராவது இருந்தால், இக்குறைவு இருப்பினும் நீங்கி, சுயபாஷை ஆல்போல் தழைத்து வளர்ந்தோங்குமே. இங்கிலீஷ்க்கு கிரீக், லத்தீன் போலவே நமது சுயபாஷைகளுக்குச் சகாயமாக ஸம்ஸ்கிருதம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் உதவியில்லாமலே விர்த்தி யடையக்கூடிய நமது தமிழுக்கு அதன் உதவியுமிருந்தால் விர்த்தி யடையத் தடையென்ன ?

இத்தகைய நூல்கள் எழுதிப்பெருக்கிச் சுயபாஷையை வளரச்செய்வதற்கு யார் பொறுப்பாளிகளென்றால், எனது எளிய அபிப்பிராயத்தில் இது வரைக்

கும் இங்கிலீஷில் அறிவுபயின்று வித்தியா பட்டங்கள்பெற்ற கனவான்களே! இதற்கு அவர்களே கடமைப்பட்டவர்கள்! அவர்களே இந்தவேலைக்குத் துவஜங்கட்டிக்கொண்டு நிற்கவேண்டும்! தாங்கள் சுதேசத்து மகாஜனங்களின் திரவியசகாயத்தினால் அங்கிலேயத்தில் ஞானம்பெற்ற நன்றிக்கு, அவர்கள் இவ்விஷயத்தில் மகாஜனங்களுக்குச் செய்யவேண்டிய கைம்மாறு தங்கள்தலைமேல் பொறுத்த சுமையாக விருக்கின்றது. எப்படிப்பட்ட சாக்குச்சொன்னாலும் அந்தப்பொறுப்பு அவர்களைவிட்டு நழுவாது. 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகையிற் சொல்லியபடி "இப்போது நமது தேசத்தில் படித்துத்தேர்ந்த சுதேசிகள் எல்லோரும் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவுசெய்து படிப்புக் கற்று முன்னுக்குவந்தவர்களல்ல. அவர்கள் தங்கள் கல்விப் பயிற்சிக்காகக் கொடுத்துவந்த சம்பளம் வெகு சுவற்பத்தொகை. கவர்ன்மெண்டார் கல்விப் பயிற்சிக்காக இப்போது செலவுசெய்யும் மொத்தம் அதற்கு எவ்வளவோ அதிகம். படிக்கும் சிறுவர்கள் சம்பளமாகக் கொடுக்கும் பணமொத்தம் வெகுசுவற்பம். இத்தேசத்து மகாஜனங்கள் செலுத்தும் பற்பல வரிப்பணத்தைக்கொண்டு கவர்ன்மெண்டார் அங்கங்கு பல பெருத்த பாடசாலைகளை ஸ்தாபித்து அவைகளில் மேலான உபாத்தியாயர்களை ஏற்படுத்திச் சுதேசிகளுக்குக் கல்விப்பயிற்சிசெய்து வருகிறார்களே யொழிய வேறில்லை. கவர்ன்மெண்டார் ஜனங்களிடத்திலிருந்து வரியாகப்பெறும் பணத்தைக்கொண்டு அங்கங்குபாடசாலைகளை ஏற்படுத்தி அனேகசுதேசச்சிறுவர்களுக்கு நல்ல ஞானத்தையும் உயர்ந்த தெளிவையும் உண்டாக்கி வருகிறார்கள். இப்படியெல்லாம் இத்தேசத்திய மகாஜனங்களின் பணத்தால் ஞானத்தைப் பெறும் சுதேசிகள் அந்த மகாஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமைஎன்ன? அதைச் சற்றாவது நமது தேசத்தில் படித்து மேலுக்கு வந்த சுதேசிகள் கவனிக்கிறார்களா? தீர்க்கமாய் ஆலோசிக்குங்கால், நமது தேசத்தில் படித்து முன்னுக்கு வந்தவர்களில்அநேகர்சொந்தப்பிரயோஜனத்தையே நாடி சற்றேனும் இத் தேசத்திய மகாஜனங்களை மனதில் நினைப்பதே யில்லை. தாங்கள் பெருத்த சம்பளம்வாங்கி வண்டி, குதிரை ஏறித் தங்கள் பெருமையைப்பாராட்டி வருகிறார்களே யொழிய வேறில்லை. அவர்களில் அநேகர் "நமக்கென்ன இத்தேசத்தியமகாஜனங்கள் எப்படிப் போனாலென்ன? நமக்கு கவர்ன்மெண்டிலிருந்து சம்பளமாகக் கிடைக்கும் காசில் ஒருபைசாகூட குறையாமல் கிடைத்தால் போதுமானது" என்று நினைக்கிறார்கள். இன்னும் சிலரோ, சும்மா இருப்பதை விட்டுவிட்டு உயர்ந்த பதவிக்கு வந்தபின்பு இத்தேசத்து ஜனங்களைப் பீடித்து லஞ்சம் வாங்கித் தங்கள் வயிற்றை நிரப்பிவருகிறார்கள். இவர்களுக்காகக் கவர்ன்மெண்டார் செலவுசெய்த பணமெல்லாம் கடலில் கரைத்த காயம் போலன்றோ ஆய்விடும்! இவர்களெல்லாம் இத்தேசத்திய பிரஜைகளுக்கும் துரோகிகள்; மஹாராணி அவர்களுக்கும் விரோதிகள். இப்போது இத்தேசத்து மகாஜனங்கள் சாதாரணமாய் எவ்வளவோ அக்கியானத்தில் மூழ்கிப் பலவாறாய்க் கெட்டுக்கிடக்கின்றார்கள். அவர்களுடைய தற்கால நிலைமை வெகு பரிதாபப்படத்தக்கது. அப்படியிருக்க, அவர்களுக்குக் ஞானம்வரும்படி செய்து அவர்களுடைய க்ஷேமத்தைநாடி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது இவர்களுடைய கடமை அல்லவா? மகாஜனங்களின் பணத்தைக் கொண்டு பற்பல உயர்ந்த பரிக்ஷைகளைச் செய்துவிட்டு கவர்ன்மெண்டில் நல்லவேலைகளையும் பெற்று ஜனங்களுக்கு எவ்வித உபகாரமும் செய்ய முயலாமல் கவர்ன்மெண்டிடத்திலும் கூழைக்கும்பிடு போடுவது வெகுதுரோகமல்லவா? ஆகையால், இங்கிலீஷ் படித்துத் தேறின கனவான்கள் இனிமேலாவது தாங்கள் இங்கிலீஷில் அறிந்திருக்கும் அறிவைத் தங்கள் தங்களால் இயன்றமட்டும் தெரியாத பாமரஜனங்களுக்குச் சுயபாஷையில் மொழிபெயர்ப்பு மூலியமாகப் புகட்டுவது ஒருபெரிய அவசியமும் கடமையும் ஆமென்றுணர்ந்து நடப்பார்களென்று வேண்டிக்கொள்வோம். அப்படி அவர்களுக்கு நன்னோக்கம் வரும்படிக்குக் கடவுளும் அநுக்கிரகம் செய்வாராக!

இனி, அங்கிலேயம் படிப்பதற்கு மற்றொரு பிரயோஜனமாகின்ற காலக்ஷேபசங்கதியைப் பார்த்தாலோ, அதற்கும் இப்போது வழி முட்டுப்பட ஆரம்பித்து விட்டதென்று சிந்திப்பவர்க்கெல்லாம் தெளிவாய்த்தெரிகின்றது. இதைப்பற்றி இங்கு முற்றும் எடுத்துப்பேசப் போனால் உபந்நியாசம் விரிவுறுமென்றஞ்சி சுருக்கமாய்ச் சொல்லுவேன். ஆதியில் அங்கிலேயம் படித்துப் பட்டம் பெற்ற பட்டவர்த்தனர்க்குக்காலக்ஷேபமும் எளிதிற்கிடைத்துக்கொண்டிருந்தது. ஆனால் கவர்ன்மெண்டிலும் எண்ணிறந்த வேலைகளில்லை. அதற்கும் கணக்குவரையறையுண்டு. கவர்ன்மெண்டு வேலைத்தொகைக்கு அங்கிலேயம் படித்தவரின் தொகை மிஞ்சும்போது படித்தவர்பாடு அம்பலந்தான். இப்போது யூனிவெர்ஸிற்றியோ சிறுவர்களைப் பரீக்ஷையில் தேற்றிவிடும் வேலையை, வருஷா வருஷம் யந்திரம்போல வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு வருகிறது. புதிய புதிய பரிக்ஷையெல்லாம் கால் நட்டுக்கொண்டு வருகிறது! பட்டம் பெற்ற பேர் தொகை தானப்பெருக்கமாய் வளர்ந்து வருகிறது! முன்சொன்னபடி கவர்ன்மெண்டிலும் எண்ணிறந்த வேலைகளில்லை! மீதியை ஊகித்துக் கொள்ளுங்கள்! இப்போது நம்மவர் சர்

கார் உத்தியோகத்திற்கென்று அங்கிலேயம்படிப்பது சோறற்றவீட்டில் சாப்பிடச் சொந்தவீட்டை விற்றுச் சுவர்ண இலை செய்து கொள்வதுபோல் இருக்கிறது! அங்கிலேயம் படித்து இப்போது வெளிவரும் வாலிபருக்குத் தாங்கள் படிப்பதற்குச் செலவான பணத்துக்கு வட்டியாவது படித்தான பின் கிடைக்கின்றதோ, என்று ஒருவர் வெகுசந்தேகாஸ்பதமாய்க் கேள்வி கேட்கிறார். அதற்குவிடை தெரிந்தபடி மொழிந்து பாருங்கள்! இவ்வளவு சந்தடிக்குள் சுயபாஷையென்பது அவர்களுக்கு எங்கேயோ பதருக்குள்ளே ஒளிந்துபோகிறது! அங்குங்கெட்டுஇங்குங்கெட்டவர் இவர்களே! கடைசியாக, அங்கிலேயத்தில் விற்பன்னரென்ற வெறும் பெயராவது நம்மவர்க்கு இருக்குமோ வென்றால், அது அங்கிலேயரோ, சம்மதிக்காதது; நம்மவரோ கண்ணியம் செய்யாதது. இப்படியாக, இயற்கையில் நம் சிறுவர் புத்திகூர்மையுடையவராயிருந்தும், இப்போதுள்ள ஏற்பாட்டின் காரணத்தால், அது வெளியே வராமலாவது, பிரயோஜனப்படாமலாவது போய்விடுகின்றது. ஆகையால், இனியாவது யூனிவர்ஸிற்றி சம்பந்தமான கல்விச் சாலைகளில், தமிழை இன்னும் அதிகமாய்ச் சொல்லுவிக்க ஏற்பாடு செய்யும்படி, கவர்ன்மெண்டாரிடம் இந்துக்கள் யாவரும் சேர்ந்து விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியது ஒரு பெரும் அவசியமான காரியம். இதுபார்த்தவுடன் வெகுமலைப்புத் தரும் காரியம்போலத் தோன்றும். ஆகிலும்,

'தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.'

'எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்'

'ஊக்கமது கைவிடேல்'

என்ற இவ்வாக்கியங்கள் உலகத்தை ஆராய்ந்தறிந்த பெரியோரால் கூறப்பட்டதாதலால், எடுத்தகாரியம் நல்லகாரியமாய் இருக்கும்போது, 'திண்ணியோருக்கு' அது எளிதில் கைகூடுமென்பது நிச்சயம். இதுவரைக்கும் அங்கிலேயம் படித்தவர் எவரையாவது, அல்லது, படித்தும், உத்தியோகம் கிடையாத எவரையாவது கொண்டு இங்கிலீஷிலிருக்கும் சாஸ்திர சம்பந்தமான புஸ்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச்செய்துஅந்நூல்களைப் பாடசாலைகளில் தமிழ்ப் பாடங்களாக வைக்கலாம். இதற்குத் தகுந்தஆதரவு மட்டும் இருந்தால் இந்த வேலையை மேற்போட்டுக் கொள்ளப் பல நூறுபேர் இப்போதும் ஆயத்தமாய் வருவார்கள் என்பதற்கு ஐயமில்லை. அதனால் வேறு அநேக குணங்கள் உண்டாவதோடுகூடி சிறுவர்களுக்கு அறிவும் விர்த்தியாகும், படித்தவருக்குப் படித்த அறிவும் பயன்படும். நாம் இங்கிலீஷ் கற்பதெல்லாங்கூடி அதிலடங்கிய அறிவுக்காகவே யன்றி, பாஷைக்காகவன்றே. இந்த விஷயத்தைப் பற்றி கவர்ன்மெண்டுக்காவது, 'யூனிவெர்ஸிற்றி ஸெனற்று' (University Senate) என்னும் வித்வ சபைக்காவது, எடுத்துப்பேசும் கடன் அச்சபையில் மெம்பராக (Member) விருக்கும் இங்கிலீஷிலும் தமிழிலும் தேர்ந்த சில பேர்போன வித்வான்களைப் பொறுத்ததாயிருந்தும், அவர்கள் அங்கிலேயப் பயிற்சியில் அமிழ்ந்து தலையறியாமல் தடுமாறிப் போனதனாலே, அல்லது தமிழ்ப் பாஷையில் அவர்களுக்கு முன்னிருந்த பற்று இப்போதுவர வர நெகிழ்ந்து வருவதனாலே, அல்லது யாது காரணத்தாலோ, ஏனோதானோவென்று இருந்துவிடுகிறார்கள். ஒரு சுயபாஷாபிமானி சொன்னதுபோல 'வித்தியாபிவிர்த்தி விஷயமாயுள்ள குறைவுகளை, வித்தியா பண்டிதர்களாய், வித்தியாசாலையிலேயே தங்கள் காலத்தைக் கழித்துவரும் இப்பேர்ப்பட்ட பண்டிதர்கள் நீக்காவிடின், வேறு யாருக்கு இதில் அக்கறை உண்டாகும்? இவர்கள் ஏற்கனவே பல பொது நன்மைகளின் பொருட்டு முயற்சித்து வருபவர்களாயினும், இது விஷயத்திலும் கடமைப் பட்டவர்களே'' என்னைக்கேட்டால் இதிலும் பொறுத்த கடனும் இதிலும் பெரிய நன்மையும் அவர் தமது நாட்டுக்குச் செய்யவேண்டியதாய் மற்றொன்றும் இல்லை. இதுவே எல்லா நன்மைகளுக்கும் அஸ்திபாரம். ஆகையால் கனவான்களே, இப்போது அவர்களும் இவ்விஷயத்தில் அசட்டையாய் இருக்கின்றதனாலே பின்பு இந்தக்கடமை யாரைப் பொறுத்தது? என்னுடைய எளிய அபிப்பிராயத்தில் இது யூனிவெர்ஸிற்றியில் பி. ஏ. முதலிய வித்தியா பட்டம்பெற்ற கனவான்களைப் பொறுத்தது, இவர்களே இந்த உத்தமமான காரியத்திற்குக் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டியவர்! இவர்கள் எல்லோரும் இவ்விஷயத்தைப்பற்றி ஆற, அமரச் சிந்தனைசெய்து இதை நடத்தியே விடுகிறதென்று விரதம்பூண்டு ஒருங்குசேர்ந்து கவர்ன்மெண்டாரிடம் உண்மையாய்த் திண்மையாய் வேண்டிக்கொண்டால் இது விரைவில் நடபடியில் வரத்தக்க காரியமாகும். இது நிற்க, இனி தமிழ்ப் பாஷாபிவிர்த்திக்கு வேறொருபாயத்தைப் பற்றி ஆலோசிப்போம்.

(இன்னும்வரும்)

தி. லக்ஷ்மணபிள்ளை.

ஸ்திரீகளுடைய அந்தஸ்தும் அதிகாரமும்.

பூர்வத்தில் நமது ஹிந்து ஸ்திரீகளுக்கிருந்த அந்தஸ்தையும் அதிகாரத்தையும் விளக்கிக்காட்ட திவான்பஹதூர் இரகுநாதராவ் அவர்கள் நமது பூர்வ கிரந்தங்களிலிருந்து பல திருஷ்டாந்தங்களையெடுத்துரைத்து சாஸ்திரோக்தமாய் அவர்களுக்கு ஆதியிலளிக்கப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்த பதவியை நிரூபித்து இங்கிலாந்தில் எழுதிய ஒரு கடிதத்தின் மொழிபெயர்ப்பைக் கீழே பிரசுரிக்கிறோம்: ஆதியில் ஷட்ரூபா என்கிற ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டாள். நமது சாஸ்திரக்காரராகிய மனு எக்காலத்தில் உலகத்தில் தோன்றினாரோ அதேகாலத்தில் அவளும் உலகத்தில் பிரவேசித்தாள். அவள் மனுவின் பெண்சாதி. அவரைவிட்டு இணைபிரியாமல் இருப்பாள். எல்லாச்சங்கதிகளிலும் அவருக்கு ஒரு மந்திரியைப்போல் புத்தி சொல்லுவாள். வீட்டில் யாதொரு நடவடிக்கையும் அவளுடைய சம்மதமும் அனுமதியும் இல்லாமல் நடத்தப்பட வில்லை. அவர்களுடைய புத்திரிகளில் ஒருத்தியாகிய தாவாஹுதி என்பவள் கல்வியில் தேர்ந்தவள். மிகவும் மனைவிக்கு வேண்டிய நற்குணங்களை யெல்லாம் உடைத்தா யிருந்தாள். அவள் வீட்டிற்கு அவள்தான் எஜமானி. அந்த வீடு வெகு மேன்மையாயிருந்தது. தேவர்கள் கூட அவளைப்பார்த்துப் பொறாமைப்பட்டார்கள். பூர்வீககாலத்தில் ஸ்திரீகள் உன்னத பதவியிலிருந்தார்கள் என்பதை ரூபிக்கும் பொருட்டு மனுஸ்மிருதியில் ஆதாரமுண்டு. ஆதிகாலத்தில் ஸ்திரீகள் தங்களுக்கு இஷ்டமிருந்தால் விவாகம் செய்து கொள்ளலாம், இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்கிற சுதந்தரத்தை உடைத்தாயிருந்தார்கள். ஒரு க்ஷத்திரியன் குமாரத்தியாகிய சுலுபை என்பவள் தகுந்த நாயகன் அகப்படாததினால் தபசு செய்யத் தலைப்பட்டு உலகத்தைத் துறந்து சந்நியாசியானாள். அவள் கல்வியில் தேர்ந்தவள்; ஒரு அரசனுடன் மதவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்து முடிவில் அவனைப்பார்த்து இவ்விதமாய்க் கூறினாள்: ''இன்னமும் நீர் அக்கியானத்திலும் பாவத்திலும் முழுகியிருந்த போதிலும், அவைகளினின்றும் நீங்கி விட்டதாய்த் தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறீர். நான் உம்முடைய க்ஷேமத்தில் கண்ணுடையவளாதலால் நீர் வீண் மனோராச்சியத்தில் காலத்தைப் போக்குகிறீரென்று சொல்ல வேண்டியதா யிருக்கிறது.'' இந்தக் கதையால் அக்காலத்தில் மனிதர்களும், ஸ்திரீகளும் சமமான சுதந்தரங்களை உடைத்தாயிருந்தார்களென்பது விளங்குகிறது. சாவித்திரி என்பவளும் கல்வியில் மிகுந்த தேர்ச்சியுடையவள். தான் தகுந்தகணவனை எளிதில் கண்டுபிடிக்கக் கூடாமல் அன்னிய தேசங்களுக்குச் சென்று, கடைசியாய் ஒரு அடைக்கலம் புகுந்தோனுடைய புத்திரனை நிச்சயித்தாள். அவள் பிதா அவள் பொறுக்கி யெடுத்த வாலிபன் ஒருவருஷங் கூடப் பிழைத்திருக்க மாட்டான் என்று தெரிந்துகொண்டு தன்னால் கூடியமட்டும் அவனைக்கலியாணம் செய்துகொள்ள வேண்டாமென்று தன்புத்திரிக்குப் புத்திசொல்லியும் அவள் அதற்கு உடன்படவில்லை. அவள் அவனை விவாகம் செய்துகொண்டு அவனைச் சாவினின்றும் மீட்கிறதற்குச் சக்தியுள்ளவளாயிருந்தாள். வடதேசத்தில் அவளுடைய சரித்திரம் எங்கும் பரவியிருக்கிறது. அத்தேசங்களில் கன்னிகைப்பெண் பெரியவர்களுக்கு வணங்கினால் ''நீ சாவித்திரி ஆகக்கடவாய்'' என்று வாழ்த்துவார்கள். போஜராஜனுடைய அரண்மனையிலிருந்த அநேகம் பண்டிதர்களில் ஒரு ஸ்திரியும் இருந்தாள். இனி இராமர் தான்வனவாசம்போகும்பொழுதுபத்தினியைஅயோத்தியிலேயே இருக்கும்படியாய்க் கேட்டதற்கு சீதாதேவி அம்மாள் ''இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் ஒரு பெண்ணுக்குக்கணவனே துணைவன். கணவனே ஞானி'' யென்று சொன்னாள். இந்த நூறுவருஷகாலமாய் 'மஹாராணிஅகல்யாபாய் ஹோல்கார்' என்னும் பெயர் உலகத்தில் எல்லாருக்கும் தெரிந்ததாயிருக்கிறது. ஸர் ஜான் மால்கம் என்பவர் ஒரு புஸ்தகத்தில் அந்த அம்மாளைப்பற்றி இவ்விதமாய் எழுதியிருக்கிறார்: ''இராஜாங்க விஷயங்கள் அதிக குழப்பமாயிருக்கும்பொழுதும் ஜனங்களுடைய மனது சஞ்சலப்பட்டிருந்து கொண்ட காலத்திலும் அவள் அநேகம் நாள் பயிரங்கமாய்க் கச்சேரி செய்தாள். அவள் இராஜ்ஜியபாரம் செய்தபொழுது சொற்ப தீர்வை விதிப்பதைப்பற்றி மிகுந்த கவனமுள்ளவளாயிருந்தாள். ஒவ்வொரு பிரஜையும் நேரில் விசாரிப்பாள். எல்லாரும் தடையன்றிப்போய்க் குறைகளைப் பற்றி முறையிட்டுக்கொள்ளலாம்.'' இது நிற்க,

ஹிந்து சாஸ்திரம் மனிதர்களுக்கு அனுகூலமாயிருப்பதாயும், ஸ்திரீகளை அவருடைய ஆயுள் நாளெல்லாம் மனிதர்களுடைய அடிமைகளா யிருக்கும்படி சொல்லுகிறதென்றும் அநேகம் கனவான்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அது தப்பிதம் என்பதை ரூபிப்பதற்காக மேற்சொல்லிய ஸ்திரீகள் கீர்த்தியே சாலும். உலகத்தில் எப்பொழுதும் பரவியிருக்கும்படி மிகவும் மேன்மையாய் ஸ்திரீகள் செய்து முடிக்க வேண்டிய கடமைகளை முடித்திருக்கிறபடியால், அவர்களை அடிமைகள் என்று நாம் சொல்லத் துணிவோமானால் அந்த அடிமைத் தனம் இக்காலத்திய சுயேச்சையைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு மேன்மையுடையது என்றுசொல்லலாம். ஏதோ தௌர்ப்பாக்கியத்தினால் இந்தியாவில் பாண்டவர் காலத்திற்குப் பிற்பாடு ஸ்திரீகள் தங்கள் சுயேச்சையைஇழந்துவிட்டார்கள். ௧௦-ம் நூற்றாண்டு வரையில் அவர்களுடைய நிலைமை நிரம்பக் கேவலமா யிருந்தது. பாரத வருஷத்தில் அநேகம் பெயர்பெற்ற ஸ்திரீகள் இருக்கிறார்கள். ஔவையாருடைய நூல்களும் அவளுடைய நிர்த்தோஷமான குணங்களும் அக்காலத்து இருடிகளுக்கும் அவளுக்குப் பின்னால் வருகிற

சந்ததிகளுக்கும் நற்குண நற்செய்கைகளைக் கற்பித்
துக் கொண்டிருக்கின்றன. தமயந்தி ஓர் கீர்த்திபெ
ற்ற ராஜஸ்திரீ. அவளுடைய குணங்களுக்காக அ
வளைப் பற்றி அநேகம் கவிகள் பாடியிருக்கிறார்கள்.
இக்காலத்திலேயே மேற்குத்திக்கில் ஒரு ஆரியஸ்திரீ
உலகத்திற்கெல்லாம் நீதி கற்பிக்கிற ஓர் விளக்குப்
போல் விளங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் சிறு
பெண்ணாயிருந்தபொழுது கல்வி கேள்விகளால் நன்
றாய்த் தேர்ந்தவள். கலியாணம் செய்துகொள்வதில்
மிகுந்த புத்திசாலித்தனத்தைக் காட்டினாள். கணவ
னிடத்தில் வெகு பிரியமுள்ளவள். தற்காலத்தில்
பிள்ளைகளிடத்தில் பக்ஷமுள்ளவளும் பிள்ளைகளைத்
தகுந்த மார்க்கத்தில் கொண்டுவரத்தக்கவளாயும் இ
ருக்கிறாள். அவளுடைய நற்குண நற்செய்கைகளோ
சொல்லித் தொலையா. அவள் ஸ்வாமியுடைய பக்தி
யுள்ள அடிமை. அதிக யுக்தி புத்தியை உடைத்தா
யிருக்கிறவள். எப்பொழுதும் தொந்திரவு கொடுக்கத்
தக்க ஜனங்களின் ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு
வருகிறாள். ஆனால் ராணுவ பலத்தினால் மட்டும்
அல்ல, அந்த ஜனங்களுடைய பிரியத்தைச் சம்பா
திப்பதில் தன்னுடைய சுதேசத்தில் சமாதானமாய்
இராஜ்ஜிய பாரம் செய்கிறாள். அந்நிய தேசங்களிட
த்திலும் சண்டை சச்சரவு இல்லாமல் பாதுகாத்து
வருகிறாள். எப்பொழுதும் ஸ்வாமியுடைய கிருபை
யையே நம்பினவள். அவளுடைய பெயர் எல்லாருக்
கும் தெரிந்திருக்கிறது. விக்டோரியா மஹாராணி
என்னும் பெயரைச் சொன்னாலும் கேட்டாலும்அள
விறந்த சந்தோஷம் உண்டாகிறது. இந்தியாவில் இந்
தச் சமயம் சொல்லத்தகுந்த ஸ்திரீ மற்றொருத்தி
உண்டு. கஸிம்பெஸார்நாட்டுமகாராணிசொர்ணமாயி
ஒரு மேன்மையான ஆரியஸ்திரீ. இக்காரணங்களால்
இந்தியாவில் ஸ்திரீகள், புருஷர்களைப் பார்க்கிலும்
தாழ்ந்தவர்கள் அல்லவென்று ஸ்பஷ்டமாய்ப் படுகி
றது. குடும்பத்தில் ஸ்திரீஜாதி மேன்மையான பதவி
யையுடைத்தாயிருந்தாள். இராஜாங்க விஷயத்தில்
மாத்திரம் தான் அவளுடைய அதிகாரம் சில சமயங்
களில் குறைக்கப்பட்டது. அவள், மற்றக்காலங்களில்
நாடுகளை ஆண்டிருக்கிறாள். இராஜாக்களுக்குப் புத்தி
சொல்லுவாள். சண்டையில் சேர்ந்து சைனியத்தை
நடத்துவாள். வீட்டில் அவள் ஒருவருக்கும் கீழ்ப்
பட்டவளல்ல. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு
அனுப்பும் வரையில் அவள் தான் உபாத்தியாயர்.
அவர்களுக்கு இரகசியம் வைத்துக்கொள்ளும் சக்தியி
ல்லாததினால் வேதத்தின் ஆதியை யவர்களுக்குச்
சொல்ல வில்லை. ஒருமனிதனுக்கு மதத்தில் பக்தி
யுண்டு பண்ணுவதற்கு அவள் ஒரு பான்மை கார
ணம். எக்காலத்தில் ஆரியர்கள் தங்கள் ஸ்திரீகளை
யவமதித்தார்களோ அப்பொழுது தான் அவர்கள்மெ
லிமை யடைய ஆரம்பித்தார்கள். மறுபடியும் நாம்
நம்முடைய ஸ்திரீகளைத் தகுந்த நிலைமையில் கொண்
டுவர முயன்றால் நாம் முன்போல உன்னத பதவி
க்கு வருவோம்.

விசேஷக் குறிப்புகள்.

பார்லிமெந்து சபை.

ஜூலை மாசம் பிறக்கு முன்
அங்கிலேய பார்லிமெந்து சபை
கலைக்கப்பட்டுபுதுப்பார்லிமெந்
து நியமிக்க எலெக்ஷன்நடக்க
உத்திரவாய் விட்டது. பார்லிமெந்து சபையென்பது
'லார்ட்ஸ்' (பிரபு ஜனர்) 'காமன்ஸ்' (சாதாரணர்)
என இருவகுப்பாருடைய சபைகள் சேர்ந்தது.
'லார்ட்ஸ்' சபையில் அங்கிலேய மகா நாட்டுப்பிரபுக்
கள் பரம்பரை பாத்தியமாக மெம்பர்களாக விருந்து
சட்ட நிர்மாணம் செய்து வருவார்கள். காமன்ஸ்
சபை யென்பது ஜனங்கள் தாங்களாக தங்களுக்குள்
தக்கவரைத் தங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தெரிந்
தெடுத்து நியமிக்க அப்படிப்பட்ட பிரதிநிதிகள் எல்
லாரும் கூடும் சபையாம். லார்ட்ஸ் சபை அந்தஸ்த்
தில் மேலானதாக விருந்தாலும் அதிகாரத்திலும்
செல்வாக்கிலும் ஜனப்பிரதிநிதிகளடங்கிய சபை
யாகிய 'காமன்ஸ்' சபையே மேம்பட்டது. சட்ட
நிர்மாணம் செய்யும் அதிகாரம் இருசபையாருக்கும்
பொதுவாக வுள்ளதேயாயினும், அரசிறை வருமா
னத்தை நிதானித்துத் துரைத்தனச் செலவுக்கு வே
ண்டிய தொகை யாவற்றையும் செலவிட அனுமதி
கொடுக்கும் அதிகாரம் 'காமன்ஸ்' சபை யாருக்கே
உண்டு. இப்படி பணப்பையில் பிடிப்பிருக்கிற படி
யால் அந்த இசைவைக்கொண்டு 'காமன்ஸ்' சபை
யார் தங்களுடைய குறைகளை யெல்லாம் நிவர்த்தித்
துக் கொள்வதோடு தங்கள் கோரிக்கைகளையும்
நிறைவேற்றிக் கொள்ளும் வழிகளைச் சித்தமாய்த்
தேடிக்கொள்கிறார்கள். முறைப்படி சட்ட நிர்மா
ணம் செய்ய 'காமன்ஸ்' சபை, லார்ட்ஸ்சபை, அரசு
என்னும் மூவகை யங்கத்தினரும் சேர்ந்து சம்மதிக்க
வேண்டியது அவசியமே யாயினும், இம்மூவங்கத்
தினரில் ஒருவருக்கொருவர் எந்த விஷயத்திலாவது
பேதமுண்டானால் காமன்ஸ் சபையார்க்குள்ள அதி
கசெல்வாக்கினாலும் பணப்பையில் பிடிப்பிருக்கும்
அதிகாரத்தினாலும் அவர்கள் ஒருமனதாகத் தீர்மா
னித்ததே கடைசியில் நிறைவேறி வருகிறது. இவர்
கள் ஜனங்களுடைய பிரதிநிதிகளாதலாலும் இவர்க
ளைநியமிக்கு மதிகாரம் ஜனங்களுக் கிருப்பதாலும்,
ஜனங்கள் ஒரு மனதாகத் தீர்மானிக்கும் எந்த விஷ
யத்தையும்அவர்கள் விடாப்பிடியாகக்கொண்டுநிறை
வேற்றிக்கொள்ள விரும்பினால் அப்படி செய்வது
கடைசியில் எப்படியும் சாத்தியமானதே. இப்படி
யாக அரசோடு குடிகளும் சேர்ந்து துரைத்தனம்
செலுத்தும் முறைக்குப் பிரதிநிதி துரைத்தனம்
என்று பெயர். இதைப்பற்றி விவரித்துரைக்க இங்கு
இடம் போதாது. இப்பொழுது நாம் சொல்லவந்தது

இப்பார்லிமெந்து சபை கலைவுற்று புதுப்பார்லிமெந்து
சபை நியமகம்நேர்ந்த விஷயமே. மேலே கூறியபடி
"[illegible] பார்லிமெந்து சபை 7-வருஷங்களுக்கு ஒருத
ரம் தானாகக் கலைந்து மறு[illegible]திதாய்க் கூட
வேண்டுமென்று சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கி
றது. இதற்குமத்தியில் 'காமன்ஸ்' சபையாருக்கும்
மற்ற இரண்டு இராஜ அங்கத்தினர்களுக்கும் வித்தி
யாசம் நேர்ந்தாலும், அல்லது புதிதாக ஒருவிஷயத்
தைப்பற்றி ஜனங்கள் கருத்தை யறிந்து கொள்ள
வேண்டியது யுக்தமாகத் தோன்றினாலும் பார்லி
மெந்து சபையைக் கலைத்துவிட்டு புதிதாகப் பார்லி
மெந்து சபைகூடும்படி கட்டளையிட அரசுக்கு அதி
காரமுண்டு. இப்படி எந்தக் காரணத்தால் பார்லி
மெந்து சபை கலைந்து புதிதாகநியமிக்கப்பட்டாலும்,
பார்லிமெந்து சபை நியமனம் நடப்பதற்கு'ஜெனரல்
எலெக்ஷன்' என்று சொல்லப்படுகிறது.

ஜெனரல் எலெக்ஷன்

இப்பேர்ப்பட்ட ஜெனரல்
எலெக்ஷன் ஒன்று இந்த மாச
முதலில் நடந்தது. இங்கிலாந்
து, ஸ்காத்லாந்து, வேல்ஸ், ஐர்
லாந்து என்னும் எல்லாநாடுகளும் சேர்ந்த ஐக்கிய
நாட்டார் மொத்தமாகத் தங்களுக்கு 670-பிரதிநிதி
கள் நியமிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். ஒவ்
வொரு மாகாணமும் பார்லிமெந்து மெம்பர் நியமனத்
துக்காக ஒன்று அல்லது பல பிரிவுகளாகப் பிரிக்கப்
பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் அதன் ஜனத்தொகை
விஸ்தீரணத்துக்குத் தக்கபடி ஒன்று அல்லது இர
ண்டு மெம்பர்களை நியமிக்க அதிகாரம் உண்டு. ஒவ்
வொருபிரிவிலும் பார்லிமெந்து மெம்பர் நியமனம்
செய்வதில் அபிப்பிராயம்கொடுக்கச் சுதந்திரமுள்ள
வர்கள் பேர்களெல்லாம் ஜாபிதாப் போட்டுச் சரியா
கத் தயார்செய்திருக்கும். மெம்பர் நியமனத்துக்குரிய
காலமாக நியமிக்கப்பட்ட தினத்தில், இவர்கள் ஒவ்
வொருவரும் மெம்பர் நியமன ஸ்தானத்துக்குச்செ
ன்று மெம்பராகவர இஷ்டப்பட்டு நிற்பவர்களில்
அவரவர்களுக்கு இஷ்டமானவர்கள்பேரை ஒருகாகி
தத்தில் குறித்து அங்குள்ள ஒரு பெட்டியில் போட்
டுவிட்டு வந்து விடுவார்கள். இப்படி யெல்லாரும்
போட்டானபின் பெட்டியைத்திறந்து யார்பேருக்கு
மிகவும்அதிகப்படிச் சீட்டுகளிருக்கின்றனவோ அவர்
மெம்பராகநியமிக்கப்பட்டவராவர். இப்படியாகஇந்த
மாசமுதலில் ஆரம்பித்த நியமன வேலை இந்தமாசம்
30உ முடிவுக்கு வந்தது.

மிஸ்டர் டாடாபாய் நௌரோஜி.

இந்தஎலெக்ஷனில் நமக்குப்
பெருமை தரும் ஒரு முக்கிய
விசேஷ மென்ன வென்றால்
நம் தேசத்தவரும் பம்பாய்
நகரவாசியுமாகிய மிஸ்டர் டாடாபாய் நௌரோஜி
யென்பவர் 'பின்ஸ்பரி' மாகாணத்தின் மத்திய பிரி
வுக்குப் பார்லிமெந்துசபைமெம்பராக நியமிக்கப்பட்
டதே. இவர் மெம்பராக நியமிக்கப்பட்ட நாளதுமீ
6உயானது நமக்குள் என்றென்றைக்கும் கொண்டா
[illegible]த்தக்க சுபதினமாம். மகாராணியார் 1858-ம்
வருஷம் இந்தியா [illegible]த்தைத் தாம் நேரில்
ஒப்புக்கொண்ட போது வெளிப்ப[illegible]
பத்திரத்தில் இந்திய பிரஜைகள் தம் செங்கோலு
க்குட் பட்டமற்றப் பிரஜைகளைப்[illegible]ால் எல்லாவித
சுதந்தரங்களுக்கும் வித்தியாசமின்றிபாத்[illegible]
வர்களாக விருப்பார்களென்றும், அவர்எல்லாரையும்
வித்தியாச மின்றி ஒரே சிராகப்பாவித்துப் பரிபா
லித்து வருவாரென்றும் சொன்னது முற்றும் நியா
யத்தில் நிறைவேறினது அன்றைக்கே.

இந்தியாவில் கொண்டாட்டம்.

மிஸ்டர் டாடாபாய்நௌரோ
ஜியவர்கள் பார்லிமெந்து மெம்
பராக நியமிக்கப்பட்டதை யறி
ந்து இந்தியாவிலுள்ள ஜனங்
கள் அடைந்த சந்தோஷத்துக்கும் அவர் நியமனத்
தை அவர்கள் கொண்டாடும் கொண்டாட்டத்துக்
கும் அளவு சங்கையில்லை. இந்தியாவிலுள்ள ஒவ்
வொரு முக்கியபட்டணத்திலுமுள்ள ஜனங்கள் பொ
துக்கூட்டம்கூடி அவருக்குச் சந்தோஷ முகமன்
கூறி அவரை நியமித்த எலெக்டர்களுக்குவந்தனமளி
த்துத்தீர்மானங்கள் செய்து இங்கிலாந்துக்குச் சமா
சாரமனுப்பி வருகிறார்கள். இந்தமீ 22உ பம்பாயில்
இது விஷயமாக ஒரு பெரிய மகாநாடு கூடி மேற்
கண்டபடி தீர்மானங்கள்செய்து அவர் நியமன விஷ
யத்தைக்கொண்டாடினார்கள். ஆகஸ்டுமீ 1உ சென்
னையிலும்இதற்காக ஒரு பெரிய மகாநாடு கூடும். அங்
கிலேயர் ஆளுகையின் கீழ் நாம் பெற்றனுபவித்துவ
ரும் எல்லாப்பாக்கியங்களிலும் இது மிகவும் மேலா
னது. அங்கிலேயர் நமது தேசத்தைக் கட்டிக்கொண்
டது முதல் நமக்குச்செய்து வரும்அளவற்ற நன்மை
களுக்கு நாம் அவர்களுக்கு என்றென்றைக்கும் தலை
முறை தலைமுறையாக நன்றிசெலுத்திவருவது நமது
தேசத்தார் கடமையே.

புதுப்பார்லிமெந்து சபை கூட்டம்.

புதிதாய்நியமிக்கப்பட்டபார்
லிமெந்து மகாசபை ஆகஸ்டுமீ
5உ கூடும். அன்று புதிதாய்
நியமிக்கப்பட்ட மெம்பர்களெ
ல்லாம் பிரமாணிக்கம் எடு
த்துக்கொண்டு பார்லிமெந்து சபையிலுள்ள புஸ்த
கத்தில் கையெழுத்து வைத்துவிட்டு மெம்பர்களாக
உட்காருவார்கள்.

மிஸ்டர் டாடாபாய் பிறப்பு வளர்ப்பு.

புதிதாகப் பார்லிமெந்துசபை மெம்பராக நியமிக்கப் பட்ட டாடாபாய் நௌரோஜிபார்ஸி ஜாதியைச் சேர்ந்தவர். 1825-ம் வருஷம் ஸெப்டம்பர் மீ" த்தில் பம்பாயிற் பிறந்தார். பள்ளிக்கூடத்தில் வெகு குடிகையா[illegible] ...புமுனி [illegible] காலத்திலிருந்த உயர்ந்த ளவர[illegible] ...யா சாலையில் முற்றும் படித்துத்தேறினபின் அப்பொழுது பம்[illegible] ஹைகோர்ட்டு சிரேஷ்ட நீதியதிபா[illegible]ருந்த, 'ஸர் எர்ஸ்கைன் பெர்ரி' என்பவர் அவருடைய புத்தி சாமர்த்தியத்தையும் படிப்பு வல்லமையையுமறிந்து அவரை இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்பத் தீர்மானித்தார். ஆனால் அப்பொழுதுள்ள பார்ஸி சிரேஷ்டர்கள் டாடாபாயை இங்கிலாந்துக் கனுப்பினால் கிறிஸ்தவர்களாகி விடுவார்களென்று பயந்ததால் அனுப்பக் கூடவில்லை. மிஸ்டர் டாடாபாய் வித்தியாசாலையை விட்டதும் பள்ளிக்கூட உபாத்தியாயராக அமர்ந்து கொஞ்சகாலத்தில் பம்பாயிலுள்ள முதல்தர வித்தியாசாலையாகிய 'எல்பின்ஸ்டோன் காலேஜில்' கணிதசாஸ்திர பண்டிதராக வந்தார். அந்த வேலைக்கு அதுவரையில் மிகவும் கற்றுத்தேர்ந்த ஐரோப்பிய பண்டிதர்களையே நியமித்து வந்ததால் அவ்வேலைக்கு இவரை நியமித்தது இவருக்கும், சுதேசிகளுக்கும் ஓர் பெருங் கீர்த்தியே யாயிற்று. அவ்வேலையி லிருக்கையில் பம்பாயில் பொதுஜனப் பிரயோஜனமான பல விஷயங்களில் முன்னின் றுழைத்துப் பொதுஜனோபகாரியென்று பேர்பெற்றார். 1855-ம்வருஷத்தில் இவர் காமா என்னும் பேருடைய பிரபலம் பெற்ற பம்பாய் வியாபாரிகளோடு கூட்டாளியாகச்சேர்ந்து இங்கிலாந்தில் சுதேச வியாபார சங்கமொன்று ஏற்படுத்தி வியாபாரம்செய்யவென்று சீமைக்குப் புறப்பட்டுச்சென்றார். அப்போதப்போது சொந்தக்காரியார்த்தமாகவும் வியாபாரார்த்தமாகவும் நடுவில் இந்தியாவுக்கு வந்த காலங்கள்போக மொத்தம் 30 - வருஷகாலம் இங்கிலாந்திலேயே வாசமாயிருந்துகழித்திருக்கிறார். இந்தியா துரைத்தன விஷயத்தைப்பற்றியும் இத்தேச வளப்பம் இத்தேசத்தார் நிலைமை இவைகளைப் பற்றியும் வியாபார வர்த்தக சம்பந்தமான பல முக்கிய விஷயங்களைப்பற்றியும் இவர்தீரத்தெளிய ஆராய்ந்து எழுதிய பிரபந்தங்கள் அவ்விஷயங்களில் மிகவும் ஆதாரமான கிரந்தங்களாக விருக்கின்றன. துரைத்தன ஞானத்திலும், இந்தியா [illegible] வளப்ப விர்த்தாந்தங்களி[illegible] முகு மேலான அறிவுடையார் இந்தியாவில் வேறுயாருமிலர். அங்கிலேய துரைத்தன சம்பந்தமான விஷயங்களையும் இவர்நன்றாகத்தீரத் தெளிய அறிந்திருக்கிறார். இவர் நடுவில் பரோடா திவானாகவிருந்து கலைபப் படாதிருந்த அந்நாட்டுத் துரைத்தனத்தைச் சீர்படுத்தி நல்ல பேரும் கீர்த்தியும் பெற்றார். பின்னர் பம்பாய்நகர் முனிசிபல் சங்கத்தில் மெம்பரா யிருந்து முனிசிபல் சீர்திருத்தங்கள் பல நிறைவேற்றுவதற்குக் காரணபூதராயிருந்தார். பிற்பாடு லார்ட் ரே பம்பாய் கவர்னராகவிருந்த காலத்தில் பம்பாய்சட்டநிரூபண சபை மெம்பராக நியமிக்கப் பெற்று அங்கும் மிக உபயோகமுள்ளவரென்று கீர்த்திபெற்றார். சென்ற 6-வருஷகாலமாய் பார்லிமெந்து சபையில் ஒரு மெம்பராக வேண்டுமென்று விடாபிடியாக முயற்சித்து கடைசியில் "முயற்சி திருவினையாக்கும்" என்னும் உண்மைவாக்குப்படி பார்லிமெந்து மெம்பராக நியமிக்கப்படும் ஒப்பற்ற பாக்கியம் பெற்றார். இப்பேர்ப் பட்ட ஒருவர்நமதுதேசத்தவராக விருப்பது நமக்குப் பேருங்கீர்த்தியே.

புதுஹைகோர்ட்டுகட்டடங்கள்

இந்தமாசம் சென்னையில்நடந்த மிக முக்கியமான சம்பவங்களிலொன்று சென்ற மூன்று வருஷகாலமாகக்கட்டிவந்த ஹைகோர்ட்டு ஸ்மால்காஸ்கோர்ட்டு கட்டடங்கள் திறக்கப்பட்டதே. கனம்பொருந்திய கவர்னர் அவர்கள் நாளது மீ" 12உ வெகு ஆடம்பரங்களோடு கிரகப்பிரவேச சடங்குசெய்து மேற்படி கட்டடங்களை முறைப்படி திறந்தார். சென்னையிலுள்ள கட்டடங்களெல்லாவற்றிலும் இப்புதியகட்டடங்கள் அழகிலும்வேலைப்பாட்டிலும் சிறந்தவையாக் விளங்குகின்றன. இந்தியாவிலுள்ள அழகமைந்த வேலைப்பாட்டுக்குப் பேர்போன கட்டடங்களில்இக்கட்டடம் முதலான ஒன்றாகக் கொண்டாடப் படத்தக்கதாம்.

அறிவைப்பரவச்செய்யும் சபை உபகார சங்கம்.

நமது திருவனந்தபுரம் உபகாரி பின் வருமாறு எழுதுகிறார்:—

இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்த் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியில ஒருமைப்பட்டிருந்தால் அந்தக் காரியம் ஈசுவரனால் அவர்களுக்கு லெபிக்குமென்று நமது வேதத்தில் சொல்லியிருக்கிறது. தாங்கள் அறிவைப்பரவப்பண்ண எடுத்திருக்கிற காரியத்தில் பலருடைய ஐக்கியம் இருப்பதினால் இந்தியாவில் தமிழ் பாகத்தில் பரவி விருத்தியாகு மென்பதில் சந்தேகமில்லை.

தாகித்தவன் தண்ணீரையும் பசித்தவன் ஆகாரத்தையும் எப்படி உட்கொள்ளுவானோ அப்படியே இந்த விவேக சிந்தாமணியின் மதுரவசனத்தை உட்கொள்ள வேண்டும். இப்போது உட்கொண்டும் வருகிறார்கள். அமிர்த துல்லியமான அந்த வார்த்தைகளை ஆமூலமாய் கிரகிக்கிறதற்கும் அதை பரம தனமாய் கைக்கொள்ளுகிறதற்கும் உபயோகமாயிரும். விவேகசிந்தாமணி வாடாத புஷ்பமாயிருக்கிறது.

மழைமேகம் மழையைப் பெய்வது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையாய் இதில் சேர்ந்த உபகாரிகள் உதவிசெய்து வரவேண்டும்.

பொறுமையோடு தைரியத்தையும் கூட்டிக்கொள்ளவேண்டும்.

ஆறுமுகநகரி கிளைச்சங்கம்.

சென்னையிலுள்ள அறிவைப் பரவச்செய்யும் சபை உபகாரி.

ஒருவர் கழிந்த கோடை விடுமுறை காலத்தில் திருநெல்வேலிக்குப் போயிருக்கையில் நமது சபை விஷயமாக குத்தாலம்முதலிய இடங்களுக்குச்சென்று சுற்றி வந்ததோடு ஆறுமுகநகரியென்னும் கிராமத்தில் நமது ஏற்பாட்டுப்படி 'ஞானபிவிர்த்திசபை' யென்று ஒரு கிராமசபை யேற்படுத்தி வந்திருக்கிறார். அச்சபையார் முதலெடுப்பில் விவேகசிந்தாமணியும், சுதேசமித்திரனும் வாங்கி வாசித்து வருகிறார்கள்.

இராமமந்திரம்

திண்டிவனம் தாலூகா இராமமந்திரத்தி லிருந்து ஒருவர் அறிவைப்பரவச்செய்யும் சபை உபகாரியாக விருக்க இசைந்து சென்ற சஞ்சிகையில் நாம்வெளியிட்ட உறுதி நாமா பத்திரிகைப்படி கையெழுத்துசெய்து அனுப்பியிருக்கிறார். இன்னும் சிலர் உறுதிநாமா எழுதியனுப்பி யிருக்கிறார்கள். மற்றவர்களும் சீக்கிரத்தில் உறுதிநாமா எழுதி யனுப்புவதோடு, அவரவர்க ளிருக்குமிடங்களில் அறிவைப் பரவச்செய்ய அவர்களெடுத்துக் கொள்ளும் முயற்சி யின்னதென்பதைச் சுருக்கமாய் நமக்கு எழுதித் தெரிவிப்பார்களென்று கோருகிறோம்.

திருவனந்தபுரம் கிளைச்சபை.

திருவனந்த புரத்தி லிருந்து நமக்குப் பின்வரும் ரிபோர்ட்டு வந்திருக்கிறது:—

திருவனந்தபுரத்தில் ஸ்தாபகமா யிருக்கும் "அறிவைப் பரவச்செய்யும் சபை" யின் கிளைச்சபை மறுபடியும் ஆனிமீ" 14, 21, 28, ஆடிமீ" 4-தேதிகளாகிய பிரதி ஞாயிறுகளிலும் ம-ா-ா-ஸ்ரீ, பென்ஷன் ஓவர்சியர்-அரங்கநாதபிள்ளை அவர்கள் வீட்டில் கூட்டங்கள் கூடின.

2. இந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தின ஞாயிறுகளில் 20, 25, 30 பேர்கள்வரையில்தான் கூடினார்கள். இதற்கு மேலில்லை.

3. இந்தக்கிழமையிலோ மாணுக்கர்களில் 25-ம் பெண்குழந்தைகளில் 3-ம், பெரியோர்களில் 25-ம் 53-பேர்கள் கூடினார்கள்.

4. அக்கிராஸனத்தை ஹைகோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ சேஷய்யங்கா ரவர்கள் வகித்தார்கள். ம-ா-ா-ஸ்ரீ சுப்பராயப்பிள்ளை அவர்கள் கல்வியைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். "விவேகசிந்தாமணியில்" உள்ள "தமிழ்ப்பாஷை" என்னும் தலைப்பெயர்கொண்ட தொருவிஷயமாய் சீப் இஞ்சினியர் ஆபீஸ் எட் குமஸ்தா ம-ா-ா-ஸ்ரீ T. சுப்பய்யாபிள்ளை அவர்கள் வாசிக்க, ஓவர்சீயர் அரங்கநாதபிள்ளை அவர்கள் அர்த்தம் சொன்னார்கள். திருச்சினாப்பள்ளி துரைசாமிஅய்யரவர்கள் சன்மார்க்கத்தைக் குறித்துப் பிரசங்கித்தார்கள்.

5. முந்தின ஞாயிறில் சொல்லி யிருந்தபடி மாணுக்கரில் குழந்தைவேலுபிள்ளை கல்வியினால் உண்டாகும் பயனைக்குறித்துச் சுருக்கமாய் எழுதி வாசித்தார். அப்பால் இக்கூட்டத்தில் இருந்த ப்ளொஸ்கான் சாகிபு என்ற ஒரு மகமதியர் இந்துஸ்தானியில் கெம்பீரமாய்ப்பாடினார். கொஞ்சநேரம் சொரபித்து என்று சொல்லப்பட்ட வாத்தியத்தை ஆறுமுகம்பிள்ளை அவர்கள் வாசித்தபிறகு, கொஞ்சநேரம் செண்பகராமம்பிள்ளை அவர்களும் வாசித்தார்கள். இப்படியே தம்புரையும் ஒருவர் மாற்றி ஒருவர் வாசித்தார்கள்.

7. அந்த பிளொஸ்கான் சாகிபு பாடின பாஷை கெம்பீரமான இந்துஸ்தானி யானதால் அதற்கு ஸ்வபாவமே கெம்பீரம். அந்த கெம்பீரத்துக்கேற்ற சொரபித்து வாத்தியமும் கெம்பீரமானதினாலே தம்புரு தொனியோடுகூட மூன்று தொனியும் இசைந்து ஐக்கியப்பட்டதிலுண்டான கானதொனியின் அதிமதுரத்தை செவிவழியாய் ஆத்மா உட்கொண்டு திருப்திகரமான சந்தோஷத்தை அடைந்தது.

இக்கூட்டமானது பகல் 4 - மணிமுதல் 6 - மணிவரை நடத்தப்பட்டது.

8. இப்படியே B. A., லெக்ஷ்மணபிள்ளை அவர்களும் ஒரு சங்கத்தைக்கூட்டி நடப்பிவித்து வருகிறார்கள்.

9. இன்றுகூடின கூட்டத்திற்கு அதிதியாய் வந்திருந்த சென்னப்பட்டணம் ம-ா-ா-ஸ்ரீ T. P. சக்தரமய்யரும் இங்கு நடந்த உபந்நியாஸம், வாத்தியமுதலானவைகளைக் கேட்டு ஆனந்தமடைந்து இந்த "அறிவைப் பரவச்செய்யும் சபை" விஷயமாய் இவ்வூரில் ஸ்தாபித்திராநின்ற லண்டன்மிஷன் புஸ்தகசாலையில் ஷை தேதி இரவு 7-மணிமுதல் 8-வரையில் பிரசங்கித்தார்.

10. "அறிவைப் பரவச்செய்யும்சபை"யின் காரியதரிசிம-ா-ா-ஸ்ரீ ஸி.வி. சாமிநாதய்யரவர்கள் இதுவிஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமம் நாள் ஏற ஏற கூட்டமுமேறுமென்று சித்தாந்தப்படுத்த அஸ்திபாரமும், மூலைக்கல்லும் போடப்பட்டிருக்கிறது.

எடப்பள்ளி. நீலகிரி ஜில்லா எடப்பள்ளியில் அறிவைப் பரவச்செய்யும் சபையின் உபகாரியாக விருக்கும் நண்பர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"சென்ற மாதங்களினுடைய 'விவேகசிந்தாமணியைப்' பார்க்கப் பார்க்க ஆசையொழியாமல் திரும்பத் திரும்பப்படித்து சலியாமல், சதாகாலமும் கையில் வைத்துக்கொண்டே படித்து ஆனந்தம் அடைவதுடன் இந்த ஊரிலுள்ள சத்ஜன சங்கத்தின் மெம்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் படித்துக் காட்டி விளக்கிக்கொண்டும் வருகிறேன். ஒவ்வொரு நண்பரும், இதைப்போன்ற பத்திரிகைகாண்பது அரிதரிது என்றும், தங்களுக்கு அறிவு மென்மேலும் பெருகுவதற்கு இப்பத்திரிகை யன்றி மற்றொன்று முதவாதென்றும் சொல்லி, ஆனந்தமடைகிறார்கள். நேற்று யான் 'இனித்துறை' என்னும் கிராமத்தில் சுமார் நூறு ஜனங்களுக்கு மத்தியில் படுகர் சீர்திருத்தத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்யும்பொழுதும் நமது அருமை விவேகசிந்தாமணியின் பெருமையையும் அதையின்றிக் கிராம வாசிகளுக்கு அறிவு விருத்தியாகாதென்றும் சொல்லச் சமயம் நேர்ந்ததைப்பற்றிச் சந்தோஷத்துடன் தெரியப் படுத்துகிறேன்.

எடப்பள்ளி என்னும் படுகர் ஊரின் சத்ஜன சங்கம் அதிக விருத்தியடைந்து கொண்டுவருகிறது.

ஷை சபையினுடைய மேமீ 30உ யில் கூடிய சபையின் நடவடிக்கைப் படிக்குப்பிரசுரம் செய்யப்பட்ட விளம்பரம் ஒருகாபி அனுப்பி யிருக்கிறேன். அதைத் தாங்கள் எவ்விதமாய் உபயோகித்தாலும் உபயோகிக்கலாம்"

கோரிக்கை. இவர் எடப்பள்ளி லோகல் பண்டு ஸ்கூல் தலைமை உபாத்தியாயராகவிருப்பதோடு மேற்கண்ட சத்ஜன சங்கத்துக்கு அக்கிராசனாதிபதியாகவுமிருக்கிறார். அங்கங்கே பள்ளிக்கூட உபாத்தியார்களாக விருப்பவர்கள் வேலையும் நமதுசபையின் நோக்கமும் ஒரே தன்மையவாகப்பொருந்தி யிருப்பதால் வெளிஜில்லாக்களிலுள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்களெல்லாரும் அறிவைப் பரவச்செய்யும் சபை உபகாரிகளாகச் சேர்ந்து விவேக சிந்தாமணிக்குக் கையொப்பம்செய்து அப்பத்திரிகையைக் கொண்டு அறிவைப் பரவச்செய்ய நம்மோடு ஒத்துழைப்பார்களென்று கோருகிறோம்.

எடப்பள்ளி சத்ஜன சங்கம். நமது உபகாரி அனுப்பிய இச்சபையின் விளம்பரப்பத்திரிகையைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

1. ஒவ்வொரு நாடும், நகரமும், பட்டணமும், ஊரும், சிறிய கிராமமும் தினே தினே நாகரீகத்திலும், கல்வியறிவிலும், வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் விருத்தியடைந்து கொண்டே வரும்பொழுது உத்தம மானிட ஜென்ம மெடுத்தவர்களாகிய நாம் என்ன காரணத்தினாலோ கொஞ்சமேனும் ஒரு விஷயத்திலாவது முன்னுக்கு வராமல் இருப்பதானது அதிக ஆச்சரியமானதாக விருக்கிறது.

2. நமது படுக ஜாதியாரில் இப்போது சிற்சிலர் படித்து நானாவித அலுவல்களில் பிரவேசித்திருப்பதை, நாம் பார்த்து சந்தோஷத்தை அடைவதுடன் பலரால் புகழத்தக்கதாயு மிருக்கிற விஷயம் நாம் அறிந்ததே.

3. நம் ஜாதியாருக்குள் நீடித்த காலமாய் குடிகொண்டிருக்கிற சில ஆபாசமானவைகளை நாம் குற்றமென்றும் செய்யத்தகாதவை என்றும் செவ்வையாய்த் தெரிந்திருந்தும் அதைப்பற்றி எவ்விதமாயாவது முயற்சி செய்து நீக்கி, விருத்தியடைவது நமது கடமையாயிருக்க அசட்டையாய் விடுவது உசிதமன்று.

4. ஆகையால் ஆதிகாலமாகிய மௌட்டிக காலத்தில் நமது முன்னோர்கள் ஏற்படுத்திய சில ஆபாசமான விதிகளிலிருந்து விலகி சீர்ப்பட்டாலொழிய, நாம் விருத்தியடைந்து, பிறரால் மதிக்கப்பட்டு சுகசௌக்கியமாய் வாழ்வதற்கு அனேகமாய் கூடாமலிருப்பதினாலே அடியில் வரும் தீர்மானங்களை, ஊர்ஜிதத்திற்கு கொண்டுவந்து, அதின்பிரகாரம் நடக்க நிச்சயித்திருக்கிறோமென்பதாக, வெளியூர்களிலுள்ள நமது ஜாதியாருக்குத் தெரிவித்து, அவர்கள் அபிப்பிராயத்தையும் கொண்டு முடிவான தீர்மானம்செய்து அதின்படி நடக்க வேண்டியதாயிருக்கிறது; அல்லது நமது தீர்மானங்களுக்கு ஒத்து வருகிற ஹட்டிகளில் மட்டுமாவது இதை நடவடிக்கைக்கு கொண்டு வரவேண்டியது நமது முக்கிய கடமையாக விருக்கிறது.

1. நமது வீடுகளில் சுத்த ஆகாயம் தாராளமாய் செல்லும்படி பெரியதாய் ஒரு ஜன்னலாவது வைக்க வேண்டுமென்பது.

2. நமது வீடுகளில் கண்ட இடங்களில் எச்சிலைத் துப்பி அசங்கியம் செய்யாமல், சுத்தமாய் வைத்திருக்கவேண்டுமென்பது.

3. நாம் வேலைக்குப் போகாத நாளாகிய திங்கட்கிழமைதோறும் வீடுவாசல்களை சாணியிட்டு மெழுகி, கேரிகளை சுத்தம்செய்து, ஒட்டடைகளை அடித்துக் கூட்டி, கோலமிட்டு, துணிதுண்டுகளை துவைத்து, ஸ்நானம் செய்து, ஆசாரபயபக்தியுடன் கடவுளை தியானிக்கவேண்டுமென்பது.

4. நாமே க்ஷவரம் செய்யும் வழக்கத்தையும் நமது இளம் ஆண்குழந்தைகளுக்கு இரண்டுவருஷத்திற்கு

முந்தியும், பெண்களுக்கு பன்னிரண்டு வருஷம் வரையிலும் க்ஷவரம் செய்யும் வழக்கத்தை அடியோடு நிறுத்திவிடவேண்டுமென்பது.

5. பெண்கள் இலக்ஷணத்தை குறைப்பதாயிருக்கிற நெற்றியில் அவலக்ஷணமான பச்சைகுத்தும் வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்பது.

6. புருஷர்கள் நெற்றியில் விபூதியும், சந்தனமும், ஸ்திரீகள் மஞ்சளும், குங்குமமும் வைக்காமலிருக்கக்கூடாதென்பது.

7. பெண்குழந்தைகளையும்பாடசாலைக்கு அனுப்பி கல்வி கற்பிக்கவேண்டுமென்பது.

8. சவத்தை 24-மணி நேரத்திற்குமேல் ஹட்டிகளில் வைக்கக்கூடாதென்பது.

9. விலையுயர்ந்த வஸ்திரங்களையும் உடுப்புகளையும் சாவுக்கென்று சேகரித்துவைத்து, அதை தரித்துக்கொண்டு சாவுக்கு அலங்காரம் செய்துகொண்டுபோவதை நிறுத்திவிடவேண்டுமென்பது.

10. சாவுக்குப்போனவர்கள் கைகால் கழுவாமலும், சவத்தைத் தொட்டவர்களும், சவத்தைத் தொட்டவர்களை முட்டினவர்களும் ஸ்நானம் செய்யாமலும் வீடுகளில் பிரவேசிக்கக்கூடாதென்பது.

11. சவத்தை, இறந்தவருடைய நெருங்கின பந்துக்கள் தவிர மற்றவர்கள் தொடுவது அனாவசியமாதலால் அவ்வழக்கத்தை மற்றவர்கள் நிறுத்திவிடவேண்டுமென்பது.

12. சாவில் விலையுயர்ந்தஉடுப்புகளையும் வஸ்திரங்களையும் தரித்துக்கொண்டு, குதித்துவிளையாடும் அகோரமான வழக்கத்தை அடியோடு விட்டுவிடவேண்டுமென்பது.

13. சாவில் நூற்றுக்கணக்கானசெலவுசெய்துதேர் கட்டி சவத்தோடுவைத்து தீமூட்டி கொளுத்திவிடுவது பிரயோஜனமற்றதாயும், நஷ்டத்தையும், பின்பு வருத்தத்தையும், தரித்திரத்தையும் உண்டாக்குவதாயுமிருப்பதால் அவ்வழக்கத்தை விட்டுவிட வேண்டுமென்பது.

14. சந்தோஷமாகக் குதித்து ஆனந்தமடையஇஷ்டமிருந்தால் வருஷத்திற்கு ஒருதடவை குலதெய்வத்தைக் கொண்டாடும் நாளில் அக்கடவுளின் பொருட்டு ஓர் பெரிய தேர் கட்டி ... ... டன் விலையுயர்ந்த உடைகளைத் தரித்துக்கொண்டு குதித்துக்கொண்டாடி ஆனந்த மடைவதுடன் கடவுளையும் தியானிக்கவேண்டுமென்பது.

15. ஸ்திரீகள் தரிக்கும் உடையானது அவர்களுடைய இலக்ஷணத்தை குறைப்பதாயும் கோரப்படுத்துவதாயு மிருப்பதாலே, அதைத் தற்காலம் மாற்ற முற்றும் சாத்தியமில்லாத தாயிருப்பதி னிமித்தம் சிறுபெண்களுக்கு மட்டுமாவது சீட்டி முதலான துணிகளைக் கொண்டு, பாவாடை, தாவணி, சீலை முதலானதுகள் செய்து கொடுத்து நாகரீகத்தை யடைய முயற்சி செய்யவேண்டுமென்பது.

16. இனிமேல் கல்யாணத்தை பிராமணனை வைத்துக்கொண்டு மங்களவாத்தியத்துடன் சிறப்பாயும் விமரிசையாயும் நடத்தவேண்டுமென்பது.

17. ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டபிறகு அதையே ஊர்ஜிதமென்று எண்ணவேண்டுமே தவிர, யாதொரு காரணமுமின்றி அந்தப்பெண்ணை நீக்கவும் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்யவும்கூடாது. சந்ததியினிமித்தம் வேறொரு பெண்ணை விவாகம் செய்வதாயிருந்தால் முன் செய்து கொண்ட பெண்ணையும் வைத்துக்கொண்டு காப்பாற்றவேண்டுமென்பது.

18. இனிமேல்ஆண்பெண்குழந்தைகளுக்கு மாதா, ஹிரியா, ஹாலி, காடே என்றுபெயரிடாமல் கிருஷ்ணா, மகாதேவா, இலக்ஷ்மி, பார்வதி என்ற தேவ நாமங்களை வைத்தழைக்க வேண்டுமென்பது.

19. சுபகாரியங்களைச் செய்வதாயிருந்தால் நல்ல நாள் பார்த்தே செய்யவேண்டுமென்பது.

20. அபினி, சாராயம், முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கிறவர்களுக்கு புத்தி சொல்லி நிறுத்துவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்பது.

இதைப் படிக்கும் படுகர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஹட்டிகளில் கூடிய சீக்கிரத்தில் சபைசேர்ந்து இத்தீர்மானங்களின் விஷயத்தில் யோசனை செய்து அச்சபையாருடைய அபிப்பிராயங்களை இச்சபையாருக்குத் தெரியப்படுத்தவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதன்பிறகு ஓர்மகாசபை சேர்த்து ஊர்ஜிதமான தீர்மானங்கள் செய்து நடவடிக்கைக்குக் கொண்டுவர வேண்டியிருப்பதி னிமித்தம் எல்லோருக்கும் தெரியப்படுத்தலாயினோம்.

நமதுவிண்ணப்பம் நீலகிரி ஜில்லா மற்ற ஜில்லாக்களைவிடப் படிப்புவிஷயத்தில் மிகவும் பின்னடைந்துள்ளது. அந்த ஜில்லாவில் படுகர் மற்ற ஜாதியார்களைவிடப் படிப்பில் பின்னடைந்தவர்கள். அவர்களுக்குள் விடாமுயற்சியாய்ச் சிலர்சேர்ந்துழைத்தால் ... மிகவும் ... சீர்திருத்தங்கள் செய்துவர உழைப்பது சாத்தியமாக்கிருந்தால் மற்றவிடங்களில் ஜனங்களைச் சேர்த்துப் பொதுவிஷயத்திற்குழைப்பது எவ்வளவோ சாத்தியமாக விருக்கவேண்டும். அங்கங்கே ஊக்கமும் விடாமுயற்சியும்கொண்டு உழைப்பவர்கள் தான் முன்வரவேண்டும். அப்படிப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் நமக்கு எழுதிக்கொள்வார்களென்று கோருகிறோம்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

கிழச்சிங்கத்தின் கதை.

மிருகங்களுக்கெல்லாம் அரசனான ஓர் ஆண் சிங்கமானது தன் வாலிபக்காலத்தில் மிகுந்த பலமும் அதிக வீரியமும் உக்கிரமா ஆண்மையோடும் காட்டில் திரிந்து கொண்டிருந்தது. அச்சிங்கத்துக்கு "வாதுக்காடின தேவடியாள் வயது முதிர்ந்தால் கழுதை மேய்ப்பாள்" என்பதுபோல் வயது முதிர்ந்தபடியால் உடம்பு தளர்ந்து மிகவும் தாழ்ந்த ஸ்திதியில் இருக்கும் காலத்தில் அந்தக் காட்டிலுள்ள சிங்கத்துக்கு தாழ்ந்த மிருகங்கள் யாவும், தங்களுக்கு அது வாலிபக் காலத்தில் செய்த கொடுமைகளையெல்லாம் எண்ணி ஒன்றாய்ச்சேர்ந்து தங்களுக்கு இருக்கும் குரோதத்தினாலும் அகங்காரத்தினாலும் ஏகமனதாகிக் கிழச்சிங்கத்தின் மேல் வீழ்ந்து கோரைப்பல்லுள்ள காட்டுப் பன்றிகள் கோரைப்பல்லுகளால் கீறவும், ரிஷபங்கள் கூர்மையுள்ள கொம்பினால் முட்டிக் காயப்படுத்தவும், கழுதை பின்னங் காலால் உதைக்கவும் நேர்ந்தபடியால் சிங்கமானது மற்ற ஜந்துக்களெல்லாம் தன்மேல் விழுந்தது தனக்குப் பெரிதாயிருக்கவுமில்லை. அதனால் வருத்தமுமில்லை. மிருகங்களுக்கெல்லாம் கடைகஷ்டமான கழுதையின் குதிகால் தன்மேற் பட்டதைக் குறித்துத் தனக்கு மனதில் அதிக துக்கமுண்டாகி நாம் மற்ற மிருகங்களால் வருத்தமடைந்து இறந்து போவது பெரிதல்ல. இந்த கழுதைக்காலால் உதைபட நேர்ந்ததைப்பார்க்கிலும் ஆயிரம் தரம் இறந்தாலும் இறக்கலாம் என்று கடைமொழியாகச் சொல்லிக்கிடந்தது.

நீதி:—ஒருவன் வாலிபத்தில் தானே நல்லவனென்று பேரெடாதவனுக்கு கிழத்தனம் வந்தபோது யாரு மதிக்கமாட்டார்.

கல்வி:—ஒருவன் பிறந்தது முதல் பாலியத்திலேயே மாதா பிதா உபாத்தியாயர் இம் மூவருக்கும் அடங்கி அவர்கள் போதிக்கும் போதனையைக்கேட்டு நடந்து யௌவனகாலத்தில் நல்லோருடன் சிநேகம் செய்து நன்னடக்கை கல்வியொழுக்கத்துடன் நடந்து நல்ல பேரெடுத்துக் கொள்ளுகிறானோ அவனுக்கு வயது முதிர்ந்து தள்ளாமை வந்தகாலத்தில் யாவரும் மரியாதையும்மதிப்பும்வைப்பார்கள்.

இந்தக் கதையால் தெரியவருகிற தென்னவென்றால் பொறுமை, கோபம், கடுஞ்சொல், ஆசை இவைகளை அதிகமாகக் கையாளலாகாதென்பதாம்.

மஹாராணி.

துன்மன சாட்சியைக் குறித்து.

மடியில் நெருப்பு:—மனசாட்சியே! மனசாட்சியே! நீஎன்ன வஸ்துவாயிருக்கிறாய்? 1. ஓயாமல் முறையிடுகிறாய். (2) எதிர்பேசக்கூடாத சாட்சியாயிருக்கிறாய். (3) இரவும் பகலும் இளைப்பு அடையாத பிரசங்கியா யிருக்கிறாய். (4) கலைக்கவும் மறைக்கவும் படாத குட்டுத்தழும்பா யிருக்கிறாய். (5) ஆறாப் புண்ணாயிருக்கிறாய். (6) சாகாமல் பிடுங்கிக் கொண்டிருக்கிற பூச்சியாயிருக்கிறாய். (1) அவியாமல் எரித்து கொண்டிருக்கிற அக்கினியாயிருக்கிறாய். ஆகையால் துன்மனசாட்சி படாதுக்கூடாது.

கடன்படலைக் குறித்து.

பெரும் வாழ்வை தேடுகிற எவரும் கடன் படலாகாது. கடன், வாழ்வை கெடுத்துவிடும். குடிவாழ்வைத் தேடவேண்டும்.

கர்வித்த கன்றுக்குட்டி.

இளங்கன்றுக்குட்டி யொன்று கழனியில் உழுகிற எருதுகளைப் பார்த்து நீங்கள் ஏன் இப்படி ஒருவனுக்கு அடிமையாகி இந்த முழங்கால் சேற்றிலும் தண்ணீரிலும் கழுத்து நோக நுகத்தடியை வைத்துக் கயிற்றால் கட்டி பின்னாலே பளுவாகிய கலப்பையொன்றை மாட்டி தாத்துக்கோலால் குத்த இழுத்துக்கொண்டு சங்கடப்படுகிறீர்களே. நீங்கள் இப்படியெல்லாம் பாடுபட்டும் உங்களுக்கு நல்ல புல்லும் குடிக்க நல்ல ஜலமுந்தான் கிடைக்கமாட்டாதே நீங்கள் இழுக்கமாட்டாமல் களைத்து விழுந்து கிடந்தாலும் உங்கள் முகத்தில் கொஞ்சம் பச்சைத் தண்ணீரைக்கூட தெளிக்கமாட்டார்களே; என்னைப்பாருங்கள் என்னிஷ்டப்படிக்கெல்லாம் ஓடுகிறேன்; நல்ல புல்லையும் நல்ல ஜலத்தையும் குடிக்கிறேன்; என்று இளங்கன்று பயமறியாதென்பதுபோல துள்ளி அகம்பாவத்தனமாய்ச் சொல்லிப்போய்விட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் கிறுது போசின கன்றைப் பிடித்து அதன்கழுத்திற் பூமாலைபோட்டுப் பிடாரியாருக்கு பலியிட்டிருப்பதை உழுதுவிட்டுப்போகிற மாடுகள் அதன் காதினிடமாகப்போய் ஐயோ இவ்வளவு சீக்கிரத்தில் இந்தகதி அடைகிறவன் தானாதுள்ளி தெப்பென்று விழுந்தாயே: இப்போது நீ சுகமாவென்று சொல்லிப்போய் விட்டதாம்.

மஹாராணி.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR 6-APR. 93 MADRAS.

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892ஹு ஆகஸ்டுமீ. இலக்கம். 4.

ஜீவராசிகளினிலக்கணமும் பிரிவும்.

நம்மாலறியத்தகும் பதார்த்தங்களெல்லாம் கல் மண் முதலான உயிரில் பொருள்களும் புல் பூண்டு புள் விலங்கு முதலான உயிருள் பொருள்களும் என்ற இரு பெரும்பிரிவிற்குள்ளடங்குமென்பது யாவருமுணர்ந்த விஷயம். உயிரில் பொருள்களையும் உயிருள் பொருள்களையும் ஆகியோடந்தம் ஒத்துநோக்கி யவற்றிற்குள்ள்வேற்றுமையைநிர்ணயித்து உயிர்அல்லது ஜீவனென்பதினிலக்கணம் இன்னதுதானென்று வரையறுத்து நிலைநிறுத்தல் நுண்ணிய சாஸ்திரப்பயிற்சி யுடையவர்க்கும் அரிதான காரியமாக இருக்கின்றது. ஆயினும் நமது நித்தியானுபவத்தில் நாம் கையாடுகின்ற பொருள்களுள் உயிருள்ளவை இவை, உயிரில்லாதவை இவை, எனப் பொதுவாக நாம் பகுத்தறிந்துகொள்ளுகிறோம். அறியாத சிறுபாலர்கள் ஒழிய, யாரேனும் கல் மண் முதலியவற்றாலாக்கப்படு முருவங்களைப் பூச்சியென்று உயிருள் பதார்த்தமாகக்கொண்டு மயங்குவதுண்டா? இவ்விதம் நாம் நமது தினசரியில் காணும் ஜீவராசிகளையும் ஜடராசிகளையும் பிரித்துணரும் குறிப்புகளைச் சற்றுற்றுணர்ந்து பார்த்து அவற்றின் வேறுபாடுகளை விளக்கும் இலக்கணங்களைச் சிந்தித்து நிதானிப்போமாக.

2. இங்ஙனம் பார்க்கையில்ஜீவராசிகளுக்குரிய பல இலக்கணங்களுள் மூன்றிலக்கணம் யார்க்கு மெளிதில் புலப்படத் தக்கனவாயிருக்கின்றன. அவையாவன:—முதலாவது "அவயவி பாவமானசரீரம்" அல்லது "உறுப்போடமைந்த வுடம்பு".

இரண்டாவது விருத்தி க்ஷயம், அதாவது வளர்தல் கெடுதல்.

மூன்றாவது பிரத்தியுத்பாதநம், அதாவது தன்னைப்போன்ற பிரதிநிதி சமைத்தல், அல்லது பிற்கிளையாக்கம்.

3. பிரஜையற்றவனுக்கு எப்படி ராஜாஎன்ற நாமம் வரமாட்டாதோ, பிள்ளையற்றவனுக்கு எப்படித் தந்தையென்றபெயர் இடையாதோ, அப்படியே உயிரில்லாவிடில் உடம் பென்ற வேற்றுமைத்தோற்றம் பிறவாது. உடம்பென்பது உறுப்புகளா லாக்கப்பட்ட யாக்கை. ஒரேபொருள் பலபாகங்களாகப் பிரிக்கப்படும்படி இருக்கவும், அப்படி பிரிக்கப்படும் பாகங்களுக்குத் தனித்தனி வெவ்வேறு தொழில்களும் அத்தொழில்களுக் கேற்ற கட்டுப்பாடு குண முதலியவையு மிருக்கவும் செய்தால், அப்பாகங்களி லொவ்வொன்றும் உறுப்புஅல்லது அவயவமெனப்பெயர்பெறும். அவ்வுறுப்புகளியற்றுந் தொழில்கள் பலவற்றையும் ஒருமைப்படுத்தி யனுபவிக்கும் சமூகத்திற்கே உடம்பு, யாக்கை, அல்லது சரீரம் என்ற பெயர் உரியதாகும். இதனைச் சோதித்தறிய விரும்புவோர் மரவர்க்கத்தி லேதேனுமொன்றை யெடுத்துப் பார்ப்பாராகில் அதற்கு வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய் முதலிய பலவுறுப்புகள் அமைந்து கிடப்பதையும், அவற்றி லொவ்வொன்றும்

வெவ்வேறான வடிவு, பண்பு, கட்டு, தொழில் முதலியவற்றைப் பெற்று நிற்பதையும், இவ்வவயங்களனைத்தையுந் தன்னுளடக்கி, யிவற்றின் செய்தொழில் பயனை யநுபவிக்கு மரமாகிய சமூகம், அவயவீபாவமடைந்து சரீரமெனும் பெயர்க்குரித்தாய் விளங்குவதையும் காண்பார்கள். இப்படியே ஆடு, மாடு, நாய், நரி முதலிய மிருகங்களைக்குறித்து யோசிக்கையிலும், அவற்றின் கண், செவி, கை, கால்முதலிய வெளியுறுப்புக்களும், அன்னசயம் ரக்தாசயம் பித்தாசயமுதலிய உள்ளுறுப்புக்களும், அவற்றின் வெவ்வேறும் உருவம், குணம், விதானம் வியாபார முதலியனவும், அவ்வவயவங்களின் சமஷ்டியாகிய உடம்பின் நிலைமையும் காணலாகும். இரும்பு, கல் முதலியவற்றை யெடுத்துச் சோதித்துப்பார்க்கிலோ, அவை அவயவ பேதமற்றவைகளா யெங்கு மொருபடித்தாங் கட்டுப்பாடும் சமகுணமும் ஒரேதொழிலு முடைத்தாய் முற்கூறிய இலக்கணத்திற்கு மாறுபட்டு நின்றுதாமுயிரில் பொருளென விளக்கி நிற்பதும் புலப்படும். கடிகார முதலிய யந்திரங்களும் பல அங்கங்களா லாக்கப்பெற்றும் அவ்வங்கங்கள் வெவ்வேறும் வடிவம், குணம், கட்டு, தொழிலிவைகளை யுடையனவாயு மிருப்பதால், அவ்வங்கங்களை யுறுப்பென்னும், அவற்றின் சமஷ்டியாகிய யந்திரங்களை யுடம்பென்றுங் கொண்டு, அவைகளையு முயிருள்ள பதார்த்தங்களாக மதிக்கக்கூடாதோ எனின், அவ்வங்கங்களின் சேர்க்கை இயற்கையன்றிச் செயற்கையாதல் பற்றி யுறுப்பெனக் கூறுதல் வழக்கமன்று. அன்றியும் அவைகளையும் ஒருகாலுறுப்பெனவே மதிப்போமாயினும், உயிருள் பொருள்களுக்கு வகுத்த மூன்றிலக்கணங்களில் "உறுப்போடமைந்த உடம்பு" ஒன்று தவிர மற்றிரண்டு இலக்கணங்களும் பொருந்துமோவெனத் துணிந்த பின்னரே யந்திரங்களும் சீவராசிகளி லடங்குமெனக் கருதல் கூடும்.

[illegible]லாம்கூறிய உயிர்களி னிரண்டாமிலக்கணம் விர்த்தி க்ஷயம் அல்லது வளர்தல் கெடுதலெனுங் குணமாம். இக்குணம் உயிரில்லாத பூதபௌதீகங்களுக்கும் அவற்றால் நாம் உண்டுபண்ணும் எவ்வகைக் கருவிகளுக்கும் பொருந்துவதன்று. அறியாதார்பாறைக் கற்கள் வளர்ந்துவருகின்றன வென்று மயங்குவர். அத்தோற்றத்திற்குக் காரணம், அக்கற்களைச் சுற்றியிருக்கு மண் முதலியன மழையாதியால் சிறிதுசிறிது நீங்கி யப்பாறைகள் காலக்கிரமத்தில் அதிகரித்து வெளிப்படுதலேயாம். இஃதன்றியும் அக்கினிபர்வதாதி ஏதுக்களாலும் அத்தோற்றம் உண்டாகுமென்பது பௌமியசாஸ்திரப் பிரசித்தம். உண்மையில் வளர்தல் கெடுதலென்பதுஆகாரஸ்வீகாரத்தின்பயனாகவே யிருக்கின்றது. நமது கொல்லையிற் பயிரிடும் கத்தரி, பாகல், கீரை முதலிய மரவர்க்கங்களெல்லாம் நீர் பாய்ச்சப்படாவிடில் வாடிச் சோர்வதையும் நீர் பாய்ந்தபொழுது தழைத்து வளர்வதையும் அறியார் யார்? இவைகள் யாவும் வேரினால் மண்ணிலுள்ள சில பௌதிகங்களையும், இலை முதலியவற்றால் காற்றிலுள்ள சில பௌதிகங்களையும், எல்லா அங்கங்களாலும் விசேஷமாய் வேரினாலும் நீரையுமுட்கொண்டு அவ்விதம் தங்களுக்குக்கிடைத்த பொருள்களைத் தத்தமக்குவேண்டிய பகுதிகளாக மாற்றித் தம் முறுப்பையும் உடம்பையும் வளர்த்துக்கொள்ளுகின்றன வென்பது கவனித்தால் யாவர்க்கும் புலப்படக்கூடியதே. இப்படி சீவராசிகள் வெவ்வேறு பூதபௌதிகங்களை யுட்கொண்டு அவற்றைத் தங்கள்சரீரத்தோடு அபின்னமாகக் கலப்பிக்குந் தொழிற்கேஆகாரஸ்வீகாரம் அல்லது 'உண்ணல்' எனும்பெயர் அமையும். "உண்ணலென்பது தன்மயப்படுத்தல்" * ஒருபைக்குள் நாணயமிடுதல் போலும் ஒருபாண்டத்தில் யாதாயினு மொருபண்டம் பெய்தல்போலும் மன்று, இவ்வுண்ணுதல் எனுந்தொழில். நெய்யில் தோய்த்த பஞ்சு அந்நெய்யை உண்டதாகச் சொல்வது உபசாரமேயல்லாது உண்மையன்று. இவையுட்கொண்ட பொருள்கள் அவற்றின் குணங்களோடு மீண்டுவரக் கூடியவையாயும் அப்படி மீளாவிடினும் குணவேறுபாடு அடையாமல் இடப்பெயர்ச்சி மாத்திரமடைந்தவையாயும் நிற்பதினால் நாம் சிவிகையாதி வாகனத்தில் புகுந்திருக்குங்கால் நம்மை அவ்வாகனங்கள் உண்டவாறாகாதது போலவே அப் பை

* நூற்றுறைவிளக்கம் சூத்திரம் 24

பாண்டம்பஞ்சுமுதலியனவும்யாதொன்றையும் உண்டதாக ஏற்படாது. நீரில் கரைக்கப்பட்ட உப்பும் அப்படியே நீரினால் உண்ணப்பட்டதன்று. அங்ஙனம் அவ்வுப்பை நீர் உண்டதாகமதிக்கப் படல்வேண்டுமேல் அவ்வுப்பின் சகலகுணங்களு நீங்கி நீரின் அளவையும் பெருக்கித்தான் ஒருக்காலு மீண்டுவராத நிலைமையையடைதல் வேண்டும். "உப்போடப்பை மருவவிட்டும் ஐக்கிய முன்னிவருந்தாகிற்பேன்"* எனும் ஆன்றோர் மொழி ஏகதேச உவமையாகக்கொள்ளல்வேண்டுமேயன்றிப் பூரணஐக்கியத்திற்குத்திருஷ்டாந்தமாகாது. காய்ச்சியபாலின்மேற்படரும் ஆடையானது சிறிது சிறிதாக அப்பாலிலுள்ளநெய் மயத்தைஸ்வீகரித்துப்பெருகுவது உண்ணுதலாலுண்டாகும் வளர்தல் போலன்றோ வெனின், அப்படியன்று. முறத்திலிட்டுப் புடைக்குங்கால் உமி வேறு அரிசிவேறாகுதல் போலக் கலப்புண்டிருந்த இரண்டு பௌதிகங்கள் தனித்தனி பிரிதலேஅன்றி ஒன்றைமற்றொன்று உண்டதாக இல்லை. இப்படியே இரசாயன சாஸ்திரப் பிரசித்தமான கந்தகஜலிதாதி சிலபௌதிகங்கள், தங்களுடைய ஆகருடணசக்தியால் நீரில் கலப்புண்டிருக்கும் தமக்கேற்ற வேறு பௌதிகங்களை இழுத்து அவற்றோடு முயங்கி வளர்வது போன்ற சிலஅற்புதத் தோற்றங்களைக் காட்டுமேனும், அவைகளுக்கு உறுப்போடமைந்த யாக்கையும் ஜீவராசிகளின் மூன்றாமிலக்கணமான பிரத்தியுத்பாதக சக்தியுமில்லாமையால் அவற்றை ஜீவராசிகளாக யாரும் மயங்கார்கள்.

5. பிரத்தியுத்பாதக சக்தி அல்லது பிற்கிளையாக்கம், என்பது சீவராசிகள் தங்கள் தங்களுடம்பினின்று தம்மைப்போல உறுப்புகளமைந்த தம்சாதி உயிர்களையுண்டுபண்ணும் வல்லமைக்குப் பெயராம். இது மிருகவர்க்கத்துக்கன்றி மரவர்க்கங்களுக்கும் பொதுவான இலக்கணம். காயுண்டாதலெல்லாமிதன் பொருட்டே, ஒருகல் ஆயிரந்துண்டுபட உடைந்து தன்னைப்போன்ற உருவும் குணமுமுடையபல வாய்ப்பவிப்பதற்கும் பிற்கிளையாக்கத்திற்கும் உள்ளபெரும் வேற்றுமை எடுத்துக்காட்டாமலே புலப்படக்கூடியதன்றோ? ஒரு கல்லானது தனதுபூர்வஸ்திதியையிழந்தன்றிப் பலகற்களாகாது. மேலும் பலவாய்ச்சிதறிய கற்கள் ஒவ்வொன்றும் முன்னொன்றாயிருந்த கல்லைப்போலப்பருத்துப் பின்னுமிப்படி பலவாதற்குக்கூடியதுமல்ல. "நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக் கொண்டகருவழிக்குங் கொள்கைபோல்" * சிலவுயிர்கள் பிற்கிளையாக்கத்தால் தம்முடலழிவதுஇயல்பே: ஆயினும், அப்பிற்கிளைகள் காலக்கிரமத்தில்வளர்ந்து ஒன்று பலவாகத்தாமும் பெருகுவதனால் இவற்றின் பிரத்தியுத்பாதகத்திற்கும் கல்லுடைதலுக்கும் வேறுபாடு பெரிதாம். இம்மூன்றிலக்கணங்களிலொவ்வொன்று சிற்சில இடங்களில் புறநடையாகப் பிற பொருள்களுக்குக் காணப்படுமாயினும் மூன்றிலக்கணமு மொன்றாகப் பொருந்துவது சீவராசிகளிடத்து மாத்திரமேயாம்.

6. கூறிய மூன்றிலக்கணங்களும் சீவராசிகளைச் சடபதார்த்தங்களினின்று பிரித்தறிந்து கொள்வதற்குப் போதுமாயினும், அச்சீவராசிகளின் விசித்திரங்களையும் குணவைபவங்களையும் நன்கறிதல்வேண்டுமானால் அவற்றை வெவ்வேறு பிரிவுகளாய்ப் பகுத்து ஒவ்வொரு பிரிவுக்குமுள்ள விசேஷ லக்ஷணங்களைச் சோதித்தலாவசியகம். இதோநிற்கிறமரமும் இதில் கட்டியிருக்கிற பசுங் கன்றும் உயிருடையவை யெனுந்தன்மையில் ஒப்பேயாயினும் மற்றெல்லா விஷயங்களிலும் எவ்வளவு வேறுபாடுடையன! உயிரிலக்கண மாராய்வோர் முதலில் ஜீவராசிகளை இருபெரும்பிரிவுகளாகப்பிரிக்கின்றார்கள்.

முதலாவது ஸ்தாவரமல்லது மரவர்க்கம்.

இரண்டாவது சரம் அல்லது மிருகவர்க்கம்.

இப்பிரிவு சாமானிய நித்திய அநுபவத்திற்கும் ஒத்ததாக நிற்கும். ஆயினும் அவற்றிற்குள்ள நுண்மையான பேதாபேத நிர்ணயம் அருமையான சாஸ்திரவிசாரணைகளிலொன்றாகஇருக்கின்றது. நீர் வாழ்செந்துக்களாகிய கண்ணுக்குப் புலப்படாத பல பொடிப்பூச்சிகளுக்கும் அத்தன்மையான சில பாசியினங்களுக்கும் வேற்றுமைகண்டுபிடித்தல் சிற்சில சமயங்களில் கருவிகளின் துணையாலுங்கூட அரிதெனச்சொல்வார். இவ்வித நுண்ணிய ஆராய்ச்சிக்குத் தக்க தருணம் பின்வருமாயினும், சில

* தாயுமான ஸ்வாமிபாடல்.

* ஔவையார்.

ராசிகளின் பெரும் பிரிவுகளான மரவர்க்கத்திற்கும், மிருகவர்க்கத்திற்கும் உள்ள முக்கிய வேற்றுமையை ஒருவாறு முதலில் நிச்சயித்துக் கொள்வோமாக.

7. பொதுவாக இவ்விருபிரிவுகளையும் ஒத்துப் பார்க்கில், மிருகவர்க்கத்திற்கு அவயவீபாவம், விர்த்திக்ஷயம், பிரத்தியுத்பாதகம் ஆகிய மூவகைப் பொது இலக்கணங்களுடன் கூடுதலாக இரண்டு சிறப்பிலக்கணங்களு முண்டெனக் காணலாம். அவையாவன:— (1) பிறபொருள்கள் தம்முடம் பின்மேல் பலவாறு தாக்குதலை யுணர்தலும், (2) அப்படித்தாக்குதலுக் கேற்றவாறு இடம்பெயர்ந்து தாமேசலித்தலும் ஆகிய இவ்விரண்டே. மாலைக்காலத்து நாம் தெருவில் உலாவுங்கால், வழியில் கிடப்பது பழுதையோ பாம்போ வெனும் ஐயம் தெளிவதற்கு, யாதேனும் ஒருகட்டையோ ஒருபிடி மணலோ எடுத்து அதன்மேல் எறிந்து, அப்படி யெறிந்தபொருளின் தாக்குதலால் சிறிதேனும் சலநம் பிறவாவிடின் பழுதைதானென்றும், பிறக்கில், பழுதையன்றுபாம்பேஎன்றும் நாம்துணிந்துகொள்வது மேற்கூறிய இலக்கணத்தின் உண்மையைவிளக்கிக்காட்டுகின்றதல்லவா? பிறபொருள்கள் தம்மேற்றோடின் அத்தாக்குதலையுணருகிறதற்குமிருகவர்க்கங்களிடத்தில் அமைந்து கிடக்கும் உறுப்பிற்கு பொதுவாகப் புலன் என்றும் அத்தாக்குதலுக்கேற்கச் சலிக்கும்படி அவைகளிடத்தில் அமைத்திருக்கும் உறுப்பிற்குப் பொதுவாகப்புலால்என்றும் பெயர்கூறலாம். மனிதர் சரீரத்திலும் யானை,குதிரை,ஆடு,மாடுமுதலிய வுயர்ந்த விலங்கினங்களின் உடம்பிலும் உள்ள ஞானேந்திரிய கருமேந்திரிய உறுப்புக்கள் அனைத்தும் இப்புலன் புலால் என்ற பொது உறுப்புக்களின் விகற்பங்களேயாம். கண், காது, மூக்கு நாக்கு ஆகிய உயர்ந்த புலன்களில் சிற்சில இல்லாவிடினும் பஞ்சேந்திரியங்களுள் ஆதியிந்திரியமாக இருக்கின்ற 'துவக்கு' அல்லது 'மெய்' இல்லாத மிருகங்கள் இல்லை. அப்படியே கைகால் முதலிய கருமேந்திரிய விகற்பங்கள் இல்லையாயினும், சிறிதேனும் அசைதற்குக் காரணமாயிருக்கும் ஒருவரிப்புலாலேனும் இல்லாத புழுவோ பூச்சியோ இதுகாறும் கண்டதில்லை. ஆனால் மரவர்க்கத்துள் அகப்பட்ட "தொட்டால்வாடி" முதலிய சிற்சில புற்பூண்டுகள் அவற்றின்மேல் யாதேனும் ஒருபொருள் விழுந்தால் கூச்சமுற்றவைபோலத்தங்கள்இலைகளைச் சுருக்கிக்கொள்வதினால், மிருகவர்க்கத்திற்கே யுரித்தெனக்கூறிய வுணர்தல் சலித்தல் என்னும் இரண்டு இலக்கணமும் அதிவியாப்திதோஷத்தால் பழுதாகாதோ எனின்; அது சரியே, இத்துணை உதாரங்களைக்குறித்தே தொல்காப்பியரும், "புல்லு மரனு மோரறிவினவே பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே" எனச் சூத்திரம் கூறினார் போலும்; ஆயினும் பெரும்பான்மை சிறுபான்மை நோக்கியே பெரும்பிரிவுகளாக ஏற்படும் ஸ்தாவர சரவுயிர்பேதஇலக்ஷணம்நிர்ணயிக்கக் கூடுமாதலின், அங்கங்கு மிகவும் அருமையாகத் தோற்றும் இத்தகைய வழுக்களைப் புறநடையாகக் கொள்ளுதல் நூலொழுங்கும் ஆன்றோர் வழக்கமுமாக இருக்கின்றது. இதுபற்றியே மிருகவர்க்கத்திற்கும் மரவர்க்கத்திற்கு முள்ள வேற்றுமை வரையறுத்து வகுத்தல் அரிதென முன்னரே கூறப்பட்டது. ஆயினும் 'தொட்டால் வாடி' முதலிய நங்கண்ணுக்ககப்படும் புற்பூண்டுகளின் சலநம், இலையாகிய ஒரே உறுப்பிற்கன்றி மற்றையங்கங்களுக்கில்லாமலும் அவை முற்றிலும் இடம்பெயர்ந்து இயக்கமுறும்வலிமை பெறாமலும் இருப்பதினால் நாம்கூறி நிறுத்தியஉணர்தல் சலித்தல் என்னும் இரண்டு இலக்கணங்களுமே மிருகவர்க்கத்தையும்மரவர்க்கத்தையும் பிரித்துஅவற்றிற்குள்ள வேற்றுமையை விளக்கப்போதுமாக அமைகின்றன.

ஜீவராசிகளின் பெரும் பிரிவுகளாகிய ஸ்தாவரம் சரமென்னும் இவற்றின் உட்பிரிவுகளையும் விசித்திரங்களையும் சோபானக்கிரமமாக சந்தர்ப்பம் வாய்த்தவழி யினிமேல் சோதிப்போம்.

திருவனந்தபுரம்
11-ஆகஸ்டு 1892 } P. சுந்தரம்பிள்ளை, M. A.

பெண்கல்வி.

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.—குறள்

பெண்கள் கல்விகற்கல் வேண்டியது ஆவசியகமென்பது இத்தேசத்தார் யாவருடைய அறிவிற்கும் புலப்படல்வேண்டிய விஷயமே; ஏனெனில், அவர்கள் உலகவாழ்க்கையில் தாங்கள் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டுமென்பதையும், தங்கள் குழந்தைகளை யெப்படி வளர்க்கல் வேண்டுமென்பதையும், கொஞ்சங்கூட அறியாதவர்களா யிருக்கிறார்கள். "தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டிலே." என்னும் பழமொழியின்படி, தாய்தந்தையர் தங்குழந்தைகளைச் சிறுவயதில் எவ்வழியிற் கொண்டுவருகிறார்களோ அம்மாதிரியான குணங்களையும் நடக்கையையும் வாணாள் முழுதும் விட்டகலாராகையால், அவர்களை இளமையிலேயே துர்க்குணங்களைக் கற்க வொட்டாமல், பிற்காலத்தில் அவர்களுடைய சமுசாரம் உத்தியோக முதலியவற்றிற்கு உபயோகமாயும் பலனைத் தருவதாயுமுள்ள, வாய்மை, அடக்கம், தெய்வபக்தி, முதலிய நற்குணங்களைக் கற்பிப்பதற்குப் பெண்கல்வி யின்றியமையாததா யிருக்கின்றது.

இத்தன்மையான நல்லுணவை யூட்டுவதற்குத் தகுதியானவர்கள், அக்குழந்தைகளோடு வீட்டில் எந்நேரமும் பழகிக்கொண்டிருக்கிற அன்னைமார்களே யென்பது பசுமரத்தில் ஆணியறைந்தாற்போலும் உறுதியாக நாட்டப்படும். ஏனெனில், தாயின் பேதைமையினாலே சன்மார்க்கத்தை யடையாத எத்தனை குழந்தைகள் தங்களுக்கு வயது வந்தபொழுது புத்தியீனர்களாய் ஊக்கம் முயற்சி முதலியவையின்றிச் சோம்ப லதிகரித்துச் சோற்றிற்குக் கேடும் மண்ணிற்குப் பாரமுமாக வீண்காலங் கழிக்கின்றார்கள். பாருங்கள்! ஒருகுழந்தை உலகமின்னதென்றும் தெய்வமின்னதென்றும் தெரியாத சிறு வயதிலேயே, தீத்தொழிலொன்றுஞ் செய்யாமல், நற்காரியங்களைச் செய்து கொண்டும், கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டும் வருகின்றது. கடவுளைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டோ இப்படிச் செய்வது? தனக்கு அவைகளைக் கற்பித்து, இன்னின்ன காரணங்களினாலே இன்னின்ன விதமாக நடக்கல் வேண்டும்; இல்லாவிட்டால் தண்டிப்பேனென்று பலவாறாகப் போதிக்கின்ற தாயைத் திருப்திசெய்யல் வேண்டுமென்னும் எண்ணத்தாலன்றோ? இன்னொரு குழந்தை தாயினது மூடத்தனத்தினால் திருடவும் வையவும் தூண்டப்பட்டு, துர்க்குணங்களில் தேர்ச்சியடைந்து சிறைச்சாலைக்குப் பாத்திரவானா யிருக்கிறதையும் காண்கிறோம். ஆகையால் வீடுகள்தோறும் குழந்தைகளுக்குத் தாய்களா யிருக்கும் பெண்கள், குழந்தைகளுக்கு நல்லறிவு ஊட்டுங் கல்வியில் தேர்ச்சியடையல் வேண்டியது மிகவும் முக்கியமான காரியமென்பது, உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவாகத் தோன்றவில்லையா?

இக்காலத்தில் மாதர்களைப் பூத்தையல் வேலையிலும், உடுப்பு முதலியவற்றைக் கத்திரித்துத் தைப்பதிலும், பயிற்றுகின்றார்கள். இவ்வேலைகள் வீணல்ல. ஆயினும் பெண்க[illegible] பயிற்சியில் விருத்தியடைவிக்க[illegible]வேண்டியது அவைகளினுஞ் சிறந்ததென்ப[illegible]கு ஆக்ஷேபனையில்லை. ஒரு செடியை [illegible]மையிலேயே வளைத்தால் எளிதாய் வளை[illegible]விடும்; பருத்து முற்றிப்போய் விட்டபிறகு வ[illegible]ப்பது கஷ்டமான விஷயமென்பதை யறி[illegible]திரு[illegible]தும், எவ்விதப் போதனைகளையும் உட்கொ[illegible]க்க இளமைப் பருவத்திற் பெண்களுக்கு [illegible]பிக்காமல், அவ்விளமைப்பருவம் போ[illegible]வும் சும்மாவிருந்து, கைச்சாதுரியம் மட்டும் அடையும்படி செய்கிறார்கள். இதனால் பெண்கள் விசேஷமாய்க் கற்று, ஆண்மக்களைப்போல் தங்கள் வித்தையுயர்வால், இராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோக முதலியவற்றை யடையல் வேண்டுமென்பது எம்மனோர் கருத்தன்று. நன்மை தீமையென்பதைப் பகுத்தறிந்து தாங்கள் நடந்துகொள்ளும் பொருட்டும், தங்கள் குழந்தைகளை நல்லவழியில் நடத்தும்பொருட்டுமன்றித், தாய்தந்தையர்கள் புத்தியுள்ளவர்களாயும், படித்தவர்களாயும் சற்குணிகளாயுமிருந்தாலன்றிப் பிள்ளைகளுக்கும் அக்குணங்கள் அமைதல் முடியாது என்னும் சுபாவ நியமத்தின்படி, சற்புத்திர பாக்கியத்தை யடையும்பொருட்டும், மாதர்கள் கற்கல் வேண்டுமென்பது தானே விளங்கும். இது நிற்க, நம் முன்னோர்களுடைய இல்வாழ்க்கைக்குப் பெண்கல்வி அவ்வளவு ஆவசியகமில்லாததா யிருந்தபோதிலும், தற்காலத்து அங்கிலேயப் பயிற்சியுள்ள நம்மவர்களின் மனைவியர்கள், படித்திருந்தாலன்றித் தம் கணவர்களுக்கு இன்பம் விளைக்கார். நம்தேசத்தில் கல்வி பரவப்பரவப் பெண்கல்வியின் இன்றியமையாமையும் நன்றாய்

16541

விளங்குகிறது. இவ்வாறு படித்த நாயகர்களுக்
குச் செய்யல் வேண்டிய கடமைகளைச் செய்
யச் சக்தியற்றவர்களா யிருக்கின்றார்க ளாகை
யால், அந்நாயகர்கள், தாழ்ந்த புத்தியுள்ள
மனைவியரொடு சம்பாஷிப்பதைக் காட்டிலும்
படிப்பதும் கற்றுணர்ந்த நண்பரொடு கூடிப்
பேசுவதும் உசிதமென்று நினைத்தல் நியாயமே.
இப்படிப் பெண்கள் மூடர்களாயிருந்து தங்கள்
கணவரை மனவருத்தப் படுத்துவதற்கு மூலம்
அவர்கள் பெற்றோரும் உடன்பிறந்தோருமே
யென்பது சொல்லாமே விளங்கும்.

தற்காலத்தில், பொதுவாக, பெண்களைப்
பார்க்கிலும் புருஷர்கள் அதிக புத்திசாலிகளா
யிருப்பதற்குத், தொன்றுதொட்டு வந்த புத்தி
விருத்தியின்மையும், உள்ள புத்தியை அபி
விருத்தி செய்யாமலிருத்தலுமே காரணமாம்.
இவ்விதமாகப் பெண்களுக்குக் கல்விப்பயிற்சி
மறுக்கப்பட்டிருப்பதற்கு மூலமான ஆக்ஷே
பனைகளைச் சிறிது ஆராய்ச்சி செய்து களைந்தெ
றிவோம். பெண்களுக்கு ஆண்மக்களைப்போல
கல்விகற்பதற்குப் போதுமானநேரமில்லையென்
பார் சிலர். ஆண்மக்களது பலவித உத்தியோ
கங்களையும், பெண்கள் வேலையின்றி வீட்டில்
வீண்பொழுது போக்குவதையும் பற்றி யோசி
க்கின், இவ்வாக்ஷேபனை பொருந்தாதென்பது
விளங்கும். பெண்கள் கற்பார்களானால் அகங்
காரமுடையவர்க ளாவார்களென்றும், அவர்க
ளுடைய அடக்கம், நாணம், அச்சம் முதலிய
வைகளைக் கடந்து தங்கள் விவேகத்தை வெளி
ப்படுத்துவதற்காகப் பகிரங்கத்துக்கு வருவார்க
ளென்றும், சொல்லுவர் சிலர். ஒருவருக்குக்
கர்வ முண்டாவது மற்றவர்களிடத்தில்லாத
குணம் தம்மிடத்தில் மாத்திர மிருந்தாலன்
றோ? ஒருஊருக்கெல்லாம் ஒரே மாடவீடு இரு
ந்தால் யாவர்க்கும் அது ஆச்சரியமா யிருக்
கும். ஊரெல்லாம் வீட்டுக்கு வீடு மாடமாயி
ருந்தால் அது சாதாரணமாய்விடும்; வியப்பி
ற்கும் இடமில்லை. அதைப்போலவே பெண்க
ளுக்குள்ளும் ஒருத்தியிடத்திலேயே கல்வியிரு
க்குமாயின் அகங்கார முண்டாவதற்கு இடமு
ண்டு. பெண்களெல்லாருமே கற்றவர்களாயிரு
ந்தால் வித்தியா கர்வம் ஒருநாளு முண்டாகா
து. சிலர், கற்றபெண்கள் வீட்டு வேலைகளில்
அசாக்கிரதையா யிருப்பார்கள் என்று மயங்
குவர். கல்விப்பயிற்சியால் மடமையின் விளை
வான அசாக்கிரதை யுற்பத்தி யாகு மென்பது
யாவரும் சிரிக்கத்தக்கது. இதுவுமன்றி, கற்
பதினால் பெண்கள் ஆண்மக்களை மதியாரென்
றும், எல்லாப்பெண்களும் படிப்பு மார்க்கத்
தில் திரும்பிவிட்டால், சமையல் முதலியவீட்
டுக்காரியங்கள் தடைப்படு மென்றும் கூறுவா
ருமுளர்.

“கல்விநலம் பெற்றனரேல் [1]காரிகையார் [2]காத
லர்க்குச், சொல்லரு நற்றுணையனறோ?[3] தொல்
லுலகு சிறக்கு மன்றோ?, [4]மெல்லியர்பாற் கல்வி
விரும்பாத வீணரெலாம், எல்லையிலா இன்பமதற்
கிடையூ றென்றே யியம்பாய்*.”

கற்றோர்கள் வேலையை யிகழ்வார்க ளென்
பது நம்பக் கூடியதல்ல. அன்றியும் எல்லாப்
பெண்களும் படிக்கவுமாட்டார்கள்; படிப்பதும்
அசாத்தியம். ஆகையினால், பெண்கல்விக்கு
ஆக்ஷேபனைகளாகக் கொணர்ந்தவைக ளெல்
லாம் வீணென மறுக்கப்பட்டன. மகாநாடு
கூடியபோது நம் தேசத்திற்காகப் பேசிப் பாடு
பட்ட பண்டித ராமாபாய் முதலிய கல்வியில்
தேர்ந்த பெண்மணிகளைப்பற்றிக் கேள்வியுற்ற
மாதர்களுங் கூடப் படிக்கவிரும்புவார்க ளென்
பதிற் சந்தேகமில்லை. தற்காலத்திற் பள்ளிக்
கூடங்களில் வாசித்து பி. ஏ. முதலிய பட்டங்
களைப்பெறும் பெண்கள், தேசத்திற்கு ஆபர
ணங்களா யிருந்த போதிலும், எல்லாப்பெண்
களும் அவ்வளவு தூரம் படிக்கல் வேண்டுமெ
ன்பது எமது முக்கிய கருத்தன்று. மாதர்க
ளுடைய புத்தி விசாலப்பட்டு, அவர்கள் நன்
மைதீமை யறிந்து நடந்து, தங்கள் நாயகர்
மனத்தைச் சந்தோஷிப்பித்துத், தங்கள் குழந்
தைகளைச் சன்மார்க்கத்திற் செலுத்தி, அதிக
போகமும் கீர்த்தியுமடைந்து இல்லறம் நடத்
துவதற்காகவேகல்விகற்கல்வேண்டியது. ஆகை
யால் பெண் கல்வியின் பிரயோசநமும், ஆவ
சியகமும், இவ்வளவென்று எம்மாற் சொல்லி
முடியாது. இப்பெண் கல்வியைப்பற்றி நம்ம
வர்களில் அநேகரும் பிறதேசத்தாரில் அநேக
ரும் எழுதி யிருக்கிறார்கள். பெரியோர்களி

* தத்தை விடுதூது.—15.
1. பெண்கள். 3. பழைய.
2. கணவர்கள். 4. பெண்கள்.

சொல்லியிருப்பதையும், எம்மறிவில்தோன்றிய
சிலவற்றையும் எல்லோருக்கும் சம்மதமாயிரு
க்குமென்னும் நம்பிக்கையுடன் எழுதினேன்.

ம. சோ. விசுவநாத முதலியார், B. A.

‘மனோன்மணீயம்’

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”—குறள்.

“வழக்கமே மாந்தர்களின் செவிலித்தாய்,”
என்று கோலரிட்ஜ் என்பவர் கூறினது மெய்
யே. அம்மொழியின் உண்மையை நம்மவர்க
ளுக்குட் பரக்கக் காணலாம். புத்தியையும்
சௌக்கியத்தையும் பழமையின் கோவிலில் தா
ங்கள் பலிகொடுப்பது மன்றி, அங்ஙனஞ் செய்
யாச் சிலரையும் பழித்துப் “பிறப் பொழுக்கங்
குன்ற”க் கெட்டவர்களாக மதித்தலே பெரும்
பான்மையோரின் தொழிலா யிருக்கின்றது.
மதாசாரங்கள் தவிர்த்து, இலக்கியத்தைச் சார்
ந்த விஷயங்களிலும் இவ்வெண்ணத்தின் பய
னைக் காணலாம். பிற்காலத்துத் தமிழ்ப் பாவ
லர்கள் முற்காலத்தோரின் பிழைகளில் மாத்தி
ரக் தேர்ச்சி யடைந்தார்கள். அன்று, பிற்கால
த்து மிகுதி பற்றியே யவை பிழைகளாயின.
சிலரான கவிவாணர்களும் புலமையின் மெய்ப்
பொருளை யறியாராய்ச் சிலேடைகளையும் அதி
சயவணிகளையுங்கண்டு மருண்டு, மின்னுவ தெ
ல்லாம் பொன்னெனக் கொள்ளும் பேதைமை
வசத்தினராய், வேசையர் பாற்சென்ற ஆடவர்
களைப்போற் புகழின்றி வலியழிந்து வாளுட்
களை வீணாட்களாய்க் கழித்து மாண்டார்கள்.
வழக்கம் என்னும் ஆற்றை யெதிர்க்க அஞ்சின
ராய் மறதியென்னும் ஆழ்கடலிற்சேர்க்கப்பட்டு
மூழ்கிப் போனார்கள். அந்தோ! அவர்களை
நினைக்குந்தோறும் என்மனம் பரிதபிக்கின்றது.

வழக்கங்களாகிய இருப்புத் தளைகளைத்
தறிக்காமல் விருத்தியை விரும்புதல், முட
வனொருவன் கொம்புத்தேனுக்குப் பெட்புற்
றாற் போன்றது. ஆகவே, விருத்திக்குத்
தடைகளாயுள்ள வழக்கங்களை யெதிர்க்கும்
வழிகாட்டிச் செல்வோரை அறிஞர்கள் தே
சோப காரிகளாக மதித்துப் புகழல் வேண்டும்.
ஆதலின், “கொடு மலையாளக் குடி யிருப்பு”
உடையோராகிய, ம-ா-ா-ஸ்ரீ எம். ஏ. சுந்தரம்
பிள்ளை யவர்களாலியற்றப்பட்ட நவீனநூலாம்,
‘மனோன்மணீயம்’ என்னும் நாடகத்தை, வழக்
கத்தையே வாழ்த்திவணங்கும் ‘பண்டிதர்கள்’
எவ்விதங் கணித்தபோதிலும், நாடகங்களுள்ள
பாஷைகளிற் பயின்றுள்ளோர் “பெற்றோமென
வுகந்து” களிப்புடனும் ஆவலுடனும் படிப்ப
ரென்பது ஐயுறற்பாலதன்று. தமிழ்ப் பாஷை
யின் விருத்தியைக் கருதுவோர் யாவரும் இப்
புத்தகத்தை வாங்கி வாசித்தல் வேண்டுமென்
பதுந் திண்ணம்.

நம்புராணங்களில் இலதாதலினால், இந்நாட
கத்தில் அமைந்துள்ள கதையை விரித்துக்கூறு
வோம்.

முற்காலத்தில்,

“ தரணியே பசுவெனச் சாற்றது மற்றதிற்
பாதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,
பால்சொரி *சுரை.”

யென “விளம்பாதே விளங்கும்” தென் பாண்டி
நாட்டில், மூதூநகராகிய மதுரையில், ஜீவகவ
ழுதி† என்றோர் அரசனிருந்தான். அவன் களங்
கமற்ற நெஞ்சினனாதால் “எடுப்பார் கைப்
பிள்ளை” யாயிருந்தான். அவன் அமைச்சனு
கிய குடிலன் என்பவன், அளப்பரிய சூழ்ச்சித்
திற முள்ளவனும், தன்னயங்கருதி முடிப்ப
தில் எத்தொழிலும் புரியத் துணிந்தவனும்,
வரம்பற்ற பேராசை யுள்ளவனும், நன்றியறி
தலையறியானும், சமயத்துக்குத் தக்கபடி நட
ந்துகொள்ளும் பாசாங்குக்காரனு மிருந்தான்.
அரசனைக் கைவசப்படுத்திக்கொண்டபின், தன்
னிஷ்டப்படிசெய்யக், கூடல்மா$நகர் இடங்கொ
டாதென நினைத்து,

“ அமிழ்திலுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலயநின் றிழிந்து, விலையுயர் முத்தும்
வேழ*வெண் மருப்பு+ம் வீசிக்காழகிற்§
சந்தனுடவியுஞ் சாடிவந்துயர்
குங்குமமுறித்துச் சங்கின மலறுந்
தடம்பணை‡ தவிழ்ந்து, மடமயின டம்பயில்

*சுரை—மிருகங்களின்முலை †வழுதி—பாண்டி
யன்.
* யானை. + கொம்பு. ‡ வயல்.
§ காழ்—அகில். (காழ்—வைரம்)
$ மதுரை-அடைவிகாரி.

வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி,
யிருகரை வாரமுந் திருமக ளுறையுளாப்
பண்ணிய புண்ணிய தாமிரவர்ணி'' நதி

பாயப்பெற்ற நாட்டின் தலைநகராகிய திருநெல்வேலியிற் கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து,ஆங்குச் சென்றுறையும்படி வேந்தனுக்குப்போதிக்கக்,சுத்தனாகிய ஜீவகனும் அங்ஙனஞ் செய்தனன்.

நாடககர்த்தரின் பெயர்தரித்தபாண்டியகுல குருவாகிய சுந்தரமுனிவ ரென்பவர், அரசன் மாட்டு அன்புள்ளவராதலின் நெல்லைக் கெழுந்தருளி, அரசன் இறுமாப்பை வெறுத்து,

“ அன்பே யுயிரா யழகே யாக்கையாய்
மலைமகள்* கருணையுங் கலைமகளுணர்வுங்
கமலை||யி னெழில்¶ மமையவோ ருருவாய்ப்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
ஈண்டெழு மதியென ஈண்டவ தரித்த
மனோன்மணி யன்னை''

யின் க்ஷேமத்தைக் கருதி, சில கிரியா விசேஷங்கள் செய்யவேண்டுமென ஓர் அறையின் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு சென்றனர். இம்மனோன்மணி பதினாறு பிராயமுள்ள பெண். குழந்தைப் பருவத்துக்குரிய கபடமற்ற சுத்தமனத்தையுடையவள். தன்தகப்பன்பால் மிக்க வாஞ்சையுடையவள். இவளுக்கு வாணியென்றொரு தோழியிருந்தாள். அவள் உலக நடைகளிற் பழக்கமுள்ளவள். “ஒழுக்கந்தவறா உளத்தள். தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந்தவையே நம்புந் திறத்தள். அல்லனவற்றையகற்றுந் துணிபு முடையள்'' இவள் நடராஜன் என்ற ஒரு அழகுள்ள புருஷனைக் காதலித்திருந்தாள். அவனும் வாணியை நேசித்திருந்தான். அவனுடைய குணமும் நடைகளும் நம்மவர்களுக்குப் புதிய வாய்த் தோன்றும், தமிழ்க்காவியங்களில் அவன்குணத்தினரிலர். அவன் தனி மொழிகளில் அங்கிலேயப் பயிற்சியைப் பரக்கக்காணலாம். அவன்போன்ற இயற்கைச் சாஸ்திரத்தில் தேர்ந்த ஆநந்த புருஷர்கள், தங்கள் பேறிவைச் செய்கைகள் மூலமாய் வெளிப்படுத்தின், பரோபகாரமா யிருக்கு மென்பது திண்ணம். அங்ஙனஞ் செய்யாவிடின் வெளிப்புறத்தையே நோக்கும் வெள்ளியர்கள், 'பேயன்' எனவும், 'பித்தன்' எனவுமே நினைப்பார்கள். ஆகவே, பணப்பேய் பிடித்த வாணியின் பிதாவாகிய சகடரென்பவர், தன்மகளைக் குடிலன்மகனாகிய பலதேவன் என்பவனுக்கு விவாகஞ்செய்து கொடுக்க விரும்ப, அவள் அதற்கு இசையாளாக, மனவருத்தத்துடன் வேந்தன் அவையிற் சகடர் முறையிட, ஜீவகன் அவ் விவாகத்தை நிறைவேற்றுவிக்க ஒப்புக்கொண்டான்.

மனோன்மணியும், வாணியும் கழல்விளையாடும் களம் வெகு அழகாயிருக்கின்றது.தவத்தை விரும்பின மனோன்மணிக்கு, மதன் கணையாற் புண்ணுற்றவாணி, 'நாறுக்கேட்கினு நூலறிவென்செயும்? நீறுகின்ற தென்னெஞ்சம்.' என்றுசொல்லுதல் இயல்பே.

வாணியின் மனவருத்தத்தினால் காதலைப் பற்றிப் புதிதாய் நினைக்கத்தொடங்கின மனோன்மணி, 'பூருவகருமபரிபாகத்தால்' சேர தேசத்தரசனாகிய புருஷோத்தமனைக் கனவிற்கண்டு மோகித்துக் காமசுரம் கொண்டனள். இதையறியாச் செவிலி, மனோன்மணியின் நிலையைக் கண்ணுற்று மனநடுங்கித் தன்னாலியன்றமட்டும் வைத்தியம் செய்தும் பிரயோசனப்படாதது கண்டு, அரசனிடந் தெரிவிக்க, ஜீவகன் மனங்கலங்கி மகளிடம்வந்து சேர்ந்தனன். மனோன்மணியைப் பலவாறு வினவியும், அவள் ஒன்றுஞ்சொல்ல அறியாளாய் அழுவதைக்கண்டு, தங்களைப்பெற்றார் உற்றார்களுக்கும் துக்கத்தை விளைத்துத் தாமும் அழும் பெண்களின் பேதைமையை நொந்து, உதாரணமாக வாணியின் நடையை யெடுத்துரைத்தான். இவ்விடத்தில், காதலின் மெய்க்குணத்தையும், விவாகத்தை வியாபாரமாகப் பாவித்து நடக்கும் நம்மவர் மடமையையும் அறிந்துகொள்ளலாம்.

''நேசமில் வதுவை* நாச காரணமே.''

சரி : நேசமென்றா லென்ன ? பெண்ணுக்கு நகைகள் செய்து போட்டுவிட்டால் நேசம் தானே யுண்டாகாதோ? பெற்றார் ஒன்று நினைக்க நேசம் மற்றொன்று நினைக்குமோ ? என்று வினவுவார்க்கு விடையாதெனின் :—இஃதே.

“ நேயமும்
ஆக்கப்படும் பொருளாமோ? நோக்கில்,

* பார்வதி. || இலக்ஷ்மி. ¶ எழில்—அழகு.

* வதுவை=கலியாணம்.

இன்பமே நிறையும் மன்பேருலகாம்
எரியும் கானல் விரியும் பாலை†யில்
திரியும் மனிதர் நெஞ்சம் சிறிது
தங்கி, அங்கு அவர் அங்கங் குளிரத்
தாரு*வாய்த் தழைத்தும்; ஓயாத் தொழிலில்
நேரும் தாகம் நீக்குவா னிமல
வூற்றா யிருந்தவர் உள்ளம் ஆற்றியும்;
ஆறு அலைக்கள்வர் அறுபகை மீறில்,
உறுதுணையாய் அவர்நெறி முறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்,
ஊன்றுகோலாய் அவர் ஊக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவு கோலாகிப்,
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயிரே யாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்,
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றும் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப்படும் பொருளாமோ ?''

இவ்விதம் ஆக்ஷேபித்துப், பலதேவனை வேட்டலினும் கன்னியா யிருப்பதே யுத்தமமெனத் துணிந்த வாணியை நோக்கி ஜீவகன்

''கன்னியா யிருக்கிலுன் னழகென்னும் ?
அரைக்கி லன்றோ சந்தனங் கமழும்?''

என்று வினவ, கறையானரிக்கிற் கமழுமோ சந்தனம் ? என்று வாணிகேட்டாள். இங்ஙனம் இவர்கள் வாதஞ்செய்து கொண்டிருக்குங்காற் சுந்தரமுனிவர் வந்தனர்.

ஐந்து நாட்களுக்குட் பலதேவனை மணம்புரியச் சம்மதித்தல் வேண்டுமென வாணிக்குச் சொல்லிவிட்டு, அரசன் முனிவரை யுபசரிக்க, அவர் மனோன்மணியின் வேறுபாட்டைக் கண்ணுற்றுக் காரணம் வினவினர்; மனோன்மணி ''சொல்லவல்ல தொன்றிலை. சுகமே'' யென்று விடையளிக்க, அடங்கா மனக்கவலையுடன் செவிலி மனோன்மணியின் மாறுபாடானநடைகளை விவரிக்கத் தொடங்கினாள்:—

“ மண்ணாள்1 மேனியும்; உண்ணாள் அமுதும்;
நண்ணாள் ஊசலும்; எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலு2ம்; படியாள் இசையும்;
தடவாள் யாழு3ம்; நடவாள் பொழிலு4ம்;
அணியாள் பணியு5ம்;பணியாள் ஏவலும்;
மறந்தாள் கிளியும்; துறந்தாள் அனமும்;
தூங்குவள் போன்றே யேங்குவள்; எளியை !
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை;
கேட்டுங் கேட்கிலள்; பார்த்தும் பார்க்கிலள்;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்;
தனியே யிருப்பள்; தனியே சிரிப்பள்;
விழிநீர் பொழிவள்; மெய்விதிர்த்து அழுவள்;''

காமசுரத்தால் தகிக்கப்பட்டோரின் செய்கைகள் நன்றாய் வருணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கனவினால் மாத்திரம் இவ்வளவு நேரிடுமோ என்று சிலர் திகைக்கலாம். இதன் உண்மையை யுணராராயின் அஃது அவர் குற்றமே. நம்தேசத்தில் தேகத்தை யிளைக்கச் செய்யும் என்று சாதாரண ஜனங்கள் கூறும், கனவில் தோற்றும் 'மோகினி'யை வைத்தியர் ஓர் வியாதியென்று கூறுவர். இவ்விதத் தோற்றங்களுக்கு மனமே காரணம். காமநோய் கொண்டார்க்கு மரங்களுஞ் செடிகளுங்கூடத் தாங்கள் காதலித்தோராய்த் தோற்றுவதுண்டு என்று கூறுவது வழக்கம். 'உருவெளித்தோற்றம்' என்பதும் இவ்வெண்ணம் பற்றியே உண்டாவது. இவை யெல்லாம், உரிய பருவங்களில் நன்கு விளங்கும்.

“ குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்.''

இவையெல்லாம் அநுபவித்தோர் உடனே யறிந்து கொள்வார்கள்.

சுந்தரமுனிவர் காமநோயென அறிந்து,

“ படர்கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்து நல்லின்ப மெய்த
அருகுள தருவை யவாவும்.'' ஆதலின்,

மனோன்மணியை யவளுக்குத் தக்க நாயகனாகிய புருஷோத்தமவர்மனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படிக்கும், அதன் பொருட்டுத் திருவநந்தபுரத்திற்கு நடேசனைத் தூதனுப்பும்படிக்கும் ஜீவகனுக்குச் சொல்லிப்போயினர்.

அடுத்த களம் குடிலன் மனையில். குடிலன், புத்தியின் சக்தியைப்பற்றியும், தன்கோரிக்கைகளின் நிறைவேற்றத்தைப் பற்றியும், அரசன் 'பிடித்தாற்கற்றை விடுத்தாற்கூளம்' எனத் தன் கைவசத்தி லிருப்பதைப் பற்றியும், தானேயிராச்சியத்தை முழுதும் கைக்கொள்வதற்கு 'கரு

† பாலைவனம். * மரம்
1. நீராடல்; அலங்கரித்தல். 2. தலைமயிர். 3. வீணை. 4. சோலை. 5. ஆபரணம்.

வியும் காலமும் அறியில்' அரியதில்லையாதலின், காமநோய்கொண்ட மனோன்மணியைத் தன் மகன்பலதேவனுக்கு மணம்புரிவித்தலே தக்கதென்றும், யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது,

"ஜய ! ஜய ! விஜயீபவ !" என்று சொல்லிக்கொண்டே சேவகன் வேந்தனது திருமுகத்தைக்கொணர்ந்து கொடுத்தான். குடிலன் திருமுகமூலமாய் மனோன்மணியின் மணத்தை யறிந்து அதூடக்கின், "அரசர்க்கு ஆயுள் அற்பம்" ஆயினும், அரசு தன் கைக்குள்வர "காலதாமசம் சாவுமாகும்" என்று யோசித்து, எவ்விதமாவது சூரனாகிய சேரனுக்கும் பாண்டியனுக்கும் போர்மூட்டுவித்து, விவாகத்தைத் தடுத்துப் பாண்டியனைப் போர்க்களத்தில் இறக்கச்செய்யல்வேண்டுமென்று தீர்மானித்தான். அங்ஙனம் செய்வது பாவமென்று முறையிடும் தன் மன சாக்ஷியைக் குடிலன் தட்டியடக்கும் விதம், அவன் குணத்தைத் தெளிவாய் விளக்குகின்றது:—

"தோடம் !—சுடு ! சுடு !
தீதுநன்றென ஓதுவ வெல்லாம்
அறியார்க்கு அறையும்* வெறுமொழியலவோ?
பாச்சி பாச்சி யென்று அழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி யென்பது போலாம்.
மன்னரை உலகம் வணங்கவும் பார்ப்பார்க்கு
அன்னங் கிடைக்கவும், அங்ஙனம் அறைந்து
மதியிலாரை மயக்குவர் வஞ்சமாய்.
அதினால் நமக்கென்? அப்படி நினைக்கில்,
இதுவரை யித்தனை நன்மை யெப்படி வரும்?"

தான் மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்ததாகப் பாசாங்குபண்ணிச் சேவகனுக்கு ஓர் மாலையளித்து, மன்னன் சபைக்கு விடியுமுன் வருவதாகச் சொல்லியனுப்ப,சேவகன் அவன் உதாரத்தைப் புகழ்ந்து வாழ்த்திவிட்டுச் சென்றான்.

பின்வரும்தனிமொழி குடிலனுக்கே தக்கது. தம்மைக்கொண்டே பிறரையும் மதித்தல் மனிதர்களுக்குச் சுபாவம். துர்க்குணிகள் பிறர் நற்குணத்தை நம்புதல் அரிது. காமநோயால் வருந்தும் இராவணன் சந்திரனைநோக்கி "நீயுங் கண்டார் சொல்லக் கேட்டாயோ?" வென்று வினவுதலும், "காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்டு"த் துயருழன்றநளன் சமுத்திரத்தை நோக்கி "மாதை, இரவகற்றி வந்தாய்கொல்" என்று வினவுதலும், தன் மனத்தாற் பிறர்மனத்தை யளக்கும் இயற்கை பற்றியே. ஆதலின் தன்னயமே கருதும் குடிலனைப் பிறர் நன்மையைவிரும்புவோர் உளர்என நம்பச்சொல்வது, குருடனை வேந்தனைப்போல் விழியென்று வேண்டிக்கொள்ளுதல் போலாம். குடிலன் அறிந்தது இதுவே:—

"தருமம் தானம் என்று உலகு அறியும்
கருமம் அனைத்தும் செய்பவன் கருத்தைக்
காணின் நாணமாம்; அவரவர் தமக்கா
எண்ணிய எண்ணம் எய்துவான்§ பலவும்
பண்ணுவர் புண்ணியம் போல. எல்லாம்
தன்னயங்கருதி யன்றித், தமைப்போற்
பின்னொருவனை யெணிப் பேணுவர் உளரோ?
புண்ணியம் ஜீவகாருண்ணியம் எனப்பல
பிதற்றுதல் முற்றும் பித்தே. அலதேல்,
யாத்திரைபோன நூற்றுவர், சோறுஅடு*
பாத்திரந் தன்னிற் பங்குபங்காக
ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல்
இட்டகதையாயிருக்குமோ?"

பஞ்சமும் அதனால்வரும் சஞ்சலமும்.

இவ்விந்து தேசத்தில் நடந்துவரும் காரியாதிகளை அப்போதப்போதே எழுதி வைக்கும் ஏற்பாடு உண்டாவதற்கு வெகு காலத்துக்கு முன்னமே பஞ்சமானது நமக்கு வெகு நஷ்டம் உண்டாக்கிக் கொண்டு வந்திருக்கிறது. இத்தேசத்தின் பூர்வசரித்திரத்தை இத்தேசத்தார் எழுதிவைத்து பத்திரப்படுத்தா திருந்தபோதிலும் அப்போதப்போது இத்தேசத்துக்கு வந்துபோன அயல்தேசத்தார் இங்கு கவனித்த காரியாதிகளை எழுதி வைத்திருக்கின்றார்கள். அதனால். கி, பி 942, 1345, 1631, 1770, 1837, 1866 இவ்வருஷங்களில் நமது தேசத்தில் கொடிய பஞ்ச முண்டாயிருந்ததாகத் தெரியவருகின்றது. இப்படி யடிக்கடி யுண்டாகும் பஞ்சத்தினால் விளையும் கேடுகளென்னவெனில் (1) அக்காலத்திலுள்ள ஜனங்கள் சாப்பாட்டுக்கு வகையின்றி மெலிந்து அலைந்து இறந்து

* சொல்லும்.

§ அடையும் பொருட்டு.
* சமைக்கும்.

போவது ஒன்று; (2) அத்தேசத்தின் செல்வம் மிகக் குறைந்து, பின்சந்ததியாரும் அன்டை அயல்·தேசத்தவரும் அவஸ்தைப் படும்படியாவது ஒன்று.

இப்படியுண்டாகும் கேடுகளை நன்றாய் கவனிக்க வேண்டியது ஆவசியகம். பஞ்சத்தால் உண்டாகும் சம்பவங்களை நினைக்கும்போது நமக்குத்திகிலுண்டாகிறது. நமது தேசத்துக்கு மேற்கே ஆப்ரிக்கா கண்டமென்று ஒரு பெரிய தேசமிருக்கிறது. அதின் ஓர்பாகமாகிய எகிப்து தேசத்தில் எண்ணூறு வருஷங்களுக்கு முன் உண்டான பஞ்சத்தில் ஒருவர் கவனித்ததைக் கேளுங்கள் : "ஆடுமாடு முதலிய சகல மிருகங்களும் தீனியில்லாமல் தாமா யிறந்துபோயின. அவைகளை மனிதர்தின்று பிழைத்தார்கள். நாய்கள், பூனைகள் முதலிய அருவருக்கத்தக்க ஜந்துக்களையும் அதிக விலைக்கு வாங்கித் தின்றார்கள். அப்பால் அவைகளும் அகப்படவில்லை. ஆதலால் அதிகமாய் ஜனங்கள் மடிந்துபோனார்கள்."

இதுவுமன்றி கி. பி. 1200-ம் வருஷத்தில் அந்தேசத்திலேயே வெகு கொடூரமான பஞ்சம் சம்பவித்தது. அப்போதுண்டான துன்பத்தைப் பார்த்தறிந்த அப்துல்லத்தீப் என்பவர் எழுதியிருப்பது இங்கே கவனிக்கத்தக்கது:— "மஹா கொடூரமான பஞ்ச முண்டான காலத்தில் மனிதருக்கு உணவு எங்குங் கிடையாமல் கடைசியாய் மலத்தைப் புசித்தார்கள். அப்பால் சிலமனிதர் இறந்துபோனவுடன் மற்றவர்கள் அப்பிரேதங்களைப் பகிர்ந்து வெகு ஆவலுடன் புசித்துப் பசியாறினார்கள். அதை இராஜாங்கத்தார் கவனித்து, நரமாம்சபட்சணிகளை உயிருடன் காஷ்டமேற்றி தகனஞ்செய்ய உத்தரவுசெய்தார்கள். அப்படிச் சிலர் வதை செய்யப்பட்டபோது, அதைப் பார்த்திருந்த மனிதர் காஷ்டத்தின்மேல் வெந்தும் வேகாததுமாயிருந்த பிணங்களைப்பிடுங்கிப் பொரித்த ஆட்டிறைச்சியை யுண்பதுபோல் உண்டு பசியாறினார்கள்."

இதெல்லாம் அயல்தேசத்தில் நடந்த காரியங்கள். நமது தேசத்தில் கி. பி. 1345-ம் வருஷப் பஞ்சத்தில் உண்டான சஞ்சலத்தைப் பற்றி ஒருவர் எழுதி வைத்திருப்பதைப் பாருங்கள் : "பஞ்சமோ வெகுதூரம் பரவியிருந்தது. காரியாதிகளைக் கவனித்தால் வெகு மோசம் சம்பவிக்கிறதா யிருந்தது. நான் ஒருநாள் வெளியே உலாவப் போயிருக்கும்போது மூன்று ஸ்திரிகள் அநேகநாட்களுக்கு முன் இறந்து அழுகிப்போய்க்கிடந்த ஒரு குதிரையின் தோலைத் துண்டுதுண்டாய்த் துணித்துப் புசித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்". இது இப்படியாக, 1631-ம் வருஷத்திலுண்டான பஞ்சம் இதைவிடப் பயங்கரமானதா யிருந்ததாம். "இறந்துபோனவர்களின் தொகையைக் கணக்கிட முடியாது. இறந்துகிடக்கும் பிணங்களை எடுத்து அடக்கம்பண்ண ஒருவரையும் காணவில்லை. சாதாரணகாலத்தில் தானியம் விளைந்து தலை சாய்ந்திருக்கும் இடங்களிலெல்லாம் மனிதரின் மண்டையோடுகளும் விலாவெலும்புகளும் நிறைந்திருந்தன. மனிதர் ஒருவரையொருவர் கொன்று தின்றார்கள். பசியின் தாபத்தைச் சகிக்காமல் பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளையே பட்சித்தார்கள். வியாபாரிகள் எலும்புகளைப் பொடியாக்கி கோதுமைமாவுடன் கலந்து ரொட்டிசெய்து அதை வெகு விலையுயர்ந்த தின் பண்டமாய்ப் பணக்காரருக்கு விற்றுவந்தார்கள். பிரேதங்களை வெயிலிற் காயவைத்து அப்பால் தண்ணீரில் நனைத்துத் தின்றார்கள்". இதென்னவிபரீதம்! அம்மம்ம !! இந்தக் கொடூரமான காட்சியைக் கண்டவர் எப்படிச்சகித்தனரோ? மேலும், இப்படியெல்லாம் சம்பவிக்க வேண்டுமென்றால் காலம் எவ்வளவு சுபிக்ஷக்குறைவா யிருந்திருக்க வேண்டும் !!

பதினேழாம் நூற்றாண்டின் பஞ்சத்தின் வரலாறு இது. அதற்குப்பிறகு 1837-ம் வருஷத்திலுண்டான பஞ்சத்தில் ஆக்ராவென்னும் சிறு பட்டணத்தில் ஒவ்வொருநாளும் போலீஸாரால் அடக்கம் பண்ணப் பட்ட பிணங்களின் தொகைமட்டும் 400 ஆயிற்றாம். சுற்றத்தார் எடுத்து அடக்கம் பண்ணின பிணங்கள் எத்தனையோ ! அப்போதுள்ள ஜனத் தொகையில் காலிலொரு பாகத்தோர் மடிந்து போனதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. யமுனாநதிக் கரையிலும் ஊருக்குள்ளும் மாண்டுகிடக்கும் மனிதரின் பிரேதங்களை யெடுத்து அடக்கம்பண்ண

ஒருவருமில்லாததால் 'டைரெக்டர்' களின் உத்திரவுப் பிரகாரம் சில வேலையாட்கள் அப்பிணங்களை ஒருபடகில் ஏற்றி அக்கரைக்குக் கொண்டுபோய் எறிந்துவிட்டு வந்தார்களாம். 1866-ம் வருஷத்தில் பஞ்சமுண்டானபோது ஜனங்கள் பட்டபாட்டை நடுக்கடலில் துறை தெரியாமல் தத்தளிக்கும் கப்பலில் உணவில்லாமற்போனால், அக்கப்பலிலுள்ள மனிதர் என்ன பாடுபடுவார்களோ அதைவிட அதிகப் பாடு பட்டார்களெனச் சொல்லலாம்.

அகவிலை கறுப்புக்காலத்தில் மிக அதிகப்பட்டிருந்தது. 1770-ம்வருஷத்தில் பற்பலதானியங்கள் விற்கப்பட்ட விலைகளைக் கவனிப்போம்.

சாதாரணகாலத்தில்	கறுப்புக்காலத்தில்
முதல்தரம் அரிசி ரூ 1-க்கு 28 சேர்	3 சேர்
முரட்டரிசி ரூ 1-க்கு 40 சேர்	$3\frac{1}{4}$ சேர்
சோளம், வரகு முதலிய இழிந்த தானியங்கள் ரூ 1-க்கு 45 சேர்	$4\frac{1}{2}$ சேர்
கோதுமை ரூ 1-க்கு 26 சேர்	$4\frac{1}{4}$ சேர்
பருப்பு ரூ 1-க்கு 30 சேர்	4 சேர்

இப்படியிருந்தால் ஏழைக்குடிகள் எப்படி ஜீவிப்பார்கள்! 1860 - 61-ம் வருஷங்களில் வட மேற்கு மாகாணங்களிலுண்டான பஞ்சம் பரவியிருந்த இடங்களின் விஸ்தீரணம் இருபதினாயிரம் சதுரமயில். அப்போது உணவுக்கு வழியின்றி அவஸ்தைப்பட்ட ஜனங்களின்தொகை ஒருகோடியே முப்பதுலக்ஷம். பஞ்சத்தி லிறந்துபோனவர்களின் தொகை ஐம்பது லக்ஷம். உணவுக்கு யாதொன்று மகப்படாமல் பசியால் பாதிக்கப்பட்ட ஜனங்கள் காடுகளிற்போய், காட்டுப்பழங்கள், கிழங்குகள், இலைவகைகள், புல் பூண்டு முதலியவைகளைத் தின்று வயிற்றை நிரப்பினார்கள். இதனால் அநேகருக்கு அஜீரணமுதலிய பலவித நோய்களு முண்டாக இதன் மூலமாயும் அநேகர் மாண்டார்கள். சிலர் இராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்ட கஞ்சித்தொட்டிகளுக்குப்போய் கால்வயிற்றுக் கஞ்சி குடித்து, குழந்தைகளுக்குப் போதுமான பாலில்லாமல் அநேக குழந்தைகள் சாகவும், அதற்கப்பால் சிலநாட்களில், வரவா மெலிந்துகொண்டே யிருந்த சுற்றத்தாரில் அநேகர் மாண்டுபோகவும், இவைகளைக் கண்டு ஆற்றாமையாலும் தங்கள் ஊரிலுள்ள அநேகர் நாநாதிசைகளில் சிதறிப்போகப் பட்டணமே பாழாய்விட்டதினாலும், "இனி நாம்மட்டும் ஜீவித்திருந்து என்னபலன்?" எனப் பலர் நினைத்துத் தங்களுயிரை மாய்த்துக்கொண்ட பரிதாபத்தைக் கண்டவர்கள், மனந்தாளாமல் விசனத்தோடெழுதியதை வாசித்துமிருக்கிறோம். அயலிடங்களுக்கு பிழைப்புக்காகப் போன பலர் அங்குமிங்குமோடித் திரிந்து எங்கும் உணவகப்படாததால் காலோய்ந்து மெய்தளர்ந்து பசியால்வாடி சூரியவெப்பம் சகிக்கமாட்டாதவர்களாய்மரத்தடிகளில்விழுந்துகிடக்கச், சற்று நல்ல நிலைமையிலிருக்கு மவ்வூரார் தங்களைப் பார்த்து ஐயோவென மனமிரங்கி யேதாவது உணவுகொடுத்து உதவமாட்டார்களா? என்ற எண்ணத்துடன் அடிக்கடி கண்ணை விழித்து விழித்துப் பார்த்துக்கொண்டே யிருந்து, இராக்காலத்தில் போர்த்துக்கொள்ளத் துணியில்லாததால்; பனிவாடையில் மிக நடுக்கத்துடன் வருந்திக் கிடக்கும் சமயங்களில் போலீசாரால் கஞ்சித்தொட்டிகளுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கேயு மாண்டார்கள்.

வங்காளத்தில் 1874-ம் வருஷத்தில் பஞ்சமுண்டானதைப்பற்றி ஒருவர் எழுதியதைக் கேளுங்கள்: "பஞ்சம்அதிகப்பட்டபோதுஏழை ஜனங்களின் பிழைப்புக்காக அநேக புதாஸ்தாக்கள் போடும்படி இராஜாங்கத்தார் உத்திரவுசெய்தார்கள். அப்படி வேலை நடந்துகொண்டிருக்கையில் கூலியாட்களுக்கு சம்பளங்கொடுக்கும் உத்தியோகஸ்தரும் ஒருதுரையும் குதிரையேறி வேலைநடந்து கொண்டிருந்த இடத்துக்கு வந்தார்கள். அப்போது கூலியாட்கள் எல்லாரும் அவர்களிருவரையும் சூழ்ந்துநெருங்கிவந்து கைகளைத்தூக்கிக் கும்பிட்டு, தங்களுக்குக் கூலிகொடுக்கும்படியாய்க் கெஞ்சிக்கூத்தாடினார்கள். சிலர் ஒன்றும் பேசாமல் விசனத்துடன் அழுதுகொண்டு நின்றார்கள். சிலர் தங்களைக் குதிரைகள் உதைத்து மிதித்து விடுமென்கிறபயம்தோன்றாமல்கிட்டநெருங்கிவந்து கூலிகேட்டார்கள், அவர்கள் போட்டசத்தம் வரவர அதிகப்பட்டுப் பெருங்கூச்சலாயிற்று. சிலர் பைத்தியம் பிடித்தவர்போல் கூப்பாடு போட்டார்கள். சற்று நேரத்தில் எல்லாக்கூலியாட்களும் அதிகமாய் நெருங்கிவந்து பசிபொறுக்க ஏலாது என்று கதறினார்கள். உடனே அங்குவந்திருந்த துரையானவர் குதிரையை விட்டிறங்கிக் கூலிக்காரருக்குள்ள சம்பளத்தைக்கொடுத்து விடும்படி சொன்னார். ஒருவர் இருவருக்குச்சம்பளங்கொடுக்குமுன்னமே உனக்கு எனக்கென்று சண்டையும், சச்சரவுமுண்டாயிற்று. அப்போது சேவகர்கள்தடிக்கம்புகளால் ஓங்கியடித்தும் கூட்டங்கலையவில்லை. எல்லாரும் ஒரேமட்டாய் நெருங்கிவந்து சேவகர்களை அப்பால் தள்ளிவிட்டு பணப்பையைப்பிடித்து இழுத்து அதிலிருந்த பணத்தைச் சின்னபின்னமாய்ச்சிதறிவிட்டார்கள். அப்பால் பிணத்தைப் பிடுங்கித்தின்னுங் கழுகுகளின் கால்நகங்களைப் போன்றகைகளால் ஒவ்வொருவரும்தங்களுக்கு அகப்பட்ட மட்டிலும் பணத்தையள்ளிக்கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடிப்போனார்கள். சிலர் தானியாதிகளைக் கொள்ளையிட்டார்கள்."

கறுப்புக்காலங்களில் இராஜாங்கத்தாருக்குண்டாகும் தீர்வை நஷ்டமிவ்வளவென்று மதிப்பிடச் சிலஉதாரணங்கள் காட்டுவோம். 1846ம் வருஷத்துக்கு முன ஆக்ரா பிரிவிலிருந்து வருஷாவருஷம் வசூலாகும் தீர்வை 1 - கோடி ரூபாய். பஞ்சமுண்டானதற்குப்பின் 5-வருஷத்துக்குச் சராசரி 80 லக்ஷம் ரூபாயாகிவிட்டது. ஆகவே வருஷாவருஷம் 20 லக்ஷம் ரூபாய் நஷ்டமாயிருக்கின்றது. தீர்வை நஷ்டம் 20 லக்ஷம் ரூபாயானால், குடிகளுக்கு மாமூல் நஷ்டம் அதற்கு 10 மடங்கு அதிகமாகும்: அதாவது 8 கோடி ரூபாய்.

கால்நடைகள் மாண்டுபோவதால் குடிகளுக்குண்டான நஷ்டமோ மிகப்பெரிது. கவலையடிப்பதற்கு உபயோகப்படும் காளைகளும், உழவுகாளைகளுமில்லாவிட்டால் குடிகள் எப்படிப்பிழைப்பார்கள்? பஞ்சகாலங்களில் கிராமத்திலுள்ள கால் நடைகளில் சரிபாதி மாண்டுபோகின்றன. கால்நடைகளில்லாவிட்டால் வயல்களுக்கு உரமெங்கே? வயல்கள் உழுவதெங்கே? மரமடிப்பதெங்கே? வண்டியோட்டுவதெங்கே? மற்றவேலைகள் நடப்பதெங்கே? உழவன் வீட்டில் ஓர் குழந்தையிறந்து போனாலுங்கூட அவ்வளவு வருத்தமிராதென்றே நினைக்கவேண்டும். மாடுகள் மடிந்துபோனால் பெருத்தகஷ்டம். கால் நடைகளில்லாத காரணத்தால் சில வருஷங்களுக்குமுன் சேலம்ஜில்லாவில் பஞ்சமுண்டான காலத்தில் 3 லக்ஷம் ஏக்கர் வரையில் பயிரிடப்படாமல் தரிசு போடப்பட்டது. வட ஆர்க்காடு ஜில்லாவில் சற்று ஏறக்குறைய 2 லக்ஷம் ஏக்கர் வரையில் தரிசுபோடப்பட்டது.

இதன்றி ஏழைஜனங்களுக்கு பிழைப்புக்கு வழியொன்று மில்லாமல் அங்கங்கே சிற்சில வியாபாரிகளும் டாரிக்குடிகளும் சேர்த்துவைத்திருக்கும் தானியத்தைக் கொள்ளைகொண்டாவது ஜீவனைக்காப்பாற்ற எண்ணி அப்படியே செய்கிறார்கள். கும்பகோணத்தில் சென்றவருஷமிப்படி கொள்ளையுண்டாயிற்று. நாய்க்குப் பசியுண்டானால் கதவுதிறந்திருக்கும் வீடுகளில் நுழைந்து சோற்றைத்திருடித்தின்னும். மனிதருக்குப் பசிதாக முண்டானால் தந்திரத்தோடு கன்னமிட்டாவது சாப்பாட்டை சம்பாதிப்பார்கள். கொலை, களவு, கூட்டக்கொள்ளை முதலிய கொடிய செய்கைகளும் அதிகமாகின்றன.

சில வகுப்பார் இப்படிச் செய்வர, முன் சற்றுநல்ல நிலைமையிலிருந்த சிலர் சேவகம் செய்து நாட்கழிப்பது இழிவென்றெண்ணி விவசாயம் செய்துவந்தவர்களாதலால், தாங்கள் எவ்வளவாய்க் கேவலப்பட்டிருந்த போதிலும், மற்றோரிடத்திற் போய்ப்பிச்சை கேட்பதும் சர்க்காரில் வைத்திருக்கும் கஞ்சித்தொட்டிகளுக்குப் போவதும் தங்கள்பூர்வஸ்திதிக்குச்சற்றும் தகாதென்றெண்ணித், தங்களிடத்திலுள்ள மட்டும் சாப்பிட்டு அப்பால் தங்கள் கௌரவம் கெடாமல் இறந்துபோவதே நலமென நினைத்துக் கெட்டுப்போகிறார்கள். தாங்கள் சாவதன்றி ஒன்றுமறியாத தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் அவ்வாறே சாகவிடுகின்றார்கள். சில ஜாதியாரின் ஸ்திரீகள் வெளியே வந்தறியாதவர்களாதலால், எவ்வளவு பசியால் வருந்திய போதிலும் தங்கள் ஜாதிக்கட்டிலுள்ள அபிமா

னத்தால் கஞ்சித்தொட்டிகளுக்கு வராமல் செத்துப்போகிறுர்கள்.

பஞ்சகாலத்தில் வியாபாரம் வெகுவாய்மட்டுப்படும். 1868-ம் வருஷத்தில் இராஜபுத்தானுவில்பஞ்சமுண்டான காலத்தில் இராஜாங்கத்தாருக்கு உப்புத்தீர்வையினுல் வரும் வரும்படியில் 4 லக்ஷத்து 50 ஆயிரம் ரூபாய் நஷ்டமுண்டாயிற்று. எப்போதும் பொதிமாடுகளின் மேல் உப்புச்சுமையேற்றி இராஜபுத்தானுவிலிருந்து ஜப்பல்பூர் முதலிய இடங்களுக்கு சாகர் என்னும் பட்டணத்தின் வழியாய்க் கொண்டுபோவார்கள். வழக்கமாய்ச் செலவாகும் அளவைவிட அந்த வருஷத்தில் இலக்ஷம் மணங்கு உப்புகுறைவாய்ச் செலவாயிற்று.

காலசுபிக்ஷக்குறைவால் இப்படி யெல்லாம் சம்பவிக்கிறது. அடுத்த வருஷத்தில் நல்லமழை பெய்தபோதிலும் கிருஷிசரியானபடி நடப்பதற்கு ஏதுவில்லாமல் அவ்வருஷமும் பஞ்சமுண்டாகின்றது.எப்படியெனில், குடிகளின் கால்நடைகளில் அநேகம் மாண்டுபோயின. மிகுந்திருந்தவைகளையும் சாப்பாட்டுக்கு வேறுவகையின்றி விற்றுப்போடுவார்கள். விதைக்காக வைத்திருக்கும் தானியத்தையும் எடுத்து சாப்பிட்டு விடுவார்கள். கையிலிருந்த திரவியத்தைக்கொண்டு அதிக விலைக்கு அப்போது கிடைக்கும் தானியத்தை வாங்குவார்கள். ஆகவே மழைபெய்து செழிப்படையும் போதும், ஏரிகுளங்களில் தண்ணீர் நிறைந்தபோதும், ஏர் உழுவதற்கு மாடுகளில்லாமலும், விதைப்பதற்கு தானியமில்லாமலும் மாடுகள், விதை, உழுவேத்தனங்கள், உரம் முதலியவைகளை விலைக்கு வாங்கத்தகுந்த திரவியமில்லாமலும் நிலத்தைப் பயிரிட முடியாமல் தரிசுபோட நேரிடுகின்றது. இவ்வித அசந்தர்ப்பம் பஞ்சங்கழிந்து அநேகவருஷங்களுக்கு நீடித்திருக்கும். "மழைவிட்டும் தூவானம்விடவில்லை" என்பதுபோல், பஞ்சந் தீர்ந்தும் சஞ்சலம் தீராமலிருப்பதால், அப்பஞ்சத்தால் வரும் கெடுதி கொஞ்சமல்ல.

ஆகையால் அடிக்கடி பஞ்சமுண்டாகாமல் நாம் தடுக்கமுடியுமா? என்ன செய்தால் முடியும்?

J. D. R.

18-ம் நூற்றுண்டின் தமிழ்ப் பாஷாபிவிர்த்தி.

தமிழ்ப்பாஷையானது சென்னைப்பட்டினத்திற்கு வடக்கே யிருபது மைல் தூரத்திலுள்ள பழவேற்காடு முதல், தெற்கே கன்னியாகுமரி வரைக்கு முள்ள நாடுகளிற் பேசப்பட்டு வருகிறது. இலங்கைத் தீவிலும், ஏறக்குறைய மூன்றிலொருபங்கு ஜநங்களாற் பேசப்படுகிறது. தமிழ்ப்பேசும் ஜநங்களின் தொகை (சென்ற வருஷத்து ஜந கணிதக் கணக்கின்படி.) ஏறக்குறைய 170 லட்சமாகிறது. இவ்வளவு ஜநங்களாற் பேசப்பட்டுவரும் நம் தமிழ்ப் பாஷையானது ஆரியர் மகம்மதியர்கள் மூலமாய்ப் பொறுக்க முடியாத துன்பமடைந்து தன்னுருமாறி நிற்கின்றது. இந்தத் தமிழ்ப்பாஷையினுடைய, 18-ம் நூற்றுண்டின்கணிருந்த, நிலையையும், அபிவிர்த்தியையும் பற்றிச் சொல்லல் வேண்டியது நாமெடுத்துக்கொண்ட விஷயம்.

திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த (Bishop Caldwell) பிஷப் கால்ட்வெல் துரையவர்கள் "சென்ற 200 வருஷமாகத் திராவிட பாஷையானது அபிவிர்த்தியற்றுக் கிடக்கின்றதென்க் காணப்படுகின்றது" என்றெழுதுகிருர், அது ஏகதேசமுண்மையே யென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. இப்படி யபிவிர்த்தியற்றுக் கிடப்பதற்குக் காரணமென்னவென்று சற்று விசாரித்துப் பார்ப்போமானுல் எளிதில் விளங்கலாம். நம்தேசபண்டிதர்கள் இதற்குக் காரணம் அங்கிலேய அரசாட்சியே யென்பார்கள். இப்படி இவர்கள் சொல்வது தன்னைப்பெற்ற தாயாரை மலடியென்றுற்போ லு மிருக்கிறது. இவ்வாறு தமிழ் அபிவிர்த்தி யில்லாதிருக்குங் குற்றம் நம்மைச் சார்ந்ததே யொழிய அரசாட்சியாரைச் சார்ந்ததேயல்ல வென்பது எல்லார்க்குந் தெரிந்த விஷயம். ஆகையால் நமக்கு நம்முடைய தமிழ்ப்பாஷையானது அபிவிர்த்தியடைந்து அங்கிலேயம் போலத் தழைத்தோங்கல் வேண்டுமென்ற எண்ண மிருக்குமானுல், நாமெல்லா மொருங்கு சேர்ந்து "விவேக சிந்தாமணி" "மகாராணி" முதலிய மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகைகளை நடத்துங் கனவான்களுடைய நன்முயற்சிகளுக்கு உதவிசெய்தல் வேண்டும்.

இது நிடக்க.—எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றிச் சொல்லல்வேண்டியவற்றைக்கூறுவோம்: சென்ற 18-ம் நூற்றுண்டின்கண் எழுதியிருக்கற்பட்ட பிரபந்தங்க ளெல்லாம் விசேஷமாகச் சைவம், வைணவ முதலிய மதசம்பந்தமான நூல்களேயாம். ஆகையினுலே, அந்தப் பிரபந்தங்களெல்லாம் மதவைராக்கிய மென்னும் பேய்பிடித்து அந்நூலாசிரியர்களை யலைக்க, அவர்கள் அதின் கைவசப்பட்டு, அக்கடவுளேபெரியவர், இக்கடவுளேபெரியவர் என்று வீண்வாதம் பேசிப் பொய்யையும் புரட்டையும்பற்றி விவரிக்கும் நூல்களாய் முடிந்தன. இவ்விதமான பிரபந்தங்களெல்லா முண்டாவதற்குக் காரணமென்னவென்றுல், யாராவது ஒருவர் ஒரு மதத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்தால், அதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொருவர், பிரசங்கியார் கூறிய நியாயங்களையு முண்மைகளையு மனுவளவேனும் யோசியாமல், நங் கடவுட்கு விரோதமாக வெழுந்து இவன் பிரசங்கஞ் செய்யவாவது என்று கோபங்கொண்டு அவர்க்குமாறுக நியாயவாயிலாகப் போகாமல், என்சுவாமி யிப்படிச்செய்தாலுன் சுவாமியுமிப்படிச் செய்தாரே யென்று புஸ்தகங்களிலெழுதிக்கொண்டுங் கவிகள் பாடிக்கொண்டு முலாவுவர். ஆதியிலிருந்த தமிழர்கள் மிகுந்த ஊக்கமுள்ளவர்களாயு மெளிதில் விஷயங்களி னுண்மையை யுணரக்கூடிய சக்தியுள்ளவர்களாயுமிருந்தார்கள். ஆகையினுலே தான் ஆரியர்களுடைய மதக்கொள்கைகளை யவர்களெளிதிற் பற்றிக்கொண்டார்கள். தமிழர்களுமாரியர்களுமதிகமாய்ஊடாடல் வேண்டிநேரிட்டதினுல் இருவர் குணங்களு மொரே யாதிரியா யேற்பட்டுவிட்டன. யாம் பிடித்ததையே சாதிப்பே மென்னுஞ் செருக்கும், எவ்வளவு நியாயமாய்க் கூறினு முண்மை யுணராமையும், உணர்ந்தாலும் அதற்கேற்க நடவாமையுமாகிய துர்க்குணங்கள் காலக்கிரமத்தில் உற்பத்தியாய் விட்டன. ஆகையினுலே தான் மதவாதம் விசேஷமாய் அதிகரித்தது. இம்மூன்று துர்க்குணங்களையு மறவொழித்தா லன்றி நந்தமிழ்நாடு முன்னுக்கு வரல்மாட்டாது.

மேலே சொல்லிய மதச்சார்பானவை யொழிந்த நூல்களிற் பெரும்பான்மை, யகமமூந்திரிபுமா யெழுதப்பட்ட அந்தாதிகளும், கலம்பகங்களும், மடக்குகள் நிரம்பிய சிலேடைவெண்பாக்களும், நாகபந்தம், கமலபந்தம், முரசபந்தம் முதலியன நிறைந்த சித்திரக்கவி மஞ்சரிகளும், மைந்தர் விளையாட்டுப் புராணங்களுமாயிருக்கின்றது. மேற்கூறிய வற்றுட் புராணமாவது என்னவென்றுல்,பூர்விக ஆசிரியர்களாகிய திருத்தக்கதேவர், கல்லாடர், கம்பர் முதலிய வித்வ சிரோன்மணிகள் கூறிய கற்பனைகளைத் தவிர்த்துச், சுதந்தர யூகத்தாலமைந்த கற்பனைகளும், அலங்காரங்களும், அர்த்த புஷ்டியுங் கிஞ்சித்தேனு மில்லாமல், கடவுளைப் பற்றித் தமக்குத் தோன்றியவாறு லீலை செய்ததாகச் சிறுபிள்ளைத்தனமா யெழுதப்பட் டிருக்குமோர்வித நூலாம். இதுநிற்க, சிலர் கலம்பகம் அந்தாதி முதலியன, பெரிய காவியங்க ளெழுதுவதற்காக ஏற்பட்ட அப்பியாசப் பிரபந்தங்களாம், ஆகையால் அவற்றிலே எழுதி எழுதி யதிகப் பழக்க மிருந்தாலொழிய, வேறு பெரிய நூல்கள் செய்தல் முடியாதென்று கூறிமயங்குவார்கள். கலம்பக மென்பது சாமானியமான் பிரபந்த மன்று. கவிசெய்யுந் திறமையில் மிகவும் பேர் பெற்றவர்களே கலம்பக மெழுதத்தக்கவர்கள். பாடிப்பாடித் தேர்ந்தவர்களே கலம்பகமெழுதப்புகுவார். அதெப்படி யென்றுல், சாதாரணமாயுள்ள விருத்தங்களைத் தமிழிற் கிஞ்சித்து அப்பியாச முள்ளவர்களு மெழுதலாம்; இப்பேர்ப்பட்டவர்கள், மடக்குந் திரிபுந் துறைகளு மமைந்த கவிகள் செய்தல் முடியாது. ஆகையாலிவற்றையப்பியாசப் பிரபந்தங்களென்று கொள்ளுதல் கேவலம் அசங்கதமாம். இவ்விதமாகக் கலம்பக முதலியன எழுதுவதில் வீணே காலத்தைச் செலவிடுதலைப் பார்க்க, வசநங்களாலேனும், எளிதாய்ப்பாடக்கூடியதுந் தாற்பரியங்களை நன்றுய் வெளியிடக்கூடியதுமான கவிகளினுலேனும், சத்விஷயங்களைப்பற்றி யெழுதுதல் அதிக நன்மையை யுண்டாக்குமென்று தற்காலத்துள்ள பெரியோர்கள் சொல்லுகிறபடி யாவரும் நடத்தல் வேண்டியது நிரம்ப ஆவசியகமான காரியம்.

சற்குண சாஸ்திரம் (Ethics), அங்கஜீவ சாஸ்திரம் (Physiology) மநோதத்துவ சாஸ்திரம் (Psychology) ஆகிய இவற்றின் சம்பந்தமாக

ஒருவிதப் பிரபந்தமுங் கிடைப்பது முற்றிலும் அசாத்தியமாய்ப் போய்விட்டது. பிறகு அந்நூற்றாண்டின்க ணுற்பத்தி யானவற்றுள் எவைதான் பிரயோசநமுள்ள நூல்களென்று விசாரிப்போம். அவைகளெல்லாம் பிராயிகம் தற்காலத்து சாஸ்திர ரீதியாக அமைந்த இலக்கண சம்பந்தமாகவும், ஏகதேசம் நீதி, சற்குணமாகிய இவற்றினை விளக்கும் பொருட்டுற்பத்தியானவைகளாகவு மிருப்பனவாம். இலக்கண சம்பந்தமா யிருப்பனவற்றிற்கு உதாரணமாக வைத்தியநாத நாவலர் வகுத்த "இலக்கண விளக்கம், (Constantius Beschi) என்ற வீரமாமுனிவ ரியற்றிய "தொன்னூல் விளக்கம்," சுப்பிரமணிய தீக்ஷிதர்செய்த "பிரயோகவிவேகம்" சுவாமிநாத தேசிகரியற்றிய "இலக்கணக்கொத்து" என்பனவற்றைக்கொள்க. நீதிசற்குண சம்பந்தமானவற்றிற்கு உதாரணமாக மேற்கூறிய வைத்தியநாத நாவலரும் வீரமாமுனிவரும் முறையேசெய்த "பிரபோத சந்திரோதயம்" "தேம்பாவணி" முதலிய வற்றைக் கொள்க. தமிழில் வசநடை விசேஷமா யெழுத ஆரம்பித்ததும் இந்நூற்றாண்டிலே தான் என்பதுபின்னே நியாயவாதங்களாற்காட்டப்படும்.

மேற்கூறிய பிரபந்தங்களின் விஷயங்களித் தன்மையானவையென்பதும், அவற்றின்பயனிவையென்பதும், அப்பிரபந்தங்களின் தாரதம்மியமின்னவென்பதும், இவற்றை யியற்றினவர்களின் சாமர்த்திய மினைத்து என்பதும், அவர்கள் பிறப்புவளர்ப்புகளைப்பற்றிய சரித்திரமின்னதென்பதும் அடங்கிய "புலவர் சரித்திரம்" ஒன்று வெளியிடுமெண்ணத்தோடு இதையாரம்போடக்கியாசமாக எழுதத்தலைப்பட்டோம்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

மாதர் மஞ்சரி

III வேல் பெருமாட்டி.

"உள்ள முடைமை யுடைமை; பொருளுடைமை நில்லாது நீங்கி விடும்*." குறள்.

நமது இந்தியா தேசத்திற்கு வடமேற்குப் பக்கத்தில் ஆப்கானிஸ்தான் என்ற பெயர்பெற்ற, மலைகளும் காடுகளும் அடர்ந்த, ஓர் தேச மிருக்கின்றது. அத்தேசத்திற் பல கூட்டத்தார் உளர். அவர்களுக்குள் எப்பொழுதும் போர் நடந்துகொண்டே யிருக்கும் ஆனால் வேற்றரசர் படையெடுத்து வரும்பொழுது மாத்திரம், எல்லோரும் ஒருங்கு சேர்ந்து கொண்டு அவர்களை யெதிர்க்கத் தலைப்படுவார்கள். அவர்கள் சட்டதிட்டங்களுக்கு அடங்காத காட்டுத்தனமான மிலேச்சர்கள். வெகு பராக்கிரம சாலிகள். அயல் தேசத்தார் தங்கள் விஷயங்களில் தலையிடச் சம்மதிக்கமாட்டார்கள். அவர்களுக்குள் ஆயுதப் பயிற்சி யில்லாதவர்கள் கிடையார். குழந்தைகள் கைகளிலுங் கூடக் கூர்மையான கத்திகளைக் காணலாம். அன்றியும் அவர்கள் குதிரை யேற்றத்தில் தேர்ந்தவர்களாயும், பசிதாகம் களைப்புமுதலியவற்றிற்கு எளிதிற்கீழ்படாச் சரீரத்திடமுள்ளவர்களாயும், பலவிதத் தேகாப்பியாசங்கள் கரடிவித்தைகள் முதலியவற்றிற்சிறந்தவர்களாயுமிருக்கிறார்கள். இக்குணங்களையுடையவர்களாயிருப்பதுடன், வஞ்சகம், அசத்தியம், பழிக்குப்பழி வாங்கவிரும்புந்தன்மை, கொடூரம், சிற்றின்பப் பிரியம், பேராசை, முதலிய துர்க்குணங்களும் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய தேசமும் அவர்கள் குணங்களுக்கு ஏற்றதாகவே யிருக்கின்றது, எங்கும் செங்குத்தான பாறைகளும், காடுகளும், குகைகளுமாயிருக்கின்றன. நம் தேசத்திலிருந்து அவர்கள் தேசத்துக்குப் போகும் பாதை வெகு அபாயமுள்ளது. திருடர்களால் நாசஞ் செய்யப்பட்டது. அவ்வழியாய்ச் சேனைகள் செல்வது மிகவும் கஷ்டமான காரியம். அக்காட்டு மனிதர் தயவின்றிச் செல்லலரிது. அத்தேசத்து அரசனுக்கு ஆமீர் என்பது பட்டப்பெயர்.

1838—39-ம் வருஷங்களில் ஆப்கானிஸ்தான் மிலேச்சசாதிகளுக்குள்கொடும்போர் நடந்துகொண்டிருந்தது. சிலசாதியார் டாஸ்ட் மகமத் என்பவனை ஆமீர் ஆக்கல்வேண்டுமென்றும் மற்றசாதியார் ஷாஜ்ஷுஜா என்பவனை ஆமீர் ஆக்கல்வேண்டு மென்றும் விரும்பினார்கள். அவர்களுக்குள் சண்டை நடந்துகொண்டிருக்குங் காலத்தில், நமது இந்தியா தேசத்தை ஆண்டுவந்த ஆங்கிலேய துரைத்தனத்தார், ஆமீரைத் தங்கள் கைவசப்படுத்திக்கொள்ள அதேசமய மென்று கருதி, அச்சண்டையில் தலையிட எத்தனித்தார்கள். தங்கள் முயற்சியால்ஷாஜ்ஷுஜாவை ஆமீராக்கிவிட்டால் அவன் தங்கள் சொற்படி நடப்பான்: அதனால் தாங்கள் பெரும்பயனை யடையலாம் என்று நினைந்தார்கள். ஆனால் ஆப்கானிஸ்தான் தேசத்தார் தங்கள் நன்மையைக் கருதும் அயல் நாட்டாரையுங் கூடத் தங்கள் விஷயங்களில் தலையிட வொட்டாரென்பதையும் பிறரால் நியமிக்கப்படும் அரசனுக்கு உட்படாரென்பதையும் ஆங்கிலேய துரைத்

தனத்தார் மறந்து விட்டார்கள். முதலிற் கோரியவாறு முடித்துக்கொண்ட போதிலும், பிற்பாடு அவர்கள் பட்ட கஷ்டங்கள் பல. அத்துன்பங்களுக்குட்பட்டவர்களில் ஒருத்தியாகிய ஸேல்பெருமாட்டியின் நித்திய விஷயக்குறிப்புப் புஸ்தகத்திலிருந்து, அவைகளைப்பற்றிச் சுருக்கிக்கூறுவோம்.

முதலில் ஆங்கிலேய சேனை வெற்றியடைந்தது. இராஜதானியாகிய காபூலில் ஷாஜ்ஷுஜா ஆங்கிலேயதுரைத்தனத்தாரால் ஆமீராகமுடிசூட்டப்பட்டான். கடைசியாய் டாஸ்ட்மகமத் அடைக்கலம்புக, அவனைப்போர்க்கைதியாக, மனைவிமக்களுடன், இந்தியாவுக்கனுப்பிவிட்டார்கள். போரெல்லாம் முடிந்தது போலிருந்தன. ஆங்கிலேயசேனாவீரர்கள், காபூலுக்கு வரும்படி தங்கள் மனைவிமக்களுக்கு எழுதி வருவித்தார்கள். இப்படியிருக்கும் பொழுது கில்ஸி என்ற ஓர் சாதியார் தங்களுக்குக் கொஞ்சம் பணம் ஆமீரிடமிருந்து வரவேண்டுமென்று சண்டைக்காரம்பித்தார்கள். வெடிமருந்தில் தீயிட்டாற்போலாயிற்று. திடீரென்று சகலசாதியாரும் படையெடுத்தார்கள். இந்தியாவுக்கு வரும்பாதைகளை யெல்லாம் தடுத்துவிட்டார்கள். காபூல் நகரைக்கைக்கொண்டு, சில ஆங்கிலேய அதிகாரிகளையும்மனிதர்களையுங்கொன்றார்கள். ஆங்கிலேயஅதிகாரிகள் இயன்றமட்டும் எதிர்க்கமுயலாமல் சமாதானம் பேசத்தொடங்கினார்கள். அத்தேசத்தாரின் தலைவன் டாஸ்ட்மகமதின் புத்திரர்களிலொருவனாகிய ஆக்பர்கான் என்பவன். அவன் வெகுதுஷ்டன். சமாதானம் பேச வந்தவர்களைக்கூட வஞ்சகமாய்க்கொன்று விட்டான். அவன்ஆங்கிலேய அதிகாரிகள் மனிதர்கள் முதலியவர்களுடைய மனைவிமக்களைத் தன் வசம் நல்நடக்கை யடைமானமாக ஒப்புவித்துவிட்டால், மற்றவர்களை இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விடுவதாகச் சொன்னான். முதலில் ஆங்கிலேய அதிகாரிகள், அவனிடம் ஒப்புவித்தலைப் பார்க்கிலும் தங்கள் மனைவிகளைச் சுட்டு விடுவதே நலமென வெண்ணினார்கள். ஆனால் அப்பொழுது மழைகாலமாயிருந்தது. பொறுக்க முடியாப் பனி பெய்தது.

1842-ம் வருஷம் ஜனவரிமாதம் 6-ம் தேதியன்று ஆங்கிலேய சேனை காபூலிலிருந்து பின்னிட்டது. சேனையுடன் குதிரைமேல் வந்த ஸேல்பெருமாட்டி தன் ஆடை, பனியால் மூடப்பட்டதாக எழுதியிருக்கிறாள். முதல் நாள் இரவிலேயே அநேகர் பனியினாலும் களைப்பினாலு மிறந்து போனார்கள். அத்தேசத்துக் காட்டுமனிதர்கள் கூட்டங்கூட்டமாய்ச் சேனையைத் தொடர்ந்து, துப்பாக்கிகளைத் தூக்கமுடியாமற் கைகள் விறைத்துப்போன நம்தேசத்துச் 'சிபாய்'களை, ஆடுகளை வெட்டுவதுபோல் வெட்டியெறிந்தார்கள். பெண்பிள்ளைகளும் குழந்தைகளும் பட்டதுன்பம் கொஞ்சமல்ல. ஸேல்பெருமாட்டியும், அவள் மகளாகிய ஸ்டர்ட் துரை மனைவியும், தைரியத்தைக் கைவிடாமல், மற்றவர்களுக்குவழிகாட்டிச் சென்றார்கள். அவர்களுடையஊக்கத்தைப்பற்றி அதிகாரிகள் புகழ்ந்துபேசினார்கள். காட்டுமனிதர்கள்கூட அதிசயித்தார்கள். ஆக்பர்கானுக்கு அஞ்சி ஸேல்பெருமாட்டியும் அவள் புத்திரியும் மாறுவேஷம்பூண்டு கொண்டு, சேனாவீரர்களுக்கு மத்தியே சென்றார்கள். இரண்டாம் நாளன்றுகாட்டுமனிதர்கள் ஆங்கிலேய சேனையை நோக்கிச் சுடத்தலைப்பட்டார்கள். ஸேல்பெருமாட்டிக்கு ஓர் காயம்பட்டது. குதிரைமேலிருந்த அவள் புத்திரி, குதிரை சுடப்பட்டிறந்ததினாற் கீழே விழுந்தாள். அப்புத்திரியின்கணவராகியஸ்டர்ட்துரை மரணகாயத்தை யடைந்தார். அவரை யொரு வண்டியில் வைத்திழுக்க, அது அவர் துன்பத்தை யதிகரித்தது. அவருக்கு மரணதாக மெடுத்தவுடன்போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. அவர் இவ்விதத் துன்பத்திலிறந்தார். அப்பொழுதுங் கூட ஸேல்பெருமாட்டி மனந்தளரவில்லை.

கஷ்டங்கள் வரவர அதிகரித்தன. பாதையெல்லாம் பிணங்களாலும் களைத்தவர்களாலும் நிரம்பின. மறுபடியும் ஆக்பர்கான் பெண்பிள்ளைகளையும் குழந்தைகளையும் தன் வசம் ஒப்புவிக்கும்படி கேட்டான். அப்படிச் செய்தாலொழிய அவர்கள் பிழைப்பது முடியாததா யிருந்தது. ஒன்பது பெருமாட்டிகளும், இருபது கனவான்களும், பதினாறு குழந்தைகளும், அவன் வசம் அடைமானக் கைதிகளாக ஒப்புவிக்கப்பட்டார்கள். * அவர்களைத் தன் விருந்தினராகப் பாவித்து, மரியாதையுடன் நடத்திவந்தான். ஆனால் அவர்கள் ஆயுதங்கள், வெடிமருந்து முதலியவற்றை வைத்துக் கொள்ள அவன் இணங்கவில்லை. அவர்கள் கொலைப் பயத்தினால் மிகவும் சஞ்சலப்பட்டார்கள்.

அந்த நாற்பத்துமூன்று கைதிகளும் ஆக்பர் வசம் எட்டரைமாதகாலம் இருந்தார்கள். அக்காலத்தில் கருப்பவதிகள் பிரசவமானார்கள். அவர்களில் இறந்துபோன ஸ்டர்ட்துரை மனைவியாகிய ஸேல்பெருமாட்டி மகள் ஒருத்தி. அக்காலத்தில் ஸேல்பெருமாட்டி யெழுதிய நித்திய விஷயக்குறிப்புப் புஸ்தகம் சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கதா யிருக்கின்றது. பட்ட கஷ்டங்களைப்பற்றிக் கூறும்பொழுதுகூட அப்பெருமாட்டி குதூகலத்துடன் எழுதுகிறாள். மனத்தளர்ச்சி சிறிதும் கிடையாது. அநேகசமயங்களில், சிறு அறைகளில் ஆடுகளைப்போல் அடைக்கப்பட்டார்கள். அநேகருக்கு உடுத்திருந்த உடை தவிர

* "ஊக்க முடைமையே ஒருவனுக்கு நிலை நின்ற உடைமையாவது; மற்றைப்பொருளுடைமை நிலை நில்லாது நீங்கிப்போம்." பரிமேலழகர்.

* மற்றவர்கள் இந்தியாவுக்குச் சென்றார்கள். அவர்கள் தொகை பதினாறாயிரம். அவர்களில் ஒருவன் தான் பிழைத்தான். மற்றவர்கள் யாவரும் ஆக்பருடைய மனிதர்களாற் கொல்லப்பட்டார்கள்.

வேறு ஆடை யில்லாமலிருந்தது. ஒருசமயத்தில் முகங் கழுவுவதற்குக்கூடத் தண்ணீர் அரிதாயிருந்தது. அவர்களிருந்த அறைகளில் மூட்டைகளும் ஈக்களும் ஏராளமாயிருந்தன. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவைப் பார்த்தமாத்திரத்திற் பசியோடிப்போய்விடும். அதற்காகத் தாங்களே சமைத்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு நூல், ஊசி, துணி முதலியவை கொடுக்கப்பட்டன. அதனால் பொழுதுபோக்கினதுந்தவிர, ஆடைகளும் செய்துகொண்டார்கள். சில பெருமாட்டிகள் சமையற்காரிகளாகவும், சிலர் வேலைக்காரிகளாகவும், சிலர் வண்ணாத்திகளாகவும், ஒருசமயத்திற் சிலர் தச்சர்களாகவுங்கூட வேலை செய்தார்கள். ஸேல்பெருமாட்டி ஒருசமயத்திற் காற்றோட்டத்திற்காகச் சுவரிற் பலகணி யுண்டாக்கும்பொருட்டுத் தான் கொத்துவேலை செய்ததாக வெழுதியிருக்கிறாள். அச்சமயத்தில் அவள் கைகள் நொந்து புண்பட்டனவாம். ஸேல் பெருமாட்டியின் கணவராகிய ஸேல்பிரபு என்னும் சேநாபதி, கைதிகளை விடுவிப்பதற்காக முயன்றுகொண்டிருந்தார். அவருக்குக் கடிதங்கள் எழுதுவதற்கு ஆக்பருடைய சம்மதம் பெற்றிருந்தாள். அவள் அச்சேனாவீரருக்கு ஏற்ற மனைவி. போருக்குரிய தந்திரங்களெல்லாம் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆக்பருடைய போர் நடைகளைப்பற்றி அவள் தன் கணவருக்குத் தெளிவாயும் சாமர்த்தியமாயு மெழுதினாள். அவள் எழுதிய கடிதங்களிற் சில இந்தியா கவர்னர் ஜனரலுக்கும் சேநாதிபதிக்கும் மேற்பார்க்கும் சபையாருக்குங்கூட அனுப்பப்பட்டன. தன் கணவருடைய பராக்கிரமத்தைப் பற்றி அவள் வெகு பெருமையை யடைந்திருந்தாள். ஒரு சமயத்தில் அவருக்கு வெகுமானமாக ஓர் வாள் கொடுக்கப்பட்டதினால் தனக்குண்டான ஆநந்தத்தைப் பற்றி யெழுதி யிருக்கிறாள். தன் ஊக்கத்துக்காகத் தன்னைப் பிறர் புகழ்வதில் அவளுக்குப் பெருமை கிடையாது.

ஆப்கானிஸ்தானில் அடிக்கடி பூமியதிர்ப்பு உண்டாகும். அதனால் நேரிடக்கூடிய அபாயங்களைப்பற்றி நினைத்தமாத்திரத்தில் மனம் பதறும். ஆனால் ஸேல் பெருமாட்டி சிறிதும் பயப்படவில்லை, அதைப் பற்றிச் சாதாரணமாக எழுதுகிறாள். "இன்றைக்கு மூன்று உடுப்புகள் தைத்தேன்." என்று எப்படிக்கவலையற்று எழுதுவோமோ, அதுபோலவே "இன்றைக்குப் பூமியதிர்ப்பு அதிகம்." என்று அடிக்கடியெழுதுகிறாள். ஒரு நாள் ஸேல்பெருமாட்டி கூரையிற் சில துணிகளை வெயிலிற் போட்டுக் கொண்டிருக்கும் பொழுது, பூமி திடீரென்று அதிரத்தொடங்கிற்று. அவள் கீழேயிறங்கித் தப்பிக்கொண்டவுடன், அவ்வீடு இடிந்து விழுந்து இருந்த விடந்தெரியாமற்கீழேயாழ்ந்து விட்டது. பெண்பிள்ளைகளிடத்திற்சிறிதும் அபிப்பிராயங் கேட்காமல் விடுதலைச் சமாதானம் பேசுவதைப்பற்றி யவள் கோபமாய் எழுதுகிறாள். அடைமானக் கைதிகளுக்கு அபாயம் நேரிடுமென்று பயந்து ஆக்பர்கானை யெதிர்த்துப் போர் செய்யாமலிருக்கக் கூடாதென்று தன் கணவருக்கு எழுதினாள். "இப்பொழுது தான் நல்ல சமயம்; நாங்கள் ஆக்பர் கைவசமிருக்கிறோமென்று சிறிதும் யோசிக்க வேண்டாம். நம்முடைய தேசத்தின் அந்தஸ்தைப் பற்றி யோசிக்கும் பொழுது நாங்கள் இறப்பது பெரியகாரியமா? ஆனால் நான் சாகவிரும்புகிறேனென்று சொல்லவில்லை. ஆப்கானிஸ்தானில் ஆங்கிலேய ஜயக்கொடி பறப்பதைப்பார்க்கலாமென்று எண்ணியிருக்கிறேன்," என்று எழுதினாள்.

எச்சமயத்திலும்சந்தோஷமாய் எழுதுவாளென்று கூறினோம். சில திருடர்கள் அவளுடைய மருந்துச்சீசாக்களை திருடிக்கொண்டுபோக, அவளெழுதுகிறாள்:—"சீசாக்களிலுள்ள மருந்துகளை யுபயோகப்படுத்திப் பயனடைவார்களென்று நம்புகிறேன். ஒன்றில் அக்கினித்திராவகமும், மற்றொன்றில் வேறொரு கொடுமருந்து மிருக்கின்றன."

கொஞ்சநாட்களில் அவளுடைய கணவராகிய ஸேல்பிரபுவும், மற்றொருசேனாவீரரும் அவர்களை விடுவிக்க வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அவள் அசௌக்கியமாயிருந்த போதிலும், வெகு சந்தோஷத்துடன் எதிர்கொண்டு புறப்பட்டாள். கொஞ்சம் சமயம் தப்பியிருந்தால் ஆக்பர் கைதிகளை மறுபடியும் சிறைப்படுத்தியிருப்பான். அவளுக்குத் தன் கணவரைக்கண்டவுடன் ஆநந்தக் கண்ணீர் பெருகிற்று. அவள் தன்னுடைய ஊக்கத்தின் பயனை முற்றிலும் பெற்றாள்.

ஸேல்பெருமாட்டி சிறைப்படுமுன் அரண்மனைகளில் தாதிகள் சூழ வெகு செல்வத்தில் வாழ்ந்தவளென்பதை நினைக்கும்பொழுது, அவள் ஊக்கத்தின் பெருமை நன்றாய் விளங்கும்.

பேரேரீ.

அங்கிலேயரின் குணாகுணங்கள்.

II

இத்தேசத்தில் நாம் பாத்திரமறிந்து தருமம் செய்வதில்லையாயினும்; ஈகைஇரக்கம், பச்சாதாபமாகியஇக்குணங்களில் அங்கிலேயரைவிட நாம் மிகவும்மேலானவர்களாகவேயிருக்கிறோம். நம் தேசத்தார் பல ஜாதி வருணங்களாகப் பிரிந்து பேதப்பட்டிருப்பினும், நம்மவர்களுக்குள் ளிருக்கும் சகோதரவாஞ்சை அங்கிலேயர்களுக்குள் இல்லை. நமது மதம், தருமஞ் செய்வதைப்போல் ஸத்காரியமில்லை என்று

போதிக்கிறது. நாம் தருமஞ்செய்வதெல்லாம் கடவுளுக்கு அர்ப்பிதமென்று நம்பி அவருடைய திருவருளைக்கோரி நாம் செய்கிறோம். அங்கிலேயருக்குள் அப்படி இல்லை. அவர்கள் செய்வது சாதாரணமாய் உலகக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டேயாம். அவர்கள் தங்கள் தேசப்பொது விஷயத்தில் என்ன ஒற்றுமையுள்ளவர்களா யிருப்பினும், என்னதான் சுயநலம் பாராட்டாதவர்களாயிருப்பினும், ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து அந்நியோந்நியமா யிருக்கவேண்டுமென்கிற மானுட வாஞ்சை அவர்களிடத்தில் பொதுவாய்க் கிடையாதென்று அவர்கள் தேசத்தில் சென்று அவர்களோடு சாதாரணமாகக் கலந்து பழகி அவர்கள் மாதிரியை யறிந்த ஒருவர் சொல்லுகிறார். சுயநலத்தை நாடி ஒருவருக்கொருவர் எவ்வளவோ ஒற்றுமை பாராட்டி, ஆயிரம் பேரானாலும் அரைநாழிகை சச்சரவு கூடவின்றி யாவரும் ஒரு மனதாய்க் கூடி யுழைத்து வருவார்கள். "ஐயோ! அயலானாயிற்றே! அந்நியனாயிற்றே" என்று பச்சாதாபம் ஒன்றே காரணமாக மனதிரங்கி ஒருதவியும் செய்து வரமாட்டார்கள்.

தேசப் பொது விஷயங்களும் பொது க்ஷேம விஷயங்களுமன்றி மற்ற விஷயங்களிலெல்லாம் அவனவன்பாடு அவனவனோடேயென்றிருப்பார்களேயன்றி ஒருவன் மற்றொருவன் காரியத்தைப்பற்றி விசாரிக்கவு மாட்டான்; மற்றவன் தன் காரியத்தைப் பிறன் விசாரிக்கவும் விடமாட்டான். இருவர் அநேக வருஷகாலம் அந்நியோந்நிய சிநேகர்களாயிருந்து பாலும் நீரும்போல் கலந்து பழகிவந்தாலும், ஒருவன் வருமானம் இவ்வளவென்று இன்னொருவனுக்குத் தெரியாதிருக்கும். அந்தரங்க காரியங்களை அயலாருக்குத் தெரியாமல் மூடிவைத்துக்கொள்ள ஆங்கிலேயரைப்போல் பாடுபடுகிறவர்கள் உலகத்தில் வேறொருவர் இரார். அவர்கள் எப்போதும் வெளி வேஷம்போட்டு ஜீவிப்பவர்களே. உள்ளுக்கு ளிருப்பதொன்று; வெளிக்கு வேஷம் போடுவதொன்று. நாம் ஜாதி பேதத்தால் பல வேறுபட்டுப்பிரிந்துள்ள போதிலும், ஆபத்து வந்தகாலத்தில் ஜாதி பேதத்தையும் பார்க்காமல் ஒருவருக்கொருவர் எவ்வளவோ ஒத்தாசை செய்துவருகிறோம். ஒரு கிராமத்திலுள்ளவர்களில் ஒருவன் வீட்டில் யாருக்காவது ஒரு விபத்து வந்து விட்டால் மற்றவர்களெல்லோரும் பிராமணன், சூத்திரன், வண்ணான், இடையனென்று பாராமல் ஒவ்வொரு ஜாதியானும் அவனிடத்தில் அநுதாபம் வைத்து அவ்வவனுக்கு இசைந்த வாறு பலபேர் பலவிதமாய் அவனுக்கு வேண்டிய உதவி செய்கிறார்கள். ஒரு வீட்டில் ஒருவன் செத்தால் ஊரிலுள்ளவர்கள் ஒன்று கூடி அவனுக்கு வேண்டிய உதவி செய்து ஆகவேண்டிய காரியங்களைச் செத்த வீட்டுக்காரனுக்கு வருத்தங் கொடுக்காமல் தாங்களே வலுவில் வந்து செய்வார்கள். ஒரு கிராமத்தில் ஒருவன் வியாதியாய்ப் படுத்துக்கொண்டால் ஊரிலுள்ளவர்களெல்லாம் அவன் வீட்டுத்திண்ணையில் வந்துட்கார்ந்து கொண்டு வைத்தியனைக் கூப்பிட ஓடுகிறவனொருவனும், மருந்து வாங்கி வர ஓடுகிறவனொருவனும், பச்சிலை கொண்டுவர ஓடுகிறவனொருவனுமாகப் பலபேர் பலவிதத்தில் அவனுக்கு ஒத்தாசைசெய்வார்கள். இங்கிலாந்தில் இப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கெல்லாம் ஒருவன் மற்றொருவனுக்கு ஒத்தாசை செய்வது தன் கடமையாக எண்ணான். இதெல்லாவற்றிற்கும் காசு செலவழித்தே அத்தேசத்தில் காரியமாக வேண்டும். காசு ஒன்று மட்டு மிருந்தால் அத்தேசத்தில் ஆகாத வேலை யொன்று மில்லை. வியாதியஸ்தர் கிட்ட விருந்து அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அவர்களைப் போஷித்து வர வேண்டுமானால் அதற்காக வேண்டிய வைத்தியப் பயிற்சியடைந்து அதுவே ஜீவனத்தொழிலாகக்கொண்டிருக்கும் மாதர்களிருக்கிறார்கள். ஒருவன் செத்தான். அவன் பிணத்தை யெடுத்துக் கொண்டுபோயடக்கம் செய்ய வேண்டுமானால், அதையொரு ஜீவனமாக வைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளிகளிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு விஷயத்துக்கும் தக்க தொழிலாளிகள் இருக்கிறார்கள். நம்மவர்களில் சாவுமுதலிய நேர்ந்தவிடத்து இப்படிப்பட்ட விஷயங்களுக்குப் பணங்கொடுத்து ஒருவனை நியமிப்பது மெத்த ஈனமாக எண்ணப்படுகிறது. நம்மவர்களில் ஒருவன் என்ன ஏழையா யிருந்த போதிலும் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் தன்னூரானுக்குச் செய்யும் உதவிக்குப் பணம் வாங்கவேண்டு மென்று சொற்பனத்திலும் நினையான். நம்மவரில் ஒருவன் எவ்வளவு பணக்காரனா யிருந்தாலும் இப்பேர்ப்பட்ட விஷயங்களில் தனக்கு உதவி செய்யும் தன்னூரான் எவ்வளவுஏழையாயிருந்தாலும் இவ்வுதவிக்காக அவனுக்குப் பணங் கொடுக்கிறேனென்று சொல்ல ஒருபோதும் துணியான். அவன் அப்படிச்சொல்வானானால் இதை விடப் பிரமாதமான பிசகு அவன் செய்யத்தக்க தொன்றுமில்லை. உடனே ஊரா ரெல்லாம் சேர்ந்துகொண்டு அவன் கருவத்தைத் தலைமட்டமாக இறக்கி விடுவார்கள்.

நாம் முன் சொல்லியபடி இங்கிலாந்தில் ஜனங்கள் இது விஷயங்களிலெல்லாம் வேறு விதமாய் நடந்து கொள்ளுகிறார்கள். அத்தேசத்தில் ஜனங்களுக்குத் தான் என்கிற அகம்பாவம் அதிகமாய் முற்றி அவர்கள் மனதில் வேரூன்றிப் போயிருக்கிறது. எல்லாம் "என் காரியம், என் வேலை, என் பாடு." என்றவற்றிலும் என், நான் என்பது பிரதானமாய் நிற்கும். இது சிறு பிராயம் தொட்டே அவர்கள் மனதிற் பதி

ந்து வேருன்றி வருகிறது. இந்தக் குணம் அந்நியர் அயலார் சம்பந்தப்பட்டமட்டில்தானென்று இல்லை. அவர்கள் குடும்பசம்பந்தமும் இப்படியேதானிருக்கிறது. பிள்ளைகளும் பெண்களும் அவர்களுக்கு வயது வருகிறமட்டுமே பெற்றோர் வீட்டிலிருப்பார்கள். பிறகு இறகு முளைத்தபக்ஷி தன் கூட்டை விட்டு ஓடித் தானாக இரை தேடிப்பிழைப்பதுபோல அவர்கள் பெற்றோர் அகத்தை விட்டுப் பிரிந்து தாங்கள் சுய ஜீவனம் செய்யும் வழியைப்பார்ப்பார்கள். அத்தேசத்தில் பெற்றோர்கள்கடமை தங்கள் பெண்கள் பிள்ளைகளுக்கு வயதுவருகிறமட்டும் அவர்களைச் சம்ரக்ஷணைசெய்து அதற்குள் அவர்கள் பின்னுக்குப் பிழைப்பதற்குபயோகமான கல்வியோ கைத்தொழிலோ தங்கள் சக்திக்குத் தக்கபடி அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதோடு நின்றுபோகிறது. அவர்கள் பெண்கள் பிள்ளைகளுக்கு ௨௧-வயது ஆய்விட்டால் பெற்றோர்க்கு அவர்கள் மீது சட்டப்படி யாதொரு அதிகாரமுமில்லை; அவர்களை அப்புறம் தங்கள்வீட்டில் வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்கிற கடனுமில்லை. ௨௧-வயது ஆய்விட்டால் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி வெளிப்பட்டுச்சொந்த ஜீவனம் செய்யவேண்டியதுதான். அவ்வயதுக்குப்பின் பெற்றோர்கள் தம்மக்களைத் தங்கள் வீட்டிலிருக்க விடுகிறதில்லை. வெளியில் போய்ப்பிழைக்கும் பெண்கள்பிள்ளைகளுக்குப் பெற்றோர்வீடு, விடுமுறை காலங்களில் தங்கள் சொந்த வீடாக விருக்கும். ஆனால், இப்படி அபூர்வமாய் வரும் விடுமுறை காலங்களில்தான் அவர்கள் வீட்டிலழைத்துக் கொண்டாடப்படுவார்கள். அத்தேசத்தில் ஜீவனம் செய்வது கஷ்டமாதலால் ஜனங்கள் இத்தேசத்தாரைப்போல சோற்றுக்கின்றிக் கலியாணம்செய்துகொள்வதில்லை. அவன் அல்லது அவள் தனியாக வசிக்கப்போந்த ஜீவனவகை யிருந்தாலும்கூட அவர்கள் கலியாணம் செய்துகொள்ளத் துணியார்கள். தங்கள் ஜீவனத்துக்குக்கண்டு ஒருகுடும்பத்தையும் காப்பாற்றுவதற்குப் போதுமான ஆஸ்தி அல்லது சம்பாத்திய மிருந்தாலன்றி ஆணாகட்டும், பெண்ணாகட்டும் கண்மூடித்தனமாய்க் கலியாணம் செய்துகொள்ளத் துணியார்கள். ஆதலால் பெண்களும் ஆண்களைப்போல் தங்களுக்கேற்ற வேலைகளிலமர்ந்து சுயஜீவனம் செய்யப்பார்ப்பார்கள்.

அத்தேசத்தில் பிச்சை எடுப்பது சட்டப்படி குற்றமாயிருப்பதால் ஏழைகள் ஸ்திதி அத்தேசத்தில் மகா கொடியது; இத்தேசத்தைப்போல அத்தேசத்தில் ஏழைகள் சோம்பற்சாவடியா யுட்கார்ந்திருந்து வருத்தமில்லாமல் பிச்சை வாங்கிப் பிழைக்கமுடியாது. இத்தேசத்தில் ஏழைகள் கலியாணம் செய்துகொண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பிச்சைவாங்கிப் பிழைக்கத் தெருவில் விடுவதுபோல அத்தேசத்தில் விடவும் கூடாது. பிள்ளைகளைப்பெற்றவர்கள் அப்பிள்ளைகளுக்கு வயதுவருகிறவரையில் அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருப்பதன்றி ௧௬-வயதுவரையில் அப்பிள்ளைகளை யாதொரு வேலைக்கும் அழைத்துக்கொண்டு போகாமல் பள்ளிக்கூடத்துக்கனுப்பிப் படிக்க வைக்கவேண்டுமென்கிற சட்ட நிர்ப்பந்தத்துக்கும் அவர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அத்தேசத்தில் வயது வந்த பிள்ளைகள், மூப்படைந்த தங்கள் பெற்றோர்களைக் காப்பாற்றவேண்டுமென்கிற சட்ட நிர்ப்பந்தமில்லை. சாதாரணமாய்ப் பெற்றோர்கள் என்ன வயோதிகரா யிருப்பினும் தங்களுக்குச் சக்தியுள்ளமட்டில் தங்கள் சொந்த முயற்சியால் ஜீவனம் செய்து வருவார்களேயன்றி அவர்கள் பிள்ளைகள் என்ன உன்னத பதவியிலிருந்தாலும் அவர்களிடம் போய்ச் சோற்றுக்கு நிற்கமாட்டார்கள். பிள்ளை பெரிய அந்தஸ்துள்ள வேலையிலிருக்கையில் பெற்றவன் சாதாரண ஊழியம் செய்யும் வேலையிலிருந்து தன் பாட்டுக்குப் பிழைத்து வருவது அத்தேசத்தில் மிகவும் சாதாரணம். பிள்ளை, பெற்றோரைப் போஷிக்கக் கடமைப்பட் டில்லாததுபோலே பெற்றோர்களும் அந்திக் காலத்தில் பிள்ளைகள் உதவியை எதிர் பார்ப்பதில்லை. அவர்கள் சொந்த முயற்சியால் ஸ்வாதீனமாக விருந்து ஜீவனம் செய்ய முடியாவிட்டால் கிழம் கட்டை நொண்டி முடம் தள்ளாதவர்களுக்குதவிசெய்யச் சர்க்காரில் ஏற்பட்டுள்ள வேலைச்சாலைக்குச் சென்று அங்கு அவர்களாலான வேலையைச் செய்து சர்க்கார் தர்மத்தில் ஜீவித்து வருவார்கள்.

நாம் மேலே சொல்லியவெல்லாம் ஜனங்களிற் பொதுவாய் வழங்கிவருவதையே குறித்துச்சொன்னோம். மிகப்பணக்காரர்களா யிருக்கிறவர்கள் தங்கள் மக்களுக்கு ௨௧-வயதான பின்னும்அவர்களுக்கு விவாகமாய் வேறாகப் போகிறவரையில் தங்கள் வசத்திலே வைத்துப் போஷித்து வருவார்கள். இவ்வகுப்பார் விசேஷமாய்த் தங்கள் பெண்களைப்பற்றி அதிக கவலையெடுத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு நல்ல வரன் பார்த்து விவாகம் செய்து வைப்பதோடு, அவர்கள், தாங்கள் பிறந்த அந்தஸ்துக்குக் குறைவின்றி வசித்து வரத்தக்கதாக அவர்களுக்கு ஸ்திரீதனம் அல்லது வேறு ஜீவனவகை தேடிக் கொடுப்பது பெற்றோர்களது பொறுப்பாய் எண்ணப்படுகிறது. எவ்வளவு தனவந்தரா யிருந்தாலும் விவாகமானபின் பிள்ளை தகப்பன் வீட்டில் வசிப்பதென்பது அத்தேசத்தில் கிடையாது. ஒருவனுக்கு விவாகமாய் விட்டால் பிறகு அவன் பெண்சாதி பிள்ளை குட்டி குடித்தனக்கவலை எல்லாம் அவன்தேயாம். நம்மைப்போல் மூன்றாந் தலைமுறை நாலாந்தலைமுறை வரை பிள்ளை, பேரன், கொள்பேரன் இவர்

கள் பெண்சாதி பிள்ளைகளெல்லாம் சேர்ந்து ஒரு குடும்பமாக வசிக்கமாட்டார்கள். அவ்வேற்பாட்டினால் இவர்களுக்கு இளவயது முதற்கொண்டே சுவாதீன குணமும், தைரியமும், துணிவுமுண்டாகி உலக வாழ்க்கையில் ஜீவனத்துக்குட்படவேண்டிய பாடுகளை எல்லாம் பட்டநுபவிக்க நம்மிலும் அவர்கள் திடசித்தர்களாய் அதிக சக்தி யுடையவர்களா யிருக்கிறார்கள். அவனவன் தன் குடும்பத்தைமட்டுமே காப்பாற்றக்கடமைப்பட்டவனென்றிருப்பதால்ஒருவன் சம்பாத்தியத்தால் அவன்எட்டாந் தலைமுறை யுறவினரெல்லாம் அவரவர்பெண்டாட்டி பிள்ளைகளோடு அவனை அட்டைபோல் ஒட்டியிருந்து அவன்சம்பாத்தியத்தையெல்லாம் உருஞ்சிவர வகையில்லை. ஒருவன் தேடிய பொருளைக்கொண்டு பலபேர் குடும்பத்தோடு சோம்பேறிகளா யிருந்து பிழைக்க இடமுமில்லை. இதனால் அவனவன் தன்னாலானதைச் சம்பாதிக்க அவனாலான முயற்சியெல்லாம் செய்துவர ஆவசியகம் நேரிடுவதால் இயல்பாகவே அவர்களுடைய சம்பாத்தியம் அதிகப்பட்டு மொத்தத்தில் தேசக்ஷேமமுண்டாவதற்குக் காரணமா யிருக்கிறது.

C. V. S.

சாவித்திரி சரித்திரம்.

—o—

மூன்றவது அதிகாரம்.

திருவநந்தபுரக் கடிதம் வந்து ஒருமாதத்திற்குள் நாங்கள் கோவிந்தப்புரத்தை விட்டுத் திருநெல்வேலிக்கு வந்துவிட்டோம். என் தகப்பனாருக்கு நேரிட்ட பல துர்ப்பாக்கியங்களால் அவர் அவ்வூரில் இருக்க விரும்பவில்லை. அன்றியுங் கோபாலன் படிப்பின் பொருட்டும், எங்களுக்குக் கலியாணஞ் செய்விக்கும் பொருட்டும், அவர் எவ்விதமாவது பணஞ் சம்பாதிக்க வேண்டியதாயிற்று. அவருக்கு இயற்கையாகவே கர்வமுண்டு; அப்பொழுது நேரிட்ட துர்ப்பாக்கியங்களால் அக்கர்வம் அதிகரித்தது. ஆறுதல் சொல்லவந்த இஷ்டர்களைத் தன்னைக்கேலி பண்ணவந்தவராக நினைக்கத் தொடங்கினார். யாரேனும் தன்னைக்கண்டு இரங்கினால், அவர்களைத் தன் துர்ப்பாக்கியத்தைக்கண்டு இரகசியத்திற் சந்தோஷப்படும் விரோதிகளாக வெண்ணினார். இவ்விதக் கோபம் சிலநாட்களிற் பொறுக்க முடியாததாயிற்று. எவ்விதமேனும் பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசை அவர் மனதிற் குடிகொண்டது. அவர் எங்களுடன் பேசுகிறதில்லை. சரியானபடி 'சாப்பிடுகிறதுகூடவில்லை. எப்பொழுதுந் தலையிற் கையை வைத்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

இவ்விதம் இரண்டுவாரங் கழிந்தபின்பு அவர் ஒருநாள் என் அத்தையம்மாவிடத்திற் சொன்னதாவது:— “சங்கரீ! நான் சொல்வதை ஊடே தடுக்காமற் கேள். இந்த வீட்டையும், மீந்தவயலையும் விற்றுவிடப்போகிறேன். இவ்வூரில் இனிமேல் என்னால் இருக்கமுடியாது. கோபாலனும் சாவித்திரியும் உன்னுடன் திருநெல்வேலியிலிருக்கட்டும். அவர்களுடைய சாப்பாட்டுச் செலவுக்கு நான் பணமனுப்புகிறேன். கோபாலனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாமற் செய்ய முயற்சிக்க வேண்டும். ஆனால்—” “நீர் எங்கே போகிறீர்?” என்று நான் கேட்டேன். அவர் உடனே:—“பேசாதே! சங்கரீகேள்: நான் திருவநந்தபுரத்துக்குப் போகிறேன். நிலம் விற்றபணம் உன்னிடமிருக்கட்டும். அதைக்கொண்டு எப்படியாவது சாவித்திரிக்குக் கலியாணத்தை முடித்துவிடு: கோபாலனுக்குப் பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம்.” என்றார். என் அத்தையம்மாள் தன்னாலானமட்டும் அவர் திருவநந்தபுரத்திற்குப் போகக்கூடாதென்றும், பிள்ளையிருக்கும்பொழுது வயலைவிற்றாலும் வீட்டை விற்கக்கூடாதென்றும், அவர் விருத்தாப்பியகாலத்தில் ஓரிடத்திற்கும் போகாமல் தன்கஞ்சியைப் பங்கிட்டுக் குடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும், பலவிதமாய்ச் சொல்லியும், நான் கூடத்திருவநந்தபுரத்திற்குப் போவேனென்றழுதும், ஒன்றும் பயன்படவில்லை. அவர் வீட்டையும் வயலையும் விற்றுப் பணத்தை யென் அத்தை கையிற்கொடுத்து, என்னையவளுடன் அனுப்பி விட்டுத், தான்திருநெல்வேலிக்கு எங்களுடன் வந்து கோபாலனைக்கூடப் பாராமல் நேராகத்திருவநந்த புரத்திற்குப்போய்விட்டார்.

எங்கள் குடும்பத்துக்கு வந்த துர்ப்பாக்கியம், எனக்கு நல்லதாகவே யிருந்தது. என் அத்தையம்மாள் என்னையுங் கோபாலனையும் வெகுஅன்புடன் நடத்தி வந்தாள். கோபாலன்கூட இருப்பதினால் நான்வெகு மனமகிழ்ச்சியை யடைந்தேன். என் சிறு இருதயத்திலுள்ள ஆசையை யெல்லாம் கோபாலன் பேரிலும், என் அத்தைபேரிலுஞ் செலுத்தினேன். அத்தையம்மாளிடத்தில் வீட்டுவேலைகற்றுக் கொள்வதிலும், கோபாலன் வாசிப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பதிலும், நான் வெகுசந்தோஷத்தையடைந்தேன். என் அத்தையம்மாளைவிட அன்புள்ளவர்களும், கோபாலனைவிடப் படிப்பில் தேர்ந்தவர்களும், எங்கும் கிடையாரென்பது என் எண்ணம். கதைப்புஸ்தகங்களை வாசித்தபின் கோபாலன் எனக்குச் சொல்லுங் கதைகளைக் கேட்டு, எனக்குப் படிப்பில் ஆசையுண்டாயிற்று. ஆனால், பெண்கள் படிப்பதை நான் அப்பொழுது பார்த்ததில்லை.

கோபாலனுக்கு நடேசன் என்றொரு சிநேகிதனிருந்தான். அவனுங் கோபாலனும் பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிரிகிற

தே யில்லை. நடேசன் கோபாலனுடன் வாசித்து,எங்கள்வீட்டிலேயேபடுத்துக்கொள்வதுவழக்கம்.அவனுக்குக் கலியாணம் முடியவில்லை.என் அத்தையம்மாள் என்னை அவனுக்குக் கலியாணஞ் செய்யலாமென்று வேடிக்கையாய்ச் சொல்வதுண்டு. அவனும் வேடிக்கையாய் என்னைப்"பெண்டாட்டி"என்றழைப்பான். அவனுக்குங் கோபாலனுக்குஞ் சமவயது. ஒரு நாள் அவனுங்கோபாலனும் ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் வாசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடையசந்தோஷத்தையும், சிரிப்பையும், அவர்கள் சில பாகங்களைக் கோபத்தொனியிலுஞ், சிலபாகங்களை இரக்கத்தொனியிலுஞ், சிலபாகங்களை உரத்துப் பிரசங்கிப்பதுபோலும், வாசிப்பதையும்; சிலசமயங்களில் அப்புஸ்தகமெழுதினவரைப்பற்றிப் புகழ்வதையும் பார்த்து, நான் திறந்தவாயுடனும் விரித்தகண்களுடனும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் கொஞ்சம் நிறுத்தினவுடன் "என்னவாசிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். உடனே நடேசன் சொன்னதாவது:—"நீங்களும் பெண்களென்றிருக்கிறீர்களே! நன்றாய்ச் சட்டி சுறண்டுவீர்கள். அதற்குத்தான் பிரயோசனப்படுவீர்கள். பெண்ணென்றிருந்தால் 'ஐடா'வைப்போலிருக்கவேண்டும். ஓ! ஐடா! ஐடா!! சாவித்திரி! நானினிமேல் உன்னைப் 'பெண்டாட்டி' என்று கூப்பிடமாட்டேன். நீயும் 'ஐடா' வைப்போலானால்தான் நானுன்னைக்கலியாணஞ் செய்துகொள்வேன்." என்று என் முதுகில் தட்டினான். அவன் கலியாணம் என்று சொல்வது வேடிக்கையாகத் தானென்று எனக்குத்தெரியும். ஆனால் அவன் வழக்கம்போல் அழையாமல், 'சாவித்திரி' யென்றழைத்தது என் காதுக்கு விநோதமாயிருந்தது. எனக்குத் தன்னையறியாமல் துக்கமுண்டாயிற்று. மணம்புரிந்திருந்த புருஷனை யிழந்ததுபோல் நினைத்தேன். அடங்காத்துக்கத்துடன், " 'ஐடா' வென்றா லென்ன?" வென்று கேட்டேன். அதற்குநடேசன் பதிற் சொன்னதாவது:—

"ஓராசனுக்கு 'ஐடா' என்றொரு புத்திரி யிருந்தாள். உன்னைப்போலிருக்கும் பொழுதே யவளை அயல்தேசத்து இராச புத்திரனுக்குப் பிற்பாடு கலியாணஞ்செய்து கொடுப்பதாக அவ்வரசன் வாக்குக் கொடுத்திருந்தான். உன் அத்தை யெனக்குச்சொல்வது போலன்று. கள்ளச்சிறுக்கி! உன்னை யெவன் கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறானோ? ஒருவன் வருகிறவரையுமாவது நான் 'பெண்டாட்டி' யென்று கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் 'ஐடா' வைநிச்சயமாக அவ்விராச குமாரனுக்கே கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 'ஐடா' கல்வியில் தேர்ச்சியடைந்தாள். தக்கவயது வந்தவுடன், அக்கலியாணத்துச் கிசையாமல், பெண்பிள்ளைகளைப் புருஷர்கள் தங்கள் அடிமைகளைப்போல் நடத்துவதை வெறுத்து, அவ்விழிவான நிலைமையினின்றும் மாதர்களை விடுவிக்கும் பொருட்டு ஓர் சர்வகலாசாலை யேற்படுத்தினாள். அப்பள்ளிக்கூடத்துக்குள் புருஷர்களை விடுகிறதேயில்லை. வாத்தியார்வேலைமுதல் நிலம் உழுகிறவேலைவரையும், எல்லாவற்றையும் பெண்பிள்ளைகளே பார்த்துவந்தார்கள். ஆனால் அவ்விராசகுமாரனோ பாலியமோகத்தால் வருத்தமடைந்து வேறுவழியின்றி, இரண்டு சிநேகிதர்களுடன் பெண்வேஷம் பூண்டுகொண்டு, கற்கவிரும்பினாற்போல் அப்பள்ளிக்கூடத்துக்குட் சென்றான். 'ஐடா' வைக்கண்ட மாத்திரத்தில் அவன் ஆசைஅளவின்றிப் பெருகிற்று. கடைசியாய் மூவர்களுடைய பாசாங்கும் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் வெளியே துரத்தப்பட்டார்கள். அதன்பின் 'ஐடா' வைத் தொந்தரவு செய்ததற்காக, அவளுடையசகோதரர்புரிந்தசண்டையில், இவ்வரசகுமாரன் காயங்களால் மூர்ச்சித்தான். வெட்டுண்டவர்கள் பள்ளிக்கூடத்துக்குள் எடுத்துக்கொண்டு போகப்பட்டு, அங்கேயே சொஸ்தப்படுத்தப்பட்டார்கள். இராசகுமாரனை 'ஐடா'வே சொஸ்தப்படுத்தினாள். 'ஐடா'தான் புருஷரை முற்றிலும் பிரித்தது இயற்கைக்கு விரோதமானதென்றும், பெண்களின்நிலைமையை விருத்திசெய்யவேண்டியது முக்கியமாயிருந்தாலும்,அதன்பொருட்டுக்காதலைப்பழித்தல்சரியல்லவென்றும், பெண்களின் நிலைமையை விருத்தி செய்யாமல் புருஷர்கள் மாத்திரம் விருத்தியடைவது முடியாத காரியமென்றும், அக்காலத்தில் தான்அறிந்தாள். அவ்விராசகுமாரன்பிழைக்கும்பொருட்டு அவனுக்கு ஓர் அமிர்த சஞ்சீவி கொடுத்தாள். அதென்னவெனில், 'ஐடா' அவனைக்கலியாணஞ் செய்து கொண்டாள். பெண்டாட்டி! நான் சொல்லுகிறது அவ்வளவு நன்றாயிராது. இங்கிலீஷில்வாசித்தால் இக்கதையின் அழகு வெளிப்படும். இந்த ஜன்மத்தில் நீயிதைப்போன்றபுஸ்தகங்களின் இன்பத்தை யநுபவிக்கப் போகிறதில்லை. நீ கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்று விசனத்துடன் சொன்னான்.உடனே நான்:—"தமிழே தெரியாதே. நீங்கள் சொல்லிக் கொடுக்காவிட்டால் எங்களுக்கு எப்படித்தெரியும்?" என்றேன். அதற்கு நடேசன்:—"இன்று முதல் நீ படிக்கிறதாயிருந்தால் நான் சொல்லித்தருகிறேன்," என்றான்.

கோபாலன்:—"நடேசா! நேற்று நீ 'சிறுவர் சங்கத்துக்கு வரவில்லையே. 'பெண்கல்வி'யைப் பற்றியோர் தர்க்கம் நடந்தது. பெண்களைக்கற்பித்தால் அவர்கள் கடிதமூலமாய்ச் சோரநாயகர்களைத் தேடுவார்களென்றும், தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கமாட்டார்களென்றும், வீட்டுவேலை செய்யமாட்டார்களென்றும், உத்தியோகஞ்செய்யப் போகாதவர்களுக்குப்படிப்பு ஆவசியகமல்லவென்றும், நம்முடைய பாட்டியார்கள் படிக்கவில்லையென்றும் கணபதி வாதாடினான். அதற்கு நீ யென்ன சொல்லுகிறாய்?"

நடேசன்:—"ஓகோ! அப்படியா? நானில்லாமற் போனேனே. நான் சொல்வதைக் கேள். பெண்டாட்டி! நீயுங்கேள். கற்றிருந்தாற் சோரநாயகர்களைத் தேடுவார்களென்பது வீண்பேச்சு. தங்கள்நாயகர்கள் மேலிஷ்டமில்லாப்பெண்கள், மூடர்களாயிருந்தால் ஒருவேளை வேறு புருஷர்களைத்தேடுவார்கள். ஆனால் சரியாய்க் கற்றுணர்ந்தவர்கள் ஒரு பொழுதும் அப்படிச் செய்யமாட்டார்கள். கல்வியும் நாணத்தைப் போல் ஓர் கவசமாய் விடும். அன்றியும், எழுதத்தெரியாத ஒரு குறையினால் மாத்திரம் வேறு நாயகனைத் தேடாமலிருக்கும் மனைவி யிருந்தென்ன? இறந்தென்ன? அது வீண் முகாந்தரமே. கற்றிருந்தால் வீட்டுவேலை செய்யக்கூடாதா? தன் வீட்டில் வேலைசெய்தல் ஊழியமாகுமோ? அவ்வெண்ணம் அற்பப்படிப்பைச் சேர்ந்தது.கல்வி பணஞ் சம்பாதிக்கும்பொருட்டுத்தானென்பது மூடத்தனம். கல்வி பணத்திலுஞ் சிறந்ததல்லவா? அன்றியும்,புத்திரர்கள் சிறந்த புத்தியுள்ளவர்களா யிருக்கவேண்டுமோயின் தாய் தந்தையர்களும் அப்படி யிருந்தாலன்றோ சரி? பாறையின் பேரில் நெல்விளையுமோ? உழுது உரமிடப்பட்ட நிலமன்றோ வேண்டும்?" என்றான்.

கோபாலன்:—"சரி: மற்ற முகாந்தரங்களுக்கு என்ன சொல்கிறாய்?"

நடேசன்:—"பெண்கள் கீழ்ப்படிய மாட்டார்களென்பது வீண். சரியான காதலிருந்தால் அவ்வெண்ணமே யுண்டாகாது. அவர்களென்ன அடிமைகளோ? இருவர் மனமும் ஒத்தாலன்றோ சரி! அதற்குக்கல்விமுக்கியமானது.அதில்லாமலுண்டாகும் கீழ்ப்படிதல் பயத்தினாலும், வழக்கத்தினாலு முண்டாவதே. மனவிருப்பத்தினா லுண்டாவதன்று. புருஷனும் தக்கவனாயிருக்க வேண்டும். நேசமிருந்தால் மற்றவையெல்லாம் தானேவரும். நமது பாட்டியார் படிக்கவில்லை யென்பதைக்கேட்க எனக்குச் சிரிப்பு வருகிறது. முற்காலத்திற் பெண்கள் கல்வித் தேர்ச்சியடைந்திருந்தார்க ளென்பதற்கு அநேக ஆதாரங்க ளிருக்கின்றன. அப்படி யில்லாவிட்டாலுந் தானென்ன? முன்னோர்கள் மூடர்களா யிருந்தால் நாமும் அப்படியே யிருக்கவேண்டுமோ? இதென்ன புதுமை!

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது."

என்று குறளிற் சொல்லியிருப்பதாக நம் தமிழ் வாத்தியார் அன்று சொல்லவில்லையா? அது பெண்களுக்கும் பொருந்தாதா? அவ்வெண்ண மிருந்தால் 'விருத்தி'யென்ற சொல்லே வேண்டாம்" என்றான்.

அன்று முதல் நடேசன் எனக்குத் தமிழும் கணக்கும் கற்பித்து வந்தான். அது கூடாதென்று என் அத்தையம்மாள் முரண்டவில்லை. முதலில் படிப்பது வருத்தமா யிருந்தது. கோபாலன், "சாவித்திரிக்கு மூளையில்லை. அதற்குப் பதிலாய்க் களிமண்தானிருக்கிறது." என்று அடிக்கடி சொல்லுவான். நான் சரியானபடி பாடஞ்சொல்லா விட்டால் அவனுக்குக் கோபம்வந்துவிடும். புஸ்தகத்தை யெறிந்து விட்டுப்போய் விடுவான். ஆனால், நடேசன் அப்படிச்செய்கிறதில்லை. வெகு பொறுமையுடன் சொல்லித்தருவான். அவனுக்குக் கோபமேவராது. நானிவ்விதமாய்ப்படித்து வந்தேன்.

[இவ்வதிகாரத்தில் கூறியவற்றை நான் அவ்வயதிலேயே முழுதும் உணர்ந்ததாகக்கொள்ளக்கூடாது. பிற்பாடு பலமுறை கேட்டுணர்ந்தவற்றைத்தா னிப்பொழுது எழுதுகிறேன்.]

சாவித்திரி.

தமிழ்மொழி வளர்த்தல்.

அல்லது

தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள்.

(33-வது பக்கத் தொடர்ச்சி.)

மூன்றாவது, இக்காலும் உலகத்திற்கு மறைபொருளாக இருந்துவரும் பழய அரிய தமிழ்க்கிரந்தங்களை அச்சியிட்டு வெளிப்படுத்தல். இது ஒரு பெரிய முக்கியமான விஷயம். இதில், நம்மவர் அங்கங்கே சிறிது சிறிது முயற்சித்து வரினும், எடுக்கவேண்டிய அளவிற்கு உழைப்பெடுக்கவில்லையென்று தெரியவரும். சென்னையில் சரவணப்பெருமாள் ஐயர் முதலியோரிருந்து தமிழ் அச்சுக்கூடங்கள் ஸ்தாபித்தது முதல் திருக்குறள்முதலிய அநேகம் தமிழ்நூல்கள் உலகத்தில் வெளிவந்திருப்பினும், அவைபோல்வன இன்னும் அநேக நூல்கள் வெளிவராதிருக்கின்றன. உதாரணமாக, தமிழ்ப் பஞ்சகாவியங்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்கிற நூல்களில் சிலநாளுக்கு முன் சிந்தாமணியும், சிலப்பதிகாரத்தில் புகார்காண்டமும் தவிர, சிலப்பதிகாரத்தில் மற்றைய விரண்டு காண்டமும், மற்றமூன்று காவியங்களும் இன்னும் வெளிவராதிருக்கின்றன. இந்தக்காலத்தில் அவைகளே மாயாமல் இருக்கின்றனவோ இறந்தொழிந்தனவோ என்பதே நமக்குஐயப்பாடாகஇருக்கின்றது.

தமிழிற் சிறந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒன்றுமட்டும்தமிழ்மொழியை இரக்ஷிக்கத் துவஜங்கட்டிய செந்தமிழ் வள்ளலாகிய மகா-௱-௱-ஸ்ரீ. சி. வை. தாமோதரப்பிள்ளை அவர்களால் கரையேற்றப்பட்டது. மகாகவியாராகிய ஔவையாரின் பிரபந்தங்களில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, உலகநீதி, பந்தனந்தாதி ஆகிய இவ்வளவு மாத்திரமே அச்சிட்டுக் கண்டோமேயன்றி, இன்னும் அருந்தமிழ்மாலை, அசதிக்கோவை, நான்மணிக்கோவை, நன்னூற்கோவை, தரிசனப்பத்து முதலிய பிரபந்தங்கள் இன்னும் வெளியேறியபாடில்லை. அவைகள் எங்கு அகப்படுமோ, அதுவும் அறிவுக்கு எட்டவில்லை. மதுரைக்கடைச்சங்கத்து வித்வான்கள் இயற்றிய அரிய நூல்கள், எவ்விடத்தில் அகப்படுமோ, அல்லது, அவ்வளவும் வாழ்வகன்றனவோ அறியோம். இதில், எட்டு வித்வான்கள் செய்த பத்துப்பாட்டு மாத்திரம் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராயும், தமிழுக்குச் சலியாத பரிபாலகராயும் இருக்கும் மகா-௱-௱-ஸ்ரீ வே. சாமிநாதய்யர் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு நச்சினார்க்கினியாருரையுடன் இப்போது அச்சிடப்பட்டு வருகிறதாகக் கேள்விப்படவே, தமிழ் பாஷாபிமானிகள் அனைவருக்கும் உள்ளமும் உடலும் குளிர்ந்தன. இன்னும், மற்றைய ஆயிரக்கணக்கான பிரபந்தங்களெல்லாம் எப்போது வெளிவரும்? நாம் இப்படித் துயின்று கொண்டிருந்தால் எப்படி வெளிவரும்? அநேக வீடுகளில் அநேக ஏட்டுக் கிரந்தங்கள் இருக்கின்றன. அவை, செல்லரித்துப் புழுதிபடிந்து, இருட்டு நிலவறைகளிற் சிறைப்பட்டும், வருஷமொருவட்டம் சரஸ்வதிபூசை யன்றையதினம் மாத்திரம் (அதுவும்சந்தேகம்) வெளிச்சம் இன்னவாறு இருக்குமென்று கண்டும், கிடந்துமடிவதை நாம் போய்ப்பார்த்தால் வயிறெரியக் காணலாம். அந்நூல்களை இயற்றியோர் இப்போது எழுந்துவருவாராயின், இப்படி அந்நூல்களைத் தபிக்கவிட்டோரையும் அதேவிதமாய்வருந்திமடியும்படி சபிப்பார்களென்பதற்கு ஐயமில்லை. அவைகள்இன்னும் அந்நிலையிற்கொஞ்சநாள் இருந்தால், அக்கினிபகவானுக்கு அர்ச்சனை செய்யவே உதவும். அவைகளுக்கு அந்தச் சிறைச்சாலை, அல்லது, சித்திரவதைச்சாலையைவிட்டு என்றைக்குவிடுதலையாகிஜனங்களுடைய திர்ஷ்டியாகிய மோக்ஷசாம்பிராஜ்ஜியம் கிடைக்குமோ, அதை ஜகதீசனே அறிவார். அவைகளை அச்சுக்குக் கொடுக்கும்படி உடையோரைக் கேட்டால், அவர் "நமக்கென்ன தெரிகின்றது; அவை பழையகாலைக் கிரந்தங்கள்; இதுவரைக்கும் அவைகளை நாம்வெளியில் எடுத்ததேயில்லை; இப்போது அந்நூல்களை மனிதர் எடுத்துவாசிக்கும்படி அவைகளுக்கு என்ன கஷ்டதசை வந்துவிட்டது? சும்மா தூங்கட்டும்," என்றிப்படி உண்மைப் பாஷாபிமானிகளுடைய முகத்தில் கரியை வாரித் தேய்ப்பார்கள். அப்புறம், நாம் ஏன் இந்த அவதிக்குப்போனோம் என்று கேட்பவரும் சப்தநாடியும் தளர்ந்து போகின்றார்கள். வீட்டிலேயாவது அந்நூல்களை உடையோர் வாசித்திருப்பார்களோ வென்றால், அந்தப்பாஷையே தங்களுக்குத் தெரியாதது போலிருப்பார்கள். அப்படிப்பட்டவரைக் கொண்டு, உலகத்திற்கு என்ன சாதகம்? அவர்கள் இல்லாவிட்டால், உலகத்திற்கு என்ன பாதகம்? கனவான்களே, இப்படிக் காலாந்தரத்தில் யாருக்கும் உதவாமல் மறைந்தொழியும் கிரந்தங்கள் பல்லாயிரம்! பல்லாயிரம்! மனிதரிறந்தால் நமக்கு அவ்வளவு துக்கம் உண்டாகின்றதில்லை. கிரந்தமிறந்தால், என்றுந்துன்பமேயொழிய வேறில்லை. அது எப்படியென்னில், கம்பர் இறந்தது இப்போது உலகத்திற்கு ஒரு ஆச்சரியமாகவுமில்லை, துக்கமாகவுமில்லை. அவரியற்றிய பெருங்காவிய மிறந்திருந்தால், அந்தத் துக்கத்தை உலகம் பொறுக்குமோ? பொறுக்காது, பொறுக்காது. ஆகையால் நூலென்பது உயிரிலும் அதிகம்! எப்போதும் வேற்றுமைப்பட்டுழலுகின்ற உலகவியாபாரத்தில் அந்நூலென்பதும் அறிவாரற்று, ஆதரவற்று, மடிந்தொழியாமற் பாதுகாப்பது ஒவ்வோர் உண்மைத் தேசாபிமானியையும் பொறுத்த கடனென்பது இதனால் விளங்கும்.

இனி நான்காவது, தமிழில் நூதன கிரந்தங்களியற்றுதல், தமிழ்மொழியை அபிவிர்த்திக்குக் கொண்டுவர மற்றொரு மார்க்கமென்ற உண்மையைச்சிலமுகாந்தரங்களால் எடுத்துவிளக்கிக் காட்டுவோம். இது முக்கியவிஷயத்தில் முற்கூறிய பழயநூல்களை அச்சிட்டுவெளிப்படுத்தும் மார்க்கத்துக்கு இணையாகவே சொல்லலாம். எல்லாம் அறக்கற்றவர் உலகத்தில் ஒருவருமில்லை, அதுபோல எல்லா விஷயத்திலும் யாதும் அறிந்த ஜாதியாரும் உலகத்தின்கண் இல்லையென்பது உறுதியாகத் துணியலாம். இதனாலன்றோ சரஸ்வதியே இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறாள், என்று மேற்சொல்லிய உட்கருத்தை ரூபகாலங்காரப்படுத்தி நம்மவர்கள் சொல்லுகின்றார்கள். ஒருவிஷயத்தில் ஒருவன் அறிந்திருக்கும் அறிவைப்போல மற்றொருவன், வாசித்தவனாகிலும், அறிந்திராதது இயல்பே. அதுபோல ஒரு ஜாதியாரும் ஒரு துறையிலிறங்கிப் பாடுபட்டு அறிந்திருக்கும் அறிவு, மற்றொரு ஜாதியார் அதேவிதமாய் அதில் அறியாதிருப்பது உலக வியற்கையே. நமக்குள்ளாகவே, கம்மாளர் அடைந்திருக்கும் பயிற்சி, தட்டாருக்குள் இல்லை. தட்டார் அறிந்த பயிற்சி, கைக்கோளர் அறியார். இத்தொழில்கள் யாதொன்றும், மேற்சாதியார் அறிந்தபாடில்லை. இதுபோலவே உலகத்தில் ஒரு ஜாதியார், ஒரு விஷயத்தில், நன்றாய் அறிந்திருக்கும் உண்மைகளை, மற்றொரு ஜாதியார் அதே விதமாக, அத்தனை நன்றாய் அறிந்தவராய்க் காணப்படவில்லை. இப்போது பரலோகத்திற்கு வேண்டிய மத சம்பந்தமாகவும், மற்றும் அநேக சாஸ்திர சம்பந்தமாகவும், நம்முன்னோர் அறிந்திருந்த அறிவு மற்றெந்த ஜாதியாரிடத்தும் இல்லையென்பது, யாவரும் சம்மதிக்கற்பாலதாம். ஆகிலும், இப்போது, இகலோக நானாவித ஜடசாஸ்திரசம்பந்தமான (Science)விஷயங்களில் நம்மவர் மேற்கத்தியவரில் எவ்வளவோ தாழ்ந்தபடியில் நிற்கின்றாரென்பதும் வாஸ்தவமே. இப்படிச் சொல்லுவதனால், இது நமக்கு ஓர்குறைவுமாகவில்லை. புதிதாய்க் கல்விகற்பது ஒருவருக்கும் ஒருபோதும் குறைவாகாது. மனக்கலப்பு என்பது உலகத்தில் மனிதருக்குள்ளும், மனித ஜாதியார் ஒவ்வொருவருக்குள்ளும், பரஸ்பரம் இருக்க வேண்டுமென்றோ, கடவுள் இப்படி சர்வஞ்ஞத்துவம் ஒரு ஜாதியாரிடத்தும் விட்டுக் கொடுக்காமலிருந்தது! கல்லது, அது எப்படியாயினும், அங்கிலேயர் நம்மிடத்திலிருந்து அறியத்தக்க காரியங்கள் அநேகம் நம்மிடத்தி லிருப்பதுபோல, நாமும் அவசியமாய்க் கற்றுக்கொள்ளத்தக்க பல காரியங்கள் அவர்களிடம் இருப்பது இயல்பே. இது, முக்கியமாய், தேசசரித்திரப் பயிற்சியும், (Science) 'சைன்ஸ்' என்னும் பொதுப் பெயரையுடைய பல ஜடசாஸ்திரப்பயிற்சியுமேயாம். அவர்கள், இவ்விஷயத்தில், அபரிமிதமான பயிற்சி யடைந்திருப்பதற்கு, ரயில்வண்டியும், சமாசாரத் தந்தியும், அச்சுயந்திரமுமே போதுமான சாட்சிசொல்லும். இது விஷயத்தில் நம்மவரும் பயிற்சியடைய வேண்டியது அவசியமோ, இல்லையோ? நாம் அனைவரும் சந்நியாசம்பெற்றுத், துறவிகளாகப் பரலோக சிந்தை மாத்திரமேபூண்டு, காட்டுக்குப் போகாமல் நாட்டுக்குள் இருக்குமட்டும், அதுஅவசியந்தான். ஆகவே, அதைக் கற்றுக்கொள்ளுவதற்கு வழியெப்படி? அவர்கள் அவ்விஷயத்திலிறங்கி அறிந்த அறிவை, அதுபோல நம்மவரும் இறங்கிப் பாடுபட்டு அறிவது வருத்தமாயிருந்தால், அவர்கள் அவ்வறிவை யடக்கி எழுதியிருக்கும் அங்கிலேய நூல்களையேனும் நாம் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளுவதே வழி. அப்படிச்செய்வதற்குத் தமிழ்மொழி போதுமான விரிவுடையது தானென்று எனது எளிய அபிப்பிராயத்திற்றோன்றுகின்றது. சிலவார்த்தைகள் போதாவிட்டால் அவைகளுக்கு நம் வடமொழியிலிருந்து, பதங்கள் எடுத்துஉபயோகித்துக் கொள்வது சாத்தியமே. இப்படிப்பட்ட நூல்களை சுயபாஷையில் மொழி பெயர்த்துத் தருவது அங்கிலேயம் படித்த சுதேசிகளின் கடமையென்று முன்சொன்னோமே. இனி, இதிலொரு முக்கியமான விஷயம் இங்கு கவனிக்கத்தக்கதாக விருக்கின்றது. அதென்னவெனில், நம்முடைய தமிழில், தொன்றுதொட்டு, வித்வான்கள் கிரந்தசம்பந்தமாக எடுத்து வந்த நடை, செய்யுள் நடையேயன்றி, வாசகநடையன்று. ஆனால், (Science) சைன்ஸிலுள்ள உண்மைகள், மோனை, எதுகைகளாகிய தடைகளின்றித் துல்லியமாய்த் தெரிவிக்க வேண்டியனவாகையால், அதற்குச் செய்யுள்நடை ஒருபோதும்ஏற்காது; வாசகநடையே அதற்கு எவ்விதத்திலும் ஒத்துவருவது. செய்யுள்நடை, அறிவில் உண்மையைத் தனியாயுணர்த்தும் துல்லியம்பெறுதற்கு இடையூறுகளான கடினநடை; எதுகை, மோனை, அலங்காரம், தளையென்னும் பலவிதத் தடைகளை யுடையது. ஆகையால், இவ்விஷயத்தில் வசனகாவியங்கள் எழுதிப் பெருக்குவது எவ்வளவும் அவசியம். அப்படி எழுதும்போது, காலத்திற்கும், விஷயத்திற்கும் ஏற்றபடி, புதிதாய் வார்த்தைகள் பிறந்து நடைபெற்று, உலாவும். இது தமிழ் பாஷாபிவிர்த்திக்கு ஒரு பெருங்காரண மாகுமென்பது இதனால் விளங்கும். அங்கிலேயபாஷையும், மூந்நூறு வருஷங்களுக்கு முன் நமது பாஷை இப்போதிருக்கும் நிலையிலேயே யிருந்தது. அப்புறம் ஒவ்வொருகாலத்திலும் இருந்த ஷேக்ஸ்பியர், (Shakespeare) மில்டன், (Milton) அடிஸன், (Addison) ஜான்ஸன், (Johnson) மெக்காலே (Macaulay) என்ற இவர் போன்ற பற்பல மகாவித்வான்களால், தாங்கள் எடுத்துக்கொண்ட விரிவான விஷயங்களுக்கு ஏற்ப, நூதன வார்த்தைகள் ஏற்பட்டுக் கொண்டதால்; கடைசியில் அது பாஷைவளர்ச்சிக்கு ஒரு பெரும் சாதனமாய், அவ்வங்கிலேயம், இப்போது, எப்படிப்பட்ட கருத்தையும், எள்ளுக்காய் பிளந்ததுபோல; சரிதுல்லியமாய் உரைப்பதற்கு, ஏற்ற பாஷையாகிவிட்டது. இப்படியாக, கிரந்தகர்த்தர்களே பாஷை வளர்ச்சிக்கு மூலகாரணர்கள் ஆகின்றார்கள். கடற்கரை மணலுக்காவது கணக்குச் சொன்னாலும் அங்கிலேயர் எழுதிய கிரந்தங்களுக்குக் கணக்குச் சொல்ல மாளாது. இப்போதும் அங்கிலேயத்தில் வருஷமொன்றுக்கு; குறைந்த பக்ஷம், அவர்கள் (80,000) எண்பதினாயிரம் புதிய கிரந்தங்கள் அச்சிட்டு வெளிப்படுத்துவதாக உத்தேசக்கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது! கல்வி இப்படியல்லவோ இருக்கவேண்டும்! நமது தேசத்தில் ஒரு புஸ்தகம் பதிக்கவே எத்தனை பாடு படுகின்றோம்? வார்த்தையில் மட்டும் வெகுநீளமாய் நம்மிடத்தில் எல்லாம் இருக்கிறதென்று வம்புபேசியும், 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' போல் நமது முன்னோர் பெருமையை மாத்திரம் தேனொழுக மொழிந்துகொண்டும் இருந்துவிட்டாற் போதுமோ? பாட்டன் சீமானாய் இருந்தானென்பதனால் பட்டினிக்காரன் பசிதீருமோ? இது 'எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலக்கறி கடையச் சட்டியில்லை' என்ற பழமொழிக்கு இலக்காகின்றது! இது

நிற்க, இனி அப்படிக் கிரந்த காவியங்களெழுதும் கிரந்த கர்த்தர்களை யாதரிப்பதே,

தமிழ் பாஷாபிவிர்த்திக்கு ஐந்தாவது சாதனமாக இங்கு எடுத்துக் கொள்ளப்படும். முன்னர் நாம் பாஷா வளர்ச்சிக்கு, கிரந்த கர்த்தர்களே மூல காரணர்கள் ஆவார்களென்று சொன்னோமே. இப்போது செடிக்கு உரம்போடுவது, பழம்பறிக்க வழி தேடுவதாவதுபோல் புலவரை யாதரித்தல் பாஷாபிவிர்த்திக்குத் துணைக்காரணமென்று எளிதிற்றெளிந்து கொள்ளலாம். நமது தமிழ்ப்புலவர்களை முற்காலத்தில் சேர, சோழ, பாண்டியராகிய அரசர்கள் தங்கள் தங்கள் அரண்மனையிலேயே இருத்தி, அவர்கள் இயற்றிய நூல்களை ஆதரித்தும் பெரும்புகழ் படைத்துவந்தார்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அதிற் பாண்டிய ராஜன் விசேஷமாய் மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் ஏற்படுத்தி வித்வான்களை யாதரித்ததும் உலகப்பிரசித்தம். ஆனாலும், அப்புலவர்கள் அந்தக்காலத்திலும் சாதாரண ஜனங்களாலேஆதரிக்கப்பட்டு வந்தார்களென்பதற்குச் சிறிதும் சாக்ஷியங்கள் கிடையா. அது, கல்வி அபிவிர்த்தி ஜனங்களுக்குள் எங்கும் சாதாரணமாக அப்போது பரவியிருந்ததில்லை என்ற சந்தேகத்திற்கு உறுதி கொடுக்கின்றது. மேலும், ஜனங்களுக்குள் கல்வி பரவுதலுக்கு இக்காலத்தில் இன்றியமையாத கருவியாகின்ற அச்சயந்திரம் போன்ற சாதனமொன்றும், அக்காலத்தில் இராமற்போனதும், புலவரை ஜனங்கள் ஆதரியாதிருந்ததற்கு மற்றொரு காரணமாய் நின்றது. இப்போது அங்கிலேய வித்வான்களின் நிலைமையும் தமிழ் வித்வான்களின் நிலைமையும் ஆராய்ந்தறிந்து அவைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அங்கிலேய வித்வான்கள், விசேஷமாய் ஜனங்களால் ஆதரிக்கப்படும், தமிழ் வித்வான்கள் அப்படி ஆதரிக்கப்படாமலும், இருக்கக்காண்கிறோம். இதற்குக் காரணம் அங்கிலேயத்தில் ஜனங்களுள் கல்வி பரவி இருப்பதும், நமக்குள் அப்படிக்கின்றியுமிருப்பதே. நமக்கோ முன் சொற்பமாகிலுமிருந்த அரசர் ஆதரவும் இப்போது அற்றுப்போய்விட்டது. அங்கிலேயத்தில் கல்வி எங்கும் பரவியிருக்கின்றகாரணத்தால் அங்கிலேய வித்வான்கள் தங்கள் வித்தையையே தொழிலாக எடுத்துக்கொண்டு, ஜனங்களையிட்டுப்பிழைத்தும், மேலும் அபரிமிதமான திரவியம் ஈட்டியும் வருகின்றார்கள். நமது தமிழ் வித்வான்களுக்கு, முன் அப்படிப்பட்ட சகாயமேதேனும் இருந்திருந்தால், கீழ்வரும்பாட்டு உலகத்தில் தோன்ற நிமித்தமில்லை:—

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தானெனக்குத்தான்
கொடுத்துத்தானிரக்ஷித்தானா
அல்லைத்தான் பின்னைத்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவி
யிற்றான் பண்ணினானே,"

என்றிப்படி ஒரு தமிழ்வித்வான், தான்பட்ட பசி வருத்தத்தில் சோறுகிடையாமல், ஏமாந்து அலறியிருப்பதைப்பாருங்கள்! இதற்கு, நாம் முன் சொல்லியபடி, ஜனங்களுக்குள் கல்வி எங்கும் பரவாமலிருந்ததேகாரணம். ஆகையால், மேலைக்கு இயற்றப்படும் நூதன கிரந்தங்களைப் பாடசாலைகளிலாவது பாடமாக ஏற்படுத்தியும், கூடியவரையில் ஜனங்களுக்குள் கல்விப்பயிற்சி மேன்மேலும் பரவச்செய்தும் வந்தால் இந்தப் பெருங்குறைதீர்ந்து தமிழ்வித்வான்களும் சரியானபடி ஆதரிக்கப் படுவார்கள். வித்வான்கள் ஆதரிக்கப்படாமலிருப்பதைக் காட்டிலும் ஒரு நாட்டுக்குப் பெருங்குறைவு ஒன்றில்லை; ஆதரிக்கப்பட்டால், அவர் தமக்குப் பெரும்புகழும், உலகத்திற்குப் பேரறிவும் விளைப்பரென்பதில், யாதொரு சந்தேகமுமில்லை. இனி, மேற்கூறிய இரண்டு விஷயங்களுக்கும் சகாயமாயிருந்து, தமிழ் பாஷாபிவிர்த்திக்குப் பிறிதோர் மார்க்கமாயிருக்கின்ற

ஆறாவது, தமிழ் அச்சுக்கூடங்களை முக்கியமுள்ள இடங்களிலெல்லாம் ஸ்தாபிக்கும் காரியத்தைத்தொட்டுச் சில எண்ணங்களை எடுத்துரைப்போம். தமிழ் அச்சுக்கூடங்கள் தென்னிந்தியாவில் நிலை பெறச்செய்து சற்றேறக்குறைய ஐம்பது வருஷமாகி விட்டது. இப்போது அவைகள் மூலமாக அனேகம் கிரந்தங்கள் அந்தகாரமென்னும் கடலிலாழ்ந்து மடியாமல், கரையேற்றப்பட்டன. அரிய பெரிய கிரந்தங்களும், முன்னைப்போல, மூலைகளில் முடங்கிக்கொள்ளும் வீட்டு வித்வான்களிடம் சென்று, சிடத்தொழில் புரிந்து, கெஞ்சிக் கேட்டுப் பகர்த்தியெடுத்து, தனக்கு மாத்திரம் படித்துக்கொள்ளும் சங்கடமெல்லாம் நீங்கி, சொற்பமான பணத்தொகை கைமாறுவதனால், அடுத்த புஸ்தகசாலையில் வாங்கி எளிதில் ஒவ்வொருவரும் தத்தமக்கே வாசித்துக்கொள்ளும்படியான சௌகரிய நிலைமையிலும் வந்துவிட்டன. படிப்பதற்கு முன்னமே புஸ்தகம் அகப்பட்டுக்கொள்ள வேண்டியதற்கு, முன் பட்ட பாடெல்லாம்ஒழிந்தது. எப்போது ஒருக்கால் ஒரு புஸ்தகம் அச்சயந்திர முத்திரை பதிந்து வெளிவந்து விட்டதோ, அப்போதே அப்புஸ்தகம் இனி ஒரு காரணத்தாலும், அழியாமலிருக்கத் தாம்பரசாஸனம் ஏற்பட்டதுபோல, அவ்வளவு உறுதியான நிலைமையில் வந்து விடுகிறது. பனிதனா ஒன்று கூட்டி, அங்கங்கே, ஆசிரியர்

மாணாக்கருக்கு உபதேசம் பண்ணுவதுபோல, பிரசங்க முதலியவைகளால் எடுத்துக் கூறவேண்டிய கஷ்டசாத்தியமான வேலைகளெல்லாம், வெள்ளைக்காகிதம் செய்து விட்டுப் போகின்றது. அதற்கு, மேற்படி பிரசங்கங்களைப் போலவன்றி, எத்தனைதரம் வேண்டுமென்றாலும் திருப்பித் திருப்பி உண்மை கிரட்டும்படியான அற்புதத்தன்மையும் இருக்கின்றது. எத்தனையோ ஆட்களை வைத்து, நீடித்தகாலம் உழன்று, பிரதிகள் பகர்த்தி எடுக்க வேண்டியதெல்லாம் போய், அற்பநேரத்திற்குள், ஆயிரமாயிரமாகப் பிரதிகளை, படம்பிடித்தது போல் உண்மையாயும், நட்சத்திரங்கள் பதித்ததுபோல் அழகாயும், எடுத்துக்கொள்ளும்படியான நன்மையெல்லாம் கிடைத்து விட்டது. இவ்வளவு பெருமைகளை எல்லாம் கொடுக்கக்கூடிய அச்சயந்திரங்களை, இத்தென்னிந்தியாவில், இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் பற்பல முக்கியமான இடங்களிலெல்லாம் நிலைநிறுத்தி, புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும், மழைபோல எங்கும் வாரி இறைத்துவிட்டால், ஜனங்களுக்குள் கல்வியபிவிர்த்தி யாவதற்குத் தடையென்ன? அந்தஅச்சயந்திரங்களையிட்டு எத்தனைபேருக்குப் பிழைப்பும், எத்தனை காரியங்களுக்கு அநுகூலமும், உண்டாகின்றனவென்று நினைத்துப்பாருங்கள்! அவை சொல்லிலடங்கா. ஆகையால், கனவான்களே, இத்தகைய அச்சயந்திரங்களை எங்கும் நிலைபெறச்செய்தல் எவ்வளவும் அவசியம்! அவை யொவ்வொன்றும் தமிழ்பாஷையாகிய திவ்ய ஆலயத்தைத் தாங்கும் ஒவ்வொரு தூணாகும்! இது செல்வப்பேறும், தர்மசிந்தனையுமுடைய கனவான்கள் யாவரும்செய்யத்தக்கதே. இலாபம்விரும்புவோர்க்கு இது பெருத்த இலாபம்கொடுக்கக்கூடியது; அறிவுடையோருக்குப் பெரும்புகழ் விளைப்பது. அனேக தர்மங்கள் நடத்துகின்ற பேருக்கு இது ஒரு பெரிதா? இது ஒரு பெரிய தர்மமல்லவா? என்னைக்கேட்டால், இதினும் மேம்பட்டதர்மம் மற்றொன்றில்லை யென்பேன். ஏனென்றால், நமக்கு பரலோக சாம்பிராஜ்ஜியம் கிடைக்கச் சாதனமாகும் மதவிஷயங்களும், அறவழிகளும், இகலோகசம்பந்தமான பொருளும், இன்பமும், இன்னபடி யென்பதை உலகத்தோர் அனந்தம் பேருக்கு, சொற்பநேரத்தில் உணர்த்தும் தன்மையும், அதைச்சார்ந்த பேருக்கு வேலைசெய்து பிழைக்கும் வழியைக் கொடுக்கும் சுகிர்தமும், பொருந்திய வகைகளில் இதுவே முந்தியிருப்பதாதலால், இதற்கு மிஞ்சியதர்மம் மற்றொன்றும் இல்லையென்று ஐயமறத் துணியலாகும். கல்வியில்லையேல், உலகமேயில்லையென்கலாமே. இதுநிற்க இனி,

ஏழாவது, தமிழ்ப்பத்திரிகைகள் உதித்து நடைபெற்று, தமிழுலகத்திலெங்கும் உலாவிப்பரவி வருவது, தமிழ் பாஷாபிவிர்த்திக்கு ஒரு பெரும்சாதனமாயிருப்பது பற்றி, இப்போது சிறிது கூறுவோம். சமாசாரப்பத்திரிகைகளால் ஒரு நாட்டுக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் அளவிறந்தன. ஐரோப்பிய நாடுகளில் இவைகளாலுண்டாகும் அநுகூலங்களைத் தேர்ந்துபார்த்தால், அந்நாடுகள் இப்போது அடைந்திருக்கும் நாகரீகமும், ஆக்கமும், செல்வாக்கும், பெரும்பான்மையும் இப்பத்திரிகைகளாலே வந்ததென்று ஐயந்திரிபறச் சொல்லலாம். அவைகள் முகமாக, சகலமான மத, சாஸ்திர, ராஜாங்க, வித்தியாபிவிர்த்தி, சமாசார விஷயங்களும் பொதுஜன நன்மைக்குரிய மற்றெல்லாக் காரியங்களும் அன்றாடு நடந்துவரும் சங்கதிகளும், உலகத்தில் எத்தனை தூரம் அகல இருப்போருக்கும், எளிதில் உடனே புலப்படுத்தப் படுகின்றது. சீமையில் ஒரு சமாசாரப்பத்திரிகைக்கிருக்கும் செல்வாக்கு ஒரு சர்க்காருக்கிருப்பது போலிருக்கின்றது. இத்தகைய பத்திரிகைகளில், எவ்விஷயங்களையும் பற்றி, எல்லாவித அபிப்பிராயங்களும், அச்சந்தவிர்த்து வெளியிடும் சுதந்தரப்பேறு இருக்கின்றபடியால், அவ்வவ்விஷயங்களின் உண்மைகள் அரிசியைச்சாவிபுடைத்தெடுப்பதுபோல எடுக்கப்பட்டு விளக்கமுறுகின்றன. பெரியவர் கொள்கையும், சிறியவர் கொள்கையும், உயர்ந்த கேள்வியும், சாதாரணக்கேள்வியும், மேன்மக்கள் இயல்பும், கீழ்மக்கள் ஒழுக்கமும், தத்துவப்பொருள்களும், இலௌகிக நடபடிகளும், வேடிக்கைக்கூத்தும், உலக இயற்கையில், செய்கையில் என்னென்ன உண்டோ அவ்வளவும், உள்ளது உள்ளபடி, பக்ஷபாதமின்றி, உலகத்தோருடைய அக்கண்ணுக்குப் பத்திரிகை மூலமாகத் தோன்றி, அவைகளில் உண்மையும் உத்தமமும் தெரிந்தெடுக்கப் படுகின்றன. அதனால், அறிவும் விர்த்தியாகி விசாலிக்கின்றது, பாஷையும் செழித்து வளர்ந்தோங்குகின்றது, திரவியமும் அபரிமிதமாய் ஈட்டப்படுகின்றது. ஒரு அங்கிலேயப் பத்திரிகைக்கு வருஷமொன்றுக்கு, சுமார்-௭௰-லக்ஷம் ரூபாய் வரும்படியிருக்கிறதாகக் கேள்வி! அந்நாடு இந்தியாவில் பத்திலொருபங்கே விஸ்தாரமாகிலும் அங்கு-௩௲- (மூவாயிரம்) பத்திரிகைகள் பிறந்து உலாவுகின்றன! இந்தியதேசம் முழுதும் சேர்ந்தும், முந்நூறு பத்திரிகைகளுக்கு மிஞ்சியிருக்கவில்லை; அம்மூவாயிரம் பத்திரிகைகளுக்குக் கையொப்பங்கள் எத்தனைகோடியிருக்கலாமென்று ஊகித்துப்பாருங்கள்! பாரிஸ்பட்டணத்தில், ஒரு தினசரிப்பத்திரிகைக்கு, பத்துலக்ஷம் கையொப்பக்காரர் உண்டாம்! தமிழ்நாட்டில் உயர்ந்த பத்திரிகைக்குக் கையொப்பம் 1500-க்கு மிஞ்சவில்லை. இப்படி ஆயிரக்கணக்காயும் லக்ஷத்தொகையாயும் மேற்றிசையில் அடிபடும் பத்திரிகைகளுக்கு வரும்படித்தொகையும் எவ்வளவிலென்று நினைக்கவுமொண்ணாது. இன்னுமொன்று, அப்படி

திராதிபருக்கு எத்தனை சிப்பந்திகளேற்பட்டு, எத்தனைபேருக்குப் பிழைப்பு உண்டாகின்றது? பத்திரிகையில் வரும் பணவருவாயிலும், ஜனங்களுக்குள் அவைகள் முகிமாய்ப் பரக்கும் அறிவுவருவாயே அதிகமாயிருக்கும். இது இப்படியானால், -௩-கோடி ஜனங்கள் -உ௰௫- கோடிஜனங்களை அடக்கியாளும் வல்லமை பெற்றிருக்கும் அற்புதத்தின் மூலகாரணம் அறிவுவிர்த்தியேயென்று புலப்படவில்லையா? பத்திரிகையென்பது அவ்விடத்தில் கல்விகற்றோரெவர்க்கும் (அதாவது நூற்றுக்கு சுமார் தொண்ணூறுபேர்; இவ்விந்தியாவில் நூற்றுக்கு ஐந்துபேர் மாத்திரமே யென்று தெரியவருகிறது) தாங்கள் உண்ணும் உணவுக்குத் துல்லியமாயிருந்து, அதுகிடையாதபோது, அவர்கள், பசியாற உணவுகிடையாதவர்போல, ஏங்கி இடுக்கண் அடைவார்களாம். சோறு உடம்புக்கு உணவாவதுபோல, பத்திரிகைமனசுக்கு உணவாகின்றது. இதில் இரண்டாவதையே அவர்கள் பெரிதாக எண்ணுவார்கள். பத்திரிகையெடுத்தெழுதுவோர் அவ்விடத்தில் சர்க்கார் உத்தியோகத்தை ஒருபொருட்டாயெண்ணார்கள். பத்திரிகாசிரியரைக் கண்ணியம் செய்வதுபோல், அங்கு ஜனங்கள்உத்தியோகஸ்தரைக் கண்ணியம்செய்யார்கள். ஜனங்களுக்குள் பத்திரிகைக்கிருக்கின்ற செல்வாக்கு உத்தியோகஸ்தருக் கில்லாததனாலும், அங்கு ஜனங்களே அரசாக்ஷிக்கு முதற்காரணர்களாய் இருக்கின்றமையாலும், பெரும்பான்மை, பத்திரிகைகள் எடுத்துக் கூறுகின்றபடியே, ராஜாங்க விஷயங்களும் ஒழுகப்பெறறு வருகின்றன. புதிதாக என்ன உண்மைகள் கண்டுபிடிக்கப் பட்டாலும், அவை உடனே பத்திரிகைகளிற்றோன்றி உலகப் பிரசித்தி பெறுவதனாலே, அது மேலைக்கு அவ்வுண்மைகளைக் கொண்டு, ஜனங்களிற் புத்திகூர்மையுடையோரால் தம்புத்தி செலுத்தப்பட்டு, புதிதாக அவைகளுக்கு மேலான உண்மைகளும் கண்டு பிடிக்கப்பட, ஏதுவும் சௌகரியமும் உண்டாக்கி விடுகின்றது. இது இப்படி யானால். மனிதர் அறிவு மேன்மேலுந் தழைத்தோங்கி வளருகிறதற்குத் தடையென்ன? அது எத்தனை பேருக்கு அநுகூலம், எத்தனை காரியங்களுக்கு அநுகூலம்? இத்தகைய நன்மைகளையெல்லாம் நமது இந்திய நாட்டாரும் அடைய வேண்டியது அவசியமோ? இல்லையோ? ஆனால், தமிழ்ப் பத்திரிகைகளின் தொகையும் அவைகளின் கையொப்பத் தொகையும் இதனுடன் எடுத்துச் சொல்லலாமென்றால் வெட்கம் மேலிடுகின்றதே! இது யாருடையகுற்றம்? தமிழ்ப்பத்திரிகாசிரியருடைய குற்றமா? அன்று, அன்று. அவர்கள் யாதுசெய்வார்கள்? தாங்கள் கையிலிருந்த பணமெல்லாம்போட்டு, கைநஷ்டம் பிடித்தாவது, சுதேசப் பொது நன்மையையேகாடி அகோராத்திரம் உழைக்கின்றார்கள். ஜனங்களுடைய ஆதரவல்லவோ பத்திரிகைக்கு உயிர்நிலை? பத்திரிகையாகிய உடம்பு, ஜனங்கள் ஊட்டிய உணவு போலல்லவோ உழைக்கும்? வயிற்றைப் பட்டினிபோட்டால், தேகஉறுப்புகள் ஆடுவதெங்கே? தனவான்களே! பணப்பையை இன்னும் இறுக இறுக முடியுங்கள்! ஒரு முடிப்புக்கு ஒன்பதுமுடிப்புக் கட்டுங்கள். உலகம் க்ஷேமமடையும். போகிறபோதும் நிரம்பக்கையிலே கொண்டு போகலாம். உலகம் கெட்டுப்போனாலும் கண்ணையிறுக மூடிக்கொள்ளலாம். உங்களை யொருவரும் கேள்வி கேட்பாரில்லை. சதிரும், பாணவேடிக்கைகளும், திருடரும், அநியாயவாதிகளும், பட்டப்பேரும் பணத்தையெல்லாம் அகப்பட்டமட்டும் அள்ளிக்கொண்டு போகட்டும். அவைகள்தான் இந்தியா தேசத்தை இறுதியில் கைதூக்கிவிடப்போகின்றது! பொதுநன்மைக்கும் கல்விக்கும் மாத்திரம் பணத்தைச் சிதறி விடாதேயுங்கள்! காரியம் கெட்டுப்போகும்! தமிழ்பாஷை எக்கேடு கெடட்டும். தாய் பட்டினி யிருக்கும்போது தங்கப்பல்லக்கிலேறும் நீதியைக்கைவிடவேண்டாம். நடக்கட்டும்! நடக்கட்டும்! காரியத்திற்குவர, இனியாவது, மேற்படி கூத்துக்களைக் கைவிடுத்து, நீர்வளம், நிலவளம் பொருந்திய இந்தப்பரதகண்டத்தில் இனிக் கல்விவளமும் செழிக்கும்படி செய்யவேண்டிய பொறுப்பான கடன் உங்கள்மேல் இருக்கிறதென்ற உண்மையை உற்று உணர்வீர்களோ? இறுகிய பணப்பையைச் சற்றேனும் நெகிழ விடுவீர்களோ? பொது நன்மைக்கு உள்ளமிரங்கிச் சற்றேனும் வாஞ்சை வைப்பீர்களோ? அப்படிச்செய்தால், நாம் எண்ணிடும் காரியமெல்லாம் கைகூடுமென்றும், தங்களுக்கு நீடுழிவாழும் புகழுடம்பும், இப்பரதகண்டத்திற்குக் கல்விபெருக்கும், செல்வப்பெருக்கும் ஒத்துக்கூடினவாழ்வும், லபிக்குமென்றும், பெரியோர் சொல்லுவதை இங்கு எளியேனும் சொல்லுகின்றேன். பின்னது உங்கள் சித்தம்போலும் தெய்வகிருபை போலும் நடக்கும். நான் முன் எடுத்துச்சொன்னதிலிருந்து அத்தகைய நன்மைகளை யெல்லாம் கொடுப்பதற்கு ஒரு முக்கியகருவியான பத்திரிகைகளை இனி நம் தமிழ்பாஷையிலும் வளரச்செய்வதும், தமிழ்ப்பத்திரிகைகளைத் தருவித்து ஜனங்களை வாசிக்கத் தூண்டுவதும், மிகவும் அவசியமான காரியமென்று யாவரும் அங்கீகாரம் செயற்பாலதே. அதனால், தமிழ்பாஷையும் விர்த்தியடையு மென்பதில் ஐயமொன்றில்லை.

(இன்னும்வரும்)

தி. லக்ஷ்மணபிள்ளை.

சிறுவர்க்கானபக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

என் அருமை நண்பர்களே! இப்பக்கத்தைச் சீர்படுத்தி யச்சிடும் வேலை என்னதாக நானொப்புக்கொண்டிருந்தும் சென்ற சஞ்சிகையில் என்பேர் வழக்கம்போல் இப்பக்கத்தின்கீழ் காணப்படாமலிருந்ததை உங்களில் பலர் கவனித்திருப்பீர்களென்று எண்ணுகிறேன். சென்றமாதம் எனக்கிருந்தவேலைத் தொல்லைகளோடு தேக அசௌக்கியமும் சேர்ந்து கொண்டதால் உங்களுபயோகத்துக்காக நான் சேர்த்துவைத்த சிலவிஷயங்களை விவேகசிந்தாமணி பத்திராசிரியருக்கு அனுப்பி என்வேலையையும் அவரே பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். இந்த மாசமுழுவதும் மாயாண்டிபொழுது பெரும்பாலும் வெளியூர்கள் சுற்றுவதிலேயே போயிற்று.

வெளியூர்சுற்றிச் சென்னைக்குத் திரும்பிவரும்பொழுதுபத்திரிகை பிரசுரமாகத் தயாராகும் காலமாகவிருந்தது. இருந்தாலும்இந்தவிசை உங்களுக்குவாசிப்பதற்கு இனியவிஷயங்க ளில்லாமற்போகவில்லை. மாயாண்டி இப்பொழுது முன்போல் ஒண்டிக்காரனாகவில்லை. தக்க சிநேகிதர்கள் சிலர் சேர்ந்திருக்கிறார்கள். பத்திராசிரியர் பெரியவித்வான்கள் பலரைக்கொண்டு அவர் பக்கங்களுக்கு எழுதச்சொன்னால் நமது பக்கத்துக்கு எழுத நமக்குள்படித்த சிநேகிதர்களில்லையா? அப்படிப்பட்டவர்களைக் கொண்டு நாமும் என் பற்பலவிஷயங்களைப்பற்றி யெழுதச்சொல்லி நமதுபக்கத்தையும் சிறப்பிக்கச்செய்யலாகாது. இதை வாசிக்கும் சிறுவர்களில் அநேகர் பத்திரிகைக்கு எழுதச் சங்கோசப்படலாம். இவர்கள் சங்கோசத்தைவிட்டு வெளிவந்தெழுத வேண்டும். அவர்கள் உயர்ந்தவிஷயங்களைப்பற்றி மேலான நடையில் எழுதினால், நாம் நமக்கு உபயோகமாயிருக்கும் விஷயங்களைப்பற்றி யோசித்து நன்றாக எழுதிவருவோம். “குருவிக்குத்தக்கின இராமேசுவரம்” என்று கேட்டதில்லையா? ஆகையால் இதை வாசிக்கும் நமதுநண்பர்களெல்லாரும் சங்கோசத்தை விட்டுச், சிறுவர்களுக்குபயோகமான விஷயங்களைப் பற்றி யெழுதி யனுப்பிவரக்கோருகிறேன்.

நமது சபையில் சேர்ந்து நமது பக்கத்துக்கு எழுதிவர இசைந்த நேசர்களில் குட்டியண்ணு என்பவர் முதலானவர்.—இவர் நமது சிறுவர் சபையில் ஒரு மெம்பராயிருந்து அடிக்கடி நம்மோடு ஊடாடி உறவாடி விளையாடிவரச் சம்மதித்திருக்கிறார். இவர் பாடசாலைக்குப்போய் வருகிறவராயிருப்பதால் அடிக்கடி வேடிக்கையான கதைகளும் விசேஷமான சங்கதிகளும் என்னோடு சம்பாஷிக்கையில் சொல்வதுண்டு. வாய்வார்த்தையாக எனக்குச்சொல்லும் கதைகளைப்போல் நமது சிறுவர்பக்கத்துக்கு ஒரு நல்லகதை எழுத வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். அதற்கிசைந்து அவர் எழுதியனுப்பிய கதையும், கல்வாய்பாடசாலையில் படிக்கும் மாணாக்கராகிய நமது நண்பர் இன்னொருவர் கல்வி விஷயமாய் எழுதியனுப்பிய இன்னொரு கதையும் நான் ஊரிலிருந்து வருகையில் அச்சிடத் தயாராயிருந்தன. பத்திராசிரியர் பத்திரிகை வெளியிடக் காலமாய்விட்டதென்று அவசரப்படுகிறாராதலால் நான் மேலேவளர்த்தியெழுதி அதிகப்பிரசங்கியெனப் பெயரெடுக்காமல்மேற்சொன்ன இருகதைகளை மட்டும் ஒன்றின் பின்னொன்றாகக் கீழே பிரசுரிக்கிறேன்:—

ஒருவரும் சேர்வங்கோலனக் காரணமில்லை,

அல்லது

ஐந்து விரல்களுக்கும் நேர்ந்த போராட்டம்.

என் அன்புள்ள தோழர்களே!

நான் இந்தத்தடவை உங்களுக்கு என்னகதை சொல்லலாமென்று மயங்கிக் கொண்டிருக்கையில், நான் போய்க்கொண்டிருக்கும் பாடசாலையில் படிக்கும் வாலிபர்களில் கோவிந்தன் என்பவன் கணக்கில் கெட்டிக்காரனாகவும், கோபாலன் என்பவன் பாஷையில் ஸமர்த்தனாகவும் இருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் நடந்த வாக்குவாதம் இது:—

கோவிந்தன்.—என்னடா கோபாலா, நீ பிரதிதினமும் கொடுத்தகணக்கைச் சரியாய்ப்போடுகிறதில்லை. அதனால் நீ தினமும் அடிபடுகிறாய். என்னை வாத்தியார் அடிக்கிறாரா பார்த்தாயா? வீணான ஜம்பமட்டும் பண்ணிக்கொள்ளுகிறாய்; அதில் என்ன பிரயோசனம்?

கோபாலன்.—இருக்கட்டும் அடக்கடா; உன்னை வாத்தியார் தினமும் இங்கிலீஷ் பாடத்தில் பலகைமேல் நிற்கவைக்கவில்லையோ? அப்பொழுது நான் தானே எல்லாருக்கும் முன்னே இருக்கிறேன். வெளியிலே வந்து வெகு கெம்பீரமாய் “நான் எப்பிள்ளையமல் கலக்கஞ்சி குடிப்பேன்; வானத்தை வில்லாவளைப்பேன், மணலைக்கயிறாய்த்திரிப்பேன்” என்று வீண்விஸ்தாரம்படிக்கிறாய். வகுப்பிலேயோ, கடைசியிற்போய்ப் பலகைமேல்நிற்பதில்குறைச்சலில்லை. போதும் வாயைமூடடா.

இப்படி இருவரும், நான் தான் கெட்டிக்காரன் நான்தான் கெட்டிக்காரன் என்று தர்க்கித்துக்கொண்டிருப்பதை உபாத்தியாயர் தற்செயலாய்க் கேட்டுக்கொண்டு வந்துவிட்டார். உடனே அவர்: "ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு யோக்கியதை இருக்கும். எல்லாம் தெரிந்தவரும் இல்லை; ஒன்றும் தெரியாதவருமில்லை. ஆதலால் நீங்கள் இப்படி விவாதப்படக் காரணமில்லையென்று சொல்லி,

"முற்றுமுணர்ந்தவரில்லை முழுவதூஉம்
கற்றனமென்றுகளியற்க—சிற்றுளியால்
கல்லுந்தகரும் தகராகனங்குழாய்!
கொல்லுலைக்கூடத்தினால்."

"கடலேயனையம்யாம் கல்வியாலென்னும்
அடலேறனைய செருக்காழ்த்தி—விடலே
முனிக்கரசுகையில் முகந்துமுழங்கும்
பனிக்கடலு முண்ணப்படும்."

என்னும் இப்பாடல்களையுங்கூறி கோவிந்தனுக்கும் கோபாலனுக்கும் புத்தி சொல்லிப் போயினார். என் அருமைச்சிறுவர்களே! இதையொட்டி ஒரு விநோதமான சிறுகதை என்ஞாபகத்தில் வருகின்றது. அதை இங்கு எழுதுகிறேன்; கவனமாய் வாசித்துப் பாருங்கள்.—

ஒருகாலத்தில் வலக்கை விரல் ஐந்துக்கும் ஓர் விவாதம் உண்டாயிற்று.— "எந்தப்பொருளையும் பிடிப்பதற்கும் பிரயோகிப்பதற்கும் நான் இல்லாவிட்டால் மற்றவிரல்களால் முடியுமோ? என்னுடைய சகாயம் எல்லாருக்கும் வேண்டியிருக்கிறது. ஆதலால் நானே பெரியவன்," என்று அங்குஷ்டம் அதாவது பெருவிரல் அல்லது கட்டைவிரல் சொல்லிற்று. இதைக்கேட்டு தர்ஜனி (ஆள்காட்டிவிரல்) "வஸ்துக்களை இன்னது, இன்ன இடத்தில் இருக்கிறதென்று காட்டுகிறதும், பிறரைப் பயப்படுத்தி அதிகாரஞ்செய்து அதட்டி அடக்குவதும் நான்தானே. ஆகையால் நானே சிறந்தவன்." என்றது. அங்குஷ்டமும் தர்ஜனியும் சொல்லிய பேச்சைக் கேட்டுப் பொறுக்காமல் அநாமிகை (பவித்திரவிரல்) "துள்ளாதேயுங்கள் அண்ணன்மார்களே! சிரார்த்தம் முதலான வைதிககாரியங்களுக்குப் பவித்ரத்தை எனக்கிடுகிறார்களோ, வேறு யாருக்காவது இடுகிறார்களோ! நான்தானே வைதிககாரியங்களுக்கு உபயோகப்படுகிறவன். நீங்களெல்லாம் எந்தவைதிககாரியத்துக்கும் உபயோகப்படுவதில்லையே. நானே மேலானவன்" என்று அகங்கரித்தது. இது சொன்னவுடனே அதிக கோபங்கொண்டு கனிஷ்டிகை (சுண்டுவிரல்) "போதும், போதும் உங்கள் கதையைக் கட்டுங்கள்; 'ஆயிரம் யோக்யதையிருந்தாலும் அரைப்பணத்துப் பொன் வேண்டாமா?' உங்களுக்கு என்ன யோக்யதை இருந்தபோதிலும் என்ன? அலங்காரஞ்செய்வது எனக்கேயல்லாமல் உங்களுக்குச் செய்கிறார்களோ? விலையுயர்ந்தபொன்னாலும் இரத்தினங்களாலுமான மோதிரங்களை எனக்கு இடுவதனாலேயன்றோ உங்களுக்குக்கூட அழகுண்டாகின்றது. ஆதலால் என்பெருமை உங்களுக்குண்டோ? என்று நிமிர்ந்துநின்றது.

இப்படி நான்கு விரல்களும் பேசியதைக்கேட்டு நடுவிரல் (பாம்புவிரல்), சற்றுநேரம் யோசித்து, "மற்ற நாலுவிரல்களுக்குள்ள யோக்கியதைகளில் நமக்கு ஒன்றேனும் இல்லையே" யென்று தலைகுனிந்திருக்கையில், மற்றையவிரல்களெல்லாம் விவேகராஜனிடத்தில் தங்களுக்குள்ள வழக்கைத் தீர்த்துக்கொள்ளும்படி செல்ல, நடுவிரலும் அவற்றுடன் சென்று இராஜன்சமுகத்தில் போயிற்று. அப்போது பெருவிரல் தன்மேன்மையைச் சொல்லி நான்பெரியவன் என்றது. தர்ஜனி, தன்னுடைய பெருமையைக் கூறி, நான் தான் பெரியவன் என்றது. பவித்திரவிரல் தனது உயர்வைத் தெரிவித்து நானே பெரியவன் என்றது. சுண்டுவிரல் தன் சிறப்பைக் காட்டி நானல்லவோ பெரியவன் என்றது. முடிவில் நடுவிரல் அரசன் முன்சென்று, "இராஜனே, என்னிடத்தில் இவர்கள் கூறிய குணங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் நான் இவர்களெல்லாரையும் பார்க்கிலும் பெரியவன் என்பதற்குயாதும் சந்தேகமேயில்லை. சித்தமானால், இதோ நாங்கள் ஐந்துபேரும் வரிசையாக நிற்கிறோம்; யார்பெரியவன் என்பது தங்களுக்கே தெரியவரும்" என்று சொல்லி, ஐந்து விரல்களும் வரிசையாய் நிமிர்ந்து நின்றன. என்னதான் நிமிர்ந்து நின்றாலும் மற்றை நான்கு விரல்களும் நடுவிரலுக்குச் சரியாய் நீளமுடியுமா? "ஓங்கி ஓங்கிப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாமா?"

இப்படி ஐந்து விரல்களும் நின்றநிலையில் மற்றை நாலு விரல்களைப் பார்க்கிலும் உயர்ந்திருந்த நடுவிரலை நோக்கி, "அங்குஷ்டம, தர்ஜனி, அநாமிகை, கனிஷ்டிகை என்னும் நால்வரும் ஒவ்வொருகுணத்தால் பெரியவர்களாயிருக்கிறார்கள்; நீர் அப்பேர்பட்ட யோக்யதை ஒன்றுமில்லாமல் வெறும் பெரியவராயிருக்கிறீர். ஆகையினால் நீங்கள் இனிப்பகையில்லாமல் ஒற்றுமையாய் ஒருவர்கையில் அடங்கி ஒருவருக்கொருவர் உபகாரிகளாய் வாழுங்கள்" என்று விவேகராஜன் சமாதானப் படுத்தினான். கேட்டீர்களோ என் இளந்தோழர்களே! ஆகையால் நீங்களும் அந்தவிரல்கள் போலவே கர்வப்பட்டுக் கலகப்படாமல் பெரியோருக்குஅடங்கிஒற்றுமையாய்வாழுங்கள். நல்லது நான் உங்களிடத்தில் வந்து நேரமாகின்றது. நான் இப்பொழுது சொல்லியகதையைமறந்துவிடாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நடந்துவாருங்கள்; வருகிற தடவைக்கு ஒரு புதுக்கதை கொண்டுவருவேன்.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
[illegible]

கல்வி.

சிறுவர்களே! யான் ஒரு சிறு கதை சொல்லுகிறேன்; சற்றுக் கவனித்துக்கேளுங்கள்.

அளகாபுரி யென்னும் பட்டணத்தில் அதிபோகனென்ற ஓர் அரசனிருந்தான். அவனுக்கு, அமலனென்றும் அச்சுதனென்றும் இரண்டு குமாரர்களிருந்தார்கள். அவர்களிருவரையும் அவ்வேந்தன் ஓர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கல்வி கற்[illegible]தான். அவர்களி[illegible]ய அமலன் சரியாய்ப் பாடசாலைக்குப் போகாமலும், தாய் தகப்பன் அவர்கள் சொற்களைக் கேளாமலும், ஊரெங்கும் கெட்டவனென்று சொல்லும்படி நடந்து வந்தான். இளையவனாகிய அச்சுதன், எக்காலத்திலும் படிப்பின்பேரிலேயே கவனமாயிருப்பான். பாடசாலை நேரத்தில் வேறொன்றையும் கவனியான். உபாத்தியாயர் கற்பிக்கிறதைக் கருத்தாய் ஞாபகத்தில் வைத்து, தனக்குத் தெரியாதவைகளை உபாத்தியாயரைக் கேட்டுத் தெளிவான். பாடசாலை விட்டபிறகு, வழியில் தங்காமல், நேராக வீட்டுக்குப், போய்த் தனக்கு அன்றுகொடுத்த பாடங்களைக் கருத்தாய் வாசித்து, வீட்டிலுள்ளதைச் சாப்பிட்டு வாசிக்கத் தொடங்குவான். தான் மறுநாள் ஒப்பிவைக்கவேண்டிய பாடங்களை எல்லாம் நன்றாய் வரப்படுத்தி வைத்துவிட்டு, நித்திரை போவான். தான் படித்துத் தேறுகிறவரையில் வேறு வேலைக்குப் போகமாட்டேனென்றும், கல்வி விஷயத்தில் வேண்டிய செலவுகளைத் தடையின்றிச் செலவழிப்பது நல்லதென்றும் சொல்லுவான். "தக்கோனெனத்திரி" என்பதை யெப்போதும் நினைத்துக் கொள்வான். இப்படியே நாளடைவில் இவன் கற்றுத்தேறியபின், "மஹேந்திரபுரி" யென்னும் ஓர் பட்டணத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சகலகலாபோதினி) என்னுஞ் சங்கத்திற் சேர்ந்து பயின்றுகொண்டிருக்கையில், அங்குள்ள கல்விமான்கள் இச்சிறுவனுக்கு ஞானம், தீரம், சத்தியம், நீதி முதலிய இராஜலக்ஷணங்களிருக்கக் கண்டு, அப்பட்டணத்து அரசனாகிய, சஜ்ஜன பூஷணனுக்கு அச்சங்கதியைச் சொல்ல, அவ்வரசன், இப்பிள்ளையைத் தன்னரண்மனைக்கழைத்துச் சிலநாள் வைத்திருந்து இவனது சற்குணத்தை அறிந்தவுடனே, தன் குமாரத்தியாகிய "[illegible]" என்பவளை அவனுக்கு விவாகஞ்செய்வித்து, அநேக பட்டணங்களும், பூஷணங்களும் ஸ்ரீதனமாகக் கொடுத்து, மிகுந்த ஆரவாரத்துடனே சேனைகள்சூழத் தன் ஊருக்கனுப்பிவைத்தான். இதைக்கண்ட "அதிபோகன்" பூரணானந்தனாய்த் தன் மகனைத்தழுவிக்கொண்டு தன்னரசை அவனுக்குக் கொடுத்தான். மூத்தவனோ, வீணாக அலைந்து, கடன் பட்டுச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தான். அச்சுதன் அதைக்கேள்விப்பட்டுத் தன்தமயன் பட்[illegible] கொடுத்துவிட்டு, அவனைச் சிறையினின்றும் விடுத்தான். நேசர்களே! கல்வியினாலுண்டாகிய பயனைக்கற்றறிந்தவர்கள் அல்லாமல் என்னால் சொல்லத்தரமோ? அதினால் தான், ஔவையார் "இளமையிற்கல்" என்றார். "கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு" என்பது இந்தக்கதையினால் சரியென்று நமக்கு விளங்குகிறதல்லவா? நாம் சோம்பேறித்தனமின்றி இளமையிலேயே நன்றாய் வாசிக்கவேண்டும். இளமையில் தேடவேண்டியது கல்விப்பொருளும், முதுமையில் தேடவேண்டியது செல்வப்பொருளுமாம். அழுக்குத்துணியில் சாயம் நன்றாய் ஏறாது. அழுக்குப்பிடியாமலிருக்கும் வஸ்திரத்தில் மிக நன்றாய்ச் சாயம்பிடிக்கும். அதுபோல, நமது மனம் இளமையில் வேறு வேலையில் போகவில்லை. அப்போது வாசித்துக்கொண்டால் கல்வி மனதில் நன்றாய்ப்படியும். நாம் பெரியவர்களாய் நம்முடைய மனம் சமுசாரவிஷயத்தில் புகுந்தபின் நல்லவிஷயங்களைச் செய்யவும், கல்வி கற்றுக்கொள்ளவுமிடங்கொடுக்காது. 'கற்றோர் பெருமை கடலினும்பெரிது' என்ற பழமொழியைக் கவனித்து நடப்பது மன்றியில் மாட்சிமைபொருந்த விவேகசிந்தாமணிப்பத்திராதிபர் அவர்கள் பத்திரிகையில் நமக்கென்று ஓர் பக்கம்விட்டு நம்மை ஈடேற்ற முயற்சிசெய்து வருவதற்குக் கைம்மாறாக, நாம் அவர்களுக்கு மிகுந்த வந்தனஞ்செய்து, என்றும்மறவாத நன்றியுடையவர்களாயிருக்கவேண்டும்.

கல்வாய் அப்பர்ப்ளைமெரி பாடசாலை. கூடுவாஞ்சேரி போஸ்டு. 16—8—92.

உங்கள்நண்பன்,
வீராத்தினவர்ம பால
கிஷ்ணாரய்க்கர்
அப்பர்ப்ளைமெரிவகுப்பு
மாணக்கன்; கல்வாய்.

என் சின்னஞ் சிறு நேசர்களே! நமது நண்பர்கள் சொல்லும் புத்திமதியைக் கவனித்து, நீங்கள் கர்வம் சிறிதுமின்றிக் கல்விப்பொருளை ஆவலுடன் சேகரிப்பீர்களென்று நம்புகிறேன்.

[illegible]

விசேஷக்குறிப்புகள்.

நமதுபத்திரிகை கவர்ன்மெண்டார் இப்பத்திரிகையின் ஆசிரியர் செய்துகொண்ட விண்ணப்பத்துக்கிசைந்து விவேகசிந்தாமணிப் பத்திரிகையை யங்கிகரித்து இப்பத்திரிகைக்கு கவர்ன்மெண்டு உத்திரவுகள் சமாசாரங்களெல்லாமளிக்கஇசைந்து 1892ஹ ஆகஸ்டுமீ 9வ யிட்ட 807 [illegible] பிறப்பித்திருக்கிறார்கள். அடுத்த சஞ்சிகைமுதல் கவர்ன்மெண்டு சம்மந்தமான முக்கிய விஷயங்கள் நமது பத்திரிகையில் தெரிவிக்கப்படும்.

நமதுபத்திரிகைக்கு உதவி அறிவைப் பரவச் செய்யும் சபை ஏஜன்ஸி காரியதரிசியவர்கள் தேக அசௌக்கியார்த்தம் வெளியிற்போக நேரிட்டதில் தென்னார்க்காடு ஜில்லா மன்னார்குடி, சிதம்பரம், மாயவரம், கும்பகோணம் இவ்விடங்களுக்கு விஜயஞ்செய்து வந்தார். அங்கேயுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் மற்ற பிரதமஸ்தர்களும் அவருக்கு வேண்டிய உதவிசெய்து விவேகசிந்தாமணிப் பத்திரிகைக்குக் கையொப்பம்சேர்க்க தக்க ஆதரவளித்ததற்காக அவர்களெல்லார்க்கும் நாம் இருதய பூர்வமாக வந்தனமளிக்கிறோம். விவேகசிந்தாமணி அங்கங்கே சுற்றுப்பக்கங்களில் பரவிப் பலப்படச்செய்ய ஒத்தாசைசெய்து உபகரிப்பதாக வாக்களித்த கனவான்களெல்லாரும் சற்றுசிரமம் வகித்துழைப்பார்களானால் நமது பத்திரிகை வெகு சீக்கிரத்தில் பலப்பட்டு நிரந்தரமாய் நிற்கும் பாக்கியம் பெறுமென்று நம்புகிறோம்.

இச்சபை யேற்பாடு விஷயமாய் நாம் வெளியிட்ட வரலாற்றுப் பத்திரிகையை தமிழிற்கு உறைவிடமாய் விளங்கிப் பிரக்கியாதிபெற்ற திருவாவடுதுறை மடத்து தற்கால அதிபர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் அவர்கள் மகாசந்நிதானத்துக்கும் அனுப்பியதில் ஸ்ரீலஸ்ரீ தேசிகர் அவர்கள் இச்சபை யேற்பாடு அவசியமானதென்றும் இவ்வேற்பாட்டுப்படி பிரசுரிக்கப்படும் பத்திரிகைக்குப் பொருளுதவி செய்தாதரிப்பதாகவும் வாக்களித் திருந்தபடி அவர்களுடைய பெயர் நமது போஷகர்கள் ஜாப்தாவில் பிரசுரிக்கப்பட்டதை யாவரும் அறிவார்களே. அவ்வாக்குறுதிக்கிசைய ஷை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள் நமது விவேகசிந்தாமணிக்கு முதலுதவியாகப் பத்து காபிகளுக்குள்ள சந்தாதொகையளித்துபகரித்து பின்னுக்கு இன்னும் உதவிசெய்வதாக வாக்களித்ததற்காக அவருக்கு நமது சொந்த நன்றியறிதலையும் நமது சபை ஏஜன்ஸியாரது இருதயபூர்வமான வந்தனத்தையும் இதுமூலமாய்த் தெரிவிக்கிறோம். இதர மடாதிபதிகளும் ஜமீன்தாரர்களும் இவர் நல்லுதாரணத்தை மேற்கொண்டு நமது சபைக்குத் தக்க பொருளுதவி செய்தாதரிப்பார்களென்று கோருகிறோம். நமது ஜமீன்தாரர்களும் மடாதிபதிகளும் தலைக்கு 100, 50, காபிகள் வாங்கி கிராமாந்திரங்களில் நமது பத்திரிகையைக் கொஞ்சகாலத்துக்குப் பரவச்செய்து வருவார்களானால் அது நமக்கும் ஜனங்களுக்கும்தமிழ்ப்பாஷைக்கும் செய்த பேருபகாரமாகவிருக்கும்.

கிறிஸ்டியன் காலேஜ் மாக்ஸின். இப்பத்திரிகையின் ஆகஸ்டு மாதச் சஞ்சிகையில், ம-ா-ா-ஸ்ரீ, ஸ். ஸத்திய நாதன் M. A; L. L. B. என்பவர், உயிர்வாழ்க்கையைப் பற்றி யெழுதி[illegible]றார் நன்மைக்காகவும் உலக விருத்தியின் பொருட்டும் வாழுநாளைச் செலவிட்டாலன்றி உயிர்அநுபவிக்கத்தக்க தல்லதென்பதும், அப்படி உலகவிருத்தியை நாடும் முயற்சிகளெல்லாம் கடவுள் ஒருவர் உளரென்னும் நம்பிக்கையின்றிப் பயன்படா வென்பதும், அவர் கொள்கைகளாயிருக்கின்றன.

ம-ா-ா-ஸ்ரீ வி. நாகமய்யர் B. A. என்பவர் மலையாள தேசத்து மந்திரவாதங்களைப் பற்றி யெழுதுகிறார். ஒவ்வொரு சாதியாரும் யாதேனும் ஒருகாலத்தில் மந்திரவாதத்தில் நம்பிக்கை யுடையவர்களாயிருந்திருக்கிறார்களென்று சரித்திரங்கள் மூலமாய்க் காட்டியபின், இந்துக்களைப் பற்றிப் பேசும்பொழுது அவர் எடுத்துச் சொல்வதொன்றுகவனிக்கத்தக்கது. அதென்னவெனில், ஸர் மானியர் வில்லியம்ஸ் என்னும் பண்டிதர், நம்மதத்தைப்பற்றியபுஸ்தகத்தில் தற்காலத்தில் நம் தேசத்திலுள்ள தெய்வவணக்கத்தைப் பற்றிப் பேசுகையில், 100பேர்களில் குறைந்தது 90பேர்களுடைய பக்தியானது பயத்தினால் மட்டு முண்டாவதென்று எழுதி யிருக்கிறார். தெய்வ பக்தி யன்பையன்றோ ஆதாரமாய்ப் பெறவேண்டும்?

சமாச்சாரக் குறிப்புகள்.

ஆஸ்ட்ரேலியா தேசத்தில், விக்டோரியா மாகாணத்துச் சட்ட நிரூபண சங்கத்தார், மாதர்கள் தங்கள் விவாகச் சடங்குக்குச் சம்மதங் கொடுக்கப் பாத்திரமுள்ளவர்களாகும் வயதை 16க்கு உயர்த்தினதைப் பற்றி, அத்தேசத்துப் பத்திரிகைகளெல்லாம் கொண்டாடுகின்றன. 12வயதுக்கே முறுமுறுக்கும் ஜனங்களும் சில தேசங்களிலிருக்கிறார்கள்.

இந்தியாதேசத்து ரெயில்வேக்களில் வேலையிலிருக்கும் 250,598 ஜனங்களில், 250,000 சுதேசிகளிருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, 6-APR. 93, MADRAS.

"கற்றோர்க ளாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர் — மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

விவேக சிந்தாமணி.

129

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892ஹ செப்டெம்பர்மீ. இலக்கம். 5.

மரங்களின் வளர்ச்சி.

ஜீவஜாதிகளின் பொதுவான லக்ஷணங்களும் மரவர்க்கம் மிருகவர்க்கம் ஆகிய இரண்டு பெரும் பிரிவுகளின் சிறப் பிலக்கணங்களும் முன் சஞ்சிகையில் கூறி நிறுத்தினோம். இப்பெரும் பிரிவுகளின் உட்பிரிவுகளைப் பகுத்துப் பார்த்து அவற்றின் இலக்கணங்களையும் நிர்ணயிக்குமுன், அப்பிரிவுகளின் முதலாவ தான மரவர்க்கத்தின் பொது உறுப்புக்களையும் அவ்வுறுப்புக்களின் தொழில்களையும் சாமானியமாக நிச்சயித்துக் கொள்வது தகுதியெனக் காணப்படுகிறது.

2. மரவர்க்கத்திற்கு ஆகார சுவீகாரத்தால் வளர்ச்சியும் பிற்கிளையாக்க மெனும் பிரத்தியுத்பாதனமும் அல்லவா இன்றியமையாத இரண்டுதொழில் எனக் கண்டோம. இவற்றுள் முதலாவதாகிய ஆகாரம் உட்கொண்டு வளரும் வளர்ச்சி எவ்விதம் நடந்தேறுகிற தென்று இப்பொழுது ஆராய்வோமாக. மரவர்க்கமென்பதில் ஆல் அரசுமுதலிய உருவில் பெரியமரங்கள் மாத்திரமல்ல, ஜலத்திலும் சுவர்களிலும் கண்ணுக்கும் புலப்படாதபடி படர்ந்துவளரும் எவ்வளவும் சிறியனவாகிய பாசி முதலிய எப்பேர்ப்பட்ட புற்பூண்டு செடி கொடிகளும் உட்படுவதனால், இவ்விடத்தில் நாம் செய்யப்புகும் ஆராய்ச்சியானது சமதிருஷ்டியாய் இவையனைத்திற்கும் பொருந்தும்படி இருக்க வேண்டியதவசியம். அப்படி சமதிருஷ்டியாய்ப் பார்க்கும்போது மரவர்க்கத்தில் அகப்பட்ட எல்லாப்பதார்த்தங்களும் பொதுவாய் சூக்ஷ்மாந்திரம் அல்லது சிற்றறை (Cell) எனும் முதல் வடிவத்திலிருந்து தோன்றியவைகளாய்க் காணப்படும். கட்டிடங்களுக்குச் செங்கலெப்படியோ அப்படி மரவர்க்கங்களுக்குச் சிற்றறைகள். பொதுவா யிவற்றைச் சோதித்தறிய வேண்டுமானால், சிற்றுருவிளக்கி* (Microscope) எனும் கருவியின் துணையாலன்றிச் சாதித்தலரிதாம். அச்சூக்ஷ்மாந்திரங்கள் ஒவ்வொன்றும் ஒரு அங்குலத்தில் முப்பதிலோர் பங்கு முதல் ஆறாயிரத்தில் ஒருபங்கு வரையிலு ($\frac{1}{30}$-$\frac{1}{6000}$) மான மிகவும் சிறிய ஊடளவு கொண்டவைகளாயிருப்பதே, அக்கருவியின் ஆவசியத்தைக் காட்டும். இச் சிற்றறைக்குள் வழு வழுப்பான ஒருசத்து இருக்கின்றது. அதுவே ஜீவராசியனைத்திற்கும் மூலாதாரமான பொருள். ஒரு கணப்பொழுதும் அது ஒரே நிலைமையிலிருப்பதில்லை. நிரந்தரம் வேண்டும் வடிவங்களை யெடுத்துக் கொள்வதனால் நம்முடைய முன்னோர்கள் காமரூபியென்று வர்ணித்திருக்கும் வர்ணனை இதற்கே யமையும். கிரமசிருஷ்டிகூறும் வேதசாகைகள்† "அன்னமெழுந்தத தன் பின்னர்" என்று உத்பிரேக்ஷித்ததும் இதனை நினைத்தே போலும். இப்படி ஜீவகோடிகளனைத்திற்கும் மூல காரணமாய் விளங்கும் இச் சத்திற்குப் பிரதமபீஜம் அல்லது மூலசத்தை‡ (Proto-

* 'பூதக்கண்ணாடி' என்று சாதாரணமாய்ச் சொல்வார்கள்.
† (சாகை = வேதத்தின் ஓர் உட்பிரிவு)
‡ சத்தை = இருக்கை, Existence,

plasm) என்று பேர் கூறலாம். இம் மூலசத்தையைச் சுற்றிலும் மூடியிருக்கும் சுவர்க்கு மூலசத்தைமூடி அல்லது பிரதம பீசாவரணம் (Cell-walls) என்று பேரிடுவோயாக. 'மூலசத்தை' யும், 'மூலசத்தைமூடி' யும், கூடியே, முன் கூறிய சிற்றறை யல்லது சூக்ஷ்மரந்திரமாகிறது. இவ்வறைகள் பல வேறு வடிவங்கள் பெற்றிருப்பினும் சாதாரணத்தில் உருண்டையாகவும் கோழிமுட்டை வடிவமாகவும் அறுகோணுருவ மாகவும் இருப்பது வழக்கம். இவ்வறைகளின் பெருக்கமே மரங்களின் வளர்ச்சி. இவ்வறைகள் பெருகும் மார்க்கத்தை இனி விசாரிப்போம்.

3. மேல்கூறிய சிற்றறைக்குள் ளிருக்கும் வழுவழுப்பான 'மூலசத்தை'யின் அணுக்கள் அதன் நடுவில் நெருக்கமாய்ச் சேர்ந்து அந்தர்பீஜம் (Nucleus) எனும் பேரோடு 'மூலசத்தை'யின் பெருக்கத்தால் தாமும் பெருகத்தக்கனவா யிருக்கின்றன.

அப்படிப்பெருகுங்கால் சிற்றறையைச்சுற்றியிருக்கும் பிரதம பீஜாவரணம் எனும் சுவரின் உட்புறமும் பெருகி நீண்டு அந்தர்பீசத்தின் நடுவே ஊடுருவிச் சிற்றறையையும் அதனுள் அடங்கியிருக்கும் 'மூலசத்தை' யையும் இரண்டு படுத்தி விடுகின்றது.



I. இது தனிப்பட சுபாவமா யிருக்கும் சிற்றறை.
II. இது இரண்டாய்ப் பிளவுபடத் தொடங்கும் சிற்றறை.
III. இரண்டாகப் பிரிவுபட்ட சிற்றறை.

இங்கு காட்டியிருக்கும் படத்தில் இவ்வாறு ஒரு சிற்றறை இரண்டாக விகசிக்கும் தன்மையைக்கண்டு கொள்ளலாம். இப்படியே பிரிந்த சிற்றறைகளும் பெருகி, தனித்தனி மீண்டும் மீண்டும் இரண்டிரண்டாய்ப் பிரிவு படுவதே வளர்ச்சியின் மூலகாரணமாக விருக்கின்றது. இரண்டாகவே பிரிய வேண்டு மென்ற நியமமில்லை, மூலசத்தையின் ஆதிக்கியத்துக்குத் தக்கபடி நாலாகவும் எட்டாகவும் பிரியலாம். இச் சிற்றறைகள் பெருகும் மார்க்கம் மேற்குறித்த படத்தாலு மறியாதவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும்படி ஒருஉதாரணம் சொல்வோம். ஒரு எலுமிச்சம் பழத்தையே மேல்குறித்த ஒரு சிற்றறையாகப் பாவனை பண்ணினுல், அதனைப் புறமே பொதிந்திருக்குந் †தொலியே சிற்றறையின் சுவராகிய பிரதம பீசாவரணமாம். அப்பழத்திற் குள்ளிருக்கும் சாறு கோதுகளே காமரூபியென்று நாம்குறிப்பிட்ட மூலசத்தையாகும். அப்பழத்தை நறுக்கிப் பார்க்கும்போது அதனைப்பலவாய்ப் பகுக்கும் வெண்மையான இலேசுத் தொலிகளே பிரதம பீசத்தை ஊடுருவிச்சென்று பலவாக விபாகிக்கும் உட்சுவர்களாம். இப்படி இலேசான தொலிகளால் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு துண்டும் தனித்தனி வெவ்வேறு எலுமிச்சம்பழங்களாக உருண்டு திரண்டு உருக்கொள் வதில்லை. சிற்றறைகளோ என்ருல் அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு அம்சமும் மறுபடியும் வளர்ந்து தனித்தனி வெவ்வேறு சிற்றறைகளாக உருக்கொள்ளும். இங்கு பிரஸ்தாபித்த சிற்றறையும் அதற்குள் அடங்கியிருக்கும் மூலசத்தையும் அம்மூலசத்தை பெருகிப் பல சிற்றறைகளாக விகசிக்கும் மார்க்கமும், மரவர்க்கத்துள் புற்பூண்டு கொடி செடி இவையனைத்திற்கும் பொருந்துவன மாத்திரமல்ல, இதுபோலவே மிருகவர்க்கத்துக் குள்ளும் யானைமுதல் எறும்பீருள எல்லா உடம்பிற்கும் பொருத்தம் உடையனவே.

4. சமகுணமும் சமவடிவுமுடைய இச் சிற்றறைகள், பின்ன குணமும் பின்ன வடிவும் உடைய வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய் முதலிய வெளி யுறுப்புக்களாகவும் பட்டை, தடி காதல் முதலிய உள்ளுறுப்புக்களாகவும் உருக்கொண்டு விகசிக்கும் மார்க்கத்தைச் சாமானியமாக இனி விசாரிப்போம். இச்சிற்றறைகள் ஒன்றின்மே லொன்ருய் மணிகோத்தது போல் நிற்கும் காலத்தில் ஆவசியப்படுமிடத்து அவைகளைப் பிரிக்கும் இடைச்சுவர்கள் அழிந்து

† 'தொலி'—'தோலி' என்றும் வழங்குவதுண்டு.

போய் அவையெல்லாம் ஓரே துவாரமுடைய ஒரு சிறுகுழல் போலாவதுண்டு. இப்படி பல குழல்களாகத் திரண்டு, தன்மயப்பட்ட பல ரஸங்களின் போக்கு வரவுக்கு வழியா யமையும்போது அவைகளுக்கு ரஸவாகினி, நாளசங்கிலி அல்லது குழாய்க்கோவை (Vascular system) எனும் பெயருண்டாகின்றது. இக்குழாய்க்கோவைகளே அதிகரித்து நின்று தொலி முதலிய மிருதுபாகங்களாக மாறுபடுகின்றன. மேற்கூறியசிற்றறைகளி னுள்ளிருக்கும் 'மூலசத்தை'வேண்டிய இடத்து வற்றிப்போக அவற்றின் புறச்சுவர்கள் தம்முள் நெருங்கிக் கடினகுணம் பெறுகின்றன. இப்படி வன்மை பெற்ற புறச்சுவர்த் தொகுதிகள் ஒன்ருேடொன்று பொருந்தித் தடித்து நீளுங்காலத்தில் நந்து அல்லது நார் (Fibre) எனும் பெயர் பெறுகின்றது. இந்நாரடுக்குகள் (Fibrous tissue) வலுக்கவலுக்க மரத்தின் காடினிய *பாகமான காதல் முதலிய அம்சங்களாக உருக்கொள்ளும்.

இவ்விதமான மாறுபாடுகளொன்றும் அடையாமல் ஆதியிற்சொல்லி நிறுத்தியபடியே மூலசத்தை யடங்கிய சிற்றறைகள் தனித்தனியாகவும் கலந்தும் முன்னிருந்த நிலைமையை விடாமலே நிற்பனவுமுண்டு. இவற்றுள் சில சிற்றறைகள் தமக்குள்ளடங்கிய மூலசத்தையினிடையில்வர்ணகாரிகளான சில ரேணுக்களையுடைத்தாயிருந்து விசேஷமாய் இலைகளிடத்தில் காணும் பசுமை நிறத்தை விளைவிக்கின்றன. இப்படியே சுவை மணம்முதலிய பலகுண பேதங்களையும் வீரியங்களையும் தோற்றுவிப்பதும் இச்சிற்றறைகளுக்குள் ளமைந்து கிடக்கும்'மூலசத்தை'யின் §ரேணுபேதங்களேயாம்.

5. இவ்விதமாகவே தான் மரங்களின் எல்லா அங்கங்களும் சிற்றறை எனும் சூக்ஷ்மரந்திரத்திற்குள்ளிருக்கும்மூலசத்தையின் விகாஸ விகற்பங்களால் உண்டாகின்றன என்பது பிரத்தியக்ஷமாய் நிரூபிக்கக்கூடும். ஆனல் பூர்ணமாய் அப்படி நிரூபிக்க வேண்டு மெனில் அரியசாஸ்திர ஆராய்ச்சியும், சங்கேத மொழிப்பயிற்சியும், அசாதாரணமான சக்திவாய்ந்த சிற்றுருவிளக்கி முதலிய கருவிகளின் உதவியுமின்றி முடியாதாகலின் இங்கு இம்மட்டில் நிறுத்தவேண்டியதா யிருக்கின்றது. ஆயினும் மேற்கூறிய நாளசங்கிலி, நாரடுக்கு, தனித்தனியான விடு சிற்றறைகள், எனுமிவற்றை நன்ருயறிந்திருக்கவேண்டியது இனி விவரிக்கப்படும் சங்கதிகளை அறிந்துகொள்வதற்கு அத்தியாவசியகமா யிருப்பதனுல் அவற்றைக்கவனித்துத் தாரணைப்படுத்திக் கொள்வது பிரயோசனகரமாயிருக்கும். அழுகிக் காய்ந்து மேற்ருேலி நீங்கிய அரசிலையைப் பலருங் கண்டிருப்பீர்கள். அதை உற்றுப்பார்ப்பீர்களாகில் வலைபின்னியதுபோல் அதில் அழகுபடத் தோற்றுவதெல்லாம், அவ்விலைக்குள் ரஸம் பரவும்படி அமைந்து கிடந்த நாளசமூகங்களும் அவ்இலைக்கும் முக்கிய நாளங்களுக்கும் மாருவடிவம் கொடுத்த நாரடுக்குகளுமேயாம் என்பது புலப்படும். அழுகிக் கழிந்து போனவை யெல்லாம் இவ்விரண்டு வகுப்புக்களாகவும் மாறுபடாதிருந்து அவ்விலைக்குப் பசுமை நிறத்தைக் கொடுத்து வந்த விடு சிற்றறைகளே. அரளியிலையை இரண்டு மூன்று தினங்கள் நீரில் போட்டுவைத்து அதனுள்ளிருக்கும் விடு சிற்றறைகள் அழுகியழிந்த பிற்பாடு அவ்விலையை யெடுத்துப்பார்த்தால், மிகவும் அழகாய்ப்பின்னிக் கிடக்கும் நாளசமூகங்களும் இலைவடிவத்தை யுண்டுபண்ணின மிக்க லேசானவெளித்தொலியாம் நாரடுக்கும் நன்ருய்ப்புலப்படும். இதன் வெளிநாரடுக்கு மிகவும் பலமுள்ளதா யிருப்பதால் இதனுள் தங்கும் ஜலம் ஸ்படிக பாத்திரத்தில் இட்ட இரத்தினம்போல் பிரகாசித்துக்கொண்டு வெளியி லொழுகிப் போகாம லிருக்கும். பலபல பத்திரங்களையும் இப்படியே பக்குவஞ்செய்து பார்த்தால் அவற்றின் நாளக்கட்டுகளையறியும் சாஸ்திரப்பயிற்சிக்கு உபயுக்தமா யிருப்பதுமல்லாமல், மனதிற்கும் கண்ணுக்கும் களங்கரகிதமான பரமானந்தத்தை விளைவிக்கும் பொழுதுபோக்காகவு மிருக்கும்.

6. இதுவரையும் சொன்னவைகளால் மரவர்க்கங்களெல்லாம்சூக்ஷ்மரந்திரம் எனும்சிற்றறைகளாலும் அவற்றிலிருந்து தோன்றும் நாளசங்கிலி, நாரடுக்கு எனு மிருமுக்கியவிகற்பங்

* காடினியம் = மிருதுவின்மை.
§ ரேணு = அணு.

களாலும் ஆக்கப்படுகின்றனவென்றும், இச்சிற்
றறைகளுக்குள்ளிருக்கும் பிரதம பீசமென்ற
'மூலசத்தை'யின் பெருக்கமே அம்மரவர்க்கங்க
ளின் வளர்ச்சி யென்றும் நிரூபிக்கப்பட்டது.
அம் மூலசத்தை யெப்படிப்பெருக்கமடைகின்
றதென்பதை இனி யாலோசிப்போம். மூல
சத்தையைமூடியிருக்கும் சுவருக்கு ஒரு விசே
ஷகுணமுண்டு. அதென்னவென்றால், அச்சுவரி
னிருபுறமு மிருக்கிற சிலசில விசேஷதிரவியங்
களைத் தன்வழி மறுபுறம் புகுவித்துக் கலப்பித்
தலேயாம். இக்குணத்தால் ஒரு சிற்றறையில்
'மூலசத்தை' பெருகியிருந்தால் அதன் சுவர்
வழி அம்மூலசத்தையின் சில ரேணுக்கள்
அடுத்த அறைக்குள் பிரவேசிக்கும். ஆதலால்
ஒருவரியிலுள்ள சிற்றறைகளில் 'மூலசத்தை'
பெருகினால் அதுவே அடுத்த வரிகளிலுள்ள
சிற்றறைகளும் பெருகக் காரணமாகிறது. முதல்
வரியிற்றானே எப்படி பெருக்கம் நேரிடுகிற
தென்றால், மேல்கூறியபடியே அந்த வரியிலுள்
ள சிற்றறைச் சுவர்வழி வெளியிலிருக்கும் நீர்,
காற்று எனும் இவை யிரண்டிலுமுள்ள சில
பௌதிகங்கள் அந்தச் சிற்றறைக்குள் பிரவே
சிப்பதனாலேதான். ஆனால் சிற்றறைகளுக்குள்
ளிருக்கும் பதார்த்தங்கள் சுவர்வழியே வெளிப்
பட்டு அதிலிருக்கு மூலசத்தை குறையவுங்
கூடியதன்றோ என்றால் அப்படியாகாது. ஏனெ
னில், இரண்டு நெகிழ்ச்சியான பொருள்களுக்
கிடையில் இதுபோன்ற ஒரு சுவரிருந்தால்,
இவ்விரண்டினுள், பௌதிகக்கலப்பால் கனம்
கூடியதெதுவோ அதனிடத்திலேயே மற்றதன்
பிரவேசம் நேரிடுவது இயற்கை விதியாயிருக்
கின்றது. இதற்குச் சாதாரணமாய்ச் சொல்லு
கின்ற திருஷ்டாந்தம் என்னவென்றால், ஊத்
தாம்பெட்டியெனும் ஊதுபைக்குள் சொற்ப
நீரும் சீனியும் இட்டு வாயை இறுகக்கட்டி
சுத்தஜலத்தில் மிதக்கவிடுவோமானால், சுத்த
ஜலம் ஊதுபைக்குள் கிரமமாய்ப்புகுந்து அப்
பையை விரியச்செய்வதுமன்றி அதை வெடிக்
கச் செய்யினுஞ் செய்யும். ஊதுபெட்டியில்
சுத்தஜலத்தை யடைத்து சீனி யதிகமாய்க்
கலந்த ஜலத்திலோ தேனிலோ அதைவிடுவோ
மானால், ஊதுபைக்குள்ளிருக்கும் ஜலம் தன்
னிற் கனங்கூடிய ஜீனிரஸத்தாலும் தேனினு

லும் இழுக்கப்பட்டு பையும் வரவரச் சுருங்கி
விடும். மாங்காய், எலுமிச்சங்காய் முதலான
வைகளை உப்பிலிடும்போதும் உப்புக் குறைந்து
நீர் அதிகப்பட்டு அளவிற்கு மிஞ்சி யிருக்குமே
யானால், உப்பிலிட்டகாய்கள் நீருண்டு கனத்து
அழுகிப்போவதும், உப்பதிகப்பட்டு நீர்க் கனங்
கூடுமாயின் அக்காய்கள் தங்கள் நீர்ச்சத்தை
யை யிழந்து சுருங்கிக் கெட்டியாய் வெகுநாளி
ருப்பதும் யாவரும் அறிந்தவிஷயமே. இந்தக்
காரணத்தினாலேதான் உவர்நிலங்கள் விளையா
திருப்பதும். மலையாளத்தில் "வெள்ளூற்று" எ
ன்றபூமியில் தெங்குமுதலிய மரங்களுண்டாவ
தில்லை. இந்தப்பூமியில் ஜலம் ஓயாமல் பெரு
கியும் மரம் வளராதிருப்பதற்குக் காரணமென்
னவென்று யோசித்துப் பார்த்ததில், அந்தஜலத்
தில் இரும்புச்சத்தை மிகுதியாய்க் கலந்திருப்
பதால் அந்த ஜலத்திலிருக்கும் போஷணைத்திர
வியங்கள் தெங்கின்வேர் வழி உட்புகாமல்,
வேரிலுள்ள சத்தையே மேற்காட்டியவிதி யனு
சரித்து நீரில் பிரவேசிக்கின்றதெனக் காணலா
யிற்று. இப்படி நிரூபிக்கப்பட்ட இயற்கைவிதி
யை யனுஸரித்தேதான் மரங்களிலிருக்கும் பி
ரதமபீசமென்ற மூலசத்தை தன்னிலும் கன
ங்குறைந்த காற்று, நீர் இவற்றிலுள்ள சத்தை
களைத் தங்கள் சுவர்வழி உட்கொண்டு பெருக்
கம் அடைகின்றது.

7. சூக்ஷ்ம ரந்திரத்துக்குள் ளிருக்கும் மூல
சத்தை பெருகி அதனைச் சுற்றியிருக்கும் பிர
தம பீஜாவரணமெனும் சுவர்வழி அடுத்த சிற்
றறைகளுக்குள் ஊறிப் பரவுவதே பொதுவாய்
வளர்ச்சிக்கு ஏதுவாமென்றும், அம்மூலசத்
தையின் பெருக்கத்துக்குக் காரணம் தன்னைச்
சுற்றியிருக்கும் நீர், காற்றுமுதலியவற்றிலுள்ள
தக்க பௌதிகங்கள் ஊறுகாய் ஊதுபை முத
லிய திருஷ்டாந்தங்களால் நிரூபிக்கப்பட்ட
விதியின்படி சிற்றறைக்குள் பிரவேசித்து மூல
சத்தையோடு அபின்னமாய்க் கலத்தலே யாகு
மென்றும் இதுவரையும் கூறி நிறுத்தினோம்.
மிருகவர்க்கத்திலும் மரவர்க்கத்திலு மடங்கிய
ஜீவகோடிகளனைத்தின் வளர்ச்சிக்கும் முற்றி
லும் பொதுவாக இசையு மிலக்கணமிதுவே.
ஆனால் இவ்விதியின் பூர்ணமான அமைதி பாசி,
காளான் முதலான மிகவும் கீழ்ப்பட்ட-தரமான

சராசரப்பொருள்களிடத்து மாத்திரமே வெளி
ப்படையாய் விளங்கக்கூடிய நிலைமையி லிருக்கி
றது. இவற்றிற்கு மேலான புல் பூண்டு கொடி
செடி மரம் இவைகளிடத்தில் அமைந்துகிடக்
குஞ் சிற்றறைகள் பட்டை முதலியவற்றால்
பொதிந்துகிடப்பதனாலும், அதிக உயரமும் ப
ருமனும் விரிவுமுடைய கிளையாதிகளாகப் பர
ந்து நிற்பதாலும் அச்சிற்றறைகளுக்குள்ளிருக்
கும் மூலசத்தை நேருக்குநேராய் நீர், காற்று
இவைகளிலுள்ள பௌதிகங்களை இழுத்துட்
கொள்ளச் சத்தியற்றனவாய்ப் போவதனால்,
அந்த அந்தமரவினத்திற்குத் தக்கபடி ஆகார
ஸ்விகாரத்துக்காக வேர், இலையெனும் இரண்டு
விசேஷ உறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்
றன. இவற்றுள் வேர் தனது தாய்மரத்தை
நிலையில் நிறுத்துவதோடு, மண்ணிலிருக்கும்
தனக்குப் பிரயோசனந்தரும் பௌதிகங்களை
யும் நீரையும் இழுத்துட்கொள்ளுமென்பது யா
வருக்கும் தெரிந்ததே. ஆனால் எப்படி யவற்
றை உட்கொள்ளுகிறது என்பதைத் தெளிவா
யறிய விரும்புவோமாகில் கீரை வெண்டை
முதலிய யாதாவது ஒரு செடியின் வேர்களை
முறிவுபடாமல் பிடுங்கி யெடுத்து நீரில் அலம்
பிப் பார்க்கவேண்டியது. அப்படிப்பார்த்தால்
அச்செடியின் ஆணிவேரும், அதில் நின்று பல
வாய் வெடித்த பக்கவேர்களும், அப்பக்கவேர்
களிலிருந்து பலவாய் வெடித்த கிளைவேர்களும்,
கடைசியில் மயிரிழைபோல் மிகச் சிறியனவா
யும் வெண்மையாயு மிருக்கும் பொடி வேர்க
ளுங் காணப்படும். இப்பொடி வேர்கள்தாம்
உண்மையில் ஆகார சுவீகாரம்செய்வன. அவ
ற்றுளொன்றை யெடுத்துப்பார்க்கில், அதன்
கடைசிநுனியில், தொலியினால் பொதியப்படா
மல் மிக்க மிருதுவாயிருக்கும் ஒருதலைப்புக் கா
ணலாகும். அத்தலைப்பிலிருப்பது யாதொரு
பந்தத்துக்குள்ளு மகப்படாத சிற்றறையே.
சிற்றுருவிளக்கிக் கண்ணாடியால் பார்த்தால்
அச்சிற்றறைகளின் வடிவமுதலான விசித்திரங்
களைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு கொள்ளக்
கூடும். அவைகளுக்குள்ளிருக்கும் மூலசத்தை
தான், ஊதுபை ஊறுகாய்த் திருஷ்டாந்தங்க
ளால் விளக்கிய விதிப்படி, மண்ணிலும் ஜலத்
திலுமுள்ள பௌதிகங்களை யிழுத்துட்கொள்

ளுகின்றது. அப்படி யுட்சென்று தன்மயப்
பட்ட பௌதிகங்கள் வெகுதூரத்திலிருக்கும்,
தண்டு, கிளை, யிலை, பூ, காய் எனு மிவைகளைச்
சென்றடையவேண்டி யிருப்பதனால், அடுத்த
ஒவ்வொரு சிற்றறையிலும் புகுந்து போவது
தாமசமும் பிரயாசமுமாமெனக் கண்டு, அப்
பௌதிகங்கள் மரத்தின் சரீரமுழுதும் நேரே
வியாபிக்கும்படி நேரான சில பந்தாக்கள் ஏற்
படுத்தப்பட்டிருக்கின்றன. இவைதாம் நாம்
முன்கூறிய நாளசங்கிலி அல்லது குழாய்வரி.
இக்குழாய்கள் அந்தஅந்த மரத்தின் ஆகிருதிக்
கும் ஜாதிக்குணத்திற்கும் தக்கபடி. விரிந்தும்
சுருங்கியுமிருக்கும். எப்படியிருப்பினும் அவற்
றின் உற்பத்தி முன்காட்டியபடியே சூக்ஷ்மரந்
தரங்கள், மணிபோலொன்றன்மேலொன்றாய்க்
கோக்கப்பெற்று, இடைச்சுவரழிய, மத்தியி
லிருந்த துவாரங்கள் நிலைநிற்கச் சம்பவித்ததே
யாம்.

8. இப்படியே வாயுவிலுள்ள அம்சங்களை
யிழுத்துட்கொள்ளுவதற்குத் தண்டு கிளை முத
லாகிய பட்டை பொதிந்த பாகங்களுக்குப்
போதுமான சக்தியில்லாததனால், அத்தொழில்
நடந்தேறும்படி இலையாகிய உறுப்பு உண்டா
யிருக்கின்றது. பொதுவாக இலைகளின் மேற்
புறத்தில் இதற்காகச் சிறுசிறு துவாரங்கள்
அமைக்கப்பட் டிருப்பதுண்டு. அத்துவாரங்க
ளுள் காற்றும் வெயிலும் படவே, அவற்றுளி
ருக்கும் சிற்றறை நிவாஸமான மூலசத்தை,
வெயிலின் பிரேரணையால், காற்றிலிருந்து தன
க்கு வேண்டிய பௌதிகங்களை யுட்கொண்டு
தம்மிடத்திலிருக்கும் தமக்குத் தோஷகரமான
சில வாயுக்களை வெளியாக்குகின்றன. இதுவே
பொதுவாய் இலைகளின் தொழில்.

9. இவ்விதமாக இலையாலும் வேராலு முட்
புகுந்த பௌதிகங்கள் ரஸமாய்மாறுபட்டு நாள
தந்துக்களின் வழியாய் மரமெங்கும் வியாபித்
து அதனை வளர்த்துகின்றது. இப்படி வளர்வு
தும் நாம் முன்குறித்தபடி மூலசத்தையின் ஆ
திக்கத்தால் சிற்றறைகளிரண்டாய்ப் பிரிவுபடும்
மார்க்கத்தை யனுசரித்தே கிளைகளின் கடை
நுனிபெருத்து விகசிக்கின்றதன்றி வேறில்லை.

10. இப்படியெல்லாம் சோதனை செய்ததிற்
றால் நம்முடைய கொல்லையிலுள்ள செடி கொ

டிகள் ஒவ்வொன்றும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கும்! தேவேந்திரலோகத்திலுள்ள கற்பகாதிவிருக்ஷங்கள் இந்திராணிபோகம் அமிர்தபான முதலிய சிற்றின்பங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கக் கூடுமேயல்லாது இத்தகைய சிதானந்தம் விளைவிக்கத்தக்கனவோ யாதோ அறியோம்! ஒரு தும்பைச்செடியைப் பிடுங்கிப் பார்க்கினும் இவ்வகை யறிவுடையோர்க்கு, அதன் மூலகாரணமாகிய சூக்ஷ்ம ரந்தரமும் அதிலடங்கிய அற்புதமான மூலசத்தையின் வல்லபமும், அதுவேண்டியவழி, தானேஇரண்டுபடப் பிரிந்தும் அப்படியே பலவாய் விரிந்தும், முறையே நாடுக்கா யொருபுறமும் நாளதந்துக்களாய் மற்றொருபுறமும், விடு சிற்றறைகளாய் வேறொருபுறமுமாக முதலில் மாறுபட்டு, பிற்பாடு அந்தச்செடியின் சாதிக்குணத்திற்கேற்க,வேர், தண்டு, இலை, காய்களாக விகசித்து, அவ்வாறு விகசித்த சமஷ்டிவடிவாகிய அச்செடியின் சம்ரக்ஷணைக்காக அம்மூலசத்தையே பொடிவேர்களின் நுனியிலிருந்துகொண்டு மண்ணிலுள்ள பௌதிகங்களையும், இலையின் மேற்புறத் துளைகளிலிருந்துகொண்டு, காற்றிலுள்ள பௌதிகங்களையும் இழுத்து அம்மரத்தை யூட்டுவித்து வளர்க்கும் விசித்திரமும் இவ்விதம்நடத்தும் சித்விலாசமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரத்தியக்ஷப் படுவதினால் அல்லவா,

"பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச வாங்கே,
பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
பனிமல ரெடுக்க மனமு
நண்ணேன்"

என்று தாயுமானவர் அருளிச் செய்தனர்!

இத்தகையபேரின்பம் எங்கும் எளிதிற் பெறும்படியாக இருக்க அதனைத் தினைத்துணையேனும் நினைத்துப்பாராமல் "பொழுதுபோகவில்லை, பொழுதுபோகவில்லை" என்று மனோவேகத்தினும் கடுகியோடும் காலகதி ஏதோ தம்விஷயத்தில் தள்ளாடு நடையடைந்ததாகப் பாவனைபண்ணி, "வாழ்நாட் கலகாய் வயங்கொளிமண்டிலம்" [1] ஆகிய சூரியனை சவுக்கால்அடித்து விரட்டல்போல சூதாட்டமுதலிய போராட்டங்களிலும் புறங்கூறலாதி வெறும் பாவங்களிலும் முயன்று பயின்று தம் வாழ்நாளை வீணாக்குகின்றார்கள். இவ்வித பொழுதுபோக்கன்றோ கையிலிருக்கும் பாயசத்தைக் கவிழ்த்துவிட்டு முழங்கையை நக்கும் திறமை!

"தேன்கமழ் திரளையைச் சிந்திச் சந்தியால்
கூன்கையில் விழுந்துளி கொண்டதன்மை
யே." (2)

11. மாவர்க்கத்தின் இரண்டாம் தொழிலாகிய பிரத்தியுத்பாதன சக்தியைக்குறித்து இனியொரு சந்தர்ப்பத்தில் யோசிப்போம்.

பி. சுந்தரம்பிள்ளை. M. A.

[நீதிவாக்கியங்கள்.]

உண்மையில் பெருமைக்கு உரியவர் யார்?

உண்மையில் பெருமைக்கு உரியவர் யார்? அகந்தையும் பகையு மற்றவர் எவரோ, புலன்களை இழுக்கும் இன்பத்தினிடையினின்று சுத்தத் துறவியாய் நடப்பவர் எவரோ, பிறர் இகழுங்காலத்தும் தம்நாவைக்காப்பவர் எவரோ,பிறர் கெடுக்குங்காலத்தும் திரும்பக் கெடுக்காதவர் எவரோ, தாம் ஓரிடத்துமிரவாது உயிருள்ளவற்றிற்கெல்லாம் மிகவருந்தி உதவுபவர் எவரோ, தாய்தந்தையர்க்கு மகிழ்ச்சியும் உறுதியும் ஊன்றுகோலுமாயிருந்து நாளெல்லாம் ஓய்வின்றி உழைத்து நடப்பவர் எவரோ, விருந்தோம்பித் தம்மனத்தினின்றும் பொறாமையை அகற்றுபவர் எவரோ, வேதப்பிரமாணங்களை மிக்கபணிவோடு ஆராய ஆசையுடையவர் எவரோ, அகத்தூய்மையும்புறத்தூய்மையுமடைந்து பாபத்தைச் செய்யாதவர் பேசாதவர் எண்ணாதவர் எவரோ, பேராசைகொண்டு கெட்ட எண்ணத்திலும் பாவச்செய்கையிலும் தவறிச் செல்லாதவர் எவரோ,மனையை அலங்கரிக்கும் இனிய மனையாளைவிட்டு அலைந்துதிரியாத ஆசையையுடையவர் எவரோ, நியாயமானபோரில் பயத்தைத்துறந்து தீரமனத்தோடு இருப்பவர் எவரோ,அடுத்துவரும் மரணத்துக்கு அஞ்சாது மரணச்சுவாசத்திலும் உண்மையையே பேசுபவர்எவரோ,தம்சகோதரர் செவ்வையாய் நடப்பதற்கு வழிகாட்டும் பேரொளிபோன்ற நன்னெறியையுடையவர் எவரோ, எல்லோரையும் நேசித்து யாவராலும்நேசிக்கப்பெற்று ஒன்றுக்கும் பயப்படாது ஒன்றையும் பயமுறுத்தாது இருப்பவர் எவரோ, உலகத்துள்ளனவெல்லாம் தம்மைப்போல் அருமையுள்ளனவென்றும் தம் உறவிலும் மேலானவையென்றும் எண்ணுபவர் எவரோ, தமக்குரிய பெருமையைத் தாம் கொண்டாடக்கருதாது தம்பெருந்தன்மையால் பிறருக்கு உவகையோடு அளிப்பவர் எவரோ, வெகுளியும் பகையுமடங்கவும் கசந்திருக்கும் விரோதியும் சமாதானத்தை நாடவும் முயலுபவர் எவரோ, கடவுள்வழிப்பட்டு நியமத்திற்குள்ளடங்கி மனதார உண்மை நிலை தவறாது உழைப்பவர் எவரோ, அவரே மேலான பெருமைக்கு உண்மையில் உரியராவர்.

(மஹாபாரதத்திலிருந்துமொழிபெயர்க்கப்பட்டது.)

எஸ். நாராயணசாமி அய்யர்.

* மனோன்மணீயம். II.

மறுநாட்காலையில் அரண்மனைக்குக் குடிலன் வந்தவுடன், மனோன்மணியின் விவாகத்தைப் பற்றிச் சுந்தரமுனிவர் கூறியவற்றை யவனுக்குச்சொல்லி, அவன் ஆலோசனை யென்னவென்று ஜீவகன் வினவக், குடிலன், தான்மிகவும் மனமகிழ்ச்சி யடைந்ததாகப் பாவித்துத் தானும் அவ்விதமே யோசித்திருந்ததாகக் கூறினதுமன்றி,

"அறியார்
பலவும் பழிப்பர். நமக்கதி லொன்று
மில்லை. இன்றேதுதேவு வம்."

என்றான். அப்படிச் சொன்னதற்குக் காரணம் என்னவென்று ஜீவகன் கேட்கக், குடிலன், பிள்ளை வீட்டுக்காரரே முதன்முதற்கலியாணம்பேசவருதல்உலக வழக்க மென்று எடுத்துக்காட்டி, "ஆயினும், ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை?" என்று சாதுரியமாகக்கூறினனாக,ஜீவகன்அதற்குஇணங்காமல், ஓர் தக்கஉபாயஞ் செய்யும்படி குடிலனைக் கேட்டான். 'பாஷை, ஆசாரங்கள் முதலியவற்றால் தமிழ்நாடென்று விளங்கும் "நன்செய்*" நாடு, புருஷோத்தமவர்மனால் ஆளப்பட்டு வருகிறது; அது மிக்க வளமுடையது; அதை நம்வசம் விட்டு விடும்படி கேட்போமானால்,புருஷோத்தமவர்மனது குறிப்பறியலாம்; போருக் கெழுவான், அல்லது, விவாக மூலமாய்ச் சமாதானத்தை நாடுவான் ; இதுவே தக்க உபாயம்' என்று குடிலன் கூறினன்.

நம்தேசத்தார், எவ்விஷயத்திலும், உள்ளதையுள்ளபடி சொல்லாமற் கொஞ்சம் பெருக்கியே கூறுவர், என்று ஐரோப்பியர் குற்றஞ் சாட்டுவதுண்டு. தற்காலத்துத் தேசாபிமானிகளுங்கூட இதை ஏகதேச வுண்மையென்றுவது ஒத்துக்கொள்ளல் வேண்டியதாய்த்தானிருக்கிறது. நம்மவர்களில் அநேகர் சாதாரணமாய்ப் பேசுவது, அடிக்கடி, "கொங்கணியன் புலிகண்ட கதை" யாகவே முடிகிறது. இதன் உண்மையை நம் காவியங்களில் நன்றாய்க் காணலாம். இலக்கியத்தின் பண்பே அச்சாருபுடைத்தாயினும், நம் பாவலர்கள், அதை மிகவும் கெடுத்து விடுகிறார்கள். வள்ளுவரிலும் கம்பரிலுமே,

"செல்லாமையுண்டே லெனக்குரை: மற்றுநின்
வல்வரவுவாழ்வார்க்குரை." (பிரிவாற்றாமை.)

[வெந்
"விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினால்
துருகியதுடனேயாறிவலித்தது குளிர்ப்புனற."

முதலியவற்றைப் போன்றவை யோராளமாயிருப்பின், மற்றப் புலவர்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ ? இவ்வித அலங்காரங்களில்லாமலிருப்பதே, இந்நாடகத்துக்கு ஓர் பேரலங்காரமாகின்றது. ஆயினும், "நன்செய்" நாட்டின் வருணனையைச் சிலர் மட்டுக்குமிஞ்சினதாகப் பழிக்கலாம்: ஆனால் அது சந்தர்ப்பத்துக்குத்

(1) நாலடியார்

(2) பிரமகீதை.

* இந்நவீன நாடகம் சென்னை யூனிவர்ஸிடி சபையில் ஒருவரும் திருவநந்தபுரம் மஹாராஜா காலேஜில் நீதிசாஸ்திர பண்டிதருமாகிய பி. சுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூ 2. விவேகசிந்தாமணிக்கு முன் பணம் கட்டிய கையொப்பக்காரர்களுக்கு ரூ 1-8. குறைந்த விலைக்குக் கொடுக்கச் சில காபிகளே யுள்ளன. வேண்டியவர்கள் சீக்கிரம் அறிவைப் பரவச்செய்யும் சபை காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளல் வேண்டும்.
ப-ர்.

* தற்காலத்தில் 'நாஞ்சநாடு' என்று வழங்குகிறது.

தக்கதெனக் கொள்ளலுமாம். அன்றியும் முழுவதும் மட்டுக்கு மிஞ்சினதாக வில்லை: பின்வரும் பாக்கள் அந்நாட்டின் பயிர்வளத்தை வருணிக்கின்றன:—

"தூவி*யால் தம்உடல் நீவிடி†ற் சிரிக்கும்
சிறுமியரென்னவச் செழுநிலநங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனம் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பில்‡செல்வப்
பயிர்மயிர்சிலிர்த்துப் பல்வளம் நகுவள்.§"

அரசன் தான்கூறிய உபாயத்திற்கு உடன் பட்டவுடன், குடிலன், காரியம் சித்தியாவது தூதுவனுடைய திறமைக்குத் தக்கபடி யென்று சொல்லி, முடிவில், தன் சாதுரியத்தினால், தன்மகன் பலதேவனையே தூதுவனாக நியமிக்கும்படிசெய்துகொண்டான். நடேசனைத் தூதுவனாக நியமித்த சுந்தர முனிவரது புத்திக் குறைவை இருவரும் இகழ்ந்தானபின், குடிலன் தன்வீட்டுக்குச் சென்றானாக, அரசன் அவனைத்தன்மனதிற் புகழ்ந்து கொண்டிருக்கையில், சில பிரபுக்கள் வந்தார்கள். அவர்களுடன், அரசன் மாட்டு மெய்யன்புள்ளவனும், சத்தியவந்தனுமான நாராயணன் என்ற இராணுவவீரனும் வந்தான். அரசனும் பிரபுக்களும் குடிலனைப்புகழ்ந்தனராக, அவன்மெய்க்குணத்தை யறிந்த நாராயணன் மட்டும், குறிப்புகளால் அக்குணத்தை வெளிப்படுத்த முயன்றும் ஒன்றும் பயன்படவில்லை. பிற்பாடு யாவரும் செல்ல, நாராயணனும் அரசனது ஸ்திதியையும் புத்திக் கூர்மையின்மையையும் நொந்துகொண்டே சென்றான்.

ஊர்ப்புறத்து ஒருபக்கத்தில், ஆநந்தபுருஷனாகிய நடராஜன், சூரியோதயத்தைப்பார்க்கவிரும்பி, "என்றருங்கடை சென்றயாம மியம்புகின்றன§" வாகிய கோழிகள் வீட்டு உச்சிகளின்மேனின்று சுற்று நோக்குதலையும்,

"இருட்பகை யிரவியிருளெனத் தம்மையும்
கருதிக்காய்வனோ வென்றயிர்த் திருசிறைக்
கையான்மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யார்தம் பெயர்விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலுஞ் சிதறியோடு" தலையும்,

மற்றப் பறவைகளையும் பார்த்துக்கொண்டும், வாணியொருநாள், தான்சூட்டியகுவளைமலரை,

"அன்பாய் மந்தகாசத்தொடு
வாங்கியும், மதியாதவள் போ லாங்கே
யோடுமெவ் வாய்க்கால் நீரிடை விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்த" தைப்

பற்றி நினைத்துக்கொண்டு மிருக்கையில், "வாணி" யென்ற சப்தத்தைக் கேட்டுச், செவிகொடுத்து உற்றுக் கேட்டான். நடந்த சங்கதியாதெனின்: சிறிதும் வெட்கமற்ற விடனாகிய பலதேவன், தான் திருவநந்த புரத்திற்குத் தூது போகுமுன், தன்னாற் கற்பழிக்கப்பட்ட ஓர் மாதைக்காண விரும்பி அவள் வீட்டுக்குச்செல்ல, பலதேவனுக்கு வாணியை மணம்புரியப் போகிறதாகக் கேள்வியுற்றிருந்த அம் மாதின்றாய், வெகு விசனத்துடன் தன் வீட்டுக்கு வர வேண்டாமென்று அவனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். பிற்பாடு பலதேவன் தன் சோரநாயகிக்குக் கொடுக்கும்படி. யொரு பொற்றொடியைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். இவற்றை யெல்லாங் கண்ட நடராஜன், பாதகனாகிய பலதேவனுடைய நடக்கைகளைப்பற்றி யாச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில் நாராயணன் வந்தான். அவன்மூலமாய் நடராஜன், பலதேவன் திருவநந்தைக்குப் போகுங் காரணத்தையும், அவனை மணம்புரிய மாட்டேனென்று வாணி வெறுத்ததையு மறிந்தான். பின் சொன்னதால் நடராஜனடைந்த சந்தோஷத்தைக் கண்ட நாராயணன்,

"என்னேயுன்மதி! எந்திழையார்[1] சொல்
நீர்மேலெழுத்தாம். யாரறிவாருளம்?"

என்று மனிதர்கள் வழக்கமாய்ச் செய்வது போலமாதரைப் பழித்தானாக, வாணியின் அன்பையும் புருஷரில் ஒருவனாகிய பலதேவனின் நடைகளையும் நன்குணர்ந்த நடராஜன், புருஷரே சிறிதும் இரக்கமின்றிச் சுயநயம்பாராட்டும் பாதகரென்று கொதித்துச்சொல்லி, மறுபடியும்,

"புருடரோ விவரும்! ....
. . . .
அவா[1] விற்களவில்லை. அன்போ வறியார்.
மணமுமவர்க்கொரு வாணிபம்! அந்தோ!
சீ! சீ! என்னித்தீயவர் செய்கை!
மாசிலா[2] வையகத் திவ்வுயிர் வாழ்க்கை
யாம்பெருங் கடலுட்போம் மரக்கல[3]னும்
ஆடவர் நெஞ்சம், அறத்துறை யகன்று
நீடிசை சுழற்று நிலையிலாக் காற்று
நிண்ணயமற்ற[4] வெண்ண மியக்கச்
சென்றுழிச் சென்று நன்றறி வின்றி
யலையாவண்ணம், அறத்துறைக் குடாவி
னிலைபெற நிறுத்து நங்கூரமாய்ப், பின்னுஞ்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெ
கெற்றுண் டகன்று[5] பற்றொன் றின்றி [றிக்
யாசையாந் திசைதொறு மலைந்து திரிந்து
கெடாவணங் கடாவி[6]க் கெழுமிய[7] வன்புசேர்
அறப்பிடி கடைப்பிடி யாகக்காட்டி
சிறப்புயர் சுகத்துறை சேர்க்கு சுக்கானாய்,
நின்றது மங்கையர் நிலைமை யென்று
நினையா மனிதர், விலங்கினு[8]ங் கீழா
யனையார் தருசிற் றின்பமே யவாவி,
வாழ்க்கைத் துணையாய் வந்தவர் தம்மை
தாழ்த்துஞ் சேறாய் மாற்றுவர்.
. . . .
துதிபெறு மன்புநற்
குணமுமுளார் இல்துணைவ ராயின்[9]
இல்லதென்னுலகில்? இவற்றுடன் கல்விசேர்
நல்லறிவுளதேற் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றோ?"

என்று மாதரைப் பலவாறாகப் புகழ்ந்தான். தற்காலத்தில் நம்மவர்கள் இப்புத்தி மதியைக் கைக்கொண்டு நடப்பாராயின், இப்பொழுது அனுபவிக்குங் கஷ்டங்கள் பலவற்றினின்றும் நிவர்த்தியடைவது மின்றி, எவ்வளவோ சுகத்தையும் சீர்திருத்தத்தையும்அடைவார்களென்பது சிறிதும் சந்தேகிக்கத் தக்கதன்று.

இதுநிற்க: திருவநந்தபுரத்தில், புருஷோத்தமவர்மன், மனோன்மணி ஓர் உத்தமனைக் கண்ணுற்றதுபோலவே ஓர் மகா ரூபவதியைக் கனவிற்கண்டு, நாளுக்குநாள் விரகம் மிகுந்து 'சித்தம் மத்துறுதயிரிற் றிரிய,' யாரோடாயினும் போர்புரிந்தால் ஒருவேளை விரகம் மாறுமென்று நினைத்திருக்கையில், பலதேவன்சென்றடைந்தான். பலதேவன், தன் அலுவலைச் சுற்றிச் சுழற்றித் தெரிவித்து மனோன்மணியைப் பற்றியுஞ் சொல்ல, சேரன், ஒன்றுக்கு மிணங்கானாய், ஒரு வாரத்துக்குட் படையெடுத்து வருவதாகச் சொல்லி யனுப்பிவிட்டுத் தன் சேனாபதிக்கும் யுத்தத்துக் கெழும்படி கட்டளையிட்டான். சேரதேசத்து இராணுவ வீரர்களின் சூரத்துவத்தை யிக்களத்திலும் பின்வருஞ் சில களங்களிலும் நன்றாய்க்காணலாம்.

மூன்றாம் அங்கம் முதற்களம் பாண்டியன் அரண்மனையில். தான் பலதேவனிடம் இரகசியமாய்ச் சொல்லியனுப்பியபடி போரே விளையுமென் றறிந்திருந்த குடிலன், அரசன்மனதை அச்சமாசாரத்துக்குப் பக்குவப்படுத்தும் பொருட்டும், பலதேவனுக்கு மனோன்மணியைக்கலியாணஞ் செய்விக்கும் பொருட்டும், சேரன் வெறிகொளும் நெஞ்சனாதலால் ஒருவேளை கலியாணத்துக் கிசையானென்று சந்தேகித்தும், ஜீவகனைப் புகழ்வதினாலேயே புருஷோத்தமனைத் தாழ்த்தியும், பலதேவன் மனோன்மணியிடத்து மிக பக்தியைக் குறிப்பிக்கும் வசனங்களைச் சொன்னதைத் தான் கேட்டுளதாகப் பொய் பிதற்றியும், ஒருவேளை சேரன் பலதேவனை யிகழ்ந்திருப்பின் அது ஜீவகனையே பழித்ததை யொக்கு மாதலின் போர் புரியவேண்டி வருமென்று சுட்டிக்காட்டியும், பலவாறாக ஜீவகன் மனதைத் தன் கோரிக்கைப்படி யெல்லாந் திருப்பிக்கொண்டிருக்குங் காலத்தில், புருஷோத்தவர்மனிடமிருந்து படையெடுத்து வருவதாக ஓலைவர, சுத்தனாகிய ஜீவகன் குடிலனது வருமுன்அறியும் மதியைப் புகழ்ந்து, வீரியங்கூறி, போர்புரியத் தீர்மானித்துச் சென்றான்.

குடிலனிடம் ஓர் மாலையைப்பெற்ற சேவகனொருவன் அவனை

"நின்மனம்
நினைந்தவை யனைத்தும் நிகழுகவொழுங்கே",

என்று வாழ்த்திப்போக, அதன்மெய்க்காரணத்தைக் கொஞ்சநேரம்மறந்து, தன் எண்ணங்களெல்லாம் வெளியாய் விட்டனவோ வென்று 'சாம்பற் பூசணிக்காய் களவாண்டோ

* மெல்லிய இறகு. † தடவினால்.
‡ கேடில்லாத
§ Compare:
"உடுத்த நீராடையளுருவச் செவ்வியள்
பிடித்தருநடையினள் பெண்மைநன்றிவன்
அடித்தலந் தீண்டவி னவனிக்கம்மயிர்
பொடித்தனநிகர்க்குமாற்புல்லென் றுன்னுவாள்.
—கம்பன்."
§ கம்பன்.

1 பெண்கள்.

1. போராசை.
2. குற்றமில்லாத
3. கப்பல்
4. நிலையற்ற
5. அடிபட்டு அகன்று
6. நடத்தி
7. நிறைந்த
8. மிருகஜாதியினும்
9. மனைவியாயின்

ணொருவன் தன் தோளைத் தொட்டுப்பார்த்துக் கொண்ட கதை'யாகப் பலவிதமாய்ப் பயந்தான். * பிற்பாடு 'கள்ளமனந்தான் துள்ளும், என்பதை நினைத்து ஒருவாறு தெளிந்தபின், எப்படிப்பட்ட துன்மார்க்கனும் யாதேனும் ஒரு சமயத்தில் கொஞ்சம் மனசாக்ஷியால் துன்பப் படுத்தப்படுத லியற்கை யாதலால், குடிலனும், பின் வருமாறு யோசிக்கத் தொடங்கினன்:—

"வஞ்சனையாற்பெறும் வாழ்வீதென்ன!
நஞ்சுபோற்றனது நெஞ்சங் கொதிக்கக்
கனவிலும் நனவிலும் நினைவுகள் பலவெழத்
தன்னுளே பன்முறை சாவடைந்தடைந்து
பிறர்பொருள் வெளவும் பேதையிற்பேதை
யெறிகட லுலகில் இலைஇலை."

இவ்வெண்ணம்கார்காலத்து நள்ளிரவி லுண்டாகும் மின்னலுக்குச் சமானமேயொழிய வேறில்லை; உடனே வழக்கமாயுள்ள பேராசையால் மூடப்பட்டது.

சுந்தரமுனிவர் சில சடங்குகளின் பொருட்டென்று அரண்மனைக்குள்ளுள்ள ஓர் அறையின் திறவுகோலைப் பெற்றிருந்தாரென்று கூறினோம். அது, மெய்யாக, அபாயகாலத்தில் மனோன்மணி தப்பிக்கொள்ளும் பொருட்டு, அரண்மனைக் குள்ளிருந்து கோட்டைக்கு வெளியே போவதற்கு ஓர் நிலவறை தோண்டும் பொருட்டேதான். நடராஜனும் சில சிஷியர்களும் அவ் வழி தோண்டி வந்தார்கள். நடராஜன், ஊர்ப்புறத்து ஒருபக்கத்தில்,

"எவ்வினையோர்க்கும் இம்மையில் தம்மை
யியக்குதற் கின்பம் பயக்குமோ ரிலக்கு
வேண்டும், உயிர்க்கது தூண்டுகோலாம்."

என்கிற நியாயத்துக்கு உதாரணமாகத் தன் மனத்தின்கண்

"துன்றராக்
கவ்வியமுழுமதி காட்சியிற் செவ்விதாம்
பின்னியகூந்தற்பேதை†"

யாகிய வாணியின் இளமுகம் நின்று யாவற்றையும் இயற்றுவித்தலையும், சிறு புல்லும் தன் 'சிறுரை' க்குறிப்பொடு பலவிடங்களுக்கு மனுப்புவதையும், வாய்க்கால் "காலதத்தச்சன் கட்டிடுமலைக்கு" யாவற்றையும் ஈர்த்துச் செல்வதையும், நாங்கூழ்ப் புழுவின் செய்கைகளையும் பற்றிச் சிறந்த இயற்கை சாஸ்திரப் பயிற்சியுடன் யோசித்துக் கொண்டிருக்கையில், சேர தேசத்துப் படைகள் யுத்த சங்கீதத்துடன் வந்து சேர்ந்தன. நடராஜன், போர்க்கோலத்தை யறிந்து படைசென்றபின், சில உழவருடன் பேசிக்கொண்டிருந்தான். இச்சம்பாஷணையில், குடிலன்பேரில் யாவருக்குமுள்ள வெறுப்பும், மனோன்மணி பேரிலுள்ள அன்பும் ஜனங்களின் அதிருப்தியும் வெளிப்படுகின்றன.

மூன்றும்களம் கன்னிமாடத்தில். காலம் யாமம். மனோன்மணி விரகதாபத்தால் தூக்க மற்று வருந்துகிறாள். வாணிக்கோ அப்படி வருந்துவது "வழக்கம்." கழல் விளையாடுங் காலத்தில் மனோன்மணி யிடத்திருந்த உற்சாகமெல்லாம் இப்பொழுது போய்விட்டது. மனோன்மணியும் வாணியும் நிலா முற்றத்தில் வீற்றிருக்கும்பொழுது, மனோன்மணி தன் விசனத்தை மறக்கும் பொருட்டு வாணியைப் பாடச் சொல்ல, அவள் "சிவகாமி சரிதை"யைப் பாடினாள். இச்சரிதை கும்மியடிப்பதற்குத் தக்க குறள் வெண்செந்துறையிற் பாடப்பட்டிருப்பதால், [illegible]மாதர்களெல்லாம் இதைப் பாராமற் கற்றுக்கொள்ளலாம். உதாரணமாக:

"சிவகாமி யானுனது சிதம்பரனே"என்னச்
செப்புமுன மிருவருமற் றோருருவ மானார்!
எவர்தாமுன் னணைந்தனரென் றிதுகாறு மறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையுஞ் சுருதி"
—(48)

இச்சரிதை யெவ்வளவு இனிமையா யிருந்தபோதிலும் மனோன்மணிக்கு அதிக விசனத்தையே யுண்டுபண்ணிற்று. பிற்பாடு இருவரும் நடராஜனைப் பற்றிப் பேசுகையில், மனோன்மணி வாணியின் மனதைத் தேற்றுகிறாள்.

இக்காலத்தில் மனோன்மணியின் கல்வித்தேர்ச்சி வெளிப்படுகிறது. சுந்தர முனிவரிடம் அவள் அதிகமாய்க் கற்றிருக்கல் வேண்டும். அன்பின் நிலைமை நம்பலென்று தாபிப்பது மன்றி, நம்பலின் குணத்தைப்பற்றிச் சொல்லுகிறாள்:—

"தெளிந்தவைகொண்டு தெளிதற் கரியவை
யுளந்தனினம்பி யுறுதியாய்ப் பிடித்துச்
சிறிதுசிறிது தன்னறிவினை வளர்த்தே
யனுபவவழியா யறிவதை, அந்தோ!
'அனுமானுதியா லாய்ந்தறிந் திடுவோம்,
அலதெனிலிலை யெனவயிர்ப்போம்' எனத்திரி
வாதிய ரன்பொரு போதுமே யறியார்"

யாதேனுமொன்று விசேஷமாய் (முக்கியமாய் அபாயம்)நேரிடுமுன்னமே குறிகள் தோற்றுவதாகச் சொல்வதுண்டு. இது'ஷேக்ஸ்பியர்'என்னும் கவிச் சக்கரவர்த்தியால் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறது. இராமாயணத்திலும் காணலாம். பின்வரும் அபாயங்களுக்கு முற்குறியாக மனோன்மணியின் உடல் புளகாங்கிதமாய் நடுங்கிற்று. மனோன்மணி சேனையின் அரவத்தைக் கேட்டவுடன் அதைப்பற்றி விசாரித்துக்கொண்டே வாணியுடன் உள்ளே சென்றாள்.

மூன்றும் அங்கம் நாலாம்களம் சுந்தரமுனிவர் ஆசிரமத்தில். அக்களத்தில் நிலவறைவேலை முடிந்தாய்விட்டதென்று அறிகிறோம். நடக்கும் வேதாந்த சித்தாந்த சம்பாஷணைகளை, சுந்தரமுனிவர் உத்தரவின்படி "ஓயாப்பேச்சு" என்று விடுத்தோம்.

அ. மாதவய்யர், B. A.

நமது முன்னோர்களுடைய நிலைமையும் நோக்கமும்

ஸ்ரீராமபிரான் திருக்கலியாணத்துக்கு முன்பாக மிதிலாபட்டணத்தில் பவனிவரும்பொழுது,

'தோள்கண்டார் தோளேகண்டார்
தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்,
தடக்கைகண் டாருமஃதே'

என்று கம்பர் அலங்கரித்துப்பாடியபடி அந்த மகாபுருஷனுடையதோள்களைக்கண்டவர்கள் அவைகளுடைய அழகிலேயே மயங்கிவேறொரு அவயவத்தையும் பார்க்கக்கூடாமல் பிரமித்து நின்றார்கள்: பாதத்தைக்கண்டவர்கள் பாதத்தைத்தவிர வேறொன்றையும்பார்க்கக்கூடவில்லை; கையைக்கண்டார்கள் கையையேகண்டார்கள். அதுபோல் நமது பூர்வீகர்களுடைய வேத சாஸ்திர விஷயங்களைக் காண்பவர்களுக்கு அவர்களைப்பற்றிய மற்ற எதையும் பார்க்கக்கூடவில்லை; அவர்களுடைய ஆசாரங்களையும் சட்டங்களையும் கொள்கைகளையும் பற்றி விசாரிப்பவர்களுக்கு அவர்களைப்பற்றிய மற்ற விஷயங்களைக்கண்டறிவதற்குக்கூடவில்லை. இப்படியிருந்தும் அவர்களைப்புகழ்வதும் இகழ்வதும் வழக்கத்தில் வெகு சாதாரணமாயிருக்கிறது. பிறவிக்குருடர் சிலர் யானையைப்பார்க்கச் சென்றதில் அதன் காதைத்தடவிப் பார்த்தவன் யானை முறம்போலிருக்கிறதென்றும், வாலைத்தடவினவன் யானை துடைப்பம்போலிருக்கிறதென்றும், அதன்காலைத்தடவிப்பார்த்தவன் யானை உலக்கைபோலிருக்கிறதென்றும், ஒவ்வொருவனும் ஒவ்வொரு விதமாகத் தீர்மானம் செய்துகொண்டது போல் சிலர் நமது முன்னோர்கள் நாகரீகமற்ற மிருக ஜாதியார் என்றும், சிலர் அவர்கள் சாஸ்திரப்பயிற்சியற்ற மூடர்களென்றும், மற்றும்சிலர் அவர்கள் தெய்வம் இன்னதென்ற ஞானமில்லாமல் கேவலம் ஒரு துடைப்பத்தைக் கூட தெய்வமாகக் கொண்டாடிப் பூஜைசெய்தார்களென்றும், பலவாறாகத் தங்கள் மனம்போனபடி யெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய யதார்த்த நிலைமையை சரித்திரம் என்ற தூரதிருஷ்டிக்கண்ணாடியைக்கொண்டு பரிசோதிக்க வேண்டுமென்பது சிறிது நாளைக்கு முன் திருவனந்தபுரத்தில், எம். ஏ. பட்டம் தரித்த ராஜஸ்ரீசுந்தரராம அய்யர் அவர்கள் செய்த உபந்நியாசத்தின் மூலமாக செவ்வையாய்விளங்கும். அவர்கள் சொல்லுவதை அந்த உபந்நியாசத்தை இங்கிலீஷில் படித்திராத பலருக்கும் விளங்கும்படி சுருக்கமாகச்சொல்லுவோம்.

அனேக ஆயிரவருஷங்களுக்கு முன்னமேயே நமக்குள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு பிரதமவருணங்களும் ஏற்பட்டன. அவற்றுள் பிராமணர்களாவது ருக், யஜுர்,ஸாமம்,அதர்வணம் என்ற நான்குவேதங்களையும் முறைப்படி பாராயணம் செய்து அவைகளில் நியமித்தபடி இந்திரன், வாயுமுதலான தேவதைகளைநோக்கி யாகம், எக்கியம் முதலியவைகளை நடத்திவந்த அத்திரி, பிருஹு,காசிபர், வசிஷ்டர் முதலான இருஷிகளும் அவர்களுடைய வம்சத்தார்களும் அவர்களுடையசிஷ்யவர்க்கங்களுமாம். க்ஷத்திரியராவது ராஜ்யத்தைப் பகைவர் கைக்கொள்ளாதபடி பாதுகாத்து குடிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுத்து ராஜ்யபரிபாலனம் பண்ணிவந்த ராஜாக்கள். வைசியர் வியாபாரம்செய்தவர்கள். பயிரிட்டு ஜீவனம் செய்தவர்கள் சூத்திரர்கள். இப்படி நான்கு பிரிவுகளாக ஏற்பட்டாலும் தொழிலினால் ஜாதியாக இருந்ததே தவிர பிறப்பினால் இல்லை. பிராமணனுடைய புத்திரனானாலும் வேதபாராயணம் செ

* Compare: 'Julius Caesar: Act III, Sc. 1.'

† Compare.
"கமையிருடிரு முகத்தயல் கதுப்புறக் கவ்விச்
சுமையுடைக்கற்றை நிலத்திடைக் கிடந்ததூமதியை
யமையுவாயிற்பெய் துமிழ்கின்ற வயிலெயிற் றரவிற்
குனுமையுறத்திரண் டொருசடை யாகிய குழலாம்"
கம்பர்

ய்யாதவன் பிராமணனல்ல; சூத்திரனுக்குப் பிறந்தாலும் வேதபாராயணம் செய்தால் பிராமணன் என்று இப்படி ஏற்பட்டிருந்தது. இப்பொழுதிருக்கிற ஜாதி வைராக்கியம் அப்பொழுது கிடையாது. ஜனங்கள் அன்னியோன்னியமாய் ஜாதிவைராக்கியம் மதவைராக்கியம் சற்று மில்லாமல் ஒருமித்து வாழ்ந்தார்கள். பிராமணன் என்ற இறுமாப்பாவது சூத்திரன் என்ற அவமானமாவது கிடையாது. எவர்களும் தங்கள் தங்களுக்கு இஷ்டமானதொழிலைச் செய்யலாம். ராஜ்யத்தில் க்ஷேமம் பெருகிற்று. அரசர்கள்

'வையகமுழுதும் வறிஞன்ஒப்புமோர்
செய்யெனக்காத்து'

என்றபடி ஒருஏழைக்குடியானவன் தன்னுடைய அரைக்காணி நிலத்தை எவ்வளவு அன்புவைத்துப் பாடுபட்டுக் கவலையுடன் காத்துவருவானோ அதுபோல் குடிகளுடைய சாஸ்வத க்ஷேமத்தைக்கருதி நியாயமான வரியைவசூலித்து அன்புடன் அவர்களைப் பாதுகாத்துவந்தார்கள். வைசியன் வயதுவந்தவுடன் வியாபாரஞ்செய்யத் தொடங்குவான். சூத்திரன் மகன் பயிரிடப்புகுவான். இப்படி ஒவ்வொருவனும் தன்னுடைய முன்னோர்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழிலை தானும் செய்வதில் அதிக நன்மையுண்டு. உதாரணமாக ஒரு செட்டிப்பையன் வியாபார நுட்பங்களை யறிவதுபோல் ஒரு பிராமணப் பையனறிய முடியாது. இங்கிலாந்து முதலிய தேசங்களிலோ இப்படியில்லை. இன்றைக்கு ஒருவன் அரிவாளையெடுத்துப் பயிரறுப்பான், நாளைக்குஒருகடை வாங்கிக்கொண்டு வியாபாரம்பண்ணுவான், மறுநாள் கத்தியெடுத்து க்ஷவரஞ்செய்வான். ஒரு வேலையிலும் நிலையாய் நில்லாமல் என்றைக்கு எந்தத்தொழிலில் அதிகவரும்படி வருமென்று நினைக்கிறனோ அதற்கு ஓடித்திரிவான். இதனால் ஒய் வொழிவில்லாத சஞ்சலமும், அதிர்பதியும் உண்டாவதுமன்றி பணக்காரனிடத்துப் பொறாமையும், ஒருதேசத்திலுள்ள திரவியமனைத்தையும் எல்லாரும் பொதுவாய் அனுபவிக்கவேண்டுமென்ற துராசையும் இன்னும் அநேக தீங்குகளும் நேரிடுகின்றன. இப்படிப்பட்ட தீங்குகளுக்கு நமது முன்னோர்களுடைய சமூக ஸ்திதியில் இடம் கிடையாது. ஆனால் நஷ்டமடைந்தாலும் ஒருவன் தன் ஜாதித்தொழிலையே செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தமான கட்டாயம் கிடையாது. மேலும் "பணம்! பணம்! பணம்!" என்று பணத்தையே பெண்டாகவும் பிள்ளையாகவும் தெய்வமாகவும் பாவித்துப் பேய் பிடித்ததுபோல் ஆங்கிலேயர்கள் திரிகிறமாதிரி நம்மவர்கள் திரியவில்லை. கண்ணியமான காலட்சேபத்திற்குப் போதுமான திரவியத்தைக் கொண்டு திருப்தியடைந்து பகவானை நோக்கி யாகயக்யாதிகளை வழுவாமல் நிறைவேற்றுவதையே பெரியபாக்கியமாக அவர்கள் எண்ணியிருந்தார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட அபரிமிதமானபாக்கியத்தை அவர்கள் நெடுநாள் அனுபவிக்கக்கூடாமல்தொழிலினால் ஜாதியாயிருந்ததுபோய்ப் பிறப்பினால் ஜாதியென்று ஏற்பட்டது. இன்னும் பிராமணர்களா, க்ஷத்திரியர்களா யார் உயர்ந்தசெல்வத்திற்கும் அந்தஸ்துக்கும் பாத்திரர்கள் என்ற போட்டி உண்டாயிற்று. வசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் நடந்த போர் இதையே குறிக்கிறது. பிராமணர்களுடைய வல்லமை மேன்மேலும் அதிகரித்தது. பரசுராமர் க்ஷத்திரியரைக் கருவறுத்து விட்டு காஸிபருக்குப் பூமியைத் தானம்செய்துவிட்டார். மறுபடி இவரை இராமர் ஜயித்த பிறகு க்ஷத்திரியருடைய வல்லமை நிலைபெற்றது. ஆனால் அதிபராக்கிரமசாலியாகிய இராமர்கூடச் சம்புகன்என்ற சூத்திரன் யாகம்செய்ய எத்தனித்ததற்காக அவனைக் கொல்லவேண்டுமென்று பிராமணர்கள் பலவந்தம் செய்ய அவர்களுடைய பிடிவாதத்தைத் தடுக்கமாட்டாமல் தன்மனச்சாட்சிக்கு முற்றும் விரோதமாக அநியாயமாய்ச் சம்புகனைக்கொல்லநேரிட்டது. இவ்வாறு ஜாதிவைராக்கியமும் போட்டியும் ஏற்படவே, பொருளாசையும் அதிகார ஆசையும் ராஜ்ய ஆசையும் அதிகரித்தது. இந்தத் துராசையே அக்காலத்திருந்த ஐம்பத்தாறு தேசங்களையும் ஒரேகலக்காய்க் கலக்கி அநேக லட்சம் ஜனங்களுடைய மரணத்திற்கு இடமாயிருந்த மகாபாரத யுத்தத்திற்குக் காரணமாயிருந்தது.

இவ்விதம் நமது முன்னோர்கள் கடவுளை மறந்து உலகவாழ்க்கையை விரும்பி நிலைபெற்ற செல்வத்தையும் அதிகாரத்தையும் நிலையென மயங்கி ஆசைவலையிலசப்பட்டு அந்தகாரத்தில் மூழ்கவிருந்த தருணத்தில் நமது ஜாதியார் அனைவரும் பலபல காலத்தில் பண்ணிய புண்ணியமெல்லாம் ஒருமித்துத் திரண்டு உருவெடுத்து வந்ததுபோல், ஜகத்குருவென்றும், ஆபத்பாந்தவரென்றும், அநாதிரட்சகர் என்றும், பல பல திருநாமங்களால் இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் அழைத்து நினைத்து துதித்துக்கொண்டாடும் மகாபுருஷராகிய கிருஷ்ணபகவான் நமதுநாட்டில்திருவவதாரம் செய்தருளினார். நம்முடைய நாட்டையும் நம்முடைய செல்வத்தையும் நம்முடைய பெருமையையும் கீர்த்தியையும் இந்த உலகத்தில் நமக்கு உள்ளனவென்று நினைக்குமற்றெல்லாவற்றையும் அந்நியர் அபகரித்து விட்டாலும், 'கிருஷ்ணன் எங்கள் கிருஷ்ணன், பகவத்கீதை எங்களுடைய பகவத்கீதை' என்று நாம் சொல்லக்கூடும்வரையில் நமக்கு யார்தான் நிகராவார்? உலகத்தில் அவதரித்த மகா புருஷர்கள் எல்லோரிலும் கிருஷ்ணனே சிறந்

தவர். அவரை நினைக்குங்கால் நமக்கு நம்மையறியாமல் ஆனந்தம் பெருகுகிறது. அவரிடத்தில் நமக்கு தெய்வத்தினிடத்தில் உள்ள பயபக்தி வணக்கமும், இஷ்டனிடத்துள்ள அன்பும் அபிமானமும் நேசமும் ஏககாலத்தில் ஜனிக்கின்றன. அவர் 'ஒருத்திமகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் மறைந்து வளர்ந்த' திவ்யசரித்திரம் ஐந்துவயது பாலன் முதல் யாரும் அறிவார்கள். கிறிஸ்தவர்கள் தேவகுமாரன் என்று கொண்டாடும் யேசுவுக்கு ராஜதந்திரம் யாதொன்றும் தெரியாது. கிருஷ்ணனோ உயர் வொப்பிலாத ராஜதந்திரி; பாரதப் போரைத்தடுக்க அவர்முயன்றதும், துஷ்டதுரியோதனாதிகள் சமாதானத்துக்கு இடங்கொடுக்காததால் சத்தியத்திற்குப் பயந்து சன்மார்க்கத்தையே தெய்வமெனக்கொண்ட பாண்டவர்களுக்கு அவர் சகாயமளித்ததும் யாவருக்கும் தெரிந்த விஷயம். யுத்தகளத்தில் அவர் அர்ச்சுனனுக்கு உபதேசித்தருளிய 'பகவத்கீதை'யினுடைய பெருமையை எடுத்துச்சொல்லவேண்டிய அவசியமே யில்லை. ஐரோப்பியர்கள் கூடஅதை சிரசின்மேல் வைத்துக் கொண்டாடத் தலைப்பட்டு விட்டார்கள். ஐரோப்பாகண்டத்திலுள்ள ஒவ்வொரு பாஷையிலும் அது மொழிபெயர்க்கப்பட்டு வழங்கி வருகிறது. இன்னும் சொற்பகாலத்தில் உலகத்திலுள்ள தத்துவ கிரந்தங்களில் உன்னத ஸ்தானத்தை அது அடையுமென்பதற்கு சற்றேனும்ஐயமில்லை. அஞ்ஞானவிருளில் மூழ்கவிருந்த நம்மைத் தக்க தருணத்தில் கைகொடுத்துத் தப்புவித்த பகவத்கீதைக்கு நாம் நம்முடைய வந்தனத்தை வார்த்தைகளால் வெளியிடுதல் சாத்தியமில்லை. உலகத்தின் யதார்த்த நிலைமையை ஜனங்கள் அறியத்தொடங்கினார்கள். தங்கள் தங்களுடைய கடமைகளை கைம்மாறு எதிர்பாராமல் செய்பவர்களுக்குக் கடவுளுடைய அனுக்கிரகம் நிச்சயம் என்றறிந்தார்கள். உலகவாழ்க்கை அநிச்சியமாயிருந்தாலும் உள்ளவரையில் சத்கர்மங்களையே செய்யவேண்டுமென்று தெரிந்து கொண்டார்கள். வேதாந்த விசாரணை மேன்மேலும் பரவிற்று. இப்படிக் கொஞ்சகாலம் கழிந்தபின் சூரியன் அஸ்தமித்தபிறகு சிறிதுநேரம் வெளிச்சமாயிருந்து பிறகு இருள்வந்து மூடுவதுபோல் கௌதமரால் ஸ்தாபிக்கப்பட்ட பௌத்தமதம் தேசத்தைக் கவர்ந்துகொண்டது. பிரபஞ்சம் முழுவதும் மாயை. அதில் உயிர் வாழ்வது பாவம். ஒவ்வொருவரும் ஆசையை நிக்கிரஹம்பண்ணி, வரும் துன்பத்தையெல்லாம் சஹித்து, ஜீவப்பிராணிகளுக்கு சற்றும் ஹிம்சை செய்யாமல் காடுகளில் தனியே காலங்கழித்து இந்தஉயிரை விட்டுச்சுத்தவெளியாயுள்ள நிர்வாணம் என்ற பரகதியை அடையவேண்டுமென்பதே பௌத்தருடைய கொள்கை. எல்லாப்பக்தியும்வீண். ஆத்மாகூடச்சாஸ்வதமில்லை. சுவாமியேகிடையாது என்பதும் அந்தப் பௌத்தமதத்தின் கொள்கை. இந்தமதம் நமது தேசம்முழுவதும் அதிக சீக்கிரமாகப் பரவியதற்குக் காரணம்:

"சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் உயர்ந்தோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி"

என்பதற்கேற்ப பிறப்பினால் பிராமணன் என்றும் சூத்திரனென்றும் இந்தவிதமான ஜாதிபேதங்கள் கிடையா: பௌத்தசந்நியாசிகளாகிய பிக்ஷுகளையும் ஸ்ரமணர்களையும் போன்ற உயர்ந்த ஆத்மாக்களுக்குக் கொடுப்பவர்கள்தான் உயர்ந்தவர்கள்: அப்படிப் பாத்திரமறிந்து கொடாத மற்றோரெல்லாம் இழிகுலத்தவர்: என்று கௌதமர் கட்டளை யிட்டபடியால் பிராமணர்களொழிந்த மற்றைய ஜாதியார்களெல்லாம் பௌத்தமதத்தை அநுசரிக்கத்தொடங்கினார்கள். சேர சோழபாண்டியர் முதலிய தென்னிந்தியாவிலுள்ள அரசர்கள்கூடத்தங்கள் சுயமதத்தை விட்டுப்புதிய மதத்தைக் கடைப்பிடித்தார்கள்.

இப்படி விஷம்ஏறுவதுபோல் நாஸ்திகமதமானது பரவவே தங்களுடைய மத க்ஷேமத்தை நாடிய சிலருக்குண்டான கவலை இவ்வளவுஅவ்வளவுஇல்லை. அந்த விஷத்தை இறக்குவதற்குத் திடீரென்று புறப்பட்ட ஒரு பெரிய மந்திரவாதிபோல் கேரளதேசத்தில் ஒரு சிறுகுக்கிராமத்தில் மாதர் சிகாமணியாகிய ஆரியாம்பாளுடையதிவ்யமங்களகர்ப்பத்தில்குறைந்தது ஆயிரத்திருநூறுவருஷங்களுக்குமுன் பௌத்தமதத்தைத் துரத்தித் துரத்திக், கண்ட கண்ட இடமெல்லாம் எதிர்த்துப் போர்செய்து தலையெடுக்கவொட்டாமல் கண்டனம் செய்த புண்ணிய புருஷராகிய ஸ்ரீ சங்கராசாரியார் நல்ல முகூர்த்தத்தில் அவதரித்தார். அவருடைய வேதாந்த விசாரணையும், சொல்வன்மையும், மனோதிடமும், ஊக்கமும், உலகத்தாருக்கு உயிரினும்உயிராகிய உண்மைமதத்தைத் தந்து இரட்சிக்க வேண்டுமென்ற பெருந்தன்மையான ஆசையும் மனிதர்களிடத்தில் அவர் வைத்திருந்த பச்சாத்தாபமும், அன்பும், விடாமுயற்சியும், அதிக அற்புதமாயிருந்தது. இங்கிலீஷ் பயிற்சிதான் நமக்கு உயிரைத்தந்து ஊக்கத்தைத் தந்ததுஎன்று நாம்பெருமைபாராட்டிக் கொள்ளுகிறோம். பி. ஏ., எம். ஏ., முதலிய பெரிய பரீட்சைகளை சர்வகலாசாலைகளில் பயின்று, தேர்ந்து பெரிய பட்டங்களை வகித்து வருகிறவர்களில் யாருக்குத் தான் ஸ்ரீ உலகத்குருவாகிய சங்கராசாரியாருக்கிருந்த ஊக்கத்தில்பத்தில் ஒருபங்கு இருக்கிறது பாருங்கள்! அவர்காலத்தில் ரயில்கிடையாது. ஆகாயமார்க்கமாய்ப் போகும் புகைப்பல்லக்காகிய 'பாலூன்' அவர் காலத்தில் தெரியவேதெரியாது. அப்படியிருந்த அந்தநாளில் ஹிமா

லயம் முதல் கன்னியாகுமரி முனைவரை சஞ்சரித்து, பௌத்தமத கண்டனம் செய்து, இந்துமத ஜயபேரிகை யடித்து, வெற்றிக்கொடி நாட்டி, சென்றவிடந்தோறும் ஆலயப்பிரதிஷ்டை செய்து, ராஜாக்களையெல்லாம் தன் வசப்படுத்தி தான் இட்டதுசெய்யும்படி ஏவல் கொண்ட மகானுபாவருடைய பராக்கிரமத்தைப்பற்றி நாம் என்ன சொல்லக்கூடும்? அவருடைய பராக்கிரமம் இவ்வளவு அற்புதமாயிருக்குமானால் அவருடைய புத்திநுட்பமும் ஞானதிருஷ்டியும் அதிலும் அற்புதம். பௌத்தமதம் பரவியிருந்ததையும் அதில் ஜனங்களுக்கிருந்த பற்றையும், 'காதங்கள் கோடி கடைசென்று காணுநயனங்கள்' என்றபடி நெடுந்தூரம் கூசாமல் கடைக்கண்ணினாலே ஒரு பெரிய பருந்தானது பார்ப்பது போல் ஞானக்கண்களாலளந்து வியாதிக்குத்தக்க ஔஷதத்தைக் கொடுக்கத்தொடங்கினார். ஒருகாலத்தில் ஒரு குடியானவன் நெருப்பில் பழுக்கக்காய்ச்சி யிருந்த கரண்டியை ஜலத்தில் நனைத்தான். நனைத்தவுடன் அதன் உஷ்ணம் தணிந்து விட்டது. அதைப்பார்த்து அவன் ஆச்சரியமடைந்திருந்தான். சிலநாள் சென்றபின் அவனுக்குக்கொடியஜ்வரம் வந்தது. வந்தவுடன் இரும்பிலிருந்த உஷ்ணம் ஜலத்தில் நனைத்தவுடன் தணிந்தது போல் நம்முடைய சரீர உஷ்ணமும் தணியுமென்று அந்த மதியூகி அனுமானித்து ஒருதொட்டியில் ஜலத்தை நிரப்பி அதில்போய் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரத்திற்கு எல்லாம் சுரம்அதிகரித்து ஜன்னி தோஷங் கண்டு, ஐயோ! அவன் இறந்துபோனான். நமது தேசத்தில் பரவியிருந்த வியாதிக்கு ஸ்ரீ சங்கராசாரியார் வைத்தியம் பண்ணினது இந்தவிதமல்ல. இவ்வுலகத்திற் கப்பால் வெட்டவெளி நிர்வாணம் என்ற பௌத்த கொள்கையை மறுத்து, பரப்ரம்மத்தில் ஐக்கியந்தான் ஆத்மாவின் அந்தம் என்று ஸ்தாபித்தார். பிரபஞ்சம் மாயை என்று பௌத்தர் சொல்வதுமெய்தான்; ஆனால் நமதுகுடும்பத்துக்கும் பிறருக்கும் நாம் செய்யவேண்டிய கடமைகள் பலவுள; அவற்றைச் செய்யா விடில் பாவம் சம்பவிக்கும் என்று நாட்டினார். பௌத்தர்கள்சொல்லுவதுபோல உலகத்தைத் துறப்பது அவசியந்தான்; ஆனால் பிரமசாரி, கிரஹஸ்த ஆஸ்ரமங்களைக் கழித்த பிறகு தான் வானப்ரஸ்த, ஸந்நியாசி யாஸ்ரமங்களுக்குப் போகவேண்டுமென்று போதித்தார். பௌத்தர் சொல்வதுபோல் ஜாதிபேதம் எதார்த்தத்தில் இல்லையென்றாலும் இவ்வுலகத்துத் தொழில்கள் செவ்வையாய் நடந்தேறச் சிலஜாதிபேதங்கள் அவசியம்என்று ரூபிகரித்தார். இவ்வாறு ஜ்வரம் என்றால் சைத்யோபசாரம் செய் என்னாமல்பௌத்தர்களுடன்முற்றிலும் வேறுபடாமல் சிறிதுதூரம் சென்று சமாதானம் செய்வதுபோல் தொடங்கி ஜயத்தை யடைந்தார்.

ஸ்ரீசங்கராசாரியார் நமக்குச் செய்த மற்றோருபகாரத்தை நாம் எக்காலும் மறக்க வொண்ணாது. 'உப்புக்குவட்டின் மிசையிருந்துண்ணினும் இட்டுணாக்காலது கூறுதாம்' என்றபடி நமக்கு அருகில் எக்காலத்தும் இருந்த பகவத்கீதையை மறந்திருந்த நமக்கு அந்த மோக்ஷத்துக்குரிய திறவுகோலைப்பாஷ்யசஹிதமாய் அளித்த பரமாசாரியாருக்கு நாம்எப்பொழுதும் வந்தனமுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

ஸ்ரீ சங்கராசாரியார் இவ்வாறு பௌத்த மதத்தை முறியடித்தபிறகு ஸ்ரீ இராமானுஜர் அவதரித்தார். பௌத்தமதத்தைச்சின்னாபின்னஞ்செய்து தத்தளிக்கச்செய்தவர் சங்கரர்; அதைஇருந்த சுவடுகூடஇன்றி அழித்தவர் ராமானுஜர். கடவுளுக்குமுன்னம் எல்லா ஜாதியாரும் ஒன்றுதான் என்றுசங்கரர்சொன்னதை இராமானுஜர் வற்புறுத்திக்கூறினார். அவர் வார்த்தையால் சொன்னதை இவர் காரியத்தால் சாதித்தார். ஸ்ரீஇராமானுஜர் தனக்கு வேததத்துவத்தை உபதேசித்தருளிய தன்னுடைய குரு அந்த இரஹஸியத்தை யாருக்கும் வெளியிடக்கூடாதென்று கண்டிப்பாய் ஆஞ்ஞாபித்திருந்தும் திருவரங்கம் பெரியகோயில் கோபுரத்தின் மீதேறி ஜனங்களை நோக்கி "பிரியநேசர்களே! எனக்கு உபதேசிக்கப்பட்டிருக்கும்இரஹஸியத்தை உங்களுக்கு வெளியிடத் துணிந்து தீர்மானித்துவிட்டேன். உங்களுக்காக கொடூரமான—'ஏகுக எகுகமீளாதேதுக' என்றபடி—என்றும்மீட்சியில்லாத ரௌரவாதி நரகத்திற்குக்கூட ஆளாகத்தயாராயிருக்கிறேன்" என்றுகூறிய அன்புநிறைந்த ஆனந்த வாசகம் எல்லாருக்கும் தெரிந்ததே. இந்த ஆசாரியர்கள் காலத்திலேயே தமிழ்நாட்டில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர் என்ற 'சைவநெறி தழைப்ப' அவதரித்த சமய குரவர்கள் பௌத்தசமயவாசனை கூடப்படாதபடி அப்பூண்டை வேரறுத்துவிட்டார்கள்.

இவ்விதம் தெய்வத்தன்மைபெற்ற மனிதர்கள் பலர்கூடி மத்தியில் நேரிட்ட இடையூறுகளை விலக்கி நமது முன்னோர்கள் முற்காலத்தனுபவித்த பாக்கியத்தை நிலைநிறுத்தியபிறகு நம்முடைய தேசத்தில் பலமானராஜ்யங்கள் ஏற்பட்டு க்ஷேமத்தை யடைந்திருக்கலாம். உண்மையாகவே விஜயநகரம் முதலிய இடங்களில் தக்க அரசாட்சிகள் ஏற்பட்டன. ஆனால் கடவுள் விதித்தது வேறுவிதம். கோரான் அல்லது கத்தி என்று கதறிக்கொண்டுவந்த மிலேச்சர்களாகிய மகம்மதியர் கையிலகப்பட்டு நமது தேசம் தத்தளித்தது. அவர்களுடைய கொடுமை கழிந்து அன்பாயும் ஆதரவாயும் அரசுபுரியும் ஆங்கிலேயர்கள் நம்மை விடுவித்தது நல்லகாலமென்றே நினைக்கவேண்டும்.

ராஜ்யத்தில் க்ஷேமமும் சமாதானமும் பரவி யிருக்கும்போதே நாம் நமக்கு வேண்டிய சீர்திருத்தங்கள் செய்து கொள்ளவேண்டிய தென்பது யதார்த்தமென்றாலும் கடவுளை மறந்து தெய்வபக்தியைத் துறந்து பணத்தையேபெரிதெனக்கொண்டாடும்ஆங்கிலேயர்களுடையநாகரீகத்தைக்கண்டு மகிழ்ந்து தீபத்தைப்பழமென்றெண்ணிக்குபீரென்று பாய்ந்து அநியாயமாய் இறந்துபோகும் அந்துப் பூச்சிகளைப்போல் பதறாமல்நிதானித்து கிருஷ்ணபகவான் நமக்குத்திருவாய்மலர்ந்தருளியிருக்கும் வேதபாக்கியத்தை சிரசின்மேல் வைத்து வணக்கத்துடன் கிடையாச்செல்வமெனமதித்து, அன்பாகமுத்தமிட்டு நேசித்துப்பாராயணம்பண்ணி, லோககுருவாகிய சங்கரர் பௌத்த மதத்தை நீக்குவதற்கு எவ்விதமான தந்திரங்கள் உபயோகித்தனரோ, அவ்வித தந்திரங்களைக் கைக்கொண்டு சாவதானமாய் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யவேண்டு மென்பதை நாம் எல்லாரும் மனதில் வைக்கவேண்டும்.

பி. ஆர். இராஜமய்யர், B. A.,

குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

முதலாவநுவரும்படிக்குள்பட்ட செலவுசெய்கிறது.

மாமாமலையகேது.—ஆனால் நீ கலியாணம் செய்து கொள்ளப்போகிறது நிச்சயந்தானா, தர்மசீலா?

தர்மசீலன்.—ஆம் மெய்தான் அய்யா.

மாமா மலையகேது.—கூழ் குடிக்கவா கலியாணம்?

தர்மசீலன்.—ஆம் அய்யா என்னால் அதற்குக்கூட சம்பாதிக்க முடியாவிட்டால் அன்னப்பாலைக் கொண்டேனும் சீவிப்பேன்.

மாமாமலையகேது.—உன்னோடுகூட பட்டினிகிடக்க சத்தியவதியும் சம்மதித்து விட்டாளோ?

தர்மசீலன்.—கூழ்குடித்தாலும் நாங்களிருவரும் சுகமடைந் திருக்கலாமென்று அவளை நம்பும்படி செய்திருக்கிறேன். எப்பொழுதும் என்னுடைய முயற்சி எங்கள் ஜீவனத்துக்கு வேண்டியதைக் கொடுக்கும்.

மாமா மலையகேது.—எப்பொழுதும் உன்னுடைய தொழிலில் முயற்சி செய்வதற்கு தகுந்ததேக சௌக்கியம் உனக்கிருக்குமென்பது என்ன நிச்சயம்?

தர்மசீலன்.—சரிதான். நான் அந்தவிஷயத்தைப் பற்றி நிச்சயமாய்ச் சொன்னால் அது மூடத்தனந்தான்.

மாமா.—அப்படியிருக்க நீ அதை உறுதியாய் நம்பினது போதும் காரியங்கள் செய்ய எத்தனிக்கிறாயே.

தர்மசீலன்.—நான் அப்படிச்செய்வது என்ன தப்பிதம்? எனக்கு பலமும் தேகசௌக்கியமுமிருக்கிறது. அவைதான் என்னுடைய பாக்கியம். அவை இப்பொழுதிருக்கின்றன. ஆகையால் அவைகளை என்னால் இயன்றமட்டும் நன்றாய் உபயோகப்படுத்தவேண்டும். நம்மிடத்திலிருக்கும் வஸ்துக்கள் எப்பொழுதும் நீடித்திருக்குமோ, இராதோ, என்ற சந்தேகத்தால் நம்முடைய முயற்சியைக்கைவிட்டு விட்டால், என், செல்வமுடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் என்னபேதம்? செல்வத்துக்கு வெகு சீக்கிரம் இறக்கை யுண்டாகி பறந்துபோய் விடுகிறது. நீர், நெருப்புமுதலானவைகளுக்கு இரையாகிறது. இவ்வுலகத்தில் எல்லாம் அநித்தியந்தான். ஆகையால் என்னுடைய ஸ்திதி அநேகருடைய ஸ்திதியைப்பார்க்கிலும் கெட்டதல்லவே.

மாமா.—அவை யாவை சொல்?

தர்மசீலன்.—அய்யா, முதலாவது, எனக்கு தேக சௌக்கிய மிருக்கிறது. இரண்டாவது, சுறுசுறுப்பிருக்கிறது. மேலும் என்னுடைய தொழிலோ கூடியவரையில் நல்ல சம்பாத்தியம் வரக்கூடியது தான். ஒருவைத்தியன் சாமர்த்திய முள்ளவனாயும், கவனமுள்ளவனாயு மிருந்தால் எப்பொழுதும் நோயாளிகள் அவனிடம் வருவார்கள். நான் மேற்சொல்லிய இரண்டு குணங்களையும் அனுசரிக்கக்கருதியிருக்கிறேன். இவைகளையெல்லாம் தவிர நாங்கள் மிகவும் செட்டாயிருந்து அதிக ஆசையில்லாமலிருப்பதினால் எப்பொழுதும் வருகிற வரும்படியைக் கொண்டே சுகமாய்க்குடித்தனம் பண்ணலாமென்று நம்புகிறோம். மேலும் சத்தியவதிக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்களில் ஆசை யில்லையென்பது தங்களுக்கே தெரியுமே; ஆகையால்—

மாமா.—ஆகையால் நீ கலியாணம் செய்துகொள்வதைப்பற்றி தீர்மானித்து விட்டாய் போலிருக்கிறது. இனி இந்த சங்கதியைப்பற்றிஉன்னோடு பேசுவதில் பிரயோசன மில்லையே.

தர்மசீலன்.—தங்களுடைய சம்மதத்திற்காக மாத்திரந்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

மாமா.—சத்தியவதி சம்மதித்துவிட்டால் நானும்சம்மதித்ததுபோல் தானென்று உனக்கே தெரியுமே. சத்தியவதி உன்னோடு மிகவும் தரித்திர ஸ்திதியில் கூடியிருக்க சம்மதித்து விட்டாள் போலிருக்கிறது.

(உடனே சத்தியவதி தன்புன்சிரிப்பினால் தன்னுடைய சம்மதத்தை வெளியிட்டாள்.) நல்லது நான்

இனி வாக்குவாதம் செய்கிறதில்லை. ஆனால் உங்களுக்கு ஒரு சங்கதி சொல்லுகிறேன், கேளுங்கள். ஒருவனுக்கு உண்ண ஆகாரமும், குடிக்கத் தண்ணீரும், உட்கார நிழலும், உடுக்கவஸ்திரமும் வேண்டுமேதவிர மற்றவைகளெல்லாம் மிகுதிதான்.

(சத்தியவதி இதுவரையில் தலைகுனிந்து பின்னல் வேலை செய்துகொண்டிருந்தவள், தன்னுடைய மடியில் நூலைவைத்துவிட்டு ஆச்சரியத்துடனே தன்னுடைய மாமனை நிமிர்ந்து பார்த்தாள்.) ஓகோ! நான் சொல்லுவது சரியல்லவென்று நீ நினைக்கிறாப் போலிருக்கிறது, ஒருவனுக்கு அவசியமாய்வேண்டிய வஸ்துக்கள் வேறென்ன? சொல் பார்க்கலாம்.

சத்தியவதி.—நான் தர்மசீலனோடு கூடியிருக்கச் சம்மதித்த பொழுது, காட்டி லிருக்கும் மிருகங்களைப் போலவும், ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளைப்போலவும் வசிக்கலாமென்று நினைக்கவே இல்லை. நம்மைச்சுற்றியிருக்கும் பிறர்களுடைய மாதிரியைப்பார்த்து நாமும் நம்முடைய குடித்தனத்தை நடத்தவேண்டும். இருந்தபோதிலும் எங்களுக்கு சீவனத்துக்கு வேண்டிய அவசியமான வஸ்துக்களைத் தவிர வேறுவஸ்துக்கள் வேண்டியதில்லையென்பது நிச்சயந்தான். மற்ற சுகங்களெல்லாம் எங்களுக்கு பரஸ்பர மிருக்கிற விசுவாசமே கொடுக்கும்.

தர்மசீலன்.—தன்நாயகியின் பேசுந்திறமையைப்பார்த்து அகமகிழ்ந்து சொல்லுகிறான்: "நானோ இப்படிப்பட்ட சத்தியவதியை அடைவதில் வெகு பாக்கியசாலியாவேன்."

மாமா.—பிறர்களைப்பார்த்து நம்முடைய குடித்தனத்தை நடத்துகிறதா! ஆகா! பிறர்கஞ்சியும் கூழும் குடித்து சீவனம் பண்ணினாலல்லவோ நாமும் அப்படிச்செய்யலாம். ஆனால் ஒருவரும் அப்படிச்செய்யக்காணோமே. எல்லோரும் குடிக்கக் கஞ்சியில்லாவிட்டாலும் செய்துகொள்ளுகிற டம்பத்தில் மட்டும் குறைவு பண்ணுகிறதில்லை. ஆகையால் நீயும் அவர்களைப்போலவே கொஞ்சம் வரும்படிக்கு அதிகமாகத்தானே செலவு செய்யவேண்டும்.

தர்மசீலன்.—அய்யா அப்படியல்ல, ஒருபொழுதும் வரும்படிக்கு மேலிட்ட செலவு செய்கிறதில்லையென்பதே எங்களுடைய உறுதியான சித்தாந்தம்.

மாமா.—ஆம், நீ அந்தத்தீர்மானத்தின்படியே நடக்கிறவரையில் உனக்கு யாதொரு குறைவும் வரமாட்டாது. ஆனால் கெட்ட விஷயங்களில் நம்முடைய புத்தி எவ்வளவு சீக்கிரம் செல்லுமென்பது உனக்கு இன்னும் தெரியாது. நான் சொல்லவேண்டிய புத்திமதிகள் இவ்வளவுதான். பெரும்பாலும் புத்திமதியைத்தவிர வேறொன்றும் கொடுக்கத் திறமையில்லாதவனுடைய வார்த்தைகள் அதிக பிரயோசனப் படமாட்டாது. நான் மிகவும் ஏழைதான். ஆனாலும் என்னைப் போன்ற பிரமசாரிக்கு ஆசைமட்டுத்தானே.

சத்தியவதி.—ஆம், மாமா, தங்களுக்கு கேவலம் அன்னவஸ்திரத்தைத் தவிர வேறொன்றிலும் இச்சையில்லையென்பது எனக்குத்தெரியும். அவைகளை வைத்துக்கொண்டு நெடுங்காலம் சுகமடைந்திருப்பீர்களாக. எங்களுக்கு எல்லாவித ஐசுவரியத்தைப்பார்க்கிலும் சிறந்த தங்களுடைய புத்திமதிகளை வெகுகாலம் போதித்து எங்கள்மீது பிரியம் வைத்திருப்பீர்களாக.

மேற்சொல்லிய சம்பாஷணை நடந்து இரண்டுவாரமாவதற்குள்ளாக தர்மசீலனும், சத்தியவதியும், கணவனும் மனைவியுமானார்கள். ஒருவருக்கொருவர் அந்நியோந்நியமாகவும், குடித்தன முறைமையில் சிறந்தவர்களாயும், இவர்க்கிணைவேறொருவரில்லை யென்று சொல்லும்படியாக சிலநாள் சுகமடைந்திருந்தார்கள். குடித்தனம் பண்ணுவதில் ஒரு பொழுதும் கடன் வாங்குகிறதில்லை யென்றே தீர்மானித்துக்கொண்டு ஜனநெருங்கிய ஒருதெருவில் அற்ப வாடகையுள்ள ஒரு வீட்டைத் திட்டஞ் செய்து கொண்டார்கள்.

அநேக வைத்தியர்கள் இளமைப்பருவத்தில் தங்களுடைய தொழிலை ஆரம்பிக்கும்பொழுது, வெகுசனவான்களுடைய ஒத்தாசையால் முன்னுக்கு வருவதுண்டு. அதுபோல தர்மசீலனுக்கு ஒத்தாசைசெய்ய ஒருவருமில்லை. அவன் பட்டணத்துக்கு வந்தது இதுதான்முதல்தடவை. வந்தவிடத்தில் மலையகேதுவின் மருமகளான சத்தியவதியைக்கண்டு அவளைக்கலியாணம் செய்துகொள்ளவேண்டு மென்று ஆசைகொண்டு, பிறகு தன்மனைவியைக்காப்பாற்றும் பொருட்டு தன்னுடைய சம்பாத்தியத்தினின்றும் தான் சற்றேனும் வீணாய்ச்செலவிடாமல் அவளுக்கு வேண்டியவைகளை தன்னாலானமட்டும் தேடிவந்து கொடுத்து சுகமாயிருக்கலாமென்று நினைத்தான். ஆனால் இவர்கள் குடித்தனம் பண்ண ஆரம்பித்த பொழுது கையிலிருந்த பொருளோ, வேண்டிய சாமான்கள் வாங்கியான பிறகு, முதல்மூன்று மாதத்து வீட்டுவாடகை கொடுக்கவும், அவர்கள் வீட்டுத்தலைவாயலில் கட்டியிருந்த "வைத்தியம் தர்மசீலன்" என்று நேர்மையாய் எழுதிய, ஒருபலகைக்கும்தான் காணும் போலிருந்தது. இப்படியிருக்க தர்மசீலன், நாள்முழுவதும் வீட்டைவிட்டு அசையாமல் காத்துக்கொண்டிருந்தபோதிலும் மேற்சொல்லிய பலகையைக் கண்டு ஒருவரேனும் உள்ளேநுழைகிற தில்லை.

இப்படி ஒருவாரம் பொறுமையுடனே காத்திருந்தும் பிரயோசன மில்லாததுகண்டு, அந்தப்பலகையில் "ஏழைகளுக்கு இனாமாகவைத்தியஞ்செய்வார்" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவேண்டியதாயிற்று. பின்னும் சிலநாள் சென்றபிறகு "மருந்து வாங்கப் பணமில்லாதவர்களுக்கு மருந்தும் இனாம்" என்றவார்த்தைகளையும் சேர்க்கவேண்டியதாயிற்று. சில நாட்சென்றபின்பு அத்தெருவழி நடப்போரெல்லாம் பலகையிலெழுதி யிருந்ததை கவனிக்கத்தொடங்கி அநேகர் தர்மசீலனிடத்துக்கு வந்தார்கள்.

இவர்கள் சற்றேனும் தர்மசீலனுக்கு பணங்கொடுக்கத்திறமையில்லாதிருந்த போதிலும், தர்மசீலன் தன் கையை விட்டேனும் செலவுசெய்து, இவர்களை சௌக்கியப்படுத்தி புகழ்பெற்றால், பிறகு தனக்கு ஐசுவரியமுள்ளவர்களிடத்திலிருந்து நல்ல வரும்படிவருமென்று நினைத்து வைத்தியம்செய்யத்தொடங்கினான். இப்படிக்கு ஸ்வயப் பிரயோசனத்தை விரும்பிச் செய்த தர்மமானது நாளாக, நாளாக, இவன்மனதிலேயே குடிகொண்டு தர்மசீலன் பிறர்க்கு நன்மை செய்வதிலேயே கருத்துள்ளவனானான். தன்னைச் சுற்றி யிருக்கும் தரித்திரர்களுடைய ஸ்திதியைப் பார்க்கும்பொழுது தன்னுடைய வறுமையை மறந்துவிட்டான்.

ஒருநாள்தர்மசீலன் தன்மனைவியிடத்தில் நோயால் வருந்தும் ஒரு ஸ்திரீயின் நிலைமையையும் அவளுடைய குழந்தைகள் சோற்றுக்கழுவதையும் பற்றிச் சொன்னபொழுது, சத்தியவதி தன்கணவனுடன் சென்று அந்த ஸ்திரீயின் குடிசைக்குள் புகுந்தாள். சத்தியவதி தன்கையிலிருந்த பொருளையெல்லாம் இதற்குள் குடித்தனத்தில் செலவிட்டுவிட்டபோதிலும், நன்மைசெய்யப்போகிறோமென்னும் சந்தோஷத்தினால் வருகிற மாதத்துக்கு வீட்டு வாடகையை எப்படி கொடுக்கிறது என்ற தன் கவலைகளையெல்லாம் மறந்துவிட்டாள். தன்னுடைய நிலைமை யிப்படி யிருந்தபோதிலும் நன்மை செய்வதில் பின்னிடாமலே ஒருநாள் சத்தியவதி சிலஉணவுகளை எடுத்துக்கொண்டு நோயால் வருந்தும் மேற்சொல்லிய ஸ்திரீயின் குடிசைக்குச் சென்று அவள்படுத்திருந்த அறைக்குள் புகுந்தாள். குழந்தைகளெல்லாம்இவளை சூழ்ந்து கொண்டன. ஆனால் அவ்விடத்தில்ஒருஆச்சரியம் தோன்றிற்று.

அது யாதெனில் நோயாளியின் படுக்கைக்குப் பக்கத்தில் விலையுயர்ந்த ஆடையாபரணங்களையணிந்த அழகுள்ள ஒரு ஸ்திரீ உட்காந்திருந்தாள். அவள், தர்மசீலனும், சத்தியவதியும் வந்ததைப் பார்த்து கொஞ்சம் ஆச்சரியப்பட்டு இவர்கள் யாரென்று விசாரித்தாள். இப்படியிருக்க அந்தக் குழந்தைகளோ சத்தியவதியைச் சூழ்ந்துகொண்டு அவள் கையிலிருந்த சிறுகூடையில் ஆகாரமிருப்பதை வாசனையால் தெரிந்துகொண்டு அதைக்கைக்கொள்ள ஆரம்பித்தன. இவைகளை யெல்லாம் ஆச்சிரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த ஐசுவரியமுள்ள ஸ்திரீயானவள் தர்மசீலனைப்பார்த்து "ஏன் ஐயா இந்த வியாதி ஒட்டுவாரொட்டி யல்லவோ?" என்று கேட்டாள்.

தர்மசீலன்.—"இல்லை, அந்த ஸ்திரீமிகவும் மெலிந்துபோய் விட்டபடியால் சிலநாளாய் வேலைசெய்யத் திறமை யில்லாமல் போய்விட்டாள். சரியான சாப்பாடு இல்லாததினாலேயே இந்த ஸ்திதிக்கு வந்துவிட்டாளே தவிர, வியாதியினால்கூட வரவில்லை." என்றான்.

அலங்காரவிநோதி.—(இது தான் அந்த ஐசுவரியமுள்ள ஸ்திரீயின் பெயர்.) "ஆகா என்ன ஆச்சரியம். ஏன் அவள் தர்மவைத்திய சாலைக்குப் போகவில்லை? இந்த தர்ம வைத்திய சாலையைக் கண்டால் ஏதோ ஒரு விதமான வெறுப்பிருக்கிறது. அது மிகவும் மூடத்தனம். எனக்குத் தெரிந்தமட்டில் அநேகர் இந்த தர்ம வைத்திய சாலைகளுக்குப் போவதைப் பார்க்கிலும் பிச்சை யெடுப்பது நலமென்று நினைக்கிறார்கள்."

தர்மசீலன்.—"அப்படி யிருந்தாலது மூடத்தனந்தான். ஆனால் பிறருடையஒத்தாசையை எதிர்பார்ப்பதைப் பார்க்கிலும் தங்களாலியன்றமட்டும் வேலைசெய்து சம்பாதிப்பது நலமென்று நினைத்து முயலுபவரை நாம் புகழவேண்டுமே தவிர வேறில்லை" என்றான்.

அலங்காரவிநோதி.—"இதுவரையில், காளி தன்னுடைய ஸ்திதியைப்பற்றி எனக்குச் சொல்லியனுப்ப வில்லையே யென்று மிகவும் வருத்தப்படுகிறேன். எனக்குத் தெரிந்திருந்தால் அவளுக்கு முன்னமேயே நான் ஒத்தாசை செய்திருப்பேன்." என்றாள்.

சத்தியவதி.—"ஆனால் உங்களுக்கு இவளை முன்னமேயே தெரியுமோ, அம்மா?"

அலங்கார விநோதி.—"ஆம், அதாவது என்வீட்டில் சில நாள் அவள் பாத்திரங்கள் தேய்த்துக்கொண்டிருந்தாள்."

காளி.—மிகவும் வருத்தத்துடனே, "நாட்களல்ல, மாதங்கள்" என்றாள்.

அலங்காரவிநோதி.—"காளி இரண்டு மூன்று நாளைக்கு முன் எனக்கு சொல்லியனுப்பினாள். நான் இன்றைக்கு என்னுடைய வண்டிக்காரனைக் கூப்பிட்டு, இவள் வீடு எவ்விடத்திலிருக்கிறதென்பதை விசாரித்து வரும்படிச் செய்தேன். என்னுடைய உடம்பு மிகவும் துர்பலமாக விருந்தபோதிலும் இங்கேவரத் துணிந்துவிட்டேன்."

சத்தியவதி.—அலங்கார விநோதினியின் டம்பத்தைப்பார்த்து மயங்கி சொல்லுகிறுள்: "அம்மணி! உங்களுடைய குணம் எவ்வளவு நல்லகுணம். காளி, நிசமாக மிகவும் ஏழைதானம்மணி."

அலங்கார விநோதி.—"நானுமப்படியே நினைக்கிறேன். ஆனல் அவளுக்கு உங்களைப்போன்ற சிநேகிதர்கள் ஒத்தாசை செய்யப் பிரியமும், திறமையு முள்ளவர்களாய் அகப்பட்டார்களே என்று மிகவும் சந்தோஷப்படுகிறேன்."

சத்தியவதி.—எங்களுக்கு, ஒத்தாசை செய்யப் பிரியம் நிரம்பத்தா னிருக்கிறது. அவ்வளவுக்கு திறமை மட்டுந்தா னில்லை."

அலங்காரவிநோதி,—"என்னுடைய ஸ்திதியு மப்படியேதான். பணக்காரர்களென்று பெயர்வைத்துக்கொண்டிருக்கிற எங்களுக்கு எப்பொழுதும் செலவுதானிருக்கிறது."

"இருந்தபோதிலும் இப்பொழுது காளிக்குஏதேனும் கொஞ்சம் கொடுக்கிறேன்" என்று சொல்லி தன் மடியில் சொருகியிருந்த பட்டுச் சுருக்குப்பையையெடுத்து அதிலிருந்த தங்கவளையங்களைநீக்கி உள்ளே கையைவிட்டு செப்புக்காசுகளில் சிலவையெடுத்து காளியின் கையில் கொடுத்தாள். கொடுத்தவுடனே, காளி கொஞ்சங்கூட சந்தோஷமடையாமல் காசுகளை திருப்பிக் கொடுத்துவிட எத்தனித்தாள்."

சத்தியவதி.—"நோயினல் மிகவும் வருந்துகிற படியால் காளி உங்களுக்கு சரியான வந்தனஞ்செய்ய முடியாமலிருக்கிறுள். அம்மணி, நீங்கள் கொடுத்ததை நான் இந்தக் குடும்பத்தில் நல்ல உபயோகப்படுத்துவே னென்று நம்புங்கள். அவர்களுக்கு இதுவரையில் யாதொன்றுமில்லாமல் கஷ்டப்படுகிறுர்கள்."

அலங்காரவிநோதி.—"நீங்களாவது, தர்மசீலனவது காளியைப்பற்றி எனக்குச் சமாசாரமனுப்பினல் மிகவும் சந்தோஷப்படுவேன். என்னுடைய தேகஸ்திதி அடிக்கடி இப்படிப்பட்ட பிரயாணங்கள் செய்ய இடங்கொடுக்க மாட்டாது."

சத்தியவதி, தானே கூடியசீக்கிரத்தில் அலங்கார விநோதி வீட்டிற்குப்போய் காளியைப்பற்றி சமாசாரம் சொல்லுகிறே னென்று ஒப்புக்கொண்டாள். அலங்காரவிநோதி உடனே அக்குடிசையை விட்டு வாயலில் நின்று கொண்டிருந்த தன்னுடைய குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.

வீட்டுக்குத் திரும்பிவந்தவுடனே, சத்தியவதி தன் கணவனைப்பார்த்துச்சொல்லுகிறுள்:—

"அலங்கார விநோதி அவ்வளவு பணக்காரியாகவும், தர்மசிந்தனை யுள்ளவளாயு மிருப்பதினுலே எவ்வளவு சுகமடைந் திருக்க வேண்டும்"

தர்மசீலன்.—"அவள் நிரம்பப் பணக்காரியென்று உனக்கு எப்படித் தெரியும்"

சத்தியவதி.—"ஏன் அவளுடைய ஆடைகள் எவ்வளவு விலை யுயர்ந்தனவா யிருந்தன, பார்க்கவில்லையா?"

தர்மசீலன்.—"அது ஒருபெரிதல்ல, நம்மைப்போலவே, தர்மஞ்செய்ய பிரியமிருக்கிறதே யொழிய, திறமையில்லை யென்று அவள் சொல்லவில்லையா?"

சத்தியவதி.—"இருந்தபோதிலும் அவளுடைய ஸ்திதிக்கும், நம்முடைய ஸ்திதிக்கும் ஏணி வைத்துப் பார்க்கவேண்டியது தான். ஏன் அவளுடைய ஒரு ரவிக்கைக்கு ஈடாகுமா என்னுடைய எல்லா சீலைகளும்."

தர்மசீலன்.—"அவள் தன்னுடைய ரவிக்கையிலிவ்வளவு பணம் செலவு பண்ணினல் பிறருக்குக் கொடுக்க சொஞ்சமெனும் அகப்படாதுதான்"

சத்தியவதி.—"நீங்கள் சொல்லுவது அவ்வளவு சரியல்ல. ஒருவர் நல்ல ஆடையாபரணங்கள் தரித்துக்கொண்டிருந்தால் அவர்கள் பெரும்பாலும் பணக்காரர்கள் தானென்று நினைக்க சந்தேகமென்ன!"

தர்மசீலன்.—"எல்லோரும் ஞாயத்தினின்றும், சத்தியத்தினின்றும், வழுவாமல் நடப்பாரானல் நீ சொல்லுவது சரிதான். ஆனல் எவ்வளவு தடவை நாம் வெளிப்படையான சங்கதிகளை மட்டும் பார்த்துவிட்டு உள்ளே ஆராய்ந்து பாராமல் மோசம்போகிறோம். அலங்காரவிநோதி நம்மைப் பார்த்து, காளிக்கு நம்மைப்போலொத்த "தர்மஞ்செய்யப் பிரியமும், திறமையுமுள்ள" சிநேகிதர்கள் அகப்பட்டார்களே யென்று சந்தோஷப்பட வில்லையா. ஆகையால் நாமும் பணக்காரர்கள்தானென்று அவள் நினைத்திருக்க வேண்டும்."

சத்தியவதி.—ஓ! என்னுடையபழுக்காப்புடவையையும், ரவிக்கையையும் பார்த்துவிட்டு ஒருபொழுதும் அப்படி நினைத்திருக்க மாட்டாள்."

தர்மசீலன்.—நல்லது, ஒருக்கால் உன்னுடைய ஆடைகளை அவள்கவனித்துப் பார்த்திருக்க மாட்டாள். உன்னுடைய அழகையும், நீ பசியுள்ளவர்களுக்கு அன்னமிட்டுக் கொண்டிருந்ததையும் மட்டும் பார்த்திருப்பாள்.

சிலநாள் கழிந்தபின்பு காளிவீட்டில் எல்லாம் சந்தோஷமாய்த் தானே விளங்கிற்று, சிலருடைய தர்மசிந்தனையால் செய்யப்பட்ட ஒத்தாசையினுலேயும், பின்னும் சிலருடைய டம்பத்துக்காகசெய்யப்பட்ட ஒத்தாசையினுலேயும் இவள் வீடு எப்பொழுதும் போல சிறப்புற்று விளங்கினது மன்றி, காளியும் எழுந்துட்கார்ந்து தன் தையல்வேலையைச் செய்யத் தொடங்கினுள். வேலைசெய்து தங்கள் மெய் வருத்தத்தால் சம்பாதித்து சீவனம் செய்யும் ஏழைகளுக்கு நல்ல சமயத்தில்செய்த ஒரு சிறிய உபகாரமும் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை விளைவிக்கிறது.

இது இப்படியிருக்க தர்மசீலனே தன் தொழிலில் விடாமுயற்சி செய்துவந்தான். எமலோகப்பட்டணத்தை எட்டிப்பார்த்த காளியை மீண்டும் இவ்வுலகத்திற்குக் கொண்டுவந்த தர்மசீலனுடைய பெயர் நாடெங்கும் பிரசித்தமாயிற்று. இதுவுந்தவிர இதைக்காட்டிலும் வெகு நோயுற்ற ஒருவனை சௌக்கியம் பண்ண எத்தனிக்கும்படியாயிற்று.

ஒருநாள் மரணவஸ்தையிலிருந்த ஒரு மனிதன் வீட்டுக்கு இவனை யிட்டுக்கொண்டு போனுர்கள். அங்கே போனவுடனே ஏழைகளுக்குப் பெரும்பாலுமுள்ள மூடபக்தியும், அறிவின்மையும் அங்கு குடியிருப்பது கண்டு வருத்தமுற்றுன். அந்த நோயாளியைக் கீழே பரப்பப்பட்ட சில வைக்கோலின்மேல் படுக்கச்செய் திருந்தார்கள். அவனுறவினர்களெல்லாம் அவன் படுக்கையைச் சூழ்ந்துகொண்டு விசித்து விசித்து அழுது கொண்டிருந்தார்கள். இதுவுந்தவிர வேறு அநேகர் இந்த வேடிக்கையைப்பார்க்க வந்து கூட்டங்கூடி அங்கிருந்த சிறிது காற்றோட்டத்தையும் அடைத்து விட்டார்கள். சில மாந்தர்கள் தங்களுக் கெப்பொழுது மரணவஸ்தை வந்துவிடுமோ வென்று திகிலடைந்த போதிலும், பிறர்களுடைய மரணத்தைப்பார்க்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறுர்கள். இப்படி யிருக்க, நம்முடைய வைத்தியன், தேனீக்கூட்டம்போல மொய்த்துக்கொண்டிருந்த சனங்களை யெல்லாந் துறத்திவிட்டு, பிறகு தனக்குத்தெரிந்தமட்டில் சீவதாது உண்டு பண்ணும்படியான சில மருந்துகளைக் கொடுத்தான். சற்றுநேரங் கழித்து நோயாளி சில பெருமூச்சுகள்விடத் தலைப்பட்டான். பின்னும் சில நாட்சென்றபின் எல்லோராலும் கைவிடப்பட்ட நோயாளியைத் தர்மசீலன் சௌக்கியப்படுத்தி விட்டானென்று ஊரெங்கும் சொல்லத்தொடங்கினுர்கள்.

(இன்னும் வரும்.)

க. ஜயராமய்யர். B. A.

மாதர்மஞ்சரி.

IV. எலிஸபெத் கில்பெற்ட் சரித்திரம்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப, எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்.*"—குறள்.

"கண்ணிற்சிறந்த உறுப்பில்லை" யென்று வாசித்திருக்கிறோம். ஒரு அன்புள்ள தாயானவள் தன் அருமைக் குழந்தையை 'என் கண்ணே!' என்று சொல்லி மார்போடு அணைத்துக் கொள்வதும், ஒரு புருஷன் தன்காதலியை 'என்கண்ணாட்டி!' என்றழைப்பதும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற பெரியோர் வாக்கும், இன்னும் இவைபோன்ற பலவசனங்களும், கண்ணின் சிறப்பை நன்ருய் விளக்குகின்றன. ஓர் அந்தகனது செய்கைகளைக்கண்டமாத்திரத்தில், கண்ணின் பெருமை வெளிப்படும். இச்சரித்திரம், குழந்தைப் பருவத்திலேயே தன் கண்களை யிழந்த ஓர்பெண்ணைப் பற்றியது என்று சொல்லும்பொழுது, அவளைப்பற்றிச் சரித்திரமெழுதும்படி யென்ன இருக்கலாம் என்று அநேகர் சந்தேகிப்பர். இவ்வளவு முக்கியமான உறுப்பை யிழந்தபின்னும், செய்யப்புகும் காரியங்களில் மனத்திண்மை யிருப்பின் எவ்வளவோசெய்து முடிக்கலா மென்பதையும்; 'குருடனுக்குக் குருடன் வழிகாட்டினற்போலும்' என்றவசனம், சோம்பேறிகளான குருடர்களுக்கு மட்டுந்தான் பொருந்தும் என்பதையும்; 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்ற பழமொழியின் உண்மையையும், இச்சரித்திரத்தால் காண்பிப்போம்.

எலிஸபெத் கில்பெர்ட் என்பவள் இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட் நகரத்தில் 1826-ம் வருஷத்திற் பிறந்தாள். முதலில் அவள் கண்கள் பிரகாசமாயிருந்தன. அவளுக்கு இரண்டாவ வயதானவுடன் ஓர் விதக் காய்ச்சல் வந்தது. அப்பொழுது அவள் தாயாருக்குப் பிரசவகாலமாயிருந்தது. அவள் தகப்பனுர்தான் அவளைச் சாக்கி

* காரியங்களைச் செய்வதில் மனத்திண்மை யுடையார், தாங்கள் அடைய வேண்டுமென்று எண்ணியவற்றை நினைத்தவாறே, எளிதில் அடைவர்.

ரதையாய்ப் போஷித்து வந்தார். அவரில்லாவிட்டால் அவள் இறந்துபோயிருப்பாள். அந்த சுரத்தில் அவள் தன் கண்களை முற்றிலும் இழந்தாள். அவளுக்கு அநேக சகோதரிகளிருந்தார்கள். அவளுடைய தாய்தந்தையர்கள் வித்தியாசமின்றி அவளுக்கும் (மற்ற சகோதரிகளுக்குச் சொல்லிக்கொடுத்ததுபோல) மூன்று பாஷைகளும் சங்கீதமும் படிப்பித்து வந்தார்கள். அவள் தன் அங்கக் குறையை உணரக்கூடாதென்பது அவர்கள் முக்கிய கருத்தாயிருந்தது. அவளும் தன்சகோதரிகளுடன் விளையாடி வந்தாள். அவளுக்கு ஓர் அபாயமும் நேரிடாமல் பத்திரமாய்க் காத்துக்கொள்வது கூட அவளுக்குத் தெரியாமற் செய்து வந்தார்கள். பிறருதவி ஆவசியகமென்று அவளுணரவில்லை. அவளுடைய உற்சாகமும் மனதைரியமும் குறையவில்லை. ஆனால் அவளுடைய சகோதரிகள் தகுந்த பருவத்தை யடைந்தகாலம், அவளுக்கு விசனத்தையே விளைக்கத்தக்கதாயிருந்தது. அவர்களைப்போல் வெளியே உலாவி, பலருடன் பழகித், தன் மனதுக்கு இசைந்தவரை மணம் புரிந்துகொள்ள முடியவில்லை. அவளை யார் கலியாணஞ்செய்து கொள்வார்கள்? அநேக நாட்களைக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கழித்தாள். ஆனால், சீக்கிரம் அவள் மனவருத்தத்தை நீக்க மருந்து தேடிக்கொண்டாள். அதென்ன வெனில், தன்னைப்போன்ற குருடர் குருடிகளின் கஷ்டங்களை நிவிர்த்திக்கும் பொருட்டு முயற்சிக்கத் தொடங்கினாள். பிறருக்கு நன்மை விளைப்பதில் தான் சந்தோஷத்தையும் திருப்தியையும் அடைந்தாள்.

ஓர் சமீபபந்து இறக்குமுன் இவளுக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுத்துவிட்டுப் போனாள். இந்தப்பணம் இல்லாவிட்டால் எலிஸபெத் ஒருநன்மையும் செய்திருக்க முடியாது. தன் தாய் தந்தையர்கள் எவ்வளவு அன்புள்ளவர்களா யிருந்த போதிலும், அவர்களுடைய பணத்தைத் தாராளமாய்ச் செலவிட அவள் மனம் சம்மதித்திராது. தனக்குப் பணம் வந்தவுடன் தன்னிஷ்டப்படி செலவிடச் சமயம் வாய்த்தது. அவளுடைய கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்றப் பணமிருந்தது.

இந்த சமயத்தில் பிரான்ஸ் தேசத்தில் ஒருவர் குருடர் எழுதும்படி ஓர் யந்திரம் உண்டு பண்ணினார். எலிஸபெத் அதன் மூலமாய் லெவி என்ற ஓர் குருடருக்கு எழுதத்தொடங்கினாள். அவர் அவளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவி தானும் தன் மனைவியும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார். அன்றியும், மாதர் நிலைமையைவிருத்தி செய்வதில் முயற்சித்து வந்த மிஸ் பாத்தர்ஸ்ட் என்பவளும் இவளுக்கு உதவி செய்தாள். குருடர்களாலான மட்டும் தங்கள் நிலைமையை விருத்திசெய்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் எலிஸபெதினுடைய உயிர் வாழ்க்கை மேம்பாடடைந்தது.

அக்காலத்தில் குருடர்களின் நிலைமையை விருத்தி செய்வதற்கு ஒருவித ஏற்பாடுமில்லை. இப்பொழுது இங்கிலாந்திலுள்ள குருடர் கலாசாலை அப்பொழுது கிடையாது. குருடர்கள், தங்கள் ஜீவனத்துக்கு வேண்டியதை ஒருவர் உதவியின்றிச் சம்பாதித்துக் கொள்ளும்படி, செய்யவேண்டுமென்று எலிஸபெத் விரும்பினாள். சங்கீதம் குருடர்களுக்கு நல்ல ஜீவனம். பிறவிக் குருடர்களும், இளமையிற்கண் ணிழந்தோர்களும், சங்கீதம் கற்றுக்கொண்டு அதன் மூலமாய் ஒருவர் உதவியின்றி ஜீவிக்கலாம். ஆனால், முதிர்ந்தவயதில் கண்ணை யிழந்தோர்கள் சங்கீதம் கற்றுக்கொள்வது எளிதல்ல. அப்படிப்பட்டவர்களுக்குத் தக்க ஜீவனங்களை யுண்டுபண்ணும் பொருட்டுத்தான் எலிஸபெத் முக்கியமாய்ப் பிரயாசப்பட்டாள். முதலில், குருடர்களால் செய்யப்பட்ட பாய்கள், கூடைகள், துடைப்பங்கள் முதலிய சாமான்களை வாங்கி விற்கும் பொருட்டு ஓரிடம் வாடகைக்குத் திட்டஞ்செய்து கொண்டாள். லெவி துரையும், பாரார் என்ற ஓர்குருட்டுத்தச்சனும் அவளுக்கு உதவிசெய்தார்கள். தன்னாலியன்ற மட்டும் அந்தச் சாமான்களை விற்பதில் உழைத்தாள். இது எளிதல்ல. அநேக குருடர்களுக்குக் கைத்தொழில் கற்றுக்கொடுக்கல் வேண்டியதா யிருந்தது. அநேகர் சரீரத்திட மில்லாதவர்களா யிருந்தார்கள். சிலர், நம் தேசத்தாரில் அநேகரைப்போல, வேலைசெய்து பிழைப்

பதிலும் [illegible]சையெடுப்பது நல்லதென்று நினைத்திருந்தார். [illegible] சாதாரண ஊக்கத்தை யுடையவர் இந்த வ[illegible]தங்களைக்கண்டு மலைத்து விடுவார்கள். ஆனால் [illegible]லிஸபெத் சிறிதும் அதைரியப்படவில்லை, த[illegible] கீழ் வேலை செய்துவந்த குருடர்களில் அநேகர் [illegible]குப் போதுமானமட்டுஞ் சம்பாதித்துக்கொள்[illegible]த்தி யற்றவரா யிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களைத் தன்கையிலிருந்து பணங் கொடுத்துக் காப்பாற்றினாள்.

பிரான்ஸ்தேசத்திற் செய்யப்பட்ட ஒருவிதக் கூடை இங்கிலாந்தில் அதிகமாய் விலைப்போயிற்று. உடனே லெவி துரையும் அவர் மனைவியும், அத்தேசத்துக்குப் புறப்பட்டு[illegible]போய், வெகு கஷ்டத்[illegible], அத்தேசத்துப் பாஷை தெரியாதவர்களாயிருந்தும், அக்கூடை செய்யப்படும் இடத்தைக் கண்டுபிடித்துத் தாங்கள் அது செய்யும் விதத்தைக் கற்றுக்கொண்டு, இங்கிலாந்துக்கு வந்து, தனக்கும் எலிஸபெத்துக்கும் தெரிந்த குருட்டு வேலையாளிகளுக் கெல்லாம் சொல்லிக்கொடுத்தார்கள்.

எலிஸபெத் ஆரம்பித்த வேலை சீக்கிரம் பலத்தை யடைந்தது. அவளால் இதுவிஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சபை, மகாராணியின் பேருதவியைப் பெற்றது. அச்சபை யிப்பொழுது செழித்தோங்குகிறது. அதனால் விளையும் நன்மை அளப்பரிதாயிருக்கின்றது. அதில் வேலை செய்யும் குருடர்களாற்செய்யப்பட்ட சாமான்கள் சரியானபடி விலைப்போய் அவர்கள் ஜீவனத்துக்கு வேண்டிய இலாபத்தை யளிப்பதுமன்றி, சொற்பக் கொடைப்பணத்துடன், வேலைசெய்யமுடியாத குருடர்களுக்குக்கூட ஜீவனத்துக்கு வழியாகிறது. எலிஸபெத் கில்பேர்ட் என்ற குருட்டுப்பெண், தன் முயற்சியினாலும் மனத்திண்மையினாலும், பிச்சையெடுத்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்த குருடர்கள் அநேகர், நாணயமாய் ஒருவர் உதவியுமின்றி ஜீவனஞ் செய்வதற்குண்டான வழியை ஏற்படுத்தி அழியாக் கீர்த்தியை யடைந்தாள். பிறருக்கு நன்மை விளைப்பதில் தான் சந்தோஷத்தையும் மனதிருப்தியையும் தேடிக்கொண்டாள். அவள் அநேகவருஷங்களாய் நோய்களால் வருத்தப்பட்டு, எழுவருஷங்களுக்குமுன், 1885-ம் வருஷத்தில் இறந்துபோனாள்.

இச்சரித்திரத்தை வாசிக்கும் கண்ணுள்ள பாக்கியவான்களில் நூற்றி லொருவரேனும், பிறருக்கு நன்மைவிளைப்பதில் எலிஸபெத் கில்பேர்ட் என்ற குருட்டுப்பெண் அடைந்த சந்தோஷத்தில [illegible] அதே மூலமாய் அடைந்து, பிறர் நன்மையைத் தேடுவாராயின், இந்நாடு எவ்வளவோ முன்னுக்கு வந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை.

பேரேரி.

சாவித்திரி சரித்திரம்.

—o—

நாலாவது அதிகாரம்.

ஒரு நாள்கூடத்தவறாமல் நடேசன் எனக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக் கொண்டு வந்தான். அக்காலத்தில் நான் அடைந்த திருப்தியையும் மனமகிழ்ச்சியையும்பற்றி எந்தவேளையில் நினைத்தாலும் எனக்குச் சந்தோஷம் உண்டாகின்றது; துக்கமெல்லாம் மாறிப்போய் விடுகிறது. அப்பொழுது, நான் காலையிலெழுந்திருந்தவுடன், வீட்டில் நித்தியமாய் உபயோகிக்கப்படும் பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு வாய்க்காலுக்குப்போய் அவைகளைச் சுத்திசெய்து, நானும் பல்தேய்த்து முகங்கழுவியானபின், வீட்டுக்குத் திரும்பி வருவேன். நான் சுத்தி செய்ததில் அந்தப் பாத்திரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு பிரகாசத்தை யடைந்தனவோ, அவ்வளவுக் கவ்வளவு எனக்கும் சந்தோஷமுண்டாகும். வீட்டுக்கு வந்து சாப்பிட்டுத் தலையை வாரிப்பின்னிக்கொண்டானபின், என் அத்தையம்மாளுடன் வாய்க்காலிலிருந்து நீர் மொண்டு கொண்டு வருவேன். நான் பெரிய குடத்தில் ஜலங்கொண்டு வருவதைப்பற்றிக் கர்வத்தையடைந்திருந்தேன். நான் குதித்துக் குதித்து நடப்பதாக என் தோழிகள் பரிகாசஞ் செய்வதுண்டு. பிற்பாடு நான் புஸ்தகமும் 'சிலேட்' பலகையும் எடுத்துக்கொண்டு மாடியில் கோபாலனும் நடேசனும் வாசிக்கும் இடத்துக்குப்போவேன். நடேசன் எனக்கு ஒரு மணிநேரம் பாடஞ் சொல்லித் தருவான். சிலநாள்களில் கோபாலன் சொல்லித்தருவான். முந்தின நாட்பாடத்தைச் சரியாய் ஒப்புவித்து விட்ட நாள்களில் எனக்குண்டான கர்வத்தைப் பற்றி நினைக்கும் பொழுது சிரிப்பு வருகிறது. ஒருநாள் கோபாலன் போட்ட ஐந்து கணக்கு விடைகளுக்கும் பிசகாமல் பதிற் சொல்லி விட்டேன். உடனே அடங்காச் சந்தோஷத்துடன்கண்டபடி குதிக்கத்தொடங்கினேன்.

கோபாலன் விளையாட்டாக:—"சாவித்திரி! 'தள்ளினமாமெபோதிசுமக்கும்'. அதிகமாய்த் தள்ளாதே. கணக்கு மட்டுந் தெரிந்தாற் போதுமா? இன்னும்'கொன்றை வேந்தன்' ஒப்புவிக்கவில்லையே? நீ இந்தப்படிப்புக்கு இவ்வளவு தள்ளுகிறாயே; அதிகமாய்ப்படித்து விட்டால் என்னமாய் முடியுமோ தெரியவில்லை. உன் சித்தியைப்போல் ஆகமாட்டாயோ?" என்றான். செங்கமலத்தைப்பற்றிச் சொன்னவுடன், வெட்கத்தினால் எனக்குக் கண்ணீர் பெருகிற்று. கோபாலனுக்கு அவளை நன்றாய்த் தெரியாது. நானோ, அவளை முற்றிலும் அறிந்திருந்தேன். அவள் பெரிய புஸ்தகங்களை வைத்து வாசிப்பதை நான்பார்த்திருந்தேன். அவ்வளவு கல்வியோடு அவள் செய்த விஷயங்களைப் பற்றியோசித்தவுடன் என் கர்வம் எல்லாம் குன்றிப் போய்விட்டது. அப்பொழுது தான், கோவிந்தபுரத்தில் சிலர் 'செங்கமலம் தனக்கு அர்த்தமாகாத புஸ்தகங்களையெல்லாம் வாசித்துத் தெரிந்துகொள்வதுபோல் பாசாங்கு பண்ணுகிறாள்,' என்று சொன்னது மெய்யாயிருக்கலாமென்று நானெண்ணினேன். படித்துவிட்டால் வேறொன்றும் வேண்டாமென்ற எண்ணம் என்மனதிற் குடிகொண்டிருந்தது. கல்வியைப்பார்க்கிலும் சிறந்தது கிடையாதென்று நினைத்திருந்தேன். கோபாலனுடைய வாத்தியாருக்குத் தெரிந்தமட்டும் நானும் படிக்கவேண்டுமென்பது என் பேராசையாயிருந்தது. அவ்வளவு வாசித்து விட்டால் பிறந்ததின் பயன் பெற்றாய்விடும் என்பது என் எண்ணம், பெரிய புஸ்தகங்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் நான் பெருமூச்சு விடுவதுண்டு. இந்த எண்ணத்துடன் நான்சொன்னதாவது:— "கோபாலா! சித்தி செங்கமலம் மிகப்படித்தவளென்று நீ நினையாதே. நம்மூரார் அநேகர் அவளைப் பாசாங்குக்காரியென்று சொன்னார்கள். மிகப்படித்தவளாயிருந்தால் அவள் அப்படி நடப்பாளா?" என்றேன். உடனே நடேசன் வாசித்துக்கொண்டிருந்த புஸ்தகத்தை 'மேசை'மேல் எறிந்துவிட்டுச்சொன்னதாவது:—

"ஓகோ! பெண்டாட்டி! உன் எண்ணம் அப்படியோ? இதற்கு முன்பும், இரண்டு மூன்று தடவை பார்த்தேன். படித்து விட்டால் சகல நற்குணங்களும் வந்து விடுமென்று நினைத்திருக்கிறாய். "நம்மையாளும் அங்கிலேயர் தேசத்தில் பேக்கன் என்றொரு பிரபு விருந்தார், கல்வித்தேர்ச்சியிலும் சுயபுத்தியிலும் யாவரிலுஞ் சிறந்தவரா யிருந்தார். உலகத்தில் இதுவரையும் தோன்றிய புத்திமான்கள் ஒருவரும் அவருக்கு ஈடாகாரென்று சொல்வதுண்டு அப்பிரபு தன் புத்தி வல்லமையினால் சிரேஷ்ட நியாயாதிபதியின் ஸ்தானத்தை யடைந்திருந்தார். அவர் அநேகபிரபந்தங்கள் இயற்றியிருக்கிறார். ஆங்கிலேய[illegible]க அவரை தத்துவ சாஸ்திரத்துக்கு மூல கர்[illegible]களைப் பற்றி மதிப்பதுண்டு. அவர் சன்மார்க்க[illegible]ர். ஆனால் அப் ஓர் சிறந்த பிரபந்தமெழுதியிரு[illegible]த் தனமாயும் நட பிரபுவே, இழிவாயும் அயோக்[illegible]த்தியோகத்திலிருந்ததற்காக நியாயாதிபதி [illegible] பாடப்பட்டார். பார்த்தள்ளப்பட்டு, அபராதமும் [illegible]தாயா! அந்[illegible]ரின் கல்வியெல்லாம்பிர[illegible]படவில்லை. செல்வம் பொறிபும்சிரேஷ்ட நியாயாதிபதி உத்தியோகத்திலிருந்துகொண்டே 'இலஞ்சம்' வாங்கினார். அவர் விஷயத்தில் அவரியற்றிய சன்மார்க்கப் பிரபந்தகளெல்லாம் 'எட்டுச்சுரைக்காய்' ஆய்விட்டன. அவருடைய கல்வித்திறமையையும் புத்தி விசாலத்தையும் பற்றி யோசிக்கும்பொழுது, உன் படிப்பும் என் படிப்பும் எம்மட்டு? அப்படியிருந்தும் தாழ்ந்த ஸ்திதியிலிருக்கும், கல்விப்ப[illegible]ல்லாத அநேகர், தங்கள் நாணயமான செய்கைகளால், [illegible]ரை மிஞ்சிவிட்டார்கள். பாக்கியோ[illegible]மென்று கர்வங் கொள்ளாதே. சற்குணம் கல்வியிலுஞ் சிறந்தது. அதைத் தான் எவ்விதமாவது தேடவேண்டும். கோபாலா! ஒன்பது மணியாய்விட்டது. இனிமேல் ஸ்நானம் பண்ணிச், சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாமா? வாய்க்காலுக்குப் போவோமா." என்று சொல்லிக்கொண்டே நடேசன் எழுந்திருந்தான்.

நடேசனும் கோபாலனும் பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கும் வேளைகளில், நான் என் தோழிகளுடன் 'பல்லாங் குழி,' 'கட்டம்', 'சோடு', 'கழச்சி' முதலியவை விளையாடுவேன்; அல்லது என் அத்தையம்மாளிடத்தில்,'அல்லியரசாணிமாலை', 'புரந்தரன் களவுமாலை', 'வள்ளியம்மன்சோபனம்'முதலிய பாட்டுக்களைச் சொல்லிக் கொள்வேன்; அல்லதுஎன்பாடங்களைப் படிப்பேன். இவ்விதமாய்க் கவலையற்று வாசித்துக் கொண்டிருந்தேன்.

ஐயோ! அக்காலத்தில், அற்ப விஷயங்களுக்கெல்லாம் தன்னை யறியாமற் பொங்கின சந்தோஷத்தை இனிமேல் அடையும் நாளும் வருமோ! இனிமேல் ஒருநாளாவது அப்படிக் கவலையற்றிருக்கக் கிடைக்குமோ? அப்பொழுதுங் கூட முற்றிலுங் கவலையற்றிருக்க வில்லை. கோபாலனாவது, என் அத்தையாவது, நான் செய்யுந்தப்பிதங்களுக்காகக் கோபித்துப்பேசினால், அன்று முழுவதும் விசனமாகவே யிருக்கும். அதுவும்ஒருவிசனமோ? உடனேகொஞ்சிப்பேசுவார்கள்: மனம் குளிர்ந்துவிடும். வீட்டுவேலைகளிலும், பாடங்கள் படிப்பதிலும் உண்டாகும் கவலைகளெல்லாம் அவை செய்தானவுடன்மாறிவிடும். சிலசமயங்களில் என் தகப்பனாரைப்பற்றி நினைப்பேன். செங்கமலத்தின் தாயார் சொன்ன சொற்களும், அவர் பிற்பாடு பட்ட மனவருத்தமும், திருவநந்தபுரக் கடிதம் வந்தவுடன் அவரும் நானும் அழுததும், உடனே ஞாபகத்துக்கு வரும். கொல்லையில் கிணத்தருகிலாவது, அல்லது மாடியில் ஓர் மூலையிலாவது போயிருந்துகொண்டு விசித்து விசித்தழுவேன். துக்கம் மூச்சுவிட முடியாமல், நெஞ்சையடைக்கும். கொஞ்ச நேரத்தில் அழுகிறதின்காரணம் மறந்துபோய்விடும்; எதாவது சேஷ்டை செய்துகொண்டே விசித்துக் கொண்டிருப்பேன்; பிற்பாடு அதுவும் தானகவே நின்றுவிடும்; விளையாடவாவது படிக்கவாவதுபோய் விடுவேன். இவ்விதமாய் இரண்டு மூன்று மாதம் படித்தவுடன், எனக்குத் தமிழ் எழுதக் கொஞ்சம் தெரிந்தது. உடனே என்தகப்பனாருக்குக் கடிதம் எழுதவேண்டுமென்று யோசித்தேன். கோபாலனும் நடேசனும் நானெழுதிய கடிதத்தைத் திருத்தாமல் அப்படியே அனுப்புவதாகச் சொன்னார்கள். முதற் கடிதமெழுத எனக்கு இரண்டுநாள் பிடித்தது. அது இப்பொழுது என் கைவச மிருக்கிறது. அதைக் கீழே வரைகிறேன். அதில் ஏராளமாய் மைப்பொட்டுக்க ளிருக்கின்றன. எவ்வளவோ எழுத்துக்களை அடித்திருக்கிறேன். அடிக்குத் தப்பின எழுத்துக்களில் அநேகம் கோழி கிண்டினாற்போல் சொரூபம் தெரியாமலிருக்கின்றன. இவற்றையெல்லாம் அச்சிற்பதிப்பது வருத்தமாயிருப்பதால், கணக்கிடமுடியாத அடிகளும் பொட்டுக்களும் இருப்பதாக நினைத்துக்கொள்ளவேண்டும்:—

கடிதம். *

"யெங்கோ டஅப் பாவுக்குசே வுக்குரேன் ஞங் கள்யெ ல்லாரும் சௌத் கிமாய் எருக்கரம் னீற். ஷெ மாமய் எருப்பத்தர்கு யெழுதுணம்ஞ ந் வாசிக்கர து உமக்குதெறியாதே நடே சன்சொ ல்லித் ராங்அவன் கோபாலன் யிஷ்டங்கணக்கும் படிக்க ரேங்வேறு. விசெஷ மிலெ யிப்

படிகு உம்முடை
யகுழன்
தைசாவித்திரி."

இந்தக்கடிதத்தை யனுப்பும்படி நான் கோபாலன் வசம் கொடுத்தவுடன், அவனும் நடேசனும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். [illegible] யனுபபக் கூடாதென்று சொன்னேன். அவர்கள் அதைக் கேட்காமல் அனுப்பிவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் அதிகமாய்ச் சிரித்ததைக்கண்டு நானும் காரணமின்றிச் சிரிக்கத்தொடங்கினேன். அன்றுமுழுவதும் சிரிப்பாகவேயிருந்தது.

நான் கடிதமெழுதி யொருவாரமாகுமுன் என் தகப்பனார் கோபாலனுக்குக் கடிதமெழுதினார். அந்தக் கடிதத்தையும் கீழேவரைகிறேன்:—

உ

திருவநந்தபுரம்
ஆவணிமீ—2வ

சிரஞ்சீவி குழந்தை கோபாலனுக்கு ஸர்வாபீஷ்டமும் உண்டாவதாக அநேக ஆசிர்வாதம்.

இவடம் க்ஷேமம். அவடத்தில் நீயும் சாவித்திரியும் சங்கரியும் க்ஷேமமாயிருக்கிற விபரத்துக்கு உடனே பதிலெழுதவேண்டியது. நீயும் சாவித்திரியும் எழுதிய லிகிதங்கள்* வந்து சேர்ந்தது. பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாமற் செய்ய முடியவில்லையென்றும் மிஷன் பாதிரிதுரை தயவின்பேரில் அரைச் சம்பளம் கொடுத்து வருகிறதாகவும் எழுதியிருக்கிறாய். அப்படியே செய்யவும். நான் இன்னும் இரண்டு வாரத்தில் இருபதரூ உண்டியல் அனுப்புகிறேன் உனக்கு வேண்டிய புஸ்தகங்கள் இரவல் வாங்க வேண்டியதில்லை. விலைக்கே வாங்கிக்கொள். எப்படியாவது இந்த வருஷம் பரிக்ஷையை ஒப்பேற்றிவிடு.

யாராவது அவடம் வரும்பொழுது நல்ல பிலாப்பழம் ஒன்று அனுப்புகிறேன். நீ அமிதமாய் கண்முழித்துப் படிக்கவேண்டாம். தேகத்தை சௌக்கியமாய் பார்த்துக்கொள்.

சாவித்திரியை யார் வாசிக்கச் சொன்னது. பெண்கள் வாசித்தால் கெட்டுப்போவார்கள். அவள் வாசிப்பதை உடனே நிறுத்தவும். நடேசன் என்பவன் யார். அவன் வர்த்தமானமென்ன. இது விஷயங்களுக்கும் அவடத்துக்ஷேமாதிசயங்களுக்கும் உடனே பதிலெழுதவும். நீ உயர்ந்தகிளாஸில் ஒப்பேறினால் மேல் பரிக்ஷக்கு சம்பளமில்லாமல் வாசிக்கலாமென்று கேள்விப்படுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சி பண்ணவும்.

வெறும் அநேகஆசிர்வாதம்.
வெங்கிடாசலபதிசகாயம்.
சுப்பய்யர்.

இந்தக்கடிதம் வந்தவுடன் எனக்கு விசனம் இவ்வளவென்றில்லை. செங்கமலத்தின் செய்கைகளுக்காக நான் படிப்பை நிறுத்தவேண்டியதாயிற்று. இக்கடிதத்துக்கு நாங்கள் பதிலெழுதியதை அடுத்த அதிகாரத்திற் கூறுகிறேன்.

சாவித்திரி.

---

* சரியானபடி:— "என்னுடைய அப்பாவுக்குச் சேவிக்கிறேன். நாங்கள் எல்லாரும் சௌக்கியமா யிருக்கிறோம். நீர் க்ஷேமமாயிருப்பதற்கு எழுதவேணும். நான் வாசிக்கிறது உமக்குத் தெரியாதே? நடேசன் சொல்லித்தருகிறான். அவன் கோபாலனுடைய இஷ்டன். கணக்கும் படிக்கிறேன், வேறு விசேஷமில்லை.

இப்படிக்கு உம்முடைய குழந்தை
சாவித்திரி."

* லிகிதம்—கடிதம்.

தமிழ்மொழிவளர்த்தல்,

அல்லது

தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்யும் மார்க்கங்கள்.

(124-வது பக்கத் தொடர்ச்சி.)

எட்டாவது, தமிழ்ப் புஸ்தகசாலைகள், அல்லது, புஸ்தகாலயங்கள் ஊர்தோறும் ஏற்படுத்தி, மாசாந்தரம் சொற்ப ஊதியம் பெற்றுக்கொண்டோ, அல்லது இலவசமாகவோ, புஸ்தகங்களை வாசிக்கும்படி ஜனங்களுக்குத் தூண்டுதல் செய்தல், தமிழ் பாஷாபிவிர்த்திக்கு மற்றொரு நல்ல மார்க்கமென்று சொல்லலாம். இதற்குத்தான் அங்கிலேயத்தில் 'லைபிரெரி' (Library) என்று பெயர்வழங்கும். அங்கிலேயராஜதானியாகிய 'லண்டன்' பட்டணத்தில் ஒரு புஸ்தகாலயம் 22-மைல் தூரம் நிரப்பக்கூடிய பீரோக்களிலுள்ள புஸ்தகத்தொகை யடங்கியிருக்கும் அற்புதத்தையும், பின்னொரு பட்டணத்தில் அதேவிதமாக ௬௦௨-மைலுக்கு நீளக்கூடிய புஸ்தகத்தொகுதியுடைய ஒருபுஸ்தகாலயத்தின் அற்புதத்தையும், இன்னும் இவை போன்ற பிரமிக்கத்தக்க கல்வி ஸ்தாபனங்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அனேகம் இருப்பதாக 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் யாவரும் வாசித்திருப்போமே. தமிழ்நாட்டிலும் இவ்விதஸ்தாபனங்கள் இப்போது சிறிய அளவிலாகிலும் ஏற்படுத்துவதனால் உண்டாகும் நன்மை என்னவெனில்; முதலாவது, தமிழ்பாஷா நூல்களைப் படிப்பதில் ஞானமுடையவராயும், ஆகிலும் பெருந்தொகைகொடுத்துத் தமிழ் புஸ்தகங்களை விலைக்கு வாங்கிவாசிக்க அசக்தராயும் இருக்கக்கூடிய அனேக பாமரஜனங்களுக்குத் தமிழ் பாஷையில் சுலபமாய் விற்பத்தியடைவதற்குப் பெரியசகாயமுண்டாம். இதில், தமிழிலுள்ள எப்படிப்பட்ட புஸ்தகங்களும், எல்லாப் புஸ்தகங்களும், தமிழில் பிரசுரித்து வரும் நானாவிதமான பத்திரிகைகளும் வரவழைத்து வைக்கலாம். இவைகள் இத்தேசத்தில் தற்காலம் நிகழ்ந்து வரும் சங்கதிகளையும் இத[illegible] சமாசாரங்களையும் ஜனங்களுக்கு உணர்த்திக்கொண்டு வரும். [illegible]ன்சொன்ன வழிகளைப்போல அவ்வளவு பெருந்தொகை செல்லாமல், இது எளிதிற் கைகூடி வருவதாம். இப்படிப்பட்ட புஸ்தகாலயங்கள் ஸ்தாபனம் செய்வதனால், அவை தமிழில் விருப்பமுடையோருக்கு விற்பத்தியைக்கொடுப்பது மன்றி, விருப்பமில்லாதவருக்கு, அதனைப் பிறப்பிக்கக் கூடியதுமாம். அது எப்படியென்றால், தேவாலயங்களில் உற்சவம் நடக்கும்போது வேடிக்கைவைத்துக் காண்பது எப்படி பக்தியில்லாப் பாமரஜனங்களை ஆலயத்திற்கு வசீகரம் செய்து பிற்பாடு அவைமூலமாக அவர்களுக்கு தெய்வத் திருப்பணிவிடைகள் காணக்கிடைத்து தம்மையறியாமல் பக்தியை விளைவிக்கின்றதோ, அப்படிப்போலவே, புஸ்தகாலயங்களிலும் பார்க்கப் பசந்தாகிய அனேக புஸ்தகங்கள் பந்திபந்தியாய் பீரோக்களில் அடுக்கியிருப்பதும், பத்திரிகைகளின் சமாசாரங்களும் வேடிக்கை விநோதங்களும், ஆட்கள் நடமாடுதலும், மேலைக்கு அக்கிரந்தங்களில் ஊடாடாதவருக்குத் தம்மையறியாமல் தாற்பரியம் பிறப்பிக்க ஏற்ற சாதனங்களாகின்றன. தாற்பரியம் எப்போது உதித்ததோ, அதற்குச்சகாயமாகப் புஸ்தகங்களும் எப்போது எளிதில் அகப்பட்டதோ, அப்போது விற்பத்தியென்பதும் அவ்விடத்திலிருந்து வெகுதூரமில்லையென்று தைரியமாய்ச் சொல்லலாம். விற்பத்தியுண்டானால், பொது நன்மைக்கு எவ்வளவும் துணைக்கருவியாயிருக்கின்ற இன்று கூடிய சங்கம்போல, அனேகசங்கங்கள் கூடச்செய்து மதவிஷயமாயாவது, சாஸ்திரவிஷயமாயாவது, இச்சங்கத்தைப்போல் பாஷா விஷயமாயாவது, அல்லது, பொதுநன்மை கருதும் மற்றெவ்விஷயமாயாவது, சுதேசப்பொது நலங்களை யெடுத்துப் பேசிநாம் எண்ணமிடும் உத்தேசமெல்லாம் உருவெடுத்துப் பிரத்தியக்ஷத்தில் நிலைபெறும். ஆகையால், இவ்விதச்சங்கங்கள் கூடுவதே தமிழ் பாஷாபிவிர்த்திக்கு,

ஒன்பதாவது மார்க்கமாக எடுத்துக்கொண்டு அதைக்குறித்து எனது தாழ்மையான அபிப்பிராயத்தைச் சிறிது சொல்லுவேன். இவ்விதசங்கங்கள் கூடிப் பேசுவதனால் கைகூடும் உத்தம காரியங்கள் இத்தனையென்று மட்டிட்டளவுசொல்ல ஒருவராலும் ஏலாது. கூட்டங் கூடாமலும், அபிப்பிராயங்களை உண்மையோடு வெளியிட்டுக் கலந்துகொள்ளாமலும் உலகத்திற்கு நன்மைபயப்பதாகிய ஒரு காரியமும் சாத்தியப்படாது. பொது நன்மைக்கும் சுதேசத்திற்கும் சற்றேனும் வாஞ்சையில்லாதவன், பூமியிற் பிறந்தும் பிறவாதவன். சுயப்பிரயோஜனத்தை மாத்திரமே நாடுவதற்கு இம்மானிட உறுப்புகளும் இந்த விவேகமும் மனோசக்திகளும் வேண்டுமென்றில்லை. ஏனெனில், சுயப்பிரயோஜனமென்பது மிருகங்களாதியான எண்ணாயிரங்கோடி ஜீவராசிகளும் நாடிக்கொள்[illegible] பின் இந்தமானிட உடம்பை நாம் பெற்றுக்கொண்டதற்கு விசேஷப்பிரயோஜனமென்ன வென்றால், நமக்கு சுயமாக வேண்டிய காரியங்களை அகத்தியம் பார்த்துக்கொண்டும், அதோடு நில்லமால், அதற்குமேலும் நமக்குச்சகோதரர் என்று சொல்லத்தகும் நம் நாட்டாரிடத்தும் பரோபகார சிந்தை பூண்டொழுகுவதே. இதுவே மேன்மையான நோக்கம். இதற்காகவே, நாம் இந்தமானிட உடம்பைப் பெற்றது. இதற்காகவே, கடவுள் நம்மை மற்ற ஜீவராசிகளிலும் மேலாக சிருஷ்டித்தார். ஆகையால்,

எள்ளளவேனும் அப்பரோபகாரசிந்தை யில்லாதவனாய், தானே உண்டு, உடுத்து, உறங்கி நத்தைபோல் தனக்குள்ளே ஒடுங்கித் திரிகின்ற பேதையை இரண்டுகால் மிருகமென்று சொல்லத் தடையென்ன? அப்படிப்பட்டவனுக்கு எவ்வளவுதான் தெய்வபக்தி யிருந்தாலும், ஈசன் அவனுக்கு முழுவருள் செய்வதரிது. ஏனெனில், உலகர் தனக்குச்செய்யும் பூஜையில் ஈசன் தனது ஆத்மகோடிகளிடத்திற் காட்டும் பேரன்பையே முக்கியமான அம்சமாகக் கொள்ளுவார். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியத்தை மாத்திரம் நாடிக்கொண்டிருந்திருப்பரானால் உலகம் அன்றே நின்று போயிருக்கும். ஏனெனில், திருடருக்கும் தீயருக்கும் உலகம் உட்பட்டால், அது எத்தனைநாள் வாழ்வுகொண்டு செல்லும்? அப்புறம் நீதி எங்கே, பொது நன்மைஎங்கே, க்ஷேமம் எங்கே? இப்போது நமது பொருளைப் பிறன் அபகரிக்காமலும், நம்மைப் பிறன் வருத்தாமலும். நம்மைக்காப்பாற்றும் கூட்டத்தாருக்கே, நாம் ராஜாங்க மென்றும், சர்க்காரென்றும், கவர்ன்மெண்டென்றும் பெயர் வழங்குகிறோம். சர்க்காரென்பது, உலகநடபடி யறிந்து, பொது நன்மைக்கேற்ற சட்டதிட்டங்களேற்படுத்தி நீதி செலுத்துமொருடைய கூட்டம்; இதுபோலவே, வியாபார மென்பது கூட்டுத்தொழில், படையென்பது படைவீரர் கூட்டம், வித்தையிருப்பது வித்வான்கள் கூட்டத்தில், சங்கமென்பது எதாவது பொதுநன்மை நாடினவர் சமுகம், உலகமென்பதே அறிவுடையோர் கூட்டம். எவ்விஷயத்திலும், பலபேர் மனமொத்துக் கூடி உழைத்தால்தான், காரியம் கைகூடும். ஒரு விறகை யொடித்தாலும் ஒரு கட்டு விறகை யொடிப்பதரிது. ஒருவர் அபிப்பிராயம்செல்லாதாயினும், சபையோர் மனமெல்லாம் ஒத்துக்கூடிப் பொது நன்மை மேற்கொண்டு நின்றால், அந்த நன்மையை உலகம் ஏற்று நடத்தும். இன்னும் சங்கங் கூடுவதனால், மனக்கலப்புண்டாகும், ஒற்றுமை ஒத்துக்கூடும், ஊக்கம் ஓங்கி வளரும், சிறுமை சிறு இப்போகும், அநீதி அகன்றுபோகும். பொறாமை பொறுமலோடும், மோசம் நாசமடையும், உண்மை உள்ளபடி வெளிப்படும், தர்மம் தலையெடுக்கும், மதம் வல்லமைபெறும், கலை கலைபோல் வளரும், தொழிலே சுகந்தரும், வாக்கு வல்லமைபெறும், எடுத்தகாரியம் அடுத்துக்கூடும், கல்வி கசடறும், செல்வம் செழிப்படையும், பாஷை படர்ந்தோங்கும், தேசம் க்ஷேமமடையும், அறிவு அகழங்கொள்ளும், அன்பு அடியுறைக்கும். கண்ணியம் கைகூடிவரும், புண்ணியம் பூர்த்தியாகும், நன்மை மேன்மேல் வளரும், ஜன்மம் ஸபலமாகும். இன்னும் இவைபோன்ற அளவிறந்த நன்மைகளை ஒருங்கே தரும்படியான இத்தகையசங்கங்களின் பெருமையை யாரால் விவரிக்கமுடியும்? இப்போது இந்தியாவில் நமது இந்துமதத்தைக் காப்பாற்றவும் நிலை நாட்டவும் கூட்டம்கூடியிருக்கின்றார்கள். அன்றியும், இராஜாங்க விஷயத்திலும் இந்துக்களாகிய நமது குறைகளை யெடுத்துக்கூறக் 'காங்கிரஸ்' என்னும் மகாசபை கூடியிருக்கிறார்கள். ஆனால், இவ்விரண்டிற்கும் இன்றியமையாத சாதனமாயும், இரண்டிற்கும் முந்திநிலைபெற வேண்டியதாயுமிருக்கின்ற சுதேசபாஷாபிவிர்த்தி விஷயமாக இதுகாறும் கூட்டங்கூடக்கேட்டிலோம்! அந்தோ! இது மிகுந்தபரிதாபம்! பரிதாபம்! இப்போது எங்கும் அங்கிலேயம் அபரிமிதமாகப் பரவிவருவதனாலும், சுதேசபாஷைகள் ஆதரிப்பாரின்றி அதோகதியாய்க்கைதாழ்ந்துவருவதனாலும், அவைகளை இப்போதாவது நாம் கைகொடுத்து, நிலைநிறுத்தி, வளரச்செய்யாவிட்டால் நமது தேசத்திற்கும், [illegible]த்திற்கும், ஆசாரவொழுக்கங்களுக்கும், உற்றார், பெற்றார், பெண்டு, பிள்ளை, பந்து, மித்திரர் அனைவருடைய சகஜீவனத்திற்கும் பெருமிடையூறு நேருமாதலாலும், நமது முன்னோர் தமிழ்பாஷையை ஆதரித்துப் பெருமைப்படுத்தி வந்து அதை அருஞ்செல்வமாக நம்மிடம் இப்போது ஒப்புவித்ததற்கு, அதை நம்மாலியன்ற மட்டும் ஆதரிக்க வேண்டியது நமக்குப்பெருங் கடமையாகலாலும், அப்படிச் செய்யா திருப்போமானால், அது நாமே நமது முன்னோரை இகழ்ந்ததற்கும், நாம் புறதேசத்தார் முன்னிலையில் கூசாமல் எழுந்து நிற்கக் கூடிய தனியோக்கியதையுமற்ற கோழைகளானோ மென்பதற்கும் ஒப்பாகின்றதாலும், சுயபாஷாபிமானமில்லாதவர் பெருமையும் உலகத்தில் ஓர் பெருமையாகாததனாலும், தன் பாஷையைக் கைவிடுதலும், உண்ட வீட்டிற் கிரண்டகம் செய்தலும் ஒன்றுபோல நிந்திக்கப்படுமாதலாலும், இந்துக்களே, இனி இப்பாஷாபிவிர்த்தி விஷயமாகவும் விரைவில் கூட்டங்கூடி முயற்சி செய்தல் எவ்வளவும்அவசியம்! அவசியம்! இது செய்யாவிட்டால் நாம் இந்துக்கள்என்ற பெயர் தரித்திருப்பது ஒரு அழகுமல்ல, மற்றப்படி நமக்கு ஒரு சுகமும் கிடைக்கப்போகிறதில்லை! இது சத்தியம்! சத்தியம்!

கனவான்களே, இவ்வளவு முக்கியமான பாஷாபிவிர்த்தி விஷயமாய் இங்கு சங்கஞ்சேர்ந்து முயற்சி செய்து வருவதைக்கேட்க இந்துக்களாகிய யாவருக்கும் உண்மையான ஆனந்தத்தை விளைவிக்கும் என்பது நிச்சயம். இச்சங்கம் என்றென்றைக்கும் மேன்மேலும் வளர்ச்சியுற்றுத் தமிழுலகத்திற்கு விளக்குப்போலிருந்து அறிவும் இன்பமும் பரப்பிநிற்க யாதும் வல்ல பராபரன் அருள் புரியும்படிஎளியேன்பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வுபந்நியாசத்தை முடிவு செய்யுமுன் தமிழ் பாஷாபிவிர்த்திக்கு இதில் விரித்துக்கூறிய மார்க்கங்

கள் இன்னவையென்று ஞாபகத்திற்காக இங்குநான் சுருக்கிச்சொல்ல அநுமதிகொடுங்கள்:—

(க). நமது நாட்டுச் சிறுவர்களுக்கு உயர்ந்த தரத்தில் தமிழ்ப்பயிற்சி செய்விக்க, தகுந்த ஏற்பாடுகளுடன் தமிழ்ப் பாடசாலைகளை எங்கும் ஸ்தாபித்தல்.

(உ). பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் 'யூனிவெர்ஸிற்றி' அல்லது சர்வகலாசாலை சம்பந்தமாக இருக்கும் அங்கிலேய பாடசாலைகளில் இப்போது தருவதைப்பார்க்கிலும் அதிகமான தமிழ்ப் பயிற்சி தருவிக்கக் கேட்டுக் கொள்ளுதல்.

(௩). உலகத்திற்கு இதுகாறும் மறைபொருளாக இருந்துவரும் பழய அரிய தமிழ்க் கிரந்தங்களைச் சேகரித்து அச்சிட்டு வெளிப்படுத்தல்.

(ச). அங்கிலேயபாஷையில் ஜடசாஸ்திர சம்பந்தமாகவும், சரித்திரமுதலிய இதரசம்பந்தமாகவும்இருக்கும் நூல்களை அங்கிலேயமும் தமிழும் தெரிந்தவரைக் கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச்செய்தல். நூதனமாகத் தமிழில் வசனகாவியங்கள் எழுதிப் பெருக்குதல்.

(௫). அப்படி இயற்றப்பட்ட நூதனகிரந்தங்களைப் பாடசாலைகளிற்பாடமாகஏற்படுத்தியாவது,அல்லது, மற்றெவ்விதத்திலாவது, பரவச்செய்து அக்கிரந்தகர்த்தர்களை யாதரித்தல்.

(௬). தமிழுலகத்தில் முக்கியமான இடங்களிலெல்லாம் தமிழ் அச்சுக்கூடங்களை ஸ்தாபித்தல்.

(எ). தமிழ்ப் பத்திரிகைகளை நடாத்தித் தமிழுலகத்தில் எங்கும் பரவும்படி செய்தல்.

(அ). ஊர்தோறும் தமிழ்ப் புஸ்தகால்யங்கள், அல்லது, புஸ்தகஸ்தாபனங்கள் ஏற்படுத்தி ஜனங்களை எளிதில் வாசிக்கத் தூண்டுதல்.

(௯). தமிழ்ச் சங்கங்கள் கூட்டி, பிரசங்கம், தர்க்கம், உபந்நியாசம் முதலியன நடத்துதல்.

இவ்வாறு விவரித்து முடிக்கப்பட்ட ஒன்பதுமார்க்கங்களும் தமிழுலகத்தில் சுயபாஷாபிமானமுடைய தனவான்களாலும், சாமான்னியராலும், தங்களாலான அளவிற்கெல்லாம் ஆதரிக்கப்பட்டு நடந்தேறிவருமானால், தமிழ்பாஷை, வளர் பிறைபோல, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்,வளர்ந்து வருமென்பதற்குச் சந்தேகமில்லை. இது, பார்த்தால், மலையொத்த வேலையாகத் தோன்றும். ஆகில், முயற்சியுடையோருக்கு எதுதான் பெரிது? ஒன்றுமில்லை. கேவலம் சிட்டுக்குருவிகள் சேர்ந்து; ஒரு கடலை வற்றச்செய்யுமானால், இதுவோ நம்மவருக்கு ஒரு பிரமாதம்? புறதேசங்களிலெல்லாம் சுதேச நன்மைக்காக தங்கள் உயிரையே பலிகொடுக்கும்உத்தம சீலர் அனந்தம்பேர் இருப்பரானால், இதுவோ நம்மவருக்கு ஒரு பிரமாதம்? ஆகையால், ஒவ்வொரு தமிழ் பாஷாபிமானியும், இம்மார்க்கங்களை நெஞ்சத்தில் ஆழப்பதித்து, அமிழ்தக்கடலாகியதமிழ்பாஷையை தான் பேசினதற்கும், தமிழுலகத்தில் தான் பிறந்ததற்கும், இவ்வளவும் தன்தலைமேற் பொறுத்த சுமையாக எண்ணி, தன்னால் அத்தனையும் நடத்தி முடியாவிடினும், இவைகளில் ஏதேனும் ஒரு மார்க்கத்தையாவது ஆதரித்து, அதற்குத் தன்னாலான முயற்சி யாவும் செய்துகொண்டும், தனதுதேசத்துக்கெட்டின பிறரிடத்திலெல்லாம் இவைகளைப்பற்றி அடிக்கடி விடாமுயற்சியுடன் தூண்டுதல் செய்து கொண்டும் வந்தால், பார்த்தவுடன் மலைப்பைத் தருவதாகிய இந்த மலையும் அசைந்து மறைவதைக்காணலாம்.இப்போது தமிழுலகம் இருக்கும் நிலைமையை உற்றுப் பார்க்கும் ஒவ்வோர் உண்மையான பாஷாபிமானிக்கும் உள்ளம் உருகாமலிராது, அதை நிவிர்த்திக்க உற்சாகம் தோன்றாமலிராது. பணமும் இதற்கு ஒரு பொருட்டோ? பணத்தைத்தீ கொண்டுபோகக்காண்கிறோம், நீயர் கொண்டுபோகக்காண்கிறோம், பெண் கொண்டு போகக்காண்கிறோம், மண்கொண்டுபோகக் காண்கிறோம். குளம்,சத்திரம்,அநியாயவாதிகள், மத்தாப்பு, நகைக்கிடமாகின்ற நகை,வெறும்பட்டப்பேர்,சதிர்,பாணம், சீட்டு, சித்திரம், புகையிலை, விருந்து,குடி,வேடிக்கை முதலிய அனந்தங்காரியத்திற்குப்பணத்தைத் தண்ணீர்பட்டபாடாய்ச் செலவிடக் காண்கிறோம். ஆகில்,தமிழ்மாதை ரக்ஷிக்கமாத்திரம் (அவள் இதற்கெல்லாம் தாழ்ந்துபோகும்படி என்ன பாவம் செய்தாளோ!) நூறுரூபாயில் ஒரு பைசாவேனும், செலவாகின்றதைக் காணோமே! இதென்ன ஆச்சரியம்! இதென்ன வெட்கக்கேடு! உலகத்திற்கெல்லாம் நன்மைபயக்கும் இந்தப் பேருபகாரத்தை நடத்தினால், அவ்வுபகாரிகள் அதனால் கெட்டுப்போவார்களோ? அப்படியே கெட்டுப்போவார்களென்று வைத்துக் கொண்டாலும்,

"ஒப்புரவினால் வருங்கேடெனின் அஃதொருவன்
விற்றுக் கோட்டக்க துடைத்து."

என்று தெய்வத்திருவள்ளுவர் உபகாரம்செய்வதனால் ஒருவனுக்கு கேடு வருமாகிலும் அக்கேட்டுக்காகஒருவன் தன்னையே விற்றுக்கொள்ளலா மென்றும் சொல்லி யிருக்கவில்லையா?

(இன்னும்வரும்)

தி. லக்ஷ்மணபிள்ளை.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

என் அருமைத் தோழிகளே,

நான் சென்ற மாதத்தில் நம்முடைய தோழர்களிடம் சென்றிருந்தபோது அவர்களுக்கு 'ஒருவரும் கெர்வங் கொள்ளலாகாது' என்பதைக் குறித்து ஒரு கதைசொல்லி அவர்களைச் சந்தோஷிப்பித்து அவர்களிடம்விடைபெற்றுக் கொண்டு, உங்களிடம் வந்து என்னகதை சொல்லலாமென்று யோசித்து வரும் வழியில் என்னுடைய சிநேகிதர் ஒருவர் வீட்டுத் தெருத் திண்ணையில் அவருடன் லோகாபிராமமாய் வார்த்தையாடிக்கொண் டிருந்தேன். அப்போது அவ்வீட்டுக்கு எதிர்வீட்டில் ஒரு இரைச்சல் கேட்டது. நான் அதென்னவென்று எனது நண்பரைக் கேட்க, அவ்வீட்டுக்காரர் ஏதோ தகுந்த உத்யோகத்தில் இருந்ததாகவும், அக்காலத்தில் லஞ்சம் வாங்கினதாகவும் அதற்கு அவர்மனையாளே மூலமா யிருந்ததுமன்றி தன் பர்த்தாவுக்கு லஞ்சங்கிடைத்த பெருமையைத் தனக்கு மிகவும் சிநேகமான ஒருத்தியிடம் சொல்லிக்கொண்டதாகவும், அது அந்த ஸ்திரீயின் மூலமாய்ப் பரவக், கடைசியில் அவ்விஷயம் அதிகாரிகளுக்குத் தெரிந்து லஞ்சம் வாங்கினவரை விசாரணைக்குக் கொண்டுவந்து அவரைக் குற்றவாளியென்று கண்டு அவரைப் பிடிக்கவாரண்டுவிட, அவர் அவ்வாரண்டுக்குப் பயந்து வீட்டைவிட்டு வெளிப் புறப்படாமல், தான் வீட்டிலிருப்பதை எவருக்கும் அறிவிக்காதிருக்கும்படி தன் மனையாளுக்குத் திட்டஞ் செய்து ஒளித்திருந்ததாகவும், இப்படி யிருக்கையில் வாரண்டுச் சேவகர் வந்து அவர் மனையாளைக்கண்டு அவளையும் நியாயஸ்தலத்துக்கு இழுப்பதாய்ப் பயப்படுத்தினதாகவும், அதன் மேல் அந்தம்மாள் தன் கணவனை அவர்களுக்குக் காட்டிக்கொடுத்து விட்டதாகவும் சொல்லி அதன்விஷயமாய் அவ்விரைச்சல் உண்டாயிற்று என்று என்னுடன் பேசிக்கொண்டிருந்த சிநேகிதர் சொன்னார். அதைக் கேட்டவுடன், இது நல்ல சரக்குத்தான் என்றுஎண்ணி இதை உங்களுக்குத் தெரிவித்து, இதை யொட்டிய ஒரு சிறுகதையையும் உங்களுக்குச்சொல்லலாமென்று வந்தேன்; கேட்க உங்களுக்கு உத்ஸாகமும் அவகாசமும் உண்டோ?

தோழிகள்.—குட்டியண்ணா, என்ன அப்படிக் கேட்கிறீரே. பால்குடிக்கக் கால்பிடிப்பாருண்டா? கரும்புதின்னக் கைக்கூலியா? உம்முடைய ஸரஸமான மாதிரியும் சாதுரியமான வார்த்தையும் எப்போது கிடைக்கும் என்று உமது வரவை எதிர்பார்த்திருக்கும் எங்களுக்கு இதைவிட வேறு என்னலாபமிருக்கிறது? அதை அவசியம் சொல்லவேணும்.

குட்டியண்ணா.—நல்லது, கேளுங்கள்: நான் உங்களுக்குச் சொல்லப்புகும் கதை

ஸ்த்ரீபுத்தி: ப்ரளயாந்தக:

என்னும் நீதியை உட்கொண்டது: நிலவளம் நீர்வளம் முதலிய பலவளங்களும் நிறைந்து சகல சௌக்கியங்களும் பொருந்திய தென்தேசத்தில் மதனபாலன் என்றொரு இராஜனிருந்தான். அவன் அரசாண்ட நகரத்தில் த்ரய்யந்த சாதுர்வர்ணாச்ரம ஏகோநஷஷ்டங்க ஸப்தகாண்ட ஸஹஸ்ராவர்த்தி சங்கரநாராயண சாஸ்திரி என்றொரு பிராமணோத்தமர் உண்டு. அவருக்கு, இராஜனுக்குப் பிரதிதினமும் பஞ்சாங்கம் படித்து தினபலன் சொல்லிவருவது உத்தியோகம். இப்படி அவர் பிரதிதினமும் பஞ்சாங்கம் படித்துப் பலன்சொல்லி வீட்டுக்குத் திரும்பும்போது "ஸ்த்ரீபுத்தி: ப்ரளயாந்தக:" என்று சொல்லிவிட்டு வருவது வழக்கம். இப்படி அவர் அநேகவருஷ காலமாய், அரசன் தன் பத்நியோடு வீற்றிருக்கும்போது சொல்லிக் கொண்டுவருகிறார். ஒருநாள் பிராமணன் வழக்கப்படிப் பஞ்சாங்கம் ஓதிப் பலன்கூறி 'ஸ்த்ரீபுத்தி: ப்ரளயாந்தக:' என்று சொல்லிப் போனதைக்கேட்டு இராஜபத்நி மனம்வருந்தி இராஜனைநோக்கி, இந்த ப்ராமணன் பிரதி தினமும் அப்படிச் சொல்லிப்போகிறாரே அதன் உண்

மையை அறியவேண்டுமென்றுசொல்ல, அரசனும் மறுநாள் வேதியர் வந்து பஞ்சாங்கம் படித்து அவ்வாக்யத்தை வழக்கம்போல் சொல்லித் திரும்புகையில் அவ்வந்தணரைப் பார்த்து, நீர் தினமும் 'ஸ்த்ரீபுத்திః ப்ரளயாந்தகః' என்று சொல்லுகிறீரே அதன் கருத்தென்னவென, பிராமணர் இராஜசேகரா, ஸ்திரீகளின் புத்தியைக்கேட்டு அதன்படிநடந்தாலும் அவர்களை நம்பினாலும் மோசம் வருமென்பது தான் அதன் கருத்து என்ன, வேந்தன் அது உண்மை தானோ என்ன, பிராமணன் உண்மைதானென்ன, அப்படியானால் அவ் வுண்மையை இன்றுமுதல் எட்டுநாளுக்குள் எனக்குக் காட்டத்தவறுவீரானால்உமக்கு விட்டிருக்கும்மான்யங்களைப் பிடுங்கிக்கொண்டு உம்மையும் நாட்டைவிட்டு ஓட்டிவிடுவேனென்று இராஜன் கூற, அப்படியே காட்டுகிறேனென்று உறுதி கூறி கிருகத்துக்குப் போய்விட்டான்.

பிறகு ப்ராமணன் ஒருநாள் தன்மனையாளை அழைத்துச் சொன்னது, 'அடி! நான் உன்னோடு ஒரு ரகஸியம் சொல்லுகிறேன். அதை யொருவரோடும்சொல்லாமலிருப்பையா?' என்றான். அவள் 'என் கண்ணோடுபிறந்த கண்ணாட்டியானாலும் சொல்லமாட்டேன்' என்று உறுதிசொன்னபின்பு வேதியன் சொன்னதாவது: நமது அரசனுக்கு மகத்தான ஆபத்து வரப்போகிறது; அதற்கு அடையாளமென்னவென்றால், வருகிற வெள்ளிக்கிழமை இராத்திரி 12-மணிக்கு அரண்மனை உப்பரிகைக் கலசத்தில் ஒரு வெள்ளைக்காக்கைவந்து உட்காரும். அந்தச் சமயத்தில் யாராவது விழித்திருந்து ஒரு முகூர்த்தகாலத்தில் அரண்மனையை இடித்துத் தூளாக்கித் தரையோடு தரையாய் சமமாக்கி விட்டால் அரசனும் அவன்குடும்பமும் பிழைக்கலாம்; இல்லாவிட்டால் பொழுது விடிவதற்குள் அரசன்மாளிகை இடிந்து வேந்தனும் அவன் பத்நியும் அவனைச்சேர்ந்த ஜனங்களும் இறந்து போவார்கள் என்று சொன்னான். இதைக் கேட்டவுடனே அந்த வைதிகன் பெண்டாட்டி இந்த ஆச்சரியமான சங்கதியைத் தனக்கு அத்யந்தம் பிராணஸ்நேகிதையான அடுத்தவீட்டுக் கல்யாணிக்கு ரகஸ்யத்தில் சொல்லி அதை வெளியிட்டால் தலை போய்விடுமாதலால் வெளியிடாதே யென்று திட்டஞ் செய்தாள். அவளும்'ஆ! எங்கேயாவதுண்டா? ரகஸ்யத்தை வெளியிடுவேனா?' என்று உறுதி கூறிப் போய்விட்டாள். பின்பு அவளுக்கும் அந்த ரகஸ்யத்தை யாரோடாவது சொன்னாலொழிய பொறுக்கமுடியாமல் வயிறு உப்பிப்போகவே அவள் தனக்கு மிகவும் ப்ராணபதமான ஒருத்தியோடு சொல்லிவிட்டு அதை வெளிப்படுத்தாமலிருக்கும்படி வேண்டிக்கொண்டாள். அவளும் அப்படியே தனக்கு வேண்டிய மற்றொருத்திக்குச் சொன்னாள்; அவள் தனக்கு ப்ரியமான வேறொருத்திக்குச் சொன்னாள்; இவ்வாறேபோய் முடிவில் மந்திரி பெண்சாதிக்கு எட்டியது. அவள் இராஜபத்நிக்கு அந்தரங்கத் தோழியாகையால் அவளுடன் சொல்லி வைத்தாள். இராஜஸ்திரீ அந்த அதிரகஸ்ய அதிசய அகர்த்தந்தை பள்ளியறையில் தன் பர்த்தாவோடு சொல்லி அது சம்பவிக்கவேண்டிய காலம் அன்றையதினம் இரவேயாதலால் உடனே அவ்வாபாயத்தை விலக்கப் பிரயத்தினப்பட வேண்டுமென்று தெரிவித்தாள். இராஜன் மிகவும் கவலையுற்று, இன்னும் ஒரு முகூர்த்த காலந்தானே இருக்கிறதென்று வருந்தி, உடனே படுக்கையைவிட்டு மனைவியை அப்புறப்படுத்தி, தான் வெளியில் வந்தான். இதற்குள் பஞ்சாங்கப்ராமணன் தான் சொன்ன சங்கதி கிரமக்ரமமாய்ப்போய் அரசனுக் கெட்டியது என்று அறிந்து உடனே ஒரு வெளுப்பு வஸ்திரத்தால் காக்கைபோல் ஓர் உருச்செய்து அரசன் மாளிகை உப்பரிகைக் கலசத்தில் வைத்துவிட்டு வந்து, நடக்கும் விநோதங்களைப் பதுங்கிப்பார்த்துக் கொண்டிருந்தான். இது இப்படியாக, வெளியில் வந்த வேந்தன் உப்பரிகை மேல் பார்க்கையில், நிலாவெளிச்சமாகையால் ஒருவெள்ளைக்காக்கை யிருப்பது தெரிந்தது. தக்ஷணமே தானேபோய் ஆயிரம் ஆள்களைக் குந்தாலி, கூடை, கோடரி, மண்வெட்டி, பாரை இவற்றோடு கொண்டுவந்து அரண்மனையை யிடித்துத் தவிடுபொடியாக்கச் சொல்லவே, அவர்களும் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அதைப் படுசூர்ணமாக்கித் தரையோடு தரையாய்ச் சமப்படுத்தி விட்டார்கள்.

பொழுதும் விடிந்தது. மந்திரிவழக்கம்போல் அரண்மனைக்கு வந்தான். அரண்மனை நின்றவிடம் சமபூமியாய் அரண்மனையிருந்த அடையாளமே யில்லாமல் போகவே, உடனே அரசனைத்தேடிச் சென்றான். அரசனோ ஒருசிறு குடில் வேய்ந்துகொண்டு ஓர் ஒதுக்கிடத்தில் இருக்கக்கண்டு, இதென்ன விபரீதம்? இதுயார் செய்கை? என்று கேட்க, இராஜன் சொல்லுகிறான்: பாரும் மந்திரீ, "மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்" என்றபடி இனிவரப்போகிற விஷயங்களை முன்னடியே தெரிந்து அதற்குத் தகுந்த உபாயங்கள் செய்ய வேண்டியது மந்திரியின் தொழிலா யிருக்க, நீர் இதைச்சிறிதும் கவனிக்காமல், 'ஸ்வகாரியதுரந்தர: ஸ்வாமிகாரியம் 'வழவழ' என்பதுபோல் நீர் உமது சொந்த சுகத்தைத் தேடுவதிலே நோக்கமுடையவராயிருக்கிறீர். நான் ஜாக்கிரதையாய் இருந்து இந்தக் காரியம் செய்யாவிடின் இராஜன் எங்கே? இராஜ்யமேது? எல்லாம் சூன்யமாய்ப் போயிருக்குமேயென்று நடந்த சங்கதியை மந்திரிக்குச் சொன்னான்.

பிறகு மந்திரி இப்படியும் இருக்குமா என்று, மகாராஜனே, தமக்கு இந்த சங்கதி சொன்னவர் யாவர்? என்ன, அரசன் தன் பத்நி சொன்னதாகச் சொல்ல, அவளுக்குத் தெரிந்தெப்படி யென்று விசாரிக்கையில் தன்மனையாள் சொன்னதாகவும், அவளுக்கு ஒருத்தி சொன்னதாகவும், அவளுக்கு மற்றொருத்தி சொன்னதாகவும், அவளுக்கு வேறொருத்தி சொன்னதாகவும் அப்படியே விசாரித்துப் போகையில் பஞ்சாங்கப்பார்ப்பாத்தி சொல்லியதாகத் தெரிய, அவளைக் கேட்டபோது தனக்குத் தன் பர்த்தாவே சொன்னதாகச் சொல்லினாள். இந்த அஸம்பவமான சங்கதியைக் கட்டிவிட்ட ப்ராமணனைப் பிடித்து வரும்படி கட்டளையிட, வேதியனும் இராஜசமூகத்தில் போய்ச் சேர்ந்தான். போனவுடன் இராஜனைப்பார்த்து 'ஸ்த்ரீபுத்திః ப்ரளயாந்தகః' என்றான். அரசன் ப்ராமணனை நோக்கி என்னசங்கதி என்று கேட்க, பிராமணோத்தமன் அரசனிடத்தில் 'ஸ்திரீபுத்திః ப்ரளயாந்தகః' என்றதும், இராஜன் அதன் உண்மையைக் காட்டாவிடின் தண்டனை நேரும் என்றதும், அதன்மேல் தான் இந்த சங்கதியைக் கட்டித் தன் மனைவியிடம் சொன்னதும்; அது அவள் மூலமாய் வெளிப்பட்டு இராஜபத்நியிடம் வர, அவள் பேச்சைக் கேட்டு அரசன் அரண்மனையை யோசனையின்றி அழித்துவிட்டதும் கூறி, தான் அமைத்துவைத்த மாயவஸ்திரக் காக்கையைக் கண்டெடுத்து இராஜனுக்குக் காட்ட, அரசன் ஆச்சரியமும் லஜ்ஜையும் அடைந்து, ப்ராமணன் சொல்லிய 'ஸ்திரீபுத்தி:ப்ரளயாந்தகః' என்பது உண்மைதானென்று அறிந்து நமது த்ரய்யந்த சாதுர்வர்ணாச்ரம ஏகோந ஷடங்க ஸப்தகாண்ட ஸஹஸ்ராவர்த்தி சங்கரநாராயண சாஸ்திரிக்கு வேண்டிய வெகுமதிகளைச் செய்து ஸன்மானித்தான்.

கேட்டீர்களோ என் அன்பிற்குரிய அருமைச் சிறு தோழிகளே, ஆகையால் நீங்களும் ஒருவர்க்கொருவர் ரகஸ்யங்களை வெளிவிடாமல் ஒற்றுமையாய் வாழ்ந்து வருவது மல்லாமல், நீங்கள் உங்கள் கணவனோடு வாழுங்காலத்தில் குடும்ப ரகஸ்யங்களை வெளியிடாமல் பர்த்தாவுக்கு அநுகூலையான பார்யையாயிருந்து அவன் இல்வாழ்க்கைக்கு நல்வாழ்க்கைத் துணையாயிருக்கப் பாருங்கள். நல்லது, நேரமாகிறது, இம்முறை நாம் கூடிச் சல்லாபித்தது போதும்; போய்வருகிறேன்.

உங்கள் அன்புள்ள
குட்டியண்ணா.

சுத்தம்.

என்தோழர்களே! பெரும்பாலும் நாட்டுப்புறத்துப் பாடசாலைகளில் வாசிக்கும் மாணாக்கர் தாங்கள் கட்டிக்கொள்ளுந்துணி அழுக்காயிருப்பது மன்றி தங்கள் தேகத்தையும் அழுக்காய் வைத்திருக்கிறார்கள். இதனால் விளையுங் கெடுதி பிள்ளைகளுக்குத் தெரியாததுந் தவிர, அவர்கள் தகப்பன் மார்களுக்கே தெரியவில்லை. அசுத்தமுதலிய கெட்ட செய்கையினால [illegible] நோய்களை நாம், விதியினால்வருகிறது என்று [illegible] நினைத்துக்கொண்டு அலைகிறோம். விதியொரு பக்க மிருக்கட்டும். மதியீனத்தால் வருவதற்குச் சில உதாரணங்கள் சொல்லுகிறேன்.

நுரு மரமாவது ஓலையாவது ஒரேஇடத்தில் இருக்கும்போது மண்ணுப் மட்கிப்போய்விடக் காண்கிறோம். (அதுபோலவே) மேலும் நம்முடைய தேகம் மெல்லியதாகையால் அழுக்குச் சேரச்சேர உடம்புகன்றி (நொந்து) புண்ணுகிறது. அன்றியும், நமதுதேகத்தின்மேலுள்ள கண்ணுக்குத் தெரியாத மயிர்த்துவாரங்கள் அந்த அழுக்கினுல் மூடி (தேகத்துக்குள் இருக்கப்பட்ட அழுக்குகள் வேர்வை மூலமாய் வெளியேவருவதுவழக்கமாகையால்) அவ்வழுக்குகள் வெளியேவர, வழியில்லாமல் உள்ளேயே தங்கி, இரத்தத்தை அசுத்தியாக்குவதால், குடல் முதலிய மெதுவான அவயவங்களை புண்ணுக்கி விடுகின்றது. உள்ளே புண்ணுகவே வெளியிலும், புண் முதலிய அநேக வியாதிகளும் உண்டாகின்றன. ஒரு சுரைக்கொடியில் வேரில் கொஞ்சம் பின்னமாக்கிவிட்டால் அந்தச் செடியிலிருந்து நாலாப்பக்கமும் ஓடியிருக்கும் கொடிகள் காய்ந்துபோகின்றனவல்லவா? நம்முடைய தேகத்திலுள்ள உறுப்புகளும் ஒன்றை ஒன்று ஒட்டி கிளைகள்போ லிருக்கிறபடியால் அவைகளில் எதற்காவது கொஞ்சம் தீங்குநேரிட்டால், எல்லா அவயவங்களுக்கும் கெடுதி உண்டாகிறது. ஆகையால் நாம் தினந்தோறும் உடம்பை நன்ருய்த் தேய்த்துக் குளிக்க வேண்டும். குளிக்கும்போது சோப்புக்கட்டியை உபயோகப்படுத்துவது மிக நல்லது. நாம் கட்டிக்கொள்ளுகிற துணிகளில் அழுக்கிருந்தால் மேற்சொன்ன மயிர்த்துவாரங்களில், துணிகளிலிருக்கிற அழுக்கு மூடிக்கொண்டு மேற்சொன்ன கெடுதிகள் நேரிடுகின்றன. ஆகையால் நாம் உடுத்துக்கொள்ளும் உடைகளெல்லாம் சுத்தமாயிருக்க வேண்டும்.

கல்வாய்
அப்பர்ப்ரைமெரி
பாடசாலை,
20-9-92.

உங்கள் நேசன்
வீரரத்தின வர்ம
பாலகிருஷ்ண நாயகர்.

அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி.)

உபகார சங்கம்.

எடப்பள்ளி. நமது எடப்பள்ளி உபகாரியிடமிருந்து வந்த பின்வரும் ரிபோர்ட்டு சென்றமாத சஞ்சிகையில் பிரசுரிக்க மிகத்தாமதித்து வந்ததால் அதை இம்முறை பிரசுரிக்கிறோம். விவேகசிந்தாமணியில் பிரசுரிக்க ரிபோர்ட்டனுப்பும் நமது உபகாரிகள் அந்தந்தமாதம் 20உயில் அனுப்பினுல் பிரசுரிக்கச் சரியானகாலத்தில் வந்துசேரும்.

"ஐயா, நான் இந்த மாதத்தில் செய்த வேலையைத் தங்களுக்குத் தெரியப்படுத்தக் கட்டுப்பட்டபடி ஒருவாறு சுருக்கமாய் எழுதுகின்றேன்.

முதல் ஞாயிற்றுக்கிழமையன்று இனம் படுகர் ஊர்களாகிய நடுஹட்டி, பெத்தளா, கல்லட்டி, கூக்கல் முதலிய கிராமங்களுக்கும், மூன்றும் ஞாயிற்றுக்கிழமை பெல்லிக்கம்பை, தூனேரி, கொதமுடி முதலிய சில ஊர்களுக்கும் சென்று அங்கங்கே கூட்டங்கூடி ... கார்ந்துக்கொண்டு குதர்க்கங்களைப் ... பொழுது போக்குகிற ஜனங்களை ... அறிவைப்பெற்று விவேகத்தையும் நாகரீகத்தையும் அடைய அவசியமானவைகளைப் பற்றியும் விவேகசிந்தாமணியின் வரலாற்றைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்துக்கொண்டுவந்தோம். கொதமுடி, கூக்கல் என்னும் ஊர்களில் மட்டும் விசேஷ கூட்டங் கூடினுர்கள். சாதாரணமாய் இந்த படுகர் ஊர்களில் கிருஸ்துமதப் பிரசங்கிகள் அடிக்கடி வந்து உபந்நியாசங்கள் செய்துபோவது வழக்கமாதலால் எம்மையும் முதலில் அங்ஙனம் எண்ணி, என் பிரசங்கங்களை வெறுத்தும், இகழ்ந்து பேசவும் ஆரம்பித்தார்கள். இவர்கள் கல்வியறிவில்லாதவர்களாதலால் என் நெற்றியிலுள்ள அடையாளத்தைக் கண்டும் சொல்வதற்குமுந்தி என்னை இம்மதஸ்தன் என்று நிச்சயித்தார்களில்லை. இதற்கும் காரணம் சென்ற மாதத்தில் தூனேரி என்னும் கிராமத்தில் இரு சிறுவர்கள் கிருஸ்துமதத்தைத் தழுவிக்கொண்டதே. பிறகு என் பிரசங்கத்தைக்கேட்க ஆவலுள்ளவர்களாகியும் கவனத்தைச்செலுத்தினவர்களாகியும் உற்சாகத்துடன் கேட்டு ஆனந்தத்தையடைந்தார்கள். பிரசங்கம் செய்வதில் சற்றும் வல்லமையில்லாத எனக்கு 'விவேகசிந்தாமணி' என் ... அருமையபத்திரிகை, தோழனுகவும் தூண்டுகோலாகவு மிருந்து உதவி செய்துக் கொண்டுவருகிறது. இந்தத்தடவையில் என் கூட உபாத்தியாயர் படுக ஆரி கவுடரும் மற்றும் சில நண்பர்களும் வந்திருந்தார்கள். இவர்கள் உதவியும் எமக்கு அதிக அனுகூலமாகவிருந்ததின் நிமித்தம் அவர்களுக்கு என் வந்தனம் சொல்லுகிறேன்.

எடப்பள்ளி உபகாரி."

கல்வாய். செங்கற்பட்டுஜில்லா கூடுவாஞ்சேரியைச் சேர்ந்த கல்வாய் கிராமத்து நமது உபகாரி பின்வருமாறு எழுதுகிறூர்:—

"நான், சென்ற இரண்டுமாதங்களாய் வெளியில் சுற்றி மித்திரன், விவேகசிந்தாமணி இவைகளை வலியக்கொடுத்து வாசிக்கச்செய்து வந்ததில், சிலர் கையொப்பத்திற்கும் ஒப்பியிருக்கின்றனர். இது விஷயமாய் சபை ஏற்படுத்த ஆங்காங்கு முயற்சித்ததில், 1892ஸு செப்டம்பர்மீ 4உ கல்வாயில் ஓர் மீட்டிங்கு கூட்டினேன். வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் 7 - பெயர், உள்ளூரார் 8 - பெயர், இவர்களில் சிலர் மெம்பராக வாக்களித்தார்கள். வருகிற மீட்டிங்கில் சிலர் மெம்பாராய்விடுகிறோமென்றூர். தாங்களெனக்கருளிய விவேகசிந்தாமணி 3 - சஞ்சிகையும் மித்திரனும் என்னிடம் இரண்டொருதினந்தவிற மற்றக் காலமெல்லாம், திருப்போரூர், நெல்லிக்குப்பம், கடம்பூர், மடயத்தூர் முதலிய விடங்களெல்லாம் சஞ்சாரஞ்செய்கின்றன. விவேகசிந்தாமணியானவள் இத்தருணம் வெளியிலிருக்கின்றனளாதலில் வாக்குறுதிகாமா அவள் வந்ததும் கையெழுத்துச் செய்தனுப்புகிறேன். இம்மாதக்கடையில், இனி கூடும் மீட்டிங்கின் விவகாரங்களைத் தெரிவிப்பதுமன்றி யான் செய்த வேலைகளையுந் தெரிவிக்கிறேன்."

விசேஷக்குறிப்புகள்.

இங்கிலாந்தில் கவர்ன்மெண்டு மாறுதல்

ஜூலை மாசக் கடைசியில் பார்லிமெந்து ஜெனரல் எலெக்ஷன் நடந்து புதுப்பார்லிமெந்து கூடினதைப்பற்றிச் சொன்னேம். அங்கிலேய இராஜாங்கத்தில் எப்போதும் உ-பெரிய கக்ஷிகள் உண்டு. ஒரு கக்ஷிக்கு கன்ஸர்வேடிவ் கக்ஷியென்றும், மற்றொருகக்ஷிக்கு லிபரல் கக்ஷியென்றும் பெயர். கன்ஸர்வேடிவ் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் உள்ள ஸ்தாபனங்களை யுள்ளபடி பாதுகாத்து நூதனமான மாறுதல்கள் அதிகமின்றி துரைத்தனத்தை நடத்துவதே சரியென்கிற கொள்கையுடையவர்கள். லிபரல் கக்ஷியார் "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினுனே" என்பதின் உண்மையை மேற்கொண்டு பிரஜாகோடிகளின் நன்மையையே மேலாகவெண்ணி அவர்களுடைய க்ஷேமாபிவிர்த்திக்குச் சாதகமாகிய சீர் திருத்தங்களைச் செய்து துரைத்தனம் நடத்துவதே உண்மையான துரைத்தனமுறை யென்கிற கொள்கையுடையவர்கள். இவர்களில் ஒரு கக்ஷியார் அதிகாரத்திலிருந்தால், மறுகக்ஷியார் அவர்களுக்கு எதிரிகளாகவிருந்து அவர்கள் செய்கைகளில் குற்றங் கண்டுபிடித்துக் குறைகூறுவதே வேலையாக விருப்பார்கள். அங்கிலேயநாடு அரசு முறைப்படி யாளப்படுவதாயினும் ஜனப் பிரதிநிதி துரைத்தனம் அத்தேசத்தில் ஏற்பட்டு வேரூன்றியிருப்பதால் ஜனங்களுடைய இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் செய்யக்கூடாது. அரசன் ஜனங்களுடைய நம்பிக்கையை யிழந்த மந்திரிகளை வைத்துக்கொண்டு துரைத்தனம் செய்வதும் கூடாதகாரியமாம். பார்லிமெந்து காமன்ஸ் சபை, ஜனங்களால் நேரில் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சபையாதலால் அச்சபையில் பெரும்பான்மையோர் அபிப்பிராயம் எதுவோ அதுவேமொத்தத்தில் ஜனங்களுடைய அபிப்பிராய மாகவும் கொள்ளப்படும். பார்லிமெந்துசபையில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயமும் ஜனங்களுடைய அபிப்பிராயமும் ஒருவிஷயத்தில் வித்தியாசப்படலாமென்று அரசுக்காவது அரசனுடைய மந்திரிகளுக்காவது தோன்றினுல் அரசன் தன்மந்திரிகள் சொல்லைக்கேட்டு அப்பார்லிமெந்துசபையைக் கலைத்துவிட்டு புதுப் பார்லிமெந்து சபை கூட ஜெனரல் எலெக்ஷன் நடக்கும்படி உத்திரவுசெய்வார். அப்படிக் கூடப்படும் புதுப் பார்லிமெந்து சபையில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம் மொத்தத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயமாகக் கொள்ளப்படும்.

சென்ற ஆகஸ்டுமாசம் புதுப் பார்லிமெந்து சபை கூடியதும் லிபரல்கக்ஷி மெம்பர்கள் அப்பொழுது அதிகாரத்திலிருந்த கன்ஸர்வேடிவ்கக்ஷி மந்திரிகளிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று காமன்ஸ்சபையில் பிரேரேபித்துப் பேசினுர்கள். இது அவர்கள் சொந்தக்கக்ஷி பலத்தால் பார்லிமெந்து சபையில் பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப்படவே பழயமந்திரிகள் அந்நாட்டு பிரதிநிதியாக முறை யேற்பாட்டுப்படி அவர்கள் வேலைகளை மகாராணியவர்களிடம் இராஜிநாமா கொடுத்துவிட்டார்கள். மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் அவர்கள் இராஜிநாமாவை யேற்றுக்கொண்டு லிபரல் கக்ஷித்தலைவரான மிஸ்டர் கிளாட்ஸ்தனை வரவழைத்துப் புதிதாக மந்திராலோசனை சபையொன்று ஏற்படுத்தித் துரைத்தனம் நடத்தக் கட்டளையிட்டார்கள். அப்படியே மிஸ்டர் கிளாட்ஸ்தனும் முதல்மந்திரி வேலையை ஒப்புக்கொண்டு அவரோடு உடன்மந்திரிகளாக விருக்கத்தக்கவர்களைப் பொறுக்கியெடுத்துச் சிபார்சுசெய்து மகாராணியாரால் அவர்களை உடன்மந்திரிகளாக நியமிக்கப்பெற்று இப்பொழுது துரைத்தனம் நடத்திவருகிறூர். இப்படி ஒருகக்ஷியார் அதிகாரத்தைவிட்டுப் போக எதிர்க்கக்ஷியார் அதிகாரத்துக்கு வருவதற்கு 'கவர்ன்மெண்டு மாறுதல்' அல்லது 'துரைத்தனமாறுதல்' என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது அத்தேசத்தி லுண்டான துரைத்தன மாறுதலினுல் அதிகாரத்துக்கு வந்த கவர்ன்மெண்டில் முக்கியமந்திரிகள் பின் வருகிறவர்கள்:—

மிஸ்டர் கிளாட்ஸ்தன்,—முதல் மந்திரியும் அரசிறைமந்திரியும்.
லார்ட் சான்செல்லர் அல்லது நியாயாதிபதி } லார்ட் ஹெர்ஷெல்
லார்ட் கிம்பர்லி.
இந்தியா மந்திரி — லார்ட் ரோஸ்பரி.
பரதேச மந்திரி — லார்ட் ரிப்பன்
குடியேற்றநாட்டுமந்திரி

உள்நாட்டு மந்திரி	மிஸ்டர் அஸ்குவித்.
யுத்தயந்திரி மிஸ்டர் எச்.	காம்பெல் பானர்மான்
கப்பற்சைனியமந்திரி	லார்ட் ஸ்பென்ஸர்.
அரசிறை மந்திரி	ஸர் உவில்லியம் ஹார்கோர்ட்.
ஐர்லாந்து ஸெக்ரிடேரி	மிஸ்டர் ஜான் மார்லி
ஸ்காட்லாந்து ஸெக்ரிடேரி	ஸர் ஜியார்ஜ் டிரிவேலியன்.
வியாபார விசாரணை சபைத்தலைவர்	மிஸ்டர் மன்டெல்லா.
லோகல் கவர்ன்மெண்டு விசாரணை சபைத்தலைவர்-	மிஸ்டர் எச். பௌலர்.
போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்	மிஸ்டர் ஆர்நால்ட் மார்லி.

வியவசாயிகளுக்குக் கடன் கொடுத்தல்.

௧௮௯௨௵ மார்ச்சுமீ ௮௨ இல் கவர்ன்மெண்டார் பின்வரும் உத்தரவு செய்தார்கள்:- "நில அபிவிர்த்தி ஆக்ட்டுப்படிக்கும் வியவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கான ஆக்ட்டுப்படிக்கும் கடன் கேட்கும் குடிகளுடைய விண்ணப்பங்களை விசாரித்துப் பைசல்செய்து கடன் கொடுப்பதில் அமிதமான தாமசமுண்டாகிற தென்பது பத்திரிகைகள் மூலமாக ஆலோசனை சபையிலுள்ள கனம்பொருந்திய கவர்னர் அவர்கள் கவனத்துக்கு வந்திருக்கிறது. அவருக்கு எட்டிய சில விஷயங்களினால் இம்முறைப்பாடுகளெல்லாம் மிகவும் உண்மையானவையே யென்று தெரியவருகிறது. இப்படி நேரிடும் தாமசங்களுக்குக் காரணம் இப்பொழுதுள்ள சிப்பந்திகளுக்கு ஏராளமாய்வரும் விண்ணப்பங்களை விசாரித்துப் பைசல் செய்வது முடியாமையாக விருப்பதே யென்று ஆலோசனை சபையிலுள்ள கனம்பொருந்திய கவர்னர் அவர்களுக்குத்தெரியும். இதற்குப் பரிகாரம் இப்பொழுதுள்ள ஸ்பெஷல் ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் தொகையை யதிகரித்துப் பலப்படுத்துவதேயாம். ரெவினியூ போர்டார் பக்கத்தில் குறித்த ஜில்லாக்களின் கலெக்டர்களை அவரவர்கள் ஜில்லாக்களில் இப்பொழுது பைசலாகவேண்டி யிருக்கும் விண்ணப்பங்கள் எத்தனையென்றும், அவைகளின்படி கடன் கொடுக்கவேண்டிய தொகைகளின் மொத்தம் இவ்வளவென்றும் தாலூகாவாரியாகக் கணக்குத் தயார்செய்து அவ்விண்ணப்பங்களைச் சீக்கிரம் விசாரித்துப் பைசல்செய்து இனிமேல் வரும் இவ்வித விண்ணப்பங்களைத் தாமசமின்றிப் பைசல் செய்துவர அதிகப்படிவேண்டிய சிப்பந்திகள் எத்தனை பேரென்றும் உடனே விசாரித்துச் சிறிதும் தாமசமின்றி அவசரமாய் ரிபோர்ட்டு செய்யும்படி கேட்டுக்கொள்ளக் கோரப்படுகிறார்கள்."

இவ்வுத்தரவில் குறிக்கப்பட்ட ஜில்லாக்கள் நெல்லூர், கர்னூல், பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயமுத்தூர். இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின் காலசுபாவம் மாறி அங்கங்கே கொஞ்சம் மழை பொழிய ஆரம்பித்தது. இதனால் அங்கங்கே யிருந்த க்ஷாமம் குறைந்து கொஞ்சம் சுபிக்ஷம் தோன்ற ஆரம்பித்தது. இதனால் கடன் கொடுப்பதற்காக அசாதாரணமான விசேஷ ஏற்பாடுகள் செய்யவேண்டியதில்லையென்று அதிகாரிகள் அபிப்பிராயங் கொண்டார்கள். மேற்கண்ட உத்தரவுப்படி பல டிஸ்திரிகட்டுகளிலிருந்து வந்த ரிப்போர்ட்டுகள் ரெவினியூ போர்டாரால் பார்வையிட்டு சில ஜில்லாக்களில் மட்டும் அதிகப்படி சிப்பந்திகள் நியமனம் செய்ய சாங்க்ஷனாயிருக்கிறது. இவர்கள் பார்வையிட்டனுப்பிய ரிபோர்ட்டுகளின்பேரில் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவில் "கிணறுகள் வெட்டுவதற்காகக் குடிகள் கவர்ன்மெண்டாரிடம் கடன்வாங்கி யுபயோகிக்கத் தூண்டிவர எடுத்துக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் இந்தமட்டும் பயன்படுவனவாக முடிந்ததைக்காண கவர்ன்மெண்டார் சந்தோஷப் படுகிறார்கள்" என்று குறிப்பிட் டிருக்கிறார்கள்.

இத்தேசத்தில் இடையிடையே சம்பவிக்கும் க்ஷாமகாலங்களில் ஜனங்கள் படும்துன்பங்களைக் குறைத்து மிதப்படுத்த இப்படி குடிகளுக்கு சொற்ப வட்டிக்குக் கடன்கள் கொடுப்பதே ஏற்ற மார்க்கமென்று ஆலோசனை சபையிலுள்ள கனம்பொருந்திய கவர்னர் அவர்களுக்கு உறுதியாய் மனதில் பட்டிருக்கிறதென்றும், ஆனால் இவ்வகையில் இன்னும் அதிகப்பணம் செலவழிக்குமுன் இப்பொழுது அனுசரிக்கப்பட்டுவரும் ஏற்பாடு காரியத்தில் சரியாக நடந்து வருகிறதா? அதாவது கவர்ன்மெண்டாரிடம் குடிகள் வாங்கும் கடன்களுக்கு நல்ல ஈடுகள் கிடைக்கின்றனவா, கடன்வாங்கின பணம் துர்வினியோகப் படுத்தப்படாமல் கிணறுகள் வெட்டுவதில் சரியாக உபயோகிக்கப்பட்டு வருகின்றனவா, கடன் தொகைகள் கிரமம் தவறாமல் திருப்பிக் கொடுக்கப் படுகின்றனவாவென்று தீர விசாரித்தறிந்து கொள்ள வேண்டிய தவசியமாக விருக்கிறதென்றும், கவர்ன்மெண்டார் அவர்களுடைய உத்தரவில் கண்டிருக்கிறார்கள். மேலேசொன்ன முக்கியமான நிபந்தனைகளெல்லாம் சரியாக நிறைவேறி வந்தால், மழை தப்பிக் காலங்கெட்டிருக்கையில் பயிர்ச்செலவு நின்று மகசூல் தவறிப்போகாம லிருப்பதற்கு உறுதியுபாயமாக இவ்விதக் கடன்கள் கொடுப்பதில் பணஞ் செலவழிப்பதைப்போல் வேறு வழி யில்லையென்று சொல்லி மேலேசொன்ன நிபந்தனைகள் சரியாக நிறைவேறி வரத்தக்கனவாக விருக்கின்றனவாவென்று தீரவிசாரித்து இந்த வருஷம் டிசெம்பர் மாசத்துக்குள் ஜில்லா கலெக்டர்களெல்லாம் ரிபோர்ட்டுக ளனுப்ப வேண்டுமென்றும், அதன்மேல் அந்தரிபோர்ட்டுகளைக் கொண்டு அடுத்த வருஷத்தில் இத்தலைப்பின் கீழ் செலவு செய்யவேண்டிய விதத்தை யோசித்துத் திட்டம்செய்துகொள்ள வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்த வருஷத்திற்கு ஸெப்டெம்பர்மீ ௩௦உ க்குப் பின்னிட்டுக் குடிகளிடமிருந்து கடன்களுக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லையென்றும், இந்த வருஷத்தில் குடிகளுக்குக் கொடுக்கும் கடன்களின் தொகைகள் மொத்தம் ௰௯-லக்ஷத்துக்குமேல திகப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். எங்கும் மழைபெய்து சுபிக்ஷகாலந் தலைகாட்ட ஆரம்பித்து விட்டதால் வியவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கான சட்டப்படி இனி அதிகமாய்க் கடன்கள் கொடுக்கவேண்டிய தில்லை என்று போர்டார் சொல்வதைச் சரி என்று கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர
பெற்றோ மெனவுகந்து பின்புகறபர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. 6 - APR. 93

விவேக சிந்தாமணி.

161

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892ஆம் அக்டோபர்மீ. இலக்கம். 6.

புஷ்பங்களும் அவற்றின் தொழிலும்.

ஜீவராசிகளுடைய பொதுவான இருபெருங் குணங்களில் முதலாவதான ஆஹார சுவிகார விருத்தி மரவர்க்கத்தில் நடந்தேறும் இயல்பை முன் சஞ்சிகையில் ஒருவாறு கூறி முடித்தோம் அல்லவா. இப்போது அம்மரவர்க்கங்கள், தங்கள்தங்கள் ஜாதிக்கேற்றபடி தங்களுக்குப்பிரதிநிதியாகப் பிறகிளை யுண்டுபண்ணி விடும் ஜீவராசிகளின் இரண்டாம் இலக்கணமாகிய பிரத்தியுத்பாதனம் என்னும் தொழிலை எவ்விதம் நிறைவேற்றுகின்றன என்று சற்றே ஆராய்வோமாக.

2. இத்தன்மையான ஆராய்ச்சிகள் வெளியிலுள்ள நானாவித பதார்த்தங்களைச் சம்பந்தப்பட்டிருப்பதால் நாம் நமது அறைக்குள்ளிருந்து கண்மூடி யோசித்து மனக்கணக்கிட்டுக் கொள்ளுதல் மாத்திரத்தால் உண்மை நிர்ணயிப்பது கூடா தாதலின், சற்றே வெளியி லிறங்கிப் பற்பல மரங்களிருக்கும் யாதாவதொரு தோட்டத்தில் சென்று சுற்றிப் பார்த்து வருவோமாக. இதோ! இந்தத் தோட்டத்தில் ஒருபுறம் மா, பலா, தென்னை, புன்னை, புளி, கமுகு முதலிய மரங்கள் நெருங்கி வளர்ந்து சோலையாக நிற்பது, பாருங்கள்! சற்றப்புறம் அதோ! காரகம்*, எலுமிச்சை, மாதுளை, கொய்யா முதலிய செடிகள் நன்றாய் வளர்ந்து பலிதமாய் நிற்கின்றன. அதற்கும் அப்புறம் வாய்க்காலருகில் நன்றாய்ப் பக்குவம்பண்ணின திடரில் கத்தரி, வெண்டை, மிளகாய் முதலிய சிறு செடிகளும் பாகல், புடல், வெள்ளரி, அவரை முதலிய கொடியினங்களும் பல பல கிளைகளும் எவ்வளவு செழிப்பாய் வளர்கின்றன. ஆ! ஆ! இதோ! சுவர்ண வர்ணமாய் விளங்கும் இப்பீர்க்கம் பூப்போல,

"புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலர."

என்னும் நக்கீரதேவர் மொழிக்கு நச்சினார்க்கினியரும் பொருள் விளக்கக் கூடியதாமா? வாய்க்கால் வரம்பில் ஒரு வரியாய் வாழைகள் நிற்பது எவ்வளவு அலங்காரம்! அதற்கு அப்புறம் வயலிலோ நெல் பயிராயிருக்கின்றது. வாய்க்கால் வரம்பு முதல் நாம் உள்ளே பிரவேசித்த தோட்டத்து வாசல்வரையும் தும்பை, துத்தி, அறுகு, கோரை என்றிப்படி எண்ணற்ற புற்பூண்டு செடி கொடிகளை மிதித்துக் கொண்டல்லவா நடக்கிறோம். அவைகளை ஒருவரும் கவனிப்பாரில்லை. ஒவ்வொரு வேளை வெட்டியெறியவேண்டுமென்ற ஒரே ஞாபகத்திற்கு இடம் வந்தால் உண்டேயன்றி அவற்றைத் தீண்டுபவருமில்லை: திரும்பிப்பார்ப்பாருமில்லை! திட்டுவதற்கேனும் அவை யொவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயரிடலாகாதா? "கொல்லை எல்லாம் செடிவளர்ந்து விட்டது. கொடி படர்ந்து விட்டது. கொத்தடா, வெட்டடா!" என்று பொதுப் பெயரால் கூறுவதேயன்றி யாரேனும் இன்ன இன்ன செடிகள் என்றும் இன்ன இன்ன கொடிகள் என்றும் பெயரிட்டழைத்து,—கொண்

---

* இதை 'காரத்தை' என்று சாதாரணமாக வழங்குவார்கள்.

டாட அல்ல—கொலைபுரிய ஏனும்சொல்வதைக் கேட்டிருக்கிறோமா? பொறுங்கள்! ஈசுர சிருஷ்டியாகிய அனைத்தையும் சமதிருஷ்டியாகப் பார்த்து நமக்கு எட்டிய மட்டும் அவற்றின் விசித்திர விசேஷங்களை யறிய நாம் உண்மையாக ஆசைப்படுவோமானால், இப்புற் பூண்டுகளையுஞ் சோதிக்க நமக்குத் தருணம் நேரிடும். சற்காலம் தோட்டத்திற்கு நாம் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு மேல் ஆலோசிப்போம்.

3. ஏறக்குறைய ௫0-வருஷத்திற்கு முன் இந்தப்பூமி வெட்ட வெளியாகக் கிடந்த தென்றும் சுரு சுருப்புப் பட்டிச் சுப்பையன் செட்டி அந்தப்பாழ்ம்பூமியை அடைத்துத் திருத்தி இவ்விதம் தோட்டமாக்கிக் கொண்டா னென்றும் நாம் கேட்டிருக்கிறோமே! அவர் இம்மரங்களையுண்டு பண்ண என்ன செய்தார்? பல இடங்களிலிருந்தும் விதை காய்களை வரவழைத்துப் பாவிப்பயிராக்கி நட்டு வளர்த்தார் என்பது சரிதான். பருவம் தோறும் அப்படியே கீரை, வெண்டை, புடல் முதலிய விதைகளை யூன்றித்தான் அப்படர் பயிர்களும் உண்டாயிருக்கின்றன. நெல்காலந்தோறும் விதைத்து வயல் பயிரிடுகிறதைக் கண்டிருக்கிறோம். இப்புற் பூண்டுகள் எப்படி யுண்டாயின? அவைகளும் அப்படியே தங்கள் தங்கள் இனத்தின் விதை விழுந்தே யுண்டாயின என்பது, இதோ இத்துத்தியின் உலர்ந்த காயை யெடுத்துப் பார்த்தால் அதற்குள் நிறைய விதை இருப்பதும் சிதறிய விதைகளிலிருந்து சிறு சிறு துத்திச் செடிகள் கிளைத்து வருவதும் கண்டால் அறியலாம். இப்புல்லினையின் இனமானதினுலே தினைக்கதிர் போல குலை வாய்த்துச் சிறுசிறு அரிசியினுல் நிரம்பியிருப்பது பாருங்கள். இப்படியே பட்டுக்குடையைப் பார்க்கிலும் சிறந்த அழகுகொண்ட இக்காளானும் தோட்டத்து மதிலிலும் இக்குளத்திலும் படர்ந்து கிடக்கும் பலவகைப் பாசியினங்களும் தங்கள் தங்களுக்குரிய சிறு சிறு விதைகளாலேயே உற்பத்தியாயின என்பது நிராக்ஷேபமாகநிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சிறுவுருவை பெரிதாகக் காட்டும் சிற்றுருவிளக்கி என்னும் யந்திரம் நமது கையில் இப்போதுஇருக்குமாயின் அதனை நிரூபித்தல் எளிதாகக் கூடும். இனி நாம் இவ்வித சோதனைக்குப் புறப்படும்போது ஆவசியம் கொண்டு வர வேண்டியதுண்டு. ஆயினும், நாம் கண்ணூரக் காணக்கூடிய காய், விதை, இவைகளையுடையபுற்பூண்டு செடி கொடி முதலிய யாவும் அந்த அந்தவிதைகளிலிருந்தே உற்பத்தியாகின்றன என்பதற்குச் சந்தேகமில்லையே. அம்மட்டேனும் "வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என்பது பொய்யல்லவே.

4. இனி இவ்விதைகளும் காய்களும் எப்படியுண்டாகின்றன என்று பார்ப்போம். "சரி! சரி! மரம் விதையிலிருந்தும் வந்தது! விதை மரத்திலிருந்தும் வந்தது! மரமுந்தினதா காய் முந்தினதா என்று கேட்க வருகிறீரோ," என்று சந்தேகிக்க வேண்டாம். அவ்விதமான கேள்விகளெல்லாம், தெருவில் நம்மோடு வந்துவிட்டால் தீண்டல் படுமென்று கதவையடைத்துக் கொண்டு அறையிலேயே இருக்கிற சாம்பதீக்ஷதரிடம் கேட்டால் அவர் கக்கத்திலிருக்கும் ஸ்காந்த புராணம் பார்த்தும் கண்மூடிக் கணக்கிட்டும் நமதுசந்தேகம் தெளிய உபதேசிக்கினும் உபதேசிப்பார். நாம் இங்கே ஆராயப்புகுந்தது ஆதி சிருட்டி யெப்படி என்றல்ல. இதோ நிற்கும் இந்நாரக (நாரத்தை) மரத்திலிருந்து இதோ தோன்றும் இந்நாரகப் பழம் எவ்விதம் உண்டாகிறது, என்று அறிந்தால் நமக்குப் பேருதுமாக இருக்கும். நம் தகுதிக்கேற்ற சொற்ப ஆராய்ச்சி தானே நாம் எடுத்துக் கொள்ளலாம்.

5. இந்நாரகப் பூவில் ஒன்றைப் பறித்து நன்றாய்க் கவனித்துப் பார்ப்போம். இவ்வித ஆராய்ச்சிக்காகப் பறித்துப் பார்க்கிற புஷ்பங்கள் அப்போது அலருகிறதாக இருக்கவேண்டும். முற்றிலும் அலர்ந்து பொழுது சென்ற மலர்களாக இருந்தால் அவற்றின் உறுப்புக்களில் சில உதிர்ந்தும் அழிந்தும் இருக்கக் கூடும். அலராத மொட்டாக இருக்கும் விஷயத்தில் உறுப்புக்கள் முழுதும் பூரணமாகத் தோற்ற யாட்டாது. மேலும் நாம் மலர்களை அடர்த்தெடுக்கும்போது எவ்வளவோ கவனித்து அங்கபங்கங்களுக்கு இடமில்லாமல் மெல்லெனக்கிள்ளி எடுத்தலும்ஆவசியம்.



நாரக (நாரத்தை) மலர்.
1. புறவிதழ் (Sepals)
2. அகவிதழ் (petals)
3*. மகரந்தவாஹினி (pistil)
4. மகரந்த பஞ்சரம் (anther)

இதோ இந்நாரக (நாரத்தை) மலர் சரியான பக்குவ முடையதாயும் பத்திரமாக எடுக்கப்பட்டதாயும் இருக்கிறது. இதனைப் பாருங்கள். இதனுள் எத்தனை உறுப்பு இருக்கின்றன? அடியில் இதோ இருப்பது காம்பு. கிள்ளுண்ட இடத்திலிருந்து இன்னும் சிறிது கறைவடிந்து கொண்டிருக்கிறது. இப்படியே எல்லா மலர்களுக்கும் பீடமாக மரக்கொம்பினின்றும் கிளைத்து வரும் காம்புஉண்டல்லவா. அதற்குப் புஷ்பபீடம் அல்லது பூந்தாள் (peduncle) என்று பேர். இக்காம்பு கிண்ணம் போல் விரிந்து பூவின் அடியைச்சுற்றி நிற்பது தெரிகிறதா? கவனித்துப் பார்த்தால் இக்கிண்ணத்தின் மேல் விளிம்பில் நான்கு பாரிசத்திலுமாக ஐந்து பற்போன்றசிறு நுனிகள் காணப்படும். அந்நுனிகளைப் பிரதானமாகக் கொண்டு நோக்கில் அவை ஐந்தும் ஐந்து பசுமையான இதழ்களின் சாயை தோற்றுவிக்கலாம். உண்மையில் ஐந்து இதழ்கள் ஒன்றோடொன்று இணைத்து வனையப்பட்டே இவ்விதம் கிண்ணம்போல் இந்நாரகமலரின் அடிப்பீடம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதோ அந்த அவரைப் பூவில் இவ்வடிப்பீடம் ஐந்து இதழ்களால் ஆக்கப்பட்ட தென்பது இன்னும் நன்றாய்த் துலங்குகின்றது. இக்கொய்யா மலரில் அவை முற்றிலும் பிரிந்து ஐந்திதழாக இருப்பதைப் பாருங்கள். இப்படிக் கிண்ணம்போல் பூவைத்தாங்கிக் கொண்டு நிற்கும் இப்பசுமையாகிய ஐந்து இதழ்களுக்கும் புறவிதழ் (sepals) என்று பேர். ஐந்து இதழும் சேர்ந்த கூட்டத்திற்கு புல்லி (calyx) என்று சொல்வார்கள். இப்பூ அலருமுன் அதனைப்பொதிந்து காத்து நின்றது நாம் இப்போது கூறிய புல்லி என்னும் புறவிதழ்த்தொகுதியேயாம். அலராத மொட்டைப் பார்த்தால் இவை எவ்வளவு பலமாய்ப் பொதிந்து நிற்கிற தென்பது விளங்கும். மலர் உதிர்ந்து காய ... பின்பும் அதோ அந்நாரகக் காயி ... அடியில் பீடம்போல ஒட்டிக் கொண்டிருப்பது காண்மின். இப்படிக் காயாயும் விடாது ஒட்டியிருக்கும் புறவிதழ்த் தொகுதிக்கு "விள்ளாப்புல்லி" (persistent calyx) என்று பேர். நல்லது வெயில் ஏறுகிறதற்குள் இச்சோதனையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப்போகவேண்டும். ஆதலின் இப்போது நாம் பார்வையிட்ட பசிய புறவிதழுக்குள் என்ன என்ன இருக்கின்றன என்று சோதித்தறிவோம். உள்ளே புறவிதழுக்கடுத்த வரியில் இதோ ஐந்து மங்கல் வெண்மையான இதழ்கள் இருக்கின்றன. இவை புறவிதழ்போல் ஒன்றோடொன்று ஒட்டியிருக்க வில்லை. தனித்தனி யிருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றுக்கும் "அகவிதழ்" (petals) என்று பெயர். ஐந்து அகவிதழும் சேர்ந்த தொகுதிக்கு "அல்லி" (corolla) என்றுகூறுவர்.* இவ்வகவிதழ்களிருக்கும் ஸ்தானத்தைக்கவனியுங்கள். புறவிதழ்கள் இரண்டின் இடையிடையே அல்லவா இவ்வகவிதழ்கள் தோன்றுகின்றன. புறவிதழும் அகவிதழும் நேரே ஒன்றின்உள்ஒன்றாக அல்லஇருப்பது. அப்படி யிருந்தால் மொட்டாயிருக்கும்போது புறவிதழும் அகவிதழும் ஓரே யிடத்தையே மூடக்கூடியவையாக இருப்பதினால் இடை வெளிதோற்றவும், உள்ளிருக்கும் அங்கங்கள் போதுமானபடி பொதியப்படாமலிருக்கவும் நேரிடும். நாம் பூஜைக்குப் புஷ்பம் எடுக்கையில் பத்திரம் பறித்து ஒரு இலை நெடுகவும் ஒரு இலை குறுகவும் இட்டுவிட்டு, அவை இரண்டாலும் பொதியப்படாத இடத்திற்குக்கோணலாக இரண்டிலை பின்னும் எப்படி யிடுகிறோமோ, அப்படியேதான் புறவிதழ் ஐந்தாலும் மூடப்படாதஸ்தலங்கள் மறையும்படி, புறவிதழ் இரண்டிரண்டிடையில் ஒவ்வொரு அக இதழ் இருந்து உள்ளிருக்கும் உண்மையான மலருறுப்புக்களை நன்றாய்ப் பொதிந்து ... பாற்ற கின்றது.

ப. "ஏது! உண்மையான மலருறுப்புகள் இன்னும் உள்ளாகவா இருக்கின்றன? அகவிதழ் புறவிதழ் என்று நாம் பிரித்தறிந்து ... அகவிதழ் புறவிதழ் இரண்டும் உண்மையான மலருறுப்புக்கள் அல்ல. இவை யிரண்டு மில்லாத

* இந்த 3 இலக்கம் கடையைத்தில் ... குறிக்கப்போட்டுக் குறிக்கப்பட் ... துள்ள படத்தில் இந்த பாகம் தனியாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. 165-ம் ... பார்த்துத் தெளிவாய் அறிந்துகொள்க.

* "அல்லியகவிதழ் புல்லி புறவிதழ்"—சேந்தனுர்

புஷ்பங்கள் அனைத்தும். சாதாரணமாய்மாம்நிறைய நிற்கும் மற்ற இலைகளை யொத்த இலைகளே, உள்ளிருக்கும் மிருதுவான அங்கங்களுக்கு இசைய இப்படி மெல்லிய உருவெடுத்து, அகவிதழ், புறவிதழ் எனச்சுற்றி நின்று, உள்ளிருக்கும் பிரதான அங்கங்களைப் பாதுகாத்து வருகின்றன. சதுரங்க சேனுவலயம் சூழ கோட்டை கொத்தளம் கட்டி அவை நடுவே அநேக பிராகாரசமாவரணமான அரண்மனையுள்ளே பட்டவர்த்தினியோடும் சிம்ஹாசன பதியாய் வீற்றிருக்கும் அரசனையறிந்துதெரிசித்துச் சல்லாபிக்க இடம்பெறாத ஏழை குக்கிராமவாசிகள், கோட்டைவாசற் சேவகனைப்பார்த்து வாளும் கையும் கண்டு மன்னவனுகமதித்து வந்தன வழிபாடு செய்யும் மடமைபோலன்றோ, நிறமும் மணமும் கண்டு புறவிதழ் அகவிதழாகிய இப்புஷ்ப காவலாளரை மலர் என்றும் பூவென்றும் வாழ்த்திப் போற்றுகின்றோம். இனி அம்மதிப்பினை விட்டு, உள்ளிருக்கும் உண்மையான உறுப்புக்கள் எவை யென்று உற்றுப்பார்ப்போமாக. அப்பரிசோதனைக்குச் சற்றும் தடையில்லாமலிருக்கும்படி ஐந்து புறவிதழ்களையும் மெதுவாக அடர்த்து எடுத்து விடுவோம். பிற்பாடு என்ன என்ன காணப்படுகின்றன? உருண்டு நீண்ட உட் குழிந்த துாட்டி போன்ற தலைகளோடும் பல சிறு காம்புகள் தோற்றுகின்றன அல்லவா? இக்காம்புகள் இரண்டுமூன்று ஒன்றாக அடியிற் சேர்ந்து வளையப்பட்டிருப்பினும் தலைகள் வெவ்வேறாக இருப்பதுபார்க்கலாம்.

மகரந்தபஞ்சரங்களும் மகரந்தக்காம்புகளும்.

இத்துாட்டி போன்ற, உருண்டு நீண்ட குழிந்த தலைகளுக்கு 'மகரந்தபஞ்சரம்' (anther) என்றும், இவற்றைத் தாங்கிக் கொண்டிருக்கும் நூல் போன்ற நுண்ணிய உடம்பிற்கு 'மகரந்தக்காம்பு' (filaments) என்றும் பெயர். சாதாரணமாக இந்நீத மரங்களின் புஷ்பங்களிலுள்ள இக்காம்புகளும் ஐந்தோ, ஐந்தின் பெருக்கங்களாகிய, ய-உய-என்ற ஐந்தின் குணன சங்கைகளாகவோ இருப்பது வழக்கம். கவனித்துஎண்ணிப் பார்த்தால் தெரியவரும். இதைக்குறித்துஇனியொரு பொழுது ஆலோசிக்க நேரிடும். இப்போது நாம் கண்டுகொண்ட ஒவ்வொருதுாட்டி போன்ற மகரந்த பஞ்சரத்துள் யாது இருக்கின்றதென்று விசாரிப்போம். மகரந்தபஞ்சரமாகிய தலை இருபுறமும் உட்குழிந்திருப்பது கண்டோமல்லவா? உண்மையில் இத்தலைப்பில் வலப்புறம் இடப்புறமாக இரண்டு சிறு அறைகள் ஒன்றுபடப் புணர்த்தப்பட்டிருக்கின்றன. அப்படிப் புணர்த்தினதினுல் உண்டான பொருத்துதான், இங்ஙனம் இருபுறமும் குழியாகத் தோற்றுகின்றது. புஷ்பம் விகசிக்கும் காலத்தில் இப்பொருத்து அடியில் சற்றே விலகுகின்றது. விலகவே யுள்ளிருக்கும் மகரந்தப்பொடி வெளியே சிதறுண்டு போகின்றது. இம்மலர் அலர்ந்த மலராதலால் இதோ நம்கைவிரல் படுமிடமெல்லாம் மஞ்சள்நிறமாக ஒரு துாள் அகப்படுகிறது பாருங்கள்! காம்பிலும் நாம் பறித்து எறிந்துவிட்ட அகவிதழ்களிலும்மஞ்சள் மஞ்சளாகக் காணப்படுவதும் இதுவே. இத்துாளுக்குத்தான் 'மகரந்தம்' (Pollen) என்று பெயர். கூர்மையாகப் பார்த்தால் இத்துாள் பல ரேணுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது விளங்கும். இவ்ரேணுக்கள் ஒவ்வொன்றும் பயறு போல் உருண்டு திரண்ட வடிவினையுடையதாயிருக்கும். அதற்கு மகரந்தரேணு (Pollen grain) என்று பெயரிடுவோம். இந்த ரேணு ஒவ்வொன்றுக்குள்ளும் மூலசத்தையின் அதிவிசித்திர விகாரமாலா விந்து என்னும் தத்துவம் இருக்கிறது. அதனை மகரந்தவிந்து என்று சொல்லுவார்கள். அதுவே புஷ்பங்கள் காயாக முதிரச்செய்யும் முக்கியதத்துவம். ஆனால் அதன் குண வைபவங்கள் முழுதும் அறிவதற்கு சிற்றுருவிளக்கியின் உதவியின்றி முடியாது. சிற்றுரு விளக்கியோ இப்போது கையில் இல்லையே. இனி வரும்போது கொண்டுவந்து சோதித்து அறிந்துகொள்ளுவோம். இப்பொழுது இனியும் எதாவது உறுப்புகள் இம்மலரிடத்திலிருக்கின்றனவோ என்று மேற்பார்வையாகப் பார்த்து முடித்துக்கொள்வோமாக.

7. நாம் ப[illegible]த்தறிந்த மகரந்தக் காம்புகளையும் இனி மெல்லெனக்க[illegible]க்கவிட்டு, இவற்றிற்கும் அப்புறம் மலருடைய நடுப்

பக்கத்திலிருப்பது என்னவென்று பாருங்கள். கோபுரத்தின்மேல் வைக்கிற ஸ்தூபிகலசம் போலவும் நாம் வீட்டிற் பரிமாறும் பனிநீர்ச் செம்புபோலவும் வடிவுடையதாய், அடியும் தலையும் பெருத்து இடைசுருங்கி தண்டாகாரமாக நீண்ட ஒரு உறுப்பு பூவின் நேர்நடுவில் நிற்பது தெரிகிறதா? அடியில் பெருத்து உருண்டு திரண்டிருக்கிறதைப் பத்திரமாய்க் கவனித்துத் துண்டித்துப்பார்த்தால், நாரகக்காயினுள் இருப்பதுபோலவே சிறுசிறு அறைகளும் அவ்வறைகளுக்குள் சிறுசிறு விதைகளும் அதிசூக்குமமாக இருப்பது வெளிப்படும். உண்மையில் இதுவே நாரகக்காயாகக் காலக்கிரமத்தில் உருக்கொண்டு பெருக்கின்றது. இங்ஙனம் மேற்காயாகப் பாவித்தற்குரிய இப்பூவுறுப்பிற்கு போகுட்டு* அல்லது பூங்கோட்டை, பூம்பிஞ்சு, (ovary) என்று பெயர். அப்பூங்கோட்டைக் குள்ளிருக்கும் சூக்குமவிதைகளுக்குக் கேர்ப்பகோளம் (ovule) என்று சொல்லுவார்கள். வாஸ்தவத்தில் இக்கெர்ப்ப கோளங்கள் ஒவ்வொன்றும் வீரியமடைந்து பலிதப்பட்டுப் பெருத்துவருவதே பிற்கிளையாக்கத்திற்கு பிரத்தியக்ஷ ஏதுவாக விளங்கும் 'விதை-விதை' யென்று சொல்லப்படுவது. "அப்படியானால் இச்சிறுவிதை ரூபமாக இருக்கிற கெர்ப்ப கோளங்கள் மாத்திரம் போதாவோ? நாம் பார்த்த மகரந்தபஞ்சரம் என்? மகரந்தத்துாள்என்?" என்னில், இதோ பாருங்கள்! இக்கிளையில் ஒரு கெர்ப்பகோளமாகிய சிறு காயிருக்கிறது! வாடியுலர்ந்து உதிரும் தன்மையில் அன்றோ அதன் நிலை! அதற்குச் சமீபத்தில் உள்ள இலையை ஒரு புழு அரித்திருக்கிறது பார்த்தீர்களா? புஷ்பத்தில் இருந்த மகரந்தக்காம்புகளையும் மொட்டாக இருக்கும்போது அப்புழு அரித்து உண்டிருக்கவேண்டும் என்பது புறவிதழில் தோற்றுகிற தழும்பால் ஊகிக்கலாமல்லவா! அவ்விதமாக மகரந்த பஞ்சரங்களுக்கு ஏதோ கெடுதி நேரிட்டதினுல்தான் இக்கெர்ப்பகோளப்பையாகிய போகுட்டு, இப்படி பலிதப்படாமல் வாடியுலர்ந்து நிற்கிறது. பரீக்ஷைவழியாக இதனை நிரூபிக்கவேண்டுமானால் ஏதாவது அலர்ந்துவரும் ஒரு புஷ்பத்தில் உள்ள மகரந்தபஞ்சரங்களைக் கொய்து எறிந்துவிடுங்கள். பிற்பாடு அப்புஷ்பத்தில் இருக்கும் சிறுகாய் இதுபோல உலர்ந்து உதிர்ந்து போகிறதில்லையா வென்று பாருங்கள்! பஞ்சரங்களுக்குள்ளிருக்கும் மகரந்தத் துாளைத்துடைத்து அலம்பிவிட்டாலும் சிறுகாயின்கதி முற்கூறியவாறேயாகும். மழை நன்றாய்ப் பெய்துகொண்டிருக்குங்கால் புஷ்பிக்கும் புஷ்பங்கள் எல்லாம் பலிதப்படாமல் போவதற்கும் காரணம் இதுதான். இந்நியாயங்களால் கெர்ப்பகோளங்களான சிறு விதைமாத்திரம் தாமே காயாவதற்கு வலிமையுடையவையல்லவென்பது சந்தேகமறத் துணியலாமல்லவா? இனியும் நமக்கு அகப்படும் சந்தர்ப்பங்களில் அதனை நிரூபிப்போம். கெர்ப்பகோள மாத்திரத்தால் காயாவது கூடுவதன்று என்பதில் யார்க்கும் ஐயம் வேண்டுவதில்லை. அங்ஙனம் பலிதமாவது மற்றெப்படி யென்னில் நாம் முற்கூறிய மகரந்த ரேணுக்களில் இருக்கும் விந்து தத்துவம் இச்சிறு பிஞ்சுக்குள் வந்து கலத்தல் வேண்டும்.



போகுட்டு அல்லது பூம்பிஞ்சு.
1. மகரந்தவாகினி,
2. கெர்ப்பகோளம்.

8. அங்ஙனம் விந்து தத்துவம் வந்து கலத்தற்காகவே, நாம் கெர்ப்பகோளம் என்று பெயரிட்ட சிறு பிஞ்சின் தலைமேல் இக்காம்பு இருக்கிறது. இதன் நுனிபருத்து விரிந்திருப்பது தெரிகிறதா? தொட்டுப்பாருங்கள்? வழுவழுப்பான ஒரு விதமான பசை கையிற் படுகிறதல்லவா? கூர்மையாகப்பார்த்தால் இந்நுனியின் மேல் சிறுசிறு புள்ளிகள் சற்றே வெண்மையாகத் தோற்றலாம். இப்படிப் பிஞ்சுக்காயின் மேலிருக்கும் காம்பிற்குமகரந்தவாகினி (pistil) என்று பெயர். அதன் வழுவழுப்பான நுனிக்கு மகரந்தவாகினித்தலை (stigma)யென்று சொல்லலாம். மகரந்தவாகினித்தலைக்கும் பிஞ்சுக்காய்க்கும்இடையே சிறுத்துத்தோற்றும் உடல்தான் மகரந்தவாகினிக்காம்பு (style). ஆனால் இவ்வு

* "பொகுட்டுத் தாமரைப் பூங்கொட்டை" என நிகண்டின் சிறப்புப்பெயராகக் காணப்படினும் "பொகுட்டேகன்னிகை பூவினுட்கோட்டை" எனப் பொதுப்படக் கூறுவர் பூர்வாசாரியராகிய சேந்தனார்.

டல் நாரகமலரில் காணப்படுவது போல்மற்றெல்லாமலரிலும் இருக்கவேண்டுமென்பது நியமம் அன்று. ஒவ்வொரு புஷ்பங்களில் ஒவ்வொரு விதமாக இருக்கும். அந்தக்கிரமங்களை அங்கங்கு சோதிக்கும் போது அறிந்து கொள்ளலாம். நாம் இப்போது கவனிக்கவேண்டுவது மகரந்த விந்து, பிஞ்சாகிய கெர்ப்பக் கோளத்துக்குள் எவ்விதம் பிரவேசிக்கிறது என்பதே.

9. புஷ்பம் அலரும்பொழுதே மகரந்த பஞ்சரம் வெடிக்கிறது என்று சொன்னோமல்லவா? வெடிக்கவே அதனுள்ளிருக்கும் மகரந்தத்தூள் நாலுபாரிசத்திலும் சிதறுண்டு விழுகின்றது. அந்த ரேணுக்களில் சில, மகரந்தவாகினியின் வழுவழுப்பான சிரசிலும் விழும். விழுந்தவைகளோ அத்தலை வழுவழுப்பாக இருப்பதினால் அங்கே ஒட்டிக்கொள்ளுகின்றன. உடனே அவ்விரேணுக்களுக்குள்ளிருக்கும் விந்து தத்துவம் வெளிப்படுகின்றது. அது கண்ணுக்குப் புலப்படத்தக்கதன்று. சிற்றுரு விளக்கியால் பார்த்தால் மிகவும் நுண்மையான நூல்போலும் வடிவினையுடையதாய், தானே சலிக்கும் வல்லமையோடு கூடிய மூலசத்தையின் அதிவிசேஷமான விகற்பமாக விளங்கும். அதின் குணாதிசயங்களைப்பற்றிப் பிற்பாடு சிந்திப்போம். இந் நூல் போன்ற விந்து தத்துவம் மகரந் வாகினியின் சிரசிலிருந்து அங்கே நாம் சற்று முன் குறிப்பிட்ட வெண்மையான சிறுபுள்ளிகளில் அடைகின்றது. இப்புள்ளிகளோ, சிறு பிஞ்சுமுதல் மகரந்த வாகினிக்காம்பை யூடுருவிக்கொண்டு அதின் தலை நுனிவரையும் வந்திருக்கின்ற அதிநுட்பமான குழல்களின் கடைசி வெளிகளாகும். இதோ இக்காம்பை யறுத்து நன்றாய்க் கவனித்துப்பாருங்கள்! குழல்களின் சாலைதெரிகிறதல்லவா? நல்லது! இக்குழல்கள் வழியாகத்தான் மகரந்த வாகினியின் தலையில் தங்கிய விந்து தத்துவமானது மெள்ள மெள்ளப் புகுந்து முடிவில் பிஞ்சாகிய பொகுட்டுக்குள் சென்று சேருகிறது. அவ்விடத்திலோ சிறுவிதை ரூபமான கெர்ப்ப கோளங்கள் இருக்கின்றனவே. படிப்படியாய்ப் பரவி முடிவில் இச்சிறு விதைகளுக்குள் புகுந்து அவற்றின் சத்தையோடு கலக்க அவை வீரியமடைந்து பலிதமாகின்றன. கெர்ப்பகோளத்துக்குள்ளிருக்கும் சத்தைக்கு நாதத்துவம் என்று நம்மவர்கள் சொல்லுவார்கள். மகரந்த ரேணுக்களின் உள்ளிருக்கும் விந்து தத்துவத்தை வகித்து இங்ஙனம் பிஞ்சினுள் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் தன்மைபற்றியே அப்பிஞ்சின் மேலிருக்கும் உறுப்பிற்கு மகரந்தவிந்துவாகினி அல்லது சுருக்கத்தில் மகரந்தவாகினி, விந்துவாகினி யென்னும் பெயர்கள் உண்டாயிருக்கின்றன. ஆகவே இந்நாரக (நாரத்தை) மலரின் முக்கிய அங்கங்கள் மகரந்த பஞ்சரத்துள் வீற்றிருக்கும் ரேணுக்களின் விந்துவும் பொகுட்டென்று நாம் கூறிய சிறு பிஞ்சினுள் காத்திருக்கும் சிறுவிதைரூபமான கெர்ப்பகோளங்களுமேயாம். இவை யிரண்டையும் கலப்பிக்கும் மார்க்கமாகிய விந்து வாகினியும் முக்கிய அங்கங்களுள் ஒன்றாகவே கூறலாகும்.

10. இதுவே நாரகமலர் காயாகும் கிரமம். காயானபின் முதிர்ந்து பழமாய் அதிலுள்ள விதைகள், சரியான காலதேசபக்குவங்கள் இருக்குமாயின், அவைகளை யீன்ற மரம் போன்ற வேறு மரங்களைத் தாய்மரத்தின் பிற்கிளைகளாக உற்பத்திசெய்ய வல்லமையுடையன என்பது யாவரும் அறிந்த விஷயம்.

11. நாம் இப்போது பார்த்து அறிந்துகொண்ட சங்கதிகளால் மரவருக்கத்தின் பிரத்தியுத்பாதனம் என்னும் பெருந்தொழில் நடந்தேறுவதற்கு முக்கியமானது, மகரந்த ரேணுக்களிலுள்ள விந்து தத்துவம், பொகுட்டு, பூங்கொட்டை, அல்லது பூம்பிஞ்சு என்றுசொல்லப்பட்டதின் உள்ளிருக்கும் சிறு விதை ரூபமான கெர்ப்பகோளத்தோடு கலக்கவேண்டிய தொன்றே யென முடிகிறது. இதன் பொருட்டே மரங்கள் பூப்பது. பூவிலுள்ள உறுப்புக்கள் ஒவ்வொன்றினுத் தேசமும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவகை மலரில் எடுத்துக்கொள்ளும் வேவ்வேறான எண்ணற்றவடிவம், ஒழுங்கு, குணம் முதலியவற்றின்குறிப்பும் இதுவே. "காக்கையிருந்தது பனம்பழம் விழுந்தது" என்றபடி மகரந்த பஞ்சரத்துள்ளிருக்கும் ரேணுக்கள் விந்துவாகினியின் உச்சியில், தக்க பருவத்தில் உதிரவேண்டியதாக இருப்பதினால், இத்தொழில் நன்கு முடியுமாறு ஒவ்வொரு புஷ்ப வருக்கத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனந்த கோடி உபாயங்கள் அத்தியந்தம் ஆச்சரிய தமமானவை. நாம் சோதித்த நாரக மரத்தில் மகரந்த பஞ்சரங்களும் விந்து வாகினியும் ஒரே மலரிலல்லவோ இருந்தன. அப்படியே எல்லாமலரிலும் இருப்பன அல்ல. இதோ படரும் பூசனியில் பூக்கும் பூவெல்லாம் காயாகிறதில்லையே. காயாகும் பூ சிறு[illegible]னும் பொகுட்டோடு [illegible] இதோ தோற்று[illegible] பாருங்கள். இப்பூவில் ஒன்றைப் பரிசோதிக்கில் விந்து வாகினியே யல்லாமல் மகரந்த பஞ்சரம் ஒன்றும் காணமாட்டாது. வெளியில் சுற்றிய புறவிதழ் ஐந்தும் ஒன்றுபட வளையப்பட்டுக்குவிந்த கிண்ணம் போல் ஒன்றாக இருப்பது நாம் இப்போது கவனிக்க வேண்டிய சங்கதியன்று. உள்ளே மகரந்த பஞ்சரம் இல்லாமை, நாம் கூறிய விதிக்கு விரோதமாகத் தோற்றுவதே விசேஷம். ஆனால் மற்றுக் காயாகாத பூவில் ஒன்றைப் பாருங்கள்! அதில் மகரந்தக் காம்புகளனைத்தும் ஒன்றுபட நார் பின்னுவது போல் பின்னப்பட்டு ஒரே காம்பாக நிற்பதும், அது நிறைய மகரந்த ரேணுக்கள் பொதிந்து நின்று உதிர்ந்து விழுவதும் கண்டீர்களா! இங்ஙனம் ஒரு பூவிலுள்ள மகரந்த ரேணு மற்றொரு பூவிலுள்ள விந்துவாகினியைச் சென்றடைய அன்றோ வேண்டியதாக இருக்கிறது. இது மாத்திரம் அன்று. மகரந்த முடையது ஒரு பூவும், காயாக வேண்டுவது வேறொரு பூவும் ஆக இருப்பினும் இரண்டு பூவும் ஒரே பூசணிக்கொடியில் தானே யிருக்கின்றன. சில மரவர்க்கங்களில் அப்படியேனும் இல்லாமல், ஒரு மரத்தில் மகரந்த மலரும் மற்றொரு மரத்தில் விந்துவாகினிமலரும் இருந்து காயாக வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. இதோ இச்சவுக்குமரம் (casuarina muricata) காயாது நிற்பது கண்டீர்களா. அதோ நிற்பதில் நிறையக் காயிருப்பது பார்மின். முன்னது மகரந்தம் மாத்திரமே யுடையது. அது ஒரு போதும் காயாது. பின்னதில் கெர்ப்ப கோளங்கள் மாத்திரமே யுண்டு. அம்மரமே மற்றதின் மகரந்த ரேணுக்களின் சேர்க்கையால் காய்க்கக் கூடியது. இவ்வேற்றுமையால் தான் ஒன்றை ஆண்மரமென்றும் மற்றதைப் பெண்மரமென்றும் நம்மவர்களில் சிலர் கூறுகின்றனர். அறிந்துசொல்லினும் அறியாது சொல்லினும் உண்மை அதுவே. இத்தகைய காகதாலீயப்புணர்ச்சிக்கு நேரிடத்தக்க பிரதிபந்தங்களை விலக்கிச் சுலபப் படுத்தும் பொருட்டுச் செய்திருக்கும் ஏற்பாடுகளைக் குறித்துச் சிந்திக்கில் எவ்வளவு காலம் யோசிக்கினும் தெவிட்டாத சித் சுகத்தை வாவிக்கத் தக்கனவாக இருக்கும். அவற்றுள் வண்டு தேனீ முதலியவற்றின் நல்வரவும் காற்றின் சஞ்சாரமுமே பிரதான ஹேது பூதங்களாக இருக்கின்றன என்று மாத்திரம் இவ்விடத்தில் தெரிவிக்கக்கூடியது. இவற்றுள் மதுகரங்கள் ஜீவஜாலத்துள் அகப்பட்ட படியால், அவைகள் செய்யும் தொழிலுக்குப் பிரதிப் பிரயோசனமாக விருந்தளிக்கவே தேன்துளிகள் புஷ்பங்களுக்குள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. வண்டுக்கூட்டம் மலரிருக்கும் இடம்தெரிந்து வரும்படி வைத்தவையாம் மலர்களின் புறவிதழில் நாம் கண்டு மகிழும் பல்வேறு நிறங்களும், நாம் கொண்டாடும் நறுமணங்களும். இவைகளைப்பற்றி ஒவ்வொரு புஷ்ப விகற்பங்களையும் சோதனை செய்யும் தருணத்தில் சொல்வதே உசிதம், இப்போது வெயிலாய் விட்டபடியாலும் உங்களில் சிலருக்குப் பசியும் ஒருபுறம் தகிக்கத் தலைப்பட்டிருக்கக் கூடியதினாலும் இன்று இவ்வளவோடு முடித்து வீட்டுக்குத் திரும்புவோம். இவ்வளவும் வீண் பொழுதாயினதே யென்று நினையாதே யுங்கள்! பசிப்பதும் பசிதீர்ப்பதும் என்று தான் இல்லை. "செவிக்குணவில்லாத போழ்து" அன்றோ "சிறிதுவயிற்றிற்கு மீயப்படும்" என்றார் நாயனார். "தீராத குழிதீர்க்கை தொழிலாக"* கொண்ட நம்முயற்சியின் நிலைமைபற்றியன்றோ "யோசிக்கும்வேளையிற் பசி தீர வுண்பதும் உறங்குவதுமாக முடியும்," என்றருளினார் பிரமானுபூதிச் செல்வராகிய தாயுமானவர். அங்ஙனம், பொழுது விடிந்து கண் துடைத்து எழுந்தது முதல் இரவில் கொட்டாவி விட்டுக் கண் மயங்கிச் சோரும் வரையும் 'எனக்கு எனக்கு' என்றுஓயாது தன்னையமே கருதி, ஒரு கணப்பொழுதேனும் உள்ளும் புறமும் ததும்பி விளங்கும் சித் விலாசத்தை யெட்டிப்பாராமல், வாணியன் வீட்டுச்

* அஞ்ஞவதைப்பரணி.

செக்கெருதுபோலச் சென்ற வழியே சென்று சுற்றிச்சுற்றி யுழைத்து நமது அரிய வாழ்நாள் முழுதும் கழித்து விட்டால், விவேக சூந்நிய மான மிருகங்களுக்கும் நமக்கும் வேற்றுமை யென்னை? ஐயோ!

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் [illegible]"

பி. சுந்தரம்பிள்ளை. M. A.

☞ [சென்ற இரண்டு சஞ்சிகைகளிலும் இதிலும் சொல்லப்பட்ட சங்கதிகளில் உண்மையான சந்தேகங்கள் யாருக்காவது தோற்றினால் அவற்றைத் தெரிவிக்கில் கூடிய அளவும் சந்தேக நிவர்த்திக் கேற்றவை யெடுத்துக்காட்டி மேற்சங்கதிகளையும் அடுத்த சஞ்சிகையில் விவரிக்க ஆக்ஷேபமிராது.]

---

* நடுவேனிற்கனவு.

பாத்திர விளக்கம்.

"தீஸியுஸ்" ="ஆதென்ஸ்" நகரத்தரசன்.
"இஜீயஸ்" ="ஹெர்ம்யா" என்பவளின் தந்தை.
"லைஸாண்டர்", "டெமிட்ரியஸ்" =ஹெர்ம்யாவின்மேல் நேசங் கொண்டவர்கள்.
"பிலாஸ்ட்ரேட்" (Philostrate) = தீஸியுஸ் அரசனது கூத்து விருந்துகளின் விசாரிப்புக்காரன்.
"க்வின்ஸ்" (=ஓர்வகை இலந்தை)= தச்சன்.
"ஸ்நக்" (=நெருக்கம்)=மூட்டுவேலைக்காரன்.
"பாட்டம்" (=நூலுண்டை)=காருகன்.
"ப்ளூட் (Flute=குழல்)=துருத்திதிருத்துவோன்.
"ஸ்நௌட்" (=நீண்டமூக்கு)=செம்பு கொட்டி.
"ஸ்டார்வெலிங்" (=பசியால் மெலிதல்) =தையற்காரன்.
"ஹிப்பாலிடா" =அமேஜான்ஸ் (Amazons) என்ற பெண்போர்வீரரின் அரசி, தீஸியுஸ்ஸோடு போர்புரிந்து தோல்வியுற்றபின் அவனை மணஞ்செய்ய இருப்பவள்.
"ஹெர்ம்யா" =இஜீயஸ்ஸினுடைய மகள், லைஸாண்டரின்மேல் ஆசை கொண்டவள்.
"ஹெலனா" =டெமிட்ரியஸ்ஸின்மேல் ஆசை கொண்டவள்.
"ஓபரான்" =கந்தர்வ அரசன்.
"டிடேனியா" =கந்தர்வ அரசி.
"பக்" =விகடக்குட்டிப் பேய்.
பயற்றம்பூ (=பீஸ்ப்ளாஸம்), சிலம்பிக்கூடு (=காப்வெப்), பாச்சை (=மாத்), [illegible] (=மஸ்டர்ட்ஸீட்) = கந்தர்வப் பெண்கள்.
மற்றைக் கந்தர்வா[illegible]ந்தர்வ அரசன் அரசிகளோடு வருபவர்கள்.
பரிவாரங்கள்=தீஸியுஸ், ஹிப்பாலிடாக்களோடு வருபவர்கள்.
இந்நாடகத்துக்குரிய இடங்கள்: ஆதென்ஸ் நகரமும், அதற்குச் சமீபத்துள்ள காடும்.

1-வது அங்கம்

1-வது இடம்: ஆதென்ஸ் நகரத்தில் தீஸியுஸ்ஸினுடைய அரண்மனை.

[தீஸியுஸ், ஹிப்பாலிடா, பிலாஸ்ட்ரேட், பரிவாரங்கள் வருதல்.]

தீஸியுஸ்.—சீருள்ள ஹிப்பாலிடாவே, நாம் மணம்புரிந்து மகிழ்வுறுங்காலம் நெருங்குகின்றது. அமாவாசைக்குப்பின் புதிய பிறை தோன்றுதற்கு இன்னும் நான்கேநாள் செல்லவேண்டும். ஐயோ! இப்பழையபிறை மிகமெல்லத் தேய்கிறதுபோல் காண்கின்றதே! அதனால் நமது ஆசை நிறைவேறுநாளும் தங்கித் தங்கி மெல்ல வருகின்றது.

ஹிப்பாலிடா.—நான்கு பகலும் அவற்றினது இரவில் விரைவில் அழுந்திவிடும்; நான்கு இரவும் கனவில் விரைவிற் கழிந்துவிடும். பின்னர் வானத்துப் புதிதாய்வளைத்த வெள்ளிவிற் போன்று விளங்குந் திங்கள் நாம் மணம்புரிந்து மகிழ்வுற்றிருக்கும் இரவைக் காணும்.

தீஸியுஸ்.—பிலாஸ்ட்ரேட், நீ போய் இவ்வாதென்ஸ்நகரத்து இளைஞரைக் களித்துக்கொண்டாட எழுப்பிவிடு. மனச்சோர்வைத் துக்கமுள்ளவிடத்துத் துரத்தி ஊரெங்கும் சந்தோஷம் நிறைந்திருக்கச் செய். (பிலாஸ்ட்ரேட்-போதல்.) ஹிப்பாலிடா, உன்னை என் வாளால் வசீகரித்தேன்; உனக்குத் தவறிழைத்து உன் அன்பைக்கொண்டேன்; இப்பொழுது உன்னை மணம்புரியும் வழியோ இத்தன்மைத்தானதன்று: ஆரவார வேடிக்கையுடனும் ஆநந்தக் களிப்புடனும் உன்னைக் கைப்பிடித்து எனது மணமகளாக்குவேன்.

---

* "ஷேக்ஸ்பியர்ஸ் மிட்ஸம்மர் நைட்ஸ்ட்ரீம்" என்று இங்கிலிஷிற்பெயருள்ள "நடுவேனிற்கனவு" என்னும் நாடகம் தமிழில் வசனநடையில் பெரும்பான்மையும் மூலத்தில் உள்ளவாறே எழுதப்பட்டிருக்கிறது.

[இஜீயஸ், ஹெர்ம்யா, லைஸாண்டர், டெமிட்ரியஸ் வருதல்.]

இஜீயஸ்.—நம் புகழ்பெற்ற இறைவனாகிய தீஸியுஸ் இனிதுவாழ்க.

தீஸியுஸ்.—உத்தம இஜீயஸ்ஸே, நிரம்பச் சந்தோஷம். உனக்கு நிகழ்ந்தது என்ன?

இஜீயஸ்.—என்னாண்டவனே, துயரம் நிறைந்து, என் மகள் ஹெர்மயா வென்பவள்மேல் குறைகூற வருகிறேன். அழகும் ஆஸ்தியுமுள்ள உயர்குலத்தோனாகிய டெமிட்ரியஸ்ஸென்னும் இவ்வாலிபன் அவளை மணம்புரிய என் அநுமதி பெற்றவன். என் தண்ணளித் தலைவ, இங்கு நிற்கும் லைஸாண்டரோ, அவள் உள்ளத்தை மயக்கினான்.— லைஸாண்டரோ, எதுஷ்டா! நீ என் குழந்தையிடத்து நேசஅடையாளங்களைக் கொடுத்து நேச அடையாளங்களைப் பெற்றுக்கொண்டாய்; பொய்ந் நேசங் காட்டும் பாடல்களை மாறுகுரலில் நிலவில் அவளுடையசாளரத்தருகிற்பாடி, மோதிரம், விளையாட்டுடைமை, சிறுபண்டம், பூச்செண்டு, சுவைப்பண்டம் முதலியவற்றால் உன் உருவத்தை அவள் மனத்தில் யாருமறியாமற் பதித்தாய்; கபடமாய் அவள் உள்ளத்தைக் கவர்ந்தாய்; எனக்குரிய அவளது பணிவை இணங்காத வன்கண்மையாய் மாற்றினாய்.— என் தண்ணளித்தலைவ, உன் முன்பில், அவள் டெமிட்ரியஸ்ஸை மணம்புரிய உடன்படாளேல், ஆதென்ஸ் நகரத்துப் பண்டை வழக்கப்படி நடக்க அனுமதி தந்தருள வேண்டுகின்றேன்; அவள் என்னுடைமையாதலின், அவளை இக்குலமகனுக்கு அளிப்பேன், அன்றேல், நம்மூர்ச் சட்டத்தின் கண்டிப்பான திட்டப்படி கொலைக்களம்படுப்பேன்.

தீஸியுஸ்.—ஹெர்ம்யா, நீ என்ன சொல்லுகிறாய்? சீருள்ள கன்னியே, சொலலும் புத்தியைக்கேள்; உன் தந்தை உனக்கு ஓர் தெய்வம்போன்றவன்; உனக்கு உருவம் தந்தவன் அவன்; அழகு அமைத்தவன் அவன். தந்தை சொன்மிக்க மந்திரமில்லை. ஆதலின் அவன் ஏற்படுத்திய கணவனாகிய டெமிட்ரியஸ்ஸை மணம்புரிந்து வாழ்வாயாக.

ஹெர்ம்யா.—என்னாண்டவனே, என்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுகின்றேன். என் வன்மையினால் எனக்கு இத்தனை துணிவோ இங்கு இச்சந்நிதானத்து, என் உட்கருத்தை வெளியிட்டு வழக்காடல் என் பெண்ணுணத்திற்கு எம்மட்டில் முறையோ, அறியேன்; டெமிட்ரியஸ்ஸை மணம்புரியமறுப்பேனேல், எனக்கு வரக்கூடிய பெருந்தீங்கு இன்னதென்று யானுணருமாறு அருளிச்செய்ய வேண்டுகின்றேன்.

தீஸியுஸ்.—இறக்கவேண்டும், அன்றேல்,மனிதர்சேர்க்கையையே முற்றுந்துறந்து நித்திய கன்னிவிரதம் பூணல்வேண்டும். இதைப்பற்றிப் பொறுத்துயோசித்துத்துணிய,உனக்கு நான்கு நாள் இடம் கொடுத்திருக்கின்றேன். நானும் என் காதலியும் மணம்புரியும்நாளாகிய இன்றைக்கு நான்காம்நாளில் உன் விருப்பம் இன்னதென்று அறிவிப்பாயாக.

டெமிட்ரியஸ்.–இனிய ஹெர்ம்யாவே, இனியேனும் என்மேல் சற்றிரங்கு. லைஸாண்டரே என் ஐயமில்லாப் பொருளுக்கு நீயேன் உரிமை பாராட்டுகின்றாய்? விட்டுவிடு.

லைஸாண்டர்.—என்னாண்டவனே, குலத்தாலும் பொருளாலும் யான் அவனுக்குக் குறைந்தவனல்லன்; என் நேசமோ அவனதிலும் மிக அதிகம்; என் பாக்கியமோ அவனுடைய பாக்கியத்திற்கு, ஒருக்கால் மேலானதன்றெனப் படினும், அதற்கு இணையாயிருக்குமென்பது நிச்சயம். இவ்வெல்லாப் பெருமையிலும் மேலாக, நான் அதிசுந்தரியாகிய ஹெர்ம்யாவால் நேசிக்கப்பட்டவனென்னும் பெரும் பெருமையும் உடையேன். ஆதலின், யான் ஏன் என்னுரிமையைப் பாராட்டவொண்ணாது? டெமிட்ரியஸ்ஸோ,—அவன் முகத்துக்கு நேர் உறுதியாய்ச் சொல்வேன்—நேடாரின் புதல்வியாகிய ஹெலனாவை நேசித்து அவள் உள்ளத்தைத் தன்வசங் கொண்டோன். அவ்வினிய மாதோ, உறுதியற்ற இம்மோசக்காரன்மேல் மிக்க காதல் பூண்டாள், பக்தி பாராட்டுகின்றாள், இவனைத் தெய்வமென ஆராதிக்கின்றாள்.

தீஸியுஸ்.—ஸ்வய காரியமே என் மனத்து நிரம்பித் ததும்புதலால் நீங்கள் சொல்லியதில் ஒன்றும் அதில் தங்கவில்லை. ஆயினும், நன்று; சீருள்ள ஹெர்ம்யா, நான் முன்சொல்லியவண்

ணம் உன் தந்தையின் கருத்துக்கு இசைந்து நடப்பாயாக; அன்றேல், இன்றைக்கு நான்காம் நாளில் ஆதென்ஸ்நகரச்சட்டப்படி—அச்சட்டத்திற்சொல்லியதில்ஒன்றுங்குறையேன்—மரணதண்டனைக்குட்படவோ, அல்லது நித்திய கன்னிவிரதம் பூணவோ சித்தமாயிரு. ஹிப்பாலிடா, என் காதலியே, இன்புற்றிருக்கிறாயோ? நாம் இனிப்போவோம். இஜீயஸ், டெமிட்ரியஸ், நீங்களும் என்னுடன் வாருங்கள்; உங்களை என் கலியாணகாரியத்தில் ஏவுவேன்; அன்றியும், உங்கள் காரியத்தைக் குறித்தும் உங்களிடத்துத் தனித்துப் பேசவேண்டியதுண்டு.

இஜீயஸ்.—எம் கடமையைச் செலுத்த ஆவலோடு வருகிறோம்; என்னுண்டவனே.

[தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ், டெமிட்ரியஸ் பரிவாரங்கள்-போதல்.]

லைஸாண்டர்.—என் அன்பே, சுகமோ? முகம் வெளுத்தாயே; கன்னச்செம்மலர் வாடியதே. ஆ! கஷ்டம்! மெய்யன்பிற்குப் பலவிதத்திலும் இடையூறுகள் உண்டாகின்றன: சிலவேளை குலத்தின் வேறுபாட்டால் இடையூறு; சிலவேளை பிராயத்தின் தாரதம்மியத்தால் இடையூறு; சிலவேளை இருவர் கருத்தும் ஒவ்வாமையால் இடையூறு. இவ்வெல்லா விதத்திலும் எப்பொழுதேனும் பொருத்தம் அமைந்து மெய்யன்பு உண்டாயினும், அம்மெய்யன்புக்குப் போரும், பிணியும், பொல்லாமரணமும் இடையூறாகி, அதை ஒலியைப்போல் நொடிப்பொழுதினதாயும், நிழலைப்போல் துரிதமுள்ளதாயும், கனவைப்போல் குறுகினதாயும், மின்னலைப்போல் தோன்றிமறைகின்றதாயும் செய்கின்றன. அம்மின்னல் பளீர் என்று ஒரு சீற்று வடிவாகப்பூமியையும் வானத்தையும் ஒருங்கு காட்ட, ஒருவன் 'பார்' என்று சொல்லுமுன் அவை இருட்பிழம்பின் வாயிலகப்பட்டு மறைவதுபோற், பிரகாசித்து விளங்கும் பொருள்களும் விரைவில் மாய்கின்றன.

ஹெர்மியா.—இவ்விடையூறுகளெல்லாம் மெய்யன்பிற்கு விதியின் முறைப்படி வருவனவாம்: சிந்தனையும், கனவும், பெருமூச்சும், அவாவும், கண்ணீரும் காதலுள்ளவிடக்கங் காணப்படுவனபோல் இவ்விடையூறுகளும் காதலருக்கு வழக்கமாயுள்ளன; ஆதலின், நாம் இவற்றை அனுபவிப்பதில், மிக்க பொறுமையோடிருக்கக் கற்கவேண்டும்.

லைஸாண்டர்.—ஆ! இது நல்ல கோட்பாடுதான். ஆகையால், ஹெர்மியா, நான் சொல்வதைச் சற்றுச் செவிகொடுத்துக் கேள். இவ்வூருக்கு இரண்டு காதத்துக்கப்பால் எனக்கு ஒரு கைம்மையத்தை இருக்கிறாள், மிக்க பணக்காரி, குழந்தையில்லாதவள், என்னை அவளுடைய ஒரே குழந்தைபோல் எண்ணுபவள், அவ்விடத்தில் இவ்வூர்ச் சட்டம் செல்லாது, நாம் அங்கு மணம்புரிந்து இனிது வாழலாம். உனக்கு என்னிடத்து நேசமுள்ளது மெய்யானால், நாளை இரவில், உன் தகப்பனுடைய வீட்டிலிருந்து யாருமறியாமற் புறப்பட்டு இவ்வூருக்கு மூன்றுநாழிகை வழித்தூரத்திற்கு அப்பாலிருக்கும் காட்டுக்கு வந்துசேர். ஒருகாலத்து, நீயும் ஹெலனாவும் வசந்தவிழாக் கொண்டாடும்பொழுது நான் உங்களைச் சந்தித்தவிடத்தில் உனக்காகக் காத்திருப்பேன்.

ஹெர்மியா.—என் லைஸாண்டரே, இந்நன்றி மறவேன்; மதனன் வில்லாணை, அவன் அம்பாணை, நீ குறித்தவிடத்தில் நான் உன்னை நிச்சயமாய்ச் சந்திப்பேன்.

லைஸாண்டர்.—என் நேசமே, சொல்தவறாதே ஹெலனா இதோ வருகிறாள் பார்.

[ஹெலனா வருதல்.]

ஹெர்மியா.—என் அழகுள்ள ஹெலனாவின் காரியம் இனிது முடிக. எங்கே போகின்றாய்?

ஹெலனா.—என்னை அழகுள்ளவள் என்றாயே, அப்பெயரை மாற்றியழை; உன்னழகே டெமிட்ரியஸ் விரும்பும் அழகு, உன் கண்கள் அவனுக்குத் துருவமீன்; உன்குரல் அவனுக்கு இனியகீதம். வியாதி தொட்டோரைத் தொடர்கின்றதே, ஐயோ! நான் உன்னைவிட்டுப் போவதற்குள் அழகும் அப்படித் தொடராதோ? அவனை வசப்படுத்தும் உபாயத்தை எனக்கு நீ கற்பிப்பாயோ?

ஹெர்மியா.—அவனைச் சினந்து பார்க்கின்றேன் அவன் என்னை நேசிக்கின்றான்.

ஹெலனா.—ஐயோ! உன் சினம், அவனை வசப்படுத்தும் உபாயத்தை என் புன்சிரிப்புக்குக் கற்பியாதோ?

ஹெர்மியா.—யான் திட்டைப் பொழிகின்றேன், அவன் நேசத்தைப் பொழிகின்றான்.

ஹெலனா.—ஐயோ! என் துதிக்கு அவ்வன்மையில்லையே.

ஹெர்மியா.—நான் அவனை வெறுக்க வெறுக்க, அவன் என்னைத் தொடர்கின்றான்.

ஹெலனா.—நான் அவனை நேசிக்க நேசிக்க, அவன் என்னை வெறுக்கின்றானே.

ஹெர்மியா.—இஃது அவனுடைய அறிவின்மையே யன்றி, ஹெலனா, எனது குற்றமன்று.

ஹெலனா.—இதற்குக் காரணம் உன்னழகே யன்றி வேறொன்றன்று; இதுதான் உனது குற்றம். ஐயோ! இந்தக்குற்றம் எனக்கில்லையே!

ஹெர்மியா.—இனி, உனக்கு மனத்தளர்ச்சி வேண்டாம். அவன் என் முகத்தை இனிமேற் பாரான், நானும் என் லைஸாண்டரும் இவ்விடம் விட்டுப்போகின்றோம். காட்டில் நாம்வழக்கமாய்க்கூடிக்கலந்துபேசி நமது அந்தரங்கங்களைச் சொல்லிக்கொள்ளும் இடமாகிய பூங்காவனத்து நாங்களிருவரும் நாளை இரவிற் சந்தித்து வேறிடம் போகக் கருதியிருக்கின்றோம். என் இனிய விளையாட்டுத் தோழியே, நீ உன் டெமிட்ரியஸ்ஸை மணம்புரிந்து இனிது வாழ்வாயாக. லைஸாண்டரே, சொன்ன சொற்படி நடக்கவேண்டும்.

லைஸாண்டர்.—அப்படியேநடப்பேன், ஹெர்மியாவே. (ஹெர்மியா-போதல்.) ஹெலனா, நான் போய்வருவேன்; உனக்கு டெமிட்ரியஸ்ஸின் மேலுள்ளதுபோல் அவனுக்கும் உன்மேல் ஆசைபிறந்து வளர்வதாக. (லைஸாண்டர் போதல்.)

ஹெலனா.—நான் அவளுக்கு அழகிற்குறைந்தவளோ? ஊரில் எல்லோர்க்கும் தோன்றும் அழகு டெமிட்ரியஸ்ஸுக்குத் தோன்றவில்லையே! இழிந்ததைக் காமம் உயர்வாய்க்காண்கின்றது; காமம் கண்ணாற் பார்ப்பதில்லை; மனத்தாற் பார்க்கின்றது; அங்கும் விவேகங்கிடையாது; அது ஒருவிடத்துத் தரித்து நிற்கிறதுமில்லை. அதனாலன்றோ காமனைச் சிறகுள்ள பொட்டையனாய்ச் சித்திரத்திற் காட்டுகிறார்கள். ஹெர்மியாவைக் காணுமுன் டெமிட்ரியஸ் நானே தஞ்சமென்று இருந்தானே; அவளைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் அவனது அவ்வளவு அன்பும் உருகியோடிவிட்டதே. நன்று; ஹெர்மியா காட்டுக்கு ஓடிப்போவதைப் பற்றி அவனுக்கு உரைப்பேன். அவ்வுரைக்குப் பிரதியாக அவன் என்னிடத்து ஓரன்புமொழி கூறுவானாயின், அவ்வுரை கூறும்பொழுது எனக்குண்டாகும் மனநோவிற்கு அவன்கூறும் அவ்வன்புமொழி ஈடாவதன்று: ஆயினும், அம்மனநோவை, அவன் அவளைக் காட்டுக்குத் தொடர்ந்து செல்லுகையில், அவன் முகத்தைப் பார்த்தலால் ஒருவாறு மாற்றிக் கொள்வேன். (ஹெலனா-போதல்)

2-ம் இடம்: ஆதென்ஸ் நகரத்தில் க்வின்ஸ் என்பவன் வீட்டில் ஓரறை.

[க்வின்ஸ், ஸ்நக், பாட்டம், ப்ளூட், ஸ்நௌட், ஸ்டார்வெலிங்-வருதல்.]

க்வின்ஸ்.—நமது கூட்டத்தார் எல்லோரும் வந்திருக்கிறார்களா?

பாட்டம்.—அட்டவணைப்படி பெயர் பெயராய்க் கூப்பிடுவது நலம்.

க்வின்ஸ்.—பெயர் அட்டவணை ஓலை இங்கிருக்கின்றது. அரசனது கலியாணநாளிரவில், அரசன்முன் நம்முடைய கூத்தை ஆடுவதற்கு, இந்நகரத்தில், இன்னார் இன்னார் தக்கவர்கள் என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது.

பாட்டம்.—க்வின்ஸ், வளர்க்க வேண்டாம்; குறியானதைப் பேசு, நமது கூத்தின் பெயரைச்சொல், அதில் ஆடுபவர்களின் பெயர்களை வாசி.

க்வின்ஸ்.—கூத்தின்பெயர், மிகவும் துக்ககரமான களிக்கூத்தும் பிரமஸ் திஸ்பி இவர்களுடைய குரூரமான மரணமும்.

பாட்டம்.—நல்ல கூத்தென்றே தோன்றுகிறது. க்வின்ஸ், ஆடுபவர்களை முறையே கூப்பிடு. தலைவர்களே, தனித்தனியே பிரிந்து நில்லுங்கள்.

க்வின்ஸ்.—காருகப்பாட்டம்?

பாட்டம்.—சித்தமாயிருக்கின்றேன், எனக்கு வேஷம் யாது?

க்வின்ஸ்.—உன்னைப் பிரமஸ் வேஷத்திற்கு நிச்சயித்திருக்கிறோம்.

பாட்டம்.—பிரமஸ் என்பவன்யார்? காமுகனோ? கொடியவனோ?

க்வின்ஸ்.—காமுகன்; காமத்தின் நிமித்தம் தற்கொலை செய்துகொண்ட பெருந்தீரன்.

பாட்டம்.—ஆட்டத்தில், காண்போர் கண்ணீர் விடும்படியான காரியமிது. நன்று; நான் இவ்வேஷம்போட்டு ஆடுவேனேல், காண்போர்கள் தங்கள் கண்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கடவர்; அவர்கள் கண்களை நீராய்வடித்துவிடுவேன்; அவர்களைக் கதறி அலறச் செய்வேன். ஆயினும், எனக்குக் கொடியவன் வேஷந்தான் நல்ல பொருத்தமுள்ளது; *ஹெர்க்யுலிஸ்ஸைப்போல்,பூனையின்குடலைக்கிழிப்பேன், கதவை உடைப்பேன், பூட்டைமுறிப்பேன், இவைபோன்ற எத்தனையோ சாகசச் செய்கைகள் செய்வேன். நனறு; மற்றை ஆட்டக்காரர்களின் பெயர்களைச்சொல்.

க்வின்ஸ்.—துருத்தி திருத்தும் ப்ளூட், நீ திஸ்பி வேஷம்போட வேண்டும்.

ப்ளூட்.—திஸ்பி என்பவன்யார்? எங்கும்போராடி அலைந்து திரியும் ஆயுதபாணியோ?

க்வின்ஸ்.—பிரமஸ்ஸால் நேசிக்கப்படும் குலமகள்.

ப்ளூட்.—எனக்குப் பெண்வேஷம் வேண்டாம்;இப்பொழுதுதான் எனக்குத் தாடிமுளைத்துவருகிறது.

க்வின்ஸ்.—எல்லாம்ஒன்றுதான்,குற்றமில்லை; பொய்ம்முகம் வைத்து ஆடப்போகிறாய். உன் குரலைமாத்திரம் சற்றுமெல்லிதாக்கிக்கொள்.

பாட்டம்.—முகத்தைமறைத்துக்கொண்டு ஆடலாமென்றால் நானே திஸ்பிவேஷமும் போட்டுக்கொள்வேன்; நான் பெருஞ்சிறுகுரலாற் பேசுவேன். "திஸ்னி, திஸ்னி" என்று கீச்சுக் குரலிற் சொல்வேன்.

க்வின்ஸ்.—கூடாது, கூடாது. நீ பிரமஸ் வேஷமே போடவேண்டும்; ப்ளூட், உனக்குத் திஸ்பிவேஷமே.

பாட்டம்.—நன்று; இதற்கு மேல்வருவதைக் கேட்போம்.

க்வின்ஸ்.—ஸ்டார்வெலிங், உனக்குத் திஸ்பியினுடைய தாய் வேஷம். செம்புகொட்டி ஸ்நௌட், உனக்குப் பிரமஸ்ஸினுடைய தந்தைவேஷம். எனக்குத் திஸ்பியினது தந்தை வேஷம். மூட்டுவேலைக்கார ஸ்நக், உனக்குச் சிங்கவேஷம். இப்பொழுது எல்லாம் சரியாய் அமைந்து விட்டனவென்று எண்ணுகிறேன்.

ஸ்நக்.—சிங்கவேஷக்காரன் சொல்லவேண்டியதுஇன்னதென்று எழுதப்பட்டிருக்குமானால், அதை இப்பொழுதே என்னிடத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்;நான் பாடம் பண்ணுவதிற் சற்றுமந்தன்.

க்வின்ஸ்—சிங்கம் செய்யவேண்டிய காரியத்தை ஒரு யோசனையுமின்றி நினைத்தமாத்திரத்திற்செய்யலாம்; கர்ஜிப்பதைத்தவிரவேறொன்றுமில்லை.

பாட்டம்.—சிங்கவேஷமும் நானே போட்டுக்கொள்ளுவேன். எல்லோருடைய மனமும் மிக்க களிப்புறும்படி கர்ஜிப்பேன்."இன்னுமொருமுறை கர்ஜிக்க, இன்னுமொருமுறை கர்ஜிக்க" என்று அரசன் சொல்லும்படி கர்ஜிப்பேன்.

க்வின்ஸ்.—நீ பயங்கரமாய்க் கர்ஜித்தால் அரசி முதலிய உயர்குலமாதர் நடுநடுங்கிக் கத்துவார்கள்; அப்பொழுது நம்மெல்லோரையும் தூக்கிவிடுவார்கள்.

எல்லோரும்.—நம்மொருவரையும்விடாதெல்லோரையும் தூக்கிவிடுவார்கள்.

பாட்டம்.—தோழர்களே, நீங்கள் சொல்வது மெய்யே. புத்தி தடுமாறிப்போகும்படி மாதர்களைப் பயமுறுத்தினால், நம்மைத்தூக்கிற்போடுவதன்றி வேறொன்றும் அவர்க்குத்தோன்றாது. அப்படியானால், யான் என்குரலை உயர்த்திப் புறாக்குஞ்சைப்போல்மெதுவாய்க்கர்ஜிப்பேன்; இராப்பாடிக்குருவி†யெனத் தோன்றும்படி கர்ஜிப்பேன்.

க்வின்ஸ்.—பிரமஸ் வேஷம்ஒழிந்த மற்றொன்றும் உனக்குத் தகுந்ததன்று. பிரமஸ் இனிய முகத்தான், பிறர் காணவிரும்பும் அழகுள்ள குலமகன் போன்றவன். ஆதலின்,அவசியமாய் நீயே, அவ்வேஷம் தரித்தல் வேண்டும்.

பாட்டம்.—தீராத காரியமாயிருத்தலால்,அப்படியே செய்வேன். ஆனால், வேஷத்தில் என் தாடிக்கு இன்னசாயம்போட்டுக்கொண்டு வரவேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை.

க்வின்ஸ்.—உன்னிஷ்டம்போற் செய்யலாம்.

பாட்டம்.—சுத்தமஞ்சள் நிறமோ,செம்மஞ்சள்நிறமோ, சிவப்பு நிறமோ எனக்குப்பிடித்த யாதேனும் ஒரு நிறத்தை யேற்றிக்கொண்டு வருவேன்.

க்வின்ஸ்.—தோழர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் பாடம்பண்ணிக் கொள்ளவேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவற்றைச்செவ்வையாய் நாளை இரவிற்குள்பாடஞ்செய்துகொண்டு, பட்டணத்துக்கு ஒருநாழிகை வழித்தூரத்துக்கு அப்பாலிலிருக்கும் அரண்மனைக்காட்டுக்கு வந்து சேரும்படி, உங்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்விடத்தில் நமது கூத்தையாடிச் சரிபார்த்துக்கொள்ளலாம். பட்டணத்துள் ஓரிடத்துச் சந்தித்தால், அங்கு ஜனங்கள் கூடுவார்கள், நமது ஏற்பாடு இன்னதென்றும் பிறருக்குத் தெரிந்துவிடும். எல்லோரையும் இன்னுமொருமுறை கேட்டுக்கொள்ளுகிறேன், நான் சொல்லியபடி தவறாமற் சந்திக்கவேண்டும்.

பாட்டம்.—அப்படியேநாம் சந்திப்போம்;அவ்விடத்தில் யாருமறியாமலும், தைரியமாயும் நமது சம்பாஷணைகளைச் சொல்லிச்சரிபார்த்துக் கொள்ளலாம்.பிரயாசைப்பட்டு எல்லாவற்றையும் செவ்வையாய் ஒழுங்கு படுத்திக்கொண்டு எல்லோரும் வரவேண்டும்.

க்வின்ஸ்.—அரசனது *கருவாலி மரத்தருகிற் சந்திப்போம்.

பாட்டம்.—போதும்; ஆறுநூறானாலும், நூறு ஆறானாலும் சந்திப்போம்.— (எல்லோரும் போதல்.)

முதலாவது அங்கம் முற்றிற்று.

எஸ். நாராயணசாமி ஐயர் பி. ஏ.

*ஹெர்க்யுலிஸ்—வீமசேனனைப்போல் அதிபலவான்.

† Nightingale.

* Oak.

வைத்தியநாத நாவலர், அவர் பிரபந்தங்கள்.

1. வைத்தியநாத நாவலரென்ற இப்புலவர்பெருமான் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த நாகபட்டணத்திற்கடுத்த திவ்யக்ஷேத்திரமாகிய கமலாலயமென்ற திருவாரூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஸ்ரீவன்மீகநாததேசிகருடைய குமாரர். இந்த வன்மீகநாததேசிகர் கவிபாடுந்திறத்தில் மிக சிரேஷ்டரென்பதற்குக் கிஞ்சித்துஞ் சந்தேகமில்லை. இவர் "தமது பாவன்மையாற் பரிசு பெற்ற சூணம்பேட்டை மானியமும் உப்பளமும் நாளது வரைக்கும் அவர் சந்ததியார் அநுபவித்து வருகின்றார்கள்" என்று ம-ா-ா-ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களெழுதுகிறார்கள். இவ்வாறு தந்தையாருஞ் சிறந்தவித்வானாயிருந்ததினாலன்றோ புத்திரரும் சுபாவ நியமத்தின் படி யங்ஙனம் தோன்றினர். இப்போது, மன்னார் குடித்தாலூக்காவைச்சேர்ந்த திருக்களரென்னு மூரில், மிகவயோதியராயிருக்கின்ற ஸ்ரீமத் சூரிய மூர்த்தி தேசிகரென்பவர் நமது வைத்தியநாதநாவலருடைய ஆறாவது சந்ததியாராம்.

2. இவர் 17-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலு மிருந்தவர். இவர் இக்காலத்திலேதானிருந்தா ரென்பதைப்பற்றி வரைந்து சுட்டுவோம். இராமநாதபுரத்தில் கி. பி. 1685-ம்வருடமுதல் 1723-ம் வருடம் வரைக்கும் அரசாண்ட இரகுநாத சேதுபதியின் வாசல் வித்வானாயிருந்த படிக்காசுப் புலவர் நமதுநாவலரிடங் கல்விகற்ற மாணாக்கராம். ஆகவே நாம் மேலே சொல்லிய காலக்கணக்குத்தவறில்லை யென்பதுநன்றாய் விளங்கும். படிக்காசுப்புலவர் இவருடைய மாணாக்கரென்பதற்கு ஆதாரமாகக்,

"கூடுஞ்சபையிற் கவிவாரணங்களைக்
கோளரி போற்
சாடுஞ்சதாசிவசற்குருவே
முன்னுன்றந்தைதம்மாற்
பாடும்புலவர்க ளானோமின்றிச்
செம்மற்பட்டி யெங்குங்
காடுஞ்செடியு மென்னோ
தமிழ்க்காரிகை கற்றதுவே."

என்று படிக்காசுப்புலவரே பாடிய செய்யுளைக் கொள்க. மேலும் நாம் முன்னே ஸ்ரீமத் சூரிய மூர்த்திதேசிகரிவரது ஆறுவது சந்ததியாராமென்றுகுறித்தவிஷயம் மேற்கூறியகாலக்கணக்கையேகதேசம் வற்புறுத்துகின்றது.

3. வைத்தியநாத நாவலருடைய மதமோ சைவமதம். இவர் சப்த விடங்க க்ஷேத்திரங்களிலேயதிகப் பிராதானியத்தையடைந்த திருவாரூரிலே அபிஷேகஸ்தர் மரபிலே சிறப்புற்றோங்கியவர். இவர் ஓர் அருமையான வித்வானென்று சொல்லுவதற்கு ஐயமேயில்லை. இவர் மலையாளத்து இராசாவின் பேரிற் சில பிரபந்தங்கள் பாடி, அவ்விராஜனிட மிருந்து கிராமங்களும், வேறு சிலபரிசுகளும் அளிக்கப்பெற்றவர். மேலு மிவர் இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சுவாமிநாததேசிகரால் "திருவாரூரிற் றிருக்கூட்டத்திற் றமிழ்க்கிலக்காகிய வைத்தியநாதன்" என்றும், கவிவீரராகவ முதலியாரால்,

"ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடாரோ நாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பாரோ—விம்பர்
வன்மீக நாதனருள் வைத்தியநாதன்புடவி [புகழ்
தன்மீதங் காட்சரித்தக்கால்."

என்றும் புகழ்ப்பெற்றவர்.

4. இத்தகைய நம்புலவர் சிகாமணி, சோழநாட்டிலேயுள்ள ஆமாத்தூர் என்ற மாதை யென்னு மூரிலிருந்து கொண்டு சிற்றரசு புரிந்த குறுநிலமன்னனாகிய திருவேங்கட சுவாமி யென்பவரால் ஆதரிக்கப்பட்டுப் பரிபாலனஞ் செய்யப் பெற்றவர். இந்தவிஷயமானது நமது வைத்தியநாத நாவலருடைய மூத்தகுமாரராகிய சதாசிவ நாவலரால்,

"வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதையரதிபன் வரகுண மேரு
கல்விக்கெல்லை கருணைக் காகரம்
பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமாலுலகஞ் செவ்வியிற் புரக்கு
மேதகு புகழ்த்திரு வேங்கட நாத
னே தினனுக."

என்று இலக்கண விளக்கச் சிறப்புப் பாயிரத்திற்கூறப்பட்டிருப்பதினாலேயினிது விளங்குகின்றது.

5. வைத்தியநாத நாவலரியற்றிய பிரபந்தங்களாவன, இலக்கண விளக்கமும், பிரபோத சந்திரோதயமும், வேறு சில சிறுநூல்களுமாம். இவர் மேலே சொல்லிய இரண்டு பெரிய பிரபந்தங்களையும் மாதை மன்னவன் திருவேங்கடநாதனுடைய வேண்டுகோளிற் கிணங்கியே செய்தனர். இலக்கணவிளக்கமானது அங்ஙனஞ் செய்யப்பட்டதற்கு, மேலேயக்நூற்சிறப்புப்பாயிரத்தினின்றும் நாமெடுத்துக்காட்டினபாகமானது தக்க சான்றுபகரும். இங்ஙனமிதுநிற்க. மெய்ஞ்ஞான விளக்கமென்னு மறுநாமத்தையுடைய பிரபோதசந்திரோதயமானது நமது நாவலனையாதரித்து வந்த திருவேங்கடநாதராலியற்றப் பட்டதென்று கூறி மயங்குவாரு முளர். இவ்வாறுஅவர்கள் பிராந்தியடைந்ததற்குக் காரணமென்னவென்று சற்று விசாரித்துப் பார்ப்போமானால்,

"போதத்தமிழ்க்கும் வடகலைக்கும்
புலவோர் தமக்கும் பொருள் விரித்துச்
சீதைக்கிறைவனென நீதிச்செங்கோல்
செலுத்தித் திசை புரந்து
வேதப்பனுவன் மெய்ஞ்ஞான விளக்கா
லுலகை விளக்கு மெங்கண்
மாதைத் திருவேங்கடநாத மறையோன்
வாழிவாழியவே."

என்ற ஒரு விருத்தமே யென்று வெளிப்படும். ஆகவேயவர்களது மயக்கத்தைக் கொஞ்சந்தெளியவைத்தல்வேண்டியது ஆவசியகம். இந்தப் பிரபந்தமானது திருவேங்கடநாதர் வேண்டுகோளின்படி வைத்தியநாத நாவலரியற்றினதென்று முன்னே கூறியிருக்கின்றோமாகவே, வேங்கடநாதர் ஏவுதற் கருத்தாவும், நாவலரியற்றுதற்கருத்தாவுமாவார்கள். மேலும் மேலேசொல்லிய செய்யுளில் "மெய்ஞ்ஞான விளக்காலுலகை விளக்கும்" என்றதொடர்க்கு, அவர் பிரயோச்சியனாய் மாத்திரமிருந்து விளக்குவித்தாரென்று அந்தர்ப்பாவிதணிச்சாய்ப் பொருள் கொள்ளலாமாகப், பிரயோசகனாய் நின்று விளக்கினாரென்றுபொருள் கொண்டது சமயோசிதமாகச் சொற்பொருளுணருமாற்ற மில்லாமையினாலேதா னென்க. இதுவுமல்லாமற் சென்னையிலிருந்த வித்வான் தாண்டவராய முதலியாருடைய பிரபோத சந்திரோதயப்பிரதியில் நாவலரியற்றினதாகக்குறிக்கப்பட்டிருப்பதினாலும், மதுரை, நெல்லை, புதுவை முதலிய விடங்களிற் கன்னபரம்பரையாக நாவலரியற்றினாரென்று வழங்குவதினாலும், யாங்கூறுவதே திருவாரூர் அபிஷேகஸ்தர்கட்கும், தருமபுரவாதினத்தார் முதலாயினார்க்கு மொப்ப முடிந்ததாமாதலானு மவர்தேடியஆதாரமவரையே தியங்கவிட்டதென்றுகொள்ளல் வேண்டியதாகிறது. இம்மயக்கம், தவறா யச்சிடப்பட்ட மூலம் பற்றி யுற்பத்தியானது போலும்.

6. இனி யிலக்கணவிளக்கத்தின்குணத்தைப் பற்றிப்பேசுவோம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்று சொல்லுகிற ஐந்துபாகங்களு மடங்கிய வியாகரணங்கள் தமிழிற் கிடைப்பதரிது. கிடைத்தாலு மொருவேளை யதிகமாய் விரிந்திருக்கு மில்லாவிடில் மிகச் சுருக்கமாயிருக்கும். இவ்விரண்டு குற்றமுமில்லாமல், மாணாக்கர்க்குப்போதுமான அளவினை யுடையது இலக்கண விளக்கமொன்றேயாம். தமிழாராய்ச்சிக்குத் தொல் காப்பியவுணர்ச்சியதிக ஆவசியக மில்லை யென்பது சொல்லாமலே விளங்குமாதலாலும், சான்றோரிதற்குக் "குட்டித் தொல் காப்பிய"மென்று பெயரிட்டிருக்கின்றார்களாதலாலு மிது ஒரு சிறந்த வியாகரணமென்பதற்கு ஆக்ஷேபணையில்லை யாதலாலும், இதையே படித்தாற் போது மென்பது பெறற்படுமென்க. நாவலர் தொல்காப்பியர்போல யாப்பையுமணியையும் பொருளதி காரத்திலடக்கி மூன்றதிகாரமாக்கினார். எழுத்திலுஞ் சொல்லிலும் பெரும்பாலும் நன்னூலைத்தழுவியே யெழுதப்பட்டிருக்கிறது. நன்னூலிற் குற்றமெனக் கண்ட சிலவற்றைத் திருத்தியு மெழுதியிருக்கிறார். அநேக சூத்திரங்கள் நன்னூலார் சூத்திரங்களாகவே காணப்படுகின்றன. பாயிரமொழிந்த 407 நன்னூற்சூத்திரங்களையும் 372 விதிகளிலடக்கி விட்டார். பாயிரத்திற் கூறிய 55 விதிகளையும் பொருளதிகாரம் பாட்டியலில் 129-முதல் 142 வரைக்குமுள்ள 14 விதிகளிலடக்கினார். இனி மூன்றாவது ஆகிய பொருளதிகாரத்தில், முதலியலாகிய அகத்திணையியலில் மிகுதியும் நம்பி யாண்டர் நம்பி செய்த அகப்பொருள் விளக்கத்தையும், தொல் காப்பிய வகத்திணையியலையுமநுசரித்தே சூத்திரஞ் செய்திருக்கிறார். இரண்டாவதியலாகிய புறத்திணையியலில் ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையை யநுசரியாது தொல் காப்பியத்தையே யநுசரித்திருக்கிறார். மூன்றாவதியலாகிய அணியியலானது தண்டியலங்காரத்தையேயநுசரித்தெழுதப் பட்டிருக்கிறது. அநேக சூத்திரங்கள் தண்டியார் சூத்திரங்களாகவே காணப்படுகின்றன. உதாரணச் செய்யுட்களும் அதனின்றே யெடுத்தோதப்பட்டிருக்கின்றன. (ஆகவே தண்டியலங்காரத்திற்குஉரையானது வைத்தியநாத நாவலர்க்கு முன்னரே யெழுதப்பட்டிருத்தல் வேண்டும்.) இனி நான்காவதியலாகிய செய்யுளியல் யாப்பருங்கலத்தைத் தழுவி யெழுதப்பட்டிருக்கிறது. ஐந்தாவதியலாகிய பாட்டியலில் முதல் 128 சூத்திரம் வரை, வச்சணந்திமாலை, சிதம்பரப்பாட்டியல் முதலிய நூல்களின் தாற்பரியங்களிற் சில எழுதப்பட்டன. 128 முதல் 142வரை நன்னூலார் பாயிரமாயொழிய, 142 முதல் 181 வரை தொல்காப்பிய மரபியலினிறுதியாகின்றது. இது 941சூத்திரங்களை யுடையது. இனி, நம் நாவலர் சூத்திரஞ் செய்ததோடே நில்லாமல், இதற் குரையுமெழுதினார். இந்தமாதிரியாக நூலாசிரியரேயுரையு மெழுதுகிறவழக்கம் தமிழிற்கிடையாது. இவர் தான் முதல் முதலில் இவ்விதமாக உரையையு மெழுதத் தொடங்கினார். இவரைப்பார்த்துப் பிற்காலத்தார் சிலரும், தங்கள் தங்கள் நூற்கு உரை எழுதியிருக்கிறார்கள். இவர் தமது உரையிற் பிறர் மதங்களைக் கண்டிப்பது வழக்கம். தொல்காப்பிய விதிகளிற் சிலவற்றை உரையிலே தழீஇயினார். தொல்காப்பிய வுரைகளில் நச்சினார்க்கினியத்தையே யிவர் அதிகமாகக்கையாடி யிருக்கிறார். மேலு மகத்திணையியலில், தொல்காப்பிய வுரையிற் காணப்பட்ட சில விஷயங்களைச் சூத்திரங்களாக வகுத்தார். அணியியலில், தண்டியலங்காரவுரையிற் கூறிய சில உட்பிரிவுகளை விதியிலே யிவர் கூறினார். பாட்டியல் 181 சூத்திரங்களும் நமது நாவலரால் எழுதப்படவேயில்லை. இந்த இயலானது வைத்தியநாதநாவலருடைய 2-வது குமாரராகிய தியாகராசதேசிகராற் சேர்க்கப்பட்டது. இந்நூற்குப்பாயிரமும், சொல்லணிச் சூத்திரங்களும் நமதுநாவலருடைய மூத்தகுமாரர் சதாசிவ தேசிகராற் செய்யப்பட்டன. ஆகையினாலே யிவர் சொல்லணியும் பாட்டியலும் மிகப் பயன்படத்தக்கன வல்லவென்று விடுத்து விட்

டார். மேலுந்தற்காலமாணவர்க்குச் சொல்லணியும் பாட்டியலும் வேண்டுவதின்று. ஆகவே 941 விதிகளில் 207 விதிகள் நாவலராற் செய்யற்படவே யில்லை பயனின்மையால். ஆதலால் மீத முள்ள 734 விதிகளுமே மாணுக்கர்கட்கு நிரம்ப உபயோக மானவை. இது கிடக்க. திருவாவடுதுறைச் சிவஞாந சுவாமிகள் நாவலருடைய இலக்கண விளக்கத்தை யவிக்கும் பொருட்டுச் சூறாவளியையேவினர். இச்சூறாவளியை "அநியாயகண்டன" மென்று ம-ா-ா-ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் கூறியது போல் நாம் ஒருகாலத்தும் சொல்லற்படாது. இக்கண்டனத்தை யவர் வேண்டுமென்று எழுதினபோதிலும், சில இடங்களில் நமது நாவலர் செய்த பிழைகளையுமெடுத்துக்காட்டி யிருக்கின்றனர். சூறாவளியின் மூலமாயே நம் இலக்கண விளக்கத்திற்கு அதிக மேன்மை யென்று யாவரும் அறிதல் வேண்டும்.

7. இனி 2-வது ஆகிய மெய்ஞ்ஞான விளக்கமென்ற பிரபோத சந்திரோதயத்தைப் பற்றிப் பேசுவோம். ஆங்கிலேயத்தில் (Allegory) என்றதற்குச்சமானமாக இயற்றப்பட்டுள்ள இந்நூல் முதல் முதலில் வடமொழியில்நாடகரூபமாகக் கிருஷ்ணமிச்சிரன் என்றவராற் செய்யற்பட்டுளது. அதை மொழிபெயர்க்கப் புகுந்த நமது ஆசிரியர் நாடகரூபத்தை யொழித்துக் காவிய ரூபமாக எழுதியது யாது காரணம் பற்றியோ வறிகிலேம். வேதாந்த மாகிய பாற்கடலை நாவலர் தமது அறிவென்ற மந்தரமலையை மத்தாக காட்டிக்கடையவே பிரபோத சந்திரோதயமாயிற்று. இந்தப் பிரபந்தமானது பாயிரமுட்பட 48 சருக்கங்களடங்கியது. இதில் 2012 செய்யுட்களுள. இது விருத்தப்பாவினுற்செய்யற்பட்டிருக்கிறது. இதன் விஷயமின்ன தென்று கொஞ்சஞ்சொல்லுவோம். மாயையென்றவள்பிரம சந்நிதானத்திலே விகாரம் புரிந்து கர்ப்பமடைந்து மானதன் என்றொரு புத்திரனைப்பெற்ருள். அவன் பிரவிர்த்தி, நிவர்த்தி, என்ற இரண்டு மாதர்களையுங் கலியாணஞ்செய்து கொண்டான். மானதனுக்கு மூத்தமனைவியாகிய பிரவிர்த்தியினிடமிருந்து மோகன், அகங்காரன், மதனன், இடம்பன் முதலாகிய அநேக புத்திரர்களும், தீவினை, கபடி, என்ற விரண்டு புத்திரிகளும் பிறந்தார்கள்; இனி இளையமனைவியாகிய நிவிர்த்தியினிட மிருந்து விவேகன், நிருபகன், பொறுமை முதலான பல குமாரர்களும், மயித்திரி, கருணை முதலிய சில பெண்களும் பிறந்தார்கள். இவ்விரு திறத்துப்பிள்ளைகளுக்கும் பாட்டியாகிய மாயை யென்பவள் அவரவர்களுடைய குணங்களுக்கு ஏற்றபடி விவாகமகோற்சவம் நடத்திவைததாள். பிரவிர்த்தியின் மக்கள் அசுரர்களைப் போலவும், நிவிர்த்தியின் மக்கள் தேவர்களைப் போலவும் வளர்ந்துவந்தார்கள். பிற்பாடு இவ்விருபகுதிப்பிள்ளைகளுந் தங்களுக்குள் மாறுபட்டு மோகன் அரசாளும்படியும், விவேகன் காட்டிற்குப் போகும்படியும் நேரிட்டது. பிறகு விவேகன் குலம் விளங்கப் பிரபோதன் தோன்றித் தானை கூட்டி, யுத்தத்திற்குச்சென்று மோகன் முதலானவர்களை யெல்லாம் மூலதோ ஹாநியாக்கிவிட்டான். பிறகு பிரபோதன் முடிசூட்டப்படுகின்ருன். இஃதுடன் காவியமுடிகின்றது. இதையெழுதியபோது நாவலர் மனத்திற் குருக்ஷேத்திர யுத்தத்தைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்திருக்கவேண்டு மென்று தோன்றுகின்றது. பிரபந்தத்தின் நடை வெகு நளினமாயும், ஒழுகிய ஓசையோடு கூடியதாயுமிருக்கின்றது. படிக்கும்போதே நிரம்ப இன்பமளிக்கக்கூடியதாகவுங் காணற்படுகின்றது. இந்தமாதிரியான பிரபந்தங்கள் நந்தமிழிற் கிடைப்பது மிகவுமருமை. இதிலே "கனஞ்சடையென்னுருவேற்றிக்கண்மூடிக்கதனுஞ்" சாஸ்திரிமாருடைய துர்க்குணங்களை மிகுதியுங் கண்டிக்கின்றார். மனிதர்களுக்குச் சற்குணபிவிர்த்தியுண்டாதல்வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இவரிதை யெழுதியிருக்கிறாரென்று நினைப்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. சாஸ்திரிமார்களுடையவேயன்றிப் பற்பல மடங்களிலுள்ள தம்பிரான்களுடைய தீ யொழுக்கத்தையும் நன்கு கண்டிக்கிறார். இக்காவியத்திற் காணற்படுகிற ஒவ்வொருவரும் அவரவருடைய குணங்களுக்குத் தக்கபடியே பேசுகிறார்கள். தங்கள் குணங்களோடு சாமஞ்சஸப்படாத வார்த்தைகளை யொருவரும் பேசவேயில்லை. இப்பிரபந்தமானது சிலவிடங் களிற் பரிகாசநடை (Sarcastic Style) யோடு எழுதப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு கவியும் ஆழ்ந்த நுண்ணிய பொருளை விளக்குகின்றது. பெரும்பாலும் செய்யுட்களெல்லாம் வெகு சுகமாக அமைந்திருக்கின்றன. [illegible] கப் பதங்களும் பிரயோகிப் பட்டிருக்கின்றன. இவர் செய்யுட்களிற் பாட்டை நிரப்பும் பயனைத்தவிர்த்து வேறு ஒருபயோகமுமில்லாத சொற்களைக் காணுதல் மிகவுமரிது. எதுகை, மோனைகளுக்காகச் சொற்களை விகாரப்படுத்தும் விகாரகுணமிவரிடமதிகமாகக் கிடையாது. வலையுளி, வனப்பின்மை முதலிய தோஷங்கள் இந்நூலிற்கிடையா. இத்தன்மையானசிறப்பெல்லாம் பற்றியல்லவா, சிலகாலத்திற்குமுன் இதினின்று மொருபாகமானது நமது சென்னைச்சர்வகலாசாலையில் பி. ஏ. பரீட்சைக்குப் பாடமாக நியமிக்கப்பட்டது மென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயம். இனிக்கடைசியாக நமக்கும் நம்முடைய தமிழ்ப்பாஷைக்கும், வைத்தியநாத நாவலர் மூலமாக ஒரு கௌரவம் ஏற்படுகின்றது என்பது எமது துணிவு.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

இகபரசுகம்.

(தொடர்ச்சி.)

இவ்வுலகத்தில் இடைவிடாமல் இயற்கையாய் உண்டாகும் பற்பல சம்பவங்களை நாம் நன்ருய்க் கவனித்து, அவை எப்படி, என்ன காரணத்தால் உண்டாயிற்றென்று தீரயோசித்தால், அது இகபரசுகத்தையடைய வழிகாட்டுமென்று முதல்சஞ்சிகையில் சொன்னேம். இப்படி "தன் முயற்சியால் ஒருவர் சுகமடையலாம்" என்று சொல்வதால் என்ன அர்த்தங்கொண்டீர்கள்? இகசுகத்தைப்பற்றிப் பேசுங்கால், நாம் இனிமேல் சொல்லப்போகிற சில வழிகளில் நடப்பதாலும், சிலகாரியங்களை அப்பியசிப்பதாலும் ஒருவர் இவ்வுலகத்துள்ள அருமையான எல்லாவஸ்துக்களையும் ஒன்ருய்ப் பெறலாகுமென்று நினைத்தீர்களோ? அப்படி எல்லா வஸ்துக்களைப் பெறுவதிலும், ஏராளமாயும், நீடித்தகாலத்துக்கும் அநுபவிக்கும் சக்தியை யடையலாமென்று அர்த்தம் பண்ணிக்கொண்டீர்களோ? ஒருவன் அதியுன்னதப்தவியும், நீடித்தவாழ்வும், நிகரற்றபுகழும், புத்திவிசாலமும், சத்கீர்த்தியும், புத்திரசம்பத் [illegible] புல்லன்களாலும் மகத்தான செல்வமும், [illegible] சுக சம்போகங்களையும் ஒன்ருய் அடையக்கூடுமென்று நினைப்பது மதியீனமாகுமல்லவா? ஆகையால் நாம் இனிமேல் சொல்லப்போகும் மார்க்கத்தை அநுசரிப்பதால் ஒருவர், மனிதரின் சக்திக்கு மிஞ்சின காரியங்களைச் செய்யக்கூடு மென்றாவது, அப்பேர்ப்பட்ட பயனை யடையக்கூடுமென்றாவது நாமிங்கே சொல்லவில்லை; ஆனல் இவ்வுலகத்தில் ஒருவர் தம் வாழ்நாளுக்குள் தன்முயற்சியால் பெறக்கூடிய சுகபலன்களை அநுபவிக்கும் சக்தியை அடையக்கூடுமென்பதே நமது கருத்து. அப்படி ஒருவர் சுகமநுபவிப்பதில், துக்கம் நினையளவும் அவர் வாழ்நாளில் எப்போதாவது இல்லாமற்போகுமோ? கிஞ்சித்து துக்கமும் கலந்திருக்குமாகில் அவர் சுகமனுபவித்தா ரென்று சொல்லலாமோ? என்னில், நாமிங்கே பிரஸ்தாபிக்கும் இகசுகம் அப்படித் துக்கம் கலந்ததுதான். ஒருவன் தன் வாழ்நாளில் அநுபவிக்கும் அநுபவங்களில் சுகத்துடன் துக்கமும் இடைக்கிடையே கலந்திருக்கும். சுகத்தைவிட ஒருவனுக்கு துக்கம் அதிகரித்திருந்தால் அவனை நிற்பாக்கிய னென்றும், துக்கம் கொஞ்சமாயும் சுகம்அதிகப்பட்டுமிருந்தால் அவனை பாக்கியவானென்றும் சொல்லுகிறோம். இப்படியன்றி, துக்கம் கலவாத சுகம் இவ்வுலகத்திலில்லை.

மேலும் அப்படித்துக்கம் சற்று கலந்திருக்க வேண்டுமென்பது ஒருவாறு அவசியமாயிருக்கிறது; துக்கமின்ன தென்றறியாத ஒருவர் எப்பொழுதும் சுகத்தையே யநுபவித்துக்கொண்டிருந்தால், அந்தச் சுகத்தினுலுண்டாகு மின்பத்தை யின்னதென்று உணரச் சக்தியற்றவராகிறார். எவ்விதமாக நிழலின் சுகம் வெயிலில் அலைந்தவர்களுக்குத் தெரியுமோ எப்பொழுதும் நிழலிலே இருப்பவர்களுக்குத் தெரியாதோ; அவ்விதமாகவே கிஞ்சித்து துக்கம் இடைக்கிடையே அடைந்து, அத்துடன் சுகத்தை யநுபவிப்பவருக்கே அச்சுகத்தின் இன்பம் தெரியும். இப்படி ஒருவர் தம் வாழ்நாளில் அதிக சுகத்தையும் கொஞ்ச துக்கத்தையும் அநுபவிப்பதையே, சுகமநுபவிப்பதாக நாம்

வென்று கண்டு இகசுகத்தை யடைய வழியிது ...ள்ளலாம். இக சுக மென்று நாம் சொல்லிவருவது எது வென்று [illegible] போம். 'இகசுகத்தை நாம் அனுபவிக்கலாம்' என்பதின் தாத்பரியத்தை முன் விளக்கினேம். ஆனல் ஒருவன் இவ்வுலகத்தில் அடையவிரும்பும் சுகம் எது? அப்படிச் சுகத்தைக்கொடுக்கும் பொருட்களும் விஷயங்களும் எவ்வெவை? என விவரமாய்ச் சொல்லுவோம்.

"ஒருவன் சுகமடைந் திருக்கிருன்" என்று சொல்ல வேண்டுமானல், அவனுக்கு அவசியமாய் வேண்டியவைகளெவை யென்றால், 1. சரீரசுகம், 2. மனோரம்மியம், 3. தகுந்தசம்பாத்தியம், 4. நன்குமதிப்பு, 5. நோயற்ற நன்மக்கள், 6. நீடித்த ஆயுள், 7. தெய்வபக்தி.

1. சரீரசுகம்.

பலமான சரீரமும், நோயற்ற வாழ்வும் சரீரசுகத்தைக் கொடுக்கும். நோய்கொண்ட, பலவீனமான சரீரத்தை யுடைத்தா யிருந்தபோதிலும், அருமையான பலகாரியங்களை ஜனோபகாரமாகச் செய்து முடித்து, அப்படிச்செய்வதையே ஒரு சுகமாக எண்ணியும், தேகசௌக்கியத்தைச் சுகமாக எண்ணுமலு மிருப்பவர்களும் இவ்வுலகத்திலுண்டு. என்றாலும் அப்படி நினைப்பவர் வெகுசொற்பமே. ஆகையால் சுகமடைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் தேகசௌக்கியமும், தேகபலமும் இன்றியமையாதது. தேகசுகம் எப்படிப்பட்டதென்றால், தேகத்தின் ஒவ்வொரு அவயவமும் சீராயிருந்து, அதற்குரிய கிரியைகளை அல்லது கடமைகளை வருத்தமில்லாமல் செய்து வரும்போது இருக்கிற தேகஸ்திதியே. உதாரணமாக:—ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போவதிலும், சரீரத்தின் பற்பல உறுப்புகளை உபயோகிப்பதிலும், சற்றாவது வருத்தமும் இளைப்புமில்லாதிருத்தல்; உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் வேலைசெய்தல்; வெகு நேரத்துக்கு விடாமல் வேலைசெய்யப் போதுமான தேகபலமும் சக்தியு முடைத்தாயிருத்தல்; மூளை, இரத்தாசயம், நுரையீரல், நீளிப்பை, குடல், நரம்பு முதலிய கருவிகள் அவற்றின் இயல்பான பலத்தை யுடையவைகளாய், சீராயும் ஒழுங்காயும் இருந்து, தம்தம் செய்கைகளைத் தட்டுத் தடையின்றிச் சரியாய்ச் செய்து வருவதால், இளைப்பு, தலைநோய். வயிற்றுவலி, அஜீரணம் ... முதலான எவ்வித வியாதியும் எப்படியிருக்குமோவென்று நினைக்கும்படியான சரீரத்தை யுடைத்தா யிருத்தல்; பசியுண்டாக வேண்டிய காலங்களில் உண்டாகாமலும், உண்டவுடன் பசியுண்டாதலும், இராக்காலங்களில் சரியான தூக்கமின்றி எப்போது விடியுமென்று எதிர்பார்த்திருப்பதும், இவைபோன்ற அசௌக்கியங்களில்லாதிருத்தலுமாம். மனிதரின் க்ஷேமத்துக்கு இவை யெல்லாம் எவ்வளவு முக்கியமான அம்சங்கள். தேக சௌக்கியமில்லா விட்டால் மனதில் சந்தோஷ மில்லை; சரியாய் வேலைசெய்வதில்லை; நற்காரியங்களைப் பற்றிய நினைப்பில்லை; சதா சரீரத்தைப் பற்றியும் வியாதியைப்பற்றியும், மருந்துகளைப்பற்றியும், உணவைப்பற்றியுமே சிந்தனை யுண்டாகும். ஆனல், சுக சரீரமுடையவர்களுக்கோ அப்படியல்ல. அவர்கள் நோயாளிகளைப்போல 'தேகம் துர்ப்பலமா யிருக்கிறதே! இதை பலப்படுத்த என்னசெய்யலாம்? இதை நன்றாய்ப் போஷிக்கவேண்டுமே' யென்ற எண்ணமே யில்லாமல் உற்சாகத்துடன் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டிருப்பார்கள்.

2-வது. மனோரம்மியம்.

சரீரசுகத்துக்குப் பின் ஒருவருக்கு முக்கியமாய் வேண்டியது சமாதானம். அப்படி மனதினிடத்துச் சமாதான மடைந் திருக்கிறோம் என்னும் அறிவு சந்தோஷமாகும். இதை ஒருவர் அடைந்திருக்கிறார் என்று சொல்ல வேண்டுமானல் அவருக்குத் துக்கமும், கவலையும், நாளாவர்த்தியில் மனதை யுருக்கும். நிராவிசாரமும் கூடா: "இன்றைக்கு என்மனம் ஏதோஒருவிதமாயிருக்கிறது; ஒன்றும் தோன்றவில்லை; யாதொரு வேலைசெய்யவும் மனம் நாடவில்லை." என்றுசிலர் சொல்வதுபோல், மனமானது காரண மில்லாமலே தடுமாற்றங் கொள்ளவும் கூடாது. இப்படிச்சஞ்சலம், விசாரமுதலியவற்றால் மனம் அடிக்கடி பேதிக்கப்பட்டால் நம்மால் ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. எதைச்செய்ய ஆரம்பித்தபோதிலும் திகைப்புண்டாகும். வரவர மனதின் வலிமை குறைந்துபோம். பின் அடையவேண்டிய நன்மைகளுக்காக முன்னமே உற்சாகத்துடன் உழைத்துவரும் உழைப்பு நின்றுபோம். இப்போதிருப்பதைவிடச் சற்று உயர்ந்த பதவியடைய வேண்டுமென்னும் ஆவல் தோன்றாமலே மறைந்துவிடும். இரண்டு விஷயங்களை எடுத்துக்கொண்டு அவைகளின் உயர்வுதாழ்வுகளை மனதினால் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கும் சக்தி குறைவடையும். சில விஷயங்களை யோசிக்கையில் காரணமொன்று மில்லாமலே பயமுண்டாகும். இப்படிப்பேதமடைந்த மனத்தையுடைய ஒருவன் உலகத்தில் எதற்கு உதவுவான்? இன்பமாய்க் காலங்கழிப்பது அவனுக்குக் கூடாத காரியமாகும். அவன்மனதின் பிரகாசம் மங்கி, அறிவின் ஒளி மழுங்கிப்போம். அழகும் சிங்காரமும் அமைந்த மனோரம்மியமான பற்பல பொருட்களைப்பற்றி தியானிக்கும் ஸ்திதியை விட்டு, மனமானது மந்தபுத்தியாகவும், வெறுமையாயும், பிரயோஜனமற்றதாகவும் மாறிவிடும். ஒருவன் இகத்தில் சுகமடைய வேண்டுமானல், அவனுக்கு இவ்வுலகம் பிரகாசமான அரண்மனைபோல் குதூகலத்தைக் கொடுக்கத்தக்கதா யிருக்கவேண்டுமே யன்றி, அந்தகாரமான ஓர் அறையைப்போல் அலங்கோலமாய்க் காணப்படக்கூடாது. இடைக்கிடையே துக்கத்தை யுண்டாக்கும் சம்பவங்கள் ஒருவருக்குண்டாவதுசகஜம்; என்றாலும் உடனே யவைகளை மறந்து மனம் ரம்மியப்பட்டுச்சந்தோஷமடையும்படியான ஸ்திதியில் இருத்தல் விசேஷம். வேலை மிகுதியால் அலுப்படைந்த ஒருவன் அந்திநேரத்தில் அழகான ஓர் பூஞ்சோலையிற் சென்றால், அவன் களிப்புமாறிச் சந்தோஷம் எப்படி யுண்டாகுமோ, அதேவிதமாய்ச் சிலகாரணங்களால் மனிதர் மனத்துயரடைந்தபோதிலும் மற்றும் சிலகாரணங்களால் சமாதானமடைந்து சந்தோஷத்துடன் ஜீவிக்கும்படியான ஸ்திதியில் அவர்மன மிருக்கவேண்டும்; இப்படி யில்லாவிட்டால் இகசுகத்தை நாம் அனுபவிக்க முடியாது.

3-வது. தகுந்த சம்பாத்தியம்.

இகசுகத்துக்கு அவசியமான விஷயங்களில் இது ஒன்று. 'தகுந்த சம்பாத்தியம்' என்றால் ஒருவருக்கு அவசியமாய் வேண்டிய ஜீவனும்சம். ஒவ்வொருவருக்கும் மிதமிஞ்சிய செல்வமிருந்தாலன்றி அவருக்குச் சுகம் கிடையாதென்று நாம் சொல்லவா வில்லை. இவ்வுலகத்தில் எல்லாருக்கும் ஒரேமட்டான செல்வமும் ஜீவனமும் கிடைப்பது கூடாமையாகும்; உயர்வு, தாழ்வு; எஜமான், வேலைக்காரன்; பணக்காரன், எளியன்; புத்தியால் வேலை செய்பவன், சரீரப்பிரயாசையால் வேலை செய்பவன் இப்படிப்பட்ட பேதங்கள் எப்போது மிருக்கவே யிருக்கும். ஆகையால் அவரவர் அந்தஸ்துக்கும், அவரவர் குடும்ப சம்ரக்ஷணைக்கும் தக்கதான ஐசுவரியமாவது சம்பாத்தியமாவது ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டு மென்பதே நம்முடைய துணிபு. 'சம்பாத்திய மில்லாதவன் சாகவேண்டும்" என்று உலகத்தில் பழமொழியாய் வழங்கி வருகிறதல்லவா? சம்பாத்திய மில்லையாயின் இகசுகத்தை ஒருவன் அடைவது அசாத்தியம். முதலில் சரீரசுகம் கிடையாது; வறுமைவந்து சேரும்; வறுமையோ மிகவும் கொடியது.

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே இன்னா தது.*"

என்று நாயனார் சொல்லியிருக்கிறார். ஒருவருக்குத்தரித்திரத்தைப்போல் துன்பம் விளைப்பது யாதெனில் வேறொன்றில்லை: இவ்விஷயத்தில் வேறொன்றையும் தரித்திரத்துக்குச் சமானமாகச் சொல்லக்கூடாது. அதற்கு ஒப்பில்லையென்று சொல்லும்போது, அதிலும் அதிகப்பட்டது ஒன்றுமில்லை எனச் சொல்லுவது அனுவசியம்.

"இப்போது உண்பதற்குப்போதுமான உணவில்லை! நாளை யென்ன செய்வது? முன் வாங்கின கடனைத் தீர்ப்பதெப்படி? இனிப் பிழைத்திருக்க வகை யெங்கே!!" என்னும் நிராக்கவலை அவர்கள் ஊனை உருக்கி உடம்பைத் தின்றுவிடும். அதையொட்டியே நாயனார்,

"இன்றும் வருவது கொல்லோ, [1]நெருநலும்,
கொன்றது போலும் [2]நிரப்பு."

* [இன்னாதது=துன்பஞ்செய்வது.] ஒருவனுக்கு வறுமைபோல வின்னாதது யாதென்று வினவின், வறுமைபோல இன்னாதது வறுமையே. பரிமேலழகர்.

1. நேற்றும். 2. வறுமை.

எனப் பாடினார். நேற்று வயிறு நிறைப்பதற்கு மிகவருந்திய ஒருவன், "என்னைக் கொன்றது போல் அவ்வளவு துன்பங்கள் செய்தவறுமையானது இன்றும் என்னிடத்தில் வந்து விடுமோ? அப்படி வந்தால் என்னசெய்வது" என்னும் துயரத்தில் அழுந்தி, மனம் கசந்து துக்கிப்பான். ஒருவன் வறுமையுற்ற காலத்தில் சுற்றத்தாரும் சிநேகிதரும் அவனைக் கைவிடுவர். அழுக்கு வஸ்திரங்களும், அசங்கியமான படுக்கையும், அசுத்தமான சரீரமும் (வேறு வித மிருக்கக் கூடாமையால்) அசுசியானபழக்கமும், அலங்கோல வாழ்வும் அவனுக்கு விதித்த விதியென நினைத்துத் தன்னைப்படைத்த கடவுளைத் தூஷிக்கிறான்.

மேலும் அவன் செல்வரைக் காணும்போதும், அவர் வீட்டினருகே செல்லும்போதும், அவரிடத்துத் தன் குறைகளைச் சொல்லும்போதும், அவரிடத்து உணவு கேட்கும்போதும், அப்படிக் கேட்டவுடன் கொடாதிருந்தபோதும், கொடுக்கமாட்டேனென்று மறுத்தபோதும், வறுமையுற்றவருக்குண்டாகும் துன்பஞ் சொல்லமுடியாது. இரவில் தூக்கம் என்பதே அத் துற்பாக்கியர்களுக்கு இல்லாமற்போகும்.

"நெருப்பினுள் துஞ்சலு[1] மாகும்,
நிரப்பினுள்[2] யாதொன்றும் கண்பா[3] டரிது."

மந்திரம், மருந்து முதலியவைகளால் தீயின்மேற் படுத்துத் தூங்குவது ஒருக்கால் கூடும். ஆனால் வறுமைவந்த விடத்து எவ்விதப் பிரயோகத்தாலும் தூங்குதல் கூடாமையாம் இதன்றி, தருந்த ஜீவனமுள்ள பிறரைப்பார்த்து அவரைத் தன்னுடன் ஒப்பிட்டு, அவர் அடைந்த செல்வம் தனக்கு மிருந்தால் தானிப்படித் துன்பமடைய வேண்டிய தில்லை யென்று தேர்ந்து, அவரைப்போல் சமபாதிக்கும் வழிகளில் தனக்குப் பயிற்சியும் பாண்டித்தியமு மில்லாததால் வேறெவ்விதத்திலாயினும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்னும் பேராசை அவன் பிடரியைப் பிடித்துத்தள்ள, அவன் உலகத்தின் விஷயங்களில் அனுபோகம் மெத்தவில்லாத சிலரிடத்திற்போய் "இந்தவேலை செய்கிறேன்;

1. அச்சுறல், 2. வறுமையில், 3. நித்திரை,

இப்பொருளைச் செப்பனிடுவதில் எனக்கப்பால் தான் மற்றவர்கள்; நான் வெகு சமர்த்தன்; நேற்றுத்தனக்கோடி முதலியாருக்கு இன்னின்னபொருட்களைச்செய்து கொடுத்தேன்" என்று சொல்லி அவரை ஏமாற்றிப் பணம்வாங்கிச்செலவழித்து; அதன்பின் வெகுநாட்சென்று 'வேலையெங்கே' யென்று கேட்டால், "இதோ முடிந்துவிட்டது. இன்னுமிரண்டுதினத்தில் கொடுத்து விடுகிறேன்; அசலூருக்குப் போயிருந்தேன்; அதனால் தான் சற்றுத் தாமசமாயிற்று" என்று போக்குச்சொல்லிப் புரட்டுசெய்து பிறரைவஞ்சித்து நாள் கழிக்கிறான். இதெல்லாம் வறுமையாலன்றோ?

இப்படிச் செய்யாமல் மரியாதையாய்க் காலங்கழிக்க வெண்ணியிருக்கும் சிலர் கடன் வாங்கியுண்டு, அப்பால் அக்கடனைத்தீர்க்க வகையில்லாதபோது, மனங்கலங்கி வருந்துவார்கள். இராம ராவண யுத்தத்தில் இராவணனைச் சேர்ந்தசேனைகள் சுற்றத்தார் சகலரும் மடிந்துபோகத் தனித்து நின்றபோது, அவன் மனதின் ஸ்திதியை கம்பர் "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கடன்பட்டாருடைய நெஞ்சத்துக்கு ஒப்பிட்டார். ஆகையால் கடன்பட்டார் நெஞ்சம் என்ன ஸ்திதியிலிருக்கும் என்பது விளங்கிற்று.

'நாய்க்குப் பசியுண்டானால்! அடைத்த கதவையுந் தள்ளித்திறந்து வீட்டுக்குள் நுழைந்து அங்கு வைத்திருக்கும் உணவைத் தின்னும்; அப்படியிருக்க அறிவும் தந்திரமுமுள்ள மனிதருக்குப் பசியதிகரித்தால் அவர்கள் என்னதான் செய்யார்கள்!' என இங்கிலீஷில் ஒருபழமொழியுண்டு. அதன்படி வறுமைப் பட்டவர்களில் கீழானோர் பிறர்பொருளை அபகரிக்கவும், அதற்குத் தடை யேதேனுமிருந்தால் அத்தடைகளை நிவர்த்திப்பதில் கொலை முதலான கொடுந்தொழில் செய்யவும் துணிவு கொள்ளுகிறார்கள். இப்படிச்செய்ய அவர்களைத்தூண்டுவது தக்க சம்பாத்திய மின்மையல்லவா? சம்பாத்தியமுள்ள ஒருவர், சொல்லவும், திருடவும், வாக்குப்பிசகு செய்யவும், சாதாரணமாய் நாம் காண்பதில்லை. ஏனென்றால் குற்றங்களைச் செய்யவேண்டிய அவசியமும் சந்தர்ப்ப

மும் அவர்களுக்கில்லை. ஒருவேளை அப்படிச் செய்வார்களாகில், அவர்கள் அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் இழிவுண்டாகும். அப்படியுண்டாகாமற் காப்பதற்கே சிலர் பொய் சொல்லல் முதலிய குற்றங்களைச் செய்யாதிருக்கலாம். ஆனால் கைப்பொருளற்ற வறிஞர் அக்குற்றங்களைச் செய்யவேண்டிய காரணங்களும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன வாதலால் அவைகளைத் தவிர்த்து நிற்பது அசாத்திய மாகின்றது. ஆதலால் அவர்கள் சுகமனுபவிப்பதில்லை. இதன்பொருட்டே நாயனார் ஒருவரிடத்தில் வறுமையாகிய பாவி வந்து சேருவானாகில், அவருக்கு இம்மைச் சுகத்தையும் மறுமைச் சுகத்தையும் இல்லாமற் செய்யவே வருவான் என்னும் பொருள்தர,

"இன்மை யெனவொரு பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி வரும்."

எனச்சொல்லி யிருக்கிறார்.

(இன்னும் வரும்.)

J. D. R.

மனோன்மணீயம். III.

இன்னும் ஒருநாள், அதாவது போர் நடந்த நாள், கதை யிருக்கிறது. காலையில், பாண்டியன் படைகளைச் சேனாதிபதியாகிய பலதேவன் அணிவகுத்து நிற்க, குடிலன், களத்தில் ஓர்புறம் நின்று அரசனை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, அன்றுமாள்பவர்க்காகவும், அவர் சாதலினால்

"மடவுள்
இட்டகல்லாலெழும் வட்டமாம் விரிதிரை
வரவரப்பெரிதாய்க் கரைவரைவரல்போல்,*
நின்றவிவ்வீரரை யொன்றியமனைவியர்
உற்றார்பெற்றார் நட்டாரென்றிப்
படியே பரவும்"

துயரத்தைப் பற்றியும், அவன் மனதில் இரக்கம் பிறந்தது. அவ்விரக்கத்தைக் கூடிய சீக்கிரத்திற் பொய்முகாந்தரங்களால் அவித்தானவுடன், ஜீவகன் வந்து சேர்ந்தான். வந்த அரசனுக்கு நாற்படைகளையும் வருணித்துக்காட்ட, அவன் மனமகிழ்ந்து போர் வீரரை யுற்சாகப்படுத்தத் தொடங்கினான். அவன் மொழிகளிலிருந்து சிலபாக்களை வரைவோம்:—

* Compare : Tennyson's Pelleas and Etarre' ll 89-90.

"தாயினுஞ் சிறந்த தயாபூண் டிருந்த
தேயமாந் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்த இவ்வஞ்சரை யெணுந்தொறு மெணு
[ந்தொறும்
அகந்தனி லடக்கிய மடங்கா தெழுந்து,
புகைந்துயிர்ப் பெறியப் பொறிகண் பொறிய
நெடுந்திரட் புருவங் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையுங் கிளர்ந்தெழுந் தாடக்
களங்கமில் நும்முகங் காட்டுமிச் சினத்தீ
கண்டப் பாண்டியே கொண்டனள் உவகை.
* * * * *
பழையோர் பெருமையுங் கிழமையுங் கீர்த்தியு
மன்னிய அன்பில்நும் அன்னையர்பாடி
நித்திரைவரும் வகை யொத்தறத் துமது
தொட்டில்தாலாட்ட, அவ்விட்டமர் முன்னோர்
தீரமுஞ் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணி யிருகணுங் கண்ணீர் நிறையக்
கண் துயிலாது நீர் கனிவுடன் கேட்ட
வண்டமிழ் மொழியான் மறித்திக்காலம்
"ஆற்றிலம்; ஆண்மையம் உரிமையு மொருங்கே
தோற்றனம்" எனச்சொலத் துணிபவர் யாவர்.
* * * * *
அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னினும்
நாட்டபிமானம் உள் மூட்டிய சினத்தீ
யன்றோ வானோர்க் கென்றுமே யுவப்பு.
* * * * *
இத்தனிப்போரில் நீரேற்றிடும் காயஞ்,
சித்தங்களித்து, ஐயமா துமக்கு
முத்தமிட்டளித்த முத்திரையாகி
யெத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்.
* * * ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே
புண்படா துலகிற் புகழுடம்பு அடைந்தார்?"

தன் படைகளுடன் சம்பாஷித்தானபின் ஜீவகன் போர்க்களத்துக் கெழுந்தான்.

நாராயணன் அரசன் பேரில் மெய்யன்புடையவனெனக் கூறினோம். அவ்வீரன் போர்க்களத்துக்கு வரின், அரசனை யவ்விடத்தில் கொல்லமுயலவேண்டுமென்ற தன் எண்ணத்திற்குத் தடையுண்டாமெனக்கருதி, குடிலன், அவனையும் வெற்றியை யடையக்கூடிய அநேக வீரர்களையும், கோட்டையைக் காத்துக்கொண்டிருக்கும்படி யேற்படுத்தி யிருந்தான். நாராயணன் அவன் கருத்தையறிந்து போரை யுற்றுப்பார்த்துக் கொண்டிருக்கையில், அரசன் அபாயத்துக்குள்ளா யிருப்பதைக்கண்டு, உடனே காவல் வீரருடன் போர்க்களத்துட் சென்று, அரசனை மரணத்தினின்றுந் தப்புவித்தான்.

போர்க்களத்தினின்றும் அரண்மனைக்குட் கொண்டுவரப்பட்ட ஜீவகன், தன்தோல்வியை நினைந்து

சோகமுற்று, விழுந்து, பின்பு எழுந்து தன்னைத்தானே நொந்துகொண்டு இறக்கத் துணிந்து வாளையுருவுந் தருணத்தில்:—

நாராயணன், மனோன்மணி தன்னை மறந்தாய் போனும் !
ஜீவகன், குழந்தாய் ! குழந்தாய் !—(விழுந்து மூர்ச்சிக்க)
சேவகர், கொற்றவ ! கொற்றவா !
நாரா, பேசன்மின் !
முதற்சே, பேசன்மின் !
நாரா, வீசுமின் ! அகன்மின் !
முதற்சே, வெளியே !
மு-ம் சே, பனிநீர்
நாரா, தெளி நீ சிறிது !
ஜீவ, குழந்தாய்! குழந்தாய்! கொன்றேன் நின்சீர் !
(எழுந்து சோர்வாயிருக்க.)
நாரா, இழந்தால் இருப்பளோ ? என்செயத் துணிந்தாய் ?
ஜீவ, நஞ்சே யெனக்கியான்! என்செய்வே னினி !
இருகலைக்கொள்ளில் வெறும்பா னேனே !
செருமுகத் திரிந்தேன் மானஞ் செகுத்தும்
உயிரினை யோம்பவோ வுற்றது? ஓர்சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமேகவரிமா!
பெருந்தகை பிரிந்தும் ஊன் சுமக்கும் பெற்றி
மருந்தா யெனக்கே யிருந்ததே நாரணா!"

ஜீவகனை நாராயணன் தேற்றிக்கொண்டிருக்குந் தருணத்தில், குடிலனும் பலதேவனும் வந்து சேர்ந்தார்கள். குடிலனுடைய பாசாங்குகளைக்கண்ட மாத்திரத்தில் நம்மனத்தில் எழும் கோபம், அரசனுடைய சுத்த குணத்தைப்பற்றியோசிக்கும் பொழுது, நெய் வார்க்கப்பெற்ற நெருப்பைப்போல், அகோரமாய் வளருகிறது.

பலதேவன், தூதுபோகுமுன், ஒரு பொற்றொடியைத் தன்னாற் கெடுக்கப்பட்ட ஓர் மாதுக்குக் கொடுத்துச் சென்றதாகக் கூறினோம். அம்மாதின் சகோதரனாகிய ஓர் போர்வீரன், தன் தங்கைக்காக மனம் வருந்திப் போர்க்களத்தில் அப் பொற்றொடியைக் காட்டிப் பலதேவனை வேலால் மார்பிற் குத்தினான். இதனாலுண்டான உள்கலகமானது, பாண்டியன் அபஜயத்துக்கு ஓர் முக்கியகாரணமாயிருந்தது. ஆனால் இவ்விஷயம் அரசனுக்குத் தெரியாது. இது நிற்க, தான்கருதியவற்றைப் பலவாற்றானும் கெடுக்கும் நாராயணன் பேரில் அடங்காக் கோபங்கொண்டகுடிலன் பலதேவன் மார்பிற் குத்தப்பட்டது நாராயணனுடைய ஏவலாலென்றும், நாராயணன் கோட்டைக்காவலைவிட்டுப் போர்க்களத்துக்கு வாராதிருந்திருப்பானாயின் அவ்வளவு தோல்வி நேரிட்டிராதென்றும், இவையெல்லாம் குடிலன் பேரிலுள்ள விரோதத்தினால் தூண்டப்பட்டு நாராயணன் செய்தனனென்றும், பலவிதமாக அரசனுக்கு வெகுசாதுரியமாய்ப்போதித்து, 'எடுப்பார் கைப்பிள்ளை' யாகிய அரசனிடமிருந்து, நாராயணனைச் சிறையிலடைத்துப் பிற்பாடு கழுவேற்றிவிடும்படி கட்டளைபெற்றுக்கொண்டான். இதைக்கண்டு முறுமுறுத்துக் குடிலனை யெதிர்க்கத்தொடங்கின போர்வீரர் அடங்கினதும், குடிலன் அவர் கையினின்று தப்பித்ததும், சத்தியவந்தனாகிய நாராயணன் மூலமாயே ஒழிய வேறில்லை. இதற்கு ஊடே, சேரனிடத்திருந்து ஒரு குடம் தாமிரவருணி நீரையும் வேப்பமாலையையும் சமாதானக் கப்பமாகவேண்டி வந்த தூதனையும், தன் உண்மை நிலையையறியாத ஜீவகன், மறுபடியும் போர்புரிந்து வெற்றியடையலாமென்றெண்ணித் துரத்திவிட்டான்.

நாராயணன் துரோகஞ்செய்கிறானென்று சொல்லும்பொழுது,

"வேலியே யின்னில்
தெய்வமே காவல்செய்பயிர்க்கு"

என்று தான் கூறினமொழி, தனக்கே முற்றிலும் பொருந்தும்படி ஒழுகும் குடிலனுடைய செய்கைகள், தன் குடும்பத்தை இராஜகுடும்பமாக்கும்பொருட்டிருக்கலாமென்று சிலர் நினைப்பார்கள். அவ்வெண்ணம் அவன் செய்கைகளை நியாயப்படுத்தாமற்போனாலும், உலகத்தில் வெகு சாதாரணமாயிருப்பதுபற்றி, அதின் மட்டிலும் முற்றிலும் இகழத்தக்கதல்ல. நாலாம் அங்கம் மூன்றாம் களமுடிவை வாசித்தால், அவ்வெண்ணத்துக்கும் இடையில்லை : தன் பேராசையே மூலகாரணம் : என்பது விளங்கி, அவன் குணம் முன்னிலும் பதின்மடங்கு பாழாகத்தோற்றும்.

மாலையில், சுந்தரமுனிவர், தக்ககாலத்தில் திருநெல்வேலியைவிட்டுப் போம்படி ஜீவனுக்குப்போதித்தும் அவன் இணங்காதாக ; மனோன்மணியையாவது தன்னுடன், தானியற்றிய சுருங்கை வழியாய்த் தன்னுடனனுப்பும்படி கேட்டனர். அரசன் மனமகிழ்ந்திசைந்து, அவர் அங்ஙனஞ்செய்யில்,

"இந்துவின் குலமெனும் முந்திய பேர்போய்ச்
சுந்தரன் குலமெனச் சந்ததம் வழங்கும்"

என்று போற்ற, அவர் நடுநிசியில் வருவதாகச்சொல்லிப்போயினர். பிற்பாடு ஜீவகன் மனோன்மணியைப் பிரிந்திருப்பதைப்பற்றி விசனப்பட்டுக்கொண்டிருக்கையில், சுந்தரமுனிவரைப்பற்றிச் சந்தேகம் பிறக்கக், குடிலனையழைத்து, நிகழ்ந்தவற்றைக் கூறி, அவன் கருத்தென்னவென்று வினவினான். குடிலன், அந்நியருடன் கன்னியையிரவிலனுப்புதல்

சரியோவென்று சாதுரியமாய்ச் சந்தேகித்து, அப்படிச்செய்யினும் கவலையதிகரிக்குமேயொழியக் குறையாதென்றுகூற, அரசன் அதையும் ஒத்துக்கொண்டு நினைத்தான். குடிலன் வேந்தர்குலத்தில் விவாகம் நடப்பதிலுண்டான கஷ்டங்களை விவரித்து அவன் நினைப்பை யதிகரித்தான். அதுகண்டு "அரசலவெனின் நமக்காம் பிழையென்னை ?" யென்று ஜீவகன் கூறினவுடன், குடிலன் வெகு தந்திரமாய் ஜீவகன் 'அடிச்சேவகத்தைப் புகழ்ந்து, அன்றிரவு, மனோன்மணியைப் பலதேவனுக்கு விவாகஞ்செய்துவிடும்படி அரசன் கட்டளையைப்பெற்றுக்கொண்டான். சமயத்துக்குத்தக்கபடி சுயநயத்தைத்தேடிக்கொள்ளும் குடிலனுடைய மதி வியக்கத்தக்கதே. பின்வரும் தனிமொழியில் குடிலனுடைய மனத்தின் இரக்கமில் தன்மையும், ஒவ்வோர் அறைக்கும் இரண்டு திறவுகோல் செய்து பணந்திருடும் திருட்டுத்தனமும் வெளிப்படுகின்றன. பிற்பாடு குடிலன் சுருங்கையைத்தேடிச் செல்கிறான்.

(இன்னும்வரும்.)

அ. மாதவய்யர்.

—o—

சாவித்திரி சரித்திரம்.

ஐந்தாவது அதிகாரம்.

என்தகப்பனார் கடிதம்வந்தவுடன் நான் படிப்பை நிறுத்தவில்லை. அவரெழுதியதைப்பற்றி எனக்கு இருந்ததைப் பார்க்கிலும் நடேசனுக்குவிசனம் அதிகமாகவே இருந்தது. படிப்புவருகிற சமயத்தில் நிறுத்திவிட்டால் பிற்பாடு எல்லாம் மறந்துபோமென்று அவன் சொன்னான். கோபாலன் உடனே படிப்பை நிறுத்திவிட வேண்டுமென்று சொன்னபோதிலும், நடேசன் அவனுக்குப் போதித்து, என்தகப்பனாருக்குச் சரியானபடி கடிதமெழுதி அவருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்று சொல்லி, எனக்கு வழக்கம்போல் படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டு வந்தான். நாங்கள் ஒருவாரத்திற்குப் பிற்பாடு என் தகப்பனாருக்குக் கடிதங்களெழுதினோம். கோபாலன் எழுதிய கடிதத்தில் நான் கொஞ்சம் எழுதினேன். என் தகப்பனாலாத் தெரியாதபோதிலும், நடேசனும் அவருக்கு ஒருகடிதமெழுதினான். அவன் எழுதியது அந்தச்சமயத்தில்எங்களுக்குத்தெரியாது. பிற்பாடுதான் நாங்கள் அறிந்தோம். அந்தக்கடிதங்கள் இரண்டையும் கீழேவரைகிறேன்:—

1. கோபாலன் கடிதம்.

திருநெல்வேலி
ஆவணி௴ 11வ.

ஸ்ரீமது அப்பா அவர்களுடைய திவ்யஸ்ரீ பாதபத்மங்களிலே குழந்தை கோபு சாஷ்டாங்க பூர்வீகமாக நமஸ்கரித்த விஜ்ஞாபனம். இவ்விடத்தில் சாவித்திரி, அத்தை முதலியயாவரும் க்ஷேமம். அவ்விடத்தில் தாங்கள் க்ஷேமமாயிருக்கிற விபரத்துக்கு எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாங்களெழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. இப்பொழுது 20ரூபா வேண்டியதில்லை. இந்த மாதத்தில் 15ரூபா அனுப்பினால் பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம். எனக்கு எப். ஏ. பரீக்ஷை இந்த வருஷமில்லை. அடுத்த வருஷம்தான் பணம் கட்டவேண்டும். நான் சிரத்தையாய் வாசித்துக்கொண்டு வருகிறேன். தேகத்தைச்சௌக்கியமாய்ப்பார்த்துக்கொள்ளுகிறேன். தாங்கள் உண்டியல் அனுப்புவதை இராவுத்தர் கடைக்கு அனுப்பிவிட்டால் நான் பெற்றுக்கொள்ளுகிறேன்.

தாங்கள் சாவித்திரி படிப்பைப்பற்றி யெழுதினதைக் கேட்டு அவள் மிகவும் விசனப்படுகிறாள். அவள் படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதினால் நானும் நடேசனும் அவளுக்குச்சொல்லிக்கொடுக்கத் தொடங்கினோம். தங்களைக் கேளாமல் அப்படிச்செய்ததைத்தயவுசெய்து மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் படிப்பு நிறுத்தவில்லை. அவளே இதன்கீழ் எழுதுகிறாள்.

தாங்கள் நடேசனைப்பற்றி யெழுதி யிருந்தீர்கள். அவனுக்கு மதுரை. அவன் தமையனார் இவ்விடத்தில் நூறுரூபா சம்பளமுள்ள கச்சேரி உத்தியோகத்திலிருப்பதால் அவன் இரண்டு வருஷமாய் இவ்விடத்தில்வாசித்துக்கொண்டிருக்கிறான். அவன்தான் என்னுடையமுக்கிய இஷ்டன். எங்கள் வகுப்பில்'முதலாவது பையனாயிருக்கிறான். அவன்பந்துக்களில் அநேகர் உயர்ந்த சர்க்கார் வேலைகளிலிருக்கிறார்களாம். நானும் அவனும் ஒன்றாய்ப்படித்துக்கொண்டு வருகிறோம். வேறுவிசேஷமில்லை.

இப்படிக்கு
தங்கள் பணிவும் அன்புமுள்ள
குழந்தை
கோபாலன்.

என்கோ டஅப்பாக்கு னம ஸ்காரம்பன் னதேன் னீ, ற்யெழுதிக காகிதம்வ ந்து துயெ னக்கு ரொம் ப விஸன மாயிருக்கு யெகக்கு வாசிக்க ஆஸை யா இ ருக்குநா ங் கெட்டுப் போகமா ட்டேன்னீற் சம்மதிக் கனம் யெனக்கு யிதை யெழு தரபோ து அழுகைவ ரது.

உம்மோடகு
ழந்தைசா
வித்திரி.

2. நடேசன் கடிதம்.

ஸ்ரீமது மாமா அவர்களுக்கு அநேக நமஸ்காரம். இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம். தங்கள் க்ஷேமத்துக்கு எழுதியனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கடிதத்தைப் பார்க்க தங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். தங்கள் குமாரன் கோபாலன் எழுதியிருப்பதால் என்னைப்பற்றி நான் ஒன்றும் விசேஷமாய்ச் சொல்லவேண்டிய தில்லை. தங்கள் கடிதத்தை கோபாலன் காட்டினவுடன் எனக்கு மிகவும் விசனமாயிருந்தது. நான் அந்தவிஷயத்தைப்பற்றி என் தமையனாரவர்களிடத்திற் சொன்னேன். சாவித்திரி முக்கியமாய் என்னால் படிக்க ஆரம்பித்ததினாலும், அதனால் தங்களுக்கு விசனமுண்டானதினாலும், நான் தங்களிடத்தில் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள்சொன்னார்கள். அதன்பேரில் இந்தக்கடிதம் எழுதலானேன். நானிது எழுதுவது கோபாலன் சாவித்திரி முதலியவர்களுக்குத் தெரியாது. தாங்கள் என்னை மன்னிக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நான் கொஞ்சமும் பாத்தியப் படாதவனாயிருந்தபோதிலும், இன்னும் ஒரு விஷயம்கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சாவித்திரி படிப்பதை தாங்கள் தடுக்காமலிருக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறேன். அவளுடைய புத்திசாலித்தனத்தையும் படிப்பின் பேரிலுள்ள ஆசையையும் பார்த்துத்தான் நான் படிப்புச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன். அதைப்பற்றித் தாங்கள் கோபாலன் பேரில் கோபித்துக் கொள்ளவேண்டாம். என் பேரில் தான் கோபித்துக் கொள்ள வேண்டும். என் சகோதரிகள் மதுரையில் படிப்பது போலவே சாவித்திரிக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். பிற்பாடு தங்கள் இஷ்டம் தங்களுக்குத் தெரியாத தில்லை. அவளுக்குப் படிப்பின் மேலிருக்கும் ஆசையைப் பார்த்தால் நீங்களே சொல்லிக்கொடுப்பீர்களென்பது நிச்சயம். நான் கோபாலனுடனும் சாவித்திரியுடனும் அதிகமாய்ப்பழகி விட்டதால் இவ்வளவு சொல்ல நேரிட்டது. நான் ஏதாவது பிழைசெய் திருந்தால் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

திருநெல்வேலி ஆவணி௴ 12௳. } தங்கள் பணிவுள்ள நடேசன்.

நாங்கள் கடிதமெழுதி யொருவாரத்துக்குள், என்னிஷ்டப்படி வாசிக்கும்படி என் தகப்பனார் பதிலெழுதிவிட்டார். அவர்கடிதத்தில் நடேசன் கடிதத்தைப்பற்றி யெழுதியிருந்தபடியால், நான் அவன் வந்தவுடன் அதைப்பற்றிக் கேட்டேன். அவன் பதிற் சொன்னதாவது:—"ஆமாம், பெண்டாட்டி! நானும் ஒருகடிதம் எழுதினேன். ஒருவேடிக்கை கேள். முதலில் எழுதினகடிதத்தில் உன் பெயர்வரும்பொழுது 'பெண்டாட்டி' யென்று எழுதிவிட்டேன். பிற்பாடு அதைக்கிழித்துவிட்டு வேறுகடிதம் எழுதினேன். எப்படியாவது அவர்கள் சம்மதித்ததே பெரியகாரியம்." என்றான். அவன் முதற்கடிதத்தை நினைத்து நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அப்பொழுது இராத்திரி போஜனகாலம் ஆய்விட்டபடியால், "நடேசா! நீயெனக்குப், படிக்கும்படி அனுமதி வாங்கித்தந்ததற்காக, இன்றைக்கு எங்களுடன் சாப்பிடவேண்டும். அன்று மத்தியானத்தைப்போல் வீண்முகாந்தரஞ் சொல்லக்கூடாது" என்றேன். உடனே கோபாலனும், அத்தையம்மாளும் என்னுடன் சேர்ந்துகொண்டு அவனை வேண்டவே, நாங்கள் எல்லோரும் அன்றிரவை உல்லாசமாய்க் கழித்தோம்.

சாவித்திரி.

தமிழ்மொழி வளர்த்தல்.

அல்லது

தமிழ்ப் பாஷையை அபிவிருத்தி செய்யும் மார்க்கங்கள்.

(154-வது பக்கத் தொடர்ச்சி.)

இதற்குமுன் சென்னப்பட்டணத்தில் கவர்னருத்தியோகம் வகித்துநின்ற 'கிராண்ட் டப்' என்னும் ஐரோப்பியகனவான், பி-ஏ- பட்டம்பெறப் போயிருந்த சில சுதேசிகளைநோக்கி, திருவள்ளுவர் குறளும், தமிழ்ப்பழமொழியும் மாத்திரம் வாசித்துப் பார்த்ததிலிருந்து நான் தமிழ்பாஷையின் பெருமையை அறிந்துகொண்டேன்; நீங்கள் தமிழராயிருந்தும், உங்கள் பாஷையை வளர்க்க ஓர் எத்தனமும் செய்யாமலிருந்தது மிகுந்த வியப்பும், பரிதாபமுமாயிருக்கின்றது! ஆகையால் இனியாவது, இந்த மகாபாஷையின் விஷயத்தில் கவனம் செலுத்துவீர்களாக," என்றுசொன்னதும், அதைக்கேட்டவர் தலைகுனிந்து, சித்திரப்பதுமைபோல், வீற்றிருந்ததும், தெரிந்தவிஷயம். நமதுபாஷையில் இவ்வளவு அபிமானம் புறதேசத்தாருக்கே யிருக்கும்போது, சுதேசிகளாகிய நாம் இவ்விஷயத்தில் அந்நியரிலும் அந்நியர்போல, சும்மாயிருப்பது அழகோ, கீர்த்தியோ, புண்ணியமோ, புருஷார்த்தமோ? அந்தக்கவர்னர் அப்படிப் பேசக் கேட்டபிறகும், செவிடன் காதிற் சங்கூதப்பட்டதுபோல் இருக்கின்றவர் அநேகர்! இம்மட்டோ? அந்தோ! அந்தோ! சுதேசபாஷைகளில்லாமலே இந்தப்பாதகண்டம் நன்றாகாதா, எல்லாவற்றிற்கும் இங்கிலீஷ்பாஷையே போதாதா, என்று குருட்டுக்கேள்விகேட்கின்ற பித்தருமுண்டு! சுதேசாபிமானங்கெட்டவர் நிற்கும்படியில், இதிலுமோர் தாழ்ந்தபடியில்லை! அத்தகைய கேள்விக்கு எப்போது விடைசொல்லுவோ மென்றால், அப்படிக்கேட்டவர் பிராமணருடைய வேதத்தையும், சைவர்களுடைய தேவாரத்தையும், வைஷ்ணவர்களுடைய திருவாய்மொழியையும், மற்றும் தென்மொழி வடமொழிகளிலுள்ள கண்மணிக்கிணையான எண்ணிறந்த நூல்களையும், மனதோடு புதைத்துவிட்டு, தமது உற்றார் பெற்றார் உறவும் விட்டு நீங்கி, அங்கிலேயபாஷையில் வேதாத்தியயனம், பிரார்த்தனை, முதலியசெய்து, அவர்கள் பாழ்நெஞ்சம் குளிரும்படி அங்கிலேயம் பசப்பி, அங்கிலேயர்தம்முடன் கூடி மதுமாமிஸம் புசித்து, அவருடன் சம்பந்தமும் செய்ய உடன்படுவாரென்றால், அப்போது அதற்கு விடையளித்துக் கொள்வோம். அந்தக்கேள்வி கேட்டவர் அப்படிச்செய்யக் கூசுவார்போலும்! கூசுவாரென்றால் அப்போது என்போலிகள் கேட்கும் கேள்வியாதெனில், "என் மற்றகாரியங்களுக் கெல்லாம் அங்கிலேயம் போதுமென்றவர்க்கு, இக்காரியங்களும் செய்துகொள்ளத் தடையென்னவந்துவிட்டது?" என்பதே. அப்படிச்செய்யவும் கூசேமென்றுசொன்னால், அவர்கள் கேட்டவினாவுக்கு விடைபகரவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அப்போது அவர் 'அங்கிலேயப்பதர்' என்ற அந்தஸ்தான பெயர்சூட்டிக் கொள்ள அருகர்தாமென்று யாவரும் சம்மதிப்போம். அந்தப்பெயர், அப்போது அவருக்கே உரித்தாகும். அப்பாலும் அன்னவரை அங்கிலேயர் தம்முடன் சேர்த்துக்கொள்வாரோ, பதனொன்றுதள்ளிவிடுவாரோ? தள்ளிவிட்டால், அரசன்மகளை மணம்புரிய ஆசைப்பட்ட எளியவன், அது தனக்குச் சம்மதமாயிருக்க, கலியாணம் பாதி நிறைவேறிற்றென்று கொண்டாடித்த கதைக்கு இவர்களே லெக்காவார்கள். அப்போதுதான் இவர்கள் செய்கையின் அழகும்பொருத்தமும் நன்றாய்வெளிப்படும். இப்போது நாம் என்னசொன்னாலும் அதை அவர்கள் நம்பார்கள். அவர்களுக்கு இப்போது வயிற்றுப்பாடே மிஞ்சிநிற்கும். அதற்கும் இப்போது வழி அடைபட்டுக் கொண்டேவருகிறது. இப்போது மெட்ரிகுலேஷன் ப்ரிக்ஷைமாத்திரம் பாஸ்செய்தவர்களுக்கு, கவர்ன்மெண்டில் இனிப் பதினைந்து ரூபாய் சம்பளத்துக்குக் குறைந்த மொச்சி முதலியவேலைக்கு மிஞ்சினவேலை கொடுக்கப்படமாட்டாதென்று, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய சட்டம் பிறந்து பலநாளாகவில்லையே. ஆட்டைப்பிடித்தது, மாட்டையும் பிடிக்கும், மனிதனையும் பிடிக்கும். இனித்தாமசமில்லாமல், (F. A.) எப்-ஏ, (B. A.) பி-ஏ பரிக்ஷைகள் பாஸ்செய்தபேர் தொகை அதிகரிக்கும்போது, அவர்களும் இம்மாதிரிச் சட்டத்துக்குப்பலியாகி, அப்புறம் வேறுவேலை யில்லாவிட்டால், வீடுதோறும் பலியேற்குங்காலமும் நெருங்கிவரும் போலிக்கிறது! அவர்கள் கல்விக்கென்று செலவுசெய்த பணமும் திரும்பக்கிடைக்கப் போகிறதில்லை. இதுபோல இப்போது நிகழ்ந்துவரும் காரியங்களையும், சுயபாஷைகள் அடைந்துவரும் தளர்ச்சியையும், கனவான்களே, ஆழ்ந்து, கவலையுடன், சிந்தித்துப்பாருங்கள்! சிந்தித்து அதைநிவர்த்தி செய்யத்தகுந்தவழியைத்தேடுங்கள்! கவலையற்றுச்சும்மா இருக்க இதுவன்றுநேரம்! இன்னும், மட்டில்லாமலும், சிந்தனையில்லாமலும், பிள்ளைகளை அங்கிலேயம் தனியாகப்பயிற்றுவிக்கும் வழக்கத்தை, கவர்ன்மெண்டாரும் சற்றேனும் நெகிழவிட்டபாடில்லை, தாய்தந்தைமாரும் அவருக்கு சுயபாஷைப் பயிற்சி தருவிக்கிறதில்லை! மோசம் நெருங்கி வரும்போது காரியமெல்லாம் தெரியவரும்! ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இப்போது யதார்த்தவாதி வெகுஜன விரோதியாகவே தோன்றுவான்.

கனவான்களே, இன்னும் ஒரு வார்த்தைசொல்லி இவ்வுபந்நியாசத்தை நிறுத்துகின்றேன். காலதாமசத்தையும் சொற்குற்றங்களையும் மன்னித்து, நான் சொல்லிவந்ததில் உங்களுக்கு எவ்வளவு தூரம் நியாயமாகத்தோன்றியிருக்குமோ, அவ்வளவும் நீங்கள் அங்கீகாரம்செய்து, அவ்வங்கீகாரத்திற்கு ஏற்ப, காரியத்திலும் அதை நிறைவேற்ற முயலவேண்டுமென்று வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் சொல்லிவந்ததெல்லாம் இவ்வுபந்நியாசத்தை, எப்படியாவது வார்த்தைப் பெருக்கால், எழுதிமுடிக்கவேண்டுமென்ற எண்ணத்தினாலன்று. இல்லை, இல்லை! இதைக்கேட்பவர்களுடைய யுக்தி புத்திக்கு இதில் உண்மையென்றும் நியாயமென்றும் தோன்றியவரையில் அவர்களை அதை நடபடியிற் கொண்டுவரச் செய்யவேண்டுமென்று, அந்தரங்கத்தில் உண்மையான, காரியமான உத்தேசங்கொண்டே, இவ்வுபந்நியாசத்தை எழுதப்புகுந்தேன். இந்த பாகத்தை நீங்கள் நன்றாய்க்கருத்திற் பதிக்கவேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேன். வெறும்வார்த்தையாடி நிற்க இதுவன்று நேரம். அந்தோ! அந்தோ! வார்த்தைபேசி நிற்பதை விட்டு, நாம் இவ்விஷயத்தில் அபிமானமும், ஊக்கமுங்கொண்டு, காரியமாய்ச்செய்து முடிக்கவேண்டியவேலை மலை போலிருக்கின்றதே! இவ்விஷயத்தில் இன்னம் கனதனவான்கள் மனமடிந்து அசட்டையாய் இருந்துவிட்டால், பின்வரக்கூடிய ஆபத்தை நினைத்து நெஞ்சம் பதைக்கின்றதே! புறபாஷையாகிய பெருவெள்ளம், நாம் சுயபாஷையாகிய பயிருக்கு அணைகோலிக்கொள்ளுமுன் எங்கேவந்து அழித்துவிடுமோ, என்று மனம் நாற்புறமும் பார்த்துத் தத்தளிக்கின்றதே! நமது வார்த்தையை நம்பி நமக்குத்துணையாய் வரும் உதவியின் சிறுமையும், இபபோது காலத்தின் நிலைமையும் எண்ணியெண்ணி உள்ளம் ஏக்கறுகின்றதே! இன்னந்தான் தமிழ் பாஷையைத் தாயக உடைய-

வர் அத்தாயை ஆதரிப்பாரோ, இல்லையோ, அவர் நெஞ்சம் இரங்குமோ, இரங்காதோ என்று சந்தேகித்து நெஞ்சம் அழித்துரும்புபோல் அலைப்படுகின்றதே! கனவான்களே! அபிமானிகளே! இவையெல்லாம் ஆழ்ந்துயோசித்துப்பாருங்கள்! நெஞ்சத்தை அங்குமிங்கும் அலையவிடாமல் உண்மையாய் நம்பினதை ஊக்கமாய் நடத்துங்கள்! கருணையங் கடலாகிய கடவுளும் அதற்கிரங்கி அருள் செய்வாராக!

முற்றிற்று.

தி. லக்ஷ்மணப் பிள்ளை. பி. ஏ.

குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

(147-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படியிருக்க, தர்மசீலனுக்குத் தரித்திரர்களுக்கு வைத்தியம் பண்ணுவதில் எப்பொழுதும் வேலைக்குக் குறைவின்றியிருந்தது. ஆனால் சிலநாட் சென்ற பின்பு பணக்காரர்கள்கூட இவனிடம் வரத்தலைப்பட்டார்கள். ஒருநாள், இவன் வீட்டுவாயலில் அலங்கார விநோதியின் வண்டியைப்பார்க்கிலும், ஒரு விதத்திலும் தாழ்மையில்லாத ஒரு வண்டிவந்து நின்றது. அப்பட்டணத்தில் மிகுந்த ஐசுவரியமுள்ள தனகோடிசெட்டியார் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்டவுடனேசத்தியவதிக்குச் சந்தோஷத்தினால் மனந்துடித்தது. அவர் வெகுநாளாய் தீராத மனநோயால் வருந்தி அநேக வைத்தியர்களாலும் தன்னைச்சௌக்கியம்பண்ண முடியாததுகண்டு தர்மசீலனுடைய புகழைக் கேள்விப்பட்டு இவனிடம் வந்தார்.

நோயின்னதென்று தெரியாமல் மனம்போனபடி மருந்துகளைக்கொடுத்து, "பாருங்கள் ஒருநொடியில் சௌக்கியம்பண்ணி விடுகிறேன்" என்றுசொல்லி வைத்தியம் செய்யும் சில மூடர்களுக்கு இதைப்போல் வேறு நல்லசமயம் கிடைக்கமாட்டாது. ஆனால் தர்மசீலனுக்கு அப்படிப்பட்ட இழிவான தொழிலைச்செய்யக் கொஞ்சங்கூடத்தெரியாது.

தனகோடிசெட்டியாரைப் பார்த்தவுடனே, "அய்யா, உங்களுடைய வியாதியைத்தீர்க்க வைத்தியன் வேண்டியதில்லை; நீங்களே, நான்சொல்லும் சில சங்கதிகளைச் சாக்கிரதையா யனுசரித்து வந்தால், உங்களுடைய வியாதி பறந்து போமென்று" உண்மையைச்சொல்லி, சில பத்தியம் முதலிய வற்றைச் சொல்லி, கடுமையான வேலையும் மனோவிசாரமும் கூடாவென்றும், சிலநாள் சிநேகிர்தகளுடனே சந்தோஷமாகவே பொழுதுபோக்க வேண்டுமென்றும் சொன்னான்.

உடனே, செட்டியார் "நீர் இதைப்பார்க்கிலும் வெகு கொடிய நோய்களையெல்லாம் தீர்த்திருக்கிறீரே. இதென்ன உமக்கு ஒருபெரிதா? நீர் எனக்கு வைத்தியம் பண்ணத்தான் வேண்டும்" என்று பிடிவாதஞ்செய்தவுடனே, தர்மசீலன் "ஐயா, நான் இதுவரையில் ஏழைகளைச் சௌக்கியப் படுத்தினதற்கு முக்கியமான மருந்து யாதெனில் அவர்களைத் தேகசுத்தமாகவும், உணவுமுதலியவைகளில் மிதமாகவுமிருக்கச்செய்வதுதான். அவர்கள், நான் சொல்வித்தான் அப்படியிருக்கவேண்டும். தாங்களே சுத்தமாயும், மிதமாயு மிருந்துவிட்டால் அவர்கள் என்னைத் தேடவேண்டியதில்லையே" என்றான். இதைக் கேட்டவுனே செட்டியார் தர்மசீலனுடைய நற்குணத்தையும் நல்லறிவையும் பார்த்துச் சந்தோஷப்பட்டு அவனிருந்த தரித்திரஸ்திதியைப்பார்த்துப் பரிதாபப்பட்டார். அவனை விட்டுப்போகும்போது கிரமமாய்க் கொடுக்கவேண்டிய பணத்தைப்பார்க்கிலும் கொஞ்ச மதிகமாகவேகொடுத்து "ஏழைகளுக்கு நீர் தர்மத்துக்கு வைத்தியம் பண்ணுகிறபடியால் பணக்காரர்கள் உமக்கு இரட்டிப்பு மடங்கு கொடுக்கவேண்டியது நியாயந்தானே" என்றார். தர்மசீலனைத் தினந்தோறும் தன்வீட்டுக்கு வரும்படி கேட்டுக்கொண்டார். அவனுமப்படியே செய்து வந்தான்: அவரோடுகூடத் தினந்தோறும் வெகுநேரம் சந்தோஷமாய்ப்பேச அவனுக்குச் சாவகாசமிருந்தபடியினாலே தனகோடிசெட்டியார் கூடிய சீக்கிரத்தில் கொஞ்சம் சௌக்கிய மடைந்தார்.

நம்முடைய சிநேகிதர்க ளிருவரும் சோற்றுக்கு வருந்திக்கொண்டிருந்ததை இதுவரைக்கும் பார்த்தோம். இதுவரையில் அவர்கள் கடன்படவில்லை. மேலு மினமாய் மருந்துகொடுப்பதையும், வைத்தியம்பண்ணுவதையுந்தவிர, ஏழைகளுக்குச் சிலசமயங்களில் பொருளுதவியுஞ் செய்துவந்தார்கள். ஆனால் இதுமுதல் இவர்களுடைய ஸ்திதி வேறுபட்டு விளங்கப்போகின்றது. தர்மசீலன் தினந்தோறும் பணக்காரர்களிடம் போகும்படிநேரிட்டது. அவன் இப்பொழுது வரவு செலவு கணக்குவைக்கும்படி யாயிற்று. இனிச் சத்தியவதியும் ஏழைகளுக் குதவி செய்யப் பொருளுக்காக இவனை வருந்திக்கேட்க வேண்டியதில்லாமற் போயிற்று.

இவர்களை இப்படி விட்டுவிட்டு அப்பட்டணத்தின் வேறொரு தெருவுக்குப் போவோம்.

அங்கு ஒரு பெரியவீட்டில் ஒரு நேர்த்தியான அறையில் அலங்காரவிநோதி உட்கார்ந்திருக்கிறாள் பாருங்கள். அவள் இரண்டுதடவை தன்வேலைக்காரனைக்கூப்பிட்டாள். இரண்டுதடவை அவன் அவளிடத்திற்கு வந்தான்.

"இன்னும் அந்தச் சால்வைகள் வரவில்லையா", என்று இரண்டுதடவைகளிலும் கேட்டாள்.

"இல்லை யம்மா"

"சால்வைகள்வரவில்லையென்பது நிச்சயந்தானா?"

"ஆம் அம்மா."

"அந்த அத்தர் சீசாவை எடு, அதல்ல, அந்தப்பீங்கான் சீசாவையெடு" என்றுசொல்லி அத்தரையெடுத்து கைக்குட்டையில் போட்டுக்கொண்டு "என்ன சங்கடம் இன்னும் சால்வைகள் வரவில்லையே" என்றாள்.

உடனே அடுத்த நிமிஷத்தில் ஒருமனிதன் கையில் ஒருபெட்டியைத் தூக்கிக்கொண்டு உள்ளேவந்தான். அவள் அப்பெட்டியைத் திறந்துபார்த்தாள். அதில் ஒட்டகத்தின் ரோமத்தால் செய்யப்பட்ட 200ரூ முதல் 300ரூ வரையிலும் பெறும்படியான அநேகம் சால்வைகளிருந்தன. இவைகளை யெல்லாமெடுத்துத் தூர எறிந்துவிட்டாள். 200ரூ பெறும்படியான ஒரு சால்வைமட்டும் கொஞ்சம் நேர்த்தியாயிருந்தது. ஆனால், அவள் அதின்விலை வெகு அதிகமென்று நினைத்தாள். தன்னால் அவ்வளவு செலவுசெய்து சால்வை வாங்கமுடியாது; ஆனால் ஏதாகிலும் ஒன்றுவேண்டியது அவசியந்தான் என்றாள். அந்தவியாபாரி "நீங்கள் எதை எடுத்துக்கொண்டபோதிலும் பின்னால் வருத்தப்படமாட்டீர்கள். எல்லாம் வெகு சகாயமாய்க் கொடுக்கிறேன்" என்றான். அவளுமப்படியே நினைக்க ஆரம்பித்தாள். கடைசியில் உடனே ரொக்கம் கொடுக்கவேண்டாமானால் 200ரூ பெறும்படியான ஒரு சால்வையை வைத்துக்கொள்ளலாமென்று தீர்மானித்தாள்.

"நீங்கள் ரொக்கம் கொடுக்கவேணு மென்பது அவசியமில்லை யம்மா. ஆனால் என்னிடத்தில் வேறொரு சால்வையிருக்கின்றது. அதையும் வேணுமென்றால் பாருங்கள்." என்று வியாபாரி சொன்னான். அலங்காரவிநோதிஅந்தச்சால்வையையும் பார்க்கவேணுமென்று சொன்னவுடன், வியாபாரி அதையும் அவளுக்கு எடுத்துக்காட்டினான். அதன் விலையோ 300ரூ. அதுமிகவும் நேர்த்தியாயும், சிறந்தது மிருந்தது. ஆனால் அலங்காரவிநோதி அதை வாங்கச்சக்தியில்லாதவளாயிருந்தாள். இருந்தபோதிலும் தான் முன்னெடுத்துவைத்த 200ரூ சால்வையையும் இதையும் ஒத்துப்பார்க்கும்போது, 200ரூ சால்வை நன்றாயிருக்கவில்லை, உடனே கோபத்தோடு, 200ரூ சால்வையைப்பார்த்தாள். வியாபாரியோ 300ரூ சால்வையின் அழகை வர்ணிக்கத் தொடங்கி கடைசியில் இவள் முதுகில் போர்த்திவிட்டான். அது இவளுடைய ஆடையின்பேரில் வெகு நேர்த்தியாய்ப் பொருந்தியிருந்தது. உடனே, நிலைக்கண்ணாடி முன்சென்று, முன்னழகையும், பின்னழகையும் திரும்பித் திரும்பிப்பார்த்துக் கொண்டாள். அச்சால்வையைத்தன்மேல் போட்டுப்பார்த்தாள், எடுத்துப்பார்த்தாள், ஒருகையில் மடித்துப் போட்டுப்பார்த்தாள். இப்படியெல்லாம் பார்த்த பிறகு "நல்லது இதை நானேவைத்துக் கொள்ளுகிறேன். எனக்கு ஒன்றுவேண்டியது அவசியந்தான், இச்சால்வை வெகு சகாயந்தா னென்று நினைக்கிறேன்" என்றாள்.

இப்படியிருக்க சத்தியவதி அவ்விடம் வந்து சேர்ந்தாள். வியாபாரியை உடனே போகச்செய்து, அலங்கார விநோதி சால்வையை ஒரு நாற்காலியின் மேல் அழகாய்மடித்து வைத்துவிட்டு "ஓ! சத்தியவதி, நீ வருவாயென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நீ முன்என் வீட்டுக்கு வருவேனென்று செய்த வாக்குத்தத்தத்தை நான்மறக்கவில்லை" என்றாள். அலங்கார விநோதி தனக்குச்செய்த மரியாதையைக்கண்டு சந்தோஷப்பட்டு, சத்தியவதி ஒரு சமாசாரம் சொல்லத் தொடங்கினாள்.

அதாவது, காளியின் பிள்ளைகள் உள்பட சில ஏழைப்பிள்ளைகளுக்குத்தர்மபாடசாலை ஒன்று ஏற்படுத்தி, தர்மத்துக்கு அன்னவஸ்திரம் முதலியவற்றைக் கொடுக்க வேணுமென்பதுதான்.

சத்தியவதி.— 'நான் செய்திருக்கிற ஏற்பாட்டை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்களென்று நினைக்கிறேன். வெகுகாலமாய், நானே இத்தர்மத்துக்கு என் கையிலிருந்து ஒருபாகம் போடவேணுமென்று நினைத்திருந்தேன். ஆனால் இப்பொழுதுதான் என்புருஷனுக்குத் தகுந்தவரும்படி வந்து கொண்டிருக்கிறது. ஆகையால், நீங்களும் ஒருபாகம் கொடுக்கத்தான் வேணுமென்று கேட்க எனக்குத்தைரியம் உண்டாயிருக்கிறது" என்றாள்.

அலங்காரவிநோதி—"ஆ! ஆ! சத்தியவதி, நீ எவ்வளவு தர்மசாலியா யிருக்கிறாய். எனக்கும் உன்னைப்போல தர்மம் செய்ய ஐசுவரிய மிருக்கக்கூடாதா? எனக்கு எப்பொழுதும் ஏதாவது வேலையிருந்து கொண்டே யிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் ஏதேனும் செலவு இருந்து கொண்டேயிருக்கிறது. பொதுவாய்ப்பணக்காரர்களுக்குத்தான் பெரியசெலவுகளிருக்கின்றன. ஆகையால், அவர்களைப் பணக்காரர்களென்றுசொல்லுவதே தப்பிதம்"—என்று தன்னுடைய நேர்த்தியான பட்டுப்பையை யெடுத்து மோதிரங்களணிந்த விரல்களில்தொங்கவிட்டுக்கொண்டு பின்னும் சொல்லுகிறாள்:— "என்னிடத்தில் ஒருபைசா கூட இல்லை. இதோ பார், பையில் ஒன்றுமில்லையே. ஆனால் உன்னுடையஏற்பாடு வெகு நல்ல தர்மந்தான். ஆகையால், தயவுசெய்து நீ எவ்வளவு அத்தருமத்துக்குக் கொடுக்கப் போகிறாயோ அத்தொகையை எனக்காக நீ கடனாகப்போட்டுக்கொண்டால், பிறகு அதை நான் திருப்பிக்கொடுத்து விடுகிறேன்"— என்றாள்.

சத்தியவதி வெகு சந்தோஷத்துடனே சம்மதித்து செலவு பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குத்திரும்பி விட்டாள்.

(இன்னும் வரும்.)

க. ஐயராமையர், பி. ஏ.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

என் சின்னஞ்சிறு நேசர்களே, இந்தவிசை நமது சபைக்கு புதிய தோழர் ஒருவர் வந்திருக்கிறார். சிறுவர்க்கான இந்த பாகத்தை சிறுவர்களைக்கொண்டே நடத்தவேண்டுமென்று மாயாண்டி முன்னொரு சஞ்சிகையில் எழுதியது ஞாபகமிருக்குமே. அப்படி நானெழுதியதற்குக் காரணம் வயதுவந்த பெரியவர்கள் நமது கருத்துகளை யறிந்து நம்மோடு அநுதாபங்காட்டிச் சல்லாபிக்கார்களென்று சொன்னேன். அப்பொழுது ஒருவகையாரை மறந்துவிட்டேன். "50-சென்றால் அரைக்குழந்தை" யென்று ஒரு வசனம் சொல்வதுண்டு. என்னுடைய பாட்டனார் அவர் வேலையை யெல்லாம் விட்டுவிட்டு என்னோடும் என் தங்கையோடும் விளையாடுவதில் அதிகக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும்பொழுது வீட்டுவேலை வெளியில் போயாகவேண்டியது ஏதாவதிருந்தால் என் பாட்டியார் வந்து, "குழந்தைகளோடு குழந்தையாக நன்றாய் விளையாடிக்கொண் டிருந்தீர்கள்! கடைக்குப்போக வேண்டுமென்று நேற்றே சொன்னேனே. இன்றைப் பொழுதையும் இப்படி கழித்துவிட்டால் எப்போ கடைக்குப் போகிறது?" என்று மூஞ்சியைச் சிணுக்கிக்கொண்டு கோபித்துக் கொள்வள். அப்பொழுது என் தாயார், "ஐம்பது சென்றால் அரைக்குழந்தை என்பார்கள். அவருக்கு 70-ஆய்விட்டது. அவர் இனிமேல் குழந்தையில்லாமலென்ன ? அவர் சந்தோஷமாக விருக்கிறதைக் கெடுக்காதே. கடைக்குப்போக அவரை விட்டால் வேறுயாரு மில்லையா என்ன? கடு கடு என்று அவரிடத்தில்போய் மூஞ்சியைச்சிணுக்காதே. சும்மா இரு." என்று அவள் தாயாருக்கு சமாதானம் சொல்வதுண்டு. அது எனக்கு இப்பவும் நன்றாக ஞாபகத்தி லிருக்கிறது. என்தாயார் சொன்னது போல் கிழவர்களெல்லாம் குழவிகள் தான் என்பதற்கு இப்பவும் ஒரு உதாரணம் காண்பீர்கள் பாருங்கள். நமது சபைக்கு இப்போ புதிதாய் வந்திருக்கிறதாகச் சொன்ன தோழர் யாரென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் யாராவது ஊகித்தறிந்து கொண்டால் கீழே வாசித்துப் பார்க்காமல் சொல்லுங்கள் பார்ப்போம்.—ஆம், சரி! அவர் ஒரு 'தாத்தா' தான். எத்தனை வயசான தாத்தாவோ அது எனக்குத் தெரியாது. அவரே 'கிழவன்' என்று தான் கையெழுத்துச்செய்திருக்கிறார். கிழவனைத் தாத்தா என்று கூப்பிட நமக்கு சந்தேகமென்ன? முதலில் இவர் சிறுவர்க்கான பக்கத்துக்கு எழுதினது என் கைக்கு வந்ததும் வயது சென்றவர் சிறுவர்சபையில் சேர்ந்து அவர்களோடு உறவாடி உல்லாசமாக விருப்பரோ என்று யோசித்தேன், ஆனால் இவர் எழுதியதையும், கீழே கிழவன் என்று கையெழுத்துப் போட்டிருந்ததையும் பார்த்தவுடன் இவர் நமது சபைக்கு ஏற்றவர்தானென்று கண்டேன். உடனே என் பாட்டனார் எங்களோடு விளையாடிக் கொண்டிருந்ததும் என் தாயார் கிழவர்களெல்லாம் குழவிகள்தானென்று சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. என் தாயார் சொன்ன நியாயத்தைக்கொண்டு இவரையும் ஒரு குழவியென்று ரூபித்துவிட்டு இவரை நமதுகூட்டத்தார்க்குப் பரிச்சயம் செய்துவிடக் கொண்டுவந்திருக்கிறேன். அவரும் ஒரு குழவியென்று ரூபித்துவிட்டேனே யென்று அவரைப் பந்தடிக்கக் கூப்பிடாதேயுங்கள். அவர் வயதுசென்ற குழவியாதலால் ஒருக்கால் அதற்கு சம்மதிக்காமல் போய்விடுவார். முதலில் அவர் சொல்வதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். பழகப் பழகப்பார்த்துக் கொள்ளலாம். இந்தவிசை நமது குட்டியண்ணனும் நம்சபைக்கு வந்திருக்கிறார். அவர் எடுத்ததற்கெல்லாம் ஒருகதை சொல்கிறார். இப்படியே ஒவ்வொரு தடவையும் அவர் கதை சொல்லிவந்தால் அவருக்கு நாமெல்லாம் சேர்ந்து புராணிகர் என்றொரு பட்டப்பேர் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். ஆனால் இதைப் பற்றி நீங்களே யோசியுங்கள். என்கடையை நான் இந்தமட்டோடு கட்டிவிடுகிறேன். நீங்களெல்லாரும் நமது தாத்தா சொல்வதைக் கேளுங்கள். பெரியவர் இத்தனை நேரமாக என் அதிகப்பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டு காத்திருந்தார். இன்னமும் அவரைக் காக்கவைப்பது சரியல்ல.

இங்ஙனம், உங்கள்
விளையாட்டுத்தோழன்,
மாயாண்டி.

பிள்ளைகளே ! பெண்மணிகளே !

உங்களைக்கண்டால் எனக்கு அதிக ஆசையாக இருக்கிறது. ஏன் என்றுகேட்டால் நீங்கள் கேட்கிறகேள்விகளுக்கு நான் ஏதாகிலும்பதில் சொன்னால், நீங்கள் கபடநாடகம் சூதுவாது அறியாதஇளந்தைகள் ஆனபடியால், நான்சொல்வதைச்சரிதான் என்று ஒத்துக்கொள்வீர்கள். மீசைமுளைத்த பெரிய குழந்தைகளிடத்தில்

நான் ஏதாகிலும் சொன்னால், அவர்கள் என் சொல்லைமதிக்கிறதேஇல்லை. ஒன்று வந்து இது என்ன அதிசயம், இது நன்னூலில் இல்லையோ என்னும். இன்னொன்று வந்து இதை நான் அறியேனோநான்ஐந்தாம்பாடத்தில்படித்திருக்கிறேனே என்னும். மற்றொருகுழந்தை ஓகோ நான் இதை இருபது வருஷத்திற்கு முன்னமே கேள்விப்பட்டு இருக்கிறேன் என்னும். வேறொரு குழந்தை எல்லாம் குறளில் இருக்கிறது, நீர் என்ன புதுமை செய்கிறீர் என்னும். இதையெல்லாம் கேட்டால் எனக்கு இரண்டும்பற்றி எரிகிறது. ஒருசமயம் இரண்டும் சிரிக்கிறதும் உண்டு. ஆகையால் இந்த மீசைமுளைத்த குழவிகளை நெருங்கி அவர்களுடன் சிநேகம்பண்ண எனக்கு இஷ்டம்இல்லை. மீசை முளைக்காத சின்னஞ்சிறுவர்களான உங்களோடுகூட எங்கேவேணுமானாலும் வருவேன். உங்களுக்கு காணாத புதுமை பல காட்டுவேன். ஒவ்வொரு சமயம் வீண் ஆரவாரங்கூட விளைவிப்பேன். ஆனால் இதை யெல்லாம் விளையாடும் வித்தை என்றே நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். அது இருக்கட்டும். இப்படி வாருங்கள். இந்த அரசமரநிழலில் உட்காருங்கள். நான் இந்த கருங்கல் பாறையின்மேல் உட்காருகிறேன். நான் சொல்வதை உற்றுக்கேளுங்கள்.

I

நான் பத்துப் பிராயத்தில் என்னுடையதகப்பனார் இடத்தில் காலையில் இரண்டுமணி நேரம் பாடம்கேட்பதுவழக்கம். அவர் எனக்குச்சுளுவான கதை புஸ்தகம் ஏதாகிலும் வாங்கிவந்து கொடுத்து அதை படிக்கச்சொல்லி கேட்பார். எனக்கு இஷ்டமான வடை தோசை முதலிய பலகாரங்களின் பெயர்களையும், ஓட்டின்மேல் வந்து கூவுகிற காகம் குருவி முதலானவைகளின் பெயர்களையும் பலகையில் எழுதச்சொல்வார். கணக்குப்போடவேண்டுமானால் அவர் என்னை விரல்விட்டுக் கூட்டும்படி அடித்ததே இல்லை, மாட்டுக்குக்கால் எத்தனை எண்ணிக் கொண்டுவா என்பார். திண்ணையில் எத்தனை தூண்கள் என்று கேட்பார். வீட்டுக்கு எதிரில் எத்தனை பனைமரம் இருக்கிறது என்பார். கையில் தம்படி காலணா அரையணா அரைக்கால் ரூபாய் கால்ரூபாய் அரைரூபாய்களை வைத்துக் கொண்டு என்னிடத்தில் கொஞ்சம் கொடுத்து சில்லரை மாற்றிக்கொள்வார். என்கையில் சில்லரைகொடுத்து ரூபாய்கொடுஎன்று கேட்பார். அப்பொழுது எனக்கு மெத்த சந்தோஷமும் சிரிப்புமாக இருக்கும். நானும் என்னைப் பாங்கிரயிட்டராக நினைத்துக் கொள்வேன். வீட்டில் அரிசிவாங்கிவந்தால் அதில் ஒரு பிட்டுக்கூடை அரிசியைப்படிபோட்டு அளக்கசொல்வார். ஒரு அடி மட்டப்பலகையை என்கையில்கொடுத்து எங்கள் தெருக்குரட்டை அளந்து பார்க்கச் சொல்லுவார்கள். அப்புறம் நான் எங்களுடைய வீடுவாசல் எல்லாவற்றையும் திருப்பித்திருப்பி அளந்துபார்த்து பலகையில் எழுதி சாயந்திரம் அவருக்குக் காட்டி விடுவேன். ஒரு தராசு வாங்கிக்கொடுத்தார். அதைவைத்துக்கொண்டு நானும் என் தங்கையும் தெருத்திண்ணையில் கடைவைத்துக்கொண்டு வீசையும் பலமுமாக மணலையும் கல்லையும் புளி முளகாயாக நிறுத்து நிறுத்து விற்பதும் வாங்குவதுமாக விளையாடுவோம். இப்படி யிருக்கையில், எங்கள் தகப்பனார் சம்பளம்வந்தஉடனே வீட்டுக்குச்சாமான் வாங்கிவந்தால், நானும் என் தங்கையும் அதுகளை நிறுத்துப்பார்த்து கடைக்காரன் நிறுத்தது சரிதானா என்று எங்கள் தகப்பனார் கையில் வைத்திருக்கும் சீட்டோடு ஒத்திட்டுப் பார்ப்போம். எங்கள் அண்ணா அச்சடித்த சட்டம் வாங்கி வந்து கொடுத்தார். [இந்தக்காலத்துப் பிள்ளைகளுக்குச் சட்டமென்றால் தெரியாது. இங்கிலீஷ் படிப்பு படிக்கிறோமென்று இங்கிலீஷையும் தமிழையும் ஒன்றாய்க் கொட்டியளக்கிறார்கள். இவர்களுக்கு 'காபி' என்றால் தெரியும்.—மாயாண்டி.] நான் அந்தச் சட்டத்தில் மேல் வரியைப்பார்த்து நன்றாய் மொச்சைக் கொட்டையைப் போல் எழுதுவேன். ஒரு நாள் எங்கள் வீட்டு வண்ணான் பதினொரு மணிக்கு வந்தான். அப்போது எங்கள் அப்பா வெளியில் போய் விட்டார். அம்மா அவர்கள் சமையல் செய்த இளைப்பினால் படுத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் கணக்கப்பிள்ளை சாப்பிடப்போயிருந்தான். மேசை அறையில் இருந்த வண்ணான் கணக்கை எடுத்து, நான் வலதுகையில் வைத்துக்கொண்டு இடது கையை இடுப்பின் மேல் வைத்து கிமிர்

ந்து கொண்டு, காதின் மேல் பென்சிலை வைத்துக் கொண்டு நிலைக்கண்ணாடியில் மூடுக்காக இருக்கிறேனா என்றுபார்த்துக்கொண்டு, பின்பு வண்ணான் எதிரில் போய் வரி வரியாய் படித்தேன். வண்ணானும் அடுக்கு அடுக்காய் சலவைத் துணிகளை அடுக்கி வந்தான். எல்லாம் எண்ணிப்பார்க்கும்போது கணக்குசரியாக இருக்கவே துணிகளை மூட்டையாகக் கட்டி வைத்தான். நானும் என் தங்கையுமாக மூட்டையைக்கட்டிலின் மேல் வைத்து விட்டோம். அழுக்குத்துணிகளைப்பொறுக்கி வந்து நடையில் போட்டு என் தங்கையை எழுதச் சொல்லி விட்டு நான் தலையணை உறைகளை கழற்றப் போனேன். எல்லாங் கழற்றியானவுடனே என் தாயார்தலையின் கீழிருந்த அணையை இழுத்து வேறு அணையை வைத்தேன். அவர்கள் உடனே விழித்துக் கொண்டு என்னடா என்றார்கள். வண்ணானுக்கு நானும் தங்கையுமாக அழுக்குப்போடுகிறோம் என்று சொன்னேன். அவர்களும் எங்கள் பக்கமாய்த்திரும்பிப் படுத்துக்கொண்டு கண்ணை மூடுவதும் திறப்பதுமாய் இருந்தார்கள். நாங்கள் எல்லாம் போட்டுக் கணக்கும் எழுதி விட்டோம். அப்புறம் என் தாயார்எழுந்துவந்து எல்லாம் பார்த்துக் கணக்குக்சரியாய் இருக்கிறதை அறிந்து எனக்கு ஒரு முத்தமும் என் தங்கைக்கு ஒரு முத்தமும் கொடுத்தார்கள். நாங்கள் சொக்காயிலிருந்த பொன் வெள்ளி பொத்தான்களை ஏதாகிலும் விட்டு விட்டோமோ என்று அப்புறம் நினைத்துக்கொண்டோம். அப்போது என் தாயார் உங்கள் அப்பா வெளியே போகும்போது அவைகளைக் சொக்காய்களில் மாட்டிக்கொண்டு போய்விட்டாரே என்றுசொல்லவே எங்களுக்குத்தைரியம் உண்டாயிற்று. சொக்காய் பைகளில் இருந்த கடிதங்களை எடுத்து முன்னமே ஒரு பீரவின் முகப்பில் பலகையின் மீது வைத்து விட்டோம். அப்புறம் எங்களுக்குக்கைச்செலவுக்குகொடுக்கிறபணத்தைப் பற்றி நாங்களே ஒரு சிறிய புஸ்தகந் தைத்து அதில் வரவு செலவு எழுதி வந்தோம். இப்படியாக ஓ பிள்ளைகளே பெண்மணிகளே நாங்கள் பள்ளிக்கூடத்தில் உதை படாமல் எங்கள் வீட்டில் தானே தாட்டியாகப்படிக்கவும் எழுதவும் கணக்குப் பார்க்கவும் கற்றுக் கொண்டோம். எங்கள் அப்பாவுடைய நகைப்பே எங்களுக்கு வெகுமானம். அவருடைய கோபமே எங்களுக்கு தண்டனை. அவருடைய ஆசையே எங்களுக்குப் பேராசை, அவரை பூசிப்பதே எங்களுக்கு குருபூசை, நாங்கள்சிறியவர்களாய் எங்கள் தாயாரிடத்தில் எழுத்து முதலானது கற்றுக் கொள்ளும்போது எங்கள் தகப்பனார் குறுக்கிடுவதில்லை. எங்கள் தகப்பனாரிடத்தில் பெரியபாடங்களைப் படிக்கும்போது எங்கள் தாயாரும் குறுக்கிடுகிறதில்லை, எங்கள் தாயார் பொழுது விடிந்த உடனே எங்களை பல் விளக்கச் சொல்லித் தின்பதற்கு ஏதாகிலும் கொடுப்பார்கள். ஒன்றும் இல்லா விட்டால் சீக்கிரத்தில் சமையல் செய்து சோறு போடுகிறேன் என்பார்கள். தினம் காலையில் சாப்பிடுமுன் எங்களுக்கு நீராட்டி தோய்த்த வஸ்திரத்தை கொடுப்பார்கள், நாங்கள் பகல் வேளையில் எங்கள் தகப்பனார் மேசையின் மேல் வைத்திருக்கிற சித்திரம் பொம்மை முதலான படங்கள் உள்ள பத்திரிகைகளைப் பார்த்து அதை இன்னின்னதென்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டும் அவைகளைப் போல் எழுதிக் கொண்டும் பொழுது போக்குவோம். இதிருக்கட்டும். நாளைக்கு உங்களுக்கு வேறே சங்கதிகள் சொல்லப்போகிறேன், போய் விளையாடுங்கள்.

கிழவன்.

தட்டியண்ணா கடிதம்.

என் அன்புள்ள சிறு நண்பர்களே !

போனமாதம் நம்முடைய தோழிகளுக்கு "ஸ்த்ரீபுத்திஃப்ரளயாந்தகஃ" என்பதைப் பற்றி நான் சொல்லிய கதையை நீங்கள் அறிந்திருக்கலாமே. இந்தத்தடவை உங்களுக்கு ஒரு விநோதமான கதை கொண்டுவந்திருக்கிறேன். அதைக்கேட்கும்போது சிரிக்கச்சிரிக்க வேடிக்கையைச் செய்யத்தக்கதாயும் விவேகத்தைத் தரத் தக்கதாயும் இருக்கும். இது நான் போய்க்கொண்டிருக்கும் பாடசாலையில் பிடித்த சாக்கு. அப்பாடசாலையில் படிக்கும் சிறுவர்களில் ஒருவனுக்கு அப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களில் ஒருவர் வீட்டுப் பாடம் சொல்லி வந்தார். (வீட்டுப்பாடம் = private tution)

அவ்வாலிபன் இச்சென்னப்பட்டணத்தில் உயர்ந்த உத்யோகம்செய்து மிகுந்த செல்வாக்குப் படைத்த கனவானான ஒரு தனவானுடைய புத்திரன். அப்பையன் அவன் பெற்றோருக்கு ஏகபுத்திரன். பையன் பிறந்த சில தினங்களில் தகப்பன் இறந்துபோகவே பிள்ளையைக் காப்பாற்றவேண்டிய பாரமெல்லாம் தாயின் தலையில் பொறுத்தது. அந்த அம்மணியோ, மகாபதிவிரதா சிரோமணி. உயிர்களிடத்து அன்பும் ஆதரவும் உடையவள். தர்மகுணசீலை. சாதுக்களை ஆதரிப்பவள். கல்வியருமையும் கற்றோர் பெருமையும் நன்றாய்அறிந்தவள். தன்பிள்ளை கைம்பெண் வளர்த்த கசடன் என்று பேரெடாமல் எப்படியாவது தன் பர்த்தாவின்பேரை முன்னுக்குக் கொண்டுவந்து, நாலுபேருக்கு யோக்கியனென்று பேரெடுத்து நல்ல ஸ்திதியில் இருக்கவேண்டுமென்று எண்ணி, தன் மகனுக்கு வீட்டில் படிப்புச்சொல்ல ஏற்பாடு செய்தாள். அவரோ பொருளையே பொருளாக எண்ணுபவர் அல்லர். பிள்ளைகளே பெருஞ் செல்வமாகவும் அவர்களோடு பொழுது போக்குவதே உல்லாஸமாகவும் எண்ணுகிறவர். மேற்படி பையனுக்கு அவர் பாடம் சொல்லி வராநிற்க, பையனுக்கும் வாத்தியாருக்கும் ஒருவர்க்கொருவர் மிக்க நேசமுண்டாகி, காலம் இன்பமாய்க்கழிந்தது. இப்படி இருக்கையில் அப்பையன் படித்த பள்ளிக்கூடத்தில் வெளியூரான் ஒருவன் படிக்கவந்துசேர்ந்தான். அவனுடைய குணமும் நடத்தையும் கெடுதல் என்று, அப்பள்ளிக்கூடத்தில் இருப்பவராதலால் அந்த வாத்தியாருக்கு நன்றாய்த்தெரியும் அப்புதியவாலிபன் நான் மேலேசொன்ன சிறுவன் பணக்காரனென்றும் தயாள குணமுள்ளவனென்றும் எளிதில் மோசம்போகக்கூடியவனென்றும் எப்படியோ தெரிந்துகொண்டு மெள்ள இவனோடு சிநேகம் செய்யத் தலைப்பட்டு இவன் வீட்டுக்கு வருவதும் போவதுமாய் இருந்தான். அவன் நம்முடைய சிறுவனோடு இரகசியத்தில் பேசுவதையும் பிறர்க்குத் தெரியாமல் இவனோடுகலந்து உறவாடுவதையும் வாத்தியார் பலதடவைகளில் பார்த்து அவனை வீட்டில் சேர்த்தால் ஏதாவது நஷ்டமும் கஷ்டமும் நேருமென்று ஜாடையாய்ச்சொல்லியும் பையன் கேளாமல் அவனோடு அதிகமாய்ப் பழகியே வந்தான்.

நம்முடைய சிறுவன் எல்லார்க்கும் எளிதில் அடையக் கூடியவன். எடுத்தார் கைப்பிள்ளை. விளையாட்டுக் காட்டுவோருடைய நயவஞ்சனை பேச்சில் எளிதில் மடங்கும் இயல்புள்ளவன். எந்த நற்காரியத்தையும் தானாயும் அறிந்து கொள்ளான்; பிறர்சொன்னாலும் தெரிந்துகொள்ளான். ஒன்றுசொன்னால் மற்றொன்று செய்வான். இப்படிச்செய்வது அவனுடைய இயற்கையான அறியாமையினாலேயே யொழிய வேறில்லை.

ஒருநாள் மேற்சொன்ன அயலூர் வாலிபன் ஒருவரும் இல்லாத சமயம்பார்த்து நமது சிறுவனது அறைக்குள்புகுந்து இரண்டொரு புஸ்தகங்களையும் சில விலையுயர்ந்த பொத்தான்களையும் ஒரு கடிகாயந்திரத்தையும் திருடிக் கொண்டு போய்விட்டான். இது சங்கதிதெரிந்து பையன் வருத்தப்படும்போது வாத்தியார் பையனை நோக்கி "உனக்காயும் தெரியாது, ஒருவர்சொன்னாலும் கேளாய், நான் ஒன்று சொன்னால் நீ யொன்று செய்கிறாய்" என்று சொல்லி,

"ஸ்வயபுத்தி யில்லாவிட்டாலும் சொற்புத்தி
யாவதுவேண்டும்"

என்பதைப்பற்றி ஒரு கதையைச்சொன்னார். அதாவது:—ஒரு ஊரில் ஒருபிராமணன் இருந்தான். அவனுக்கு ஓரேபிள்ளை. அவன் மகாமூடன். எழுதப்படிக்கத்தெரியாதவன். அவன் முழுமூடனாயிருந்ததுமன்றி ஏழையுமாயிருந்தான். இப்படிப்பட்ட தன்மகனுக்கு எப்படியாவது கலியாணம் செய்துவிட வேண்டுமென்று அந்தபிராமணன் எண்ணிப் பெண்தேடலுற்றனன். இப்படியிருக்கையில், மற்றோரூரில் ஒரு அந்தணன் மிகுந்தபணக்காரனாகவும் ஒரே பெண்ணை உடையவனாகவும் இருந்தான், அப்பெண்ணோ அதிரூபலாவண்ய சௌந்தரியமும், நிறைந்தகல்வியும், நற்குண நற்செய்கைகளும் பொருந்தி மகா புத்திசாலியாயிருந்தாள். பெண்ணுக்குத் தகுந்த புருஷனை மணம் செய்விக்கவேண்டுமே என்று பெண்ணைப்பெற்றவன் யோசித்து முப்பத்திரண்டு குணமும் எவ

னுக்கு இருக்கிறதோ அவனுக்கே தன்பெண்ணை மணம்செய்து கொடுப்பதாய்த் தீர்மானித்திருந்தான். இது சங்கதி கேள்விப்பட்டு மூடப்பிள்ளைக்குப் பெண் தேடும் பிராமணன் வந்து புத்திரனுக்கு முப்பது குணங்களிருக்கின்றமையால் அந்தப்பெண்ணை விவாகம் செய்து கொடுக்கும்படி பெண்ணுக்குத் தகப்பனைக்கேட்க, அவனும்யோசித்து, நாம் அநேகம்பிள்ளைகளைப்பார்த்தோம். எவனுக்கும்இவ்வளவுகுணங்கள் இருக்கக்கண்டதில்லை. இவனுக்கு இரண்டுகுணங்கள் தானே இல்லை. பாதகமில்லை. என்று கலியாணத்தை நிச்சயித்து வேண்டிய ஆடம்பரங்களோடும் நடத்தத் தொடங்கினன். கலியாணத்தை நடத்துவிக்கும் புரோகிதர், பொரியிடுந்தருணத்தில் பிள்ளையாண்டானை நோக்கி பொரியை ஆகுதி செய்யச் சொல்ல, அவன்தன் வாயில்போட்டுக்கொண்டான். புரோகிதர், அடா! அடா! அக்கியிலல்லவோ இடச்சொன்னேன், வாயில் போட்டுக்கொண்டாயே என்னவே, மணமகன் உடனே வாயிலிருந்த பொரியை அக்கிகுண்டத்தில் உமிழ்ந்தான். இதைக்கண்டு புரோகிதர் இது என்னடா! அக்கியை எச்சிலாக்கி விட்டாயே" என்ன, மணப்பிள்ளை, அக்கியைச்சுத்தி செய்து விடுகிறேனென்று பக்கத்திலிருந்த ஒரு செப்பு ஜலத்தை அக்கியில் கொட்டிவிட்டான். புரோகிதர், வெகு அழகு! நான் கல்யாணம் செய்விக்கிறது வெகு நன்றாயிருக்கிறதென்று தம்மையேவெறுத்துக்கொண்டு, போதும்அப்பா நீ சும்மா உட்கார் என்றார். அதற்கு முழு மூட மணப்பிள்ளை, கழனியில் களைபிடுங்கியும் நாற்று நட்டும் வழக்கப்பட்டவனாதலால், ஒரு காலை மண்டியிட்டு மற்றொரு காலை குத்திட்டு, தர்ப்பணம் செய்கிறவனைப் போல் உட்கார்ந்தான். இதைக்கண்டவுடன் புரோகிதருக்கு அடங்காக்கோபம் உண்டாகி, "என்னடா ஒன்று சொன்னால் ஒன்று செய்கிறாய்" என்று கடிந்து சொல்லவே, நம்முடைய மந்த புத்திமணப்பிள்ளை, ஐயா, இனி நான் ஒன்றும் செய்கிற தில்லை; செத்தபிணம் போல விழுந்து கிடக்கிறேனென்று சொன்னான். உடனே, கீழே தன்மணப்பிள்ளை செய்கைகளையும், இப்பொழுது கல்யாணப் பந்தலில் செத்தபிணம்போல்விழுந்துகிடக்கிறேன் என்ற அமங்கலவார்த்தையையும்கேட்டு பெண்ணைக்கொடுத்த பிரபு சம்பந்திப்பிராம்மணனைப் பார்த்து ஆரூச்சினத்தனாய் அடபாவி! உன் பிள்ளைக்கு முப்பது குணங்களிருக்கின்றனவென்று சொன்னையே அந்த பவிஷு இதுதானா என்று கேட்கவே, பிராமணன், "ஐயா, நான் முன்னையேஇரண்டுகுணங்களில்லையென்றேனே அதாவது தானுமறியான், ஒருவர் சொன்னாலுங் கேளான். இதுவே தவிர மற்றப்படி உண்பது உடுப்பது உறங்குவது முதலிய காரியங்களில் சமர்த்தன்தான். வேண்டுமானால் பரீக்ஷை செய்து பார்த்துக்கொள்ளலாம்" என்றான்.

கேட்டீர்களோ என் அருமைச் சிறுதோழர்களே! ஆகையால் நீங்கள் ஒவ்வொரு காரியத்தையும் கூர்மையாக ஆராய்ந்து பார்த்துச்செய்யமுயலுவது மல்லாமல் அறிவுடையபெரியோர் சொல்லுவதையுங்கேட்டு அதன்படிசெய்யப்பாருங்கள். நல்லது நான்இந்தமுறை உங்களிடத்து அதிக அவசரத்தில் வந்தேன்; இப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தில்பரீக்ஷைகள் சமீபித்தபடியால் அதிகவேலைகள் எனக்கு இருக்கின்றன. போய்வருகிறேன்.

இப்படிக்கு
உங்களன்புள்ள
குட்டியண்ணா.

அங்கிலேய நாட்டுக்கவி சக்கிரவர்த்தியுமிராஜ கவிவாணருமாயிருந்த லார்ட்டென்னிஸன் நாளது அக்டோபர்மீ 6வ அவருடைய 83-வது வயதில் காலஞ்சென்றார்.

கனம்பொருந்திய கவர்னர் லார்ட் வென்லாக் அவர்கள் அக்டோபர்மீ 10வ முதல் வெளிஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார்.

கனம்பொருந்திய இராஜப்பிரதிநிதி லார்ட்லான்ஸ்டௌன் அவர்கள் ஐதிராபாத், மைசூர் இராஜ்ஜியங்களை விஜயம்செய்துவிட்டு நவம்பர்மீ 24வ காலமே 8-மணிக்குச்சென்னை வந்து சேருவார். சென்னையில் 4-5-தின மிருந்துவிட்டு நேரே கல்கத்தாவுக்குப் போவார். நவம்பர்மீ 26வ பச்சையப்பமுதலியார் பாடசாலைகளின் 50-வதுவருஷபூர்த்திமஹோற்சவங் கொண்டாடக் கூடும் சபையில் இராஜப்பிரதிநிதியவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கச் சம்மதித்திருக்கிறார்.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - APR. 93
MADRAS.

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892ஆம் நவம்பர்மீ. இலக்கம். 7.

நடுவேனிற்கனவு.

இரண்டாம் அங்கம்.

1-வது இடம். ஆதேன்ஸ் அருகிலுள்ள காடு.

[எதிரெதிரே ஒரு புறத்திலிருந்து கந்தருவப்பெண்ணும் ஒருபுறத்திலிருந்து பக் என்னும் விகடக்குட்டிப்பேயும் வருதல்.]

பக்.— ஏ, மாயாரூபியே எங்கேசுற்றித்திரிகின்றாய்?

கந்தர்வப்பெண்.—குன்றிலும், பள்ளத்திலும், முள்ளிலும், செடியிலும், சிங்காரவனத்திலும், முற்றத்துவெளியிலும், நீரிலும், நெருப்பிலும், எங்குந்திரிந்து சந்திரனிலும் வேகமாய்ச் சுழன்று வருகிறேன்; என் கந்தர்வ அரசிக்குப் பணிசெய்து அவள் வட்டமாய் நடனமிடும், பசும்புல் நிலத்தைப் பனியால் நனைத்துவருகிறேன். இப்பொழுது நான் பனிநீர்த்துளிகளைத்தேடி, அவற்றைப்புஷ்ப இதழ்களின் நுனியில் நன்முத்துக்குழையென ஊசலாடச் செய்யப் போகவேண்டும். நான் போய் வருவேன், ஜடப்பேயே; நம்மரசி தன்பரிவாரங்களுடன் இங்கு விரைவில் வரப்போகிறாள்.

பக்.—நம்மரசர் இங்கு இன்றிரவில் தம் களிக்கூத்தாட வருகிறார். அரசி அவர் கண்ணிற்படாம லிருந்தால நலமா யிருக்கும்; ஓபரான்* அவள்மேற் கோப மூண்டிருக்கிறார். இந்துதேசத் தரசனிடத்திலிருந்து யாருமறியாமற் கொண்டுவரப்பட்டு இப்பொழுது அவளுடையபணிவிடையிலிருக்கும்அழகுள்ள சிறுவனை நமது அரசன் தன் பரிவாரத்துள் ஒருவனாகச்செய்து கொள்ளக்கேட்க, அவள் கொடுக்கவில்லை. ஆதலின், இப்பொழுது அவர்கள் சந்தித்தால் அவர்களுக்குள் சண்டையுண்டாகும்.

கந்தர்வப்பெண்.—உன்னுடையாளம் எனக்குச் செவ்வையாய்த்தெரியவில்லை. 'நற்றோழன் ராபின்' என்று சொல்லப்பட்ட புரளித்தனமுள்ளகுள்ளப்பேய் நீதானோ? கிராமத்துப்பெண்களைப் பயமுறுத்துவதும், அவர் கடையும் தயிரினின்றும் ஆடையை விழுங்குவதும், இராவழிச்செல்வோரை வழிதப்பச்செய்து அவர் படும் சங்கடத்தைக்கண்டு நகைப்பதும் உன்னுடைய தொழிலன்றோ?

பக்.—நீ சொல்வது மெய்யே; இரவில் அப்படி உற்சாகமாய்த் திரிபவன் நானே. ஓபரானிடத்து ஹாஸ்யகாரன் போலிருந்துவருகிறேன். சிலவேளை பெண் குதிரைபோற் கனைப்பேன்; அப்பொழுது கொள்ளுத்தின்று கொழுத்திருக்கும் அவருடையகுதிரை அக்குரலைக்கேட்டு மயங்கி நாற்புறத்தும் பார்க்கும், அவர்கண்டு மனங்கொள்ளாது நகைப்பார். ஊர்களில், சிலவேளை பிராயஞ்சென்ற கிழவிமார் மிக இரசமாய்க்கதை சொல்லிக் கொண்டிருக்கையில், என்னை முக்காலி யென்றெண்ணி அதிலிருக்கத்தொடங்குவார்; உடனே அம்மம்ம வென்று அலறித் திடீரென்று விழுந்து இருமுவார்; அப்பொழுது அங்கிருப்பவர் சிரித்துச்சிரித்துவயிறு புண்ணாவர். கந்தர்வப்பெண்ணே, அப்பால் போ; ஓபரான் இங்கு வருகிறார்.

* கந்தர்வ அரசன்; கந்தர்வ அரசியின் பெயர் 'டிடேனியா'. சென்ற சஞ்சிகையில் 'பாத்திர விளக்கம்' பார்க்க.

கந்தர்வப்பெண்.—என தலைவியும் இங்குவருகிறாள்; ஐயோ! அவள், அரசன் கண்ணிற்படாதிருக்கவேண்டுமே.

[ஒரு புறத்தினின்று ஓபரான் தன் பரிவாரத்தோடும், மற்றைப்புறத்தினின்று டிடேனியா தன் பரிவாரத்தோடும்-வருதல்.]

ஓபரான்.—செருக்குள்ள டிடேனியா, நம் இந்நிலவில் எதிர்ப்படல் நன்றன்று.

டிடேனியா.—ஆ! அதுயார்? பொறாமைநிறைந்த ஓபரானோ? கந்தர்வப்பெண்காள் இவ்விடம் விட்டுப் போவோம். இவன் கூட்டத்திலேயே இருப்பதில்லையென்று யான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன்.

ஓபரான்.—ஓ! நெறியற்றவளே, சற்றுநில். நான் உன் நாயகனன்றோ?

டிடேனியா.—அங்ஙனமாயின், யான் உன் நாயகியாயிருக்க வேண்டுமே. நீ, கந்தர்வலோகத்தைவிட்டு திருட்டுத்தனமாய்க் 'காரின்' என்ற இடையன் வடிவெடுத்து, மகா காமுகியாகிய 'பில்லிடா' என்னும் இடைச்சியைத் தொடர்ந்து, அவளுக்கு வைக்கோற் புல்லாங்குழலால், பகல் முழுவதும் இனிய கீதம் வாசித்துக்கொண்டிருந்ததை யானறியேனோ? நெடுந்தூரத்துள்ள இந்து தேசத்திலிருந்து இங்கெங்குவந்தாய்? உன் காதலியாகிய 'ஹிப்பாலிடா' என்னும்வன்போர்வீரத்தலைவி 'தீஸியுஸ்ஸோடு' மணம்புரிவதைக் கண்டு களிக்க வந்தாயோ?

ஓபரான்.—வெட்கமில்லையோ, டிடேனியா? உனக்குத் 'தீஸியுஸ்ஸின்' மேலுள்ளகாதலை யான் அறியாதவனென்றெண்ணி 'ஹிப்பாலிடாவுக்கு' என்னிடத்திலுள்ள மதிப்பைப் பற்றி இவ்வாறு பேசுவது என்ன துணிவு!

டிடேனியா.—பொறாமையாற் பொய்க் குற்றமேற்றுகிறாய். சென்ற வஸந்தகாலம்முதல் நாம் சந்திக்குமிடமெல்லாம் என்னோடு கலகஞ் செய்து வருகிறாய்; நமது பாட்டு ஆட்டங்களில் சந்தோஷத்தைக் குறைத்து விரஸமுண்டாக்குகிறாய். இப்போராட்டத்தினால், காற்று ஒலிப்பதற்குத் தக்கபடி நாம் வட்டமாய் ஆடிப்பாடுவது இப்பொழுது ஒழிந்தது. இதற்குப் பிரதி செய்யவேண்டி, அக்காற்று, கடலினின்றும் நஞ்சுள்ளபனிப்படலத்தையுண்டு தரையிற்பெய்ய, அங்குள்ள ஆறுகளெல்லாம் அகந்தை மிகுந்து கரைபுரண்டோடி, ஊரை வெள்ளக்காடாக்கின. அதனால், எருதுநுகத்தை இழுத்தது வீணாயிற்று; உழவர் உழைத்தது பலியாதுபோயிற்று; பசும்பயிர் கதிர்வாங்காது அழுகிற்று; வெள்ளத்தில் மூழ்கி இருக்கும் புலங்களிலுள்ள ஆடுமாடுகளின் பட்டிகளெல்லாம் வெறும் பட்டிகளாய் நிற்கின்றன; கோமாரியால் இறந்தவற்றின் பிணவிருந்துண்டு காக்கைகள் கொழுத்தன. பசும்புற்றரையில் இளைஞரின் விளையாட்டுக்கள் ஒழிந்தன; இப்பொழுது மானுஷ அதிதியர்களுக்குக் காலபேதமேயில்லாது எந்நாளும் மாரிக்காலம்போலாய்விட்டன. இரவில்பாட்டுக்கீதங்கள் ஒழிந்தன. இன்னும், நம் இப்பிணக்கின் நிமித்தம் கடலேற்ற இறக்கங்களுக்கு அதிகாரியாகிய சந்திரன், கோபத்தால் வெளுத்துச், சலதோஷம், இருமல் முதலிய நோயால் வாயுவை நனைத்து நிறைக்கின்றது. பருவங்கள் தாறுமாறாய் அவ்வவற்றின் இயற்கைகள் மாறிவருகின்றன. உலகத்தார் இன்னது இன்னபருவமென்று அறியாமல் திகைக்கிறார்கள். இத்தனை கெடுதிகளும் நம்முடைய பிணக்கால் விளைந்தன; அவற்றிற்குப் பிறப்பிடம் நாமே.

ஓபரான்.—இக்கெடுதிகளை மாற்ற எண்ணங் கொண்டிருப்பாயாயின் அதற்கு மருந்து உன்னிடத்திலேயே உள்ளது. டிடேனியா ஓபரானோடு ஏன் எதிர்த்து நிற்கிறாள்? நான் உன்னிடத்து வேண்டுவது 'குழந்தைக்குக் குழந்தையாக மாற்றிக்கொண்டு வரப்பட்டிருக்கிற சிறுவனை என் வசம் விட்டுவிடு' என்பதுதானே.

டிடேனியா.—அதைப்பற்றிய கவலையை ஒழித்துவிடு. இக்கந்தர்வ லோகத்தையே கொடுத்தாலும் அக்குழந்தையைக்கொடேன். என்னை ஆராதித்து வந்த அவன்தாய் அவனைப்பெற்று இறந்ததால், அவளுக்காக நான் அவனைவளர்த்து வருகிறேன்; அவள் பொருட்டேனும் யான் ஒருநாளும் அவனை விட்டுப் பிரியேன்.

ஓபரான்.—நீ, இன்னும் எதுவரையில் இக்காட்டிலிருப்பாய்?

டிடேனியா.—ஒருவேளை தீஸியுஸ்ஸின் கலியாணம் முடியும் வரையில். இந்நிலவில் என்னோடு ஆடிக்களிக்க விருப்பமிருக்குமாயின் என்னுடன் வரலாம்; அன்றேல் என்னை விலக்கிவிடு; நீ இருக்குமிடத்தை இனி ஒருபொழுதும் நண்ணேன்.

ஓபரான்.—அச்சிறுவனைக்கொடு, உன்னோடு வருவேன்.

டிடேனியா.—உன் கந்தர்வ இராஜ்யத்தைக் கொடுத்தாலுமில்லை. கந்தர்வப்பெண்காள், இவ்விடம்விட்டுப்போவோம். நானிங்கு இனி நொடிப்பொழு திருப்பினும் எங்களுக்குள் போருண்டாம். (டிடேனியா பரிவாரங்களோடு போதல்.)

ஓபரான்.—நல்லது, போ; இவ்விணங்காமைக்கு நீ இச்சோலையை விட்டுப்போகுமுன் உன்னைத் தண்டியாதிரேன். என் சாதுப் பக்கே, இங்குவா; ஒருகாலத்து, நான், கடலையடுத்த ஓர் கோடிக்கரையில் இருக்கும்பொழுது, அங்கு ஒரு நீரரமகள் பாடிய இன்னிசைக்குக் கடலும் மரியாதைகாட்டித் தன்னோசை அடங்கியதும், இவ்விசைகேட்கச், சில நக்ஷத்திரங்கள் வானத்தினின்றும் உதிர்ந்து தலைவிரிகோலமாய் ஓடிவந்ததும் உன்ஞாபகத்திருக்குமே.

பக்.—ஆம், என் ஞாபகத்திருக்கின்றன.

ஓபரான்.—அதேகாலத்தில்—நீ பார்த்திருக்கமாட்டாய்—பூமிக்கும் சந்திரனுக்குமிடையே ஆகாயமார்க்கத்தில் மன்மதன் ஆயுதபாணியாய்ப் பறந்து சென்றதைக் கண்டேன். அவன் குடதிசையில் அரசாட்சிசெய்து வரும் அழகுள்ள ஒரு கன்னியை இலக்கு வைத்து, எத்தனையோ ஆயிரம்பேர்களின் இருதயத்தைத் துளைப்பதாகிய ஒரு நேசச்சுடுகணையைத் தன் வில்லினின்றும் விடுத்தான். அவ்வரசி கற்பினுக்குமரசியாதலின், அக்கணை அவளிடத்துத் தன் வலியிழந்து சென்றது. அவளும் தன் கன்னி நிலைமை கலங்குறாது நின்றாள். அப்பொழுது அக்கணை விழுந்த இடத்தைக் குறிப்பாய்ப்பார்த்தேன்; மேற்றிசையிலுள்ள ஒருசிறு புஷ்பத்தின்மீது விழுந்தது; பால்போல் வெளுத்திருந்த அப்புஷ்பம் புண்பட்டுச் செந்நிறமாயிற்று; கன்னியர்கள் அதனை 'மனோரஞ்சிதமலர்' என்பார்கள். அதைநான் உனக்கு ஒருகாலத்துக் காட்டியிருக்கிறேன். அதின் இரசத்தை உறங்குபவர்கள் கண்ணில் தடவ, அவர் உறக்கம்நீங்கி எந்தப்பிராணியின் முகத்துவிழிக்கிறார்களோ, அந்தப் பிராணியின்மேல், காமப்பித்துக் கொண்டவராவர். இப்புஷ்பத்தை விரைவிற் கொண்டுவா. திமிங்கிலம் கடலில் மூன்று நாழிகை வழித்தூரம் நீந்துவதற்குள் வரவேண்டும்.

பக்.—நான் இரண்டு நாழிகையில் பூமியை ஓர் பிரதக்ஷிணஞ் செய்து வருவேன். (பக்-போதல்.)

ஓபரான்.—இந்த இரசத்தைப்பெற்று, 'டிடேனியா' உறங்கும் சமயம் பார்த்து அவள் கண்களிற் பிழிவேன். அவள் உறக்கமுணர்ந்து காணும்பொருள் சிங்கமோ, கரடியோ, ஓநாயோ, ரிஷபமோ, குரங்கோ, வாலில்லா வானரமோ, எதுவாயிருப்பினும் அவள் அதன்மேல் ஆசைகொண்டலையக் கடவள். அவளிடத்துள்ள சிறுவனை என்வசப்படுத்தினாலன்றி இதற்கு மாற்றை உபயோகியேன். இங்குயாரோ வருகிறார்கள், யான் அரூபியாயிருந்து அவர்கள் பேசுவதைக் கேட்பேன்.

[டெமிட்ரியஸ்ஸும் அவனைத்தொடர்ந்து ஹெலனும் - வருதல்.]

டெமிட்ரியஸ்.—நான் உன்னை நேசிக்கவில்லை, நீ என்னைத்தொடராதே. சீருள்ள ஹெர்மியா எங்கே? லைஸாண்டர் எங்கே? அவள் என்னைக் கொல்லுகிறாள், நான் அவனைக் கொல்வேன். அவர்கள் இக்காட்டுக்கு ஓடிவந்தார்கள் என்றாயே; இங்கு என் ஹெர்மியாவைக் காணாமல் பைத்தியங் கொண்டேனே! நீ என்னை விட்டுத் தொலைந்து போவாயாக. இனி என்னருகில் வாராதே.

ஹெலனா.—ஏ, வன்னெஞ்சுள்ள காந்தக்கல்லே, நீ இரும்பை இழுக்காது உருக்கைப்போல் உறுதியுள்ள என் இருதயத்தை இழுக்கின்றாய். நீ என்னை இழுக்கும் வன்மையை ஒழிவாயாயின், யான் உன்னைத் தொடரும் வன்மையை ஒழிவேன்.

டெமிட்ரியஸ்.—உன்னை வசப்படுத்த முயலுகிறேனோ? உன்னை இனியவள் என்கின்றேனோ? உன்மேல் மனமில்லையென்றும், உன்னை நேசிக்க என்னாலாகாதென்றும் உன்னிடத்து யான் வெளிப்படையாய்ச் சொல்லவில்லையோ?

ஹெலனா.—அதற்காகவே உன்னை நான் அதிகமாய் நேசிக்கின்றேன். டெமிட்ரியஸ், நான் உன்னுடைய நாய், அடிக்க அடிக்க அதிக நேசம் பாராட்டுவேன். என்னை நீ உன்நாய்க்குட்டி போல் நடத்து. திட்டு, அடி, அசட்டை பண்ணு, துரத்து, உன்னைத்தொடர்ந்து வரும்படி மாத்திரம் எனக்கு அநுமதிகொடு, அது போதும், நாயினும் கடையான பதவி உன்னிடத்துண்டெனின் அதுவும் எனக்குப் பெரும் பதவியே யாம்.

டெமிட்ரியஸ்.—என் என் எரிச்சலை மூட்டுகிறாய்? உன்னைப்பார்க்கும் பொழுது எனக்கு நோயுண்டாகிறது.

ஹெலனா.—உன்னைப்பாராத பொழுது எனக்கு நோயுண்டாகிறது.

டெமிட்ரியஸ்.—உன் அடக்கத்திற்கு இது பெருங்குறை யன்றோ? ஊரைவிட்டு, இருட்டுவேளையில், தனியிடத்தில், தன்மேல் நேசமில்லாதவனை நம்பிக் கற்புள்ளகன்னியர் வரலாமோ?

ஹெலனா.—உன் நற்குணமே எனக்குப் பெருங்காப்பு; உன் முகத்தைப் பார்க்கும்பொழுது எனக்கு இருட்டுண்டோ? நீயே எனக்கு எல்லாப் பொருளாயு மிருக்கும்பொழுது இக்காட்டில் உலகமுழுவதும் என்னுடன் உளதன்றோ? உலகுளோர் யாவரும் இங்கிருந்து என்னைப் பார்க்கையில் என்னைத் தனியே இருப்பவள் என்னலாமோ?

டெமிட்ரியஸ்.—உன்னைத் துஷ்டமிருகங்களுடைய வசமாக்கி நான் காட்டில் ஓடி மறைந்து விடுவேன்.

ஹெலனா.—கொடிய மிருகத்துக்கும் உன்னத்தனை நெஞ்சழுத்தமிராது. நீ அப்படி ஓடுவாயானால் பண்டைவழக்கம் தலைகீழாய், கொடிய புலியைப் பிடிக்கச் சாதுப்பெண்மான் அதன்பின் செல்வது போலாம். மனவலியுள்ள ஓராண்மகனோட, அவனைத்தொடர்ந்து செல்ல ஒருபேதைப்பெண்மகள் ஓடும் ஓட்டம் வீணோட்டமன்றோ?

டெமிட்ரியஸ்.—உன்பேச்சைக் கேட்டுக்கொண்டு இங்கு நில்லேன். நான் போகிறேன்; என்பின் தொடர்வையேல் இக்காட்டில் உனக்கு நான் தீங்கொன்றுஞ் செய்யே னென்றெண்ணாதே.

ஹெலனா.—ஊருக்கு உள்ளிலும், வெளியிலும், கோயிலிலும், எங்குமே நீ எனக்குத் தீங்கிழைக்கின்றாய். நீ என்னிடத்துக்காட்டுங்கொடுமை பெண்பாலோர்க்கே பெருங்குறைவாயிருக்கின்றது. (டெமிட்ரியஸ்-போதல்.) உன்னைத் தொடர்ந்து செல்வேன். நான் நேசிக்கும் உன் கரங்களிற் கிடந்து என்னுயிரை விடுவதால் என் நரகானுபவத்தைச் சுவர்க்கானுபவமாக்கிக் கொள்வேன். (ஹெலனா-போதல்.)

ஓபரான்.—ஏ, வனதேவதையே, உனக்கு நன்மை யுண்டாவதாக. அவன் இச்சோலையை விட்டுப்போகுமுன் நீ ஓட்டங்காட்டவும் அவன் உன் நேசத்தை நாடி உன் பின் அலையவுஞ் செய்வேன்.

[பக்-திரும்பி வருதல்.]

ஏ, ஓடித்திரிவோனே, உன்வரவு நல்வரவாக. புஷ்பத்தைக் கொண்டுவந்தாயோ?

பக்.—கொண்டுவந்தேன், இதோஇருக்கிறது.

ஓபரான்—என்னிடத்திற்கொடு. சோலையின் இடையேயுள்ள புஷ்பவிதானம் பெற்ற மேடையொன்றறிவேன். அதன்மேல் புஷ்பசயனத்தில் டிடேனியா இரவிற் சிலவேளை, பரிவாரங்கள் ஆடிப்பாடித் தாராட்டப்பெற்று உறங்குவாள்; அப்பொழுது அவள் கண்களில் இப்புஷ்பரசத்தைத் தடவி எண்ணுதன வெல்லாம் எண்ணும்படி அவளை மயக்கங்கொள்ளச் செய்வேன், மற்றும் ஒன்று உளது: ஆதென்ஸ் நகரத்தாளாகிய ஒரு குலமாது தன்னைவெறுக்கும் ஒருவாலிபன்மேல் ஆசைகொண் டிருக்கிறாள். ஆதலின், நீ இவற்றிற் சில புஷ்பங்களைக் கொண்டுபோய் இக்காட்டில் அவர்களைத்தேடி, அவ்வாலிபனைக்கண்டு, அவன் கண்களில் இப்புஷ்பரசத்தைப்பிழிந்து, அவன் உறக்க முணர்கையில், அவள் முகத்தில் விழிக்கும்படிக்கும், அப்படிவிழிக்கும் பொழுது அவளுக்கு அவன்மேலுள்ள காதலைக்காட்டிலும் அவனுக்கு அவள்மேல் அதிகக்காதல் உண்டாகும் படிக்கும் செய்யல்வேண்டும். உடையால் அவ்வாதென்ஸ் நகரத்தோனை நீ அடையாளங் கண்டு

கொள்வாய். இதைச்செய்து, முதற்கோழிகூவுமுன் இவ்விடம் வந்துசேர்.

பக்.—யோசிக்கவேண்டாம், என்னாண்டவனே; இவ்விடத்தூழியன், அப்படியே செய்து வருவேன். (ஓபரானும், பக்கும்-போதல்.)

2-ம் இடம். காட்டின் வேறொரு பாகம்.

[டிடேனியா-தன் பரிவாரத்தோடு வருதல்.]

டிடேனியா.— வாருங்கள், கந்தர்வப்பெண்காள், வளைந்து குதித்துப்பாடுங்கள், சிலர் கஸ்தூரி 'ரோஜா' அரும்பிலுள்ள புழுவைப்போக்குங்கள்; சிலர் வௌவாலை ஓட்டுங்கள்; சிலர் கத்தும் ஆந்தையைத் துரத்துங்கள். எனக்கு உறக்கம் வரும்படி இனியகானஞ் செய்யுங்கள், நான் படுத்துக்கொள்ளுகிறேன்; நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்க்கலாம்.

[கந்தர்விகள் பாடுகிறார்கள்.]

1. புள்ளிகளும் நாப்பிளவும் பொருந்துமர வேநீண்ட
முள்ளிசையும் பன்றியே மூலையிலே மறையீரோ.
2. பல்லியே விரியனே பாதகங்கள் செய்யாமல்
மெல்லியலெம் மரசிபால் மேவாது போவீரே.
3. இரவுபா டுங்குருகே* யின்பாகப் பண்பாடிச்
சரசமாய்த் தாலேலோ தாலேலோ வென்னாயோ.
4. மந்திரமுந் தந்திரமும் வசியமுந்தீங் கும்புரியா
தெந்தலைவி குணவதிமுன் னேகாது போகீரே.
5. நானூற்குஞ் சிலம்பியே நூலிங்கு நூலாதே
நீணீள முறுகாலை நீட்டியினி நடப்பாயே.
6. பாடவரும் வண்டேயிப் பாலெங்குஞ் சாராதே
ஈடமே நத்தினமே கேடொன்றுஞ் செய்யாதீர்.
7. பாலேவந் திசையிரவிற் பாடுமொரு குருகேநீ
தாலேலோ தாலேலோ தாலேலோ வென்றிசை [யே.

ஒரு கந்தர்வப்பெண்.— இப்பொழுது எல்லாம் ஒழுங்காயின; இனிப்போகலாம். ஒருத்தி மாத்திரம் தூரத்துக் காவலா யிருத்தல் வேண்டும். (கந்தர்வப்பெண்கள் போதல், டிடேனியா உறங்குதல்.)

['ஓபரான்' வந்து புஷ்பத்தின் இரசத்தை 'டிடேனியா'வின் கண்ணிமையிற் பிழிதல்.]

ஓபரான்.—நீ உறக்கமுணர்ந்து காணுவதை உன் மெய்க்காதலெனக் கருதி மேன் மேலுண்டாகு மாசையால் மெலிந்து தவிப்பாயாக. சிறுத்தையோ, காட்டுப்பூனையோ, கரடியோ, சிலிங்கியோ, முள்ளம் பன்றியோ, நீஉறக்கம் விழித்துக் காணும்பொருள் எதுவோ அது உன்னாசைக்குரிய பொருளாகுக. ஏதேனும் இழிவானதொன்று உன்னருகிருக்கும் பொழுது நீ கண்விழிப்பாயாக. (ஓபரான்-போதல்.)

[லைசாண்டரும், ஹெர்ம்யாவும்-வருதல்.]

லைஸாண்டர்.—என் நேசமே, இக்காட்டில் அலைந்து தளர்ந்தாய்; உண்மையில் யானும் வழிமறந்தேன். நீ நன்றெனக் கருதுவாயாயின் விடியும் வரையில் இங்கிருந்து இளைப்பாறுவோம்.

ஹெர்ம்யா.—அப்படியே செய்வோம், லைஸாண்டரே; நீ உறங்குவதற்கு ஓரிடம் பார்த்துக்கொள். நான் இம்மேடையில் தலைவைத்துப் படுப்பேன்.

லைஸாண்டர்.—நாம் இரண்டு உடம்பினராயினும் ஒருமனப்பட்டவ ரன்றோ?

ஹெர்ம்யா.—உண்மையே; ஆயினும், என்னை வேண்டி வேறிடந்தேடித் தூரத்தே படுத்துறங்குவாயாக. அதுவே உலகமரியாதை; கன்னியரின் கற்புக்கும், கலியாணமாகாத ஆடவரின் நியமத்துக்கும் அதுவே தக்கது. என் இனிய தோழனே உனக்கு என்மேலுள்ள அன்பு உன் இன்னுயிருள்ள அளவும் மாறா அன்பாவதாக.

லைஸாண்டர்.—அப்படியே ஆகுக. என் அன்பு மாறுநாள் என்வாழ்நாள் முடியுநாளே. இதோ, இருக்கின்றது என்படுக்கை. உறக்கம் உனக்கு எல்லா ஆறுதலையுங் கொடுப்பதாக.

ஹெர்ம்யா.—அவ்வாறன்று; எனக்குப் பாதி ஆறுதல் உன்னிடத்திருந்து. (அவர்கள் உறங்குதல்.)

[பக்-வருதல்.]

பக்.—இக்காட்டில் எங்கும் அலைந்து தேடியும் ஆதென்ஸ் நகரத்தோனைக் காணேனே. அவன் கண்ணில் இப்புஷ்பரசத்தைப் பிழிந்து அவனை நேசங்கொள்ளச் செய்யவேண்டுமே. இதுவோ அரவமடங்கிய இரவாயிருக்கின்றது. இங்கிருப்பவன் யார்? இவ்வுடை ஆதென்ஸ்நகரத்தோன் உடையே; ஒருமாதின்மேல் வெறுப்

* குருகு—பக்ஷி.

புடையனென என்னிறைவன் கூறியவன் இவனே. இவன் நேசமின்றி வெறுத்தலால் இவனருகிருக்கத் துணியாது, அம்மாது, ஐயோ, பாவம்! இதோ தூரத்துக் கசுமலமான ஈரத்தரையில் அசந்து உறங்குகின்றாள். ஏ,ஏ, மரியாதையற்றவனே, இப்புஷ்பரசத்தால் உன் கண்ணை மயக்குவேன். நீ விழித்து ஆசைநிறைந்து உறக்கமொழிந்தவனாகவே யாவாய். நான் இவ்விடம் விட்டகன்றபின் விழிப்பாயாக. (பக்-போதல்.)

[டெமிட்ரியஸ்ஸும் ஹெலனாவும்-வருதல்.]

ஹெலனா.—நீ என்னைக் கொல்லினுங் கொல்லுக; இனிய டெமிட்ரியஸ்ஸே, சற்றுநில்.

டெமீட்ரியஸ்— என்னை நீ இவ்வாறு பேய்போல் தொடராதே.

ஹெலனா.—என்னை நீ இவ்விருளில் விட்டேகுவையோ? அப்படிச் செய்யாதே.

டெமீட்ரியஸ்.—எடுத்தடி வைப்பாயாயின் செத்தாய். நான் தனியே போகிறேன். (டெமிட்ரியஸ்-போதல்.)

ஹெலனா.—இவ்விவேகமில்லா ஓட்டத்தில் எனக்கு மூச்சு முட்டிப்போகின்றது. யான் துதிக்கத் துதிக்க அவனுக்கு என்னிடத்து அன்பு குறைகின்றது. ஹெர்ம்யாவே பாக்கியவதி, அவளே ரூபவதி, அவள் கண்களே ஆகர்ஷிக்குங்கண்கள். நான் கரடிபோற் குரூபி. என்னைக்கண்டு மிருகங்களும் வெருண்டோடுகின்றன. ஆதலின், டெமிட்ரியஸ்ஸுக்கு என்னைக் காணப் பிடிக்காதது ஆச்சரியமன்று. என் பொல்லாக் கண்ணாடி யானும் ஹெர்மியாவைப்போல் திவ்வியநேத்திரமுள்ளவளென்று எண்ணும்படி செய்ததே! இங்கு படுத்திருப்பவன் யார்? ஆ! லைஸாண்டர்! தரையிற் கிடக்கிறான்! இறந்தவனோ? உறங்குபவனோ? காயமில்லை; இரத்தத்தையுங் காணேன்: என் ஐயா, லைஸாண்டரே! உயிரோடிருப்பீரேல் எழுந்திரும்.

லைஸாண்டர்.— (கண் விழித்து) ஹெலனா, உன் இன்னுருவத்திற்காகத் தீயிலேனுங் குதிப்பேன். 'டெமிட்ரியஸ்' எங்கே? அத்துஷ்டனை என் கத்திக்கு இரையாக்குவேன்.

ஹெலனா.— அப்படிச் சொல்ல வேண்டாம்; லைஸாண்டரே, அப்படிச் சொல்ல வேண்டாம். அவன் உம்முடைய ஹெர்ம்யாவை நேசித்தால் என்னை? ஹெர்ம்யாளுக்கு உம்மிடத்துப் பூரண அன்புள்ளவரையில் நீர் திருப்தியாயிருமே.

லைஸாண்டர்.—ஹெர்மியாவைக் கொண்டு திருப்தியடையவோ? அவளோடு வீண்காலம் போக்கினதற்கு மனம் வருந்துகின்றேன். என் நேசத்திற்கு உரியவள் ஹெலனாவே, ஹெர்மியா அல்லள். அண்டங் காக்கைக்கு மாற்றாகக் கபோதத்தைப் பெற உடன்படாதவனுமுண்டோ? ஒருவனது விருப்பம் அவன் விவேகத்தால் ஆளப்படல் வேண்டும். நீயே தக்கமாதென்று என் விவேகஞ் சொல்லுகின்றது. எதுவும் பருவத்தாலன்றிப் பழுக்குமோ? யான் இதுவரையில் இளைஞனாயிருந்து இப்பொழுதுதான் அறிவுள்ளவனானேன். உன் அழகான கண்களில் அன்பு திரண்டு நிற்பதைக் காண்கிறேன்.

ஹெலனா.—இப்பழிப்புக்கோ யான் பாவிபிறந்தேன்! நீ இவ்வாறு இகழ்வதற்கு யான் பாத்திரமானது எப்பொழுதோ? டெமிட்ரியஸ்ஸின் அன்புகூர்ந்த பார்வைக்கு உரியளல்லா திருத்தல் போதாதோ? என் அழகின்மையைக்கண்டு நீயும் பழிக்கவேண்டுமோ? இங்ஙனம் பழிப்பாக நேசங்காட்டி பெருந்தவறிழைக்கின்றாய். உன்னைநான் நன்னெறியுள்ள குலமகனென்று எண்ணியிருந்தேன். ஆ! தெய்வமே! ஒருவன் உதாசீனஞ் செய்ததற்காக மற்றொருவன் ஒரு குலமகளைப் பழிப்பதும் ஆண்மையோ? (ஹெலனா-போதல்.)

லைஸாண்டர்.—அவள் ஹெர்ம்யாவைக் காணவில்லையென்றெண்ணுகிறேன். ஹெர்ம்யா, நீ அவ்விடத்துறங்கு: இனி லைஸாண்டர் அருகில் வாராய். மிகத் தித்திக்கும் பண்டம் தெவிட்டிக் குமட்டுவதுபோல் நீ எனக்கு மிக்க வெறுப்புள்ளவளானாய். என் எல்லாத்திராணியையும் இனி ஹெலனாவை உபசரித்து அவட்கு ஊழியஞ் செய்வதிற் செலுத்துவேன். (லைஸாண்டர்-போதல்.)

ஹெர்ம்யா.—(கண்விழித்தல்.) லைஸாண்டர், உன் தஞ்சம்! உன் தஞ்சம்! உன்னாலியன்றதைச் செய்ய ஓடிவா! இவ்வூரும்பாம்பை என் மார்பினின்றும் பறித்தெறி. ஆ! ஆ! ஐயோ!

என்னகனவு! லைஸாண்டரே,. பயத்தால் என் உடம்பு நடுநடுங்குவதைப்பார். ஒருபாம்பு என் மார்பைக்கடித்துத் தின்பதாயும், அக்கொடுமையை நீ புன்சிரிப்போடு பார்த்துக்கொண்டிருப்பதாயும் கனவு கண்டேன். லைஸாண்டர், என்ன! போய் விட்டானோ? லைஸாண்டர்! என் காதா! கேட்காத தூரத்து ஏகினனோ? சத்தமில்லையே! வார்த்தை யில்லையே! ஐயோ! எங்கே இருக்கின்றாய்? கேட்பாயாயின் பேசு. பயத்தால் மூர்ச்சையாகின்றேன். நீ அருகிலில்லையென் றெண்ணுகிறேன். உன்னை இப்பொழுதே தேடிக்காண்பேன்; அன்றேல், இறப்பேன். [ஹெர்மியா-போதல்.]

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

புஸ்தகவாசிப்பு.*

கல்வி, செல்வம் என்னும் இரு பொருளிலும் கல்விப்பொருளே உசிதமானது. கல்விப்பொருளானது செல்வப்பொருள் போல வெள்ளங் கொண்டுபோகாததும், நெருப்பில்வேகாததும் திருடர் அபகரிக்காததும், காவல்செய்யவேண்டாததும் அரசர்களால் வெளவப்படாததும், விரும்பினவர்கட்கெல்லாம் தடையின்றி வழங்கினாலும் மேன்மேலும் வளர்வதன்றி குறைவுபடாததுமாய், அஞ்ஞானமாகிய பிணிக்குமருந்தும், செங்கோல் முதல் உழவுகோல் வரையுள்ள சகல தொழில்களுக்கும் ஓர் வழியுமாயிருக்கிறது. ஆதலால் எவ்வகையாரும் கல்வியை அவசியம் தேடல் வேண்டும். கல்வி அடைய பிரயோகிக்கவேண்டிய வழிவகைகள் பலவற்றில் புஸ்தக வாசிப்பு ஓர் முக்கிய சாதனமாயிருக்கிறது.

புஸ்தகங்கள், வாசிப்பு என்னும் விஷயங்கள், எக்காலத்திலும் அதிக மனோகரமான வைகளாகவே இருந் திருக்கின்றன. கீர்த்திபெற்ற கிரேக்கை தேசத்தில் வசீகரமான ஒரு சித்திரம் உண்டாயிருந்தது. அதில் ஸாக்ரற்றீஸ் (Socrates) என்னும் சாஸ்திரியார் தமக்குமுன் உயர்த்திக் காண்பிக்கப்பட்ட ஒரு புஸ்தகத்தால் இழுக்கப்பட்டு, அதற்குப்பின்னாலே பட்டணத்தை விட்டு நாட்டுப்புறத்துக்கு போகிறதை சித்திரித்திருந்தது. அந்த ஞானசிரோமணி தமது இஷ்டனாகிய பீட்றஸ் (Phaedrus) என்பவரிடம் ஒரு நாள் சொன்னாராம், "பசியினால் வருந்தும் பசுக்கள்முன் ஒரு பச்சை மரக்குழையை அல்லது ஒரு பழக்குலையை ஆட்டிக்கொண்டுபோனால் அவை அதை ஆவலோடு பின்தொடருமல்லவா? அதுபோலவே என் கண்முன் ஒருபுஸ்தகத்தை உயர்த்திப்பிடித்துக்கொண்டுமாத்திரம் இந்த ஆற்றிக்கா நாடெங்கும் அல்லது இந்த விஸ்தார லோக முழுவதிலும் நடந்துபோம். நான் அப்புஸ்தகக் கவர்ச்சியால் அதி தாபந்தத்தோடு உமது பின்னே செல்லுவேன்" என்றாராம்.

வாசிப்பில்லாமல் கல்வி வளர்வதும் முதிர்வதும் அசாத்தியம்.. "கல்விக்கு சுய மனோமுயற்சியே முக்கியம், பிறர் நூல் நோக்கி நிற்பது பேதையர் தொழில்" என்று இயற்கைத்திறம் சாதிப்பார் உண்டு. அது யுக்தி அநுபவம் என்பவற்றுக்கு இசையாத வீண்சாதனை. நாம் இப்பிரபஞ்சத்தில் தோன்றிய முதல் மனிதராய் இராமல், நமக்குமுன் வாழ்ந்து மறைந்த திரள் மனுக்களின் பின்னடியாராய் மாத்திரம் இருக்கிறோம். நமது முன்னோர் விட்டுப்போயிருக்கும் ஆஸ்திபாஸ்திகளை சுதந்தரிப்பது நமக்கு எவ்வளவு சலாக்கியமோ, அவ்வளவு அவர்கள் சமைத்துவைத்த நூல்களை தகுந்தபடி சீர்தூக்கிப் பிரயோகிப்பதும்நமது அதிஷ்டமே. அவர்களுடைய நூல்களைத் தள்ளுவது தன் ஊரிலிருந்து ஒரு தூர ஸ்தலத்துக்குப் போகவேண்டிய ஒருவன் முன்னோர் ஆக்கிய பாதையைத் தள்ளி தான் வெட்டிய வழியே போக கர்வித்து காடுமேடாய் அலைவதாகும்.

இவ்வுலகத்தில் சகல தேசங்களிலும் வித்வான்களாய் பிரஸ்தாபித்த அனைவரும் புஸ்தக வாசிப்பை சர்வகாலமும் விடா முயற்சியாய் கையாடினவர்க ளாகவே இருந்தார்கள். இங்கிலாந்து தேசத்தில் தத்துவசாஸ்திர சிரோமணியாய் விளங்கின பேக்கன் பிரபுவானவர் (Lord Bacon) இதைக்குறித்து ஓர் முதுரை மொழிந்தார். "வாசிப்பு ஒருவனை பூர்த்திப்படுத்தும், சம்பாஷணை கதிப்படுத்தும், எழுத்து கூர்ப்ப

* திருவிதாங்கோட்டு சர்க்கார் திருவலத்திருக்கும் உபந்நியாச ஏற்பாடு சம்பந்தமாய் செய்யப்பட்ட பிரசங்கத்தின் சாராம்சம்.

டுத்தும்" என்பதே. அர்த்தமகானுபவர் குறித்த பூரணத்துவம் அல்லது நிறைந்த கல்வியானது தேனீ புஷ்பம் தோறும் திரிந்து தேனைக்கூண்டில் சேர்ப்பதுபோல, சிறந்த ஆசிரியர்கள் இயற்றிய நூல்களை வாசித்து அவைகளின் சாராம்சங்களை மனதில் ஆக்குவதினாலேயல்லாமல், மற்றெவ்வகையாலும் உண்டாகாது. ஒருவன் இயல்பாய் எத்தனையோ மனோசத்துவங்களும், புத்தி விற்பன்னமும் விகடத்துவமும் பொருந்தியவனாயினும், பிறர் நூல்களை உபேட்சித்து சுய பாண்டித்தியம் பாராட்டினால், அவன் கல்வி அபூரணமாயிருக்கும் என்பதற்கு ஐயமில்லை. புஸ்தக வாசனையின்றி ஒருவன் தன் மனோமுயற்சியால் தானே கல்வியில் தேறி சிறக்கத் துணிதல், கங்காநதியானது ஆயிரக்கணக்கான தன் கிளைகளையும் சிற்றாறுகளையும் மறித்து நிறுத்தல் செய்துவிட்டு, மேகத்தினின்று தன்மேல் விழும் மழைத்திவலைகளாலே மாத்திரம் தன் தீரத்திலுள்ள தேசத்தையெல்லாம் பிரவாகித்து செழிப்பிக்கவும், மகத்துவ பெரும்பிரளயமாய் சமுத்திரத்தில் கூடவும் துணிதல் போலாம்.

நமது உடலுக்கு ஊண் எப்படியோ, அப்படியே மனதுக்கு புஸ்தகவாசிப்பு இன்றியமையாதது என்கலாம். ஊண் நிதசரி தவறாது உட்கொள்ளாவிடில், உடல் தளர்ந்து பலம் குன்றி வேலைக்காகாமல் போவதுபோல, புஸ்தகவாசனைகிரமந்தப்பி குறைந்தால் மனோசத்துவங்கள் மங்கி ஊக்கமற்றுப்போம். இதை உணர்ந்தே எத்தேசத்திலும் எக்காலத்திலுமுள்ள கல்விமான்களும் வாசிப்பை ஒருபோதும் கைநெகிழாதிருந்தார்கள். இதற்கு பல திர்ஷ்டாந்தங்கள் சொல்லலாம். 'புரூற்றஸ்' (*Brutus*) என்னும் ஓர் ரோமை சேனாவீரன் 'பார்ஸேலியா' (*Parsalia*) என்ற ஸ்தலத்தில் மகா பெரிய யுத்தம்ஒன்றுநடத்தும்படியாகப்போயிருந்தார். நாளைக் காலையில் போர் என்று நிச்சயித்திருக்க இன்றிரவில் அவர் கூடாரத்தில் உட்கார்ந்து வழக்கம்போல புஸ்தக வாசிப்பை நடத்தி ஞாபக புஸ்தகத்தில் தாம் வாசித்த விசேஷங்களை குறித்துக்கொண்டிருந்தாராம். 'ஊல்ஸ்லே' என்னும் சேனாபதி (*General Wolsley*) யுத்தக்களத்திலும் ஜெபப்புஸ்தகம், மோட்ச பிரயாணி முதலிய நூல்களை வாசிப்பது வழக்கமாயிருந்தது.

சுசீலனான இன்னோர் வித்வான் இருந்தார். வாசிக்கவும் எழுதவும் கூடாமல்போகிற அன்று அவர் மிகுந்த மனவேதனைப்படுவாராம். இப்படி ஓயாமல் வாசித்துவந்தது அவர் தேக சௌக்கியத்திற்குப் பிரதிகூலமாய் தீர்ந்ததை அவர் சிநேகிதர் ஒருவர் கவனித்து தமது கருத்தை வெளியிடாமல், அவருடைய புஸ்தக அலுமாரின் திறவுகோலை வாங்கி, அலுமாரைப் பூட்டி, அவர் சுகமடைய விரும்பினால் பத்து நாளைக்கு வாசியாமல் இருக்கவேண்டுமென்று கற்பித்தார். வித்வான் மிகவும் தர்க்கித்து பின்பு இணங்கினார். புஸ்தகத்தைப் பாராமையால் முதல் நாள் ஒரு வருஷத்திலும் நீளமாய் அவருக்குத்தோன்றியது. இரண்டாம் நாள் புஸ்தக வாஞ்சையால் காலைமுதல் மாலைமட்டும் தலைநோவாய், வருந்தினார். மூன்றும் நாளிலோ சுரமும் கண்டது. அவர் சிநேகிதர் பயந்து திறவுகோலைக் கொடுத்துவிட்டார். உடனே அவர் பிணியின் அகோரம் நீங்கிற்று.

சிலர் தங்கள் மனசையும் தேகத்தையும் ஒரேமிக்க போஷிப்பது வழக்கமா யிருந்தது. 'பிளினி' (*Pliny*) என்பவர் தமக்கு முன்னிருந்து புஸ்தகம் வாசிக்க ஒருவன் இல்லாமல் ஒருபோதும் சாப்பிட உட்காரார். யாத்திரைபோகும் வேளைகளிலும், புஸ்தகங்களும் அவர் வாசிக்கும் விசேஷக்குறிப்புகளை எழுதும்ஞாபகப்புஸ்தகம், பேனா முதலிய உபகரணங்களும் எப்போதும் அவரிடத்தில் காணப்படும். 'கரோலீனாள்' என்ற ராக்கினியும் அமுதுசெய்யும்போதெல்லாம் புஸ்தகம் வாசிக்கக் கேட்டுவந்தாள். அங்கிலேய பிரபுக்கள் பலருடைய மாளிகைகளில் நாளதுவரை போஜன வேளையில் குறிக்கப்பட்ட ஒருவகை கதாப்பிரசங்கம் செய்விப்பது முறைமை.

இந்து தேசத்தில் கல்விப்பிரகாசமுற்று விளங்கிய காளிதாசன், தண்டியாசிரியர், கவிராக்ஷஸன், ஔவையார், ஒட்டக்கூத்தர், தாயுமானவர், கம்பர், திருவள்ளுவர், அருணகிரியார் முதலியோருடைய சரித்திரங்களிலும் ஓயாத வாசிப்புக்கு திர்ஷ்டாந்தம் காணலாம்.

மகம்மது என்பவர் தமது வீட்டுக்கு அருகில் இருந்த ஒரு கெபியில் நிதசரி பிரவேசித்து, மனம் நிறைந்து, சிரசு மயங்கினதாகத் தோன்றும்வரை வாசித்துவந்தார் என்று சொல்லியிருக்கிறது.

புஸ்தக வாசனையானது அறிவை விர்த்தி செய்வதன்றி மற்றெவ்வகையாலும் கிடைக்கக்கூடாத இன்பத்தையும் மனதில் பிறப்பிக்கும். சம்பாஷிக்க சிநேகிதர் இல்லாமல் தனித்திருக்கும் வேளையில் புஸ்தகங்களோடு பேசி மகிழலாம். திகைப்பும் சந்தேகமுமான காரியங்கள் நேரிடும்போது புஸ்தகங்களிடத்தில் ஆலோசிக்கலாம். துக்கமும் பயமும் மனதை பிடிக்கையில் சந்தோஷத்தையும் தைரியத்தையும் கொடுக்கும் நூல்களுமுண்டு. எத்தனையோ பேர் தங்கள் தனித்த மரணப்படுக்கையில் புஸ்தகங்களைத் துணையாகக்கொண்டு ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்! ஒரு ஏழை வாலிபன் இருந்தான். அவனுக்கு நேரிட்ட கொடியவியாதியில் அவன் சமீபத்தில் இருக்க சிநேகிதர் இல்லாதபடியால், அவன் சௌக்கியமா யிருந்தபோது வாசித்துவந்த புஸ்தகங்களில் சிலவற்றை தன்கிட்ட வைத்து மனவியாகுல முண்டான வேளைகளில் வாசித்ததுமல்லாமல், வாசிக்க பெலனில்லாதபோது அவற்றைத் தன் கையால் தொட்டு அணைப்பானாம்.

[சமீபகாலத்தில் நேர்ந்த சம்பவமொன்றில் இதற்குஇன்னும்முக்கியமானஒரு திர்ஷ்டாந்தம் காணலாம். இங்கிலாந்தின் ராஜகவிவாணரும், கவிச்சக்கிரவர்த்தியுமாயிருந்தடேன்னிஸன்பிரபு சென்ற மாசம் 6-உ முதிர்ந்தவயதில் காலஞ்சென்றார். அவர் நோயுற்று சாகக்கிடக்கையிலும் புஸ்தகவாசிப்பிலே ஆறுதல்கண்டார். அவர் பிராணன்போக சிலநேரமுன், அவர் எப்போதும் அருமையாகப் பாராட்டிப் படித்து வந்த 'ஷேக்ஸ்பியர்' மகாகவி யெழுதிய புஸ்தகத்தைக் கொண்டுவரச்சொல்லி, அதில் அவருடைய சாவுகாலத்துக்கேற்ற ஆறுதல் கூறும் சில வரிகளிருக்கும் பக்கத்தைத்தேடிப் பிரித்துப்படித்துக்கொண்டு, அவைகளைப்படிப்பதில் ஓர் ஆநந்தமும் ஆறுதலும் கண்டு, பிரித்த புஸ்தகம் பிரித்தபடி புஸ்தகமும் கையுமாக விருக்கையிலே மனப்பாக்கியத்துடன் இறந்தார். அவருடைய குடும்பத்தார் அப்புஸ்தகத்தை மிக அருமையாகப்பாராட்டினும் புஸ்தகமும் கையுமாகச் செத்தவரிடமிருந்து அதைப் பிரித்தெடுக்க மனம் கொள்ளாமல், அப்புஸ்தகத்தை உலோகத்தால் செய்த பெட்டியில் வைத்து அவர் பிரேதத்தோடு பேழையில் வைத்துச் சமாதி செய்துவிட்டார்கள். இது அவருடைய புத்திரர் தாமே அதியுருக்கத்தோடு தெரிவித்த விஷயம்.—வி. சி. பத்.]

மேலும், ஒரு மனிதன் இவ்வுலகத்தில் தனக்குள்ள இஷ்டரில் சிலரை பிராண சிநேகிதராக தெரிந்து. எக்காலத்திலும், விசேஷமாய் தன் ஆபத்துகாலத்தில், அவர்கள் கூட்டுறவை விரும்புவது வழக்கம். புஸ்தகங்கள் சம்பந்தமாகவும் அவ்விதமாகவே நாம் நடந்துகொள்ளத்தக்கது. அவற்றில் வேளா வேளைகளில் மாத்திரம் வாசிப்புக்கு உதவுகிறவைகளும் உண்டு. சதாகாலத்திலும் மரண வேளையிலுங்கூட வாசிக்கத் தக்கவைகளுமுண்டு. கீர்த்திபெற்ற ஸ்ரீ 'உவால்ற்றர் ஸ்காற்று' (*Sir Walter Scott*) என்னும் வித்வசிரோமணி இறப்பதற்கு இரண்டொரு நாளுக்குமுன் தமது மருமகனைப் பார்த்து புஸ்தகத்தில் கொஞ்சம் வாசியும் என்றார். மருமகன் எந்த புஸ்தகத்தில் என்று கேட்க, அக்கல்விப்பெருமான், "அப்படி கேட்பதற்கு அவசியமுண்டா? இத்தருணத்தில் வாசிக்கத்தக்க புஸ்தகம் ஒன்றே ஒன்று தானே" என்க, அவருடைய குறிப்பை அறிந்து பைபிளைவாசித்தார். அப்புறம் அவர்சொன்னாராம்: இந்த ஆகமத்தை எல்லாவற்றிலும் அதிகமாய் நேசித்து வாசித்து வந்தால் நீரும் என்னைப் போல் மனப்பாக்கியத்துடன் மரிக்கக் கூடும்" என்று.

இன்னொருவர் சொல்லுகிறபடி, நமது வாசிப்பு முறியில் நம்மோடிருக்கும் புஸ்தகங்களைக்கொண்டு, முற்காலத்தோரும் தற்காலத்தோருமான வித்வசிரோமணிகள், தத்துவ சாஸ்திரிகள், யுத்தவீரர், யாத்திரீகர், கவிராயர், சாதுரியர், சக்கரவர்த்திகள், ஞான சிரேஷ்டர் முதலிய மகத்துவ புருஷோத்தமர் அநேகர் மத்தியில் நாம் நிதசரி வாசித்து மகிழலாம். மேலும்

அவை மூலமாய் நாம் எல்லா ஸ்தலங்களிலும் எல்லா காலங்களிலும் உலாவித்திரியும் சிலாக்கியமும் சக்தியும் அடையலாம்.

புஸ்தக வாசிப்பில் முயற்சித்த வருடைய சம்பாஷணை கேட்போர் மனதில் முக்கனியும் சர்க்கரையும், பாலும் தேனும் கலந்தூட்டுவது போல் மிக இனிதாயும் அறிவாகரமாயு மிருக்கும்.

ஆகையால், அறிவில் தேறவும், மனோவிர்த்திசெய்யவும், எக்காலமும் மனமகிழ்ச்சி அனுபவிக்கவும், வித்துவான்கள் என்னும் பேர்பெறவும், முன்னோர் நூலாலன்றி, தமது நூதன நூலாலும், சம்பாஷணையாலும் உலகத்தைபிரகாசிப்பிக்கும் பரோபகாரிகளாகவும் ஆசிக்கும் அனைவரும் சில மூடபக்தர் பிதற்றுவதுபோல "அருட்கல்வியே கல்வி, வாசிப்பேன் ? பிரயாசமேன்? ஈசுர சித்தம் உண்டாகில் வித்தை தானே உதிக்கும்" என்று சாதிக்காமலும், "அம்பலம் தீப்பட்டதென்றால் அதைத்தான் சொல்வானேன்? வாய்தான் நோவானேன்?" என்று உழைத்தழிந்த முழுச் சோம்பரைப்போல அசமந்தமாயிராமலும், கடவுள் கிருபையை முன்னிட்டு கருத்துடன் ஜாக்கிரதையைக் கைப்பற்றி வாசிப்பில் முயலவேண்டும்.

புஸ்தக வாசிப்பானது ஆற்றுமணலில் கலந்த பொற்பொடிகளை அரித்துச் சேர்த்தல்போலும், சமுத்திரத்தில் அமைந்த முத்துச்சிப்பிகளை முக்குளித்தெடுத்தல் போலும், புஸ்தகங்களில் உறைந்த ஞான சாராமிசங்களை தெரிந்தடையும் அருந்தொழி லாகையால், அரங்கின்றி வட்டாடல்போல், ஒழுங்கின்றி உழைக்காமல், வாசிப்பு பயன்படத்தக்கதாகவும், கூடியவரை எளிதில் அப்பயன் கிடைக்கத்தக்கதாகவும் திட்டவட்டமான சில பிரமாணங்களின்படி அதை நடத்திவரல் அவசியம்.

வே. மோசே ஐயர்.

திரவிட சப்த தத்வம்.

இவ்விராஜதானியிலுள்ள கலாசாலைகளுக்கெல்லாம் முதலாயுள்ள சென்னை 'ப்ரெஸிடென்ஸிகாலேஜில்' சுபாஷா போதனை விசாரகரான ம-ா-ா-ஸ்ரீ, மிட்டாதார் சேஷகிரி சாஸ்திரியார், எம். ஏ. அவர்கள் திரவிடசப்த தத்வம் என்னும்பெயரால் மிகவும்உபயோகமான நூல் ஒன்று செய்து வருகிறார். அங்கிலேயம் முதலிய ஐரோப்பா பாஷைகளில் அந்தந்த பாஷையின் சப்ததத்வத்தை விளக்கும் நூல்கள் பலவுள. பாஷைகளின் சப்ததத்வம் நன்றாய்த் தெரிந்திருந்தால் அதைக்கொண்டு எத்தனையோ முக்கியமான விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொள்ளலாம். ஐரோப்பிய சப்ததத்வசாஸ்திரிகள் பலபாஷைகளின் சப்ததத்வங்களை யறிந்து அவைகளை ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து ஆராய்ச்சிசெய்து மனுஷஜாதியாரின் பூர்வீக சரித்திரத்தில் பல முக்கியமான விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். ஒருபாஷையைப் பூரணமாகப்பயில அப்பாஷையின் சப்ததத்வங்கள் நன்றாகத் தெரிந்திருப்பது இன்றியமையாததாம். ஆகவே திரவிடபாஷை கற்போர்க்குபயோகமாக திரவிடபாஷைகளின் சப்ததத்வங்களை யாராய்ந்து சாஸ்திரியார் அவர்கள் தமிழிலும், தெலுங்கிலும் தனித்தனி ஓர்நூல் இயற்றிவருகிறார்கள். இந்நூலின் தன்மையும் இதையெழுதிவரும் வகையும் அவர் நமக்கு எழுதியிருக்கும் கடிதத்தால் விளங்கும். அக்கடிதத்தைக் கீழே அவர் எழுதியபடிபிரசுரிக்கிறோம். அவரதுநூலை விவேகசிந்தாமணிக்கு அனுபந்தமாகக்கூட்டியச்சிட்டிருக்கிறோம்.—வி. சி. பத்.

"விவேகசிந்தாமணி பத்திரிகாதிபதி யாகிய ம-ா-ா-ஸ்ரீ, சாமிநாத ஐயரவர்கள் சமூகத்திற்கு.

ஐயா ! நான் அநேக வருஷகாலமாய்த் தமிழ்ப்பாஷையைப் படித்து அதன் இலக்கண இலக்கிய நுட்பங்களைக் கூடிய வரையில் ஆராய்ந்து அதிலுள்ள சப்தங்களையும் வியாகரண ரூபங்களையும் அதற்குச் சம்பந்தப்பட்ட தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய பாஷைகளிலுள்ளவற்றோடு ஒத்திட்டு அவற்றில் மறைந்துள்ள அக்ஷரதத்வங்களையும் சப்ததத்வங்களையும் கண்டுபிடித்து அத்தத்துவங்களின் மூலமாய் இதுவரையிற் றெரிந்திருந்த இலக்கண விதிகளுக்கு ளடங்காமலிருந்த சொற்களின் சொரூபங்களை என் புத்திக்குப்புலப்பட்ட மட்டும் ஒருவாறு எடுத்து விளக்கி திரவிடசப்த தத்வம் என்னும் பெயரால் ஓர் நூலெழுதி அச்சிட்டுக் கொண்டுவருகிறேன். அது முடிவுபெறு முன்னமே அதிலுள்ள விஷயங்களைப் பலருமறிந்து குற்ற நற்றங்களை யாராய்ந்து அவர்கள் வெளியிடும் அபிப்பிராயத்தால் அந்நூலிலுள்ள குற்றங்களை நீக்கிக் குறைகளை நிரப்பி நூலைச் சீர்ப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால், இந்நாட்டில் தமிழுணர்ந்த பலர்க்கும் நல்லறிவூட்டி உபயுக்தமான பலசாஸ்திரங்களிலும் கலைகளிலும் பயிற்சியை யுண்டாக்கும் பரமோபகாரமான உங்கள் பத்திரிகையில் மேற்குறித்த நூலை கொஞ்சங் கொஞ்சமாக அச்சிட்டு பிரசுரஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1892ஞு நவம்பர்மீ 14வ ப்ரெஸிடென்ஸிகாலிஜ் }

இப்படிக்கு
தங்கள் விதேயன்,
மிட்டாதார் சேஷகிரி சாஸ்திரி."

சுப்பிரமணிய தீக்ஷிதர், அவர் பிரபந்தம்.

1. சுப்பிரமணிய தீக்ஷிதரெனப் பெயர் பெற்ற இந்த மகாவித்வான் பாண்டிவள நாட்டிலொரு பகுதியாகிய திருநெல்வேலிச் சில்லாவைச் சேர்ந்த ஆழ்வார் திருநகர் என்ற குருகூரிலே பிறந்தவர். இவர் இளமைப் பருவத்திலேயே வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்று வடமொழி தமிழ்மொழி யென்று சொல்லப்படுமிரண்டு பாஷைகளிலும் வல்லுநராகி "எழுகடல் குடித்த விழுமியதவவலி, யுத்தம முனிவரன்" என்று கற்றுவல்ல சான்றோர் பலராலும் புகழப் பெற்றவர்.

2. இவர் சற்றேறக் குறைய நூற்றெண்பது வருடங்கட்கு முன்னே யிருந்தவர். இவரிருந்த கால மிதுவே யென்று நியாயங்காட்டி நிலைநிறுத்துவோம். விவேக சிந்தாமணி ஆறாவது சஞ்சிகையில் வைத்தியநாத நாவலரிருந்த காலம் 18 - ம் நூற்றாண்டின் தொடக்கமென வரைந்து சுட்டினோம். அவ்வைத்தியநாத நாவலரும் திருவாவடுதுறைச் சுவாமிநாத தேசிகரும் ஏககாலத்தவ ரென்பதற்கு

"என்கண் காணத்
திருவா ரூரிற் றிருக்கூட் டத்திற்
றமிழ்க்கிலக் காகிய வைத்தியநாத
னிலக்கண விளக்கம் வகுத்துரையெழுதினன்".

என்றது சுவாமிநாத தேசிகரே கூறுதலினாலே யாதாரமாகும். பின்பு சுவாமிநாத தேசிகரும் நம் சுப்பிரமணிய தீக்ஷிதரும் நண்பர்களாமாகவே தீக்ஷிதரும் அப்பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்தவரென்று அநுமானித்தற்கு இடனிருத்தல் காண்க. ஆகவே மேற்கூறிய மூவரு மொரே காலத்தவர்களென்று நாட்டப்பட்டது. நம்தீக்ஷிதரும் சுவாமிநாத தேசிகரும் நண்பர்களென்பதற்கு அத்தாட்சியாக

"அன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக
ரப்பதி வாழுஞ் சுப்பிரமணிய
வேதியன் றமிழ்ப் பிரயோக விவேகம்"
"என்கண்காண","வுரைத்துரை யெழுதினன்"

என்று சுவாமிநாத தேசிகரே கூறியதைக் கொள்க.

3. சுப்பிரமணிய தீக்ஷிதருடைய மதமோ சைவமதம். இவர் மகா சைவப்பிராமண குலத்தைச்சேர்ந்தவர். இவர் தந்நூலைத் தொடங்கும் பொழுது "நீர்கொண்ட சென்னி மகேச்சுரன்" எனத் தெய்வவணக்கங்கூறி மேற்செல்லுதலினாலே யிவர் சைவவேதியரெனக் குறிப்பிக்கப் பட்டார். இவர் அந்தணாளரிலும் போதாயந சூத்திரத்தைச் சேர்ந்தவர். இதற்குத் *தீக்ஷிதரவர்களே தம்மைப்பிறர்போலும்நாந்தி கூறிய

" பெரும்புங்கவர்புகழ்
போதாயநசுப்பிரமணிய
னரும்புங்குருகையிற்கோதில்
குலோத்துங்கனாரிடமாய்
விரும்பும்பொருளைத்தரும்
பிரயோகவிவேகந்தன்னைக்
கரும்புங்கனியுமெனப்பாடினான்
றமிழ்கற்பவர்க்கே"

என்ற காரிகையே தக்க சான்றுபகரும்.

4. இவ் வேதியவையாகரணியும்† மேலே சொல்லிய சுவாமிநாத தேசிகருஞ் செப்பறைப்பதிக் கநகசபாபதி சிவாசாரிய ரிடத்தினின்றுங்

* பாயிரம்.

† Grammarrian.

கீர்வாண பாஷை யொருங்குகற்ற சதுபாடிகளென்று கர்ணபரம்பரையாகக் கேள்விப்படுகிறோம். இவர் "வேளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழு வழலே" யென்று வழக்கமாகக் கூறப்படும் பழமொழியைப் பொய்ப்படுத்துமாறு தோன்றினார் போலும்! பிராமணர்களுக்குள் அந்நூற்றாண்டிற்றமிழ்கற்றவர் கிடைப்பது மகா துர்லபம். அப்படியே யிருப்பினும் வடமொழிப்பயிற்சி, தமிழ்மொழிப் பயிற்சியாகிய இவ்விரண்டு மொருங்கு பெற்றவர் கிடைப்பது கேவலம் துர்லபம். இங்ஙனமாக, இவ்விரு பயிற்சியும் நிரம்ப அடைந்தவராகிய நம் தீக்ஷிதேந்திரர் சாமர்த்தியம் இனைத்தென்று யாவரால் அளந்துரைக்கற் பான்மையது!

இவ் வொப்புயர் வில்லா வேதியர் திலகர், இவ்வாறு புகழ்ந்துரைக்கற்படுதற்கு யாது செய்திருக்கின்றனரென்று ஒருசங்கை‡யேற்படுமேல் அதற்கு உத்தரங் கூறுகின்றோம். இவர் 'பிரயோகவிவேகம்' என்னும் நாமதேயமிட்டு ஓரருமையான வியாகரண சாஸ்திரம்* செய்திருக்கின்றனர். இதில் சமஸ்கிருத பாஷைக்கும் திராவிட பாஷைக்கும் பொதுவாக ஏற்பட்ட சப்தசாஸ்திரத்தின் தத்துவங்கள்§ தமிழ் பயில்வார் யாவருமெளிதி னுணரும் வண்ணம் கூறப்பட்டிருக்கின்றன. இது கட்டளைக் கலித்துறை யாப்பி||னால் பாடப்பட்டிருக்கின்றது. இதில் ஐம்பத்தொரு கலித்துறைகளுள. இஃது

"உம்பர்க்குரிய பிரயோக விவேகத்தை
யைம்பத்தொருகவிதையா லுரைத்தான்—செம்பொற்சீர்
மன்னுமதிற்குருகூர் வாழ்சுப்பிரமணிய
னென்னுமொருவே தியன்."

என்ற அந்நூற் சிறப்புப்பாயிரத்தானே விளங்கும். இந்நூல் சுவாமிநாத தேசிகருடைய வேண்டுகோளிற் கிணங்கியே செய்யப் பட்டதென்ப.

5. இனி யிப் 'பிரயோக விவேக'த்தின் குணகுணங்களைப்பற்றிப் பேசுவோம். இவ்வரிய இலக்கணம், காரகபடலம், சமாசபடலம், தத்திதபடலம், திங்குப்படலம் என நான்கு படலங்கள் அடங்கியது. இவ்விலக்கணத்தின் அருமையும் பெருமையும் உண்மையும் நுண்மையும் எம்மா லெடுத்துரைக்கற் பெற்றிய வல்லவேனும் ஏகதேசம் இயன்றமட்டுங் கூறுவோம். இவ்விலக்கண மானது தமிழிலக்கணத்திலும் வடமொழி யிலக்கணத்திலும் மிகத்தேர்ந்தார்க்கன்றி வேறியாவர்க்கும் பயன்படா தென்று சிலர் யோசனையின்றிச் சொல்லல்கூடும். அவர் அப்படிச் சொல்லுதல் அவருடைய அறியாமையே யெனக் கூறிவிடுக்க. இவர் இந்நூற்கு உரையுந்தாமே யெழுதினார் வடமொழி வழக்கம்பற்றி. இஃது "வடநூலார் தாமே பதிகமுமுரையுஞ் செய்வார். இந்நூலும் வடநூலைத் தழுவியதாகச்* செய்தலான், யாமும் பதிகமுமுரையுஞ்செய்து, உதாரணமுங் காட்டினோம்" என்று தீக்ஷிதரே 4-ம் பக்கம் மூன்றாங்காரிகையினுரையின் கீழ்வரைதலின் நன்கு விளங்கும். இது †பாஷாதத்துவ சாஸ்திரரீதியாக அமைந்துள்ளது. ஆங்கில பாஷாவியாகரண தத்துவார்த்தங்களை‡யாய்ந்துணர்ந்த கல்விமான்களுக்கு இதன் பெருமை சொல்லாமலே விளங்கும். இவர் இடையிடையே வெளியிடுங் கொள்கைகளெல்லாம் சொந்தமாகவும், அதிகமாய் ஆழ்ந்த கருத்தின வாகவும் காணப்படும். உதாரணமாக இவர் தமிழிலக்கண மெல்லாம் பிராயிகம் வடமொழியிலக்கண வழியவென்றே கூறுவர். இக்கொள்கையின் உண்மையை §"வடமொழி தென்மொழியினியைபு" என்ற உபந்யாஸத்தில் விரித்து இலக்கணதர்க்க சகிதமான யுக்தியோடு நியாயங்காட்டி ஊர்ஜிதப்படுத்தி யிருக்கிறோம். ஆண்டுக்கண்டுணர்க. இதுநிற்க, இவருடைய கலித்துறைகளெல்லாம் "இழுமெனு மொழியி னொழுகுறு மருவிபோற்" செவ்வனே யமைந்திருக்கின்றன. இதின் விதிகளெல்லாம் 'காரிகை'களாதலின் மடூஉ¶ முன்னிலையவாயிருக்கின்றன. காரிகைகளைப் படிக்கும்போதே யானந்தம் ஜனிக்கின்றது. காரிகையால் இலக்கண மெழுதுவதில் இவ்வளவு கைவந்தவர்கள்

‡ Question. *Grammer.. §Truths of Grammer. ||Metre

* சிறுபான்மை வேற்றுமைப்படுத்தி

† Science of language.

‡ The real meaning of the truths of English Grammar.

§ இது மகா-ள-ள-ஸ்ரீ. எம். சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் எம். ஏ. சபாநாயகராக வீற்றிருந்தபொழுது வாசிக்கப்பட்டது. அது அச்சிடப்படுகிறது. சீக்கிரம் வெளிவரும்.

¶ பெண்ணிற்குறைதல்போல.

கிடைப்பது மிகவும் அருமை. இவர் உரைவகுக்கும் சாமர்த்தியமோ அற்புதம்! அற்புதம்! அதிக யுக்தி புத்தியோடும் எழுதப்பட்டிருக்கிறது. இதில் அவருடைய தர்க்கசாஸ்திர வலிமை|| வெளிப்படும். உரையிலே யாங்காங்கு அவர்காட்டும் விசேஷக்குறிப்புகளும், பூர்வ உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் முதலாயினாருடைய மதங்களை மணமழியச் செய்யுங்கண்டனங்களும் வெகுநேர்த்தியாயும் நடுநிலைமையவாயு மிருக்கின்றன. இவர் தம் உரையில் இடை யிடையே தாமே யியற்றிய அழகமைந்த அநேக உரைச் சூத்திரங்களை எளிதில் விளங்குதற்குபொருட்டுச் சேர்த்திருக்கிறார். அவை யெம்போலியர்க்கு மிகப்பயன்படத் தக்கனவாகக் காணப்படுகின்றன. இப்பொழுது யாவரேனு மொருவர் 'திராவிடசப்ததத்வசாஸ்திரம்' ஒன்று எழுதல் வேண்டுமென்று எண்ணங்கொண்டு முயலப் புகுந்தால் இந்நூல் மிகப்பிரயோசனப் படுமென்பதற்கு எள்ளளவுஞ் சந்தேகங் கிடையாது. திரணதூமாக்கினி மகாருஷி "மொழிப் பொருட்காரணம் விழிப்பத்தோன்றா" என்று சொன்னபோதிலும், அவ்வந்தகாரத்திற்கு இந்நூல் ஒரு சூரியன்போன்றதென்பதற்கு ஆட்சேபனை சிறிதுமில்லை யென்பது எமதுதுணிவு.

6. இவ்வந்தணர் சிகாமணி அகத்தியம், தொல்காப்பியம் என்பனவற்றிற்கு முறையே பாணினீயம், ஐந்திரம் என்னும் வடமொழி வியாகரணங்களை முதனூ லெனவுரைப்பர். இவர் வடமொழியில் மகாபாடியம், கையடம், சித்தாந்த கௌமுதி, வாக்கியதீபம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்தகௌத்துவ முதலிய வியாகரண சாஸ்திரங்களிற் றேர்ந்தவரென்றும், தமிழ்மொழியில் அகத்தியந் தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணப் பயிற்சியும், திருக்குறள், திருக்கோவையார், சிந்தாமணி, சிலப்பதிகார முதலிய இலக்கியப்பயிற்சியு மிக்குடையவரென்றும், அவர் மேற்கூறிய 'பிரயோக விவேக'த்துள் எடுத்துக்காட்டாகப் பல இடங்களினும் மேற்கோள் கூறியிருப்பதனால் விளங்கும்.

7. இப்பிரயோக விவேக முடையார் வடமொழியிற் 'சாநகீபரிணயம்' என்னும் நாடகஞ் செய்த இராமபத்திர தீக்ஷிதரிட மிதைப்படித்துக் காட்டி யரங்கேற்றினார் என்ப. அது

"சீதளசந்த்ர முகராம
பத்திர தீக்கிதர்க்குப்
போதொடுசென்று புகல்வோ
மவர்க்கும் பொழுதில்லையேன்
மேதகியிற்றமிழ் செய்பிரயோக
விவேகந் தன்னைப்
பேதமிலாத பதஞ்சலிபாற்
சென்று பேசுவமே."

என நம் தீக்ஷிதரே கூறியிருக்கின்றமையானும்,

"பேர்கொண்டு நின்றபிரயோக விவேகத்தைச்
சீர்கொண்டராமபத்ர தீக்கிதன்றா-னேர்கொண்டு
கேட்டானினிக்கண்ணுற்கேட்கும்பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கா லென்."

எனச் சிறப்புப்பாயிரஞ் செய்தார் கூறுவதனானுங் காண்க. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இந்நூலைப் பதினொரு வருடங்கட்கு முன்னர் அச்சிட்டிருக்கின்றனர். இந்நூலின் பெருமையுணரவேண்டுபவர் அதின் மூலகாரிகைகளைப் படித்து ஆநந்திப்பாராக.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

மாதர் மஞ்சரி.

V. எலிஸபெத் ப்ரை.

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு."*—குறள்.

பூர்வீகத்தில் ஹிந்துக்களுக்குள்ளும் தற்காலம் ஐரோப்பிய ஜாதியாருக்குள்ளும் ஸ்திரீகள் தங்கட்கேலாதன வென்று சாதாரணமாக மதிக்கப்படும்பலதுறைகளில் இறங்கிவேலை செய்து லோகோபகாரிகளாய்ப் பேரும்கீர்த்தியும் பெற்றிருக்கிறார்கள். பெண்பாலார்படித்தால் அவர்கள் பெண்மையை இழந்து விடுவார்களென்னும் தப்பெண்ணம்நம்தேசத்தாருக்குள் இப்பொழுது பரவியிருப்பதுபோலவே, ஆங்கிலேயருக்குள்ளும் இந்நூற்றாண்டின்துவக்கத்திலும் அதற்கு முன்னும் பரவியிருந்தது. இருந்

|| Logical faculty.

* "மணவின் கட்கேணி தோன்றிய அளவிற்றாக ஊறும்; அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும்."—பரிமேலழகர்.

தாலும் அக்காலத்தில் அவர்களுக்குள் விசேஷ புத்தி, வித்தை, பரோபகார சிந்தைமுதலிய உத்தம குணங்கள் மிகுந்துள்ளமாதர்கள், ஜனசாதாரணமான மேற்படி தப்பெண்ணத்துக்குள்பட்டு அவர்கள் அந்தக்கரண சக்தியை விர்த்திபண்ணுது கட்டிமூலையில்போட்டுவிட்டு 'வழக்கம் வழக்கம்' என்கிற பந்தத்துக்குள்பட்டு அதன் விலங்கு பூண்டு தாங்கவில்லை. ஸ்திரீகள் கல்வி, சாஸ்திரம், கலைக்கியான முதலியவை ஓதி அவற்றில் பயிற்சிபெற்றுத் தேர்ச்சியடைந்தால் அவர்கள் உண்மையான பெண்மைக் குணத்தை யிழந்து பெண்களுக்குரிய தங்கள் இல்லறக் கடமைகளைக் கவனிக்காது விட்டுவிடுவார்களென்று சொல்வோர் இத்தேசத்திலிருப்பதுபோல் அங்கிலேய நாட்டிலும் அக்காலத்து அதிகமில்லாதிருக்க வில்லை. இது மிகவும் தப்பான எண்ணம்; உண்மைக்கு ஒவ்வாதது; என்று நாம் வற்புறுத்திக் கூறுமலே விவேகிகளுக்கு விளங்கும். புத்திசாலியான பெண் அறிவுப் பயிற்சி செய்வதால் அவள் தன் கடமைகளை மறந்து போவதற்குப் பதிலாகப் பெண்மைக்குரிய அவள் காரியகடமைகளின் பொறுப்பு பிரயோசனங்களை நன்றாயுணர்ந்து; அக்கடமைகள் காரியங்களை அவற்றிற் குண்மையாகவுள்ள ஏற்றத்திற்கேற்ப மதிப்பாளாவளென்பது வாஸ்தவத்துக்கும் அனுபவத்துக்கும் பொருந்தியதாகும். 'தண்ணீர் நில நலத்தால்' மேம்பட்டு அதன் குணம் பிர்காசிப்பது போல் கல்வியும் அதையடைவோர் குணநலத்தால் பிரகாசிப்பதாகும். மணற்கேணி தோண்ட தோண்ட ஜலம் ஊறுவதுபோல் மாந்தர் படிக்கப்படிக்க அவர்கள் புத்தி விர்த்தியாகுமென்று நாயனாரும் சொல்லியிருக்கிறார். இது இருபாலார்க்கும் பொதுவாகச் சொன்னதன்றே. அனுபவத்திலும் அப்படியே தோன்றக் காணலாம்; முற்காலத்தும் தற்காலத்தும் மேன்மையடைந்து சென்ற எத்தேசத்து மாதர் சரித்திரத்தாலும் விளங்கும்.

அங்கிலேய நாட்டில் பொது விஷயங்களிலுழைத்துப் பெருந்தன்மைக்குப் பேர்போனவர்களான ஸ்திரீ ஜாதிகள் பலருடைய சரித்திரங்களையும்படித்துப்பார்த்தால் மேலேசொல்லிய உண்மை பிரத்தியக்ஷமாக விளங்கும். இவர்கள் பேர் அநந்தம்; ஒவ்வொருவரும்பொது ஜனோபகாரமான ஒரு துறையிலிறங்கியுழைத்து அத்துறையில் அவர்கள் ஜனங்களுக்குச்செய்த நன்மைகளினால் பரோபகாரிகளென என்று மழியாப்புகழுடம்பெடுத் திருக்கிறார்கள். இவர்களில் 'எலிஸபெத் ப்ரை' 'மேரி கார்பென்டர்' 'ப்ளாரென்ஸ் நைத்திங்கேல்' 'ஜோஸெபைன் புட்லர்' 'ஆக்டேவியா ஹில்' என்னும் பேர்கள் மிகவும் பேர்போனவை. இவர்களன்றி கலைக்கியானத்திலும், பாஷாக்கியானத்திலும், சாஸ்திர பயிற்சியிலும், ராஜ்யபாரத்திலும் விசேஷ நிபுணத்துவம் காட்டிப் பேர்பெற்ற மாதர்களுமுளர். இப்படி பிரக்கியாதிபெற்ற மாது சிரோமணிகள் அவர்கள் மணம்பூண்டு இல்வாழ்க்கை நடத்திவந்த பொழுது 'வாழ்க்கைத்துணைநலம்' அவர்களிடத்து வெவ்வளவும் குறைவுபடாது நிறைவுபட்டு விளங்கியது அவர்கள் சரித்திரத்தைப்படிக்க விசிதமாகும்.

இந்த சரித்திரம் எலிஸபெத் ப்ரை என்னும் பரோபகார சிரேஷ்டையைக்குறித்தது. மாதர்கள் அதிகமாய் கல்வித்தேர்ச்சி யடைவதால், அவர்கள் தங்கள் வீட்டுக்கு மட்டுமன்றி நாட்டுக்கு முபயோகமானவர்களாகும் பெருந்தன்மையுடையிருர்களன்றி வீட்டுவேலைகளை விட்டுக் கெட்டுப்போவதில்லை யென்பது இச்சரித்திரத்தால் விளங்கும். எலிஸபேத் ப்ரை 1780-வது வருஷத்தில் பிறந்தாள். ஆனால் இந்த அம்மாள் பரோபகார சிரேஷ்டை யென்று பேரெடுக்கச்செய்த வேலை 1813-ம் வருஷத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இவள் நார்விச் பட்டணத்தில் நர்ணி யென்று பேர்போன ஒரு சம்பத்துள்ள குடும்பத்தில் பிறந்தாள். இவளுடைய பெற்றோர்கள் 'குவேகர்கள்' என்னும் ஒரு உள் மதக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களா யிருந்தார்கள். ஆனால் அம்மதக்கோட்பாடுகளை அவர்கள் ஒழுங்காய் அனுசரித்ததில்லை. அக்காலத்தில் அந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் யாரும் அவர்கள் குடும்பத்துப் பெண்களை சங்கீதம், நாட்டியம் முதலிய வித்தைகள் பயிலவிடுவதில்லை. பெண்கள் உயர்தரப்படிப்புப் படிப்பதும் கூடாதென்று அப்பொழுது தடுக்கப்பட்டிருந்தது. எலிஸபெத்தின் பெற்றோர்கள் முன் சொன்னபடி அம்மதக்கோஷ்டியின் கோட்பாடு

களை அதிக கண்டிப்பாய் மதித்தவர்களில்லையாதலால், அவர்கள் தங்கள் குழந்தைகளை அக்கால சம்பிரதாயத்துக்கு விரோதமாக சங்கீத நாட்டிய முதலிய வித்தைகள்பயிலவிட்டதன்றி, பையன்களைப்போல் பெண்களையும் கணித சாஸ்திரம், லத்தீன் பாஷைமுதலிய உயர்தரப்படிப்பும் பயிலவிட்டு வந்தார்கள். இப்படி நமது எலிஸபெத் இளமைப்பருவத்திலே அவள் கா[illegible]ப் பெண்களை விட மிகவும் மேலானவித்தியாப்பியாசம்பெற்று [illegible]வியின் பயனை யடைந்தவளா யிருந்தாள். சிறு வயதிலே இவளிடத்து இயல்பா யமைந்துள்ள அநுதாபகுணம், பரோபகாரசிந்தை, ஆராயுந் தன்மை, எடுத்தது முடிக்கும் ஊக்கமுடைமையாகிய குணங்கள் இருப்பது வெளிப்படத் தொடங்கின வென்று தெரிய வருகிறது.

இந்த அம்மாள் சிறுபெண்ணா யிருக்கையில் கோயிலில் பாதிரியார் ஒருவர் செய்த பிரசங்கத்தால் மனதுருகி மனிதரில் கடையாராயுள்ளார் கஷ்டங்களை நீக்கி அவர்களைநல்வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணம் இவள்மனதில் உதித்தது. இந்த எண்ணம் மனதில் பதியப்பெற்ற மாது ௨0-வயதில் மணமுடிக்கப்பெற்று புருஷன் வீடுபோய் வாழ்க்கையில் அக்கம்பக்கங்களிலுள்ள ஏழைகள் துயரை நீக்குவதில்சிரத்தையெடுத்துழைத்துவந்தாள். அவளுடைய கணவரும் இந்த சத்விஷயத்திலுழைக்க அந்த அம்மாளுக்குள்ள பிரீதியை யறிந்து அச்செய்கையில் தாமும் அநுதாப சிந்தையுடையவராய்க்காட்டி அவள் சிறு முயற்சியைக் கண்டு களித்து அவளை உற்சாகப்படுத்திவந்தார்.

ஒருநாள் எலிஸபெத் ப்ரை* தெருவோடு போகையில் ஒரு பிச்சைக்கார ஸ்திரீ பிணியால் மிக மெலிந்து நொந்துபோன குழந்தையொன்றைக் காட்டி இவர் பரிதாபத்தைக் கிளப்பிப் பிச்சைகேட்டாள். இயல்பாகவே மிகவும் பரிதாப சிந்தையுள்ள இம்மாதுமனம் அக்குழந்தையின் ஸ்திதியைக் காணவும் அதிக பரிதாபத்தால் நெக்குவிட்டுருக, ஐயோ! வென்றிரங்கி அப்பிச்சைக் காரியுடன் கூடச்சென்று அக்குழந்தைக்கு வேண்டிய உதவி செய்வதாகச் சொன்னாள். உடனே அப்பிச்சைக்காரி மெல்ல தப்பித்துக்கொண்டு போகப்பார்த்தாள். இதனால் அவள் விரும்பியது பணக்கொடையே யன்றி குழந்தைக்கு உண்மையாக உதவி விரும்பினவளல்ல வென்பது பிரத்தியக்ஷமாயற்று. [illegible] *மிஸ்ரஸ் ப்ரை அம்மாள் அப்பிச்சைக்காரியைப் பின்தொட[illegible]ன்றாள். சென்று அவளிருந்தகுடிசைக்குவரவே அங்கு பல பிணிகளால் பிடிக்கப்பட்டு பல படியாக வருந்திக்கொண்டிருந்த குழந்தைகள் பலவற்றைப் பார்த்தாள். உடனே தன்னை வழியை மதித்துப் பிச்சை கேட்டவள் இப்படிப் பட்ட குழந்தைகளைச் சேகரித்து வைத்துக்கொண்டு அவைகள் படும் அவஸ்தைகளைக் காட்டி பரிதாபத்தைக் கிளப்பிப் பிச்சை வாங்கிப் பிழைக்கும் பாதகர் வகுப்பில் சேர்ந்த ஒருத்தியென்றுதெரியவந்தது. இக்காக்ஷியைக் கண்டது முதல் 'எலிஸெபெத் ப்ரை' என்னும் தர்மிஷ்டி மனம் ஒருவகையிலுழைக்கத் தேறிவிட்டது. இதுமுதல் மிகவும் இழிகுலத்தாரும் குற்றம் செய்துபிழைப்பவருமாய்ப் படுகுழியில் விழுந்த இழிகுல வகுப்பு ஸ்திரீகளுடையவும் குழந்தைகளுடையவும் நிலைமையை உணர்ந்து அவர்களை ஒருவாறு சீர்படுத்தி நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவதே அவர் கடமையென்று தீர்மானித்துக்கொண்டு அதற்காகஉழைப்பதே அவர் நோக்கமாயிருக்க வேண்டுமென்று கங்கணம் பூண்டார்.

இத்தீர்மானம் செய்து கங்கணம் பூண்டபின் இது விஷயத்தைப்பற்றி அவருடைய அல்லார் அயலார் சிநேகிதர்கள் இவர்கள் கூடும் கூட்டங்களில் பிரஸ்தாபித்துப் பேசி அக்கீழ் ஜாதியாருடைய நிலைமையில் மற்றவர் பரிதாபத்தைக் கிளப்பிவிட்டு அவர்களைச்சீர்திருத்தும் வேலையில் அவர்கள் அநுதாபத்தைச் சம்பாதி

* அங்கிலேய ஜாதியாருக்குள் பெண்கள் மணமுடிக்கப் பெற்றபின் அவர் பிறந்த குலப்பெயரை விட்டு புகுந்த குலப்பெயரைத் தரித்துக் கொள்வார்கள். நமக்குள் பெண்களுடைய கோத்திரம் புருஷன் கோத்திரமாக மாறுவதுபோல், அவர்கள் கலியாணகாலத்தில் குலப்பெயரை மாற்றிக்கொள்வது வழக்கம்.

* 'மிஸ்ரஸ்' என்பது மனைவிக்குரிய மரியாதைப் பட்டம். கன்னியர்களுக்கு 'மிஸ்' என்றுசொல்கிறது.

த்துக்கொள்ள முயன்றுவந்தாள். இப்படி நாளாவட்டத்தில் இவ்வம்மணி செய்துவந்த முயற்சி பலப்படப்பட அவள் ஜெயில்களிலுள்ள குற்றவாளிகளைக் கண்டு அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர என்ன செய்யலாமென்று உபாயந்தேட ஆரம்பித்தாள். இதற்காக 'நியூகேட்' என்னும் சிறைச்சாலைக்கு அடிக்கடி விஜயமாகப் போய் வருவது வழக்கம். அங்கே ஆண் கைதிகள் பெண்கைதிகள் குழந்தைகள் எல்லாரையும் ஒருமிக்க, ஆடுமாடுகளைப்பட்டியி லடைப்பதுபோல் [illegible] ஒரு அறையில் [illegible] அடைத்துவைத் திருப்பதையும் அதனால்விளையும் தீங்குகளையுங்கண்டு, அவைகளை நிவர்த்திக்க வழிதேடினதன்றி ஜெயிலிலுள்ள கைதி ஸ்திரீகளையும் அவர்கள் குழந்தைகளையும் சன்மார்க்கத்துக்குத் திருப்பலாமென்று அவர்களுக்காக ஜெயிலிலேயொருபள்ளிக்கூடமும் வைத்தாள்; அவளும் அவள் தோழிகளிரண்டொருவரும் தனியாக இப்படி உழைத்து வந்த உழைப்பு காரியத்தில் நல்ல பலன் தருவதாகக் காணப்படவே குற்றவாளிகள் நிலைமையைச் சீர்திருத்தவேண்டிய வழிவகைகளைப்பற்றி அந்த அம்மாள் பொது விடங்களில் பயிரங்கமாகப் பிரசங்கிக்கவும் அதிகாரிகளுக்கு மனுக்களெழுதி அவர்கள் ஒத்தாசையைக்கோரவுமாக இப்படி சிறுகச்சிறுக அவள் முயற்சியைப் பலப்படுத்திக் கொண்டாள்.

முதலில் பலபேர் கூடியசபையில் பயிரங்கமாக நின்று பேச வெகு கூச்சப்பட்டாள். பயிரங்கமாகப் பலரறிய முன்னின் றுழைப்பது அவளுக்கு முதலில் மகா வெறுப்பாயிருந்தது. மனதுக்கும் மிக வருத்தமாயிருந்தது.

"கலங்காதுகண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்."*

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். தன் கடமை யின்னதென்று ஒருதரமுணர்ந்தபின் நாயனார் சொற்படி 'மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த' வேலையினின்று பின் வாங்காமல் சடுதியில் அதைச்செய்யத்தொடங்கினாள். முதலில் மனக்கலக்கமும்கஷ்டமும், கூச்சமும் உண்டபண்ணுவதாக விருந்தவேலை போகப்போகவெகு சல்லிதாக விருந்ததன்றி மனதுக்கு இன்பமும் ஆறுதலும் பயக்குவதாயிற்று.

இந்தப் புண்ணியவதி இழிகுலத்தினரிலும் இழிவானவரான இவ்வகுப்பாரிடத்து உண்மையான அபிமானம் வைத்து அவர்கள் நிலைமையைச் சீர்திருத்திவர முயற்சிக்கையில் அவரிருந்த ஊரார் பலர் இவர் செய்கையை விநோதமா— மென்று சொல்லி இவளை ஏகத்தாளம் செய்து பழித்தார்கள். அப்போதிருந்த பிரபலமான கவிவாணர் ஒருவர் இவர் சிறைச்சாலையில் பள்ளிக்கூடம் வைத்துழைத்து வருவதைப்பற்றி ஏளனம் செய்து அவ்வேலையை விட்டுவிடும்படி ஒரு பாட்டுப்பாடிப் பிரசங்கித்தார். அவரோடு கூட வசித்தவர்களில் அநேகர் இப்படி அவர் செய்கையைக்கண்டு நகைத்துப் பரிகாசம் செய்தும், சிலர், 'இச்செய்கை யெல்லாமேனுனக்கு? விவாகமாகிப் பிள்ளைகுட்டிகளைப் பெற்றவளுக்கு தன் புருஷனையும் பிள்ளைகளையும் போஷித்துக் காப்பாற்றி வருகிற கடமையை விட வேறு கடமையென்ன விருக்கிறது?' என்று இவ்வேலையை இகழ்ந்து காட்டியும், அந்தம்மாள் தான் சரியென்று கண்ட வேலையைவிடாது ஊக்கமுடன் செய்துவந்தாள்.

"துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி*
இன்பம் பயக்கும் வினை."

இவ்வேலையை இவ்வளவு ஊக்கத்தோடு செய்து வந்தும் இவர் தம்மில்லத்தில் செய்யவேண்டிய வீட்டு வேலைகளைப் பாராதுவிடவில்லை: தன் புருஷனுடையவும் ௧௨ - குழந்தைகளையுடைய தன் பெரிய குடும்பத்தி னுடையவும் க்ஷேமத்தை நாடிச் செய்யவேண்டிய பல குடும்பகாரியங்கள் நித்தியக்கடன்கள் இவற்றில் எதையும் அலக்ஷியம்செய்தவராகவில்லை. தான் வேறு பொது விஷயத்திலும் கவனம் வைத்துழைப்பதால் இல்லறத்துக்குரிய தம் கடமைகள் எதையும் கவனிக்காது விட்டதாகச் சொல்ல ஏது மிடமின்றி அவைகளை யெல்லாம் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார். பிந்தி இவர் குடும்பத்துக்குப் போதாக்காலம்வந்து இவர்களுக்கு கஷ்டதிசை வந்தது. அப்போதும் இப்பொதுநல காரியத்தைக் கைவிடாமல், தம் கஷ்டதிசையாலுற்ற வருத்தங்களை இத்தர்மவிஷயத்தி லுழைக்கு முற்சாகத்தில் மூழ்கிப்போகச் செய்து தாமும் தம் குடும்பத்தோடு சந்தோஷமாயிருந்து, துர்ப்பாக்கியத்தால் துன்பசாகரத்தில் மூழ்கியுள்ள திக்குத் திசையற்ற கீழ்ஜாதி ஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர முயற்சித்து வந்தார். இவர் செய்த முயற்சியால் தம் சொந்த தேசத்திலுள்ள ஜெயிலேற்பாடுகள் சீர்பட்டு, குற்றம் செய்து கெட்டுப்போனவர்களி லனேகர் இவர் ஏற்பாட்டை யனுசரித்து ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களால் நல்ல கதிக்குத் திரும்பிவர வழியமைந்ததன்றி, அந்நிய தேசங்களில் கதியற்றவர்களுக்கும், கெட்டுப் போனவர்களுக்குமுள்ள ஸ்தாபனங்களை இவர் விஜயம் செய்து அவைகளின் காரிய விசாரணையில் குறைவுகளை எடுத்துக் காட்டினதால் அந்த ஸ்தபானங்களும் சீர்பட்டு நல்ல நிலைமைக்கு வரவும் காரணமாயிருந்தனர். கைதிகள், குற்றவாளிகள், நாதியற்ற குழந்தைகள் இவர்களன்றி இன்னும் எளிய ஸ்திதியிலும் துர்ப்பாக்கியத்திலுமுள்ள அநேக வகுப்பினர்களுடைய நிலைமை இவருடைய பரோபகார முயற்சியால் சீர்படுத்தப்பட்டு அவர்கள் நல்லஸ்திதிக்குக் கொண்டுவரப்பட்டார்கள். ஏழைகள் படும் தேகவருத்தங்கள் பலவற்றை நீக்கி, அவர்களுக்கு சன்மார்க்க போதனை செய்துவர முயற்சித்ததன்றி கூலிக்காரர்களும் வீட்டு வேலைசெய்து பிழைப்பவர்களும் ஆகிய வகுப்பார் ஒழிந்த வேளைகளில் உல்லாசமாக விருந்து வாசிக்க அவர்களுக்குப் புஸ்தகம் கடன் கொடுக்கும் புஸ்தகசாலைகள் சிலவும்ஏற்படுத்தினர். இப்படி அவர்சாகுங்காலமளவும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு நன்மைசெய்ய நானாவிதத்திலு முழைத்துவந்து, கடைசியில் ௧௮௪௫-ம் வருஷத்தில் அவருடைய ௬௫-வது வயதில் யாவரும் மெச்சப் பரோபகாரியென்று புகழுடம்பெடுத்து நிலையற்ற இவ் யாக்கையைத் துறந்து பரமபதமடைந்தார்.

C. V. S.

* "மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினை பின்கண் பின்னைசதலின்றி நீட்டித்தலையொழிந்து செய்க"—பரிமேலழகர்.

* (துணிவு=கலங்காமை.) துணிவாற்றி=தளராதிட்ப முடையராய்.

மனோன்மணீயம். IV.

ஐந்தாம் அங்கம் முதற்களம், யாமத்தில், கோட்டைக்கு வெளியே. வஞ்சியர் *பாசறை யருகில், சுருங்கைவழியாய் வந்த குடிலன், அவ்வழியைச் சேரனுக்குக் காண்பித்துப் பாண்டியனைக் கீழ்ப்படுத்தினால், தனக்குச் சேரன் பாண்டிநாட்டையளிப்பானென்று யோசித்துக்கொண்டு, தன் ஊக்கத்தை மெச்சத்தொடங்கினான்:—

"ஊக்கமே பாக்கியம். உணர்விலார் வேறு
பாக்கியம் †ஊழெனப் பகர்வதெலாம் பாழ்.
சாக்கியம் ‡ வேறென்? சாத்தியா சாத்தியம்
அறிகுறி பலவால் ஆய்ந்தறிந்து ஆற்றும்
திறமுள ஊகமே யோகம். அன்றி
வான்கா டதனில் வறிதே சுழலும்
(நக்ஷத்திரங்களை நோக்கி) மீன்காள்! வேறு முளதோ விளம்பீர்?
மதியிலா மாக்கள்§ விதியென நும்மேல்
சுமத்து சுமையும் தூற்றுஞ் சும்மையும்
உமக்கிடு பெயரும் உருவமும் தொழிலும்,
அமைக்கும் குணமும், அதில்வருவாதமும்,
யுக்தியும் ஊகமும் பக்தியும் பகைமையும்
ஒன்றையும் நீவிருணரீர்!"—

தான் கனவிற்கண்ட மாதின்மேற் காமங்கொண்டு பாடியுலாவிக் கொண்டிருந்த புருஷோத்தமவர்மனை யித்தருணத்திற் கண்ணுற்ற குடிலன், அவன் திவ்வியவடிவைக்கண்டு தன் நாஸ்திகக் கொள்கைகள் கூடத்தடுமாறப், பின்பு சேரனென்றறிந்து, அவனை வணங்கிப் புகழத் தொடங்கினான். தான் வெகு ஜீவகாருண்ணியம் உள்ளவன் போற் சொன்னதாவது:—

"ஆ! ஆ! விடியில்
வாளா மாளும் மனிதர் தொகுதி
யெண்ணி யெண்ணி யெரிகிற தென்னுளம்.
என்னுதி கருணை! இவர்க்குள் தாய்க்கொரு
புதல்வராய் வந்த பொருநரெத் தனையோ?
வதுவை முற்றுறு வ்யவரெத் தனையோ?
புதுமணம் புரிந்த புருடரெத் தனையோ?
நொந்தசூல் காதலர் நோவு பாராது
வந்துஇவண் அடைந்த மள்ளரெத் தனையோ?
தாய்முகம் வருந்தல் கண்டுழும் தன்சிறு
சேய்முகம் மறவாச் செருநரெத் தனையோ?
செயிருற முழந்தாள் சேர்ந்தமு பாலனாஞ்
துயிலிடைத் துறந்த சூரரெத் தனையோ?"

இவ்விதங்கூறித், தன்னரசனைப்பழித்துத், தன் உபாயத்தை வெளியிட்டானாக, புருஷோத்தமவர்மன், "சேரன் விஜயமுந் திருடான்" என்றுகூறி,

* பகைமேற்சென்றோர் தங்குமிடம். 'கூடாரம்'
‡ சாக்ஷி † விதி § மனிதர்

குடிலனுக்கு விலங்குகள் பூட்டுவித்து, அவனைப் பயமுறுத்திச் சுருங்கையைத் தெரிந்துகொண்டு, அதன்வழியாய்ச் சில வீரருடனும், குடிலனுடனும், புறப்பட்டான்.

அடுத்தகளம் மிகவும் விசனகரமாகவே யிருக்கிறது. பலதேவனை மணம்புரியச் சம்மதித்த மனோன்மணி. எவ்வளவு மன ஊக்கத்துட னிருந்தபோதிலும், நமக்கு விசனமே யுண்டாகிறது.

அவள் தன் தகப்பனுக்கு அளித்தவிடை, அவள் குணத்துக்குத் தக்கதே. வாணி நடேசனை மணம்புரிய வேண்டுமென்றும், நாராயணனைச் சிறையினின்றும் நீக்கிவிட வேண்டுமென்றும், தன் துக்கத்தைப் பாராட்டாமல் அவள் அரசனிடம் வேண்டிக்கொண்ட வரங்களும், அவளுடைய தயாளகுணத்துக்கே தக்கன.

தன்பொருட்டு விசனமடைந்த வாணியை உறுதி சொல்லித் தேற்றும்பொழுது,—

"என்மனம் ஆசவே யிசைந்தேன். மெய்மை.
எதென் வெண்ணினை யிவ்வுயிர் வாழ்க்கை?
தீதற வின்பந் துய்ப்ப நீ யெண்ணி
லீதல வதற்கா முலகம். இமையவர்
வாழ்க்கையி லுந் துயர் வந்துறு மெனிலிவ்
யாக்கையி லமையுமோ நீக்கமி லின்பம்.
எனக்கெனக் கென்றெழு மிச்சையாதிகளெனு
மனக்களங்கங்களா மாசுகளனைத்துந்
தேய்த்தவைமாற்றித் திகழொளியேற்றி
மண்ணிய மணியாப் பண்ணிட வென்றே
வைத்தவிக்கடிய வாழ்க்கையாஞ் சாணையை
பைத்தபூஞ் சேர்க்கையாப் பாவித் துறங்கு
யத்தனஞ் செய்திடு மேழையர்போல,
என்ன நீ யெண்ணினை ! வாணி ! இந்தச்
சுகவிருப்பேநமைத் தொழும்புசெய் பந்தம்.
தபமே சுபகரம். தபமென்? உணருவை?
உடுப்பவை யுண்பவை விடுத்தர ணடைந்து
செந்தீ யைந்திடைச் செறிந்தமைந் துறைத
லாதியா வோதுப வல்ல. அவற்றைத்
தீதறு தபமெனச் செப்பிடார் மேலோர்.
இவ்வுயிர் வாழ்க்கையி லியைந்திடுந் துயரம்,
ஐயோ ! போதர தென்றே வன்னோர்
போனகந்துறந்து கானகம்புகுந்து
தீயிடைநின்று சாவடைகின்றார்?
தந்தைதா யாதியா வந்ததன் குடும்ப
பந்தபாரத்தினைப் பேணித்தனது
சொந்தமா மிச்சைக டெறந்து மற்றவர்க்
கெந்தநாளுஞ் சுக மியைந்திடக் கடமையின்
மூந்துகின்றவரே முதற்றவ முனிவர்."

என்று சொல்லும் மொழி, யெவ்வளவு நன்றாயிருந்தபோதிலும், அதிற்சில பாகங்கள் சமயத்துக்குத் தக்கன வல்லவென்று சிலர் கொள்ளலாம். இவ்விஷயத்தை இன்னுஞ் சில மொழிகளிலுங் காணலாம்; ஆனால் இது எளிதில் வரையறுக்கத்தக்கதல்ல. பின்வருபவற்றைப்பற்றி மனதில் முற்குறிகள் தோற்றுவதை யிக்களத்திலுங் காணலாம்.

அடுத்தகளம் (அதாவது இந்நாடகத்தில் கடைசிக்களம்) பாண்டியன் அரண்மனையில் மணமண்டபத்தில். காலம், கலியாண முகூர்த்தத்திற்கு நியமிக்கப்பட்ட நடுநிசி. மணவறைக்கு அடுத்ததாயும், அதினின்றும் திரையால் மறைக்கப்பட்டதாயு முள்ள அறை, சுருங்கை தொடங்கும் அறையென அறிகிறோம். அரசன், பலதேவன், சுந்தரமுனிவர், படைவீரர் முதலிய யாவருமிருக்கக், குடிலனை மாத்திரங் காணோம். அவனிருக்குமிடம் நமக்குத் தெரியும்; அவர்களுக்குத் தெரியாது. புருஷோத்தமவர்மன் சுருங்கை வழியாய் வந்து, மணவறைக்கோலத்தைக் கண்டு திகைத்து, அடுத்த அறையில் மறைந்து நின்றான். ஜீவகன் தன் சபையோருக்குக்கூறும் மொழியில் முதற்பாகத்தை வரைவோம்:—

"என்குலம்காக்கவென அருள்பழுத்துக்
கங்கணங்கட்டிய கருணாநிதிகாள்!
மனத்திறத்தாழ்ந்த மதிமந்திரிகாள்!
எனக்கெனஉயிர்வாழ் என்படைவீரர்காள்!
ஒருமொழிகூறிட அனுமதிதருமின்.
ஆடையின்சிறப்பெலாம் அணிவோர்சிறப்பே!
பாடையின்சிறப்பெலாம் பயில்வோர்சிறப்பே.
எள்ளரும் மதிகுலச் சிறப்பெலாம், எமர்காள்!
கள்ளமில்நும்முனோர் காப்பின்சிறப்பே.
ஆதலினுமக்கு உபசாரம்யான் ஓதுதல்
மெய்க்குஉயிர் கைக்குநா விளம்புதல் மானும்"

ஜீவகன், மனோன்மணியைப்பற்றிக்கூறிப், பின்பு குடிலனைப் புகழ்ந்து, செய்யப்புகும் விவாகத்துக்குச் சபையோரின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டபின், மனோன்மணியை யழைத்து வரும்படி நாராயணனுக்கு ஆஞ்ஞாபிக்க, மனோன்மணி, வாணி முதலிய தோழியருடன் திரைப்பின் வந்து நின்றாள். அரசன், பாடும்படி வாணியை வேண்டிக்கொள்ள அவள் குறிப்பாய்க் கூறிய கவிமூன்றுகளில் ஒன்றை வரைவோம்:—

"நீர்நிலையின் முதலையின்வாய்
நிலைகுலைந்த ஒருகரி*முன்
ஓர்முறையுன் பெயர்விளிக்க
உதவினைவந்து எனஉரைப்பர்;
ஆர்துயர அளக்கர்†விழும்
அறிவிலியான் அழைப்பதற்குன்

* கஜேந்திரன். † கடல்.

பேர்தெரியேன் ஆயிடினும்
பிறகிடல்நின் பெருந்தகையே."

பின்பு, மணமாலையைக் கையில் வாங்கிக்கொண்டு பலதேவன் எதிரேவந்த மனோன்மணியைப், புருஷோத்தமவர்மன் கண்ணுற்றவுடன், அவன் திரைவிட்டு வெளியேவந்துநிற்க, அவனைப்பார்த்த மனோன்மணி உடனே அவனிடஞ்சென்று அவனுக்கு மாலையைச்சூட்டி, அவன் தோளோடுதளர்ந்து மூர்ச்சித்தாள். இவ்விதம், கனவில் ஒருவரை யொருவர் கண்டவர் நனவிற் கூடினார்கள். எல்லோருக்கும் முதலில் உண்டான திகைப்பையும், குடிலனுடைய உண்மை நிலையைப்பார்த்தவுடன் அவன்பேரிலுண்டான கோபத்தையும், புருடோத்தமவர்மன் இன்னானென்றறிந்தவுடன் பிறந்த ஆநந்தத்தையும், வாழ்த்துமொழிகளையும்பற்றி விவரிக்கவேண்டியதில்லை.

என்சிற்றறிவுக்குத் தோற்றியபடி, சிலவிடங்களிற்சுருக்கியும், சிலவிடங்களிற் பெருக்கியும், யான் கூறியதே 'மனோன்மணீயம்' என்ற நாடகத்திற்சொல்லப்படும் கதையாம். அதில் அமைக்கப்பட்டிருக்கும் வேதாந்தப் பொருளைப்பற்றிப் பேசப்புகுதல் யான் எடுத்துக்கொண்ட விஷயத்துள் அடங்கியதல்ல. ஆங்காங்குள்ள *கிளைச்சிலேடைகளைப்பற்றியொன்றுஞ்சொல்லாமல் விடுத்ததும் இக்காரணம் பற்றியே. ஆங்கிலேய நாடகங்களின் இலக்கியமுறைப்படி யிந்நாடகத்தைப் பரிசோதித்தலும் யான் எடுத்துக்கொண்டதல்ல. இந்நாடகத்தின் கதையை ஒருவாறுகூறிச் சிலபாகங்களையும் எடுத்துவரைந்தால், எடுத்துவரையப்பட்டவற்றின் சேர்த்தியையும் என்னாற் கூறப்பட்டவற்றின் குறைபாடுகளையும் நோக்கியாவது, சிலர் இப்புஸ்தகத்தை வாங்கி வாசிக்க விரும்புவார்கள் என்பதே என் எண்ணம். நம்மவர்களில் அநேகர் நல்லபுஸ்தகங்களை யொருபொழுதும் பார்த்திராததினால்தான் வீண்காலங் கழிக்கிறார்களே யொழிய, ஒருதரம் நல்ல புஸ்தகங்களின் உருசியை அனுபவித்துவிட்டால் பிற்பாடு சும்மா இருக்கமாட்டார்களென்பது திண்ணம். ஆனால் எளிதில் யாவருக்கும் பொருள்படக்கூடிய புஸ்தகங்கள் மிகவும் அபூர்வமாயிருப்பது ஒருபெருங்குறையே. நாளிகேரபாகமாயுள்ள காவியங்கள் அநேகமிருக்கின்றன. இப்புஸ்தகமோ, பழையகாவியங்களைப்போல், அவ்வளவு கடினமானதில்லை. சொற்ப சிரமமெடுப்பாராயின், நம்மவர்களில் அநேகர், இப்புஸ்தகத்தை வாசித்து மிக்கசந்தோஷத்தை யடைவதுமன்றி ஆங்கிலேயப்பயிற்சியின் குணகுணங்களைப்பற்றியும் ஒருவாறு கொஞ்சம் அறிந்துகொள்ளலாம்.

* உதாரணமாக; சிவகாமிசரிதையில்.

நானெழுதியதை வாசித்ததினால், ஒருவராவது 'மனோன்மணீயம்' என்ற புஸ்தகத்தை வாசிக்க வேண்டுமென்ற விருப்பத்தை யடைந்திருப்பின், அதுவே எனக்குப் போதுமான கைம்மாறன்றோ? அது எனக்குக் கிடைக்காமற்போனாலும், ஓர் நல்லவிஷயத்தை யெடுத்துக் கூறிப்புகழ்வது கிடைக்கற்பாலதோ? கரும்புதின்னக் கூலியும்.வேண்டுமோ?

அ. மாதவய்யர், பி. ஏ.

சாவித்திரி சரித்திரம்.

ஆறவது அதிகாரம்.

இவ் வதிகாரத்தில் நான் நடேசன் வீட்டுக்காரரைப்பற்றிச் சொல்லுகிறேன். அவர்களும் எங்களைப் போல் 'அம்மன் சந்நிதித்தெரு'வில் தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் இருந்தவீடு மிகவும் பெரிது. என் அத்தை யம்மாள் ஒருநாள் சொன்னபடி எங்கள் வரும்படி அந்த வீட்டுக்கு விளக்குப்போடத்தான் சரியாயிருக்கும். அப்படி யிருந்தபோதிலும் நடேசன், அதை விட்டுவிட்டு எங்கள் வீட்டுக்குப் படிக்கவந்து விடுவான். எங்கள் தெருவில், அந்த வீட்டு வாசலில் மாத்திரந்தான் 'லாந்தர்' போட்டிருக்கும். அது உத்தியோகஸ்தர் வீடு என்று பார்த்தவுடன் அறிந்து கொள்ளலாம், ஒருவேளை சந்தேகம் கொஞ்சமிருந்தால், மாடியில் வைத்திருக்கும் பூச்செடிகளைப் பார்த்தவுடன், அது நீங்கிவிடும்.

நடேசன் தமையனார் பெயர் சுந்தர சாஸ்திரிகள். நான் முதலில் அவர்பெயரைக் கேட்டவுடன், அவர் சாஸ்திரங்களில் தேர்ச்சி யடைந்த வைதீகரென்று நினைத்திருந்தேன். பிற்பாடு தான் அவருக்குக் கிரந்தஎழுத்துக்களே தெரியாதென்றும், ஆவணியவிட்டத்தன்றுகூட அவர் சந்திபண்ண மாட்டாரென்றும், அவர் பாட்டனார் சாஸ்திரியா யிருந்ததால் அவரும் அப்பட்டத்தை வைத்துக்கொண்டாரென்றும், கோபாலன் எனக்குச் சொன்னான். அவர் மனைவி பெயர் காமாக்ஷி. நானும்கோபாலனும், நடேசனைப்போல், அவளை 'மன்னி'* யென்று கூப்பிடுவது வழக்கம். அவளுடைய கணவர் அவளைக்'காமு' என்று வழக்கமாய் அழைப்பர். அவர்களுக்கு மூன்று வயதுள்ள ஓர் ஆண் குழந்தையும், ஒருவயதுள்ள ஓர் பெண் குழந்தையும், இருந்தன. அவர்களுடன் இலக்ஷ்மியும் இருந்தாள். அவள் நடேசனுடைய மூத்த சகோதரி. ஒன்பது வயதாயிருக்கும்பொழுதே புருஷனை யிழந்தவள். அவளுக்கு அப்பொழுது இருபது வயதாயிருக்கலாம். அவள் வேறு போக்கின்றி 'மன்னி'க்குத் துணையாக இருந்தாள். அவளைப் பற்றி எனக்கு ஒன்றும் எழுதத் தோன்ற வில்லை.

இவர்களைத் தவிர, ஒரு பிராமண வேலைக்காரப்பையனும், இரண்டு சூத்திர வேலைக்காரர்களு மிருந்தார்கள். நான் முதல்முதல் அவர்கள் வீட்டுக்குப் போன பொழுது நடந்த சமாசாரங்கள் நன்றாய் ஞாபகத்திலிருக்கிறபடியால், அவற்றைக் கூறுகிறேன்.

நான் திருநெல்வேலிக்கு வந்த தினத்திலேயே நானும் நடேசனும் இஷ்டர்களாய் விட்டோம். இரண்டு நாள்களுக்குப் பிற்பாடு, நான் என் அத்தையுடன் மத்தியானம் அவன் வீட்டுக்குப் போனேன். அன்றைக்குச் சனிக்கிழமையா யிருந்ததால் நடேசன் தமையனார் 'கச்சேரி'க்குப் போயிருந்தார். நாங்கள் போகும்பொழுது காமாக்ஷியம்மாள் வாசித்துக் கொண்டிருந்தாள்; இலக்ஷ்மி 'தோசை'க்கு அரைத்துக்கொண்டிருந்தாள்.

காமாக்ஷி.— வாருங்கள்! வாருங்கள்! அடே! பையா! சங்கரியம்மாள் வந்திருக்கிறார்கள். பலகையெடுத்துப் போடடா.

என் அத்தை.—எதற்கு? வேண்டாம். தரையில் குப்பை யில்லையே. கீழேயே உட்காருகிறேன்.

நான் காமாக்ஷியம்மாளையும், இலக்ஷ்மி யம்மாளையும் சேவித்துவிட்டு, என் அத்தை பக்கத்தில் உட்கார்ந்துகொண்டேன்.

காமாக்ஷி.—புதன்கிழமையன்று வந்தீர்களாக்கும். நடேசன் சொன்னான். இந்தக் குட்டிதான் உங்கள் மருமகளோ?

என் அத்தை.—ஆமாம். அம்மா! அந்தக் கட்ன்காரி மூன்று வயதிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டாள்—,

காமாக்ஷி.—நாமென்ன செய்யலாம்? தெய்வச் செயல். குட்டி! உன்பேரென்னடி?

நான்.—என்பேர், சாவித்திரி.

காமாக்ஷி.—(இலக்ஷ்மி யம்மாளைப் பார்த்து) நீங்களேன் வாய்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? இன்னும் இரண்டு வழிமாவுக்கு அரிசியிருக்கிறதே. பிற்பாடு ஜலம் கொண்டுவரவேண்டாமா? இப்படி வாய் பார்த்தால் எப்படி?

உடனே இலக்ஷ்மி யம்மாள், தலையைக்கவிழ்ந்து கொண்டு விரைவாய் அரைக்கத் தொடங்கினாள்.

பிற்பாடு கொஞ்ச நேரத்துக்கு ஒருவரும் பேசவில்லை. என்னமோ போலிருந்தது. எனக்கு, எங்கேயோ பிடித்துக்கொண்டு விட்டாற்போ லிருந்தது. கடைசியாக, எதாவது பேசும்பொருட்டு, என் அத்தை காமாக்ஷியம்மாளைப் பார்த்து "அதென்ன புஸ்தகம்?" என்று கேட்டாள்.

காமாக்ஷி.—இதா, 'இராமநாடகம்'

அத்தை.—அதென்ன?

காமாக்ஷி....இராமாயணக் கதையைக் கீர்த்தனங்களில் பாடியிருக்கிறது. அடே பையா! நடேசனைப் பார்த்துக் கூட்டிக்கொண்டுவா. இந்தக் கீர்த்தனத்துக்கு இராகந்தெரியவில்லை. இந்தக் குட்டிக்கு எங்கே பார்த்திருக்கிறீர்கள்?

அத்தை:—எங்களுக்குள் தகுந்த பிள்ளைகளைக் காணோம். எவனுக்கு மாலையிடப் போகிறாளோ? இன்னும் ஒன்றும் நிச்சயமாகவில்லை.

காமாக்ஷி:—இனிமேல் பிறக்கப்போகிற இல்லையே? குட்டி, எங்கள் நடேசனைக் கலியாணம் பண்ணிக்கொள்கிறாயா? இங்கிலீஷ் வாசிக்கிறான்: அழகாயிருக்கிறான்.

அத்தை:—அவனுக்கு எந்தப்பாக்கியவதிமாலையும் கையுமாய்க் காத்துக்கொண்டிருக்கிறாளோ? நேற்று நான் விளையாட்டாக நீங்கள் சொன்னதையேசொன்னேன். நடேசன் என்னுடைய பவழமாலையை யெடுத்துச் சாவித்திரி கழுத்திற்பூட்டி, அவள் கையைப் பிடித்துக்கொண்டு, என்னை வந்து நமஸ்காரம்பண்ணினதுந்தவிர, அதுமுதல், 'அவளைப் பரிகாசமாகப் 'பெண்டாட்டி' யென்று கூப்பிடுகிறான்.

என் அத்தையம்மாள் பேசிமுடிய, நடேசனும் வந்துவிட்டான். உடனே அவனைப்பார்த்துக் காமாக்ஷியம்மாள் சிரித்துக்கொண்டு சொன்னதாவது:—

"நடேசா! நீ வெகுயோக்கியன் போலிருக்கிறது. நாங்களெல்லாம் என் அம்மங்காரை*யுனக்குக் கலியாணஞ் செய்யவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்க, நீயாக வேறொருகுட்டியைச் சம்பாதித்துக்கொண்டு, இப்பொழுதே முதல் 'பெண்டாட்டி' யென்று கூப்பிட ஆரம்பித்து விட்டாயே? இது சரியா?"

நடேசன் தலையைக்கவிழ்ந்து புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "மன்னீ! எதற்குக் கூப்பிட்டாய்?" என்று கேட்டான். உடனே காமாக்ஷியம்மாள், தான் கூப்பிட்ட விஷயத்தைச் சொல்ல, நடேசன், "ஓ! இந்தக் கீர்த்தனமா? இதை பைரவி இராகத்தில் 'நடராஜர்தய' என்ற மெட்டில் பாடவேண்டும்." என்று சொல்லிக் கொஞ்சம் பாடிக்காட்டிவிட்டு, "நான் போகிறேன். கோபாலன்காத்துக்கொண்டிருப்பான். இரசமாய் வாசித்துக் கொண்டிருந்தோம்." என்று புறப்பட்டான். என் அத்தையம்மாளும், "அம்மா! நாங்களும்போகவேண்டும். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. தோசைக்கு நனைத்து வைத்திருக்கிறது." என்று சொன்னாள். காமாக்ஷியம்மாள், "ஆனால்சரி." என்றாள்.

* 'மன்னி':—தமிழ்ப்பேசும் பிராமணர்களுக்குள் தமையன் தாரத்துக்கு 'மதினி' என்றுபெயர். அது 'மன்னி' யென்றும் வழங்கப்பட்டு வருகிறது. சூத்திரர்களிற் சிலர் 'அண்ணி' யென்றழைக்கிறார்கள்.

* பிராமணர்களுக்குள் மாமன்மகளுக்குப்பெயர்.

அத்தை:—இலக்ஷ்மியம்மா! நான் வரட்டுமா?

இலக்ஷ்மி:—"போகிறீர்களா? போய்விட்டுவாருங்கள்." என்று மெதுவாய்த் தலையைக்கவிழ்ந்துகொண்டே சொன்னாள், உடனே நாங்கள் நடேசனுடன் வீட்டுக்கு வந்துவிட்டோம்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, இலக்ஷ்மியம்மாள் கன்னங்களில்கண்ணீர்பெருகுவதை நான் பார்த்ததால், அதைப்பற்றி நினைத்துக்கொண்டேவந்தேன். எனக்கும், தன்னையறியாமல், துக்கம் நெஞ்சையடைத்தது. நான் பொறுக்க முடியாமல், "அத்தையம்மா! இலக்ஷ்மியம்மாள் ஏன் அழுது கொண்டே யிருந்தார்கள்?" என்றேன்.

அத்தை:—அவர்கள் அழுதார்களா? நான் பார்க்கவில்லையே.

"ஆம்; ஆம். ஏன் அழுதார்கள்?" என்று மறுபடியுங்கேட்டேன்.

அத்தை:—"எதற்கோ அம்மா: எனக்குத் தெரியுமா? காமாக்ஷியம்மாள் எதாவது சொன்னார்களாக்கும்."

நடேசன்:—"அக்காள் அழுததை நானும் பார்த்தேன். அத்தையம்மா! நீங்கள்தான் எனக்குத்தாயார். நான் வேறு தாயாரை யறியேன். உங்களிடத்தில் சொல்லுவதில் எனக்குவெட்கமில்லை. மன்னி யெங்களைக் கொடூரமாய் நடத்துகிறாள். அண்ணா அவர்களாவது வேறு அந்நியராவது இருக்கும்பொழுது என்னை வெகுபக்ஷமாய்த்தான் நடத்துகிறாள். தனித்திருந்தாலுங்கூட அவள் அம்மங்காரை நான் கலியாணஞ் செய்து கொள்ளப்போகிறதாக, எனக்குக்கொடுமை செய்கிறதில்லை அக்காளுக்கோ, அப்படிக்கூடவில்லை; எப்பொழுதும் கஷ்டந்தான், சகலவேலைகளும் அவள்தான் செய்யவேண்டும். மன்னி புடவைகளைக்கூட அவள்தான் தோய்த்துப் போடவேண்டும். இதுவும் தவிர, அண்ணா அவர்களிடத்தில், இல்லாத கோள்களை யெல்லாம் சொல்லுகிறாள். அவர்களைப் போல் எங்களுக்கு அன்புள்ள தமையனார் கிடையாது. மன்னி வருவதற்கு முன், அக்காளுக்கு நேர்ந்த கொடுங் கஷ்டத்தை அவள் சிறிதும் உணரக்கூடாதென்று, அவளைக் கண்ணுக்குக் கண்ணாய், தாயைவிட அருமையாய், நடத்திவந்தார்கள். அவர்களுக்குக்கூட இப்பொழுது சிலசமயங்களில்கோபம் வந்துவிடுகிறது. மன்னிபேரிலுள்ள இஷ்டத்தால் அவள்சொல்லையே வேதவாக்காக மதிக்கிறார்கள். உண்மை தெரிந்தால், அண்ணா அவர்கள் மிகவும் விசனப்படுவார்களே யென்று நான் பயப்படுகிறேன். அன்றியும் அவர்களிடத்தில் மன்னியைப் பற்றிக் கோட்சொல்ல எனக்கு நாக்கெழவில்லை. நான் சிலசமயங்களில்கொடூரத்துக் குள்ளாவதைமறைத்துச் சகித்துக் கொண்டு அக்காள் மனதையும் தேற்றிக்கொண்டே வருகிறேன். மற்றைப்பிள்ளைகள் கவலையின்றி விளையாடித்திரியும் பாலிய வயதில், தாயில்லாக் குற்றத்தால், நான் இவ்வளவு கஷ்டங்களுக்கும் மனவிசாரங்களுக்கும் உள்ளாகவேண்டுமென்று பிர்ம்மா என் தலையில் எழுதினான். அநுபவித்துத் தான் தீரவேண்டும்." என்று சொன்னான்.

நடேசனுக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று. எனக்கும் கண்ணீர் பெருகிற்று. என் அத்தை யம்மாளுக்கும் கண்ணீர் பெருகிற்று. கோபாலன் மாடியிலிருந்து "நடேசா! நடேசா" என்றுகூப்பிட்டான். உடனே நடேசன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு போய் விட்டான்.

சாவித்திரி.

குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

(187-வது பக்கத்தொடர்ச்சி.)

இப்படி 300ரூ பெறும்படியான சால்வை தரித்த அலங்காரவிநோதி சத்தியவதியினிடத்தில் கீடன்பட்டாள்.

சத்தியவதி வீட்டுக்கு வந்தவுடன் தன்புருஷனைப் பார்த்துச்சொல்லுகிறாள்—"என்ன ஆச்சரியம், அவ்வளவு ஐசுவரியத்தை உடைத்தாயிருந்தும் அவளால் 5ரூ கூட தர்மத்துக்குக் கொடுக்க முடியவில்லையே. நான் விரும்பினது அவ்வளவுதான்"—

தர்மசீலன்—"எனது பிரியமுள்ள சத்தியவதி உனக்கு இந்த சங்கதி தெரியாததினால் அலங்காரவிநோதி யிடத்தில் 5ரூ யில்லாதிருப்பதைக் கண்டு அவ்வளவு ஆச்சரியப்படுகிறாய். அந்தசங்கதியைப்பற்றி உனக்குத் தெளிவாய்ச் சொல்லுகிறேன், கேள். நாம் இரண்டு மதத்திற்கு முன் இருந்ததைப்பார்க்கிலும், இப்பொழுது அதிக பணக்காரர்களாயிருக்கிறோ மென்று நீ ஒப்புக்கொள்ளுகிறா யல்லவா. நமக்கு இப்பொழுது வருகிற மூன்று மாசத்து வாடகை கொடுக்கவும், புஸ்தகங்கள் வாங்கவும், இன்னும் தர்மம் செய்யவும் பணமிருக்கிறது. ஆனால், நாமிப்பொழுது சம்பாதித்திருப்பதை யெல்லாம்விலையுயர்ந்த சாமான்கள் வாங்குவதில் செலவழித்துவிட்டு, நீயும் அலங்காரவிநோதியின் ஆடைகளைப்போலவே, அவ்வளவு விலையுயர்ந்த ஆடைகளை தரித்துக்கொள்ள ஆரம்பித்தால், நீயுமவளைப்போலவே கொடுக்கத் திறமையில்லாமல் தானிருப்பாய்."

சத்தியவதி—"ஆனால் நீங்கள் சொல்லியபடி வரும்படிக்குள்ப்பட்டு செலவழிக்கிறவர்கள் தானா பணக்காரர்கள்."

தர்மசீலன்—"சந்தேகமென்ன? என்றும் குறைவில்லாதஐசுவரியம்சம்பாதிக்கவழியைக்கண்டுபிடித்திருக்கும் என்னைக்கலியாணம் செய்து கொண்டதில் வெகு சந்தோஷப்படவேண்டும்."

சத்தியவதி—"அதுமட்டுமல்ல, உங்களுக்குக் கொஞ்சம் பணமிருந்த போதிலும் நாம் வெகு பணக்காரர்களென்று நினைத்துச் சந்தோஷப்படுந்திறமையுமிருக்கிறது."

மறுநாள், சத்தியவதி காளியினிடத்திற்குச்சென்று அவளுடைய பிள்ளைகளுக்குத் தர்ம பாடசாலையொன்று ஏற்படுத்தி அன்னவஸ்திரம் முதலானதும் தர்மத்துக்குகொடுத்து நடத்தவேண்டுமென்று, தான் முயற்சி செய்வதைப்பற்றிச் சொன்னாள். காளிக்கு இதைக் கேட்டவுடனே ஆனந்தம் பெருகிற்று. சத்தியவதி மேற்சொல்லியதர்மத்துக்குகையொப்பக்காரர்களின் பெயர்களைச் சொல்லத்தொடங்கினாள். அலங்கார விநோதியின் பெயரைச் சொன்னவுடனே காளி சொல்லுகிறாள். "அம்மணி, அவள் எனக்கு நியாயமாய்க்கொடுக்க வேண்டிய சம்பளத்தைக் கொடுத்துவிட்டால் போதும். எனக்காக அவள் தர்மத்துக்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை."

"நான் ஒருவருஷகாலம் சம்பளமில்லாமல் அவள் வீட்டில் பாத்திரங்கள் தேய்த்திருக்கிறேன். ஆகையால் தான், அம்மணி, நான் நோயால் வருந்தும்பொழுது, என் நிலைமையைப் பார்த்து இரக்க முற்றுஎனக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுப்பாளென்று நினைத்து என்னைவந்து பார்க்கும்படி அவளுக்குச் சொல்லியனுப்பினேன். அவள் சிலகாசுகள் கொடுத்தது உங்களுக்குத் தெரியுமே. அது போக, இன்னும் எனக்கு வரவேண்டியபாக்கி அதிகமாயிருக்கிறது."

இதைக்கேட்டவுடனே சத்தியவதிக்கு வெகு ஆச்சரியமும், துக்கமுமுண்டாகி, வெகுநேரம் பேசாமலிருந்துவிட்டு "இவர்களைப்போல் வேறொருவரும் அப்படி யிருக்கமாட்டார்களென்று நம்புகிறேன்" என்றாள்.

காளி—கொஞ்சம் தாமதத்துடனே "நான் இதுவரையிலும் அப்படிப்பட்டவர்களைப் பார்த்ததில்லை. ஆனால், பெரும்பாலும் பணக்காரர்கள் ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய ஒவ்வொரு நாள் கூலியும் அவர்களுக்கு எவ்வளவு முக்கியமானதென்று சற்றேனும் கவனிக்கிறதில்லை. சம்பளத்தை உடனே கொடுத்து விடவேண்டுமென்று நாங்கள் கேட்டால், எங்களை மரியாதை தெரியாதவர்களென்று நினைக்கிறார்கள். நான் வெகுதடவைகளில் இன்றைய சம்பளம் வந்து தான் மறுநாள் என் குழந்தைகளுக்குச் சோறு போடும்படியான ஸ்திதியிலிருந்திருக்கிறேன்" என்றாள்.

சத்தியவதி—"பணக்காரர்களுக்கு உங்களுடைய சம்பளம் ஒரு பெரிதா. நீங்கள் வேலையை விட்டு நீங்கி விடுவதாகச் சொன்னால் உடனே கொடுத்து விடுவார்களே."

காளி—"அவர்களுக்கு அது வெகு அல்பமாயிருப்பதினால் தான் எங்களுக்கு அது எவ்வளவு முக்கியமானது என்பதை அறியக்கூடவில்லை. எப்படியாவது, அவர்களிடத்தில் நாம் கேட்கும் சமயத்தில் சில்லரையிருக்கிறதில்லை.

"எனக்கு ஞாபகமிருக்கும், ஆகட்டும், எப்பொழுது கொடுத்தாலென்ன. நாளைக்குக் கொடுக்கிறேன்" என்பார்கள். மேலும், நான் வேலை செய்யுமிடங்களில் காலையில் போனால் அவர்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எழுந்திருக்கிறவரைக்கும் காத்துக்கொண்டிருப்பேன். இவ்விதமாகக்காலத்தை வீணாய்க்கழிக்கும்படி நேரிடும். அன்றைக் கூலிக்காரர்களுக்குக்காலமாவது பணந்தானே. என் புருஷன் தச்சுவேலை செய்து வந்தார். அவர், தான் பணக்காரர்களிடத்தி லிருந்து பெற்றதைப் பார்க்கிலும், அதிகமாய்க்கொடுத்திருக்கிறேனென்று சொல்லுவது வழக்கம். ஏனென்றால், அவர், அவர்களுக்காக வெகு காலத்தை வீணாய்க் கழித்திருக்கிறார். பணக்காரர்கள் அவரைக்கூப்பிட்டு, இங்கே புஸ்தகம்வைப்பதற்குஒரு அறைதடுக்கலாமா என்று கேட்பார்கள். அவர், அவர்களுடைய இஷ்டப்படி எல்லாவற்றையும் அளந்து கணக்குப் பண்ணியான பிறகு, அவ்வேலைகள் செய்யவேண்டாமென்று சொல்லுவார்கள். இப்படிக்கு அவர் சிரமப்பட்டதுதான். லாபமாய்ப் போய்விடும்" என்றாள்.

சத்தியவதி—"நீ பணக்காரர்களைப் பற்றிச்சொல்லும் குற்றங்களெல்லாம் அவர்களுக்குத் தர்மசிந்தனை யில்லாததினால் உண்டாகவில்லை; அவர்கள் தீர்க்காலோசனை செய்யாததினால் உண்டாகிறதென்று தோன்றுகிறது." என்றாள்.

காளி—"ஆம். இக்காலத்தில் ஏழைகளுக்கு நியாயம் கிடைப்பதைப்பார்க்கிலும், தர்மம் அதிகமாய்க் கிடைக்கிறது. ஏனென்றால் என்னுடைய சம்பளத்துக்காகவும், மற்ற விஷயங்களுக்காகவும் பணக்காரர்களிடத்தில் காத்துக்கொண்டிருப்பதில் நான் வீணாய் செலவழித்திருக்கிற காலத்துக்கெல்லாம் எவரேனும் சம்பளம் கொடுத்திருப்பாரானால், நானிப்பொழுது எவ்வளவோ நல்ல ஸ்திதியிலிருப்பேன். எங்களுக்குக்கிடைக்கக்கூடியசம்பளமெல்லாம் சிறுதொகைதான். என் புருஷன் அது சிறுதொகையா யிருப்பதினால்தான் உடனே கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லுவது வழக்கம். ஏனென்றால், பெருந்தொகைகளைப்போல், இவைகளுக்கு வட்டியுண்டோ." என்றாள்.

சத்தியவதி தன் புருஷனிடத்தில் மேற்சொல்லிய சம்பாஷணையைச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது "நீங்கள் முன்னமேயே அலங்காரவிநோதிதன் ரவிக்கையில் அவ்வளவு பணம் செலவிட்டால், ஏழைகளுக்குக் கொடுக்க கொஞ்சமேனு மிருக்காது தான் என்று சொன்னது எவ்வளவு சரியாயிருக்கிறது. இனி எப்பொழுதாவது ஒரு மிகவும் விலையுயர்ந்த ஆடையை நான் பார்க்கும்பொழுது எனக்குக் காளியின் ஞாபகம் வராமலிருக்காதென்பது நிச்சயந்தான்" என்றாள். தர்மசீலனுக்கு வர வர வேலை அதிகரிக்கவே, புகழும் பெருகிற்று. புகழ் பெருகவே வேலையு மதிகரித்தது.

இப்பொழுது அவனும், சத்தியவதியும் வெகு சுகமாய் வாழ்ந்தார்கள். சத்தியவதிக்குக் குழந்தைகள் பிறந்தன. தாயார் குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளிலெல்லாம், சத்தியவதியை உதாரணமாய் எடுத்துச்சொல்லும்படியாக அவ்வளவு நேர்மையாய் நடந்துவந்தாள். குழந்தைகள் இன்னு மதிகரிக்கவே குடித்தனக் காரியத்தில் எப்பொழுதும் சோம்பலின்றி வேலை பார்த்துவந்தாள். முதலில், இவள், வீட்டுவேலை செய்வதற்கு ஒரே ஒரு வேலைக்காரிமட்டும் வைத்திருந்தாள். ஆனால் சில சமயங்களில் காளியின் சிறு பெண்ணை ஒத்தாசைக்காக அழைப்பதுண்டு. இப்படிக்கு அநேக இரவும் பகலும் சந்தோஷத்துடனே வேலை செய்துவந்தாள். இப்பொழுது தர்மசீலனுக்கு வரும்படி அதிகமாய் வந்தபடியினால், இவர்களுக்கு தங்களுக்கு வேண்டிய சுகங்களைத் தேடிக்கொள்ளத் திறமையுண்டாயிற்று. ஆனால், அவர்கள் குடித்தனம் ஆரம்பிக்கும்பொழுது வரும்படிக்குட்பட்ட செலவு செய்கிறதென்று செய்துகொண்ட தீர்மானத்தை அவர்கள் மறக்க வில்லை. ஒவ்வொரு வருஷ முடிவிலும் கொஞ்சம்பணம் மிகுந்தது. அதைச் சாக்கிரதையாய் வட்டிக்கு விட்டு வந்தார்கள்.

எனக்கு தரித்திரமும் வேண்டாம், ஐசுவரியமும் வேண்டாமென்று உண்மையாய்ச் சொல்லக்கூடியவர்கள் அநேகரில்லை. இப்படிப்பட்ட நடுநிலைமையில் தான் தர்மசீலனிப்பொழு திருந்தான். நல்ல தேகசௌக்கியத்தையும், அழகுள்ள குழந்தைகளையும்பெற்று, வைத்தியனாக எங்கும் புகழப்பட்டு, சிநேகிதனாக எங்கும் நேசிக்கப்பட்டு, தன் சுகதுக்கங்களிலெல்லாம் உடன்பட்ட தன் பிரியமுள்ள பெண்சாதியுடன் வாழும்பொழுது, இனி இவ்வுலகில் வேறொன்றும் தனக்கு வேண்டியதில்லை யென்று அவனுக்குத் தோன்றிற்று. சில சமயங்களில், தர்மசீலனும், சத்தியவதியும் பணக்காரர்கள் வீட்டுக்குப்போவதுண்டு. அங்குள்ள நேர்த்தியா யலங்கரிக்கப்பட்ட அறைகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் தனக்கு மப்படிப்பட்ட வீடுவேண்டுமென்று சத்தியவதி விரும்புகிறதேயில்லை.

வீட்டுக்குத் திரும்பி வந்தவுடனே தொட்டிலின் பக்கத்திலுட்கார்ந்து ஒரு குழந்தையை முத்தமிடுவதிலும், மற்றொரு குழந்தைக்கு வேண்டிய ஆகாரங்கள் கொடுப்பதிலும், தன்னைப்போல பாக்கியசாலி வேறொருவருமில்லை யென்று நினைப்பாள்.

இப்படிக்கு தர்மசீலனுடைய சரித்திரத்தின் இப்பாகத்தை யெடுத்து எவ்வளவு சொன்னபோதிலும், மேன்மேலும் ஆனந்த முண்டாகுமே தவிர வேறில்லை. கணவனும் மனைவியும் பிறர்கையை யெதிர்பாராமல் வெகு பரிசுத்தமான போகங்களை யனுபவித்து மிகத் திருப்தியோடு வாழ்ந்தார்கள். சுபாவமாயிவர்களிருவரும் வெகுதர்மசிந்தனையுள்ளவர்கள். தர்மசீலனுடைய நற்குண, நற்செய்கைகளை யறிந்து சந்தோஷிக்கக் கூடியவர்களில் தனகோடி செட்டியாரைப்போல் வேறொருவருமில்லை. தர்மசீலன் அவருடைய வியாதி முற்றிலும் சௌக்கியம் பண்ணக்கூடாதென்று தெரிந்துகொண்டு தற்கால உபசாந்தியாய் அவருடைய அவஸ்தையை சற்று தணிக்கும்படி உபாயங்கள் செய்துவந்தான்.

தனகோடி செட்டியாரோ, தர்மசீலனும் சத்தியவதியும் பணம் சம்பாதிப்பதற்குச் செய்யும் முயற்சியைப் பார்க்கும்பொழுது தன்னுடைய ஐசுவரியத்தினால் உண்டாகும் சுகங்களை இவ்வளவென்று மதிக்கத்தெரிந்து கொண்டார். இப்படி யிருந்தபோதிலும் அவர்களிடத்தில் வெகு அன்பும், மரியாதையும் வைத்து அவர்களுடைய சிறிய புறக்கூட்டில், ஒரு அரண்மனையிலுள்ள சந்தோஷத்தையும், சுகத்தையும் பார்க்கிலும், மிகுந்த சந்தோஷமும், சுகமுமிருக்கிறதென்று அடிக்கடி சொல்லுவதுண்டு. கொஞ்சகாலம் சென்றபிறகு தனகோடிசெட்டியார் மிகவும் மெலிந்துபோய் கடைசியா யிறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு தான் தர்மசீலன்பேரில் வைத்திருந்த மரியாதைக்கு அடையாளமாக தர்மசீலனுக்கும் சத்தியவதிக்கும் ரூ 5000 கொடுக்கும்படி உயிலெழுதி வைத்திருந்ததாகத் தெரியவந்தது. இப்பணத்தை அவர்கள் வட்டிக்குவிட்டு ஒருபொழுதும் அந்த முதலை யெடுத்துச் செலவுசெய்கிறதில்லை யென்று தீர்மானஞ் செய்து கொண்டார்கள்.

அவர்களுடையகுடும்பம் விருத்தியானதைப்பற்றி நாம் ஏற்கனவேசொல்லியிருக்கிறோம். அவர்களுடைய 'சிறிய புறக்கூடு' அதிலிருந்த ஜனங்களுக்கு போதாமல் போயிற்று. தனகோடி செட்டியாருடைய பணம்வருவதற்கு முந்தியே வேறு வீடுவாங்கிக் கொள்ளத்தீர்மானித்திருந்தார்கள். ஆனல் இப்பணம் வந்துவிட்டபடியால் பட்டணத்தின் வெகு சேர்த்தியான ஒரு பாகத்தில் வீடுவாங்கிக் கொள்ளக்கூடும்.

ஆனல் வேறு வீடுவாங்குவதற்குக் காரணம் தங்களுடைய குழந்தைகளுடைய சௌக்கியத்துக்குத்தானென்று சொல்லிக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

க. ஜயராமய்யர், பி. ஏ.

—:0:—

ஆயுள்வேதபாஸ்கரன்.

இந்தியநாட்டின் வடக்கிலே சிந்தியத்திற்கப்பால் விந்தியத்திற்கப்பால் இராஜக்கிரகம் என்றொருதேசமுளது. அதனை நெடுநாள் முன்னர் பிம்பிசாரனென்னும் அரசன் ஒருவன் அரசியல் வழுவாது செங்கோல் செலுத்தி ஆட்சிசெய்துவந்தான். அவனுக்கு அஜாதசத்துரு, அபயன், ஜீவககுமாரபந்தன் என்னும் பெயர்பெற்ற மூன்று புத்திரர்களுண்டு. மூவரில் மூத்தவனாகிய அஜாதசத்துருஎன்பவன் பட்டத்திற்கு உரியவனாதலின், ஏனையிருவரும் தாந்தாமொரு கைத்தொழில் கற்று உய்தல்வேண்டுமே என்று எண்ணியிருந்தனர்.

இரண்டாவது குமாரனாகிய அப்யன் அரசனிடத்தில்அக்கருத்தை அறிவித்துக் கம்மியத் தொழிலில் விம்மிய ஒருவனை அடைந்துஅத்தொழில் பயில்வானாயினன். இளையவனாகிய ஜீவககுமாரபந்தன் இராசனிடம் சென்று தன் உள்ளக்குறிப்பை உணர்த்தினன். உடனே பிம்பிசாரன், "ஆயின், ஜீவகா! நீ எத்தொழில் கற்க விரும்புகின்றாய்?" என்று கேட்டான். மைந்தன், "அண்ணா! ஆயுள்வேதம், ஆராய ஆசை கொண்டுள்ளேன்" என்று கூறினன். அரசனும் அங்ஙனேசெய்க என்று பணித்தான்.

ஜீவககுமாரபந்தன் ஆயுள்வேதியரை அடைந்து, மருத்துவநூல் நுணுக்கங்களைக்கூர்ந்து உய்த்துணர்வானாகி மிகத்தேர்ச்சியடைந்தான். அதன் பின்னர், ஆயுதசிகிச்சையில்சிறந்தவனாகியும்கபாலந்திறக்குஞ் சிகிச்சையொன்றுமே கைவந்திலனாகித்தந்தையிடம் அடைந்து, "தந்தாய்; கற்க கசடறக் கற்பவை" என்றது வேதம். அடியேன் ஆயுள்வேதத்தை ஆராய்ச்சிசெய்துஅரியபெரியசிகிச்சைகள் பலகற்றேன். கபாலத்தைத்திறந்து சிகிச்சைசெய்வதை அறிந்தாலொழிய என் பாண்டித்தியம் பூர்ணபாண்டித்தியமாகாது. இக்குறை ஒழிந்தாலொழிய என் மனமும் அவாஅடங்காது. ஆகவே இதனை எவ்விதத்திலாயினும் கற்றுத்தீரவேண்டுமென உறுதிகொண்டேன். இந்த வித்தையில் கைபோனவர் ஆத்திரேயர் என்னும் ஆயுள்வேதியர் பெருமான் ஒருவரேயாவர். அவர்தக்ஷசிலம் என்னும்திருப்பதியிலேஎழுந்தருளியிருக்கின்றார். அவரை அடைந்து வழிபட்டு அவ்வித்தை அறிந்துவரும்பொருட்டாக அடியேனுக்கு விடைதந்தருள்க" என்று வேண்டினன். அரசனும் அதற்கு இசைந்து தக்ஷசிலத்தின் மன்னவனாகிய புஷ்கரபூபதிக்கு "என் அருந்தவச்செல்வனாகிய ஜீவகன் என்கின்றவன் ஆசிரியர் ஆத்திரேயரிடத்தில் ஆயுள்வேதத்தின் சூக்ஷ்ம மர்மங்களை அறியவேண்டிவருகின்றான். ஆதலின் அவனுக்குச் செய்வன செய்க" என்று கடிதம் போக்கினன்.

ஜீவகனும் தந்தைபால் விடைபெற்றுக்கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு வழிநடந்து சிலநாள் சென்றபின் தக்ஷசிலஞ் சேர்ந்து புஷ்கரனைக்கண்டான். புஷ்கரனும் ஜீவகனை வழிநடந்த இளைப்பாற்றி நீராட்டிச் சீராட்டிச் சிறப்புப்பலசெய்து அழைத்துக் கொண்டுபோய் ஆத்திரேயர் முன்னிலையில் விடுத்து, "ஐயீர்! கண்டீர். இவனாகின்றவன் மன்னர்மன்னன் பிம்பிசாரன் மக்கள் மூவரில் இளையவன். இவனை ஜீவககுமாரபந்தன் என்பர். மருத்துவநூலில் மிக்க உழைப்புள்ளவன். மண்டை ஓட்டைத்திறக்கும் சிகிச்சை ஒன்றனையும் தேவரீர்பால் உபதேசிக்கப்பெறும்படி பாவம் இத்தனைதூரம் வந்தடைந்தான். இவனைப்பற்றி அடியேன் இன்னும்சொல்லத்தகுவதொன்றுமில்லை. இச்சிறுவனைத் தங்கள் தலைமகனாகக்கொண்டுஇவன்மீது ஒருகண்மலரைச்சாத்தியருளல்வேண்டும். அடியேனுக்குச்செலவு கொடுத்தருள்க" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான். ஜீவககுமாரனும் ஆசிரியர்க்கு உள்ளங்குளிர வழிபாடென்னப்படுவனவெல்லாம் ஒன்றொழியாமல் நிறைந்த அன்புடன் செய்துவந்தான். ஆசிரியரும் "ஆ! ஆ! மாணாக்கன் என்றால் இவனுக்கேதகும்; நமது நிழலைப்போல்கின்றான். குளிருக்குத் தீக்காய்வாரையும்போல்கின்றான். நமக்குக் கைவந்த வித்தையை இவனுக்கு அங்கை நெல்லியாய்க்காட்டிக் கொடுத்தல்வேண்டும்" எனத் திருவுளங்கொண்டு குளிரக்கடாக்ஷித்துவந்தார்.

ஜீவகன் தன்னுடைய ஆசிரியர் கூறுவது கூறுமுன்னரே ஏகசந்தகிராகியாய்ப் பாடங்கொள்ளும்சூக்ஷ்மபுத்தியுடையனாயிருப்பதைக்கண்ட ஆத்திரேயர் அடங்காத ஆநந்தங்கொண்டவராகித் தாம் நோயாளரைப் பார்க்கப்போகும்போதெல்லாம் அவனையும் உடனழைத்துச் செல்வாராயினர். இங்ஙனம் ஒழுகும்போது ஒருநாள் ஆத்திரேயர் ஒரு நோயாளனைக்கண்டு நாடிபரீக்ஷைசெய்துஇன்னமருந்து உட்கொள்வது என்று திட்டப்படுத்திவிட்டுத் தமதிருப்பிடம் சென்றடைந்தார். அதுகண்ட ஜீவகன் "இந்நோயாளன் இம்மருந்தினை உட்கொண்டால் இன்றைக்கேஇறப்பதுதிண்ணமாகும். இப்போதுஇதைச் சொன்னல் ஆசிரியர்மேல் குற்றங்கூறுவதாகும். என்ன செய்யலாம் என்று எண்ணிக்கொண்டே ஆசிரியருடைய இருப்பிடம் சேர்ந்தபின், வேறுகாரியமாகப் போகிறதுபோல நோயாளனுடைய வீட்டைமீண்டும் அடைந்தான். அடைந்து 'பொய்மையும் வாய்மையிடத்தபுரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்னும் வேதவாக்கியமே துணையாகஉபாயம்ஒன்று செய்தான். பிணியாளனிடம் அதிக விரைவாக வருவதுபோல நடித்து "வைத்தியர்முன்னர்க் கூறியமருந்தினை உட்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கைபடுத்தி இம்மருந்தையே உட்கொள்ளும்படியாகத் தங்களிடம் ஓடோடியும் சென்று கூறிவா என்று சொல்லியனுப்பினர். எச்சரிக்கை" என்று திட்டப்படுத்தி வந்துவிட்டான். வந்தவன் இது செய்தியை ஆசிரியரிடம் சொல்வது தற்புகழ்ச்சியாகுமே என்று நினைத்து சும்மா இருந்துவிட்டான். நோயாளியும் ஜீவகன் சொல்லிக்கொடுத்த மருந்தை உட்கொண்டு முன்னிலும் நோய் பதின்மடங்கு தணிந்து இலகுவாய் எழுந்து உலாவிக் கொண்டிருந்தான். மறுநாள் ஆத்திரேயர் போய் அந்நோயாளனைக் கைபிடித்துப்பார்க்க அவன் முன்னிலும் ஆயிரமடங்கு நோய்தணிந்து இலகுவாய்எழுந்துலாவ சக்திஉடையவனாயிருத்தலைக்கண்டறிந்து "குணமதுகைவிடேல்" என்பதற்கிசைய "அம்மருந்தையே இன்னும் இரண்டொரு வேளை உட்கொண்டாயானல், உன்நோய் பரிஷ்காரமாகப் போய்விடும்" என்றுசொன்னர். அப்போது அந்த வியாதியஸ்தன் "முன்னே தாங்கள் கொடுத்தீர்களே அதுவா அல்லது பின்பு ஜீவகன்கையில் கொடுத்தனுப்பினீர்களே அதுவா? என்றுகேட்டான். கேட்கவே, ஆத்திரேயர் கலக்கமெய்தி "முன்னர் என்னகொடுத்தேன்? அப்புறம் என்ன கொடுத்தனுப்பினேன்? காட்டு" என்ன, அவனும் அவற்றை எடுத்துக்காட்ட, ஆசிரியர் "அடா! மதிமோசம் போனேன். அந்தமட்டில் ஜீவகன் இவன் ஜீவனைப்பிழைக்க வைத்தான். வைத்தியருக்கு எப்போதும் சமயோசிதமான புத்திநுட்பம் இருக்கவேண்டும்" என்று நினைத்து, "ஜீவகன் கொண்டுவந்தமருந்தையே உண்பாய்" என்றார். அதுமுதல்ஆசிரியர் ஜீவகனைத் தம்மரிய உயிராக எண்ணித் திருவருள்பாலித்து வந்தார்.

ஆசிரியர்ஆத்திரேயரிடத்தில் ஜீவககுமாரனேயன்றி அனேக பிராமணச்சிறுவர்களும் சிஸ்ருஷை செய்து சிகிச்சைநூல் கற்று வந்தனர். ஆத்திரேயர் ஜீவகன்மீது அன்பு கொண்டிருப்பதைக்கண்டு பொறாதவர்களாகி பார்ப்பனச் சிறுக்கர்கள் ஆசிரியரை அடைந்து "சுவாமீ! அடியோங்களும்தங்களை வழிபட்டுப்பிழைக்கஎண்ணியிருக்கும்சிஷியர்களல்லவோ? ...களுக்கு எங்களைக் காட்டில் உள்ள சிறப்பு என்ன. அவனுக்குமாத்திரம் அகிலவித்தைகளையும் அதிக பிரீதியுடன் கற்பிக்கின்றீர்களே; இது தகுமோ?" என்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்ட ஆசிரியர் 'மாணாக்கர்களே! கேளுங்கள், நான் எல்லோரையும், ஒருகண்ணிலேபார்ப்பவன். நீங்கள் இப்படிக் குறைகூறுவதைக் கேட்க எனக்கு மனநோகின்றது. உங்களெல்லோரையும் ஒருங்கே என்முன்னிலையில் வைத்துக்கொண்டு தானே மருத்துவம் கற்பிக்கின்றேன். அவனைமாத்திரம் அதிகரகசியமாய்வேறிடத்தில் வைத்துக்கொண்டு கற்பிக்கின்றேனா? இல்லையே. அவன் ஏகசந்தகிராகியாய் இருக்கின்றான், யாதொன்றையும் குறிப்பினல் அறிந்து கொள்ளும் நுண்ணறிவுஉடையவனாக இருக்கின்றான். அது என்னுடைய குற்றமல்லவே!" என்று சொன்னர். அதுகேட்ட பார்ப்பனப்பிள்ளைகள் "எங்களுக்கில்லாத புத்திகூர்மை அவனிடத்தில் மாத்திரம் அதிசயமாக என்ன கண்டீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அவ்வாசிரியர் "நல்லது, இதுகாரியத்தை உங்கட்கு நான் அதி சீக்கிரத்தில் தெரிவிக்கிறேன். அதுவரையில் பொறுங்கள்" என்று சொன்னர்.

மாணாக்கர்களை ஒவ்வொருவனாக அழைத்து மருந்து கடைக்குப்போய் ஒவ்வொரு சரக்கின் விலையை விசாரித்தறிந்து வரும்படி அனுப்பினர். பிராமணப்பிள்ளைகள் ஆசிரியர் தத்தம்மை வேண்டிய அந்தந்தச் சரக்கின் விலையை மாத்திரம் கேட்டறிந்துவந்தனர். ஜீவகன் பலபல சரக்குகளின் விலையையுங் கேட்டுக்கொண்டு வந்தான்; அனைவரும் வந்து சேர்ந்தபிறகு ஆசிரியர் அவனவனைத் தாம் வேண்டின பொருளேயன்றி மற்றும் ஒவ்வொன்றின் விலையைக் கேட்க அவனவன் "தாங்கள் கட்டளையிட்டதைமாத்திரம் விசாரித்துவருவது கடமையென்று அதன் விலையை விசாரித்து வந்தேன். வேண்டுமானல் மறுபடியும் போய் இப்போது வேண்டின சரக்கின் விலையை விசாரித்து வருகிறேன்" என்றுசொல்ல, ஜீவகன் மாத்திரம் எவ்வெந்த சரக்கின் விலையைக்கேட்டபோதிலும் பளிச் பளிச்சென்று சொல்லிவந்தான்.

ஆசிரியர் பின்னுமொருமுறை ஜீவகன் ஆற்றலை† அச்சிறுவர்களுக்குச் செம்மையாக விளக்கவேண்டுமென்றெண்ணி, அனைவரையும் நோக்கி, "அதோ காண்கின்ற குன்றத்தையடைந்து அங்கு நின்றும் ஔஷதி‡

† ஆற்றல் — திறமை ‡ ஔஷதி — மருந்து சரக்கு

யல்லாத தொன்றைக் கொண்டுவொருங்கோள் பார்ப்போம்" என்றுஏவினார். சிறுவர்களும்அங்ஙனமேசென்றுஅக்குன்றினை ஆராயத்தொடங்கினார்கள். அவனவன், எவ்வெதனை ஒஷதியல்லவென்று நினைத்தானோ அவ்வதனைக்கையிலெடுத்துக் கொண்டுவந்தான். ஜீவகன் ஒரு கோரையைக் கிள்ளிக்கொண்டு வந்தான். இவர்கள் வருகின்ற வழியில்அந்தணச்சிறுவர்கள்ஒரு யானையின் அடிச்சுவடுகளைக்கண்டு அவைகளை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜீவகன் அவர்களை அணுகி"என்னபார்க்கின்றீர்கள்? நானும் சற்று பார்க்கட்டும்" என்று எட்டிப்பார்த்துச் சுற்றிவளைத்து நோக்கிச் சாவதானித்து "ஐயமார்களே! இவை ஒரு பெண்யானையின் அடிச்சுவடுகள், அந்த யானையும் வலக்கண்குருடு: இன்றைக்குக் குட்டிபோடும்.அதுவும் ஆண்குட்டி. அந்தயானையின்மேல் ஒருபெண்பிள்ளை ஏறிக்கொண்டுபோனாள். அவளுக்கும் வலக்கண்குருடு: அவளும் கருப்பவதி: இன்றைக்குப் பிள்ளைபெறுவாள்" என்றான். பிராமணச்சிறுவர்கள்அனைவரும்"இந்தஜீவகன் என்னடா!சித்திரம் பேசுகிறான், நாமெல்லாரும் ஒன்றாகத்தானே வந்தோம்; பெட்டையானையாம்: அது குட்டிபோடப்போகிறதாம். அதன் மேலும் ஒரு பெண்பிள்ளையாம். அவளும் பிள்ளைபெறப்போகிறாளாம், நம்மிடத்தில் அண்ட மளக்கிறானே" என்று கைகொட்டிச்சிரித்து பரிகாசஞ்செய்துகொண்டே வழிநடந்து வந்து ஆசிரியரிடம் சேர்ந்தார்கள்.

ஆசிரியர் அப்பார்ப்பனச்சிறுவர்கள் கொண்டுவந்த பச்சிலைகளைநோக்கி ஒவ்வொன்றாக "இது வயிற்றுவலிக்காகும், இதனால் தலைவலிதீரும், இது கட்டிகளின்மேல் வதக்கியிட உதவும்: இது கியாழமிட்டுக் கொடுக்க ஜன்னிபாதத்தைத்தொலைக்கும்.இது சுவாசகாசத்தைக்கண்டிக்கும்: இது குஷ்டநோய்போக்கும்" என்றிப்படியாகக் கழித்துவந்து "இவைகளெல்லாம் ஒஷதிகளே ஆகின்றன" என்றார். பின் ஜீவகனை நோக்கி "நீ கொண்டுவந்ததென்ன? காட்டு. பார்க்கலாம்" என்று கேட்க, ஜீவகன் "குன்றுமுழுதும் துருவித்திரிந்தேன்; கண்டன கண்டனவெலாம் ஒவ்வோர்நோய்க்கு மருந்தாகும் ஒஷதிகளாகவே இருக்கின்றன. வெறுங்கையாக வருவதும் சாமர்த்தியமல்லவே. ஒஷதியல்லாத தொன்றைக்கொண்டுவர வேண்டுமே. இந்தக்கோரையைக்கொண்டு வந்தேன்" என்று சொல்லிக் கோரையைக் காட்டினான். ஆசிரியர் "இதனாலாகும்பயன் என்னை?" என்றுகேட்க, "ஒருவனைத் தேள் கொட்டினால் இந்தக் கோரையினால் வேது பிடிக்கலாம்" என்றுசொன்னான். உடனே ஆசிரியர் புன்னகை செய்தார். அதுகண்ட பிராமணச்சிறுவர்கள், ஜீவகன்மேல் வெறுமப்புக் கொண்டவராய் ஆசிரியர் நகையாடினார் என்று நினைத்து, "ஐயீர்! இவன்திறத்தை இவ்வளவுதானென்று நினைத்தீர்களோ. நாங்கள் வந்துகொண்டிருக்கும்போது வழியில் ஒருயானையின் அடிச்சுவடுகளைக் கண்டோம். இந்த அறிவாளன் அவை ஒருபெண்யானையின் சுவடுகளென்றும், அந்த யானையும் வலக்கண்குருடு. இன்றைக்குக்குட்டிபோடுமென்றும்; அந்த யானையின்மீது ஒருபெண்பால் சாரிபோயினள், அவளும் வலக்கண்குருடு, கருப்பவதி, இன்றைக்குப் பிள்ளைபெறுவாள் என்றும் பிரத்தியக்ஷமாகக் கண்டதுபோல விசித்திர வார்த்தைகள் பேசினான்" என்று சொன்னார்கள்.

இதையெல்லாங் கேட்ட ஆத்திரேயர் "அப்பா! ஜீவகா! இதெல்லாம் மெய்தானோ?" என்று வினவினார். அதன்மேல் ஜீவகன்: "ஆம் சுவாமி" என்றான். அதன்மேல் ஆசிரியர் "அடிச்சுவடுகளால் ஆண்யானை அல்லது பெண்யானை என அறிவதெப்படி?" என்றுகேட்டார்.

ஜீவகன்: 'சுவாமி! ஆண்யானையின் அடிச்சுவடு வட்டமாயிருக்கும். பெண்யானையின் அடிச்சுவடு நாற்கோணமாயிருக்கும்' என்று விடைகொடுத்தான்.

ஆசாரியர்: "அது வலக்கண்குருடென்றஎங்ஙனம் அறிந்தாய்?"

ஜீவகன்: "சுவாமி! அது இடப்பக்கத்திலுள்ள புல்லைமாத்திரம் மேய்ந்திருக்கிறது."

"அந்தயானை கருப்பம் கொண்டதென்று எப்படி அறியப்பட்டது?"

"அதன் காற்சுவடு ஆழமாய் அழுந்தி யிருந்தது."

"அது ஆண்குட்டி போடுமென்று எப்படி தெரியவந்தது?"

"வலப்பக்கத்துக் காற்சுவடு நன்றாய் குழிய ஊன்றியிருந்தது."

"அந்த யானையின்மீது ஒருபெண் ஏறியிருந்தாள் என்பது என்ன நிச்சயம்?"

"அவள் வழியில் இறங்கி நடந்திருக்கிற காற்சுவடுகளைக் கண்டேன்."

"அவளுக்கு வலக்கண் குருடென்பது எப்படி துணியப்படும்?"

"அவள் இடப்பக்கத்திலுள்ள பூக்களை மாத்திரம் கொய்திருக்கிறாள்"

"அவள் கருப்பிணியாவதெப்படி?"

"அவளுடைய குதிக்கால் தரையில் செம்மையாய்ப் பதிந்திருக்கிறது" என்று சொல்லிப் பின்னும் "ஐயரே! ஈதெல்லாம்உண்மை. இவைகளை அடியேன் அநுமானப் பிரமாணத்தால் அறிந்தேன். தாங்கள் உண்மை தெரியவேண்டினால்என்னோடுகற்கும் இவர்களில் ஒருத்தனைச சத்திரஞ்சென்று விசாரித்துவரும்படிசெய்யுங்கள்." என்று சொன்னான். பிரத்தியக்ஷத்தில் அப்படியே பரீக்ஷித்துப் பார்க்கையில் எல்லாம் அவன்சொன்னது சொன்னதுபோலவே நடந்திருந்தன. அதுமுதலாக பார்ப்பனச் சிறுவர்களும் இவன்மீதுகொண்ட பொறாமையை ஒழித்து ஒருமைப்பட்டிருந்தார்கள்.

ஜீவகனும் கபாலந் திறப்பது தவிர மற்ற எல்லாம் ஐயந்திரிபின்றிக் கற்றுணர்ந்தவனாகிக் காலங்கழித்து வருகையில், ஒருநாள் தீராத் தலைநோய் கொண்ட ஒருவன் ஆத்திரேயரை யடைந்து "ஐயா! ஆயுள் வேதியரே! எந்தநோய் கொண்டாலுங் கொள்ளலாம். அப்பப்ப! தலைநோய்பொல்லாதது. தலைநோயிலும் என்தலைநோய் தீராத தலைநோயாக இருக்கின்றது. எத்தனை வைத்தியர்களைக் கட்டிக்கொண்டழுதேன். எவ்வளவுபணம் விரயஞ்செய்தேன். ஐயோ பாழாய்ப்போன அந்த எமதர்மராஜன் என்றைக்குத்தான் என் எட்டை எடுத்துக்கிழிப்பானோ. தங்களைப்பற்றி வெளித்தேசங்களில் வெகுசிறப்பாகச் சொன்னார்கள். தாங்களும் கையை விரித்துவிட்டால் என் கதி அதோ கதிதான். "இறுமுயிர்க்கும் ஆயுண் மருந்தொழுக்கல் தீதன்றால்" என்பார்களே. கடைமுறையாகத் தங்கட்குக் காட்டிவிடுகிறது. தாங்களும் அஸாத்தியமென்றால் ஆருயிரை மாய்த்துக் கொள்வதென்று துணிவுகொண்டுவந்துவிட்டேன். மக்களும் மனையுமாக இருப்பவன். அடியேன்மீது கிருபா கடாக்ஷம்பண்ணி பிராணபிச்சை கொடுக்கவேண்டும்.என் அப்பனே!" என்று சொல்லி வருந்தினான். அதுகேட்ட ஆத்திரேயர் அந்தநோயாளனைத் தலையைத் தடவிக்கொடுத்து "தம்பி! அஞ்சாதே,படுவது பட்டுத்தானே தீரவேண்டும். உன்னுடைய கிரகசாரம் நாளையோடு ஒழிந்துபோகிறது. நீ ஒரு கொட்டாரத்திலே ஒரு குழிதோண்டி அதினிறையச் சாணநீரை ஊற்றிவை. நாளைக்கு இதற்கேற்ற சிகிச்சை செய்கிறேன். ஒரு க்ஷணநேரத்தில் நோய் தணிந்துவிடும்." என்று சொல்லியனுப்பினார். இதையெல்லாம் செவியேற்ற ஜீவககுமாரன் ஆசிரியரை மும்முறை வலம் வந்துபணிந்து "சுவாமி! நான் ஆயுள்வேதத்தை ஆராய்ச்சிசெய்து அதனால் இலாபம் பெற்று செல்வவந்தனாக வேண்டுகின்றேனில்லை. வேறுபயன் வேண்டுகின்றேனுமில்லை உலகத்தார்க்கு என்னாலான நன்மைசெய்யவேண்டுமென்பதே அடியேனுடைய அவாவின் கருத்து. தேவரீரை அநேகநாளாக வழிபட்டுக் காத்துக்கிடந்தேன். நாளையொருபொழுதுந் தப்பாமல் அடியேனுடைய கருத்து நிறைவேற எத்தனை நாளாகுமோ. தேவரீர் அப்பிணியாளனுக்கு சிகிச்சைசெய்யும்போது அண்டையில் இருக்க அடியேனுக்கு வரங்கொடுக்க வேண்டும்" எனக் கல்லுமுருகக் கனிந்துபேசினான். ஆசிரியரும் இவனுக்குஇவ்வரங்கொடாவிட்டால் சிஷியத்துரோகமாகுமென்று நினைத்து "அப்பா! அப்படியே செய். ஆனால் பரண்மேல் மறைந்திருக்க வேண்டும்" என்று அநுக்கிரகித்தார்.

ஆத்திரேயரும் மறுள் காலையில் வழக்கம்போலே ஜீவககுமாரபந்தனை உடனழைத்துக்கொண்டு சென்று தலைநோயாளனை யடைந்து அவனைச்சாணநீர்க்குழியிலிருக்கச் செய்து ஜீவகன் மறைந்திருக்க ஓரிடமுங்காட்டிச் சிகிச்சை செய்யத்தொடங்கினார். தொடங்கிக் கபாலத்தைக்கழற்றிக் கீழிறக்கிவைத்துவிட்டு மூளையில் யாதேனும் பழுதுண்டோ என்று உற்றுப்பார்த்தார். பார்த்தவிடத்திலே மூளையில் ஒரு புழு மூளையோடு மூளையாய் ஒட்டிக்கொண்டு இருந்தது. உடனே அதனைப்பிடித்திழுக்கும் பொருட்டுக் கையில் குறடு எடுத்தார். அவ்வளவிலே மறைவிலிருந்த மாணாக்கன் "பொறுங்கள்! பொறுங்கள்!!" என்று கூவினான். ஆசிரியரும் அசைவற்றிருந்து "ஜீவகா! இங்கும் இருக்கிறாயா? பொறுக்கவேண்டியதென்ன? இந்தச்சனியனைத் தொலைத்தாலல்லவோ இவன் நோய்தீரும்" என்றார். ஜீவகன் "சுவாமி! மெய்தான். மூளை மிகவும் மிருதுவானதாகையால், புழுவினைப் பிடித்திழுக்கும்போது மூளைக்குச் சேதமுண்டாகி இவன், பாவம்! இறக்கும்படி நேரிட்டாலும் நேரிடும் என்றான். ஆசிரியர் "அதை மற்றெப்படி ஒழிப்பது?" என்று கேட்க, ஜீவகன் ஐயரே! இக்குறட்டினைச் சற்றுக்கும்பியில் வைத்துக் காய்ச்சி அப்புழுவிற்கு நேராகக்காட்டினால்புழுவும்சூடுபொறுக்கமுடியாமல் நெளிவுறும். அப்போது அதனை இவ்வாயுதத்தின் நுனியினால் அசைப்போமாயின் பொட்டெனக்கீழே விழுந்து விடும்" என்றுசொல்லினான். ஆசிரியரும் அங்ஙனே செய்து முன்போலவே மண்டையோட்டினைப் பொருத்தி மற்றும் செய்ய வேண்டுவதைச் செய்த,உடனே நோய்கொண்டவன் பேயாடி விட்டவனைப்போலத்தெளிந்தெழுந்து ஆயுள்வேதியருக்கு ஐந்நூறு பணங்கொடுத்து போய்விட்டான்.பின் ஆசிரியர்தமது தலைமாணாக்கனைத் தலைமூழ்கவரச்செய்து கபாலசிகிச்சையின் மர்மத்தை உபதேசித்து"அப்பா நான் இந்தவித்தையின் உதவியால்உயிர்வாழ்ந்திருப்பவன். ஆதலால் நீ இதனை இந்நாட்டில் வழங்கலாகாது!" என்றுசொல்லி, ஆசிமொழிகூறி வாழ்த்தினார். ஜீவககுமாரனும் ஆசிரியரைமும்முறைவலங்கொண்டு அடியில் முடியுறப்பணிந்து குருதக்ஷணையுங்கொடுத்துப் பிரிவாற்றாதவனாய் மனந்தேறி விடைபெற்றுக் கொண்டு தம் ஆசிரியர் மனைவி உபாலனுக்கும் வந்தனம் பண்ணித் தன்வீட்டுமுகமாக வழிக்கொண்டு போயினன்.

(இன்னும் வரும்)

தி. செல்வகேசவராயமுதலியார்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

எனது சின்னஞ்சிறு நேசர்களே, இந்தவிசை நமது சபைக்குப் புதிதாய் வருபவர் ஒருவருமில்லை. ஆகையால் மாயாண்டிக்குப் பரிச்சயம் செய்துவைக்கும் வேலை ஒன்றுமில்லை. போனவிசை நான் உங்களுக்குப் பரிச்சயம் செய்துவைத்த நமது தாதா இந்த விசையும் வந்திருக்கிறார். இவரைப்பற்றி நான் விசேஷமாய்ச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை யாயினும் ஒரு சிறு விஷயத்தை மட்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர இரண்டொரு வார்த்தைகள் சொல்லக் கோருகிறேன். நமது தாதா வயதானவராய் கிழவன் என்கிற பெயருக்கு உரியவராயிருந்தாலும், காரியத்தில் வெகு சுறுசுறுப்பும் ஒழுங்கும் பாராட்டுகிறவரென்று எனக்குத் தெரியவருகிறது. போனமாசம் விவேகசிந்தாமணி வெளிவராதாளாய்விட்டதென்று பத்திராதிபர் இந்தமாசத்துசஞ்சிகையைசீக்கிரம் வெளிக்கொண்டுவர வேண்டி அது விஷயத்தைப்பற்றி அவர் பாகத்துக் கெழுதுகிறவர்களுக்கெல்லாம் தெரிவித்ததுபோல் எனக்கும் தெரிவித்தார். நான் மாயாண்டியா யிருப்பதால் யாருக்கும் நேரில் பிரசங்கமாவது கூடாமலிருப்பதைத் தெரிவித்து நமது சிறுவர்க்கான பக்கத்துக் கெழுதுகிறவர்களுக்கும் அது விஷயத்தைக் குறித்து ஒருகடிதம் போக்கச் சொல்லி வேண்டிக் கொண்டேன். அவர் அப்படியே செய்ததில் அவர் கடிதத்துக்கு நம்மவர்களில் முதல்முதல் பதில்அனுப்பினவர் நமது தாதாவே. பத்திரிகை சீக்கிரம் வெளியாக வேண்டுமென்றெழுதினதினால் நம் சிறுவர்களை காலையிலெழுப்ப வந்துவிடுகிறேனென்று அவர் சங்கதியைச்சொல்ல நீங்கள் பழையது சாப்பிடுமுன் வந்து விட்டார். 'செய்வினை திருந்தச் செய்' என்று ஒளவையார் ஆத்திசூடியில் சொன்ன வாக்கியத்தை நாம் [illegible] மட்டும் [illegible]மசெய்திருக்கிறோம். நமது தாதா அந்தப்படி செய்யவும் கற்றிருக்கிறார். நாம் நல்லதென்று கண்ட எதையும் காரியத்தில் கடைப்பிடித்து நடக்கவேண்டுமென்கிற உண்மையை நமது தாதாவே ஒருசமயம் நமக்கு கதைசொல்கிறதுபோல் சொல்லிக் காட்டுவாரென்று நினைக்கிறேன். ஆனால் அவர் நமக்குச் சொல்லிக் காட்டுமுன் நாம் சுற்றுப்பக்கத்தில் நடப்பவைகளைக் கவனமாய் ஊகித்துப் பார்த்து நாமாக அறிந்துகொண்டால் அவர் நம்மை எவ்வளவு புத்திசாலிகளென்று நினைப்பார். நாம் இரண்டு மூன்று வயசுக் குழந்தைகளா யிருக்கும்பொழுது நமது 'அக்கா' 'அம்மா' இவர்கள் நம்மைச் 'சமர்த்து' என்று சொல்லவேண்டுமென்று நமது குழந்தைப்புத்தியைக்கொண்டு எவ்வளவு பாடுபட்டோம். இப்போது பள்ளிக்கூடத்துக்குப்போய்வந்து 'விவேகசிந்தாமணி' வாசிக்கும் வயசுள்ளவர்களாய் விட்டோமாதலால் 'சமர்த்து' என்று சொல்வது மட்டும் நமக்கு அவ்வளவு திர்ப்தி தருவதாயில்லை. நாம் 'புத்திசாலி' என்று பேரெடுக்க வேண்டுமென்கிற ஆசையே இப்போது நமக்கு அதிகமாயிருக்கிறது. அந்தப் பேர் எடுக்க வேண்டுமானால் நாம் எப்போதும் 'காதும் கண்ணுமாயிருந்து' நம்மைச்சுற்றி நடப்பவைகளை யெல்லாம் கவனித்து, அவைகளில் அடங்கியிருக்கும் உண்மைகளை யெல்லாம் ஊகித்தறிந்துகொள்ள வேண்டும். இதை மனதில் பதியவைத்துக் கொண்டு இப்போது நமது தாதா சொல்லும் இரண்டாவது சங்கதியைக் கேளுங்கள்.

II

பிள்ளைகளே பெண்மணிகளே! வாருங்கள். இந்த மண்டபத்தின் படிமேல் உட்காருங்கள் நான் இந்த மேடையின்மேல் இருக்கிறேன். கேளுங்கள்.

நான் சிறுவனாய் என் தங்கையுடன் என் தகப்பனாரிடத்தில் படித்துக்கொண்டு இருக்கும்போது எங்கள் வீட்டுக்கு நாலாவது வீட்டில் குப்புசாமி என்று ஒரு பையன் இருந்தான். அவனுக்கும் சுமார் பத்து வயது இருக்கும். அவன் எங்கள் தெருவின் கோடிவீட்டுத் தெருத்திண்ணையின்மேல் வைத்திருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி, வருக்கபாடம், பெயர்ச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, குமரேசசதகம், திருப்புகழ், வடவேங்கடநாராயணசதகம், நெல்லிலக்கம், பொன்னிலக்கம் முதலானவைகளைப் படித்திருந்தான். அவனுடைய தகப்பன் காய்கறிகள் பயிரிடும் ஒரு தோட்டக்காரன். நாங்கள் அவனிடத்தில் அடிக்கடி கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய், அவரைக்காய், பூசனிக்காய், சுரைக்காய், கொத்தவரைக்காய், பாவற்காய், பீர்க்கங்காய், பச்சைமிளகாய், இஞ்சி, கொத்தமல்லி, வாழையிலை முதலானவைகளை வாங்குவது வழக்கம். எங்கள் அப்பா அவன் தோட்டத்துக்குப் போனால் என்னையும் என் தங்கையையும் கூட அழைத்துக்கொண்டு போவார். சிலசமயங்களில் அந்தத் தோட்டக்காரனே எங்கள் வீட்டுக்குக் காய்கறி கொண்டுவரும்போது அவன் மகன் குப்புசாமியும் அவனோடு வருவான்.

இப்படியிருக்கும்போது, ஒருநாள் நானும் என் தங்கையும் வீட்டுப் புழைக்கடையில் ரோஜா, மல்லிகை, நந்தியாவட்டை, துளசி, கஸ்தூரிபட்டை, சம்பங்கி முதலிய பூஞ்செடிகளுக்கு பாத்திகட்டித் தண்ணீர் பாய்ச்சப்போனோம். அந்நேரம், பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த குப்புசாமி எங்களைப் பார்த்து, "செல்லப்பா! என்ன செய்ரிங்கோ?" என்றுகேட்டான். நான், குப்புசாமி, பூஞ்செடிக்கு பாத்திகட்டி தண்ணீர் பாய்ச்சப்போகிறோம் என்றேன். உடனே குப்புசாமி உள்ளே வந்து ஓலைச்சுவடிக் கட்டை ஒரு மரக்கிளையில் மாட்டிவிட்டு, என் கையில் இருந்த களைக்கொட்டை வாங்கி, செடிகளுக்கு ஒவ்வொருமுழச் சதுரமாய் பாத்திகொத்தி, குப்பையின் அடியில் இருந்த சாணியெருவில் ஒவ்வொரு செடிக்கு ஒவ்வொரு கையெருவு கொண்டுவந்து போட்டான். அப்புறம் செடிக்கு செடி நடுவில் ஐந்து விரற்கிடை அகலமும் மூன்று விரற்கிடை ஆழமுமாகக் கால்வாய் வாங்கிப் பாத்திகளைச் சேர்த்து விட்டான். அதன்மேல் என்னை பொடி பொட்டான செங்கல்களைப் பொறுக்கிக் கொண்டுவரச் சொன்னான். என் தங்கையை ஒரு செம்பில் தண்ணீர் மொண்டுவா என்றான். நான் கொண்டுபோய்க் கொடுத்த கல்லுகளை கடைசியில் இருந்த ஒரு பாத்தியின் ஒரு பக்கத்தில் பரப்பி, என் தங்கை கொண்டுவந்த தண்ணீரை அதன்மேல் விரல்களை விரித்து ஊற்றினான். நாலு செம்பு தண்ணீர் வார்த்த வுடனே பாத்திகளெல்லாம் நிரப்பி விட்டான்.

எங்களுக்கு அந்தப் பாத்திகளின் அழகையும் சிறிய கால்வாய்களால் தண்ணீர் பாய்கிற அழகையும் பார்க்கப்பார்க்க அதிக சந்தோஷம் உண்டாயிற்று. அப்போது எங்கள் வீட்டில் மகாலக்ஷ்மி விரதம் என்கிற நோன்பு கும்பிட்டு நான்குநாள் இருக்கும். உடனே நான் வீட்டிற்குப்போய் என் தாயாரைக் கேட்டு இரண்டு நெய்யில் சுட்ட அதிரசம் வாங்கி வந்து குப்புசாமி கையில் கொடுத்தேன். அவன் அதை வாங்கிப் பிட்டு வாயில் போட்டு சப்பிப்பார்த்தான். பார்த்து "அப்பா! அப்பா! செல்லப்பா! எங்கூட்டுலே சுட்டாங்களே, அந்த அதிர்ஸம் ஓட்டடையாட்டம் இருந்துது. இது பூபோலெ நண்ணாயிருக்குது" என்று சொல்லிக்கொண்டே "நான், போறேன்" என்று சுவடிக்கட்டை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டு போய்விட்டான். அதுமுதல் எனக்கு அவன்மேல் அதிக ஆசையும் இரக்கமும் உண்டாயிற்று.

இவன் சற்றுத் தணிச்சலாய் குள்ளமாய் இருப்பான். இவனுடைய புஜமும் தொடையும் கண்ட சதையும் கடைந்தெடுத்தாற்போல இருக்கும். மார்பு அகலமாய் எடுப்பாய் உளிகொண்டு செதுக்கினாற்போல இருக்கும். தலையில் குடுமி ஒரு அரையணா அவ்வளவு தான் இருக்கும். நெற்றி மூன்று விரற்கிடை அகலம் இருக்கும். அதில் ஒவ்வொரு விரல் அளவாக திருநீறு குழைத்துப் பூசியிருப்பான். காலணா அவ்வளவு சந்தனப்பொட்டு இட்டுக்கொண்டிருப்பான். இடுப்பில் பிட்டம் மாத்திரம் மறைய பிரியனைபோலத் துணியைச் சுற்றிக்கொண்டிருப்பான். இவனுடையகண் சற்று சிறிதாய் இருக்கும். எந்நேரமும் சிரித்த முகமாக இருப்பான். இவனுடைய முகத்தைப்பார்க்கும் போதே கள்ளங்கபடற்றவன் சூதுவாது தெரியாதவன் என்பது விளக்கமாக இருக்கும்.

அந்தப்பள்ளிக் கூடத்தில் அமாவாசை பௌர்ணமிக்கு இரண்டுநாள் விடுமுறை. விடுமுறைக்கு முன்னாள் சாயந்திரம் பிள்ளைகளை யெல்லாம் எதிரில் ஒரு மைதானத்தில் விளையாட விடுகிறது வழக்கம். குப்புசாமியுடன் யாராகிலும் ஓடப் பந்தயம் போட்டால் அவனுக்கு அதிக ஆநந்தம் உண்டாகும். ஒருகால் முன்னும் ஒருகால் பின்னும் தலை யெடுப்புமாக நின்று தொடையின்மேல் ஒரு தட்டு தட்டிக்கொண்டு ஒரு எகிர் எகிரி பைகோ மட்டம்போல பட பட படபடவென்று ஓடிப் பந்தயத்தை கெலித்து விடுவான். உப்புகந்தம் அடிக்கும்போது மாத்திரம் குள்ளனாகையால் குண்டுபெருச்சாளி போல் குறுக்கு நெடுக்குமாக ஓடி எப்படிப்பட்டவர்களையும் எய்த்து விடுவான். கோலியாடுவதில் அவனுக்கு அவ்வளவு ஆசையில்லை. அவன் பம்பரம் ஆடினால் பெரிய பம்பரம் கூட ஐந்து நிமிஷம் நின்றுகொண்டு தூங்குவதுபோல இருக்கும்.

ஒருநாள் இவனுடைய [illegible] குமாரசாமிபிள்ளை யென்பவர் இரண்டாவது சட்டம்பிள்ளைக்கு கொன்றைவேந்தன் உரைசொல்லும்போது, இவன்பக்கத்திலிருந்து பாடம் வரப்பண்ணிக்கொ

ண்டு இருந்தவன் உபாத்தியாயர் சொல்லுவதை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தான். "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்கிறவாக்கியம் முடிந்த உடனே உபாத்தியாயர் மற்ற பிள்ளைகளை "படிங்கடா, படிங்கடா" என்றுசொல்லிப் பிரம்பை ஓங்கிஓங்கித் தரையில் தட்டிவிட்டு, ஒரு சிட்டிகை மூக்குத்தூளை எடுத்து சர்சரவென்று மூக்கில் போட்டுக்கொண்டு நன்றாய் கனைத்துவிட்டு "ஊம்! ஊம்! அப்புறம்" என்றார். உடனே அந்த பிள்ளை "ஏவாமக்கள் மூவாமருந்து" என்றான். அப்போது உபாத்தியாயர், "அடப்பா! அதற்கு அர்த்தம் தெரியுமா? கேள், தாய்தகப்பன் இன்னவேலையைச்செய் என்று வாய்திறந்து சொல்லிக்கட்டளையிடுவதற்கு முன்னதாகவே, அவர்கள் இன்னவேலையிடப்போகிறார்கள் என்கிற குறிப்பை அறிந்து அவர்களிஷ்டப்பட்ட வேலையைச்செய்து முடிக்கிற பிள்ளைகள் தம்முடைய தாய்தகப்பன்மாருக்கு தேவாமிர்தத்தைப் போல சிறந்தவர்கள் ஆவார்கள், என்று அர்த்தம். உங்களை உங்கள் தாயாராகட்டும் தகப்பனாராகட்டும் ஒரு வேலையிட்டால் மூஞ்சியைக்கோணலாக வைத்துக்கொண்டு செய்கிறீர்களே அப்படியெல்லாம் கூடாது. அவர்கள் சொன்னதுசொல்லுமுன்னே குறிப்பறிந்து செய்தால் அவர்களுக்கு நம்முடைய பிள்ளை நல்ல புத்திசாலி என்று சந்தோஷமுண்டாகும். அவர்களுக்குண்டாகிற சந்தோஷமே பிள்ளைகளுக்கு நன்மையை உண்டாக்கும். குறிப்பறிந்து செய்வது இன்னது என்பதை தெளியப்படுத்துகிறேன், கேள். உன்னுடைய தகப்பனார், 'அடே அப்பா மாடத்தில் சுருட்டு இருக்கிறது, எடுத்துவா' என்றால், நீ வெறும் சுருட்டை மாத்திரங்கொண்டு போய்க்கொடுத்தால்; அவர் மறுபடியும் சுருட்டு பற்றவைக்க நெருப்புகொண்டுவா என்றுகேட்பாரல்லவா? ஆகையால் சுருட்டை எடுத்துக்கொண்டு போகிறபொழுதே நெருப்பையுங்கூட எடுத்துக்கொண்டு போய் கொடுப்பது அவருக்கு எவ்வளவு சந்தோஷத்தைக்கொடுக்கும். அவர் 'அடே, குழந்தை, இராமாயணம் எடுத்துவா, நான் படிக்கப்போகிறேன்' என்றால், நீ வெறுமையாக 'இராமாயணத்தைமாத்திரம் கொண்டுபோனால் அவர் சற்றுப் பொறுத்து 'என்னடா, அடே எங்கிருக்கிறாய், பென்சில் எடுத்துவா' என்பார். நீ இராமாயணத்தைக் கொண்டுபோகும்போதே மூக்குக்கண்ணாடி, அகராதி, பென்சில், காகிதம் முதலானவைகளைக் கொண்டுபோய் வைத்துவிட்டால் அவருக்கு எவ்வளவு திருப்தியாக இருக்கும்." இதுவரையில் குப்புசாமி இதையெல்லாம் நன்றாய்க்கேட்டுக்கொண்டிருந்தான். அப்போது உபாத்தியாயர் மூக்கு சிந்தும்படி இடதுகை பக்கம் திரும்பினார். இதற்குள் இவன் பாடத்தின் மேல் கண்ணுயிருப்பவன் போலத்தலையைக் குனிந்துகொண்டான். ஆனால் உபாத்தியாயர் சொன்னதெல்லாம் நன்றாக நினைவில் இருந்தது.

அன்றிரவில் குப்புசாமி சாப்பிட்டு விட்டு படுத்துக்கொண்டிருக்கும்போது, அவனுடைய தகப்பன் தன் பெண்டாட்டியிடத்தில் "அடியே! அந்த குப்பத்திலிருக்கிற குப்பாத்தைமூலி நமக்கு நாலும் மறக்காநெல்கொடுக்கணுமே நம்ப பையனை நாளைக்கி அனுப்பலாமா என்ன?" என்றுசொல்ல. அவளும் "அப்படிதான் செய்அய்யா" என்று சொன்னாள். அதைக்கேட்டிருந்தகுப்புசாமி "சரி, சரி, நம்ப வாத்தியார் பகல் சொன்னாரே, அப்படி நாளைக்கு பொழுது வெடிஞ்சபிற்பாடு அண்ணா சொல்றத்துக்கு முன்னே நான்போய் நெல்லெ வாங்கினுவந்துட்டா எம்மாத்திரம்சந்தோஷப்படுவாங்கோ" என்று நினைத்துக்கொண்டு தூங்கிவிட்டான்.

நாலாஞ் சாமத்தில் கோழிகூவினதைக்கேட்டு எழுந்து சந்தடி செய்யாமல் கதவைத்திறந்துகொண்டு போய்விட்டான். பொழுதுவிடிந்தபிறகு தகப்பனும் தாயும் பையனை அனுப்பலாமென்று "அடாப்பேன்! அடே கொயந்தே! அடகண்ணு! அடேசமி ணு!" என்றுகூவினார்கள். அப்புறம்தகப்பன் தோட்டமெல்லாம் அலைந்து தேடித்திரிந்தான். தாயானவள் தெருவிலும் தலைக்கடையிலும் பாயின் கீழிலும் கதவின் சந்திலும் தேடிக்கொண்டிருந்தாள். அண்டை யயல் வீட்டுக்காரப் பிள்ளைகள் "நாங்கள் பார்க்கவில்லையே! எங்கே போய்விட்டான்? இதென்ன மாயமா யிருக்கிறதே" என்றார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளைகளும் அவனை "ஏன் வரவில்லை" என்று தேடிக்கொண்டு வந்தார்கள். இதற்குள் தாயானவள் "ஐயொ! மவனே! எங்கடா பூட்டே" "ஐயையோ! ஐயோ! ஐயொ!" என்று மார்பில் அடித்துக்கொண்டும், மூக்கைப் பிடுங்கி போட்டுக் கொண்டும், கண்ணைத்துடைத்துக்கொண்டும் இருந்தாள். அப்புறம் இந்த குப்புசாமி தலையில் மூட்டையையெடுத்துக்கொண்டுவந்து முளைத்தான். தாயானவள் "என்னடா எங்கே போனே எங்கண்ணே! இப்படி வா, ஒரு முத்தி கொடுக்கிறேன்" என்று சேர்த்தணைத்து ஒருமுத்தங்கொடுத்தாள். இதற்குள் தகப்பனும் வந்து சேர்ந்தான். இருவரும் சங்கதி என்னவென்றுகேட்க குப்புசாமி "இல்லெ அண்ணா! நேத்து வாத்தியார் 'ஏவாமக்கள் மூவாமருந்து' என்றத்தெ ஒருபையனுக்கு சொல்லி குடுத்தார். நான் வாத்தியார் சொன்னபடி செய்சேன்" என்றான். இதைக்கேட்டு எல்லாரும் சிரித்தார்கள். எனக்கு அதை இப்போது நினைத்துக்கொண்டால் கூட அடங்காத சிரிப்பு வருகிறது. நல்லது நேரமாகிறது போய் பழையது சாப்பிடுங்கள்.

கிழ்வன்.

நேசர்களே சற்றுப்பொறுங்கள். நமது கல்வாய் நேசர் மாயாண்டிக்கு கல்வியைப்பற்றி ஒரு சிறுகடிதம் எழுதியிருக்கிறார்.—அவர் அப்பர்ப்ரைமெரி பாடசாலை நாலாவது வகுப்பில் வாசிப்பதாகத் தெரிவித்தும் தான் மகாமேதாவிபோல் நமக்கெல்லாம் புத்திசொல்லி கடிதம் எழுதியிருப்பதைப்பார்த்தால்நீங்களெல்லாரும் வாயை மூடிக்கொண்டு உள்ளுக்குள் சிரிப்பீர்கள் என்பதைப்பற்றி நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் அவர் எழுதியிருப்பது ஒன்றும் புதிதில்லையென்று நீங்களே காண்பீர்கள். அவர் உபாத்தியாயர் சொல்வதைக்கருத்தாய்க் கேட்டு மனதில்பதியவைத்து வாசித்துவரும் ஓர்நல்லமாணாக்கர்என்று எனக்குத்தோன்றுகின்றது. அவர் தனக்குப்போதிக்கப்பட்ட நீதிகளையே தன்னையொத்த மற்றப்பிள்ளைகளுக்குத் தனக்குத் தெரிந்த மட்டில்போதிக்கஎத்தனிக்கிறார். அவர் நமது பக்கத்துக்கெழுத வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு ஏதோ அவருக்குத்தெரிந்ததை யெழுதிவருகிறாரதலால். அவரை நாம் பரிகாசம் செய்து அடக்குவது சரியல்ல. உங்களில் யாராவது அவர் எழுதியதைவிட நல்லதாகவும் சுயமான தாகவும் எழுதினால் அதைப்பார்த்துக்கொண்டு அவரும் மேலெழுத முயற்சிப்பார். அது சிறுவர்கள் விர்த்தியடைவதற்கு வழியாம். அதைவிட்டு காரியத்தில் ஒன்றுமாகாமல் கட்டின வீட்டிற்குப் பழுது சொல்லிச்சிரிப்போர் வீணர்களென்றே மதிக்கப்படுவார்கள். ஆகையால் அவர் எழுதினதைக்கண்டு பரிகாசம் செய்யப்பாராமல் அதைவிட நன்றாகவும் சுயமாகவும் நீங்களே யெழுதக்கூடுமோவென்று தனியாக யோசியுங்கள்.

கல்வி.

நேயர்களே! கல்வியிலே தேறவேண்டுமோனால், இடை விடாமல் படித்து வரவேண்டும். ஒரு நாள் சுறுசுறுப்பாயும் ஒருநாள் சோம்பலாயும் இருந்தால் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் விருத்தியாக மாட்டோம். அன்றியும், ஒருவர்க்கொருவர் கணக்கிலும், வாசிப்பிலும் நான்மேலே போனேன், நான் மேலேபோனேனென்றும், படிப்பு வெகுசுலபமாய் வருகிறதே! நாம் ஏன் இரவும்பகலும் ஓயாமல் படிக்க வேண்டுமென்றும் கர்வங்கொண்டால் இருக்கிற கல்வியும் போய்விடும்.—திருஷ்டாந்தம்;

ஓர் ஆமை ஒருமுயலுடனே, இங்கே யிருந்து இன்ன இடத்திற்கு நம்மிருவரில் யார் முன்னே ஓடி மறுபடிஇந்த இடத்தில் சேர்வார்கள் பார்ப்போமென்று பந்தயம் போட்டுக்கொண்டது. முயலோ! முதலில் அதிக வேகமாக ஓடித் திரும்பிப் பார்க்கையில், ஆமை வெகுதூரத்தில் மெதுவாக வரக்கண்டு. ஆ! ஆ! இந்த ஆமை நம்மிடத்தில் எப்படி பந்தயம் போட்டது என்று அலட்சியஞ் செய்தும், நாம் இங்கே சற்று இளைப்பாறலாம், ஆமை கிட்ட வந்தவுடனே ஒரு நிமிஷத்தில் ஓடி விடலாமென்றும், பலவாறாகநினைத்து, சற்றுஓடுவதும், இளைப்பாறுவதும் மரநிழலில் உறங்குவதும், துள்ளித்துள்ளித், தாத்தெய்: நான் கெலிப்பேன்!! தக்கத்தெய், நான் கெலிப்பேன்!!! என்று தத்திவிழுந்து கடைசியில் ஒரு மரநிழலில் தூங்கி விட்டது ஆமையோ! எங்கும் நில்லாமல் மெல்ல மெல்ல நகர்ந்து, முன் சொன்ன இடத்தில் வந்து சேர்ந்து பந்தயத்தைக் கெலித்தது. பார்த்தீர்களா! முயலைப்போல் கல்வி விஷயத்தில் கர்வங்கொண்டோமானால் ஒருக்காலும் கல்வியில் விருத்தியாக மாட்டோம். ஒருவன் படிப்பில் மட்டியாகவிருந்தாலும்அவன் நாள்தோறும்தவறாமல் தையரியத்துடன் கொஞ்சங் கொஞ்சமாகப்படித்துவருவானானால், எப்படியும் அவன் கல்வியைப் பெறுவான். தன்னைக் கெட்டிக்காரனென்று நினைத்துக்கொண்டு ஒவ்வொரு வேளை படித்து வருபவன் ஒருபோதும் நன்மையடைய மாட்டான். ஆகையால் பிள்ளைகளே நாம் கல்வியைக் கனம்பண்ணி கற்றுக்கொண்டு கடவுளை சதாபஜனை செய்து அவர் கருணாகடாட்சம் பெறுவோமாக. சுபமஸ்து.

கல்வாய் அப்பர்ப்ரைமெரி பாடசாலை, 4-வது வகுப்பு 3-11-92.	உங்கள் அன்புள்ள முத்துவர்ம அரங்கசாமி நாயகர்.

இந்தவிசை நமது தட்டியண்ணா நம் சபைக்கு வரவில்லை. அவருக்கு இது பரீக்ஷைகால மாதலால் வர ஒழிய வில்லையாம். இந்தக் காலத்தில் எடுத்ததற்கெல்லாம் ஒரு பரீக்ஷை தேறவேண்டியதா யிருக்கிறது. சர்க்காரில் தோட்டிவேலை ஒன்றைத் தவிர மற்றதற்கெல்லாம் ஒவ்வொரு பரீக்ஷை தேறவேண்டு மென்று நிர்ணயித்திருக்கிறார்கள். காவல்காரன் வேலைக்குக்கூட பரீக்ஷை தேறவேண்டுமென் றிருக்கையில், எடுத்ததற்கெல்லாம் மகா மருந்தாக விருக்கும் இப் 'பரீக்ஷை' காலத்தில் அதோடு சம்பந்தப்பட்டவர்கள் யாருக்குத்தான் ஊன்உறக்கம் பிடிக்கும். பரீக்ஷைக்குழைத்துப் பிழைத்துவந்தால் நமது தட்டியண்ணா அடுத்தவிசைநம்மோடு கூடிக் குலாவ வராதிரார். பரீக்ஷையில் அவருக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டு மென்று மாயாண்டிகோருவதுபோல் நீங்களும் கோருவீர்களென்று நம்புகிறேன்.

உங்கள் அன்புள்ள,
மாயாண்டி.

விசேஷக்குறிப்புகள்.

இராஜப் பிரதிநிதி விஜயம்.

கனம் பொருந்திய இராஜப் பிரதிநிதி யவர்கள் அவர் பெருமாட்டியோடும் புத்திரரோடும் இந்தமாச முதலில் சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டு ஐதிராபாக்கம், மைசூர் இராஜ்ஜியங்களை விஜயம் செய்துகொண்டு இந்த மாசம் 24ௗ சென்னைவந்து சேர்ந்தார். அவர் இங்கே ஒருவாரம் தங்கியிருந்து இங்குள்ள பல முக்கிய ஸ்தாபனங்களையும் பார்த்துக்கொண்டு நாளது மீ 29ௗ மத்தியானம் கிளைவ் என்னும் கப்பலிலேறிக் கல்கத்தாவுக்குச் சென்றார். அவர் இங்கிருந்தபொழுது இந்நகரிலும், இராஜதானியிலுமுள்ள பல சபைகள் சங்கங்கள் அவருக்கு நல்வரவுகூறி வந்தனுபசாரப் பத்திரங்கள் வாசித்தளித்தார்கள். அப்பத்திரங்களில் அவரவர்களுக்கு முக்கியமாகத் தோன்றிய பல பொதுவிஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்துச் சில நன்மைகளும் செய்யக் கோரிக்கொண்டார்கள். அவரை யிப்படிபலவிஷயங்கள் கோரிக்கொண்டும்விசேஷமாக ஒன்றும்செய்வதாக வாக்களிக்கவில்லை. பெஸ்வாடாவி லிருந்து சென்னைக்கு ரயில்போடவேண்டுமென்று பலரும் கேட்டுக் கொண்டதற்கு இந்தியாகவர்மெண்டார் கையில் பணமின்றி வருத்தப்படும் இக்காலத்தில் அந்த ரயில்போட அவர்களால் ஆகாதென்று சொல்லிவிட்டார். சென்னை முனிசிபாலிடியார் தாங்கள் வருஷா வருஷம் கவர்ன்மெண்டுக்குக் கட்டும் 50,000 ரூபாய் பகுதியைத் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கும், திரவியச்செலவு நேரிடும் மற்ற எந்தக் கோரிக்கைக்கும் இராஜப்பிரதிநிதி யவர்கள் இந்தியா கவர்ன்மெண்டார் செலவுக்கு வேண்டிய பணமின்றி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது பண சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒருதவியும் செய்ய அவர்களா லாகாதென்றே சொல்லிவந்தார். சட்ட நிரூபண சபைகள் சீர்திருத்த விஷயமாக அவர் பேசிய சில வார்த்தைகளால் சென்னை முனிசிபாலிடியார்க்கு இவ்விராஜதானிசட்ட நிரூபண சபைக்கு அதிகப்படி மெம்பரொருவர் நியமிக்கும் அதிகாரம் கிடைக்குமென்று தெரியவந்தது. ஐரோப்பிய வர்த்தகசங்கத்தார், ஐரோப்பிய தோட்டக்காரர்கள் முதலான இவர்களுக்கும் அவரவர்கள் சமுகத்துக்கு ஒரு பிரதிநிதி யனுப்பும் பாத்தியம் கொடுக்கப் படலாமென்று தெரியவந்தது. மற்றப்படி சட்டநிரூபண சபை சீர்திருத்த விஷயமாய்க் கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்யப் போகிறார்களென்று விவரம் தெரிய இராஜப்பிரதிநிதி ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் அனேகவிஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபம் வந்ததில் விசேஷமாகக் கவனிக்கத்தக்கது ஒன்றுமில்லை.

கௌரதாப்பட்ட சின்னங்கள்.

கனம் பொருந்திய இராஜப் பிரதிநிதி யவர்கள் சென்னையிலிருக்கையில் இந்நகரில் சில கால முன் கௌரதாப்பட்டமளிக்கப்பெற்ற மூவர்க்கு அவர்களுக்குரிய கௌரதாப்பட்ட சின்னங்களை யளித்துப் பட்டஞ் சூட்ட ஒரு தர்பார் வைத்துக்கொண்டார். நாளது மீ 25ௗ வெள்ளிக்கிழமை இராத்திரி 10½-மணிக்கு சென்னை கவர்ன்மெண்டு தோட்டத்திலுள்ள 'பாங்குவெட்டிங்ஹாலில்' வைத்துக்கொள்ளப்பட்ட இந்த தர்பாரில் மேன்மை தங்கிய விஜயநகரம் மஹாராஜா அவர்கள் ஜி. ஸி. ஐ. இ. என்னும் கௌரதாப்பட்ட சின்னமளிக்கப்பெற்று அப்பட்டம் சூட்டப் பெற்றார். கனம் மிஸ்டர் எச். இ. ஸ்டோக்ஸ் அவர்கள் கே. ஸி. எஸ். ஐ. பட்ட சின்ன மளிக்கப்பெற்று அப்பட்டஞ் சூட்டப்பெற்றார். கனம் பொருந்திய மிஸ்டர் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யர் அவர்கள் கே. ஸி. ஐ. இ. பட்டம் சூட்டப்பெற்றார்.

ராஜா, சர். இராமசாமி முதலியார் விருந்து.

இராஜப் பிரதிநிதி யவர்கள் சென்னைக்குவந்தஅன்றுசாயந்திரமே நமதுநகரவாசியும்நன்கொடை வள்ளலுமாகிய ராஜா. சர். சவலை இராமசாமிமுதலியார் அவர்கள் இராஜப்பிரதிநிதியவர்களையும்அவர்பெருமாட்டியையும்தம்மில்லத்துக்கழைத்துப்பெருவிருந்துசெய்து அவர்களைமகிழ்வித்துச் சந்தோஷிப்பித்தார். இத்தேசத்தில் இராஜ ஸ்தானத்தை வகித்தவரான இராஜப் பிரதிநிதி யவர்கள் ராஜா, சர். சவலை இராமசாமி முதலியார் அவர்களுடைய விருந்தை யேற்றுக்கொண்டு அவர் இல்லத்துக்கு வந்து அவரால் உபசரிக்கப்படச்சம்மதித்தது நமதுநகரவாசிக்கு எண்ணரும்பெருமையே. இராஜப்பிரதிநிதியவர்கள் சாதாரணமான ஒரு நகரவாசி வீட்டில் விருந்துண்ண இசைந்தது இதுவே முதல்தடவை. அச்சமயம், கனம்பொருந்திய கவர்னர், சேனாதிபதி, அவர்கள் பெருமாட்டிகள், ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் மற்றுமுள்ள ராஜாக்கள், மஹா ராஜாக்கள் முதலானவர்கள் எல்லாரும் அவ் விருந்துக் கழைக்கப்பட்டு வந்திருந்தார்கள். இவ்விருந்து வேடிக்கைசெய்ய நமது ராஜா அவர்கள் 30,000 ரூபாய்க்குமேல் செலவிட்டாரென்று அறிகிறோம். அப்படியானால் அவர் செய்த விருந்து வேடிக்கைகளின் விமரிசையைப்பற்றி நாம் விவரித்தெழுதவும் வேண்டுமோ.

“கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு.”

6-APR. 93 MADRAS

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1892ஹு டிசம்பர்மீ. இலக்கம். 8.

சுதந்தரங்களின் விளக்கம்.

I.

1. ஒவ்வொரு மனிதனும் இம்மையில் தான் செய்யவேண்டியகடமையைச்செய்து சுகத்தை யடைவதற்கும் கடவுளின் கிருபையினால் தனக்குக் கிடைத்திருக்கும் நற்குணங்களைப் பரிபக்குவ நிலைக்குக் கொண்டுவருவதற்கும் தன் புத்தி, உடல், உறுப்புகள் முதலிய வற்றைத் தடையின்றிப் பல கிரியைகளிற் செலுத்தும் சக்திகள் அத்தியாவசியகமா யிருக்கின்றன. நாகரீக மடைந்த எவ்வினத்தாரிலும் மேற்கூறிய இலக்கணத்தை யுடைய சக்திகள் அவருளொவ் வொருவருக்கும் உண்டென்று அனைத்தன் முறையால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. ஜனசமூகத்தில் பொறுப்பை வகிக்கும் அதிகாரிகள் குடிகளொவ்வொருவரின் செயல்களனைத்தையும் கவனித்து மேனோக்குவது முடியாது; ஆகையால், பல விஷயங்களிற் சனங்கள் தடையின்றித் தம்மனஞ் சென்றபடியே நடந்துவருவார்கள். மேலும் நற்குணங்களின் வளர்ச்சிக்கும் அப்படி நடந்து வருதல் அவசியமா யிருக்கிறது. தடையின்றி காரியங்களைச் செய்வதற்குரிய சக்திக்கும் யோக்கியதைக்கும் சுதந்தரம் என்று பெயர். ஒவ்வொருவனும் அதை வேண்டுங்கால் செலுத்திக்கொண்டும் செலுத்தாதொழிந்து மிருக்கலாம். அச்சுதந்தரத்தைப் பிறர் தடை செய்யவுங் கூடாதென்னும் நிர்ப்பந்தமுண்டு. ஒவ்வொருவருக்குமுரிய ஒவ்வொரு சுதந்தரத்திற் கேற்றபடி பிறருக்கு நிர்ப்பந்த மேற்படுகின்றது. இராமனுக்கு ஒரு சொத்துக்குச் சுதந்தரமிருந்தால், அச்சொத்தைத் தனக்குபயோக மாக்கிக் கொள்வதைத் தடுக்கா திருக்கக் கிருஷ்ணன் முதலியவர்கள் நிர்ப்பந்தப்பட் டிருக்கிறார்கள். அப்படியே இராமனென்பவனுக்கு கிருஷ்ணனிடத்திலிருந்து ஒரு ஊழியத்தைப் பெறச் சுதந்தரமிருந்தால் அவ்வூழியத்தைச் செய்யக் கிருஷ்ணனும் நிர்ப்பந்தப் பட்டிருக்கிறான்.

2. மனிதருக்குச் சுதந்திரங்களுண்டென்று உலகம் முழுவதும் உள்ள நாகரீகமடைந்த சனத்தார்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒருதகப்பன் தன் சிறுவர்களி லொருவனுக்கு ஒரு பழத்தைக்கொடுத்தால் அப்பழத்திற்குத் தனக்கு மாத்திரஞ் சுதந்தர முள்ளதாக அச்சிறுவன் பாவிப்பான். அதை யுண்ணுவதற்காவது, தன் சகோதரரி லொருவனுக்குக் கொடுப்பதற்காவது; தனக்கு வேண்டாமென்று எறிந்துவிடுவதற்காவது தனக்குப் பாத்தியதை யுண்டென்றும், தன்னிலும் வலிமையில் மிகுந்த மற்றொரு சிறுவன் அதைப் பிடுங்கிக்கொண்டாலும் களவு செய்தாலும் ஒரு தீங்கு நேரிட்டதென்று நினைத்து அதை மறுபடி தன்வசம் அடைய முயற்சி செய்யலாமென்றும் அவன் அறிந்திருக்கிறான். இந்த உதாரணத்திலிருந்து ஒரு குடும்பத்தி லடங்கியவர்களுக்குள்ளும் சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களு முண்டென்று ஏற்படுகின்றது. [illegible]த்திற்குரிய சட்ட

த்தினாலும் மேற்கூறியபடி சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களு மேற்படுகின்றன. பொய்ச்சாட்சி சொல்லாதிருக்க எவரும் சட்டத்தினால் நிர்ப்பந்தப்பட்டிருக்கிறார்கள்; ஏனெனில், இவ்விதமான நிர்ப்பந்த மில்லாவிட்டால் பிறர் தங்களுடைய சொத்து அல்லது உயிருக்குரிய சுதந்தரத்தை யிழந்து விடுவார்கள். நாகரீகங் குன்றியிருக்கும் அநேக சங்கத்தாருங்கூட சுதந்தரங்களையும் நிர்ப்பந்தங்களையும் பாராட்டி வருவதாக நாமறிகிறோம். காட்டில் மிருகங்களுக்குத் துல்லியமாய்* வாழ்ந்துவருங் கூட்டங்களிலும் அவைகளின் ஞானம் சிறிதேனு மில்லாதிருக்குமென்று நினைக்க விடமில்லை. ஆகையால் எல்லாவிடத்திலும் சிறிதேனும் நாகரீகப் பயிற்சியடைந்திருக்கும் எல்லா சங்கத்தாரிலும் மேற்கூறியபடி சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் ஒவ்வொரு மனிதனுக்கு முரியவைகளென்னும் அறிவு பொதுவா யிருக்கின்றது.

3. மேற்கூறிய இலக்கணங்களை யுடைய சுதந்தரங்கள் மனிதருக்கு இருக்கவேண்டுமென்பதற்கு மனிதரினியல்பும், மனிதருக்கு இம்மையிற் சீவனங்கழித்தே தீரவேண்டியதா யிருக்கிற ஆவசியகங்களும், இவ்வியல்போடும் ஆவசியகங்களோடும் நம்மைப் படைத்திருக்கும் ஆண்டவரின் கருத்துமாகிய இவைகளே தகுந்த காரணங்க ளாகின்றன. நம்முடைய உயிரை யிரட்சித்துக் கொள்ளாதும், நமது குடும்பத்தார், நம்மினத்தா ராகிய இவருடன் சகவாசஞ் செய்யாதும் கடவுளின் கருத்துக் கிசைந்து நடக்காதும் நாம் நமக்குரிய மானிட விலக்கணத்தைக் காப்பாற்ற முடியாது. ஆகையால் இக்காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள நமக்குச் சுதந்தரங்க ளுண்டென்பதற்குத் தகுந்த காரணமிருக்க வேண்டிய தென்பதைக் குறித்துச் சிறிதும் ஐயமில்லை.

4. மேலும் மனிதரின் ஆசைக்களவில்லை யென்பது உறுதி. மனிதர் தத்தம் ஆசைகளையே மேற்கொண்டு நடந்துவிட்டால் சங்கத்திற்சமாதானங்குன்றி நாசம் விளைந்து விடும். ஆகையாற் சங்கத்திலுள்ள ஒவ்வொருவரும் தாங்கள் செய்யாதிருக்க வேண்டிய நிர்ப்பந்தங்க ளுண்டென்று எப்பொழுதும் உணர்ந்திருக்க வேண்டும். ஒவ்வொருவருங்கும் நிர்ப்பந்தங்களேற்படுங்கால் மற்றவருக்குச் சுதந்தரங்களும் அவைக்குத் தக்கபடி நிலை பெறுகின்றன. சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் இப்படி யியற்கையாகவே ஏற்படாவிட்டால் மனிதரின் சங்கங்களில் தீமையே விளையும். சுதந்தரங்களாலும் நிர்ப்பந்தங்களாலும் மனிதருக்கு மனிதர் கட்டுப்படுவதால் அவருக்குச் சங்கத்திற்சகவாசமும், கஷ்ட நிவர்த்தியுஞ் சுகமுங்கிடைக்கின்றன.

5. இவ்விதமான சுதந்தரங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் துரைத்தனத்தாரின் சட்டங்களும், நியாயாதிபர்களின் தீர்ப்புகளும், தொன்றுதொட்டுவரும் வழக்கங்களுமாகிய மூன்று காரணங்களுண்டென்பது சிலருடைய கொள்கையா யிருக்கின்றது. இக் காரணங்களையே இராஜநீயமம், தர்மக்கிய சமயம், சம்பிரதாய மென்று வடமொழியிற் கூறுவார்கள். இது சரிதான். ஆகிலும் இவைகளாலேற்படும் சுதந்தரங்களையும் நிர்ப்பந்தங்களையும் மாத்திரம் ஒருவன் மேற்கொண்டு வேறொன்றாலுங் கட்டுப்படாவிட்டால், அவனது நடபடிக்கை மனிதருக்குத் திருப்தியையுஞ் சுகத்தையுங் கொடுக்கிறதில்லை. சன்மார்க்க வியல்பினால் வேறு சில சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் உற்பத்தியாகின்றன. ஒருவன் குடிக்கச் சலமில்லாது தாகத்தினால் வருந்தி நம்முடைய வீட்டிற் பிரவேசிக்கிறான்; அவனுக்குக் குடிக்க நீர் கொடுக்கச் சட்டத்தினால் நிர்ப்பந்த மேற்படவில்லை; அவனுக்குச் சுதந்தரமுமில்லை. ஆகிலும் அக்கடமை நம்மால் துறக்கற்பாலதோ?* ஆகையால் மேற்கூறிய மூன்று காரணங்களே மனிதர்க்குரிய சுதந்தரங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் மூல காரணங்க ளாகாவென்று விளங்குகின்றது.

நம்முடைய சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் பெரும்பான்மையாக இம்மூன்றுகாரணங்களைக்கொண்டே ஏற்பட்டுவருதலால் இவைகள் மனிதரின் சுதந்தரநிர்ப்பந்தங்களுக்கு மூலகாரணங்களென்று தோன்றுவது சகஜந்தான். ஆகிலும் இவைகளுக்குங் கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கும் மானிடவியல்பே மூலகாரணமாயிருக்கிறதென்பதும் அவ்வியல்பை நிராகரிப்பது கூடாதென்பதும் நமக்கு நன்றாய் விளங்குகின்றன. தமக்கு இயல்பாகிய குணங்களை மனிதர் பக்குவம்பெறச் செய்யவேண்டுமென்றும் அப்பக்குவநிலையை அடைவதினால் விளையும் ஆனந்தத்தையுஞ் சுகத்தையும் பெற்றுக் கடவுளின்மேன்மையைப் பாராட்டவேண்டுமென்பதும் மனிதரின்சுபாவத்திற்கே யுரித்தாயிருக்கின்றன. இச்சுபாவத்தை யனுசரித்தே துரைத்தனத்தாரின் சட்டங்களும், நியாயாதிபரின் தீர்ப்புகளும், தொன்றுதொட்டுவரும் வழக்கங்களும் ஏற்பட்டுவந்திருக்கின்றன.

சட்டத்தினாலும் நியாயாதிபரின் தீர்மானங்களினாலு மேற்படுஞ் சுதந்தரங்களைப்பற்றி சந்தேகமாவது அபிப்பிராய பேதமாவதில்லை. துரைத்தனத்தை நடத்தும் அதிகாரிகளால் அவைகள் நியமிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. மனிதரின் சன்மார்க்க வியல்பினின்று தோன்றும் சுதந்தரங்களிற்சில இவ்வாறு விளங்குகிறதில்லை. இதற்கு உதாரணமாக, இரங்குஞ் சுபாவமுள்ள ஒவ்வொருவருக்கும் ஏழைக்குதவி செய்யவேண்டுமென்பது தங்கள் கடமைகளிலொன்றாய் விளங்கினாலும், தன்னுடைய நிலைமையை அனுசரித்துத்தான் உதவி செய்யவாவது உதவி செய்யாதொழியவாவது நிச்சயிக்கவேண்டியிருக்கும். மேலும் ஏழைகளுக்கு உதவிசெய்வது அவ்வேழைகளுக்கே தீதென்றும் சிலர் நினைக்கலாம். ஆகையால் இவ்விஷயத்தில் நாம் உசிதம்போல் நடந்து கொள்ளலாம்.

6. சுதந்தரத்திற்குரியவன் குறித்த வொரு தருணத்தில் அதைச் செலுத்தவும் செலுத்தாதிருக்கவும் தன்மனம்போல் நிச்சயித்துக்கொள்ளலாம். தன்சுதந்தரங்களை நிறைவேற்றிக்கொள்ளாமல் ஒருவனைத் தடுப்பதற்கும் அவைகளைத் துறக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும் மற்றொருவருக்கு மதிகாரமில்லை. தானே தடையின்றி அவற்றை நிறைவேற்றிக்கொள்ளாதொழியலாம். பிறருடைய கட்டாயத்தால் தன் சுதந்தரங்களை ஒருவனிழந்தால் துரைத்தனத்தார் அவனுக்குத் தக்கநிவர்த்தியைக் கொடுக்கப்பாத்தியப்பட்டிருக்கிறார்கள். மேலும் தன் சுதந்தரங்களை ஒருவன் ஒருதருணத்தில் விட்டுவிடுவதால் அவற்றை அவன் எப்பொழுது மிழந்துவிட்டதாக நாமெண்ணக்கூடாது. அவற்றை நிரந்தரமாய்த் துறக்கவும்* சிலவிஷயங்களில் அவனுக்குப் பாத்தியதையில்லை. தன்னை மற்றொருவனுக்கு அடிமையாக விற்றேனும் தற்கொலைபுரிந்தேனும் தனக்குள்ள சுதந்தரங்களையும் கடமைகளையும் செலுத்தா தொழியக்கூடாது.

7. ஒருவன் தனக்குச் சட்டத்தினாலேற்பட்டிருக்கும் சுதந்தரங்களைச் செலுத்திக்கொள்ளுவதைப்பார்க்கிலும் பிறர் சுதந்தரங்களைத் தடுக்காதிருத்தல் பிரதானம். உதாரணமாக, தன் சொத்தைப் பெருக்கிக்கொள்ளுவதைப் பார்க்கிலும் பிறர் சம்பாதிப்பதைத் தடுக்காதிருத்தல் பிரதானம். மனிதரின் சன்மார்க்கவியல்பினின்றும் உற்பவிக்குஞ் சுதந்தரங்களிலோ, தனக்குரிய சுதந்தரங்களை நிறைவேற்றிக்கொள்ளுவது பிரதானம்; பிறருடைய சுதந்தரங்களைத் தடுக்காதிருத்தல் மாத்திரம் அவ்வளவு மகிமையைத் தராது. உதாரணம்:—தருமம் பெறத் தகுதியுடைய ஏழைகளுக்கு தான் தருமஞ் செய்வதைப்போல் பிறர் தருமஞ்செய்வதைத் தடுக்காதிருத்தல் அவ்வளவு முக்கியமல்ல. பிறர் கல்வி சம்பாதித்துக்கொள்ளுவதை த்டுக்காதிருத்தலைப்பார்க்கிலும் நமக்குக் கல்வி சம்பாதித்துக்கொள்ளுவது முக்கியம். சமயத்துக்குத்தக்கபடி நாம் நிர்ப்பந்தங்களுக்கு அடங்கியிருத்தலும், பிறர் தங்களுடைய நிர்ப்பந்தங்களுக் கடங்கியிருத்தலை தடுக்காதிருத்தலுமாகிய இரண்டும் ஒன்று மற்றொன்றைவிடப் பிரதானமாய் விளங்கலாம்.

8. வெளிப்படையாய்விளங்குஞ் செய்கைகளுக்கு மாத்திரமே ஒருவன்சட்டத்தினாலாவது நியாயாதிபரின் தீர்மானங்களாலாவது ஏற்படும் நிபந்தனைகளுக்கு உட்படக்கூடும். ஒருவனுடைய எண்ணங்கள் எவ்வளவு கெடுதலாயிருந்தாலும் அதனால் அவனுக்குத்தண்டனையில்லை. இது சங்கத்தினொழுங்குக்கும் உறுதிக்கும் பிரதான ஆதாரம். ஆனால் வெளிப்படையாய்

* சரிசமானமாய்.

* விட்டுவிடத் தக்கதோ.

* துறத்தல் = விட்டுவிடுதல் = அனுபவியாதிருத்தல்.

விளங்கும் செய்கைகளைமாத்திரம் வழுவற நடத்தி மனதைச் சுத்தப்படுத்தாது விடுவது மனிதருக்குத் தங்கள் வாழ்நாள்முழுவதும் பிறரோடு சகவாசத்திற் கலக்கும்பொழுது தங்களை நடத்திக்கொள்ளுவதற்குத் தகுந்த விதியல்ல; சன்மார்க்கத்தினின்று தவறாது நடந்து தருமத்தை யாசரித்து கடைத்தேறவும் சங்கத்திற் சுகமாகவாழவும் நமதுள்ளத்தைச் சுத்தப்படுத்தி உள்ளும்புறமு மொத்திருக்குமாறு செய்துகொள்ளவேண்டியது. அப்பொழுது நம் மனச்சாட்சிக்குத் திருப்தியுமுண்டாகும்; நம்முடைய சங்கத்தாருக்கு நாம் அவருடன் வாழ்தலால் ஓர் பிரயோசனங்கிடைத்து அவருடைய புகழ்ச்சிக்கும் நன்றிக்கும் பாத்திரமாவோம்.

9. சட்டத்தினாலேற்படுஞ் சுதந்தரங்களினிலக்கணங்களையும் வரையறைகளையும் ஐயமின்றியும் தெளிவாயுங் குறித்துக் காட்டலாம். பொறுப்பை வகித்தற்குரிய வயது செல்லாதவர்களும் பைத்தியம்பிடித்தவர்களும் தவிர, குடிகளிலொவ்வொருவருக்கும் தங்கள் சொத்தைப்பற்றியாவது தங்களாற் செய்யத் திறமையுள்ள வேலையைக்குறித்தாவது தம் விருப்பப்படி பிறருடன் பொதுவாய் உடன்படிக்கை செய்துகொள்ளச் சுதந்தரமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை; சிலவிடங்களில் உடன்படிக்கை செய்துகொண்டவரின் உண்மையான கருத்தை அவருபயோகித்திருக்கும் வாசகத்தைக்கொண்டு குறிப்பாயறிவதிற் சந்தேக முண்டாகலாம்; இச்சந்தேகம் உடன்படிக்கையி னிலக்கணத்தைப்பற்றி யுண்டாவதேதவிர, உடன்படிக்கை செய்துகொள்ளுவதற்குரிய சுதந்தரத்தைப்பற்றியல்ல. அப்படியே ஒரு குடும்பத்திலடங்கியவருள்ளும் ஒவ்வொருவருக்குமுள்ள சுதந்தரங்கள் குறிப்பாய் விளங்குகின்றன.

மனிதரின் சன்மார்க்கவியல்பினால் சாதாரணமாயேற்படுஞ் சுதந்தரங்களைப்பற்றி இம்மாதிரியாய்த் தெளிவான அறிவும் விதிகளுங் கிடைக்கிறதில்லை. சட்டங்களில் பிரிவுபிரிவாய் விதிகளேற்படுவதுபோல் இவ்வகுப்பிற்குரிய சுதந்தரங்களைப்பற்றி விதிகள் ஏற்படா. ஒருவனுடைய மாதாந்தரச் செலவைப்பற்றியாவது, அயலாருடன் வைத்துக்கொள்ள வேண்டிய சிநேகத்தின் முறைமையைப்பற்றியாவது குறிப்பான விதிகளை ஏற்படுத்துவது சாத்தியமல்ல. ஒவ்வொருவனுடைய சுபாவமும் பயிற்சியுமே தனக்குச் சமயோசிதமாக நடந்து கொள்ளுவதற்கு ஆதாரங்களாகின்றன.

10. சுதந்தரங்கள் பெரும்பாலும் குறிப்பாய் எடுத்துக்காட்டக் கூடியவையாதலால், அவைகளைச் சட்டங்களில் விதிப்பது நலம். அவ்விதிகளாலேற்படும் நிர்ப்பந்தங்களை மறுப்பதினால் யாருக்குத் தீங்கு நேரிடுகிறதோ அவர் அவைகளை மறுப்பவருக்கு துரைத்தனத்தாரின் வலிமையைக்கொண்டும், சிலவிடங்களில் சொந்தவலிமையைக்கொண்டும் பலாத்காரத்தினால் நிவர்த்தியைத் தேடிக்கொள்ளலாம்.

சட்டத்தினாலேற்படுஞ் சுதந்தரங்களுக்கும் சன்மார்க்கவியல்பினாலேற்படுஞ் சுதந்தரங்களுக்குமுள்ள வித்தியாசத்தை யெடுத்துக்காட்டுவதில் துரைத்தனநூலிற் பயின்ற சிலர் இப்பொழுதெடுத்துக்காட்டிய பலாத்காரத்தையே விசேஷமாகிய குறியென்று சொல்லியிருக்கிறார்கள். இது சரியன்று. ஏனெனில், சுதந்திரங்கள் தெளிவாய் விவரிக்கப்பட்டு சட்டநிபந்தனைகளிற் சேர்க்கப்பட்டபிறகுதான் அவைகளை மறுப்பவருக்குத் தண்டனை யேற்படுகின்றது. மேலும் சிலவிடங்களில் சன்மார்க்கவியல்பினால் ஏற்படும் நிர்ப்பந்தங்களையும் சுதந்தரங்களையும் தெளிவாய்க் குறித்துக் காட்டலாம்; அவைகளாற் கட்டுப்படாதவரை நாம் தண்டனைக்கு முட்படுத்தலாமோ? உதாரணமாக, நமக்குபகாரஞ்செய்பவர்க்கு நன்றியைச் செலுத்த நாம் கட்டுப்பட்டிருக்கிறோம்; நன்றியைச் செலுத்தாதவருக்கு தண்டனையில்லை, அவரைப் பலாத்காரமாய் நன்றியைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்த வழியுமில்லை. சன்மார்க்கவியல்பினாலேற்படும் நிர்ப்பந்தமுமில்லையென்று சொல்லலாமோ? வேசிகள் பொதுவாய்ப் புருஷருக்குத் தம்முடலை விற்றல்போன்ற, சன்மார்க்கவியல்புக்கு விரோதமான சில செய்கைகளுக்கும் சிலதேசத்திய சட்டத்தினால் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. இப்படி தண்டனைக்குட்படுத்துவதாகிய பலாத்காரத்தினால் மாத்திரமே இப்பொழுதுகூறிய சில நூலாசிரியரின் சித்தாந்தப்படி அச்செய்கைகள் தீயவென்று சொல்லலாம்; அவர்கொள்கைப்படி மானிடவியல்புக்கு விரோதமென்று சொல்லக்கூடாது. இவ்வபிப்பிராயத்தை யொருவரும் ஒத்துக்கொள்ளார்.

இதில் முடிவா யறியவேண்டியது யாதெனில், எவ்விதச் சட்டங்களில்லாவிட்டால் மனிதரின் சங்கத்திற்குச் சீர்திருத்தமும், அதிலடங்கிய ஒவ்வொருவருக்கும் அவருடைய சன்மார்க்கவியல்பைப் பரிபக்குவத்திற்குக் கொண்டுவரச் சக்தியுமில்லாது தீருமோ, அச்சட்டங்களை நிர்ணயித்தற்கு மானிடவியல்பை யுண்மையாக அறிதலால் குறிப்பாய் விளங்கும் சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் ஆதாரமாகின்றன. ஏனெனில், மானிடசுபாவத்திற்குரிய சக்திகளைப் பலகாரியங்களிற்செலுத்த சுதந்தரமும் நிர்ப்பந்தமுமில்லாதிருந்தால் ஒவ்வொருவனும் அடிமையாய்த்திரிந்து தன் நற்குணங்களை யபிவிர்த்திசெய்யாது நாளடைவில் கெடுவான். சங்கத்திற் சேர்ந்தவர்களுக்கு நன்னடையுண்டாகும்படி சங்கத்தின் பலாத்காரத்தால் ஒவ்வொருவனும் தன்சுதந்திரங்களையும் நிர்ப்பந்தங்களையும் நிறைவேற்றத் தூண்டப்பட்டுக் கடைத்தேறாவிட்டால் அச்சங்கம் நாளுக்குநாள் நாகரீகத்தில் அபிவிர்த்தி யடையாது. இதன்றி மனிதரின் நற்குணமும் ஊக்கமுங் குன்றி நாளுக்குநாள் சோம்பேறித்தனம் அதிகரித்து விலங்கினத்திற்குரிய குணங்களை மேற்கொண்டுவிடுவார்கள்.

12. ஊண், உடை, உறைவிடம் முதலியவை மனிதரின் பொதுவான சுபாவத்திற்குரியவையாதலால் சொத்திற் சுதந்திரத்தைக் கொண்டாடுகிறார்கள். அச்சுபாவம்மாறி ஊண், உடை முதலியவைகளை விரும்பும் அவா நீங்கினால் தம்சொத்து பிறர்சொத்தென்னும் தாரதம்மியம் நீங்கிவிடும். மனிதர் வெவ்வேறாய்த் தனித்து வசித்துவந்தால் சுதந்தரங்களிராவென்பது உறுதி. சுதந்தரங்களைப்பற்றிய மேற்குறித்த சித்தாந்தமானது சங்கமாய்க்கூடி வாழும் மானிடசுபாவத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் சொத்தேது, குடும்பமேது, விவாகமேது. இவ்வ யில்லாவிட்டால் சுதந்தரங்களுண்டோ, நிர்ப்பந்தங்களுண்டோ? எல்லாமனிதருக்கும் சகவாசமும் பொதுவான எண்ணங்களும் விருப்பங்களும் இயற்கையாயிருத்தலால், தம்மிற்சமாதானத்தோடும், சுகத்தோடும், துன்பத்தை விளைக்கும் வீணான தடைகளின்றியும்வாழ்தற்குவெளிப்படையாய் விளங்கும் சுதந்தரங்கள் ஒவ்வொருவருக்குமின்றியமையாவென்று விளங்குகின்றது. எச்சங்கத்தில் சுதந்திரங்களும் நிர்ப்பந்தங்களுமில்லையோ அங்கே சகவாசமுஞ் சுகமுமிரா. சகவாசம் மனிதற்கியற்கையாதலால், அவ்வியற்கையை நடபடிக்கையிற் செலுத்தி பக்குவப்படுத்துவதற்கும், இதனால் இம்மை மறுமைகளிற் சித்திக்கும் சுகானுபவத்திற்கும் மனிதருக்குச் சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் ஏற்படுகின்றன.

13. சுபாவீகமாகிய சுதந்தரமென்பது நமக்கிப்பொழுது நன்றாய்விளங்குகின்றது. நம்முடைய சுபாவத்திலிருந்துற்பத்தியாய் வளர்ந்து நாம் கடைத்தேறவேண்டியதற்கு அவசியமாயிருக்குஞ் சுதந்திரங்களுக்கே சுபாவீகமாகிய சுதந்திரங்களென்று பெயர்.

மனிதர் ஓரொழுங்குக்கு முட்படாது மிருகங்களைப்போல் காட்டுத்தன்மையில் ஆதியில் சுயேச்சையாய் வசித்திருந்ததாகவும் அச்சுபாவீக நிலைமையில் மனிதருக்குள் வழங்கிய சுதந்தரங்களே சுபாவீக சுதந்திரங்களென்றும் ரூஸ்ஸோ என்பவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். மனிதர் எக்காலத்தும் காலதேச வர்த்தமானத்திற்குத் தக்க வொழுங்குகளுக் குட்பட்டிருந்ததாய்க் கொண்டால், இப்பொழுது நடபடிக்கையிலிருக்குஞ் சுதந்தரங்களுக்குள்ள மூலாதாரம் மாய்ந்துவிடுமென்றெண்ணங்கொண்டு இவ்வாறுள்ள சித்தாந்தத்தை இவரும் பிறர்சிலரும் கைக்கொண்டதாய்க் காணப்படுகிறது. இவருடைய எண்ணங்களையும் நோக்கங்களையுங் குறித்து நாம் கவனிக்கவேண்டியதில்லை. உண்மை யெதுவென்று மாத்திரமே நாமாலோசிக்கவேண்டியது. அப்படி யாலோசிக்கையில், இவரால் விவரிக்கப்படும் சுபாவீகநிலையொன்று ஆதியில் மனிதருக்குள் வழங்

கியதாய்ச் சொல்லத்தகுந்த காரணங்களில்லை. (1) ஒவ்வொருமனிதரும் தனித்து சுயேச்சையாய் ஒரு ஒழுங்குக்குமுட்படாமல் எக்காலத்துமிருக்கவில்லை. பூர்வத்தில மனிதர் குடும்பத்தினொழுங்குக்குட்பட்டும், அதினாற் பாதுகாக்கப்பட்டும் வசித்துவந்தார்களென்றும், அதற்கும் முன் ஒருகாலத்தில் வேறொருநிலைமை வழங்கியதாய்ச் சொல்ல நமக்கொருவிதமான ஆதாரமுமில்லையென்றும் ஸர் ஹென்றிமேயின் என்பவர் விளக்கிக்காட்டி ஸ்தாபித்திருக்கிறார். (2) நாகரீகமில்லாத ஆதிமனிதர் வேறுநிலையில் வசித்திருந்தாலும் தற்காலத்து விளங்கும் நிலைமையில் மனிதர் தம்மில் கையாட்சிக்குக்கொண்டு வரவேண்டிய சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் இன்னவென்று மாத்திரமே நாமறியவேண்டியது. மனிதருள் முன்வழங்கிய தாழ்ந்தநிலைமையின் இலக்கணங்களால் தற்காலச் சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் வேறுபடுவதில்லை. தற்காலத்தில் சுபாவிகசுதந்திரங்களென்றால் இப்பொழுதுள்ள சங்கத்தினிலக்கணத்திற்குத் தக்கபடி மனிதர் சுகானுபவம்பெற்று கடைத்தேற நடபடிக்கையிலிருக்கவேண்டிய சுதந்திரங்களும் நிர்ப்பந்தங்களுமேதவிர வேறில்லை.

14. மேற்கூறியதைக்கொண்டு வரவர நாகரீகம் விருத்தியடைவதால் சுதந்திரங்களும் நிர்ப்பந்தங்களும் விருத்தியடைந்து உறுதிபெற்று வந்திருக்கின்றனவென்று நிச்சயிக்கலாம். ஆதியில் ஒவ்வொருகுடும்பத்திற்குமாத்திரம் சமுதாயத்தில் சுதந்தரங்களிருந்ததாகத் தெரிய வருகிறது. எல்லாமனிதருக்கும் பொதுவாகிய சுபாவத்தை யாதாரமாகக்கொள்வதினால் ஒவ்வொருவருக்குஞ் சுதந்தரங்களுண்டென்றும், அச்சுதந்தரங்களை நடபடிக்கைக்குக் கொண்டுவருதலால் மாத்திரமே மனிதரின் நற்குணங்கள் பரிபக்குவமடையுமென்றும் பூர்விகர்களுக்குக் கொஞ்சமும் ஞானமில்லை. ஒருவனுக்குத் தீங்குநேரிட்டால் அவன் சேர்ந்த குலத்திற்குமாத்திரமே அத்திங்கு செய்யப்பட்டதாய்ப் பாவித்து அக்குலத்திற்குச் சமுதாயத்தில் பரிகாரஞ் செய்வது அக்காலத்தில் வழக்கம். கிரேக்க ரிராச்சியங்களிலும் ரோமாபுரிராச்சியத்திலும் ஆதிகாலத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளைக் கழிக்கும்மாதிரியைத் திட்டப்படுத்திக்கொள்ளுவதில் தனக்குச் சுதந்திரங்களுண்டென்னும் அறிவில்லாதும் அதைச் செலுத்தும்முயற்சி யில்லாதும் ராச்சியத்தின் சமுதாயசுகத்திற் கேற்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டே எல்லாருமடந்து வந்தார்கள். அவருக்குள் ஒவ்வொருவருக்கும் மற்றெவராலும் மறுக்கக் கூடாத சுதந்தரங்களில்லை. குடும்பத்தின் தலைவனை குலபதிக்குள்ள இவ்விதமான சுதந்திரங்கள் ஸ்தானபலத்தால் மாத்திரமே உண்டாயிருந்தன. ஆகையால் மனிதருக்குப் பொதுவாயிருக்குஞ் சுபாவமின்னதென்றும், அச்சுபாவத்தின்மேன்மையின்னதென்றும் அச்சுபாவத்தை வளர்க்கவேண்டிய ஆவசியமும் வளர்த்தற்குரிய மார்க்கங்களு மின்னவையாமென்றும் உள்ளஞானம் காலக்கிரமத்தில் மனிதருக் குண்டாவதினால், சுதந்தரங்களும் அவைகளுக்குத்தக்க நிர்ப்பந்தங்களும் நாளடைவிலதிகரித்து பக்குவத்தையடைந்தன.

(இன்னும் வரும்,)

கி. சுந்தரராமன், எம். ஏ.

புஸ்தகவாசிப்பு.

புஸ்தகத்தெரிவு.

புஸ்தக வாசிப்பில் கவனிக்கவேண்டிய முக்கியமான முதல்விஷயம் புஸ்தகத்தெரிவு என்கலாம். "நினி அறிந்து தின்றால் பிணியில்லை" என்றோர் பழமொழி உண்டு. அதின்படி ஒருவன் தான் இன்னது அருந்தத் தகும், இன்னது தகாது என்று அறிந்து, தகாததைத் தள்ளித் தக்கதைப் புசித்துவந்தால் அவன் தேகம் நோய்க்கு இடமாகாதாம். அதுபோல அறிவீனம் என்னும் பிணி நீங்கி அறிவு என்னும் சுகம் வர்த்திக்க* புஸ்தகம் தெரிந்து வாசிப்பது அத்தியந்த முக்கியம். உலகத்தில் புஸ்தகங்கள் காணவும் கிடையாமல் அருமையாயிருந்த காலங்கள் உண்டு. பூர்விகத்தில் எழுத்துக் கருவிகள் சொற்பம். எழுத அறிந்தவர்கள் அதிலும் சொற்பமாயிருந்தார்கள். ஆகையால் சில புஸ்தகங்களின் பிரதி, நகரத்துக்கொன்றும், நாட்டுக்கொன்றும், ராச்சியத்துக்கொன்றுமாய் மாத்திரம் இருந்தது. சிலவேளைகளில் ஒருபுஸ்தகம் ஒரு ராச்சியமெங்கும் தேடியும் கிடையாமல், அயல் ராச்சியங்களில் விசாரித்தடையும்படியாக அரசர்கள் ஒருவருக்கொருவர் கோலாகலமாய் ஸ்தானாபதிகளை அனுப்புவார்கள். அங்கிலேய தேசத்தில் அக்காலத்தில் ஒரு பட்டணத்தார் யாவரும் சேர்ந்து ஒரு புஸ்தகம் வாங்கி, அதை குறிக்கப்பட்ட ஸ்தலத்தில் சங்கிலியால் மேசையில் மாட்டி வைத்திருப்பார்கள். அதை இஷ்டமுள்ளவர்கள் போய் வாசிப்பார்கள். இப்போது கால்ரூபாய்க்குக்கிடைக்கும் ஒருபுஸ்தகம் அப்போது ஆயிரத்துச்சில்வானம்* ரூபாய் கொடுத்தாலும் கிடையாது. அறுநூறு வருஷத்துக்கு முன் பேர்பெற்ற அங்கிலேய சமஸ்த வித்யாசாலையாகிய ஆக்ஸ்போட் (Oxford) கல்லூரியின் புஸ்தகசாலையில் ஐந்தாறு சிறு நூல்களை மாத்திரம் ஒரு சின்ன பெட்டிக்குள் வைத்துப் பூட்டிப் பெட்டிக்குச் சங்கிலிமாட்டியிருந்தது. அஞ்ஞூற்றறுபது ஆண்டுகளுக்குமுன் பிரான்ஸ் தேசத்து அரசனின் வசம் நான்கு இலக்கிய சுவடிகளும் சில ஜெபப் புஸ்தகங்களும் மாத்திரம் காணப்பட்டன. தேவர்களின் சொரூபங்களை கையில் புஸ்தகம் ஏந்தின பாவனையாய்ச் சித்திரிப்பது அவர்கள் ஐசுவரிய சம்பன்னர் என்பதற்குக்குறிப்பாயிருந்தது. செய்யுட்களின் பிரதிகள் கடனாக விலைபெற்ற ஈடுகள்பேரிலும், விலையாக முக்கியவான்கள் முகனையில் எழுதப்பட்ட உறுதியான தஸ்தாவேஜுகளின் பேரிலும் கொடுக்கப்பட்டன. கல்வி வாஞ்சையுற்றவர்கள் கடல் மலை என்று பாராமல் அநேகவருஷமாய், தேசாந்திரம்போய் வருந்தி அறிவைச் சம்பாதித்தார்கள். இந்துதேசத்தில் உண்டாயிருந்த புஸ்தக வறுமைக்கும் மதிப்புக்கும் அநேக திர்ஷ்டாந்தங்கள் சொல்லலாம். சுவடிகளைக்குவித்துச்சரஸ்வதிபூஜைசெய்வதுநாளதுவரை சகஜமே. ஒரு சுவடி எழுதி முடிந்தவுடன் அதைப் பல்லக்கில் ஏற்றிக் கீத வாத்திய முழக்கத்துடன் வெகு ஆடம்பரமாய்ப் பட்டணப்பிரவேசம் செய்விப்பார்கள். சுவடிகளின் முதல் ஏட்டில் "இந்தச் சுவடியை ஒருவரும் திருடக்கூடாது. திருடினால் கங்காதீரத்தில் காராம்பசுவைக்கழுத்தறுத்த தோஷத்திலேபோவாராகவும்" என்ற அல்லது அதற்குச்சமனான வாக்கியம் வரைந்திருக்கும். இந்துக்களுக்குள் முந்தியகாலங்களில் நூல்களை இரவல் கொடுக்கிறதேயில்லை. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு முதலாய் மரணப்படுகையில் அந்நியருக்குக் காட்டுவதில்லை என்ற ஆணையின்பேரில் அவைகளை ஒப்புவிப்பார்கள்.

அச்சடித் தொழிலாகிய அதிசய வித்தை வெகுகாலத்துக்குமுன் சீனதேசத்தில் ஒருவாறு அறியப்பட்டிருந்தாலும், ஜர்மானிய தேசத்தில் கிறிஸ்தாப்தம 1444-ம் வருஷத்தில் அபிவிர்த்தி செய்யப்பட்டது, அதுமுதல் உலகம் புஸ்தகப்பிரளயமாயிற்று. அங்கிலேய, பிரான்ஸிய, ஜர்மானிய பாஷைகளில் பிரசித்தமாயிருக்கும் நூல்களுக்குக் கணக்கில்லை. இரண்டு வருஷத்துக்குமுன் இயற்றிய ஓர் கணக்கின்படி தமிழ்ப்பாஷையில் சுமார் நாலாயிரம் புஸ்தகங்கள் அச்சிட்டு தற்காலம்வரை பிரசுரமாயிருக்கின்றன. அவைகள் எல்லாம் வாசிப்புக்கு அனுகூலப்பட்டவையென்றுசொல்லஏதுவில்லை.

> "கல்வி கரையில, கற்பவர் நாள்சில;
> மெல்ல நினைக்கிற் பிணியல; தெள்ளிதின்
> ஆராய்ந்தமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
> பால் உண் குருகிற்றெரிந்து,"

என்ற மூதுரைப்படி, கல்வி வரையறைப்படாததினாலும், அதனை முற்றக் கற்பதற்கு ஆயுள் நீடித்திராமையாலும், கற்பவர் சரீரமோ பிணிக்கெல்லாம் பிறப்பிடம் ஆகையாலும், "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்ற சாமானிய வாசகத்தை நம்பி, கடை மாணாக்கருக்கு உபமானமாகிய ஆடானது கண்ணுக்குத் தென்பட்டதையெல்லாம் ஓர்வாய் கடித்தாற்போல், கண்டதெல்லாமாகிய. வாசிப்புக்கு உதவாத தந்தனப்பாட்டும், ரஞ்சனக்கூத்தும், காமத்தை, கர்வத்தை, கபடத்தை, குரோதத்தை ஜனிப்பிக்கத்தக்க வீண் கதைகாவியங்களும் அடங்கிய அற்பநூல்களை வாசித்துப் பொழுதுபோக்காமல், தலைமாணாக்கருக்கு இணையாகி நீரைப் பிரித்து பாலைப்பருகும் அன்னப்பட்சியைப் போலச் சாஸ்திரங்களினது விசேஷ சாமானிய

* வர்த்தித்தல்=வளர்தல்.

* 'ஆயிரத்துச் சில்லறை' என்றும் வழங்குவார்கள்.

சாராம்சம் அமைந்த நல்லபுஸ்தகங்களைத்தெரிந்தடைந்து வாசிக்கவேண்டும்.

வாசிப்புக்கு உபயோகமான புஸ்தகங்கள் யாவருக்கும் ஒரேவகையாய் இருக்கக்கூடியதல்ல. ஒரு வியாபாரிக்கு வேண்டிய புஸ்தகங்கள் யாவும் ஒரு வைத்தியனுக்கு உதவா. ஒரு வைத்தியனுக்கு அகத்தியமான யாவும் ஒரு வைதீகனுக்கு வேண்டியிரா. ஆகையால்யாவருக்கும்பொதுவில்அவசியமானநூல்களோடு, அவரவர் தொழில் துறைக்கு ஏற்ற நூல்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது. இவ்விஷயத்தில்-ஸ்ரீ ஜான் லூபக்கு (*Sir Jhon Lubbock*) என்பவர் செய்ததை நாம் பின்பற்றத்தக்கது. அவர் தமக்கு அவசியமான கல்வித்துறைகளில் சிரேஷ்டமான நூறுபுஸ்தகங்களை மாத்திரம் தெரிந்து சேர்த்துவைத்து, அவைகளை வாசித்து வந்தார். கார்லைல் (*Carlyle*) என்னும்வித்வான்சொல்லுகிறார்:— "நமது காலத்திலுள்ள யதார்த்தமான சர்வகலாசாலை யாதெனில், புஸ்தகங்களின் ஓர் கூட்டமே. இந்த புஸ்தக சேர்மானம் எச்சரிக்கையுடன் செய்யப்படவேண்டியது. மேலும் வேளைக்குவேளை அதில் களைபிடுங்கவேண்டும். அதாவது பிரயோசனம் குறைந்த நூல்களை நீக்கிவிடவேண்டும்" என்பதே.

எத்தேசத்திலும் வழங்கிவரும் புஸ்தகங்களின் குணதோஷங்களைப் பொதுப்படக் கவனிக்குமிடத்து, இக்கன்ம பூமியில் நல்லோர்குறைவும் தீயோர் மிகுதியுமாய் இருக்கிறதுபோல, நல்ல புஸ்தகங்கள் சிலவும் பொல்லாத புஸ்தகங்களே பலவுமாய்க்காணப்படுகின்றன.

புஸ்தகங்களை உத்தமம், மத்திமம்; அதமம் என்று மூன்று வகையாய் வகுக்கலாம். அவற்றில் சுத்த அப்பிரயோசனமும், அருவருப்பும், தொட்டோர் கேட்டோர் பார்த்தோர் மனங்களில் நித்திய கெடுதியை பிறப்பிக்கத்தக்கதுமான அதம நூல்கள் உலகத்துக்குக் கேடாய் உற்பத்தியாயிருக்கின்றன என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெரியவர் குறித்தபடி, இவ்வுலகத்தில் தீமைக்கிடமாகிய விஷ சர்ப்பங்களும் காய்கனிகளும், பொது மாதரும் கண்ணுக்கு அதிக பகட்டாய்த் தோன்றுவதுபோல், அதமபுஸ்தகங்களும் உத்தம நூல்களைப் பார்க்கிலும் சாதாரணமாய் அதிக சொற்சிறப்புற்றவைகளாய், நாவுக்கு நயத்தையும் செவிக்கு இன்பத்தையும் கொடுக்கிறவைகளாயிருக்கின்றன. அவைகளில் அமைந்திருக்கும் பொருட்களோ ஆத்துமாக்களை சிற்றின்பம் அவபக்தி என்னும் மீளாக்கயத்தில் ஆழ்த்தி நித்தியநாசத்தை வருவிக்கத்தக்கவைகள். எத்தனையோ மனுக்கள் இவற்றால் நரகத்துக்கு இரையாய்ப் போனார்கள்! இவைகளை இயற்ற தங்கள் ஜீவநாள் முழுவதையும் போக்கின வித்துவான்களும், இவற்றை அச்சடித்து கடைகளில்வைத்தும், ஊர்தோறும் திரிந்தும் விற்பனை செய்கிறவர்களும் உலகத்துக்கு உபகாரிகளாவார்களா? அவர்கள், கஞ்சா, அபின் என்பவற்றின் வியாபாரிகளுக்கு ஒப்பானவர்கள் என்கலாமே. அப்படியிருக்க இளைஞர் இவைகளின்பேரில் ஆசைகொள்ளத்தக்கதாக இவைகளைப் பாடிப் புகழ்ந்து காண்பிக்கும் பெற்றோரும் மற்றோருமோ எத்தன்மையானவர்கள் என்று சொல்லலாம்? இத்தேசத்தவருக்குள் நடமாடி வரும் இவ்வகை தீய நூல்கள் அநேகத்தின் பேர் விவரங்களை விளம்பக்கூடும். ஆகிலும் "தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே" என்றபடி அவற்றின் நாமங்களை இச்சபையில் கூறுவதும் கேட்பதும் முதலாய் ஒருவேளை பெரும் கேட்டுக்கு ஏதுவாகும் என்ற பயத்தால் அவைகளைப்பற்றி அதிகம் விவகரிக்காமல் இம்மட்டில் நிறுத்த வேண்டியதாயிருக்கிறது.

மத்திம புஸ்தகங்கள் விஷத்துளிகள் கலந்த நிறை பாற்குடம்போலும், மணலோடு விரவின அரிசிபோலும், நல்விஷயங்களும் தீயவிஷயங்களும் அமைந்தவைகளாயிருக்கின்றன. இவற்றால் என்னபயன்? பத்து சுகதேகிகளிடையில் ஒரு சுகவீனன் சேர்ந்திருந்தால் அவர் சுகம் இவனுக்கு கிடையாது. இவன் தொத்துநோயோ அப்பத்துப்பேரையும் தாவி வாதிக்கும். அதுபோல இவ்வகை புஸ்தகங்களாலும் கொடியமோசம் விளையத்தக்கதால் அவற்றை முற்றும் விலக்கிவைப்பது அவசியம். ஒருவர் சொல்லுகிறபடி "இவ்வகையான நூல்களிலுள்ள நன்மை அதி வேகமும் மிக ஆழமுமான ஒரு ஆற்றின் அடியில் அமைந்திருக்கும் சில முத்துகள்போல் இருக்கிறது. இந்த முத்துக்களுக்காக முக்குளிப்பதில் உயிர்போவது நிச்சயம்." தற்காலத்தில் திருவிதாங்கோட்டிலும் மற்றுமுள்ள சாதாரண தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் குற்றாலக்குறவஞ்சி, முக்கூடற்பள், போற்றிமாலை, பதுமைக்கதை, மதனகாமராஜன்கதை முதலிய சுவடிகளும், சர்க்கார் பாடசாலைகளில் பஞ்சதந்திரம் நைடதம் முதலிய நூல்களும் வழங்கிவருகின்றன. அவைகளில் சில சிறந்த இலக்கியங்களே யாயினும், இளைஞர் மனதை கெடுக்கத்தக்க ஸ்திரீ வர்ணனை தந்திரயுக்திகள் முதலிய விஷம் கலந்தவை என்பது யாவருக்குந் தெரிந்த காரியமே.

மூன்றும் வகையனவாகிய உத்தம புஸ்தகங்கள் தொகையில் குறைவாயிருப்பினும், அவற்றில் நமது ஜீவகாலம் முழுவதும் சற்றுணரத்தக்க போதனைகள் உண்டு. விலங்குகளில் சிம்ஹமும், பட்சிகளில் ஆளியும், தருக்களில் சந்தனமும் ராஜத்துவம் உடைத்தா யிருப்பது போல, புஸ்தகங்களிலும் அதது சாஸ்திரத் துறைகளில் பொருள் நயம், சொல் நயம் முதலிய காரணமாய் அரசாயிருக்கப்பட்ட உத்தம நூல்களுண்டு. அவ்வகைப் புஸ்தகங்களைத் தெரிந்து வாசிக்கவேண்டும். மனிதர் வாசித்தறிய வேண்டிய சகல விஷயங்களிலும் ஆத்ம விஷயமே அத்தியந்த முக்கியமானது. இவ்விஷயத்தைக் குறித்து தேசந்தோறும் பல ஆகமங்களுண்டு. அவற்றின் குணாகுணங்களை இங்கே உரைத்தல் சமயோசிதமா யிராதென்று விட்டிருக்கிறது.

புஸ்தகங்கள் இவ்வளவு திரளாயிருக்க, அவைகளில் நல்லதின்னது தீயதின்னது என்று பகுத்தறிவதெப்படி என்று சிலர் கேட்கலாம். அறிவது அதிக பிரயாசமல்ல. எப்படியென்றால், ஒரு புஸ்தகத்தின் லட்சணத்தை, அதைச்செய்தவருடைய தன்மை, நோக்கம் முதலியவைகளை கவனிப்பதினாலும், அவர் செய்திருக்கும் மற்ற நூல்களின் பொது லட்சணத்தைக்கொண்டும், அப்புஸ்தகத்தின் பிரிவுகள் பொருள் அட்டவணைகளை நோக்குவதினாலும், இவைகளினால் விளங்காவிடில் அப்புஸ்தகங்களில் ஒரு பாகத்தை திட்பநுட்பமாய்த் வாசிப்பதினாலும் அறியலாம். ஒரு சுருக்கவழி என்னவென்றால் அப்புஸ்தகளைப் பற்றி, நம்மைவிட அறிவாளிகளும் யோக்கியருமானவர்களுடைய அபிப்பிராயத்தை அறிவதே. நல்ல மரங்களும் நச்சுமரங்களும் மிக்கவாயினும், உலகத்தில் பிரத்தியட்சமாய்த் தெரிந்திருக்கிறதுபோல, சற்குணரான வித்வான்களுக்கு நூல்களுடைய குணதோஷங்கள் களங்கமறத் தெரியுமாதலால் அவர்களைக் கேட்டு உலகப்பிரசித்தமான நல்ல புஸ்தகங்களை ஐயமின்றி வாசிக்கலாம். நமது தேசத்தில் வழங்கும் பல நூல்கள், ஒரு வித்வான் கூறினபடி, இரண்டும் இரண்டும் ஐந்து என்று பல தாஷ்டாந்த திர்ஷ்டாந்த பூர்வமாய் ரூபித்தாற்போல நியாய விரோதமான பொருள் அடங்கிய அகட விகட கற்பனைக் கவிகளா யிருக்கின்றன. அநேகம் சித்திரக் கவிகளும், வீண்பொழுது போக்குக்கேற்ற விரோதமான கதாப்பிரசங்கங்களும், காமதேய வர்ணங்களும் அந்தாதிகளுமாய் சொல் விரிந்து பொருளோ மிகவும் சுருங்கியிருக்கிறது. இப்பேர்ப்பட்டவைகளை வாசிப்பதினால் மனசு சாத்வீக சற்குணம் அடையும் என்று கனவிலும் எண்ண ஏதுவில்லை. மேலும் வாசிப்புக்கு உபயோகமான புஸ்தகங்களை தெரிந்து சேர்ப்பதில் மேற்சொல்லியபடி ஸ்ரீ ஜான் லூபக்கு என்னும் வித்வான் அனுசரித்தமுறைமை நாம் உபயோகிக்கத் தக்கது. அவர் தமக்கு அவசியமான கல்வித் துறைகளில் பிரசித்தமாயருந்த சிரேஷ்டமான நூறு நூல்களை ஆராய்ந்து தெரிந்தடைந்து அவைகளை வாசித்து வந்தார். அவர் செய்தது நல்ல யுக்தி.

புஸ்தகங்களை இத்தனை திட்பநுட்பமாய்த் தெரிந்து வாசிக்கத் தேவையென்ன? என்று விசாரிக்க ஏதுவுண்டு. அது மிகவும் அவசியந்தான். எப்படியென்றால் நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாகவே நாம் நடையும் அறிவும், நமது சம்பாஷணைப் போக்கும், எழுத்துப் போக்கும், நமது மனோமுயற்சியும், நமது குணங்குறிகளும் நடபடிகளும், அவற்றால் லபிக்கும் இம்மை மறுமை அனுபவங்களும் ஒருவாறு இருக்கும். மனிதர் பிறக்கும்போது அவர்கள் மனம் அட்சரம்தீட்டாத வெற்றுக் கடுதாசிபோல அறிவின்மை பொருந்

தியதாயிருக்கிறது. ஒரு கடுதாசியில் வரையப்படும் எழுத்துக்குத் தக்கதாக அது ஒரு காசு பெறுததாயும் போகலாம், ஒரு கோடி ரூபாய் பிடிக்கிறதாயுமிருக்கலாம். அதுபோல, நாம் வாசித்துப் பழகும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாக நமது மனதின் பெறுமதியும் இருக்கும். ஆகையால் மனம் என்னும் நமது கடுதாசியில் நல்ல நூல்களைத் தெரிந்து அவைகளிலுள்ள நல்ல விஷயங்களைப் பதிக்கவேண்டும். விசேஷமாய் பாலியத்தில் வாசிக்கும் புஸ்தகங்களைக் குறித்து கவனமாயிருப்பது அவசியம். ஏனென்றால், அவைகளால உண்டாகும் அபிப்பிராயங்கள் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றபடி மனதில் பலமாய்ப் பதிந்து ஜீவகால முழுவதும் மனதோடுகூட வளர்ந்து ஸ்திரப்படும். மரப்பட்டைகளிலும் இலைகளிலும் வசிக்கும் அநேக பூச்சிகளின் நிறம் அப்பட்டைகள் இலைகளின் நிறமாகவே யிருக்கும். சுகந்த வாசனை கமழும் பூங்காவனத்தில் உலாவுகிறவர்களுடைய வஸ்திரமும் சுகந்தம்வீசும். பற்பல வியாபார ஸ்தலங்களிலும், 'கோர்ட்டு' கச்சேரிகளிலும், ராஜ சமுகத்திலும் சஞ்சரிக்கிறவர்களுடைய பேச்சு எழுத்துப் போக்குகளில் காணப்படும் பேதங்களுக்கு காரணம் அவரவர் செய்யும் சம்சற்க விகற்பமல்லவா? ஆகையால்,

"கல்லாரே ஆயினும், கற்றோரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்,—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு."

என்றதுபோல நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் சொல்லே நமது சொல்லாகும். அவற்றின் வாசக நடையே நாம் எழுதும பேசும் வாசக நடையாகும். தகாத தன்மையுடைய ஓரே புஸ்தக வாசிப்பால் நமது குணங்குறிகள் இம்மையிலும் நித்திய கெடுதியடையக்கூடும். ஆகையால் சொல்லில் பொருளில சிறந்த புஸ்தகங்களையே தெரிந்து வாசித்தல் எவ்வளவோ அவசியம்!

வே. யோசே ஐயர்.

நடுவேனிற் கனவு.

3-ம் அங்கம்.

1-வது இடம்:—காடு; டிடேனியா உறங்கிக்கொண்டிருந்த மிடம்.

[க்வின்ஸ், ஸ்நக், பாட்டம், ப்ளுட், ஸ்நௌட், ஸ்டார்வெலிங்-வருதல்.]

பாட்டம்:—எல்லோரும்வந்து சேர்ந்தார்களா?

க்வின்ஸ்.—சரியாய் வந்து விட்டார்கள். நாம் சரிபார்த்துக்கொள்ளுதற்கு மிகவும் சௌகரியமான இடம் இங்கு இருக்கின்றது. இப்பசும் புற்றரைதான் நமது அரங்கம்; இச்செடிக்கூட்டம் நமது அணியறை; அரசன்முன் ஆடுவதுபோல், நாம் அபிநயத்துடன் ஒருமுறை ஆடிப் பார்த்துக் கொள்வோம்.

பாட்டம்.—க்வின்ஸ்,—

க்வின்ஸ்.—வாயாடிப்பாட்டம், என்ன சொல்லுகிறாய்?

பாட்டம்.—இந்தப் பிரமஸ் திஸ்பி கூத்தில் இரசியாத பாகங்கள் சில உள்ளன: முதலாவது, பிரமஸ் தன் வாளை உருவித் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். அது பார்க்கும் குலமாதர்க்கு இனிக்காது. இதற்கு என்ன பரிகாரம் சொல்லுகிறாய்?

ஸ்நௌட்.—சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; இதுமிகவும் பயங்கர மானதுதான்.

ஸ்டார்வெலிங்.—எல்லாம் ஆனபின்பு இந்தக் கொலைப்பாகத்தை மாத்திரம் விட்டுவிடல் வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

பாட்டம்.—சிறிதுங்கூடாது; எல்லாவற்றையும் சரிப்படுத்தும் உபாயமிருக்கிறது. இதற்காக ஒரு *முன்னுரை யெழுதி நாம் வாளால் ஒரு தீங்கும் செய்வதில்லை யென்றும், பிரமஸாகிய நான் †சேணியப் பாட்டமே யன்றிப் பிரமஸ் அல்லே னென்றும் அதன் முகமாகத் தெரிவித்தால் அவர்களுக்குப் பயம் தீர்ந்து போம்.

க்வின்ஸ்.—அப்படியே அதை எண் சீரும் அறுசீரும் கலந்த பாவால் எழுதிவிடுவோம்.

* கூத்துத் தொடங்குமுன் அவையடக்கமாக அரங்கத்துள்ளோரை நோக்கிச் சொல்லப்படுவது முன்னுரை; கூத்தின் முடிவில், அக் கூத்திலுண்டான குறைகளைப் பொறுத்தருள வேண்டுமென்ற வேண்டு கோளாகச் சொல்லப்படுவது பின்னுரை. (இனிவரும் ஐந்தாம் அங்கத்தில் அவற்றைக் காணலாம்.)

† இதற்குமுன்னால் 'காருகப்பாட்டம்' என்று இவன் பெயரை மொழிபெயர்த் துபயோகிக்கப்பட்டது. காருகன் என்பதை விட 'சேணியன்' என்பது எளிதில் விளங்கும் பதமாயிருத்தலால் பின் யோசனையின் மேல் இதை யுபயோகிக்க லாயிற்று.

பாட்டம்.—அது வேண்டுவதில்லை; இன்னும் இரண்டு சீரையும் சேர்த்துக்கொண்டு எண்சீர் எண்சீராகவே எழுதி விடவேண்டும்.

ஸ்நௌட்.—மாதர்கள் சிங்கத்தைக் கண்டு பயப்படார்களோ?

ஸ்டார்வெலிங்.—பயப்படுவார்களென்றே எனக்குத் தோற்றுகிறது.

பாட்டம்.—தலைவர்களே, மாதர்கள் முன்னிலையில் சிங்கத்தைக் கொண்டு வருவதைப்பற்றி நீங்கள் செவ்வையாய் யோசிக்க வேண்டும்; அது மிகவும் பயங்கரமானது. சிங்கத்தைப் போற் பயங்கரமான காட்டுப்பக்ஷியே இல்லை. ஆதலால் நாம் அதற்குத் தக்க சாக்கிரதை செய்யவேண்டும்.

ஸ்நௌட்.—இன்னுமொரு முன்னுரை யெழுதி, அதில் அவன் சிங்கமல்ல னென்று சொலவிடவேண்டும்.

பாட்டம்.—அஃதன்றி அவன் பெயரையும் சொல்லவேண்டும். அவனுடைய பாதிமுகம் சிங்கத்தின் கழுத்தின் வழியாய் வெளியில் தெரியவேண்டும்; அவன் அதின் வழியாய் அடியில் வருமாறு பேசவும் வேண்டும்: "மாதர்களே" அல்லது "சீருள்ள மாதர்களே, நான் விரும்புகிறேன்", அல்லது "நான் வேண்டுகிறேன்" அல்லது "நான் பிரார்த்திக்கிறேன்; நீங்கள் பயப்பட வேண்டுவதில்லை; நடுங்க வேண்டுவதில்லை; உங்களுக்காக என் உயிரைக்கொடுப்பேன். என்னைச் சிங்கமென நினைப்பீராயின் அது எனக்குப் பெருந்துக்கமாயிருக்கும். அப்படிக்கு இல்லை, நான் சிங்க மல்லேன்; மற்றவரைப்போல் யானும் ஒரு மனிதனே." அவ்விடத்தில் அவன் தன் பெயரையும் சொல்லிக் கொள்ள வேண்டும். தான் மூட்டுவேலைக்கார ஸ்நக் என்று அவர்களுக்கு வெளிப்படையாய் அறிவிக்கவும் வேண்டும்.

க்வின்ஸ்.—நன்று; அப்படியே செய்வோம். இன்னும் இரண்டு கஷ்டமான காரியங்கள் உள்ளன; நாம் ஆடும் அறைக்குள் நிலவைக் கொண்டுவர வேண்டும்; பிரமஸ்ஸும் திஸ்பியும் நிலவிற சந்திக்கிறார்கள்.

ஸ்நௌட்.—நமது கூத்து நடக்குமன்று இரவில் நிலவுண்டோ?

பாட்டம்.—பஞ்சாங்கம். பஞ்சாங்கம்! அன்று நிலவுண்டோ? பஞ்சாங்கத்தைப் பார்.

க்வின்ஸ்.—ஆம் உண்டு.

பாட்டம்.—அப்படி யானால், நாம் கூத்தாடும் அறையினது சாளரத்தின் ஓர் கதவைத் திறந்துவைப்போம்; அதன் வழியே நிலவு வரும்.

க்வின்ஸ்.—அப்படிச் செய்யலாம்; அன்றெனின், ஒருவன் *ஒரு கட்டுச்சுள்ளியுங் கையுமாய் ஒரு 'லாந்தரை'ப் பிடித்துக் கொண்டு 'நான்தான சந்திரன்' என்று சொல்லிக்கொண்டு வரவேண்டும். வேறொன்று இருக்கிறது. நாம் ஆடும் அறைக்குள் ஒரு சுவர் வேண்டுமே. அதிலுள்ள துவாரத்தின் வழியாக வன்றோ பிரமஸ்ஸும் திஸ்பியும் பேசிக்கொள்ளுகிறார்களென்று கதையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்நௌட்.—சுவரைக் கொண்டுவர முடியாது. பாட்டம், என்ன சொல்லுகிறாய்?

பாட்டம்.—யாரேனுமொருவன் சுவர்வேஷம் போடவேண்டும்; சுண்ணாம்பையோ, மண்ணும் மணலுங்கலந்த சாந்தையோ மேலே பூசிக்கொண்டு சுவராக வரவேண்டும்; அதிலுள்ள துவாரத்திற்காகத் தன் விரல்களை இவ்வாறு காட்டிக்கொண்டும் வரல் வேண்டும். அத்துவாரத்தின் வழியாகவே பிரமஸ்ஸும் திஸ்பியும் பேசிக்கொள்வார்கள்.

க்வின்ஸ்.—அப்படியானால், எல்லாம் சரியாய் அமைந்து விட்டன. இப்பொழுது எல்லோரும் இருங்கள்; அவரவர்க்குரிய சம்பாஷணைகளைச் சொல்லிச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். பிரமஸ், நீ தொடங்கு; சம்பாஷணை முடிந்தபின்பு இச்செடி மறைவிற் போ; அப்படியே ஒவ்வொருவரும் தத்தம் §இறுதிச் சொற்குறிப்பை அ

* சந்திரனில் மானோ முயலோ இருப்பதாக இவ்விடங்களில் வியவகார முள்ளதுபோல், தேசாந்தரங்களில் சந்திரனில் ஒரு கட்டுச் சுள்ளியுங்கையுமாய் ஒருமனிதன் நாயோடு இருப்பதாக வியவகாரம் உள்ளது.

§ நாடகத்தில் ஒவ்வொருவனும் முந்திப் பேசுபவன் பேச்சின் இறுதிச் சொல்லைத் தான் பேசத்தொடங்குவதற்கு ஒரு குறிப்பாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வது வழக்கம்.

ஞசரித்துச் சொல்லுவதைச் சொல்ல வேண்டும்.

[பக் மறைவில்-வ்ருதல்.]

பக்.—நமது கந்தர்வ அரசி தூங்கு மஞ்சத்தின் அருகில் இரையும் நாட்டுப்புறத்தோர் யார்? என்ன! கூத்து நடக்கப்போகின்றதோ! நான் அதைக் காண்பேன். காரணங் காணின் நானும் ஆட்டக் காரரில் ஒருவனுகச் சேர்ந்து கொள்வேன்.

க்வின்ஸ்.—பிரமஸ்; நீ பேசு; திஸ்பி, நீ முன்னிற்க.

பாட்டம்,—திஸ்பி, புஷ்பங்களின் வாசனை இனிமையா யிருப்பதுபோல், என் இனிய திஸ்பியே,உன்குரலும்இனிமையாயிருக்கின்றது. ஒரு சத்தம் கேட்கின்றது, இங்குச் சற்றுநில்; நான் உடனே அதை இன்னதென்று அறிந்து வருவேன். (போதல்.)

பக்.—ஆம் வருவாய், விநோதமான பிரமஸ்ஸாய்த் திரும்பி வருவாய். (போதல்.)

ப்ளுட்.—இப்பொழுது நான் பேச வேண்டுமோ?

க்வின்ஸ்.—ஆம் பேசவேண்டும்; அவன்தான் கேட்ட சத்தத்தைப் பார்க்கப்போயிருக்கிறுன். பின்னும் வருவான்.

ப்ளுட்.—பிரகாசித்து விளங்கும் பிரமஸ்ஸே, வெண்டாழை போல் விளர்த்த மேனியனே, 'ரோஜாமலரை'ப்போற் சிவந்த கன்னமுடையனே, சுறுசுறுப்புள்ள இளைஞனே, ஒருநாளும் தளராத உறுதியுள்ள குதிரைபோல் உண்மையா யிருப்பவனே, உன்னை நான் நைனஸ்ஸின் சமாதியருகிற் சந்திப்பேன்.

க்வின்ஸ்.—அதை நீ இப்பொழுது சொல்லக்கூடாது; பிரமஸ் சொல்வதற்கு மறுமொழியாகச் சொல்லவேண்டும். நீ பேசவேண்டியவற்றை யெல்லாம் ஒரே முறையிற் பேசி விடுகிறுயே. பிரமஸ், நீ வா; உன் இறுதிச் சொற்குறிப்புத் தாண்டி விட்டது. 'உண்மையா யிருப்பவனே' என்பது உன் இறுதிச் சொற்குறிப்பு.

ப்ளுட்.—ஓ! அப்படியோ! ஒருநாளும் தளராத உறுதியான குதிரைபோல் உண்மையா யிருப்பவனே.

[பச்கும் கழுதைத் தலையோடு பாட்டமும் திரும்பி-வருதல்]

பாட்டம்.—நீ என்னை அப்படி அழகுள்ளவனென என்னுவா யானல், நான் என் வாழ்நாள் முழுவதும் உனக்குத் தொண்டு செய்து கழிப்பேன்.

க்வின்ஸ்.—ஓ! இஃதென்ன் விபரீதம்! இஃதென்ன விரூபம்! இது பேய்கள் சஞ்சரிக்குமிடம்போல் தோற்றுகிறது. தலைவர்களே, இவ்விடம்விட்டு ஓடுவோம்! ஓடுவோம்!

(க்வின்ஸ், ஸ்நக், ப்ளுட், ஸ்நௌட், ஸ்டார்வெலிங்--போதல்.)

பக்.—நானும் உங்களோடு வருவேன்; உங்களை முள்ளிலும் செடியிலும் சேற்றிலும் சுற்றித் திண்டாட வடிப்பேன்; சிலவேளை குதிரைபோல் நின்று கனைப்பேன்; சிலவேளை நாய்போற் குரைப்பேன்; சிலவேளை பன்றிபோல் உறுமுவேன்; சிலவேளை தலையில்லாக் கரடிபோல் நின்று கர்ஜிப்பேன்; சிலவேளை நெருப்புப்போல் கொழுந்துவிட்டெரிவேன்.

பாட்டம்.—அவர்கள் என் ஓடுகிறுர்கள்? இஃது என்னைப் பயமுறுத்துவதற்காக அவர்கள் செய்யும் புரளியென்று தோற்றுகிறது.

[ஸ்நௌட்-திரும்பி வருதல்.]

ஸ்நௌட்.—ஓ! பாட்டம், நீ மாறினுயே; உன்னிடத்தில் தோன்றுவது என்ன?

பாட்டம்.—தோன்றுவது என்ன?உன் கழுதைத்தலையைக்காண்கிருயோ?(ஸ்நௌட்-போதல்.)

[க்வின்ஸ் திரும்பி வருதல்.]

க்வின்ஸ்.—பாட்டத்துக்கு நன்மையுண்டாகுக.பாட்டம்,உருமாறினுயே.(க்வின்ஸ்போதல்.)

பாட்டம்.—அவர்கள் புரளித்தனத்தை அறிவேன். அவர்கள் இயன்றவளாயில் என்னைக் கழுதையாக்கப் பார்க்கிறுர்கள். அவர்கள் என்னசெய்யினும் நான் இவ்விடம் விட்டுப் போகேன். நான் அங்குமிங்கும் உலாவி நடந்துகொண்டு அவர்கள் காதுகேட்கப் பாடுவேன்; அதனுல், நான் பயந்தவனல்லனென்று அவர்கள் அறிவார்கள். (பாடுதல்.)

மஞ்சணிற மூக்கின்கண் வாய்ந்த கருங்குருவி
செஞ்சவே யினியவிசை சீரிசையப் பாடிச்
சஞ்சரிக்குஞ் சாரிகையே சார்ந்த களஞ்சிறந்து
வன்சினைய மென்குழைய மரமேறுங் குருவியே.

டிடேனியா (விழித்து).—எந்த அழகன் என்னை என் புஷ்ப சயனத்தினின்றும் எழுப்புகிறுன்?

பாட்டம்.—(பாடுதல்)

1. கூரியமூக் குள்ளவிசைக் குருவியூர்க் குருவியே
சீரியனு மிசைபாடித் திரிவானம் பாடியே.
[ன்பால்

2. குக்கூவென் றிடுகுயிலே குயிலிசைகேட் போரத
மிக்கூரும் வசைக்கெதிரா விளம்புமொழி யுள
தேயோ.

அஃது எத்தனைதான் குக்கூவென்றுலும் அது சொல்வது பொய்யென்று மறுத்துச் சொல்ல முயலும் மாந்தருமுண்டோ?

டிடேனியா.—குணமுள்ள மானிடனே, நான் பிரார்த்திக்கின்றேன்; இன்னும் ஒரு முறை பாடுக. உன் கீதம் என் காதுக்கு இனிமையூட்டுகின்றது. உன் இன்னுருவம் என் கண்ணை மயக்குகின்றது. உன் அழகின் வன்மையால் உன்னைக் கண்ணுற்றபொழுதே யான் உன்வசமாயினேன்.

பாட்டம்.—என் அம்மணி, அவ்வாறுவதற்கு நியாயமில்லையெனத் தோற்றுகிறதே. ஆயினும், இக்காலத்தில் ஆசைக்கு விவேகமில்லை; ஆசையையும் விவேகத்தையும் ஒன்றுசேர்க்க நல்லோர் எத்தனிக்கிறதுமில்லை. இவ்வாறு பொருள் நிறைந்த வார்த்தைகளைப் பேசுவதன்றிச் சமயம் வந்தால் வேடிக்கையான சித்திரப்பேச்சும் பேசுவேன்.

டிடேனியா.—நீர் அழகு நிறைந்தவர் என்பதன்றி ஞானமும் நிறைந்தவரென்று அறிகிறேன்.

பாட்டம்.—இப்பொழுது இக்காட்டைவிட்டு வெளிப்புறப்படுவதற்கு வேண்டிய ஞானமிருக்குமானல் எனக்குப் பெரும் உபகாரமா யிருக்குமே.

டிடேனியா.—இக்காட்டைவிட்டு நீர் போக விரும்ப வொண்ணுது. உம்மை இவ்விடத்திலேயே இருக்கச் செய்வேன். நான் சாதாரண கந்தர்வி அல்லேன்; என் இராசாங்கத்தில் வசந்தகாலம் எப்பொழுதும் நிலைபெற்று நிற்கிறது. உம்மை நான் நேசிக்கின்றேன்; என்னுடன் வாரும்; கந்தர்விகளை உம் பணிவிடைக்காரராக்குவேன்; அவர்கள் உமக்குக் கடலினின்றும் ரத்தினங்களையும் கொண்டுவந்து கொடுப்பார்கள், நீர் காம்பரிந்த மலர்ச்சயனத்தில் உறங்க அவர்கள் இனிய கீதம் பாடுவார்கள். உமக்கு இம்மானிட வடிவத்தை மாற்றிக் கந்தர்வ வடிவமைப்பேன். *பயற்றம்பூவே! சிலம்பிக்கூடே! பாச்சையே! கடுகுவிரையே!

[பயற்றம்பூ, சிலம்பிக்கூடு, பாச்சை, கடுகுவிரை, வருதல்.]

பயற்றம்பூ.—இதோ சித்தமாயிருக்கிறேன்.

சிலம்பிக்கூடு.—நானும் அப்படியே.

பாச்சை.—நானும் அப்படியே.

கடுகுவிரை.—நானும் அப்படியே.

எல்லோரும்.—கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கிறோம்.

டிடேனியா.—நீங்கள் இவ்வுத்தமனை உபசரித்து நடக்கவேண்டும். அவர் கண்டு களிக்க அவர்முன் நடனஞ் செய்யுங்கள். அவருக்குத் தேன்கலந்த இனிய கனிவர்க்கங்களால் அமுதூட்டுங்கள். அவர் உறங்குகையில் அவர் கண்ணிமையிற் சந்திரகிரகணம் படாது வண்ணாத்திப்பூச்சிச் சிறகால் வீசுங்கள். அவருக்கு எப்பொழுதும் தலைவணங்கி மரியாதை செய்யுங்கள்.

பயற்றம்பூ.—மானிடோத்தமனே, வாழ்க.

சிலம்பிக்கூடு.—வாழ்க.

பாச்சை.—வாழ்க.

கடுகுவிரை.—வாழ்க.

பாட்டம்.—நான் துணிந்து கேட்பதற்கு மன்னிக்கவேண்டும்; நிரம்பக் கேட்டுக் கொள்ளுகிறேன்; உமது பெயரென்ன?

சிலம்பிக்கூடு.—சிலம்பிக்கூடு.

பாட்டம்.—சிலம்பிக்கூடே, உமது நேசத்தை யான் வரவரப் பெருக்கிக்கொள்வேன். என் விரல் வெட்டுண்டபொழுது உமது உதவியை நாடுவேன். பெருமையுள்ள கனவானே, உமது பெயரென்ன?

பயற்றம்பூ.—பயற்றம்பூ.

* இது Pease blossom என்பதின் மொழிபெயர்ப்பு. முன்னல் இதை பட்டாணிப்பூ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதைவிட 'பயற்றம்பூ' என்பதனெல்லாருக்கும் தெரிந்ததாகவிருக்குமென்று பின்யோசனையில் பட்டதால் அப்படியே திருத்தி உபயோகிக்கப் பட்டிருக்கிறது.

பாட்டம்.—உமது தாயாகிய காய்க்கும் தந்தையாகிய செற்றுக்கும் நான் க்ஷேமம் விசாரித்ததாகச் சொல்லவேண்டும். பயற்றம்பூவே, உமது பழக்கமும் எனக்கு இனி அதிகமாக வேண்டும். ஐயா, உமது பெயர் யாதோ?

கடுதவிரை.—கடுகுவிரை.

பாட்டம்—ஐயா, உமதுபெரும்பொறுமையை யான் நன்றாய் அறிவேன்; இராக்ஷதன்போன்ற மாட்டிறைச்சி உம்மவரில் அநேகரை விழுங்கியிருக்கிறது; உம்மவருக்காக நான் எத்தனை முறையோ கண்ணீர்விட்டிருக்கிறேன்.

டிமேனியா.—வாருங்கள்; கந்தர்விகாள், அவரை எனது மரமடர்ந்த சோலைக்கு மெள்ள அழைத்து வாருங்கள்.

(போதல்.)

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

ஹிந்துக்களின் க்ஷயகதி.

கொஞ்சங் கவனித்துப் பார்க்கு மிடத்து, ஹிந்துக்களாகிய நாம் அநேக விதத்தில நாளுக்கு நாள் க்ஷயமடைந்து வருகிறோ மென்று எளிதில் புலப்படக்கூடும். முற்காலமும் தற்காலமும் நன்றாயறிந்த பெரியோர்களே அவ்வாறு கூறுகிறார்கள். வாழைக்கடிவாழை எப்படி க்ஷயமடைகிறதோ, அதுபோல நாமும் க்ஷயமடைகிறோமென்று அதற்கவர்கள் சமாதானம் சொல்கின்றார்கள். அவ்வாறு கூறப்படும் சமாதானத்தால் க்ஷயமடைதற்கு வேண்டிய சார்பு இயற்கையிலே ஜீவஜடங்கட் கிருப்பதாய் வைத்துக்கொள்ளப் படுகிறது. 'விருத்திக்ஷய' மென்பது ஹிந்துசாஸ்திரத்தின் பொதுசித்தாந்தம்; அதாவது, ஒருகயிற்றை முறுக்க முறுக்க முறுக்கேறி ஓர் மட்டில் வந்தவுடன் மேல் முறுக்கேற முடியாமல் நின்று பிற்பாடு கொஞ்சங் கொஞ்சமாகப்பின் சுழன்று முறுக்கவிழ்ந்து எதாஸ்திதிக்கு வருகிறதுபோல, பிரகிருதியில் 'விருத்திக்ஷயம்' ஏற்பட்டிருப்ப தனுசரித்து ஜீவராசிகளும் சரீரசாரம், அருகம், உன்மானம், மானப்பிரகிருதி முதலியவை சம்பந்தமாய் ஒரு காலத்தில் விருத்தியடைந்தும் மற்றொரு காலத்தில் க்ஷயமடைந்து வருமென்பதாம். இவ்வகை விருத்தி க்ஷயக்கை வெள்ளைக்கார சாஸ்திரிகளிற் சிலருமொப்புக்கொண்டிருக்கிறார்கள். ஹிந்து மகாத்மா ஒருவர்சொல்லிக்கொடுத்தபடி சின்னெட் என்பவர் எழுதியிருக்கும் பௌத்தசார சங்க்ரகத்தில் தற்கால ஹிந்துக்கள் இறங்கும் படியில் அதாவது க்ஷயப்படியில் இருப்பதாய் எழுதியிருக்கிறார். இவ்வகை அபிப்பிராயத்தால் வெளியாவ தென்ன வென்றால் நம்மால் நிவர்த்திக்கமுடியாத இயற்காரணத்தால் நாம் க்ஷயமடைகிறோ மென்பதாம்.

மேற்கண்ட சமாதானமானது எல்லாம் அடக்கி முடிபாக யோஜிக்கு மிடத்துஅமையுமென்றாலும், நிவர்த்தியற்ற இயற்காரணம் புலப்படுவது முற்றிலும் நம்முடைய ஆதீனத்திற்கு அதீதப்பட்ட சங்கதிகளாலல்ல; சற்றேனும் நம்முடைய ஆதீனத்திற்குள் அடங்கின காரணங்கள் மூலந்தான். நமக்குள் க்ஷயகதி நேரிடுவது அநேக அம்சங்கள் சம்மந்தமா யாகையாலும் அவைகளைப்பற்றிய காரணங்கள் சிலபொதுவாயும் சில விசேஷமாயு மிருப்பதாலும் ஒவ்வொரு அம்சத்தையும் பிரத்யேகமாக எடுத்து அதின் காரணங்களை விவரித்து வருவது உசிதமென்று நினைக்கிறேன்.

சரீரபல க்ஷயம்.

முதலாவது சரீரசார க்ஷயம் அதாவது ஹிந்துக்கள் நாளுக்குநாள் பலக்ஷயம்அடைந்து வருகிறார்களென்பதில் சந்தேகமில்லை. இதற்கு முதலாவது காரணம் வறுமை தான். நமக்குள் லக்ஷக்கணக்காக ஜனங்கள் யாதொரு கதியில்லாமல் இரந்து திரிந்து உணவின்றி யிடையூறுற்று நித்த நித்தம் கால்கள் கெஞ்ச அலைந்து வருந்தி நிராதாரமாய் பட்டினி கிடக்கிறார்கள்; கோடிக்கணக்கானவர்கள் ஒருவேளை அரைவேளை ஆகாரத்துடன் கண்பஞ்சடைந்து காதடைத்து கன்னமொட்டி, எலும்புந்தோலுமா யிருக்கிறார்கள். சிலரைப் பார்க்கும்போது ஜீவப்ரேதங்கள் போல் காண்கிறார்கள். இவ்வாறுள்ள ஜனங்கட்குள் எவ்வாறு சரீரபலம் இருக்கக்கூடும்.

சென்ற 40, 50வருஷகாலமாய் நமது துரைத்தனத்தார் கைக்கொண்டு வரும் அரசுமுறைகளால் ஹிந்துக்களுடைய வருமானவழிகள் குன்றி அவர்கட்குள் வறுமை பலவிதத்தில் விஸ்தாரப்பட்டும் ஆழ்ந்தும் வருகிற தென்றும் ஹிந்துக்களுடைய தற்கால வறுமை எவ்வளவோ பயங்கரமா யிருக்கிற தென்றும மிஸ்டர் டிக்பி முதலிய கனவான்கள் விகசிதமாக சர்க்கார் ரிபோர்ட்டுகளிலிருந்து காண்பித்திருக்கிறார்கள். நமது துரைத்தனத்தார் கைக்கொண்டு வரும் ராஜதர்மங்கள் எவ்வளவோ சுத்த எண்ணத்தோடு கூடினதாக இருந்தாலும், பலன் நாம் எடுத்துக்காட்டியபடி நாளுக்கு நாள் பெருகி வரும் வறுமையே. துரைத்தனத்தாருடைய ராஜதந்திரங்கள் எவ்வாறிருந்தாலும், ஜனங்களாவது ஒருங்குசேர்ந்து பலவகை முயற்சி செய்தால் நிவர்த்திக்கு வழியுண்டாகும். ஜனங்களும் அவ்வாறு முயல்கிறதில்லை. துரைத்தனத்தாரோ ஜனங்களோ நம்முடைய வறுமையை எவ்வாறு நிவர்த்திக்கக் கூடுமென்று இவிடம் யோஜிப்போமாகில் விஷயம் எவ்வளவோ விரியும்.

நமக்குள் தலைக்கு வருஷவரும்படி சராசரி 15ரூ க்கதிகம் இல்லை. ஆனால் சில பெரியோர்கள் 27ரூ யாக பிரஸ்தாபித்து வருகிறார்கள். என்றால் இயன்ற மட்டிலும் கணக்கிட்டு பார்த்ததில் தலைக்கு27ரூ எவ்வாறு வருமென்று தெரியவில்லை. தலைக்கு 27ரூ யென்பது கனவேயல்லாமல் வேறில்லை. தலைக்கு வருஷவரும்படி 10ரூபா ஆகும்போது ஒருநாளைக்கு $5\frac{1}{4}$ பைசா ஆகிறது. அதாவது ஒருநாள் முழுமையும் $5\frac{1}{4}$ பைசா கொண்டு ஒருவன் காலந்தள்ளவேண்டியிருக்கிறது. இவ்வளவு அற்பமுதல் கொண்டு ஜீவிக்கும் ஸ்தரிபுமான்கட்கு என்ன பலமுண்டாகக்கூடும். அவர்கள் மூலம் உண்டாகக் கூடும் சந்ததிகட்கும் என்னபலம இருக்கக் கூடும்?

வருஷமொன்றிற்கு தலைக்கு 10ரூபா விதம் கிடைக்கப்பட்ட முதல் முழுமையும் ஆகாரத்திற்குச் செலவானால் அந்தமட்டிலாவது திருப்தியுண்டு. ஆனால் அவ்வாறு செலவாகக்காணோம். மேற்கண்ட சொற்ப வரும்படியில் டம்பத்திற்கும் அனுவசியத்திற்கும் சிலபாகம் போவதுமன்றி, செத்த முதலாகிய பகட்டாடையிலும் ஆபரணத்திலும் சிலபாகம் போகிறது. இதனாலும் வறுமைஅதிகப்படுகிறது. ஆபரணஞ் செய்து அணிந்து கொள்ளும் பொருட்டு வாயொறுத்து வயிறொறுத்து காற்பசி யரைப்பசி யாற்றிக் காலந்தள்ளுவதால் கைகால் செத்து ஆவியடங்கித் தள்ளாடித் தடுமாறி விழும்படி பலங்குன்றுகிறது.

பணம் 'மிச்சம்' பிடிக்க வேண்டு மென்ற ஆக்ரகமுள்ள சில உலுத்தர்கள் வயிற்றுக்குக் கூடசாப்பிடாமல் அவ்வாறு முயல்கிறார்கள். அதனாலும தேகம் க்ஷீணப்பட்டுப்போகிறது.

நமதுதேசத்தின் சரித்திரத்தை நன்றாய்க் கவனித்த யாவர்க்கும் வியாழ வட்டத்திற் கொருதடவை, அதாவது 12-வருஷத்திற் கொருதடவை பஞ்சம் வந்து நமது ஜனங்களை ஆட்டியலைத்து அல்லோலப்படுத்தி விடுகிற தென்று விளங்குகிறது. இப்படி 12-வருஷத்திற்கு ஒருதரம் வரும் பெரும்பஞ்சத்தைத்தவிர ஆங்காங்கு வருஷந்தோறும் அல்லதுஇரண்டுமூன்று வருஷங்கட் கொருதடவை வரும் சிறு பஞ்சமும் ஆங்காங்குள்ள ஜனங்களைப் பீடிக்கிறது. பஞ்சகாலங்களில் பட்டினி, பசியாகவும் காலாகாரம் அரையாகார மாகவும், ஒருவேளை யரைவேளையாகவும் காலந்தள்ளி வந்ததினால் உடல் அலைப்புண்ட அநேகர்க்குப்பிணிகள் பிடித்து, மேல் சுபிக்ஷம் வந்தாலும் சக்தி பெறாமல் நித்யதீனர்களாகத்திரிகிறார்கள். மச்சிடிந்து குச்சாய் முடிந்தபின் குச்சுமச்சாகுமா? ஆகாது.

பால விவாகமும் சரீர பலக்ஷயத்திற்குக்காரணந்தான். ஆடியிலிட்டவித்தும அறு நான்கிற் பெற்ற பிள்ளையும் மோசம் போகாதென்பது தொன்று தொட்டுள்ள பழமொழி. புருஷர்க்கு 24-வயசுக்குக்கீழேபிதாஸ்தானம்வரக்கூடாது. தற்காலத்தில் காலக்ஷேபவழி நோக்காமல் எப்படியாவது காலக்ஷேபஞ் செய்யமாட்டோமா வென்ற மூடமதியால் வரம்பின்றி விவாகஞ்செய்து விடுகிறார்கள். அதனால் ஆகாரம் வேண்டும் நூதனவாய்கள் பல்குகின்றனவே யல்லாமல், ஆகாரம் தேடக்கூடும் கைகள் உண்டாகக் காணோம். மட்டின்றி விவாகம் இல்லாமல் இருக்கும்போது கிடைக்கக் கூடிய ஆகாரமானது அவ்வாறு விவாகம் நேரிட்ட பிற்பாடு நூதனமாய் உண்டாகும் சந்ததிகட்கும் விதம்போல் பங்கு போகிற படியால் ஆகாரக்குறைவிற்கும் அது நிமித்தம் தினத்திற்கும் பலக்ஷயத்திற்கும் காரணமுண்டாகிறது.

பாலவிவாகத்தாலும் வரம்பு கடந்து தத்தம் இஷ்டப்படியும் நிர்ப்பந்தத்தின் மேல் அவிவேகமாகவும் செய்யப்படும் விவாகத்தாலும் நாளுக்குநாள் ஜனத்தொகை விருத்திப்பட்டு வருமான வழிகள் சுருங்கி வருவதாலும் ஹிந்துக்களுக்கு வறுமை அதிகரித்து பலக்ஷயமுண்டாகிறது. பால விவாகத்தால் மாத்திரம்ஒருவேளை பலக்ஷயம் ஏற்படாமல் இருக்கலாம். பாலவிவாகத்தோடு வறுமை சேருமிடத்து பலக்ஷயம் ஏற்படுவது திண்ணமே.

நாம் இப்போது பயப்பட வேண்டியது தற்கால ஜனங்களுடைய பலக்ஷயமல்ல. அவர்களில் அநேகர் திடகாயம்பெற்று திடமாய்வளர்ந்தவர்கள். அவர்கட்குக் கொஞ்சம் பலம் இருப்பது ஆச்சரியமன்று. ஆனால் நாளுக்குநாள்உண்டாகிவரும் சந்ததிகளைப்பற்றித் தான் நாம் முக்கியமாய் பயப்பட வேண்டியிருக்கிறது. தற்காலம் மாறுபாடுள்ள காலமென்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். இக்காலத்தில் பழயதர்மங்களுடைய கடிவாளமும் இல்லை. அன்னிய தர்மங்களுடைய சீர்திருத்தமு மில்லை. இதனால் ஜனங்கள் கெட்டுப்போகும்படியான காரணங்கள் அநேகம். நகையாசையாலும் பணஆசையாலும் உசிதமற்ற விவாகங்கள் பெருகுகின்றன. ஆபரண புஷ்டியும் பணப்புஷ்டியும் பொருந்திய குடும்பத்தில் ஜனித்த நோஞ்சலான வரனுக்கு ஆபரணப் பெருமையும் பணப்பெருமையும் உத்தேசித்துப் பெண்களைக்கொடுக்கிறார்கள். அந்நோஞ்சற் பிள்ளை மூலம் பலமற்ற நோஞ்சற் பிள்ளைகள் பிறக்கின்றன. உயர்ந்த சம்பந்தத்தைக் கருதியும் விஸ்தாரமாய் வரக்கூடும் சீர் சிராட்டத்தைக்கருதியும் நோஞ்சற் பெண்களைக் கொள்வதாலும் கல்லும் மணலும் பொருந்திய சரட்டு பூமியில் வித்து எவ்வளவு புஷ்டியாய் விழுந்தாலும் பலிதப்படாமல் கரண்டு பொசுங்கலா யுண்டாவது போல், பலக்ஷயமான சந்ததி உண்டாகிறது. நகையாசை நிமித்தமாகவும் பணவாசை நிமித்தமாகவும் கிழவர்க்குப் பெண் கொடுக்கிறார்கள். கிழவர்க்கு இரத்தப்பசையில்லாத சமயம் ஜனிக்கும் பிள்ளைகள் பலஹீனமான பிள்ளைகளாகவே இருக்க வேண்டும். குஷ்டரோகிகளுடைய பெண்,பிள்ளைகளைக்கொள்வதாலும் பதரான பிள்ளைகள் உற்பத்தியாகின்றன. குஷ்டரோகிகளின் சந்ததிகள் வெகுநாள் நீடிக்கிறதில்லை. சீக்கிரம்மரணத்தால் நாசமடைந்து போகிறதென்பது வெகுநாள் அநுபோகத்தின் மேல் ஏற்பட்ட வைத்தியர்களுடைய சித்தாந்தம். அவ்வாறு சந்ததி பலக்காமல் சீக்கிரம் நாசமடையவேண்டிய காரணம் குஷ்டரோகிகளின் வீரியத்திற்கு பலமில்லை. அதில் புஷ்டியாய் ரோகவிஷமும் கலந்திருக்கிறது. அப்படியிருந்தும் குஷ்டரோகிகளின் பெண் பிள்ளைகளைக் கொள்கிறார்கள். இவ்வகை சம்பந்தம் கூடாதென்று மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. அதினால் விளையும் பலன் மேன்மேலும் விருத்தியடையக்கூடிய பழமல்ல; தீய்ந்தவிந்து குளுகுளுத்துப்போகக்கூடிய வியாதிபற்றிய கரண்டபிஞ்சு தான்.

ஆடையாபரணச் செழிப்புள்ள சில பெண்கள் கொஞ்சம் சாப்பிடுவது நாகரீகமென்று நினைத்து "வேணுமென்றே" ஆகாரத்தைக் குறைத்துக்கொண்டு தாங்களும் துர்ப்பலமடைந்து தங்கள் குழந்தைகள் அதிலும் துர்ப்பலமாய் ஜனிக்கும்படி நடந்து கொள்கிறார்கள். ஒட்டியாணத்தால் இடுப்பு நெருக்குண்டபெண்கட்கு கெர்ப்ப கலசம் நன்றாய்வளராமல்தடைபட்டு அதில் உற்பத்தியாகும் சிசு புஷ்டியடைய இடமில்லாமல் ஆரம்பத்திலே நசுக்குண்டு. துர்ப்பலமடைகிறது முண்டு. ஆடையாபரணங்கள் அணிந்து குஷாலாய் உலாவித்திரியும் சிறுவர்கள் அலங்காரத்திற்குத் தக்கவண்ணம் அவனியில் அநுபோகம் வேண்டுமென்று நினைத்து தாசிவேசிகளைக் கூடி வியாதிகள் சம்பாதித்து வீரிய விரயஞ் செய்தபின்,அலுப்புக்காற்றாமல் சொந்தமனையாளைச் சேர்வதால் வியாதிகலந்து பலங்குறைந்த சிசுக்கள் தான் ஜனிக்கின்றன. அதிசங்கமத்தால் தேகம் துர்ப்பலப்பட்டிருக்குங்காலத்தில் தேகத்தில் ஊர்ஜிதமின்றிப் பிணம் போற்கிடந்தாலும், ஆபரணமணிந்து நாகரீகங்கொண்டாடும் பெண்களின் நிர்ப்பந்தத்தின் மேலும் மனோதைரிய மில்லாமையாலும் உண்டாகும் பிள்ளைகளும் துர்ப்பலமே. தாசிவேசிகட்குப்பிறக்குஞ்சந்ததிகள்பொதுவில் துர்ப்பலமே.

கடனாலுண்டாகும் கவலையும் துர்ப்பலத்திற்குக் காரணம். நமது தேசத்தில் கடனில்லாக் குடும்பங்கள் வெகு சுவற்பம். நம்மவர்களில்

அநேகர் கடன்பாரத்தால் நசுக்குண்டு கண் பிதுங்கி உள்ளதெல்லாம் கடன்காரர்க்கு இரையாக்கிப்பஞ்சுகூடப் படாதவண்ணம்பட்டுக்கவலைப்படுவதால் மெலிவடைந்து துர்ப்பலப்படுகிறார்கள்.

(இன்னும் வரும்.)

எஸ். இராமசாமி அய்யர், பி. ஏ., பி. எல்.

மயிலேறும் பெருமாள்பிள்ளை, அவர் உரை.

1. மயிலேறும் பெருமாள்பிள்ளை, யெனப் பெயருற்ற இவ்வாசிரியர் பாண்டி வளநாட்டிலே திருநெல்வேலியென்ற நகரத்திலே, வேளாளர் குலத்தில் தாண்டவமூர்த்திப்பிள்ளை யென்பவர்க்குப் புத்திரரா யுதித்தவர். இவர் கல்வியறிவொழுக்கங்களினாலும், குருலிங்க சங்கம பக்தியினாலும் மிகச் சிறப்புற்றவர். மேலுமிவர் செல்வம், வாணாள், அதிகார முதலிய நலங்களிற் கிஞ்சித்துந் தாழ்வில்லாமல் விளங்கியிருந்தவர்.

2. இவருடைய மதமோ சைவமதம். இவர் மரபு சித்தாந்த சைவர் மரபு. இந்தப் புலவர் திலகர் திருக்கைலாசு பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்த சிஷ்ய வர்க்கங்களிற் சிறந்தவர். மேலும் அவ்வாதீனத்திலே அத்தியந்த சிரத்தையும் பிரீதியு முடையவர். ஆகையினாலே ஆதீனத்திற்கு அடிக்கடி வந்து ஞானதேசிகரைத் தரிசித்துக்கொண்டு போகும் வழக்கமுடையவரா யிருந்தார்.

3. இவரிருந்த காலமோ 17-ம் சதாப்தத்தின் இறுதியும் 18-ம் சதாப்தத்தின் தொடக்கமுமாகும். இவர் சுவாமிநாத தேசிகருடைய போதகாசிரியராகவே யிவர்க்கு யாம் மேலே கூறிய காலக்கணக்குத் தவறில்லை யென்பது பெறப்பட்டது. எப்படியெனில் விவேகசிந்தாமணி 7-ம் சஞ்சிகையில் வைத்தியநாதநாவலர், சுப்பிரமணிய தீக்ஷிதர், சுவாமிநாத தேசிகராகிய இம்மூவரும் ஏககாலத்தவர்களென்று ஸ்தாபித்திருக்கிறோம். இனிச் சுவாமிநாததேசிகர் நமது மயிலேறும்பெருமாள்பிள்ளையினுடைய மாணாக்கரென்று காட்டப் புகுவோம். இவ்விஷயமானது, சுவாமிநாததேசிகர் தமது இலக்கணக் கொத்துப் பாயிரத்துள், "தமிழ் வித்தியாகுரு வணக்கம்" என்று பெயரிட்டு, ஐந்தாவது விதியாகத்

"திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்
றாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாண் மகிபதி
யிருபத கமல மென்றலை மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே."

யென்று கூறுவதினாலே காட்டப்படுதல்காண்க.

4. இவர் சுயமாகக் காவியங்கள் ஒன்றுஞ் செய்யாதபோதிலும்,

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லா
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி [யிம்
தாமசைத்தார் நூறு தரம்."

என்று பெரும்பான்மையோராற் புகழப் பெற்றதும், "கல்லாடம் படித்தவனோடு மல்லாடற் படாது" என யாவராலுஞ் சிறப்பித்துச் சொல்லற்பட்டதும், நூறு அகவல்கள் அடங்கியதுமாகிய இக்கல்லாடத்திற்கு முதன் முப்பத்தேழு அகவல்முழுவதும் உலகத்தார்க்கு எளிதில் விளங்கும் வண்ணம் செவ்விய வுரையொன்று வரைந்தருளினர். மீதமுள்ள அறுபத்துமூன்றகவற்கும் உரையெழுதுமுன்னர் நம்புலவர்க்கு இறுதிக்காலம் நேரிட்டது தமிழ் கற்பாருடைய துரதிர்ஷ்டமோ அன்றோ?

5. இனிக் கல்லாடவுரையின் மகிமையைச் சற்று எடுத்துத் தெரிக்கப் புகுவாம். இவ்வுரையின்கண் இவருடைய வாசகமெழுதும் ஆற்றலும்[1], சொல்லாட்சித்[2]திறனும், ஆழ்பொருளுணுக்கமும், இலக்கணத் தேர்ச்சியும் நன்கு புலப்படுகின்றன. இப்பொழுது தற்காலத்திலே முற்று முணர்ந்துவிட்டதாக மனப்பால் குடித்து நாடக நடிக்குஞ் சில போலிப் புலவர்களுடைய உரைகளாகிய மின்மினி போலாது, இக் கல்லாட வுரையோ மலைமேலிட்ட தீபம்போல விளங்குகின்றது. மேலும் *"வறியன் றனக்குரிய வோர்சிறு கந்தையில் அதன் வடிவந்தெ

1. ஆற்றல்=வல்லமை.
2. சொல்லாட்சி=Command of language.

* மதுரை மகாவித்துவான் சபாபதிமுதலியா ரவர்கள் செய்தமெய்ஞ்ஞான பாது.

ரியாவண்ணஞ் செல்வர் பலரிடத்துஞ் சென்றிரந்து பெற்றபல வண்ணமுள்ள உயர்ந்த ஆடையின் கிழிகளைப் பொதிந்து அது மிகவும் அகன்று நீளுமாறு தைத்துப் பொத்திய போர்வையாகிய பொந்தைபோலக் கோவைப்படஎழுதற் படாததாயும், சமாகியமாய பலராலுஞ் சொல்லற்படுவதாயும், சில வரிகளிலடங்குவதாயும் ஆழ்ந்த நுண்ணிய பொருளை விளக்கமாட்டாததாயு முள்ள தம துரைக்குத் தொல்காப்பியமுதலிய இலக்கணநூற் சூத்திரங்களையும், சிவஞானசித்தியார் முதலியஞானநூற்செய்யுட்களையும் பல உரையாசிரியர்கள் கூறும் பல அரிய உரைகளையும். . . . இடைக்கிடை சேர்த்து இது தமதுஉரையெனத் தெரியாவண்ணம் பொதிந்து, ஓர் குழந்தை யிடத்துச் செம்மை, கருமை, பொன்மை முதலிய வன்னங் கிடைத்தவழி அதுவுமோர் ஓவியனை[1]ப்போல், யானை குதிரை முதலிய அந்தக்கேடான[2] சில சித்திரங்களையெழுதி அவற்றை அவ்வன்னங்களாற் பளபளக்கச் செய்தபோது சித்திரத்தியல் புணராதோர் அவற்றைக் கண்டாச்சரியமடையுமாறுபோல சாமாகிய சரங்கள் கண்டு ஆச்சரியமடையும்படி" கூறற்படுமுறைகள் போலாது, மயிலேறும் பெருமாள்பிள்ளை யவர்கள் தமது உரையின்கண்முன்னோரியற்றியசெய்யுட்களையு முரைகளையும் ஆங்காங்கு சிறிது சிறிது எடுத்துக் கூறுதல் முத்துக் கோவைக்குத் தொங்கலாக மாணிக்கம், வயிரம் முதலியவற்றாலாய பதக்கங்களை யமைக்குமாறுபோலா நின்றது. கல்லாடமோ மிகச் சிறந்த நூலென முன்னே குறித்தாமாகவே அதற்கு இத்தகைய நல்லுரை யில்லாதிருப்பின் அதன் கணுள்ள அகவல்களின் பொருளை நன்குணர்தல் மகா துர்லபம். இவ்வுரையினருமை ஏனைய 63 அகவல்களையும் படிக்கும்பொழுதன்றே விளங்கும். கல்லாடத்தின் பொருட் சுவையைப்பற்றி விவரித்தற்கு இது தருணமன்றாதலின் விடுத்தொழிவாம். இவருடைய உரையில் இன்னபாகம் உபயோகமற்றது என்று தள்ளல் முடியாது. இவர் இடைப்பிறவர[3] லாகக்கொண்டு அநேக அகவல்களிற் கஷ்டமான பாகங்களை அர்த்த புஷ்டி நன்கு தோன்றுமாறு விலக்கணந் தத்துரைத்தும், துறைகளோடு அகவலின் தாற்பரியங்களைப் பொருத்திக் காட்டியு மிருக்கின்றனர். இக்கல்லாட வுரையைப் படித்து ஆநந்தித்தல் தமிழ் கற்பார் யாவர்க்கு மிகவு மாவசியகமான காரியம்.

[1] ஓவியன்=சித்திரமெழுதுவோன். [2] அழகற்ற.
[3] நன்னூல் பொதுவியல் 5-ம் சூத்திரம்.

7. இனி யிந்நூற்றாண்டுப் புலவரொருவர் சுப்பராய உபாத்தியாயர் என்பார் 37-வது அகவற்குமேல் 60 அகவல்களுக்கு ஏகதேசம் நமது மயிலேறும் பெருமாள்பிள்ளை யுரையைத் தழுவியுரைசெய்து இரண்டையுஞ் சேர்த்துப் பதினைந்து இருபது வருடங்கட்குமுன்னர் அச்சிட்டிருக்கின்றனர். மீதமுள்ள மூன்றகவல்களுக்கும் பொருள் தெரிந்திலவாம். இதினின்று மொருபாகம் விசேஷமாய் திராவிடத்தில் எம். ஏ., பரீட்சைக்குப் போகிறவர்களுக்குப் பாடமாக நியமிக்கற்பட்டு வருதல் ஆங்கிலம் பயின்ற தமிழ் மாணாக்கர்கட்குத் தெரிந்திருக்கலாம்.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி.

:o:

ஆயுள்வேதபாஸ்கரன்.

(219-வது பக்கத்தொடர்ச்சி.)

காலையுமாலையும் ஒவ்வோர் காதமாக வழிநடக்கையில் வழியில் ஒரு விறகு தலையனை எதிர்ப்பட்டான். அவ்விறகு தலையன் எலும்பு மூடிய உடம்பினனாய் இருப்பதைக்கண்டு" ஏடா! விறகுதலையா! நீ இப்படி உடல் மெலிந்திருப்பதென்னை?" என்று கேட்க, அவன் "சாமி என்னவோ தெரியவில்லை. இந்தச் சுமையைத் தாங்கினதுமுதலாகக் கொஞ்சங் கொஞ்சமாய் இளைத்து வருகிறேன்" என்று சொன்னான். அதன்மேல் ஜீவகன் இந்தவிறகு சுமையில் ஏதோ அதிசயமிருக்கின்றது என நினைத்து அதனை இருபது பணங்கொடுத்து வாங்கி அவிழ்த்துப்பார்த்தான். பார்த்தவளவிலே சுமையில் ஒருவகை ஸ்படிகக்கல் இருக்கக்கண்டான். அதுவும் ஒருவன்மேல் வைக்கப்பட்டால் அவன் கொண்டுள்ள நோயின் குணங்குறிகளைத் தெற்றென விளக்குவ தொன்றாக இருக்கவே, அவ்விறகு தலையனுக்குப்பின்னும் பத்துப்பணங்கொடுத்து விட்டு அக்கல்லினைக் கைக்கொண்டு சென்றான்.

சிலநாள் வழிநடந்தபின் ஒருநாள் வழியிலே ஒரு அரிசிமண்டியிலே அளவுகாரன் ஒருவன் அளக்குந்தோறும் அளக்குந்தோறும் கையிலுள்ள படியினால் தலையில் சொறிந்து கொள்வதைக்கண்டு நெருங்கி,

'ஐயா! அதேன் அப்படி அடிக்கடி சொறிந்துகொள்வது?" என்று கேட்க, அளவுகாரனும் "என்னவோ அறியேன் சிலநாளாக என் தலையில் தீராதினவெடுக்கின்றது" என்று கூறினான். உடனே ஜீவகன் விறகுசுமையில் கிடைத்த கல்லை அவன்தலையிலே வைத்துப் பார்த்தான். தலையினுள்ளே ஒரு பூரான் இருக்கக் கண்டான். கண்டசெய்தியை அளவுகாரனுக்குரைக்க, அவனும் "இவன்ஒரு மகா வைத்தியபண்டிதன்போலிருக்கிறது" என்று ஆலோசித்து, "ஐயா! இதற்கு ஒரு பரிகாரஞ் செய்தால் ஐந்நூறு பணங்கொடுக்கிறேன்" என்றான். அவனை ஒரு சாணக்குழியிலிருத்திக் கபாலசிகிச்சை செய்து பூரானை வெளிப்படுத்தினான். அளவுகாரனும் ஐந்நூறுபணத்தை எண்ணிக்கொடுத்தான். அதனைஜீவகன் ஆசிரியர் ஆத்திரேயர்க்கு அஞ்சல்* வாயிலாய் அனுப்பிவிட்டான்.

அப்புறம் சிலநாழிகை நடந்தபின்பு வழியில் சிலர் ஒருவனைப் பாடைகட்டித் தூக்கிக்கொண்டு மசானஞ் செல்வதைக் கண்டான். பாடையின்மேல் வளர்த்தி யிருந்தவன் அரோக திடகாத்திரனாய்ப் பீமன்போல் இருப்பதைப் பார்த்து "இவன் யாதோர் நோயினால் இறந்தவனாகக் காணப்படவில்லை" என நிதானித்து சுமந்து செல்கின்றவர்களை நிறுத்தி, "ஐயா! இவன் யாவன்? எங்ஙனமிறந்தான்?" என வினவினான். அவர்களும் "என்ன ஐயா! மயானத்திற்குப்போகும்போது வழிமடக்கிக்கேட்கின்றீர்; இனி யாகவேண்டியதென்ன? போம்போம்" என்றார்கள். ஜீவகனும் பின்னும் பரிந்துகேட்க, அவர்களும் "ஐயா! இவன் பேர்போன ஒரு மல்லகஜெட்டி; இன்று காலையில் ஒருவனோடு மல்லயுத்தம் செய்தான். விதிவசத்தால் வீழ்ந்து மூர்ச்சித்தான்" என்று சொல்லிக்கொண்டேசென்றார்கள். ஜீவகன் "ஆனால் சற்றுக்கீழே இறக்குங்கள் பார்ப்போம்" என்ன, அவர்களும் இதேது "காலைச்சுற்றின பாம்பு கடியாமற்போகாது" என்பதாய் இவன் நம்முடன் விடாமற் போராடுகின்றான், வைத்தியனோவென்னவோதெரியவில்லை என்று நினைத்துச் சற்று இறக்கிவைத்தார்கள். ஜீவகன் தன்கையில் உள்ள கல்லை அம்மல்லகஜெட்டியின் உடலில் வைத்துப் பார்க்க வயிற்றினுள்ளே குடல்புரண்டிருப்பதைக் கண்டு, அவன்வாயில் ஒரு மூங்கிற் குழையைவைத்து அதனுள்ளே ஒருவகைச்சூரணத்தைப்போட்டு ஊதினான். சூரணமும்உள்ளூறச்சென்று குடலைத் தீண்டின மாத்திரத்திலே குடலும் பழைய நிலைமையை அடைந்தது. அப்போது மல்லகஜெட்டி உறங்கிவிழித்தவன்போல எழுந்திருந்தான். நடந்த எல்லாவற்றையுங் கேட்டறிந்த அந்த மல்லகஜெட்டி ஜீவகனுக்கு நூறுவராகன்கொடுத்தான். ஜீவகன்அதனை முன்போலவே ஆத்திரேயர்க்கு அனுப்பிவிட்டான்.

* தபால்மூலமாய்

அப்புறஞ் சென்று யமுனையாற்றங் கரையைச் சேர்ந்துஓராலமரநீழலிலிருந்து இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப்போதுஆற்றில் நீரோடுகின்ற அழகைப் பார்த்திருக்கையில், ஆற்றுவெள்ளத்தில் ஒரு பிணம் மிதந்திருப்பதைக்கண்டு எழுந்துபார்த்தான். பிணமும் சிரிப்பதாய்த்தோன்ற அவ்வதிசயத்தை நெருங்கிக்காண்போமென்று ஆராய்ந்து பார்க்கையில், பிணத்தின் குதிக்கால் நரம்பினை ஒரு மீனானது வாயிற்கவ்வி இழுத்துக்கொண்டிருந்தது. அது அங்ஙனம் இழுக்குந்தோறும் பிணமானது கண்திறப்பதும் மூடுவதுமாகச் சிரிக்கின்ற பாவனையாகக் காணப்பட்டது. அப்புறம் ஜீவகன் வழிநடக்கலாகி வேசாலியென்னும் பட்டணத்தைஅடைந்தான். அங்கு ஒரு ஜெட்டியானவன் மற்போர்புரிகையில் கண்ணில் ஒரு குத்துண்டு கண்பிதுங்கிக் கனவருத்த மடைந்திருந்தான். அதுகண்ட ஜீவகன், "இதற்கென்னசெய்யலாம், இதுமருந்தினாலாவதல்ல; ஆயுதசிகிச்சை செய்வோமென்றால் 'கண்ணோ புண்ணோ!' என்றபடி ஆயுதசிகிச்சையினாலும் எளிதில் ஆவதல்ல. இதனை உபாயத்தினால் தீர்ப்பதே திறமையாகும்" என்று யோசித்து, ஆற்றில்கண்ட அதிசயத்தை நினைவுகொண்டு, அந்த ஜெட்டியைப்படுக்கவைத்து ஆயுதமொன்றைக்கொண்டு குதிக்காலின் நரம்பினைப்பற்றி வலித்தான். கண்ணும் கண்ணாயிற்று; ஜெட்டியும் தன்னாலியன்றஅளவு தனங்கொடுத்தான். ஜீவகுமாரன் அதனை அப்பதியில் வசிக்கின்ற தன்சிற்றன்னைக்குக் கொடுத்தான்.

வேசாலியில் வசிக்கும் குடியானவன் ஒருவன் தன்காதில் பூரான்கள் புத்திர பௌத்திரபாரம்பரியமாய்க் குடிகொண்டு குட்டிகள் பெருகி நெடுநாளாகப் படாதபாடுபட்டுக்கொண்டிருந்தான். இவன் ஜீவகனுடைய மருத்துவப் புலமையைப் பலர் சொல்லக்கேட்டு அவனிடம்சென்று "ஐயா! மருந்துவர் மன்னரே! என்னோயைத்தீர்த்தருளல்வேண்டும்" என்று வேண்டினான். ஜீவகன் "இதுவரையில் குரு உபதேசத்தின்படியே சிகிச்சைசெய்து வந்தேன். இனி என் அறிவினுக்குத் தோன்றுந் தோன்றுமாறு சூக்ஷமப் பிரயோகங்களைச் செய்வேன்" என்று எண்ணி, நோய்கொண்டவனை நோக்கி "அப்பா! தழைவேய்ந்த ஒரு குடிசைகட்டி அதனுள்ளே நிலவிறக்கம்பளம் ஒன்றை விரித்து வை. அதனடியில் ஒரு மத்தளத்தையும் தேடிவந்து வைக்கவேண்டும். குடிசையின் அடித்தரையைச் சூடேற்றிவைக்கவும் வேண்டும். நாளைப் பத்து நாழிகைக்குமேல் நான்வருவேன்" என்று சொல்லியனுப்பினான்.

குடியானவனும் வைத்தியன் சொன்னபடியே எல்லாவற்றையுஞ் சித்தஞ்செய்து வைத்தான், ஜீவகனும் அக்குடிசையை அணுகி நோவாளியைப் படுக்க வைத்துத்தரையில் தண்ணீர்தெளித்து மத்தளத்தை முழக்கினன். உடனேபெரிய பூரானனது இதுதான் இளவேனிற்காலமென்று செவியினின்றும் வெளிப்பட்டது. அதுகண்ட ஜீவகன் சிறிது இறைச்சியைச் செவிவாயில் வைத்தான். அதுகண்டபூரான் மீண்டும் உள்ளுறச்சென்று குஞ்சுகுட்டிகள் யாவற்றுடனே புறப்பட்டுவந்து இறைச்சியில் மொய்த்துக்கொள்ள, உடனே ஜீவகன் அவற்றையெல்லாம் ஒரு சட்டியில் தள்ளிவிட்டான். குடியானவனும் அதனோடு உபத்திரவ மொழியப்பெற்று உற்சாகங்கொண்டு ஐந்நூறு கரிசபணங் கொடுத்தான். ஜீவகன் இப்பணத்தையும் சிற்றன்னைக்குக் கொடுத்துவிட்டான்.

அப்பால் அங்குநின்றும் போய் இராஜக்கிரகமே சென்றடைந்து தந்தைதாய் தமயன்மார்களுடனே அளவளாவியிருந்தான். இருக்கும்போது ஒருநாள் ஏழைப்பார்ப்பான் ஒருவன் கஷ்ட சாத்தியமான கண்ணோயுடன்ஜீவகனிடஞ் சென்று தனக்கு ஒரு பரிகாரஞ் சொல்லும்படி வேண்டினன். ஜீவகன் அதிககோபத்துடன் "சாம்பலை அள்ளிக்கண்ணிலேகொட்டிக்கொள் போ! போ!" என்றுசொல்லியனுப்பினன். கபடறியாத அந்தப் பார்ப்பான்அப்படியே செய்தான். நேத்திர உபத்திரவமும்நீங்கிவிட்டது.

ஜீவகன் இங்ஙனமாக விந்தை விந்தையான செய்கைகளைச்செய்து வருகையில், அரசனாகிற பிம்பிசாரன் தலையில் ஒரு கட்டிபுறப்பட்டது. அரசனும் ஆயுள்வேதியர்களையழைத்து "மருத்துவத் தலைவீர்! என் சிரசில் புறப்படுகின்ற பருவினைக்காண்மின்; இதற்குச்சிகிச்சை செய்மின்." எனக்கூறினன். அம்மருத்துவ நிபுணர்கள் "மருத்துவப்புலமை சான்ற ஆசிரியர் அகத்தியனாரும் திருப்பாற்கடலில் திருவுடன்தோன்றிய பகவான் தந்வந்திரியும் கண்டு அழுக்காறடையத்தக்க ஆயுள்வேதியர் பெருமானாகின்ற ஜீவககுமாரபந்தன் இங்கிருக்கஅடியோங்களை அழைத்த காரணமென்ன? அவனைச் சிறுபிள்ளையென்று இகழ்ந்தீரோ! அவன் சூரியன்; அகத்தியாதியோர் சந்திரர்; அடியோங்களும் எம்போலியரும் நக்ஷத்திரங்கள்; அவனைச் சாமானியனாக எண்ணுதிர். தங்கட்குச் சிகிச்சைசெய்யத்தக்கவன் அவனே எனக் கூறிப்போயினர். அப்புறம் அரசன் "தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாமினிது" என்பதை நினைத்து ஆநந்தித்து ஜீவகனை அழைத்துத் தன்நோயைத்தீர்க்கவேண்டினன்.

ஜீவககுமாரன்அரசனாகிய தன் தந்தையைநோக்கி "இத்தக்கட்டியை ஒரு நொடிப்பொழுதில் கண்டித்துவிடுகிறேன், வாருங்கள். நானே என் கையால் உங்களுக்குத் தலைமுழுக்காட்டவேண்டும்" என்று சொல்லி, அரசனை மஞ்சனசாலையில் ஒரு பீடத்தின் மேலிருக்கச் செய்து, கட்டியைப் பழுக்கச்செய்யும் கடுக்காய் முதலிய தைலத்தைத் தடவி, அதன்மேல் ஐந்நூறுகுடந்தண்ணீர் வார்த்தான். அந்தத்தண்ணீரிலும் சில ஔஷதிசாரங்களை ஏற்றிவைத்திருந்தான். இங்ஙனமாகக் குடங்குடமாய்த் தண்ணீரைச் சொரியா நிற்கையில், கட்டியானது பழுத்து விட்டதையறிந்து, ஒருவர்க்குந் தெரியாதபடி, ஒரு சூரியெடுத்துச் சத்திரஞ்செய்து, சீயைப்பிதுக்கி, மீண்டும் முன்போலவே ஐந்நூறுகுடந்தண்ணீரைக் கொட்டினன். சத்திரஞ்செய்த வாயும் மூடிக்கொண்டு ஐந்நூறு குடந்தண்ணீரையும் வார்ப்பதற்குள்ளாகச் சதைவளர்ந்து மயிரும் முளைத்துவிட்டது. அரசன் இதையெல்லாம் அறிந்தவனல்ல; தலைமுழுக்காட்டியாயிற்றே; இனிமேல்தான் சிகிச்சை நடக்கப்போகிறதென்றெண்ணிக் கொண்டிருந்தான். உடனே ஜீவகன் தகப்பனை உண்ணவேண்டினன். அரசனும் உண்டிசெய்தான பின்பு, ஜீவகனைநோக்கி, "இனி நீ செய்யவேண்டிய சிகிச்சையைச் செய்யலாமே" என்றான். ஜீவகனும் "செய்யவேண்டிய சிகிச்சையெல்லாம் செய்தாயிற்றே; இன்னும் செய்யவேண்டுவதொன்றுமில்லையே" என்றான். அது கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து அந்தவார்த்தையை நம்பாதவனாய் கட்டி கண்டிருந்த இடத்தைக் கையினால் பலமுறை தடவிப்பார்த்தான். ஒன்றுங்கைப்படவில்லை. பின்னும் நம்பிக்கையற்றவனாய் நிலைக்கண்ணாடியில் தலையைப் பலமுறை திருப்பித்திருப்பிப்பார்த்தான். கட்டியிருந்த இடம் மயிர்முளைத்துக் கிடக்கக் கண்டான். அப்படியும்மனம் நிலைகொள்ளாமல் மனைவி முதலான மற்றவர்களை அழைத்துக்காட்டினன். அவர்களும் கட்டியிருந்தவிடத்தில் மயிரும் முளைத்துப் பழையபடி இருக்கக்கண்டு அதிசயித்தார்கள். மந்திரிமார்களும் மன்னனைச்சூழ்ந்துகொண்டு ஐயா மன்னவர் மன்னனே!

"தந்தைமகற்காற்றுநன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்."

என்னுங் கடமையைக் கடைபோகக்கழித்தீர். இவனும்,

"மகன்தந்தைககாற்றுமுதவி இவன்தந்தை
என்னோற்றான் கொலென்னுஞ்சொல்."

என்பதற்கு எடுத்துக் காட்டாய் ஆயுள்வேத சாகரத்தை ஆழங்கண்ட அரிய புலவனாயினன்" என்று சொல்லி மனமகிழ்ந்தார்கள். அரசனும் பிரமாநந்தங்கொண்டவனாகி "இனி இவனுக்கு ஆயுள்வேதபாஸ்கரன் எனப் பட்டஞ்சூட்டுங்கோள்" என்று சொன்னான்.

அப்போது அந்தகன் ஒருவன் அங்குற்று, "ஓ மன்னவர் பிரானே! மந்திரிமார்களே! ஜீவககுமாரன் எனக்குக் கண்தெரியப் படுத்தினானன்றோ அவனுக்கு ஆயுள்வேதபாஸ்கரன் என்னும் பட்டந்தக்கதாகும்? இல்லாவிட்டால் நீங்கள் அவன்மீதுள்ள அன்பினால் அப்பட்டங் கட்டினீர் என்னுங் குறைமொழிக்கூறக் காரணமுண்டாகுமே" என்று கூறினன். கூறக் கேட்ட ஜீவகன், "என்ன ஐயா, நான் உன்னை முன்பின் ஒருபோதும் அறியாதிருக்க உன் நோயைத் தீர்க்கவில்லை என்று சொல்கின்றாயே" என்று கேட்க, அவ்வந்தகன், "ஐயா! முன்னே ஒரு பார்ப்பானுக்கு ஒரு வைத்தியஞ் சொன்னீர்களே, அப்படியே செய்தேன். இன்னும் கண் தெரியவில்லையே" என்று சொன்னான். ஜீவகனும் கண்ணோ யென்பதெல்லாம் ஒன்றுதானோ? அவற்றுக் கெல்லாம் மருந்தும் ஒன்றுதானோ? கண்ணோயில் எத்தனை விதமான பேதங்களிருக்கின்றன? அதனை இன்னின்னதென வறிந்து அததற்குத் தக்கபடி சிகிச்சை செய்யவேண்டாமா? உன் கண்ணின் நோய் ஒன்று, அந்தப் பிராமணன் கண்ணின் நோய் வேறொன்று. ஆகவே உனக்கு வேறுவகைப்பட்ட சிகிச்சை செய்தல்வேண்டும்" எனக் கூறி, அவனுக்கு அங்ஙனஞ் செய்தான். அவனும் நோய்நீர்ந்து "இந்தப் புண்ணியவானுக்கே தகும் 'ஆயுள்வேத பாஸ்கரன்' என்கின்ற பட்டம். இனித்தடையில்லை. உடனே கட்டுங்கோள்" என்றான். உடனே ஜீவககுமாரபந்தனை ஓர் யானையின்மீதிருத்தி ஊர்வலம் வரச்செய்து ஆயுள்வேதபாஸ்கரன் என விருதுதிப் பட்டங் கட்டினார்கள். இது நிற்க.

(இன்னும் வரும்)

தி. செல்வகேசவராய முதலியார்.

——:o:——

நமதுபார்வைக்குவந்த புஸ்தகங்கள்.

மருந்துவ சாஸ்திர சங்கிரகம்.

இந்நூல் முன் கவர்ன்மெண்டு ஜெனரல் ஆஸ்பத்திரி வைத்தியரா யிருந்த கெட்டு-வி. வரதப்பநாயுடு அவர்களால் தெலுங்கில் இயற்றப்பட்டுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. மாதர்களது கெர்ப்போற்பத்திக் காலந்தொட்டுப் பிரஸவமாகும்வரை மாதர்களிடத்துக் காணப்படும் குணங்களை விவரித்து அப்போதைக் கப்போது செய்யவேண்டிய பரிகாரங்களைக் கூறுவதல்லாமல், ருது சம்பந்தமான பலவியாதிகள் அவற்றின் குணங்கள் சிகிச்சை முதலியவைகளையும், பிறந்த குழந்தை பாலப்பருவம் நீங்குமட்டும் சுகமாயிருக்குங் காலத்திலும் வியாதிக்காலத்திலும் பரிபாலிக்கும் முறைமைகளையும் பற்றி மிகவும் எளிதான நடையில் கூறுகின்றது.

தமிழ் மொழிபெயர்ப்புடன் பதிக்கப்பட்டிருக்கும் கான்குவெஸ்டுமருந்துவம்(Conquest's Midwifery) தமிழில் எழுதப்பட்டிருக்கும் ஜகந்நாத நாயுடு அவர்களுடைய 'ஸ்திரீ வைத்திய போதினி' என்னும் இரண்டு நூல்கள் இந்நூலுக்கு முந்தியவை. இப்போது ஜகநாத நாயகலு நாயுடு அவர்களால் மேஸ்தர் பால்கனர் (Mr. Falconer) இயற்றியிருக்கும் ஆங்கிலேய மருத்துவநூல் தமிழாக்கப்பட் டிருக்கிறது. (இது டப்பிரின் பண்டு கமிட்டியாரின் கோரிக்கையினால் டாக்டர் ப்ரான்பூட் அவர்கள் மூலமாக ஜைஜகநாதநாயுடு அவர்களைக்கொண்டு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் அச்சேறவில்லை.) மருத்துவத்தைப் பற்றி ஆங்கிலேய வைத்திய சாஸ்திரத்தை யனுசரித்துச் செய்யப்பட்ட வேறு தமிழ் நூல்கள் நாமறியாதவைக ளிருக்கலாம்.

'கான்குவெஸ்டு மருத்தும்' கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு ஆதரவு செய்யப்பெற்றது. ஸ்திரீ வைத்திய போதினி செய்தவர் டாக்டர் பார்ரிஸ்ட்கஸ், மொய்தீன் ஷெரிப் என்பவர்கள் போல நமது சுதேச வைத்தியத்தினும் பழகி, சுதேச வைத்திய சாஸ்திரங்களில் உபயோகமானவைகளைக் கைக்கொண்டு, தமது நூலையியற்றி யிருக்கிறார். [இங்கிலீஷ் வைத்திய சாரசங்கிரகம், பதார்த்தகுண ரத்நாகரம் முதலிய இங்கிலீஷ் சாஸ்திரத்தை அநுசரித்துச் செய்யப்பட்டிருக்கும், பல தமிழ் வைத்திய நூல்களுக்கு ஆசிரியர் இவரே.] இன்றியமையாத சில இங்கிலீஷ் மருந்துகளுடன் பல சுதேச மருந்துகள் ஸ்திரீ வைத்திய போதினியில் எடுத்தாளப்பட்ட மருந்துகள். இதனால், சகல இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும் பட்டணவாசிகளே யன்றிக் கிராமவாசிகளும் சில இங்கிலீஷ் மருந்துகள் மாத்திரம் வாங்கி வைத்துக் கொண்டார்களானால், அந்நூலிற் கூறியபடி வைத்தியஞ் செய்வது சுலபமாக விருக்கும்.

வரதப்ப நாயுடு அவர்கள் மருத்துவநூல் மருத்துவ விஷயத்தை விவரிப்பதில் ஸ்திரீ வைத்திய போதினியிலும் மிகவும்விரிவானது; பிற்பட்ட நூலாதலின். இது நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வைத்திய முறைகளைத் தழுவியது. நூலாரம்பம் முதல் முடிவுவரை நாம் கவனமாகப் பார்வை யிட்டதில், முக்கியமான விஷயங்கள் யாதொன்றுங் கூறாது விடப்பட்டதாகக் காணப்பட வில்லை. கூறும்மருந்துகளும் முறைகளும் அவ்வவ் வியாதிக்கு ஏற்றவைகளாகவும் சிறந்தவைகளாகவும் இருக்கின்றன.

ஆனால் வரும் வியாதிகளை எதிர் பார்த்துப் பின் வேண்டியிருக்கும் மருந்துகளை முன்னாகவே வாங்கி வைக்க யாவராயினும் உத்தேசிப்பார்களானால், அவர்கள் உத்தேசம் நிறைவேறுவது கஷ்டமென்பது,

நூலிற்குறித்த மருந்துகளைத் திரட்டி எழுதினால் உடனே தெளிவாகும். ஆகவே இந்நூல் முக்கியமாகப் பட்டணவாசிகளுக்கே யுபயோகமானது. நாட்டுப் புறத்தாரும், நகரவாசிகளைப்போலவே, இதில் ஆங்காங்குக் கூறப்பட்டிருக்கும் சுகாதார விதிகளையும், வியாதி வராமல் தடுக்கும் முறைகளையும் கைக்கொண்டு பயன்பெறலாம்.

வைத்தியரன்றி மற்றவர்களால் செய்யச் சாத்தியப்படாதமுறைகளும் சில சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 29-வது பக்கத்தில் கருப்பை இடம் மாறுதலினால் ஒதுங்கிப் போதலுக்குச் சொல்லுஞ் சிகிச்சையில் "கருப்பை பின்னுக்கு ஒதுங்கி யிருந்தால் . . . கருப்பையை யதாஸ்தானத்தில் தள்ளி வைக்கவேண்டியது" என்றும், 31-ம் பக்கத்தில் "இந்தச்சிகிச்சையால் கூட ரத்தம்நிற்காதபக்ஷத்தில் கருப்பையில் பிண்டசேஷம் கொஞ்சம்நின்றிருக்கும். அந்த மிகுதி பிண்டத்தைக் கையாலாவது ஆயுதங்களாலாவது வெளிப்படுத்தி விடவேண்டியது" என்றும் கூறியிருப்பதைப் பார்க்க. இப்பிரயோகங்களை வைத்தியர்களைக்கொண்டு செய்விக்க வேண்டு மென்பதுஞ் சொல்லப்பட வில்லை. சாதாரணமாக எல்லாரும் வாசிப்பதற்குபயோகமாகும்படி சுயபாஷையில் எழுதப்பட்ட புத்தகத்தில் இப்படிச் சொல்லாமல் விட்டது ஒரு பெருந்தவறு.

மருந்தின் அளவுகூறும் அனேக இடங்களில் ஒரு குன்றிமணி ஒரு 'கிரெயி' (Grain) னுக்குச் சமமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எமது ஞாபகத்தில், ஒரு குன்றிமணி உத்தேசமாக இரண்டு கிரெயினுக்குச் சமமென்று தோன்றுகிறது. மார்பியா (Morphia) முதலிய சில நஞ்சு மருந்துகளும் இந்நூலிற் கூறப்படுவதனால், ஒரு குன்றிமணியெடை ஒரு 'கிரெயின்' எடையும் சமமாவென்பதை நிறுத்துப்பார்த்த பின்பே அம்மருந்துகளை உபயோகித்தல் வேண்டும்.

மருந்தின் அளவு சில இடங்களில் கூறப்பட வில்லை. (8-ம் பக்கம் நீட்டுக்கால வலியின் சிகிச்சையைப் பார்க்க.) சில இடத்தில் மருந்து சேர்க்கும் முறை செவ்வையாகக் கூறவில்லை. (28-ம் பக்கத்தில் நிர்மலமான தண்ணீரில் வெள்ளியுப்பு கலக்க வேண்டு மென்று சொல்லி யிருப்பதில், நிர்மல மானதண்ணீர், நீர் ஆவியாகித் திரும்ப நீராகிய ஆவிநீர் (Distilled water) என்று அர்த்தமாவது கஷ்டம். மற்ற நீரில் வெள்ளியுப்புக் கலந்தால் அதன் குணமாறிப் போகுமென்பது ரஸாயன சாஸ்திரமறிந்த யாவருக்குந்தெரியும்.) குழந்தைகளின் வைத்தியங்கூறு மிடங்களில் பலவயதுக் குழந்தைகளுக்கும் மருந்துகளின் அளவு இவ்வளவு இவ்வளவென்று சில சந்தர்ப்பங்களிற் கூறப்பட்டிருக்கிறதே யன்றி, கூறவேண்டு மிடங்களி லெல்லாங் கூறப்படவில்லை. பல இடங்களில் பல நிறையையுடையவைகளாகப் பலநிறைகள் வழங்கப்படுகின்றன. சென்னபட்டினத்துப் பலம் மூன்று ரூபா எடையும், திருநெல்வேலிப்பலம் உத்தேசமாக ஐந்தரை ரூபாயெடையும் உள்ளவைகள். அப்படியிருக்க, சிலமருந்துகள் இத்தனைபலம் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றன. அப்பலம் ஒவ்வொன்றும் இத்தனை ரூபா எடையுள்ளதென்று கூறப்படவில்லை.

59-வது பக்கத்தில் கூறிய கார்பாலிக் லோஷனுக்கு எவ்வளவு கார்பாலிக் அஸிட்டும் எவ்வளவுநீரும் சேர்க்கவேண்டு மென்பது தெரியவில்லை.

56, 57-வது பக்கங்களில் "பால்ஜ்வரம்" (Milk fever?) என்னும் வியாதியைப்பற்றிய குணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதன் பரிகாரம் கூறப்படவில்லை. சில இடங்களில் அர்த்தமாகாத வாக்கியங்கள் (47-வது பக்கத்தில் வரும் "ரத்தப்பிர வாகத்தினால் கர்ப்பஸ்திரீகள் மூன்றுபங்கு இறந்து போவார்கள்" என்ற வாக்கியம் போன்றவைகள்) காணப்படுகின்றன. இவ்வகையான பிழைகள் இந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவ ருடையவைகளாக விருக்கலாம்.

மேற்கூறிய குறைபாடுகளொழிய இந்நூல் மிகவும் சிரமமெடுத்து அனுபவமுதிர்ந்த ஆங்கிலேய வைத்தியத்தியத் தேர்ச்சியோடு சர்வ ஜனோபகாரமாக வேண்டுமென்னும் நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்நூலிற்கூறும் சில மருந்துகள் அவற்றின் அளவு சொற்பமாக அதிகப்பட்டாலும் அபாயம் விளைப்பவை யாதலாலும், சில ரண வைத்திய முறைகள், தக்க வைத்தியப்பயிற்சி யில்லாதவர்கள் செய்யத்தகாதவைக ளாதலாலும் இந்நூல் முக்கியமாக இங்கிலீஷ் மருத்துவம் இன்ன இன்ன சிறப்புடையது என்று ஜனங்கள் அறிந்து அனுசரிக்கும்படி செய்யப்பட்ட தென்பதையும், தாங்களே (இந்நூலில் கூறும்) சகல வைத்தியமும் செய்துகொள்ளக் கூடாதென்பதையும், ஞாபகத்தில் வைத்து இந்நூலை உபயோகித்தல் வேண்டும்.

மஹாராணி.—சுதேசபெண் கல்விச்சாலைகளிலும் குடும்பங்களிலும் வாசிப்பதற்கு உபயோகமாகும்படி பிரசுரம் செய்யப்பட்டுவரும் மஹாராணி யென்னும் பத்திரிகையின் 5-வது புஸ்தகம் நேர்த்தியாகக் கட்டப்பட்டது ஒன்றும், பொங்கல் பண்டிகை, புதுவருஷப்பண்டிகை, தீபாவளிப்பண்டிகை, கார்த்திகைப் பண்டிகை முதலிய சந்தோஷகாலங்களில் நம்மவர்கள் இஷ்டமித்திர பந்து ஜனங்களோடு அளவளாவி சோபனஞ் சொல்லிக்கொள்ளவும், வாழ்த்துக்கள் கூறவும் உபயோகமாகும்படி நேர்த்தியாக வர்ணம் தீர்த்து பளபளப்பான புஷ்பங்கள், செடிசெடிகள், பக்ஷிகள், பல்லக்கு, வண்டிகள் முதலிய காலவிசேஷத்திற்குத் தக்க கருத்துக்கள் பல சித்திரித்த அழகான சீட்டுக்கள் பலவும் நமது பார்வைக்கு வரப்பெற்றிருக்கிறோம். கண்ணுக்கழகாய்ச் சிறுவர் மனதைக்கவர்ந்து களிப்பை யுண்டுபண்ணத்தக்க இந்நேர்த்தியான சீட்டுக்களையும் மேற்கண்ட புஸ்தகத்தையும் நமக்கு அனுப்பிய ராய் பஹதூர் வன்பாக்கம் கிஷ்ணமாசாரியார் அவர்களுக்கு நாம் மிக்க வந்தனமுள்ளவரா யிருப்பதைத் தெரிவிக்கிறோம். மஹாராணி யென்னும் பத்திரிகை இரண்டுமாசத்துக்கொருமுறை பிரசுரிக்கப்பட்டு வருவதாகக்கூறப்படுகிறது. ஆனால் தகுந்தஆதரவின்மையாலோவேறு யாது காரணத்தாலோ இந்த காலக்கிரமப்படி ஒழுங்காய்ப்பிரசுரிக்கப்பட்டு வருவதில்லைபோல் தோன்றுகிறது. நமது முன்னுள்ள புஸ்தகம் 1891-ளு ஜூன் மீ முதல் 1892ளு ஏப்பிரல்மீ வரையுள்ள ஒரு வருஷத்துச் சஞ்சிகைகள் 6-ம்சேர்த்து ஒன்றாகக் கட்டப்பட்டதாயிருக்கிறது. அதில் முதலாவது பாகம் இரட்டைச்சஞ்சிகைகள் (ஜூன்-ஆகஸ்டுமாசத்தியவை) சேர்த்து வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இரண்டாவது பாகமும் அப்படியே 3, 4. சஞ்சிகைகள் (அக்டோபர்-டிசெம்பர்மாசத்தியவை) இரண்டும் சேர்த்து ஒன்றாகப் பிரசுரிக்கப்பட்டதாக விருக்கக் காண்கிறோம். பிப்ரவரிமாசத்து 5-வது சஞ்சிகையும் ஏப்ரல் மாசத்து 6-வது சஞ்சிகையும் தனித்தனி வெளியிடப் பட்டவையாகத் தோன்றுகின்றன. இப்பத்திரிகை சரியாக வெளியாய்வருகிறதா என்பதைப் பற்றி அநேகர் நம்மை இதற்கு முன் விசாரித்திருப்பதால் இது விவரங்களை நம்முன்னுள்ள புஸ்தகத்தில் காணப்படும் அடையாளங்களைக்கொண்டு இங்கு விவரிக்கலாயிற்று. இந்த மஹாராணி யென்னும் பத்திரிகை இவ்விவேகசிந்தாமணியின் பக்கங்களைப்போல் சஞ்சிகைக்கு 24-பக்கங்கள் கொண்டதாகப் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதற்குவருஷசந்தா தபாற்கூலியின்றி ரூபா-2. நமது முன்னுள்ள இப்பத்திரிகையின் 5-வது புஸ்தகம் 148--ப்பக்கங்களையுடையதாய்ப் பல பளபளப்பான வர்ணபடங்கள் அமைந்துள்ளது. அப்படங்களுள் அனேகம் பல சித்திரங்கள் உள்ளவைகள். அவற்றுள் பறவைகள், நீர் வாழ்வன, ஊர்வன, பூச்சிபுழுக்கள் இவை அமைந்த படங்கள் கண்ணுக்கினிமையாக இருப்பதன்றி அச்செந்துக்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் சாஸ்திர விஷயங்களை நன்கு விளக்குவதற்கு மிகவும்உபயோகமாகவிருக்கின்றன. பல நீதிக்கதைகளும், சாஸ்திர உண்மைகளும் சிறுவர்க்குரஞ்சிதமான விநோதவிஷயங்களும் நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. நம்முனிருப்பதுபோல் ஒன்றாகக்கட்டடம் செய்த ஒருவருஷத்துச் சஞ்சிகைகளடங்கிய புஸ்தகத்தின் விலை ரூபா 2—8—0, சிறுவர் சிறுமிகளுக்கு வெகுமானம் கொடுக்க இப்புஸ்தகம் வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது.

சோபனச்சீட்டுகள்.— நமது பண்டிகைகாலங்களில் ஒருவருக்கொருவர் அளவளாவிச் சந்தோஷங் கூறிக்கொள்ளவும், சோபனஞ் சொல்லி வாழ்த்துகள் கூறவும் ஏற்றவையாகப் பலவர்ணந் தீட்டிய சித்திரப்படங்க ளமைந்த சீட்டுக்களில் தமிழிலும் தெலுங்கிலும் சுபகாலத்துக்கேற்ற சுபசோபனவார்த்தைகளும் வாழ்த்து வாக்கியங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இப்பத்திரிகையை வாசிப்போர்க்கு விளங்க இங்கு எடுத்துரைப்போம். ஒரு மரத்தின் கிளையில் அழகான பஞ்சவர்ணக்கிளி யுட்கார்ந் திருப்பதுபோல் நேர்த்தியாகச் சித்திரம் தீட்டப்பட்ட ஒரு சீட்டில் "பலவர்ணக் கிளிகள்போல், பலருங் குலாவும் சுபதினத்தில், நலமிகு சீர் மங்களங்கள், நற்கீதங்கள் பாடுவீரே!" என்னும் சுப சோபனப்பாட்டு வரையப்பட்டிருக்கிறது. புதுவருஷப் பண்டிகைக் குபயோகிக்க இசைத்த இன்னொரு சீட்டில் "புதுவருஷப் பண்டிகை பொருந்தி இனிதோங்குக," என்னும் சுபவாழ்த்துக் கூறப்பட்டிருக்கிறது. பொங்கல்பண்டிகையி லுபயோகிப்பதற்கான இன்னொருசீட்டில் "தைப்பொங்கல்பண்டிகை தழைத்தினிதோங்குக." என்னும் சுபவாக்கியம் வரையப்பட்டிருக்கிறது. சரஸ்வதிப் படமெழுதிய இன்னொருசீட்டில் "பூமகள்கடாக்ஷம் பொருந்துமிந்நாளே க்ஷேமமும் போகமும் செழிக்குமிந்நாளே." என்னும் மங்களவாக்கியம் வரையப்பட்டிருக்கிறது. கலியாண காலங்களில் சிறுபெண்கள் பிள்ளைகளுக்குச் சோபனஞ்சொல்லித் தூரத்திலுள்ள பந்துக்கள் தங்கள்ஞாபகசின்னமாக அளிக்க, கலியாணப்பல்லக்கு ஊர்க்கோலம் வருகிறமாதிரியாகச் சித்தரிக்கப்பட்டுப் பின்வரும் சுபவாழ்த்துக்கள் கூறப்பட்டிருக்கும் சீட்டுமிகவும்ஏற்றதாகவிருக்கும்: "ஆல்போல்தழைத்து அறுகுபோல் வேரோடி, மூங்கில்போல் நித்தம் முகியாமல் வாழ்ந்திருப்பீர்." இத்தோடு அச்சீட்டின் கீழ்ப்பக்கத்தில் "சுபம். சுபம். பதினாறும் பெற்று பெருவாழ்வும் வாழ்க." என்னும் சுபவாழ்த்து வரையப்பட்டிருக்கிறது. இச்சீட்டுகள் வேண்டியவர்கள் மஹாராணி பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ வன்பாக்கம் கிஷ்ணமாசாரியர் அவர்களிடம் ரூபாய்க்கு 16-சீட்டுக்கள் விகிதம் பெற்றுக் கொள்ளலாம்.

தண்ணீர் சொல்லிய தன்வரலாறு.

சிறுவர்க்கென்று சிலகதை குட்டியன்னாவும் மற்றவர்களும் எழுதிவருகின்றனர். விவேகசிந்தாமணியின் 'சிறுவர் பக்கம்'போக, மற்றப்பக்கங்களில் வர

தினும் அறிவிலும் முதிர்ந்தோருக்கு உபயோகமாக பற்பலர் பற்பல சங்கதிகளை எழுதிவருகிறார்கள். ஆனால், சிறுவர்க்கும் பெரியவர்களுக்கும் நடுவிலுள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு உபயோகமாக ஒருவரும் எழுதவில்லை. 'அவர்களுக்கு நான் என் அனுபவத்தில் கண்ட சில சம்பவங்களைச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

சிநேகிதர்களே! நான் சிலநாட்களுக்கு முன் என் ஊருக்கு அருகிலுள்ள மற்றொரு ஊருக்குப்போய்த் திரும்பி வரும்போது புகைவண்டியிற் பிரயாணம் செய்வதற்காக ரெயில் ஸ்டேஷனுக்குப் போனேன். அங்கு'டிக்ககட்டு'வாங்கி அரைமணி நேரம்வரையில் புகைவண்டி வரவில்லை. ஆதலால் அந்த 'ஸ்டேஷனில்' அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தேன். அப்போது ஸ்டேஷன் ஓரத்தில் யானைத் துதிக்கையைப்போல் ஒன்று என் கண்ணுக்குத் தோன்றியது. அது என்னவென்று கண்டறியும்படி அதன் சமீபத்தில் சென்றேன். சிலவிடங்களில் வைத்திருக்கும் தபால் பெட்டியைப் போன்ற உயரமான உருக்குத் தூணிலிருந்து அந்தத் தோல்துதிக்கை தொங்கிக்கொண்டிருந்தது. அந்தத் துதிக்கை நுனியிலிருந்து சொட்டுச்சொட்டாய்த் தண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறதென்று சோதித்துப் பார்க்கையில் முன் உருக்குத் தூணைத் தோற்றியது, தண்ணீர் நிறைந்த உயர்ந்த தொட்டியென்றும், அதிலிருந்து தோல்துதிக்கையின் வழியாய்த் தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்ததென்றும் அறிந்தேன். அப்போது யாரோ ஒருவர் சில வார்த்தைகளை முறுமுறுத்துக்கொண்டிருந்ததாக எனக்குத் தோன்றிற்று. அப்படி முறுமுறுத்தது யாரென்று என்னைச் சுற்றித் திரும்பிப் பார்த்தும் ஒருவரையும் சமீபத்திற் காணேன். என்றாலும் என் செவியில் முறுமுறுப்பு வரவர அதிகமாகவே கேட்டது. சிறைச்சாலையில் அடைபட்ட ஒருவன் உள்ளிருந்து தன் அவஸ்தைகளைப்பற்றி முறுமுறுத்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றிற்று. நன்றாய் நிதானித்துக் கேட்கையில், அது உருக்குத்தொட்டியில் அடைபட்டிருந்த தண்ணீரின் முறுமுறுப்பு என்று திட்டமாய்த் தெரியவந்தது. அது என்ன சொல்லிற்றென்றால்:—

"இதென்ன வாழ்வு! என்னாளும், என் ஆயுள் முழுவதும் இத்தொட்டியில் அடைபட்டிருப்பதில் என்ன சுகம்? சும்மா இருத்தல் சுகம் சுகம் எனச் சுருதியெல்லாம் சொல்லுகின்றனவாம்!! அதென்ன சுகம்? இடுக்கமான இருட்டறையில் என்னை அடைத்துவைத்திருக்கின்றனர். நான் சர்க்காருக்கு விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையே. ஐயோ! என்னை இந்தச் சிறையிலிருந்து விடுவிப்பார்களானால் நான் என் மனம்போன போக்கில் போவேன். அப்போது என்னை வாய்ந்நால் என்பார்கள். செழிப்பான வயல்களுக்கு மத்தியில் எவ்வளவோ சந்தோஷமாய்ச் சாடி ஓடி இசைபாடி சிநேகிதருடன் கூடி விளையாடிக்கொண்டிருப்பேன். அருகிலுள்ள செடிகளின் புஷ்பங்கள் குனிந்து என்னை அன்புடன் முத்தமிடும். பக்ஷிகள் சந்தோஷத்துடன் காலைமாலைகளில் கக்ஷியாய் என்னிடத்தில் வந்து தம் சிறகுகளை அடித்துத் தலையை அமுக்கிக் குளித்துச் செல்லும். மேலும் உல்லாசமாய் என்மேல் துள்ளித் துள்ளிவிழும் மீன்களுடன் சல்லாபமாயிருந்தாலுமே என் பொழுது சந்தோஷமாய்க் கழியுமே! இதெல்லாம் விட்டு ஒன்றுக்கும் உதவாமல், ஒருவேலையும் செய்யாமல் பன்றிபோல் தின்று சோம்பலாயிருக்கும் சில மனிதரைப்போல் இந்த சிற்றறையில் அடைபட்டிருப்பதில் என்னபயன்? யாரையேனும் பார்க்க முடியுமா? என்னுடன் யாரேனும் சம்பாஷிக்க முடியுமா? என்னை ஓர் உபயோகமில்லாத வஸ்துவென்று உலகத்தோர் நினைத்திருப்பார்களே. என் உபயோகத்தை அவர்களுக்குக் காட்ட ஒரு வழியும் காணேனே. இதுவும் அன்றே அயன் என் தலையில் எழுதிய விதியோ!!" என்று தன்னையும் தன்னைப்படைத்த கடவுளையும் நொந்துகொண்டிருந்தது.

"இதென்ன விபரீதம்! ஐயோ! இந்தத் தண்ணீர் இவ்வளவு அவஸ்தைப் படுகிறதே; இதைச் சிறையினின்றும் விடுவிக்கும் இரக்கசித்தமுள்ளவர் ஒருவருமில்லையா" என நான் நினைத்துக்கொண்டிருக்கையில் "இதோ வந்தேன் வந்தேன்" என்று புகைவண்டி ஊதும் சத்தத்தால் தன் வரவைத் தெரிவித்துக்கொண்டே ஓடிவந்து எனக்கு சமீபமாக நின்றது. நின்றதும் அவ்வண்டியிலிருந்து கரித்துணி போர்த்திருந்த ஒரு நாட்டுத்துரை கீழே குதித்து, அந்தத் தொட்டியிலிருந்து ஒரு குமிழ் ஆணியைத் திருப்பிவிட்டுத் தண்ணீரைப்பார்த்து "இங்கே விரைந்து வா. உனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது: சீக்கிரம்!" என்று உத்திரவு செய்வதுபோல் அண்ணார்ந்து பார்த்தார். உடனே தண்ணீர் "தங்கள் சித்தம், என் பாக்கியம்" என்று முதலில் அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்து, பின் கடகடவென்று பாய்ந்து நீராவியந்திரத்திலுள்ள ஒரு தொட்டியினுள் சென்று நின்றது. அந்தத் தொட்டிக்கு அடியில் செங்கல் சூளையில் தீ எரிவதுபோல நிலக்கரி சுவாலித்து எரிந்துகொண்டிருந்தது. அரை நிமிஷத்தில் அந்தத் தொட்டித் தண்ணீரில் கொதிப்பு உண்டாயிற்று. அப்போது அந்தத் தண்ணீர் பட்டபாட்டை என்னென்று சொல்வேன்! அதை நினைக்க நினைக்க அதிகப் பரிதாபமாயிருக்கிறது. அப்போது அது சொன்னதாவது: "இதென்ன? என்னை இப்படி வருத்துகின்றனர். இரக்கமில்லா மனிதர் என்னைத் திறக்க மனங் கொள்ளாமல் இருக்கின்றனர். அவர் இறக்கக்கடவர்! ஐயோ, இதுவரை இப்பாடு நான் எப்போதும் பட்டதில்லையே. ஒருநாள் பேதை மடமாதர் சிலர் கூட்டாஞ்சோறு சமைப்பதற்கென்று என்னைப் பானையில் அடைத்துத் தீயினால் சுட்டுக் காய்ச்சினர். அதுவோ என்னைக் கொன்றதுபோலவே இருந்தது. என்றாலும் அவர் அறியாப் பெண்களானதால் பொறுத்திருந்தேன். இதென்ன! அதினும் பெரிய அவஸ்தையாயிருக்கின்றதே! ஓடிப் போகவென்றால் ஒரு ஊசி நுழைக்கவும் வழியில்லை. அப்பப்பா! இக் கொடியரைப்போல் கல்நெஞ்சரை நான் எங்குங் கண்டதில்லை"—என்று கதறிக் கொந்தளித்து அங்குமிங்கும் முட்டியும் ஒன்றும் முடியாமல் தன் பிராணனைவிட்டு ஆவியைப் போக்கிற்று. பரிதாபம்! பரிதாபம்!

தண்ணீர் போக்கிய இந்த ஆவியோவெனில், தண்ணீரைவிட அதிகப் பாடுபட்டபோதிலும், தனக்கு ஏதோ பலமும் சக்தியுமிருப்பதாய்க் காட்டியது. தண்ணீரைப்போல் அது அழுதுத் தத்தளிக்கவில்லை. ஆனால் சினங்கொண்ட நாகம்போல் சீத் சீத் என்று சீறிக் கோபத்துடன், 'என்னை இப்போதுவிடுவிக்கின்றீர்களா, இல்லையா? நான் தண்ணீரைப்போல் வெகுநேரத்துக்குப் பொறுமையுடன் இருக்கமாட்டேன்: அதைவிட நான் பலசாலி; என்கோபத்தைத் தணிக்க எவராலும் கூடாது. என்னை வெளியே போகவிடத் தாமதிப்பீர்களாகில், இந்த அறையின் ஆமைப் பூட்டுகளை அரைநொடியில் அதமாக்கி வெளியே போய்விடுவேன்' என்று பயமுறுத்திற்று.

உடனே என் காது செவிடுபடும்படி கீச்சு சப்தமாய்க் கூச்சல் கேட்டது. நீராவியின் கோபத்தால் உண்டான சத்தமென்று நினைத்தேன். ஆனால் அது சந்தோஷத்தின் மிகுதியால் உண்டானதென்று அப்பால் தெரிந்தது. எப்படியென்றால் நான் முன் சொன்ன துரை இஞ்சின் வண்டியிலிருந்த ஒரு திட்டிவாசலைத் திறந்துவிட்டார். அதின் வழியாய் நீராவி "தப்பினேம் தப்பினேம்" என்று சத்தமிட்டு வெளிப்பட்டது. அந்தத் திட்டிவாசல் உடனே மூடிக்கொண்டது. அப்பால் வேறொரு திட்டிவாசல் திறந்தது; அதின் வழியாயும் நீராவி வெகுவிசையாய் வெளிப்பட்டது. அப்படி வெளியேபோகும் ஆவி சும்மா போகாமல் வண்டியின் சக்கரங்களுடன் பொருந்தியிருந்த உருக்குத்தடியொன்றை விசைகொண்டு தள்ளித் தள்ளிச் சென்றது. உருக்குத்தடி அசையவே, சக்கரங்களும் நகர்ந்தன. வண்டியும் மெதுவாய் நகர்ந்தது. வண்டி நகர்ந்தபின் தாமதிக்கலாகாதென்று நான், ஓடிப்போய்த் திறந்திருந்த ஓர் வண்டியில் பொட்டென ஏறிக்கொண்டேன். அரை நிமிஷத்திற்கெல்லாம் இஞ்சின் வண்டியும் அத்துடன் சேர்ந்த வண்டித்தொடரும் ஸ்டேஷனை விட்டு அப்பால் சென்றது. சற்றுநேரத்தில் அவ்வூரும் எங்கள் கண்ணுக்கெட்டாததூரத்தில் மறைந்து போயிற்று. பக்கத்திலிருந்த மரங்களும் வயல்களும் மாடுகளும் வீடுகளும் எங்களுக்கு எதிர்முகமாய் சிறகுகட்டிப் பறந்தாற்போல் பறந்து காணாமற் போயின.

இது இப்படியாக, 'இஞ்சின்' வண்டியிலிருந்து விடுபட்ட நீராவியானது வழிப்போக்கரிடத்தில் விடைபெற்றுப் போவதுபோல், எங்கள் வண்டிகளின் ஜன்னல்கள் வழியே எட்டிப்பார்த்துப் பார்த்துப் பின்னடைந்தது. அப்போது ஓர் மூலையில் 'விவேகசிந்தாமணி'யென்னும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையை வைத்து வாசித்துக்கொண்டிருந்த ஓர் வியாபாரி அந்த நீராவிக் கூட்டத்தைப் பார்த்து, "உங்களுக்கு நான் மெத்த நன்றியறிதல் உள்ளவனாயிருக்கிறேன். நான் முன் ஒருவாரத்தில் செய்யக்கூடிய பிரயாணத்தை இப்போது அரைநாளில் முடிப்பது உங்கள் உதவியாலன்றோ!" என்று சொன்னார்.

ஒரு வருஷம் தன் பெற்றோர் முதலியவரையும் பாராமல், சென்னையிலிருக்கும் ஓர் கல்விச்சாலையில் படித்திருந்து நடுவேனில் விடுமுறையில் தன்னூருக்குப் போய்க்கொண்டிருந்த ஓர் சிறுவன் "நீராவிக் கூட்டங்களே! உங்களுக்கு நான் வந்தனம் தந்தேன். இன்று சாயந்தரமே என் பெற்றோர் சிநேகிதர் முதலிய எல்லாரையும் பார்க்க என்னூர்க்கு என்னைப் போகச்செய்வீர்களல்லவா!" என்றான்.

உடம்பு மெலிந்து முகம் வெளுத்து இரத்தம் கெட்டு வியாதிப்பட்டு உட்கார முடியாமல் தலையணைமேல் சாய்ந்துகொண்டிருந்த நோயாளி ஒருவன் "என்னை இவ்வளவு சீக்கிரமாய் என் வீட்டிற்கொண்டுவந்து சேர்த்தீர்களே. நீராவித்திரள்களே! உங்களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்!" என்று புகழ்ந்து பேசினான்.

இப்புகழ்ச்சியான வந்தன வார்த்தைகளைக் கேட்டவுடன் நீராவிக்குச் சந்தோஷமுண்டாகி "இப்போதுதான் எனக்குத் திருப்தி; நான் உடம்புஎடுத்ததற்கு உலகத்துக்கு உபயோகமாகக் கொஞ்சம் உழைத்தேன்" என்றுசொல்லி ஆனந்தத்தின் மிகுதியால் உயர உயர எழும்பிக் குதித்தது. புகைவண்டித் தொடரோவெனில், பின்னடைந்த நீராவியைப் பற்றிய எண்ணமேயின்றி வெகுவிரைவாய் ஓடிவிட்டது. நீராவி செய்த உபகாரத்திற்காக அதற்கு பற்

பலர் வந்தனம் கூறிச் சென்றும், அந்நீராவியால் தள்ளுண்ட வண்டியானது சற்று தாமதித்து அதற்கு வந்தனங்கூறிச் செல்லாமலும், அதைப்பற்றிய எண்ணமே யில்லாமலும் ஓடிவிட்டதைப் பார்த்த நீராவிக்கு அதிக விசனமும் கோபமும் உண்டாகி முகங் கருத்து "பளா! நன்றாயிருக்கிறது!! இவ்வுலகத்தில் நடக்குங் காரியங்கள் இப்படியே. எவ்வளவோ பரோபகார சிந்தையுடன் நாம் ஒருவருக்கு உபகாரஞ் செய்தும் அவர் நம்மை மறந்துபோவதாயிருக்கிறது. வெகு நேர்த்தி! என்னையன்றி இப்பெரிய வண்டித் தொடரின் ஓர் அணுவும் அசையுமா? என் உதவியால் அசைந்தோடிய வண்டிக்கு அப்பால் என்னைத் தொட்டென்ன காரியமிருக்கிறது!! . . . . தன்னயம் பாராட்டும் இவ்வுலகத்தில் நானிருப்பதைவிட வேறெங்கேயாவது போய்விடுவது நன்று" என்று சொல்லிக்கொண்டு மேல் லோகத்துக்குப் போய்விட்டது.

இதற்கு சமீபத்தில் என்னூரானதால் நான் அங்கே இறங்கினேன். சிறுசிறு நீராவிக் கூட்டங்கள் சில அங்கே வெகு விசனத்துடன் ஒன்றும் பேசாமல் தங்கி யிருந்தன. அவைகளைப் பார்த்து "ஏன் விசனப்படுகிறீர்க" ளென்று கேட்டேன். "பலமுள்ள பெரிய நீராவிக் கூட்டங்களெல்லாம் எங்களை இங்கே விட்டுவிட்டு மேலே போய்விட்டன. எங்களால் உயரமாய்ப் பறக்கமுடியாமல் இங்கே இருக்கிறோம்." என்றன. அப்போது நான் "பெரியநீராவிக் கூட்டங்கள் எங்கே போய்விட்டன?" என்று கேட்டேன். "அதோ மேற்கே பொதியமலை யிருக்கிறது, அதின் உச்சியில் எங்கள் வாசஸ்தானம். அங்கேதான் போயிருப்பார்கள். எங்களுக்கு அவ்வளவு உயரமாய்ப் பறக்க சக்தியில்லை. ஆகையால் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். நாளைப் பொழுதுவிடியும் போது பனியாகவும் மூடுபனியாகவும் இப்பூமியின் மேல் விழுந்து நாங்கள் பிராணனை மாய்க்க எண்ணியிருக்கின்றோம். நாங்கள் இறந்துபோனபோதிலும் எங்கள் சரீரம் பயிர்களுக்கும் புற் பூண்டுகளுக்கும் கொஞ்சம் பிராணாதாரமா யிருக்கும். அப்படி உலகத்துக்கு உபயோகமாகும்படியாய் எங்கள் பிராணனைவிடுவதால் எங்களுக்கு மோக்ஷம் கிடைக்கும்" என்று சொல்லின. இதுகேட்டு அவைகளின் நல்லெண்ணத்துக்கும் பரோபகார சிந்தைக்கும் மெச்சிக்கொண்டு பெரிய நீராவிக் கூட்டங்களைத் தேடிப் போனேன். பொதியமலைச் சாரலில் அவைகள் இறங்கி யிருக்கக்கண்டு அவைகளின் சமீபத்திற் சென்றேன். அப்போது ஒரு மேகம் மற்றவைகளைப் பார்த்து "என் மனஸ்தாபத்துடன் இருக்கின்றீர்கள்? உலகத்தின் இயற்கை நமக்குத் தெரியாதா? உலகத்தோர் தன்னயம் பாராட்டியே யிருப்பர்! அதனால் நமக்கென்ன?" என்றது. அதுகேட்ட மற்றொரு மேகம் "செய்நன்றி யறியாத மனிதர் இவ்வையகத்தில் மெய்மறந்து திரிகின்றனர். அவர்களுக்கு புத்தியுண்டாகவேண்டி இந்திரனிட்ட கட்டளைப்படி முன் 'மாதமும்மாரி' பொழிந்துவந்ததை யொழித்து இப்போது வருஷத்துக்குமூன்றுமழை பெய்கிறோம். இதையும் அவர்கள் அறியவில்லை. செய்நன்றி யறியாமலிருப்பது மாத்திரமோ? உண்டசோற்றுக் கிரண்டகஞ்செய்வது முதலாகிய எத்தனையோ தீங்குகள் அயலாருக்குச் செய்து வருகின்றார்கள். இவர்களுக்குக் கடவு ளொருவ ரிருக்கிறார் என்பதை உணர்த்தும்பொருட்டு நாமெல்லாம் இப்போதே ஒன்றுசேர்ந்து இவர்கள்மேல் கல்மழையாய் உடனே இறங்கி இவர்கள் சொந்தம் சொந்தம் என்று பாவித்து வருகிற வீடுகளையும் காடுகளையும் சம்பாத்தியங்களையும், நம்மை அவமதித்துச் சென்ற புகைவண்டியையும் ஒரு நிமிஷநேரத்தில் உடைத்துத் தகர்த்துவிடுவோமா? அல்லது நமது பந்துக்களெல்லாரையும் ஒன்றுசேர்த்து ஒரேமட்டாய்த் தரையிலிறங்கி மறுபடியும் ஜலரூபமெடுத்துப் பிரளய முண்டாக்கி இத்துன்மார்க்கரின் பயிர்வகைகளை அழுகச்செய்து நாசமாக்கி அதன்மூலமாகப் பஞ்சமுண்டாக்குவோமா?" என்றது.

இதை கேட்டிருந்த மற்றொரு மேகம் வெகு கோபங்கொண்டு "இந்தப் பாவிகளின் பாவச்செய்கைகளை நாம் பொறுத்திருக்க இருக்க, இவர்கள் அதிகமாகவே பாவம் செய்கிறார்கள். தற்புகழ்ச்சி, தன்னயம் பாராட்டும் குணம் இவைகள் அதிகமாகவே விர்த்தியாகின்றன. ஆகையால் பனிக்கட்டிக்கு இருப்பிடமான 'ஹிமயமலை' யுச்சியில் நாமெல்லாம் சென்று அங்கே பனிக்கட்டி மலையாய் உறைந்து திடீரென்று அம்மலையிலிருந்து அப்படியே பாறை பாறைகளாக வழுவி விழுந்து ஒரேமட்டாய் விந்தியமலைவரையிலும் மத்தியிலகப்பட்ட மனிதர், ஜந்துக்கள், வீடுகள் முதலிய எல்லாவற்றையும் பூமியோடு பூமியாய் அரைத்து அழித்து, அப்பால் விந்தியமலையிலிருக்கும் நமது பந்துக்களையுஞ் சேர்த்துக்கொண்டு மறுபடியும் நழுவி கன்னியாகுமரிவரையும் முன்போலவே பாழாக்கி விடுவோம். இப்படிச்செய்தால்தான் என் மனம் சாந்தப்படும்" என்றது.

அப்போது மற்றொரு மேகம் "சீ, சீ, இது சரியல்ல; இப்படிச் செய்தால் கெட்டவர்களுடன் நல்லவர்களும் மாண்டுபோவார்கள். கெட்டவர்கள்மட்டும் சில கப்பல்களில் ஏறி வடசமுத்திரத்துக்கு வருவராயின், அங்கிருக்கும் நமதுபாட்டனாருக்குச் சொல்லி சமுத்திரத்தண்ணீரை உறைந்துபோகச் செய்தால் அந்தக் கப்பல்கள் எங்கும் அசைய வழியில்லாமல் அவைகளிலுள்ள ஜனங்களெல்லாம் உணவின்றி மாண்டு போவார்கள்" என்றது.

இது கேட்டிருந்த மற்றொரு மேகம் "இதெல்லாம் என்ன சமாசாரம்? வேடிக்கையாய்ப் பேசி விளையாட்டாய்க் காலம்போக்க எண்ணியிருக்கின்றீர்களோ? நல்லது! நல்லது! உலகத்தோர் தன்னயம் பாராட்டினால் நாமும் அப்படியே யிருக்கவேண்டுமோ? ஒருவன் நமக்குக் கேடு செய்தால், நாமும் அவனுக்குக் கேடுசெய்யவேண்டுமோ? இதென்ன! மதியீனம். நம் எஜமான் நமக்கிட்ட கட்டளையின்படி நாம் 'நிஷ்காம்மிய கர்மம் செய்வோம்" என்றது. அதற்கு மறுமொழியாக மற்றொரு மேகம்: "இதென்ன இப்படிச் சொல்லுகிறாய்? நான் தண்ணீராகும்போது இவ்விராஜதானியின் எல்லாப் பாகங்களிலுமுள்ள மனிதர் என்னை ஆகாரமாகப் புசித்துவிடுகிறார்கள். என்னமோ, தங்கள் ஜீவன் பிழைக்கவே அப்படி செய்கிறார்கள். அம்மட்டில் சரிதான். ஆனால், கடப்பை ஜில்லாவுக்கு சமீபத்தில் சில விடங்களில் இம்மனித பூதங்கள் என்னை விழுங்குவதன்றித் தீயினால் சுட்டுக் காய்ச்சுகிறார்கள்,* அப்போது எனக்கு சகிக்கக் கூடவில்லை. அதனால்தான் அவர்களைத் துன்பப்படுத்த வேண்டுமென்று சொன்னேன்" என்றது. அது கேட்டு முன் பேசிய மேகம் "நீ சொல்வது சரியல்ல. எப்படியென்றால், எல்லா மனிதரும் உன்னைச் சுடாமல் கடப்பை முதலிய சில இடங்களிலுள்ளவர்கள் மட்டும் உன்னை ஏன் சுடவேண்டும்? யோசித்துப்பார். நீயோ மிகநல்லவன்; ஆனால் சகவாச தோஷத்தால் கெட்டுப் போகிறாய். நீ மட்டும் சுத்தமாயிருந்தால் உன்னைச் சுடுவார்களா! நீ காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரியும்போது வியாதிகொண்ட அனேக துன்மார்க்கருடன் சினேகித்து அவர்களுடன் கலந்து செல்லுகிறாய். அதனால்தான் உன்னைச் சுடுகிறார்கள். உன்னைத் துன்பப்படுத்த வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமல்ல. ஆனால் உன்னுடன் கூடியிருக்கும் துன்மார்க்கரைக் கொன்று உன்னைச் சுத்தமாக்க வேண்டுமென்பதுவே அவர்களுடைய கருத்து. இதனால் உலகத்திலுள்ள மனிதரெல்லாம் மிகவும் நல்லவர்களென்றும், அவர்கள் செய்கையெல்லாம் நற்செய்கைகளென்றும், நல்லகாரணம் பற்றியே எல்லாச் செய்கைகளும் செய்வார்களென்றும், நான் சொல்லவில்லை. நீயிப்போது சொல்லிக்கொண்ட முகாந்தரம் சரியானதல்லவென்றுதான் நான் சொல்ல வந்தேன்" என்றது.

உடனே யெல்லா மேகங்களும் இப்போது பேசிய மேகத்தைப்பார்த்து "நீ சொல்வது சரிதான். ஆனால் எங்களை என்ன செய்யச்சொல்லுகிறாய்"? என்று கேட்டன. அந்தமேகம்: "நான் சொல்வதைக்கேளுங்கள். பலனையிச்சிக்காமலும் பிறர் குற்றம் நாடாமலும் நல்லவர் பொல்லாதவர் என்று பாராமலும், நன்மையேசெய்யவேண்டுமென்பது நமக்கு எஜமான் இட்ட கட்டளை. அப்படியே ஒருகாரியம்செய்வோம். அதோ பாருங்கள். பயிர்வகைகளெல்லாம் தண்ணீரில்லாமல் வாடியிருக்கின்றன. கோடையின் வரட்சியால் கிணறுகளிலும் [illegible] ஊற்று இல்லாமல், கவலையால் தண்ணீர் இறை[illegible]த விட்டு கிருஷிகர் ஏற்றத்தில் சிறுபட்டைகளைகட்டி வேர்வைசொட்டப் பகல் முழுவதும் இறைத்தும் ஐந்தாறு பாத்திகளும் இன்னும் நனையவில்லை. புற்பூண்டுகளெல்லாம் தாய் முகங்காணாத பிள்ளைபோல் மழையை யெதிர்பார்த்திருக்கின்றன. பெரிய மரங்களும் வெயிலின் கொடூரத்தால் பட்டுப்போகின்றனவென்றால் புற்பூண்டுகள் உலர்ந்து போவதற்குச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால், இவைகளுக்கேதாவது உபகாரம் செய்ய யோசிப்போம்," என்றது.

உடனே மேகங்களெல்லாம் ஆகாயத்தில் பரவி தீக்ஷண்ணியமான சூரியகிரணங்களை மறைத்துப்பயிர்களுக்கும் புல்தரைகளுக்கும் குடைபிடித்தது போல் குளிர்ந்த நிழலைக்கொடுத்தன. இதனால் புற்பூண்டுகளும் பயிர்களும் வெகு நன்றியறிதலுடன் மேகங்களை ஏறெடுத்துப் பார்த்து புன்சிரிப்புக்கொண்டன. புஷ்பங்கள் சந்தோஷமாய் மலர்ந்தன. இதைப்பார்த்தவுடன் மேகங்களுக்கு அவைகள் மேல் இரக்க முண்டாகி மழைத்துளிகளாக மாறி அவைகள்மேல் இறங்கின. சூரியன் தன்கொடுமையைக் காட்டி மேகத்தையும் மழையையும் சிதறச்செய்ய பிரயாசைப்பட்டும் முடியாததால் கோபங்கொண்டு கர்ச்சித்து இடியுண்டாக்கினான். மழையோ அதற்கு அஞ்சவில்லை. நிலங்குளிர மழைபெய்தது. கிருஷிகர் 'இந்த ஈரம் உழப்போதும்' என்றனர். தவளைகள் ஒன்று சேர்ந்து 'குறவை' யிட்டன. நீர்வாத்துக்கள் மழைத்தண்ணீரில் மூழ்கி மூழ்கி விளையாடிக்கொண்டிருந்தன. காக்கைகள் எல்லாம் தங்கள் தங்கள் சிறகுகளை உதறி உலர்த்திக்கொண்டு கா-காவென இங்கும் அங்கும் ஓடித்திரிந்தன; குளங்களிலிருந்து ஓடைகளில் எதிர்த்து ஏறிவரும் சிறுமீன்கள் ஓடைகளில் மழைத்தண்ணீர் குறைந்துபோக நீந்திப்போக முடியாமல் அங்கங்கே நின்றுபோயின; அவைகளைக்காக்கைகள் தம் இனத்தைக் கூவியழைத்து எல்லாம் பங்கிட்டுத் தின்பது வெகுவினோதமாயிருந்தது. மனிதர் புஞ்சைப்பயிர்கள் விதைக்கும் பொருட்டுக் கூட்டங்கூட்டமாய் மாடுகளை யோட்டிக்கொண்டு கலப்பைகளைச் சுமந்து சென்றார்கள். இப்படியாக எங்கேபார்த்தாலும் நிரம்பவும் சந்தோஷமுண்டாயிருந்தது.

பூமியில் விழுந்த மழைத்துளிகளோவெனில்; அனேகம் ஒன்று சேர்ந்து சிறு சிறு ஊற்றுக்களாகி

* இந்தப் பாகங்களில் நல்லதண்ணீர் கிடைப்பதில்லை யாதலால் விஷஜுரத்திற்குத்தப்பத் தண்ணீரை கொதிக்கக்காய்ச்சிக் குடிப்பதுவழக்கம்.

ஓடின. மண்ணின்மேல்உள்ள அழுக்கும்அசங்கியமும் கரைந்து சுத்தமாயிற்று; கல்லினுள் வசிக்கும் தேரைக்கு ஜீவன்வந்தது. சில ஊற்றுக்கள்மண்ணில்ஊறியும் கற்பிளவுகளில் இறங்கியும் கிணறுகளில்ஊற்றுக்கண்களுக்குச் சென்றன. பலஊற்றுக்கள் ஒன்றுசேர்ந்து சிறு ஓடையாயின. இவ்வோடையின் ஓரத்திலிருக்கும் செடி கொடிகள் செழுப்படைந்தன. ஓடையானது சில திரடுகளைச் சுற்றியோடி வருவதை நான் பார்க்கும்போது ஒருவேளை அது மறைந்தும், ஒருவேளை காணப்பட்டும் ஓடிவருவதால் அது 'கண்ணுமூச்சு' விளையாடுவதுபோலிருந்தது. முன் தொட்டியில் அடைபட்டிருந்தபோது தண்ணீர் சொன்னது போல் புஷ்பங்கள் அவ்வோடையை முத்தமிட்டன. பக்ஷிகள் தங்கள் பேடுகளுடன் மறுநாட் காலையில் அவ்வோடைக்குச்சென்று சிறகுகளை யடித்துக்கொண்டு சந்தோஷமாய்க் குளித்தன. ஓடையும் இப்படி உல்லாசமாய் நடந்துவரும்போது, சமீபத்தில் மற்றொரு ஓடைவருவதைக்கண்டு "தற்காலத்து ஜனங்கள் ஒற்றுமையினாலுண்டாகும் பயனை அறியவில்லை: நாம் நம்மினத்துடன் சேர்ந்திருந்தோமானால் நமக்கு அதிக பலம் உண்டாகும்" என்று நினைத்து அதனுடன் சேர்ந்து வாய்க்கால் ஆயிற்று. அதில் அனேக ஜனங்கள் ஸ்நானம்பண்ணி தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துப்போக சிலர் அதில் துள்ளி விளையாடும் மீன்களை வலை வீசிப் பிடித்துப் போவதையும் பார்த்தேன்.

சற்றுதூரம் இந்தக்கால்வாய் சென்றவுடன் அங்கே ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அதில்வாய்க்கால் சென்று நிறைக்க அது குளம் ஆயிற்று. கோடைகாலத்துக்கு தாகத்துக்கு உபயோகிக்கும் இத்தண்ணீரில் அனேக ஜனங்கள் 'கால்கழுவி,' அழுக்கு வஸ்திரங்களைத் துவைத்துஸ்நானம் பண்ணி அசங்கியப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்தத் தண்ணீர் "ஐயோ! நான் சந்தோஷமாசச்சுயேச்சையாய்க் காலங்கழிப்பதைவிட்டு இம்மனிதருக்குக் கோடைகாலத்தில் உபயோகப்படும்பொருட்டுஇவ்விடத்தில் அடைபட்டிருப்பதை உணராமல், இவர்கள் இப்படியென்னை அசங்கியப்படுத்துகிறார்களே! வர வர இவ்விந்துக்கள் தங்கள் 'மனுதர்மசாஸ்திரத்'தையும் மறந்துபோனார்களோ!! நான் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது ஒருவேளை என்னை அசுத்தப்படுத்தினாலும் போகிறதென்னலாம். நான் ஓரிடத்தில் நிலையடைந்தபின் என்மேல் துப்புவதும், அழுக்கு வஸ்திரங்களைப்போடுவதும் மெத்தஅநீதியன்றோ? இவர்களுக்கு எப்போது தான் புத்திவருமோ, நாராயணா!!" என்று மிக வருத்தத்துடன் கிலேசப்பட்டுக் கொண்டிருக்கையில், சில பள்ளர் வந்து குளத்தின் மடையைத் திறந்துவிடவே "நன்று, நன்று; பயிர்களுக்கு மத்தியில் சந்தோஷமாய்ப் பாய்ந்து விளையாடலாய்" என்று சொல்லிக்கொண்டு, தண்ணீர் ஓடிற்று;

இப்படி வயல்களுக்கு உடேபோன ஓடை 'வயல்களில் பாய்ந்தபிற்பாடு, முன் தான் விட்டுப்பிரிந்த வாய்க்கால்', அருகில்வர, சம்பத்துடையவர் தம்மினத்தாரில் வறுமையடைந்திருப்பவர்களைக்கண்ணெடுத்தும் பாராமல் தள்ளிவிடுவதுபோலல்லாமல், அது தன்னுடன் சேர்த்துக்கொண்டது. கொஞ்ச நேரத்தில் வாய்க்கால் சற்று தூரம் சென்றவுடன், அங்கு ஓர் அணை கட்டியிருக்கக்கண்டு, அது நூல் நூற்கும் யந்திரத்தின் சக்கரத்தைச் சுற்றுவதற்காகச் செய்திருந்த தந்திரமெனத் தெரிந்து, அந்தச் சக்கரத்தின் மேல் பாய்ந்து தள்ளிச் சுற்றி இயந்திரத்தை ஓட்டுவித்து அனேகமாயிரம் ஜனங்கள் செய்யும் வேலையைத் தானேசெய்துமுடித்து அப்பால் அவ்வழியேசிலநாள் போய்க்கொண் டிருக்கையில் இன்னொரு கால்வாயைக்கண்டது. இரண்டுகால்வாய்களும் சினேமாய்ச் சேர்ந்து நதியாகி, "இப்போது மனிதருக்கேதாவது உபகாரம்செய்யலாமா" வென யோசித்தது. அங்கே நானாவிதமான சரக்குகளை ஒருஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக்கொண்டு போவதற்காகச் செய்யப்பட்ட பெரிய கப்பல்கள் பாய்விரித்து நிற்பதைப்பார்த்து, அக்கப்பல்களைச்சுமந்து சென்று திரும்பவும் அவைகள் இருப்பிடம்சேர்த்தபின், அவ்வழியாய்ப் போய்க்கொண்டேயிருந்தது. ஒருநாள்சற்றுகவலையீனமாய்க் கொஞ்ச தூரம்போகவே வழிதெரியாமல் தடுமாறி சமுத்திரத்தில் விழுந்து விட்டது.

ஐயோ! பாவம்! ஜனங்களுக்கு இவ்வளவு பிரயோஜனமாயிருந்த நதியின் கெதியிப்படியாயிற்றேயென்னும் துக்கத்துடன் நான் என் வீட்டுக்கு வந்துசேர்ந்தேன். அதன்பின் சில நாட்கழித்துப் போய்ப்பார்த்தும், சமுத்திரத்தில்விழுந்தநதி திரும்பக்கரையேறப் பார்க்கவில்லை. ஆனால் அங்குநின்றவர்களில் ஒருவர் "சூரியன் வித்தைசெய்வதில்கெட்டிக்காரன்; அவன் சமுத்திரத்தில் விழுந்த நதியைப் புயல்காற்றுடன் மேகங்களிலேற்றி மலைகளுக்குக் கொண்டுபோகிறான்" என்றார். "அப்படியானால் என்கண்ணுக்குத் தெரியவில்லையே." என்று சொன்னேன். அதற்கு அவர் "நீயுன்வீட்டில் ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் வார்த்து சூரியனுக்கு முன்பாக வைத்திரு; சில நாள் சென்றபின் சூரியன் செய்யும் வித்தை உனக்குத்தெரியும்" என்று சொன்னார். அவர் சொன்னபடியே வைத்தேன். ஒரு வாரத்தில் பாத்திரத்தில் தண்ணீரே இல்லை. அது எப்படி காணமற் போயிற்றென்றும் எனக்குத் தெரியவில்லை.

சினேகிதர்களே! நீங்கள் சொல்லமாட்டீர்களா?

உங்கள் அன்புள்ள,

முத்தண்ணா.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

எனது சின்னஞ்சிறு நேசர்களே! இந்தவிசை நமது பக்கத்துக்கெழுத நம் தாதாவும், துட்டியண்ணாவும் முன்வந்திருக்கிறார்கள். அவர்கள் நமக்கு பழைய சிநேகிதர்களாதலால் அவர்கள் எழுதியிருப்பதைப் பற்றி நான் ஒன்றும் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை. ஆனால் உங்களோடு வேறு விஷயமாக ஒரு வார்த்தைசொல்ல வேண்டி யிருக்கிறது. இந்தமாசத்து விவேகசிந்தாமணியில் 'முத்தண்ணா' என்னும் ஒரு பெரிய தோழர் 'பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு உபயோகமாக' 'தண்ணீர் சொல்லிய தன் வரலாறு' என்று ஒரு விநோதமான சங்கதி யெழுதியிருக்கிறார். அந்தவிஷயம் இந்தப் பக்கத்துக்கு முன்னால் அச்சிடப்பட்டிருக்கிறது பாருங்கள். நான் உங்களை யழைக்கும்போதெல்லாம் 'என் சின்னஞ்சிறு நேசர்களே' என்று அழைப்பதால் நீங்களெல்லாரும் 'சிறுகுஞ்சுகள்' என்று நினைத்து அவர் அதிலடங்கிய சாஸ்திர மர்மங்கள்* உங்களுக்கு அர்த்தமாகாதென்று 'பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு' என்று பிரத்தியேகமாக எடுத்துக்கூறி எழுதியிருக்கிறார். நமக்குள் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்கள் இல்லை போலும்! அவர் பெரிய பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்களைச் சுட்டிச் சொல்லியிருக்கலாம். எப்படியிருந்தாலும் இருக்கட்டும்; இதைவாசிக்கும் நீங்கள் அந்த விஷயத்தையும் வாசித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லவே வந்தேன். உங்கள் மாயாண்டி.

நமது தாதா சொல்லும் கதைகள்.

பிள்ளைகளே! பெண்மணிகளே!

இன்றைக்கு என்தங்கை முதல்முதல் பள்ளிக்கூடம்போன சங்கதிகளைச்சொல்ல இருந்தேன். இது கார்த்திகை மாசமாய் இருப்பதனால் கனமழை பெய்தால் வெளியில் உங்களை இட்டுக்கொண்டு உலாவப் போகலாம். நல்ல வேடிக்கைகளைக் காட்டலாம் என்றும் நினைத்திருந்தேன். மழை பெய்யாமல் வெளுத்துப் போய்விட்டது. பயிர் பச்சைகளெல்லாம் வதங்கி இருக்கின்றன. காற்றும்விஷக்காற்றாக இருக்கிறது. ஆகையால் இங்கே வாருங்கள். இந்தத் திண்ணையின் மேல் வரிசையாக உட்காருங்கள். இப்போது சாயரக்ஷை ஆகையால் உங்களுக்குக் குளிர் எடுக்குமோ? ஆனாலும் என்ன? இந்தப் படுதாவைத் தொங்க விடுகிறேன். குளிருக்கு அடைப்பாக இருக்கும். எனக்குக் கொஞ்சம் சலதோஷமா யிருப்பதால் அதற்காகக்கொஞ்சம் அவல் சம்பாதித்து வைத்திருக்கிறேன். உங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் தருகிறேன். அதைச் சாப்பிட்டுக்கொண்டே கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு ஊரிலே ஒருகுடியானவன் இருந்தான். அந்த ஊரிலே ஒருவருஷம் மழையில்லாமல் மானங்காய்ந்து போகவே தரையுங்காய்ந்துபோய்ப்பயிர்பச்சை ஒன்றும் விளையாமல் க்ஷாமகாலமாய் அன்னப்பிடி வெல்லப்பிடியாய் விட்டது. அப்போது அந்தக் குடியானவன், தன் வீட்டில், மூன்று வருஷத்திய பழங்கேழ்வரகின் கூழையன்றி, வேறொன்றுங் கிடைக்காமல் சஞ்சலப்படும்போது, ஒருநாள், "இந்த இழவு கூழை எத்தனை நாளைக்கு இப்படி உப்பிற்குக் கூட வழியில்லாமல் குடித்துத் தொலைக்கிறது" என்று எண்ணி, "மாமியார் வீட்டிற்காகிலும் போனால், நாலுநாளைக்கு நல்லபடியே பருப்பும் நெய்யும், பாலுந் தயிரும், காயுங்கறியும், பண்டும்பலகாரமுமாக, விதம்விதமாய் வேளைக்கொரு மாதிரியாகச் சாப்பிட்டு வரலாமே" என்றுநினைத்துப் புறப்பட்டுப்போனான். மாமியார் வீட்டில் அப்போது தான் புதுக்கேழ்வரகு விளைந்து அறுவடையாகி உலர்ந்து கொண்டிருந்தது. மருமகனைக் கண்டவுடனே, மாமியார் அந்தப் புதுக்கேழ்வரகைக் குத்தி நோம்பித் தாற்றி, எந்திரத்தி விட்டரைத்து, நல்ல பச்சரிசி நொய்யைக்கூடே கலந்து, வெகு நேர்த்தியாகக் கூழாக்கிக் காலையில் மோர் விட்டுக் கொடுத்தாள். பகலில் களிமொத்தை சமைத்துக் கொடுத்தாள். இரவில் நல்ல வெல்லம் கலந்து அதிமாதுரியமான அடையாகத் தட்டிக்கொடுத்தாள். அதைக்கண்டு, அந்த மருமகன், அந்த அடையைக் கூடத்தின் நடுவிலே வைத்து, அதை மும்முறை சுற்றிவந்து "ஓ! கேழ்வரகே! கேழ்வரகே! உன்னுடைய பெருமையே பெருமை. இன்று காலையில் நீராகாரமாக இருந்தாய்: இன்று பகலில் இலிங்காகார மடைந்தனை: இன்றிரவிலே சக்கராகாரமாயினாய். ஆ! ஆ! உன்னுடைய சக்தியே சக்தி!!" என்று புகழ்ந்தனனாம்.

* மர்மங்கள் — இரகசியங்கள்.

கேட்டீர்களோ! இரண்டு மூன்று வருஷமாய் மழையில்லாமல் மானம் காய்ந்துபோன படியால் உங்களுடைய அண்ணன் மார்கள் இப்பொழுது தங்கள் மாமியார் வீட்டுக்குப் போனால் நீராகாரமான கேழ்வரகு கிடைப்பது கூடக் கஷ்டந்தான். அது கிடக்கட்டும். இப்பொழுது 5-மணி தானே ஆகிறது. இன்னும் பொழுது இருக்கிறதே. ஒருவன் தன்னுடைய பிள்ளைகளின் குணநிசயத்தைக் கண்டறிந்த விநோதமான கதையொன்று சொல்லுகிறேன். பேசாமல் இருங்கள்.

ஒரு செல்வவான் தனக்குத்தள்ளாமை மேலிட்ட படியினாலே சாகுங்காலம் சமீபிப்பதை யறிந்து தன்னுடைய சொத்துக்களையெல்லாம் தன் பிள்ளைகள் மூவருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு ஒரு வைர மோதிரத்தை மாத்திரம் கையில் வைத்துக்கொண்டு அம் மூவரையும் அழைத்து "என்னுடைய அருமை மைந்தர்களே! இன்று முதல் மூன்று மாதத்திற்குள்ளாக உங்கள்மூவரில் எவனொருவன் பெருந்தன்மையான ஒருகாரியஞ் செய்கிறானோ அவனுக்கு இந்த மோதிரத்தைக் கொடுக்கப் போகிறேன்" என்று சொன்னான். மூன்றுமாதங் கழித்து மூத்த குமாரன் ஒருநாள் தகப்பனிடம் வந்து "அண்ணா! கொஞ்ச நாளைக்கு முன்னே முகமறியாத ஒருவன் என் கையில் பற்றுச்சீட்டு ஒன்றும் பெற்றுக் கொள்ளாமலே ஒரு பணமுடிப்பைக் கொடுத்து வைத்தான். அவன் மறுபடியும் வந்து கேட்டபோது, அவன் கொடுத்து வைத்ததைக் கொடுத்தது கொடுத்தபடியே அவன் கையில் ஒப்பித்தேன். அதற்காக அவன் ஆநந்தங் கொண்டு எனக்கு ஒரு வெகுமானஞ்செய்ய வந்தான். நான் அந்த வெகுமானத்தையும் வேண்டாமென்று மறுத்துவிட்டேன்." என்று சொன்னான், தகப்பன் "நீ செய்தது நியாயமான காரியம்" என்றான்.

இரண்டாவது பிள்ளை "தகப்பனாரே! நான் ஒரு ஏரிக்கரையின்மேலே போய்க்கொண்டிருக்கும்போது ஒரு குழந்தை அந்த ஏரியிலே தவறி வீழ்ந்து விட்டது. அப்போது நான் பிராணனுக்குத் துணிந்து, ஏரியில் ஒரேகுதியாகக் குதித்து அந்த குழந்தையை எடுத்து வந்து கரையின்மேலே தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்த தாயினிடத்திலே கொடுத்தேன். இது ஒரு பெருந்தன்மையான செய்கை யல்லவா?" என்று கேட்டான். அதற்குத் தகப்பன் "இல்லை யில்லை. அந்தத் தறுவாயில் எப்படிப்பட்ட சண்டாளனாயிருந்த போதிலும் அந்தக்காரியஞ் செய்வான். இது மனிதருக்கு சுபாவமான குணந்தானே" என்றான்.

பிறகு கடைக்குட்டியாகிய மூன்றாவது புதல்வன் "அப்பா! ஒருநாள் இரவில் நான் ஒருமலையிலிருந்து இறங்கி வரும்போது எனக்கு சன்மப் பகையாளியாகிய ஒருவன் அந்த மலையில் செங்குத்தான ஒரு பாறையின்மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் சற்று இப்படி யப்படி தூக்கத்தில் அசைந்தாலும் பக்கத்திலே பாதாளம்போலிருந்த பள்ளத்திலே விழுந்திருப்பான். அவனை நான் அதிஜாக்கிரதையுடனே எழுப்பி அபாயமில்லாத வேறொரு இடத்தில் கொண்டுபோய் விட்டேன்" என்று சொன்னான். தகப்பனும் அந்த இளைய குமாரனைக் கட்டித் தழுவிக்கொண்டு "என்னருமைச் செல்வனே! மோதிரம் உனக்கே உரியது" என்றுசொல்லி மோதிரத்தை அவன் கையிலே கொடுத்தான்.

ஆயிற்றா. இதிருக்கட்டும். நீங்கள் சில சமயங்களில் உங்கள் தம்பிமார்கள் ஒரு சுவரின் மேல்,சாரமணையின் மேல், மரத்தின் மேல் ஏறி இருக்கும்போது "தகப்பனாரிடத்தில் சொல்லுகிறேன்" என்றுபயங்காட்டுகிறீர்கள். இனிமேல் அப்படிச்செய்யவேண்டாம். இறங்கிவிட்ட பிற்பாடு வீட்டில்சொல்லி 'அடிமுட்டி.' வையுங்கள். முன்னடி சொன்னால் மோசம்.

சித்திரத்தொழிலில்பேர்போனவராகிய சர்.ஜேம்ஸ்தார்ன்ஹில் என்பவர் சீமையிலே 'ஸேன்ட் பால்' என்னும் ஆலயத்திலே கோபுரத்தின் உட்புறத்திலே சித்திரந்தீட்டிக்கொண்டிருந்தார்.ஒருநாள் அப்படித் தீட்டிக்கொண்டிருக்கும்போது தாம் எழுதிய சித்திரத்தின் உருவம் எட்ட இருந்து பார்த்தால் என்னமாய்க் காணப்படுகின்றது, பார்க்கலாம் என்று ஒவ்வொரு அடியாகப் பின்புறத்திலே ஒற்றிப்போனார். எழுதியிருந்த சித்திரத்தின் மேலே நினைவாயிருந்தபடியினாலே தமக்குப் பின்புறத்திலே பள்ளமென்றும் இன்னும் ஒரு அடி அந்தப் புறத்திலே எடுத்து வைத்தால் கீழே விழுந்து சின்னபின்னமாய்ப் போவோமென்றும் அவருக்கு நினைவில்லை. அப்பொழுது படத்தின் அருகிலிருந்த அவருடைய கையாளானவன், ஐயோ! பாவம், இன்னும் ஒருஅடி எடுத்து வைத்தால் விழுந்து விடுவாரே என்று அஞ்சி உடனே அருகிலிருந்த வர்ணத்தை வாரி படத்தின் மேலே ஒரு புறத்தில் ஊற்றப்போனான்; அது கண்ட உடனே அந்த சித்திரகாரர் "அடடே! என்ன காரியஞ் செய்கிறாய்" என்று கோபித்துக் கொண்டே அவன் அருகில் ஓடினார். அப்போது அந்தக் கையாளானவன் "ஐயா! என்னை மன்னிக்கவேண்டும். கேளுங்கள், தாங்கள் இன்னும் ஒரு அடி பின்னே எடுத்துவைத்தால் விழுந்து விடும்படியான அபாயகரமான நிலையிலிருக்கும்போது, பத்திரம்! பத்திரம்! என்று எச்சரிக்கைசெய்ய எத்தனித்தால் "தாங்கள் அலறுண்டு எப்படியும் விழுந்திருப்பீர்கள். ஆனதினாலே இந்த உபாயஞ் செய்தேன்" என்று சொன்னான். அதுகேட்டு அவர் அதிக சந்தோஷமடைந்தார். நம்முடைய எசமானர் உயிர்தப்பினாரே என்று அந்த ஆளுக்கும் அதிக திருப்தி உண்டாயிற்று.

பார்த்தீர்களா! அந்தசமயத்தில் அந்தஆள் என்ன உபாயம் செய்தான். நல்லது, விளக்கு வைக்கிற சமயம் ஆய்விட்டது! உங்கள் வீட்டில் தேடுவார்கள். போய்வாருங்கள்.

கிழவன்.

துட்டியண்ணாகடிதம்.

என் அன்புள்ள சிறுதோழர்களே! தோழிகளே!

சென்றதடவை உங்கள் சமுகத்தில் வந்து உங்களோடு கூடிக்கலந்து சந்தோஷிக்க நான் தவறிப்போனதற்குக் காரணம் இன்னதென்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே. நமதன்பர் மாயாண்டியும் சொல்லியிருப்பாரென்று நம்புகிறேன். இவ்வருஷத்தில் எனக்கிருந்த பரீக்ஷை வேலைகள் முந்தியநாளோடு முடிந்தன. இனிமேல் எனக்கு ஸாவகாசம்தான். எனக்கு முன்னேயே உங்களோடு கூடிக்களிக்க நம்முடைய தாதா, மாயாண்டி முதலிய பெரிய நண்பர்கள் வந்திருப்பார்களாகையாலே நான் அதிகநாழி உங்களோடு உரையாடி விளையாடிக்கொண்டிருக்கத் தகாது. உங்களோடு ஸம்பாஷியா விட்டாலும் மனது கேட்கவில்லை. கள்ளமில்லாத உள்ளமுடைய பிள்ளைகளாகிய உங்களோடு, கண்டதைக் கேட்டதை உண்டதை உடுத்ததைச் சொல்லாதநாள் எனக்குப் பொல்லாத நாளே. உங்களுடைய அன்பும், அமைதியும், அடக்கமும் தோன்றும் அழகிய முகத்தைக் காணாதநாள் வீணானநாள். உங்களோடு உரையாடி விளையாடிப் பழகிய நாளே அழகியநாளாம்.

இந்தத்தடவை உங்களுக்குச் சொல்லுவதற்கு இவ்வூரில் பலவிடங்களில் நடந்த பரீக்ஷை சங்கதிகளைப் பார்க்கிலும் வேறு விசேஷ சங்கதிகள் என்னிடத்தில் ஒன்றும் இல்லை. அந்தப் பரீக்ஷைக் கூடங்களில் அரும்புகட்டாத பத்துவயதுப் பாலன்முதல் அடியும் நுனியும் களைத்த ஐம்பது வயதுக் கிழவன் வரையில் பரீக்ஷைகொடுக்க வந்திருந்த அதிசயமும் பரீக்ஷைக்குக் கொடுக்கும் பிரச்னைப் பத்திரங்களில் பரீக்ஷகர்களில் சிலர், அந்தப் ப்ரச்நங்களில் சிலம்பங்காட்டிய சிப்பாய்த் தனமும், அப்படிப்பட்ட கேள்விகளைப் பார்த்தவுடனே, திண்ணை தூங்கித் தெருவிலாடி, வம்புபேசி வாயாடி, வாத்தியார்களை இகழ்ந்து காலம்போக்கிய சில அலங்கார வித்தியார்த்திகள் கெர்ப்பங்கலங்கி, ஆடுதிருடின கள்ளன்போலே அப்புறம் இப்புறம் பார்த்து மருள மருள விழித்து, குண்டிதேயக் குந்தியிருந்து கொட்டாவிவிட்டு, கோட்ஸூம், பூட்ஸூம், வாட்சும், ஹாட்ஸூமாகக் கோலஞ்செய்து கோலாகலஞ் செய்துவிட்டுப்போன வேடிக்கையும் வெளி ஜில்லாக்களிலிருந்து பரீக்ஷைக்குப் பணங்கட்டி இச்சென்னையில் பரீக்ஷை கொடுக்கவந்த வித்தியார்த்திகளிருவரில் ஒருவர் பரீக்ஷை கொடுக்கவேண்டிய தினத்தில் காலையில் 9-மணி முதல் சென்னைக் கிறிஸ்டியன்காலீஜ் இன்ன இடத்திலிருக்கிறதென்று அறிய முடியாமல் உச்சியில் சூரியன்வந்து சரியாய் 12¾ மணிக்குக்கிறிஸ்டியன்காலீஜ் இன்னதென்று கண்டுபிடித்த திறமையும், மற்றொருவர் எப்-ஏ. பரீக்ஷை கொடுக்கவேண்டியவர் மெட்ரிகுலேஷன் பிள்ளைகள் இருக்கும் கூடத்தில் பரீக்ஷைக்கு வராமலிருந்த ஒருவனுடைய ஸ்தானத்தில் உட்கார்ந்து மெட்ரிகுலேஷன் ப்ரச்னைகளுக்கு விடையெழுதிக்கொடுத்து வெகு சந்தோஷத்தோடு வெளியில்வந்து, பின்பு தான் செய்த தவறு தெரிந்து விசனப்பட்ட விந்தையும், அப்பப்பா! நான் என்ன சொல்வேன்! வெகுவினோதமாயிருந்தன. இன்னும் சில விசேஷ சமாசாரங்கள் இந்தப் பரீக்ஷைகளைப்பற்றியே பேசுவேன்; எனக்கு ஊருக்குப் போகவேண்டிய அவசரம் அடித்துத் தள்ளுகிறது. இந்தவேளையில், எனக்குமுன்னேயே தங்கள் தங்கள் ஊருக்குப் போயிருக்கும்நண்பர்கள் எழுதும்கடிதங்களும் வந்து குவிகின்றன. நான் ஊருக்குப் போக இருக்கிறேனென்று தெரிந்து என்னிடம் வார்த்தைசொல்லி விடைகொடுக்க வரும் இஷ்டர்களும் பலர். ஆதலால் அன்புள்ள சிறு நண்பர்களே! நான் இம்முறை இவ்வளவில் நிறுத்தி, கும்பகோணத்திற்குச் சமீபத்திலிருக்கும் என்னுடைய சகோதரரிடம்போய் அங்கு சிலநாள் இருந்துவிட்டு விடுமுறை கழிந்தவுடனே மறுபடியும் உங்களிடம் வந்துவிடுவேன். நான் போகும் இடத்தில் நேரும் விசேஷங்களையும் ஸமயம் வாய்த்தால் உங்களுக்குச் சொல்லாம லிருக்கமாட்டேன். அதுவரையில் நம்மெல்லாரையும் பரம கருணாநிதியாகிய பகவான் பாதுகாத்தருள்வாராக. போய்வருகிறேன்.

உங்கள் அன்புள்ள
துட்டியண்ணா.

விசேஷக் குறிப்புகள்.

சென்னை நகர் ஸிவில்கோர்ட்டு. இந்த மாசம் பிறந்ததோடு சேர்ந்த முக்கியமான சம்பவம் ஒன்று என்னவெனில் இச்சென்னைமாநகரில் புதிதாய் ஒரு ஸிவில் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டதேயாம். சென்னையில் ஸ்மால்காஸ் கோர்ட்டை விட்டால் மற்ற லாவாதேவி வழக்குகளுக்கெல்லாம் ஹைகோர்ட்டு அசல் தரப்பைத்தவிர வேறுகோர்ட்டில்லை. இதனால் அற்ப சொற்பமான தொகைகள் சம்மந்தப்பட்ட

ஒழுங்கான ஸிவில் வழக்குகள் கிளம்புமாஞல், வழக்காளி தன்கேஸை ஹைகோர்ட்டிலே தாக்கல் செய்யவேண்டியதாயிருந்தது. 500, 200 என்று சொற்பத் தொகைகளுக்கு ஹைகோர்ட்டு அசல் தரப்பில் வழக்குக் கொண்டு வருவதென்ருல் கோர்ட்டுச் செலவு, வழக்கிலிருக்கும் தொகையைவிட அதிகமாகிறது. இது ஏழை வழக்காளிகளுக்குக் கஷ்டம் விளைப்பதாயிருக்கிறதென்றும் ஹைகோர்ட்டில் வேலை அதிகரித்து வருவதால் சொற்பத் தொகைசம்மந்தப்பட்டவழக்குகளை யெல்லாம் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் விசாரிக்க நிமித்தமின்றி, வெளிஜில்லாக்களி லிருக்கும் ஸிவில் கோர்ட்டுகளைப்போல் சென்னைக்கும் ஒரு ஸிவில் கோர்ட்டு நியமித்தால் ஹைகோர்ட்டில் இப்போதிருக்கும் வேலைகளின்பாரம் குறையுமென்றும், இப்புது ஸிவில் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது. இக்கோர்ட்டுக்கு ஸ்மால்காஸ் கோர்ட்டில் 2-வது ஜட்ஜாக விருந்த திவான்பஹதூர் பி. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் முதல் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிருர். இந்தமாசம் 1-வயில் இப்புது ஸிவில் கோர்ட்டு திறக்கப்பட்டு அன்று முதல் அதில்வேலை நடந்து வருகிறது.

ராஜா ஸர் இராமசாமி முதலியார் சத்திரம்.

இந்த மாசத்தில் நடந்த விசேஷ சம்பவங்களில் சென்னை பூந்தமல்லி ரோட்டில் ராஜா ஸர் சவலை இராமசாமி முதலியார்அவர்கள் கட்டிய புது சத்திரம் கனம் பொருந்திய கவர்னர் லார்ட் வென்லாக் அவர்களால் திறக்கப்பட்டது ஒன்று. அத்தருணம் இந்நகரிலுள்ள பல ஜனசமூகத்தவர்களும்வந்திருந்து எல்லாருக்கும் பொதுவாய் அவர் கட்டிவைத்த சத்திரத்துக்காகவும் அவருடைய மற்றதர்மங்களுக்காகவும் அவரைப்புகழ்ந்து பேசி அவருக்குப் பல சமூகத்தார்களுடைய நன்றியறிதலையும் தெரிவித்தார்கள். கடைசியில் வென்லாக்பிரபு ஒரு அரசமரமும், அவர் பத்தினி வென்லாக்பெருமாட்டி ஒரு வேப்பமரமும் அவர்கள் கையால் வைத்துத் தண்ணீருற்றிய பின் சத்திரத்தைத் திறக்கும் சடங்கு முடிவுக்கு வந்தது.

காங்ரெஸ் சபை.

இந்த வருஷத்து காங்ரெஸ் சபை நாளது௴ 28௳ புதன்கிழமை மத்தியானத்துக்கு மேல் அலஹபாத்தில் கூடப்படும். அம்மகாசபையில் அக்கிராசனாதிபதி ஸ்தானத்தைவகிக்க பார்லிமெந்து மெம்பராயிருக்கும் மிஸ்ட்டர் தாதாபாய்நௌரோஜி வர சரிப்படாமையாலும், இன்னும் தக்க சிலர்க்கு சௌகரியப்படாமையாலும், முதல் காங்ரெஸ் சபையின் அக்கிராசனாதிபதியாகிய பாரிஸ்டர் மிஸ்ட்டர் உமேஷ் சந்தர பொனர்ஜி யவர்கள் இந்த வருஷம் கூடும் காங்ரெஸ் சபையில் அக்கிராசனாதிபதி ஸ்தானத்தை வகிக்கத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிருர்.

மிஸ்டர் தாதாபாயி நௌரோஜி M. P.

பின்ஸ்பரி மாகாணத்தின் மத்தியபாகத்துக்கு பார்லிமெந்து மெம்பராகவிருக்கும் மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியவர்கள் எலெக்ஷனைப்பற்றி அவருடைய எதிரி கொடுத்த விண்ணப்பம் நாளது௴ 13, 14௳ களில் விசாரிக்கப்பட்டதில் மிஸ்டர் தாதாபாய் அவர்களுக்கும் அவருடைய எதிரி காப்டன் பென்டன் அவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வோட்டுச் சீட்டுகளையெல்லாம் ஜட்ஜிமுன்னிலையில் பரிசோதித்துப் பார்த்தார்கள். பரிசோதனை முடியு முன் காப்டன் பென்டன் அவருடைய விண்ணப்பத்தை வாப்ஸ் வாங்கிக்கொண்டதால் மிஸ்டர் தாதாபாய் அவர்களுடைய நியமனம் உறுதி செய்துவிடப்பட்டது. 14௳ சாயந்திரம்வரையில் நடந்த பரிசோதனையில் இருவர்பக்கத்து வோட்டுச்சீட்டுகளும் சரி தொகையாகவிருந்தன. மேல் பரிசோதனையில் காப்டன் பென்டனுக்கு ஒருசீட்டுக் குறைந்தாலும் மிஸ்டர் தாதாபாயுடைய மெம்பர் ஸ்தானம் உறுதிசெய்யப்படுவதோடு அவருடைய செலவு தொகைகளை யெல்லாம்கூட இவர் கொடுக்கவேண்டியதாக விருக்கும். ஆகையால் வோட்டுகள் சரிசமமாக வந்ததும் காப்டன் பென்டன் அவரவர்களுடைய செலவை அவரவர்கள் பொறுத்துக்கொள்கிறதென்று உடன்படிக்கை செய்துகொண்டு விண்ணப்பத்தை வாப்ஸ் வாங்கிக்கொண்டுவிட்டார். இந்தவிசாரணை சீக்கிரத்தில் முடிவாகாமலிருந்ததனுலே மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்குவர சரிப்படாமற் போய்விட்டது. இப்பொழுது பார்லிமெந்துசபையில் அவருக்குள்ள ஸ்தானம் உறுதிப்பட்டுப் போனதால் இனி அடுத்த ஜெனரல் எலெக்ஷன்வரையில் அவருடையஸ்தானத்துக்கு அபாயமில்லை.

ஜூரிவிசாரணை ஏற்பாடுவிஷயம்.

வங்காளத்து உதவிக்கவர்னர் ஸர் சார்லஸ் எலியட் அவர்கள் அவ்விராஜதானி வெளிஜில்லாக்களில் அனுஷ்டானத்திலிருந்த ஜூரிவிசாரணை ஏற்பாட்டை எடுத்துவிட உத்திரவு செய்து, உத்திரவு செய்த 5-நாளைக்குள் அப்படியே எடுத்து விட்டபடியால் அதைப்பற்றி அவ்விராஜதானியிலெங்கும் கல்லல் அதிகமாக விருக்கிறது. இதைப்பற்றி இராஜப்பிரதிநிதி யவர்களுக்குத் தெரிவித்தும் அவர் சாதகம் செய்யவில்லை யாதலால் கல்கத்தாநகரிலுள்ள சுதேச,அங்கிலேய ஜன சிரேஷ்டர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து ஷெரிப் மூலமாக முறைப்படி ஒரு பெரிய மகாநாடு கூட்டி கவர்ன்மெண்டார் செய்தது பிசகென்று ஆக்ஷேபித்து இந்தியா மந்திரியவர்களுக்கு இதைப்பற்றி மனுப்பண்ணிக் கொள்ளத்தீர்மானித்தார்கள். இதற்காகக்கூடியமகாநாடு நாளது௴ 20௳ சாயந்திரம் கல்கத்தா 'டவுன் ஹாலில்' கூடியது.

சென்னைத்து டிராம்வே.

சென்னையில் 'டிராம்வே' என்னும் வீதிச்சிற்றிருப்புப் பாதைகள் போட புதிதாய் ஒரு கம்பெனி யேற்பட்டு அதற்கு மூலதனம் சேர்த்து வருகிருர்கள். அக்கம்பெனியின் சேர்மாஞகிய மிஸ்ட்டர் உவில்லியம் டிக்பி ஸி.ஐ.இ. அடுத்தமாசத்தில்வேலை யாரம்பிக்க வேண்டுமென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிருர்.

ஸ்ரீ

விவேகசிந்தாமணி அனுபந்தம்.

திராவிடசப்ததத்வம்.

மரபியல்.

1. தமிழ்ச்சொற்கள் இயற்சொல், திசைச்சொல், வடசொல் என மூவகையாம்.

2. இயற்சொல் செந்தமிழ் நாட்டிலுண்டாய் வழங்குஞ் சொல்.

முற்காலத்தில் "வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின்றெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் உள்ளநாடு செந்தமிழ் நாடு" என்று சொல்லப்பட்டது. இக்காலத்திலோ சென்னபட்டண முதல் திருநெல்வேலிவரையிலும் கடற்கரையிலுள்ளநாடுகள், கோயம்புத்தூர், சேலம், சிற்றூரின் தென்பாகமும் கீழ்ப்பாகமும், செந்தமிழ் நாட்டுள் அடங்கியிருக்கின்றன.

3. திசைச்சொல் வேறு நாடுகளிலிருந்துவந்து செந்தமிழ் நாட்டில் வழங்குவது.

பழய இலக்கண நூல்களில் திசைச்சொல்லுக்கு அடியில் வருமாறு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது:—

செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிலிருந்தும் தமிழ்நாடு ஒழிந்த பதினெட்டு நாடுகளிலிருந்தும் வந்து செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல் திசைச் சொல்.

கொடுந்தமிழ் நாடுகளாவன:—

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்" [நன். விரு. ப. 243.]

"பன்னிருநிலமாவன:—பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனச் செந்தமிழ்நாட் ... னக்கொடுத் தென்கீழ்பான் முதலாக வடகீழ்பாலிறுதியாக ... தென்பாண்டி ன்க" [சேனவரையர். ப. 251.] இதுறசொன்ன

முதல் அருவாவடதலை வரையில் உள்ள பத்துநாடுகளும் மேற்காட்டியசெய்யுளிலுங்கூறப்பட்டிருக்கின்றன. பொங்கர், ஒளி என்னு மிரண்டு பெயர்க்குப்பதிலாய் வேணாடு புனனாடு என்னு மிரண்டுபெயர்கள் வந்திருக்கின்றன. இந்தப்பெயர்களில் வேணாடு என்பது திருவநந்தபுரத்தைச்சேர்ந்த தேசமெனத் தெரியவருகின்றது. புனனாடு காவிரிநாடு. ஆனால் பொங்கர்நாடு, ஒளிநாடு என்பன இவையெனத் தெரியவரவில்லை. வேறொரு அச்சுப்பிரதிகத்தில் பொங்கர் என்பதற்குப் பதிலாய் பொதுங்காநாடு என வந்திருக்கின்றது.

பூழிநாடென்பது மதுரைக்கருகிலுள்ள ஓர் பட்டணமும் அதனையடுத்த நாடுமென்பர் சிலர்.

அருவா அருவாவடதலை, சென்னபட்டண வரசாட்சிக்குள்பட வடதேசங்கள் போலும்.

தமிழொழிந்த பதினெட்டு நாடுகளாவன:—

"சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துழுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே" [கன். விரு. p. 243.]

4. வடசொல் வடமொழியிலிருந்து தமிழில்வந்து வழங்கும் சொல்; இது இருவகைத்து தற்சமம், தற்பவம் என.

5. தற்சமம் வடமொழிக்குந் தமிழிற்கும் பொதுவாகிய எழுத்துக்களாலமைந்து வேறுபாடில்லாது வடமொழியிலிருந்துவந்த பதங்கள்.

(உ-ம்.)	காரணம்	சரணம்	பாசகன்	வாரணம்
	கர்ணன்	சலகம்	பாபம்	வீரன்
	காநகம்	உத்தரம்	பரமன்	வரன்
	காசம்	அமரன்	தமாலம்	வசகம்
	குசம்	ஆபணம்	தபகன்	விமாநகம்

வடமொழியில் பும்லிங்கவிகுதியாகிய அஸ் என்பதை நீக்கி அதனிடத்தில் தமிழ் ஆண்பால் விகுதியாகிய அன் என்பதை வைப்பது வேறுபாடாகாது. மற்ற பால்காட்டும் விகுதிகள் வரும்பொழுதும் இவ்வாறே கொள்க.

6 தற்பவம் வடமொழியிலிருந்து வேறுபாட்டுடன் தமிழில் வழங்குஞ்ச...

தற்பவம்.	ஸம்ஸ்க்ருதம்
தற்பரன்	... தத்பர:
கற்பம்	... கல்ப:
பாவம்	... பாபம்
ஆவணம்	... ஆபண:
ஆதவம்	... ஆதப:
தேயம்	... தேஶ:
தயரதன்	... தஶரத:
புயம்	... புஜ:
தேயு	... தேஜஸ்
தேய்	... க்ஷி
மாதம்	... மாஸ:
தேதி	... திதி:
தெழி	... த்ருஷ்
கழும்	... கலுஷம்
அமிழ்து	... அம்ருதம்
கலுழன்	... கருட:
பீழை	... பீடா
சண்பகம்	... சம்பக:
விசாதி	... வ்யாதி:
பாரசி	... ஆதஸீ
கடிகை / கடிகாரு	... கடிகா
பகுதி	... ப்ரக்ருதி:
வடிவம் / படிமை	... ப்ரதிமா
பவளம்	... ப்ரவால:
பாகதம்	... ப்ராக்ருதம்
உருப்பசி	... ஊர்வஶீ
பருப்பதம்	... பர்வத:
இலக்குவன்	... லக்ஷ்மண:
வீடுமன்	... பீஷ்ம:
சதமன்	... ஶதமக:
நாரணன்	... நாராயண:
விண்டு	... விஷ்ணு:
கண்ணன்	... க்ருஷ்ண:
வண்ணம்	... வர்ண:
சுண்ணம்	... சூர்ணம்
பன்னி	... பத்நீ
சன்	... ஶங்க:
உகம்	... யுகம்
ஊகம்	... வ்யூஹ:
அந்தி	... ஸந்த்யா
அவை	... ஸபா
அமர்	... ஸமர:
அமண்	... ஶ்ரமண:
உவணன் / சுவணன்	... ஸுபர்ண:
ஆவணி	... ஶ்ராவணீ
ஏணி	... ஶ்ரேணி:
ஊசி	... ஸூசீ
ஊன் / சூன்	... ஸூநா
அத்தி	... ஹஸ்தீ
மத்து	... மந்த:
வட்டம்	... வ்ருத்தம்
நட்டம்	... ந்ருத்தம்
மட்டு	... மாத்ரம்
வட்டி	... வ்ருத்தி:
அக்கு	... அக்ஷ:

சங்கு	... ஶங்க:
அச்சு	... அக்ஷ:
கச்சு	... கக்ஷ்யா
சுக்கு	... ஶுஷ்க:
காப்பியம்	... காவ்யம்
கட்டியம்	... கத்²யம்
நிச்சம்	... நித்யம்
விச்சாதரர் / விஞ்சையர்	வித்³யாத⁴ரா:
உஞ்சை	... உஜ்ஜயிநீ
அமைச்சர்	... அமாத்யா:
கச்சோதம்	... க²த்³யோத:
பரிசம்	... ஸ்பர்ஶ:
கந்து	... ஸ்கந்த⁴:
நாணம்	... ஸ்நாநம்
நேசம்	... ஸ்நேஹ:
மிருதி	... ஸ்ம்ருதி:
தோம்	... தோ³ஷ:
தேம்	... தே³ஶ:
நாம்	... [illegible]

*ஏம்	... ஹேமம்
கைலை	... கைலாஸ:
கோதை	... கோ³தா³வரீ
கைதை	... கேதகீ
பெண்ணை	... பிநாகிநீ
ஆணை	... ஆஜ்ஞா
இராணி	... ராஜ்ஞீ
விண்ணப்பம்	... விஜ்ஞாபநம்
மென்மை	... ம்ருது³த்வம்
கருமை	... மலிநத்வம்
திண்மை	... த்³ருட⁴த்வம்
வன்மை	... ப³லித்வம்
வெண்மை	... த⁴வளத்வம்
பசுமை	... ஹரித்த்வம்
கருமை 'கறுப்பு	காளித்வம்
ஷை-'பெருமை'	மஹத்வம்
தண்மை	... ஶீதத்வம்
அத்தி	... ஹஸ்தி
ஆலத்தி	... ஆரார்த்தி:
உத்தி	... யுக்தி:
சத்தி	... ஶக்தி:

7. உயிர் தானே உச்சரிக்கப்படும் எழுத்து.

8. மெய் உயிரெழுத்தின் உதவியாலுச்சரிக்கப்படும்எழுத்து.

9. வல்லெழுத்து வன்மையுடன் உச்சரிக்கப்படும் எழுத்து.

10. மெல்லெழுத்து மென்மையுடன் உச்சரிக்கப்படும் எழுத்து.

11. இடையெழுத்து மிக்க வன்மையும் மிக்க மென்மையுமின்றி உச்சரிக்கப்படும் எழுத்து.

* இச்சொல் மஹாராஷ்டிர பாஷையிலும் இப்பொருளில் வழங்கி வருகின்றது.

12. ஆய்தம் மூன்றுபுள்ளி வடிவினதாய் வடமொழியிலுள்ள ஹகாரத்தைப்போலுச்சரிக்கப்படும் எழுத்து. ஆயுதம் - படை; வரிவடிவில் படையைப்போலிருப்பதனால் அதற்கு ஆயுதமென்று பெயர் வந்தது. ஆயுதம் ஆய்தமென மருவியது.

13. மாத்திரை ஓரிமைப்பொழுதி லுச்சரிக்கப்படும் எழுத்தின் அளவு.

14. குறில் ஒரு மாத்திரையுள்ள எழுத்து அதற்குக் குற்றெழுத்து எனவும் பெயர்.

15. நெடில் இரண்டு மாத்திரையுள்ள எழுத்து; அதற்கு நெட்டெழுத்து எனவும் பெயர்.

16. அளபெடை மூன்றுமாத்திரையுள்ள எழுத்து.

17. பகுபதம் பலவுறுப்புக்களடங்கிய சொல்.

18. பகாப்பதம் ஓரேயுறுப்புள்ள சொல்.

19. பகுதி சொல்லின் முதனிலை.

20. விகுதி சொல்லின் ஈற்றுறுப்பு.

21. இடைநிலை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் காலங்காட்டிநிற்கும் உறுப்பு.

22. சாரியை* பகுபத வுறுப்புக்களுக்கிடையில் வரும் எழுத்து அல்லது அசை.

23. அசைநிறைவிகுதி சொற்களுக்கு ஈற்றிலே பொருளில்லாது வரும் எழுத்து அல்லது அசை.

(உ-ம்.) முன்னே—முன், ஏகாரம் பொருளில்லாது ஈற்றிலேவந்தது.
உள்ளே—உள், ,, ,, ,,
மேலே—மேல், ,, ,, ,,
கீழே—கீழ், ,, ,, ,,

* "சாரியை என்றதன்பொருள் வேறுநின்ற இருமொழியும் தம்மிற் சார்தற்பொருட்டு இயைந்துநின்றது என்றவாறு" என்று கூறுவர் நச்சினார்க்கினியர் [தொல்-எழு-சூத்-118.]

மேன—மேன், மேல் என்பதன் ஈற்று லகரம் னகரமாய்த் திரிந்தது, அகரம் ஈற்றில் வந்தது. "பால்பிரிந்திசையா வுயர்திணைமேன" [தொல்-சொல்-சூ-57.]

கிளவியான—கிளவியான், ஆன் என்னும் மூன்றும்வேற்றுமையுருபின் ஈற்றில் அகரம் வந்தது. "செப்பேவழீஇயினும்வரைநிலையின்றே, அப்பொருள்புணர்ந்த கிளவியான" [தொல்-சொல்-சூ-15.]

தேரியுமோர்க்கே—தெரிந்தோர்க்கு, கு என்னும் நான்காம் வேற்றுமையுருபின் ஈற்றில் ஏகாரம் வந்தது. "திரிபிடனிலவேதேரியுமோர்க்கே" [தொல்-சொல்-சூ-101.]

ஆசிரியர்க்க—ஆசிரியர்க்கு, குவ்வுருபி னீற்றில் அகரம் வந்தது. "கடிநிலையின்றேயாசிரியர்க்க" [தொல்-சொல்-சூ-108.]

பெயர்க்குந்து—பெயர்க்கும்; பெயர்க்கும் என்னும் பெயரெச்சத்தி னீற்றில் உவ்விகுதிவர, மகரம் நகரமாய்த்திரிய நகரத்திற்கும் உகரத்திற்கும் இடையில் தகரந் தோன்றியது.

24. குற்றெழுத்தோடு காம் என்பதும் காரம் என்பதும், நெட்டெழுத்தோடு காரம் என்பதும் சேர்ந்து அவ்வவ்வெழுத்துக்களுக்குப் பெயராம்.

(உ-ம்.) ககரம், ககாரம், சகரம், சகாரம், அகரம், அகாரம், உகரம், உகாரம்.

25. விகாரம் இருக்கும் நிலைமாறுதல். அது மூவகைத்து தோன்றல், திரிதல், கெடுதல் என.

26. தோன்றல் இல்லாதது உண்டாதல்; இதனை வடமொழியில் ஆகமம் என்பர்.

27. திரிதல் ஒன்று வேறொன்றாய் மாறுதல்; இதனை வடமொழியில் ஆதேசம் என்பர்.

28. கெடுதல் உள்ளது அழிந்துபோதல்; இதனை வடமொழியில் லோபம் என்பர்.

29. கண்டியம் கழுத்தில் பிறக்கும் எழுத்து.

30. தாலவியம் தாலுவில் பிறக்கும் எழுத்து; தாலு - அண்ணத்தின் அடியின் இருபக்கம்.

31. மூர்த்தநியம் அண்ணத்தின் மேற்புறத்தில் பிறக்கும் எழுத்து; மூர்த்தம் - அண்ணத்தின் மேற்புறம்.

32. தந்தியம் பற்களில்பிறக்கும் எழுத்து.

33. ஓட்டியம் இதழில் பிறக்கும் எழுத்து.

கண்டியமுதலிய மேற்குறித்த பெயர்கள் வடமொழியிலிருந்து எடுத்து இங்காளப்பட்டன. அவற்றின் பிரயோஜநம் புணரியலில் நன்றாய்த் தெரியவரும். ஆயினும் அடியில்வரும் உதாரணங்களால் அந்தப் பிரயோஜந மித்தன்மைத்தெனச் சிறிது விளங்கும்.

(1) ரகரமொழிந்த மூர்த்தநியங்களோடுகூடிய தந்தியங்கள் மூர்த்தநியங்களாமென்றுபுணரியலில் ஒருவிதிஎழுதப்பட்டிருக்கின்றது.

மூர்த்தநியங்கள் ட, ண, ள, ழ, ற, ர.

தந்தியங்கள் த, ந, ல, ன.

கொள்+தல்=கொட்+தல்=கொட்டல்=கோடல்.

மேற்கண்ட உறுப்புச்சந்தியில் கொள் என்னும்பகுதிநிலையுறுப்பு. தல் என்பது வருமுறுப்பு.

(2) வல்லினத்தின்பின் ல, ள, ன க்கள் வல்லினமாய்த்திரியுமென்னும் விதியால் தல் விகுதியின்பின் ளகரம் டகரமாய்த்திரிந்தது.திரியவே கொட்+தல் எனநின்றது. கொட் என்னு முறுப்பின் ஈற்றிலிருக்கும் மூர்த்தநியமாகிய டகரத்தோடு தல் என்னு முறுப்பின் முதலிலிருக்கும் தந்தியமாகிய தகரம்புணரத் தகரம் மூர்த்தநியமாய்த் திரிந்தது. தகரத்திற்கு இனமாகிய மூர்த்தநியம் டகரமாதலால் தகரம் டகரமாய்த்திரிந்தது, திரியவே கொட்+டல் என நின்றது.

(3) சிலவிடங்களில் மூர்த்தநியத்தின் பின் மூர்த்தநியம் வந்தால் பின்னின்ற மூர்த்தநியங்கெட கெட்ட மூர்த்தநியத்தின் பின்னின்ற குறில் நீளும்; பின்னின்றது நெடிலாயிருந்தால் நெடிலாகவே யிருக்கும் என்னும் விதியின்படி கொட்+டல் என்பது கோ+டல் என நின்று கோடல் என்று ஆகும்.

அப்படியே, வாழ்+நாள் என்னுஞ் சந்தியில் நிலையுறுப்பின் ஈற்று ழகரம் நகரத்தின்பின் மெல்லினமாய்த் திரிய வாண்+நாள் என நின்றது. மூர்த்தநியமாகிய ணகரத்தின்முன் தந்தியமாகிய நகரம் தனக்கினமாகிய ணகரமாய்த்திரிய, வாண்+ணாள் என நின்றது. மேற்கூறிய (3) விதியின்படி நிலையுறுப்பினீற்று ணகரம் வருமுறுப்பின்முதல் ணகரம் ஆகிய இரண்டில் பின்னின்ற ணகரங்கெட அதன் பின்னின்ற உயிர்க்கு நீட்டம் வரவேண்டும்; ஆயினும் இயற்கையில் நீண்ட உயிர்க்கு விதியினல்வரும் நீட்டம் அவசியமன்று.

வினையியல்.

34. வினையின் உறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, எதிர்மறையுருபு என ஐந்து. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை இவை உடன்பாட்டு வினையில்வரும். எதிர்மறைவினையில் எதிர்மறையுருபும் வரும்.

நட	விடு	நொ	பொருந்	பார்	கேள்
வா	கூ	போ	திரும்	செல்	அஃகு
மடி	வே	உரிஞ்	தின்	வவ்	
சீ	வை	உண்	தேய்	வாழ்	

இவ்வாறு முன்னிலை யேவலொருமையில்வரும் வினைகள் ஒருறுப்புள்ளன.

வாரும்=வா + உம் } முன்னிலை யேவற்பன்மை,
தாரும்=தா + உம் } ரகரம் உடம்படுமெய்.
உளன்=உள்+அன்.
உளர் = உள்+அர்.
செய்யாய்=செய்+ஆய், முன்னிலை யேவலொருமை.

இவை பகுதி விகுதி என்னும் இரண்டுறுப்புள்ளன.

வந்தும் = வா + த் + உம், தகரம் இறந்தகால இடைநிலை
உம் - தன்மைப்பன்மை விகுதி.
உண்டனன் = உண் + த் + அனன், இதில் அனன் என்னும்
ஸர்வநாமம் விகுதியாய்வந்தது.

இவை பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்றுறுப்புள்ளன.

வருகிறான் = வா + உ + கிறு + ஆன் } உகரஞ்சாரியை.
தருகிறான் = தா + உ + கிறு + ஆன் }

இவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியையென்னும் நான்குறுப்புள்ளன.

செய்யாதான்=செய் + ஆ + த்+ஆன், ஆ-எதிர்மறை விகுதி,
த் - இடைநிலை.
வாராதவன்=வா+ஆ+த்+அவன், ரகரம் உடம்படுமெய்.

இவற்றில் நான்குறுப்புக்கள் வந்தன.

பகுதி

35. செய்தான், செய்கிறான், செய்து, செய்தல் என்று விகுதி முதலியவற்றால் வேறுபட்ட பல வினைகளுக்கும் பொதுவாகிய உறுப்பிற்குப் பகுதி என்றுபெயர் அதனோடு

இடைநிலை, விகுதிமுதலிய உறுப்புக்களைச் சேர்ப்பதனால் பல வினைகள் உண்டாகின்றன.

35. வினைப்பகுதிகள் இயற்கைப்பகுதிகள், செயற்கைப்பகுதிகள் என இருவகைப்படும்.

36. இயற்கைப்பகுதிகள் தொழிலையே யுணர்த்திப் பகாப்பதமாய்நிற்கு முதனிலைகள். மற்ற முதனிலைகள் செயற்கைப்பகுதிகள்.

37. செயற்கைப்பகுதிகள், பெயரடிப்பகுதிகள், இடையடிப்பகுதிகள், உரியடிப்பகுதிகள், வினையடிப்பகுதிகள், வடமொழிப்பகுதிகள், தொடர்மொழிப்பகுதிகள் என அறுவகைப்படும்.

பெயரடியாய்வந்த முதனிலைகள் பெயரடிப்பகுதிகள்.

இடையடியாய்வந்த முதனிலைகள் இடையடிப்பகுதிகள்.

உரியடியாய்வந்த முதனிலைகள் உரியடிப்பகுதிகள்.

வினைப்பகுதியடியாய் வந்த முதனிலைகள் வினையடிப்பகுதிகள். இவை, நட, வா முதலிய வினைப்பகுதிகளுக்கு து, வி முதலிய விகுதிகளைச் சேர்த்தலாலுண்டாகிய நடத்து,வருவி முதலியனவும், புல், எள் முதலியவற்றிற்கும் அடை, மடி முதலியவற்றிற்கும் முறையே கு,அங்குமுதலிய விகுதியைச் சேர்த்தலாலுண்டாகிய புல்கு, எள்கு, அடங்கு, மடங்கு முதலியனவும் ஆம்.

வடமொழி யடியாய்ப்பிறந்த முதனிலைகள் வடமொழிப் பதிகள்.

பலவினைச்சொற்களும், பெயர்ச்சொற்களும், மற்றைச் சொற்களும் தொடர்ந்துவரும் முதனிலைகள் தொடர்மொழிப் பகுதிகள்.

உதாரணங்கள்.

வா	நில்	வாழ்	கோ	உண்
போ	சொல்	தீர்	வை	விள்
கூ	கல்	தேர்	தின்	தள்

இவை இயற்கைப்பகுதிகள்.

அடியில்வருவன செயற்கைப்பகுதிகள்.

இவ்வுதாரணங்களில் பெயரடிப்பகுதிகள், இடையடிப்பகுதிகள், உரியடிப்பகுதிகள் இவற்றையெல்லாம் ஈற்றுறுப்பாகிய விகுதிகளைப் பற்றி, குவ்வீறு, டுவ்வீறு, துவ்வீறு, புவ்வீறு, மூவ்வீறு, வுவ்வீறு, றுவ்வீறு என வகுத்திருக்கின்றபடியால் அவற்றின் முதலுறுப்பாகிய பகுதிகளைப் பிரித்தறியவேண்டும்.

உள்கு ... உள், (இடப்பெயர்.)
நல்கு ... நல் (உரிச்சொல்) ; இந்த உரிச்சொல் குவ்விகுதிபெற்று முதலில் 'நல்லவனுயிரு' என்று பொருள்பட்டுப் பின்பு 'கொடு' என்னும் பொருள் கொண்டது.
புல்கு ... புல் - 'கூடு'
எள்கு ... எள் - 'இகழ்'
துட்கு - 'அஞ்சு' ... துள் - 'குதி'
மட்கு - 'அழுக்காதல்' ... மண்
மாழ்கு ... மாழ்
மெல்கு - 'மெலிதல்' ... மெல் (உரிச்சொல்.)
அடங்கு ... அடை
மடங்கு ... மடி
கலங்கு ... கல
முழங்கு ... முறை, றகரம் ழகரமாய்த்திரிந்தது.
இறங்கு } இரங்கு } ... இழி, ழகரம் றகர ரகரங்களாய்த் திரிந்தது. கீழ் என்னு மிடைச்சொல்லடியாய் கிழி என்னும் பகுதியுண்டாயிற்று. அதற்கு 'கீழ் செல்லல்' என்பது பொருள். ககரந்தொக்கு கிழி இழி ஆயிற்று. கிழி என்பது 'இறங்குதல்' என்னும் பொருளில் மலையாள பாஷையில் வழங்குகின்றது.
சுருங்கு ... குறு
நுணங்கு ... நுண் (உரிச்சொல்.)
பிணங்கு ... பிணை
வணங்கு ... வளை, ளகரம் ணகரமாய்த்திரிந்தது.
ஒருங்கு ... ஒரு, (எண்ணுரிச்சொல்.)
இவற்றின் ஈற்றின் குவ்விகுதி வந்தது.

இவற்றில் உள்கு முதலிய பகுதிகளில் குவ்விகுதி சேர்க்கப்பட்டிருக்கின்றது. அடங்கு, மடங்கு, முழங்கு, இறங்கு, இரங்கு, பிணங்கு, வணங்கு என்பவற்றில் குவ்விகுதிக்குப்பின் பகுதியீற்றுயிர் அகரமாய்த் திரிந்திருக்கின்றது. நுணங்கு என்பதில் பகுதியீற்றில் விகுதிக்குப்பின் அகரச்சாரியை வந்திருக்கின்றது.

அண்டு ... அண், (உரிச்சொல்.)
கிண்டு ... கிள், துவ்விகுதிசேரப்பகுதியீற்று ளகரம் ணகரமாயும் விகுதித் தகரம் டகரமாயும் திரிந்தன.
தண்டு - 'சேர்' ... தள் - 'ஒருபக்கம் ஒதுக்கு'
மண்டு - 'நெருங்கு' ... மலி - 'நிறை', 'பெருகு'
தோண்டு ... தோள்
வேண்டு ... வேள்
} [illegible]
இவற்றின் ஈற்றில் டுவ்விகுதி வந்தது. இந்தவிகுதி துவ்விகுதியின் திரிபு.
திருந்து ... திரு, ஸம். ஸ்ரீ: துவ்விகுதியின்பின் மெல்லினந் தோன்றியது.
கந்து - 'கெடு' ... ஸம். கநீ - 'பிரகாசித்தல்'
முந்து ... முன்
பிந்து ... பின்
அழுந்து ... ஆழ், துகரவிகுதியின்பின் மெல்லினந் தோன்றியது.
பொருந்து ... பொரு, ஷை
உந்து ... உன்,
இவற்றின் ஈற்றில் துவ்விகுதி வந்தது.
திரும்பு ... திரி, புகரவிகுதியின்பின் மெல்லினந் தோன்றியது.
நிரம்பு ... நிறை ஷை
குழம்பு ... குழை ஷை
அலம்பு ... அலை ஷை
கிளம்பு ... கிள - 'எழு' ஷை
எழும்பு ... எழு ஷை
விளம்பு... ... விளி ஷை
இவற்றின் ஈற்றில் புவ்விகுதி வந்தது. திரும்பு, நிரம்பு, குழம்பு, அலம்பு, விளம்புஇவற்றின் விகுதிக்குப்பின் பகுதியீற்றுயிர் திரிந்தது.

* பொருமு } - 'வீங்கு' ... பெரு
பெருமு }

கெழுமு ... கெழு - 'பொருந்து'

குழுமு - 'கூடு' ... குழு - 'கூட்டம்'.

கம்மு ... கா - 'மூடு'

விம்மு { 'வீங்கு' / 'பெருகு' } ... விரி - 'பரவு'

திருமு ... திரி

அண்மு - 'நெருங்கு' ... அண்

இவற்றின் ஈற்றில் முவ்விகுதி வந்தது. கம்மு, விம்மு என்பவற்றில் விகுதிக்குப்பின் பகுதியீற்று ரகரவுயிர்மெய் தொக்கது. விகுதி மகரம் இரட்டித்தது.

பரவு ... பா

கழுவு ... கழி

பொருவு ... புரை - 'ஒத்திரு'.

தடவு ... தொடு

துவ்வு ... துய் - 'உண்'

இவற்றின் ஈற்றில் வுவ்விகுதி வந்தது. பொருவு கழுவு என்பவற்றில் பகுதியிலுள்ள ஐகாரமும் இகரமும் உகரமாய்த் திரிந்தன. தடவு என்பதில் பகுதியின் ஒகரமும் உகரமும் அகரமாய்த் திரிந்தன. துவ்வில் பகுதியீற்று மெய்கெட விகுதி வகரம் இரட்டித்திருக்கின்றது.

துன்று ... துன் - 'நெருங்கு'

பொன்று { 'அழி' / 'குறை' } ... புல் - 'அற்பம்'

ஊன்று - 'சார்' ... உன் - 'அழுத்து'

துவன்று ... துவல் - 'நிறை'

முரற்று ... முரல் - 'ஒலி'

அரற்று ... அரல் - 'ஒலி'

குயிற்று ... குயில் - 'செய்'

இவற்றின் ஈற்றில் றுவ்விகுதி வந்தது. இந்த றுவ்விகுதி துவ்விகுதியின் திரிபுபோலும்.

இப்பகுதிகளின் ஈற்றில் கு, டு, து, பு, மு, வு, று, இவை விகுதிகளாய் வந்திருக்கின்றன. அவற்றால் பகுதிகளின்பொருள் பெரும்பாலும் வேறுபடாதிருக்கும்.

---

* பொறுக்கு, பெறுக்கு காண்க.

வருவி = வா + உ + வி, பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் உகரச்சாரியைவர உகரத்திற்கும் பகுதியீற்று ஆகாரத்திற்கும்இடையில் ரகரவுடம்படுமெய் தோன்றியிருக்கின்றது.

செய்வி = செய் + வி

கற்பி = கல் + பி

சேர்ப்பி = சேர் + பி

நடத்து = நட + து

செலுத்து = செல் + து, உகரம் சாரியை.

நிறுத்து = நில் + து, பகுதியீற்று லகரத்தின் இடத்தில் றகரம் வந்தது.

கொடு = கொள் + து, 'கொள்ளும்படிச்செய்.' ளகர தகரங்கள் இருடகரமாய்த்திரிய,பின்னின்ற டகரங்கெட்டது.

கடாவு = கட + வு; கட-'செல்'; கடாவு - 'செல்லும்படிச்செய்.'

*பாய்ச்சு = பாய் + து, துவ்விகுதியின் தகரம் சகரமாய்த் திரிந்தது.

சுட்டு = சூழ் + து, தகரமும் ழகரமும்இரு டகரங்களாய்த்திரிந்தன. பகுதியின் உயிர் குறுகியது.

இவை தன்வினைப்பகுதிகளுக்கு வி,பி முதலிய விகுதிகளைச்சேர்த்ததனாலுண்டாகிய பிறவினைப்பகுதிகள்.

தழை	...	தழை	பூ	...	பூ
துளிர்	...	துளிர்	இருள்	...	இருள்
காய்	...	காய்	எதிர்	...	எதிர்
முளை	...	முளை	சூழி	...	குழி
விதை	...	விதை			

இப்பகுதிகள் விகுதி யீற்றில்லாமல் பெயரடியாய்ப் பிறந்தன.

கொந்தளி=கொந்தல்+இ, கொந்தல் - 'கோபித்தல்' ; கொந்து + அல்.

மறுதளி=மறுத்தல் + இ, மறுத்தல் = மறு + தல்.

தெருள்=தெருள்-'அறிவு,' தெரி-'அறிதல்.'

சுழல்=சூழல், சூழ் + அல், சூழ்-'சுற்றல்.'

---

* கும்பகோணத்தினருகில்கிடைத்த ஓர் தாமிரசாஸநத்தில் 'நீர் பாய்த்தப்பெறுவாராக' எனப்பாய் என்னும் பகுதிக்கு து என்னும் [illegible]தி பிறவினையில் வந்திருக்கின்றது.

சுருள்=குறுகல், குறுகு+அல், ககரஞ் சகரமாய்த் திரிந்தது.
கனல்=காந்தல், காந்து + அல், காந்து-'முதிரவேதல்.'

இப்பகுதிகள் தொழிற்பெயரடியாகப் பிறந்தன.

கறு	...	கறுப்பு	பரு	...	பருமை
வெளு	...	வெளுப்பு	பெரு	...	பெருமை
புளி	...	புளிப்பு	மெலி	...	மென்மை
தித்தி	...	தித்திப்பு	திணி	...	திண்மை
கை	...	கைப்பு	கடு	...	கடுமை
உவர்	...	உவர்ப்பு	இனி	...	இனிமை
சிறு	...	சிறுமை			

இவை பண்படியாகப் பிறந்தன.

6. வடமொழிப்பகுதி தற்சமம் என்றும் தற்பவம் என்றும் இருவகைப்படும். தற்சமப்பகுதிகள் வடமொழியிலிருந்து விகாரமின்றி வந்தவை; விகாரப்பட்டுவந்தவை தற்பவப்பகுதிகள்.

(உ-ம்.)

கல	... கல் எண்ணு, கூடு	தகி	... தஹ்
சரி	... சர்	செயி	... ஜி
சவி	... சவ்	சபி	... ஶப்
வரி	... வ்ரு	தரி	... த்ரு
பூரி	... பூர்	வாசி	... வாஸ்
அநுஸரி	... அநுஸ்ரு	சகி	... ஸஹ்
பாலி	... பால்	வகி	... வஹ்
		இருசி	... க்ரஸ்

இவை தற்சமப்பகுதி.

		போதி	... புத்
போஷி	... புஷ்	கோஷி	... குஷ்
க்ஷமி	... க்ஷம்	பற	... பத்
சயனி	... ஶயநம்	தெழி	... த்ருஷ்
பாகி	... பாக:	பிழி	... பிஷ்
சிருட்டி	... ஸ்ருஷ்டி:	பொழி	... ப்ருஷ்
தியானி	... த்யாநம்	விழி	... திஷ்
கவனி	... கமநம்	விடி	... விஷ்
சாதி	... ஸாதி	கட்டு	... க்ரந்த்

சுடு	... ஶுஷ்	தள்	... தல்
ஓது	... வத்	மிகு	... உஹ்
பகு } வகு }	... பஜ்	விளங்கு } இலங்கு } பிறங்கு }	... ப்ராஜ்
தேய்	... க்ஷி	தேறு	... த்ரு
செப்பு	... ஜப்	பாடு } படி }	... பட்
கனை	... க்ஷேவ்	குத்து	... குட்
செல்	... சல்	சால்	... ஶால்
சார்	... ஸ்ரு		

இவை வடசொல்லடியாய் வந்தன.

கொணு = கொண்டு + வா, பகுதியீற்றிலுள்ள துவ்விகுதியும் வாஎன்னும் பகுதியின் வகரமும் தொக்கன.

எழுதா = எழுந்து + தா, வினையெச்ச விகுதியாகிய துகரமும் அதன் பின்னின்ற மெல்லினமும் தொக்கன.

செய்துகொள் = செய்து + கொள்
செய்திரு = செய்து + இரு
வந்திடு = வந்து + இடு

இத்தொடர்மொழிப்பகுதிகளிலொவ்வொன்றிலும் ஒரு பகுதியடியாய்ப் பிறந்த இறந்தகால வினையெச்சத்தோடு வேறு பகுதிகள் சேர்ந்திருக்கின்றன.

மல்லா } மல்கா } = மேல் + கா { மல்கா ; 'மேல்காத்துக் கொள்ளல்' என்றால் 'முகம் மேலாயிருத்தல்.'

செம்மா* = செம்மம் + கா; செம்மம் - ஶர்மந் என்னும் வடமொழிச் சிதைவு, க்ஷேமம் என்பது பொருள்.

ஏமா = ஏமம் + கா, ஏமம் - வடமொழி க்ஷேமம்.
அன்று = அன்னம் + கா.
இறுமா = இருமை + கா.
பொச்சா = பொச்சம் + கா.

* "அல்லாப்பர் செம்மாப்பர் என்பனபோல் சோகாப்ப ரென்பதோர் சொல்"—குறள் 13-7, பரிமேலழகர்

சோகா = சோகம் + கா. } 15-ம். ப. செம்மா வன்ப
அல்லா = அல்லல் + கா. } தனைப் பார்க்க

காத்தலென்னும் பொருளுடைய கா என்னும் பகுதி பின்வந்த பெயர்களோடு சேர்ந்து விகாரப்பட்டு வந்தது.

விகுதி.

7. பகுபதங்களின் ஈற்றுறுப்பு விகுதியெனப்படும்.

பால்காட்டும் விகுதிகள்.

(1) ஆண்பால்விகுதி.

அன் ... இராமன் கொற்றன்
கிருஷ்ணன் பிறன்
சாத்தன் உளன்

தாரினன், இன் ஆறும்வேற்றுமையுருபு உடைமைப் பொருளைக் காட்டுகின்றது. தாரினன் 'மாலையை யுடையவன்.'

அவன் ... அ என்னும் சுட்டிடைச்சொல்லோடு அன்விகுதி சேர அவன் என்னும் ஸர்வநாமம் வந்தது. அதுவே விகுதியாயும் வருகின்றது. அனன் விகுதியைப் பார்க்க.

வந்தவன் கரியவன்
வருபவன் சிறியவன்
வருகின்றவன் வல்லவன்

வன் ... அவன் விகுதியில் அகரந் தொக்கது.

சிறுவன் இளைவன்
இவன்* எவன்*

மன் ... வடமன் = வட + வன், வன் விகுதி வகரம் மகரமாய்த் திரிந்தது.

சிறுமன் = சிறுவன்; இதற்குப்பெண்பால்சிறுமி.

கன் ... வன் விகுதியின் வகரம் ககரமாயிற்று.

சிறுக்கன் = சிறு + வன்

* இவன் எவன் என்பவற்றில் அன்விகுதி வர, இயன் எயன் எனநின்று போலிமுறையால் இவன் எவன் எனத் திரிந்ததென்றும் அமையும். இங்கு போலி முறை என்பது அவன் என்பதனைப்போல் இயன் எயன் என்பன இவன் எவன் எனத் திரிவதே. ஸர்வநாமப்பிரகரணம் பார்க்க.

கொண்கன் = கொண்டவன், வகரங் ககரமாய்த் திரிந்து டகர வுயிர்மெய் தொக்கது.

அல் ... அன் விகுதியின் ஈற்று னகரம் லகரமாய்த்திரிந்தது.

அண்ணல் = அண்ணன்
சேரல் = சேரன்
இளவல் = இளவன்

மான் ... பெருமான் = பெருவன், வகரம் மகரமாயிற்று, அகரம் நீண்டது.

கோமான் = கோ+வன், கோ-'அரசன்,' வன்-விகுதி.

மாள் ... பெருமாள்=பெரு+வன், பெருமாள்-'அரசன்' 'குரு' 'சிவன்' 'திருமால்.' மான் விகுதியின் னகரம் ளகரமாய்த் திரிந்தது.

ஆன் ... அவன் விகுதி ஆன் ஆயிற்று.

ஆகிறான் தாரினான்
ஆகின்றான் நாட்டான்
ஆவான் ஊரான்

ஓன் ... இதுவும் அவன் விகுதியின் திரிபு. படைத்தோன், படைப்போன், வில்லோன்.

அனன் ... அனை என்னுஞ் சுட்டிடைச்சொல்லுக்கு அன்விகுதி வர அனையன் என வந்தது. அது ஸர்வநாமம், 'அவன்' என்பது பொருள்.

அனையன் என்பது ஐகாரந்தொக, அன்+அன் என நின்று அனன் ஆயிற்று. அவன் என்னும் ஸர்வநாமத்தைப்போல் இதுவும் விகுதியாய் வந்தது.

வந்தனன் செய்தனன்
வருகின்றனன் செய்கின்றனன்

இ ... குன்றவில்லி - 'குன்றை வில்லாகவுடையவன்.'

(2) பெண்பால்விகுதி.

அள் ... வந்தவள், வருகின்றவள், வருபவள், உளள், பிறள், தாரினள், குழையினள்.

அவள் ... ஸர்வநாமம், அவள் என்னும் ஸர்வநாமத்தைப்போல இதுவும் விகுதியாய்வந்தது. சிறியவள், கரியவள்.

ஆள் ... அவள் ஆள் எனத் திரிந்தது. வந்தாள், வருகின்றாள், வருவாள், தாரிணள், குழையினள், ஊராள்.

ஓள் ... அவள் ஓள் எனத்திரிந்தது. வந்தோள், வருகின்றோள், சிறியோள், பெரியோள், தொடியோள், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும் - சிலப்ப.

நல்லோள்.

சி ... வாணிச்சி=வாணியன்+இ = வாணியி = வாணிச்சி, அன்விகுதி தொக்கது. யகரத்திற்கு சகரம்வந்தது. வலைச்சி=வலையன், வாணிச்சி யென்பதைப்போல்.

தி ... சம்படத்தி = செம்படவன்+இ=செம்படவி = செம்படத்தி. அன் விகுதிதொக்கது. வகரந் தகரமாய்த்திரிந்தது.

குறத்தி, குறவன்.

முடத்தி, முடவன்.

கி ... சிறுக்கி, சிறுக்கன்.

வி ... மனைவி

புதல்வி

மி ... சிறுமி, சிறுமன்.

ஐ ... உமை [உமா] வடமொழியீற்றாகாரம் தமிழில் ஐயாகின்றது.

சீதை [ஸீதா]

கோதை [கோதா]

இ ... அலர்கண்ணி வடமொழியீற்றீகாரம் இகரமாய்க்குறுகும், கௌரி, பார்வதி, இலக்குமி.

(3) பலர்பால்விகுதி.

அர் ...	வருவர்	கரியர்
	போவர்	சிறியர்
	குழையர்	பெரியர்

என்மர்=என்னுவர்=என்+வர்=என்+மர் - உகரங்கெட்டது. வகரம் மகரமாய்த்திரிந்தது.

அவர் ... ஸர்வநாமம் விகுதியாய்வந்தது.

செய்தவர்	சிறியவர்	விண்ணவர்
செய்கின்றவர்	கரியவர்	இமையவர்.
செய்பவர்	நாட்டவர்	

ஆர் ... அவர் ஆர் ஆய்த்திரிந்தது.

செய்வார்	சிறியார்
செய்கின்றார்	கரியார்
செய்தார்	இமையார்
நாட்டார்	

கொண்மார்=கொள்வார்=கொள்+மார்

சென்மார் =செல்வார் =செல் +மார்

நடமார் = நடக்கு + மார், குகரங்கெட்டது.

ஓர் ... செய்வோர்	சிறியோர்
செய்கின்றோர்	கரியோர்
செய்தோர்	இமையோர்
உணருமோர்	உணருமவர் (தொல்.உருபு.12)

அனர் ... ஸர்வநாமமாகிய அனன் என்பதற்குப் பன்மை.

செய்தனர் 'ஏங்குவனர்=ஏங்குவ+அனர்

செய்கின்றனர் "இருதலைவந்த பகைமுனைகடப்ப, இன்னுயிரஞ்சியின்றுவெய்துயிர்த்த ஏங்குவனர்" மதுரைக்

செய்வனர் காஞ்சி 402 - 404.

நகுவனர்

" கல்லாமாந்தரொடு நகுவனர் திளைப்ப" ஷை 420.

அனார் ... அனை யென்னுஞ்சுட்டிடைச்சொல்லிற்கு ஆர்விகுதி சேர அனையார் என்னும் ஸர்வநாமம் வந்தது. 'அவர்' என்று பொருள். இச்சொல்லில் ஐகாரங்கெட, அன்+ஆர் = அனார் எனவந்தது. மொழிமனார், தொல். II. 175. என்மனார், தொல். II. 1.

மொழிமனார் = மொழியுவனார் = மொழி+மனார், மொழியு என்பதில் யகர உயிர்மெய்கெட மொழி என வந்தது.

என்மனார்=என்னுவனார்=என்+மனார், உகரக்கேடு.

திண்ணனார்=திண்+அனார், திண் - திண்மையுள்ள, பெரிய. கண்ணப்பனார். 183.

அ ... நடப்ப, நடப்பர் என்பதிலுள்ள அர்விகுதியின் ஈற்று ரகரங்கெட்டது.

என்ப, "தன்னென்பவாறுமுயிர்க்கு" ...

இர் ... மகளிர், பெண்டிர்.

யிர் ... நீயிர்

விர் ... நீவிர், வர் விகுதியின் அகரம் இகரமாய்த்திரிந்தது.

யர் ... இளையர்

ஞர் ... கவிஞர் = கவியர். யகரம் ஞகரமாயிற்று. இளைஞர்.

சில் ... குரிசில், ஸ்ரீ என்னுஞ்சொல்பெயர்களுக் கீற்றில்வந்து சிறப்பையும் பெருமையுங்காட்டும்; உ. குருஸ்ரீ, மாதுஸ்ரீ, ஸ்ரீ என்பது திரு எனத்திரிந்து பின்பு சில் என மருவியது. அதுவே வடபாஷைகளுள்* ஜீ என வரும்.

கள் ... வர் என்பது கள் எனத்திரிந்தது. வகரம் ககரமாயும் ரகரம் ளகரமாயுந் திரிந்தன.

தெலுங்கில் பன்மை விகுதியாகிய గారు என்பதும் வர் விகுதியின் திரிபு.

கார் ... வர் என்பதன்திரிபு, இது గారు என்பதைப் போன்றது. ஐயங்கார், அம்மங்கார், அத்தங்கார். தெலுங்குசப்ததத்துவத்தில் விகுதியைப்பற்றியஉரையைப்பார்க்க. ப. 9 - 10.

மர் ... வடமர் = வடவர்.

மார் ... மர்விகுதி மார் எனத்திரிந்தது. தேவிமார், தாய்மார், தகப்பன்மார்.

அவர்கள். தேவர்கள் மனிதர்கள்
வந்தவர்கள் விண்ணவர்கள்

ஆர்கள் ... வந்தார்கள், ஆனார்கள், ஆவார்கள்.

கண்மார். குருக்கண்மார், கள் விகுதியும், மார் விகுதியுந் தொடர்ந்துவந்தன.

(4) அஃறிணையொருமை.

அம் † ... ஸ. அம்

உ. மரம் ஆட்டம்
பலம் பாட்டம்
கரம் ஊக்கம்

---

* மஹாருஜீ, ராம்ஜி, ஊத்தர்ஜி.

† அம் விகுதி தமிழில் அன், அத் (அது) எனத்திரிவதுபோல் க்ரீக்குப்பாஷையில் அந் எனவும், ஸமஸ்கிருதத்தில் அம் அஃ எனவும் இலத்தின்பாஷையில் உம் எனவும் திரியும்.

ம் ... அம் விகுதியின் அகரங்கெட ம் என நிற்கும்.

உ.	கராம்	கராகம்	ஸ. க்ராஹ:
	குழாம்	குழகம்	
	கடாம்	கடகம்	
	நாம்	நாமம்	
	காம்	காமம்	
	தோம்	தோசம்	ஸ. தோஷ:
	பேம்	பயம்	
	தேம்	தேயம்	ஸ. தேஹ:

ஸ. க்ராஹ: என்பது ஈற்று விஸர்க்கம்தொக, அஃறிணை யொருமை அம் விகுதியேற்று ககர ரகரங்களுக் கிடையில் அகரச்சாரியை பெற்று கராகம்எனநின்று, ஈற்றுமகரத்தின்பின்னின்ற ககரவுயிர்மெய் கெட கராம் எனவந்தது. அப்படியே கடாம், குழாம் என்பவற்றில் ககரவுயிர் மெய் கெட்டது. நாம், காம் என்பவற்றில் மகரவுயிர்மெய்யும், தோமில் சகரவுயிர்மெய்யும் பேம்தேமில் யகரவுயிர்மெய்யுங் கெட்டன.

அன் ... அம்மின் மகரம் னகரமாயிற்று.

உ. எவன் (எது).

மரன்	மரம்	நிலன்	நிலம்	குலன்	குலம்
பயன்	பயம்	பிலன்	பிலம்	கடன்	கடம்
திறன்	திறம்	கலன்	கலம்	பொலன்	பொலம்
குளன்	குளம்	வலன்	வலம்	புலன்	புலம்
வளன்	வளம்	உலன்	உலம்	நலன்	நலம்

தொல். எழுத். சூ. 81.

இந்தவிகுதியின் மகரமானது மரன், பயன், திறன் என்பன முதலியவற்றில் னகரமாய்த்திரிவதுபோல்உயிர்முதலாய்வரும்வேற்றுமையுருபு வரும்போதும் னகரமாய்த்திரிந்து பின்பு தகரமாய்த் திரியும்.

மரம் + ஐ = மரன் + ஐ
= மரத் + ஐ
= மரத்த் + ஐ
= மரத்தை

} தகரம் இரட்டித்தது.

மரம் + உ = மரன் + உ
= மரத் + உ
= மரத்து } உகரம் ஆறும்வேற்றுமை விகுதி.

அம்விகுதியின் மகரம் னகரமாய்த்திரிந்து பின்பு தகரமாய்த் திரிவதுபோல் தெலுங்கில் மகரம் பகரமாய்த் திரியும்.

దేశము + உ என்பது

దేశపు என மாறுகிறது

దేశపు தேசத்து என்பதற்குச் சரியானது.

இந்த விஷயத்தைப்பற்றிய விவரங்களைப் பெயரியலில் காணலாம்.

இதனால் அத்து என்னுஞ் சாரியை இடையாதென்று கொள்ள வேண்டும்.

அது ... அன்விகுதி னகரம் தகரமாய்த்திரிந்தது.
உகரம் அசைநிறைவிகுதியா யீற்றில் வந்தது.
செய்தது சிறியது எவ்வது = எ + அது
செய்வது கரியது அல்லது = அல் + அது
செய்கின்றது பெரியது குடாது = குட + அது = குடவது - 'மேற்கு'
உனது, எனது, தனது.

ஆது ... அதுவின் அகரம் நீண்டது.
எனாது
நினாது
தனாது

அ ... அது என்பதனீற்றுத் துகரம் தொக்கது.
"எண்ணென்ப வேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."—குறள்.
எண்ணென்ப எண்ணென்பது, துகரங்கெட்டது.
எழுத்தென்ப எழுத்தென்பது, துகரங்கெட்டது.
"கற்பனவூழற்றார்...வாத்தைவாயங்காத்தல்-மற்றுந்தம்
வல்லுருவஞ்சன்மினென்பவேமாபறவை
புல்லுருவஞ்சவபோல்"
அங்காத்தல்......என்பவே; என்பவே=என்பதுவே
"கூர்ங்கோட்டகவே லென்புழி கூர்ங்கோட்டதென வொருமையா கற்பாலது". (தொல்-சொல்-429.கு)

து ... அதுவின் அகரங்கெட்டது.
எது சிறிது இனிது
இது பெரிது அனைத்து
உது கரிது இனைத்து
எனைத்து

ன் ... என், ஏன், எவன் என்னுஞ் சர்வநாமம் என், ஏன் எனக்குறுகியது.

அன்று ... அனையென்னுஞ்சுட்டிடைச்சொல்லிற்கு துவ்விகுதி வர அனைத்து என வந்தது. ஐகாரங்கெட அன்து எனநின்றது. துவ்விகுதியின் தகரம் றகரமாய்த் திரிய, அன்று என ஆயிற்று. அதற்கு 'அது' என்று பொருள்- அது என்னும் ஸர்வநாமத்தைப்போல அன்று என்பதும் விகுதியாய்வந்தது.

வந்தன்று, கடந்தன்று, உண்டன்று.
வந்தன்று = வந்த + அன்று
கடந்தன்று = கடந்த + அன்று
உண்டன்று = உண்ட + அன்று

று ... எற்று "தம்மினுங் கற்றாரைநோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றேயிவர்க்கு நாமென்று—நீதிநெறி.
எனையென்னுஞ் சுட்டுச்சொல்லிற்கு து என்னும் விகுதி வர எனைத்து என வந்தது, இது ஸர்வநாமம். ஐகாரங்கெட என்து என நின்று, துகர விகுதியின் தகரமும் னகரமும் இரு றகரமாய்த் திரிய எற்று என மருவியது.

கூயின்று
கூயிற்று } = கூயினது

போயின்று
போயிற்று } = போயினது

அன்று = அலது
இன்று = இலது

டு ... துவ்விகுதி டுவ்விகுதியாய்த் திரிந்தது.
குண்கெட்டு = குண்கெண் + து
குறுந்தாட்டு = குறுந்தாள் + து
பொருட்டு = பொருள் + து
உண்டு = உளது

சு ... சிறிசு = சிறியது = சிறிது
பெரிசு = பெரியது = பெரிது
புதிசு = புதியது = புதிது
இலேசு = எளியது = எளிது

இவ்விகுதி பெரும்பான்மை உலகவழக்கத்தில் வரும்.

(5) அஃறிணைப்பன்மைவிகுதிகள்.

அவை ... ஸர்வநாமம் விகுதியாய்வந்தது.

செய்தவை	சிறியவை
செய்கின்றவை	அரியவை
செய்பவை	குறியவை
பெரியவை	கடியவை

அ ... வந்த, வருகின்ற, வருப; பெரிய, சிறிய, குறிய, கடிய } அவை விகுதியின் ஈற்றுவகரஐகாரங்கெட, அஎன்பது நின்றது. பலர்பால்விகுதியாகிய அஎன்பதனைக்காண்க.

உரிஞுவ, திருமுவ, ஓடெ, பாடெ.

அன ... அனையென்னுஞ் சுட்டிடைச்சொல்லிற்கு அவ்விகுதியைச் சேர்த்தலால் அனைய என்னும் அஃறிணைப் பன்மைச் சர்வநாமம் உண்டாகின்றது. அதி ஐகாரங்கெட, அன் + அ எனநின்று, அன்ன எனவாகின்றது. இருனகரத்தில் ஒன்றுகெட அன என வருகின்றது. இதற்குப்பொருள் 'அவை'. அவையென்னும் ஸர்வநாமத்தைப்போல் அன என்பதும் விகுதியாய்வரும்.

வந்தன	செய்ம்மன. (தொல் II. 222)
வருகின்றன	செய்யுவன—
வருவன	செய்வன=
உருணுவன	செய்ம்மன, உகரங்கெடு, வகரம்மகரமாய்த்திரிந்தது.
உண்பன	மகரம் இரட்டித்தது. *

கள் ... மரங்கள், கள்விகுதி வர் விகுதியடியாய்ப்பிறந்தது. பறவைகள். உயர்திணைப்பன்மைக்கே யுரியதானபோதிலும்பிரயோகத்தினுல் அஃறிணைப் பன்மைக்கும் வந்தது.

* சென்மார், நடமார் என்னுஞ் சொற்களைப் பார்க்க.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - APR. 93
MADRAS.

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1893ஸ்ரீ ஜனவரிமீ. இலக்கம். 9.

சுதந்தரங்களின் விளக்கம்.

க-ம் அத்தியாயம்—II.

(230-வது பக்கத்தொடர்ச்சி.)

15. எல்லாமனிதருக்கும் சுதந்தரங்களும் நிர்ப்பந்தங்களும் பொதுவிற் சமம். யோக்கியதையிலும் சக்தியிலும் விளங்கும் விசேஷங்களினுற் சித்திக்கும் வெவ்வேறான சுதந்தரங்களிலுள்ள உயர்வுதாழ்வுகளைத்தவிர, வேறு சுதந்திரங்களில் சிலருக்குயர்வும் சிலருக்குத் தாழ்வுமில்லை. அப்படியே சிலருக்குச் சுதந்தரங்கள் மிகுதியாயும் சிலருக்கு அவை குறைந்துமிருப்பதில்லை. எவருக்கும் சாமானிய சுதந்தரங்கள் சமம். ஏனெனில், எல்லாமனிதரிலும் மானிடவியல்பு பொதுவாய் விளங்குகிறதென்றும், அவ்வியல்பே மனிதருக்குள் வழங்கிவரும் சுதந்தரங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் மூலகாரணமா யிருக்கிறதென்றும் பலமுறை மேற்கூறப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, செல்வம் பிறப்பு முதலியவைகளில் எவ்வளவு தாரதம்மிய மிருந்தாலும், சொத்தைச் சம்பாதித்தற்கும், விலக்கப்பட்ட சிலவற்றைத்தவிர வேறுஉடன்படிக்கைகளைத் தம் மனம்போற் செய்துகொள்வதற்கும் ஒவ்வொருவருக்குஞ் சுதந்தரமுண்டு; அதைத்தடுக்காதிருக்கவும் ஒவ்வொருவரும் நிர்ப்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

எல்லாமனிதருக்கும் சுதந்தரங்கள் சமமென்பது இரண்டு விலக்கிற் குட்பட்டிருக்கிறது. பகுத்தறிந்து நடந்துகொள்ளத்தக்க முதிர்ந்த பருவம்அடையாததினுல் பிறரைப்போலத் தங்கள்சுதந்தரத்தைச் செலுத்திக்கொள்ளச்சக்தியில்லாத சிறுவர்களுக்குச் சொத்திற்குடைமையிருந்தாலும் அச்சொத்தைத் தன் விசாரணைக்குட்படுத்தி நடத்துஞ் சுதந்தரமில்லை. தங்கள் செய்கைகளினுல் விளையும்பலன் இத்தன்மையதென்று முன் பகுத்தறியும்திறமை அவர்க்கில்லாததினுல் முதிர்ந்தபருவம் வந்தபிறகே சொத்திற்குள்ள சுதந்தரங்கள் அவருக்குக் கொடுக்கப்படும். அப்படியே பைத்தியம்பிடித்தவர்களுக்கும் புத்தி ஸ்திர மில்லாதவர்களுக்கும் சுதந்திரங்களும் அவைக்குத் தக்க நிர்ப்பந்தங்களுங் கிடையா.

மனிதருக்குச் சாமானிய சுதந்திரநிர்ப்பந்தங்கள் சமமாயிருக்கின்றனவென்று மேற்பிரஸ்தாபித்திருக்குஞ் சித்தாந்தத்தைக் கைக்கொண்டு சொத்து, ஒவ்வொருவர்செய்யும்வேலை, அவ்வேலைக்குள்ளகூலி, குடும்பத்திலும் ராச்சியத்திலுமுள்ள நிலைமை, இவைமுதலிய எல்லாவற்றிலும் சங்கத்திற் சேர்ந்தவருக்கெல்லாம் சமதைநிலை பெறும்படி சட்டத்தினுற் கட்டாயமான நிபந்தனைகளேற்பட வேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி விவரமாய் எழுதிமுடிக்க இப்பொழுது சந்தர்ப்பமில்லை. ஆகிலும் ஒன்றிரண்டு சங்கதிகளைச் சுருக்கமாய்ச் சூசிப்பிக்கலாம். சொத்து, குடும்பத்திலும் ராச்சியத்திலுமுள்ள நிலைமை, ஒவ்வொருவர் செய்யும் வேலையும் அதன்கூலியு

மாகிய இவைகளிற் சமத்துவத்தைச் சட்டநிபந்தனைகளின் கட்டாயத்தினாலும் துரைத்தனத்தை வகிப்பவரின் வலிமையினாலும் மாத்திரமே பலாத்காரமாய்ப் பெறக்கூடியது. ஏனெனில், தங்களுடைய குணாதிசயங்களில் மனிதருக்குள் வெகு தாரதம்மியமிருப்பதினால், அவர் செய்யும் வேலையின் திறமையிலும் அவர் சம்பாதிக்குஞ் சொத்திலும் அவருக்குக் கிடைக்கும் சுகத்திலும் வித்தியாசமுண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதைச் சட்ட நிபந்தனைகளைக்கொண்டு தடுப்பதினால் மனிதருள் சுயேச்சையே மாய்ந்துவிடும். மேலும் மனிதருள் விளங்கு முயர்வு தாழ்வுகளை யிகழ்வதினால் அவருக்குள்ள ஊக்கங்குலைந்து அவர் தங்களுடைய திறமை முழுவதையும் தம்வேலைகளிற் செலுத்தாது தளர்ச்சியைப் பாராட்டுவர். அதனால் உலகத்திற் செல்வம், சுகம் முதலியவை விருத்தியடையாமற்போம். இதுமாத்திரமல்ல; மனிதருக்குள் அதிருப்தி மிகுந்து கலகங்களுண்டாவதனால் துரைத்தன முறையழிந்து சங்கத்தின் ஸ்திரத்திற்கே அபாயம் நேரிடலாம். மேலும் மனிதருக்குள்ள முதலையும், அவரவருடைய வேலைத்திறமைக்குத் தக்கபடி கிடைக்குங் கூலியையும், அவரவருடைய குணாதிசயங்களுக்குத் தக்கபடி தங்களுடைய இனத்தாருட் கிடைக்குஞ் சுகம், அதிகாரம் முதலியவற்றையும், மேற்கூறியபடி கட்டாயஞ்செய்து சமமாக்குவது நியாயமாவென்பதைப்பற்றித் தீர்க்காலோசனை செய்யவேண்டும்.

இவ்விஷயங்களிற் சமத்துவத்தைப் பெறுவதற்குப் பலர் பல ஏற்பாடுகளைத் திட்டஞ்செய்தும் நடபடிக்கைக்குக் கொண்டுவரப் பலவாறு முயன்றும் அவைகளுக்குரிய குணாகுணங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அவைகளைக் குறித்து விவரிக்கவும், அவைகளின்பிழைகளை யெடுத்துக்காட்டவும் இப்பொழுது சந்தர்ப்பமில்லை.

இராச்சியத்திலுள்ளவருக்கெல்லாம் சுதந்தரங்கள் சமமென்று இப்பொழுது கூறுவதால் நமதுகருத்து யாதெனில், சொத்தைச் சம்பாதித்துக்கொள்ளுவதிலும், பிறரோடு உடன்படிக்கைசெய்துகொள்ளுவதிலும், தம்முடலைக் காப்பாற்றிக்கொள்ளுவதிலும், தம்மனதிற்குச் சரியென்று தோன்றியபடி தங்கள் தோழர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுவதிலும், தங்கள் மதக்கோட்பாட்டை யேற்படுத்திக் கொள்ளுவதிலும், வேறுசில சாமானிய விஷயங்களிலும், பிறருடையநிர்ப்பந்தமின்றிச் சட்டநிபந்தனைகளாலேற்பட்ட விலக்குகளுக்குமாத்திர முட்பட்டு நடந்துகொள்ளச் சுதந்தர முண்டென்பதே.

சில இராச்சியங்களில் சுயவராசாட்சியெனுஞ் சுதந்தரத்தைச் சனங்களனுபவித்து வருகிறார்கள். அதாவது, துரைத்தனத்தை நடத்தும் ஆலோசனைசபையாரைத் தெரிந்தெடுத்து வருவதாம். முன் கூறப்பட்ட சுதந்தரங்களைப் போல் இச்சுதந்திரம் யாவர்க்குஞ் சமமென்று சொல்லக்கூடாது. இப்பொழுது ஆங்கிலேய நாட்டில் 35-கோடி மனிதருள் 5-கோடி மனிதருக்கு மாத்திரமே இச்சுதந்தரமுண்டு; 8-வருடங்களுக்குமுன் 2-கோடிஜனங்களே இச்சுதந்தரத்தைச் செலுத்திவந்தார்கள்; 60-வருடங்களுக்குமுன் ½-கோடி ஜனங்களுக்கு மாத்திரமே இச்சுதந்தரமுண்டு. இச்சுதந்தரம் ஜனங்களின் சொத்தினளவிற்குத் தக்கபடி அங்கிலேயநாட்டில் எக்காலத்தும் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. வேறுசிலஇராச்சியங்களில் பகுத்தறிவதற்குரிய பருவம்முதிர்ந்தவுடனே சனங்களிச் சுதந்தரத்தைச் செலுத்திவருகிறார்கள். துரைத்தனத்தில் உத்தியோகம்பெற்று அதிகாரஞ் செலுத்துவதற்குரிய சுதந்தரம் அவரவர்களுடைய குணாதிசயங்களை மாத்திரம் ஒத்திருக்கிறது. முற்கூறிய சுதந்தரங்களைப்போல இச்சுதந்தரமும் யாவருக்குங் கிடைக்கக்கூடியதல்ல; சனங்களுடைய அனுமதியினாலுங் கிடைக்கக்கூடியதல்ல; நியமிக்குமதிகாரத்தை வகித்தவரால்மாத்திரமே கிடைக்கக்கூடியது.

16. மனிதர் சுதந்தரங்களைக் கைக்கொண்டு அவற்றை நிறைவேற்றிக்கொள்ளுவதே புருஷார்த்தமென நினைத்துவிட்டால் உலகத்தில் அன்பினால்மாத்திரம் பிறர்க்குழைத்து அதனால் அவருக்குக் கிடைக்கும் சுகத்தைக் கண்குளிரக்கண்டு களிப்படைந்து கடவுளின் கிருபைக்

குப் பாத்திரமாகுந்தன்மை மாண்டுவிடுமென்றும் தற்சுகத்தில்மாத்திரமே சனங்கள் தமது நோக்கத்தைச் செலுத்தி விடுவார்களென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (Italy) இட்டலி தேசத்தில் 50-வருடங்களுக்குமுன் தன் வாழ்நாள்முழுவதும் தன்செல்வம் சுகமெல்லாவற்றையு மிகழ்ந்து சுதேசத்திற்குப் பாடுபட்டு மகிமையடைந்த தேசாபிமானியாகிய மாட்ஸினி (Mazzini) யென்னும் மகான் மேற்கூறிய அபிப்பிராயத்தைப் பலவாறு வற்புறுத்திக் கூறியிருக்கிறார். 1789—92 வருடங்களில் பிரெஞ்சுக்காரர் தங்கள்தேசவொழுங்கை மாற்றுவதற்குச் செய்த கொடுங்கலகத்தைத் தூண்டிவிட்ட இலக்கியங்களின் பிரதானகருத்தும் அச்செய்கைநேரிட்டபின் ஐரோப்பியசனங்கள் இதுவரையில் முக்கியமாய்க் கொண்டாடுவதும் யாதெனில், சுதந்திரங்களை ஒவ்வொருவரும் பரிபூரணமாகக்கைக்கொள்ளுவதே புருஷார்த்தமென்னும் இச்சித்தாந்தமே. மாட்ஸினி என்பவர் தன்னினத்தாருக்குப் பின்வருமாறு ஒருதருணத்தில்நற்புத்திகூறினார்:-"மகா சனங்களே! 50-வருடகாலமாய் ஐரோப்பாகண்டத்தில் கொடுங்கோல்மன்னரும் பிறவிப்பெருமையுடையவரும் ஆக்கிரமித்து வந்த அதிகாரங்கள் குலைந்து நமக்குள் நடந்திருக்கும் சீர்திருத்தமெல்லாவற்றிற்கும் மூலாதாரம் யாதெனில், மனிதர் தமக்குரித்தாகிய சுதந்தரங்களைக் கைக்கொண்டாலன்றி இகத்திற் சுகமில்லையென்னுஞ் சித்தாந்தமே. சனங்களின் சுயாதீனத்திற்கு விரோதமான தடைகளெல்லாம் நாசமடைந்து சுயாதீனம் நாள்தோறும் மிகுந்து வருகின்றது. ஆகிலும் இடைவிடாது உழைத்துப்பிழைக்கும் கணக்கில்லாதசனங்களுக்குச் சுகானுபவம் எள்ளளவாகிலும் விருத்தியடைந்திருக்கிறதா? இல்லை. அநேகமாய் எல்லாத் தேசங்களிலும் ஜீவனங்கழிக்க இன்றியமையாத சாமான்களுக்கெல்லாம் விலை யுயர்ந்திருக்கின்றது; அநேக கைத்தொழில்களில் வேலைக்காரர்களின் கூலி நாளுக்குநாள் குறைந்துகொண்டு வருகின்றது; கூலிக்கு வேலை கிடைப்பதும் வரவர அரிதாய்க் கொண்டுவருகிறது. ஒவ்வொரு சங்கத்திலும் செல்வத்தின்தொகையும் சுகானுபவத்திற்கு வேண்டியகருவிகளும் தாராளமாய் விருத்தியாய்க்கொண்டு வருகின்றன. பணக்காரருக்கு நாளுக்குநாள் செல்வம் மிகுவதும் ஏழைகளுக்கு வறுமை மிகுவதுமாகிய இக்காட்சிகளை நமெவ்விடத்துங் காண்கிறோம்." இப்படி மாட்ஸினி என்பவர் பரிதபித்துக் கூறியபின் மனிதரின் நிலைமையைச் சீர்திருத்தற்குரிய நிவர்த்தியைப் பின்வருமாறு தனது சொந்த அபிப்பிராயமாய்க் கூறியிருக்கிறார்:— "எல்லாமனிதரும் கடவுளொருவரின் புத்திரரென்றும்; அவர் ஆக்கினையால் நியமிக்கப்பட்டிருக்கும் மானிட தருமத்தை நிறைவேற்ற நாமுடன்பட்டிருக்கிறோமென்றும்; அநீதியைக்களைந்து நமதுசகோதரருக்கு உபகாரம் செய்வதே ஒவ்வொருவருக்குஞ் சுதந்தரமாவதுமன்றி அவருக்குரிய மானிடதருமம் (அல்லது கடமை) ஆகப் பாவிக்கவேண்டுமென்றும்; அத்தருமத்தை உறுதியாய்க் கைக்கொள்ளல் இச்சன்மத்திற்குரியதென்றும், அதைக் கைவிடல் கொடும்பாவமென்றும் எல்லாமனிதருக்கும் நாம் வற்புறுத்திக் கூறவேண்டும். சகோதரர்களே! தங்களுடைய சுதந்தரங்களை யிழந்துவிடும்படி நான் சொல்லவந்தவனல்ல. ஒவ்வொருவரும் தமதுகடமைகளை நிறைவேற்றினால், ஒவ்வொருவருக்கும் சுதந்தரங்களும் தவறாது கிட்டுமென்று துணிந்து நமதுகடமைகளைச் செய்வதையே நாம் முதலிற் கவனிக்கவேண்டியதென்பது எனதபிப்பிராயம். தமது சுகத்தைக் கைக்கொள்ளுவதையே பிரதமதருமமாய்க் கருதினால், மனிதர் பரோபகாரத்தை மறந்துவிடும்படி நேரிடும்; உலகத்தில் இப்பொழுதுவிளங்கும் கஷ்டநிஷ்டூரங்கள் நிரந்தரமாய்க் குடியேறிவிடும்."

மாட்ஸினி என்பவர் இவ்வாறு சொல்லியிருப்பதில் நிரம்ப வுண்மையுளதென்பதற் கையமில்லை. ஆகிலும் அது முற்றிலுமொத்துக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், சுதந்தரங்களும் கடமைகளும் மனிதருக்குச் சமமாகவே ஏற்பட்டிருக்கின்றன. ஒன்றைத்துறந்து மற்றதைமாத்திரம் கைக்கொள்ளுவது சரியல்ல. அவை யிரண்டினிலக்கணங்களில் வேறுபாடிருந்தாலும் பரஸ்பரவிரோதமில்லை. சிலவிடங்களிற் கடமைகளைச்செய்வது உயர்ந்த தருமமாயும், சிலவிடங்களிற் சுதந்தரங்களைக் கைவி

டாது நிறைவேற்றிக்கொள்ளுவது உயர்ந்ததருமமாயும் விளங்குகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் சமயோசிதமாய் நடந்துகொள்ள வேண்டியது. இதைத்தவிர்த்து வேறு அபிப்பிராயங்களுக்குத் தகுந்த ஆதாரமில்லை. அவைகளை எல்லாரும் தம்முலகவாழ்க்கைக்கு விதியாகக்கொண்டு நடந்தால் வேலைக்காரரின் ஊக்கமும், சொத்தின்காப்பும், குடும்பத்திலுள்ள நேசமுஞ்சுகமும் ராச்சியத்திற் குடிகளுக்குரிய சுதந்தரங்களும் நாளடைவிற் குலைந்து சங்கத்தினழிவிற்கேதுவாய்த் தீர்ந்துவிடும்.

17. மனிதருக்குரிய சுதந்திரங்கள் தேசகால வர்த்தமானங்களுக்குத் தக்கபடி சில எல்லைகளுக்கும் விலக்குகளுக்கு முட்பட்டு செலுத்தப்பட்டு வருகின்றன. பகுத்தறிவதற்குரிய முதிர்ந்த பருவமடையாதிருத்தல், உடலினுறுப்புகளிலொன்றில்லாதிருத்தல், வியாதியினால் வருந்தல் முதலிய பலகாரணங்களால் ஒருவன் தன் சுதந்தரங்களைச் சிலநாள் அல்லது முற்றிலும் இழந்திருக்கலாம். சிலருக்குப் பைத்தியம் பிடித்தாவது ஸ்திரபுத்தி யில்லாததினாலாவது சிலவிஷயங்களில் தங்கள்தங்கள் சுதந்தரத்தையிழந்துவிடலாம். ஒருவிஷயத்தில் ஒருதரம் சுதந்தரத்தைச் செலுத்துவதினால் மறுபடி அதைச்செலுத்தாது தடுக்கப்படலாம்; உதாரணமாக, காலை காலையில் 8-மணிமுதல் பகல் முழுவதும் ஒருவேலைக்காரனை நியமித்து அவனோடுடன்படிக்கை செய்தபிறகு அன்று 8-மணிக்குமுன்னும் முற்கூறியவனிடத்தில் ஒருதவறும் காணாதிருக்கையிலும் மற்றொருவனை நியமிப்பது தகாது. சிலசமயங்களில் ஒருவன் தன்சுதந்தரத்தைக் கைவிட்டால், அது அவனுக்கு மறுபடி கிடைக்காமற்போகலாம். உதாரணமாக: ஒருபசுவைத் தானஞ்செய்துவிட்டால் மறுபடி அதைப் பணங்கொடுத்துவாங்காமலும், தானம்வாங்கினவன் அதைத் திரும்பிக் கொடுக்காமலுமிருந்துவிட்டால், அப்பசுவிற்குள்ள சுதந்தரம் நமக்கு மீண்டுவருவதில்லை. சொத்திற்குரிய சுதந்தரமிருப்பதால் எல்லாருக்குஞ் சொத்திற்குப் பாத்தியமுண்டென்றும், ஒன்றுமில்லாத தரித்திரனுக்குத் துரைத்தனத்தார் நிலத்தையாவது வேறு சொத்தையாவது அவனுக்குக் கொடுக்கவேண்டியதென்றும் கொள்ளக்கூடாது. சுதேசிகளுக்குள்ள சுதந்திரங்களையெல்லாம் அன்னியருக்குக்கொடுப்பது தற்காலத்து நாகரிக முறையின்படி வழக்கமில்லை. துரைத்தனத்தார் வரிவாங்காது ஆளுகையைச் செலுத்துவது அசாத்தியமாதலால், சொத்திற்குரிய சுதந்தரம் வரிகொடுப்பதால் ஒருவாறு குறைந்துபோவதாய்க்கூறலாம். மேலும் ஜர்மனி முதலியதேசங்களில் குடிகள் யாவரும் கட்டாயமாய்ச் சிலகால மிராணுவத்திற் சேவிக்கவேண்டுமென்று நிபந்தனை யேற்பட்டிருக்கிறது; இதுவும் மனிதருக்குச் சொத்திலும் தங்களுடலிலுமுள்ள பூரண சுதந்தரத்திற்கு ஒரு விலக்காகின்றது. வேறுவிலக்குகள் பிரத்தியேக சுதந்தரங்களைப்பற்றி யெழுதுங்கால் ஆங்காங்கு விளங்கும்.

18. ஒவ்வொருவருக்கும் அவரவர் சுதந்தரங்களைத் தெளிவாகக்குறித்தும், துயிலுறாது அவற்றைப்பாதுகாத்தும், மற்றோர் அவைகளை மீறிநடக்குங்காலத்துத் தகுந்த நிவர்த்தியைச் செய்தும், சனங்களைப் பரிபாலித்துவருவதற்கு நியாயமென்றும் பட்சபாதமின்மை யென்றும் பெயர். நியாய மெவ்விராச்சியத்திற் குடிகொள்ளுகிறதோ அவ்விராச்சியத்தில்தான் சனங்களுக்குச் சுயாதீனம் புலப்பட்டு விளங்கும். எம்மட்டு நியாயங்குறைகிறதோ அம்மட்டும் சனங்களுக்கு அடிமைகளினிலக்கணம் விருத்தியாய்விடும். மேலும் எத்தேசத்தில் சனங்கள் தங்கள்சுதந்தரங்களைப் பாதுகாத்துக்கொள்ளாமலும் பிறருடைய சுதந்தரங்களை மதிக்காது நடப்பதாலுண்டாகும் தீங்குகளை யறியாமலுமிருக்கிறார்களோ அத்தேசத்து ஜனங்களுள் குலீனருக்*குரிய மரியாதையென்று உலகத்திற் கொண்டாடும் நற்குணம்விலகி இழிவான பலதுர்க்குணங்களும் நடைகளும் பாவனைகளும் வரைமீறி மிகுந்துவிடுமென்பதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

கி. சுந்தரராமன் எம். ஏ.

நடுவேனிற்கனவு.

மூன்றாவது அங்கம்.

2-ம் இடம்.—காட்டில் வேறொருபாகம்.

[ஒபரான் வருதல்.]

ஒபரான்.—டிடேனியா விழித்தாளோ! விழித்து யாரைப்பார்த்து ஆசை கொண்டலைகிறாளோ!

[பக் வருதல்.]

இதோ வருகிறான் என் தூதன். ஓ! பித்துப்பிடித்தபேயே, நாமிருக்கும் இச்சோலையில்இன்றிரவில் ஏதேனும் விசேஷம் நடந்ததுண்டெனிற் கூறுக.

பக்.—என் அரசி ஒரு மகா விரூபிமேல் ஆசை கொண்டிருக்கிறாள். அவள் உறங்குகையில், அவளிருக்கும் பூஞ்சோலைக்கருகில் ஆதென்ஸ் நகரத்துப் பணிக்களரியில் வேலை செய்து பிழைக்கும் சில கைத்தொழிலாளிகள் வந்து, அரசனது கலியாணநாளிரவில் தாம் அவன்முன் ஆட நிச்சயத்திருக்கும் களிக்கூத்தை ஒருமுறை ஆடிச் சரிபார்த்துக்கொள்ளத் தொடங்கினார்கள். அப்பொழுது அவ்வாட்டத்தில் 'பிரமஸ்' வேஷம் போடுபவன் தான் சொல்வதைச் சொல்லிவிட்டு அவர் கூட்டத்தினின்றும் சோலைக்குள் வர, நான் அச்சமயம் பார்த்து அவனுக்குக் கழுதைமுகம் உண்டாகும்படி செய்தேன். அவன் திரும்பி அவர் கூட்டத்துள் போகவே அக்கோர ரூபத்தைக்கண்டு எல்லோரும் பயந்து நடுங்கி ஒருவர் மேலொருவர் விழுந்து தடுமாறி காட்டில் கல்லிலும் முள்ளிலும் போய்த் தங்கள் உடை முதலியவற்றைக் கிழித்துக்கொண்டு ஓடினார்கள். இவ்வாரவாரத்தில் டிடேனியா உறக்கமுணர்ந்து அக்கழுதைத்தலையோன் முகத்தில் விழித்தாள். விழித்ததுமுதல் அவன்மேல் ஆசைமிகுந்திருக்கிறாள்.

ஒபரான்:—நான் நினைத்ததிலும் இஃது இன்னும் அதிகநன்றாய் முடிந்தது. நான் சொல்லிய வண்ணம் ஆதென்ஸ் நகரத்தோன் கண்களில் நேசரசத்தைப் பிழிந்தாயோ?

பக்.—அதுவும் ஆயிற்று. அவனுறங்கினான்; அம்மாதும் அவனருகில் உறங்கினாள்; அவன் உணர்ந்து அவள் முகத்திலேயே விழித்திருப்பான்.

[ஹெர்ம்யாவும் டெமிட்ரியஸ்ஸும் வருதல்.]

ஒபரான்.—மறைந்து நில். இவன்தான் நான் சொல்லிய அவ்வாதென்ஸ் நகரத்தோன்.

பக்.—நான் கண்டமாது இவளே; மனிதன் இவனல்லன்.

டெமிட்ரியஸ்.—உன்னை நேசிப்பவனை நீ ஏன் இவ்வாறு கடிந்து பேசுகிறாய்; இஃது உன் பகைவரிடத்துச் சொல்லவேண்டிய பேச்சன்றோ?

ஹெர்ம்யா.—உன்னை இப்பொழுது கடிந்து பேசினேன்; உனக்கு இன்னும் செய்யத்தக்கது வேறுளது; நாசமுற உன்னைச் சபிக்கவேண்டும். என் லைஸாண்டரைக் கொன்ற துண்டெனின், என்னையுங்கொன்று நீ மேற்கொண்ட கொலைத்தொழிலை முற்றும் நிறைவேற்று. அவன் என்னிடத்து உறுதியான உண்மையுடையோன்; பகலினிடத்தும் பகலவனுக்கும் அவ்வளவு உறுதியில்லை; யான் உறங்குகையில் என்னைவிட்டு நீங்கான்; ஆதலின், நீ அவனைக்கொன்றா யென்றே எண்ணுகிறேன். உன் பார்வை கொலைக்காரன் பார்வைபோல் உற்சாகமிழந்து பயங்கரமாய்க் காணப்படுகின்றது.

டெமிட்ரியஸ்.—உன் கொடுமையாற் கொலையுண்டவன் பார்வையை யுடையேன். என்னைக் கொலைசெய்தவளாகிய நீ ஆங்குத்தோன்றும் வெள்ளிபோல் நிர்மலமாய் ஒளி வீசுகின்றாய்.

ஹெர்ம்யா.—இம்மொழியால் என் லைசாண்டரின் செய்தி எவ்வாறு விளங்குகின்றது! அவன் எங்கே? நற்குணமுள்ள] டெமிட்ரியஸே அவனை நீ எனக்கு நல்குவையோ?

டெமிட்ரியஸ்.—அவன் பிணத்தை நாய்க்கெறிவேன்.

ஹெர்ம்யா.—அடா நாயே, என்னைப் பெண்பாலார்க்குரிய வரப்புகடந்து பேசச் செய்கின்றாய். அவனைக்கொன்றாயோ? பாவி! அவன்உயிருள்ளோர் கூட்டத்தில் இல்லாதவனானானோ! உண்மை கூறு; என் பொருட்டாயினும் ஒரு முறை உண்மை கூறு; அவன் உறக்கமுணர்ந்து எழுந்தபின் அவன் முகத்தை எதிட்டுப்பார்க்கத் துணிந்தாயோ? அவன் உறங்குகையிற் கொன்றாயோ? ஆ, என்ன வீரம்! இதை ஒரு புழுவும் செய்யாதோ? மானிடப்பாம்பே. இரட்டை நாவுடைய இழிந்த பாம்பும் செய்யாத காரியமடா பாவி இது!

டெமிட்ரியஸ்.—உன் கோபத்தை இடமறியாமல் ஏன் என்மேல் தாக்குகிறாய்? லைஸாண்டர் வழிக்கு நான் போனவனல்லன்; அவன் இறந்தவனல்லனென்றும் அறிகிறேன்.

ஹெர்ம்யா.—ஆனால் அவன் சுகமாயிருக்கின்றானோ? உன்னை வருந்திக்கேட்கிறேன்; சொல்லுக.

* குலீனர்=குலமுளோர்=நற்குலமுள்ளவர்.

டெமீட்ரியஸ்.—அதைச் சொல்வதற்கு எனக்கு நீ உதவும் கைம்மாறு யாதோ?

ஹெர்ம்யா:—நீ என் முகத்தில் விழியாதொழிவதே இதற்குக் கைம்மாறு. துரோகீ, உன் முன் நிற்காமல் இதோ போகின்றேன். (போதல்)

டெமீட்ரியஸ்.—அவளுடைய இக்கோப வெறியில் உடன் செல்லல் உசிதமன்று. இவ்விடத்திற் சற்றிருந்துஇளைப்பாறுவேன். துக்கத்தின் கடுமையை ஒருவாறு தணிக்கும் உறக்கம் வருகின்றது. (கீழே படுத்து உறங்குதல்)

ஒபரான்.—பக்கே, நீ என்ன காரியஞ் செய்தாய்? தவறிப்போய் நேசமுள்ளவன் கண்ணில் நேசரசத்தைப் பிழிந்தமையின், நேசமில்லாவிடத்து நேசத்தை உண்டாக்காமல் நேசமுள்ளவிடத்து நேசத்தைக் கெடுத்தாய்.

பக்.—உலகத்தில், தான் செய்த பிரதிக்கினைக்குத் தக்கபடி நடப்பவன் ஒருவன்; செய்த பிரதிக்கினையை மீறி ஒன்றின்பின் ஒன்றாகப் பொய்ப்பிரதிக்கினை செய்துகொண்டே இருப்பவர் பத்துலக்ஷம் பேர்கள்: இதுவே விதியின் சங்கற்பமெனத்தோற்றுகின்றது.

ஒபரான்.—நன்று; நீ இப்பொழுது இக்காட்டில் காற்றினும் அதிகவேகமாய்ச் சென்று, காமநோயால் முகம்வெளுத்துப் பெருமூச்செறிந்து இரத்தம் குறைந்து வருந்துகின்ற ஹெலனு வென்னும் ஆதென்ஸ் மாதைத்தேடி எவ்வுபாயத்தாலேனும் அவளை இவ்விடத்திற் கொண்டு வந்து சேர்ப்பிப்பாயாயின், நான் இவன் கண்களை நேசரசத்தால் மயக்கி, அவளைக்கண்டு காதல் கொள்ளச் செய்வேன்.

பக்.—இதோ போவேன். அம்பினும் வேகமாய் நான் அரை நொடியிற் போவதைப்பாரும். (பக்-போதல்.)

ஒபரான்.—இச்செம்மலரின் இரசத்தைஉன் கண்மணியிற் பிழிவேன். நீ உறக்கமுணர்ந்து அவள் முகத்தில் விழிக்கையில், அவள்உனக்கு வானத்து வெளிபோற் பெருஞ் சோதியாய்விளங்க, நீ மாரன் வாளியாற் புண்பட்டு அப்புண்ணையாற்றும் மருந்தை அவளிடத்து இரப்பாயாக.

[பக் பின்னும் வருதல்.]

பக்.—என் கந்தர்வத்தலைவ, ஹெலனு இதோ வருகிருள்; நான் தவறி இரசம்பிழிந்த வாலிபனும், தான் அவள்மேற் கொண்டிருக்கும் காதலுக்குக் கூலியாக அவள் ஒரு முத்தந்தாராளோவென்று அவளிடத்து இரந்து நடக்கின்ருன். இவ்விநோதக் காட்சியைக் காண்போமோ? ஆ! மானிடர்கள் என்ன மூடர்கள்.

ஒபரான்.—விலகி நில்; அவர்கள் செய்யும் அரவம் டெமிட்ரியஸ்ஸை எழுப்பிவிடும்.

பக்.—அப்பொழுது இருவரும் ஒருத்திமேல் நேசங்கொண்டவராவர். அதுவும் ஒரு வேடிக்கையே? இவ்வாறு தாறுமாருய் நேருவதில்எனக்கு நிரம்பச் சந்தோஷம்.

[லைஸாண்டரும் ஹெலனுவும் வருதல்.]

லைசாண்டர்.—உன்னைப்பழிப்பாக நேசிக்கிறேனென்று ஏன் எண்ணுகிருய்? கண்ணீர் விட்டுக் கதறுகையில் அதைப்பழிப்பு என்னலாமோ? நான் நேசப்பிரதிக்கினை செய்யும்பொழுது கண்ணீர் விடுவதைக் காண்கின்ருயே; இவ்வாறு கண்ணீரோடு பிறக்கும் பிரதிக்கினை உண்மையானதன்றிப் பிறிதொன்ருமோ? உண்மையான நேசத்துக்குரிய அடையாளங்களைக் காணும் பொழுதும் அவை என்னிடத்திற் பொய்யென்றும், என் நேசம் பொய்ந்நேசமென்றும் உனக்கு ஏன் தோற்றுகிறதோ?

ஹெலனு.—வரவர உன் கபடம் அதிகரிக்கின்றது. முன்னுக்குப்பின் விரோதமாய்ப் பிரதிக்கினை செய்கிருய். ஹெர்ம்யாவுக்குச் செய்து கொடுத்த பிரதிக்கினை யாதாயிற்று? அவளை விட்டாயோ? நீ நிலையற்றவன். அவளிடத்தும் பிரதிக்கினை என்னிடத்தும் பிரதிக்கினையா? ஒன்ருேடொன்று தூக்கிப்பார்; எது அதிக கனமுடையது? உனக்கு எல்லாம் வெறுங் கட்டுக்கதையைப்போற் கனமில்லாதனவேயாம்.

லைசாண்டர்.—அவளுக்குப் பிரதிக்கினை செய்து கொடுக்கும் பொழுது எனக்கு விவேகமில்லை.

ஹெலனு.—இப்பொழுது அவளை விடுவதில் விவேகமுள்ளாயென்றும் நான் எண்ணவில்லை.

லைசாண்டர்.—டெமிட்ரியஸ் அவளை நேசிக்கிருன்; உன்னை நேசிக்கவில்லை.

டெமீட்ரியஸ்.—(விழித்து) ஓ! ஹெலன்! ஓ! தேவி! வனதேவதையே! உத்தமோத்தமீ! என் காதலியே, உன் நிர்மலமான கண்களுக்கு ஒப்பாவதியாகும்? பளிங்கும் கலக்கமுள்ளதே. உன்

இரண்டு உதடுகளும் காண்போர் காதலிக்கும்படி பழுத்த சோவைப்பழம்போற் சிவந்துதோன்றுகின்றன. 'டாரஸ்' மலையுச்சியில்உறைந்து கீழ்காற்ருல் அசைக்கப்படும் மிக்க வெண்மையான வெளுத்திருக்கும் பனிக்கட்டியும் நீ கையை நீட்டுகையில் காக்கைபோற் கறுத்துத் தோன்றுகின்றது. இக்கையை, வெண்மைக்கரசை, என்னன்பிற்கு உறுதி நல்கும் இவ்வின்ப முத்திரையை முத்தமிடுகின்றேன்.

ஹெலனு.—ஓ! இஃதென்ன துன்பம்! நீங்கள் இருவரும் என்னைப்பழித்து மகிழ்வுறக் கருதினீர். மரியாதையுள்ளவராயின் நீங்கள் எனக்கு இத்தீங்கிழையீர். நீ என்னை வெறுப்பதை யான் அறிவேன்; அப்படியே வெறுத்திராமல் என்னைப் பழிப்பவரோடு சேர்ந்து கொள்ளல்வேண்டுமோ? புறத்தோற்றத்திற்கு மனிதரைப்போற் காணப்படுகின்றீரே! உண்மையிலும் அவ்வாறு இருப்பீராயின், சாதுவான குலமாதை இவ்வாறு பழித்தல் உங்களுக்கு அடுக்காது. என்னை நீ மனப்பூர்வமாய் வெறுக்கிருயென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்க, இத்தனை பிரதிக்கினையும், பிரமாணமும், என்னைப்பற்றி அளவில்லாப் புகழ்ச்சியும் செய்வது எதற்காக? நீங்கள் ஒருவருக்கொருவர் எதிரிகளாயிருந்து ஹெர்ம்யாவை நேசிப்பதுபோல், என்னைப் பழிப்பதிலும் அவ்வாறே எதிரிகளானீர்களோ? என்ன தீரமான காரியம்! பேதைப்பெண்ணைப் பழித்துக் கண்ணீர்விடச்செய்யும் ஆண்பிள்ளையின் வீரம் என்ன வீரம்!

லைசாண்டர்.—டெமிட்ரியஸ், நீ இரக்கமற்றவன்; நீ ஹெர்ம்யாவை நேசிக்கின்ருய்; அஃது எனக்குத் தெரியுமென்பதை நீ அறிவாய். இப்பொழுது மனப்பூர்வமாய் என்னுள்ளன்போடு எனக்கு ஹெர்ம்யாவின்மேலுள்ள நேசத்தை உனக்கு விட்டுவிடுவேன்; அப்படியே நீ, உனக்கு ஹெலனுவின்மேலுள்ள நேசத்தை எனக்கு விட்டுவிடு. அவள்மேல் எனக்குள்ள ஆசை என்னுயிர் உள்ள அளவும் விடாது.

டெமீட்ரியஸ்.—உன் ஹெர்ம்யாவை நீயே வைத்துக்கொள்; நான் வேண்டேன். அவளை நான் நேசித்த துண்டெனின் அந்நேசம் இப்பொழுது போய்விட்டது. இருப்பிடம் விட்டு அலையும் வழிப்போக்கனைப்போல் என் நேசம் சிறிதுகாலம் அவளிடத்திற் சஞ்சரித்து இப்பொழுது ஹெலனுவென்னும் இருப்பிடத்தை யடைந்து நிலைபெற்று நிற்கின்றது.

லைசாண்டர்.—ஹெலனு, இஃது உண்மையன்று.

டெமீட்ரியஸ்.—என்நேசத்தைநீ அறிவாயோ? அறியாததைப்பற்றி நீ ஏன் இழிவாய்ப் பேசுகிருய்? இனி அப்படிப் பேசுவாயாயின் நான் சும்மா இரேன், நீ நேசிப்பவள் அதோ வருகிருள் பார்.

[ஹெர்ம்யா பின்னும் வருதல்.]

ஹெர்ம்யா.—கண்ணின்காட்சியைக் குறைக்கும் இவ்விருண்ட இரவானது காதிற்கு அதிக சக்தியை உண்டுபண்ணுகின்றது. கண்ணின் பார்வை குறையுமிடத்து அதற்கீடாகக்காதின் கேள்வி இரண்டுமடங்காகின்றது. லைஸாண்டரே, உன்னை நான் கண்ணிற்காணுவிடினும் உன் குரலைக் காதாற்கேட்டு உன்னிடத்து வருகிறேன், என்னை ஏன் இரக்கமின்றி அப்படிவிட்டகன்ருய்?

லைஸாண்டர்.—ஆசை தூரத்தும்பொழுது அவன் அங்கு நிற்பானே?

ஹெர்ம்யா.—என்னருகினின்றும் லைஸாண்டரைத் தூரத்தும் வன்மையுள்ள ஆசையுமுளதோ?

லைஸாண்டர்.—அழகிய ஹெலனுவின் மேலுள்ள ஆசை அவனைத் தூரத்தியது; அவளோ வானத்து மீனிலும் அதிக ஒளியை உடையாள். நீ ஏன் என்னைத்தேடுகிருய்? உன்மேலுள்ள வெறுப்பே என்னை உன்னைவிட்டு நீங்கும்படி செய்ததென்று இதனுல் அறியாயோ?

ஹெர்ம்யா.—அஃது ஒருநாளுமிராது. நீ நினைக்கிறதுபோல் பேசவில்லை.

ஹெலனு.—இவளும் இக்கூட்டத்திற் சேர்ந்தவளே! என்னைப் பரிகாசஞ் செய்வதற்கு மூவரும் சேர்ந்துகொண்டார்கள். நிந்திக்கும் ஹெர்ம்யாவே, ஓ! நன்றியற்றவளே, நீயும் இவர்களோடு சேர்ந்து என்னைப் பழிப்பாயோ? நாம் மனமொத்த தோழிகளாய்க் காலங்கழித்ததை மறந்து விட்டாயோ? நம் பள்ளிக்கூடத்துறவும்

பிள்ளைப்பிராயத்து மாசற்றமனமும் போயினவோ? நாமிருவரும் ஓராசனத்திருந்து ஒரு துணியில் நம்முசியால் ஒரே பூவேலை செய்துகொண்டும் அப்படிச்செய்யும்பொழுது, நம் கையும் [illegible] ளணபோல் ஒருசுரத்தில் ஒரேபாட்டை இருவரும்பாடிக்கொண்டும், பார்வைக்குப் பிரிந்தும் பிரிக்குங்காற் சேர்ந்துமிருக்கும் இரட்டைக்கனிபோல், யாக்கை இரண்டும் ஆவி ஒன்றுமாய்க் கூடிவளர்ந்தோமே. நம்முடைய இப்பண்டை நட்பைக்குலைத்து இப்பொழுது உன்ஏழைத்தோழியை இகழ்வதில் இப்புருஷரோடு சேர்வாயோ? இது நட்புக்கு நன்றன்று; கன்னிக்கு அடுக்காது; இதனால் வரும்துன்பத்தை அடைபவள் யான் ஒருத்தியாயிருப்பினும், இதற்காக உன்னைக் கடிந்துபேசும் பெண்பாலோர் பலராவர்.

ஹெர்மியா.—உன் உக்கிர மொழியைக்கேட்டு அதிசயிக்கின்றேன்; நான் உன்னைப்பழிக்கவில்லை; நீ தான் என்னைப் பழிப்பதுபோற் பேசுகிறாய்.

ஹெலனு.—என் கண்ணையும் முகத்தையும் வியந்து பழித்து, என்னைத்தொடரும்படி லைஸாண்டரை ஏவியவள் நீயன்றோ? சற்றுமுன் வரையில் என்னைக்காலால் உதைத்துத்தள்ளிய உனது மற்றொரு நேசனுகிய டெமிட்ரியஸ் என்னைத் தேவதையென்றும், திவ்வியரூபியென்றும், அரும்பொருளென்றும் கூறும்படி செய்தவள் நீயன்றோ? அவன் தான் வெறுப்பவளை ஏன் இவ்வாறுபுகழ்ந்து பேசுகிறான்? லைஸாண்டரின் மனம் உன் அன்பால் நிறைந்திருக்க, உன் அனுமதியாலும் தூண்டுதலாலுமன்றி, அவன் அவ்வன்பை மறுத்து என்னிடத்து அன்பு பாராட்டுவானே? உன்னைப்போல் எனக்கு அழகு இல்லையாயின் என்னை? உன்னைப்போற் காதலைப்பெறும் அதிட்டமிலேன்; இழிவாய் அன்பில்லார்மேல் அன்புபாராட்டி அலைகின்றேனென்னினும் என்னை? இதற்கு என்னை நீ இகழ்வது முறையோ? நீ காட்டவேண்டியது இரக்கமன்றோ?

ஹெர்மியா.—நீ சொல்லியதின் பொருள் எனக்கு விளங்கவில்லை.

ஹெலனு:—நன்று என்னைப்பழிப்பதை நிறுத்தவேண்டுவதில்லை; என்னிடத்து இரக்கமுள்ளவர்கள்போலே அபிநயஞ்செய்யுங்கள். என் புறத்து முகங்கோட்டி நகையுங்கள்; ஒருவருக்கொருவர் கண்ஸமிக்ஞை செய்யுங்கள். எவ்விதத்திலாவது உங்கள் பரிகாசத்தை நிலைபெறச் செய்யுங்கள். சிறிதேனும் இரக்கமோ, மரியாதையோ, பெருந்தன்மையோ உடையீராயின் என்னை இப்பழிப்புக்கு ஆளாக்குவீரோ? நன்று; சுகமாயிருங்கள். இஃது என் குற்றமே; இதை மாற்றுவதற்கு இறப்பேன்; அன்றேல் இவ்விடம் விட்டுப்போவேன்.

லைஸாண்டர்.—என் குணமுள்ள ஹெலனுவே, நிற்க; நிற்க; நான் சொல்லுவதைச் சற்றுக்கேள். என்நேசமே, என்னுயிரே!

ஹெலனு.—ஓ ! திவ்வியம்! திவ்வியம்!

ஹெர்மியா.—என் மதுரமே, அவளை அப்படிப் பழியாதே.

டெமிட்ரியஸ்.—ஹெர்மியாவின் பிரார்த்தனைக்கு இணங்கானுயின், என் வன்மைக்கு இணங்கச்செய்வேன்.

லைஸாண்டர்.—அவளுடைய பிரார்த்தனையிலும் உனது ஆற்றல்என்னிடத்து அதிகவலியுளதோ? ஹெலனு, உன்னைநேசிக்கின்றேன்; என் இன்னுயிரானை! உன்னை நேசிக்கிறேன். எனக்கு உன்னிடத்து நேசமில்லையென்பவன் பொய்ம்மொழியனென்று அவ்வின்னுயிரைக் கொடுத்தாவது மெய்ப்பிப்பேன்.

டெமிட்ரியஸ்.—அவனிலும் நான் உன்னை அதிகமாய் நேசிக்கின்றேன்.

லைஸாண்டர்.—அப்படியானால் வா; அந்நேசத்தைத் தனிப் போரால் மெய்ப்பி.

டெமிட்ரியஸ்.—சீக்கிரம் வா.

ஹெர்மியா.—லைசாண்டர், இஃது எவ்வாறு முடியுமோ?

லைஸாண்டர்.—நீ போ; கருங்குறத்தி!

டெமிட்ரியஸ்.—என்ன பேஷஜம்செய்கிறாய்! அவளை வெறுத்துவிட்டவன்போற் காட்டுகிறாய்; ஆவேசமாய்ப் போருக்கு வருபவன்போல் வேஷம்போடுகிறாய்; வரவுமாட்டாய். போடா, வெட்கங்கெட்டவனே.

லைஸாண்டர்.—ஏ! ஏ! பூனையே! உன் கைக்கட்டைவிடு; என்னை ஏன் ஒட்டிபோல் ஒட்டிக்கொள்ளுகிறாய்! என்னை விட்டுவிடு; அன்றேல், பாம்பை உதறுவதுபோல் உன்னை உதறித்தள்ளுவேன்.

ஹெர்மியா.—என் இனிய அன்பே, இஃதென்ன மூர்க்கம்! என்னமாறுதல் உண்டாய்விட்டது!

லைஸாண்டர்.—உன் அன்பா! இங்கு நில்லாதே போ.கறுத்த குரூபியே, இவ்விடம்விட்டுப் போ. குமட்டும் மருந்தே, வெறுப்பான விஷமே, அகன்றுபோ.

ஹெர்மியா.—பரிகாசமாய்ப் பேசுகிறாயோ?

ஹெலனு.—ஆம்; நீயும் அப்படியே பேசுகிறாய்.

லைஸாண்டர்.—டெமிட்ரியஸ், நான் உன்னிடத்திற்சொல்லிய சொல் தவறேன்.

டெமிட்ரியஸ்.—நான் உன் வெறும்பேச்சை நம்பேன்; நீ உறுதிச்சீட்டு எழுதித்தரல்வேண்டும்; ஒரு பெண்பிள்ளை கட்டினகட்டை மீறி வருவதற்கு ஆற்றாதவன் நீ.

லைஸாண்டர்.—என்னை என்ன செய்யச்சொல்லுகிறாய். அவளை நான் அடிக்கவோ, புண்படுத்தவோ, கொல்லவோ? நான் அவளை எங்ஙனம் வெறுப்பினும், அவளுக்கு இவ்வாறுதீங்கு செய்யேன்.

ஹெர்மியா.—வெறுப்பதிலும் எனக்கு நீ செய்யக்கூடிய பெருந்தீங்கு வேறுண்டோ? என்னை வெறுக்கிறாய்; ஏன்? ஆ! கஷ்டம்! என் காதலனே, யாது நிகழ்ந்தது? நான் ஹெர்மியாவன்றோ? நீ லைஸாண்டர் அல்லையோ? எப்பொழுதுமுள்ள அழகை யான் இப்பொழுதும் உடையேன். இவ்விரவு தொடங்கிய பின்னரும் என்னிடத்து அன்பு நிறைந்திருந்தாயே. அதன் பின்பு என்னைவிட்டு ஏன் அகன்றாய்? உண்மையில் அகன்றாயென்று யான் எண்ணவோ?

லைஸாண்டர்.—ஆம்; என்னானை! அப்படியே. உன்னை இனிப்பார்க்கும் விருப்பமொழிந்தேன். உன் வீணாசையை ஒழித்துவிடு; இதற்கு இனி ஐயம் வேண்டுவதில்லை. உண்மை கூறினேன். உன்னை வெறுத்து ஹெலனுவை நேசிப்பது பரிகாசமன்று.

ஹெர்மியா.—ஆ! கொடுமை! அடி மாயாவி! பூவரிக்கும் புழுவே, நேசக்கள்ளி, இரவில் வந்து என் காதலனது நேசத்தைக் கொள்ளைகொண்டாயோ?

ஹெலனு.—இது மிகநன்று; உனக்கு அடக்கமில்லையோ? நாணம் இழந்தாயோ? கூச்சமற்றாயோ? சிச்சீ! *பாவையே, என் நல்வாயிலிருந்து துடுக்கு வார்த்தைகளை ஏன் பறிக்கிறாய்?

ஹெர்மியா.—†பாவையா? ஏனோ? ஆ! அவள் சூதையறிந்தேன். வளர்த்தியில் தன்னையும் என்னையும் ஒப்பிட்டுத் தான் உயர்ந்து கட்டழகுள்ளவளென்று அவனுக்கு உபதேசித்திருக்கிறாள். நான் இவ்வளவு குறியவளாயிருத்தலால் நீ அவன் மதிப்பில் அவ்வளவு உயர்ந்தாயோ? ஏ! ஏ! வர்ணமூட்டிய முகூர்த்தக்காலே, நான் எத்தனைகுறியவள்என்பதை அறிவாயானற்சொல்: நான் உயரத்தில் எவ்வளவு குறைந்தவளாயிருப்பினும், என் கைந்நகங்களுக்கு உன் கண்கள் எட்டும்.

ஹெலனு.—குலமக்களே, நீங்கள் என்னைப்பழிப்பவராயினும், இவள் எனக்குத் தீங்குசெய்யாது காக்க உங்களை வேண்டுகிறேன். நான் சூதுவாது ஒன்றுமறியேன்; கன்னிக்குள்ள கோழைத்தனமெல்லாம் உடையேன். அவள் என்னை அடியாது நீங்கள் காக்கவேண்டும். அவள் என்னிலும் உயரக் குறைவுள்ளவளாகையால் நான் அவளோடு சரியாய் எதிர்த்து நிற்பேனென்று நீங்கள் ஒருவேளை எண்ணுவீர்கள்.

ஹெர்மியா.—உயரக்குறைவுள்ளவள்! கேட்டாயோ! மறுபடியும்.

ஹெலனு.—நற்குணமுள்ள ஹெர்மியாவே, என்னிடத்து ஏன் இவ்வளவு கசந்திருக்கிறாய்? நான் உன்னிடத்து எப்பொழுதும் அன்புடையேனன்றோ? உன் அந்தரங்கங்களை ஒருவரிடத்தும் சொன்னதில்லையே; உனக்கு ஒரு தீங்கும் செய்ததில்லையே. ஆனால் டெமிட்ரியஸ்ஸின் மேலுள்ள நேசத்தால் நீ இக்காட்டுக்கு ஓடிவந்ததை அவனுக்கு உரைத்தேன். அவன் உன்னைத்தேடிவந்தான்; நான் நேசத்தால் அவனை

*பாவை—பிறரால் ஆட்டுவிக்கப்படுபவள்.
†உருவத்திற் சிறியவளை வெறுப்பால் பாவை யென்று அழைப்பதுண்டு.

த்தொடர்ந்து வந்தேன். அவன் என்னை அதட்டினான்; இகழ்ந்தான்; அடிக்கவந்தான்; கொல்லவும் வந்தான். இப்பொழுது நீ என்னை ஒன்றும் செய்யாதிருப்பாயானால் நான் என் அறிவின்மையை நினைத்துக்கொண்டு வந்தவழியே ஊருக்குத்திரும்பிப்போவேன். உன் வழியில் இனி ஒருபொழுதும் வாரேன். நான் எவ்வளவு அறியாதவள்; மதிகெட்டவள்; நீயே பார்; நான் போய் வருகிறேன்.

ஹெர்ம்யா.—போவதற்கென்ன? உன்னைத்தடைசெய்வது யாது?

ஹெலனா.—யான் என்பின்னே விட்டுப்போகும் விவேகமில்லா நேசம்.

ஹெர்ம்யா.—லைஸாண்டரின் மேலுள்ள நேசமோ?

ஹெலனா.—டெமிட்ரியஸ்ஸின் மேலுள்ள நேசம்.

லைஸாண்டர்.—பயப்படாதே; அவள் உனக்கு ஒரு தீங்குஞ் செய்யாது நான் பாதுகாப்பேன்.

டெமிட்ரியஸ்.—ஐயா, லைஸாண்டரே, நீயும் அவளுக்குத் துணையாகவரினும், அவள் ஒரு தீங்குஞ்செய்யாது நான் காப்பேன்.

ஹெலனா.—அவள் கோபகாலத்தில் மிகக் கூர்மையும் சூழ்ச்சியுமுள்ளவள்; அவள் பள்ளிக்கூடத்திற்படிக்குங் காலத்திலேயே மகா துர்க்குணி; அவள் உருவத்திற் சிறியவளாயிருப்பினும் கோபத்தில் மிகப்பெரியவள்.

ஹெர்ம்யா.—சிறியவள் திரும்பவும்! சிறியவள், குறியவள், இவையொழிய வேறு வார்த்தையில்லை. அவள் என்னை இப்படிப் பரிகாசம் பண்ணுவதை நீயேன் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? நானிதோ அவளருகிற்செல்வேன்.

லைஸாண்டர்.—குறுமணியே! சிறுவிரையே!

டெமிட்ரியஸ்.—நீயாக என் முன்னிட்டுக்கொண்டு என் ஹெலனாவுக்குப் பரிந்து செல்லுகிறாய்? உன் உபசாரத்தை அவள் வேண்டுகிறாளில்லை; வெறுக்கிறாள். அவள் வழிக்குப் போகாதே; அவளைப்பற்றியும் பேசாதே; அவளுக்கு நீ பரிந்துசெல்லவும் ஆவசியகமில்லை. அவளிடத்து இனிச் சிறிதேனும் நேசம் பாராட்டுவாயாயின், அதற்குப் பெருந்துன்பம் அனுபவிப்பாய்.

லைஸாண்டர்.—இப்பொழுது என்னை ஹெர்ம்யா கட்டிப்பிடிக்கவில்லை; உனக்கு ஆண்மையுண்டெனின் என்பின் இப்பொழுதுவா; யாருக்கு ஹெலனாவிடத்தில் அதிக உரிமையுள்ளது என்பதைத் தனிப்போரால் தெளிவோம்.

டெமிட்ரியஸ்.—வா! இதோ உன் பின் வருகிறேன். தாடையும் கன்னமும்போல் தொடர்ந்து செல்வோம். (லைஸாண்டரும் டெமிட்ரியஸ்ஸும் போதல்.)

ஹெர்ம்யா.—என்னம்மா! இத்தனை துன்பமும் உன்னாலே. திரும்பிப் போகாதே; நில்.

ஹெலனா.—நான் உன்னை நம்பேன்; வெறுப்பான உன்னிடத்தில் இனிநில்லேன். சண்டைக்கு உன்கைகள் வேகமுள்ளனவாயினும் ஓட்டத்துக்கு என் கால்கள் நீளமுள்ளன.

(போதல்.)

ஹெர்ம்யா.—நான் திகைக்கிறேன்; சொல்வதற்கு எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. (போதல்.)

ஓபரான்.—இத்தனையும் உன் அசட்டையால் நேர்ந்தன. தவறித்தான் போனாயோ; அல்லது வேண்டுமென்றே இப்புரளி செய்தாயோ!

பக்.—அசரீரிகளின் அரசே, நான் தவறியே போனேன்; இதை நம்பலாம். உடையால் ஆதென்ஸ் நகரத்தோனை அடையாளங் கண்டுகொள்ளும்படி எனக்குச் சொல்லவில்லையோ? நான் ஆதென்ஸ் நகரத்தோன் கண்களிற்றான் நேசரசத்தைப் பிழிந்தேன்; அம்மட்டில் நான் செய்தது சரியே; என் மேற்குற்றமில்லை. அஃது இவ்வாறு அமைந்ததும் எனக்கு ஒருவிதத்திற் சந்தோஷமே; அவருடைய சண்டை எனக்கு வேடிக்கையாகவே இருந்தது.

ஓபரான்.—ஆதென்ஸ் நகரத்து வாலிபர் இருவரும் தனிப்போருக்கு இடந்தேடிச் செல்வதைப் பார்த்தாயோ? நீ போய் இவ் வொளி முற்றும் மறையும்படி இருண்ட மூடுபனியை உண்டாக்கி, ஒருவரை யொருவர் நெருங்காமற் செய்து லைஸாண்டரிடத்து டெமிட்ரியஸ்ஸின் குரலைக்காட்டித் திட்டியும், டெமிட்ரியஸ்ஸிடத்தில் லைஸாண்டரின் குரலைக்காட்டி நிந்தித்தும், அவரை வெவ்வேறு பக்கங்களில் பலவாறு அலைக்கழித்துக் களைப்பால் உறங்கச் செய்த பின்னர், லைஸாண்டரின் கண்ணில் இம்மாற்றுரசத்தைப் பிழிக. அப்பொழுது முன்னிரசத்தாலுண்டான மயக்கம் நீங்கிக் கண்ணுக்கு இயல்பாயுள்ள பார்வையுண்டாகும். உறங்கி விழித்தபின் நடந்தன வெல்லாம் அவருக்கு வீண் தோற்றம்போலவும் கனவுபோலவும் காணப்படும். பின்னர் அக்காதலர்கள் தம்முள் என்றும் விடா நேசம் பெற்று ஆதென்ஸ் நகரம் போய்ச் சேர்வார்கள். நீ இக்காரியமாயிருக்கும்பொழுது, நானும் என்மனைவியிடத்துப்போய் இந்துதேசச் சிறுவனைப்பெற்று, அவளுக்குக் கழுதை முகத்தோன்மே லுண்டாயகாதலைத் தெளிவிப்பேன்; அப்பொழுது எங்கும் சமாதானம் உண்டாகும்.

பக்.—என் கந்தர்வத்தலைவ! இதை விரைவில் நடத்தவேண்டும்; இரவு அதிவேகமாய்ச் செல்லுகின்றது. அதோ கிழக்கு வெளுக்குகின்றது. அங்குமிங்கும் அலையும்பேய்கள் கூட்டங் கூட்டமாய்த் தம் இருப்பிடமாகிய மயானத்தை அடைகின்றன. துர்மரண மடைந்தோரின் ஆவிகளாகிய பேய்கள் தம் யாக்கை இருக்குமிடத்தை நாடிச் செல்லுகின்றன. இரவின்பாற் பிரியாநட்புள்ள இப்பேய்கள் தம் தீச்செயல்களைப் பகல் காணாதபடி, பிரகாசத்தினின்றும் தாமே ஓடியொளிக்கின்றன.

ஓபரான்.—நாம் அவ்வகைப்பேய்கள் அல்லேம். நான் எத்தனையோ முறை அருணோதயமான பின்பும் வேட்டையாடிக் கொண்டிருக்கிறேன். கீழ்த்திசையிற் கதிரவன் தோன்றித் தன் ஒளிமயமாகிய செம்மண்டலத்திலினின்றும் அழகிய கிரணங்களை வீசி, பச்சை நிறமுள்ள கடலின் உவர் நீரைப் பொன்னிறமாக்குந் துணையும் நான் இச்சோலையில் உலாவி நடப்பதுண்டு. ஆயினும், தாமதியாமல் நம்காரியத்தை விடியுமுன்னரே நிறைவேற்றுவோம். (ஓபரான்-போதல்.)

பக்.—மேலுங்கீழும், கீழும்மேலும், ஊருக்கு உள்ளிலும் வெளியிலும், எங்கும் அவரை ஓடி யலையச்செய்வேன். இதோ ஒருவன் வருகிறான்.

[லைஸாண்டர் மறுபடியும் வருதல்.]

லைஸாண்டர்.—செருக்குள்ள டெமிட்ரியஸ், எங்கே யிருக்கின்றாய்? பேசு.

பக்.—அடே துஷ்டா, உருவின கத்தியுங் கையுமாய் இதோ இருக்கிறேன். நீ எங்கே இருக்கிறாய்?

லைஸாண்டர்.—இதோ நேரே உன்னிடத்து வருகிறேன்.

பக்.—அப்படியானால் என்பின் ஓடிவா; செடிகளில்லா வெளியான இடத்துக்குப் போவோம். (லைஸாண்டர் கேட்குங்குரலைத் தொடர்ந்து போதல்.)

[டெமிட்ரியஸ் பின்னும் வருதல்.]

டெமிட்ரியஸ்.—லைஸாண்டர், ஏ, ஏ, ஓட்டம் பிடிப்பவனே, ஆண்மை யற்றவனே, ஓடிப் போனாயோ? நிற்பாயானாற் பேசு.

பக்.—ஏ, ஏ, பயங்கொள்ளி, நட்சத்திரங்களிடத்து உன் வீரவாது கூறுகிறாயோ? சண்டைக்குச் சந்நத்தமா யிருப்பதாகச் செடிகளுக்குச் சொல்லுகிறாயோ? வெளியிற் புறப்படாய் போலும். வீரமற்றவனே, வெளியில் வா. அடே குழந்தாய், வா. உன்னைப் பிரம்பாலடித்துச் சிக்ஷிப்பேன்; குழந்தைபோன்ற உன்மேற் கத்தியெடுப்பது தருமமன்று.

டெமிட்ரியஸ்.—எங்கே நிற்கிறாயோ?

பக்.—என் குரலைத்தொடர்ந்து வா; நாம் இங்குச்செய்வது வீரபரிக்ஷையன்று. (பக்கும் டெமிட்ரியஸ்ஸும் போதல்.)

[லைஸாண்டர் மறுபடியும் வருதல்.]

லைஸாண்டர்.—அவன் என்முன்னிற் போய்க்கொண்டே யிருக்கிறான்; என்னோடு வீரவாதும் பேசுகிறான். கூப்பிடுமிடத்திற் சென்றால், அவ்விடம்விட்டு அகல்கிறான். அந்தத்துஷ்டன் என்னிலும் கால்வேக முள்ளவன். நான் துரிதமாய்ப் போகப்போக அவன் என்னிலும் துரிதமாய்ப் பறக்கிறான். இவ்விருட்டில் மேடுபள்ளத்தி லகப்பட்டு மிக வருந்தினேன். நான் இங்கிருந்து சற்று இளைப்பாறுவேன். (படுத்துக்கொண்டு) ஓ! நற்பகலே, நீவிரைவில்வந்து விலங் தெளிய ஒளிவீசத்தொடங்கும்பொழுது நான் டெமிட்ரியஸ்ஸைக்கண்டு இப்பழிக்குத் தக்க பிரதி செய்வேன். (உறங்குதல்.)

[பக்கும் டெமிட்ரியஸ்ஸூம் மறுபடியும் வருதல்.]

பக்.—ஓ! ஓ! பயங்கொள்ளி! ஏன் வாராமற் பின்வாங்குகிறாய்?

டெமிட்ரியஸ்.—தைரிய முண்டானால் நான் வருமளவும் நில். நான் தொடர்ந்து வரவர நீ எதையும் தாண்டி ஓடிக்கொண்டே யிருக்கிறாய்; நிற்கத் துணியாய்; என் முகத்தைப்பார்க்கத் தைரியமில்லாய். இப்பொழுது எங்கே யிருக்கின்றாய்?

பக்.—இதோ இருக்கிறேன்;

டெமிட்ரியஸ்.—என்னைப் பரிகாசம் செய்கின்றாய்; நன்று; நீ இப்பொழுது போ. விடிந்தபின் நான் உனக்கு இதற்குத் தக்க வழி செய்வேன். களைப்பால் இங்குச் சற்றுக் கால் நீட்டிப்படுத்து உறங்குவேன். (படுத்து உறங்குதல்.)

[ஹெலனு மறுபடியும் வருதல்.]

ஹெலனு.—ஓ! செல்லா இரவே! சிறுகா இருளே! கீழ்த்திசையினின்றும் என் ஆறுதலாகிய ஒளி விரைவில் வாராதோ? நான் இவ்வெறுக்குங் கூட்டத்தினின்றும் எனதூருக்குத் திரும்பிப் போகேனோ? துக்கந்தணிக்கும் உறக்கமே, என்னைச்சற்று மெய்ம்மறந்திருக்கச் செய்வாயாக. (படுத்து உறங்குதல்.)

பக்.—மூவர் வந்தார்கள். இன்னும் ஒருவர் வரவேண்டும். அப்பொழுது நால்வருஞ் சேர்ந்து இரண்டு தம்பதிகளாவார்கள். துயரமுகத்தினளாய் இதோ அவள் வருகிறாள். காமன் மிகத் துஷ்டன்; பெண்பாலோரை இவ்வாறு வருத்துகின்றானே!

[ஹெர்ம்யா பின்னும் வருதல்.]

ஹெர்ம்யா.—இதுவரையிலும் இவ்வளவு தளர்ச்சியில்லை; இத்தனை துயரமில்லை. பனிபால் நனைந்து முள்ளாற்கீறுண்டு எடுத்தடிவைக்க வன்மையற்றவளாயினேன். இரண்டு காலும் விழுந்து போகின்றன; விடியுமளவும் இங்கிருந்து இளைப்பாறுவேன். தெய்வமே, அவருக்குள் போரொனின், லைஸாண்டரைக் காப்பாற்று. (படுத்து உறங்குதல்.)

பக்.—இத்தரையில் அயர்ந்து உறங்கு; நற்காதலனே, உன்கண்ணில் இம் மாற்று ரசத்தைப் பிழிவேன். (லைஸாண்டர் கண்ணில் இரசத்தைப் பிழிதல்.) நீ விழித்து உன் முந்தின காதலியின் கண்ணைக்கண்டு களிப்புறுவாயாக. இதனால் அவனவனுக்குள்ளது குறைபாது என்பதும், சாத்தன் சாத்தியை அடைவான் என்பதும், ஒன்றும் தப்பாது என்பதும், எல்லாம் நன்முடிவைப் பெறும் என்பதும் உலகிற்கு நன்கு விளங்குவனவாக.

(மூன்றாம் அங்கம் முற்றிற்று.)

எஸ். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

சுவாமிநாததேசிகர் அவர்பிரபந்தங்கள்.

1. சுவாமிநாததேசிகர் என்னும் நாமதேயத்தையுடைய இம்மகா பண்டிதர் பாண்டிவளநாட்டிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர். இவர் கல்விக் களஞ்சியமாகவும், கருணை முதலிய சற்குணங்களுக்கு [1]ஆகரமாகவும் விளங்கியவர். இவர், "விவேகசிந்தாமணி," 8-வது சஞ்சிகையில், மயிலேறும்பெருமாள்பிள்ளை யினுடைய மாணாக்கரென்று காட்டியிருக்கிறோம்.

2. இவருடைய மதமோ சைவமதம். இவர் பரம்பரைச் சித்தாந்த சைவர் மரபினர். இவர் இளமைப் பருவத்திலேயே துறவறப் பிரீதியுடையவராதலின், திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தைச் சார்ந்து, அப்பொழுது அவ்வாதீனத்தில் ஞானதேசிகராக வீற்றிருந்த ஸ்ரீமத் அம்பலவாண தேசிகரிடம் சிவதீக்ஷைபெற்று விளங்கியவர். இஃது, இலக்கணக்கொத்துப் பாயிரத்துள், "தீக்ஷா குருவணக்கம்" எனத் [2]தலைச்சாத்திட்டு, 3-வது விதியாக,

"ஊரும் பேரு முருவு மில்லா
ஞயினுந் திருவா வடுதுறை யூரனை
நம்பல வாண னெனும்பெய ராதரித்
தறிவே யுருவா யமர்ந்தகுரு ராயனைப்
பொறையுடல்போகப்புகழ்ந்தடிபோற்றுவாம்"

என்று கூறப்பட்டிருப்பதினாலே நன்கு விளங்கும். மேலு மிவ்வாசிரியர் ஆண்டு அவ்வாதீனத்தில் ஞானதேசிகர்பால் அருட்பணி புரிந்து கொண்டு அணுக்கத் தொண்டராய்ச் சின்னாள் அமர்ந்திருந்தனர். இக்காலத்திற்றான் நமது தேசிகர் தமிழ் கற்குமாறு பன்னிரியாண்டு மயிலேறும் பெருமாள்பிள்ளை பாற்சென்றது. நந்தேசிகர் அவர் மாட்டுத் திராவிடம் பயின்றதோடே நின்றுவிடாமல், திருநெல்வேலிச் சில்லா இராசவல்லிபுரத்திற் கடுத்த செப்பறைப்பதிக் கநகசபாபதி சிவாசாரியா ரிடத்துக் கைர்வாண பாஷையும் பயின்றனர். இங்ஙனந் தாம் பயின்ற நன்றியறிதலை யுலகிற்குத் தெரிவிப்பானன்றே "சம்ஸ்கிருத வித்தியா குருவணக்க" மென்று தீட்டிச்

"செப்பறைப் பதியின்வாழ் சிவத்துவிசன்
கநகசபாபதி கருதுவட நூற்கடற்
றபோதநர் புகழுஞ் சைவாதி ராச
னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்"

என்று கூறியதூஉ மென்க. இவர் தம்பின்னாட்களில் "ஈசானதேசிகர்" என்னுந் "தீட்சாநாமப் பூட்சியிற் பொலிந்து" திருநெல்வேலியில் ஆதீனத்தைச் சார்ந்த ஈசாந மடாலயத்தில் இருந்தருளினர்.

3. இவர் இருந்தகாலம் முற் சஞ்சிகைகளிற் கூறியாங்கு 18-ம் நூற்றாண்டின் தொடக்கமேயாம். இதைப்பற்றிச் சென்ற மூன்றுசஞ்சிகைகளிலும் வரைந்து சுட்டிப்போந்தாம். ஆதலின் இவ்விஷயத்தைக் குறித்து விரித்துரையாது விடுக்கின்றோம், "கூறியது கூறல்" என்னுங் குற்றத்தினின்றுந் தவிர்தற் பொருட்டு. இவர் வெகுகாலம் ஜீவித்திருந்ததாகக் கேள்விப்படுகிறோம்.

4. இப்புலவர் புங்கவர் செய்த பிரபந்தங்கள் "இலக்கணக்கொத்துரை" என்பதும் "தசகாரியம்" என்பதுமாம். இவ்விருநூலையு மிவரியற்றினாரென்பதைப்பற்றி ஐயங்கொள்ளக் கிடத்தற்கு இடனில்லை; ஆகவே யினி யப்பிரபந்தங்களின் குணகுணங்களைப்பற்றி யுபந்நியசிப்பாம்.

5. முதலாவதாகிய "இலக்கணக்கொத்துரை" என்னும் பிரபந்தமானது ஒருவியாகரண சாஸ்திரம். இஃது பாயிரமுள்பட, வேற்றுமையியல், வினையியல், ஒழிபியல் என நான்கியல்களையுடையது. ஆகவே யிது தமிழிலக்கணத்தின் ஒரு பகுதியும், அதிக முக்கியமானதுமாகிய சொல்லதிகாரத்தின்பாற் படுகின்றது. இதில் 131 சூத்திரங்களுள. இவற்றுள் ஒவ்வொரு விதியும் அருமையான வியாகரணரகசியங்களை விளக்கிக் காட்டுகின்றது. இவர் தாங் கற்ற இலக்கண இலக்கியங்களில் இலை மறைகாய் போல் மறைந்து கிடந்த அரிய உண்மைகளையெல்லாந் தமது நுட்ப புத்தியினா லாராய்ந்து கூறியிருக்கின்றனர். சூத்திரங்களெல்லாம் வெகு நேர்த்தியாய் அமைந்திருக்கின்றன. இவர் "பலர் நூல்களினும் பலவுரைகளினுஞ் சிதறிக் கிடந்த சில விதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கே" யாவரும் அறியும்படி செய்திருத்தலின் இலக்கணக் கொத்தென்று பெயரிட்டதாகக் காரணங் குறிக்கின்றார். இவர் பாயிரம் ஆறாவது விதியுள்,

"என்னாலியன்றது
சிறப்பாயுள்ளன சில தேடினனவை
மறப் பெனும் பகைவன் வாரிக்கொண்டன
னவன்கையிலகப்படாதடங்கின வற்றுளுஞ்
சிறிதனைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தனன்"

என்று அவையடக்கம் கூறியிருத்தலின் நயத்தை யாவரும் உணர்வர். இதில் கருவி சொல்லும் பாயிரம் 7-வது விதியுட் கூறப்பட்ட சில பாகங்களை யாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் மறுத்து நியாயங் காட்டி யிருக்கின்றனர். இவற்றின் தாரதம்மியங்களைப்பற்றி விவரித்ததற்கு இது தக்க காலமன்றாதலின், அமைமநத்துடன் விடுகின்றாம். இவருடைய கொள்கைகளெல்லாம் பரந்த தன்மையனவாகக் காணப்படுகின்றன. இத்தன்மையானது தற்காலத் தமிழ்ப் பண்டிதர்களிடத்துக் காணப்படுதலரிது. இவருடைய பரந்த கொள்கைகட்கு உதாரணமாக ஈண்டுச் சில குறிப்பாம்.

"மாரிபோற் கொடுப்பினு மந்தனை விட்டுக்
கூரியனுடனே கொடுத்தும் பழகுக"

"முற்காலத்துப் போதகாசிரியர்
மொழிகுவர் மறைபாரருமையாம் விதிகளை
வழிவழிநின்று வழங்கற் பொருட்டே
யிக்காலத்தா ரென்பய னினைந்தோ
விசையார்தாமு மிசையார் பூமியி
லிங்ஙன மாதலி னிறக்குமென் றெண்ணி
யவைகளைத் திரட்டி யமைத்தனன்"

என்பனமுதலான கூற்றுக்கள் எல்லாம் மேற்கூறியபரந்த கொள்கைக்குத்திருஷ்டாந்தமாதல் காண்க. இனி யிவர் இவ்விலக்கணக்கொத்திற்கு உரையுந் தாமே யெழுதினர்.

[1] ஆகரம்=இருப்பிடம். [2] தலைச்சாத்து=Heading.

இவரிங்ஙன மெழுதியதற்குக் காரணமாக வைந்தியநாதநாவலர் இலக்கண விளக்கத்திற் குறை யெழுதியதையும் சுப்பிரமணிய தீட்சிதர் பிரயோக விவேகத்திற் குறை யெழுதியதையும் கூறுகின்றனர். இனி முதலாவதாகிய வேற்றுமையியலில் காரக இலக்கணத்தை விரித்துக் கூறுவான் றொடங்குகின்றார். இடையிடையே வடமொழிக் கொள்கைகளோடு பொருத்திக் காட்டுகின்றார். இனி யிரண்டாவதாகிய வினையியலில் தொல்காப்பியமாகிய பேரிலக்கணங்களிற் காணற்படும், அரிய இலக்கண நுட்பங்களையும் குறள் பரிமேலழக ருரையில் ஆங்காங்குக்கூறிக்கிடக்கின்றஅருமையான சிலவிஷயங்களையும் இவர்விதியிலேதொகுத்திருக்கின்றனர். இனி மூன்றாவதாகிய ஒழிபியலில் பிரயோக விலக்கணமும் அண்மை தகுதி அவாய்நிலை என்பன முதலான தருக்கநூல் சாம்பிரதாயங்களும் உபசர்க்கம்பிரத்தியயமாகிய இவற்றினிலக்கணங்களும்பொருள் கோளினிலக்கணங்களும் இவைபோல்வன பிறவும் விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. இவர்

"இந்நூற்குதாரணந் தொன்னூற் செய்யுளுட்
சிலவேயெழுதினம் பலவேயெழுதின
முலகவழக்கினு ளுணரும்பொருட்டே"

என்று தாம் சொல்லியவண்ணம் உதாரணங்களெல்லாம் உலக வழக்கினின்றும் எடுத்துக் காட்டிச் சூத்திரங்களை நன்கு விளக்குகின்றார்.

6. இனி இரண்டாவதாகிய "தசகாரியம்" என்னும் பிரபந்தமானது ஒரு ஞானநூல். இஃது சித்தாந்த சைவ மதசம்பந்தமான விஷயங்களை நன்கு விளக்குகின்ற தாதலின், இதற்கு விசேஷ மகிமை யேற்பட்டுளது. இது "பண்டார சாத்திரம்" எனச் சைவர்களால் வழங்கப்பட்டு வருகின்ற பதினான்கு ஞானநூல்களிற் பதின்மூன்றாவதாகின்றது. இதில்இவ்வாசிரியர் தமது புத்தி நுட்பத்தை இனிது காட்டியிருக்கின்றார். இந்நூலானே நமது தேசிகருடைய சொல்வலிமையும் தருக்க நூற்பயிற்சியும் இனையவென்று விளங்குகின்றன.

7. இனிப் பொதுப்பட இவருடைய கண்டந சாமர்த்தியமும், வாதஞ்செய்யும் வன்மையும், இவைபோல்வன பிறவும், ஐரோப்பாக்கண்டத்திலே 12-ம் 13-ம் நூற்றாண்டுகளிலே "ஸ்கூல்மென்" (Schoolmen) என்று பேர்பெற்றிருந்த ஒர்வித சாஸ்திரிமார்களைப்பற்றி யெமக்கு ஞாபக மூட்டுகின்றன. இதனாலே நந்தேசிகோத்தமர்க்கு விசேஷத் தாழ்வு தொனிக்க மாட்டாதென்று கொள்ளுதற்குச் சற்றும் யோசனை வேண்டுவதில்லை.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி.

—:o:—

ஹிந்துக்களின் க்ஷயகதி.

2-வது அனுக க்ஷயம்.

அனுகம் என்பது முகவடிவம். ஹிந்துக்களின் முகவடிவம் நாளுக்கு நாள் க்ஷயப் பட்டு வருகிறதென்பதிற் சந்தேகமில்லை. ஆரிய வம்சத்தைச் சேர்ந்த ஹிந்துக்களின் முகவடிவம் எப்படி யென்றால் பழைய ஆலயங்களில் உபயோகித்து வரும் உற்சவ விக்கிரகங் களின் வடிவமாம். ஒவ்வொரு தேசத்திலும் ஆங்காங்குள்ள ஜனங்களின் அபிப்பிராயப்படி எந்த எந்த பாகம் இலக்ஷணமோ அந்த அந்த பாகம் அமைத்துத்தான் படங்கள், விக்கிரகங்கள் உண்டாக்குகிறது சகஜம். ஆனால் அந்த அந்தத் தேசத்தில் இயற்கையில் காணாத இலக்ஷண பாகங்களை கற்பனா சக்தியால் நிர்மித்துக்கேவலம் மானசமாக நிர்மிக்கிறவழக்கமில்லை. வாஸ்தவத்திற் காணப்படுகிற உத்தம பாகங்களை யமைத்துத் தான் விக்கிரகங்கள் நிர்மிக்கிறது. இதைத்திருஷ்டாந்தப் படுத்தவேண்டு மென்றால் அனேக பக்கங்கள் எழுதவேண்டி வரும. இக்காலத்திலும் நமது ராச்சியத்தில் நமது உற்சவ விக்கிரகங்களின் முகவடிவு பெற்றவர்கள் அபூர்வமாயிருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் வயசு சென்ற விருத்தர்களே.

ஆரிய முகவடிவம் யாதெனில் சர்ப்பத்தின் சிரசுபோல் சிரசு உயர்ந்தெழும்பிக் கபோல விசாலமும் நேத்திர விசாலமும் பெற்று காதுகள் நேத்திர ரேகைகட்குக் கீழ்ப்பட்டு அழகான மடல்கள் பொருந்தி, கன்னத் தெலும்புகள் உள்ளடங்கி, கன்னங் குழிபடாமல் மூக்கு நிமிர்ந்து நீண்டு கூர்மை பெற்று, சரியான புடைப்புகளும் சிறு துவாரங்களும் பொருந்தி, உதடு பிஞ்சுபோற் சிறுத்து தாடை யெலும்புகள் அதிகம் வெளியேதள்ளி நிற்கவாவது உள்ளே பின்வாங்கி நிற்கவாவது செய்யாமல் சுகுணங்களோடு இருப்பதாம். முற்காலத்தில் எல்லோரும் இவ்வகை முகவடிவம் பெற்றிருந்தார்களென்று நாம் சொல்லவரவில்லை. அக்காலத்திலும் அவலக்ஷண மானவர்கள் இருந்தார்கள் என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நான் காட்டுவது என்ன வென்றால் நமது முன்னோர்கள் பெரும்பாலும் இலக்ஷண பாகங்கட் கடுத்திருந் திருக்க நாமும் நம்முடைய சந்ததிகளும் வரவர அப்பாகங்களினின்றும் அகன்று க்ஷயமடைகிறோ மென்பதாம். தற்காலத்தில் இருக்கும் விருத்தர்களையும் இவர்களுடைய சந்ததிகளான சிறுவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தில் நான்கூறிய வண்ணம் திருஷ்டாந்தப் படும். இக்காலத்தில் ஜனிக்கும் ஆண்பிள்ளைகள் அனேகர்க்கு நெற்றி சுருங்கி சிரசெழும்பி நில்லாமல் புருவம் நோக்கி இறங்கி வளைந்து உள்வாங்கி கிடங்குபட்டு அவலக்ஷணமாகியும், சிரசு ஓங்கி உயராமல் ஒடுங்கி நசுக்குண்டு குடுக்கைத் தலைப்பட்டுத் தேரை உருஞ்சின கொதும்பை போல் கும்பிச் சுருங்கியும் மூக்கு சுருங்கி யொடுங்கி யொட்டை யாகவும் சுரைக்குடுக்கை போலவும் முகத்துக்குத் தகுந்த ஆகிருதி யில்லாமலும் உதடு பருத்து வெளியே தள்ளியும் கன்னத்தெலும்புகள்முண்டுதட்டி யெழும்பிநின்று முகம் மரத்தட்டு முகமாகவும் சதுரமுகமாகவும் விகாரப்பட்டும், காது நீண்டு தடித்து நயன ரேகைக்கு மேலெழும்பி சிரசடுத்தும் தேஜஸ் மங்கியும் புருவம் ஒன்றோடொன்று சேர்ந்து கோணிக்குறுகியும்கண்கோழிமுட்டைபுதைத்தவண்ணம் ஜீவசக்தி இல்லாமல் மக்குப் பிடித்தும் இன்னும் என்னால் வர்ணிக்க முடியாத மாதிரி பேதப்பட்டும் இருக்கிறது. அபூர்வமாய் சிலர்க்குக் கண் சீனதேசத்து ஜனங்கட் கிருக்கும் பான்மையாய் சரிவடைந்து மிருக்கிறது.

அனுக க்ஷயத்திற்கு பிரதான காரணம் புத்தி க்ஷயம். ஹிந்துக்களுக்குள் புத்தி க்ஷய முண்டாவதைப் பற்றி பிற்பாடு விஸ்தாரமாய் பிரஸ்தாபிக்கிறேன். புத்திக்குத் தகுந்தபடி முகவடிவம் ஏற்படுகிறது. புத்தியுள்ளவர்கட்கு முகலக்ஷண மிருப்பதுபோல, புத்தியி கட்கிருப்பதில்லை. முகலக்ஷணம் புத்திய வர்க்கிருந்தாலும் அது வெகு அபூர்வ தான் இருக்கும். புத்தி யில்லாதவர்கட்கு விரூபம் பெரும்பாலுங் காணலாம்.

ஆகாரக்குறைவாலும்முகவிரூபம்வரக்கூடும். இயற்கையில் எவ்வளவு முகலட்சணம் இருந்தாலும், தகுந்த போஷணை யில்லாவிட்டால், நிலவளமும் ஜலவளமும் இல்லா வித்துப்போல் வற்றிவரண்டு அவ்வாறு வற்றி வரள்வதில் சிலபாகங்கள் சுருங்கி நிமிர்ந்து புடைத்து முகம் விகாரப்படக்கூடும். கஷ்டம் வருவதற்கு முன்னும் வந்தபின்னும் ஒருவனைக்கண்டு கஷ்டம் வருவதற்குமுன் அவன்முகம் எவ்வளவோ நன்றாயிருந்ததென்றும் கஷ்டம்வந்தபின் அவன் முகம் என்னமோபோல் போயிற்றென்றும் ஜனங்கள் ஆச்சரியத்தோடுபேசுவதை அநேகர் கேட்டிருக்கலாம். ஹிந்துக்களுடைய வறுமையோ பழமொழியாய்ப் போய்விட்டது. நமது தேசத்தில் ஆகாரக்குறைவால் மாடுகள் அவலக்ஷணமா யிருக்கின்றன.

வறுமையிலகப்பட்டவர்கள் முகவிரூபம் அடைவதைப்பார்க்கிலும் அவர்களுடைய சந்ததிகள் நிச்சயமாக முகவிரூபம் அடைகிறார்கள். ஆகாரக்குறைவால் ஆவிகுன்றி பித்தமேறி புத்திப்பிரகாசிக்காமல் மங்கிமடிந்துபோயிருக்கும் போது அடுத்தடுத்து ஸ்திரீபுமானிருவரும் கிடக்கும் காரணம்பற்றி திடீரென்று விகாரம் எழும்பி, உள்ளம்பூரித்து மனவெழுச்சியும் ஐக்கியமும் இல்லாமல் அன்புகலவாமல் அறிவுகலவாமல் கேவலம் ஜடத்துவமாகசம்பந்தமுண்டாகி பிண்டோற்பத்தியாகும்போது அக்குழந்தை முகவிரூபம் திண்ணமாய் அடைகிறது.

போகிகட்குள் மகாயோகியாகிய திருமூலர் பின்வருகிறபடி திருமந்திரத்தில் எழுதியிருக்கின்றார்.

மாதா உதரம் மலமிகின் மந்தனும்
மாதா உதரம் ஜலமிகின் மூகையாம்
மாதா உதரம் இரண்டொக்கிற் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்தகுழவிக்கே.

அதாவது மாதாவயிற்றில் மலங்கட்டாய் நிற்குங்காலத்தில் பிண்டோற்பத்தியான குழந்

நமாயிருக்குமென்றும், ஜலம் (மூத்திர டு நிற்குங்காலத்திலுண்டான குழந்தை மயாயிருக்குமென்றும், மலமும் ஜலமும் டி. நிற்குங்காலத்தில் ஜெனித்த குழந்தை ருடாகப் பிறக்குமென்றும் அர்த்தமாகிறது. ந்த பிரமாணத்தை யனுசரித்து ஹிந்துக்கட்குள் வழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. ருதுசாந்தி காலத்தில் மலசோதனை ஜலசோதனை செய்துவரச்சொல்லித்தான் சயனக்கிரகத்தில் பெண்ணையும் பிள்ளையையும் விடுகிறார்கள். வறுமையால் சூடேறி மலங்கட்டிப் போமென்று யாவரும் ஊகிக்கக்கூடும். அவ்வாறுள்ள ஸ்திதியில் சம்பந்தமுண்டாகி ஜெனிக்கும் குழந்தைகள் மந்தமாகும்போது அதற்குத்தகுந்த க்ஷயமான முகவடிவந்தான் அந்தக்குழந்தைக்கு வரக்கூடும். பசிபட்டினியால் சூடுண்டாகி மேகம்பிறந்து ஜலம் அதிகமாய் உண்டாகி கட்டிநிற்கக்கூடும். க்ஷீணத்தாலோ சோம்பலாலோ திடீரென்று புருஷன்காட்டும் அடங்காக் காமத்திற் கிணங்கி நிர்ப்பந்தத்திற்குள் ளகப்பட்டோ மலஜல விசர்ஜனமின்றி யுண்டாகும் சம்பந்தத்தால் ஜெனிக்கும் சந்ததிகள் தாழ்ந்த மாதிரிமுகவடிவத்தோடு கூடிப்பிறக்கு மென்பதில் சந்தேகமில்லை.

முற்காலத்தில் தகுந்த இடைவிட்டு பெரியோர்களுடைய அனுமதிப்பிரகாரம் குறிப்பிட்ட நல்ல முகூர்த்தத்தில், நல்லபுத்திரனை யடையவேண்டுமென்ற ஆக்கிரகத்தோடும் முகூர்த்தத்தின் மேலுள்ள நம்பிக்கையின் மேலும் உளம்பூரித்து உணர்வுபொங்கிமனங்கலந்து அறிவு கலந்து கருவிகரணாதிகள் கலந்து ஆரோக்கியகாலத்தில் சம்பந்தமுண்டாய் வந்ததால் ஆரிய குணங்களோடும் ஆரியசரீர லக்ஷணங்களோடும் நல்லபிரஜைகள் உண்டாகி வந்தார்கள். இவ்வழக்கம் நழுவி சம்பந்த சுவாதீனம் பெற்ற அறிவிலிகள் 'கண்டதுகாக்ஷி வாழ்ந்தது வாழ்க்கை', 'இன்றைக்கிருப்பார் நாளைக்குக்காணோம்' என்று அலக்ஷியமாய் நினைத்து இஷ்டமானகாலமெல்லாம் இராப்பகலென்ற பேதமின்றி விஷயமே பெரிதாக எண்ணி நடத்திவருவதால் வீரிய க்ஷயமும் ரோகமும் உண்டாகி உடல் மெலிந்து காந்திகெடுத்து ஜீர்ணசக்தி குறைந்து மந்தம்பிடித்து தாங்கெட்டு தங்களுடைய சந்ததிகளும் அனுகக்ஷய முதலிய பல்வகை க்ஷயம் அடையும்படி செய்கிறார்கள். கலவசமயமுதிக்கும் மனோபாவத்திற்குத்தகுந்தபடியும் மலஜலமுதலிய தேகஸ்திதிக்குத் தகுந்தபடியும் பிரவேசசமயத்துக்குத்தகுந்தபடியும் மௌனமாய் பிரவிருத்திக்கிறதற்குத் தகுந்தபடியும் சரீராரோக்கியம் இலக்ஷணம் புத்தி குணம் முதலியவை அமைகிறதென்ற சாஸ்திரங்களை மறந்துவிஷயாதுரராய்த்திரியும் சிலர் சிலதினத்தில் இரவுமுழுமையும் சிலதினத்தில் பகல்முழுமையும் விழித்திருந்து வேசி ஸ்திரிகளை அனுபோகிக்க வேண்டி லாகிரிபதார்த்தங்கள் சாப்பிட்டு வெறியுள்ளவராகக் கூத்தாடிமயங்கித் தயங்கி புத்திக்குத் தெளிவில்லாமல் திரிவதால் அவர் மூலம் உண்டாகும் சந்ததிகட்கு சகல க்ஷயங்களுமுண்டாகு மென்பதற்குச் சந்தேகமில்லை.

> மாண்பதுவாக வளர்கின்ற வன்னியைக்
> காண்பதுஆண்பெண் ணலியெனுங் கற்பனை
> பூண்பது மாதாபிதா வழிபோலவே
> யாம்பதிசெய்தான்அச்சோதி தன்னாணையே.

இவ்வாறு திருமூலர்கூறியிருக்கும் பிரமாண வாக்கியத்தால், மாதாபிதாக்கள் மாதிரி சிசுக்கள் ஜெனிக்கிற தென்று அர்த்த மாகிறது. இக்காலங்களில் எவ்வகை விரூபமான பெண்களையும் தனம் ஆபரணம் இவைகட் காகவும் வறுமையாலுங் கொள்கிறார்கள்; எவ்வகை விகாரமான பிள்ளைகட்கும் தனம் ஆபரணம் இவைகட் காகவும் சந்ததி முட்டாமல் வர்த்தனையாக வேண்டும் என்ற பச்சாத்தாபத்தின் மேலும் பெண்களைக் கொடுக்கிறார்கள். இதனாலும் முகவடிவு சம்பந்தமாய் க்ஷய முண்டாகிறது. வராஹ சம்ஹிதையிலும் மனுஸ்மிருதியிலும் துஷ்டசுபாவமும் பலஹீனமும் அங்கஹீனமும் அவலக்ஷணமும்பொருந்திய ஸ்திரீகளோடுசேரலாகாதென்று விலக்கி யிருக்கிறது. இதை யனுஷ்டித்தாற்றான் ஹிந்துக்களுக்குள் இப்போது அதிகப் பட்டுவரும் அனுக க்ஷய முதலிய பலவகை க்ஷயகதிகள் தடைபடக்கூடும். கேவலம் காமப் பிராந்தியால் கீழ்ஜாதி சம்பந்தத்தைத் தவிர நகையாசையாலும் அவ்வகை சம்பந்த முண்டாகிறது. மேல்ஜாதிப் பெண்ணோடு கீழ்ஜாதி ஆண் சேர்வதால் முகவடிவம் க்ஷயப்படக் கூடும். இக்காலத்தில் கலப்பு சம்பந்த மதிகம்.

ஸ்திரீகளைச் சிறையிலிட்டபாவனையாய் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கி அவர்களுக்கு கல்விப்பயிற்சியின்றி ஞானசூனியப்பவித்து சுவலக்ஷணதிருஷ்டியற்று தற்காலத்தில் க்ஷேத்திரவளக்குறைவு வந்திருப்பதால் முகவடிவம் க்ஷயப்பட்டுவருவதற்குக் காரணமும் வந்திருக்கிறது. மலையாளத்தில் நம்பூரிஇல்லங்களில் ஆரியமுகத்தோடும் தேஜஸோடும் கூடிய குழந்தைகள் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

தற்காலத்தில் பாலியவிவாகம் அதிகப்பட்டிருப்பதால், புத்திக்கு ப்ராப்தியின்றி நேரிடும் சம்பந்தமும் முகவடிவம் க்ஷயமடைவதற்குக் காரணந்தான்.

பூசாரத்தாலும் சீதோஷ்ணஸ்திதி வித்தியாசத்தாலும் மேற்கண்ட க்ஷயகதி நேரிடக்கூடும். சேலத்தில் மாடுகள் ஆகிருதிகுறைந்தும் பெரும்பாலும் சிவந்த நிறமுள்ளவையாயுமிருக்கின்றன. இம்மலையாளத்தில் மாடுகள் ஆகிருதிகுறைந்தும் கழுதைநிறமாகவும் கறுத்தநிறமாகவும் இருக்கின்றன. நாலைந்து சந்ததிகளாக இத்தேசத்தில் குடியேறிய பரதேசத்து பிராமணர்கள் முகவடிவம் உட்பட பலவிதத்திலும் க்ஷயமடைந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர்க்குப் பூனைமுகம் வந்திருக்கிறது. அந்நியதேசத்து நல்ல பசுக்கள் இத்தேசத்தில் வளர்ந்தாலும் அவைகளும் சீக்கிரம் க்ஷயகதிக்கு வந்து விகாரப்பட்டுப்போகின்றன. இம்மலையாளத்தில் அநேகருடையமுகம் வட்டமாகவும் தட்டையாகவும் இருக்கிறது. அதுபோலவே இங்குள்ள ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களும் இருக்கின்றன. பாலக்காடு திருநெல்வேலி முதலிய ஸ்தலங்களிலிருந்து சிலகாலம் குடியேறிவந்திருக்கும் பிராமணஜாதி இங்கே க்ஷயமடைந்திருக்கும் பான்மையாக மலையாளத்திலுள்ள சூத்திரர் க்ஷயப்பட்டிருப்பதில்லை. அதற்குக் காரணம் அப்போதைக்கப்போது நூதனமாய் வியாபாரம் உத்தியோகம் இவை சம்பந்தமாய் வரும் மேல்ஜாதிக்காரருடைய சம்பந்தந்தான். வரவர அவர்கட்குள்ளும் முகவடிவு சம்பந்தமாய் க்ஷயகதி ஏற்பட்டுவருகிறது. தற்காலத்தில் மூக்கு மொட்டையாவதற்குக்காரணமும் விசேஷித்து உண்டாயிருக்கிறது. பில்லாக்கு அணிந்துகொள்வதற்கு ஸ்திரீகள் கூர்மையான மூக்கின்மேல் வெறுப்படைகிறார்கள். மூக்கு மொட்டையா யிருந்தால் பில்லாக்கணிவதற்கு சுகமென்றும் அப்போதுதான் செவ்வையாய்ப் படல் சாத்தியவண்ணம் பிரகாசிக்குமென்றும் ஸ்திரீகள் நினைக்கிறார்கள். இவ்வித அபிப்பிராயத்தால் மூக்கு வரவர மொட்டையாகிக் கொண்டு வருகிறது. இப்போதுள்ள ஸ்திரீகளில் வயசு சென்றவர்களின் மூக்கு பெரும்பாகம் அதாவது 100-க்கு 80 உயர்ந்து நீண்டு கூர்மையாயிருக்க சிறுபெண்களின் மூக்கெல்லாம் பெரும்பாகம் மழுங்கிக் குறுகி மொட்டையாயிருக்கின்றன. இதற்குக் காரணமென்ன? பில்லாக் கணிந்துகொள்வதற்கு மொட்டைமூக்கு நலமென்று நினைக்கும் சித்தவிருத்திதான் காரணமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. பில்லாக்கு மூக்கு ஏற்பட்டு அதிகப்பட்டால் 40-வருஷமாயிருக்கலாம். இன்னும் ஜீவனோடிருக்கப்பட்ட அநேகம் வயசு சென்ற ஸ்திரீகட்கு பில்லாக்கு மூக்கில்லை. 40-வருஷத்துக்கு முன் எந்தஸ்திரீக்கும் பில்லாக்கு மூக்கில்லை. தாசிகளைத்தவிர ஏனையோர்கள் அது அசுத்தமென்றும் அனாசார மென்றும் அசௌக்கியமென்றும் தள்ளியிருந்தார்கள். சென்ற 40-வருஷத்திற்குள் முதலாவது ஒளிமறைவாகவும்பிற்பாடு பிரகாசமாகவும் பிராமணஸ்திரீகளும் அவர்களைப்பார்த்து சில சூத்திர ஸ்திரீகளும் பில்லாக்குமூக்குக்குத்தி பில்லாக்கணிந்து வருகிறார்கள். 40-வயசுக்கதிகப்பட்டு பில்லாக்கு மூக்கில்லாத ஸ்திரீகளின் மூக்கு நீண்டு நிமிர்ந்து கூர்மைப்பட்டிருக்க பில்லாக்கு மூக்குள்ள சிறு பெண்களின் மூக்கு மொட்டையாயிருப்பதைக் காணும்போது முன் சொன்ன வியாக்கியானம் ஏகதேசம் சரியாயிருக்கலாம் என்றுபடுகிறது. ஆனால் 40-வருஷத்திற்குள் அவயவங்களின்வடிவம் மாறக்கூடுமோ வென்றும் மூக்கின் வடிவம் ஆபரண இச்சையால் ஸ்திரீகட்கு மாறினாலும் நாசிகாபரணம் அணியாத ஆண்கட்கு அவ்வாறுமாறுவதற்குக் காரணமென்னவென்றும் கேட்கக்கூடும். இதற்கு சமாதானம்

வெகு கடினமென்று எனக்குத்தோன்றவில்லை. அமெரிக்காவில் 20-வருஷத்திற்குள்ளாகநீண்டு பின் வளைந்து சில சமயங்களில் கவர்கொண்ட கொப்புகளுடைய ஓர் ஜாதிமான் ஷை கொம்பு சுவயரக்ஷைக்குப் பூரணயோக்கியதை யுள்ளதல்லவென்று கண்டு வரைதொடுத்த நேர்நிமிர்ந்த முன்வளைந்த கொம்புகளுள்ளதாய் மாறிவிட்டதென்று டார்வின் என்ற மகா சாஸ்திரி ஒருவர் எழுதியிருக்கிறார். எப்படி மானின் கொம்பு 20-வருஷத்திற்குள் மாறிற்றோ அப்படியே நமக்குள் 40-வருஷத்திற்குள்மூக்கின்வடிவம் மாறலாம். நாசிகாபரண மில்லாத ஆண்கட்கு மூக்கு மொட்டையாக வேண்டிய காரணம் மாதாவழி ஜெனித்தலும் புத்தி க்ஷயமுதவிய காரணமும் தான். மாதாவின் சுபாவம் ஆணிற்கும் பெண்ணிற்கும் சமமாயிருக்குமென்று டார்வின்* அனேக இடங்களில் சொல்லியிருக்கிறார்.

(இன்னும்வரும்.)

எஸ். இராமஸ்வாமிஅய்யர் பி. ஏ. பி. எல்.

புஸ்தகவாசிப்பு.

வாசிக்கும் முறைமை.

உத்தமமான புஸ்தகங்களைத்தெரிந்துகொண்டபின் அவைகளைத் தக்க முறையாய் வாசிக்கவேண்டியது. புஸ்தகங்கள் வாசிப்போரின் நோக்கத்துக்குத் தக்கதாய் இருக்கவேண்டியது. பொழுது போக்குக்காகவும் குற்றம்காண்பதற்காகவும் வாசிக்கிறவர்களுண்டு. இவைகள் தகாத நோக்கங்கள். கடவுள் நமக்கு அளந்து கொடுத்திருக்கிறதும், நீர்க்குமிழிபோல் க்ஷணத்தில் கழிந்துபோவதுமான நமது ஜீவகாலத்தில் மனதாரப்பொழுதுபோக்கிக்கொண்டிருக்க நமக்கு சமயமேயில்லை. நூல்களின் குற்றங்களைமாத்திரம் அறிய வாசிப்பது, ஒருவன் தான் காணும் மனிதரின் நல்விசேஷங்கள் ஒன்றையும் கவனியாமல், அவர்கள் முகத்தில் தோன்றும் வடுக்கள் மாசு மறுக்களைமாத்திரம் உற்று நோக்கித் திரிவதுபோலாம். தத்துவசாஸ்திரிகளிற் சிலர் விஷ சர்ப்பங்களைப்பற்றி ஒரு காரியம் சொல்லுகிறார்கள். என்னவெனில் அவைகள் ஜலம் அருந்தவேண்டியபோது, சில தருணங்களில், ஜலத்தினருகில் செல்லுமுன் தங்கள் விஷத்தை தரையில் கக்கிவிடுமாம். கக்காவிடில் ஜலத்தோடு விஷமும் உட்சென்று அவைகளின் மரணத்துக்கு ஏதுவாகுமாம். அதுபோலவே குற்றம் காணவேண்டுமென்ற எண்ணத்தோடு மாத்திரம் வாசிப்போருக்கு அவர்கள் துர்நோக்கமே கெடுதியாக முடியும். எப்படியென்றால், நீலக்கண்ணாடி வைத்தவன் கண்ணுக்கு சகலபொருட்களும் நீலமாய் தோன்றுவதுபோல, பிழை பிடிக்கவேண்டும் என்கிற ஆசைகொண்ட மனசுக்கு வாசிக்கும் நூலின் யதார்த்த கருத்து புலப்படாமல் சரியானதும் தப்பிதமாகவே காணப்படுவது இயல்பாதலால், அந்நூலின்பிரயோஜனம் கிடைக்காமல் போகும். மேலும் ஒரு நூலின் உண்மையான தன்மையை அறிய விரும்புகிறவர்கள் அந்த நூலை முதலாவது தாங்கள்தாமே பட்சபாதமற்ற சிந்தையோடு வாசித்துப்பார்க்காமல், அதற்கு விரோதமாய் வேறு ஆட்கள் எழுதிய ஆட்சேப நூல்களை முந்திவாசித்து அவற்றால் உண்டாகிய மனவெறுப்பு அல்லது அதிருப்தியாகிய விஷத்தோடு, பிற்பாடு அந்தநூலை வாசிப்பது பெரிய பிசகும், அநியாயமும், அப்பிரயோஜனமுமாகும். எப்படியெனில் ஒருபுஸ்தகத்தால் வரும் குணதோஷங்கள், அதை வாசிப்போரின் மனஸ்திதிக்குத் தக்கதாகவேயிருக்கும். திருஷ்டாந்தமாக ஒரு தத்துவசாஸ்திரி குறிப்பித்திருக்கிறபடி ஒரு தோட்டத்திலுள்ள ஓரே வகையான புஷ்பங்களில் வண்ணாரப்பூச்சியானது பறந்து திரிந்தும் அத்தனை உபயோகமடைகிறதில்லை. அவைகளிலிருந்துதானே சிலந்திப் பூச்சியானது விஷத்தை சேர்த்துக்கொள்ளுகிறது. தேனீயோ மதுரமான தேனைசேகரிக்கிறது. அதுபோலவே, ஓரே புஸ்தகம் அதை வாசிக்கும் ஒருவனுக்கு ஜீவனுக்கேற்ற ஜீவ வாசனையும், இன்னொருவனுக்கு மரணத்துக்கேற்ற மரண வாசனையுமாக அவரவர் மனஸ்திதிக்கேற்க நேரலாம்.

நூல்களின் சாராம்சங்களை தக்கபடி கிரகிக்கும்படியாகவும் முன்னோரின் சரித்திர சங்கதிகளையும், மற்றும் சாஸ்திர விஷயங்களையும் ஆசிரியர்களின் பாஷை நடையையும் அறியும்படியாகவும் வாசிப்பவர்களும் உண்டு. இவை நல்ல நோக்கங்கள்தான். சகலநோக்கங்களிலும் சத்தியத்தை அறியவும் ஞானத்தை சம்பாதிக்கவும் ஆசிப்பது நலம். இந்த நல்நோக்கங்கள் கைகூட வேண்டுமானால், வாசிப்பவர்கள் தகுந்த கிரமமாய் வாசிப்பது அவசியம். ஒருபெரிய வித்வான் சொல்லியிருக்கிறபடி, "சில புஸ்தகங்களை ருசிபார்க்க மாத்திரம் வேண்டும், சில புஸ்தகங்களை நாவின்மேல் போட்டு பல்படாமல் விழுங்கிவிட வேண்டும், சில புஸ்தங்களையோ வாயிலிட்டு நன்றாக மென்று அரைத்து இரைப்பைக்குள் இறக்கி சீரணிக்கத்தக்கது." அதின் கருத்தென்னவென்றால், சில புஸ்தகங்களின் பகுதிகளைமாத்திரம் வாசிக்க வேண்டியது. சில புஸ்தகங்களை நுட்பமான ஆராய்ச்சி யில்லாமல்மேலிட்டவாக்கில் வாசிப்பது போதும். அறிவின் களஞ்சியமாயிருக்கும் நூல்களையோ கொஞ்சங்கொஞ்சமாய் ஆதியோடந்தமாக முழுக்கவனத்தையும் செலுத்தி வாசித் துணரவேண்டியது என்பதாம்.

புஸ்தக வாசிப்பு பிரயோஜனப்படுவதற்குப் பின் சொல்லப்படும் சில விதிகள் உதவியாயிருக்கலாம். எவையெனில்,

1. வாசிக்கிறவைகளின் கருத்து முழுதும் மனசில் ஆகத்தக்கதாக படிப்படியாகவும் நினைவுபிரியாமலும் வாசிக்கவேண்டும்.

புஸ்தகத்தை நமக்குமுன் வைத்தவுடன் நம்மை புஸ்தகத்துக்கு முன் வைக்கவேண்டும். அதாவது, நமது முழுக்கருத்தையும் அதில் செலுத்தவேண்டும். இது முக்கியம். மேலும் ஒரு புஸ்தகத்தை திறந்தவுடன் முதலாவது பொதுப்பட அதிலடங்கிய பொருளை கவனித்தறியவேண்டும். அதின் முகவுரை, பொருளட்டவணை என்பவைகளை நோக்குவதால் அது எளிதில் தெரியவரும். இப்படியாக ஆரம்பத்தில் அந்த புஸ்தகத்தின் தாற்பரியம் இன்னது, இன்ன காரியங்களை இன்ன ஒழுங்காய் சொல்லியிருக்கிறது என்பதை மனதில் ஓர் படம்போல் விபரமும் திட்டமுமாய் பதிக்கவேண்டும். அப்புறம் புஸ்தகத்தை வாசிக்கத்தொடங்கலாம். ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்தபின், இந்த வாக்கியத்தின் கருத்து என் மனதில் பதிந்ததா? இதில் சொல்லிய பொருள் சத்தியமா? முக்கியமா? ஆசிரியன் எடுத்த காரியத்துக்கு இசைவா? எக்காலத்திலும் இதுமனதில் காக்கத்தக்கதா? என்று வினவவேண்டும். இப்படியே ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் செய்யவேண்டும். இவ்வகையாய் ஒவ்வொரு வாக்கியத்தையும் பிரிவையும் ஆராய்ந்து அதிகாரத்தின் அல்லது படலத்தின் முடிவில் வந்தவுடன் அந்த அதிகாரத்தின் பொதுத் தாற்பரியம் முதலியவற்றை திரும்பவும் பார்வையிடவேண்டும். மேலும்,

2. இப்படி கிரமங்கிரமமாகவும், நினைவை ஊன்றியும், வாசித்துக்கொண்டுபோகவே இன்னொரு காரியம் செய்வது முக்கியம். என்னவென்றால், நாம் வாசிப்பவைகளைப்பற்றி நமது மனதில் எழும்பும் அபிப்பிராயங்களை புஸ்தக ஏட்டின் விளிம்பில் மைகொண்டோ காரீயங்கொண்டோ குறிப்பதே. கவனிக்கப்படத்தக்க வாக்கியங்களுக்கு எதிராக, "இது முக்கியமானது, இது ஆழ்ந்த கருத்து, இது ஆட்சேபிக்கத்தக்கது, இது அனுபோகத்துக்கு எதிரிடை, இது சம்பந்த பேதமானது, இது கூறியது கூறல்," என்றிப்படிப்பட்ட குறிமானம் செய்யவேண்டும். இப்படி செய்வது அலுப்பாக முதலில் தோன்றினாலும் "தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும், மடங்கொன்றறிவகற்றும் கல்வி" என்றதின்படி பிற்பாடு மிகுந்த நன்மைக்கு ஏதுவாகும். ஐரோப்பிய வித்தியார்த்திகள் இப்படி செய்வது சகஜம். மேலும்,

3. வாசித்தானபின் ஓரிடத்தில் அமர்ந்து உட்கார்ந்து வாசித்தவைகளை கவனத்துடன் யோசிக்கவேண்டும்.

ஆசி! வாசி! யோசி! யோசி! விசுவாசி! என்பது புஸ்தக வாசனையைப்பற்றிய ஓர் விசேஷ சூத்திரம். இதின்படி வாஞ்சையுடன் நூல்களை வாசித்தபின் அனேக மடங்குயோசிக்கவேண்டும், யோசித்தபின் சத்தியமாக விளங்குகிறவைகளை விசுவாசித்து மனதில் காத்துக்கொள்ளவேண்டும். புஸ்தகவாசனையானது போஜன வஸ்துக்களை *சவதரித்து ஒருவன்முன் வைப்பதுபோலும், யோசனையோ அவற்றை கிரமமாய் சமையல்செய்து புசித்து பலம் அடைவதுபோலுமாம். ஒருவனுக்கு அவன் களஞ்சியம் நிறைய தானிய தவசங்கள் இருந்தாலும் அவற்றை பாகம்செய்து உண்ணாவிடில் திருப்தியும் பலமும் வராமைபோல், வாசித்தவைகளை யோசியாவிடில் ஒரு பிரயோசனமும் இராது. இது விஷயத்தில் நாம் பசுவை பின்பற்றத்தக்கது என்று நன்னூல் ஆசிரியரான பவணந்திமுனிவர் மாத்திரமல்ல, ஐரோப்பிய கல்விமான்களில் சிலரும் குறித்திருக்கிறார்கள். பசுவானது புல்லுள்ள இடத்தை கண்டால் அப்புல்லை வயிறுநிறைய மேய்ந்துபின்பு ஓரிடம்போய் அமர்ந்து நின்று அல்லது படுத்து ஆமாசயத்தில் சென்ற இரையை சிறிது சிறிதாக வாயில் வருவித்து மென்று தின்றிறக்கல்போல் புஸ்தகம் வாசிப்போரும் தங்கள் உள்ளம் நிறையவாசித்து, பின்பு ஓரிடத்தில் உட்கார்ந்து வாசித்தவைகளை கொஞ்சம் கொஞ்சமாக நினைவில்கொண்டுவந்து யோசிக்கவேண்டும்.

4. மேலும் சாயந்தரந்தோறும் அல்லது சாவகாசமான மற்றவேளைகளிலும் நாம் வாசித்தவைகளைக்குறித்து நமது இஷ்டர் ஒருவரிடத்தில் அல்லது பலரிடத்தில் சம்பாஷிப்பது மிகவும் உபயோகமாயிருக்கும். நம்மில் பலர் படித்தோரும் படிக்கிறவருமாயினும், சிநேகிதர் நம்மை சந்திக்கும் தருணங்களில், "சாத்தன் இப்படி, சடையன் இப்படி" என்று நாட்டுவெளப்பம் அலப்புகிறது வழக்கம். அங்கிலேய துரை ஒருவர் தமது வாசிப்பறையின் கதவில் "இது என் வாசிப்பு அறை, இதற்குள் என் வாசிப்புக்கு துணைசெய்ய விரும்புகிறவர்களேயன்றி வேறொருவரும் பிரவேசிக்கக்கூடாது" என்று எழுதியிருந்தார். யாராவது வந்து ஊர்க்கதை கதைக்க ஆரம்பித்தால் உடனே சில அன்பான வார்த்தைகள்சொல்லி வழியனுப்பிவிடுவாராம். அதுபோல வீண் பேச்சுகளைத் தள்ளி நாம்வாசித்த விஷயங்க

---

* Darwin.

* சவதரித்தல்=சம்பாதித்தல்.

லைப்பற்றி பேசினால் அது நமக்கும் பிறருக்கும் எத்தனையோ நன்மைக்கு ஏதுவாகும்! மேலும் வாசித்தவை நமது மனதைவிட்டுப் போகாதபடி செய்யத்தக்க இன்னுமோர் வழி என்னவென்றால்,

5. நாம் வாசித்தவைகளைத்திருப்ப பார்வையிடல். இதைச் சாதாரணமாய் பழையபாடம் படித்தல் என்பார்கள். இது மிகவும் மிகவும் முக்கியம். ஐரோப்பிய வித்வ சிரோமணிகள் பலர் நாம்வாசிக்கும் சமயத்தில் நாலிலொரு பங்கை பழம்பாடம் படிக்கும் வகைக்கென்று பிரயோகிக்கவேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டு வித்துவான்கள் நிதசரி காலையில் ஐந்துநாழிகை நேரம் பழையபாடம் வாசிக்கிறது வழக்கமாயிருந்தது. முற்காலத்தோரில் பலர்சிறந்த பாண்டித்தியம் உடையவரானதற்கு இதுவே காரணம். நம்மைவிட அவர்களுக்கு புஸ்தகம் குறைவு. ஆனால் அவர்களுக்கு உண்டாயிருந்த கொஞ்சமான புஸ்தகங்களை அவர்கள் தங்கள் சொந்தக்கையால் பகிர்ந்து எழுதி, ஐந்து, பத்து, பன்னிரண்டுவிசை திரும்பத்திரும்ப வாசித்துவந்தார்கள். மதுரையில் கூடியிருந்த கீர்த்திபெற்ற தமிழ் வித்வான்களின் சங்கத்தில் ஒருவருக்கு சீத்தலைச்சாத்தனார் என்று பேர். ஏனெனில் அவருக்கு ஞாபகசக்தி சொற்பமாயிருந்ததால் திரும்பத் திரும்ப வாசிப்பார். ஆகிலும் மனதில் பதியவில்லையென்று அதற்கு தண்டனையாக வாசிக்குந்தோறும் முறைக்கொரு அடி எழுத்தாணியால் சிரசில் அடித்து, தலை எப்போதும் சீவடிந்துகொண்டிருந்ததாம். அவர் திரும்பத்திரும்ப படித்ததை பின்பற்றவேண்டுமேயன்றி அவர் தலையை அடித்து வருந்தினதை வியந்து, இக்காலத்திலும் சில பிள்ளைகள் படிக்கப்படிக்க நெஞ்சில் அறைவதுபோல செய்வது யுக்தியல்ல. மேற்படி சங்கத்தில்தானே குடவழுந்தூர் என்று இன்னொரு வித்துவான் இருந்தார், அவர் ஒரு பாட்டை திரும்பத்திரும்ப சொல்லி படிக்குமுன் ஒவ்வொரு உழுந்தாய்ப்போட்டு ஒரு குடம் நிறைத்துவிடுவாராம். ஆகிலும் விடாமுயற்சியாய் திரும்பத்திரும்ப வாசித்து கல்வியில் தேர்ந்து அரிய சாமர்த்தியம் அடைந்து கொண்டார். நாகர்கோவிலில் ஒருவர் பைபில் ஆகமத்தை முப்பத்திரண்டுதரம் வாசித்து முடித்தார். வேறுசிலர் மேற்படி ஆகமத்தை மாத்திரமல்ல, இன்னும் பல நூல்களை வருஷத்துக்கு ஒருமுறை வாசிப்பது வழக்கம்.

முன் வாசித்தது மனதில் தக்கபடி பதியுமுன் நூதன புஸ்தகம் வாசிக்க ஆரம்பித்தல் அப்பிரயோசனமாம்.

"வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்-கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச்சொரிந்திட்டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள் செய்திடல்"

என்றிருக்கிறது. அதாவது, தாங்கள் பிரயாசைப்பட்டு கற்றகல்வியை மனதிற்காத்துக்கொள்ளாமல் வேறு நூல்களை வருந்தி கற்கப்புகுதல் கையில் கிடைத்த பெருந்திரவியத்தை அப்பால் எறிந்துவிட்டு பின்பு வருந்தி சேறு மணல் அரித்து திரவியம் சம்பாதிக்க உன்னல்போலாம் என்பதே. மேலும்,

6. நாம் வாசித்தவைகளின் பொருட் சுருக்கத்தைவகைதொகையாய் ஒழுங்குப்படுத்தி ஒருபுஸ்தகத்தில் குறித்துவைப்பதும் மிகுந்த பிரயோசனத்துக்கு ஏதுவாயிருக்கும். நாம் வாசிக்கிறவைகளை யெல்லாம் மனதில் காத்துக்கொள்ளக்கூடாது. அவைகளனைத்தையும் எழுதிவைத்துக்கொள்வதும் அத்தனை பிரயோசனப்படாது. ஆகவே வாசித்தவற்றில் முக்கியமானவைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதிவைத்தால் அவசரம் நேரிடும்போது அக்குறிமானப் புஸ்தகம், ஒளிப்படமானது பிரமாண்டமான ஒரு கட்டடத்தின் சாயலை உள்ளங்கைப் பரிமாணப் படத்தில் விளக்குவதுபோல, ஒரு பெரிய புஸ்தகத்தின் உள்ளுறைப்பொருளை பத்து, பன்னிரண்டு ஏட்டில் தோற்றுவிக்கும், பிரபலஸ்தரான பல கல்விமான்கள் இப்படியே செய்திருக்கிறார்கள்.

7. மேலும் நாம் வாசிக்கிறவைகளின் பொருளை நமது சொந்தவார்த்தைகளில் ஒரு பிரபந்தம் போல எழுதுவதும் மிக்க பிரயோஜனமாகும். அது வாசித்தவைகளை மனதில் பதிக்கிறதோடுகூட நமது அபிப்பிராயங்களை வெளியிடும்திராணியைவிர்த்திசெய்யவும் உதவும். இம்முறையை அனுசரிக்கிறவர்கள் திறமையுள்ள கிரந்தகர்த்தாக்களும் சாதுரியமான பிரசங்கிகளும் ஆவார்கள்.

8. கடைசியாக, நமதுவாசிப்பு சரியாய் நடந்தேறி, இகபர நன்மைகளை நமக்கு பயக்கவேண்டுமானால் சகல நன்மைகளுக்கும் காரணராயிருக்கிற சர்வஜீவதயாபரரானசாக்ஷாத் ஈஸ்வரனைநோக்கி புரியும் அபிலாசையான பிரார்த்தனையோடு நிதசரி வாசிப்பைத் தொடங்கவேண்டும்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்றபடி கடவுள் உலகத்துக்கு மாத்திரமல்ல, உலகத்தில் நாம் செய்யவேண்டிய யாவற்றிற்கும் ஆதியாயிருக்க வேண்டியதானதால், அவரை நமக்குமுன்வைத்து அவர் துணையாய் வாசித்துவரில் வாசிப்பு அனுகூலமாகவே முடியும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிசெய்யாததினால் அல்லவோ அநேகர் எத்தனையோ அதிகமாய்வாசித்தும் உணர்ந்தும் கற்றஞானிகளாவதற்கு பதிலாகக் 'கற்றறிமூடர்' என

னும் வகுப்பாரைச் சேர்ந்தவர்களாய்ப்போகிறார்கள். மேலும் இதனால் அல்லவோ உயர்தரப்படிப்பினால் தேசமுழுதும் அவபக்தி, அகந்தை, நாஸ்திகம்முதலிய தீமைகளினால் நிரம்பி கேட்டுக்குள்ளாகத் துவக்குகிறது என்கிற கூப்பாடு இக்காலத்தில் எழும்புகிறது.

ஆனால் சிலர் 'இந்த பிரமாணங்களின்படியெல்லாம் வாசிக்க வெத்தனையோ காலம் பிடிக்கும்! இப்படி வாசித்தால் எத்தனையோ சில புஸ்தகங்கள் மாத்திரம் வாசிக்கலாம்" என்பார்கள். என்றாலும் புஸ்தகவாசிப்பினால் அறிவை சம்பாதிக்க விரும்புகிறவர்கள் இப்படியே வாசிக்கவேண்டியது. படபடப்பாய் வாசிக்கும் இருபது புஸ்கத்தால் வருகிற அறிவிலும் இந்த பிரமாணங்களின்படி ஆய்ந்து அமர்ந்து வாசிக்கிற ஓரேபுஸ்தகத்தால் அதிக அறிவு உண்டாகும். இங்கிலீஷில் ஒரு புராதன பழமொழி, "*Beware of the man of one book, for he will prove your master.*"—என்று சொல்கிறது. அதாவது, ஒரே புஸ்தகக்காரனைக் குறித்து எச்சரிக்கையாயிரு; ஏனெனில் அவன் உன் எஜமானாகி விடுவான், அல்லது உன்னை ஜெயித்துப்போடுவான். இன்னோர் முதுமொழி, "*I never fear the master of a library.*"—என்று சொல்கிறது. இதன்பொருள்:— 'ஒரு புஸ்தகசாலை உடையோனுக்கு நான் ஒருக்காலும் அஞ்சுகிறதில்லை. அதாவது ஒரே புஸ்தகத்தை நன்றாய் களங்கமறத்தெளிந்து தெரிந்து வாசித்திருக்கிறவன் அதின்பொருளில்தேறினவனாயிருப்பான். ஆதலால் அவனுக்கு எதிர்நிற்கக்கூடாது' என்பதாம். ஆகையால் அறிவடைய விரும்புகிறவர்கள் மேற்குறித்தவிதிகளின்படியே வாசிக்கவேண்டும். எப்படியென்றால், அவைகளை சுருக்கிச் சொல்லி, கண்டதையெல்லாம் வாசிக்கக்கூடாது. தெரிந்து அறிவாகரமான சில புஸ்தகங்களை மாத்திரம் வாசிக்கவேண்டும். வாசிக்கையில் யோசிக்கவேண்டும். வாசித்தபின்னும் யோசிக்கவேண்டும். வாசித்தவைகள் மனதை விட்டுப்போகாதபடி, வாசிக்க வாசிக்க புஸ்தக விளிம்பில் நமது அபிப்பிராயங்களைக் குறிப்பதினாலும், பிறரோடு வாசித்தவைகளைப்பற்றி சம்பாஷிப்பதினாலும், அவைகளை அடிக்கடி ஞாபகம்செய்வதினாலும், ஓர் புஸ்தகத்தில் வாசித்த பொருளை வகைதொகையாய்க் குறித்து வைப்பதினாலும், கூடுமாகில் நமது சொந்த வார்த்தையில் பிரபந்தமாக எழுதுவதினாலும் காத்துக்கொள்ளல்வேண்டும். மேலும் நமது வாசிப்பு அனுகூலப்பட தெய்வானுக்கிரகத்துக்காக பிரார்த்தித்து வரவேண்டும். இப்படி செய்பவர்கள் கல்வியில் தேறி பிரஸ்தாபித்து உலோகோபகாரிகள் ஆவார்கள் என்பது நிச்சயம்.

வாசிக்கும் முறை இப்படியானால், தினம்தோறும், வாரம்தோறும், திரள்திரளாய் பிரசுரஞ்செய்யப்படும் வர்த்தமானக் கடுதாசிகள் முதலியவைகளை என்னசெய்ய என்று ஒருவேளை சிலர் கேட்கலாம். அறிவுத் தேர்ச்சியையே கடைப்பிடியாய் கொண்டிருக்கிறவர்கள் அவைகளை மட்டாகவே வாசிக்கவேண்டியது. அவைகள்மிகுந்த பிரயோசனமானவைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் வாலிபர் அவைகளை வாசிப்பதில் அதிகநேரம் போக்குவது மனம் ஸ்திரம் கெட்டு அறிவு சிதறுகிறதற்கு ஏதுவாய் முடியும். நூதனக் கடுதாசிகள் மிட்டாய் ஆதியான தித்திப்புப் பதார்த்தங்களுக்கு நிகராயிருக்கிறது. மிட்டாய்களை அதிகம் உட்கொண்டால் அசீரணமும் உதரநோவும் உண்டாம். "நுண்மை நுகரேல்" என்பது ஔவையார் வசனம். அதாவது, சிற்றுண்டிகளையும் அவைபோன்றவைகளையும் உண்ணுதல் நோய்க்கிடமாம்.

கடைசியாக சில உற்சாக மொழிகளைச்சொல்லுதல் பிரயோசனமா யிருக்கலாம். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் மாணாக்கர், "எங்களுக்கு எத்தனையோ பாடங்கள்! எத்தனையோ சமையக்கிறார்? எங்களால் இப்படியெல்லாம் வாசித்துமுடியுமா? என்பார்கள். இப்படியல்லாமல் வேறுவகையாய் வாசிக்கிறதைவிட வாசியாமை நன்று. "இளமையில் கல்" என்று ஔவையார் சொன்னதின்படி சிறுபிராயத்தில் தானேவாசிக்கத்தொடங்குவது நன்று. ஆகிலும் "செய்வினை திருந்தச்செய்" என்றபடி தக்கவிதம் செய்யாவிடில் பிரயோசனமில்லை. "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்ற வண்ணம் இளமையில்தானேவாசிக்கத்தக்கவைகளை வாசிக்கவேண்டிய பிரகாரம் வாசியாமல், யாதொரு ஒழுங்கின்றி மனம்போல வாசித்தால் சீவகால முழுதும் கஷ்டத்துக்கேதுவாக முடியும்.

மேலும் இத்தேசத்து வாலிபரில் பலர் பள்ளிக்கூடம் விட்டவுடனே படிப்பெல்லாம் முடிந்ததென்று எண்ணினாற்போல் ஏடுகள் புஸ்தகங்களைக்கட்டி பூச்சிகள் வாசிக்கும்படி வைத்துவிடுவது வழக்கம். ஓர் சிறந்த உபாத்தியாயரும் வித்வானுமாகிய உவைற்றௌஸ் (Rev. Whitehouse) போதகர் தம் மாணாக்கர் கல்விச்சாலைவிட்டுப் போகும்போது அவர்களுக்கு சொல்லிவிடும் புத்தியென்னவெனில், "வாலிபரே! உங்கள் வாசிப்பும் படிப்பும் இதோடே முடிந்ததென்று எண்ணாதிருங்கள்; பள்ளிக்கூடத்தில் வாசித்தவாசிப்பு கல்விக்கு வித்துமாத்திரம்; பள்ளிக்கூடம் விட்டபின் நீங்கள் வாசிக்கும் வாசிப்பினால்தான் அந்த விதை முளைத்து வளர்ந்து பூத்து காய்க்கவேண்டும். ஆகையால் வாசிப்பை கைநெகிழாதிருங்கள்" என்பார். லிற்றன் பிரபு (Lord Lytton) என்னும் வித்வான் தாம் செய்த ஒரு உபந்நியாசத்தில் 'நான் எதார்த்தத்தில் வாசிக்கத் தொடங்கினது

"காலேஜ் விட்ட பிற்பாடுதான்" என்று மொழிந்தார். கார்லயில் (*Carlyle*) என்னும் வித்வசிரோமணியும் அவ்விதமாகவே உரைத்திருக்கிறார். எப்படியென்றால், "சர்வகலாசாலையில் (*University*) நான் கற்றுக்கொண்டது பிரதானமாய் யாதெனில், தாபந்தத்தோடும் உண்மையோடும் புஸ்தகவாசிப்பை எக்காலத்திலும் கொண்டுநடத்தவேண்டும் என்பதுதான்" என்றார்.

பாடசாலைவிட்டு உத்தரவாதமும் மனத்தொல்லையும் நிறைந்ததான பாரி உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிறவர்கள் முறையாய் வாசிக்கக்கூடுமோ? "கல்விக்கு கவ்வை களை" ஆனால் கவ்வைக்கோ கல்வி நல்ல துணை என்கலாம். நறுமலர் வாசனையானது சலித்தமனதை சந்தோஷிப்பதுபோல, ராச்சியபார உத்தியோகங்கள் முதலிய பெருந்தொல்லைகளால் சர்வகாலமும் எண்ணமுற்றிருப்போர் மனதில் புஸ்தகவாசனை என்னும் நல்வாசனை நிதசரி கமழுமாகில் அது அவர்கள் காரியாதிகளுக்கு மிகுந்த அனுகூலமாயிருக்கும் என்பதற்கு எள்ளளவேனும் ஐயமில்லை. இதிகாச நூல்களில் இதற்கு அனந்தம் திர்ஷ்டாந்தங்கள் உண்டு. அங்கிலேய அரசரில் ஒருவரான மகா ஆல்பிரட் (*Alfred the Great*) எனபவர் அறிவீனமும் யுத்த அகோரமுமான காலத்தில் செங்கோல் ஒச்சினவராயிருந்தும், நிதசரி, எட்டுமணிநேரம் புஸ்தக வாசிப்புக்கும் செபதவத்துக்கும் என்று குறித்து பிரயோகித்துவந்தார். யூதருக்குள் சிறந்த அரசனாகிய தாவீது என்பவர் நாள்தப்பாமல் மூன்றுதரம் வாசித்து தியானித்து பாட்டிசைத்து வந்தார். இங்கிலாந்து தேசத்தில் கீர்த்திபெற்ற (*Henry the 8th*) எட்டாம் ஹென்றி அரசனுக்குப்பின் கிரீடபதியான ஆறும் எட்வார்ட் (*Edward the 6th*) என்பவருக்கு மகுடாபிஷேகம் செய்த தருணத்தில், அவரது அதிகார மகத்துவத்துக்கு சின்னமாக மூன்று கட்கங்களை அவருக்கு கொடுத்தார்கள். அவரோ திரும்பிக்கொண்டு "இன்னொரு கட்கத்தைக்கொடுக்க மறந்தீர்களே, அது எங்கே?" என்றார். அங்கு நின்ற அமைச்சர் திகைக்க, "கடவுள் அருளிய வேதாகமமானது எந்த கட்கத்திலும் கூர்மையான கட்கம் அல்லவா! அதின் நித ஆலோசனையின்றி தீயோர் சிட்சையும் நல்லோர் ரட்சையும் அரசரால் செம்மையாய் நடவாது. ஆகையால் அதை என்முன் கொண்டுவாருங்கள். அதை தினம் வாசிப்பேன்." என்றார்.

சேனாவீரர் அநேகர் யுத்தகளத்துக்கு போகுமுன் புஸ்தக வாசனையால் தங்கள் மனதை ஆயத்தப்படுத்தினார்கள். புஸ்தகம் வாசித்து மனந்தெளிந்தவர்கள் அக்கினிவாதை, கப்பல்சேதம், கொள்ளைநோய், குடும்ப கஸ்திகள், மரணம் முதலிய ஆபத்தான சமயங்களில் வாசியாதவர்களைவிட தைரியமும் மன அமரிக்கையும் பொருந்தியவர்களாக காணப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் எவ்வகை உத்தியோகங்களையும் தொழில்களையும் செம்மையாய் நடத்துவதற்கு நிதசரி புஸ்தக வாசிப்பு அவசியம். இத்தேசத்தில் திவான் உத்தியோகம் செய்த ஒரு மகானோடும் (Dewan N. Nanoo Pillai), போதகத்தொழில் நடத்திவந்த ஒரு விருத்தாப்பிய வித்வ சிரேஷ்டரோடும் (Rev. C. Yesudian) நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்களில் காணப்பட்ட அநேக நல் வழக்கங்களில் ஒன்று யாதெனில் சாகும்வரை எக்காலத்திலும் அகராதியின் சகாயத்தோடு புஸ்தக வாசிப்பில் முயற்சித்து வந்ததுதான். மாட்சிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தினியாராகிய விக்றோரியா (Empress Victoria) என்னும் மாது சிரோமணி அவர்கள் நாளதுவரை புஸ்தக வாசிப்பில் மாத்திரமல்ல, புஸ்தகம் எழுதுவதிலும் முயன்றுவருகிறார்கள். அவர்களிடத்தில் "ஒருதரம் ஒரு ஆபிரிக்க பிரபு விலையுயர்ந்த வெகுமதிகளோடு தன் ஸ்தானாபதியை அனுப்பினான். ஸ்தானாபதி வந்து இங்கிலாந்துக்கு இவ்வளவு மேன்மையும் மகிமையும் உண்டாவதற்கு காரணமென்னவென்று விசாரிக்க, இராணியவர்கள் தங்கள் யுத்தக்கப்பல்களின் தொகையையும், தங்கள் இராணுவத்தின் திரட்சியையும், தங்கள் தேசத்தின் அளவற்ற வர்த்தகத்தையும், ... தங்கள் கஜானாவின் திரவியக்குவியல்களையும், விலையுயர்ந்த இரத்தினங்களையும், ஆபரணங்களையும் காட்டாமல், அலங்காரமாய் கட்டியிருந்த வேதாகமப்பிரதி ஒன்றை எடுத்து அவன் கையில் கொடுத்தார்கள். பின்பு அவர்கள் அவனை நோக்கி,உன்னை அனுப்பின பிரபுவினிடத்துக்கு நீ இதைக் கொண்டுபோய் இங்கிலாந்தின் மகத்துவத்தின் ரகசியம் இதுதான் என்று சொல் என்றார்கள்." மேற்படி புஸ்தகத்தை நிதசரி ஒழுங்காய் வாசித்து தியானிப்பது இந்த இராஜமகிஷியின் வழக்கம்.

இன்னொருவர் சங்கதியை இங்கே சொல்லாமல் விடக்கூடாது. எதையென்றால் சிலவருஷங்களுக்கு முன்தான் நம்மெல்லாருடையவும் அதிதுக்கத்துக்கிடமாய் "நாடு நீங்கின" தாஷ்டீகரான விசாகம் திருநாள் மகா ராஜா அவர்களை குறித்ததைத்தான். அவர்கள் இளவரசராயிருந்தபோது மாத்திரமல்ல, சிங்காசனபதியான பின்பும், புஸ்தக வாசனையையும் புஸ்தகம் எழுதலையும் அதிசய விடாமுயற்சியாய் ஒரு ராச்சியத்தின் ஜோலிகள் மத்தியில் நடத்திவந்தார்கள்.

அன்றியும் ராஜாங்கஉத்தியோகங்கள் நிருவகித்து வருவோரும்கல்வித்துறைகளில்உழைப்போரும் மாத்திரமல்ல, கொல்லர், கொத்தர், தச்சர், தட்டார், கன்னார், துலாலர், கிருஷிகர், வணிகர், வண்ணார்,நெய்வோர், இயந்திராப்பியாசிகள், அச்சடிப்போர் முதலிய எவ்வகை கைத்தொழில் செய்வோரும் புஸ்தக வாசிப்பில் முயற்சிக்கலாம். இவ்வகையானவர்களில் பலர் தங்கள் தொழில் தொல்லைகளினிடையில் புஸ்தக வாசனையை விடாப்பிடியாய் கையாடி தம்தம் தொழில்களிலும் பல கல்வித்துறைகளிலும் தேர்ந்து பிரபல்லியப் பேர் பெற்றதற்கு அநேக அநேகம் திர்ஷ்டாந்தங்கள் உரைக்கலாம். சமையத்தாழ்வால் ஏதுவில்லை. புஸ்தக வாசனையானது ஒருவன் எந்த வேலை செய்வோனாகிலும் அவனை அவ்வேலையில் சிறக்கச்செய்யும்.

மேலும் காலையில் எழுந்தவுடன் இன்று எதை உண்போம் என்றறியாமல் திகைக்கிற ஏழைகளும் வாசிக்கலாம். இத்தேசத்திலும் எத்தேசத்திலும் கற்றோரில் பலர், வறிஞராயிருந்தவர். திருவள்ளுவர், ஔவையார் என்பவர்களுடைய வறுமையும், ஆகிலும் அவர்கள் அடைந்த கல்விச் சிரேஷ்டமும் சகலருக்கும் தெரிந்த விஷயமே. திருவள்ளுவர் வெகு காலமாய் நெய்தல் வேலை செய்தார். ஔவையார் சிலவேளைகளில் யாசகம் செய்து பிழைத்ததுண்டு. ஐரோப்பாவில் கல்விமான்களாய் பேரெடுத்த பலர் கொடிய தரித்திரரா யிருந்தவர்கள். ஜான்ஸன் (Johnson) என்பவர் பலமுறை போஜனமின்றி பட்டினியால் வருந்தியும் புஸ்தக வாசனையில் முயற்சித்து உலகத்துக்கு இனிய நூல்களை எழுதிவைத்தார். தமது மார்க்க கொள்கைகளால் ஐரோப்பாக்கண்டம் முழுதும் அசையும்படி செய்த 'மார்டின் லூத'ர்என்பவர்,முதலில் வீடுவாசல்களில் பாடிப்பாடி யாசித்து ஜீவனம் செய்து வாசிக்கத் தொடங்கினார். ஆறும் ஆதிரியன் (Adrian) ராசன், கார்பீல்ட் ஆதிக்கன் (President Garfield) முதலிய சிலர் கொடிய தரித்திரத்தில் வாசித்து தங்கள் கல்வித் திறமையால் சிங்காசனாதிபதிகளானார்கள். தற்காலத்தில் தென் ஆபிரிக்காவில் அற்புத யாத்திரை செய்து சிங்கங்களோடும் பொருதி உலகமெங்கும் தெரியப்பட்டிருக்கும் லிவிங்ஸ்தன் (Dr. Livingston) என்பவர் சிறுபிராயத்தில் வருஷந்தோறும் ஆறுமாதம் கூலிவேலை செய்து ஆறுமாசம் வாசித்தார்.

"கற்கை நன்றே கற்கைநன்றே
பிச்சைபுகினும் கற்கை நன்றே"

என்பது சற்புத்தி. ஆகையால் புஸ்தக வாசிப்பைப் பற்றி மேற்கூறிய சூத்திரத்தை

ஆசி! யாசி! வாசி! யோசி! யோசி! விசுவாசி! என்றும் சொல்லலாம்.

இப்போது இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஊமையர் செவிடர் மாத்திரமல்ல, குருடரும் புஸ்தகப் பிரயோகத்தில் தேறி வருகிறார்கள்.

அத்தேசங்களில் ஸ்திரீகள் இவ்விஷயத்தில் அடைந்திருக்கும் தேர்ச்சி பெரிதாயிருக்கிறது. அதை விவரிக்க சமயமில்லை. நமது தேசத்து ஸ்திரீகளும் பாடசாலைகளில் மாத்திரமல்ல, பள்ளிக்கூடப் படிப்பு முடித்தபின் வீட்டிலும் வாசித்துவரும்படி செய்வது மிகவும் முக்கியம். சிலர் இப்போது தொடங்கியிருக்கிறார்கள். அநேகர் அப்படிச் செய்து வரும்படி கற்றோரான பந்துக்கள் உற்சாகப்படுத்த வேண்டியது அத்தியந்த அவசரம். நமது ஸ்திரீகள்

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல,—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே யழகு"

என்பதை உணர்ந்து வாசிப்பில் ஆசைகொள்வார்களாகில், நமது குடும்பங்களிலும் தேசத்திலும் சீர்திருத்தம் எத்தனையோ வேகத்தில் தலைப்படும்!

கண்யவான்களான இஷ்டரே! இதுவரை சொல்லியதில் என் பிரதான நோக்கம் என்னவெனில் புஸ்தக வாசிப்பு என்னும் விஷயத்தில் இங்கு கூடியிருப்பவர்களில் சிலருக்காகிலும் முன்னைவிட அதிக தாற்பரியமும் ஆசையும் உண்டாகவேண்டும் என்பதே. ஸ்ரீ ஜான் ஹெர்ஷல் (Sir John Hershel) என்னும் நிபுணர் சொல்லுகிறார், "ஆத்தும சம்பந்தமான ஆறுதல்களுக்கு அப்புறம் இவ்வுலகத்தில் சகலநிலைமையிலும் நிர்வாகத்திலும் எனக்கு ஆதரவாய் நிற்பதற்காக கடவுள்நல்கவேண்டுமென்று நான் ஜெபிக்கத்தக்க விஷயம் ஒன்றுண்டானால், அது யாதெனில், புஸ்தக வாசிப்பின்பேரில் ஆசைதான்" என்பதே. இந்த விற்பன்னனுடைய அபிப்பிராயத்தில் நானும் சேருகிறேன். புஸ்தக வாசிப்பின்மேலுள்ள ஆசை நல்ல ஆசை. இந்த திவ்ய ஆசை நம் யாவரிடத்திலும் குன்றாதிருக்கும்படி கடவுள் கிருபை செய்வாராக!

ஆசி! வாசி! யோசி! யோசி! விசுவாசி!

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாடொழா அரெனின்"

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

. வே. மோசேஐயர்.

—):o:(—

ஆயுள்வேதபாஸ்கரன்.

(245 - வது பக்கத்தொடர்ச்சி.)

இராஜகிரகத்தில் குடியானவன் ஒருவன் கண்டமாலையால் வாதைப்பட்டுக்கொண்டிருந்தவன் "ஐயோ! என்னசெய்வேன். வைத்தியர்கள் எல்லாரும் என்னுடைய ரோகத்தை அசாத்திய ரோகமென்று கையை விரித்துவிட்டார்களே. இனி என்

னசெய்வது. ஆயுள்வேதபாஸ்கரனாகிய ஜீவககுமாரனைப்பற்றி எங்கும் பிரக்யாதியா யிருக்கின்றதே. அவனிடத்தில்போய் முறையிட்டுக் கொள்கிறேன். அவனுங் கையை உதறிவிட்டால் அந்தக்ஷணமே உயிரை விட்டுவிடுகிறேன்" என்றெண்ணிக்கொண்டு ஜீவகனிடஞ் சென்றான். ஜீவகன் "ஐயா! உன்னுடைய ரோகம் அசாத்திய ரோகமல்ல. அதற்கு மருந்து தேடிக்கிடைப்பது அசாத்தியம். நான் என்ன செய்வேன்" என்று சொன்னான். நோயாளியும் "இனி ஆவதென்ன. ஜீவகனுங்கைவிட்டான், ஓரிடமடைந்து உயிரை மாய்த்துக்கொள்வதே" என்றெண்ணிக்கொண்டு போகும்போது ஒரு சுடுகாட்டை அடைந்தான். அங்கே ஒரு சவம் வெந்துகொண்டிருந்தது. அப்போது கீரியொன்றும் கவுளியொன்றுமாகச் சண்டையிட்டுக்கொண்டு இரண்டும் சவம் வெந்துகொண்டிருந்த நெருப்பின்மேல் வீழ்ந்தன. இதைக்கண்ட பிணியாளன் பசி பொறுக்க முடியாதவனாய் அந்தக் கீரியையும் கவுளியையும் பிடித்துத் தின்றுவிட்டான். பின்பு அம்மயான வெளியில் உள்ள ஒரு குட்டையின் நீரை உண்டு அண்டையில் இருந்ததோர் மாட்டுத் தொழுவத்தில் இருந்துகொண்டு அங்கே கிடைத்த கஞ்சியில் புளித்த தயிரும் வெண்ணெயுஞ்சேர்த்து உண்டான். உண்டமாத்திரத்தில் வீக்கந் தணிந்து இரண்டு மூன்றுமுறை வாந்தியும் பேதியுமாகவே நோய் இலகுவாயிற்று.

இவன் செய்தி இங்ஙனமானபிற்பாடு, அரசன் மனைவி வைதேகி என்பவட்கு அடிவயிற்றில் கட்டி கண்டது. அவள் அதனை அரசனுக்குணர்த்த அவன் ஜீவகனை யழைத்து அதனை இலகுவாக்க வேண்டினான். ஜீவகனும் மாக்களி கிளறி அதன்மேல் வைதேகியை இருக்கச்செய்தான். பின் அதனையெடுத்து ஆராய்ந்து பார்க்கையில் இன்ன இடத்தில் இவ்வளவான கட்டி புறப்பட்டிருக்கிறதென அறிந்து அது பழுக்கலாவதான உபாயஞ் செய்வித்தான். கட்டியும் பழுத்தானதென்று அறிந்த பிறகு மறுபடியும் மாக்களி கிளறி அதனுள் எவர்க்குந் தோன்றாமல் ஒரு சூரியை வாட்டமாக மறைத்துவைத்து அதன்மேல் வைதேகியை இன்னபடிஉட்காரவேண்டுமென்று திட்டப்படுத்தினான். அவளும் அப்படியே உட்கார்ந்தாள். மறைத்துவைத்திருந்த சத்திராயுதம் கட்டியில் தாக்கினவுடனே, கட்டியும் அறுபட்டு விஷநீரெல்லாம் வெளிப்பட்டன. பின் இரணம் ஆறும்படியான மருந்துகளைப் போடுவித்தான். அவளும் இலகுவாகிச் சுகமடைந்தாள்.

அரசன் ஜீவகனை அழைத்து "அப்பா ஜீவகா! கட்டி இலகுவாயிற்றா?" என்று கேட்டான். ஜீவகன் "இலகுவாய்விட்டது" என்றான். அரசன் "பெண்ணாகின்றவளுக்கு அடிவயிற்றில் கண்ட கட்டியை ஆயுத சிகிச்சை செய்வதனால், பாவம் வெட்கம் அதிகரித்தவள் அதற்கு இசைவாளா. நீ மைந்தன் முறை யாதல்பற்றி வைதேகியும் உன்னிடம் ஆயுதசிகிச்சை செய்துகொண் டிருக்கவேண்டும்" என்றான். அதுகேட்ட ஜீவகன் "அண்ணா! அடியேன் ஆடைகளைந்து அந்தக் கட்டியைச் சிகிச்சை செய்யவில்லை" என்று சொன்னான். அரசன் அதிசயித்து "மற்றெப்படிச் செய்தாய்" என்று கேட்க, ஜீவகன் "மாக்களியின்மேல்உட்காருவித்துப் பின்பு அதை யெடுத்துப்பார்த்து இன்னஇடத்தில் இவ்வளவான கட்டி கண்டிருக்கிறதென்று கண்டு அதற்கேற்ற சிகிச்சைகளைச் செய்வித்தேன்" என்றான். மன்னனும் மைந்தனை இறுகத் தழுவிக்கொண்டு மந்திரிமார்களை அழைத்து "இன்னும் ஒருமுறை இவனுக்கு ஆயுள்வேதபாஸ்கரன் எனப் பட்டஞ்சூட்டுங்கள்" என்றான்.

அப்போது கண்டமாலையால் வாதைப்பட்டிருந்து தற்செயலான அநுகூலங்கள் நேரிட்டு இலகுவான குடியானவன் அரண்மனையை யடைந்து "மண்டலேசுவரரே! மந்திரிமார்களே! ஓட்டைநாழிக்குப் பூண்கட்டுவதுபோல, இந்த ஜீவகனிடத்தில் என்ன திறங்கண்டீர்; மறுபடியும் ஆயுள்வேதபாஸ்கரன் என்னும் பட்டங்கட்டத் துவசங்கொண்டீர்களே. அவன் என் நோயைத் தீர்க்கவில்லையே" என்றான். அது கேட்டிருந்த ஜீவகன் "என்ன ஐயா! அரைத்து மீந்தது அம்மி, சிரைத்து மீந்தது குடுமி என்பது போலப் பேசுகின்றீர். உம்முடைய நோயைத்தீர்க்க என்னாலாகாது என்று சொன்னதுண்டோ? உம்முடைய நோய்க்கு வேண்டிய மருந்துகளை ஒருங்கே தேடிக்கிடைப்பது அருமை என்றுதானே சொன்னேன்" என்றான். அதன்மேல் குடியானவன் "ஆனால், என்னை வாதித்த வியாதிக்கு மருந்தாவதைச் சொல்லும் பார்ப்போம்" என வேண்டினான். ஜீவகனும் சடக்கெனச் சொல்லலாயினான்:—"வளர்பிறைப் பதினான்காநாளில் அழகிய மயிர் உடையான் ஒருவன் இறக்க அவனை மயானத்தில் தீயிட்டெரிக்கும்போது, கீரியும் கவுளியும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு அந்தத் தீயில் வீழ்ந்தால் கண்டமாலைகொண்டவன் அந்தச் சமயத்தில் அக்கீரி கவுளிகளைப் பிடித்துத் தின்னவேண்டும். உடனே அம்மயானத்தில் மழைநீரிருந்தால் அதனைக் குடிக்கவேண்டும். சற்றுநேரம் பொறுத்துக் கஞ்சியில் புளித்த தயிரும் வெண்ணெயுங்கூட்டி உண்ணவேண்டும். இத்தனையும் ஒருங்கே அமையப் பெறுவது கூடுமோ? தெய்வாநுகூலமாய் இவை யனைத்தும் ஒன்றொழியாமல் அமையப்பெற்றால் அந்நோயானது சூரியனைக்கண்ட பனியாகும். இதற்குச் சந்தேகமில்லை" என இதுகேட்ட குடியானவன் "ஓ! ஓ! உம்மைச் சாமானியரென்று நினைத்தேன். மூவுலகினும் உமக்கு நிகரானவர் எங்கு கிடைப்பார்? ஆயுள்வேதத்தை அளவிட்டறிந்தவரா யிருக்கிறீர். அவ்வேதந்தானும் நீரிட்டது பிச்சையாய்க் கிடக்கின்றது. உமக்கு இவர்கள் கட்டவந்த பட்டந்தானும் உம்முடைய பெருமையைத் திட்டப்படுத்திக் காட்டாது. மறைந்துறையு மந்திர விஞ்சையொன்றும் வல்லவராயின் உம்மை முழு முதற் கடவுள் என்றே கொள்வேன்." என்றுசொல்லிக் கும்பிட்டுச் சென்றான். மந்திரிமார்களும் ஜீவகனுக்கு இரண்டாமுறை ஆயுள்வேதபாஸ்கரன் என ஊரறிய முரசறைவித்துப் பட்டங்கட்டினார்கள்.

சிலநாள் சென்றபிறகு, அரசனுக்குத் தலைமகனாகின்ற அஜாதசத்துரு என்பவன், வஞ்சகச் செய்கையுடைய தேவதத்தன் என்கின்றவனால் தூண்டப்பட்டவனாய், தன் தந்தையைக் கொலைசெய்து அரசாட்சியை வௌவிக்கொண்டான். வௌவிக்கொண்ட சிலநாளில் அவன் வயிற்றில் கட்டி கண்டது. தகப்பனைக்கொன்ற தீவினையே ஒரு உண்டையாகி அவன் வயிற்றிற் புகுந்துகொண்டு வாதிப்பது போல அந்தக் கட்டியானது அதிக நோவைக் கொடுத்தது. கொடுக்கவும் அஜாதசத்துருவானவன் வைத்தியர்களை அழைத்து "அந்தோ! அய்யோ! என்ன செய்வேன், இந்தக் கட்டியால் படும் வேதனை சித்திரவதை என்பதைக் காட்டில் மிகப் பெரிதா யிராநின்றது. இதற்குச் சீக்கிரமாகவே சிகிச்சை செய்யுங்கள்" எனக் கூறினான். கூறக்கேட்ட வைத்தியர்கள் "எம்பெருமான்! சூரியன்முன் பனிநிற்குமோ? ஆயுள்வேதபாஸ்கரனாகும் ஜீவககுமாரபந்தன் இங்கிருக்க எங்களை அழைப்பானேன்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடுவதுபோ லிருக்கின்றதே." என்றுசொல்லிப் போய்விட்டார்கள்.

அஜாதசத்துரு அதன்மேல் "என்ன செய்வது. இம்மருத்துவப் பைதல்கள் இந்த ஜீவகனைக் கையைக் காட்டிவிட்டார்கள்; இவன் மருந்துகொடுக்கும் பாவனையாக என் உயிரை அருந்தி நான் வருந்தித்தேடிய அரசைக் கைக்கொள்ளவுங்கூடும். ஆயினும் நான் அறிந்தமட்டில் இவன் அப்படிச் செய்பவனல்ல. அஃதன்றியும் இவன் அரசைப்பெரிதாகக் கொள்கின்றவனல்லவே. ஆயுள்வேதந்தானே இவனுக்கு அரிய பெரிய வித்தியாவிநோதமா யிராநின்றது. இவனும் என் நோயைத் தீர்க்காது என்னைக் கொல்லுவானாயின் இவனுடைய பெருமைக்குக் குறைவு உண்டாகும். ஆகவே இவன் அந்த நினைவு கொள்ளவே கொள்ளான். குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கு மென்பதுபோல, நான்இவனிடம் சந்தேகங்கொண்டேன்." என்று நினைத்துக்கொண்டு, ஜீவகனை அழைத்தான். அழைத்து "அப்பா! தம்பி! என் வயிற்றில் கட்டி கண்டிருக்கிறது. அதனைக் கண்டித்தல்வேண்டும்" என்று வேண்டினான். ஜீவகனும் கட்டியின் தன்மையை நுணித்தறிவதுபோலச் சிந்திப்பான்:—"இந்தக் கட்டியானது சந்தோஷத்தின் மிகுதியாலாயினும் கோபத்தின் மிகுதியாலாயினும் கண்டிக்கத் தக்கது. இவனோ பஞ்சமாபாதகனைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமான சண்டாளன்: தகப்பனைக்கொன்ற தறுகண்ணன்: இந்தப் பாபாத்துமாவைப்பிடித்தநோயைச் சந்தோஷத்தின் மிகுதியால்தீர்ப்பேனாயின் நான்இவனைக் காட்டிலும் பெரிய பாவியாவேன். ஆகையால், இவனைக்கோபத்தைப் பெருக்கியே நோயை ஒழிக்கவேண்டும்."என்றிப்படியாகச் சிந்தித்து "தமயனாரே! இந்தச் சண்டாளத்தை ஒழிக்க ஒரு வகையுண்டு. அதென்னவென்றால், உமது உயிர்ப்புதல்வனாவான் உத்ஜீபத்திரனுடைய உடலின் மாமிசத்தை உண்ணுவதற்கு உடம்படல்வேண்டும். இல்லாவிட்டால் இந்த நோயைத்தீர்க்க என்னாலாகாது" என்றான். அது கேட்ட அஜாதசத்துரு அதிக ஆவேசங்கொண்டு "நன்று நன்று. நான் என் தகப்பனைக் கொன்றேன். நீ என் மைந்தனைக் கொல்வாய்,என்னையுங்கொல்வாய், அரசையுங் கைப்பற்றிக்கொள்வாய். ஆயுள்வேதத்தின் பெருமை இதுதானோ?" என்றான். இதைக் கேட்ட ஜீவகன் "எனக்கு அரசு கைக்கொள்ளும் எண்ணஞ்சிறிதுமில்லை. அரசனாகின்றவனுக்குத்தன் நாட்டி லல்லாற் சிறப்பில்லை. ஆயுள்வேதியனுக்கு அகிலப் பிரபஞ்சத்திலும் சிறப்புண்டு. உமது நோயைத்தீர்க்க இதுவல்லாமல் மருந்தில்லை" என்று சொல்லிச் சும்மா இருந்தான். அஜாதசத்துருவும் அதற்கிசைந்தான். இசைந்தவுடனே, ஜீவகன் உத்ஜீபத்திரனை ஆடையும் அணியும் அணிவித்துக்கொண்டுவந்து "அண்ணா! இவனை இப்போதுதானே நன்றாய்க் கண்குளிரப் பாரும். இனிமேல் பாவம் இவனைக் காணப்போவதில்லையே" என்றுசொல்லி அவனை உடன் கூட்டிக்கொண்டு போனான்.

பின்பு ஜீவகன் உத்ஜீபத்திரனை ஓரிடத்தில் மறைத்துவைத்து மயானஞ்சென்று அங்கு கிடந்த ஒரு சவத்தின் தசையைக் கொண்டுவந்து அதனோடு வாசனைத்திரவியம் பலகலந்து சமைத்துக்கொண்டுபோய் அரசன் எதிரில் வைத்தான். வைத்தவுடனே, அரசன் அதனைக் கேட்டுக் கையிலெடுத்து உண்ணத் தொடங்கினானாக, ஜீவகனும் சடக்கெனக் கையைப் பிடித்துக்கொண்டு அவன் தலையில் இடித்து "பாவி! உன் தகப்பனைக் கொன்றுவிட்டாய், இப்போது உன் அரிய பிள்ளையின் தசையை உட்கொள்ளத் துணிந்தாயே!" என்று சொன்னான். அஜாதசத்துருவும் "எட! நீதானே என் மகனைக் கொல்லவேண்

டினாய்" எனச் சீறிக்கோபத்துடன் கொதித்தெழுந்தான். எழுந்தவுடனே வயிற்றில் உள்ள கட்டியானது உடைத்துக்கொள்ள, அதினின்றும் சீயும் இரத்தமும் மேலுங்கீழுமாகப் பெருக்கெடுத்துப்புறப்பட, அதைக்கண்ட அரசன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டான். பிற்பாடு அவன்மேல் ஜீவகன் தண்ணீரைத் தெளித்தான். அரசனும் ஸ்மரணைதோன்றி எழுந்திருந்து நீராடி அறுவகை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட உண்டு இன்பமடைந்தான்.

அப்பால் ஜீவகன் உத்ஜீபத்திரனை அழைத்துக்கொண்டுவந்து, அரசனைப்பார்த்து "அண்ணா! உம்முடைய புத்திரனும் உத்ஜீபத்திரனைப் பாரும்; அடியேன் ஈ யெறும்பைத்தானும் என்னுயிர்போல் எண்ணியிருப்பவன். என் அண்ணன் மகனும் இவனை உயிர்க்கொலைசெய்ய உடம்படுவேனோ? உமது நோய்தீர்க்கும் பொருட்டே இந்த உபாயம் பண்ணினேன்." என்று சொன்னான். அஜாதசத்துருவும் ஆநந்தமாக்கடலில் மூழ்கிக்களிபேருவகையெய்தித் தம்பியையுந் தநயனையுஞ் சேரத் தழுவிக்கொண்டான். பின் ஜீவகனுக்கு மூன்றுமுறையும் ஆயுள் வேதபாஸ்கரன் என்று பட்டங்கட்டப்பட்டது.

தீ. செல்வகேசவராயமுதலியார்.

:o:

சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

1. பிரதிபிம்பவிநோதம்.

ஒரு காகித அட்டையில் மனிதர்கள், மிருகங்களைப்போல உருவம் வெட்டி, ஒவ்வொன்றின் பாதங்களில் மெல்லிய கம்பிகள் மாட்டி, இவைகளை ஓர் பிரகாசமான விளக்கின் எதிரில் பிடிக்க, அவைகளின் சாயல் எதிரில் விழும். அவ்விடத்தில் ஒரு விசாலமான வெள்ளைத்துணித்திரையை தொங்கவிட உருவங்களின் நிழல்கள் நன்றாய்த்தோன்றும். மேற்படி அட்டை உருவங்களை விளக்கின் அருகில் கொண்டுபோகப் போக, திரையில் தோன்றும் நிழல்கள் வரவரப் பெரிதாகும். உருவங்களைத் திரைக்கு முன்பாகக் கொண்டு வர வர உருவம் படிப்படியே சிறிதாகும்.

மேற்கூறிய அட்டை உருவங்களை ஓரிடத்தில் அசையாமல் நிறுத்தி விளக்கைமாத்திரம் எடுத்து அசைக்க நிழல்களும் திரையில் ஓடுகிறாப்போல் தோன்றும். ஒருவிளக்கு உபயோகித்தலோடு இன்னொரு விளக்கும் உபயோகிக்க, ஒவ்வொரு அட்டை உருவத்துக்கும் இரண்டு நிழல்கள் தோன்றும். இப்படியே ஓர் போர்வீரனுடைய உருவத்தை அட்டையிலொட்டி ஓரிடத்தில் நாட்டி அநேக தீபங்களை உபயோகிக்க எண்ணிறந்த இராணுவவீரர் உருவங்கள் தோன்றும்.

இவ்வேடிக்கைகளைச் செய்யுங்கால் விளக்கிற்கு பதில் சிவப்புமத்தாப்பு உபயோகிக்கில் உருவங்களின் நிழல்கள் சாதாரணமாய் கருநிறமாய்த் தெரிவதோடு நிழற்களின் ஓரங்கள் பச்சை வருணமாய்த் தோன்றும். இவ்வண்ணமே பச்சை மத்தாப்பு நீலமத்தாப்பு இவைகளை தனித்தனியாய் உபயோகிக்க நிழலின் ஓரங்கள் சிவப்பு, மஞ்சள் இவ்வித நிறங்களாய் தனித்தனி தோன்றும். இவ்விநோதங்களைப் பரீக்ஷிக்க மத்தாப்பு அகப்படாவிடின், மேற்சொல்லிய வருணங்களில் யாதொரு நிறமுடைய கண்ணாடிகளால் முழுவதும் பதித்த பலகணியுடைய வீட்டிற்குள் செய்து பார்க்கலாம். அவ்வீட்டிலிருக்கும் வஸ்துக்களின் சாயல்கள் மேற்கூறிய விதமாகத் தோன்றும். சன்னற் கண்ணாடி மூலமாய் வரும் வெளிச்சம்தவிர யாதொரு ஒளியும் அறையில் புகவிடக்கூடாது.

2. மாயரூபக் காட்சிகள்.

ஒரு விசாலமான வீட்டின் ஜன்னலில் கால் அங்குலம் அளவினதான துவாரம் செய்து வீட்டிற்குள் யாதொரு ஒளியும் வாராதபடி, கதவு முதலானவைகளை நன்றாய்ச் சாத்தி காரிருளாக்கி, துவாரத்தின் நேராக வீட்டிற்குள் வெண்மையான திரையை (துணி அல்லது காகிதம்) தொங்கவிட்டு வீட்டிற்கு வெளியில் துவாரத்திற்குச் சற்று தூரத்தில் மனிதர்கள், படங்கள், மிருகங்கள் இவைகளை வெய்யில் நன்றாகப்படும்படி நிற்கவைக்க இவைகளின் உருவங்கள் வீட்டுக்குள்ளிருக்கும் திரையில் தலைகீழாகத் தோன்றும். ஆனால் அது கம்மலாயிருக்கும். மேற்படி துவாரத்தின் அகலத்தைக் குறைக்கக் குறைக்க உருவமும் தெளிவாய்த் தோன்றும், திரையும் உருவமும் தெளிவாய்த் தோன்றும்வரையும் துவாரத்திற்கருகே கொண்டுபோகவேண்டும். துவாரம் குண்டூசி அளவினதாயிருந்தால் திரையை துளைக்கு மூன்று, நாலு அங்குலதூரத்தில் கட்டவும். இப்பொழுது உருவம் மிகச் சிறிதாயும் தெளிவாயுமிருக்கும். இவ்வுருவம் துளைக்கு வெகு அருகாமையி லிருப்பதால் இசைவாய் பார்க்க முடியாதாகையால், *முட்டை காகிதத்தில் எண்ணெயைத் தடவி இக்காகிதத்தைத் திரையாக உபயோகித்து காகிதத்தின் பின்னாலிருந்து துவாரத்தின் பக்கமாய்ப் பார்க்க உருவம் தோன்றும். முட்டை காகிதத்திற்கு பதில் சுத்த வெள்ளைக் கண்ணாடியின்மேல் பசு அல்லது எருமைப் பாலைத் தாராளமாய் ஊற்றி தூசுபடாதவிடத்தில் சாக்கிரதையாய்க் காயவைத்து பின்பு உபயோகிக்கவும். ஊசித் துவாரங்களின் மூலமாய் உருவங்கள் திரையில் அமையும் ஆதாரத்தைக்கொண்டு அநேக வர்த்தக கம்பெனியார் பூதக் கண்ணாடிக்குப் பதில் குண்டூசித் துவாரத்தை யுபயோகித்து மிகவும்சொற்பவிலைக்கு சிறு 'பொட்டகிராப்பு' (ஒளிப்படமெடுக்கும்கருவி) பெட்டிகள் செய்து விற்கிறார்கள். ஓலைப் பந்தல் மரங்கள் இவைகளின்மேல் சூரிய அல்லது சந்திர காந்தி பிரகாசிக்கும்பொழுது தரையில் வட்டம் வட்டமாக ஒளிப் புள்ளிகள் தோன்றுவதை ஒவ்வொருவரும் கவனித்திருக்கலாம், இவைகள் வானத்தில் பிரகாசிக்கும் சூரிய அல்லது சந்திரனது உருவமன்றி வேறல்ல.

துளைக்குப்பதில் பூதக்கண்ணாடியை உபயோகிக்கின் உருவங்கள் இயற்கை வருணங்கள் அமைந்து வெகுவிநோதமாய்த் தோன்றும். இவ்வாறு செய்யும் விதத்தைப்பற்றிப் பின்னால் விபரமாய் எழுதப்படும்.

* முட்டைக்காகிதம்—Tissue paper (சிறுவர் படம்விட உபயோகிக்கும் இலேசான ஒருவித காகிதம்.)

3, கண்ணிற் கருகிலிருக்கும் வஸ்துவைத் தெளிவாய்ப் பார்க்கும் விதம்.

சாதாரணமாய் ஓர் வஸ்துவைக் கண்ணிற்கருகாமையில் பிடித்துப்பார்ப்போமாகில், அது தெளிவாகத் தெரியவேமாட்டாது. ஓர் மெல்லியகாகித அட்டையில் குண்டூசியால் துளைசெய்து அத்துளைமூலமாய் ஒரு குண்டூசித்தலையைப் பார்த்தால் அத்தலையானது தெளிவாயும், பெரிதாயும், தூரத்திலிருப்பதாகவும் தோன்றும். இது மற்றெந்த வஸ்துக்களுக்கும் அப்படியே பொருந்தும்.

4. நிழல்களின்விந்தையான ஆரோபங்கள்.

ஓர்பெரிய அறையின்மத்தியில் ஒருபிரகாசமுள்ள விளக்கைத் தரையில்வைத்து, அதற்கு 10 - அல்லது 12 - அடிகளுக்கு அப்பால் சுமார் 12 சதுர அடியுள்ள (என்றால், 12 அடிநீளமும் 12 அடி அகலமுமுள்ள) ஒருமல்திரையைத் தொங்கவிட்டு வேடிக்கைபார்க்கவந்தவர்களை திரைக்கப்புறத்தில் உட்காரவைத்து, பிறகுதிரைக்கும் விளக்கிற்கும் மத்தியில் எவ்விடத்திலாவது ஓர்மனிதன் நின்றால் அவன் சாயல் திரையில்தோன்றும். அம்மனிதன் விளக்கின் அருகிற்போகப்போக அவன்நிழல் திரையில் வரவரப்பெரிதாகும். அவன் திரைக்குமுன்பாக வரவர அவன்சாயல் சிறிதாகும். கடைசியில் அவன் திரைக்குப்பக்கத்திலேயே நின்றால் அவன் உருவமும் சாயலும் ஒரே அளவினதாயிருக்கும். மேலும் அவன் திரையினின்று மெல்லமெல்ல விளக்குப்பக்கமாக ஏகவே உருவம் வரவரப்பெரிதாகி, அவனிருபாதமும் ஒன்றாய்ச் சேர்த்துக் கிளம்பி விளக்கைத்தாண்ட திரையில் அவன் சாயல் ஆகாயத்தில் எகிறிப்பறந்து போய்விட்டதுபோல் புலப்படும். அவன் விளக்கிற்கு அப்புறத்தினின்று திரைப்பக்கமாய் குதிக்க அவனுடைய பிரமாண்ட உருவச்சாயல் திடீலென்று தோன்றி ஆகாயத்தினின்று மிறங்குவதைப் போற்காணும். இவ்வேடிக்கையை நடித்துக்காட்டுங்கால் திரைக்கருகிலோர் மனிதனையும், தீபத்திற் கருகிலோருமனிதனையும் நிற்கவைத்துப்பார்க்க பின்கூறிய மனிதனுருவம் மேற்சொல்லியவாறு அகண்டரூபமாயும், திரைக்கருகிலிருக்கும் மனிதன் சாயலோ மற்றவன் சாயலைவிட எத்தனையோ மடங்கு குன்றியதாயும் தோன்றும். இப்பொழுது விளக்கருகினிற்பவன் வாயை ஆ என்னும் எழுத்துச்சரிப்பதுபோல் நன்றாய்த்திறந்து திரைக்கருகில் நிற்பவன் நிழலின் தலைக்கருகில் கொண்டுபோக திரைக்கப்புறத்தினின்றும் வேடிக்கை பார்ப்பவர்களுக்கு ஒருமனிதனை ஒரு இராக்ஷதன் விழுங்குவதுபோல் தோற்றப்படும். இவ்வாறே ஆங்கிலேயபாஷையில் எழுதப்பட்டிராநின்ற (Jack the Giant Killer) 'இராக்ஷதன் கொல்லி ஜாக்' என்னும் சிறுவர்க்குல்லாசமளிக்கும் ஓர் சிறுகதையையும் (Gulliver's Travels) 'கல்லிவர் யாத்திரைகள்' என்னும் மிகநகைப்பூட்டும் கதையையும் தக்கவர்களைக்கொண்டு தமிழில்மொழி பெயர்த்துக் அக்கதைகளின் வரலாறுகளைக் காண்பவர்கள் களிக்கத் திரையில் நன்றாய் நடித்துகாட்டலாம்.

5. நெருப்புக்கண்ணாடி.

ஒரு பூதக்கண்ணாடியை சூரியனுக்கு நேராய்அசைவறப்பிடித்துக்கொண்டு பஞ்சு அல்லது சீக்கிரத்தில் தீப்பற்றிக்கொள்ளக்கூடியஎவ்வஸ்துவையாவது மேற்படி கண்ணாடியில் பிடித்துக்கொண்டு கண்கூசும்படியான அவ்வளவு காந்தியுள்ள ஒரு ஒளிப்புள்ளி அதன்மேல் தோன்றும்வரையும், அதை கண்ணாடிக்கருகிலாவது, அதற்கு சற்றுதூரத்திலாவது கொண்டுபோய் அவ்வாறு தோன்றியபின் கண்ணாடியையும் வஸ்துவையும் அசையாது சற்றுநேரம் பிடிக்க சூரிய உஷ்ணத்தினால் சூடு கண்ணாடிமூலமாய் ஊடுருவிச் சென்று வஸ்துவில் தீமூட்டிவிடும்.

6. ஜாலக்கிளியும் அதின்கூண்டும்.

ஒருகாகித அட்டையை அதின்'மத்தியரேகை' அல்லது குறுக்களவு 4 அங்குலம் இருக்கும்படியாக வட்டமாகவெட்டி அதின்மத்திய ரேகையின் இரண்டு முனைகளிலும் இரண்டுஉண்டை நூற்கயிறுகளைக்கட்டி, அவ்வட்டையின் ஓர்பக்கத்தில் கிளிக்கூண்டும் மற்றோர் பக்கத்தில் கிளியுமெழுதிவிட்டு அட்டையில் கட்டியிருக்கும் இரண்டுகயிறுகளைப்பிடித்துக்கொண்டு அட்டையைத் துரிதமாகச் சுற்றினால், அட்டையின் இருபக்கத்திலும் கூண்டில் கிளிவசித்திருப்பதாகத்தோன்றும். (இன்னும்வரும்.)

மா. நடேசன்.

இரண்டு நீதிகள்.

உரோம தேசத்திலே 'டொமீஷியன்' என்று ஒரு சக்கரவர்த்தி யிருந்தான். அவன் துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம் பண்ணி நீதிதவறாமல் இராச்சியபாரஞ்செய்து வந்தான். வருகையில் ஒருநாள் தன்னுடைய மந்திரி பிரதானிகளோடு கொலுமண்டபத்தில் கொலுவிருக்கும்போது, ஒரு வர்த்தகன் வந்து காவல்காரனைப்பார்த்து "அப்பா! நான் சக்கரவர்த்தியைக்காணவேண்டும்." என்று சொன்னான். உடனே காவல்காரன் அந்த வியாபாரியை இட்டுக்கொண்டுபோய்ச் சக்கரவர்த்தியின் எதிரிலே விட்டான்.

அந்த வர்த்தகன் அரசனைக் கண்டமாத்திரத்தில் அடியில்விழுந்து நமஸ்காரம்பண்ணி எழுந்து நின்றான்.

அப்போது அரசன் "அப்பா! நீ என்னென்ன சாமான்களை விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறாய்? என்று கேட்டான்.

அதற்கு அந்த வணிகன் "இராஜாதிராஜனே! வேறொன்றுமில்லை. இரண்டு மூதுரைகள் எழுதிக் கொண்டுவந்திருக்கிறேன். அவை அதிகமேன்மையானவை." என்று சொன்னான்.

அரசன் "அந்த இரண்டு மூதுரைகளுக்கும் எவ்வளவு கேட்கிறாய்?" என்றான்.

"ஆயிரம் ரூபா" என்று வர்த்தகன் சொன்னான். அரசன் "மெய்தான். அவைகள் எனக்கு பயன்படாவிட்டால், நான் வீணாக திரவியநஷ்டம் அடைவேன் அல்லவா?' என்று கேட்டான்.

வர்த்தகன் "மஹாப்பிரபு! அந்த இரண்டு பழமொழிகளும் தங்களுக்கு நல்ல ஆபத்துக்காலத்தில் உதவாமற் போகுமேயானால், தங்களுடைய பணத்

னைத் திரும்பக்கொடுத்து விடுகிறேன்'' என்றுசொன்னான்.

அரசன் "நல்லது. அவைகளைச்சொல்லு கேட்கலாம்'' என்றான்.

வர்த்தகன் "மண்டலேசுவரா! கேளும் முதலாவது, 'நுண்ணிய கருமமு மெண்ணித் துணி,' என்பது. இரண்டாவது 'வழியே ஏகுக வழியே மீளுக' என்பது. இந்த இரண்டையும் அநுசரித்து வருவீர்களானால், இவைகளால் தங்களுக்கு விசேஷ நன்மை உண்டாகும்.'' என்று சொன்னான்.

அரசனும் அதே அபிப்பிராயங்கொண்டு அந்த வர்த்தகனுக்கு ஆயிரம்ரூபா கொடுத்துவிடும்படி உத்தரவுசெய்தான். முதல் மூதுரையின்மேல் அதிக பிரியங்கொண்டவனாகி, அதை கொலுமண்டபத்திலும் படுக்கையறையிலும், தான் நடமாடும் எல்லா இடங்களிலும், சுவர்களின்மேல் எழுதுவித்தான். உண்ணுங்கலங்களிலும் உடுக்கும் வஸ்திரங்களிலுங் கூட அப்படியே எழுதுவித்தான்.

இப்படியிருக்கையில் இந்த அரசன், இவன் ஆனவன் இவன் ஆகாதவன் என்று தயைதாக்ஷிணியம் பக்ஷபாதமில்லாமல் நீதிசெலுத்தி வந்தமையினாலே, இவனை எப்படியாகிலும் கொல்விக்கவேண்டுமென்று அவன்குடிகளில் சில சண்டாளர்கள் ஒன்றுகூடி இரகசியமாக ஒரு ஏற்பாடு செய்தார்கள். அரண்மனை அம்பட்டனை அழைத்து, அவனுக்கு அதிக வெகுமதிகள் செய்வதாக வாக்கிட்டு, அரசனுக்கு க்ஷவரஞ்செய்யும்போது மெதுவாய் அரசனுடைய கழுத்தை அறுத்துவிடும்படி வேண்டினார்கள். பணமென்றால் பிணமும் வாயைத்திறக்குமல்லவா? அந்த அம்பட்டனும் அப்படியே ஆகட்டும் என்றுசொல்லிப்போனான்.

மறுநாள் அரசனுக்கு மயிர்களையச்சென்ற அந்த அம்பட்டன் தண்ணீரை விரலால்தொட்டு கன்னத்திலும் மோவாய்க்கட்டையிலும் தடவிவிட்டு கத்தியை எடுத்து தோல்பட்டையில்தேய்த்து தொடையின்மேல் தட்டும்போது, அரசன் தன்மடியில் மயிர் விழாதிருக்கும்படி போட்டுக்கொண்டிருந்த குட்டையில் 'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி' என்று எழுதியிருந்ததைக் கண்டான். அதைக்கண்டவுடனே "ஐயோ! என்னகாரியஞ்செய்ய இசைந்தேன். நான் அவர்கள் வேண்டினபடி இந்த அரசன் கழுத்தை அறுத்துவிடுவேனாகில் என்னை அதிக அவமானத்துடன் கழுவேற்றி விடுவார்கள். பதறாத காரியம் சிதறாது என்பார்கள். எந்தக்காரியத்தையும் முன்பின் ஆலோசித்துச் செய்தல்வேண்டும்'' என்று எண்ணிக்கொண்டே மயிரை வழிக்கும்படி கத்தியை எடுத்தான். கைநடுக்கலெடுத்து கத்தி கீழே விழுந்துவிட்டது. அரசனும் அதைக்கண்டு என்ன சங்கதி என்றுகேட்டான்.

அப்போது அந்த நாவிதன் "சாமி! கோபிக்க வேண்டாம். சில சண்டாளர்கள் உங்கள் கழுத்தை அறுத்துவிடும்படி என்னைக்கூலிக்குப் பேசியனுப்பினார்கள். ஐயோ! நல்லகாலம். கடவுளுடைய கிருபையினாலே அகஸ்மாத்தாக இந்த குட்டையைக் கண்டேன். அதன்மேல் எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்தேன். 'நுண்ணைய கருமமும் எண்ணித்துணி'என்றிருக்கவே, நான் எண்ணிவந்தபடியே செய்துவிட்டால் என்கெதி என்னவாகும் என்று நினைக்க, என்மனதில் அச்சங்கொண்டேன். அதனால் கைநடுக்கலெடுத்து கத்தி கீழேவிழுந்துவிட்டது. எம்பெருமானே! அடியேனை க்ஷமித்தருளவேண்டும்'' என்று சொன்னான்.

இப்படியாக அந்த அம்பட்டன் சொன்னதையெல்லாங்கேட்ட இராசன் "ஆஹா! இந்தமுதல் மூதுரையல்லவா என்னுடைய பிராணனைக் காத்தது. நல்லவேளையில் அதை வாங்கினேன்'' என்று சந்தோஷித்து, அம்பட்டனைப்பார்த்து "அடா! முட்டாள்பைதலே! இனி இப்படிப்பட்ட காரியத்தில் பிரவேசிக்க வேண்டாம். பத்திரம்! இந்தவேளை உன்னை மன்னிக்கிறேன்'' என்றான்.

அரசனைக்கொல்ல வழிதேடின அந்த சண்டாளர்கள் இந்த உபாயம் இப்படி வீணாய்ப்போகவே, இனி வேறென்ன செய்யலாமென்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

அப்போது அவர்களில் ஒருவன் அரசன் இன்ன நாளில் இன்ன ஊருக்குப்போக இருக்கிறானாம். அந்த ஊருக்குப்போகின்றவழி அதிக சுற்றாயிருப்பதால் பெரும்பான்மையாய் கிளைவழியாகப் போவானென்று எண்ணுகிறேன், அப்படிபோகும்போது நாம் அந்தக் கிளைவழியில் பதிவிருந்து அவனைக்கொல்லலாம்'' என்றுசொல்ல, எல்லாரும் சரிதான் என்று ஒப்புக்கொண்டார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே அரசன் அந்த ஊருக்குப் போவதற்காகப் புறப்பட்டான். புறப்பட்டுக்கொஞ்சதூரம் போனவுடனே சேனாதிபதிகளெல்லாம் "ஐயா, இந்தவழி அதிகசுற்றானது. இதோ தெரிகின்ற இந்தக்கிளைவழியே போவோமானால் இலேசாய் வெகுசீக்கிரத்தில் போய்ச்சேரலாம்'' என்றுசொன்னார்கள்.

அரசன் அதைப்பற்றிச் சிந்தித்து "அப்பா! சேனாதிபதிகளே! "வளையவளையப் போனாலும் வழியேபோகவேண்டும்.'' அந்த வர்த்தகனும் 'வழியே ஏகுக வழியே மீளுக' என்று மூதுரை சொன்னானே. அப்பப்ப! நான் இந்தக் கிளைவழியாக வரவேமாட்டேன்,'' என்றுகூறிப் பின்பு சேனைகளைப் பார்த்து'' நேராய்ப்போகின்ற இந்த பெரிய பாதைக்காகத்தான் நான் வருவேன். நீங்கள், வேண்டுமானால் இந்தக்கிளைவழியாக பத்திரமாய் வந்துசேருங்கள்'' என்றுசொன்னான். அப்படியே சேனாவீரர்களில் சிலர் அந்தக் கிளைவழி செல்ல அரசனைக் கொல்லவேண்டி அந்தவழியிலே பதிவிருந்த அந்த சண்டாளர்கள், சேனாவீரர்கள் வருகிறதைக்கண்டு அரசனும் அவர்கள் இடையிலே இருப்பானென்று எண்ணி அவர்களில் அநேகரைக் கத்திக்கு இரையாக்கினார்கள்.

அரசன் இந்த சங்கதியைக் கேள்விப்பட்டு சேனாவீரர்கள் சேதத்தைக்குறித்து ஒருபக்கம் துக்கமும் தான் வர்த்தகன் சொன்ன இரண்டாவது மூதுரையினாலே உயிர்தப்பிப் பிழைத்ததற்காக ஒருபக்கம் சந்தோஷமும் அடைந்தான்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

குட்டியண்ணா கடிதம்.

என் அன்புள்ள தோழர்களே, தோழிகளே,

சென்றமுறை நான் சென்னையை விட்டுப் புறப்படுவதற்கு முன் உங்களிடம்வந்து சொல்லிக்கொண்டு உங்கள் க்ஷேமத்தையும் விசாரித்துவிட்டுப் பிரயாணப் படுந்தருணத்தில் அப்பொழுது நடந்தபரீக்ஷைகளைப் பற்றிய சிலஊழல்களை எடுத்துரைத்து வந்தேனல்லவோ? இங்குவந்தவிடத்தில் எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால், பித்தம்தலைக்கேறிச் சித்தம் பிரமித்தவர்போல தத்தளித்த வென்று என் மனம் மெத்தக்கலக்கமுற்று செய்வதும் தவிர்வது தெரியாமல் திகைத்துநிற்கிற சமயம்இது. இந்தவேளையில் என் அறிவுக்கு எதிர்ப்பட்ட சங்கதிகளையும் எனக்குள்ள குறைவுகளையும், என் சுகதுக்கங்களை உங்களதாக நினைத்து என்னிடத்துமிக்க அன்பும் ஆதரவும் பாராட்டிவரும் என் அருமைநண்பர்களாகிய உங்களோடு சொல்லாமல் ஆரோடுசொல்லி ஆறுதல் அடைவேன். "அபத்தப் பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாஜ்யந்தான்'' என்றபடி மனுஷனாய்ப் பிறந்தவனுக்கு எப்போதும் துக்கமில்லாமல் சுகமேது? சிலவேளைகளில் சுகம்போலக் காணப்படுவதெல்லாம் நிரூபித்துக் பார்த்தால் துக்கமானவையே யன்றி வாஸ்தவத்தில் சுகமாவதில்லை. இப்படி ஒருவனுக்கு உண்டாகும் குறைகளை ஆப்தர்களோடு சொல்லாமலிருக்க உள்ளமும் தேட்கவில்லை, உடம்புக்கும் சரிப்படவில்லை. இப்படித்தான்முன்னொரு அம்பட்டன் தனக்குள் இருந்த சங்கதியை பிறரோடு சொல்லாமல் வயிறுவீங்கி வருத்தப்பட்டானாம். அதைச் சொல்லுகிறேன், சற்றுக் கேளுங்கள்; இப்படி என் கிட்ட வாருங்கள்.

ஒரு பட்டணத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு காது இரண்டும் கழுதைக் காது. அதை வெளியில்காட்ட மிகவும் வெட்கப்பட்டு எப்போதும் காதை மறைத்துத் தலைப்பாகை கட்டிக் கொண்டே யிருந்தான். அவனுக்கு க்ஷவரம் செய்வித்துகொள்ள வேண்டிய நாள் வந்தது. அப்பொழுது அவன் க்ஷவரகனைத் தனியே அழைத்து அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, தன்னுடைய காது இரண்டும் கழுதைக் காதுகள் என்பதை ஒருவரோடும் சொல்லாம லிருக்கும்படி வேண்டிக் கொண்டான் அப்படியே அம்மயிர் வினைஞனும்* ஒத்துக்கொண்டு க்ஷவரம் செய்துவிட்டுப் போய்விட்டான். போனவன் இந்த அதிசயத்தை வெகுநாள் ஒருவரோடும் சொல்லாமல் அடக்கியே வந்தான். என்ன அடக்கியும் அவன்மனம் தாளவில்லை. அதனால் நாளுக்கு நாள் வயிறு உப்பி (பெருத்து), மூச்சுத் திணறுகிறது. இன்னமும் வெளியில் சொல்லாமலிருந்தால் வயிறுவெடித்துப் பிராணன் போய்விடும் போலிருக்கிறது. என்ன செய்வன் பாவம்; உடனே தன் பெண்டாட்டியைக் கூவி, அடி, அடி! என்மனதில் ஒரு இரகஸியம் இருக்கிறது. அதை இன்னொருவரோடு சொன்னால் பெரிய இடத்துச் சங்கதி யாதையால் தலை போய்விடும். சொல்லாமல் இருப்போம் என்றாலோ வயிறுவெடித்துச் செத்துப் போகிற வழியாயிருக்கிறது. என்ன செய்வேன்? இதற்கு ஏதாவது உபாயம் சொல்ல மாட்டாயா! என்று இரங்கினான், அதைக்கேட்டு அவன் மனையாள், ஐயோபாவமே! இதென்ன தொல்லை? என்று நினைத்து, புருஷனைப் பார்த்து, "நல்லது, இதோ அருகிலிருக்கும் காட்டில் போய் ஒருவரும் இல்லாத விடத்தில் நின்று உமக்கு எத்தனைதரம் சொல்ல வேணுமோ அத்தனைதரம் சொல்லிவிட்டு வந்துவிடும்'' என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தாள். இதைக் கேட்டவுடனே அவன் "நல்லவேளை, பிழைத்தேன்'' என்று ஓட்டமாயோடி அக்காட்டில் உள்ள ஒரு ஆலமரத்தடியில் நின்று "ராஜாகாது கழுதைக்காது, ராஜாகாது கழுதைக்காது''

* மயிர்வினைஞன் = அம்பட்டன்.

என்று தனக்கு வயிறு வடிகிறமட்டும் உரக்கச் சொல்லிவிட்டு வந்துவிட்டான். கேட்டீர்களா? என் அன்புள்ள கூட்டாளிகளே, அவ்வம்பட்டன் அப்படிச் சொல்லியிராவிட்டால் இறந்துபோயிருப்பானல்லவா. ஆகையால் மனதொத்த இஷ்டர்களோடு கண்டதைக் கேட்டதை, குறையை நிறையைச் சொல்லிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதிருக்கட்டும் மீதிக் கதையையும் முடித்துவிட்டு அப்பால் சங்கதி சொல்லுகிறேன்.

அப்படி அவன் காட்டில் போய்ச் சொல்லிவிட்டுவந்த சிலநாளுக்கு அப்புறம் அரண்மனையில் அடிக்கும் பேரிகை (ஓர் தோல்வாத்தியம்) கிழிந்துவிட்டபடியால், அதுகட்டுவதற்காக அரண்மனை வாத்தியக் காரன் முன்சொன்ன ஆலமரத்தின் விழுதைக்கொண்டு வந்துகட்டினான். அவ்வாத்தியத்தை யடித்தபோது அதினின்று உண்டான சப்தம் "ராஜாகாதுகழுதைக்காது, ராஜாகாது கழுதைக்காது" என்று வெளிப்பட்டது. இதைக் கேட்டவுடன் அரசன் கோபங்கொண்டு, "நாம் இரகஸியத்தில், வேண்டிய பொருளைக் கொடுத்து வெளியில் விடாதேயென்று வேண்டிக் கொண்டும் அந்தச் சண்டாளப் பயல் தான் வெளியில் சொல்லியிருப்பதுமல்லாமல் மேளம் அடித்தும் விளம்பரப்படுத்தி விட்டானே யென்று அவனைத் தண்டித்தானாம். இதிருக்கட்டும். ஒருசங்கதி சொல்லிவிட்டுச் செலவுபெற்றுக் கொள்ளுகிறேன்.

தோழர்களே, மனிதர்களுக்குள்ள மடமையை நான் என்னென்று சொல்வேன். ஒருநாள் சாயங்காலம் ஒரு சிநேகிதரோடு லோகாபிராமமாய்ப் பேசிக்கொண்டிருந்தேன். அவரோ என்னுடன் நெடுநாள் பழகி பலதடவைகளில் பொது நன்மைகளைப் பற்றி என்னிடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டது மல்லாமல், அங்கங்கே நடக்கும் பொதுச் சபைகளின் விஷயமும் பத்திரிகைகளின் ஏற்பாடும் கேட்டுள்ளவர். கொஞ்சம் ஸமஸ்கிருதமும் கொஞ்சம் இங்கிலீஷும் படித்த புத்திமான்தான். நல்ல குணசாலி. பிறரிடத்து அடக்கமும் அன்பும் ஆதரவும் உடையவர். நாலுபேருக்கு அன்னம்போடும்படியான நிலைமையில் இருப்பவர். உபகாரிதான். இவ்வளவிருந்தும், அவர்பத்திரிகைகளையும், பத்திரிகாசிரியர்களையும், பத்திரிகைகளைப் படிப்போரையும்பற்றித் தாமே எடுத்துப் பேசத் தொடங்கி, பத்திரிகைள் போடுவது வீண்காரியமென்றும், பத்திரிகைகளைப் பிரசித்தஞ் செய்வோர்களும் அவற்றைப் படிப்போர்களும் ஆதரிப்போர்களும் பயனற்ற வீணர்களென்றும் பேசித்துள்ளிக் குதித்து அட்டஹாஸம் செய்தவிராப்பை அப்பனே! என்னென்று எழுதுவேன்! அத்தனை பேச்சையும் கூசாமல் கேட்டுக் கொண்டு குனிந்ததலை நிமிராமல் குட்டிச் சுவர்போலக் குந்தியிருந்தேன். பின்பு அவரும் நானும் எழுந்து சந்தியாவந்தனம் முதலியவற்றைச் செய்யச்சென்றோம். அப்பால் நான் தனித்து இருக்கையில் இவருக்கு எப்பொழுது பொதுநன்மையை விசாரிக்க அறிவு உதிக்குமென்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்படியிருக்கையில் விவேகசிந்தாமணியின் 8-வது ஸஞ்சிகை அவருக்கு கிடைத்தது. அது தபாலில் வந்தவுடன் முதலில் என்னிடத்தில் கொடுத்தார். தெய்வாதீனம் அவருக்கு அந்தவேளை அவகாசம் இருந்தபடியால் அவரை என்பக்கத்திலிருத்தி அச்சஞ்சிகையில் வெளிவந்த தட்டியண்ணா கடிதம் என்னும் எனது கடிதத்தையும், தூதா கடிதத்தையும், தண்ணீர் சொல்லிய நன் வரலாறு என்பதையும் மட்டும் படித்துக் காட்டினேன். அதைக்கேட்கும்போது அவருக்குண்டான ஆநந்தத்தையும், அப்பால் அவ்விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கி அவற்றை யெழுதிய புத்திமான்களைக் கொண்டாடின கொண்டாட்டத்தையும் என்ன சொல்வேன்! என்ன சொல்வேன்!! முந்தியநாள் அவர் பத்திரிகை விஷயமாய் வெளியிட்ட விரோதமான அபிப்ராய மெல்லாம் முழுதும் அநுகூலமாய் மாறி, அவரும் எனக்கு இதற்குமுன் சாமான்ய நண்பராயிருந்தவர் இப்பொழுதுவிசேஷநண்பராகினார். இப்படிப்பட்ட பெரும்பேற்றை அவரும் நானும் அடையும்படி செய்த நமது விவேகசிந்தாமணியை முக்காலும் வந்தனஞ்செய்து, அது எக்காலும் வாழவேண்டுமென்றும், ஜனங்களுடைய அஜ்ஞானம் தாழவேண்டுமென்றும் ப்ரார்த்தித்து, இவ்விஷயத்தை உங்களுக்குச் சொல்லலாமென்று ஓடிவந்தேன். நல்லது நேரமாகிறது, போய் வருகிறேன். இன்னும் 10 தினத்திற்குள் பட்டணத்தில் இருப்பேன்.

இப்படிக்கு
உங்கள் அன்புள்ள
தட்டியண்ணா.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

(Ghilan) கைலான் என்னும் ஊரிலே அப்துல் கடீர் என்று ஒரு துருக்கச்சிறுவன் இருந்தான். அவன் ஒருநாள் இரவில் தூங்கிக்கொண்டு இருக்கும்போது, யாரோ ஒருவர்வந்து "அப்பா! உன் தாயினிடத்தில் அநுமதி பெற்றுக்கொண்டு பாக்டாட் என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்குப்போய் அங்கே கடவுளை தியானஞ்செய்து கொண்டிருப்பாய்" என்று சொன்னாற்போல கனவுகண்டு, காலையில் எழுந்திருந்து, தான்கண்ட கனவைத் தன்தாயினிடத்தில் சொன்னான். அதுகேட்ட அவள், "அப்பா! குழந்தாய்! துணையில்லாமல் இத்தனை தூரம் ஒன்றியாக எப்படிபோவாய் "என்று வருத்தப்பட்டு, பின்பு மகனைப்பார்த்து" என்கண்ணே! நீங்கள் அண்ணனும் தம்பியுமாக இரண்டுபேர்: என்கையில் நூறு ரூபா இருக்கிறது. ஆகையால், உனக்குச்சேரவேண்டிய பங்குபேர்பாதி யல்லவா; இந்த ஐம்பது ரூபாவை எடுத்துக்கொண்டுபோ, வேறு என்னகொடுக்கப் போகிறேன். ஒரே ஒருபுத்திசொல்லுகிறேன். அது மாத்திரம் நினைவில் இருக்கட்டும். 'நெஞ்சாரப் பொய்தன்னைச்சொல்லவேண்டாம்' என்றுசொல்லி பயணங்கூட்டினாள்.

அவனும் புறப்பட்டு பலகாததூரம் போய்க்கொண்டிருக்கையில், வழியில் சிலதிருடர்கள் எதிர்ப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் "அடே! பையா! உன்னிடத்தில் என்ன இருக்கிறது" என்று கேட்டான்.

இந்தச்சிறுவன் ஐயா! என்மடியில் ஐம்பது ரூபா முடிந்து வைத்திருக்கிறேன்" என்று சொன்னான். அதைக்கேட்டதும் அந்தத்திருடன் சிரித்துக்கொண்டே "இந்தப்பையன் ஏளனஞ்செய்கிறான்" என்று நினைத்தான்.

இன்னொருதிருடனும் அப்படியே அந்த வாலிபனை "உன்னிடத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டான். அதற்கும் அந்த வாலிபன் முன்போலவே சொன்னான்.

பின்பு அந்த திருடர்களெல்லாம் தாங்கள் கொள்ளையடித்துக்கொண்டு வந்ததைப் பங்குபோட்டுக் கொண்டார்கள். அப்போது அந்த திருடர்களில் பெரியதிருடனான எஜமான் இந்தப்பிள்ளையைப்பார்த்து "அடபையலே! உன் கையில் என்ன வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அந்தச்சிறுவன் "என்னிடத்தில் ஐம்பதுரூபா இருக்கிறது என்று முன்னமே உங்களில் இரண்டுபேரிடத்தில் சொல்லியிருக்கிறேனே" என்று சொன்னான்.

அதன்மேல் அந்தபெரியதிருடன் இரண்டுமூன்று பேரைவிட்டு இந்த இளைஞனுடைய மடியை அவிழ்த்துப்பார்க்கச்சொன்னான். அவர்களும்அப்படியே பார்க்க அந்தப்பையன் சொன்னதுசொன்னபடியே ஐம்பதுரூபா இருந்தது.

அதைக்கண்ட பெரியதிருடன் அதிகசந்தோஷமடைந்து "அவ்வளவு பத்திரமாய் உன்மடியில் முடிந்துவைத்திருப்பதை மறைக்காமல்உள்ளது உள்ளபடியே சொன்னதேது?" என்று அந்தச்சிறுவனைக்கேட்டான்.

அதற்கு அந்த அப்துல் என்பவன் "ஐயா! மூத்தோர் சொன்னவார்த்தை அமிர்தமல்லவா? நான் புறப்பட்டு வரும்போது என்னுடைய தாயார் 'நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்' என்று புத்திசொன்னார்கள். நானும் அப்படியே ஆகட்டும் என்று வாக்குக்கொடுத்து வந்தேன். சொன்னவாக்கைத்தட்டலாமா" என்றான்.

அது கேட்டதும் பெரியதிருடன் "அப்பா! பிள்ளாய்! உன்னை மெச்சினேன். இவ்வளவு இளையவனாயிருந்தும் தாய்சொன்ன சொல்லைத்தவறாமல் நடக்கிறாயே. நான் பனைமரம்போல இவ்வளவு நெடுக வளர்ந்து பெரியவனாகியும் நல்லபுத்தி யில்லாமல் பொய்பூர்ணசந்திரனாய் களவையேகைகண்ட தொழிலாகச்செய்துவந்தேனே. உன்னைப் பார்த்தானும் புத்திவாராதா" என்றுசொல்லி அந்தச்சிறுவனைச்சேர்த்து தழுவிக்கொண்டான்.

இதைக்கண்டு மற்ற திருடர்களெல்லாம் அசையாமல் அப்படியே நின்றார்கள். பிறகு பெரியதிருடனைப்பார்த்து "ஐயா! இத்தனைநாளாக இந்த திருட்டு வியாபாரத்தில் எங்களுக்குத் தலைவராக இருந்தீர். இனிமேற்பட ஏதாகிலும் ஒரு நல்ல காரியஞ் செய்யத்தொடங்கலாம். நீங்களே தலைவராக இருந்து நடத்தவேண்டும்" என்று சொன்னார்கள். உடனே "ஆனால் நாம் கொள்ளையடித்த இந்த சொத்துக்களைக்கொண்டுபோய் அவரவர்களிடத்தில் முன்னே சேர்த்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்" என்று எஜமானன் உத்தரவு செய்தான். அவர்களும் அந்தச்சிறுவனுக்கு வந்தனைவழிபாடு சொல்லியனுப்பிவிட்டு நல்லபடியே காலங்கழிக்கலானார்கள். *

விசேஷக்குறிப்புகள்.

புதுவருஷ கௌரதாப்பட்டங்கள். புது வருஷம் பிறந்ததோடு மாக்ஷிமைதங்கிய மஹாராணியவர்கள் அவருடைய பிரஜைகள் உத்தியோகஸ்தர்களில் தக்கவர்களுக்கு வழக்கம்போல் கௌரதாப்பட்டங்களளித்து கௌரவிக்கச் செய்தார்கள். அப்படி கௌரவிக்கப் பெற்றவர்களில் நமது இராஜதானியில் விசேஷமான பட்டம்பெற்றவர்கள் மைசூர் திவான் ஸ்ரீ கே. சேஷத்திரி அய்யர் அவர்களும், கவர்ன்மெண்டு சீப் செக்ரிடெரி மிஸ்டர் ஜெ. எப். ப்ரைஸ் அவர்களுமே. முதலவர்க்கு கே. ஸி. எஸ். ஐ. பட்டமும், இரண்டாவதவர்க்கு ஸி. எஸ். ஐ. பட்டமும் கிடைத்தது. சில்லரை கௌரதாப் பட்டங்கள் பெற்றவர்களில் இராஜமகேந்திரம் காலேஜ் தெலுங்குபாஷாபண்டிதர் கே. வீரேசலிங்கம்பந்துலுகாருவும் மதுரை திருஞானசம்பந்த பண்டார சந்நதியவர்களும் ராய்பஹதூர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் கௌரதாப்பட்டமளிப்பதில் பொருத்தநிமித்தம் பார்க்கிறதில்லைப்போலிருக்கிறது. ரெவினியூ ஸர்வே அஸிஸ்டெண்ட் சுபரின்டெண்டெண்டு ஸ்ரீ ஜி. வெங்கட்டராமய்ய காருவுக்கும், வடஆற்காடு டிப்டி கலெக்டர் எஸ். சாமிநாதய்யரவர்களுக்கும் ராவ் ஸாஹேப் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜூரிவிசாரணை யேற்பாடு. இதுவிஷயமாய் பெங்காளத்திலுண்டான கலபையதிகரித்து இதுவிஷயம் இந்தியா மந்திரியவர்கள் தீர்மானத்திற்குப் போய்விட்டது. இப்பொழுது இந்தியா மந்திரியாகவிருக்க கிம்பர்லி பிரபு இந்தியா கவர்ன்மெண்டாரும் ஜூரிவிசாரணை யேற்பாட்டைக் குறைத்துச் செய்த உத்திரவை அங்கீகரிக்க கூடவில்லையென்று முன்னதாக தந்திமூலமாய்த் தெரிவித்திருக்கிறதாகவும் அதன்பேரில் பெங்கால் உதவிக் கவர்னர் ஸர் சார்ல்ஸ் எலியட்டும், உள்நாட்டு மந்திரி ஸர். பிலிப் ஹட்சின்ஸனும், இராஜப்பிரதிநிதி, லார்ட் லான்ஸ்டௌனும் தாங்கள் இதுவிஷயத்தில் தோல்வியடைந்ததை யுன்னி இராஜினாமா கொடுத்துவிட்டுப் போக உத்தேசிக்கிறார்களென்றும் கல்கத்தாவில் பலமாக வதந்திகள் உலாவுகின்றன. இவ்வதந்திகளின் உண்மை இன்னும் சிலதினங்களில் நன்றாக வெளிப்படும்.

சென்னை எலெக்ட்ரிக் டிராம்வே. இந்நகரில் மின்சார ருக்ஷமத்தால் இழுக்கப்படும் டிராம்வே என்னும் சிற்றிருப்புப்பாதைகள் போடக் கூட்டுமுதல் சேர்க்க வந்திருந்த அக்கம்பெனியின் சேர்மான் மிஸ்டர் உவில்யம் டிக்பி ஸி. ஐ. இ. இந்த மீ 21வ சனிக்கிழமை பம்பாயில் கப்பலேறி சீமைக்குத்திரும்பிச் சென்றார். அக்கம்பெனிக்குவேண்டிய கூட்டுமுதல் தொகை பெரும்பாலும் கிடைத்துவிட்டது. ஷை கம்பெனியின் முக்கிய இஞ்சினீரும் தற்காலமானேஜருமான மிஸ்டர் பால்கனர் என்பவர் சென்னை வந்து டிராம்வே போட வேலைதுவக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

காங்ரெஸ்சபை ஆசாரச்சீர்திருத்த சபைக்கூட்டங்கள் இம்மகா சபையார்கள் சென்ற மாசக்கடைசியில் அலஹாபாத்தில் கூடியதில் வழக்கம்போல் பலதீர்மானங்கள் செய்து கலைந்தார்கள். அடுத்த காங்ரெஸ்சபை பஞ்சாப் மாகாணத்திலுள்ள அம்ரிட்ஸர் பட்டணத்தில் கூடும்படி தீர்மானித்திருக்கிறார்கள்.

சட்டநிருபண சபைகள்சீர்திருத்தம். இந்தியாசட்ட நிருபணசபைகளைச் சீர்திருத்துவதற்காக பார்லிமெந்து சபையார் சென்ற வருஷம்செய்த இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்ட்டு, இந்த மாசமுதலிலிருந்து ஊர்ஜிதத்திற்கு வந்தது. ஆக்ட்டு ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டாலும் அந்த ஆக்டடுப்படி மெம்பர்கள் நியமிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியவர்களும் கலந்து யோசித்துச் செய்யவேண்டிய விதிகள் இன்னும் வெளிவரவில்லை. இவ்விதிகள் வெளிவராமையால் இந்தமாசத்தில் கூடிய சட்டநிருபணசபைகளில் முக்கியமான ஆலோசனைக்கு வந்த சட்டநிர்மாண விஷயங்கள் அச்சபைகள் புதிய ஆக்ட்டுப்படி சீர்திருத்தி யேற்படுத்தப்படும் வரையில் தள்ளிவைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நமது இராஜதானியில் அப்படி தள்ளிவைத்துக்கொள்ளப்பட்ட முக்கியமான விஷயம் 'வில்லேஜ்ஸெஸ்பில்.' பெங்காள இராஜதானியில் தள்ளிவைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் விஷயம் 'முனிஸிபல் சட்டசீர்திருத்தமசோதா.' பிப்ரவரிமாச முடிவுக்குள் சட்டநிருபணசபைகளைச் சீர்திருத்துவதற்காக புதியவிதிகள் வெளியிடப்பட்டு ஊர்ஜிதத்திற்கு வந்துவிடுமென்று நம்புகிறோம். வெளியாகப்போகும் புதுவிதிகளின்படி சென்னை நகர் முனிஸிபாலிடியார் ஒரு பிரதிநிதியும், யூனிர்வஸிடி சங்கத்தார் ஒரு பிரதிநிதியும் நியமிக்கச் சுதந்திரம்பெறுவார்களென்று நிச்சயமாய்த் தோன்றுகிறது. மற்ற விஷயங்கள் விதிகள் வெளிவந்த பிறகே தெரியவரும்.

ஹைகோர்ட்டு. சென்னை ஹைகோர்ட்டுஜட்ஜிகளில் ஒருவராகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் அவர்கள் ரஜாவின்பேரில் சீமைக்குப் போயிருந்ததிலிருந்து திரும்பிவந்து நாளது மீ 27வ ஹைகோர்ட்டில் அவருக்குபதிலாக ஆக்டிங்வேலைப் பார்த்துவந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் பெஸ்ட் அவர்களிடமிருந்து அவர் வேலையை ஒப்புக்கொண்டார். மிஸ்டர் பெஸ்ட் ஒருவாரத்திற்கு ரஜாவெடுத்துக்கொண்டிருக்கிறார். பிப்ரவரிமீ 4வ மிஸ்டர் ஜஸ்டிஸ் விலகின்ஸன் பென்ஷன் வாங்கிக்கொண்டு அவர்வேலையைவிட்டு நீங்கி சீமைக்குப்போகிறார். அவர் போனவுடன் அவருடைய ஸ்தானத்தில் மிஸ்டர் பெஸ்ட் மறுபடியும் ஹைகோர்ட்டு ஜட்ஜாக வருவார்.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

OF THE REGISTRAR 6 APR. 93 MADRAS.

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1893௵ பிப்ரவரிமீ. இலக்கம். 10.

மரத்தின்கனி கீழேவிழுவதேன்?

ஆங்கிலேய தேசத்தில் 'உள்ஸ்தார்ப்பு' நகரத்தில் 250 வருடங்களுக்குமுன் பிறந்த ஸர் ஐஸக் நியூட்டன் என்றஜடதத்துவசாஸ்திரியானவர் ஒருநாள் தன் தோட்டத்திற் சுற்றியுலாவுகையில், அங்குநின்ற வோர் மரத்தின் கனி கீழே விழக்கண்டு, அதன் காரணம் யாதென ஆலோசிக்க லானாரென்று ஓர்கதை சொல்வதுண்டு. அக்கதையின் வாஸ்தவ மெங்ஙனமாயினும், இவ்வித்வான் உலகத்தார்க்கு மெய்யறிவூட்டும் உண்மைகள் நிறைந்த சடதத்துவ சாஸ்திரத்தின் அபிவிர்த்திக்காக பலவாறுழைத்தாராய்ந்தறிந்த *பிரபஞ்ச முறைமைகளிலொன்றை யின்று சிறிது கவனிப்போமாக.

"மரத்தின்கனி கீழே விழுவதேன்?" என்ற கேள்விக்கு விடையளிப்பது அதிகவருத்தமாக பிரதமதிருஷ்டியிற் றோன்றவில்லை. மரத்தின் கிளையில் தொங்குங் கனியானது அக்கிளையினின்று நெகிழ்ந்தவுடன் ஆதாரமொன்று மில்லாததனால் கீழே விழுகிறதென்பீர்கள்; மெய்யே. ஆனால் ஆதாரமில்லாவிடின் கீழே விழவேண்டிய முகாந்தரமென்ன? தாங்கலில்லாப் பதார்த்தங்கள்யாவும் எவ்விட மிருப்பினுங்கீழேவிழவேண்டியது கட்டாயமா? சூரியன், சந்திரன், சுக்கிரன், வியாழன் முதலிய கிரகங்களும், ஆகாயத்தையலங்கரிக்கும் அனந்தகோடி †தாராகணங்களும் அந்தரத்தில் ஆதாரவுபற்றியே நிற்கின்றனவோ? அன்றியும் உருண்டைவடிவான இப்பூகோளத்தின் மறுபுறத்தார் நமது பாதத்தின் கீழிருப்பதாக நாமும், அவர்கள் பாதத்தின்கீழ் நாமிருப்பதாக அவர்களும் நினைப்பது சகஜமாயிருப்பதால், மேல் கீழ் என்பதன் பொருள் தான் என்னை? இத்தகைய கேள்விகளுக்கு நியூட்டன் காலத்திற்குமுன் சரியான விடைகளளிப்பது அரிதாயிருந்தது.

சடப்பொருள்களினின்று சரப்பொருள்களை வேற்றுமைப்படுத்து மிலக்கணங்களில், தன் சக்தியினாலோரிடம் விட்டு மற்றோரிடத்திற்கு நகருந்தன்மையொன்று, என்பது யாவருமறிந்த விஷயம். மனிதர் மாத்திரமன்று, விலங்குகளும் †புட்களுந் தத்தமக்குவேண்டிய வேளையில் ஓரிடம்விட்டு மற்றோரிடம்போகக் கூடிய சக்தியை யுடையனவாக, கல், மண், மரம், கனி முதலியன அவ்விதமான சக்தியற்றனவாயிருக்கின்றன. ஆதலால், மரத்தின்கனி கொம்புவிட்டு நெகிழ்ந்தவுடன், இருந்த விடத்தேயிராது கீழ் நோக்கிச் செல்வது வேறொன்றின் சக்தியினாலன்றோ ஆகவேண்டும். *ஆலம்பனமில்லாப்பொருள்கள்யாவுந்தரைமுகம் போகச் செய்யுஞ் சக்தி யாதென்று அந்தவித்வான் சிந்தித்து உலகத்தார்க்குப்புலப்படுத்திப் பெயரும் பெருமையுமடைந்தார். இச் சக்தியி னிலக்கணந்தான் நாமின்று விசாரணைக்காக வெடுத்துக்கொண்ட விஷயம்.

---

* Natural Laws. † நக்ஷத்திர கூட்டங்கள்.

† பக்ஷிகள். * ஆலம்பனம்=பற்றுக்கோடு.

சார்பில்லாவிடில், தருவின் பழ மாத்திரமன்று, பூமியினருகுள்ள மற்றெல்லா வஸ்துக்களுந் தரைமீதுவிழுவதுகண்டிருக்கிறோம். தரையோடு சம்பந்தப்படாத பொருள்களெல்லாவற்றையும் பூமியே ஆகர்ஷித்துக் கொள்ளுமானால் இச்சக்தி பூமிக்கே யுரித்து என்றன்றோ நிர்மாணிக்கவேண்டும். ஆனால், பூமியும் சடப்பொருளாகையால், மற்றொன்றை யிழுக்குஞ் சக்தி அதற்கெங்ஙனம் வந்தது? இவ்விதமான சக்தியொரு சடப் பொருளுக்கு மிருக்கு மானால் வேறு பொருள்களுக்கு மிருத்தல் கூடாதா? இவ்விஷயம் மேற்கூறிய வித்வான் நன்காராய்ந்து, எங்ஙனங் காந்த மிரும்பை யிழுக்கின்றதோ, அங்ஙனமே ஜகத்தின்கண்ணுள்ள ஒவ்வொருபொருளும்ஏனையப்பொருள்களை சர்வகாலமும் இழுத்துக்கொண்டிருக்கின்றதென்றறிந்து, இவ்விசித்திரமான சக்திக்கு *சர்வவியாபக ஆகர்ஷணசக்தி யென்றபெயரளித்தார். ஆக, பூமி, பழம்என்ற இரண்டுபொருள்களெடுத்துக்கொள்வோமானால், பூமி பழத்தை யிழுப்பது மாத்திரமல்ல, பழமும் பூமியை யிழுக்கின்றது. அன்றியும் பூமி பழத்தை எவ்வளவு ஊக்கத்துடனிழுக்கின்றதோ அவ்வளவு ஊக்கத்துடன் பழமும் பூமியையிழுக்கின்றது! ஆயினும் பழம் பூமியினிடம் வரக்காணுகிறோமேயொழிய, பழத்தினிடம் பூமி செல்வது யாராவது கண்டதுண்டா? இவ் வாச்சரியத்தின் முகாந்தரம் யாது? ஒரு சிறு திருஷ்டாந்த மெடுத்துக்கொள்வோம். உத்தியோகஸ்தர் முதலிய பெரியோர்கள் புத்தகங்கள் கட்டவைத்துக்கொண்டிருக்குஞ் சிவந்த இந்தியா ரப்பர்வார் நீங்கள் பார்த்திருப்பீர்களே. அதை நன்றாயிழுத்து நீளச்செய்யினும் முன்னிருந்த ஸ்திதிக்குச் சுருங்குஞ் சக்தியதற்குண்டு. அந்தவாரில் ஒரு முழமெடுத்து ஒரு நுனியை யொரு நாற்காலியின்காலிற்கட்டி, அந்தவார் எவ்வளவு நீளுமோ அவ்வளவு நீளவிழுத்து மற்றநுனியை யொரு சிறுகல்துண்டிற் கட்டினால், சம்பவிப்பதயாது பார்ப்போம். தரையின்மீது கிடக்கும் நாற்காலியுங் கல்துண்டும் இயற்கையாயொன்றை யொன்றிழுப்பதாகக் காணப்படாவிடினும், இரண்டிற்கும் நன்றாயிழுத்துக் கட்டப்பட்ட இந்தியா ரப்பர் பந்த மிருப்பதால், ஒன்றிடமொன்று நகர்வதை நாம் பார்க்கலாம். இவ்விரண்டையுமருகிலிழுக்குஞ் சக்தி வாரின் *குஞ்சனத்துவமேயாயினுங் கல்துண்டன்றோ நாற்காலிபாற்செல்வது காண்கிறோம். இரு பொருள்களையும் ஒன்றோடொன்று பிடித்திழுக்குஞ் சக்தியொன்றே யாயினும், இரண்டும் ஸமமாய் நகராது. ஒன்று மற்றதைவிட அதிகம் நகரக்காரணமென்? ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒருவேலைக்காரன் ஒரு சாக்கரிசியை யெவ்வளவுதூரமெடுத்துச் செல்வானோ, அதைவிட அதிகதூரம் அரைச்சாக்கரிசியை யதே வேலைக்காரன் அதேகாலத்தில்தூக்கிச்செல்வானென்பதுதிண்ணமன்றோ? நமக்கு ஒரு பெட்டிவண்டியை யெவ்வளவுவழியிழுக்கக்கூடுமோ, அதினுமனேகமடங்கு அதிகதூரங் குழந்தைகள் வைத்து விளையாடுஞ் சிறுவண்டிகளை யதேநேரத்திலிழுக்கக் கூடுமெல்லவா? அதுபோலவே, வார் சுருங்குவதால், நாற்காலியுங் கல்துண்டு மிரண்டுமிழுக்கப் படுகின்றனவாயினும், நாற்காலியைவிட கல்துண்டு இலகுவாய் நகரச்செய்யக்கூடியதாகையால், அது அதிக வழிபோகக் காண்கிறோம். நாற்காலியுஞ் சிறுகல் துண்டினிடம் மெய்யா யிழுக்கப்படினும், அது நகரும்வழி அதிசொற்ப மாகையால், நமக்குப் புலப்படுகிறதில்லை. நாம் விளையாடும் பந்தை காலால் பலமாய்த் தட்டினால், அது வெகுதூரம் போகின்றது. அதேபலத்துடன் ஒருபெரிய சவளிமூட்டையைத் தாக்கினால், அது நமது கண்ணுக்குத்தெரியும்படி இடம்விட்டுப் பெயர்வது கூட வருத்தம். அவ்விதமே பழம் தரையில்விழுவதிலும், பழத்தையோசிக்குங்கால், பூமிபிரமாண்ட மாகையால், ஒரே சக்தியானது இவ்விரு பொருள்களையும் பெயர்க்க, அச்சக்தி ஸமநேரத்தில் சிறுகனியை பெரியபூமியைப் பார்க்கிலும் யெவ்வளவோ அதிகதூரம் போகச் செய்வதில் விசித்திரமென்னை? பழம் கீழேவர, பூமியுமரே எதிர்கொண்டு போகிறது. ஆனால் கனியையெந்த சக்தி கீழேயிழுக்கிறதோ, அந்தசக்தியே பூமியை யதேகாலத்தில் மேலே யெழுப்புகிறதினால் பூமி நகரும்வழி யணுநுட்பமாகவே யிருக்கவேண்டும். பூமியினியக்கம் அதிநுட்பமா

* Universal gravitation.

* குறுகிக்கொள்ளும் சக்தி.

கையால் நமதுபுலன்களா லறியக்கூடியதன்று.

ஜகத்திலடங்கிய சகல பொருள்களும் சதா ஒன்றை யொன்று இழுக்கின்றன வென்றும், பூமியினருகாமையிலுள்ள பொருள்கள் யாவும் பிடிப்பில்லாவிடில் தரையில் விழும்தன்மையனவா யிருக்குங் காரண மின்னதென்றுங் கூறினோம். அதுநிற்க, ஆகர்ஷண சக்தியின் மூலமாய் வஸ்துக்கள்யாவும்பெற்றிருக்குமோர் இலட்சணத்தைச் சிறிது விசாரிப்போம். ஒருபுத்தகத்தை கையில் தூக்குவோமானால், அது கனமாய்த் தோன்றுகின்றதே, காரண மென்ன? தரையின்மீது கிடக்கும் புத்தகத்தை கையிலெடுப்பதால் நாம் வாஸ்தவத்திற் செய்வது யாது? பொருள்களொன்றோடொன்றுநெருங்கி ஐக்கிய மாகும்இயற்கைக்குணமுள்ளனவாயிருக்க, அத்தன்மையை விளைவிக்கும் பூமையக்கவர்ச்சிக் கெதிராயன்றோ நாம் பூமியினின்று அப்புத்தகத்தை வேறுபடுத்துகின்றோம். அதுபற்றியே அவ்வஸ்து கனமுள்ளதாகத் தோன்றுகின்றது. நீங்களொரு மேசையைத் தூக்கிப்பார்த்த பின்பு அம்மேசையின் காலைப் பிடித்தொருவர் கீழேயிழுக்க நீங்களதைத் தூக்குவீர்களாயின் முன்னிலு மதிககனமாயன்றோ தோன்றும். இவ்விசேஷ கனத்திற்குக் காரணம் மேசையின்காலை யொருவர் கீழே பிடித்திழுப்பது தானே. அதுபோல சாதாரணமா யெல்லாப் பொருள்களுக்கு முள்ள கனத்திற்குக் காரணம், அவைகளுக்கு அதோகதி பயக்கும் பூமியின் ஆகர்ஷண சக்தியேயன்றி வேறல்ல. கனமெனப்படுவது ஒரு பொருளின் இயற்கை குணமன்று; பூமியின்கவர்ச்சி பலத்தால் நிர்மாணிக்கப்படும்குணமாயிருக்கிறது. ஆகையால் ஒரேபொருள் ஓரிடத்தோர் கனமாகவும், மற்றோரிடத்து வேறுகனமாகவு மிருக்கக் காணலாம். பொருள்களை பூமியின் மையம் நோக்கிச்செலுத்துஞ் சக்தியின் பலம் பூமியிலெல்லாவிடங்களிலும் சமமாயிருக்குமானால், ஒரேபொருள் ஓரிடத்தோர் கனமாகவும், வேறோரிடத்து வேறு கனமாகவுந் தோன்றாது. ஆனால், மெய்யாகவே பூகோளத்தின் வடமுனை தென்முனைகளைச் சமீபிக்க, பூமையக் கவர்ச்சியின் பலம் பலகாரணங்களால் சிறிது குன்றுவதால், பொருள்களின் தூக்கமும் அவ்விடங்களினருகுசெல்ல கிஞ்சித்து குறைகின்றது. கவர்ச்சியின் பலத்திற்குத் தகுந்தபடியே [1]கனமுமிருக்குமாதலால், பூமியின் [2]நிறை தற்காலமிருப்பதிற் பாதியாகவோ இரட்டிக்கவோ செய்தால், பொருள்களின் கனமும் முறையே பாதியாகவு மிரட்டிக்கவுஞ் செய்யப்படுமென்பது சிறிது ஊன்றிவாசிக்க விளங்கும்.

சகலபொருள்களு மொன்றையொன்று சதா இழுக்கின்றனவென்று கூறினோம். பொருள்களெல்லாம் [3]அவ்வியாகிருதவணுக்களாற் சேர்க்கப்பட்ட [4]வியாகிருதவணுக்களின் திரட்சியென்பது சடதத்துவ சாஸ்திரிகளின் கொள்கை. கவர்ச்சிசக்தியின் பாவிகத்திற்கு இரண்டு பொருள்கள்இன்றியமையாதன வாகையாலும் பொருள்கள் தத்தமக்குரிய விசேஷ சுபாவங்களனைத்தும் பொருந்தியிருக்கும் ஸ்திதிகளில் வியாகிருதவணுத் தன்மையே தாழ்ந்த தாகையாலும், ஒருபொருளி னெவ்வொரு வியாகிருதவணுவும் ஏனைய பொருள்களின் ஒவ்வொரு வியாகிருதவணுக்களையும் ஆகர்ஷிக்கின்றது. என்று சொல்லலாம். ஆகையா லெங்ஙனம் நெல்லு முதலிய தான்னியங்களளக்குங்கால் ஆழாக்கு, உழக்குகளையும், நீளமோ அகலமோ குறிக்குங்கால் அங்குலம், சாண் முதலியவைகளையும், சமய மளவிடுகையில் நொடி, வினாடிகை யிவைகளையுந்தாழ்ந்த அளவுகளாய் வைத்துக்கொள்ளுகிறோமோ, அங்ஙனமே கவர்ச்சிசக்தியின்பலம் நிர்ணயப்படுத்துவதில், இரண்டு வியாகிருதவணுக்கள் ஒன்றை யொன்று ஆகர்ஷிக்கும் சக்தியே தணிந்த வளவாக விருப்பினும், இவ்வணுக்கள் கண்களுக்குப் புலப்படத்தக்கவையல்ல வாதலால், புலன்களாலுணரக்கூடிய ஓர் நிறையையெடுத்து, அந்நிறையுள்ள இரண்டுபொருள்கள் ஒன்றை யொன்று இழுக்கும் வலிமையைய அளவிற்காதாரமா யெடுக்க வேண்டியதாகிறது. திருஷ்டாந்தமாக ஒரு கழஞ்சு நிறையுள்ள இருபொருள்கள் தம்முள் செலுத்து மாகர்ஷண சக்தியை தாழ்ந்தவளவாக அல்லது ஏகமாக வெடுத்துக்கொள்வோம். இவ்விரு பொருள்களில் யாதேனு மொன்றின் நிறை இருகழஞ் சாக்கப்படின், இவ்விருகழஞ்சுகளுந் தனித்தனியே மற்றப்பொருளில் ஒரு

1 Weihgt. 2 Mass 3 Atoms 4 Molecule.

கழஞ்சை யிழுப்பதால், ஆகர்ஷண சக்தியின் பலம் முன்னினு மிருமடங்காகவே யிருக்கவேண்டும். ஒருபொருளை யிருகழஞ்சு நிறையுள்ளதாகவும் மற்றப்பொருளை மூன்று கழஞ்சுநிறையுள்ளதாகவும் செய்தால், ஒரு பொருளின் ஒவ்வொரு கழஞ்சும் மற்றப்பொருளினெவ்வொரு கழஞ்சையு மேகபலத்துட னிழுப்பதால், இவ்விருபொருளின் கவர்ச்சி சக்தி நாமெடுத்த அளவுக்கு ஆறுமடங்காகின்றது. அவ்விதமே ஒரு பொருளின் நிறை அரைக்கழஞ் சாகவும் மற்றதின் நிறை இருகழஞ்சாகவு மிருந்தால், இருபொருள்களின் கவர்ச்சியளவு ஏகமாகின்றது. இவ்விரு பொருள்களிலொன்று பூமியெனக்கொண்டால், பூமியின் நிறை மாறாமலிருக்க, மற்றப்பொருளின் நிறை கூடவோ குறையவோ செய்தால், அதற்கும் பூமிக்குமுள்ள ஆகர்ஷண சக்தியும், அதுடன் அப்பொருளின் கனமும், அதேயளவிற் கூடவுங் குறையவுஞ் செய்யும். பூமியின் நிறை பாதியாகவோ இரட்டிக்கவோ மாற, மற்றப்பொருளின் நிறை நிலையாயிருந்தால், ஆகர்ஷண சக்தியின் ஊக்கமும், அதன் நிமித்தம் அப்பொருளின் கனமும், முறையே பாதியாகவோ இரட்டிக்கவோ மாறும்.

இருபொருள்கள்தம்முள் நிகழும் ஆகர்ஷண சக்தியினூக்கமானது அப்பொருள்களின் நிறைகளைக் குறிக்குந் தொகைகளின் *பெருக்கத்தால் அளவிடத்தக்கதென்று முன்கூறியவற்றாலறியலாம். இனி இச்சக்தியின் பலம் தொலையிலும் சமீபத்திலு மொன்றுபோ லிருக்கின்றதா பார்ப்போம். சமீபத்திலுந் தொலையிலும் ஊக்கமொன்றாகவே யிருக்குமானால் நமது பூமியைவிட 1300 மடங்கு பருமனும், 300 மடங்கு கனமுமுள்ள வியாழனும், 12,50,000 ($12\frac{1}{2}$ லக்ஷம்) மடங்கு பெரிதும், 3,50,000 ($3\frac{1}{2}$-லக்ஷம்) மடங்கு கனமுமுள்ள சூரியனும், இவைகளிலு மெவ்வளவோ அதிகம் பரிமாணமுள்ளன வாகிக் கணக்கிற்கடங்காத * விண்மீன்களு மிருக்க, இவைகளின் மையம் நோக்கிச் செல்லாமல், பூமியின் மையமே நோக்கிப் பொருள்கள் செல்லக்காரணமில்லையே. பூமியினருகாமையிலுள்ள பொருள்கள் பூமி நேராகவே விழுவதால், 9,20,00,000 (9 கோடியே 20 லக்ஷம்) மயில்களுக்கப்பாலிருக்கு மிரவியும் *38,40,00,000 (38கோடியே 40லக்ஷம்) மயில்களுக்கப்பா லிருக்கும் பிரகஸ்பதியும், பூமியின் கவர்ச்சிக் கெதிராய் இங்குள்ள பொருள்களை தம்மிடமிழுக்க சக்தியற்றனவா யிருக்கின்றன வென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகின்றது. தொலையிலுல் ஆகர்ஷண சக்தியின் வலிமை குன்றாம லிருக்குமானால், மரத்தின்கனி பூமியின் மையம் நோக்கிச்செல்லும் விசையிலும் இரண்டு மூன்றுலட்சம் மடங்குவிரைவாய்சூரியன் மையம் நோக்கிச் செல்லவேண்டும். அவ்விதஞ் செல்லாது பூமியினிடமே விரைந்தோடுகின்றதாகையால், அதிக தூரம்போக, ஆகர்ஷண சக்தியின் வலிமை குறையுமென்று சொல்லவேண்டும். ஆகர்ஷண சக்தியின் வலிமைக்கும் தூரத்திற்குமுள்ள சரியான பாந்தவ்வியத்தை ஸர் ஐஸக் நியூட்டன் என்ற வித்வான் கணிதநூல் விதிகளால் வற்புறுத்தி யிருக்கின்றார். அப்பந்தம் யாதெனில், இரண்டு பொருள்களின் தூரத்தை இருமடங்காக்க, அவைகளின் ஆகர்ஷண சக்தி நாலிலொன்று பலமுள்ளதாகுமென்றும், தூரத்தை மும்மடங்காக்கினால், ஆகர்ஷண சக்தி ஒன்பதிலொன்று பலமுள்ளதாகுமென்றும் தூரம் நாலுமடங்காக, ஆகர்ஷண சக்தி பதினாறிலொன்று வலிமையுள்ள தாகுமென்றும், அவ்விதமே தூரத்தை பத்து மடங்காக்கினால், ஆகர்ஷணசக்தியினூக்கம் நூற்றிலொன்றாய் விடுமென்றும், அவர் ஸ்தாபித்தார். பூமியின் தரைமீதிருக்கும் பொருள்கள் பூமியின் மையத்திலிருந்து சுமார் 4,000 மயில் தூரத்திலிருக்கின்றன. ஆகவே பூமியின் தரையில் 8-துலா மல்லது 800 பலந் தூக்கமுள்ள ஒரு சர்க்கரைக் கட்டி யாதேனும் ஒருபாயத்தால் பூமிக்குயரே 40,000 மயிலுக்கப்பால் கொண்டு போகப்படின், பூ மையக் கவர்ச்சியி னூக்கங் கால் வாசியாக, அக்கட்டின் தூக்கம் 800-ல் கால்வாசி யல்லது 200 பலமாய்விடும். அப்படியே பூமியின் மையத்திலிருந்து அக்கட்டின் தூர மும்மடங்காக்கப் பெறின், கவர்ச்சியின் வலிமை ($\frac{1}{9}$) ஒன்பதிலொன்றாய் கனமும் 89 பலமாய் முடியும். அங்ஙனமே பூ மையத்தினி

* Product, * நக்ஷத்திரங்கள்

* சூரியன்.

ன்று தூரம் நாலுமடங்காக ஆகர்ஷண சக்தியின் வலிமை ($\frac{1}{16}$) பதினாறில் ஒன்றாய் கட்டின் தூக்கமும் 50 பல மாகும். தூரம் பத்து, இருபது, நாற்பதுமடங்குகளாக சர்க்கரைக்கட்டின் கனமும் முறையே 8 பலம், 2 பலம், $\frac{1}{2}$ பலமாகும். பூ மையத்திலிருந்து சந்திரமண்டலமிருக்குந் தூரத்தை யடைந்தால், பூமியின் தரையில் 800 பலந்தூக்கமிருந்த சர்க்கரைக்கட்டு $\frac{1}{4}$ பலத்தூக்கமே யிருக்கும். இங்ஙனம் பூமிவிட்டதிகந்தூரம் போகப்போக, பூமியின் கவர்ச்சி பலங் குறைந்தே வருவதால், பதார்த்தங்களின் கனமுங் குறைந்தே வரும். பூமிக்குயரே போதுமான தூரத்திலொரு பொருளிருந்து வேறொன்றாலு மிழுக்கப்படா விடின், அதற்கு கனமேயிராது. அன்றியும், அத்தூரத்திலிருக்குமோர் பொருளை பூமியும் வேறு கிரகங்களும் சமசக்தியுட னிழுக்குமாயின் அப்பொருளொன்றினிடமுஞ் செல்லாது நிலையாய் நின்று கனமிலாது முடியும். பூமியின் கண்ணுள்ள பொருளொன்று யாதேனுமொரு மாயவித்தையால் சந்திரமண்டலத்திற்குப் போகுமானால், அது எவ்வளவோ கனங் குறைந்த தாகவும், வியாழ மண்டலத்திற்குப் போகுமானால், இங்குள்ளதிலும் 300 அல்லது 400 மடங்கு கனமுள்ளதாகவும் பவிக்கும். இது பற்றியே ஒரு பொருளின்கனம் அப்பொருளி னியற்கை குணங்களிலொன்றல்ல வென்று முன்னர் கூறினோம்.

நூல்களினிலக்கணங்களி லொன்று ஆங்காங்கு கண்ட திருஷ்டாந்தங்களி லிருந்து அவைபோன்ற மற்றெல்லாவற்றிற்கும் பொருந்தும்படியான ஒரு பொது விதி நிலைநிறுத்துதலாகையால், அதற்கிணங்க, முற்கூறிய திருஷ்டாந்தங்களி னுதவியால், தூரத்திற்குங் கவர்ச்சிக்குமுள்ள சம்பந்தத்தை பொதுவிதியாய்ச் சொல்லலாம். தூரமெவ்வளவு அதிகப்படுகின்றதோ அவ்வளவின் ¶வர்க்க சங்கியையெடுத்து, அதற்கு ஒன்றை ஈவு கொடுத்தால் வரும் பின்ன சங்கியையே ஆகர்ஷண சக்தியின் வலிமையைக் குறிக்கு மென்பதே பொதுவிதி. இது நிற்க, பூமியினருகாமையி லிருக்கும் வஸ்துக்கள் ஆதார மில்லாவிடில் கீழே, அதாவது பூமியின் மையத்தை நோக்கிச்செல்வதுபோல, தாங்கலின்றி அந்தரத்தில் நிற்கும்பூமியையும் ஆகர்ஷிக்கக்கூடிய பொருளொன்று மிலதோ? உளதேல், பூமி ஏனதனிடம் போய்ச் சேரவில்லை? என்று கேட்கிறீர்களோ! பூமி எவ்விதம் மரத்தின்கனியை யாகர்ஷிக்கின்றதோ அதுபோலவே பூமியையும் ஆகர்ஷிக்கக் கூடிய பிரமாண்டமான பொருளொன்றுண்டு. அது தான் சூரியன். ஆயினும்பூமி, சூரியனது தரையில்விழாது நிற்பதின் காரணம் யாது பார்ப்போம். மரத்தின்கனி பூமியின் மையம் நோக்கி விழுவதில் பூமிக்குங் கனிக்குமிருக்குங் கவர்ச்சிக்குசற்றேனு மொப்பிடக் கூடியதாக வேறு பொருளுக்குங் கனிக்குங் கவர்ச்சி யிருந்து பூ மையக்கவர்ச்சியைத் தடுக்குமானால், கனி கீழே நேராய் விழாது. ஓர் கயிற்றில் கல்லைக்கட்டி கவண் சுற்றுகையில் கயிறுசுற்று நெகிழ்ந்தாலும் அறுந்தாலுங் கல்பறந்துபோய், தரையில் நேராய்விழாமல்சாய்ந்து அல்லதுவளைவாய்விழுகின்றது. தண்ணீர் தங்கி யிருக்குந் தடாகத்தில் நீந்தினால், விழுந்தவிடத்திற்கு நேராய் எதிர்க்கரை சென்றேறலாம். ஆனால் பிரவாக காலத்தில் ஒரு ஆற்றில் விழுந்து அக்கரைபோய்ச் சேரச் செல்வோன் நீரோட்டத்தின் வலிமையால் அப்படி நேராய்க் கரையேற முடியாமல் தடையுண்டு தொலையிற்சென்றுதான் கரையேறுவான். அதுபோலவே, பூமிக்குஞ் சூரியனுக்குமுள்ள கவர்ச்சியைத் தடுக்க வேறொன்று மில்லாவிடில், பூமி ஞாயிறிடந்தான் போய்ச்சேரவேண்டியது. ஆனால் பூமியிற்பெரிதும், ஏகதேசம் சமமுங் குறைந்ததுமான பல கிரகங்களுங் கூட பூமியை யிழுத்துக் கொண்டிருப்பதால், ஒரு பொதுவழியாய் *அருக்கனைச் சுற்றி பூமி செல்லுகிறது. ஒருமஞ்சத்தின் கால்களிலொன்றில் கயிறுகட்டி கிழக்கு நேராயொருவனும் தெற்கு நேராயொருவனு மிழுப்பானானால், அக்கட்டில் கிழக்கும் போகாமல் தெற்கும் போகாமல், இருதிசைக்கும் மத்தியாகிய தென்கிழக்கு நேராய்ச்செல்லும். வண்டி வேகமாய்ப் போகையில், அதிலிருப்பவன் ஒருகல்லைக் கீழே யெறிந்தால், அக்கல் வண்டியின் நேர் வேகத்தையும், கீழ்நோக்க வெறிந்த வேகத்தையும் பெற்று, எ

¶ Square அதாவது ஒருஎண்ணை அதே எண்ணால் பெருக்கி வந்த தொகை.

றிந்த விடத்திற்கு நேராய்க் கீழேவிழாமல் சற்று சாய்ந்துவிழும். அவ்விதமே பூமி, சுக்கிரன், புதன். பிரகஸ்பதி, சனி முதலிய கிரகங்களின் கதியும். இவைகளொன்றை யொன்று தத்தமக் கேற்பமுறையே யிழுத்துக்கொண்டிருப்பதினால், இரவியின் மையம் நோக்கிச் செல்லாமல், அதைச்சுற்றி நெடுவட்ட வழிகளாய்ச் செல்லுகின்றன. சூரியனு மதைச்சுற்றித்திரியுங் கிரகங்களுஞ் சேர்ந்து சூரியமண்டலமெனப்படும். இச்சூரியமண்டலம் போன்ற எண்ணிறந்த சூரியமண்டலங்கள் ஜகத்திலிருக்கின்றன. அவை யெல்லாம் ஆகர்ஷண சக்தியினுட்சிக்குட் பட்டனவாகையால், இச்சக்திக்கு சர்வ வியாபக ஆகர்ஷண சக்தியென்ற பெயர் ஸர் ஐஸக் நியூட்டனு லளிக்கப் பட்டது. இச்சக்தியின் விசேஷகுணங்களை சுருக்கிச்சொல்லி இன்று சோதனைக்காக வெடுத்துக்கொண்ட விஷயத்தை ஒருவாறு முடிப்போம். ஆகர்ஷண சக்தியின் முக்கிய இலக்கணங்களாவன:—

1. பிரபஞ்சத்தி லடங்கிய சகலபொருள்களும் எக்காலமு மொன்றை யொன்று இழுக்கின்றன.

2. இருபொருள்கள்தம்முள் நிகழும் ஆகர்ஷண சக்தியின் ஊக்கமானது அப்பொருள்களின் நிறைகளைக் குறிக்குந் தொகைகளின் பெருக்கத்தாலளவிடத் தக்கது.

3. இருபொருள்களின் தூரம் பேதப்பட அவைகளினுகர்ஷண சக்தியினூக்கமும் பேதப்படுகின்றதாகையால், பலதூரங்களில் இருபொருள்கள் தம்முள்செலுத்தும் கவர்ச்சிசக்தியின் வலிமை கீழே கூறும் விதியால் தீர்மானிக்கக்கூடும். அவ்விதி யாதெனில், தூர மெவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவின் வர்க்க சங்கியை யெடுத்து அதற்கு ஒன்றை ஈவுகொடுத்தால் வரும் பின்னசங்கியையே ஆகர்ஷண சக், தியின் வலிமையைக் குறிக்குமென்பதே.

கே. ஜி. சேஷய்யர், பி. ஏ., பி. எல்.

சுதந்தரங்களின் விளக்கம்.

2-ம். அத்தியாயம்.

பிரத்தியேகசுதந்தரங்கள்.

1-ம் பிரிவு சரீரரக்ஷணை.

1. வேறு சுதந்தரங்கள் எல்லாவற்றிற்கும் இன்றியமையாத ஆதாரமாயிருக்கும் சுதந்தரம் யாதெனில், தன் உயிர், உடல், உறுப்புமுதலியவற்றைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கான சுதந்தரமே. உயிரை இழந்தவனுக்கு வேறு சுதந்தரங்கள் உண்டோ? சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரத்தை எழுதவேண்டியது. மற்றோரது சுதந்தரங்களை நாம் மீறாதிருக்கவும், நமது உடல் உருப்புகளைக் காப்பாற்றிக்கொள்ளவும், பிறரால் அபாயம் நேரிடும்காலத்தில் அவ்வபாயத்தை விலக்கி நம்மை யிரட்சித்துக் கொள்ளவும் நமக்குச் சுதந்தரமுண்டு. தற்காலத்திலுள்ள நாகரீகமடைந்த சங்கங்களில் இச்சுதந்தரத்தை நிலை நிறுத்துவதற்காக அதை மீறுகிறவர்களுக்குச்சட்டநிபந்தனைகளால் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும் தவிர, சனங்கள் மீறுவதைத் தடுக்க பல அதிகாரங்களையுடைய இரட்சகர்களும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். பூர்வீகருள் இப்படிப்பட்ட நிபந்தனைகள் இல்லாமற்போனாலும், அவருக்கும் உயிரின் இரட்சைக்கு வேண்டிய விதிகள் இல்லாமற் போகவில்லை. ஆதிமனிதர் குடும்பத்தி னொழுங்குக்குட்பட் டிருந்ததாகவும் அதனால் பாதுகாக்கப்பட்டு வசித்து வந்ததாகவும் முதலத்தியாயத்திற் கூறப்பட்டது. மேலும் ஒரு குடும்பத்திலடங்கியவருள் ஒருவன் கொலையுண்டால் அத்திங்கு அவன் சேர்ந்தகுலசமுதாயத்திற்குச்செய்யப்பட்டதாகப் பாவிக்கப்பட்டு அவனுடைய சமீபபந்துக்கள் தங்களுடைய முயற்சியால் பரிகாரத்தைத் தேடிக்கொள்ளுவது வழக்கமென்றும் முன் கூறப்பட்டது. இப்பரிகார மென்னவெனில், செய்த தீங்குக்குப் பதிற்றீங்கு செய்வதே. இதற்கு வடமொழியில் பிரதீகாரம் என்று பெயர். சில நாகரீகங்குன்றிய சங்கத்தாருள் இவ்வேற்பாடு தற்காலத்தும் நடந்துகொண்டிருக்கின்றது. ஐரோப்பா கண்டத்திலும் தற்கால நாகரீக முறையென்று உரத்திக் கொண்டாடுகிறவர்களின் நடுவிலுள்ள சில சிறு சங்கங்களில் இவ் வேற்பாடு நைந்து போகாது நாளைக்கும் ஒருவாறு நடந்து வருகிறது. இவ்வழக்கத்திலிருந்து நாம் அறிவது யாதெனில், மனிதரைக் கொலைசெய்வது மகா பாதகமென்றும், அதற்குத்தகுந்த தண்டனையைச் செலுத்திக் குலத்திற் சேர்ந்தவரின் சுதந்தரங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது ஆவசியகமென்றும், பூர்விகர்களுக்குப்பொதுவானஞானமிருந்த தென்பதே.

2. இப்படிபதிலுக்குப்பதில்கொலைபுரிவதால் நாளடைவில் ஆதிகுடும்பங்களில் வெகுகஷ்டநிஷ்டூரங்கள் உண்டாகிக் கொண்டுவந்தன. சில வேளைகளில் கோபத்தின் வெறியினால் குற்றஞ்செய்யாதவர்களும் கொலையுண்டு மடிந்தார்கள். இதனால் நீதியைநிறைவேற்றுதற்காக உண்டாகி வழங்கிவந்த பிரதீகார சம்பிரதாயமானது முறை தவறிப்போயிற்று; குடும்பங்களின் ஸ்வப்பிரதிஷ்டையை ஸ்தாபித்துக் கொள்ளுவதற்கு மாத்திரமே செய்யப்பட்ட அக்கிரமமான கொலைகள் அதிகரித்துக்கொண்டு வந்தன. சில வேளைகளில் கொலை செய்யப்பட்டவனுடைய குடும்பத்தார் ஒருகுறித்த பணத்தொகையைப் பெற்று திருப்தியடைந்தார்கள். சில சங்கங்களில் இவ்விதமாய் வசூல்செய்த அபராதத்தின் தொகை கொலையுண்டவனுடையகுடும்பத்தின் அந்தஸ்துக்குத் தக்கபடி குறைவதும் மிகுவதுமுண்டு. நமது இந்துதேசத்தில் இப்பொழுது ஆளுகை செலுத்திவரும் அங்கிலேய வினத்தார் இங்கிலாந்தென்று தற்காலத்தில் வழங்கிவரும் தீவில்குடியேறியபின் அவருக்குள் வெகுகாலம் வரைக்கும் கொலை முதலிய குற்றங்களுக்கு இவ்வாறு அபராதங்கள் செலுத்தப்பட்டுவந்தன. ஆகிலும் அனேகமாய் மனதாறக் கொலைசெய்தவனை மறுகொலைக் குட்படுத்தும் வரையில் அவனைவிடாது தொடருவதே அந்நாளில் மனிதருள் வழங்கிய சன்மார்க்கமுறைக்கும், சம்பிரதாயத்திற்கும், சட்டத்திற்கும், மதக்கோட்பாட்டிற்கும் தக்கதாயிருந்தது.

சிலசுதந்தரங்களைச் சனங்கள் நிரந்தரமாய்த் துறக்கக்கூடாமல் துரைத்தன முறையால் தடுக்கப்பட்டிருக்கிறார்களென்று 1-வது அத்தியாயத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறோமல்லவா? இப்பொழுது பிரஸ்தாபித்துவரும் சுதந்திரம் இப்படித்துறக்கக்கூடாதவைகளிலொன்று. இதைத்துறத்தல் மற்றெல்லாச் சுதந்தரங்களையும் துறத்தற்குச் சமானம். மேலும், இச்சுதந்தரத்தைத்துறந்து விட்டால் இதுவும் இதனோடு மற்றெல்லாச் சுதந்தரங்களும்—மறுபடி ஒருகாலத்தும் மீண்டு கிடைக்கத் தக்கவையல்ல. இதைக்கைவிடாது காப்பாற்றினால் வேறு சுதந்தரங்களை ஒருகாலத்தில் இழந்தாலும் மற்றொருகாலத்தில் நிறைவேற்றிக்கொண்டு அவற்றின் பயனை யடையலாம்.

3. நமது உடல், உறுப்புமுதலிய வற்றிற்குப் பிறருடைய நடக்கையால் அபாயமுண்டாகும் பொழுது அவைகளைப் பலாத்காரத்தைக்கொண்டு காப்பாற்றிக்கொள்ளுவதற்கு நமக்குச் சுதந்தர மிருப்பதைப்போலவே, பிறர் நமது மானத்தை நஷ்டப்படுத்தக் கருதித் தகாதபழியை நம்மேற் சுமத்தினாலும், கிரமத்திலிருந்து தவறுது சுயேச்சையாய் நமது அபிப்பிராயத்தை வெளியிடுவதைத் தடுத்தாலும் அவர்மேல் நமது வலிமையைச்செலுத்தி அவர்உடல், உறுப்புகளுக்குச்சேதம் வருத்துவதற்குச் சுதந்தரமில்லை. நாகரீகமடைந்த தற்காலச் சங்கங்களில் மாத்திரமே இப்பொழுது கூறப்பட்டபடி கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளல், சுயேச்சையாய் நமது அபிப்பிராயத்தை வெளியிடல், நமது மனதிற்குத்தோன்றியபடி தெய்வத்தைத் தொழல் ஆகிய இம்மூன்று சுதந்திரங்களும் பிரதானமாய்க் கொண்டாடப்படுகின்றன. அச்சங்கங்களிலுள்ள துரைத்தனமுறையினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியாயாதிபர் சட்டப்படி திர்மானித்துக்கொடுக்கும் பரிகாரத்தை மாத்திரமே சனங்கள் தேடிக்கொள்ளலாம். இவ்விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு சங்கதியும் உண்டு. நாம் விறைப்பிறர்மேல் பலாத்காரத்தை உபயோகிக்கும்பொழுது தம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர் முயற்சிசெய்கைல் நமக்குத் தீங்குநேரிட்டால் இப்பொழுது நாம் பிரஸ்தாபித்துவரும் ஸ்வசரீர ரட்சண சுதந்தரம் நமக்குண்டாவதில்லை; அதாவது, முதலில் ஆக்கிரமித்துத் தீங்குசெய்கிற குற்றம் நமதாகையால் அதனால் நமக்குண்டாகுந்தீங்கை நாம் சகித்தேதிரவேண்டும். அதற்குப்பதில்செய்வதற்குநமக்குப்பாத்தியமில்லை. பதில் செய்தால் அது வேறு ஒருகுற்றமாகும். ஆகிலும் நாம்செய்த பிழைக்கு ஏற்றதாயிராதவளமீறிய தீங்கு நமக்குண்டானால், இச்சுதந்[illegible] நமக்குமீண்டுவிடும். இதனால் விளங்குகிற தென்னவெனில், பலாத்காரத்தைத்தவிர வேறு உபாயத்தால் நமது[illegible]காப்பாற்ற முடியாதெனும் நிச்சயமுண்டாகும் சம[illegible]

மாத்திரமே இப்பிரதிகாரச் சுதந்திரத்தை நடபடிக்கைக்குக் கொண்டுவரலாம்.

4. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சுயேச்சையாய்ச் சஞ்சரித்தற்குரிய சுதந்தரமும் மேற்கூறிய சுதந்தரத்தைப்போலவே இகத்தில் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கடமைகளைச் செலுத்துவதற்கு ஆவசியகமா யிருக்கிறது. அசையாமல் ஓரே இடத்திலிருந்தால் நம்முயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதும் வேறுமனிதருடன் சகவாசஞ் செய்வதும் அசாத்தியமாய்த் தீர்ந்துவிடும். நிலத்திலும் சலத்திலும் நம்மனஞ் சென்றபடி சஞ்சரிக்கலா மென்பதே இச்சுதந்திரத்தின் தாற்பரியம்.

2-ம். பிரிவு - சொத்து.

5. பிரத்தியேக சுதந்தரங்களில் மேற்கூறிய சுதந்தரங்களுக்கு மாத்திரம் தாழ்ந்து மற்றெல்லாச் சுதந்தரங்களை விட உயர்ந்திருப்பது சொத்திற்குரிய சுதந்தரமென்பதில் சந்தேகமில்லை. இதைப்பற்றி ஆலோசித்துத் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களிரண்டுள. அவைகளாவன:— 1) இச்சுதந்தரத்தி னிலக்கண மென்ன? சொத்தின்சொந்தக்காரனுக்குச்சட்டத்தினாற்கிடைக்கக்கூடிய சுதந்தரங்கள் எவை? இவைகளால் பிறர் உட்படவேண்டிய நிர்ப்பந்தங்கள் எவை? (2) சொத்தின் சொந்தக்காரனுடைய சுதந்தரங்களுக்குள்ள வரையரைகள் எவை?

6. இவ்விரண்டுவிஷயங்களில் முதலாவதெடுத்துரைக்கப்பட்டதைக் குறித்து ஆரம்பத்தில் பிரஸ்தாபிப்போம்.

சொத்திற்குரிய சுதந்தரம் நான்கிலக்கணங்களுடன் கூடியிருக்கிறது. (1) சொந்தக்காரன் சொத்தை யுபயோகிக்குங்கால் பிறர் தடுக்காதிருத்தல். (2) சொத்தைச் சொந்தக்காரன் மாத்திரம் உபயோகித்தல்; அதாவது, எக்காலத்தும் அச் சொத்தை உபயோகப்படுத்தக் கூடாதிருத்தல் (3) சொந்தக்காரன் சொத்தை முற்றிலுமாவது பாகம் பாகமாயாவது அழித்தற்கு அதிகாரத்தை யுடைத்தாயிருத்தல். (4) சொந்தக்காரன் சொத்தைப் பிறருக்குத் தானமாகவா[illegible]வாக கொடுத்தற்கான அதிகாரத்தை யுடைத்தா யிருத்தல்.

இவற்றில் ஒவ்வொன்றைப்பற்றியும் விவரித்துக் கூறுவோம்.

(1) சொத்திலுள்ள சுதந்தரத்தைக் குறித்து ஆலோசிக்குங்கால் முதலில் விளங்குகிற இலக்கணம் யாதெனில், பிறரால் தடுக்கப்படாது அவைகளை நம்முடைய ஆவசியகத்திற்கும் விருப்பத்திற்கும் தக்கபடி உபயோகித்துக்கொள்ளுவதே. நாம் ஒருபொருளை உபயோகித்துக்கொண்டிருந்து பின் அதைவிட்டுவிட்டால் பிறர் அதை நம்மால் தடுக்கப்படாது உபயோகிக்கலாம்; நாம் ஒருபொருளை உபயோகித்துக் கொண்டிருக்கையில் நம்மைத் தடுக்காது நம்முடன் கூடியும் உபயோகித்துக் கொள்ளலாம். உதாரணமாக, நம்மால் சம்பாதிக்கப்பட்டபணத்தை நாம் செலவிடுகையில், நம்மைத்தடுக்கப் பிறருக்கு அதிகாரமில்லை. ஒருகுளத்தில் நாம் ஒருகல்லில் வஸ்திரத்தை அடித்து வெளுக்கையில் நம்மை ஒருவரும் தடுக்கக் கூடாது. நாம் அக்கல்லை விட்டுப்போனால் பிறர் அதை உபயோகிக்கலாம். அந்தகல்லில் ஒரு துறையில் பலர்கூடி நீராடுவதற்குத் தடையில்லை. மேலும் மனிதரின் ஆவசியகத்திற்கு உபயோகப்படும்படியான நிலைமையிலிருக்கும் ஒரு சொத்து மனிதரின் பிரயத்தனத்தா லுண்டாகாமல் இயற்கையாகவே உண்டாயிருந்து அதை அனேகர் ஒரேகாலத்தில் உபயோகிக்கக் கூடியதாயிருந்தால், ஒருவராவது சிலர் கூடியாவது பிறர் அதை உபயோகித்துக் கொள்ளுவதைக் தடுக்கக்கூடாது. ஏனெனில், இப்படி தடுத்தலால் அச்சொத்தைக்கொண்டு மனிதர்பெறக் கூடிய உபயோகம் குறைந்து போகின்றது. உதாரணமாக, பொதுவாய்ச் சனங்கள் காற்று வாங்கி உலாவித்திரிந்து சுகம் பெறுவதற்குபயோகமாகிய ஒருவெளியான பிரதேசத்தை வெவ்வேறுபாகங்களாக வகுத்துச் சிலருடைய சொந்த உபயோகத்துக்குக் கொடுப்பது சரியல்ல. இதுவும்தவிர, பல மாதிரியில் உபயோகிக்கக்கூடிய ஒருசொத்தை ஒருவர் ஒருமாதிரியில் உபயோகித்து வந்தால், மற்றவர் அச்சொத்தை இதரவிதங்களில் உபயோகித்துக் கொள்ளுவதற்கானசுதந்தரம் நீங்கிவிடாது. உதாரணமாக, ஒருதோட்டத்தின் வரும்படியை அதன்

சொந்தக்காரன் அனுபவித்துவந்தாலும், அதன் வழியாய்ப்போகும் ஒற்றையடிப்பாதையில் நடத்தற்குப் பிறருக்குச் சுதந்தர மிருக்கலாம். பாய்ச்சலுக் குபயோகப் பட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஆற்றில் தோணிகள் போகக்கூடியதாயிருந்தால் பயிரிடுகிறவர்களும் தோணிக்காரர்களும் ஒருவர்மற்றொருவரைத்தடுக்கக்கூடாது.

(2) மேற்கூறியதைச் சொத்திற்குரிய சுதந்தரத்தின்பிரதான இலக்கணமாகச் சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஒரு சொத்தை நாம் உபயோகிக்காதிருந்தாலும் பிறர் அதில் பிரவேசித்து பிரயோசன மடையச் சுதந்தரமில்லை. யாராவது இப்படி பிரவேசிக்குங் காலத்தில் அவரைத் தடுத்து அப்புறப்படுத்தி நாம் அதை வேண்டியபடி உபயோகித்துக்கொள்ள நமக்குச் சுதந்தர மிருந்தால் அச்சொத்து நமக்குச் சொந்தமென்று கூறப்படும்.

ஆகாரத்தைப் போன்ற சில சொத்துக்கள் ஒருதடவை உபயோகிக்கப் படுவதினால் நைத்துப்போகுஞ் சுபாவத்தை உடைத்தா யிருக்கின்றன. பிறரைத்தடுத்து அவற்றை நமது வசப்படுத்திக் கொண்டாலன்றி நாம் அவற்றை வேண்டியபடி அனுபவித்துக் கொள்ள முடியாது. அப்படியே ஒருவயலை நன்றாய் உழுது பயிர்செய்து விளைவை அனுபவித்தற்கு உழவுநாளின் தொடக்கம் முதல் அடுத்த அறுப்புக் காலம் வரையிலாவது பிறரை விலக்கி நாம் மாத்திரம் இந்நிலத்தை உபயோகிக்கும் சுதந்தரத்தை உடைத்தா யிருக்கவேண்டும். மேலும் இப்படி பிறரைவிலக்கும் சுதந்தர மில்லாதிருந்தால் உபயோகமுள்ள சாமான்களை உற்பத்தி செய்வதில் மனிதருக்குள்ள ஊக்கம் மடிந்துபோகும். நாம் சொத்தை உபயோகிக்கும் தருணத்தில் மாத்திரம் பிறருடைய தடையின்றி இருந்து நம்முடைய உபயோகம் தீர்ந்தவுடனே அவர் பிரவேசிக்கக் கூடியதா யிருத்தல் உலகத்தின் அபிவிர்த்திக்குப் போகாது.

(3) நாளடைவிலாவதுஒரேதடவையிலாவது சொத்தை யழித்தற்குள்ள பாத்தியம் அச்சொத்துக்குரிய சுதந்தரத்தின் மூன்றாவது இலக்கணமாகின்றது. நம்முடைய ஆகாரம் உண்ணப்படுவதால் ஒரேதடவையில் அழிந்து போகின்றது; நமது உடை நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து போகின்றது. சொத்து முழுவதையும் ஒரே தடவையாய் அழிப்பதற்கும், சிறிது சிறிதாய் தன்மனஞ் சென்றபடி அழிப்பதற்கும், அதன் சொந்தக் காரனுக்குச் சுதந்தரமுண்டு.

மனிதரால் தகுந்தபடி உபயோகிக்கப் படுவதினால் சில சொத்துக்கள் ஒருகாலத்தும் அழிவை யடைகிறதில்லை. அழிவடையாது மனிதருக்கு உபயோகமாய்க் கொண்டுவந்தாலும் அவற்றைத் தக்கபடி உபயோகிக்காவிட்டால் எவ்விலக்கணங்களினால் அவை மனிதருக்கு எக்காலத்தும் உபயோகப்பட்டு வருகின்றனவோ அவ்விலக்கணங்கள் அழிந்துபோம். இதற்குப் பயிரிடப்பட்டு வரும் நிலத்தை உதாரணமாய்க் கூறலாம். ஒரு நிலத்தை அதன் சொந்தக்காரன் குத்தகைக்கு விட்டுக்கொடுத்தால் அதைப் பயிரிடுவதால் அதன் செழிப்புகுன்றாது வியவசாய சாஸ்திரப்பிரகாரம் அதைப் பயிரிட்டுவர குத்தகைக்கு வாங்கி யிருப்பவன் நிர்ப்பந்தப் பட்டிருக்கிறானென்பதிற் சந்தேகமில்லை.

(4) உயிரோ டிருக்கையில் மனதிற் கிசைந்தபடி சொத்தைப் பிறருக்குத் தானஞ் செய்தலும், விற்கையும் அச்சொத்திற்குள்ள சுதந்தரங்களில் சேர்ந்திருக்கின்றன வென்று சதாரணமாய்க் கொள்ளப்பட்டிருக்கிறது.

மரணசாதனத்தினால் தன் சொத்தை வினியோகிக்கும் சுதந்தரமும் சொந்தக் காரனுக்கு ஒருவா றுண்டென்றே சொல்ல வேண்டியது. எவனுக்குத் தன் சொத்தை யழிக்கவும் பிறருக்குத்தானம் செய்யவும் சுதந்தரமுண்டோ அவனுக்கு மாத்திரமே இச்சுதந்தரமும்உண்டு. எச்சொத்தைத் தானம்செய்யவும் அழிக்கவும் அதிகார மில்லாது தான் உயிரோடிருக்கும் வரையில் அதிலிருந் துற்பத்தியாகும் வரும்படியைச் சுயேச்சையாய் உபயோகித்துக்கொள்ளுஞ் சுதந்தரமாத்திரம் ஒருவனுக்கிருந்தால் அவனுக்கு அச்சொத்தை மரண சாதனத்தால் வினியோகம் செய்யும் சுதந்தரமில்லை. இத்தேசத்தில் வழங்கிவரும் சட்டத்தின்பிரகாரம் சந்ததியிருக்கையில் பிதுரார்ச்சிதத்தை இப்படி வினியோகஞ் செய்ய ஒருவருக்குஞ் சுதந்தரமில்லை.

7. மேல் விவரிக்கப்பட்டிருக்கும் இலக்கணங்களையுடைய சொத்திற்குள்ள சுதந்தரத்தைத் தற்காலத்தில் நாகரீகமடைந்த சங்கங்களில் சனங்கள் இரண்டுவிதமாய் அடைந்து வருகிறார்கள்:—

(1) எந்தச்சொத்து ஒருவனுக்குச் சொந்தமாய் விட்டதோ அந்தச்சொத்தை அவனால் தானஞ் செய்யப்பட்டாவது, விற்கப்பட்டாவது, மரணசாதனத்தால் விநியோகிக்கப்பட்டாவது மாத்திரமே பிறர் அடையலாம். இம்மூன்று வழிகளைத்தவிர வேறு வழிகளில்லை.

(2) இதுவரையில் ஒருவராலும் சொந்தமாக்கப்படாத சொத்தைக் குறித்து, எவன் அது விஷயத்தில் தன் பிரயத்தினத்தைச் செலுத்துவதினால் மனிதரின் ஆவசியகத்திற்கு உபயோகமாகு மிலக்கணத்தை அதற்குண்டாக்கிக்கொடுக்கிறானோ அவனே அதற்குச் சொந்தக்காரனாகிறான்.

இரண்டாவது வகுப்பிற் சேர்க்கப்பட்டிருக்கும் 'சொந்தமாக்கப்படாத சொத்தைப்பற்றி முதலிற் பிரஸ்தாபித்து, ஒருவனுக்குச்சொந்தமாய்விட்ட சொத்திலுள்ள சுதந்தரங்களைக் குறித்துக் கடைசியாய் எழுதிமுடிப்போம்

(இன்னும் வரும்.)

கி. சுந்தரராமன், எம்., ஏ.

நடுவேனிற் கனவு.

நான்காவது அங்கம்.

1-வது இடம்: காட்டில் முற்கூறிய இடமே. லைசாண்டர், டெமட்ரியஸ், ஹெலனா, ஹெர்மியா, உறங்கிக்கொண்டிருக்கும் இடம்.

[டிடேனியாவும் பாட்டமும் பயற்றம்பூ, சிலம்பிக்கூடு, பாச்சை, கடுகுவிரை முதலிய கந்தர்விகளோடு வருதல். ஒபரான் பின்னால் மறைந்து நிற்றல்.]

டிடேனியா.—வாரும்; இப்புஷ்ப சயனத்திலிரும்; உமது இனிய கன்னங்களைத் தடவிக்கொடுப்பேன். பருத்துச்சமமாயிருக்கும் உமது முடியில் கஸ்தூரி ரோஜா மலரைச்சூட்டுவேன். என் இன்பமே, உமது அழகிய நீண்டகாதில் முத்தமிடுவேன்.

பாட்டம்.—பயற்றம்பூ, எங்கே?

பயற்றம்பூ.—இதோ இருக்கிறேன்.

பாட்டம்.—பயற்றம்பூவே, என்தலையைச் சற்றுச் சொறியும். சிலம்பிக்கூடர் எங்கே?

சிலம்பிக்கூடு.—இதோ இருக்கிறேன்.

பாட்டம்.—நீர் உமது ஆயுதங்களைக் கைக்கொண்டு எனக்காக நெருஞ்சில்மேலிருக்கும் செங்கால் தேனீயைக் கொன்று தேன் கூட்டைக் கொண்டுவாரும். அது செய்வதில் அதிகக் களைப்புண்டாகும்படி கஷ்டப்பட வேண்டுவதில்லை. தேன் ஒழுகி வழிந்தோடி உம்மை முழுக அடிக்காதபடி, தேன்கூட்டை உடையாமற்சாக்கிரதையாய்க் கொண்டுவரல்வேண்டும். கடுகுவிரையார் எங்கே?

கடுகுவிரை.—இதோ இருக்கிறேன்.

பாட்டம்.—கடுகுவிரையாரே, கை கொடும்; எனக்கு இவ்வுபசாரங்கள் ஒன்றும் வேண்டுவதில்லை; விட்டுவிடும்.

கடுகுவிரை.—உம்முடைய விருப்பம் யாது?

பாட்டம்.—*குதிரைவீரச் சிலம்பிக் கூடர் சொறிகிறார்; அவருக்கு உதவியாக நீரும் சற்றுச் சொறியும். எனக்கு நாவிதனிடத்துப் போகவேண்டும்; முகத்தில் நிரம்ப மயிர் வளர்ந்திருக்கிறது. நான் மிக மென்மையான ‡கழுதையாகையால் மயிர் குறுகுறென்னும்பொழுது சொறியல் வேண்டுகிறேன்.

டிடேனியா.—என் இனிய அன்பே, உமக்குக் கானம் கேட்கவேண்டுமோ?

பாட்டம்.—பாட்டைக்கேட்டு இரசிக்கும் காதையுடையேன்; பேரொலியுள்ள வாத்தியம் கேட்க விரும்புகிறேன்.

டிடேனியா.—என் அன்பே, நீர் உண்ண விரும்புவது யாதோ?

பாட்டம்.—†ஒருபடி உலர்ந்த தீனி ஏதேனும் வேண்டும்; உலர்ந்த புற்கட்டுக்கு ஆசையாயிருக்கிறது. அவ்வுலர்ந்த புல்லினது இனிப்பு வேறொன்றுக்கும் வராது; இரண்டொரு கையளவு காய்ந்த பயறு கிடைக்குமாயின் எனக்கு நிரம்பச் சந்தோஷம். இப்பொழுது எனக்குத் தூக்கம் வருகிறது; உன்பணிப்பெண்கள் என் தூக்கத்தைக் கெடுக்காதிருப்பார்களாக.

டிடேனியா.—நீர் கண்வளரும்; மரத்தைக் கொடி சுற்றிக் கொள்வதுபோல், உம்மை நான் என் புஜங்களால் அணைத்துக்கொள்வேன். உம்மிடத்து எனக்கு ஆசை அதிகரிக்கின்றது; காதல் மீறுகின்றது. (அவர்கள் உறங்குதல்)

[பக் வருதல்]

ஒபரான்.—(மறைவினின்றும் முன் வந்து) 'ராபின்' வரவு நல்வரவாக; இவ்வினிய காட்சியைக் கண்டாயோ? அவள் சீராட்டு எனக்கு மிக்க பரிதாபத்தை உண்டாக்குகின்றது; அவளுக்கு இரங்குகிறேன். சற்றுமுன்பு அவள் புதிய நறுமலர்க்கோவையை அவனது கன்னத்து மயிர்ச் சுழியிற் சுற்றியலைதயும், மொட்டினுளகப்பட்டு அவைமலர்ந்தபின் பருத்த நன்முத்து மணியைப்போல் உருண்டு தோன்றும் பனித்துளிகள், அம்மலரின் கண்களில் தமக்குண்டாய இச்சிறுமைக்கு வருந்தி அம்மலர்கள் சிந்திய கண்ணீர்போல் நின்றதையும் கண்டேன். அதற்கு அவளை இகழ்ந்து நாணங்கெடுத்தேன். அவள் என்னைப்பொருத்தருள வேண்டிக்கொண்டாள்; மாற்றாகக் கொண்டுவந்த குழந்தையை என்வசம் விடுவென்றேன்; அக்கணமே அவள் தன் கந்தர்விகளைக்கொண்டு அக்குழந்தையைக் கந்தர்வலோகத்தில் என் பூங்காவனம் சேர்ப்பித்தாள். ஆதலின், அவள்கண்ணிலுள்ள இக்கோரமான மயக்கத்தை மாற்றுவேன். நீ இவ்வாதென்ஸ் நகரத்தோன் தலையிலிருந்து அவ்விரூபத்தைக் களைந்துவிடு. அவனும் இவற்றைக் கனவிற்பட்ட துன்பமெனவெண்ணி, மற்றவரைப்போல் ஊர்போய்ச் சேருவான். இப்பொழுது முதலில் எனது நாயகியை விடுவிப்பேன். நீ எப்பொழுதும்போல் ஆவாயாக. (மாற்றுமருந்தால் அவள் கண்ணைத் தொடல்) உன் கண்ணுக்கு எப்பொழுதும் இயல்பாயுள்ள பார்வையுண்டாவதாக. மாரன் பூவின் மயக்கத்தை இப்பத்தினிப்பூ மாற்றும் வன்மையுடையது. என் டிடேனியாவே, என் இனிய அரசியே எழுந்திரு.

டிடேனியா.—என் ஒபரானே, என்ன கனவு கண்டேன்! கழுதைமேற் காதல்கொண்டது போற் கண்டேனே!

ஒபரான்.—உன் நேசன் அதோ படுத்திருக்கிறான்.

டிடேனியா.—இவை எவ்வாறுநேர்ந்தன? இப்பொழுது அக்கோர ரூபத்தைக் காணக் கண் வெறுக்கின்றது.

ஒபரான்.—சற்றுப் பொறு. 'ராபின்,' அவன் கழுதைத் தலையை நீக்கிவிடு. டிடேனியா, உன் கந்தர்விகளைக் கானஞ்செய்யச்சொல்; அக்கானத்தால் இங்கு உறங்கும் ஐவரும் இறந்தவர்களினும் அதிகமாய் அயர்ந்து நித்திரை செய்யக்கடவர்.

டிடேனியா.—கானம்; கந்தர்விகாள், நித்திரையை யுண்டாக்கும் கானம். (மயமாய்க்கானஞ் செய்தல்.)

பக்.—நீ உறக்கமுணர்ந்து உனக்குள்ள பேதைக் கண்ணாற் பார்ப்பாயாக.

ஒபரான்.—வா; என்னரசியே, கைகோத்தாடவா. இவர் நித்திரை செய்யுமிடத்தைத் தொட்டிலென ஆட்டுவோம். நம்முள் பிணக்குத் தீர்ந்து புதிய அன்பு முன்னிலும் அதிகமாய் உண்டாகியதால், நாம் நாளை நடுநிசியில், தீஸியுஸ்ஸின் அரண்மனையில், அவன் மணமனைவியோடு தழைத் தோங்கவேண்டி, நம் நற்கூத்தாடுவோம். அப்பொழுது அங்கு மணம்புரிந்திருக்கும் மற்றைக் காதலரும் தம்முள் பிரியா அன்புண்டாகப்பெற்று எல்லா நன்மையையும் அடைவார்களாக.

பக்.—என்னிறைவ, கேளும்! இதோ, காலைக் குருவி கத்துகின்றது.

ஒபரான்.—என்னரசியே, நாமும் இவ்விரவைத் தொடர்ந்து அது செல்லுமிடத்துக்கு ஆடிச் செல்வோம்; நாம் சந்திரனிலும் வேகமாய்ச் சுழன்று வருவேமல்லேயோ?

டிடேனியா.—என் தலைவ, நாம் ஓடும்பொழுது எனக்கு இவ்விரவில் இம்மானிடரிடையிற் கிடந்துறங்கும்படி நேர்ந்தது இன்னவாறென்று

---

* சொறியும்படி. பயற்றம்பூவுக்குக் கட்டளையிட்டதை மறந்து, சிலம்பிக்கூடுசொறிவதாக பாட்டம் நினைத்துப் பேசுகிறான்.

‡ பாட்டம் தான் கழுதை முகமடைந்ததை உணராமலே தன்னைக் கழுதையென்று இழிவாய்ச் சொல்லிக்கொள்ளுகிறானென்று பொருள் கொள்ளலாம்.

† இதுவரையில்மனிதருணர்ச்சியோடுபேசிக்கொண்டிருந்தவனுக்குக் கழுதைத் தலையின்சம்பந்தத்தால் கழுதை உணர்ச்சி வந்துவிட்டது.

சொல்ல வேண்டுகின்றேன். (போதல். உள்ளில் கொம்பு ஊதல்.)

[தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ், பரிவாரங்கள் வருதல்.]

தீஸியுஸ்.—உங்களில் ஒருவன் போய்க் காடு காப்போனை அழைத்து வருக. நமது வஸந்த விழாக் கொண்டாடல் கழிந்தது. இனி என் அன்பே, இப்பொழுது அதி காலையாகையால் என் வேட்டைநாயின் கானம் கேட்பாயாக. நாய்கள் தனித்தனியே ஓடியாடித்திரிய அவற்றின் பிணையலைத் தெறித்துவிடு. காடுகாப்போனெங்கே? பார். (ஒரு வேலைக்காரன் போதல்.) என் இனிய அரசியே, நாம் இம்மலையின் உச்சியிற்போய் அங்கிருந்து நாய்களின் குரைப்பும், அக்குரைப்பின் எதிரொலியும் ஒன்றுசேர்ந்த குழப்பத்தைக் கேட்போம்.

ஹிப்பாலிடா.—நான் எத்தனையோ சூரர்கள் கடும்வேட்டை யாடுமிடங்களில் அவருடனிருந்திருக்கிறேன்; எங்கும் இந்த வைபவம் கண்டதில்லை. சோலையில் மாத்திரமோ, ஆகாசத்திலும் ஊற்றங்கரைகளிலும் அருகிலுள்ள எல்லாவிடங்களிலும் ஓரேசத்தமாயிருக்கின்றது. இவ்வளவு இனிய முழக்கமும், இன்னிசைக் குழப்பமும், எங்கும் கேட்டதில்லை.

தீஸியுஸ்.—என் வேட்டைநாய்கள் 'ஸ்பார்டன்' ஜாதியைச்சார்ந்தவை. அவற்றைப்போல் திறந்த வாயையும், செம்மயிரையும், தொங்கும் தலையையும், தரையிற்புரளும் நீண்ட காதையும் வளைந்த முழந்தாளையும், 'தெஸ்ஸலியின்' காளைகள்போல் அலைதாடியையும் உடையன. வேட்டையாடுவதில் விரைவுள்ளனவல்ல; ஆயினும், ஒன்றின்கீழ் ஒன்றாக மணிகளின் நாதம்போல் சங்கீதக் கிரமம் பெற்றுள்ள பலவித ஸ்வரத்தையும் உடையன. *ஸ்பார்டா, 'தெஸ்ஸலி' முதலிய இடங்களிலிருக்கும் வேட்டுவர் இங்ஙனம் இன்னிசையோடு கூடிய நாய்களைக்கொண்டு வேட்டையாடியறியார். அவ்விசையைக் கேட்கும்பொழுது நீயே தெளிவாய்! ஆ! நில்! இங்கிருக்கும் இத்தேவதைகள் யார்?

இஜீயஸ்.—என்னாண்டவனே, இங்கு உறங்குபவள், என் புதல்வி, இங்குப் படுத்திருப்பவன், லைஸாண்டர்; இவன், டெமிட்ரியஸ்; இவள், நேடாரின் புதல்வியாகிய ஹெலனா. இவர்கள் எல்லோரும் இங்கு ஒருமித்திருப்பது எனக்கு அதிசயமா யிருக்கின்றது.

தீஸியுஸ்.—இவர்கள் வஸந்தவிழாக் கொண்டாடுதற்கு அதிகாலையில் எழுந்தார் போலும்; நாம் விழாக்கொண்டாடவரும் குறிப்பை அறிந்து நம்முடனிருந்து உபசரிக்க இங்கு வந்தாரென்று எண்ணுகிறேன். இஜீயஸ், தன் விருப்பம் இன்னதென்று ஹெர்ம்யா அறிவிப்பதற்குக் குறிப்பிட்ட நாள் இஃதன்றோ?

இஜீயஸ்.—ஆம், என்னாண்டவனே.

தீஸியுஸ்.—கொம்பை ஊதி அவர்களை எழுப்பும்படி வேட்டைக்காரர்களுக்குக் கட்டளையிடு.

(உள்ளில் கொம்பும், கூச்சலும். லைஸா, டெமி, ஹெர், ஹெல, திடுக்கிட்டெழுதல்.)

நண்பர்களே, ஸுதினம்; *ஸெண்ட் வாலென்டைன் நாள் சென்றுவிட்டதே. இப்பொழுது தான் இக்காட்டுப்பட்சிகள் தத்தம் துணைகளைத் தெரிகின்றனவோ?

லைஸாண்டர்.—என்னை மன்னித்தருளவேண்டுகின்றேன்; என்னாண்டவனே.

தீஸியுஸ்.—நீங்கள் எழுந்து நின்று உறக்கமுணருங்கள். நீங்கள் இருவரும் எதிரிகளான பகைஞரல்லீர்? பகையும் பகையும் மனக்கோதிப்பும் பயமுமின்றி இவ்வாறு ஓரிடத்து உறங்கும் இவ்வைக்கியம் இவ்வுலகில் எங்கிருந்து வந்தது?

லைஸாண்டர்.—என்னாண்டவனே, தூக்கக் கலக்கத்தில் தடுமாறிச் சொல்லுகிறேன்; நான் இங்கு இன்னவிதமாய் வந்தேனென்று எனக்கு உண்மையில் தெரியவில்லை; உறுதியாய்ச் சொல்வேன். எனக்கு இப்பொழுது ஞாபகத்துள்ளதை உள்ளவாறுரைப்பேன். நான் ஹெர்ம்யாவோடு இங்கு வந்தேன். எங்களுடைய கருத்து, ஆதென்ஸ் நகரைவிட்டு வேறிடம்போய்,

* வேட்டைக்குப் பெயர்போன இடங்கள்.

* ஸெண்ட் வாலென்டைன்நாள்-பிப்ரவரிமீ 14-ம் தேதி. அன்றைத்தினம், வருஷத்துக்கு ஒருமுறை பட்சிகள் தத்தம் துணையைத் தெரிவதாக வியவகாரம். தீஸியுஸ் இவர்களைக் காட்டில் ஒருமித்துக்கண்டதைப்பற்றி இச்சல்லாப வார்த்தை நிகழ்ந்தது.

அங்கு ஆதென்ஸ் நகரச் சட்டத்தின் துன்பமின்றி..................... ......

இஜீயஸ்.—போதும்; போதும், என் ஆண்டவனே, நீர் கேட்டதுபோதும். இவனைச்சட்டத்திற்கு உட்படுத்தவேண்டுகின்றேன். அவர்கள் திருட்டுத்தனமாய்ப்போய், என்னையும், டெமிட்ரியஸ், உன்னையும் மோசஞ்செய்ய எத்தனித்தார்கள்.

டெமிட்ரியஸ்.—என்னாண்டவனே, அவர்கள் யாருமறியாமல் இக்காட்டுக்கு ஓடிவந்தார்கள் என்றும், அவர்களுடைய கருத்து இன்னதென்றும் எனக்குச் சீருள்ள ஹெலனா உரைத்தாள். நான் வேகமாய் அவர்களைத்தொடர்ந்து இங்கு வந்தேன்; என்மேலுள்ள காதலால் ஹெலனாவும் என்பின் வந்தாள். ஆனால், நலமிக்க என்னாண்டவனே, என்ன மாயமோ அறியேன்—அது மாயையின் வன்மையே—எனக்குஹெர்ம்யாவின்மேலுள்ள நேசம் பனியைப்போல் உருகியோடிவிட்டது; பிள்ளைப்பிராயத்தில் பயனற்றபொருளின்மேற்பாராட்டிய நேசம்போல் தோற்றுகிறது. இப்பொழுது எனக்கு எல்லா விசுவாசமும். மனத்தினன்பும், கண்ணினின்பமும் ஹெலனாவே. என்னாண்டவனே, நான் ஹெர்ம்யாவைக் காணுமுன் எனக்கும் ஹெலனாவுக்கும் மணம் நிச்சயமாயிருந்தது. பிணியிற் சுவையுணர்ச்சி கெட்டு உணவை வெறுத்துப் பின்னர் பிணி நீங்கிச் சுவைதோன்ற, அவ்வுணவை ஆவலுடன் வேண்டுவதுபோல், நான் இப்பொழுது ஹெலனாவை வேண்டுகின்றேன்; இனி என்னாசை அவளிடத்தே நீங்காது நிலைபெற்று நிற்கும்.

தீஸியுஸ்.—இனிய காதலர்களே, உங்களை இங்குச் சந்தித்தது நன்றாயிற்று; உங்கள் கதையைப் பின்பு விவரமாய்க் கேட்போம். இஜீயஸ், உன் வேண்டுகோளை நிறைவேற்றேன்; அதற்கு விரோதமாய் உத்தரவுசெய்வேன். சீக்கிரத்தில் எமது கலியாணத்தோடு இவருடைய இரண்டு கலியாணங்களையும் நமது தேவாலயத்தில் நடத்துவதாய் நிச்சயித்திருக்கிறேன். காலைப்பொழுது கழிந்ததால் நாம் கருதிய வேட்டையை நிறுத்துவோம். எம்மோடு நீங்களும் ஆதென்ஸுக்குத் திரும்புவாருங்கள். நாம் மூவரும் நம் காதலிகளோடு மணவிழாக் கொண்டாடுவோம். ஹிப்பாலிடா, நாம் போவோம் வா.

(தீஸியுஸ், ஹிப்பாலிடா, இஜீயஸ், பரிவாரங்கள் போதல்.)

டெமிட்ரியஸ்.—வெகு தூரத்துள்ள மலைகள் மேகமென மாறித் தோன்றுவனபோல், எனக்கு இரவில் நேர்ந்தனவெல்லாம் சிறந்த விவரமின்றிக் குழம்பிக் கலந்து காணப்படுகின்றன.

ஹெர்ம்யா.—மாறுகண் பார்வைபோல் ஒவ்வொரு பொருளும் எனக்கு இரட்டை இரட்டையாய்த் தோற்றுகின்றது.

ஹெலனா.—எனக்கும் அப்படியே. ஒரு இரத்தினத்தைக் கண்டெடுத்ததுபோல் டெமிட்ரியஸ்ஸைப் பெற்றிருக்கிறேன்; இப்பொழுது என்னுடைமையே; என்னுடைமை யென்ற நிச்சயமுமில்லை.

டெமிட்ரியஸ்.—நாம் உறக்கமுணர்ந்திருக்கிறோமென்பது உனக்கு நிச்சயந்தானா? இன்னும் உறங்கிக்கொண்டு கனவு காண்கிறோமென்று எனக்குத் தோற்றுகிறது. [illegible] இங்கு வந்து நம்மைத் தமக்குப்பின் [illegible] கட்டளை யிட்டாரென்று உனக்குத் தோன்றுகிறதோ?

ஹெர்ம்யா.—ஆம், இ[illegible] வந்திருந்தார்; என் தந்தையும் வந்திருந்தார்.

ஹெலனா.—ஹிப்பாலிடா[illegible] வந்திருந்தாள்.

லைஸாண்டர்.—அவர் நம்மை [illegible] வரும்படிக் கட்டளையிட்டுப் போ[illegible].

டெமிட்ரியஸ்.—அப்படியானால் நமக்கு விழிப்பேதான். நாம் அவரைத்தொடர்ந்துபோவோம். போகும் வழியிற் கனவைச் சொல்லிக் கொள்வோம். (டெமி, லைஸா, ஹெர்ம், ஹெல, போதல்.)

பாட்டம்.—(கண்விழித்து) என் இறுதிச்சொற் குறிப்பு வந்தவுடன் என்னைக் கூப்பிடு; வருகிறேன். நான் மேற்சொல்ல வேண்டியது 'மிகவும் அழகுள்ள பிரமஸ்ஸே' என்றோ? ஓ! க்வின்ஸ்! துருத்திதிருத்தும் ப்ளூட்! செம்புகொட்டி ஸ்நௌட்! ஸ்டார்வெலிங்! என்னைத் தூக்கத்தில் விட்டு ஓசைப்படாமற் சென்றார்களோ! நான் வெகு அதிசயமான ஓர் கனவுகண்டேன்; அஃது ஒருவர் புத்திக்கும் எட்டாத

165411
JL
Rm 211.M92 M92.1-2

கனவு! இக்கனவை வெளியில் விவரித்துச்சொல்லத் தொடங்குபவன் கழுதையேயாம். எனக்குத் தோற்றுகிறது, நானொரு—அந்த ஒருவனாலும் சொல்லமுடியாது. நான்நினைக்கிறேன், எனக்கொரு—எனக்கு இன்னது நேர்ந்ததென்று சொல்லத்துணிபவன்பரம மூடன்; சந்தேகமில்லை. நான் கண்ட கனவு மனிதன் கண்ணுற் கேளாதது; காதாற் பாராதது; கையால் உருசிக்காதது; நாவால் ஊகியாயது; மனத்தாற் சொல்லாதது. இக்கனவைப் பற்றி ஒரு பாடற் செய்ய க்வின்ஸ்ஸினிடத்தில் ஏற்பாடு செய்வேன். அதற்குப் 'பாட்டத்தின் கனவு' என்று பெயர் வழங்குக. அப்பாடலை அரசன் முன் கூத்தின் முடிவில் நானே பாடுவேன். ஒருவேளை அவள் (திஸ்பி) இறக்கையிற் பாடுவது அதிக உசிதமாயிருக்குமென்று எண்ணுகிறேன்'

(போதல்.)

2-ம் இடம். ஆதேன்ஸ் நகரம், க்வின்ஸ்ஸினது வீடு.

[க்வின்ஸ், ப்ளூட், ஸ்நௌட்; ஸ்டார்வெலிங் வருதல்]

க்வின்ஸ்.—பாட்டத்தின் வீட்டுக்கு ஆளனுப்பினீர்களோ? அவன் வீடுவந்துசேர்ந்தானோ?

ஸ்டார்வெலிங்.—அவனைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. சந்தேகமில்லை, அவன் மாறிவிட்டானென்றே எண்ணுகிறேன்.

ப்ளூட்.—அவன் வராவிட்டாற் கூத்துக்கெட்டுப்போம்; சரியாய் நிறைவேறாது; நிறைவேறுமோ?

க்வின்ஸ்.—சாத்தியமில்லை. இவ்வாதென்ஸ் நகரத்தில் அவனைப்போற் பிரமஸ்வேஷம் போடத்தக்கவன் ஒருவனுமில்லை.

ப்ளூட்.—உண்மையில் இல்லை. இவ்வாதென்ஸ் நகரத்தில் கைத்தொழிலாளிகளுள் நல்லவிவேகமுள்ளவன் அவனே.

க்வின்ஸ்.—ஆம், பார்வைக்கும் உருவத்திற் சிறந்தவன்; உத்தமமான இனிய குரலையுடையவன்.

[ஸ்நக் வருதல்.]

ஸ்நக்.—ஆலயத்திலிருந்து கலியாணக்கோலத்தோடு நமது அரசன் வருகிறார். அவருடன் வேறு இரண்டு குலமக்களும் தம் மனைவியார்களோடு விவாகஞ் செய்துகொண்டு வருகிறார்கள். இப்பொழுது நம் கூத்து நடக்குமாயின் நமக்கு நல்ல வருவாய்க்கு வழியுண்டாம்.

ப்ளூட்.—ஓ! வாயாடிப்பாட்டம்! ஒரு நாளைக்கு இரண்டு பணம் விழுக்காடு உயிருள்ளவளவும் கிடைக்கக்கூடிய உபகாரச்சம்பளத்தை இழந்து விட்டானே. அவன் பிரமஸ் வேஷம் போட்டு ஆடுந்திறமைக்கு அரசன் நாளொன்றுக்கு இரண்டு பணம் விழுக்காடு சம்பளம்கொடாமலிரார். அப்படிக்கொடாராயின் நீங்கள் என்னைக் கொல்வது எனக்குச் சம்மதம்.

[பாட்டம் வருதல்.]

பாட்டம்.—இச்சிறுவர்களே?

க்வின்ஸ்.—ஓ! பாட்டம்! ஆ! என்ன காலம்!

பாட்டம்.—நான் சொல்லக்கூடிய அதிசயம் நிரம்பவுண்டு. என்னவென்று என்னைக் கேட்கவேண்டுவதில்லை; சொல்வேனானால், நான் ஆதென்ஸ் நகரத்தேனல்லன், ஒவ்வொன்றையும் உங்களுக்கு நடந்தபடி நானே சொல்வேன்.

க்வின்ஸ்.—இனிய பாட்டமே சொல்; கேட்போம்.

பாட்டம்.—ஒரு வார்த்தைகூடச்சொல்லேன் உங்களுக்கு இப்பொழுது நான் இவ்வளவுதான் சொல்வேன்: அரசன் அமுது செய்தாயிற்று; உங்கள் உடைகளைச் சித்தப்படுத்திக்கொள்ளுங்கள்; *தாடியை நல்ல கயிற்றாற் கட்டிக்கொள்ளுங்கள்; உங்கள் தோற்செருப்புக்குப் புதிய நாடாவேண்டும். விரைவில் அரண்மனை வந்து சேருங்கள். ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டியவற்றைச் செவ்வையாய் ஞாபகப்படுத்திக்கொண்டு வரவேண்டும். வளர்க்காமல் முடிவான செய்தியைச் சொல்லிவிடுகிறேன். நமது கூத்து அரசனது அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எவ்வாறானாலும் திஸ்பிக்குச் செவ்வையான சணல் நாற்புடவை வேண்டும். சிங்கவேஷம் போடுபவன் தன் நகம் களையக்கூடாது. ஒவ்வொருவரும் ஈர உள்ளியோ, வெள்ளுள்ளியோ தின்று வரவும் கூடாது; நாம் விடும் சுவாசம் நன்மணமுள்ளதாயிருக்கவேண்டும், நமது கூத்தை இனிய கூத்தென்று ஒப்புக்கொள்வார்களென்பதிற் சந்தேகமேயில்லை. இனி அதிக வார்த்தை வேண்டுவதில்லை, ஓடுங்கள், சீக்கிரப்படுத்துங்கள். (யாவரும் போதல்)

நான்காம் அங்கம் முற்றிற்று.

எஸ். நாராயணசாமி அய்யர், பி. எ.

* அப்படிச் செய்யாவிடில், அரசன் முன்பு ஆடும்பொழுது பொய்த்தாடி சமயத்தில் நழுவி விடும்.

ஹிந்துக்களின் க்ஷயகதி.

௩-வது உன்மானக்ஷயம்;

௪-வது மானக்ஷயம்.

உன்மானம் என்பது உயரம். மானம் என்பது கனம். ஹிந்துக்கள் வரவர உயரமும் கனமும் குறைந்து வருகிறார்களென்பதில் சந்தேகமில்லை. உன்மானக்ஷயமும் கனக்ஷயமும் உண்டாவது பெரும்பாலும் ஒரேகாரணம் பற்றியாகையால் இரண்டையும் ஒருமித்து எழுதலானேன்.

மேற்கண்ட இருவகை க்ஷயகதிகட்குக் காரணம் முக்கியமாய் வறுமைதான். அதிகப்பட்டால் நாலைந்து பைசாகொண்டு ஒரு நாள் முழுமையும் ஒருவன் நமது தேசத்தில் காலம்தள்ளவேண்டியிருக்கிறதென்று முதலாவது பத்திரிகையில்பிரஸ்தாபித்திருக்கிறேன். இவ்வளவு அற்பமுதல் கொண்டு காலக்ஷேபம் நடத்திவரும் ஸ்திரீபுமான்கள் சேர்வதால் வீரியம் ஊர்ஜிதத்தோடு பாயாமல் வெகு பலக்ஷயமாய்ப் பாயும். ஊர்ஜிதத்தோடு எறியப்பட்ட கல் உயர எழும்புவதுபோல பலஹீனமாய் எறியப்பட்ட கல் உயர எழும்பாது. அதுபோல பலஹீனமாய் விழப்பட்ட வீரியத்தால் சந்ததி தகுந்த வளர்ச்சிக்கும் புஷ்டிக்கும் இடமில்லாமல் உயரமும் கனமும் குறைந்து உண்டாகிறது. சாதாரணமாய் தகுந்த உயரமும் கனமும் பொருந்திய ஜனங்களுக்கும் சிலசமயங்களில் உயரமும் கனமும் குறைந்த சந்ததிகள் உண்டாகக்கூடும். இதற்குக்காரணம் கலவைசமயம் அவர்கள் பலஹீனமாகவும் ஊர்ஜிதமின்றியும் இருந்து திடச்சித்த மில்லாமலோ நிற்பந்தத்தின் மேலோ அலுப்புக்காற்றாமல் பிரவர்த்திப்பதுதான்.

மாதா பிதாவழி சந்ததி உண்டாகுமென்று முன் பத்திரிகைகளில் எடுத்துக்காட்டி இருக்கிறோம். மாதாபிதாக்கள் தகுந்த உயரமும் கனமுமாய் இருந்தாலும் பாரம்பரியம் என்ற விதிப்படி அவர்கட்கு உயரமும் கனமும் பொருந்திய சந்ததிகள் உண்டாகாமல் உயரமும் கனமும் குறைந்த சந்ததிகள் உண்டாவதற்கு முன் எடுத்துக்காட்டிய காரணத்தைத் தவிர வேறொரு காரணமும் உண்டு. தற்காலத்தில் ஒருவன் ஆகிருதியோடிருந்தால் அவன் அகலமும் நீளமுமாய் மிருகப்பிராயமாய் இருக்கிறானென்று சில ஸ்திரீகள் பழிக்கிறார்கள். முற்காலத்தில் ஆறடி உயரமிருப்பது சாதாரணம்; அதற்கதிகமான உயரமும் ஆகிருதியுமான மனுஷர்களு மிருந்தார்கள். அப்பேர்ப்பட்டவர்களை நான் தற்காலத்திலும் அபூர்வமாய்க் கண்டிருக்கிறேன். அப்பேர்ப்பட்ட ஆகிருதி உள்ளவர்களை இப்பொழுது சில ஸ்திரீகள் மனுக்கும் பூதத்துக்கும் இராக்ஷதனுக்கும் ஒப்பிட்டு அழகல்லவென்று தள்ளுகிறார்கள். அதற்கு விபரீதமாக உடல் சிறுத்தும் ஒல்லிப்பட்டும் கனம் குறைந்தும் உயரம் குறைந்தும் இருந்தால் அப்படிக்குள்ள புருஷன் எவ்வளவு வயதாயும் சிறுபிள்ளைபோலவும் கொட்டைப்பாக்குப் போலவும் இருக்கிறானென்று புகழ்ந்து அவனை அழகென்றும் மதிக்கிறார்கள். அதிலும் ஆபரணம் அணிந்திருந்தால் அவன்மேல் நாட்டம் அதிகம். ஒரு ஸ்திரீயானவள் எவன்மேல் ஆசைகொண்டு கலவை சமயம் எவனை நினைக்கிறாளோ அவன் மாதிரி சிசு உற்பத்தி யாகுமென்பது சாஸ்திர சித்தாந்தம். வராஹசம்ஹிதை இரண்டாம்பாகம் ௨௮-வது அத்தியாயம் முதலாவது சுலோகம் காண்க. அதுபோலவே 'ஸ்கோபன்ஹார்' முதலிய ஜர்மனி சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். 'ட்ரால்' முதலிய அமெரிக்கா சாஸ்திரிகளும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஸ்திரீகட்கு ஆகிருதி குறைந்த புருஷனிடம் நாட்டஞ் செல்லும்போது அவன்போல் சந்ததிஉண்டாகும் என்பதற்குச்சந்தேகமில்லை.

தத்தம் பெண்குழந்தைகட்கு வரன் நிச்சயிப்பது பெரும்பாலும் ஸ்திரீகட்கு இணங்கியபடிதான். ஆகிருதி குறைந்த புருஷனிடம் நாட்டஞ் செல்லும்பட்சத்தில் அவர்களையே வரனாக நிச்சயப் படுத்தும்படியான சித்தவிர்த்தி அதிகரிக்கிறது. ஆகிருதிகுறைந்த ஜோடி அதிகரிக்கும்போது சந்ததியும் ஆகிருதி குறைந்தே ஜனிக்கிறது. ஆண் பெண் என்ற இணை உண்டாவதில் நாம் எல்லோரும் திருஷ்டிவைக்கவேண்டியதற்குக் காரணம் அவர்கள் மட்டில் தனிமையாக உண்டாகும் லாபம் நஷ்டம், இன்பம் துன்பம்; இவைகள் மாத்திரம் பெரிதாக

நினைத்தன்று; அவ்வினை மூலம் உண்டாகும் சந்ததி இன்னதென்று நிச்சயப்படுகிற படியால் அதுபூலோகமுழுவதும் சம்பந்தித்தசங்கதியாக இருத்தல் நிமித்தம் தான். இக்காரணத்தால் ஆண் பெண் என்ற இணை உண்டாவதில் நாம் திருஷ்டி வைக்கவேண்டுமென்று 'ஸ்கோபன் ஹார்' என்பவர் எழுதியிருக்கிறார். இதுதான் மனுதர்மசாஸ்திரம். ஆகிருதிகுறைந்த ஜோடிப் புணர்ச்சியால் ஆகிருதி கூடிய சந்ததி உண்டாகாது. 'வினை (விதை) யொன்றுபோடச் சுரை யொன்று முளைக்குமா?' என்றும் 'எள்விவிதைக் கக் கொள்முளைக்குமா?' என்றும் தொன்றுதொட்டு வரும் பழமொழிகள் மேற்சொல்லிய சித்தாந்தத்தையே அனுசரித்திருக்கின்றன.

ஸ்திரீகட்குள் வரன் தெரிந்தெடுப்பதற்குள்ள பிரமாணவாக்கியம் ஆண்நெட்டை பெண் குட்டை யென்பதுதான். பெண்ணைப்பார்க்கிலும் ஆண் நெட்டையாய் மாத்திரம் இருந்தால் போதாது. உயரம் புருஷாகிருதிக்குத் தகுந்த உயரமாகவும், அதற்குத் தகுந்த புஷ்டியாகவும் இருக்கவேண்டும். பெண் நெட்டையாக இருந்தால் அதைப்பழிக்கும்படி இடங்கொடுக்க லாகாது. வெள்ளைக்காரர்கட்குள் பெண் நெட்டையாயிருப்பது விசேஷம். அவர்கட்குள் பெண் நெட்டையாயிருப்பது ஓர்வித அழகென்று மதிக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சித்தவிர்த்தியும் அபிமானமும் இருப்பதால் வெள்ளைக் காரர்களுக்குள் உன்மான க்ஷயம் அதிகமாக நேரிடுகிறதில்லை. நமக்குள் பெண் நெட்டையாகக் கண்டால் அவர்களைத் தகுந்த ஜோடி சேர்த்து விவாகம் செய்வது நலம்.

ஊர்ஜிதமான வீரியமூலம் ஜனிக்கும் சந்ததிகட்கு தகுந்த போஷணை கிடைத்தா லல்லாமல் தகுந்த உயரமும் கனமும் கிடையாது. வித்து எவ்வளவு புஷ்டியாக இருந்தாலும் நிலவளமும் ஜலவளமுமில்லாமல் போகும்போது அவ்வித்திலிருந்து உற்பத்தியாகும் செடிகொடி விருக்ஷம் எப்படி கரண்டு உன்னதமும் ஆகிருதியும் இல்லாமற் போகிறதோ அப்படியே ஊர்ஜித வீரியமூலம் ஜனித்த சந்ததியும் ஆகாரக்குறைவால் தகுந்த புஷ்டியும் உன்மானமும் அடையாமல் கரண்டு போகக்கூடும்.

ஊர்ஜித வீரியமூலமல்லாமல் ஜனித்த சந்ததிகட்கு ஆகாரபுஷ்டி எவ்வளவு இருந்தாலும் அது அவ்வளவு பயன்படுகிறதில்லை. இதற்குக் காரணம் துர்ப்பலமாய் ஜனித்திருப்பதால் தகுந்த உயரத்துக்கும் கனத்துக்கும் வேண்டிய ஆகாரம் ஜீரணப்பட்டு தேகத்தோடுலயப்பட்டு மென்மேலும் விருத்தி அடைவதற்கு இடமில்லாமற் போவதுதான்.

ஊர்ஜித வீரியமூலம் ஜன்மமும், தகுந்த போஷணையும் இருந்தால் தகுந்த உன்மானமும் கனமும் உண்டாகக்கூடும். பெருமுதல் கொண்டு வியாபாரம் செய்பவனுக்கு கிடைக்கும் இலாபம்போல் சிறுமுதல்கொண்டு வியாபாரம் செய்பவனுக்குக் கிடைக்காது. அதுபோல ஊர்ஜித வீரியத்தால் ஜனித்த ஒருவன் ஆகாரப் புஷ்டியா யருந்தி ஜீரணத்திற்குக் கொண்டுவந்து உயரமும் புஷ்டியும் அடையும்வண்ணம், பலஹீனமான வீரியமூலம் ஜனித்தவர்க்கு உயரமுங் கனமும் அடைவதற்கு இடமில்லை.

ஊர்ஜித வீரிய ஜன்மமும் ஆகாரபுஷ்டியும் உள்ளவர்கட்கும் உன்மானக்ஷயமும் கனக்ஷயமுமுண்டாகக் கூடும். அது பாலியகாலத்தில் அவிவேகமாய் மாதாபிதாக்கள் நடத்திவந்த முறைகேடால் தேகத்தில் வியாதி உண்டாகிறதினாலும், புருஷப்பிராப்திவருமுன்னமே விவாகம் நேரிட்டுப் பிஞ்சைக் கசக்கியமாதிரி சத்தகன்று துர்ப்பல முண்டாகிறதினாலும், வித்தியாப்பியாசம் முதலிய முயற்சியில் மட்டுக்கு மிஞ்சி பிரவிருத்தித்து ஜீரணசக்தி குறைந்து போவதாலும், நாளுக்குநாள் உழைப்பு நிமித்தம் உண்டாகும் சக்தி நஷ்டத்திற்குத் தகுந்தபடி ஆகாரமருந்தாமல் அந்தஸ்திற்காவும் பெருமைக்காகவும் ஆகாரம் குறைந்தருந்தலாலுந் தான்.

இளவித்திட்டால் தகுந்த வளர்ச்சியின்றிப் போமென்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயம். அதுபோல பாலியவிவாகத்தால் வித்துக்குவைரமில்லாமல் சந்ததி பலஹீனமாயும் உன்மான க்ஷயமாயும் ஆகிருதிக்ஷயமாயும் ஜனிக்கிறது. தற்காலமுள்ள குடும்பங்களில் பிதாவைப்பார்க்கிலும் புத்திரனும் புத்திரனைப்பார்க்கிலும் பௌத்திரனும் படிப்படி க்ஷயப்பட்டிருப்பதை

காணலாம். இதற்குக் காரணம் பாலியவிவாகமும் ஆகாரக்குறைவுமே.

இத்தேசத்தில் ஆகாரக்குறைவுநிமித்தம் ஆடுமாடுகள் குறுகிக் கரண்டு க்ஷயப்பட்டிருக்கின்றன. ஒரேமாட்டா லுத்பத்தியானதாக இருந்தாலும் ஆகாரக்குறைவில் வாட்டமுள்ள கன்று உயரமும் கனமும் குறைந்தும், போஷணை புஷ்டியுள்ள கன்று உயரமும் கனமும் கூடியும் இருக்கிறதை எல்லோரும் காணலாம். மேலும் முற்காலத்தில் அதாவது கிராமங்களில் ஆலயங்கட்கு சூலமிட்டு விடப்பட்ட காளைகள் தட்டின்றி கண்டவிடம் மேய்ந்து கட்டுப்படாமல் ஆகிருதியும் திமிழுமாய் மதோன்மத்தத்தோடு பசுக்கூட்டங்களில் பிரவேசித்து சினைப்படுத்தி வந்தபடியால் கன்றுகளும் க்ஷயகதியில்லாமல் வளர்ந்துவந்தன. தற்காலத்தில் அவ்வகைக் காளைகள் கிடையா. அங்கிலேய இராச்சியத்தில் வளர்ப்பதுபோல் பொலியெருது வளர்க்கிறதுமில்லை. கண்டகண்ட நோஞ்சலான காளைகள் பிரவேசிப்பதால் கன்றுகளும் ஆட்டுக்குட்டிகள்போல ஜனிக்கின்றன.

குழந்தைப்பருவத்தில் தகுந்தபாலூட்டமில்லாவிட்டால் ஜனனம் எவ்வளவு புஷ்டியாயிருந்தாலும் குழந்தை தகுந்த வளர்ச்சியடைகிறதில்லை. தற்காலத்தில் அனேகம் பெண்கட்கு பால் சுரப்பின்றி பசுவின் பாலையும் கூழையும் புகட்டி குழந்தையின் ஜீரணசக்திக்கு அதிகப்பட்டோ, அல்லது புஷ்டி குறைந்து அளவு அதிகப்பட்டோ குடல்பெருத்து சூனும்வயிறு தட்டிரோக பீடிதமாகி க்ஷயப்பட்டுப் போகிறது. குழந்தைகட்கு தத்தம் மாதாஸ்தன்னியபானம்விசேஷமேயன்றி இதர ஆகாரங்கள் அதிகப்பயனைத் தரத்தக்கதல்ல.

ஆபரண ஆசையாலும் முதல் மிச்சம் பிடிக்க வேண்டுமென்ற பேராவலாலும் சில லுப்தர்கள் ஆபரணமும் பகட்டாடையும் நாகரீகமாகவும் பெருமையாகவும் நினைத்து, அவைகளை யணியும் பொருட்டு வயிற்றுக்கு மூன்றுவேளை பூரணமாய் ஆகாரம் அருந்தாமல், புஷ்டியும் பலமும் தெளிவும் கொடுக்கக்கூடிய நெய் பால் பண்டங்களின்றி காலம் தள்ளுவதாலும் மேற்கூறிய க்ஷயகதிகள் உண்டாகின்றன. ஆரம்பத்தில் கிடைக்கிற புஷ்டிக்குத்தகுந்தபடி பிற்காலத்தில் காயம் ரோகமின்றி சக்தியோடு கூட நெடுங்காலம் வாழ்ந்திருப்பதற்கு ஆதாரம். அப்படியிருந்தும் அவர்கட்குத் தங்கக்காப்பும் வயிரக்கடுக்கனும், தோடும் ஜிமிக்கியும், அட்டிகையும் அரைஞாணும், தோடாவும், கொலுசும், ஒத்தும் சங்கிலியும் மோதிரங்களும் குண்டுகளும் இட்டு பட்டாடை யுடுத்திவிட்டால் எல்லாம் வந்ததுபோலெண்ணி, ஆயிரங்காலத்துப் பயிராகும் குழந்தைகளின் க்ஷேமத்தைக்கவனியாமல் அவர்கட்கு தகுந்த ஆகாரம் அளிக்காமல் நடத்திவரும் அவிவேகத்தால் அக்குழந்தைகட்கு வியாதி வரும்படி விதை ஊன்றி அற்பாயுசுக்கு அஸ்திவாரம் போட்டு நாளுக்குநாள் க்ஷயப்பட்டுப் போகும்படி செய்கிறார்கள். பாலிய காலத்தில் வளர்ச்சி உண்டாவது போல் பிற் காலத்தில் வளர்ச்சி உண்டாகிறதில்லை. மரங்களின் வளர்ச்சியைக் கவனித்துப்பார்க்குமிடத்தில் இது விளங்கும். இதற்குக் காரணம் பாலியகாலத்தில் பிரவிர்த்தி குறைந்து நஷ்டம் பட்டுப்பட்டிருப்பதால் தக்ககாலத்தில் புஷ்டியாய் கிடைக்கும் ஆகாரங் கொண்டு நஷ்டத்துக்கு ஈடுசெலுத்துவது மல்லாமல் வளர்ச்சிக்கு வேண்டிய சேஷிப்பும் அதாவது லாபமும் ஏற்படுகிறது. ஆனால் புருஷப் பிராப்தியான பிற்பாடுநஷ்டம் அதிகமாகவும் ஆகாரநிமித்தம் கிடைக்கும் லாபம் அதற் சதிகப்படாமலும் இருத்தலால் வளர்ச்சிக்குக் காரணம் ஏற்படுவதில்லை.

விருதாதிகளாலும் தபசின் முறையறியாமல் தப்பான அபிப்பிராயத்தின்மேல் பசி பட்டினியாய்க்கிடந்து வைராக்கியம் சாதித்து தேகத்தை சுஷ்கப்படுத்திக் கொள்வதாலும் மேற்கண்ட க்ஷயகதிகள் ஏற்படக்கூடும்.

(இன்னும் வரும்,)

எஸ். இராமஸ்வாமி அய்யர், பி. ஏ., பி. ல்.

பொன்விளை நல்லூர்.

(திரவ்ய சாஸ்திர சம்பந்தமானது.)

1-ம். அதிகாரம்.

பணமறியாப்பாமரர்.

நீலகிரியின்மேல், ரூபாய்க்குச்சில்லறை கொடுத்து அதனால்வரும் வட்டத்தைக் கொண்டு உபாய ஜீவனம்செய்து வந்த நாராயண முதலி யென்று ஒருவன் இருந்தான். அந்தமலையில் காப்பித் தோட்டம் மூத

வியன இருப்பதால் வியாபாரம் வெகு அதிகம். ஆகவே, அந்த வியாபாரியின் சிறிய மேஜையின்மேல் வைத்திருக்கும் சில்லரை கோபுரங்கள் ஒன்றொன்றாய் விரைவில் மறைய, அவன்மடியிலுள்ள பை கலகலவென்று ஓயாமல் ரூபாய் ஓசை கேட்டுக் கொண்டேயிருக்கும். தினம் ஒன்றுக்குக்காலை 7-மணி முதல் இரவு 10-மணி வரையில் அவனிடத்தில்குறைந்தது நூறுரூபாய் சில்லரைகள் முழுரூபாய்களாகமாறும். 'பலதுளிபெருவெள்ளம்' என்ற பழமொழியை அவனைப்போல் அனுசரித்து வந்தவர்கள் இல்லை. இப்படி இருக்கும் நாட்களில் ஒருநாள் அவன் தன் சில்லரை மூட்டையைத் தலையில் சுமந்துகொண்டு கடைக்குப்போகும் வழியில், அவன் கண்முன்னர் ஓர்பெரிய அவதூத சித்த புருஷர் தென்பட்டார். உடனே அவன் தன் மூட்டையைக் கீழேவைத்துவிட்டு, அம்மகாபுருஷரைச்சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டான். அப்பெரியவர் வயிறுவரை வளர்ந்த தன் தாடியைத் தடவிக்கொண்டு, 'ஆஹா, நாராயணா! பணஆசை பிடித்த பயல்' என்றார். அவன் சுவாமிகள் திடீரெனமறைந்தாலு மறைந்துவிடுவாரென எண்ணி அவசரமாய், 'சுவாமீ வயிறுகொடியது, ஓர் நல்ல மாதை மணம்புரிந்து இவ்வுலக வின்பங்களை நுகர இச்சையுள்ளேன். தேவரீர் அநுக்கிரகம் யாதோ' என்று சொல்லிக்கொண்டு மறுபடியும் அவருடைய பாதங்களை வந்தனம் செய்தான். அப்பெரியவர் உடனே 'அந்தப்பையை எடு' என்று ஆஞ்ஞாபித்து அவன்பின் செல்லா தான் முன்சென்றார். அவ்வாறு சிறிது தூரம் சென்றவுடன் சுவாமிகள் ஏதோஒன்றைத்திடீரென்று நினைத்தவர்போல், 'நாராயணா' என்றார். உடனே அவன் 'சுவாமி!' என்ன, அவர் 'இப்புதையல்விளக்கி' என்ற கண்ணாடியையும் உன் பணப்பையையும் பத்திரம்செய்துகொள்' என்று ஓர் வட்டமான கண்ணாடியொன்றை அவனுக்குக் கொடுத்தார். முன்போல் மறுபடியும் மௌனமாய் ஒருவருடன் ஒருவர் சிறிது தூரம் சென்றார்கள். ஓர் பெரிய மலைக்குகையொன்று எதிர்ப்பட்டது. உடனே அப்பெரியவர் 'நாராயணா! உனக்குப்பசி அதிகமா யிருக்கிறபடியால் அதோ உள்ள அந்தப்பச்சிலையைப் பிடுங்கித்தின்னு' என்று ஆஞ்ஞாபிக்க, நாராயணனும் அப்படியே செய்தான். அப்புறம் யாது நிகழ்ந்ததோ தெரியவில்லை. மறுபடி நாராயணனுக்குத் தன்னறிவு வந்தபொழுது * அவன் ஒரு பெரிய அடர்ந்த காட்டின் மத்தியில் தான் இருப்பதாய்க்கண்டான். அவன் பணப்பையும் சுவாமிகள் கொடுத்த கண்ணாடியும் அவனிடம் இருந்தன. அவன் உடுப்புகள் கரைபட்டிருந்ததால் அவன் நெடுந்தூரம் நடந்தவன்போல் காணப்பட்டான். ஆனால் அவன் காலடிகள் ஒன்றும் புலப்படவில்லை. அவன் அந்தக் காட்டிற்குள் வந்த வழியை அறியக்கூடாமல், இவை யாவும் கனவோ, சுவாமிகளுடைய திருவிளையாடலோ என்று அவன் பிரமித்து நாலாபக்கமும் சுற்றிப் பார்க்கையில் கரியநிறமுள்ள ஒருவன் அவனைநோக்கி, 'அகப்பட்டாய், கொல்லுவேன்,வெட்டுவேன்' என்று கத்திக்கொண்டு ஓடிவருவதை நாராயணன்கண்டு பைத்தியம் பிடித்தவன்போல் ஒன்றும் யோசிக்கக்கூட அவகாசமில்லாமல் உயிர் தப்பினால்போதுமென்று ஓட்டம் பிடித்தான். நாராயணனுடைய பயம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவனைத் துரத்தினவனைத் திரும்பிப்பார்த்த பொழுது 'இவன் யாதொரு விரோதமுமில்லாமல் என்னைத் துரத்துகிறான் இவனுடைய உரோமத்தையும், நிறத்தையும், தோலுடையையும்பார்க்கும்போது இவன் நான் கேள்விப்பட்டிருக்கும் நரமாம்சபட்சிணிகளில் ஒருவன் என்பதற்குச்சந்தேகமில்லை; என்னைக்கொன்று தின்னவே இவன் என்னைத் துரத்துகிறான். ஆயினும் சுவாமி இருக்கிறார்.' என்று நாராயணன் தனக்குள் எண்ணிக்கொண்டு முன்னிலும் அதிவேகமாய் ஓடத்தொடங்கினான்: தன் வேகத்தை அதிகரிக்கவே அந்தக் காட்டுமனிதனும் அதிசீக்கிரமாய்ப் பின் தொடர்ந்தான். அந்த மூர்க்கன் நாராயணனிலும் அதிக பலசாலியா யிருந்ததால் வரவர அவனுக்கு அதிக சமீபத்தில் நெருங்கி அவனை எட்டிப் பிடிக்க எத்தனித்தான். உடனே ஓர் பெரிய ஆண் சிங்கம் கர்ச்சித்ததுபோல் 'ஹூய் ஹூய்' என்ற வெகு பயங்கரமான ஒருசத்தம் உண்டாயிற்று. இருவரும் பதைபதைத்து நின்றார்கள். அப்பொழுது ஓர் இராட்சதனைப்போல் கோர வடிவமுள்ள ஒருவன் அவர்களை நோக்கி ஓடிவந்து நாராயணனை ஓர் கையிலும் அவன் விரோதியை மற்றோர் கையிலும் இறுகப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் ஓர் கூரை வேய்ந்த சிறு குடிசையில் அடைத்து விட்டு, 'சாளி, சாளி' யென்று சந்தோஷத்துடன் வெறிபிடித்தவன்போல் உறக்கக்கூவினான். இவன் குரலைக் கேட்டு யௌவன பரு[illegible] ஓர் பெண் ஓடி வந்தாள். அவள்கறுப்பாய் இருந்தபோதிலும் பார்வைக்கு இலட்சணமாயிருந்தாள். அவளுடைய அகன்ற நெற்றியையும் அழகான சுழிவிழுந்த கன்னங்களையும் மிருதுவான நோக்கத்தையுடைய கரிய விசாலமான கண்களையும் பார்க்கும் ஒருவன் அவள் அதிக புத்திசாலியாயிருக்கவேண்டும் என்று சந்தேகமில்லாமல் நினைப்பான். அவள் கைகள் 'ஆஜானுபாகு' என்றபடி முழந்தாள் வரையில் நீண்டு அழகான அமைப்பு வாய்ந்திருந்தன. அவளுக்காவது நாராயணனைப் பிடித்துவந்த காட்டு மனிதனுக்காவது அரையில் வஸ்திரம் ஒன்றும் கிடையாது. கடவுள் படைத்தபடி நின்ற அந்த ஸ்திரீயை அந்தக்காட்டு மனிதன் பார்த்து 'நல்ல சாப்பாடு கொண்டுவந்து விட்டேன். உனக்குக்கூட ருசியாய் இருக்கும்படியான சாப்பாடு பத்திரமாய்ப் பார்த்துக்கொள்' என்று சொல்லிவிட்டு குபீரெனப்பாய்ந்து வெளியில் ஓடினான்.

(இன்னும் வரும்.)

ஆர். செல்வப்பிள்ளை, பி. ஏ.

* அவ்வித அனுபவங்கள் நம் தேசத்திலுள்ளோர் அறியாதனவல்ல.

ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதம்.

(திராவிட ஆயுள்வேத வைத்தியர் ஒருவரெழுதியது.)

மானிடர்களுக்கு இன்றியமையாதன உடல், பொருள், ஆவி யெனு மூன்று. இம்மூன்றில் உடல்கொண்டே ஏனையவிரண்டும் இயலவேண்டுமதலால், அதைப் பிணியின்றிப் போற்றல் வேண்டும். பிணியின்றிப்போற்றலாவது, அருந்தும் அறுவகைப் பதார்த்தங்களும் விரோதமில்லாததாய்க்குறைதலும், அதிகரித்தலும், காலந்தவறிப் புசித்தலு நீங்கி தீபனத்திற்குப் பொருந்திய அளவு புசித்து, இரவில் நித்திரைகொண்டு, அதிகாலையிலெழுந்து, பகல் உறக்கம் நீக்கி இருத்தலாம் என்ன,

"அருந்து மாறிரதமு மவிரோதமதாய்
அஃக லலர்த லகாலவூண் தவிர்ந்தழற்கு
உற்றளவு அருந்தி யுறங்கி"

என்றார் தேரையாரியர். இது தவறில் வாத பித்த சிலேஷ்மங் தொந்தமுற்ற பல்பிணிகள் வந்து சாரும். சார்தலும் அவைகளைப் போக்கும் உபாயங்களையாவது, அல்லது போக்குவோர்களையாவது தேர்ந்தறிதல் கடமை. இப்படி சார்தலுற்ற பிணிகளைப் போக்குமுபாயங்கள் ஆதியில் வடமொழியில் இருத்தலால், சிலர்க் கல்லது, இயம்பலும் படித்தலும், கருப்பொருள் உணர்தலும், [illegible] ரோகிப்பதும், பெரும்பாலோர்க்குப்பயன்படாதெனத் திருவுளங்கொண்டு, முற்று பேரின்ப வடிவாய் அமர்ந்துறையுஞ் சிவபெருமான் தன் அருட்சத்தியாகிய சிவபிராட்டியாருக்குத் தென்மொழியில் உபதேசித்தருளினர். பிராட்டியார் திருநந்தி தேவர்க்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அச்சுவனி தேவர்களுக்கும், தேவர்கள் அகத்திய முனிவருக்கும், அகத்தியர் புலத்தியப் பிரம்மரிஷிக்கும், பிரமரிஷி தன்மசௌமியருக்கும், சௌம்மியர் தேரையாரியர்க்கும் உபதேசித்தனர். இவர்கள் ஒவ்வொருவரும்,தாங்கள் உபதேசக் கிரமமாய் ஓதியுணர்ந்தவைகளைப் பன்னாள் அனுபவமுற்றபின்னர், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவாளர்கள் உய்யும் பொருட்டுப் புத்தகங்கள் பல செய்தருளினர். இவைகள் எல்லாம், மானிடரை வாதிக்கும் பிணிகள் 4,448 என்று கூறி, அவைகளில் உள்ள பெரும் பிணிகளுடன் தொந்திக்குஞ் சிறுபிணிகளையும் அவைகள் பிடிக்கும் பருவங்களையும், சாத்திய வசாத்தியக் குறிகளையும், இக்குறிகளைக் கண்டறிதற்கு ஏதுவாகிய நாடி முதலிய அஷ்டவிதப் பரீக்ஷைகளையுமோதிப், பின்னர்அப்பிணிகளைப் போக்கும் ஔஷதிகளையுங் கூறியிருக்கின்றன. இத்தகைச் சீர்மையுற்ற கிரந்தங்களை "ஆயுள் வேதம்" என்று சிறப்பித்துக் கூறுவார்கள். இவைகளின் உண்மைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரியோர்களை மருத்துவக்கலைஞர் என்று பல்லோரும் கொண்டாடுவார்கள். இத்துணைப் புகழ்பெற்ற மருத்துவர்கள் சில வருஷங்களுக்கு முன்னும், பல்லோரால் ஆதரிக்கப்பெற்று இருந்தார்கள். இக்காலத்தில் ஆதரிப்போர் அற்றார்கள். அறவே, உண்மை மருத்துவச் சிகாமணிகள் ஒழிந்தார்கள். ஒழிய, ஆயுள்வேதத்தின் பெருமைகளும், நூல்களும் குன்றற் கிடமாயின. இழந்ததுபோக, இருக்கும் நூல்களையோதுந் திறமையாளர்களும் தற்காலத்திலில்லை. இது நிற்க, முயற்சியில் சோர்வடையா ஆங்கிலேயச் சீமான்கள் நம்தேசத்திற்கு வந்து, தங்கள் மருத்துவத்தைப் பிரபலப்படுத்தி நம்மவர்க்கு உண்மை மருத்துவக் கலைகள் இல்லையென்று நகைக்கிறார்கள். இதுவும் உண்மையே. எங்ஙனமெனில், போலி மருத்துவர்களும் அவர்களுக்கேற்ற மருத்துவக் கலைகளும் வெளிவந்திருக்கின்றன. [illegible] போலிமருத்துவக் கலைகள் உண்டாதற்குக் காரணமென்னெனில், [illegible]ராஜன் புலவர் திலகராகிய புகழேந்திப் புலவரை நம் காலத்திற் சிறையிட்டான். இத்தகைத் துன்பத்திற்காளான புலவர், தன் வயிறு வளர்ப்பான், தண்ணீர்கொண்டுபோகும் பெண்கள் செவிக்கினிமையான பல கவிகளைச் சொல்லிக்கொண்

டிருப்பார். பெண்கள் கேட்டு ஆனந்தமுற்று சொல்லிய கவிகளை ஓலைகளில் எழுதிவைக்கும் ஆவலுற்றவர்களாய்ப் புலவர்பாலணுகி, அவர்க்கு வேண்டு உபசாரங்கள்செய்து, தானியங்கள் முதலியன கொடுத்து ஆதரித்து வந்தார்கள். இப்பெண்களுக்காகவே, இப்பொழுதும் கடைகளில் விலை சரசமாக விற்கும் 'கோவலன் கதை,' 'அல்லிஅரசாணிமாலை' முதலியவைகளைப்புலவர் அருளிச்செய்தனர். இவர்பெருமை இவ்வண்ணமாய் உலகப் பிரசித்தியாக, அநேக மூடசிகாமணிகள், புலவர்பால் வந்து, வைத்தியம் ஜாலம் முதலியவைகளைக் கேட்கத் தலைப்பட்டார்கள். புலவர் இவர்கள் வேண்டுதலுக்கிசைந்து, தான் பாண்டியன் பால் இருக்கும்போது பல்லோரால் கேள்விப்பட்டவைகளில் உண்மையுற்ற வைகளையும், இன்னும் அநேக மவைகளையும் புனைந்து, கல்லாதார்க்கும் எளிதிற் புலப்படும்படியாகச் செந்துறை யாப்பால் தன்சீடர்கள் நம்பும்வண்ணம், ஆயுள்வேதஆசிரியர்களாகிய நந்தி, அகத்தியர், தேரையர்,முதலியோர் பெயர்களை இட்டுப் பல கிரந்தங்களைக் கூறினர். புலவர் கூறிய இத்தன்மையப் புத்தகங்களை யவர்கள் மனனஞ் செய்தும், இவை போன்ற பல புத்தகங்களைத் தாங்கள் இயற்றியும்வந்தார்கள். இவைகளைத்தற்காலத்தில், சென்னையில் தெருக்கள்தோறும் ஸ்தாபித்திருக்கும் அச்சியந்திரசாலையார்கள் பதிப்பித்துக் குறைந்தவிலைக்கு எழுத்துமுதற் பலபிழைகள் மலிந்துள்ளதாய் விற்கிறார்கள். கற்றறியாப் பலர்கள் இவைகளை வாங்கி, அவைகளிற் குறித்த சிகிச்சைகளைச் செய்து, வீணே வருகிறார்கள். இவர்கள் செய்வதும் தங்கள் வயிற்றுப் பாட்டிற்கேயல்லது வேறெதற்குமின்று.

(இன்னும் வரும்.)

புருஷன் மனைவி சம்வாதம்.

மனைவி.—இதென்ன! தர்மாம்பாள் கல்லியாணவிஷயத்தைப்பற்றிப் பேசாமல் இருக்கிறீர்களே. வயது பத்து ஆய்விட்டது. இவளுடைய வயசுப் பெண்களுக்கெல்லாம் கல்லியாணம் ஆய்விட்டதே.

புருஷன்.—இதற்குள் என்ன அவஸரம்! மெள்ள ஆகட்டுமே.

மனைவி.—இப்பொழுதே வளர்ந்துவிட்டாள். இன்னொரு வருஷத்துக்கெல்லாம் குதிர்போல் ஆவாள். கன்னியாப்புடவை கொஞ்சங்கூட நன்றாயிராது.

புருஷன்.—வளர்வது நல்லதுதானே.

மனைவி.—இவ்வளவு பெரிய பெண்ணைக் கல்லியாணஞ் செய்யாமல் நிறுத்தலாமா.

புருஷன்.—எத்தனையோ பேர்கள் பதினாறு பதினைந்து வயசுப்பெண்களைக் கலியாணமில்லாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்களே. அவர்களுக்கு என்ன வந்துவிட்டது, யார் என்ன சொல்லுகிறார்கள்.

மனைவி.—சொல்லத்தான் சொல்லுகிறார்கள். எதுவும் காலாகாலத்திலே நடந்தால்தான் நன்றாயிருக்கும். காலந்தப்பினால்சங்கடந்தான். மேலைத்தெரு பார்வதிபெண்ணுக்கு-13 - நிரம்பி-14-வது வயது: அகமுடையான் அகப்படவில்லை. பெண்ணை வைத்துக்கொண்டு தவிக்கிறாள்.

புருஷன்.—தவிப்பானேன், லோகத்தில் அவளுக்கு அகமுடையான் அகப்படாமல் போய்விடுமோ?

மனைவி.—பெரியவளாகிவிட்டால் என்ன பண்ணுகிறது. பெண்ணுக்குச் சூத்திரஜன்மம் வந்துவிடும். தாய்தந்தையர்களுக்குப் பாவமும் பழியும் சம்பவிக்கும்.

புருஷன்.—சாஸ்திரங்களில் அப்படி ஒன்றுஞ் சொல்லவில்லையே.

மனைவி.—லோகவழக்கந்தான் நமக்குச் சாஸ்திரம். ஊருக்கொருவழி, நமக்கொருவழி சரியன்று. சீக்கிரத்தில் நல்லபிள்ளையாய் விசாரியுங்கள். இப்பொழுது முதல் விஜாரித்தால்தான் முன்பின் சுமாராய் அகப்படும்.

புருஷன்.—இன்னம் இரண்டு மூன்று வருஷம் செல்லட்டும். இப்போது கலியாணத்தைப் பற்றிப் பேசமாட்டேன்.

மனைவி.—அதற்குள் நல்ல சிறுபிள்ளைகளுக்கெல்லாம் கல்லியாணம் ஆகிவிடும். நம்முடைய பெண்ணை எங்கேயாகிலும் இளையாளாகக்கொண்டு தள்ளவேணும். கிழவனுக்கோ, பெண் [illegible], எங்கேயாகிலும், கிணற்றில் தள்ளுவதற்குப் பதிலாகத் தள்ளவேண்டியிருக்கும்.

புருஷன்.—அப்படிக்கெல்லாம் நமக்கு நேரிடாது. படித்தவனாகச் சிறுபிள்ளை அகப்படுவான். நீ பயப்படாதே.

மனைவி.—நீங்கள் சொல்லுகிறீர்கள், ஊரில் பிள்ளைகளுக்குப்படுகிறபாடு உங்களுக்குத்தெரியாது.

சிவகாமியையகூ-வருஷம்அருமையாகவளர்த்து கிளியை வளர்த்துப் பூனைக்கு இரை கொடுக்கிறாப்போல், 50-வயசுக் கிழவனுக்கு நகைக்கு ஆசைப்பட்டுத் தள்ளினார்கள். இப்போது சந்தியில்நிற்கிறது. நகையிருந்தென்ன, பணம் இருந்தென்ன. அதினுடையஜென்மம் பாழாய்ப்போய்விட்டது, லட்சுமி பெண் அபிராமிக்கு தேடித்தேடியும் ஆம்படையான் அகப்படாமல் கடைசியில் பெண்மேல் பெண்ணாகக் கொடுத்தாள். மூத்தாளுக்கும் இளையாளுக்கும் ஒற்றுமையில்லாமல் பாரத யுத்தம் நடக்கிறது. ஊர் சிரிப்பாகச் சிரிக்கிறது. மூத்தாள் இவளை வாழ விடுகிறதில்லையாம்.

புருஷன்.—இதெல்லாம்எனக்குத்தெரியாதா என்ன, ஊர்வம்பெல்லாம் எனக்கேன். இப்போது குட்டிக்குக் கலியாணம் செய்யப்போகிறதில்லை.

மனைவி.—செய்தால் என்ன, தாமஸம் ஏன் செய்யவேணும், அவளுக்கு வயதாக வில்லையா.

புருஷன்.—பாலியவிவாகம் கிரம்பக்கெடுதல்.

மனைவி.—பின்னை எப்போது விவாகஞ்செய்கிறது, முப்பது வயதுக்கா.

புருஷன்.—அப்படித்தான் செய்தாலென்ன? மெள்ள ஆகட்டுமே.

மனைவி.—வெள்ளைக்காரச்சி மாதிரி, அறுபது வயதுக்குக்கூடச் செய்யலாம், லோகம் நம்மைத் தலைமேல் வைத்துக்கொண்டு கொண்டாடும்! நன்றாயிருக்கு! நம்ஜாதியில் அப்படிச்செய்யலாமோ?

புருஷன்.—பெண்ணுக்குத் புத்திவந்து பர்த்தாவை வரிக்கிறதற்குத் தகுந்த வயசு வந்த பிறகு தான் கேட்டு விவாகம் பண்ணி வைக்கலாம். அதற்குள் செய்வது பிசகு.

மனைவி.—இப்போது ஊரிலெல்லாம் அப்படித் தான் செய்கிறார்களோ. பெண் அதற்குள் பெரிதாகிவிட்டால் என்ன பண்ணுகிறது.

புருஷன்.—பெரியவளானால் ஆகட்டுமே, வீட்டிலேயே இருக்கிறாள்.

மனைவி.—நன்றாயிருக்கிறது. லோகத்தார் பெரிதானபெண்ணைக் கலியாண மில்லாமல் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறா மென்று பரிகாசம் பண்ணுவார்களே. பெரியபெண்ணை யார்கட்டிமேய்க்கிறது. அபவாதம் வந்தால் என்ன செய்கிறது.ஓர் தாலியைக் கட்டிவிட்டால், மாப்பிள்ளை எல்லா பாரத்தையும் ஒப்புக்கொண்டு போகிறான்.

புருஷன்.—நம்மைமீறி மோசம் நேரிடுமோ, எவ்வளவு பேர்கள் ருதுசாந்தி பண்ணாமல், வீட்டில் பெண்ணை வைத்துக்கொண் டிருக்கிறார்கள். எவ்வளவு பாலிய விதவைகள் வீட்டில் இருக்கிறார்கள். எவ்வளவுபேர்கள் புருஷனைப் பிரிந்து தனியே இருக்கிறார்கள். அப்படி யிருக்கக் கலியாணம் செய்யாத சிறிய பெண் வீட்டில் இருந்தால் கெடுதி என்ன?

மனைவி.—இவைதான் தீராப்பொறி. அவாள்அவாள் விதியைத்தொலைக்க வேண்டி யிருக்கிறது. புருஷன் வீட்டில் சுகமாய் வாழுங்காலத்தில், வீட்டில் வைத்துக்கொண்டிருப்பதில் பலனென்ன.

புருஷன்.—வினைத்தெரியாத காலத்தில், பரஸ்பரம் ஸ்திரீபுமான் என்கிற ஞானமில்லாத பருவத்தில், புக்ககத்தில், மாமி, மாமனார் முதலியவர்கள் இடிக்க, புருஷன்பேசாமல் இருக்க என்ன சுகம் கிடைக்கப்போகிறது.

மனைவி.—லோகத்தில் மாமியார் நாத்தனார் இல்லாதவீடு சொற்பம். எப்போதும் அவர்களுக்கு அடங்கிக்குடித்தனம் பண்ணுவது நலம், இரண்டொரு வருஷம் பட்டால் தானே தெரிந்து போகும். விளையும்பயிர் முளையிலே. செடியில் வளையாதது, மரத்தில் வளையுமா? பால்லியத்திலே புக்ககத்துக்குப்போனால், அவளுடைய மாதிரி சீக்கிரம் படியும். வயசுசென்றால் பிறகு வணங்காது.

புருஷன்.—சிறுவயதில் மன உற்சாக மில்லாமல் கடும் வேலையில் பெண்களைப்போட்டால், உடம்பு சொறுங்கிப்போகும்.

மனைவி.—நான் இந்தவீட்டுக்கு வரும்பொழுது கக-வயசு. எல்லாரும் இருந்தார்கள். நான் எல்லாருக்கும் சமைத்துப் போட்டுக்கொண்டு வந்தேன். அதற்கு என்ன இப்போ.

புருஷன்.—எங்கள்வீட்டில் மருமகளுக்கு மெத்த சுகம். அவர்கள் எதைச்சாப்பிட்டாலும் கொட்டினாலும் கேட்கிறதில்லை. எல்லார் வீட்டிலும் இப்படியே இருக்குமோ.

மனைவி.—நான் இங்கே பட்டபாடு கொஞ்சமோ. உங்களிடத்தில் ஒன்றும் சொல்லுகிறதில்லை. ஆயிரம் பாம்பின் கீழ் ஓர் தவக்களை வாழ்கிறாப்போல் நான் வாழ்ந்துகொண்டு வந்தேன். என்னைப் பெரிய நாத்தனார் தேள் கொட்டுகிறாப்போலே கொட்டுவள். ஓர்ப்படி உர்உர் என்று உறுமுவள். [illegible] மாமியார் செருப்பாலே அடிப்பள். கொட்டினால் கொட்டாப்புளியினால் நறுக்குவள். அந்தக்காலத்திலே உங்களுக்கு அவாள் சொல் வேதவாக்கியம். வாயை அசைத்தால் விளக்குமாறு எடுத்துக்கொண்டு வீறுவீர்கள். விண்டால் வில்லங்கம், பேசினால் துன்பம் என்று, என்னசெய்தாலும் பொறுத்துக்கொண்டு தெய்வமே என்று இருந்தேன்.

ஒவ்வொரு சமயத்தில், ஆற்றிலே குளத்திலே விழுந்து பிராணனைவிட்டுவிடுவோமோ என்று கூடத் தோன்றும்.

புருஷன்.—பழங்கதை எல்லாம் இப்போ ஏதுக்கு. பொறுமையில் பூமிதேவிக்குப் பிறகு நீ தான். உன் பெருமையை என்னிடத்தில்தான் கொண்டாடிக்கொள்ளவேணும்.

மனைவி.—என்னைக்கண்டால் பரிகாசந்தான். ஒவ்வொரு ஆங்களில் போய்ப்பார்த்தால் தெரியும். நான்என்ன தலையால்நடந்தாலும் உங்களுக்குத் திருப்தியில்லை. கண்ணைப்பிடுங்கிக்கையில் கொடுத்தாலும் செப்பிடு வித்தையென்று சொல்லுவீர்கள். நான் பெண்பிறந்து யாருக்கு நல்லவள். என் கடன் நான் உழைக்கவேண்டியது. பிடுங்கல் பட ஜென்மம் எடுத்தேன். இதற்குத்தான், நான், "ஏன் ஓமா" என்கிறதில்லை. என் பாபத்தைக்கொட்டிக்க கடைசிகாலத்திலெனக்கு ஓர் பெண் பிறந்ததே. நான் வெறுமே இருந்தாலும் ஊர் வாயை யார் மூடுகிறது. வெளியிலே புறப்பட்டால்பிடுங்கி எடுத்துவிடுகிறார்கள், ஆறுகுளத்துக்கு எப்படிப்போகாமலிருக்கிறது.

புருஷன்.—என்ன சொல்லுகிறார்கள்.

மனைவி.—காலஸ்திதி தெரியாமல் இப்படிக்கு இருக்கிறாயே அம்மா! புருஷனிடத்தில் ஓர் வார்த்தை சொல்லப் போகாதா? அவர் சும்மாவிருந்தாலும் நீ இருக்கலாமா? பெண்களுடைய கஷ்டம் புருஷாளுக்கு என்ன தெரியும். காலத்தில் கன்னிகாதானம் பண்ணினால் ரொம்ப புண்ணியமுண்டு, மெள்ளச் சொல்லிப்பார் என்கிறார்கள்.

புருஷன்.—நமக்குக் கன்னிகாதான பலன்கிடைப்பதற்காக 4-வயதிலேயும், மூன்றுவயதிலேயும் பெண்ணைச் சொள்ளைக்கும் சொத்தைக்கும்கட்டிக் கொடுத்துவிட்டு, சுவரத்தில்போய் விடுகிறதோ, பேதியில் போய்விடுகிறதோ என்று விசாரப்பட என்னால் முடியாது. எனக்கு இஷ்டமில்லை.

மனைவி.—உங்களுக்கு என்ன? நீங்கள் ஓர் தாலியைக் கட்டிவிடுங்கள். அதினுடைய அதிர்ஷ்டம், உள்ளபடி ஆகிறது.

புருஷன்.—இப்போ அப்படியாவது என்ன. இரண்டு மூன்று வருஷம்போகட்டுமே. இந்த அதிர்ஷ்டம் அப்போது வரமாட்டாதோ.

மனைவி.—நான்எது கேட்டாலும்எப்போதும்எதிர்க்கட்சியும் தர்க்கட்சியுந்தான். இன்னம் மூன்று வருஷத்துக்குஇருப்பேனோ, போவேனோ, கலியாணத்தைப்பண்ணிக் கண்ணாலே பார்ப்போமென்றால்இதற்கு இத்தனை ஏச்சும்பேச்சும் என்னத்திற்கு?

புருஷன்.—மற்றைப்பேரெல்லாம் சாசுவதமோ, யாருக்கு எந்த வேளையில் என்னவருமோ என்று யோஜித்து தான் கல்லியாணம் பிறகு ஆகட்டுமென்கிறேன்.

மனைவி.—இன்னம் நாலுவருஷம் கழித்து ஓர்பெரிய தடியனுக்கு கொண்டுதள்ளுங்கள். பூதம் போலமாப்பிள்ளையை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது. நலங்குக்குநகரமாட்டான், ஊர்கோலத்துக்கு எழுந்திருக்கமாட்டான். மாலையிட அவனையார் தூக்குவார்கள். நலங்கிடக்கிட்டயார் நெருங்குவாள். கல்லியாணப்பந்தலில் கேளிக்கையும் விளையாட்டும் கோஷிக்கும்!

புருஷன்.—கேளிக்கையும், விளையாட்டும், நாம்பார்ப்பதற்காக, பெண்ணை ஓர் சிறுவனுக்குக்கட்டிவிடலாமோ. இப்போது இன்னும் தாயின்முலைப்பாலை மறந்துபோகிறதற்கு வயது ஆகவில்லை. அப்படி, ஆம்படையான் வேணுமென்று அலைந்து திரியவுமில்லை. கல்லியாணம் சாசுவதமான விஷயம். மறுபடியும் திருப்பிச்செய்கிற காரியமல்ல. நீர ஆலோஜித்து நடத்தவேணும்; போகட்டுமே.

மனைவி.—லோகத்தில் ஏழுவயதிலும் எட்டு வயதிலும் பெரிய மனுஷாள் எல்லாரும் செய்கிறார்கள். புதுக்கோட்டை திவான் வீட்டிலே இப்போ கல்லியாணம் நடந்தது. பெண்ணுக்கு ஏழு நிரம்பி எட்டாம் வயசு. மயிலாப்பூரில் பெரிய ரிஜிஸ்தர்வீட்டில் நாலு கல்லியாணம் நடந்தது. பெண்களுக்கு பத்து பதினொன்றுக்கு மேல் இல்லை. இவாளெல்லாம் யோஜிக்காமல் தான் செய்கிறார்களோ. அவாத்துப் பெண்களை விட நம்மாத்துப்பெண் என்ன உச்சிதம்.

புருஷன்.—ஊரிலுள்ள வியாபாரங்களெல்லாம் என்னிடத்தில் சொல்லவேண்டாம். புருஷன் வினு வருவதற்குமுன் கல்லியாணஞ் செய்விப்பது கிரமமல்லவென்று எனக்குப்படுகிறது.

மனைவி.—உங்களுக்கு மாத்திரம் இப்படிப் படுவானேன். உங்கள் அண்ணன் தம்பிமார்களெல்லாம இப்போ இருக்கவில்லையோ, லோகவழக்கப்படி.

புருஷன்.—என்மனசாட்சிக்கு விரோதமாய்ச் செய்யமாட்டேன்.

மனைவி.—இந்த இங்கிலீஷ் வாசித்தவர்களுக்கெல்லாம் "மனசாட்சி" என்று ஒன்று தலைப்பட்டது. கோவிலில்லை, குளமில்லை, நல்லநாளில்லை, கெட்டநாளில்லை, சந்திஇல்லை, பூஜை

இல்லை, ஆசாரமில்லை, அனுஷ்டானமில்லை. அவான் பிடித்தது பிடிவாதம்.

புருஷன்.—அப்படி அவர்களுடைய நடவடிக்கை என்ன கெட்டுப்போயிருக்கிறது, பொய்சொல்லுகிறார்களா, திருடுகிறார்களா, துன்மார்க்கம் செய்கிறார்களா.

மனைவி.—மற்றைப்பேர் மாத்திரம் இப்படி எல்லாம் செய்துகொண் டிருக்கிறார்களாக்கும். படித்தவர்களெல்லாரும் சுத்தமாய் இருக்கிறார்களாக்கும். இக்காலத்தில் எல்லாம் ஒன்றாய்த்தான் இருக்கிறது. ஜென்மாந்திர பாபபுண்ணியத்தின்படி நடக்கிறது.

புருஷன்.—பெரும்பாலும் படித்தவர்கள் விவேகிகள்தான். ஸ்திரீகளை அடிக்கிறதில்லை, தூஷணமான பேச்சுப்பேசுகிறதில்லை, வீண் பொழுது போக்குகிற தில்லை. லஞ்சம் முதலியவைகள் வாங்குகிறதில்லை.

மனைவி.—இப்படிக்கெல்லாம் இருந்தால், லோகவழக்கத்தையும் ஜாதி ஆசாரத்தையும், விட்டுவிட வேணுமோ.

புருஷன்.—ஆசார அனுஷ்டானம் பிறருக்குத்தீமை விளைவிப்பதாய் இருந்தால், அதை விட்டு விடத்தான் வேணும்.

மனைவி.—இப்போ குழந்தைக்கு கலியாணம் செய்வதில் யாருக்கு என்ன நஷ்டம் எனக்குத்தெரியவில்லை. கோபித்துக் கொள்ளாமல் சொல்ல வேணும்.

புருஷன்.—சொல்லட்டுமா, கவனித்துகேட்கிறாயா.

மனைவி.—ஆகா.

புருஷன்.—முதலாவ்துபடிப்புக்கெட்டுப்போம். கல்லியாணமானபிறகு, அவளுடைய மாமனார் மாமியார் வேண்டாமென்றால் நிறுத்தவேண்டியிருக்கும்.

மனைவி.—கெட்டுப்போவானேன். ஆத்தில் படிக்கிறாள் ஸ்கூலில்படித்து பாஸ்செய்து உத்தியோகம் பண்ணப் போகிறாளோ? ஆத்தில் இருந்து தெரிந்துகொண்ட மட்டும் குடித்தனப் பெண்ணுக்குப் போதுமே. நாளைக்குக் கலியாணமானால், சமைக்கவும், தூங்கவும்கூடபோது இருக்காது.

புருஷன்.--உத்தியோகத்துக்குத்தான்வாசிக்கிறதோ, படித்தால் புத்தி தீட்சணிய முண்டாகும். விவேகமும், ஞானமும் விர்த்தியாகும். வீட்டுக கணக்குகள், சிலவு சில்லறைகள் பார்க்கலாம். குழந்தைகளுக்கு படிப்பு சொல்லலாம். ஒழிந்த வேளையில் ஊர்வம்பு, அவிசாரி புராணம் கேட்காமல் காலட்சேபம் செய்யலாம். புருஷன் ஊருக்குப் போயிருக்கும் காலத்தில் கடிதம் முதலியன நேரிலெழுதி க்ஷேமத்தை விசாரித்துக் கொள்ளலாம். லோக வர்த்தமானம் பார்த்து அனேக விஷயங்களை அறிந்துகொள்ளலாம், பணத்தினுடைய அருமைதெரியும். நகையிலும் புடைவையிலும் பணத்தைவீணாய் செலவழிக்க மனசு வராது.

மனைவி.—நாங்கள் படிப்பில்லாதிருக்கிறோமே, குடித்தனத்தை என்ன சீர் அழிக்கிறோம். எங்களைவிடப் படித்த பெண்கள் எதில் விசேஷம். முகத்தில் மஞ்சள் பூசுகிறதில்லை, நெற்றியில் பொட்டு வைக்கிறதில்லை. சட்டையைப் போட்டுக்கொண்டு, மினுக்குகிறார்கள். சாணியை கையால் தொடுகிறதில்லை, துரும்பை விரலால் நகத்துகிறதில்லை. மூலைக்கு மூலை சாமான்களை போட்டவிடத்தில் போட்டுவிட்டு கதைப்புஸ்தகத்தை கையில் தாங்கி கால்நீட்டிக்கொண்டு யார்வந்தாலுமில்லை, இருந்தாலுமில்லை உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள்; அவாளுக்கு ஆம்படையான் என்றால்கூட கணிசமில்லை.

(இன்னும் வரும்.)

ஆர். சக்கரவர்த்தி ஐயங்கார், பீ. ஏ.

அநியாய அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்.

மதுரைஜில்லாவில் சிறுகுளம் என்ற ஒருகிராமம் உண்டு. அந்தகிராமத்தின் நடுத்தெருவின் மத்தியில் பெரிய வீடென்று பெயருள்ள ஒரு வீடு இருந்தது. அந்தவீட்டில் கூடத்திற்கு அடுத்த ஓர் அறையில் கீழே ஒரு கோரைப்பாய் விரித்து அதன்மேல் ஒரு திண்டுபோட்டுச்சாய்ந்துகொண்டு ஒருவர்படுத்திருந்தார். அவர் நித்திரைதெளிந்து எழுந்திருந்தவுடன், 'ஆ, சம்போ, சங்கரா' என்று இரண்டுதடவை உரக்கக்கொட்டாவிவிட்டு விட்டு, காலைச்சொரிந்து கொண்டு, 'அடியே அடியே' என்று கூவினார். அப்பொழுது கூடத்தில் இரவிக்கை தைத்துக்கொண்டிருந்த அவர் மனைவி இவர்குரல் காதில்கேட்டவுடன் இரண்டு முறை இருமிவிட்டு மௌனமாய் இருந்தாள்.

அதற்குள்படுத்திருந்த பிராமணர் 'அடியே, உன்னைத்தானடி, அடியே' என்று மறுபடியும் அழைத்தார்.

அதற்கு அந்தஅம்மாள் கோபித்தவள்போல பாவனைசெய்துகொண்டு இங்கே அடியையும் காணோம், நுனியையும் காணோம், அடியாம், அடிக்கவேண்டியதுதான், காசுகொடுத்துச்சந்தையில் வாங்கினாற்போல்தான். இனிமேல், அப்படிச்சொல்லுங்கள், வழிசொல்லுகிறேன்.' என்றுபரிகாசமாய்ச் சொன்னாள்.

அதற்கு அவர், 'சூ, சூ, எவ்வளவடா' என்று சொல்லிவிட்டு, 'துரைமகளானாலும் பாரி உரியவனு

க்கவள் ஊழியக்காரி' என்று சங்கீதம் பாடத் தொடங்கினார்.

அதைக் கேட்ட அம்மாள்: 'உங்களைப்போல் அவன் ஒரு புருஷன் தானே, வேசநாயகம் பிள்ளையாம், கரியாவான். இனி வெள்ளைக் காரச்சிகளைப்போல் ஆரம்பிக்கவேண்டியது தான்; அடியாவதென்ன, அடி! எங்களப்பா இரண்டுகரை வைத்தாண்டார், எங்கள் பாட்டனார் மூன்றுகரை வைத்தாண்டார்; சந்தையில் கொண்டுவந்து தள்ளிவிட்டாப்போல், 'அடி' என்று கூப்பிடுவது என்ன' என்றாள்.

அதற்கு அவர் 'மூன்று கரையாகப் போவானேன், அக்கரை, இக்கரை, குளக்கரை, மயானக்கரை ஒன்று ஆக நாலு இருக்கிறது' என்றார்.

அதற்கு அந்த அம்மாள் 'எங்களுக்கு அதுதான் உண்டு, நீங்களெல்லாம் ஸரபோஜி மஹாராஜா பிள்ளைகள், உங்களுக்கும் எங்களுக்குமா, உங்களுக்கு நாங்கள் அடிமைதான்!' என்றாள்.

அவர் 'அடியேன் செய்த பிழையை தேவரீர் பொருத்தருள வேண்டும் 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராகிற் பொறுப்பது கடனே.' ஓய் ராஜராஜேஸ்வரி கமலாம்பாள், தயவு செய்து கொஞ்சம் தீர்த்தம் சாதிக்க வேண்டும்,' என்று சொல்ல: அம்மாள் 'எங்களகத்தில் தீர்த்தம் கொடுக்கிற வழக்கமில்லை' என்றாள். அவர் 'கொடுத்தால் தான் உனக்குப்பிள்ளை பிறக்கும்பார்' என்றார். அதற்கு அம்மாள், 'ஆ, இருக்கிற பெண்ணை காப்பாற்றினால் போதாதா, பிள்ளையும் குட்டியும் இல்லையென்று இப்பொழுது யார் உங்களிடம் சொன்னார்கள்?' என, ஐயர் 'சொல்லாவிட்டாலும் மனதிற்குள்ளாவது இருக்குமல்லவோ, இப்பொழுது தீர்த்தம் கொண்டுவந்தால், இதற்கு மூன்றாவது மாதத்தில் ஒருபெரிய ஆண்பிள்ளை பிறக்கும்' என்றார். என, அவர் மனைவி: 'மூன்று மாதம் போவானேன். இப்பொழுதே செல்லப்பிள்ளை நீங்கள் இருக்கிறீர்களல்லவோ' என்று சொல்லிவிட்டு உள்ளேபோய் ஒரு தட்டில், தேங்குழல், எள்ளுருண்டை முதலிய பக்ஷணங்களை எடுத்துக்கொண்டு, கையில் பனிபோல் ஜில்ஜிலென்று குளிர்ந்த தீர்த்தமும் கொண்டுவந்து நமது ஐயா படுக்கை அருகில்வைத்து விட்டு 'அப்பா!' என்று அவர்மேல் சாய்ந்துகொண்டாள். உடனே அவர் அவளை இறுகத்தழுவிக்கொண்டு பக்ஷணங்களை கணக்குப்பார்க்கப் புகுந்தார். பாதிசாப்பிட்டானபிறகு, தன்மனைவி பராக்குப்பார்த்திருந்த சமயங்கண்டு அவள் இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டு, 'ஏனடி, நிரம்பப் பெரிய மனுஷியாய்விட்டாயோ? 'அடியே' என்றால் ஸரபோஜி மஹாராஜா பிள்ளை என்று பரிகாசம்பண்ணுகிறாயா என்று கன்னத்தில் மெதுவாய் அடித்தார்; அம்மாள் சிரித்துக்கொண்டு, 'இல்லை, இனிமேல் இல்லை' என்று சொல்லிவிட்டு, 'மரியாதையாய்க் கையை விட்டுவிடுகிறீர்களா! இல்லாவிடில் கூச்சலிடட்டுமா?' என்றாள்; ஐயர், 'கூச்சலிடு, யார்வருகிறார்கள் பார்ப்போம்' என்றார். அம்மாள் 'ஐயோ' என்று மெதுவாகச் சொல்லி கூச்சலாய் இட, ஐயர் மறுபடியும் கன்னத்தில் மெல்ல அடித்துவிட்டு கையை விட்டுவிட்டார். பின் இரண்டு பேருமாய் அதிக சுறுசுறுப்புடன் பக்ஷணங்களைத்தின்றவுடன், அம்மாள் 'இப்படி பக்ஷணம் தின்றுகொண்டிருந்தால் நம்முடைய குட்டி கல்வியாணிக்கு எப்பொழுது கலியாணஞ்செய்கிறது' என்றாள். அதற்கு அவர் ''யாரோ அழகுக்கு அழகுசெய்வார்?'' அவளே கல்வியாணி ஆய்விட்டதே: இனி அவளுக்கு கல்வியாணம் எதற்கு என்றார். அதற்கு அவர் மனைவி 'உலகம் புத்தியற்ற உலகம்,' ஆயிரம் ஐந்நூறு என்று செலவழித்து கல்வியாணங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். சுருக்கமாக 'கல்வியாணி' என்று பெயரை வைத்துவிட்டு இருந்துவிடலாமே, நமக்குத்தெரிந்த இந்தப்பரமரகசியம் ஒருவருக்குந் தெரியவில்லை பாருங்கள்' என்றாள். அவர் 'கல்வியாணி எங்கே கண்ணிலேயே காணோம்' என, 'அந்தக்குழந்தை அடுத்தகத்துப் போயிருந்தாள்' என்று சொல்லிவிட்டு அந்தம்மாள் 'கல்வியாணி' என்றழைத்தாள். அந்தக்குழந்தை 'எங்களண்ணா அழைக்கிறார்கள்' என்று தன் தோழிகளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புஸ்தகமும் கையுமாய் வந்து நின்றாள்.

'ஒரு காரியம், ''புஸ்தகம் ஹஸ்த பூஷணம்'' என்றபடி நமது கல்வியாணி, அண்ணாவைக் காணும்போதெல்லாம் கையில் புஸ்தகமில்லாமல் இருக்கிறதில்லை' என்றார். அதற்கு அந்தக் குழந்தை 'இல்லை, அண்ணா! படித்துக்கொண்டுதானிருந்தேன், மீனாட்சியை வேண்டுமானால் கேளுங்கள் அண்ணா' என்றாள். அதற்கு அவர் அவளைப்பரிசோதனைசெய்யும் பொருட்டு ''ஓரங்கல்படி' என்று ஆடிக்கொண்டிருந்தாயே எனக்குக் கேட்கவில்லையோ'' என, 'இல்லை அண்ணா நிச்சயமாகவாசித்துக்கொண்டு தான் இருந்தேன்' என்றாள். அவர் புஸ்தகத்தை அப்படியே கொடுவென்றுவாங்கி, 'அதுதான் நல்ல பாட்டுகளாய்த்தெரிந்தெடுத்து உரை உடன்சேர்த்துச் செய்த கம்பராமாயணச்செய்யுள் திரட்டாயிருக்கக்கண்டு கடைசியில் எந்த இடத்தில் நிறுத்தினாய்?' என்று கேட்க, கல்வியாணி, 'சூர்ப்பநகை இராவணனிடத்தில்போய் முறையிட்டுப் போர்மூட்டுகிற இடம்' என்று சொன்னாள். உடனே ஐயா தன்மனைவியைப் பார்த்து ஸ்திரீகள்தான் உலகத்தில் கலகத்திற்கெல்லாம் காரணம். சீதை யில்லாவிட்டால் இராமாயணம் ஏதென்றுசொல்ல, மனைவி: 'ஆமாம் ஸ்திரீகள் பேரில் ஆசைவைத்துப் புருஷர்கள் கெட்டலைந்தால் அதற்கு ஸ்திரீகள்தான் காரணம்; இராவணன் கெட்டது சீதையினாலேயோ, அல்லது தன்கொழுப்பினாலேயோ', என்றாள். அதற்குஅவர்: 'அதுபோகட்டும் இன்னொருவிசேஷம் பார். இராமாயணப் போருக்கு முதல் முதல் காரணமாய் இருந்ததும்பெண், அதை நடுவில்நின்று மூட்டிவிட்டதும் பெண் (சூர்ப்பநகை) இல்லையா? இதிலேதான் வால்மீகியின் சாமர்த்தியம் முக்கியமாய்விளங்குகிறது. நாரதர்கலகப்பிரியர் என்றுசொல்வது வழக்கம்; ஆனால் நாரதர்கூட இவ்வளவுபெரிய யுத்தம் உண்டுபண்ணினதில்லை. இவ்வளவு ஜாலமும் மோசமும் அவர் கனவிலும் கண்டறியார். தான் யாரிடத்தில் போய் சண்டை மூட்டுகிறாரோ அவர்களுக்கு சூர்ப்பனகை இராவணனுக்கு உண்டு பண்ணின அவ்வளவுகேடு செய்வதில்லை. பத்து நாரதர் சேர்த்தால் ஒரு சூர்ப்பநகை ஆகாது' என்றார். அதற்கு அவர் மனைவி 'அப்படியே இருக்கட்டும். உலகத்தில் புருஷர்கள் எல்லாம் இராவணனையும் கும்பகர்ணனையும் போலிருந்தால் ஸ்திரீகள் எல்லாம் சூர்ப்பநகையாக இருக்கட்டுமே!' என்றாள். ஐயர் மேல்சமாதானம் ஒன்றும் சொல்லத் தோன்றாததினால், குழந்தை கலியாணியைப் பார்த்து: 'உனக்கு இராமனைப்போல் புருஷன் வேண்டுமோ, இலட்சுமணனைப்போல் வேண்டுமோ' என்றார். கலியாணி வெட்கத்துடன் தலைகுனிந்து மௌனமாயிருந்தாள். அப்பொழுது அவர் 'இராமன் கறுப்பு, இலட்சுமணன் சிவப்பு, இராமன் அப்பாவி அவனுக்கு அழத்தான் தெரியும். இலட்சுமணன் நல்ல தீரன்; பார், இராமன் 'காட்டுக்குப்போ' என்றதற்கு முன் புறப்பட்டு விட்டான். இலட்சுமணனோ தைரியமாய் எல்லாரையும் கொன்றுவிடுகிறேன் என்றான். இராமனுக்கு இலட்சுமணன் எவ்வளவோ திறம். எல்லாவற்றையும் யோசித்து சீக்கிரம் பதில்சொல். நான் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்' என்று பரிகாசம் செய்தார்.

கலியாணி 'என்ன அண்ணா! இதற்குத்தான்கூப்பிட்டீர்களாக்கும்! மீனாட்சி கூப்பிடுகிறாள், நான் போகிறேன்' என்று புறப்பட, உடனே ஐயர் 'இதாடிகுட்டி நீ இராமனையும் கலியாணம் செய்துகொள்ளவேண்டாம், இலட்சுமணனையும் கலியாணம் செய்துகொள்ள வேண்டாம், அவர்கள் இருவர்களுக்கும் கலியாணம் ஆய்விட்டது. அதற்காக நீஏன்—' என்று சொல்லி முடிப்பதற்கு முன், 'முத்துஸாமி' 'முத்துஸாமி' என்று வாசல்கதவை யாரோ தட்ட, முத்துஸாமிஅய்யர் ராமண்ணா வாத்தியார் வந்திருக்கிறார், நீங்கள் உள்ளே போங்கள் என்று சொல்லிவிட்டு கதவைத்திறந்தார்.

(இன்னும் வரும்.)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி.ஏ.

சிறுவர்க்கான ஜாலவினோதங்கள்.

7. கண்ணுக்குப்புலப்படா நாணயத்தைப் புலப்படச்செய்யும் வினோதம்.

ஓர் வெறுங் கோப்பையில் கால் அணாவைப் போட்டு அதை ஒரு மேசையின்மீது வைத்து மேசைக்கு சற்றுதூரத்தில் சென்று கோப்பையின் மேலோரம் கோப்பையிலிருக்கும் நாணயத்தை மாத்திரம் முழுமையும் மறைக்கிறதாகத் தோன்றும் அன்னிலையில் கண்ணை அசைவறநிறுத்தி எவனையாவது கோப்பையிலிருக்கும் அணாவைக் கிஞ்சிற்றும் அசைக்காமல் மெதுவாக ஜலம் வார்க்கச்செய்தால், கண்ணுக்கு முன் புலப்படாதிருந்த நாணயம் இப்பொழுது தோன்றும்.

8. டம்ளரில் தோன்றும் மாய நாணயம்.

அலங்காரத்தின் பொருட்டு சுற்றி பட்டை பட்டையாய் வெட்டப்படாததும், சாதாரணமானதும் அடியைக்காட்டிலும் வாய்அகன்றுள்ளதுமான ஒரு வெள்ளைக்கண்ணாடி டம்ளரில் பாதி சலம் வார்த்து அதில் ஒரு காலணாவைப்போட்டு, டம்ளரின் வாயை ஒரு அட்டையால் மூடி, ஜலம் கொட்டாதபடி ஜாக்கிரதையாய் அதைத்தலை கீழாகக்கவிழ்த்து மேஜையின்மேல் வைத்து டம்ளரின் மேற்பக்கமாய் அட்டையைப் பார்ப்போமாகில் அதில் நாம் வைத்த காலணாவும் அதுவுமன்றி அரை அணா அவ்வளவு பெரிதான இன்னொரு நாணயமும் பக்கத்திலிருப்பதாகத்தோன்றும். இவ்வேடிக்கையை நூதனமாய்க்கண்டவன் டம்ளரில் தோன்றும் இரண்டுநாணயமும் நிசமானதென்றே முற்றும் உண்மையாய் நம்புவன். அவனுக்கு உண்மையைக் காண்பிக்க, பிரத்தியக்ஷமாய் கண்ணால்கண்டது ஆரோபமாய் இருந்து விட்டதே என்று ஓர் வித ஆச்சரியமும் சந்தோஷமுமடைவன்.

9. பிரபை காலலாரோபங்கள்.
(Illusions of Irradiation)

1, காலங்குலம் மத்தியரேகையுள்ள வட்டமான ஓர் கறுப்பு கடிதத்தை ஒரு விசாலமான வெள்ளைக் காகிதத்தின்மீதும், அதே அளவுள்ள ஓர் வெண்மையான கடிதத்தை ஒரு விசாலமான கறுப்புக்காகிதத்தின்மீதும் வைத்து, இரண்டு வட்டக்கடிதங்களையும் ஒரு நிலையினின்று பார்ப்போமானால் கறுப்பு காகிதத்தின் மீதிருக்கும் வெண்மைக்கடித சக்கரம் மற்றதைவிட சற்று பெரிதாகத்தோன்றும்.

2. ஒரு குண்டூசியை வலது கண்ணிற்கு நேராக அருகாமையில் பிடித்து, இடது கண்ணை மூடிக்கொண்டு, கவனமாக 30-விநாடிநேரம் குண்டூசியின்தலை

யைப் பார்த்துக்கொண்டிருக்குங்கால், பக்கத்திலிருக்கும் ஓர் மேஜையின்மீது பரப்பின பச்சைநிற வஸ்திரத்தின்மீது வைத்த எவ்விதவஸ்துவும் மங்கலாய்த்தோன்றும். இப்பொழுது மூடின கண்ணைத் திறக்காமல் பச்சை வஸ்திரத்தின் மீதிருக்கும் வஸ்துவை நோக்கின் சில விநாடிநேரம் அது மாயமாய் மறைந்து விட்டாற்போல் தோன்றும். இவ்வண்ணமே குண்டூசியின் முனையைக் கவனமாய்ப் பார்த்துவிட்டு கறுப்புக்காகிதம் அல்லது கறுப்பு வஸ்திரத்தின் மேலிருக்கும் ஒரு வெண்மையான வஸ்துவைப் பார்த்தால் மேற்சொன்ன விதமாகத்தோற்றம் தோன்றும்.

நாம் ஒருவஸ்துவைப் பார்த்துக்கொண்டேயிருக்கும்பொழுது நம்மனம் அதிக ஆழமான ஆராய்ச்சியில் வீழ்ந்து விட்டால், நமது கண்கள் திறந்துகொண்டிருந்த போதிலும் எதிரிலிருக்கும் எப்பொருள்களும் நமக்குத் தோன்றாமற் போகிறது.

10. ஊசி அஸ்திரங்கள்.

ஒருகதவுக் கெதிரில் சற்றுதூரத்தில்நின்று அதின் பக்கமாய் ஒரு சாதாரண ஊசியை எடுத்து எறிய, அது கதவின் பலகையில் பட்டு அதில் குத்திக்கொள்ளாமல் கீழேவிழுந்து விடும்: ஆனால் ஊசியின் காதில் ஒருதுண்டு நூலைக்கோத்து எறிய தப்பாமல் மரத்தில் அம்புபோல் பாயும்.

11. சுலபமாய் எவரும் செய்துகொள்ளத் தக்க பூதக்கண்ணாடிகள்.

பிளாடினம் (Platinum) என்னும் ஓர்விதஉலோகத்தால் செய்யப்பட்ட அதிக மெல்லிய கம்பியை ஒரு துடைப்பக்குச்சி கனமுள்ள இரும்பு அல்லது செம்பு கம்பியின்மேல் ஒரு சுற்றுசுற்றி அதைக் கம்பியினின்றும் கழட்டி அதில் அமைந்திருக்கும் சிறு மோதிர வடிவான சந்தில், சுத்தமான வெள்ளைக் கண்ணாடிப் பொடிகளை வைத்து அசையாமல்(spirit lamp) ஸ்பிரிட் என்னும் ஓர் திரவம் விட்டு எரியும் விளக்கில் அல்லது கொல்லன் உலையில் பிடிக்க கண்ணாடி உருகி கம்பியின் மோதிரத்தில் சிறு நீர்த்துளிபோல் திரட்சியாய் நின்றுவிடும்.

இதை உபயோகித்துப் பார்ப்பதற்கு ஒரு கண்ணாடித்துண்டில் கால்துளி ஜலம்விட்டு அதில் எறும்பு, கொசு முதலான சிறு ஜந்துக்களைவிட்டு, ஆகாயம் அல்லது விளக்கு பக்கமாய் பிடித்துக்கொண்டு அதற்கிப்பால் அரை நூல்தூரத்தில் மேற்செய்த பூதகண்ணாடியைப் பிடித்து அதின்மூலமாய்ப் பார்க்க ஜெந்துக்கள் அதிக பெரிதாய்த் தோன்றும்.

இன்னொருவிதம்.—அரைநூல் கனமுள்ள ஒரு இலேசான அச்சபித்தளைத்தகட்டில் குண்டூசி நுழையத்தக்க அவ்வளவு சிறுதுவாரம் செய்து, அத்துவாரத்தில்அசையாமல் ஒரு துளி ஜலம்விட அது உருண்டைவடிவாய் நின்றுவிடும். இந்தஜலபூதக்கண்ணாடியைப்பரீக்ஷிக்கமேற்சொன்ன விதமாய்கண்ணாடித்துண்டில் ஜலம்விட்டு அதில்கொசு முதலான சிறுஜெந்துக்களைப் போட்டுப் பார்க்கினும் பார்க்கலாம்; அல்லது, ஓர் துடைப்பத்தை அழுகினஜலத்தில் துவைத்தெடுக்க துடைப்பத்தின் முனையில் நிற்கும் ஜலத்துளியை இப்பூத கண்ணாடியின் மூலமாய் சற்றுதூரத்திலிருக்கும் விளக்கின் பக்கமாய்ப் பார்க்க அழுகினநீரிலிருக்கும் எண்ணிறந்த அணுக்கிருமிகள் தோன்றும். துடைப்பத்திலிருக்கும் ஜலத்துளியை தகட்டுக்கு வெகு அருகாமையில் கொண்டுவரின் இதிலிருக்கும் நீர்த்துளியோடு அதுவுங் கலந்து தகட்டிலிருக்கும் நீர்த்துளியின் திரட்சியை அழித்து அப்பிரயோசன மாக்கிவிடும். ஆதலின் துடைப்ப ஜலத்துளியை வெகு சாக்கிரதையாய் ஜலப்பூதக் கண்ணாடியின் பின்னால் பிடித்திருக்க வேண்டிய தவசியம்.

12. குண்டூசி ஆரோபம்.

நான்கு அங்குலம் சதுரமுள்ள ஒரு மெல்லிய காகித அட்டையில் ஊசித்துவாரம் செய்து, அவ்வட்டையை கண்ணிற்கு அரை அங்குலம் தூரத்தில் பிடித்துக்கொண்டு, கண்ணிற்கும் அட்டைத்துவாரத்திற்கும்மத்தியில் ஒருகுண்டூசியை நேராகப் பிடித்து துவாரத்தின் மூலமாக ஆகாயத்தைப்பார்ப்போமாயின் வெகு தலைதூரத்தில் ஆகாயத்தில் ஒரு பிர்மாண்டமான ஒரு குண்டூசி தலைகீழாக இருப்பதாய்த் தோன்றும்.

13. இருட்டறையில் பேய்கள் காண்பிக்க.

துப்பாக்கி மருந்தில் கொஞ்சம் பிசின் ஜலம் கலந்து இவற்றால் ஓர் இருட்டறையின் சுவரில் பயங்கரமான பிசாசு உருவத்தை எழுதி காய்ந்தபிறகு வேடிக்கை பார்ப்பவர்களை சுவரின் எதிரே தூரத்தில் நிற்கச்செய்து, நெருப்புக்குச்சியால் அவ்வுருவத்தின் கோடுகளில் எங்கேயாகிலும் பற்றவைக்க உருவமுழுதும் சடுதியில்பற்றி எதிரிலிருக்கும் ஜனங்களுக்கு மை உருவம் திடீலெனத் தோன்றி மறைந்துவிடும். இக்காட்சியைக் காண்பிக்க உருவும் எழுதுவதில் அதன் கோடுகளெல்லாம் ஒன்றோடொன்று கலக்கத்தக்கதாக எழுதவும்.

14. ஜால இங்க்.

1.—ஆக்ஸாலிக் திராவகத்தில் (Oxalic acid) ஆக்ஸைட் ஆப் கோபால்ட் (Oxide of cobalt) என்னும் மருந்தைக்கலக்கி அதில் கொஞ்சம் பொட்டிலுப்பைப் போட்டு இந்த இங்கியில் பேனாவைத் தோய்த்து எழுத எழுத்து ஒன்றும் தோன்றாது. ஆனால் எழுதினகாகிதத்தை அக்கினி அருகில் சூடுபடக் காண்பித்தால் எழுத்துகள் ரோஜாப்பூ வர்ணமாய்த்தோன்றும். ஆயினும் காகிதம் குளிரக் குளிர எழுத்து மறைந்துவிடும்.

2.—மயில் துத்தமும்,மூயுரியேட் ஆப் அம்மோனியாவும் (Muriate of Ammonia) சமனிடை எடுத்து ஜலத்தில் கலக்கி எழுத, எழுத்து ஒன்றும் தெரியாது. ஆனால் எழுதின காகிதத்தை அக்கினி அருகில் சூடுபட காண்பிக்க அக்ஷரங்கள் மஞ்சள் வர்ணமாய்த் தோன்றும். ஆயினும் காகிதம் குளிரக் குளிர எழுத்து மறைந்துவிடும்.

3.—நைட்ரேட் ஆப் பிஸ்மத்தைச் (Nitrate of Bismuth) சலத்தில் கலக்கி எழுத எழுத்து உலர் திறவரையிலும் தோன்றும், பின்பு மறைந்துவிடும். காகிதத்தைச் சலத்தில் துவைக்க எழுதின எழுத்துகள் மறுபடியும் தோன்றும்.

4.—பச்சை நிறமுடைய (Muriate of cobalt) முயுரியேட் ஆப் கோபால்டை ஜலத்தில் கலக்கி எழுத காகிதத்தில் ஒன்றும் தெரியாது. ஆனால் காகிதத்தை வெயிலில் அல்லது நெருப்பினெதிரில் சற்று சூடுண்டாகும்படி பிடிக்க மிகவும் பிரகாசமான பச்சைவர்ணமாய் எழுத்துகள் தோன்றும். காகிதம் குளிரக் குளிர எழுத்துகள் மறைந்துவிடும்.

5.—பிரஷியேட் ஆப் பொட்டாஷ்(Prussiate of Potash) என்னும் மருந்தில் மூன்று கடுகளவினதாக எடுத்து ஜலத்தில் கரைத்து காகிதத்திலெழுத ஒன்றும் தெரியாது. ஆனால் சிறிது அன்னபேதி கரைத்திருக்கும் ஜலத்தை காகிதத்தின்மேல் தடவ எழுத்துக்கள் திடீரென நீலநிறத்தை உடையதாய்த் தோன்றும்.

6.—அன்னபேதி கரைத்த சலத்தால் காகிதத்திலெழுதி உலரவைக்க எழுத்துகள் ஒன்றும் தோன்றாது. ஆனால் கடுக்காய்க்கொட்டை ஊறின சலத்தைஅக்காகிதத்தின்மேல் தடவ, எழுத்துகள் திடீரெனக்கறுப்பு வர்ணமுடையதாய்த் தோன்றும்.

7.—மயில்துத்தம் கரைத்தசலத்தால் காகிதத்தில் எழுத, எழுத்துகளொன்றும் தோன்றா. ஆனால் அம்மோனியா (ammonia)என்னும் திராவகத்தை மேல் தடவ, எழுதின எழுத்துக்கள் நீலநிறமுடையதாய்த் தோன்றிக் கொஞ்சநேரத்திற்குப் பின்பு மறைந்துவிடும். மறுபடியும் திராவகத்தைத் தடவ மறுபடியும் தோன்றும்.

8. அதிகம் நீர்கலந்த கந்தகதிராவகத்தால் காகிதத்திலெழுத ஒன்றும் தெரியாது. எழுதின காகிதத்தை அக்கினி எதிரில்பிடிக்க எழுத்துகள் கறுப்பு நிறமாய்த் தோன்றும்.

9.—சாதாரணக் கஞ்சிநீரில் பேனாவைத் தோய்த்தெழுத, எழுத்து ஒன்றும் தெரியாது. ஆனால் ஒரு புட்டி சலத்தில் ஐந்தாறுதுளி டிங்க்சர் ஆப் அயோடின் (Tincture of Iodine)என்னும் திராவகம்விட்டு இதில் மை காகிதத்தை துவைத்தெடுக்க எழுத்துகள் நீலவர்ணமாய்த் தோன்றும்.

10.—வெங்காயம் வெள்ளைப்பூண்டு இவைகளில் யாதாவதொன்றைக் கசக்கிப் பிழிந்து அச்சாற்றில் பேனாவைத் தொட்டு எழுத எழுத்துகளொன்றும் தோன்றா. ஆனால் ஒரு காகிதத்தைக் கொளுத்தி அதின் கரியை மை காகிததின்மேல் தேய்க்க, எழுதின எழுத்து கருப்பிங்கியி லெழுதினதுபோல் தோன்றும்.

15. வெள்ளிசெடி உண்டாக்க.

ஒருபெரிய புட்டியில் முக்காலளவு சுத்தநீர் (மழைஜலம்மிகவும்நன்று) வார்த்து அதில்எவ்வளவு கரையுமோ அவ்வளவு ஸில்வர் நைட்ரேட் (Silver nitrate) அல்லது லெட் ஆஸிடேட் (Lead acetate) மருந்தை போட்டு அப்புட்டிக்கு நடுவில் சலத்தில் ஒரு துத்தநாகத் துண்டை கயிற்றால் கட்டி தொங்கவிட்டு அசையாமல் ஓரிடத்தில்வைத்து பன்னிரண்டுமணிநேரம் பொறுத்து பின்பு பார்க்க, துத்தநாகத்தின்மேல் வெள்ளிக்கொடிகள் படர்ந்திருப்பது போல் தோன்றும்.

16. பொட்டாஷியம் என்னும் உலோகத்தின் குணங்கள்.

இந்த உலோகம் வெள்ளியைக் காட்டிலும் அதிக பிரகாசமாயும், ஈயத்தைப்போல மெதுவாயும், சடையைப்போல் நீரில் மிதக்கக்கூடிய அவ்வளவு இலேசாயுமுள்ளது. இது ஸர் ஹம்ப்ரிடேவிஸ் (Sir Humphry Davis) என்னும் ஓர் சாஸ்திரியாரால் கண்டுபிடிக்கப்பட்டது. சலம்பட்டால் இவ்வுலோகம் பற்றிக்கொள்ளும். அணிவால் தூரிகையை வெறுஞ்சலத்தில் தோய்த்து ஒரு காகிதத்தில் எழுத்து படம் முதலானவைகளை தொடர்ச்சி கோடுடையதாய் வரைந்து அக்கோடுகளில் எங்கேயாவது ஒரு துண்டு மை உலோகத்தை வைக்க காகிதத்தின் மேலுள்ள நீர்க்கோட்டின் மூலமாய் உலோகம் எறிந்துகொண்டே ஓடும். உலோகத்தை ஒருகனத்த ஐஸ் (Ice) அதாவது நீர்க்கட்டியின்மேல் வைக்க அது உடனேபற்றிக்கொண்டு, நீர்க்கட்டியினுள் ஊடுருவிச் செல்லும். நீருக்கும் இவ்வுலோகத்துக்கும் இவ்வித சம்பந்தங்களிருப்பதால், உலோகத்தை (Naphtha) நாப்தாஎன்னும்எண்ணெயில் விட்டுவைக்கவேண்டும்.

17. இருப்புக்கு செம்பு கிலிட்டிட.

மயில்துத்தம் கரைத்த ஜலத்தில் பளிங்குபோல் சுத்தமாய்த் துலக்கிய இருப்பு சாமானைப்போட்டு, கொஞ்சநேரம்பொறுத்து எடுத்துப்பார்க்க, இரும்பின் மேற்புரமெல்லாம் செம்பு முலாம் பூசினதுபோலிருக்கும்.

18. சூட்டினால் உலோகங்கள்விரியும்.

ஒரு மோதிரத்தில் சந்தின்றி சரியாய் புகக்கூடிய ஒரு இருப்புக் கம்பியை எடுத்து நெருப்பில் செந்நிறமாய் காயவைத்து மோதிரத்துள் குவிக்க கம்பி மோதிரத்தினுள் நுழையவே நுழையாது. இவ்வுண்மை சக்கரங்களுக்கு கட்டுபோடும் தொழிலாளிகளுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம்.

(இன்னும் வரும்.)

மா. நடேசன்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

என்து சின்னஞ்சிறு நேசர்களே!

இந்தவிசை குட்டியண்ணுவுக்கு உங்களோடு வந்து ஊடாடி உறவாடிச்சல்லாபிக்கக் கூடாத அசௌகரியங்கள் சிலநேர்ந்திருக்கின்றன. அவைகளைப்பற்றி உங்களுக்குச்சொல்ல அவர் எனக்கு அனுமதி கொடுக்கவில்லை. அவர் வரவை எதிர்பார்த்து நீங்கள் ஏங்கி நிற்காதிருக்கும்படி இது சங்கதியைமட்டும் உங்களுக்குத் தெரிவித்தேன். நமது தாதாவும் ஏதோவரக்காணோம். ஆனாலும் சிறுவர்க்கான பக்கம் சொத்தையாகப்போகவில்லை. உங்களுக்குச் சந்தோஷமூட்ட நமது நேசர் "மா. நடேசன்" என்பவர் வேடிக்கையும் விளையாட்டுமான பல ஜாலவினோதங்களையெடுத்துத் திரட்டி யாருக்கும் தெளிவாகத் தெரியும்படி சொல்லி வருகிறார். நமது பக்கத்தில் அவ்வளவுக்கும் போதுமானஇடம் காண்பது அரிதானதுபற்றி விவேகசிந்தாமணி ஆசிரியர் அவற்றை நமது பக்கத்துக்கு முன்னிட்டுப் பிரசுரித்துவருகிறார். இடமிருந்தால் அவற்றை நமது பக்கத்திலேயே பதிப்பிக்கலாம். ஆனால் எங்கிருந்தால் என்ன? நமது பக்கத்தை ஒழுங்காக வாசித்துவரும் சிறுவர்களெல்லாம் சிறுவர்க்கான பக்கங்களைத் தவிர விவேகசிந்தாமணியின் மற்றவிடங்களிலிருக்கும் விஷயங்களிலும் அவர்கள் வாசிப்பதற் கினிமையானவற்றைத் தேடிப்பார்த்து வாசித்துவரக் கற்றுக்கொண்டிருப்பார்களென்று நம்புகிறேன். சிறுவர்க்கான ஜாலவினோதங்கள் வெறும் விளையாட்டுக் குபயோகமானவையாகத் தோன்றினபோதிலும் அவற்றில் எவ்வளவோ மேலான சாஸ்திர உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அவற்றைக் கவனமாய் இப்பொழுதுவாசித்துவந்தீர்களானால் பின்னால் சாஸ்திரசம்பந்தமான விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப்பேச நேரிடும்பொழுது இப்பொழுது ஜாலமாய்த் தோன்றும் அனேகவித்தைகள் பின்னிற்குச் சாதாரணமான சாஸ்திர உண்மைகளாகத்தோன்றும். ஆகையால், அவற்றைக்கவனித்துவாசித்து, கூடுமானவரையில் அவர் சொல்லும் வித்தைகளைச் செய்துபார்த்தும் வருவீர்களென்று எண்ணுகிறேன். அவற்றில் குறித்த திராவகங்கள் முதலிய ரசாயன வஸ்துக்கள் அபூர்வமானவை யேதாகிலும் வேண்டுமானால் சொற்பவிலைக்கு இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் வாங்கிக்கொள்ளலாம்.

நான் சிறுவர்க் குபயோகமான புஸ்தகங்கள் பத்திரிகைகளை வாசித்து வருகையில் உங்களுக் குபயோகமானதாகப் படும் பலவிஷயங்களை அப்போதப்போது அடையாளம் செய்து குறித்து வைத்துக்கொள்வது வழக்கம். அப்படி குறித்துவைத்துள்ள விஷயங்களில் சிலவற்றை இந்த முறை உங்களுக்கு வாசிக்கக் கொடுக்கிறேன். அவ்விஷயங்களை வாசித்து அதிலிருந் தறியும் முக்கியமான பாடங்களை மனதில் வைத்து நடந்துவருவீர்களென்று நம்புகிறேன். முதலாவது நீங்கள் வாசிக்கப்போகிறது முறுமுறுப்புக்காரர்களைப்பற்றி. அவர்கள் யார், எப்பேர்ப்பட்டவர், அப்படிப்பட்டவர்களா யிருப்பது நல்லதா, கெடுதலா, என்னும் கேள்விகளுக்கெல்லாம் விவரம் கீழே காண்பீர்கள். ஆகையால், பின் வருவதைக் கவனமாய் வாசித்துப் பாருங்கள்:—

முறுமுறுப்புக்காரர்.

முறுமுறுப்புக்காரர் என்னும் ஒருவகை ஜனங்கள் நமக்குள் இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் எதாயினும் ஒரு காரியத்தைக் குறித்து எப்போதும் குற்றம்பிடித்து, ஒருக்காலும் திருப்தியடையாத ஒருவகை கூட்டமா யிருக்கிறார்கள். சூரியன் உஷ்ணமாயிருந்தால், அவர்கள் அதிக உஷ்ணமாயிருக்கிறது என்கிறார்கள்; குளிர்ந்திருந்தால், அதிக குளிர்ச்சியாயிருக்கிறது என்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் சகல ஜனங்களிடத்திலும், சகல காரியங்களிடத்திலும் குற்றம்கண்டுபிடித்துக்கொண்டே யிருக்கிறார்கள். இது அவர்களிடத்தில் ஒரு வழக்கமாகி விடுகிறது. இது மெய்யாகவே கெட்ட வழக்கமாயிருக்கிறது.

நாம் இப்படிக்கொத்த ஜனங்களைக் குறித்துப் பரிதாபப்படுவதுமன்றி, இவர்களுடைய வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருப்பவர்களையும் குறித்து மிகவும் பரிதாபப்படுகிறோம். எதிலும் பிரியப்படாதவன் முறுமுறுப்புக்காரன் ஆவான் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட முறு முறுப்புக்காரர் இருக்கும் வீடு மிகவும் நிர்ப்பாக்கியமான வீடாய் இருக்கும் என்பதற்கும் சந்தேகமில்லை.

காலைதுவக்கி மாலைமட்டும் எந்தக் காரியமும் இவர்களுடன் சரியாய் நடந்தேறுகிறதில்லை. இவர்களால் இவர்களுடைய பிள்ளைகளும் நிர்ப்பாக்கியராகிறார்கள்; சகோதரரும் சகோதரிகளும் இவர்களைவிட்டு ஓட்டம்பிடிக்கிறார்கள். புருஷன் முறுமுறுப்புக்காரனாயிருந்தால், ஏழை மனைவிக்குக் கிடைக்கும் திட்டுக்குக்குறைவில்லை. அப்படியே மனைவி முறுமுறுப்புக்காரியாயிருந்தால், நாம் புருஷனுக்காகவும் பரிதாபப்படவேண்டியவர்களா யிருக்கிறோம். ஆனால்வீட்டுக்குப் பெரிய மனுஷியாயிருக்கும் மாமியார் முறுமுறுப்புக்காரியா யிருந்தாலோ எந்தக் காரியமும் சரியாய் நடந்தேறாது. இப்படிக்கொத்த பழக்கத்தில் நாம்விழாதிருக்கக் கவலையுள்ளவர்களாய் இருப்போமாக. அது நம்மில் நாளுக்குநாள் அதிகரித்து முதிர் வயதில் அதிக கேவலமாகிவிடும்.

குற்றம் கண்டுபிடிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஏதாகிலும் குறைசொல்லி மற்றவர்களுடைய வேலையைஅதிகபாரமாக்கலாம். நமதுஜீவனைப் பாக்கியமும் சந்தோஷமுமுள்ளதாக்க நாம்கவலையாயிருக்கவேண்டியது. குற்றத்தைக் கண்டிப்பது நியாயமே. ஆனால் அதை நல்லதனமாக முறுமுறுப்பில்லாமல் செய்யவேண்டியது.

குற்றம் கண்டுபிடிப்பதில் வெகுவாய்ப் பழகிவிட்ட அநேகர், எந்தக் காரியமும் பூரணமாயிருந்து குற்றம் மருந்துக்கும் கிடைக்காத மோட்சத்தில்கூட பாக்கியவான்களாயிருப்பது அரிது என்று ஒருகதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் துர்க்குணம் எதாவது நமது இருதயத்தில் ஒட்டிக்கொண்டிருந்தால், அதை உடனே அகற்றிவிடப் பிரயாசைப் படுவோமாக. வீட்டிலும் வெளியிலும் திருப்தியுள்ளவர்களாய் நடந்து சமாதானமும் ஐக்கியமும் நிறைந்து இகத்தில் சந்தோஷமும் பரத்தில் சுகமும் அனுபவிக்கத் தகுதியுள்ளவர்களாயிருக்கப் பிரயாசைப்படுவோமாக.

ஆயிற்று. இரண்டாவது, 'நங்கையர்க்கு நல்லுரை'யென்று ஒருபெண்மணி ஸ்திரீகள்ஒழுங்காயிருக்கவேண்டியதைப்பற்றிச் சொன்ன புத்திமதிகளைக் கேளுங்கள். எழுதியவள் பெண்பாலாதலால் அவள் பெண்களைமட்டும் குறித்து எழுதியிருக்கிறார்கள். ஒழுங்கு புருஷர்களுக்கும் அவசியமாயிருக்கவேண்டியதாதலால் என் சிறுதோழர்களே! உங்கள் நங்கையர்க்குச்சொல்லியது உங்களுக்கும் சொன்னதுபோலவேயென்று எண்ணி, நீங்களும் எல்லா விஷயங்களிலும் ஒழுங்குள்ளவர்களாக விருந்து நடந்துகொள்வீர்களென்று நம்புகிறேன். ஸ்திரீகள் ஒழுங்கா யிருக்கவேண்டியதைப்பற்றி ஒரு பெண்மணி சொல்லிய நல்லுரைகளைக்கேளுங்கள்.

ஒழுங்கு.

ஒரு ஸ்திரீயின் குடித்தனம் சிறந்த குடித்தனமாயிருக்க வேண்டுமானால், ஒழுங்கிருக்க வேண்டியது அவசியம். "ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு ஸ்தானமுண்டு" என்பது ஒழுங்கைக் குறிக்கும் ஒரு நல்ல பழமொழி. ஒவ்வொரு பொருளையும் அதனதனிடத்தில்வைத்து, அந்தந்தப் பொருளை அதனதன் வேலைக்கு உபயோகிப்பது நல்லொழுங்கு. சில ஸ்திரீகளின்வீட்டில் பெட்டி இருக்கும் இடத்திலே சட்டியையும், சட்டி இருக்கும் இடத்திலே பெட்டியையும், அடுப்பு இருக்கும் இடத்திலே உடுப்பையும், உடுப்பு இருக்கும் இடத்திலே அடுப்பையும் பார்க்கலாம். நாம் இருக்கும் வீடு சிறு வீடாயிருந்தாலும், நமக்குள்ளவைகளை ஒழுங்காய் வைத்திருப்பது கூடாத காரியமல்ல. ஒழுங்கீனமான குடித்தனம் உள்ளதையெல்லாம் கொள்ளையாக்கும் பிள்ளைத்தனம் என்றே சொல்லப்படவேண்டியது. கடவுள் நமக்குக் கிருபையாய்க் கட்டளையிட்டிருக்கும் எல்லாக்காரியங்களிலும் நாம்ஒழுக்கம் உடையவர்களாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய உள்ளக் கனிவான விருப்பம். மேலும், நாம் நமது வேலையைச் செய்யும்போது, பல வேலைகளையும் ஒரே சமயத்தில் செய்யத்தொடங்கி, அவைகளை அரைகுறையாய் விட்டுவிடாமல், அந்தந்த வேலையை அதனதன் சமயத்தில் செய்தால், நாம் எப்போதும் எக்காரியத்திலும் ஒழுங்கும் சித்தியும் உடையவர்களாயிருப்போம். நமது உடையிலும் சரி, நடையிலும் சரி, வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, கொடுக்கலிலும் சரி, வாங்கலிலும் சரி, பேச்சிலும் சரி, செய்கையிலும் சரி, ஒழுங்குள்ளவர்களா யிருப்பதே நம்மை முன்னுக்குக் கொண்டுவரும் முந்தின காரியம். சிலர் பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றுமாய் இருக்கும், வெளிக்கு மித்துருக்களாயிருந்து உள்ளேயோ சத்துருக்களா யிருக்கும் ஒழுங்கீன மனிதரும் அநேகர் உண்டு. நாம் ஒன்றைச் செய்வோமென்று சொன்னால், அதை எப்படியாயினும் செய்யவேண்டியது நமது கடமை. நமது நடக்கை ஒழுங்கா யிருப்பதே எல்லா ஒழுக்கத்திலும் சிறந்த ஒழுக்கம். அது மனிதருக்கு மாத்திரமல்ல, தேவனுக்கும் பிரியமாயிருக்கும். எந்தக் காரியத்தையும் ஒழுங்கோடு செய்யும் குடித்தனக்காரி குறைவற்றகுடித்தனக்காரியா யிருப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவளுக்கு எந்தக் காரியத்தை எந்த இடத்திலே எப்படி கண்டுபிடிக்கவேண்டுமென்று தெரியும். அவள் பேச்சும் அதற்கேற்றதுபோல் அவள் நடக்கையும் ஒழுங்காயிருப்பதால், பூலோகத்தார் அவளைப் புண்ணியவதி யென்றும், பரலோகத்தார் அவளைப் பாக்கியவதி யென்றும் அழைப்பார்கள். இப்படிப்பட்ட பெண்கள் நமது தேசத்தில் தினந்தோறும் அதிகரித்து வந்தால் நலமாயிருக்கும். நங்கையரே, நீங்கள் எதைச்செய்தாலும் ஒழுங்கோடு செய்யப் பிரயாசைப்படுகிறீர்களா? நம்மை உண்டாக்கின கடவுள் ஒழுங்கை விரும்பி, ஒழுங்கீனத்தைப் பகைக்கும்கடவுளாயிருக்கிறபடியால், அவரை உங்களுடைய கோணலும் தாறுமாறுமான வழிகளால் கோபப்படுத்தாமல், நேரானவழிகளால் பிரியப்படுத்தப்பிரயாசைப்படுங்கள்.

அன்பின்வல்லபத்தைப் பற்றி ஒரு நண்பர் எழுதியிருப்பதைக் கீழே பதிப்பிக்கிறேன். அதைக் கவனமாய் வாசித்துப் பாருங்கள்:—

அன்பின்வல்லபம்.

"அநேக ஜனங்கள் அன்பினால் மாத்திரம் ஏவப்பட்டு வெகுவான காரியங்களைச் செய்து வருகிறார்கள். இதற்கு எண்ணிறந்த திருஷ்டாந்தங்களை இந்துதேச சரித்திரத்தில் காணலாம்.

ஒவ்வொரு ஸ்திரீயும் தான் வெகுவாய் நேசிக்கும் பிள்ளைக்குக் காட்டும் அன்பு இப்படிப்பட்டதென்று அனுபோகத்தால் அறிந்திருக்கிறாள். விசேஷமாய் ஒருபிள்ளை வியாதியாயிருக்கும்போது, தாயானவள் காட்டும் அன்பு அளவிடப்படக் கூடாததா யிருக்கிறது.

அன்பிற்கு வேறொரு வல்லமையும் உண்டு. "அன்பு அன்பைப் பிறப்பிக்கும்" என்பது ஒரு முதுமொழி. ஒருவன் மெய்யாகவே நம்மை நேசிப்பதை நாம் காணுவோமாகில், அவன் செய்யும் சிறு பிழைகளையும் அடிக்கடி மன்னித்து விடுகிறோம்; அதே பிழைகளை வேறொருவன்செய்வானாகில், நாம் மன்னிக்க மாட்டோம். இப்படியாக நமது அன்பு நாளுக்குநாள் அதிகமாக விர்த்தித்துக் கொண்டே வந்து கடைசியாக அது எளிதில் பிரிக்கப்படக் கூடாத அன்பாகி விடுகிறது. இதனால் நாம் ஒரு சிறந்த பாடத்தைக்கற்றுக்கொள்ளலாம். நமது வீட்டிலாவது குடும்பத்திலாவது அன்பற்ற யாராகிலும் இருந்தால், அவர்களை நாம் நேசிப்பதால், அவர்கள் குணத்தை மாற்றப் பிரயாசைப்படக் கடவோம். தீமைக்குப் பதில் தீமையைச் செய்யாமல், பட்சமற்ற வார்த்தைகளுக்குப் பதிலாய் அன்பான வார்த்தைகளையும், பிறனைக்குறித்து அசட்டையாயிராமல் அவர்களுக்காகக் கவலைப்படுகிறவர்களாயுமிருக்கக்கடவோம். இது வெகு வருத்தமான விஷயம் என்று எவரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். ஏனெனில் இதிலே ஒவ்வொருவருடைய சுயபாக்கியமும் பூரணமாய் இருக்கிறது.

ஒருதேசத்திலே ஒரு அரசன் இருந்தான். அவன் தனது குமாரனை வெகுவாய் நேசித்து, அவனுக்கு வேண்டியவற்றை யெல்லாம் திரளாய்க் கொடுத்து வந்தான். ஆகிலும் அந்த இளவரசன் எப்போதும் பாக்கியமற்றவனாகவே இருந்தான். தனக்குஇல்லாத ஏதோ ஒருநூதன காரியத்தையே அவன் எப்போதும் விரும்பினவனாகக் காணப்பட்டான். ஒரு நாள் ஒருமந்திரவாதி அரண்மனைக்கு வந்து, இளவரசனைப் பாக்கியமுள்ளவனாக மாற்றுவேன் என்றான். அரசன் அதற்குச் சம்மதித்து, மந்திரவாதி கேட்கும் எதையும் தருவதாக வாக்களித்தான். மந்திரவாதி ஒரு காகிதத்தில் ஒரு வெண் வஸ்துவைக் கொண்டு சில வார்த்தைகளை எழுதி, விளக்கின்மேல் பிடித்து வாசிக்கச் சொன்னான். அப்பொழுது, அந்த வெள்ளை எழுத்துக்கள் எல்லாம் அழகான நீல எழுத்துக்களாக மாறி, 'தினந்தோறும் எவனுக்காகிலும் அன்பான செய்கை ஒன்றைச் செய்து வா" என்று தோன்றின. இராசகுமாரன் இந்த இரகசியத்தின்படியே செய்து, இராச்சியத்திலுள்ள பாக்கியம் நிறைந்த பையன் ஆனான்.

இது ஒரு கதையாய் மாத்திரம் இருந்தபோதிலும் பெரிய உண்மையை வெளிப்படுத்துகிறது. நம்மை யாருக்காக ம... ... ஒப்புக்கொடுப்போமோ, அவர்களை எப்போதும் அதி... ...ாய் நேசிப்போம். துவக்கத்தில் இது சற்றுக் கடினமாயிருந்தபோதிலும் தினந்தோறும் அதனால் நமக்கு அதிகநன்மை கிடைக்கும். நாம் யாரை நேசிக்கிறோமோ அவர்கள் எப்படிப்பட்டவர்க ளாயிருந்தபோதிலும், நம்மை நேசிக்க ஏவப்படுவார்கள்."

என் சின்னஞ் சிறு நேசர்களே! அன்பின் வல்லபத்தைக் காட்ட மேலேசொல்லிய கதையில் "மந்திரவாதி ஒருகாகிதத்தில் ஒரு வெண் வஸ்துவைக்கொண்டு சில வார்த்தைகளை யெழுதி விளக்கின்மேல் பிடித்து வாசிக்கச் சொன்னான். அப்பொழுது அந்த வெள்ளை எழுத்துக்களெல்லாம் அழகான நீல எழுத்துக்களாக மாறி"த் தோன்றினவென்று படித்தீர்களே; அந்த மந்திரவாதி செய்த சூக்ஷ்மம் இன்னதென்று உங்களில் யாருக்காவது தெரிந்ததோ? விவேகசிந்தாமணியைக் கவனமாய் வாசித்து வரும் விவேகமுள்ள சிறுவர் யாரும் இதன் சூக்ஷ்மத்தை யறிந்துசொல்லத் தக்கவர்களாக விருப்பார்கள். விவேகசிந்தாமணியை வாங்கி வாசிக்கும் சிறுவர்களில் இந்தச் சூக்ஷ்மத்தை யறிந்து தபால் மூலமாக முதல் முதல் தெரிவிக்கும் சிறுவர்க்கு மாதர்நீதியென்னும் புஸ்தகமாவது, விஜய வருஷத்து ரிப்பன் பாக்கெட் பஞ்சாங்கமாவது வருணந்தீர்த்த நேர்த்தியான மஹாராணியின் குடும்ப படமாவது இனாமளிக்கப்படும். தபாற்கூலி கட்டுக்கூலிச் செலவு பரிசுபெற்றவர்கள் கொடுத்து வருவித்துக்கொள்ளவேண்டும். இப்பரிசுபெறப் போட்டிபோடும் சிறுவர் ஆணானால் 12-வயதுக்கு மேற்படாமலும் பெண்ணானால் 14-வயதிற்கு மேற்படாமலு மிருக்கவேண்டும். சிறுவர்கள் தங்கள் பெற்றோர் மூலமாகவாவது, தங்கள் வாத்தியார் மூலமாகவாவது எழுதி அனுப்பவேண்டும். எழுதும்போது அவர்கள் பேர் ஊர் வயது விவரங்கள் காணப்பட்டிருப்பதோடு இந்தச் சூக்ஷ்மத்தை அச்சிறுவர் பிறருதவியின்றிச் சுயமாகக் கண்டுபிடித்ததாகப்பெற்றோர் கைப்படவாவது வாத்தியார் கைப்படவாவது உறுதிமொழிவாங்கி அனுப்பவேண்டும். இப்பரிசுபெறப் போட்டிபோடுகிறவர்கள் தாங்களேயாவது தங்கள்பெற்றோர் மூலமாயாவது விவேகசிந்தாமணி வாங்குகிறவர்களாக விருக்கவேண்டும். இதற்கு பதிலெழுதுவோர் "திருவல்லிக்கேணி, விவேகசிந்தாமணி ஆபீசில், மாயாண்டிக்கு" என்று விலாசமெழுதியனுப்பவேண்டும்.

மாயாண்டி.

விசேஷகுறிப்புகள்.

நமதுபத்திரிகைக்கு உதவி

ஸ்ரீலஸ்ரீ ராயபஹதூர் மதுரை திருஞான சம்பந்தமூர்த்தி பண்டாரசந்நிதியவர்கள் நமது பத்திரிகை மிக உபயோகமுள்ளதாயிருக்கிறதென்பதை யுணர்ந்து அதை விர்த்தி செய்துமுன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நமக்கு உற்சாகமூட்டியெழுதி அதன் அபிவிர்த்திக்காக 20-ரூபாய் நன்கொடை யளிக்கவும் மனமுவந்ததை அங்கீகரித்து, வந்தனத்துடன் அவர் உதவிபுரிந்ததை ஒப்புக்கொள்கிறோம். ம-௱-௱-ஸ்ரீ திவான் பகதூர் எஸ். சுப்பிரமணிய அய்யர் ஸி. ஐ. இ. அவர்களும் நமது பத்திரிகையின் உபயோகத்தை நன்குணர்ந்து அது எங்கும் பரவி விர்த்தியடையத் தம்மாலியன்ற உதவி செய்வதாக வாக்களித்ததோடு 20-ரூபாய் திரவியசகாயமும்செய்து ஆதரவுபுரிந்ததை அதிவிநய வந்தனத்தோடு அங்கீகரித் தேற்றுக்கொண்டு வெளியிடுகிறோம். மற்ற செல்வவான்களும், ராஜாக்கள், மடாதிபதிகள், ஜமீன்தாரர்களும் இவ்விஷயத்தில் நமக்கு வேணுமுதவிசெய்து இப்பத்திரிகை என்றென்றைக்கும் நிலைவரமாய் நின்றுதவி வரும்படி கைகொடுத் தாதரிப்பார்களென்று அவர்களெல்லார்க்கும் விநயபூர்வ மாய் விண்ணப்பம் செய்துகொள்கிறோம்.

சட்டநிருபணசபைகள்சீர்திருத்தம்

1892-வது வருஷத்தில் பார்லிமெந்து சபையார் சட்டமாகச் செய்த இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்ட்டு நிபந்தனைகளின்படி இந்தியாவிலுள்ள சட்ட நிரூபண சபைகளைப் பெரிதாக்கி, அவைகளுக்கு ஜனப்பிரதிநிதிகள் நியமிக்கப்பட ஏற்பாடுசெய்து அச்சபை மெம்பர்களின் அதிகாரங்களையும் அதிகப்படுத்த கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரியோடு சேர்ந்து யோசித்து விதிகள் தயார்செய்து வருகிறார்களென்று போனமாசத்திலே சொன்னோம். சட்டநிரூபண சபைகளைப் பெரிதாக்கி அவைகளுக்கு ஜனப்பிரதிநிதிகள் நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்ய சட்ட சம்பந்தமான இடையூறுகள் ஏதோ நேரிட்டிருக்கின்றனவென்று சொல்லி இந்தியா மந்திரியவர்கள் அவ்வகைச் சீர்திருத்த சம்மந்தமாய் விதிகள் செய்வதைக் கொஞ்சகாலத்திற்குத் தள்ளிவைத்துக்கொண்டிருக்கிறார். சட்டநிரூபண சபைகளின் தொழில்களை விசாரிக்கச்செய்து அச்சபை மெம்பர்களுக்குகவர்ன்மெண்டாரைக் கேள்விகள்கேட்கவும், வரவு செலவு திட்டக்கணக்கு விவரங்களைப்பற்றித் தர்க்கம் செய்யவும் அதிகாரங்கள் கொடுத்து அவ்வதிகாரங்களை அவர்கள் செலுத்தி வருவதற்காகச் சில விதிவிலக்குகள் செய்திருக்கிறார்கள். அவை ஏறத்தாழ எல்லாசட்ட நிரூபண சபைகளுக்கும் ஓரேவிதமானவையாக இருக்கின்றன. நமது இராஜதானி சட்டநிரூபணசபை சம்மந்தமாய்ச் செய்யப்பட்டவிதிவிலக்குகளைமட்டும் அடுத்த சஞ்சிகையில் எடுத்துரைப்போம்.

சுதேச கலெக்டர்கள்

லார்ட் டப்பிரின் இராஜப்பிரதிநிதியாக விருக்கையில் கவர்ன்மெண்டார் உத்தியோக நியமன விஷயமாய் நியமித்த (கமிஷன்) சபையார் செய்த ரிபோர்ட்டின்மேல் இந்தியாமந்திரியவர்கள் செய்திருக்கும் உத்திரவை யனுசரித்து 'இவ்விராஜதானியில் சுதேசிகளுக்கு இதுவரையில் கொடுக்கப்படாத உயர்ந்த உத்தியோகங்கள் அளிக்கக் கவர்ன்மெண்டார் உத்தேசிக்கிறார்களென்று தெரியவருகிறது. இவ்வுத்தேசப்படி சுதேசிகள் இரண்டொருவருக்கு ஜில்லா கலெக்டர் வேலை கொடுக்கப்படுமென்று அறிகிறோம், அப்படி கலெக்டர் வேலை கொடுக்கப் பெறத் தக்கவர்களில் ரிஜிஸ்திரேஷன் இலாகாத் தலைவராகவிருக்கும் ம-௱-௱-ஸ்ரீ திவான் பஹதூர் எஸ். ஸ்ரீனிவாச ராகவய்யங்கார் அவர்கள் ஒருவரென்று சொல்லப்படுகிறது.

பெங்கால்ஜூரி கமிஷன்

பெங்காளத்தில் ஜூரி விசாரணை யேற்பாட்டு விஷயமாய் அவ்விராஜதானி கவர்ன்மெண்டார் பிறப்பித்த உத்திரவு காரணமாய் உண்டான அமளிகுமளி இன்னும் முற்றும் அடங்கவில்லை. இந்தியா மந்திரியவர்கள் அவ்வுத்திரவை ரத்து செய்து விடவேண்டுமென்று உத்திரவு செய்ததாக வதந்தி பிறந்தும் அப்படிப்பட்ட உத்திரவு ஒன்றும்வெளிவரவில்லை. இப்பொழுது இந்தியா மந்திரியவர்கள் பெங்கால் உதவிக்கவர்னர் ஸர். சார்ல்ஸ் எலியட் செய்த பிரோரேபனையை இந்தியா கவர்ன்மெண்டார் சிபார்சு செய்ததின்பேரிலங்கீகரித்து, அவர் சொல்லியபடி ஜூரிவிசாரணை யேற்பாட்டை உண்மையாகச் சீர்திருத்துவதற்கான வழி வகைகளை யெடுத்துக் காட்டுவதற்காக அது விஷயத்தைப் பற்றி விசாரித்து ரிபோர்ட்டுசெய்ய ஒரு 'கமிஷன்' ஏற்படுத்த உத்திரவு செய்திருக்கிறார். அவ்வுத்திரவுப்படி 5-பேர்களடங்கிய சபையொன்று நியமித்திருக்கிறார்கள். இந்தியா மந்திரியின் உத்திரவுப்படி நியமிக்கப்பட்டிருக்கும் சபைக்கு கல்கத்தா ஹைகோர்ட்டுஜட்ஜ் மிஸ்டர்ஜஸ்டிஸ் ப்ரின்ஸெப்ஸ் அக்கிராசனாதிபதியாகவும் மஹாராஜா ஸர். ஜோதீந்தர மோஹன் டாகோர், மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸர். இராமச்சந்திர மித்தர், பாரிஸ்டர் ஸர்.

க்ரிப்பித் இவான்ஸ், டிஸ்திரிக்ட் ஜட்ஜ்மிஸ்டர் வைட் ஆகிய நால்வரும் மெம்பர்களாகவு மிருக்கத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ரிபோர்ட்டுக் கிடைத்தபின் இந்தியா மந்திரியவர்கள் இது விஷயத்தைப்பற்றி முடிவான உத்திரவுசெய்வதாகச் சொல்லியிருக்கிறார்.

ஹைகோர்ட்டு. சென்னைஹைகோர்ட்டுக்குச் சில வருஷகாலமாக சத்தியாக நியமிக்கப்பட்ட 6-வது ஜட்ஜ் வேலை அடுத்த ஏப்பிரல் மாசத்திலிருந்து இன்னும் ஒரு வருஷத்திற்கு இருக்க இந்தியாமந்திரியவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹாண்ட்லி அடுத்த மார்ச்சு மாசத்தோடு வேலையை விட்டு நீங்கிப்போவதாகத் தெரியப்படுத்தி யிருக்கிறார். அவர் அப்படி நீங்கிப்போகும் பக்ஷத்தில் வருகிற ஏப்பிரல் மாசமுதற்கொண்டு ஒரு வருஷத்துக்கு வேலைபார்த்து வர, சென்னை ஹைகோர்ட்டிற்கு 6-வது ஜட்ஜி யொருவர் நியமிக்க வேண்டிவரும். அவ்வேலைக்கு யாரை நியமிப்பார்களோ தெரியவில்லை. ஹைகோர்ட்டுவக்கீல்களில் தகுதியுள்ள ஒருவரை நியமித்தால் சுதேசிகளுக்கெல்லாம் திருப்தியாக விருக்கும். கவர்ன்மெண்டார் சித்தம் எப்படியோ தெரிய வேண்டும்.

பிரகடனபத்திரம்.

	ரூ.	அ.
பத்துப்பாட்டு நச்சினார்க்கினிய ருரை	3	0
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன்சார்ஜ்	0	6
சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை	6	0
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	0	8
சிலப்பதிகாரம், அடியார்க்குநல்லாருரை அரும்பதவுரை	5	8
தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ்	0	7
மதுரைக்காஞ்சி நச்சினார்க்கினியருரை	1	0
நெடுநெல்வாடை ,,	0	6
கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடுதூது	0	2
திருமயிலைத் திரிபந்தாதி	0	1

இப்புத்தகங்களை என்னிடத்தும் இவ்விவேகசிந்தாமணி ஆபீசிலும் முன்பணம் செலுத்தி விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
கும்பகோணம்,
கெவர்ன்மெண்டு காலேஜ்,
வே. சாமிநாதையர்.

REFRESHMENT AND CONFETIONERY OF THE BEST SORT CAN BE HAD OF
H. RAMASWAMIAH,
335, *Thambu Chetty Street,*
Black Town.

The above Refreshment Room was started last year to meet a long felt want in the locality and it has ever since obtained a very satisfactory opinion of the Public. It is situated near the New Law Courts. The Proprietor requests the public to encourage him by giving him their support and patronage,

THE WATERBURY WATCH.
"வாடர்பரி வாட்ச்."

என்பது நீடித்து நிற்கத்தக்கதும், சரியாக ஓடுவதுமான ஓர் நல்ல கைகடிகாரம். இதன்விலை ரூபா 7½யே. இக்கடிகாரம் ஆயிரக்கணக்காகச் சென்னை மவுண்ட் ரோட் அடிஸன் கம்பெனியாரால் விற்கப்பட்டிருக்கிறது. 1886, 1887-வது வருஷங்களில் விலையான கடிகாரங்களில் நூற்றுக் கணக்கானவை இன்னும் சரியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. விலைரூபா ஏழு, அணாஎட்டே (ரூ 7—8—0.)

ADDISON & Co.,

SEQUAH'S REMEDIES.

ஸிக்வாவினுடையமருந்துகள் சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள அடிஸன் கம்பெனியார் ஷாப்பில் கிடைக்கும். விலை புட்டி 1-க்கு ரூ 1—4—0.

RUBBER STAMPS.

முதல்தரமான ரப்பர் ஸ்டாம்பு வேண்டுமானால் அடிஸன் கம்பெனியாரிடம் போங்கள். எந்தமாதிரியில் வேண்டுமானாலும் கிடைக்கும்.

ADDISON & CO,
Mount Road,
MADRAS.

விளம்பரம்.

டப் அண்ட் கம்பெனி
மவுண்ட் ரோட்டு.

இது நாட்பட்ட எச்சில் தழும்பு, மேகப்படை, ஸ்திரீகளுக்கு அரையில் உண்டாகிற இடுப்புக்கடி, மற்றும் தேகத்தில் உண்டாகிற பல சம்பந்தமான படைகளையும் நீக்கும். இரண்டொரு நாளிலேயே இதன் பிரயோசனத்தை யறியலாம். ஒரு டப்பியின் விலை ரூபா 1. பாக்கிங் சார்ஜ் அணா 2.

காச்சல் கட்டிச் சூரணம்

சகலவிதமான விஷசுரம், மலைநாட்டுச்சுரம் இவைகளால் மெலிந்து வயிற்றில் காச்சற்கட்டிகண்டு வருத்தமடைகிறவர்கள் இச்சூரணத்தைக் காலைமாலை சாப்பிட்டு வரவும். புட்டி 1-க்கு ரூபா. 1—8—0.

கரப்பான் களுக்குக் களிம்பு.

தாய்தந்தையர்களுடைய மேக சம்பந்தத்தினால் சிறு குழந்தைகளுக்குக் கால், கை மேக முதலிய இடங்களில் காணும் சகலவிதமான கரப்பான்களுக்கும் காலைமாலைகளில் மேலுக்குப் போட்டு வரவும்; மருந்து போடுமுன் வெந்நீர் விட்டு அலம்பிவிட வேண்டும். கிரயம் ரூபா 1—0—0.

DUFF& CO.,
Chemists & Druggists,
MOUNT ROAD, MADRAS.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்வர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. **1893**ஹு மார்ச்சு மீ. **இலக்கம். 11.**

சுதந்தரங்களின் விளக்கம்.

2-ம். அத்தியாயம். (தொடர்ச்சி)

8. ஒருவராலும் தங்களுக்குச் சொந்தமாக்கப்படாத சொத்து இரண்டுவிதமாக வித்தியாசப்பட்டுக் காணப்படுகின்றது.

(1) சிலசொத்துக்களை யார் பின்தொடர்ந்து தங்களுடைய புத்தி நுட்பத்தாலும் வலிமையினாலும் தங்கள் வசமாக்கினார்களோ அவர்களே அவற்றின் சொந்தக்காரராகிறார்கள். ஆனால்பிறரும் அதேமாதிரியாய் இப்படிப்பட்ட சொத்துக்களைத் தங்களுடைய பிரயத்தனத்தினால் சம்பாதித்துக்கொள்வதை இழந்துபோகாமலிருப்பது ஆவசியகம். உதாரணமாக, ஒரு காட்டில்வேட்டையாடிப் பெறக்கூடிய மிருகங்கள் ஏராளமாயிருக்கையில், ஒருவனால் வேட்டையாடிப் பிடிக்கப்பட்ட மிருகங்கள் அவனுக்கே சொந்தமாகும்; ஏனெனில், பிறரும் அவனைப்போல தங்கள் சிரமத்தைச் செலவிட்டால் மிருகங்களைப் பிடித்து தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம். இப்படியே கிலைபிரிந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகக்கூடிய சொத்துக்களெல்லாம் யார் அவற்றை முதலிற் பிரயத்தனஞ் செய்து தேடிப் பிடிக்கிறார்களோ அவருக்கே சொந்தமாகின்றன.

(2) உயிரில்லாத பொருட்களில் மனிதருக்கு விசேஷ உபயோகமுள்ள சிலவற்றைக்கண்டுபிடிப்பதற்காவது, நமது வசமாக்குகிறதற்காவது அதிகப் பிரயத்தனம் வேண்டாது அவற்றைச் செழித்து வளரச்செய்தற்கு நிரம்ப பிரயத்தனஞ் செய்யவேண்டியதாயிருக்கிறது. இதற்கு நிலமே பிரதான உதாரணம். நிலத்திலிருந்தடையக்கூடிய உபயோகமான பொருட்களையெல்லாம் மனிதர் அடையும்படி செய்வதற்கு, பிறரை முழுவதும் விலக்கி அந்நிலத்தை ஒருவருக்கே சொந்தப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. பிறரும் இப்படி நிலத்தைத் தங்களுக்குமாத்திரம் சொந்தமாகப் பெறுதற்குள்ள சுதந்தரத்தை மீறாது, யார் நிலத்திலுழைத்து விளைவை யுற்பத்திசெய்கிறார்களோ அவருக்கு அந்நிலத்தை எவ்விதமான சுதந்தரங்களுடன் உட்படுத்தவேண்டுமென்று நாம் நிச்சயிக்க வேண்டும்.

முதலாவதுட்பிரிவில் சேர்ந்த பொருட்களை அடுத்தபிரிவிற் பிரஸ்தாபித்து, அதற்குப் பிந்திய பிரிவில் இரண்டாவதுட்பிரிவிற் சொல்லிய பொருட்களைப்பற்றி பிரஸ்தாபிப்போம்.

9. முதலாவதுட்பிரிவிற் சேர்ந்த சொத்துக்களிலுள்ள சுதந்தரம் இரண்டுகாரணங்களாலுண்டாகின்றது.

(1) அவற்றைக்கைவசப்படுத்த எவன்பிரயத்தனப்படுகிறானோ அவனுக்கே அவை சொந்தமாகின்றன. மனிதன் பிழைத்திருத்தற்கு வேண்டிய எல்லாவஸ்துக்களும் உழைப்பினால் மாத்திரமே கிடைக்கக்கூடுமென்று யாவரும் எளிதி லறியலாம். தரையிலுதிர்ந்துகிடக்கும் பழமாயிருந்தாலும், குனிந்து அதைக் கையினு

லெட்டி எடுக்கிற பிரயத்தனத்தையாவது மனிதர் செய்யவேண்டியதாய் இருக்கிறது. இதற்கு வேண்டிய பிரயத்தனத்தை ஒருவன் சுயேச்சையாய் வேறொருவனுடைய இஷ்டத்திற்காவது கட்டாயத்திற்காவதுட்படாது செய்து அந்தப் பொருளை எவ்விடத்திற்குக் கொண்டு போனால் அது தனக்குபயோகப்படுமோ அவ்விடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். இதனால் அப்பொருளுக்கும் அவ்வுழைப்பாளிக்கும் ஒருறவு உண்டாகிறது. இவ்வுறவே அவன் அப்பொருளின் சொந்தக் காரனாதற்குக் காரணமாகின்றது.

(2) இவ்வுறவுண்டாவதற்குமுன் அப்பொருளுக்கும் மற்றொருவருக்கும் இதேமாதிரியான உறவு உண்டாயிருக்கவில்லை. அதாவது, அப்பொருள் வேறொருவனுடைய சுதந்தரத்திற்கும் உட்பட்டிருக்கவில்லை. மற்றெல்லவரும் அப்பொருள்விஷயத்தில் ஒரேமாதிரியான சம்பந்தத்தை யுடைத்தாயிருக்கையில், குறித்த ஒருவனுக்கும் அதற்கும் நெருக்கமான உறவுண்டாயிருக்கிறது. இவ்வொருவனுக்கும் மற்றெல்லவருக்கும் அப்பொருள்விஷயத்திற் சமமான உறவு உண்டாகுமெனில், அதைச் சம்பாதிப்பதில் மனிதர் பிரயத்தனப்படுவதற்கு அவசியமாகிய தூண்டுதல் அழிந்துபோம்.

பிரயத்தனம், கைவசப்படுத்தல் (அல்லது குடிகொள்ளல்) ஆகிய இவ்விரண்டு காரணங்களைக்கொண்டே இவ்வகுப்பிலடங்கிய பொருட்களெல்லாம் மனிதரின் சுதந்தரங்களுக்கு ஆதியிலுட்பட்டன. இப்படி பிரயத்தனப்பட்டு கைவசப்படுத்துவதினா லுண்டாகும் சுதந்தரம் பின்வரும் பொருட்களில்மாத்திரமே செலுத்தப்பட்டு வந்ததென்று ரோமாபுரி ராச்சியத்தில் பேர்போன தர்மவிதானகர்த்தர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. (1) நிலம், சலம், ஆகாயம் முதலியவைகளிற் சஞ்சரிக்கும் சீவராசிகளை யார் பிரயத்தனஞ்செய்து தமது கைவசமாக்குகிறார்களோ அவரே அவற்றின் சொந்தக்காரர் ஆகிறார். அவை சொந்தக்காரரின் கைவசம் விட்டு நீங்கினால் அவற்றைப் பிறர் பிரயத்தனஞ்செய்து தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளலாம். மாடப்புறா, கலைமான்போன்ற சீவசந்துக்கள் தங்களுடைய சொந்தக்காரரின் வீடு, தோட்டம் இவைகளிலிருந்து சற்று நீங்குவதும் திரும்புவதுமாய் வளர்ந்து வருகின்றன; இவ்வழக்கம் நீங்கினால் அவற்றைப் பிறர் தங்கள் கைவசமாக்கிச் சொந்தப்படுத்திக் கொள்ளலாம். (2) தன்னுடைய நிலத்திலாவது ஒருவருக்குஞ் சொந்தமாகாத நிலத்திலாவது ஒருவனுக்குப் புதையலகப்பட்டால் அப்புதையல் அவனுக்கே சொந்தமாகும்: பொதுவான நிலத்திலகப்பட்டால் ஒருபகுதியைச் சர்க்கார் கஜானாவிற் செலுத்தி மற்றபகுதியைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டியது. இத்தேசத்தில் இவ்வேற்பாடு நடபடிக்கையிலில்லை. (3) சத்ருக்களிடத்தி லிருந்து பலாத்காரமாய்ப் பிடுங்கப்பட்ட சொத்து யாரால் பிடுங்கப் படுகிறதோ அவரைச் சேருகின்றது. (4) வேறொருவனுக்குக் கொடுக்கவேண்டுமென்னும் எண்ணம் சிறிதேனுமில்லாமல் சொந்தக்காரனால் கைவிடப்பட்ட சொத்து நிலமாயிருந்தாலும் வேறாயிருந்தாலும் அதை எவன் தன் கைவசப்படுத்துகிறானோ அவனுடையகைவசத்துக்குட்படுகிறது. மேலும் ஒரு சொத்திற்கு தகுந்த சொந்தக்காரன் ஒருவரும் காணாமல் அதைத் தற்காலத்தில் வைத்திருப்பவன் ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயத்திற்குக் குறையாமல் உபயோகித்து வந்திருந்தால் அதற்கு அவனே சொந்தக்காரனாவான். இத்தேசத்தில் தற்காலத்திலும் இப்படிப்பட்ட விதி ஒன்று சட்டத்தினாலேற்பட்டு வழங்கிவருகிறது. இவ்விதி மனிதருக்குச் சுகமாயிருக்கிறதென்பதைத் தவிர ஒழுங்குதவறாத சன்மார்க்கத்தை யோசித்தால், காலஹரணத்தால் மாத்திரம் உண்மையான சொந்தக்காரனுடைய சுதந்தரம் என்னாளும் தவறிப் போகக்கூடியதல்ல.

ரோமாபுரி ராச்சியத்திலுள்ள தர்மவிதான கர்த்தர்களால் ஆதரிக்கப்பட்ட இச்சித்தாந்தம் (அதாவது, ஒருவருக்கும் சொந்தமாகாத சொத்து யார்வசம் முதலில் அகப்பட்டதோ அவரே அதற்குச் சுதந்தரமுடையவர்களாய் ஏற்பட்டார்களென்பது) தகுந்த ஆதாரத்துடன் கூடியதல்லவென்று ஸர் ஹென்றி மேயின் என்பவர் ஸ்தாபித்திருக்கிறார். ஆதி மனிதர் குடும்பத்தின் ஒழுங்குக் குட்பட்டிருந்தார்களென்றும், அக்காலத்தில் நடந்த விவகாரங்களெல்-

லாம் பரஸ்பரம் குடும்பங்களுக்குள் பொதுவாகவே நடத்தப்பட்டு வந்தனவென்றும், தற்காலத்தில் நாகரீகம் அடைந்த தேசங்களில் மனிதர் சுயேச்சையாய் உடன்படிக்கை செய்து கொள்ளுவதைப்போல் அக்காலத்தில் செய்து கொள்ளவில்லை யென்றும் கீர்த்திபெற்ற இந்நூலாசிரியர் பலவாறு வாதித்திருக்கிறார் என்பதை இதற்குமுன் எடுத்துக்காட்டியிருக்கிறோமல்லவா. சொத்திற்குறிய சுதந்தரத்தைப்பற்றி மேல் விவரிக்கப்பட்டிருக்கும் சித்தாந்தத்தில் குடும்ப சமுதாயத்தின் செயல்களைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. பிரத்தியேக மனிதர் எப்படி சொத்தைத் தங்களுக்குச் சொந்தப்படுத்திக்கொண்டார்கள் என்பதைப் பற்றி மாத்திரமே அதில் பிரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமென்னவெனில், ஆதியில் ஸ்வபாவிக நிலை யொன்று மனிதருள் வழங்கிவந்ததென்றும், அந்நிலைமையில் சுயேச்சையாயும் சுகமாயும் வசித்துவந்த மனிதரின் செயல்களை அறிவதினால் மாத்திரமே இப்பொழுது வழங்கிவரும் ஏற்பாடுகளின் உத்பத்தியை நாம் அறியக்கூடுமென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பூர்வீக சங்கங்களில் வழங்கிவந்த இச்சுவபாவிக நிலையைப்பற்றியாவது அச்சங்கங்களிலடங்கிய பிரத்தியேக மனிதரின் செயல்களைப்பற்றியாவது நமக்கு சிறிதும் அறிவுகிடையாது. ஆகையால் சொத்திற்குரிய சுதந்தரத்தைப்பற்றி மேற்கூறிய சித்தாந்தத்தைப் பிழையென்றே கொள்ளவேண்டியது.

தற்காலத்தில் சொத்திற் கொண்டாடப்படுஞ் சுதந்தரமெல்லாம் பூர்வீகத்தில் குடும்பத்தினாலும் குடும்பங்களின் சனசங்கியை விர்த்தியடைவதினால் உண்டாகும் கிராம சமூகங்களாலும் பொதுவில் அனுபவித்துவந்த சுதந்தரத்திலிருந்தே உற்பத்தியாயிருக்கின்றன. இதற்கு தற்காலத்தில் இத்தேசத்திற் காணப்படுகின்ற சில ஏற்பாடுகளே பலமான சாட்சியாயிருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் நாளைக்கும் சில கிராமங்களுக்கு கரையேடு கிராமங்களென்று பெயர். அக்கிராமங்களில் ஒருவயலும் நிரந்தரமாய் ஒரு குடும்பத்திற்கு மாத்திரம் சுயாதீனப்பட்டிருப்பதில்லை; கிராமத்திலுள்ள வயல்களெல்லாம் அடிக்கடி மாற்றப்பட்டு வெவ்வேறு குடும்பங்களால் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. நிலங்களெல்லாம் கிராமசமூகத்திற்குப் பொதுவென்று கொள்ளப்பட்டும், கிராமத்தில் மிராசுபாத்தியமுடைய குடும்பத்தாருள் விபாகிக்கப்பட்டும், மூன்று அல்லது ஏழுவருடங்களுக்கொருதடவை மேற்கூறியபடி மாற்றப்பட்டும் வருகின்றன. மேலும் அக்கிராமங்களில் இவ்வேற்பாடு பன்னிரண்டுவருடங்கள் வரைக்கும் எந்தக்காரணத்தாலாவது நிறைவேற்றப்படாமல் தடைபட்டிருந்தால் பின் அதை என்னாளும் நிறுத்திவிடுவது வழக்கம். எல்லா கிராமங்களும் ஆதியில் கரையேடுகிராமங்களாகவே இருந்தனவென்று துரைத்தன நூலிற் பயின்றவரில் பலர் சொல்லியிருக்கிறார்கள். இதனால் நாமறிவதுயாதெனில், சொத்தெல்லாம் கிராமசமூகத்தாருடைய பொதுவாகிய சுதந்தரத்திற்குட்பட்டிருந்ததென்பதும் இப்பொதுவான சுதந்தரம் நாளடைவில் வழக்கம் மாறிப்போய் விட்டதனால் பிரத்தியேக மனிதரின் சுதந்தரத்திற் குட்பட்டுவிட்டன வென்பதுமே.

மேற்கூறப்பட்டது நிலத்திலுள்ள சுதந்தரத்திற்கு மாத்திரம் உத்பத்தியைக் குறிப்பதல்லாது வேறு விதமான சொத்திலுள்ள சுதந்தரத்தின் உத்பத்தியை விளக்கவில்லை யென்று சிலர் ஆட்சேபிக்கலாம். அப்படி பகுத்துச் சொல்லுவதற்கு தகுந்த ஆதாரமில்லை. நாளைக்கும் நமக்குள் அநேக அவிபக்த குடும்பங்கள் அங்கு மிங்கும் இருக்கின்றன. அவற்றில் நிலம், வீடுமுதலிய எல்லா சொத்தையும் குடும்பத்திற் சேர்ந்தவர் பொதுவிலனுபவித்து வருகிறார்கள். புதல்வன் ஒருவன் பிறந்தவுடனே அவனுக்கு குடும்பச் சொத்தில் பாத்திய முண்டாகிறதும் தவிர பகுத்தறியும் படியான வயது முதிர்ந்த வுடனே மனதிருந்தால் தன்னுடைய பாகத்தை பிரத்தியேகமாய் அனுபவித்துக்கொள்ளலாம். இச்சுதந்தரத்தைக் கொண்டாடாது அவிபக்தர்களாய் குடும்பத்துடன் சேர்ந்து வசித்துஎல்லாச்சொத்தையும்பொதுவிலனுபவித்து வருவது தற்காலத்தில் வரவர அரிதாய்க்கொண்டு வந்தாலும், முற்காலத்தில் அவ்வேற்பாடு வெகுசாதாரணமாய் நடந்து வந்ததென்பதைச் சிறிதேனும் ஆட்சேபிக்கக் கார

ணமில்லை. ஆகையால் ஆதியில் நிலம் மாத்திரமல்லாது எல்லாவித சொத்திற் குரிய சுதந்தரமும் பொதுவில் அனுபவிக்கப்பட்டு வந்து நாளடைவில் பலகாரணங்களால் இப்பொதுவான சுதந்தரம் அழிந்து பிரத்தியேக சுதந்தரத்திற்கிடம் கொடுத்ததென்று பலவித்துவான்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய ஆதாரங்கள் இப்பொழுது நமது ஹிந்துதேசத்தில் வழங்கிவரும் சம்பிரதாயங்களுள் மேற்கூறியபடி காணப்படுவதல்லாமல், முற்காலத்தில் ரோமாபுரி ராச்சியத்தாருள் நடபடிக்கையிலிருந்தும் தற்காலத்தில் ஐரோப்பியருள் பிரதான வினத்தார்களில் வழங்கும் சட்டங்களுக்கு மூலாதாரமாய் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பெயர் பெற்ற ரோம சட்டவொழுங்கிலும் பலவாறு காணப்படுகின்றன. மேலும் உருஷிய, அங்கிலேய, ஜர்மானிய தேசங்களிலும் தற்கால வியவசாய முறைகளிற் சிலவற்றை இச்சித்தாந்தத்திற்கு பலமான சான்றாக அனேகர் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவற்றை இவ்விடத்தில் தகுந்தபடி விவரிக்கிறதற்குச் சந்தர்ப்பமில்லை.

10. அடுத்து ஆலோசிக்க வேண்டியது இன்னதென்று முன்பே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அதாவது, எல்லா சொத்துக்களிலும் பிரதானமாகிய நிலத்திற்குரிய சுதந்தரம் எப்படிப்பட்டதென்பதும், எவ்விதமாய் அனுபவித்து வரவேண்டியதென்பதுமே. நிலத்திலிருந்து பெயர்த்தெடுக்கக் கூடிய பொருட்களிலுள்ள சுதந்தரத்தைக் காட்டிலும் நிலத்திலுள்ள சுதந்தரத்தினிலக்கணத்தைக் குறிப்பாய் விளக்கிக் காட்டுவது பிரயாசமென்று சாதாரணமாய் யாவர்க்கும் விளங்கும். ஏனெனில், அதை நமக்கு வேண்டுங்கால் நம்முடைய பிரயத்தனத்தைக்கொண்டு உத்பத்தி செய்துகொள்ள முடியாது. அது கடவுளால் மனிதருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும் தவிர, உலகத்திலுள்ள நிலம் அளவற்றதல்ல. அதிலும் பயிரிடக்கூடிய நிலம் நிரம்ப சொல்பமென்றே சொல்லவேண்டியது. மேலும் தரையிலிருந்து பெயர்க்கக்கூடிய சொத்தைக்காட்டிலும், நிலத்திற்கும் சனங்களின் சுகத்திற்கும் வெகு சமீபமான உறவிருக்கின்றது. ஏனெனில், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களெல்லாம் நிலத்திலிருந்தே உத்பத்தியாகின்றன. துரைத்தனத்தார் நிலத்தைத் தங்களுடைய விசாரணைக்குட்படுத்துவதுபோல் நமது இதர சொத்துக்களை தங்களுடைய ஆதீனத்துக்குட் படுத்துவதற்கு மனிதர் எவ்விடத்திலும் சம்மதிக்கிறதில்லை. இவ்விஷயங்களை எல்லாம் ஆலோசித்துப் பார்க்குமளவில் நிலத்திற்குரிய சுதந்தரத்தைப்பற்றி பின்னே குறிக்கப்படும் இரண்டு மூன்று விசேஷங்கள் வெளிப்படுகின்றன.

முதலாவது, துரைத்தனத்தார் தங்களுடைய குடிகளை இரட்சிக்கக் கடமைப்பட்டிருப்பதால் வெவ்வேறு மனிதரின் பிரத்தியேக சுதந்தரத்திற் குட்பட்டிருக்கும் நிலத்தை மேற்கூறிய கடமையைச் செலுத்தற்காக தக்கபடி உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் நிலத்தின்சொந்தக்காரரில் எல்லோரையும் அவரவர் நிலங்களின் உயர்வு தாழ்வுக்கும் அவற்றின் அளவுக்கும் தக்கபடி பட்சபாதமில்லாது துரைத்தனத்தார் பொதுவான விதிகளுக்கு மாத்திரமே உட்படுத்தக்கூடும். நிலம் மனிதரில் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் கடவுளின் கிருபையினால் மனிதரின் சுகத்திற்காகப் படைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதால், நிலத்தில் மனிதருக்குப் பிரத்தியேக சுதந்தரம் கூடாதென்றும், ஒவ்வொரு சங்கத்தாருடைய நிலம் முழுவதும் அவர் எல்லவர்க்கும் பொதுவென்றும், துரைத்தனத்தார் சனசமூகத்தின் பிரதிநிதியாய் நின்று நிலத்திலுள்ள சுதந்தரத்தை நிர்வாகித்து அதை பயிரிடக்கூடியவருள் குத்தகைக்குப் பிரித்துவிட்டு குத்தகைப்பணத்தை வசூல் செய்து பொது நலத்திற்குச் சாதனமாய் உபயோகித்து வரவேண்டியதென்றும், சிலர் தங்கள் கொள்கையைப் பரவச்செய்து வருகிறார்கள். இவருடைய அபிப்பிராயத்தைப் பற்றி ஆலோசிப்பதற்கு இது சமயமல்ல. தற்காலத்தில் நாகரீகமடைந்த எல்லாதேசங்களிலும் நிலத்திற் சுதந்தரம் வெவ்வேறு மனிதரால் அனுபவிக்கப்பட்டு வருகிறதேயன்றி அத்தேசங்களில் ஆளுகை செலுத்திவரும் துரைத்தனத்தார் நிலமெல்லாம் தங்களுடையதென்று பாவிக்கும் நடபடிக்கை எங்குமில்லை, பயிரிடுஞ்

செலவு போக பாக்கி வரும்படியானது குத்தகைப்பணமாக பிரத்தியேகச் சொந்தக்காரருக்கே செலுத்தப்பட்டு வருகிறது. துரைத்தனத்தார் வரியை மாத்திரம வாங்கி வருகிறார்களே தவிர குத்தகைப்பணத்தை தங்களுடையதென்று வசூல் செய்து நிலத்திற்குள்ள பூரண சுதந்தரத்தையும் தாங்களே நிர்வகித்து வருவதாகக் காணப்படவில்லை. மேலும் நிலத்திற்குரிய சுதந்தரம்முழுவதும் முற்காலத்தில் சனங்களால் பொதுவிலனுபவிக்கப்பட்டு வந்ததாக மேற்கூறப்பட்டிருப்பதைக் கொண்டு, நிலமெல்லாம் துரைத்தனத்தாருடையதென்று சொல்லுவது தகாதென்று வெளிப்படுகிறதும் தவிர, அப்பொதுவான சுதந்தரத்திலிருந்துதான் தற்காலத்தில் நிலத்தில் வெவ்வேறு மனிதருக்குள்ள சுதந்திரங்களெல்லாம் உத்பத்தி அடைந்தனவென்றும், அச்சுதந்தரங்களையனுபவித்துவர அவருக்குப் பாத்தியமுண்டென்றும், துரைத்தனத்தாருக்கு நிலம் அவசியமாயிருந்தால் சொந்தக்காரனுக்கு தகுந்த விலை கொடுத்து அவனுடைய சுதந்தரத்தை நீக்கியபின் மாத்திரமே அவர் நிலத்தைக் கைப்பற்றலாமென்றும் நாம் தெளிவாய் அறிகிறோம். முற்காலத்தில் ஐரோப்பா கண்டத்திலும் வேறு சிலவிடங்களிலும் நிலமெல்லாம் அரசனுடையதென்றும், அரசனிடத்திலிருந்து சிலபிரபுக்கள் வரி கொடுத்தல், போரிற் சேவித்தல் முதலிய நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்தைப் பெற்றுக்கொண்டார்களென்றும், இந்நிபந்தனைகளின் வேறுபாட்டினால் பலதிறங்களாக வகுக்கப்பட்ட நிலங்களையடைந்து அனுபவித்து வந்த பிரபுக்களிடத்திலிருந்து சுவாதந்திரியத்தையுடைய சாதாரண சனங்கள் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கிப் பயிர் செய்து வந்தார்களென்றும், இப்படிப்பட்ட ஏற்பாடு ஐரோப்பாகண்டத்தில்மத்திய காலங்களிலிருந்ததினால் அங்கும், மேற்கூறியபடி வேறு சில விடங்களிலும் நிலமெல்லாம் அரசனுடைய சுதந்தரத்திற்கு மாத்திரமுட்பட்டிருப்பதாயும் பிரத்தியேகமனிதருக்கு நிலத்தில் ஒருவித சுதந்தரமுமில்லையென்றும் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள், இவ்வபிப்பிராயம் பிழையென்பதற்கு தகுந்த ஒரு காரணமிருக்கிறது. அதாவது, மேற்கூறிய குத்தகையேற்பாட்டிற்குட்படாது சில நிலங்களில் சனங்களே சர்வ சுதந்தரத்தையும் அனுபவித்து வந்தார்கள்; அவற்றை அரசர் சர்வமானியமாகக் கொடுத்ததினால் சனங்கள் அவற்றிற்குச் சொந்தக்காரராகவில்லை. ஆகையால் எல்லா நிலமும் எக்காலத்தும் அரசருக்கே சொந்தமாயிருந்ததென்று கூறுவதற்கு ஆதாரமில்லை. இப்பரதகண்டத்திலும் நிலத்திலுள்ள சுதந்தரம் ஆதியில் கிராம சமூகத்தாருடையதாகவே இருந்ததென்பதற்கு தகுந்தகாரணம் மேல் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அங்கிலேயரிற் சிலர் இத்தேசத்தில் சனங்களுக்கு நிலத்தில் ஒருவித சுதந்தரமுமில்லையென்றும், அச்சுதந்தரம் எக்காலத்தும் துரைத்தனத்தாரால் அனுபவிக்கப்பட்டு வந்திருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இதுஒருபெரும் பிழையென்பதற்குச் சந்தேகமில்லை. பூர்வீகத்தில் மனுநீதி தவறாது செங்கோல் செலுத்தி வந்த ஆரியவரசர்களும், மத்தியகாலத்தில் அரசு செலுத்திய மகம்மதியரும் சனங்களுக்கு நிலத்திற் பாத்தியமில்லையென்றும், நிலத்தின் சொந்தக்காரரென்று பேர்பூண்டவரெல்லாம் தங்களுடைய குத்தகைக்காரரென்றும் நடபடிக்கைகளிலாவது தஸ்தாவீஜ்களிலாவது ஒரு பொழுதும் குறித்திடாதிருக்கையில் தற்காலத்தில் துரைத்தனத்தை வகித்து வரும் அங்கிலேயருக்குமாத்திரம்நிலத்திலுள்ளபூரண சுதந்தரம் எவ்வாறு கிடைத்ததென்று நன்றாய் விளங்கவில்லை. இந்த விஷயத்தில் அங்கிலேயருள்ளும் அபிப்பிராய பேதம் இல்லாதிருக்கவில்லை.

இரண்டாவது, நிலம் தற்காலத்தில் வெவ்வேறு மனிதரின் சுதந்தரத்திற் குட்பட்டிருந்தாலும், அதனால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சனங்கள்பிரயாணம்செய்தற்குள்ள சுதந்தரத்தை இழந்து விடுவதில்லை. பாலங்கள் பாதைகள் முதலானவை சனங்களின் சஞ்சாரத்திற்கு அவசியமாயிருக்கின்றன; அவையில்லாது மனிதரின் சங்கங்கள் அபிவிர்த்தி யடைவது சாத்தியமல்ல. போக்குவரவிற்கு வேண்டிய பாதைகளையடைந்து சனங்கள் சீர்திருத்தம் சுகானுபவம் முதலியவற்றைக் கைக்கொள்ளுவதற்கு அவருக்குச் சுதந்தரமுண்டென்பதைப்பற்றிச் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆகை

யால் அவற்றைச் சனங்கள் அனுபவிக்கக்கூடாதபடிக்கு நிலத்தின்சொந்தக்காரர் தங்களுடைய சுதந்தரத்தைக் கைக்கொண்டு நிறைவேற்றல் தகாது. இப்படியே ஒருவனது நிலத்தின் வழியாய் ஒரு நீரோட்டம் சுபாவமாய் ஓடிக்கொண்டிருந்தால், பிறர் அதை உபயோகிப்பதைத் தடுக்கும் வண்ணம் அந்நிலத்திலுள்ள சுதந்தரத்தைச் செலுத்தாதிருக்க அவன் நிர்ப்பந்தப்பட்டிருக்கிறான்.

(இன்னும் வரும்.)

கி. சுந்தரராமன், எம்., ஏ.

நடுவேனிற்கனவு.

5-ம் அங்கம்.

1-வது இடம். ஆதேன்ஸ் நகரம். தீஸியுஸ்ஸினது அரண்மனை.

[தீஸியுஸ், ஹிப்பாலிடா, பிலாஸ்ட்ரோட், பிரபுக்கள், பரிவாரங்கள் வருதல்.]

ஹிப்பாலிடா.—என் தீஸியுஸ்ஸே, அக்காதலர்கள் சொல்வது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

தீஸியுஸ்.—அவர்கள்சொல்வதில் ஆச்சரியம் உள்ள அளவு உண்மையில்லை. இங்ஙனமுள்ள அற்புதக் கட்டுக்கதைகளையும், கந்தர்வர்களைப் பற்றிய புத்தியில்லாப் பிதற்றல்களையும் நான் ஒருநாளும் நம்பேன். காமுகர்களும் பித்தர்களும் கொதிக்கும் மூளையையுடையவர்கள்; மனத்து உருவமமைக்கும் கற்பிதசக்தியை உடையவர்கள்; ஆதலின், அமைந்த விவேகத்துக்கு அகப்படாதனவெல்லாம் அம்மூளைக்கும் சக்திக்கும் பிடிபடுகின்றன. பித்தனும், காமுகனும், கவியும்முற்றிலுங்கற்பித சக்தியினாலேயே அமைந்தவர்கள். ஒருவன் பரந்த நரகத்துள்ள பேய்களிலும் அதிகப்பேய்களைக் காண்கிறான்; அவன்தான் பித்தன். காமுகனோ, பித்தன்போன்றே *இரதியின் (ஹெலனின்) அழகைக்குறத்தியின் (ஜிப்ஸியின்) உருவத்திற் காண்கிறான். கவியின் கண்ணோ, சுத்தமான உன்மத்தத்திற் சுழன்று வானமுதற்பூமிவரையிலும் பூமிமுதல் வானம் வரையிலு முள்ளவற்றைக் காண்கின்றது. யாருமறியப்படாப்பொருள்களைக் கவி தன் மனத்தாற்கற்பிக்க, அவன் எழுதுகோல் அவற்றிற்கு உருவங்கொடுத்து அம்மாயச் சூனியத்திற்கு இருப்பிடமும் பெயரும் நல்குகின்றது. இப்படிப்பட்ட குணமுடையோர் கற்பித சக்தியை அதிகமுடையோராதலின், மனத்தாற் கிரகிக்கத்தக்க மகிழ்ச்சியைக் காணுமிடத்து அம்மகிழ்ச்சியின் பிறப்புக்குக் காரணமானவற்றையும் கற்பித்துக்கொள்ளுகிறார்கள். இரவில் மனத்துத் தோன்றும் பயத்தாற் செடியானது கரடியாக எளிதில் எண்ணப்படுகிறது.

ஹிப்பாலிடா.—அவர் தங்களுக்கு 'இரவில் நேர்ந்தன'வென்று சொல்லியவையெல்லாம் ஒரு தொடர்ச்சியான கதையாதலையும், அவர்களுக்கு அப்பொழுதுண்டான மனவேறுபாடுகளையும் யோசிக்குமிடத்து அவை முற்றும் அவருடைய மனத்தோற்றத்தால் விளைந்தவையல்லவென்றே நாம் எண்ணல்வேண்டும். அவற்றின் பயனாக நிலையான மாறுதல் டெமிட்ரியஸ்ஸிடத்தில் இப்பொழுதும்காணப்படுகின்றது. ஆயினும் அவை நாம்வியக்கத்தக்க அதிசயமே.

தீஸியுஸ்.—இதோ, அக்காதலர்கள் இன்புற்று உவகையோடு வருகிறார்கள்.

[லைஸாண்டர், டெமிட்ரியஸ், ஹெர்மியா, ஹெலனா வருதல்.]

நண்பர்களுக்கு நாளுக்குநாள் மனத்து அன்பு வளர்க; மேன்மேலும் இன்பம் பெருகுக.

லைஸாண்டர்.—எம்முடையவற்றிலும் அதிகமான அன்பும் ஆநந்தமும் உமக்கு நடக்குமிடத்தும் உண்ணுமிடத்தும் உறங்குமிடத்தும் எங்கும் உண்டாகுக.

தீஸியுஸ்.—வாருங்கள்; நம் சிற்றுண்டிக்கும் நாம் உறங்கும் நிசிவேளைக்கும் இடையில் ஒரு ஜாமகாலம் செல்லவேண்டுமே. அக்காலம் சுகமாய்க் கழிவதற்கு என்னவேஷக் கூத்துவேண்டும்; என்ன நாட்டியம் வேண்டும்? நம்முடைய உல்லாஸ விஷயங்களுக்குக் காரியக்காரனாயிருப்பவன் எங்கே? என்னவிதமான வேடிக்கைகள் கையிருப்பில் இருக்கின்றன? நமக்கு ஒரு வேலையுமில்லா நீண்டகாலத்தின் துன்பத்தைத்

* ஹெலன்.—க்ரீஸ் தேசத்து ஓர் ராஜஸ்திரி; இரதியைப்போல் பேரழகுடையவள். ஜிப்ஸிகள்:—நாடோடியாய்த்திரியும் ஜாதியார்; குறச்சாதியைப்போல் கறுத்த மேனியர்; குறிசொல்லல் முதலியவற்றாற் பிழைப்பவர்.

தணிப்பதற்கு நாடகம்ஒன்றுமில்லையோ? பிலாஸ்ட்ரோட்டைக் கூப்பிடு.

பிலாஸ்ட்ரோட்.—பராக்கிரமமுள்ள தீஸியுஸ்ஸே, இதோ இருக்கிறேன்.

தீஸியுஸ்.—பொழுது போக்கிற்கு என்ன நாடகம் கைவசத்தில் வைத்திருக்கிறாய்? வேஷக் கூத்தோ, பாட்டோ என்ன இருக்கிறது? இப்படிப்பட்டது ஒன்றுமில்லாவிடில் நாம் பொழுதுபோக்குவது எப்படி?

பிலாஸ்ட்ரோட்.—இன்ன இன்ன வேடிக்கைகள் சித்தமாயிருக்கின்றனவென்பது இச்சுருக்கத்திற் குறிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில்முதலிற் காணவிரும்புவது இன்னதென்று அருளிச்செய்ய வேண்டுகின்றேன். (சுருக்கத்தைக் கொடுத்தல்.)

தீஸியுஸ்.—(படித்தல்) *"ஸென்டார்ஸ்ஸோடு ஹெர்க்யுலிஸ் செய்த போரைப்பற்றிய பாட்டை ஆதென்ஸ் நபும்ஸகன் ஒருவன் ‡சுரமண்டலத்தில் வாசித்தல்" இது வேண்டுவதில்லை; என் இனத்தானாகிய ஹெர்க்யுலிஸின் இவ்வெற்றிப்பாட்டை என் காதலிக்குச் சொல்லியிருக்கிறேன். (படித்தல்) †"குடிகாரப்பெண்கள் தம் குடிவெறிக் கலகத்தில் த்ரேஷ்ய தேசத்து சங்கீத வித்வானுடைய குடலைக் கிழித்தல்" இது பழைய ஆட்டம்; நான் 'தீப்ஸ்' நகரத்தினின்றும் வெற்றிபெற்று வரும்பொழுது ஒருமுறை ஆடப்பட்டது. (படித்தல்) "ஒரு பெரிய கவி வறுமையால் இறந்ததற்காக * ஒன்பது கலைமகளும் புலம்பல்." இது கடுமையான வசைப்பாட்டு; நமது விவாககாலத்துக்கு ஒத்ததன்று. (படித்தல்) "பிரமஸ்ஸையும் அவன் நேசிக்கும் திஸ்பியையும் பற்றியதான நீண்ட சிறுகாட்சி, துக்க மகிழ்ச்சி." மகிழ்ச்சி, அது துக்ககரமானது! நீண்டதும் குறுகியதும்! சூடுள்ள பனிக்கட்டி என்பதுபோலிருக்கிறது. இவ்வொவ்வாதனவற்றுள் நாம் பொருத்தங்காண்பதெப்படி?

பிலாஸ்ட்ரோட்.—என்னாண்டவனே, இந்த ஒரு கூத்தின் பெயர்; பெயரோவெகுநீளம்! இரசமில்லாத கூத்திது. கூத்து முழுவதிலும் பொருத்தமானதொன்றேனுமில்லை. அது துக்ககரமானதுதான்; ஏனெனின், பிரமஸ தற்கொலை செய்துகொள்ளுகிறான்; அதை அவர் 'ஒத்திகை' பார்க்கும்பொழுது கண்டேன். அப்பொழுது நான் சிரித்த சிரிப்பால் எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

தீஸியுஸ்.—இதை ஆடுபவர்கள் யார்?

பிலாஸ்ட்ரோட்.—வேலை செய்துசெய்து கை உரங்கொண்ட இந்நகரத்துக் கைத்தொழிலாளிகள்; அவர்கள் இதுவரையில் மனத்தால் வேலை செய்தே அறியார். உம்முடைய கலியாணத் தன்றிரவில் இக்கூத்தை ஆடவேண்டுமென்று தமக்குப் பழக்கமில்லாத காரியத்திலிறங்கி அதில் மிகவும் வருந்தி உழைத்திருக்கிறார்கள்.

தீஸியுஸ்.—நாம் அதைக்காண்போம்.

பிலாஸ்ட்ரோட்.—வேண்டுவதில்லை, என் உயர் குலத்தலைவ. இது நீர் காணத்தகுந்ததன்று. நான் முழுவதுங்கேட்டேன். அதில் ஒன்றுமில்லை. ஆனால், உமக்குத் தங்களாலியன்ற உபசாரம் செய்யவேண்டுமென்று மனப்பூர்வமாயெண்ணி எத்தனையோ படாத பாடெல்லாம்பட்டு அவர்கள் அக்கூத்தைப் பாடஞ்செய்திருக்கிறார்கள். இதை நினைத்து ஒருவேளை நீர் அவர்கள் கூத்தைப்பார்க்க விரும்பலாமேயன்றி மற்றைப்படி அக்கூத்தில் ஒன்றுமில்லை.

தீஸியுஸ்.—அக்கூத்தை நான் அவசியம் காண்பேன். கபடமற்றுத் தம் கடமையைச்செலுத்துவோர் செய்வதொன்றுந் தப்பாகாது. ஆதலின் நீ அவர்களை இங்கு அழைத்துவா. மாதர்களே, நீங்கள் உங்களிடத்தி லிருங்கள்

(பிலாஸ்ட்ரோட் போதல்.)

ஹிப்பாலிடா.—மனப்பூர்வமாய்த் தம் கடமையைச் செலுத்தவெண்ணும் பேதை ஜனங்கள் தங்கள்வன்மைக்கு எட்டாதகாரியத்தைத் தொடங்கி அதிற் கஷ்டப்பட்டுத் தப்பிப்போவதைப்பார்க்க எனக்கு விருப்பமில்லை.

தீஸியுஸ்.—என் மதுரமே, அப்படியொன்றுமிராது.

ஹிப்பாலிடா.—ஆட்டத்தில் அவர்களுக்கு ஒன்றுந்தெரியாதென்று அவன் சொன்னானே.

* ஸென்டார்ஸ்-என்பவர்கள் மலைநாடர்; குதிரையேற்றத்தில் வல்லவர். ஹெர்க்யுலிஸ்.—பீமஸேனனைப்போல் அதிபலவான்.

‡ சுரமண்டலம்-ஓர்வகை வாத்தியம்.

† த்ரேஷ்ய தேசத்தானாகிய ஸங்கீத ஸாஹித்ய வித்வான், 'ஆர்பியஸ்' என்பவன் கல், மரம் முதலியனவும் உருகும்படி பாடுந்திறமையையுடையவன்; தன் மனைவியை இழந்தபின், பெண்பாலோர் கூட்டத்தையே துறந்திருந்ததற்காக இவ்வகை மரணமடைந்தான்.

தீஸியுஸ்.—அவர்கள் ஒன்றுஞ்செய்யாதபொழுது அவர்களுக்கு பிரியவசனம் சொல்வது தான் நமது அதிக அன்புடைமையைக்காட்டுவது. அவர் செய்யத் [illegible] அறிந்து [illegible] தோஷிக்க வேண்டும். மனப்பூர்வமாய்க் கடமை செலுத்துவோன், திறமைக்குறைவால்,செவ்வையாய்ச் செய்து முடிக்காத காரியத்தை மேன்மக்கள் அக்காரியத்தின் முடிவுக்குத்தக்கபடி மதிக்காமல் அதைச்செய்தோனுடைய அளவுக்குத் தக்கபடி மதிப்பார்கள். நான் போய்க்காணு மிடங்களிலெல்லாம் கற்றறிந்த பெரியோர் அநேகர், எனக்கு நல்வரவுகூறி உபசார வார்த்தைகள் சொல்வதற்கெண்ணி இன்னது சொல்வதென்று முன்புதானே யோசித்து நிச்சயஞ்செய்து வைத்துக்கொள்வதுண்டு. அவ்வாறு நிச்சயஞ்செய்து கொண்டதைச் சொல்லியபொழுது அவர்முகம் வெளுத்து விடவிடென நடுங்கியதையும், வாக்கியத்தினிடையில் தாறுமாறாய் நிறுத்தியதையும், பயத்தால் வழக்கமாயுள்ள உச்சரிப்பை யிழந்து வார்த்தை எழும்பாமல் தொண்டை யடைபட்டு முடிவில் நல்வரவு கூறாமலே ஊமைபோல் நின்றதையும், எத்தனையோ முறை கண்டிருக்கிறேன். என் இன்பமே, இச்சமயங்களில் அவர் மௌனமே எனக்கு நல்வரவுகூறி எல்லா உபசாரமும் செய்ததாக நான் எண்ணுதல் வழக்கம். பயந்து தம் கடமையைச் செலுத்துவோரின் மௌனமானது, தழுதழுப்பின்றித் தைரியத்தோடு வரும் சொல்வன்மையுள்ள மொழியால் தெரிவிப்பதுபோல் என்னிடத்து அவருக்குள்ள பக்தியையும் அன்பையும் செவ்வையாகத்தெரிவிக்கின்றது. ஆதலின், என் அன்பே, பேசமாட்டாத நிஷ்கப்படியின் ஸ்வற்பப் பேச்சில் அதிகப்பேச்சின் பொருளிருக்கிறதென்பது எனது கொள்கை.

(இன்னும் வரும்,)

எஸ். நாராயணசாமி அய்யர், பி. எ.

ஹிந்துக்களின் க்ஷயகதி.

5-வது தேஜஸ் க்ஷயம்.

நமக்குள் நாளுக்குநாள் தேஜஸ் க்ஷயம் உண்டாகி வருகிறதென்பதில் சந்தேகமில்லை. தேஜஸ் என்பது பொதுவாய்ச் சரீரத்திலும் முக்கியமாய் முகத்திலும் விளங்குங் காந்தி. இதுவன்றி, தேஜஸ் என்பது இந்திரியங்கள் கருவி[illegible]களை ஐவைகளை அடக்கி மனோவியாபாரங்களை அந்தர் முகமாய் ஒரு முனைப்படுத்தி இச்சா சக்தியை தன் வசப்படுத்திப் பயின்றுவரும் தபோ முயற்சியால் ஏற்படும் விசேஷ சக்திக்கும் பெயர். இவ்வகை விசேஷ சக்தி விளங்குமிடத்தில் சரீர காந்தியும் முகக் காந்தியும் உண்டாவதுஸஹஜந்தான். மனோநிக்கிரகம் செய்து இச்சாசக்தியை தன் வசப்படுத்திப் பயின்றுவரும் தபோ சக்தியினால் வரும் விசேஷ சக்தியை இவ்விடத்தில் விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபிக்க நான் உத்தேசிக்கவில்லை. ஆனால் தபோ விருத்தியில் மனோ நிக்கிரகமும் இச்சா சக்தி பிரத்தியாகாரப்படுவதும் ஏற்படுவது போலப்பூரணமாய் லௌகீக விருத்திகளில் ஏற்படாவிட்டாலும் அதாவது அவசரங்கட்குத் தக்க வண்ணம் பூரணக்குறைவாய் ஏற்படவேண்டியதும் ஏற்படுவதும் சாதாரணம். ஆகையால் இரண்டையும், ஒருங்கு சேர்த்து உபந்நியாசஞ் செய்யலாம்.

தேஜஸ் இருவகைப்படும். முதலாவது தத்தம் தேஜஸ்; இரண்டாவது, தத்தம் ஜாதிக்குள் அனேகரை உத்தேசித்து ஒருவனிடத்தில் விளங்கும் விசேஷ தேஜஸ். விசேஷ தேஜஸானது புத்தி முதலிய விசேஷ காரணங்களின் மேல் தங்கினதாக இருந்தாலும் ஜாதி தேஜஸானது ஒவ்வொருவனிடத்திலும் இருக்கவேண்டும். முற்காலத்தில் லக்ஷம் பத்து லக்ஷமாகக் கூடியிருக்கும் கீழ் ஜாதிக்காரர்க்குள் ஒரு பிராமணன் இருந்தாலும் அப்பிராமணனைப் பிரத்தியேகமாய்ச் சுட்டிக் காட்டக்கூடும். தற்காலத்தில் அநேக பிராம்மணர்களிடத்தில் பிராம்மண தேஜஸிருந்தாலும்,சிலப் பிராமணர்களை அவ்வாறு தெரிந்தெடுப்பது அசாத்தியம், கோர்ட்டுகளில் கைகூப்பி நமஸ்காரம் சொல்லும் சில பிராம்மண சாக்ஷிகட்கு நமஸ்காரம் சொல்கிறதா ஆசீர்வாதஞ் சொல்கிறதா வென்று வெகு சங்கடப்பட வேண்டியிருக்கிறது. இதற்குக்காரணம் இவர்களின் முகத்தில் தத்தம் ஜாதி தேஜஸ் விளங்காமைதான். பிராம்மணர்களிற்சிலர்க்கு எப்படி ஜாதிதேஜஸ்

மங்கிப்போயிருக்கிறதோ அப்படியே மற்றஜாதிகளிலும் ஜாதி தேஜஸ் மங்கிப்போயிருக்கிறது. மலையாளத்தில் இவ்வகைக்குழப்பம் அதிகம்.

ஜாதி தேஜஸ் என்பது சாதாரணமாய் பாரம்பரியத்தைப்பற்றி உண்டாகிறது. பாரம்பரியம் விட்டு விலகும்போது ஜாதி தேஜஸ் மங்கும். மேல்ஜாதிப் பெண்ணிடம் கீழ்ஜாதி ஆண் சேரும்போது பாரம்பரியம் விலகி ஜனிக்கும் சந்ததிக்குத்தாழ்ந்தஜாதிதேஜஸ்ஸாவதுகலப்பு தேஜஸ்ஸாவது உண்டாகிறது. தாழ்ந்த ஜாதிப் பெண்ணிடம் மேல்ஜாதி ஆண் சேரும்போது அதின் மூலம் உண்டாகும் சந்ததிகட்கு மேல் ஜாதி தேஜஸ்ஸாவது, தாழ்ந்த ஜாதி தேஜஸைக் காட்டில் உயர்ந்ததும், மேல்ஜாதி தேஜஸ்ஸைக் காட்டில் தாழ்ந்ததுமான கலப்பு தேஜஸ்ஸாவது உண்டாகிறது. இம்மலையாளத்தில் சூத்திர ஸ்திரீகட்கு சம்பந்தம் பெரும்பான்மையும் பிராம்மணரும் க்ஷத்திரியரும் ஆகையால் இங்குள்ள சூத்திர ஜாதிகட்கு தேஜஸ் கிட்டமுட்ட பிராம்மண தேஜஸ்ஸுக்கு சமமாயிருக்கிறது. அல்லாமலும் இந்தராச்சியத்து சூத்திரர்களுக்கு பிராம்மண ஆசாரங்களும்,இருகால ஸ்நானம், சுத்த வஸ்திர தாரணம், தர்மசித்த விருத்தி, தெய்வ பிராமணபக்தி இவைகள் ஏற்பட்டிருப்பதாலும் தேஜஸ் அதிகரிக்கும்படியான காரணமும் ஏற்பட்டது. இந்த ராச்சியத்தில் தற்கால சூத்திர ஸ்திரீகள் தாழ்ந்த ஜாதி சம்பந்தம் உபேக்ஷிக்கிறதில்லை. அதனாலும் பிரவிருத்தி தோஷத்தாலும் அநேக சூத்திரர்க்கு தேஜஸ் மங்கியிருக்கிறது. நன்றாய்ப் பார்க்குமிடத்து சில திருஷ்டாந்தங்களில் ஒரு நம்பூரிக்கும், போற்றிக்கும்,இளையது மூத்தது, புஷ்பகன், வாரியர், சூத்திரன், திருவாப்பாடு இவர்கட்கும் வித்தியாசம் சொல்ல முடியாத மாதிரி சம ஸ்திதி வந்திருக்கிறது.

சகவாசத்தாலும் ஜாதி தேஜஸ் குறையக்கூடும். சூத்திரரோடு அதிகம் ஊடாடிவரும் பிராம்மணர்களும் மாப்பிள்ளை முதலியவர்களோடு ஊடாடிவரும் சூத்திரர்களும் இவ்வாறு தேஜஸ்க்குறைவு பெற்றிருக்கிறார்கள். நமது தேசத்தில் பட்டிக்காடுகளிலுள்ள பிராம்மணரையும், *மாப்பிள்ளை,துலுக்கர் இவர்கட்குள் அதிகம் ஊடாடிவரும் சூத்திரரையும்கண்டால் இது விசதப்படும்.

சூத்திரர்க்குள்ளும் பல வகுப்பிருப்பதால், ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் தன் வகுப்புவிட்டு அந்நியவகுப்பார் அதிகம் உள்ள திக்கில் அவர்கள் மத்தியில் ஊடாடி வரும்போது அவர்க்கு தன் வகுப்பு தேஜஸ் மங்கி அந்நிய வகுப்பு தேஜஸ் வந்து விடுகிறது. பாண்டியிலிருந்து மலையாளத்தைச் சேர்ந்த தொடுபுழையில் குடியேறியிருக்கும் சைவவேளாளர்களைப் பார்த்தால் மலையாள சூத்திரரைப்போல் காணப்படுகிறார்கள்.

துர்நடத்தையுள்ள விதவைகள் மேல்ஜாதிக்காரரைக்கூடி பிள்ளை பெற்றாலும் அப்பிள்ளையை அவர்கள் எறிந்துவிட்ட மூலை முடுக்குகள் புதர்கள் பள்ளத்தாக்குகளிலிருந்து எடுத்து கீழ் ஜாதிக்காரர் வளர்க்கும்போது கீழ் ஜாதி தேஜஸ் அப்பிள்ளைக்கு வந்து சேர்கிறது. ஜெனனத்தால் அதிகம் கிடைத்த மேல்ஜாதி தேஜஸ்ஸானது கீழ்ஜாதி சகவாசத்தால் முற்றிலும் மறையாமல் கொஞ்சம் விளங்குவதும் சாதாரணந்தான்.

பூசார ஜலசார வித்தியாசத்தாலும் ஆகார வித்தியாசத்தாலும் ஜாதி தேஜஸ் மங்கக்கூடும். மலையாளத்திற் குடியேறி யிருக்கும் பரதேசப் பிராமணர்களையும் பரதேசத்திற்றானே ஸ்திரமாகவிருக்கும் பிராமணர்களையும் பார்க்கும்போது இந்தச் சங்கதி தெளிவாய் விளங்கும்.

மலையாளத்தில் வியாபார சம்பந்தத்தால் மலையாள வழக்கம் ஆசாரத்தில் பெற்றிருக்கும் திருநெல்வேலி பிராமணர்கட்கும்,பாலக்காட்டு பிராமணர்கட்கும், மதுரை, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களிலுள்ள பிராமணர்கட்கும் எவ்வளவோ தேஜஸ் பேதமுண்டு.

ஸ்வஜாதி விருத்திமாறி அந்நியஜாதி விருத்தி ஏற்படுவதாலும் தேஜஸ் மாறக்கூடும். சில சைக்களர் விருத்தி பேதத்தால் சைவரைப்போற் காணப்படுகிறார்கள். தட்டாரைப்போலும் செட்டிகளைப்போலும் காணப்படும் பிராமணர்கள் விருத்திபேதத்தாலும் ஒழுக்கபேதத்தாலும் அவ்வாறு காணும்படி க்ஷயப்பட்டவர்களே.

* மாப்பிள்ளைகள் என்பவர் மலையாளத்திலுள்ள ஒருவகை ஜாதியார் (Moplahs.)

ஒழுக்கத்துக்கும் சரீர தேஜஸுக்கும் சம்பந்த முண்டென்பதில் சந்தேகமில்லை. சாஸ்திர பரிஞ்ஞானத்தோடு வைதிக விருத்தியாய் ஜெபமும் தபமும் முயற்சியாயுள்ள ஒரு பிராமணனுடைய தேஜஸ்ஸுக்கும் தக்கதாவனமில்லாமல் பிராதக்கால ஸ்நானமில்லாமற் செந்துளியும் எண்ணெயழுக்கும் பிடித்து மூன்று மயில் நாறும்படிக்கு ஊத்தைவாயும் உடல் விசுந்துர்மணமுமாய் ஜெபதபங்குன்றி லௌகீகமே காரியமாகக்கொண்டு அகாலத்தில் தோலியுங் குப்பையும் கலந்த அசுத்த ஆகாரந்தின்று மனதெப்போதும் ஆபரணத்திலும் திரவியத்திலும் பற்றி நின்று சகவாசம் கேவலமாய் நிற்கும்பிராமணன் தேஜஸுக்கும், அஜகஜாந்தரம் வித்தியாசமுண்டென்று அனுபோகத்தால் தெளிவாகக்கூடும். அனாசாரமாயும் அதர்மமாயும் லௌகீக தோரணையாயும் நடக்கும் ஜனங்கட்கு சில திருஷ்டாந்தங்களில் ஆபரணாதிகள் புஷ்டியாய்ப் பெருகுவது நிமித்தம் அனாசாரமும் அதர்மமும் லௌகீகதேட்டாளமும் பெரிதென்றெண்ணி ஆரிய ஒழுக்கங்கள் மாறி கேவலம் நீசர்களுடைய பிரவிருத்திபோல் நடப்பதால் தேஜஸ்குறைவுண்டாகிறது. சில அறிவிலிகள் கண்டது காக்ஷியென்ற இருண்ட சித்தாந்தத்தின்மேல் முன்பின் பாராமல் சந்துபொந்துகளிற் றிரிந்து மலஜல விசர்ஜனமில்லாமல் பிரவிருத்தித்து இரத்தபுஷ்டி யெல்லாம் இழந்து கார்மேகம் பிடித்து நிறம்மங்கி ஒளிமங்கி க்ஷயப்பட்டுவருகிறார்கள். நகைப்புஷ்டியும் பணப்புஷ்டியும் பெற்றவர்கட்கு பெரியவன் பெரியவள் என்ற பேர் சார்வதுடன் வேகடை சுபாவமும் ஏற்பட்டுத் தான் என்ன செய்தாலும் பாதகமில்லையென்று நினைப்புவந்து விடுகிறபடியால் ஒழுக்கமும் வெகுவாய் மாறி அதனால் தேஜஸ் ஹானியும் வருகிறது. சில வாலிபர்கள் நாடகக்காரரைப் பார்த்து ‡வேகடை சுபாவம்கைப்பற்றி ஆடையாபரணப் பெருமையில் வீழ்ந்து தாசியின்பாதாரவிந்தமே சரணமென்றடைந்து, பொட்டுவைா'கமான்'வளைவுள்ள குடுமிகளை மரத்திபோல் பின்புறத்தில் வகுத்துச் சொருகிச் சாந்துப்பொட்டிட்டு *சோரையெல்லாம் சுகத்தில் இழந்து மரணச்சாயை தாக்கிய சஞ்சாரப்பிரேதம்போல் வெளுத்து மேகவெக்கையால் அங்கங்கறுத்து கண் ஜீவவொளிமங்கி மார்பெலும்பு விலாவெலும்பு வளைவளையாய் வெளிப்பட்டு ஓர்விதத் தேஜஸ்ஸு மில்லாத மானிடப் பதராகக் காணப்படுகிறார்கள்.

ஹிந்துக்கட்குள் தாழ்ந்த ஜாதிக்காரர்க்குள் அல்லாமல் மேல் ஜாதிக்காரர்க்குள் மத்தியபானம் இல்லாமலிருந்தது. இப்போது நடத்திவரும் கலால் ஏற்பாட்டாலும் இப்போது கைக்கொண்டு வரும் இங்கிலீஷ் அபிப்பிராயத்தாலும் கட்குடி எல்லா ஜாதிக்காரர்க்குள்ளும் ஏற்பட்டு அவர்களின் தேஜஸைக் கெடுத்துவருகிறது. ஆனால் தெய்வ கடாக்ஷத்தாலும் நம்முடை முன்னோர்களின் தர்ம்ம விதிகளாலும் பிராம்மணர் முதலிய மேல்ஜாதிக்காரரிடம் கட்குடி அவ்வளவு விஸ்தாரப்படவில்லை.

ஆகாரக்குறைவாலும் தேஜஸ் க்ஷயம் வரக்கூடும். செயலற்றவன் செயலுறும்போதும் செயலுற்றவன் செயலற்ற போதும் அவனிடம் விளங்கும் தேஜஸ் வித்தியாசம் இதற்கு அத்தாக்ஷி. பம்பாய்ப் பசுங்கன்றுகளை இத்தேசத்தில் வாங்கிவளர்ப்பவர்கள் அவைகட்குத் தகுந்த இரை கொடுக்காமல் ஜீவன்குன்றி ஒளி கெடும்படி செய்திருக்கிறார்கள்.

குணக்ஷயத்தாலும் தேஜஸ் க்ஷயம் உண்டாகிறது. இவ்வகை க்ஷயகதியால் பரோபகாரம் சத்தியம் முதலிய மேன்மையான குணங்கள் விலகி சுவயகாரிய புத்தியும் அற்பத்தனமும் பிடித்து புருஷத்தன்மைக்கு விபரீதமாய் நடத்தையுண்டாவதால் நாளுக்குநாள் முகத்தில் விளங்கும் ஒளி மழுங்கி பாம்பும் தேளும் மூண்டும் மூடும் அடர்ந்த இருட்டுக் குகைபோல் வஞ்சனையாலும் காமக்குரோதாதியாலும் மனம் மழுங்கி, தேஜஸ் க்ஷயமுண்டாகிறது.

வழக்கபேதமும் தேஜஸ்ஹானி வருத்தும். காப்பி, மாம்சம், ரொட்டி இவைகள் நூதனமாய்ச் சேர்த்து வரும் அநேகர்க்கு உஷ்ணாதிக்கத்தால் உடல் வெளுத்து நிறம் நலப்பட்டாலும் தேஜஸ் மங்கியிருப்பதைப் பார்க்கக்கூடும்.

ஒரே குடும்பத்தில் ஒழுக்கம் பேதப்பட்டிருக்கும் இருவர்க்கு தேஜஸும் பேதப்பட்டிருக்கிறது வெகு சாதாரணமாய்க் காணலாம்.

‡ வேகடம்=யௌவனம்.
* ஜோர் (ஹிந்துஸ்தானிவார்த்தை)=பலம்.

பல ஜாதிக்காரர் ஒருங்கு சேர்ந்து பயில்வதால் அவர் அவர்க்குள்ள தேஜஸ் கைமாறி தேகத்தில் கலந்து சற்று க்ஷயப்படக்கூடும். ஆனால் இந்த அற்ப தீங்கை உத்தேசித்து அவ்வகையேற்பாட்டைக் கைவிடக்கூடாது.

உசிதமில்லாத விவாகத்தாலும் பாலிய விவாகத்தாலும் தேஜஸ்ஹானி வரக்கூடும். அரும்பைக் கசக்கினால் நல்லபுஷ்பமாகுமா? தேகத்தில் ஜீவகாந்த சக்தி புஷ்டியாயிருக்கும்போது ஜனிக்கும் சந்ததிகட்கு தேஜஸ் அதிகமாயிருக்கும். அவ்வகை சக்தி குறைந்த காலத்தில் ஜனிக்கும் சந்ததிகட்கு தேஜஸ்குறைவாயிருக்கும். ஜீவகாந்த சக்தி தேகத்தில் அதிகப்படுவது அரோகத்தாலும், ஆரோக்கியத்தாலும், பிரமசரியத்தாலும், சுத்த விருத்தியாலும், திடசித்தத்தாலும், நிஷ்களங்க தர்ம்மபுத்தியாலும், சகவாச விசேஷத்தாலும், மனம் தன் வசப்படலாலுமாம். இவ்வகைக் காரணங்கட்கு ஹானிவராமல் பாதுகாக்கும்போது ஜீவகாந்த சக்தி புஷ்டியாய் உத்பத்தியாகி வீரியத்தோடு கலந்து தேஜஸ் விளைவிக்கும், மலஜலபந்தங்கள் ஜீவகாந்த சக்தி பெருகுவதற்கு விரோதம். இதனாற்றான் மாதாவயிற்றில் மலங்கட்டி நிற்கும் காலத்தில் பிண்டோத்பத்தியாகும்போது அப்பிண்டம் மந்தமாயிருக்குமென்று திருமூலர் கூறியிருக்கின்றார்.

ஜாதிக்கலப்பால் தேஜஸ் தோஷம் வருகிறதென்று அபிப்பிராயப் படுவதில் ஐகமத்தியமின்றி பலஜாதிக்காரர்களும் பின்னப்பட்டு கெட்டுப்போக வேண்டுமென்று சொல்ல வரவில்லை. ஜாதிபேதத்தால் ஐகமத்தியக் குறைவும் இணக்கக் குறைவும் நேரிடவேண்டிய நிர்ப்பந்தமில்லை. நோக்கம் பொது க்ஷேமத்தைப் பற்றியும், வர்ணாச்ரமப்படி ஒழுக்கமும் நின்றுவிட்டால் இணக்கமும் பிராதருத்வமும் பூரணமாய் ஏற்பட்டு தேஜஸ் ஹானிப்படமல் விருத்தியாகக்கூடும். பொது க்ஷேமத்திற்கு வேண்டியகாலங்களில் நாலுஜாதியும் ஒருங்கு சேர்ந்து பிரவிருத்திப்பதற்குத் தடையில்லை. ஆபத்காலத்தில் ஊண்கலக்கும்படி கூட மனுஸ்மிருதியில் அநுவதிக்கப்பட்டிருக்கிறது. பூரண யோஜனையில்லாத சிலர் ஜாதி பேதத்தால் இந்துக்கள் இந்து தேசத்தை இழந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இந்து தேசம் வெள்ளைக்காரர்க்குள்ளானது ஜாதிபேதத்தால் அல்ல. வருணாச்ரம தருமங்களின்பேர் வைத்துக்கொண்டு தாழ்ந்த ஜாதிகட்கு இடுக்கண் வருத்தக்கூடாது. சண்டாளன் முதல் பிரவிருத்தி சுத்தியாலும் ஒழுக்க மேம்பாட்டாலும் சீர்திருத்தம் அடையும்போது மேல்ஜாதிக்காரருடைய சுதந்தரமெல்லாம் யோக்கியதைபோலும் விட்டுக்கொடுப்பதில் தடையில்லை. பறையன் வித்வானால் பிரம்மரிஷிபோல் பூஜிக்கப்படுகிறான். ஏழு தலைமுறை பிராமணவீரியங் கலந்த சூத்திரனை பிராம்மணனென்று சொல்லும்படி மனுஸ்மிருதியில் கூறியிருக்கிறது.

விசேஷ தேஜஸ்ஸுக்குக் காரணம் புத்திக்கூர்மை, ஆகாரவிசேஷம், ஆரோக்கியம், ஒழுக்கம் இவைகள்தான். புத்தி க்ஷயப்படுவதற்குக் காரணம் அநேகம். அவைகள் இன்னதென்று அடுத்தபத்திரிகையில் உபந்யாசிக்கப்படும். சாதாரண ஜனங்கட்குள் ஊடாடி வரும் உத்தியோகஸ்தனை உத்தியோகஸ்தனென்று அறியாதவன் கூட சீக்கிரமாக நிதானிப்பது உடை நிமித்தமல்லாமல் விசேஷ புத்தி பிரகாசத்தோடு கூடியிருக்கும் சரீர தேஜஸினாற்றான். அக்னியில்லாக்கரி இருள் மண்டி மங்கியும் அக்னியுள்ளகரி தேஜோமயமாயும் இருக்கும் தன்மைபோல், புத்தியும் ஒழுக்கமேம்பாடு மில்லாதவன் மங்கியும், இவை யுள்ளவன் தேஜஸ்வியாகியும் இருக்கிறான். நம்பூரி பிராமணர்கட்குள் தேஜஸ்ஹானி வந்திருப்பது புத்தி க்ஷயத்தாற்றான். ஒத்தில்லா(வேதாத்தியயனம் இல்லா) நம்பூரிகளைக் காட்டில் ஒத்துள்ள நம்பூரிகள் எவ்வளவோ தேஜஸ்விகளாயிருக்கிறார்கள்.

ஆகாரயோக்கியதைக் குறைவால் தேஜஸ் குறைவு வரக்கூடும். வெள்ளைக்கார பிரபுக்களுடைய விசேஷ தேஜஸ் ஆகாரமேன்மையால் வருவதென்று 'டார்வின்' என்பவர் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். பரீக்ஷை கொடுத்து உத்தியோகத்துக்கு வருமுன் சிலர் வெகு தாழ்ந்த ஆகாரம் அருந்தி தேஜஸ்மங்கியிருந்தாலும் பரீக்ஷை கொடுத்து உத்தியோகம் கிடைத்தது முதல் ஆகாரசுத்தியும் மேம்பாடும் பெற்று தேஜஸ்ஸும் கூடி பிரகாசிக்கிறார்கள்.

(இன்னும்வரும்.)

எஸ். இராமஸ்வாமிஅய்யர், பி.ஏ., பி.எல்.

மாதர்மஞ்சரி.

VI. மேரீ ஸோமர்வில் சரித்திரம்.

இம்முறை நமது மாதர்மஞ்சரியில் சேர்க்க
எடுத்துக்கொண்டிருக்கும் மாது அவளுடைய
சாஸ்திரக்கியானத்துக்கு உலகப்பிரசித்தியாக
ப்பேர்போனவள். சாஸ்திரக்கியானத்தில் விசே
ஷப்பிரக்கியாதிபெற்று விளங்கும் அபூர்வமான
அங்கிலேயமாது சிரேஷ்டைகளில் இவள் ஒரு
த்தி. இம்மாது 1780-வது வருஷத்தில் ஜெட்
பரோ என்னும் பட்டணத்தில் அவளுடைய
சிறத்தையார் வீட்டில் பிறந்தாள். இவளுடைய
தகப்பனார் கப்பற் சைனியத்தில் ஓர் உத்தி
யோகஸ்தராயிருந்தார். 1780ஹ டிசம்பர்
மாசத்தில் அவர் தன் மனைவியைவிட்டுப் பிரி
ந்து பிறதேசங்களில் சேவகத்திற்குப் போக
வேண்டி நேரிட்டது. அவருடைய பத்தினி
லண்டன்மாநகர் மட்டும் வந்து தன் கணவரை
வழியனுப்பிவிட்டு அவளுடைய சுதேசமாகிய
ஸ்காத்லாந்துக்குத் திரும்பிச் சென்றாள். சென்
றவள் பூரணகருப்பிணியாக விருந்தமையால்
ஜெட்பரோவிலுள்ள அவள் சகோதரி வீட்டில்
தங்கியிருக்க நேரிட்டது. அச்சகோதரியின்
கணவர் பேர் டாக்டர் ஸோமர்வில். அவர்கள்
வீட்டில்தங்கியிருக்கையில் இச்சரித்திரத்திற்கு
அதிபதியாகிய மேரீபிறந்தாள். டாக்டர்ஸோமர்
வில்லுக்கும் அவர் பத்தினிக்கும் பிறந்திருந்த
'உவில்லியம் ஸோமர்வில்' என்னும் அவர்கள்
புத்திரனை மேரீ இரண்டாம் புருஷனைகப் பின்
னால் மணம் புரிந்து கொண்டமையால் இச்சிறத்
தையார் சிற்றப்பனே பிந்தி மேரியின் மாமி மா
மன் ஆனார்கள். அவள் அவளுடைய அந்திய
காலத்தில் குறிப்பிட் டெழுதிவைத்த பண்
டைய ஞாபகக் குறிப்புகளில், தான் தன்னுடை
ய புருஷனை விட்டுப்பிறந்து அவருடைய தாயா
ரால் செவ்வெண்ணெய் போட்டுத் தாலாட்டி
வளர்க்கப்பட்ட அதிசய சம்பவத்தைக் குறித்
தெழுதியிருக்கிறாள்.

மேரீ தாய்வழி, தகப்பன்வழி யிரண்டிலும்
பூர்வோத்திரமுள்ள நல்ல குலத்திற் பிறந்த
வள், அவளுடைய தகப்பனார் *அட்மிரல்
பேர்பாக்ஸ் என்பவர் கப்பற் சைனியத்தில்
உன்னத பதவியுள்ள அதிகாரம் பெற்றவர்.
அவருடைய குலம் 'யார்க்ஷயர்' மாகாணத்
தில் பேர்போன பூர்வோத்திர முடையது.
அக்குலத்தைச் சேர்ந்த ஒருவர் முதலாவது
சார்லஸ் அரசன் ஆண்டகாலத்தில், அவ்வ
ரசன் செய்த கொடுமைகளால் தேசத்தில்
குழப்பமும் கலகமும் அதிகரித்து, தேச மிர
ண்டுபட்டு அரசனுக்கும் குடிகளுக்கும் சண்
டைகளுண்டான காலத்தில், ஜனங்கள் கக்ஷியி
லிருந்து அவர்கள் பக்கத்துச் சைனியத்தில்
ஒரு சேனாபதியாக நின்று அதிவீரபராக்கிரமம்
காட்டிப் பேர்பெற்றவர். இவர்கள் குடும்பத்தி
ற்கும், அமெரிக்கா 'யூனைடெட் ஸ்டேட்ஸ்'
என்னும் ஐக்கியமாகாணங்களுக்கு சுவாதீனம்
கிடைக்கச்செய்து பிரக்கியாதிபெற்ற தேசாபி
மானியும் அவ்வைக்கியமாகாணங்களின் முதல்
'ப்ரெஸிடெண்டு' மாகிய ஜியார்ஜ் வாஷிங்டன்
அவர்களுடைய குடும்பத்திற்கும் உறவுண்டு.
மேரியின் தாயார் ஸ்காத்லாந்தில் 'சார்டர்ஸ்'
என்று பேருள்ள ஒரு பூர்வகுடும்பத்தி லுதித்
தவள். அவளுடைய பந்துக்கள் அவர்களு
டைய பூர்வோத்திர விசேஷத்தை வெகுவாய்க்
கொண்டாடி கர்வம் பாராட்டி வந்தார்கள்.
மேரியின் தாயாராகிய 'பேர்பாக்ஸ்' பெருமா
ட்டி அவளுடைய அதிசயமான குழந்தையின்
எண்ணங்களிலும் அவாக்களிலும் அதிக அனு
தாபம் கொண்டவளாகத் தோற்றவில்லை. மேரி
அவளுடைய தாய்தகப்பனார்க ளிடமிருந்து
சில உத்தம குணங்கள் படியப் பெற்றிருந்
தாள். 'பேர்பாக்ஸ்' பெருமாட்டியிடம் ஸ்காத்
லாந்து தேசத்தாருக் கியல்பாயுள்ள சில மூட
பக்தியும் அதனால் விளையும் பயங் கொள்ளித்த
னமும் பூர்த்தியாக விருந்தபோதிலும், சிலவிஷ
ங்களில் அந்தம்மாள் அவள் கணவரைப்போல்
அவ்வளவு தைரியமுள்ளவளாக விருந்தாள்.
அந்த அம்மாளுக்கு அவள் புத்திரிசொல்லிய
படி "சமயோசித சாமார்த்தியமும், நிராச்
சுமையாக வந்துவிட்டால் தைரியம் பாராட்
டுந்தன்மையும்" அதிகமாயிருந்தது. ஒரு சம
யத்தில் அந்தம்மாள் குடியிருந்தவீடு தீப்பற்றி
யெரிந்து போம்படியாக மிகவும் பயங்கரமான
ஆபத்திலிருந்தது. அவள் வீட்டிற் கருகாமையி
லோரிடத்தில் தீப்பற்றிக்கொண்டது. அது
கொடுகேப்பரவி அவள் குடியிருந்த வீட்டிற்கு

* Admiral Fairfax

ஒரு வீடு விட்டு அடுத்துள்ள வீட்டின் கூறை
யில் பற்றிக்கொண்டு சுவாலை விட்டெரிந்தது.
பக்கத்திலிருந்த வண்டி வேலைச்சாலை யொன்
றில் போட்டிருந்த எண்ணெய்ப் பெட்டிகளும்
பீப்பாய்களும் தீப்பற்றிக் கொண்டு பிரமாத
மாக வெடிக்கத்தலைப்பட்டன. 'பேர்பாக்ஸ்'
பெருமாட்டி அவளுடைய வீட்டுப் பண்டங்
கள் பாத்திரங்களையும் குடும்ப தஸ்தாவேஜு
களையும்சேர்த்து நன்றாகமூட்டைகட்டி அவை
களை மேல்மெத்தையி லிருந்து கீழேயிறக்கத்
தயார் செய்து அதற்காக வேண்டிய ஆட்களை
யும் வீட்டில் கூட்டிவைத்துக்கொண்டு, எல்
லாம் சித்தமாகவிருக்கப் பார்த்துவிட்டு வீட்டி
லுள்ளவர்களைப் பார்த்து "சரி, இப்போது நா
மெல்லாரும் சாப்பிட உட்காரலாம், வாருங்கள்;
அடுத்தவீடு தீப்பற்றிக்கொண்டு விட்டால் உட
னே நமது சாமான்களை யெல்லாம் கீழேயிறக்
கிக்கொண்டு போகலாம்," என்று வெகு சாந்த
மாகச் சொன்னாள். கடைசியில் அடுத்தவீடு
தீப்பற்றிக்கொள்ள வில்லை. அண்டைவீட்டு
க்காரர்க ளெல்லாரும் அவசரப்பட்டு 'தட
புடல்' செய்து அவர்கள் வீட்டுச்சாமான்களை
யெடுத்துத் தெருவிலெறிந்து 'பண்டம் பாடிக'
ளெல்லாம் சேதமாகவிண்நஷ்டப்பட்டுப்போக,
'பேர்பாக்ஸ்' பெருமாட்டி ஒரு பீங்கானேடும்
உடையாமல் எல்லா சாமான்களையும் சாவ
தானமாகக் காப்பாற்றிக்கொண்டாள். இப்படி
ஆபத்து வேளைகளில் சாந்தமான தீரகுணம்
காட்டுந்தன்மை தாயைப்போல் பெண்ணிட
த்து மிருந்தது பின்னால் பலதடவைகளில்
தெரியவந்திருக்கிறது.

பரதேசங்களில் சேவகத்துக்குச் சென்ற
'ஸர். உவில்லியம் பேர்பாக்ஸ்' திரும்பிவர 9-
வருஷங்கள் சென்றன. அவர் இல்லாதிருந்த இந்
நீண்டகாலத்தில் 'பேர்பாக்ஸ்' பெருமாட்டியும்
அவள் குழந்தைகளும் 'எடின்பரோ' நகரத்
திற்கெதிரில் கடற்கரை யோரமாயுள்ள 'பர்ன்ட்
ஐலண்ட்' என்னும் ஓர் சிறிய கிராமத்தில் வசி
த்துக்கொண்டிருந்தார்கள். மேரீ குழந்தைப்
பருவமுள்ளவளா யிருக்கையில் வெளியிலும்
வாசலிலும் ஓடித்திரிந்து, படிப்பு என்பது இல்
லாமல், துஷ்டத்தனம் செய்வதில் காலத்தைக்
கழித்துவந்தாள். புஸ்தகவாசிப்பு ஒன்று மில்
லாவிட்டாலும் அவள் துஷ்டத் தனமாக
ஓடித் திரிந்து விளையாடுகையில் கடற்கரை
யோரத்தில் கிளிஞ்சல்கள், ஓடுகள், கடற்
பாசிகள் முதலானவைகள் பொறுக்கிவந்ததும்,
ஆகாயத்தில் சுயேச்சையாகப் பறக்கும் பக்ஷி
களையும் அவைகளின் செய்கைகள் குணவிசே
ஷங்களையும் பார்த்து நின்றதும், அவள் படுக்
கை யறையிலிருந்து பலகணிவாய் வழியாக
இராக்காலங்களில் ஆகாயத்திலுள்ள நக்ஷத்
திரங்களைப் பார்த்து வந்ததும், அதிசய மனோ
சக்தியுள்ள இக் குழந்தைக்கு வாஸ்தவத்
தில் வித்தியாப்பியாச மாகவே யிருந்திருக்க
வேண்டு மென்பதற் கையமில்லை. ஆயினும்
அவள் தகப்பனார் 9-வருஷகாலங் கழித்து கட
ல் யாத்திரையி லிருந்து திரும்பி வீட்டிற்கு
வந்தபொழுது மேரீ தான் கண்டு திகைக்கத்
தக்க "அவ்வளவு சிறு துஷ்டையாக" விருப்
பதைக்கண்டு உடனே அவளை ஒரு பள்ளிக்
கூடத்திற் கனுப்பத் தீர்மானித்தார். மேரியை
வாசிக்க அனுப்பிய பள்ளிக்கூடத்தில் உபாத்
தியாயர் வீட்டிலே பள்ளியிற் படிக்கும் குழந்
தைகளெல்லாம் சாப்பிட்டுக்கொண்டு வாசி
த்து வருவது வழக்கம். அப்படியே மேரீயும்
ஒருவருஷ காலம் அப்பள்ளிக்கூடத்தி லிருந்
தாள். ஓடியாடித்திருந்து உடம்பு தணிந்து
இளங்கொடிபோல் வளையும் சுறுசுறுப்புள்ள
தேகமுடைய அவளைக் கூட்டி லடைத்தாற்
போல் குனிய நிமிர இடமில்லாத விதமாய்
ஒரு சட்டத்தில் உட்காரவைத்து பெரிய அக
ராதி யொன்றைக் கொடுத்து அதைப் பக்கம்
பக்கமாய்ப் பாடம்பண்ணி வரச்சொன்னார்கள்.
அக்காலத்தில் சீர் பெற்ற அங்கிலேய நாட்டி
லும் பெண்பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்
கப்பட்ட படிப்பு இதுதான். இவ்விதப்படிப்பு
மேரீ மனதில் சிறிது மேறவில்லை யென்று நாம்
சொல்லத் தேவையில்லை, ஒருவருஷம் கழிந்த
தும் பெண்ணை வீட்டிற் கழைத்துக்கொண்டு
வந்தார்கள். அந்த ஒரு வருஷகாலம் அவள்
பள்ளிக்கூடத்திலிருந்ததில் கற்றுக்கொண்டது
ஒன்றுமில்லை. மேரியின் தாயார் இவ்வளவு பணம்
செலவழிந்ததும் வீணாகப் போயிற்றே யென்று
கோபித்துக் கொண்டாள். மேரிக்கு எழுத,
வாசிக்கவும், கணக்கு வைத்துக்கொள்ளவும்
மட்டும் தெரிந்திருந்தால் போதும்; அவள் தா
யார் திர்ப்தியாயிருந்திருப்பாள். அக்காலத்தில்

அங்கிலேய நாட்டிலும் ஸ்திரீகளுக்குத் தெரிய வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட படிப்பெல்லாம் அவ்வளவு தான்.

பள்ளிக்கூடப்படிப்பு இப்படி முற்றும் பிரயோசன மற்றுப்போனபின் மேரி தானாகக்கற்க ஆரம்பித்தாள். இப்படி 11-வது வயதில் அவள் தானாகக்கற்க ஆரம்பித்த கல்விப்பயிற்சியானது அவளுடைய 92-வது வயதில் அவளிறந்ததோடு தான் முடிவுக்கு வந்தது. அவள் பக்ஷிகள், மிருகங்கள், மீன்கள், செடிகொடிகள், கடற்பாசிகள் இவைகளைப்பற்றி தானறியக் கூடியவை யெல்லாவற்றையும் கற்றறிந்து கொண்டதன்றி அவள் கையிலகப்பட்ட ஷேக்ஸ்பியர் மகாகவியின் புஸ்தகமொன்றை வைத்துக்கொண்டு, தான் தனியாக ஒழிந்திருக்கக் கூடிய வேளைகளிலெல்லாம் அதை வாசித்துவந்தாள். இப்படி நாளடைவில் தன்முயற்சியால் விர்த்தியடைந்து கொண்டு வருகையில் அவளுடைய தாயார் தன் குழந்தைகளுடன் எடின்பரோ நகரத்துக்குக் குடிப் பெயர்ந்து சென்றாள். அங்கே மேரி ஒரு சங்கீத வித்வானிடம் பாடங் கற்றுக்கொண்டாள். அதோடு தானே லத்தீன் பாஷையும் கொஞ்சம் கொஞ்சம் கற்றுக்கொண்டாள். கல்விப் பயிற்சியில் அவளுக்கு சுபாவமாக விருந்த மனச்சார்பு முற்றும் இப்பொழுது வெளிக்காண ஆரம்பித்து விட்டது. ஆனால் அவள் 14-வயதுடையவளாகும் வரையில் படிப்பு விஷயத்தில் அவளுக்கு ஒரு வார்த்தை சொல்லி உற்சாகப்படுத்தினவர்கள் ஒருவருமில்லை. அவளுடைய 14-வது வயதில் அவள் தான் பிறந்த வீட்டுக் கதிபர்களாகிய ஜெட்பரோவிலுள்ள தன் பெரியதாய் சிற்றப்பனைக்காணச்செல்லும் பாக்கியம் பெற்றாள். அவளுடைய சிற்றப்பா டாக்டர் ஸோமர்வில் என்பவர்தான் அவள் படிப்பு விஷயத்தில் அவளுக்கு முதல் முதல் ஒத்தாசை செய்து உற்சாகப்படுத்தினவர். மேரி தான் லத்தீன்பாஷை கற்றுக்கொள்ள முயற்சித்துவருவதையும் அவள் முயற்சி பிரயோசனப்படாதுபோ விருப்பதையும் இரகசியமாய் அவரிடம்சொல்லத்துணிந்தாள். அவர் அதைக்கேட்டு, அவளுக்குத் தைரியங்கூறி, முற்காலத்தில் ஸ்திரீகள் பூர்வ பாஷைகளிற் கற்றுத்தேறிய விற்பன்னர்களாயிருந்ததைப்பற்றிச் சொல்லி அவளும் ஊக்கத்தைக்கைவிடாமல் படித்து வந்தால் லத்தீன் பாஷையில் தேற்சியடையச் சந்தேகமில்லையென்றுரைத்து அவளை உற்சாகப்படுத்தியதன்றி, தினந்தோறுங் காலையில் 2-மணி நேரம் அவளோடிருந்து வர்ஜில் என்னும் லத்தீன் மகாகவியினது கிரந்தங்களை அவளுக்கு ஒத்தாசையாகப்படித்து வந்தார். இப்படி அவள் லத்தீன் பாஷை கற்றுக்கொண்ட சிலவருஷங்களுக்குப் பின் கிரேக்க பாஷையும் கற்றுக்கொள்ள ஆரம்பித்து காலக்கிரமத்தில் அப்பாஷையிலுள்ள சிறந்த காவியங்களை யெல்லாம் வாசித்துக் கிரகித்துக்கொள்ளும்படியான அவ்வளவு தேர்ச்சியடைந்தவளானாள்.

அவளிடத்தில் காணப்படும் ஒரு ஆச்சரியமான விஷய மென்னவென்றால் அவளுடைய புத்தி பலவகைப்பட்ட லக்ஷணங்கள் பொருந்தியதாயிருப்பதே. சாதாரணமாகப் புருஷரிலும் சரி, ஸ்திரீகளிலும் சரி, ஒரு விஷயத்தில் மிகத் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் மற்ற விஷயங்களில் அவ்வளவாகச் சிரத்தை யெடுத்துக் கொள்வதில்லை. உதாரணமாக சாஸ்திரக்கியானம் முதிர்ந்து சாஸ்திரத்தில் விற்பன்னர்களாயிருப்பவர்கள் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைத்தவிர மற்ற விஷயங்களைப்பற்றிக் கவனிக்கிறதில்லை. இது லோகானுபவத்தில் சாதாரணமாய் நாம் காணும் விஷயமாயிருக்கிறது. இவள் விஷயத்திலோ அப்படியில்லை. "வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்" என்று வழக்கமாய்ச் சொல்லும் பழமொழி அவள் புத்தி விசாலத்திற்கே முற்றும் பொருந்தும். அறிவை அகலச் செய்யும் கலைகள், சாஸ்திரங்களில் எதுவாகட்டும், அவள் சந்தோஷத்துடன் கற்கவிரும்பாதது ஒன்றில்லை. தன் சுயபாஷையன்றி பூர்வ பாஷைகளிலும் அவள் தேர்ச்சியடைய விரும்பி அவள் மனோவிருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டதைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். எடின்பரோ சித்திர சாஸ்திர மகா வித்வான் ஒருவரிடத்தில் அவள் படமெழுதும் வித்தை கற்றுக்கொண்டாள். அவர் இந்த அம்மாள் தன்னிடம் படித்த மாணாக்கர்களெல்லாரிலும் சூடிகையும் சூக்ஷ்ம புத்தியுமுள்ளவளாக விருந்தாளென்று சொன்னார். அவள் சாகும் நாள் வரையில் சித்திர மெழுதுவதிலும் படமெழுதுவதிலும் அவள் சந்தோஷப்பட்டுவந்தாள். சங்கீத வித்தையிலும் கைதேர்ந்தவள். தாபரசாஸ்திரத்திலும் அவள் மகா விற்பத்தியடைந்திருந்தாள். அநேக விஷயங்களில் அவள் அதிக விற்பத்தியடைந்து விளங்கினாலும் வானசாஸ்திரங்கற்பதிலுபயோகமாகும் கணித சாஸ்திரப்பயிற்சிசம்பந்தமாக அவளுடையபேர் விசேஷ பிரக்கியாதி பெற்று உலகத்தாருக்குள் விளங்கும். ஸ்திரீகள் படித்துத் தேறினால் அவர்கள் தங்கள் வீட்டு வேலைகளைப்பார்க்கமாட்டார்களென்று சொல்வோர் இத்தேசத்திலிருப்பது போல் அத்தேசத்திலும் சிலரிருந்தார்களென்று முன் ஓரிடத்தில் சொல்லி யிருக்கிறோமே. அக்காலத்தில் பேர்பெற்று விளங்கிய வித்வானும் விவேகவாசாலகருமான 'ஸிட்னி ஸ்மித்' என்பவர் இவ்வபிப்பிராயத்தை விநோத வார்த்தைகளால் தெரிவித்திருக்கிறார். அவருடைய கருத்தைப் பின்வரும் வெண்பா நன்றாகத்தெரிவிக்கிறது.

அறிவார் தருவி னருங்கனியைப் பெண்கள்
அறிந்துண்ணச்செய் திடுவோமாகில்-[1]செறிவாகும்
ஏற்ற குடும்பத்தி லிருக்குமற் றெல்லார்க்கும்
காற்றே யுணவாகுங் காண்.

அதாவது பெண்களைப் படிக்க விட்டால் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்குச் சோறு அகப்படாதென்பதாம். இப்படி நினைப்பது தப்பென்று ரூபிக்க மேரி ஸோமர்வில் பிரத்தியக்ஷ உதாரணமாக விளங்கினாள். அவள் படிப்பிலும், சாஸ்திரப்பயிற்சியிலும் அதிகபிரீதியுற்று அவற்றில் மிகத்தேர்ச்சி பெற்றவளாயிருந்தது போல் குடித்தனக்காரியங்களிலும் அப்படியே மேலானவளாக விருந்தாள். சமையல் செய்வதிலும், தையல் வேலையிலும் அவள் கைதேர்ந்தவளாக விருந்தாள். அவள் பர்த்தா விடத்து பக்தியுள்ள மனைவியாகவும், பிள்ளைகளிடத்து பிரீதியும் மன உருக்கமுமுள்ள தாயாகவும், நேசர்களிடத்து உண்மையான விசுவாசமுள்ளவளாகவுமிருந்தாள். பெரும்பான்மையாகத் தாய்மார் தம் பிள்ளைகளை வளர்த்து அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்துவைக்க எவ்வளவு காலம் செலவிடுவார்களோ அதைவிட அதிகக் காலம் செலவிட்டு அவள் தன் பிள்ளைகளுக்கு படிப்புச் சொல்லிக் கொடுத்து வளர்த்து வந்தாள். பிராணிகளிடத்தில் அவளுக்கு அளவற்ற பிரீதியுண்டு. சாஸ்திரக்ஞானம் பெற்றவர்கள் சாஸ்திரப்பயிற்சி செய்யுங்கால் பிராணிகளைப்பிடித்து அறுத்து ஜீவவதை செய்து சாஸ்திர உண்மைகளை யாராய்ந்தறிந்து கொள்வது அவசியமென்று சொல்லி அவ்வாறே நடப்பர். மேரி சாஸ்திரப்பயிற்சியில் அடங்கா ஆசையுள்ளவளாயிருந்தாலும் ஜீவ வதை செய்து சாஸ்திரப் பயிற்சி செய்யும் முறையினால் நடக்கும் கொடுமைகளைக்காண ஜீவகாருண்யம் நிறைந்த அவள் மனது நடுக்குற்றுத் தியங்கியதினால், அவள் எப்போதும் அம்முறைக்கு விரோதமாகவேயிருந்து, ஐரோப்பாகண்டத்தில் விசேஷ அனுஷ்டானத்திலிருந்த அம்முறை இங்கிலாந்திலெங்கும்பரவாதபடி தடுக்கஉழைத்து வந்த ஜீவரக்ஷகசங்கத்தலைவர்களோடு சேர்ந்துழைத்து வந்தாள். பக்ஷிகளிடத்து அவள்பரிபூரண அன்புடையவளென்று முன்னே சொன்னோமே. அவள் படிக்கும்பொழுதும் வேலையாக விருக்கும் பொழுதும் அவளிடத்துப்பழகிய பக்ஷிகள் அச்சமின்றி அவள் தோளிலும் தலையிலும் தத்தித் தத்தி யுட்கார்ந்து விளையாடும். அவள் பூரண விததியாசாமர்த்தியத்தோ டெழுதிய ஒரு பெரிய புஸ்தகத்தின் ஏடுகள் பல, அவளோடு பழகின ஊர்க்குருவி யொன்று அவள் தோளிலுட்கார்ந்திருக்க எழுதப்பட்டனவாம்.

பல வருஷங்கள் முன்பம்பாய்க் கவர்னராயிருந்தகனம் 'மௌண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டோன்' அவர்களோடு மேரி முதல் முதற்பரிச்சயம் செய்து வைக்கப்பட்டபொழுது இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் இத்தனி தேசத்தில் மைனாக்குருவியைப்பிடித்துக் கொன்றுதின்கிற வழக்கத்தைப்பற்றிப் பிரஸ்தாபம் நேரிட்டது; அப்பொழுது அவர் அதைக் கேட்டதிசயித்து "என்ன! மைனாக்குருவியைச் சாப்பிடுகிறதா!! ஏன், அதைவிட ஒரு குழந்தையைச் சாப்பிடலாமே! நன்றாயிருக்கிறது!" என்று சொன்னாராம். அவர் அப்படிச்சொன்னதனால் அவர்பேரில் அவளுக்கு மனம் பூரித்துப்போயிற்றென்று சொல்லியிருக்கிறாள்.

(இன்னும்வரும்,)

C. V. S.

[1] செறிவு—நிறைவு.

பொன்விளைநல்லூர்.

(திரவியசாஸ்திர சம்பந்தமானது.)

1-ம் அதிகாரம்.—(தொடர்ச்சி.)

பணமறியாப் பாமரர்.

நமதுமுதலியார், 'அடடா' இன்று நான் யார்முகத்தில் விழித்தேன். நேற்று இந்தக்காலத்திற் கெல்லாம் 'கல கல' என்று ரூபாயை ஓசைப்படுத்திக்கொண்டிருந்தேனே. ஐயோ அந்த இழவுபண்டாரம் அல்லவோ எனக்கு யமனாய் வந்தான். அவன்நாசமாகத்தான்போவான்'; என்று மனப்பூர்த்தியாய்சபித்துவிட்டு, தன்னைக் காட்டில் துரத்திவந்த தன் விரோதியைப் பார்த்துத் தன் மனதுக்குள்ளேயே 'காட்டில் வந்துவிட்டாலும் எப்படியாவது தப்பி ஊர் போய்ச்சேரலாமே. இந்த நாசகாலன் அல்லவோ என்னை இப்படிக் காட்டுமனிதனுக்கு இரையாக்கிவிட்டான். ஐயையோ! தெய்வமே! இருந்திருந்து காட்டுமனிதன் கையாலா சாகவேண்டும். இன்னும் ஒரு நாழிகைபோனால் நாராயணமுதலி இருந்தது கதையாய்ப்போமே. குழந்தைகள் அண்ணா எங்கே என்று கேட்க அம்மாள் என்ன பதில்சொல்லுவாள்? சுவாமீ, பழனிவேலவா, உனக்கு பாலபிஷேகம் செய்கிறேன். கார்த்திகைப் பட்டினி இருக்கிறேன். காவடி எடுக்கிறேன். எப்படியாவது இந்த ஒரு கண்டத்தினின்றும் என்னை விடுவித்து விடவேண்டுமென்று விம்மிவிம்மி அழுதுகொண்டு 'அடா சண்டாளப்பறைப்பயலே என்னையேனடா உற்றுப்பார்க்கிறாய். கடன்காரா? என்னைக்கொல்லவந்த உன்னையும் கொல்ல ஒருவன் வந்திருக்கிறான். என் கண்முன்னேயே உன் கழுத்தை நறுக்கி உன்கண் விழிகளைத் தோண்டுவதைப் பார்த்துவிட்டுப் பின்பு நான் என் உயிரை விடுவேன். துரோகி! உனக்கு நான் என்னடா செய்தேன். கோட்டான்போல் விழிப்பதைப்பார். கொஞ்சமேனும் கவலைப்படுகிறாயா' என்று சொல்லி முடிப்பதன்முன் அந்தக்காட்டுமனிதன் அவனை சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு அவன் கால்களை இறுகத்தழுவிக்கொண்டு 'சுவாமி, என்னை மன்னிக்கவேண்டும். தங்களை என் ஜன்மவிரோதியாகிய வேறொருவனென்றெண்ணி நான் மோசம் போனேன். ஐயோ, ஒருபாவத்தையு மறியாத தங்களை இந்தத்துன்பத்துக்கு ஆளாக்கினேனே! இனி இந்த நாய் சுப்பன் தங்களுடைய அடிமை. என்னை தயவுசெய்து மன்னித்தருளவேண்டும். விசனப்படாதேயுங்கள். ஒரு தீங்கும் செய்யாத நம்மைக் கடவுள் கைவிட மாட்டார்; பார்ப்போம்.' என்று குளிர்ந்த வசனங்களை இனிமையாய்ச் சொல்ல நாராயணன் 'இவன் பார்வைக்குக் காட்டுமனிதன்போல் இருந்தாலும் பேச்சில் அதிக நாகரீக முள்ளவனாயிருக்கிறான். அவன் இனிய முகத்தைப்பார்த்தால் ஏதோ நம்மைப்போல் இவனும் மோசம் போனவன்போலிருக்கிறது. தைரியமும் சொல்லுகிறான்; பார்ப்போம்.' என்று நினைத்து சற்றுகோபமும் துக்கமும் தணிந்து நிற்கையில், சுப்பன், நிர்வாணமாய், நாராயணனுடைய துக்கத்தைக்கண்டு இளகினவள்போல் அதி நளினமான பார்வையுடன் எதிரில்நின்ற சாளியின் சமீபத்தில்போய், தன்னுடைய இரண்டு கன்னங்களையும் தன்கைகளால் கிள்ளிக்கொண்டான். இதைப் படிப்பவர்களுக்கு சுப்பன் செய்தது ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால், ஸ்வேதர்களுக்குள் (வெள்ளைக்காரருக்குள்) 'சலாம்' செய்வதும் தொப்பியைக் கையில் தூக்கிக்கொள்வதும், நமக்குள் கைகூப்புவதும் தெண்டனிடுவதும், எப்படியோ அப்படி அந்தக்காட்டுமனிதருக்குள், கன்னத்தைக்கிள்ளிக் கொள்ளுதல் தாழ்ந்த வணக்கத்தைக் குறிக்கும் உபசாரமுறைமை. சாளியினுடைய மிருதுவான மான் போன்ற பார்வையைக் காணவே சுப்பனுக்கு 'நாம் எப்படியாவது உயிர் தப்பலாம்' என்ற தைரியம் உண்டாயிற்று. சுப்பன் கறுப்பா யிருந்தாலும், கம்பீரமான காத்திரத்தை யுடையவன். அவனுடைய சிரித்த முகத்தையும், சாந்தம், புத்திக் கூர்மை, இரக்கம், பெருந்தன்மை, முதலிய குணங்களை எழுதிவைத்ததுபோல் காட்டுகின்ற, மை தடவியது போல் கரிய, பெருவிழிகளையுடைய, கண்களையும் பார்ப்பவர்கள் அவனுக்கு வசியமாவது நிச்சயம். உயிராசை பணவாசை நிறைந்து, 'திடீரென்றுமரணம் சம்பவித்து விட்டதே' என்று நடுங்கி யழுது கொண்டிருந்த நாராயணனுக்குங்கூட சுப்பன் வாய் திறந்து பேசினவுடன் அவனிடத்தில் நம்பிக்கை உண்டாக வில்லையா? சுப்பன் சாளியிடம் சென்று வணக்கம் செய்யவே, சாளி அவனுடையகருத்தை அறிந்தவளா யிருந்தாலும், அவன் பேசிக் கேட்கவேண்டும் என்றோ, அல்லது அவனை சமீபத்தில் நிறுத்திக்கொண்டே இருக்க வேண்டுமென்றோ, அவனைப் பார்த்து, கொடூரமாய்ச் சொல்வதுபோல பாவனை பண்ணிக்கொண்டு, 'என்னகாரியம்? ஏன்?' என்று அதட்டிக் கேட்டாள். சுப்பன், 'பல்லிளித்துக் கெஞ்சுவது என் சுபாவமில்லை. நான் கேட்பதைக்கொடுத்தால் கொடு, இல்லாவிடில் போ' என்று சொல்பவன்போல் கம்பீரமான பார்வையுடன் சாளியின் பாஷையாகிய சீர்திருத்த மற்ற காட்டுத் தமிழிலேயே 'இந்தமனிதர் உங்கள் கையில் அகப்படக் காரணம் நான். அவரை தயவுசெய்து விட்டு விட்டால், என்னை ரட்சித்ததுபோலும். என்னை இந்தக்ஷணமே கொன்று தின்று திருப்தியடையுங்கள்' என்று சொல்ல அதற்குள் நாராயணனும் வயிற்றைக் குழைத்துக்கொண்டு, பல்லைத்திறந்துகொண்டு 'நான் ரூபாய் வேண்டுமானால் தருகிறேன்' (அதுகூட 'வேண்டுமானால்'தான்) என்று தன்னுடைய சில்லரைப் பையை 'கல கல' என்று ஓசைப்படுத்திக்கொண்டு அதிலிரு

ந்தவெள்ளி நாணயங்களில் ஒருகை வாரிக்காட்டினான். சுப்பனே போதுமான வக்கீலாயிருந்தாலும், நாராயணனுடைய பை மற்றோர் வக்கீலாக ஏற்படவே, சாளி அவர்கள் பக்கம் விண்ணப்பத்தை அனுகூலம் செய்வதாய்த் தீர்மானம் செய்துகொண்டு, நாராயணன் கையிலிருந்த பணத்தை வாங்கினாள். நாராயணன் 'எத்தனை ரூபாய் கொடுக்கிறாய், என்று சாளி கேட்பாள்' என்றுஎதிர்பார்த்தான். சாளி கனவில்கூட பணத்தைக் கண்டவளில்லை என்ற சங்கதி அவனறியான். சாளி பணத்தைக் கையில் வாங்கினவுடன் அதை ஒன்றொன்றாய் தொட்டுப்பார்த்தாள். பிறகு மூக்கினிடம் கொண்டுபோய் மோந்து பார்த்தாள். கண்ணிடம் கொண்டுபோய் உற்றுப்பார்த்தாள். அதில் அனேக நூதன நாணயங்கள் இருந்தன. அவைபார்க்கப் பார்க்கப் பகட்டாயிருந்தன. சாளி ஒன்றுந் தோன்றாமல் அதைக் கையில் வைத்துக்கொண்டு குதித்தாள், குலுக்கினாள், 'கல கல' என்று ஓசைப்படுத்தினாள், சிரித்தாள், கீழே எறிந்து பார்த்தாள். அதன் நாதத்தைக் கண்டு 'இடி இடி' என்று சிரித்தாள். அங்குமிங்குமோடி ஒன்றொன்றாய்ப் பொறுக்கினாள், மறுபடி குலுக்கினாள், சுப்பனைப் பார்த்து சிரித்தாள். சுப்பனிடம் கொடுத்து ஓசைப்படுத்தச் சொன்னாள். சுப்பன் அரைஅரை ரூபாயாக எடுத்து தன் விரல்களில் வைத்து 'கணீர், கணீர்' என்று சுண்டினான், அவள் காதினிடம் வைத்துக் குலுக்கினான், அவள் மார்பில் வரிசையாக வைத்து அவளை நிமிர்ந்து பார்த்தான். சுப்பன்சமீபத்தில் வரவர சாளிக்கு சந்தோஷம் அதிகரித்தது. சுப்பனுக்கும் சாளியிடத்தில் ஏதோ ஒருவிதமான நேசம் உண்டாய்விட்டது. இவர்களுடைய சந்தோஷத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நாராயணனுக்கு பணத்தை அறியாத பாமரரும் உலகத்தில் உண்டா என்று ஆச்சரியமாயிருந்தது, அவனும் தன்னிலைமையை மறந்து சிரிக்கத்தொடங்கினான். சாளி தன் மார்பின் மத்தியில், ஒரு புதிய அரைரூபாயை வைத்துக்கொண்டு, சுப்பனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, ஆடத்தொடங்கினாள். சுப்பனும் அவளுக்கு சரியாகக் கைகோர்த்து, நர்த்தனஞ் செய்ய ஆரம்பித்தான். அவர்களுடைய பாட்டுகளும் மெட்டுகளும் காலோசையும் கையோசையும் நாராயணனுக்கு நீலகிரிமலையில் வெள்ளைக்காரராடும் சதிரைக் காட்டிலும் அதிக ஆனந்தமாயிருந்தது. சாளி சந்தோஷப் பெருக்கத்தால் தன் கழுத்திலிருந்து ஒரு சங்குமாலையை எடுத்து சுப்பன் கழுத்தில் போட்டாள். சுப்பன் தோலுடை உடைவாள் சங்குமாலை இவற்றோடும், சாளி கைகால் தோள் தலை கழுத்து முதலிய இடங்களிலும் நிரம்ப பலவர்ணமான சங்குமாலை, வெள்ளைக்கல்மாலை முதலிய மாலைகளையும், தலையில் மயிலிறகும், மார்பு, மேற்கை முதலிய இடங்களில் ஓர்வித பச்சை எண்ணெயையும் தடவிக்கொண்டு நிர்வாணமாய்,

தந்தனக்கதந்தனக்க தாலேதாலாலோ
தனதனதந்தனக்க தாலேதாலாலோ.

என்று பாடிக்கொண்டும் ஆடிய ஆட்டம் சென்ற வருஷத்தில் கவர்னர் முதலிய மகாப்பிரபுக்கள்கூடி ஆடிய பிசாசாட்டத்திலும் அதிக அழகாயும் விசித்திரமாயு மிருந்தது. இப்படி சற்று முன்னம் அழுகையும் அச்சமும் நிரம்பியிருந்த அறையில் இப்பொழுது சந்தோஷமும் சதிருமாயிருந்தது. இவ்வளவு உல்லாசமா யிருக்கும் தருணத்தில் திடீரென்று கதவு திறக்கப்பட்டது. எல்லாரும் திரும்பிப் பார்க்க, நாராயணனையும் சுப்பனையும் பிடித்துவந்த காட்டுமனிதன் சாளி சாளியென்று கூவிக்கொண்டு வந்தான். அவனைக் கண்டவுடன் நாராயணன் பூனையைக் கண்ட எலிபோல் பதுங்கி விட்டான். சுப்பனும் மெள்ள சாளி கையைவிட்டு நழுவினான். உடனே சாளி தன்தகப்பன் உள்ளே வருமுன்னே சுப்பன் எதிர்கொண்டு சிரித்த முகத்துடன் 'ஏன் அப்பா' என்று கேட்க அவன் விசாரப்பட்டவன் போல் மௌனமாய் இருந்தான். சாளி 'ஏன் விசனமாயிருக்கிறீர்கள்' என்று கேட்க, அவன் 'ராத்திரி கூத்துக்கு பச்சை எண்ணெய் வேண்டாமா, அது தான் கிடைக்கவில்லை. எவ்விதம் கூத்துக்குப் போவது' என்றான். சாளி 'ஏன் மாடனிடத்தில் எண்ணெய் இல்லையோ' என, ஓரி 'இருக்கிறது; ஆனால் அவனுக்கு சங்குமாலை வேண்டுமாம். நம்மிடம் இருக்கிற சங்கு நமக்கே போதாது. என்னிடம் மயிலிறகு இருக்கிறது தருகிறேன்' என்று சொன்னேன், அவன் அது தன்னிடத்தி லிருக்கிறது. என்றான் பிறகு நானும், அவனும் காளையிடம் சென்றோம். அவன் சங்குவைத்துக்கொண்டு கோணல் கொண்டை தேடுகிறான். நீலனிடத்தில் கோணல் கொண்டை இருக்கிறது; அவனுக்கு மயிலிறகாவது எண்ணெயாவது வேண்டாமாம். போயலைந்தது வீண். ஒருவியாபாரமும் நடக்கவில்லை. என்ன செய்வது' என்றான். அதற்கு சாளி 'எண்ணெய் இல்லாமல் என்னகூத்து' என்று சோர்ந்துசொல்லி, பிறகு திடீரென்று நினைத்துக்கொண்டவள் போல எண்ணெயும் சம்பாதிக்க ஒருவழியிருக்கிறது' என, ஓரி ஆவலுடன் 'அதென்ன?' வென்று கேட்க, தன்கையில் இருந்த நாணயங்களை அவனுக்குக் காட்டினாள். அதைக்கண்டவுடன் ஓரி அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அவன் குபீரென்று ஓவோ எழும்பாய் எழும்பிக் கள்குடித்தவன்போல் குதித்து தன் கருத்த மீசையை முறுக்கிக்கொண்டு 'சபாஷ்' என்று தன் இரண்டு தோள்களையும் தட்டிக்கொண்டு 'எண்ணெய் வாங்கி விட்டேன், எண்ணெய் வாங்கிவிட்டேன், கூத்து உண்டு; ராத்திரி கூத்துக்

குப் போவோம்' என்று கூச்சலிட, இதுதான் சமயம் என்று சாளி 'அப்பா அந்த வஸ்து(அதற்குப் பெயர் தெரியவில்லை) நம்முடைய தல்லவே அதோ அந்த மனிதனுடையது' என்றாள், அதற்கவன் 'என்றால் என்ன, அவனைத்தான் ராத்திரிக் கொல்லப் போகிறேனே. அவனுடைய பொருள் எல்லாம் நமது தானே' என்றான். அதைக்கேட்டுக் கொண்டிருந்த நாராயணமுதலியார் ஐயையோ மோசம் போனேனே' என்று அழ ஆரம்பித்தார். சாளி ஓரியைப் பார்த்து 'அவனைக்கொன்று விட்டால் யார் நமக்கு வேண்டும்போதெல்லாம் அந்த வஸ்துவை கொடுப்பார்கள்' என, ஓரி 'ஓ ஹோ, அப்படி நினைத்த போதெல்லாம் அதை சம்பாதிக்க அவனுக்குத்தெரியுமோ? அப்படியானால் அவன் இருக்கட்டும். இன்னொருவனைத் தின்போம்' என்ன, நாராயணன் தான் தப்பினதாக நிச்சயம் செய்துகொண்டு சுப்பனுக்காக கவலைப்பட்டான். அதற்குள் சாளி 'இரண்டுபேருக்கும் அதுதெரியும்' என, ஓரி 'அப்படி யானால் இருவரும் இருக்கட்டும். அவர் நமக்கு தேவையானகாலத்தில் தேவையானபடி கொடுக்கவேண்டும்' என்றான். சாளி 'இன்று அவர்களை விட்டுவிட்டால் நாளை மறந்து அவர்களைக்கொன்று விட்டால் என்ன செய்வது' என, ஓரி எழுந்து தன் கத்தியை கீழே போட்டுக்கொண்டு 'அவர்களைக் கொல்வதில்லை' என்று இரண்டுமுறை அதைத்தாண்டி பிறகு அதை கையாலெடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டான். இவ்விதம் அவன் சத்தியம் செய்துகொடுக்கவே, நாராயணன் 'தப்பித்தோம் தப்பித்தோம்' என்று சுப்பனை தட்டிக்கொடுத்தான். சுப்பன் 'கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்'' என்றான்.

இதற்குள் ஓரி ஒரு அரைக்கால் ரூபாயைக் கையில் எடுத்துக்கொண்டு ஓட்டமாய்ஓடி மாடனிடத்து அதைக்காட்ட மாடன் இது என்ன இவ்வளவு நன்றாயிருக்கிறதே. அதை எனக்குக் கொடுக்கமாட்டாயா? என, 'அதற்காகத் தான் கொண்டுவந்தேன்' என்றுசொல்லி அவன் கையில் கொடுத்தான். உடனே மாடன் உள்ளே ஓடிப்போய் தன்னிடத்திலிருந்த எண்ணெயை யெல்லாம் ஓரிக்குக் கொடுத்து, 'இது எது?' என்று கேட்டான். ஓரி சங்கதி எல்லாம் சொல்லி 'அந்தமனிதர்களை நான் கூத்துக்குக் கூட்டிவருகிறேன்' என்றான். மாடன் 'அவர்களென்ன நம்மைப்போல மனிதர்களா' என்ன, ஓரி 'நான் இப்பொழுதொன்றும் சொல்லமாட்டேன், ராத்திரி நீயே பார்' என்று சொல்லி விரைவாய் வந்து விட்டான்.

இதுநிற்க, மாடன் காளையிடத்தும். காளை நீலனிடத்தும் அந்த அரைக்கால் ரூபாயைக்கொடுத்துத்தங்களுக்கு வேண்டியவைகளை வாங்கிக்கொண்டார்கள். அன்று ராத்திரிக் கூத்துக்கு கோணல்கொண்டை முதலிய சாமான்கள் அவசியமாய் வேண்டியிராவிட்டால், மாடனாவது காளையாவது அந்தரூபாயை விட்டுப்பிரிந்திருக்கமாட்டான். நீலன் அதை வாங்கினது தான் தாமதம், அதை பத்திரமாய் ஒரு தோலில் முடிந்து வேறெங்கேயாவது இருந்தால் எலி பெருச்சாளி தின்றுவிடும் என்று பத்திரமாய்க் கழுத்தில் மாட்டிக் கொண்டான்.

பணத்தையே கண்டறியாத ஒரு ஜாதியார் இருக்கிறார்கள் என்பதைப்பார்க்க நாராயணனுக்கு நிரம்ப ஆச்சரியமாயிருந்தது. பிறந்தது முதல் பணத்துடன் பழகிவரும் நமக்கு அது அதிக சாதாரணமாயிருக்கிறது. ஆதலால் அது இல்லாவிட்டால் உண்டாகும் தீங்குகளையும் அது இருப்பதால் உள்ள நன்மையையும் நாம் யோசித்துப்பார்க்கிறதில்லை. பாருங்கள்: எல்லாப்பொருள்களும் இருந்தும் பணம் என்ற ஒருவஸ்து இல்லாததால் ஒருவருக்கும் வியாபாரம் நடக்கவில்லை. சங்கு வேண்டியவனுக்கு மயிலிறகு தேவையில்லை. மயிலிறகு வேண்டுவோனுக்கு எண்ணெய் தேவையில்லை. இவ்வாறு இருந்தால் வியாபாரம் நடப்பது எவ்வளவு கடினம்! ஓரிக்கு எது தேவையோ அது மாடனிடத்திலும், மாடனுக்கு எது தேவையோ அது ஓரியிடத்திலும் இருந்து விட்டால் வியாபாரம் நடந்து விடும். தினந்தோறும் இந்தமாதிரியே ஏற்படுமோ?

இது நிற்க. ஓரி எண்ணெய் வாங்கி வந்தவுடனே தானும் பூசிக்கொண்டு, சுப்பன், நாராயணன், சாளி இவர்களையும் பூசிக்கொள்ளச் சொன்னான். அப்பொழுது சுப்பன் சாளியைப் பார்த்து 'எண்ணெய் அதிக துர்க்கந்தமாயிருக்கிறது', என, நாராயணன் தனக்குள் 'சுப்பன் காட்டுமனிதன் போலவு மிருக்கிறான், அல்லபோலும் தோன்றுகிறான்; அவன் விருத்தாந்தத்தை அறியவேண்டும்' என்று சொல்லிக்கொண்டு தன் இடுப்பில் சொருகியிருந்த ஒருசந்தனவில்லையை எடுத்து சாளிக்குக்காட்ட, சாளி வாங்கிப்பார்த்து 'இது அதிக வாசனையா யிருக்கிறது, இதென்ன?' வென்று வாங்க, சுப்பன் அதைக்கொஞ்சம் அரைத்து சாளிகையில் தடவ, சாளி 'நன்றாயிருக்கிறது; எண்ணெய்வேண்டாம். இது தான் பூசிக்கொள்ளவேண்டும்' என்று சந்தோஷத்துடன் கூச்சலிட்டாள்.

(இன்னும்வரும்.)

ஆர். செல்வப்பிள்ளை.

ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதம்.

(திராவிட ஆயுள்வேத வைத்தியர் ஒருவர்எழுதியது.)

(தொடர்ச்சி)

முற்பாகத்து முதலில் ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதம் இன்னதென்றும், அதன் ஆசிரியர்களையும் கூறி,

முடிவில் போலி மருந்துவக்கலைகளின் உற்பத்தியையும் எழுதிமுடித்தேன். போலிமருத்துவக் கலைகளில் உண்மை சிறிதும், பொய்மை பெரிதும், இருத்தலால், அவைகளை ஆதாரமாக்கொண்டு விதித்தவைகளை நம்பிக்கையுடன் செய்தல் கூடாது என்பது, எம் உண்மை மருத்துவக்கலைகளின் கல்வி கேள்விகளிற் சிறந்த ஆன்றோர் பலர் உடன்பாடு. இவைகளை ஒழித்து, உண்மை மருத்துவக்கலைகளைப் பார்த்து, அவைகள் கூறியவைகளைச் செய்து வருவதே இன்றியமையாக் கருமம். உண்மை மருத்துவக்கலைகள்ஏட்டுப்பிரதிகளிலும்அச்சுப்பிரதிகளிலும் தற்காலத்தில், எம்மவர் அநேகர்பால் இருக்கின்றன. அவைகளை யோதுவோர் இலக்கிய இலக்கணப்பயிற்சி மிக உடையராய் இருத்தல் வேண்டும். மருத்துவக்கலைகள் எல்லாம் இலக்கிய இலக்கணக்கடல் குடித்துத் தெய்வீகம் பொருந்திய ஆன்றோர் பலரால், ஏறக்குறைய செய்யுள் நடையிற் செய்யப்பட்டிருக்கின்றன வாகையால், கல்வியற்றவர்களுக்கு எளிதிற் புலப்படல் அரிது. இலக்கிய இலக்கணங்களிற் சிறிது பயிற்சியுள்ளவர்கள், தங்கள் வித்தியா கர்வத்தினால், நுண்ணறிவும், அனுபவமுமுள்ள மருத்துவக்கலைஞர் பால் அணுகாது, மருத்துவக்கலைகளைக்கொண்டு, தாங்களே அவைகள் கூறுவண்ணஞ் செய்யத்தலைப்படுகிறார்கள். இங்ஙனஞ் செய்யத்தலைப்படுபவர்கள், அநுபவமற்றவர்கள் ஆதலால் அவர்கள் பாற் சார்தல் கூடாது. மருத்துவர்கள், தேவதா உபாசனை, பலசாத்திரங்களைக் குருமுகமாய் ஆராய்ந்தறிந்திருத்தல், திரிகரண சுத்தி, பலவியாதிகளைத் தீர்க்குதல், நாளும் வியாதிகளைக்கண்டு அஞ்சாததீரத்துவம், மிருபுத்திநுட்பம், பெரியோர்சிநேகம், ஆசாரம், மேம்பாடு, நற்குணம், அன்பு இத்தன்மைகள் உற்றவராய், தேகம், தேசம், காலம், ரோகம், ஔஷதம், பதார்த்தகுணம், சரீராதாரம், உதராக்கினி, தேகபலம், ஆகாரம், வைகபாகம், செய்பாகம், இன்ன நோய்க்கித்தனை நாள் ஔஷதங் கொடுக்க வேண்டும் என்னுங் காலஅளவு, ஆகிய முப்பேதங்களை யோர்ந்தவராய் இருத்தல்வேண்டும். என்னை:

தெய்வவுபாசனை பலநூலெல்லை காண்டல்
திரிகரண சுத்திபன்னோய் தீர்த்தனனும்
ஐவகன்ற தீரமதி நுட்பஞ் சான்றோர்
கட்பொழுக்க மேன்மை குணமன்புள்ளானாய்
மெய்வகுதை விகலையணங் குறைபதார்த்த
விதியுடற் காதார மடலங்கிமாந்தற்
கைவரு மென் பேதமெலா முணர்ந்தற்றான்''

என்றார் பேராசிரியர். மருத்துவர்க்குற்ற இவ்விதச் சிறப்புகளில் பல பிணிகளை யஞ்சாதுகண்டு தீர்ப்பது மட்டும் அனுபவத்தால் வரவேண்டும். ஏனெனில், மானிடருக்குப்பழவினையாலும், உணவு தொழில்களது ஒவ்வாமையாலும் வாத முதலிய முப்பகுதிப் பிணிகள் வரும். அவைகளை இன்னதென்று கண்டறிதல்அனுபவ மிருந்தாலொழிய அமையாது. அநுபவங்கடக்கவே, இக்காலத்திலும் ஆங்கிலேய மருத்துவர்கள், மருத்துவங்கற்கு மாணாக்கர்களைப்பிணியாளர் பாலிருத்தி வியாதிகளின் கூறுபாடுகளை வருஷக்கணக்காக் கற்றுக்கொடுக்கிறார்கள். இம்முறைக்கு ஆங்கிலேயர்கள் க்ளினிகல் இன்ஸ்ட்ரக்ஷன். (Clinical instruction) என்று கூறுவர். இது மட்டும் மருத்துவர்களின்இலக்ஷணங்களையும், அவர்களுக்கு அனுபவங்கள் வேண்டுமென்பதையும் தொகுத்துக் கூறினேன். இனிச் சரீரமும், அதன்பெருமைகளும், அதைப்பீடிக்கும் பிணிகள் வரும் காரணங்களும், அவைகளைத் தீர்க்கும் வழிகளும் இத்திறத்தன வென்று சங்கிரகித்துக் கூறத்தொடங்குகின்றேன்'

சரீரம்.

இம்மை மறுமை வீடு பேறுகளை யடைதற்குரியது இம்மனுஷ சரீர மாதலால், அதற்குள்ள ஆதார பேதங்களை யுய்த்துணர வேண்டும். சரீரத்தினது ஆதாரபேதங்களாவன: வாதம், பித்தம், சிலேஷ்மம், ரசதாது, அஸ்திதாது, மச்சைதாது, சுக்கிலதாது, மலம், மூத்திரம் எனுமிப்பனிரண்டு. இவைகளின் விரிவுகளை ''சரீரம்'' என்னுஞ் சாத்திரத்திற் கண்டு தெளிக.

பிணிகள்.

சரீரத்தைப் பீடிக்க வரும் பிணிகளில், பழவினையால் வருபவைகள் வினைகழிந்தாலன்றி தீராதாகையால் அவைகளை யொழித்து, மற்றவைகட்கு மருத்துவஞ் செய்யப்படும் பிணிகள் அபக்குவஉணவுண்பதினாலும், மிகப்புசித்தலினாலும், தொழில்கள்வேறுபாடாதிகளினாலும்வரும்.

அபக்குவ வுணவுண்டல்.

அபக்குவ உணவுகள் எண்வகைப்பட்டு ஒவ்வொன்றும் பலபிணிகளை வருவிக்கும். அவையாவன: 1 அஸ்ருக்தோஷம் (கஞ்சி சிக்கிக் கொள்வது) தாபம் விதூமம். எனும் அசீரணங்களைப் பிறப்பிக்கும். 2. பிச்சில் தோஷம் (குழைந்து போவது) சடராக்கினியை அணைக்கும். 3. அசுசிதோஷம் (கிருமி உமி முதலியவைகளுடன் சமைப்பது) அரோசகத்தையுண்டாக்கும். 4. கொதித்தோஷம் (கருக்கரிசியன்னம்) அலசரோகத்தை யுண்டாக்கும். 5. சுஷ்கதோஷம் (ஆறியுலர்ந்து போதல்) விதூம ரோகத்தை யதிகரிக்கும். 6. தக்ததோஷம் (காந்தின அன்னம்) ஜீரணதாதுரோகம் விளைவிக்கும். 7. விரூபதோஷம் (கொழியல் அரிசியன்னம்) ஆயுள்முதலியவைகளைக்கெடுக்கும். 8, அனார்த்துஜதோஷம்(நொக்து ஜலம்பிறந்து நூலிழைந்த அன்னம்) அதிநித்திரா ஓதிரோகங்களை சனிப்பிக்கும்: ஆதலா லிவைகளை யுண்ணல் அடாது. உணவுகளைச்சித்தபாகம், வீம்பா

கம் நளபாகம், தேவபாகம், எனும்பாக சாத்திரங்களிற் கூறிய வண்ணஞ் செய்தருந்தல் அவசியம்.

சீரணமறிந்து புசித்தல்.

ஒருவன் சீரணத்தைக் குறிகளினாலே (உடம்பு சிறுகியிருத்தல், நோக்கம் பரிசுத்தமாயிருத்தல், கரசரணாதி காரணங்கள் தொழிற்குறியவாதல், பசிமிகுதல்) அறிந்து உண்பானாயின் அவன் பாற் பிணிகள் அணுகாது. அங்ஙனுண்டாலும், முன்னுண்டது சீரணித்து, மிகப்புசித்து, உண்ணும் போது உண்பவன் உணவு, வாதபித்த சரீரசுபாவங்களுக்கு மாறுகொள்ளாது, பெரும்பொழுது, சிறுபொழுது, என்கிறகால வேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்காகாது தேனு நெய்யும் தம்முள் ஒத்து சுவை வீரியங்களால் மாறுபட்டு நஞ்சாதல் போல்வன நீக்கி நீரைக் காய்ச்சிப், மோரைப்பெருக்கி நெய்யுருக்கிப் புசித்தல் சிலாக்கியம். இல்லாவிடில் பற்பல துன்பங்கள் உண்டாகும்.

தொழில்களது வேறுபாடு.—மலசலத்தை யடக்கல், விந்துவை யதிகமாய் விடல், எண்ணெயிட்டுக் குளிர்நீரிற் குளித்தல், பகலிற் சையோகமும், நித்திரையுஞ் செய்தல், தன் வயதிற்கு மேற்பட்ட ஸ்திரீயைப் புணர்தல், இளவெயிற் காய்தல், வலதுகை கீழாகப்படுத்தல். முந்நாளிற் சமைத்தகறி யுண்ணல், பசியாதுழி புசித்தல், காலைமாலைகளிற் சிலம்பம்முதலிய தொழில்களைச் சரீர சுபாவங்களுக்கேற்ற வண்ணஞ் செய்யாதிருத்தல் ஆகிய இவைகள் பிணி வருதற்காரணங்கள் ஆகின்றன. இவைகட்குப் பிரமாணங்கள்:

“திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்-உண்
[ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்
பேருரைக்கிற் போமேபிணி.” [தாம்

* * * *

“எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்”
பகற்புணரோம்பகற்றுயிலோம்பயோதரமுமூத்த
வேலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்
போம்.
* * “இடதுகையிற் படுப்போம்” [தோம்”
* * “முதனாளிற் சமைத்தகறியமுதெனினு மருந்
‘ஞாலந்தான்வந்திடினும் பசித்தொழியவுண்ணோம்,
நமனார்க்கிங்கேது கவைநாமிருக்கு மிடத்தே”
“சிலம்பு முதன் மல்லயுத்தந் தேகிநடை கொள்
பலம்பரவு மெய்யிருக்கும்” [ளல்
என்றார் பேராசிரியர்.

அழுக்கு வஸ்திரங்கள் தரியாது, அதிகாலையிற் குளித்து முண்டாச, அங்கி அரைக்கச்சு முதலிய கட்டிப்போதல் வேண்டும். இவைகளினால் அநேகரோகங்கள் நிவர்த்தியாகும்.

பிரமாணங்கள்.

அழுக்குவஸ்திரந் தரிப்பதிலுண்டாகுந் துன்பங்கள்:-
[ளிக்கும்
“நோயடருங் காந்திகெடும் நுண்ணறிவும் போயொ
நீயகுளிர் துக்கந் தினவுசங்கை—வாய்பேசக்
கூசுதலு முண்டாகுங் கோதாரு மாசுடைச்சே
பேசுதலு மியாதிதற்குப் பின்பு.,,

அதிகாலைக்குளித்தலின் நன்மை:—
“காலைக் குளிக்கக்கடும்பசியுண்டா நோய்போம்”
முண்டாசு, கவசம், நடுக்கட்டுகளின் குணம்:—
முண்டாசு வாதபித்த முன் மொழிக்கு மெய்க்கவச
முண்டாயின் காந்திபுட்டி யுண்டாகும்—திண்டாடு
பித்தமறுந் தீயாம் பிளைத்தநடுக் கட்டுக்குக்
கொற்றமறு வீரியமாங் கூறு”
என்று பலவாறாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இதுகாறும் கூறியவண்ணஞ் செய்யத்தடையுண்டால், பல பிணிகள் வந்து துன்பங்கள் எண்ணிறந்தன செய்யும். பிணிகளை நாடி, கண்கள், தொனி, உடல், நிறம், நாக்கு, மலம், மூத்திரம் என்னும் அட்டவிதப்பரீக்ஷைகள்செய்து, வாதபித்தசிலேஷ்மங்களாகிய முப்பகுதிகளில், இன்ன காரணத்தால் பிறந்ததென்று நிச்சயிக்க வேண்டும். அட்டவிதப்பரீக்ஷைகளை விரித்து ஒருவாறு பின்னர்க்கூறும் எண்ணமிருப்பதால் இங்கு இவ்வளவிலே நிறுத்தினேன். சாத்திரங்கள் (ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதம்) பிணிகளை 4448 என்றுவரையறுத்திருக்கின்றன வென்றுமுன்னர் கூறினேன். அதிகாயிரம் பிணிகள்இருந்தாலும் நம்மவர்கள், தற்காலத்தில் ஔஷதங்கள் கொடுத்து அனுபவ முற்ற பிணிகளை இன்னதென்று பின்னர்க் கூறப்படும். பிணிகளாவன: சுரம், அதிசாரம், கிரகணி, அரசம் (மூலம்), அசீரணம், அக்கினி மந்தம், விருஷிகம், கிருமி, பாண்டு, ரக்தபித்தம், காசம், விக்கல், சுவாசம், சுவரபேதம், சர்த்தி (வாந்தி), மூர்ச்சை, தாகம், உன்மதம், அபஸ்மாரம் (இதில் ஐவகை வலிகளும் அடங்கும்,) நரம்பு வியாதிகள், குஷ்டம், சூலை, கீல்பிடிப்பு, குன்மம், மூத்திரக்கிரிச்சரம், மூத்திரகாதம், அஸ்மா, பிரமேகம், மேதம் (அதிதூலரோகம்), உதரவியாதி, அடிவயிறுவீக்கங்கொள்ளல்) சோபை, சிலிபதம் (யானைக்கால்), கண்டமாலை, காலகண்டம், பகந்தரம், உபதண்ஷம், (ஆண்குறி வியாதிகள்), சீதசத்தம், ஆம்லபித்தம், (விஷர்ப்பம், (அக்கி இராசப்பிளவை முதலியன), விஷப்போடகம் (சொறி சிரங்கு), மசூரிகம், முகரோகங்கள் (வாய், உதடு, கண், காது, பல்வியாதிகள்) இவைகளும் இவைகளுள்வாதபித்த சிலேஷ்மங்களால்தொந்திக்கப்பட்ட பலபிணிகளும் மாந்தம் முலிதய பால ரோகங்களும்

ஆம். இவைகளின் இலக்கணங்கள் ஜீவரக்ஷாமிர்தம் என்னு நாலிற்தெள்ளத்தெளியக் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளை இங்கு விரிக்கிற் பெருகுமாதலால்இவ்வளவுடன் விடப்பட்டது. இவைகளை இன்னதென்று சங்கிரகித்துக் காலமும் இப்பத்திரிகையில் இடமும் இருப்பில் பின்னர்க் கூறப்படும்.

(இன்னும் வரும்)

கே. ஸி. துரைசாமி.

---

* ஆபத்துக்கிடமான அபவாதம்
அல்லது
கமலாம்பாள் சரித்திரம்.

முத்துஸ்வாமி அய்யர் கதவைத்திறந்தவுடன் ராமண்ணு வாத்தியார் உள்ளேவந்தார். அவரைப்பார்த்தால் 45 அல்லது 50-வயதுக்குமேல் மதிக்கமாட்டார்கள். ஆனால் அவருக்கு சதாபிஷேகமாய் வருஷம் 5-ஆய்விட்டது. (அதாவது இப்பொழுது வயது 90.) இன்னமும் சிறு துளத்தில் இவரை விட்டு வேறொருவரை பிராமணார்த்தத்திற்கு சொல்வதில்லை. அந்த ஊரில் ஒருமாதத்திற்குக் குறைந்தது இருபது சிராத்தத்துக்கு மோசமில்லை. அதில் பதினெட்டுக்குக் குறையாமல் வாத்தியாருக்குக் கிடைக்கும். கலத்தில்பரியாறும்பொழுது ‘போதும்’ என்று சொல்லுகிற துர்வழக்கம் அவரிடத்துக் கிடையாது. ‘எவ்வளவு போட்டாலும் சாப்பிடவேண்டியது. நம்முடைய கடமை’ என்று அவர் சொல்லுவார். அந்த ஊர் ஜனங்களுக்கும் அவர் பிராமணார்த்தம் சாப்பிட்டால்தான் திருப்தி. இந்தப் பிராமணர் இவ்வளவு சாப்பிடுகிறாரே இதில் பாதியாவது நம்முடைய பிதிர்க்களுக்குக் கிடைக்காதா என்று அவர்களுக்கு எண்ணம். எதார்த்தத்தை அவர்கள் அறிந்ததில்லை. இவர் மத்தியானம் சாப்பிடுவது போதாமல், ராத்திரிப்பட்டினியாகையால் இருபது முப்பது வடையை மட்டும் தின்றுவிட்டு, சுத்தப்பட்டினி யாகவே யிருந்துவிடுவார். ஊறுந்து வடைதான் அவருடைய தேகக்கட்டு விட்டுப்போகாமல் அவரைக் காப்பாற்றி வருகிறது. ஒருநாள் சுரம் என்று கீழே படுத்துக் கொள்ளவேண்டுமே, கிடையாது. வயதினால் கொஞ்சம் கூனினவர்போல இருந்தாலும் அவர் நடை கொஞ்சங்கூட தளர்ச்சி யடையவேயில்லை. ஆற்றங்கரையில் தினந்தோறும் அவர்தான் ஓடுகோல் தள்ளுகிறது வழக்கம்.

உபாத்தியாயர் உள்ளே வந்தவுடன் நமது முத்துஸ்வாமிஅய்யர் ‘மாமா வாருங்கள், வாருங்கள்; குட்டிபலகை கொண்டுவா, (கல்யாணி பலகை கொண்டுவா) உட்காருங்கள், நானே அங்கே வரலாமென்றிருந்தேன்,’ என்று

‘அடா, யாரடா, வீரா!’ என்று கூவினார்.

உடனேவேலைக்காரனாகிய வீரன் ‘சுவாமி’ என்று வர, அய்யர்: ‘அடா, போய் குழந்தை சுந்தரத்தைக் கூட்டியாவா’ என்று சொல்லிவிட்டு, வாத்தியாரைப்பார்த்து ‘ஜோசியர் அவர்களைக் கூட்டிக்கொண்டுவரச் சொல்லுகிறேன், ராகுவேளை போய் விட்டதல்லவோ, இன்று என்ன, வெள்ளிக்கிழமையோ!’ என’

‘ஆம் ஆம் ஆம் ராகுவேளைபோய் எந்தக்காலம் ஆய்விட்டதே’ என்று வாத்தியார் சொன்னார்.

அய்யர் ‘ஆம் ஆம் சனிக்கிழமை ஞாபகமாய்ச் சொன்னேன்’ என்று சொல்ல, பையன் சுந்தரமும் ஒரு பந்தை உருட்டிக்கொண்டு ‘என் அப்பா, கூப்பிட்டாயாமே!’ என்றுகொண்டு வந்தான்.

அய்யர் ‘பந்து’ எதற்கடா? அடடா! தாத்தாமேல் படப்போகிறது அதைக் கையிலே எடு எடு’ என,

பையன் ‘புதுப்பந்து அப்பா, பெரியகளச்சியாய் உள்ளே வைத்திருக்கிறேன்.’

‘அது இருக்கட்டும். என்னவிளையாட்டுபுத்தி, நீ போய் சங்கரஜோசியரை, அப்பாவும்தாத்தாவும்—’

என்று மேல்சொல்லுவதற்குள், பையன் “எந்தத்தாத்தா?” என்று குறுக்கே கேட்க, அய்யர் ‘ஆமடா இந்தத் தாத்தாதானடா’ என, ‘ராமண்ணுத் தாத்தாவா’ என்று பையன் கேட்க முத்துஸ்வாமி அய்யர் ‘ஆமாம்! போய் உங்களைக்கையோடு கூட்டிவரச் சொன்னார்கள். ஏதோ அவசரகாரியமாம் என்றுசொல்லிக் கூட்டிக்கொண்டுவா’ என்றார்.

பையன் ‘என்னகாரியம்சொல்லு’ என்றான். அய்யர் ‘சொல்லுகிறேன் போ.’

பையன் ‘சொன்னால் தான்’

அய்யர் ‘அக்காளுக்குக் கல்யாணம்’

குழந்தை, ‘அக்காளுக்கு கல்யாணமாம் உங்களைக் கூட்டிக்கொண்டு வரச்சொன்னார்கள் என்றுசொல்லிக் கூட்டி வருகிறேன்’ என்று குதித்தோட,

அய்யர், ‘இது எதடா இவன்! நீஒன்றும் சொல்லவேண்டாமடா, கையோடு கூட்டிக்கொண்டு ஓடிவாடா அப்பா’ என்று சிரித்துக்கொண்டு சொன்னார்.

குழந்தை ‘அவர் என்னோடோட முடியுமோ, நான் அவருக்குமுந்தி ஓட்டம்பிடித்து விடுவேனே’என்ன,

அய்யர் ‘நீ ஓடவேண்டாம் போய் மெள்ளக் கூட்டிக்கொண்டுவா’ என்று சொல்ல, சுந்தரம்குதித்துக் கொண்டு வெளியே ஓடினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் சிவந்த நிறமுள்ள ஒரு மனிதர்உள்ளே வந்தார். அவர்கழுத்தில் ருத்திராட்சமும், கையில் திருப்பதிக்காப்பும், விரலில் பொன்

* சென்ற சஞ்சிகையில் “அபாய அபவாதம்” என்றுள்ளதை “ஆபத்துக்கிடமான, அபவாதம்” என்று திருத்திக்கொள்ளவும்.

மோதிரமும், அணிந்துகொண்டு, நெற்றியில் விபூதி சந்தனாட்சதை தரித்துக்கொண்டு கையில் ஒரு ஏடுடன்வந்தார். அவர் வந்தவுடன் அய்யர் 'வாருங்கள்' என்று ஆசனம் கொடுக்க, வாத்தியார், 'சங்கரா வா' என்று சொல்லி 'இதோ இந்த ஜாதகங்களைப்பார்' என்று கையில் கொடுத்தார்.

ஜோசியர் உட்கார்ந்துகொண்டு 'குட்டிக்கா, ஒரு கட்டு ஜாதகம் இருக்கிறதே. நூறுக்குக் குறையாது போல் இருக்கிறதே' என,

அய்யர் 'இருக்கும்' என்றார்.

ஜோசியர் 'உங்களுடைய குணத்திற்கும் புத்திக்கும் ஐஸ்வரியத்திற்கும் வாய்திறந்து சொன்னால் போதாதா. இலட்சம் ஜாதகம் வருமே. குழந்தைக்குத்தான் என்ன, எல்லாரும் பெண் அவளும் பெண்ணா! அவள் புத்திக்கும் சாந்தத்துக்கும் அழகுக்கும் படிப்புக்கும்——' என்றிப்படி ஸ்துத்தியம்பண்ண,

அய்யர் சகிக்கமாட்டாதவராய், 'குட்டிக்கு 11-வயது நிரம்பப்போகிறது. இந்த வருஷத்திலாவது மேலைக்காவது கலியாணத்தை நடத்தி விட வேண்டும்' என்றார்.

ஜோசியர்:'இதுதான் சரியானவயது இதற்குமுன்; என்ன கலியாணம்! அதெல்லாம் எனக்கே மனதுக்கு சமாதானப்படுகிறதில்லை' என்று சொல்லிக்கொண்டே 'ஆஹா இதுபேஷ் ஜாதகம்: பஞ்சமத்தில் சூரியன். ஜனனம் சனி திசை, சுக்கிர திசையில் நல்லயோக மிருக்கிறது' என,

முத்துஸ்வாமி அய்யர் 'பொருந்தின ஜாதகத்தையெல்லாம் ஒரு பக்கமாக வையுங்கள், அப்புறம் அதிலே பொறுக்கிக்கொள்வோம்' என்றார்.

வாத்தியாரும் 'இதற்கு இரண்டுபாவ மிருக்கிறது. இதுவும் பாவஜாதகந்தான்,' என்று ஒன்றொன்றாய்த் தள்ளிவைத்துக் கொண்டிருந்தார்.

. . . . . .

இங்கே இப்படியிருக்க மதுரையில் வெள்ளியம்பலத்தெருவில் ஒருபெரிய காரை மச்சுவீட்டுத்திண்ணையில் இரண்டு கிழவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவர், 'முத்துஸ்வாமி பெண் ஜாதகமும் பயல் ஜாதகமும் பொருந்துகிறது. அதுதான் என் மனதுக்குப் பிடித்ததாயிருக்கிறது. நீங்கள் இன்னும் யோசனை செய்துகொண்டு சொல்லுங்கள்' என்றார். மற்றவர் 'யோசனை யென்ன? மனதுக்கும் பிடித்து ஜாதகமும் பொருந்தினால் அதைத்தான் பண்ணிவிடுவோம். முத்துஸ்வாமியும் மனிதர்கள்பேரில் அபிமானம் விதரணை இதெல்லாமுடையவன். அவன் சமுசாரம் அதைவிட. நான் போய்விட்டேனால் மாமா, மாமா, என்று செய்யும் ஆசார உபசாரம் சொல்லி முடியாது. ஊர் யோக க்ஷேமம் விசாரிக்கிறதும், எதிராளி நோக்கத்தைக் கண்டு நடக்கிறதும் அவளிடத்தில் நிரம்ப நன்றாயிருக்கும். இரைந்தசொல் கிடையாது. ஒருவர் பகை கிடையாது.' என,

மற்றவர்:'போகட்டும். அதுதான் எனக்கு மனதிற்குப் பிடித்ததாய் இருக்கிறது, ராத்திரியும் புஷ்பம் வேணுமானால் வைத்துப்பார்ப்போம்' என்றார்.

அதற்கு கிருஷ்ணய்யர் 'புஷ்பம் வைத்துப் பார்ப்போம்; சகுனத்தையும் பார்ப்போம். ஜாதகத்தையும் ஒருதடவைக்கு இரண்டுதடவை பார்ப்போம். மனதில் சந்தேகமென்னத்திற்கு? நமக்கு என்ன, பெண்கிடையாதா? நாம் செய்வதை எல்லாம் செய்துவிட்டால் அப்புறம் உள்ளபடி யிருக்கிறது. இராத்திரி கோயிலுக்கு நானும் வருகிறேன். மீனாட்சி சம்மதத்தையும் கேட்போமே. இதிலென்ன' என்றார். நாராயண அய்யரும் 'ஆஹா, சரி, அப்படியே செய்வோம்' என, கிருஷ்ணய்யர் 'நான் சித்திரை வீதிவரையிலே போய்விட்டு அப்புறம் வருகிறேன்' என நாராயண அய்யர் 'நல்லது' என கிருஷ்ண அய்யர் கீழே இறங்கிச் சென்றார்.

(இன்னும் வரும்)

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

இரண்டாவது: வரும்படிக்குச் சரியான செல்வு செய்கிறது.

இப்படிக்கு தர்மசீலனும் சத்தியவதியும் படிப்படியாய் நல்ல ஸ்திதிக்குவந்து பெரியோர்கள் புகழும்படியான நடுவுநிலைமையிலிருந்து வெகு சுகமாய் வாழ்ந்தார்கள். தினந்தோறும் இரவில் வீட்டுவேலைகளையெல்லாம் முடித்து தன்குழந்தைகளையும் தூங்கச் செய்து, தர்மசீலனும் வரவு செலவு கணக்கு எழுதி முடித்தவுடனே, கணவனும், மனைவியும் உல்லாசமாய்ப் பேசத் தொடங்குவார்கள். சத்தியவதிக்கு எப்பொழுதும் தாங்கள் முன்னிருந்த ஸ்திதியையும் இப்பொழுதிருக்கும் ஸ்திதியையும் பற்றிப் பேசுவதிலேயே வெகு பிரியம். சிலவேளைகளில் தர்மசீலனை ஏதேனும் புத்தகங்களைப் படிக்கச்சொல்லி தானும் அதைக் கேட்டுக்கொண்டே வருவாள். ஆனால் எப்பொழுதும் அவள் கொஞ்சம் படிப்பதற்கு முன்னே சத்தியவதி ஏதாவது தங்கள் குடித்தன விஷயத்தைப்பற்றி பேச ஆரம்பித்து, தர்மசீலனுக்கு புத்தகத்தைப் படிப்பதைப் பார்க்கிலும் இவளோடு பேசுவதில் அதிக ஆனந்தமுண்டாகிறதென்று தோன்றி புத்தகத்தை மூடி வைத்துவிடும்படி செய்வது வழக்கம். இவ்வாறு தங்களுடைய பூர்வஸ்திதியாகிய தரித்திரத்தை அடிக்கடி நினைத்துக் கொள்வதினாலே இப்பொழுது தங்களுக்கிருந்த பாக்கியத்தின் மேன்மையானது அவர்களுக்கு நன்றாய் விளங்கிற்று.

மாமா மலையகேது அடிக்கடி இவர்களைப் பார்க்க வருவதுண்டு; ஆனாலிப்பொழுது இவர்கள் வேறு வீட்டுக்கு வந்துவிட்டபடியால் மாமாவுக்கு அவ்வளவு தூரம் நடந்துபோவது பிரயாசமா யிருந்தது. அவருக்கு வயது முதிர்ந்துவிட்டபடியால் தேகம் பலஹீனமானதுமன்றி அடிக்கடி தன் கையினால் மார்பை பிடித்துக்கொள்வதும் வழக்கம். சத்தியவதி "ஏன் அப்படி மார்பைபிடித்துக்கொள்ளுகிறீ" ரென்று கேட்டால், "கொஞ்சம் மார்பில் வலியிருந்தது; இப்பொழுதொன்றுமில்லை" எனச்சொல்லுவார். இவர்கள் வாங்கிக்கொண்ட வீடு தங்களுக்கு வேண்டியதைப்பார்க்கிலும் அதிகப்பெரியதாயிருந்தது. ஆகையால் அவ்வளவு பெரிய வீட்டுக்கு இன்னும் ஒரு வேலைக்காரனும் அதிகமாய் வேண்டியதா யிருந்தது. பெரிய வீட்டுக்கு வந்தவுடனே இவர்களுக்கு மதிப்பும் கொஞ்சமதிகமாயிற்று. அலங்காரவிநோதியும் சத்தியவதியைத் தன் தோழியென்று சொல்லிக்கொண்டு இவள் வீட்டுக்குவரத் தலைப்பட்டாள். மேலும் அருகாமையிலிருந்த பணக்காரர்களெல்லோரும் இவ்வீட்டுக்கு வந்திருப்பவர்கள் யாரென்று விசாரிக்கத் தொடங்கினார்கள். இவர்கள் வீட்டுக்கு வந்தவர்களெல்லோரும் சத்தியவதியின் குணத்தைப் பார்த்து மெச்சி அவளுக்கு யாதேனும் ஓர்உபகாரம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இப்படிக்கு இவ்விருவரும் பணக்காரர்களுடைய சிநேகிதத்தைச் சம்பாதிக்கலாயிற்று. ஆனால் இதுவரையில் பணக்காரர்களுடைய துர்க்குணங்களெல்லா மிவர்களுக்கு வந்துவிடவில்லை. தங்களெதிர்வீட்டுக்காரர்களொரு விருந்துசெய்து இவர்களை அழையாம லிருந்துவிட்டால் அதற்காக வயிற்றெரிச்சலும், அகங்காரமு மிவர்களுக்குண்டாவதில்லை. சத்தியவதியோ தன் குழந்தைகள் நல்ல ஸ்திதிக்கு வரும்பொருட்டுத் தான் தனக்கு முன்னிருந்த சிநேகிதர்களைக் காட்டிலும் பணக்கார சிநேகிதர்களால் வெகு ஒத்தாசை கிடைக்குமென்று சொல்லிக்கொண்டாள். இருந்தபோதிலும் சத்தியவதிக்கு கர்வமும் பேராசையும் கொஞ்சங்கொஞ்சமா யுண்டாகிக்கொண்டே யிருந்தது. இப்பெரிய வீட்டுக்கு வந்ததும் பணக்காரர்களுடைய சிநேகம் கிடைத்ததும் தர்மசீலனுடைய தொழிலுக்கு மிகவும் அனுகூல மாயிற்றென்பது வாஸ்தவந்தான். தர்மசீலனுடைய அதிர்ஷ்டவசத்தினால் அவ்வூரிலுள்ள லெட்சாதிகாரியாகிய செல்வகுமாரனென்பவருக்கு தனது குடும்ப வைத்தியர் ஊரிலில்லாத சமயத்தில் சுவரங்கண்டது. உடனே அவர் தர்மசீலனுக்குச் சொல்லியனுப்பி வரவழைத்து அதுமுதல் அவனையே குடும்பவைத்தியனாக நியமித்துவிட்டார். இவ்வாறு தங்களுடைய ஸ்திதி மேன்மேலும் உயர்வடைந்தபோதிலும் தர்மசீலனும் சத்தியவதியும் எப்பொழுதும்போலவே செட்டாகக் குடித்தனஞ் செய்துவந்தார்கள். ஆனால் தங்களுடைய குழந்தைகளின் சௌக்கியத்திற்காகவும், கல்விப் பயிற்சிக்காகவும் மாத்திரம் தாராளமாய்க் கணக்குப் பாராமல் செலவிட்டார்கள். அவ்வூரிலுள்ள வெகு நன்றாய் நடத்தப்பட்ட ஒரு பேர்போன பள்ளிக்கூடத்திற்கு தங்கள் குழந்தைகளை யனுப்பி அவர்களுடைய விஷயத்தில் வெகு சாக்கிரதையாய்க் கவனித்துவந்தார்கள். இப்படியிருக்க இவர்களுக்கு அயல்வீட்டிலிருந்த சுதர்சனனென்பவன் பெண்சாதிக்கும் சத்தியவதிக்கும் வெகு சிநேகமுண்டாயிற்று. மிகவும் டம்பமுள்ள பணக்காரர்களுடைய வீட்டில் நெருங்கிப் பழகும்படியாய் சத்தியவதிக்கு இதுவரையில் சந்தர்ப்பப்படவில்லை. யாதலால் சுதர்சனன் வீட்டில் நடக்கும் மரியாதைகளையும் அங்கு சுதர்சனன் பெண்சாதி முதலானவர்களின் உண் கலங்கள் வெள்ளியால் செய்யப்பட்டிருந்ததையும் அவள் பார்த்தது இதுதான் முதல்தடவை. மேலும் தனக்கு பித்தளை, செம்பு முதலிய பாத்திரங்களில் சாப்பிடத் தெரியாதென்று சுதர்சனன் பெண்சாதி சொன்னவுடனே "அது வாஸ்தவந்தான், மற்றவர்களு மப்படியே செய்வது நலமென்று நினைக்கிறேன்" என்றாள். இப்படிக்கு பிறருடைய டம்பத்தைப்பார்த்து சத்தியவதிக்கும் டம்பத்தில் விருப்பமுண்டாகவே, அதற்குத் தகுந்தபடி செலவுமதிகரித்தது. ஒருநாள் சத்தியவதி சுதர்சனன் வீட்டிலிருந்து திரும்பிவந்தவுடனே தர்மசீலனைப் பார்த்துச் சொல்லுகிறாள். "சுதர்சனன் எவ்வளவு பணக்காரனாயிருக்கவேண்டும்."

தர்மசீலன்:—நீ சொல்லுவது சரியல்ல, சுதர்சனனுக்கு நம்மைப் பார்க்கிலும் அதிக வரும்படி ஒன்றும் வரவில்லை.

சத்தியவதி.—அதிக வரும்படி வரவில்லையா? அப்படியானால் அவர்கள் வீட்டில் அவ்வளவு விலையுயர்ந்த சாமான்களிருக்கின்றனவே, அவைகளெப்படி வாங்கப்பட்டன?

தர்மசீலன்.—அது எனக்குத் தெரியாது; ஆனால் சுதர்சனன் தன் பெண்சாதி குடித்தனம் நடத்துவதில் வெகு சாமர்த்தியசாலியென்று சொல்லுகிறான். நீயும் அவளிடத்தில் குடித்தனம் பண்ணுகிற உபாயங்களைக் கற்றுக்கொண்டால் வெகு நன்றாயிருக்குமென்று நினைக்கிறேன்.

அப்படியே சத்தியவதி தன் தோழியிடஞ்சென்று குடித்தனம்பண்ணு முபாயங்களை தனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க, சுதர்சனன் பெண்சாதி சிறு வரும்படியை வைத்துக்கொண்டு அவ்வளவு டம்பமாய் வெளிக்குத் தோன்றுவதைப்பற்றி வெகு பெருமைபாராட்டிக்கொண்டு சொல்லுகிறாள்.

"முதலாவது நாமிவ்வுலகத்தில் முன்னுக்கு வரக்கூடிய வழியெப்படியென்றால் கொஞ்சம் டம்பமாய்க் குடித்தனம் பண்ணுவதினால்தான். எங்களுடைய வரும்படி இன்னதென்று உனக்குச் சொல்லுவேனாகில், நீ வெகு ஆச்சரியப்படுவாய். ஆனால் எனக்கு அநேக உபாயங்கள் தெரியும். நீ உன் வேலைக்காரர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறாய்?" இதற்கு சத்தியவதி பதில் சொன்னவுடனே பின்னும் சொல்லுகிறாள்: "நீ உன் வேலைக்காரர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கிறாய். அதிருக்கட்டும், உன்னுடைய ஆடைகள் இவ்வளவு மட்டமாயிருக்கின்றனவே. நீ வேறு ஆடைகள்தானுடுக்கவேண்டும். உன் புருஷனுக்கு வருகிறவரும்படிக்கு நீ இப்படிதானா ஆடை உடுக்கிறது" என்றாள்.

சத்தியவதி—"அப்படியிருந்து மெங்களுடைய செலவு முன்னிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது வெகு அதிகரித்துவிட்டது. அது யாதுகாரணத்தாலோ எனக்குத் தெரியவில்லை, ஆனால் என்னுடைய குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் செலவு அதிகமாகத்தானாகிறது."

தோழி—"அது முற்றிலும் தப்பிதம். நான் என் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறதேயில்லை. ஏனென்றால் அங்கு படிக்கும் ஏழைப் பிள்ளைகளோடு சேர்ந்து இவர்களுக்கு வெகு கெட்ட வழக்கங்களுண்டாகிவிடும். ஆகையால் நானே அவர்களுக்குக் கற்பித்து வருகிறேன்."

சத்தியவதி—"ஆனால் அவர்கள் பள்ளிக்கூடத்தில் கற்பதைப்போல வீட்டிலவ்வளவு நன்றாய்க் கற்றுக்கொள்ளக் கூடுமோ?"

தோழி—"ஆகா, நீ இவ்வளவு புத்திசாலியாயிருந்துமிப்படிக் கேட்கிறாயே! குழந்தைகளுக்குப் போதிப்பதில் தாயைப்பார்க்கிலும் அயலார்களுக்கு வெகு திறமையுண்டோ? நான் சொல்லியபடி செய்வாயாகில் பள்ளிக்கூடத்தில் செலவு செய்யும் பணமுழுமையும் உனக்கு மிகுதிதான். ஆகையால் நீயே உன் குழந்தைகளுக்குக் கற்பிக்கவேண்டும்" தன்தோழி சொல்லிய விஷயத்தை சத்தியவதி முற்றிலு மொப்புக்கொள்ளாதபோதிலும் பள்ளிக்கூடத்தில் செலவாகும் பணம் வெகுஅதிகந்தானென்று நினைத்தாள். ஆகையால் தர்மசீலனோடு யோசித்து பிள்ளைகளை குறைந்த சம்பளமுள்ள வேறொரு பள்ளிக்கூடத்திற் கனுப்பினாள்.

இப்படி தாய் தந்தையர்கள் அதிகச் செலவுசெய்து டம்பம் பண்ணிக்கொள்வதின் பலன் பிள்ளைகளுடைய தலையில் விழுகிறது. அப்படிப்பட்ட தாய் தந்தையர்களுக்கு தங்கள் பிள்ளைகளிடத்தில் வெகு விசுவாசமிருந்தபோதிலும், அவர்களிடத்திலுள்ள குறைவுகளை கவனிக்கமாட்டார்கள். குறைவென்றால் ஆடையாபரணங்களில் குறைவல்ல. கல்வியில் குறைவு. சுதர்சனன் பெண்சாதி பள்ளிக்கூடத்தைப்பற்றிச் சொல்லியதை முற்றிலும் நம்பாத போதிலும், சத்தியவதி அவள் சொல்லிய மற்ற விஷயங்கள் யாவற்றையும் நம்பத் தலைப்பட்டாள். ஆகையாலிதுமுதல் சத்தியவதி விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் தரித்து தினந்தோறும் வெகு நேர்த்தியாய் அலங்கரித்துக்கொண்டாள். இதுவரையில் தன் பெண்சாதியினுடைய நற்குணத்தையும் அறிவையும் மட்டும் பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த தர்மசீலன், இப்பொழுது அவளுடைய அழகையுங் கண்டு வெகு சந்தோஷமடைந்தான். இப்படிக்கு ஒவ்வொரு ஆபரணமும் சத்தியவதியினழகை அதிக நேர்த்தியாய் எடுத்துக்காட்டுவது கண்டு தர்மசீலன் அடிக்கடி புதிய நகைகள் வாங்கிக்கொண்டே வந்தான்.

இப்படியிருக்க ஒருநாள் சத்தியவதி ஒருஏழைக்கு தர்மஞ் செய்வதற்காக தர்மசீலனை பணங்கேட்டபோது "அவ்வளவு பணமெப்படிக் கொடுக்க முடியும்" என்று அவன் சென்னதைக்கேட்டு வெகுஆச்சரியமுற்று "கொடுக்க முடியாதா? இதுவரையில் நாம் தர்மம்கொடுத்து வந்ததைப் பார்க்கிலும் இது அதிக தொகையல்லவே" என்றாள்.

தர்மசீலன்—"ஆனாலிப்பொழுது நம்முடைய செலவு வெகு அதிகரித்துவிட்டதே"

சத்தியவதி—"ஆம், நம்முடைய வரும்படியும் அதிகரித்திருக்கிறதல்லவா? (தர்மசீலன் தலையைக் குனிந்துகொண்டு யோசனை செய்தான்) நாம் ஒருமேஜை வாங்குவதாக உத்தேசித்திருந்தோமல்லவா? இப்பொழுது மேஜை வாங்குவதை நிறுத்திவிட்டு அந்தப்பணத்தை தர்மஞ்செய்தாலென்ன"

தர்மசீலன்.—"உன் இஷ்டப்படிசெய்."

சத்தியவதி.—சற்று பேசாமலிருந்துவிட்டு "ஏனப்படிச் சொல்லுகிறீர்கள். என்னிஷ்டப்படிசெய்யவாவதென்ன. தங்களிஷ்டப்படித்தான் நான் நடக்கவேண்டும்."

தர்மசீலன்.—"மேஜை வேண்டுமென்று முதலில் சொன்னது யார்? நீதானே."

சத்தியவதி.—"மெய்தான். ஆனால் மேஜை வேண்டியது அவசியந்தானென்று சுதர்சனன் பெண்சாதி சொல்லியிராவிட்டால் எனக்குஅந்த ஞாபகமே வந்திருக்கமாட்டாது.

தர்மசீலன்.—"சுதர்சனன் பெண்சாதியை உன் குலதெய்வமென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. அவள் நமக்கு மேஜை வேண்டியதுதானென்று சொன்னதினால்தானா நீயும் வேணுமென்றாய்."

சத்தியவதி—"அப்படியல்ல. நானும் ஒரு மேஜையிருந்தால் நமக்கு வெகு சௌகரியமாயிருக்குமென்று நினைத்தேன். மேலும் மேஜையிருந்தால் இவ்வறை வெகு நேர்த்தியாயிருக்கும். ஏனென்றால் மத்தியில் தொங்கிக்கொண்டிருக்கும் விளக்கு—"

தர்மசீலன்.—"விளக்கொரு காரணமா? மேஜையாவிளக்கினின்று தொங்கிக்கொண்டிக்கிறது? இல்லையே."

சத்தியவதி.—"சரிதான், மேஜைவேண்டியது அவசியமில்லைத்தான். சுதர்சனன் பெண்சாதி அதைப்பற்றி சொல்லாவிட்டால் அது எனக்குத் தோன்றியே யிராது."

தர்மசீலன்,—(கோபத்தோடு) "மறுபடியும் சுதர்சனன் பெண்சாதியா? அவளுடைய சிநேகம் உனக்கு அநர்த்தம் உண்டுபண்ணுமென்று தோன்றுகிறது. (சத்தியவதிக்கு கண்ணில் நீர் ததும்பிற்று.) மேஜையை விட்டுவிடுகிறதா, தர்மத்தை விட்டுவிடுகிறதா வென்று உனக்கு யோசனை தெரியாததினால், நான் இரண்டுக்கும் பணம் தருகிறேன். உன்தோழியுடன் சென்று உனக்கு இஷ்டமான மேஜையை வாங்கிக் கொண்டுவா."

சத்தியவதி.—என்னை அவ்வளவு புத்தி யில்லாதவளென்று நீங்கள் நினைக்கலாமா? என்று மனதிரங்கும்படி வெகு வணக்கமாய்ச் சொன்ன வுடனே தர்மசீலனுக்கு கோபந்தணிந்து சந்தோஷமுமுண்டாயிற்று.

பின்னும் சிலநாள் சென்றபிறகு அறை நடுவிற் போடும்படியான ஒருமேசையும் அதின்பேரில் பூங்கொத்துகள் வைக்கும்படியான ஒரு பீங்கான் சட்டியும் வாங்கி வைத்தார்கள். சத்தியவதிக்கு அகப்பட்ட பணக்கார சிநேகிதர்கள் சுதர்சனன் பெண்சாதி மட்டுமல்ல. தன் புருஷன் கோடீசுவரனாயிருப்பதினால் கொஞ்சமேனுங் கணக்குப்பாராமல் செலவழிக்கத் திறமையுள்ள செல்வகுமாரன் பெண்சாதியும் சத்தியவதிக்கு சிநேகமானாள். தர்மசீலனும் பணக்காரர்களுடைய சிநேகிதனானான். ஆகவேவெகு தரித்திரர்களைப்போல் செட்டாகக் குடித்தனஞ் செய்தால் தங்களுடைய சிநேகிதர்களை அவமானஞ் செய்ததுபோலாகுமென்று நினைத்து இவர்களும் பணக்காரர்களைப்போலவே குடித்தனம்பண்ண வேண்டியதாயிற்று. சத்தியவதியோ ஏதோ அதிர்ஷ்டவசத்தினால் தனக்கு நல்ல சிநேகிதர்களாய் மூவர் கிடைத்தார்களென்று நினைத்தாள். சுதர்சனன்பெண்சாதிக்கு உலகத்திலுள்ள எல்லா விசேஷங்களும் அவ் வூரிலுள்ள எல்லாமனிதர்களையும் தெரியும். செல்வகுமாரன் பெண்சாதிபணத்தைக் கண்ணைமூடிக்கொண்டு செலவழிக்கக்கூடியவள். அலங்காரவிநோதி ஆடையாபரணங்களில் புது புது மாதிரியாய் உள்ளவைகளை தரித்துக்கொள்ளப்பட்டவள்.

வெளிக்குத் தாங்கள் வெகு பணக்காரர்களென்று தோன்றும்படி டம்பமாய்க்குடித்தனம்செய்யத்தலைப்பட்டதால் சில விஷயங்களில் சத்தியவதி வீட்டுக்குள் செட்டாக விருக்கும்படி நேரிட்டது. அதாவது வேலைக்காரர்கள் சமையல்செய்யும்பொழுதுசாமான்களை வீண் செலவு செய்யாமலும் திருடிக்கொள்ளாமலு மிருக்கிறார்களா வென்று வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்து வரவேண்டியதாயிற்று. ஆகையால் வேலைக்காரர்கள் இப்படி சத்தியவதி பூசினிக்காய் போகிறவிடந் தெரியாமல் கடுகுபோகிற விடத்தை ஆராய்வதைக்கண்டு அதிருப்தி யடைந்து வேலையை விட்டு நீங்கிவிட்டார்கள். இப்படி அடிக்கடி புது வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு அவர்களுக்குச் சரியாய் வேலைசெய்யத் தெரியாததினால் சத்தியவதி வெகு துன்பமடைந்துவந்தாள்.

(இன்னும் வரும்.)

கே. ஜெயராமய்யர், பி. ஏ.

புருஷன்மனைவி சம்வாதம்.

(311-வது பக்கத்தொடர்ச்சி.)

புருஷன்.—நல்ல குலத்தில் பிறந்து, நன்றாய்க்கற்று தர்மங்களை உணர்ந்த பெண்கள் நீ சொல்லுகிறபடி இருக்கமாட்டார்கள். அரை குறையாய்ப் படித்து அகந்தைபிடித்த இரண்டொரு அறிவிலிகள்தான் உன்னைப்போல், இன இனம் தெரியாமல் குடித்தனத்தைச் சீரழிக்கும்.

மனைவி.—நான் குடித்தனத்தை என்னசீரழிக்கிறேன். என்னக்காளுக்கும் தங்கைக்கும் என்ன வாரிவிடுகிறேன். பிறந்தவீட்டுக்கு மூட்டை மூட்டையாய்ச் சோமனும் துப்பட்டாவும், மோகராவும் பவுனும் கட்டிவிட்டதை எப்போது கையும் களவுமாகக் கண்டு பிடித்தீர்கள்?

புருஷன்.—சந்தர்ப்பப்பட்டால் எல்லாம் கட்டிவிடுவாய். அதற்கு என் வீட்டில் இடம் ஒன்றுமில்லை. வாரிவிடுவதைத் தவிர ஸ்திரீகளுக்கு குடும்பத்தைச் சீரழிக்கிறதற்கு எத்தனையோ வகை உண்டு.

மனைவி.—எனக்காக எவ்வளவு செய்து விட்டீர்கள். வாழ்க்கைப்பட்டு, இந்தவாசலில் புகுந்து, இருபதுவருஷம் ஆச்சுது. ஓர்சுருட்டு ரவிக்கைக்கும், ஜகமிரட்டிப் புடவைக்கும் ஆசைப்பட்டு

கேட்டுக்கொண்டிருந்தேன். இலவுகாத்த கிளி மாதிரியானேன். வாயை வலித்ததே ஒழிய வேறு பிரயோஜனமில்லை. கிழவியாய்ப் போனபிறகு எனக்கு என்னத்திற்கு. இனிமேல் வாங்கிக்கொடுத்தாலென்ன, கொடுக்காவிட்டாலென்ன. அழிக்கிறவர்கள் அழிக்கிறார்கள்; அதெல்லாம் கண்ணுக்குத் தெரிகிறதில்லை, நான் ஒரு கொத்துப்பூவுக்கென்று ஒரு காசு கேட்டால் அதற்கு ஆயிரங்கணக்குப்பார்க்கிறீர்கள். ஒவ்வொருவீட்டில் போய்ப்பாருங்கள். குருணிகுருணியாய் அரிசிபோட்டு கொய்யாப்பழம் வாங்குகிறார்கள். அமிர்தம் விற்றாலும் அனாக்கை அரிசிபோட்டு ஆசைக்கு நான் வாங்கினதில்லை. இப்படிக்கெல்லாம் வாயை அடக்கி வயிற்றை ஒடுக்கிப் பாடுபட்டதற்குப் பலன் கடைசியில் ஏசல்தான்.

புருஷன்.—படிப்பில்லாத ஸ்திரீகளுக்கு என்ன செய்தாலும் திருப்தியில்லை. கணக்கு வழக்குத் தெரிகிறதில்லை. கடுகுபோகிறவிடம் தெரியும், பூசணிக்காய் போகிறவிடம் தெரியாது.

மனைவி.—அப்படி என்னதெரியாமல் இருக்கிறேன். எல்லாந்தெரிந்துதான் இருக்கிறது. நாலுமாத காலமாய், காலமே எழுந்திருந்தால் கால் கை ஓய்ந்துபோகிறது. சாப்பிட்டவுடனே படபட என்று வருகிறது. வேலைசெய்யத்தள்ளவில்லை. ஒரு சமையற்காரனை வைத்துக்கொண்டால் சாதகமாயிருக்கும். ஆனால், ஒருமாஸ சாமான்களை ஒருநாளில் கொட்டி யிறைத்து குடித்தனத்தை அழிப்பனே; 'ஊணில் மிகுவது உழவில் மிகாது' என்று பின்னையும் யோசித்து பிராணனைக் கையில்பிடித்துக்கொண்டு, மெள்ளமெள்ள நகர்ந்தாவது என்வேலையை முடிக்கிறேன். என்ன தலையாலே நடந்தாலும் யாருக்குநன்றி.

புருஷன்.—நிஷ்டூரப்பட்டுக்கொண்டு வேலை செய்வதைவிட பரிசாரகன் ஒருவனை வைத்துக்கொள்வது மிகவும்நலம்.

மனைவி.—இப்படிக்கு சூரியோதயம் முதல் நடுராத்திரிவரையில் மூச்சுவிட உட்காராமல் உழைத்துக்கொண்டிருக்கும் பொழுதே குடித்தனத்தை அழிக்கிறேனென்கிறீர்கள். கத்திரிபாவலி கல்லுதிர்ந்து வருஷம்ஒன்றாயிற்று. அதைப்பிரித்துக் கட்டிக்கொடுக்கக் கையில் பணமில்லை என்கிறீர்கள். எனக்காக தாதிக்கும், பரிசாரகனுக்கும் சம்பளம் நன்றாய்க் கொடுப்பீர்கள். அப்படிக்கெல்லாம் கேட்டால் வீட்டைவிட்டு உடனே விரட்டி விடுவீர்கள்.

புருஷன்.—படிப்பு இல்லாத பெண்களுக்கு கெடுமையும், கொடுமையும் தவிர வேறே பேசத் தெரியாது.

மனைவி.—நான் என்ன கெடுமையும் கொடுமையும் எடுக்கிறேன். இருக்கிற கஷ்டத்தைச் சொன்னால் யாருக்குங் கோபந்தான். வீடுகூட்டுகிற விளக்குமாறு ஒப்பந்தம் நான் உங்களுக்கு. 'விளக்கும் பொழுது வெளியிலே இல்லாத போது மூலையிலே;' நான் எதுகேட்டுச் சந்தோஷமாய்க் கொடுத்தீர்கள். எந்த நகை ஒடிந்தாலும் உள்ளே போட்டு வைக்கிறதே ஒழிய, ஒக்கப்பண்ணிக்கொடுங்களென்று கேட்கிறதேஇல்லை.

புருஷன்.—அறிவில்லாத ஸ்திரீகளுக்கு எப்பொழுது பார்த்தாலும் நகைப்பைத்தியந்தான். நகை, நகை என்று புருஷன் பிராணனை எடுத்து விடுகிறார்கள்.

மனைவி.—அப்படிக்கென்ன உங்களை உபத்திரவப்படுத்தி நீங்கள் எனக்கு ஆயிரம், பதினாயிரத்துக்கு,நகை போட்டுவிட்டது.

புருஷன்.—இப்பொழுது உனக்கு எவ்வளவு ரூபாய் நகை இருக்கிறது தெரியுமா?

மனைவி.—கழுத்துக்கு சரட்டட்டிகையும், காரையும், காதுக்கு ஓர் ஓலையும், பாவலியும், கைக்குக்காப்பும், சங்கலியும் இருக்கிறது. ஒடிந்தது ஒடியாதது எல்லாமாய்ச் சேர்ந்து எட்டு நூறுக்கு இருக்கலாம்.

புருஷன்.—நிச்சயமாய் இவ்வளவுதான் என்று தெரியுமா?

மனைவி.—நான் என்ன நிச்சயத்தைக் கண்டேன். வெளியிலே போகிறேனா, வாசலிலே போகிறேனா; பள்ளிக்கூடத்தில் படித்தேனா; கணக்கு வழக்குப்பார்க்கிறேனா; இந்தக் காலத்துப்பெண்டுகளைப்போல் ஒழிந்தவேளையிலே வீடுவீடாய் வம்புக்குப்போகிறேனா? நான் நகையின் விலையைக் கண்டபடி?

புருஷன்.—பிறகு "எண்ணூறு" என்று எப்படி நிதானித்தாய்?

மனைவி.—நாத்தனார் என்னைப்போலதான் பூட்டிக்கொண்டிருக்கிறாள். ஆனால் என்னைவிட அவளுக்கு காலிலே கொலுசும், மூக்கிலே மூக்குத்தியும் இருக்கிறது. மாமியாரும் நாத்தனாரும் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஏதோ பத்துநூறுக்கு இருக்கென்று சொல்லிக்கொண்டார்கள். அதைக்கொண்டு எனக்கு எட்டுநூறுக்கு இருக்குமென்று நிச்சயம்பண்ணினேன்.

புருஷன்.—உனக்கு இப்போது இரண்டாயிர ரூபாய்க்குமேல் நகை யிருக்கிறது. காது ஓலையும் காரையும் மாத்திரம் ஆயிரத்திருநூறு ரூபாய் விலை. இவ்வளவு ரூபாய் நகையில் முடங்கினதினாலே நஷ்டம் எவ்வளவு தெரியுமா?

மனைவி.—நஷ்டமென்ன! பணமாயிருக்கிறது நகையாயிருக்கு! பணமாயிருந்தால் செலவழிந்துபோகும், நகையாயிருந்தால் அழியாமல் இருக்கும்.

புருஷன்.—நகையில் போடாமல், நிலத்திலே மாத்திரம் போட்டிருந்தால், வருஷா வருஷம் வீட்டுக்கு சாப்பாட்டுக்கு வேண்டிய நெல்லுகிடைக்கும். வட்டிக்கு கொடுத்திருந்தோமோ, வட்டியைக்கொண்டு, ஒருவருஷத்துக்கு வேண்டிய மேன் சாமான்கள் வாங்கலாம்.

மனைவி.—நகையைவிட நிலம்என்ன விசேஷம்? ஒரு வருஷம் விளையும், ஒரு வருஷம் விளையாது: ஒருவரிடத்தில் கடனாகக் கொடுத்தால், பணம் திரும்பிவந்தாலும் வரும், வராமல் போனாலும் போகும். நகையாக இருந்தால் மோசமில்லை, அசையாமல் கிடக்கும்.

புருஷன்.—நகைக்கு ஏன் மோசமில்லை. திருடர்கள் கொண்டுபோகக்கூடும். மேலும், இரண்டாயிரம் ரூபாயை வட்டிக்குப் போடும் பட்சத்தில் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒன்பது ரூபாய் விகிதம், நூற்றெண்பது ரூபாய் கிடைக்கும். இந்த வட்டியைத்தொடாமல், முதலுடன் சேர்த்து வட்டிக்குவட்டிவாங்கும் பட்சத்தில்,எட்டு வருஷத்தில், நாலாயிர ரூபாயாகும். இப்படியிருக்க நகைசெய்வதினால், பத்தர்கள் குறைந்தபட்சம் நூற்றுக்கு ஐந்து விகிதம், நூறு ரூபாய்போல் பற்றிக்கொள்ளுகிறார்கள். எட்டு வருஷம் நகையைப் போட்டுக் கொண்டிருந்தால், தேய்வினாலும் தருவினாலும், இடை குறைந்து, ஒன்றுக்கு முக்காலாய் விலைபோகும். ஆயிரத்தைந்நூறு ரூபாய்தான் கிடைக்கும். வட்டிக்குபோடுவதை விட்டு நகை செய்வதினால், ஒரு குடும்பத்துக்கு எட்டு வருஷத்துக்குள் இரண்டாயிரத்தைந்நூறு நஷ்டம் வருகிறது. அதாவது வருஷம் ஒன்றுக்கு சுமார் முன்னூறு நஷ்டம். மாசம் ஒன்றுக்கு ரூபாய் இருபத்தைந்து விகிதம் ஆகிறது. ஒரு சமயற்காரனையும் தாதியையும் வைத்துக்கொண்டால் இவ்வளவு நஷ்டம் வரமாட்டாது.

மனைவி.—அவ்வளவு நஷ்டம் வருகிறதோ. உங்கள் கணக்கெல்லாம் எனக்கு புரியவில்லை. ஒவ்வொருவீட்டில், புருஷன் நாலாயிரம், பதினாயிரத்துக்கு நகைசெய்து பெண்டாட்டிக்குப் போடுகிறான். இவ்வளவு நஷ்டம் வந்தால் போடுவார்களோ. என்னை ஏய்க்கிறதற்காக இப்படிக்கெல்லாம் சொல்லுகிறீர்களோ என்னமோ.

புருஷன்.—படித்த பெண்களைக் கேட்டுப்பார். நான் சொல்லுகிறது வேடிக்கையென்றும் வாஸ்தவமென்றுந் தெரியும். இல்லாவிடில் நீயாவது படித்து கணக்கு வழக்குத் தெரிந்து கொண்டால், நான்சொல்லுவதெல்லாம் உனக்கு நன்றாய் விளங்கும்.

மனைவி.—நல்லது, இத்தனை வயதுக்கு மேல் கையில் மாக்கல் பலகையும், காலில் ஜோடும் மேலே சட்டையும் இடுப்பில் பாவாடையுமாக, வீதியோடே பள்ளிக்கூடத்துக்குப் போகிறேன்? நான் பெண்ணாய்ப்பிறந்து வாழ்கிற வாழ்வுக்கு அது ஒன்றுதான் குறைச்சல். பெரிய பெண்டுகள் பள்ளிக்கூடம் போவார்களோ!

புருஷன்.—குளங்களுக்கும், கோவில்களுக்கும், பகலிலும், பாதிராத்திரியிலும் கண்டவர்கள் மேலேபட இப்பொழுது ஸ்திரீகள்போக வில்லையா, ஏன் பள்ளிக்கூடத்துக்குப்போகக்கூடாது?

மனைவி.—நீங்கள் சொல்லுவது புதுமையா யிருக்கிறது. கோவில் குளங்களுக்குப் போவது வழக்கம். அதில் பாதகம் இல்லை. பெரிய பெண்டுகள் பள்ளிக்கூடம் போதல் பாதகம்இல்லையென்று இன்றைக்கு நீங்கள் சொல்லத் தான் கேட்டேன்.

புருஷன்.—இது வரைக்கும் நம்முடைய தேசத்தில் ஸ்திரீகள் படிக்கக்கூடாதென்றும், வெளியிலே வாசலிலே போகக்கூடாதென்றும் இருந்தது. இப்பொழுது கொஞ்சகாலமாக, ஸ்திரீகளைப் படிக்கவைப்பது அவசியமென்று பலபேர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு, பெண்பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பத்துப் பதினைந்து பெரிய பெண்கள் போய்ப்படித்தால் பள்ளிக்கூடம்போவது, கோவிலுக்குப்போவது போல வழக்கத்தில் வந்துவிடும்.

மனைவி.—ஒருக்காலும் அந்தவழக்கம் வரமாட்டாது. கோவிலுக்கு ஸ்வாமி தரிசனத்துக்காகப் போகிறோம். பள்ளிக்கூடத்தில் என்னகாரியம். அப்படி பெரியபெண்டுகள் போகத் தலைப்பட்டார்களோ, இராச்சியம் ரொம்பக்கெட்டுப்போகும்.

புருஷன்.—ஸ்திரீகள் படித்தால் நமது தேசம் விர்த்திக்கு வருவதைவிட்டு எப்படிக்கெடும்?

மனைவி.—சின்னஞ்சிறிதுகளா யிருந்தால் பாதகமில்லை, பெரிய பெண்பிள்ளைகள் வெளியே போக ஆரம்பித்தால், அவாளுக்கு மனது கனிந்துவிடும்; ஆண்பெண் என்கிற வியவஸ்தை இல்லாமல், இஷ்டப்பட்ட விடத்திற்குப் போவதற்கும், வேண்டியவர்களுக்குக் கடிதாசஎழுதவும், லச்சையில்லாமல் எல்லாருடன் பேசுவதற்கும், தைரியங்கொண்டுபோகும். லோகம் தலைகீழாகமாறி விடும். நாமும் வெள்ளைக்காரச்சிமாதிரி ஆய்விடுவோம்.

புருஷன்.—வெள்ளைக்காரச்சி மாதிரி மிகவும் கெடுதலோ. அவர்கள் மாதிரி நமதுதேசத்து ஸ்திரீ

கள் ஆகும்பொழுது தான் நமது இராச்சியத்துக்கு க்ஷேமம்.

மனைவி.—அவர்கள் மாதிரியில் கெடுதி என்ன? ஒன்றுமில்லை! நான் இரண்டு நாளைக்கு அவர்கள் மாதிரி நடந்தேனுனால் உங்களுக்குத்தெரியும்.

புருஷன்.—அவர்கள் வீட்டைப்போய்ப்பார், உடுப்பைப்பார்; எல்லாவற்றையும் எவ்வளவு சுத்தமாயும் அலங்காரமாயும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். புருஷன் செய்யவேண்டிய வேலைகளில் பாதி அவர்கள் செய்து விடுகிறார்கள். ஒழிந்தவேளையில் எப்போதும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். சாமான் வாங்கவேண்டியிருந்தால், ஷாப்புக்குநேரில் போய் வாங்குகிறார்கள். நகை ஒன்றும் போட்டுக்கொள்ளுகிறதில்லை. அதினால், திருடர்கள் பயமின்றி ஜனசங்கமில்லாத இடங்களில் வீடுகட்டிக்கொண்டு வசிக்கிறார்கள். அவர்களுடைய இல்வாழ்க்கை மிகவும் சுகம். விவேகிகளாய் இருப்பதினால், கொண்ட புருஷனுடைய மனம் கோணாமல், அவனுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து நடக்கிறார்கள்.

மனைவி.—ஆயிரத்தில் ஒரு வெள்ளைக்காரச்சி நல்லவளாயிருக்கலாம். வெளிக்கு எல்லாம் பகட்டுதான். உள்ளே புகுந்துபார்த்தால் ஊழலெல்லாம் வெளிப்படும். தூரத்து பச்சைதான். கிட்ட நெருங்கினால் கண்போய்விடும்.

புருஷன்.—ஏதோ வெள்ளைக்காரர்கள் வீட்டில் நெருங்கிப் பழகினவளைப்போல பேசுகிறாயே.

மனைவி.—நேரே பார்த்துத் தான் தெரியவேணுமோ? கேட்டால் தெரியாதோ! விசாலாட்சி மாப்பிள்ளைக்கு பட்டணத்தில் உத்தியோகமாம். அவன் பெண் வெங்கடலட்சுமி பிரசவிக்க பிறந்தாம் வந்திருக்கிறாள். அவள் வெள்ளைக் காரச்சியைப்பற்றி சொல்லுகிறாள், சொல்லுகிறாள், காதுகொடுத்து கேட்கச் சகிக்கவில்லை!

புருஷன்.—என்ன சொல்லுகிறார்கள்?

மனைவி.—வெளிக்கு இவ்வளவு சுத்தமாயிருக்கிறார்களே. வீட்டில் அவர்களுக்குப் பறையனும், பறைச்சியுந்தான் சமைத்துப்போடுகிறார்களாம். சாயங்கால வேளையில், குழந்தையை குசினிக்காரச்சி யிடத்தில் விட்டுவிட்டு தினமும் சமுத்திரக் கரைக்கு காற்றுவாங்கவந்து விடுகிறார்களாம். அகமுடையானைவிட்டு, அசல் புருஷன் கையைப்பிடித்துக்கொண்டு ஆநந்தமாய் பேசிக்கொண்டு அங்கும் இங்கும் போகிறார்களாம். கவர்னர் வீட்டில் ஒருநாள் நிலாச்சாப்பாடாம். ஊரிலுள்ள பெரிய துரைவீட்டு துரைசாணிகளெல்லாம் வந்திருந்தார்களாம். சாப்பாடு ஆனவுடனே குடித்துவிட்டு, கண்ட புருஷர்கள் கையைப்பிடித்துக்கொண்டு, மாரைப்பாதி திறந்துகொண்டு கன்னு பின்னுஎன்று கூத்தாடினார்களாம்.

புருஷன்.—அவாள் ஜாதிவழக்கம்; அதினாலே கெட்டவர்களென்று சொல்லிவிடலாமா.

மனைவி.—நம்முடைய ஜாதியில் கட்டுங் காவலுமாயிருக்கும் பொழுதே, எவ்வளவோ கெட்டுப்போகிறது. இப்படி ஒரு தடையுமில்லாமல் குடித்துவிட்டுக் கூத்தாடினால், பிசகே இருக்காது!

புருஷன்.—வாஸ்தவமாகவே பிசகு இருக்கமாட்டாது. நமமைப்போல அவர்களும் தெய்வத்துக்குப் பயந்தவர்களானதினால், கூத்தாடுவதினால் பிசகு நேரிடமாட்டாது.

மனைவி.—அவாளுடைய தெய்வம் இப்படி குடித்துவிட்டு, ஆண் பெண் வியவஸ்தை இல்லாமல் கூத்தாடச் சொல்லியிருக்கா? நல்ல தெய்வம்! மனுஷிய ஜென்மமெடுத்து மானத்துக்கு பயப்படுகிறவர்கள் ஒருபொழுதும் இப்படிச் செய்யமாட்டார்கள்.

புருஷன்.—மனது காவலை ஒழிய, மதில் காவலாகமாட்டாது. மனது சரியாயிருக்கும் பட்சத்தில் ஒருவரோடு பேசுவதினாலும், பழகுவதினாலும் பாபம் நேரிடமாட்டாது.

மனைவி.—எல்லாம் வாய்ப்பேச்சுதான். அய்யோ! ஒருநாள் என் ஊரிலே இருந்து சாம்பசிவன் வந்திருந்தான். எங்கள் வீட்டுக்கு அடுத்தவீடு; தாயாய்ப்பிள்ளையாய்ப் பழகினவன்; கூடப்பிறந்த பிறப்பைவிட அதிகம். அவன் தமையன் பெண்ணுக்கு எழு நிரம்பி எட்டாம் வயது. பிள்ளைபார்க்க வந்திருந்தான். சற்று நின்று ஊர் யோகக்ஷேமத்தை விசாரித்தேன். இதை வந்து நாத்தனார் உங்களிடத்தில் சொல்லிக் கொடுத்தாள். அதற்காக என்னை அடி அடியென்று அடித்தீர்கள். இன்னும் வெள்ளைக் காரச்சிமாதிரி இருந்துவிட்டேனோ நன்றாய் சகிப்பீர்களே! தள்ளிவிட்டு இளையாள் கலியாணம் பண்ணிக் கொள்ளுவீர்கள்.

புருஷன்.—எழுதப் படிக்கத் தெரியாத ஸ்திரீகளுக்கு இடமே கொடுக்கக்கூடாது.

மனைவி.—படித்ததினாலே பதிவிரதையாகி விடுகிறார்களாக்கும். பார்க்கப்போனால் படிக்காதவர்கள் தான் புருஷனுக்கு அடங்கி இருக்கிறார்கள்.

புருஷன்.—படித்த புருஷர்கள் நல்லவர்களா? படிக்காதவர்கள் நல்லவர்களா?

மனைவி.—நான் எந்தப்புருஷர்களைப் பார்த்தேன்; யாரோடு பேசி இருக்கிறேன். எனக்கு என்ன தெரியும். நீங்கள்தான் சொல்லுங்கள்.

புருஷன்.—படித்தவர்களே நல்லவர்கள் படிப்பு விவேகத்தை விர்த்தி செய்யும் தெளிவான ஞானமும், பக்தியும், பரிசுத்தமும் உண்டுபண்ணும். படிப்பில்லாதவர்கள் மூடர்கள்.

மனைவி.—உங்களுடைய அம்மாவுக்கும் பாட்டிக்கும், என்ன படிப்புத்தெரியும்? அவர்கள் என்ன விவேகங் கெட்டிருக்கிறார்கள்!

(இன்னுமவரும்)

ஆர். சக்கரவர்த்தி ஐயங்கார், பி. ஏ.

சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

19. ஜாலசம்மட்டி.

நீளமாயும் வாய் நெருக்கமாயுமுள்ள ஒரு புட்டியில் கால்பங்கு ஜலம் வார்த்து அடுப்பின்மேல் வைக்க, சற்றுநேரத்திற்குப் பின்பு புட்டிக்குள்ளிருக்கும் ஜலம் உஷ்ணத்தினால் கொதித்து நீராவியாய் புட்டிவாயின் வழியாய் வெளியில் புறப்படும். இவ்வாறானபின்பு புட்டியை அடுப்பினின்றும் எடுத்து சில வினாடியானபின், புட்டியின் வாயில் அழுத்தமாய் ‘கார்க்கு’ அடைத்து முத்திரை மெழுக்கால் முத்திரைபதித்து குளிர்ந்த இடத்தில் புட்டியை வைத்துவிடவும். நன்றாய் உஷ்ணம் ஆறினபின்பு புட்டியை எடுத்துக் கீழுமேலுமாகக் குலுக்க, உள் உலவும் ஜலம் கற்கட்டிகள்போல் புட்டிக்குள் தாக்கும்.

20. சூக்ஷ்ம கணிதம்.

ஆயிரம் போர்வீரர்களை ஒருவரிசையாக நிற்கவைத்து சேனாதிபதியானவன் அவ்வரிசையில் முதலில் நின்றவனுக்கு ஒரு பழமும், இரண்டாவது நின்றவனுக்கு இரண்டு பழமும் இவ்வாறே கடைசியில் நின்றவனுக்கு ஆயிரம் பழமும் அளித்தனன். பின்பு எல்லாரும் ஒரு பெரிய கூடையில் வாங்கின பழத்தை ஒருங்கேபோட்டுவிட்டனர். கூடையில் மொத்தம் எத்தனை பழமிருக்கும்? முதல் எண்ணிலிருந்து ஆயிரம் எண்வரையிலும் கூட்டி மொத்தஞ்சொல்ல அநேக நாழிகை பிடிக்குமல்லவா? இப்படிச் சொல்லாது 2-நிமிஷத்திற்குள் முழு மொத்தத்தையும் சொல்லவேண்டும். இது சொல்வதெப்படி?

விடை:—கடை எண்ணாகிய ஆயிரத்தையும் அதின் சரிபாதியாகிய ஐந்நூற்றையும் பெருக்கி வந்த தொகையோடு கடை எண்ணாகிய ஆயிரத்தின் பேர் பாதியாகிய ஐந்நூற்றைக்கூட்ட மொத்தம் வந்துவிடும்.

1000-கடைசித்தொகை
500-ஷை யின் பாதி

பெருக்கிவந்ததொகை 500000-இத்தோடு
ஆயிரத்தில் பாதியாகிய 500-ஐகூட்ட

மொத்தம் 5,00,500

இவ்வாறே முதல் எண் 1-ஆய் இருந்து முடிவெண் எவ்வளவு பெருத்த தொகையாயிருந்தபோதிலும் மேற்கூறிய விதிப்படிக் கணக்கிடஎளிதில் மொத்தம் வந்துவிடும்.

21. ஈயக்குண்டு பாதிகள் ஒன்றாய்ச் சேர்தல்.

ஒரு ஈயக்குண்டை எடுத்துக் கூர்மையான கத்தியால் இரண்டாகக் கரடில்லாமல் வெட்டி, அப்படி மெதுவாயும் பளபளப்பாயுமிருக்கிறபொழுது இரண்டு பாதியையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கையால் அழுக்கி நெருக்கினபின் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்துவிடும். பின்பு இலேசாய்ப்பிரியாமல் வெகு கட்டாயத்தின் பேரிலேயே பிரியும்.

22. கற்பாளத்தைப் பிளக்கும் விதம்.

ஒரு கற்பாளத்தைப் பிளப்பதற்கு அதில் வரிசையாய் துவாரங்கள் செய்து ஒவ்வொன்றிலும் நீர் வார்த்து நெருக்கமாய்ப் பொருந்தத்தக்க மரஆப்புகளை நுழைத்து அந்த ஆப்புகளின் முகத்தில் தண்ணீரில் தோய்த்த சீலையை ஈரங் கொடுத்துக்கொண்டிருந்தால், தண்ணீரால் ஆப்புகள் உப்ப, பாளம் வெடித்துப்போகும்.

23. ஊசி சலத்தில் மிதத்தல்.

ஒருபாத்திரத்தில் நிறைய ஜலம் வார்த்து காற்று போக்கு வரவில்லா வீட்டில் வைத்து, சுமார் ௪-அங்குலம் சுற்றளவுள்ள (Tissue Paper) காற்றாடி காகிதத்தை சமமாய்விரித்து ஜலத்தின்மேல் சாக்கிரதையாய் வைக்க அது மிதக்கும். இந்த காகிதம் ஜலத்தில் ஊறி அமிழ்ந்து போவதற்குமுன் துருவும் அழுக்கும் ஈரமுமில்லாத ஊசியைக் காகிதத்தின்மேல் மெதுவாய் வைக்க, காகிதம் ஊறி அமிழ்ந்து விட்டவுடன், ஊசி தண்ணீரின்மேல் பாரமில்லாத வஸ்துவைப்போல் மிதக்கும்.

24. நாடி ஓட்டம் பலபேர் ஒருங்கு காண்பது.

ஒரு மிளகிற் பேர்பாதியளவு மெழுக்கு உண்டையை கைநாடியின் மேல்வைத்து, ரசப்பூசின லேசான ஒரு சிறு கண்ணாடித்துண்டை மெழுக்கின்மேல் பதியவைத்து வெயிலில் பிடிக்க சூரியன் ஒளி கண்ணாடியினின்றுந் தெறித்து தூரத்தில் இருக்கும் சுவரில் விழும். இவ்வாறு விழாவிடின் கண்ணாடியைச் சற்று திருப்பிக்கொள்ளவும். இப்பொழுது சுவரில் இருக்கும் வெயிலைக் கவனித்துப் பார்ப்போமானால் நாடி ஓட்டப்படி வெயிலும் துள்ளும். சிரித்தாச் நாடிமூலமாய் இரத்தம் வேகமாய்ச் செல்லுகிறபடியால் நாடி துரிதமாய்த்துடிப்பதை சுவரில் தோன்றும் வெயிலைக் கவனித்து நோக்கின் நன்கு விளங்கும், இவ்வுபாயத்தினால் ஒரு வியாதியஸ்தனுடைய நாடியின் குணகுணத்தை அநேகவைத்தியர்களும் ஒருங்கே ஏககாலத்தில் அறியுந்திறத்தை யடைவதோடு, நோயாளியை அணுகாமலே நாடிப்பலனைச் சொல்லலாம்.

25. தூள் வேட்டு.

இரண்டு மூன்று சிட்டிகை சுத்திசெய்த கந்தகப் பொடியோடு, கொஞ்சம் (Chlorate of Potash) க்ளோரட் ஆப் பொட்டாஷ் கலந்து உலர்ந்த கல்லின்மேல் வைத்துத் தேய்க்க, சாட்டி அடிபோல் ஓர்விதத் தொனிகேட்கும்,

26. ஜடபதார்த்தங்களின் பாசம்.

ஒரு பீங்கானில் நிறைய சலம்வார்த்து அதில் மிதக்கக்கூடிய கார்க்கு (Cork) துண்டுகள், கட்டைகள் இவைகளை ஒன்றுக்கொன்று சற்றுத்தூரத்தில் மிதக்கச்செய்ய, அவைகள் வரவரத் தானாய்ச்சமீபித்து ஒன்றாகச் சேர்ந்து, பின்பு தானாய்ப் பிரியமாட்டாது. கப்பல் முதலிய பெரியவஸ்துக்கள் சலத்தில் ஒன்றுக்கொன்று சமீபமாய் மிதந்துகொண்டிருந்தால் ஷை காரணத்தினாலேயே அவைகள் வரவரத் தானாய் சமீபிக்கும்.

இரண்டு ஈயக்குண்டுகளை ஒன்றோடொன்று படாமல் அரைக்கால் அங்குல தூரத்தில் ஒன்றின் பக்கத்திலொன்றை மெல்லிய கயிற்றால் கட்டி தொங்கவிட அவைகள் தங்கள் நேர்தூக்கைவிட்டு ஒன்றுக்கொன்று சற்று சமீபித்துச் சேரும்.

செங்குத்தான மலையின் பக்கத்தில் ஒரு குண்டைத் தொங்கவைத்தால் அது சரியான நேர் தூக்காய்த் தொங்காது, மலையின் பக்கமாய்ச் சற்று சாய்ந்து தொங்கும்.

ஒரு பாத்திரத்தில் ஜலம்கொதிக்கும்போது உண்டாகும் நீர்க்குமிழிகள், பாத்திரத்தின் மேற்புரம் இவைசளைக் கவர்வதினால் ஓரங்களிற் சேரும்.

நாம் வசிக்கும் இப்பூமிக்கும் இக்கவர்ச்சி குணமிருப்பதினாலே தான், மரத்தின் கனிகளும், பழுத்த இலைகளும், உயரத்தில் விட்டு விட்ட எப்பொருள்களும் பூமியின் பக்கமாய்ச்சென்று விழுகின்றன. பூமியினின்று உயரப் போகப்போக கவருந்தன்மையும்முறையின்படி குறையும். கடலோரத்தில்ஆயிரம் வீசைகொண்ட பாரத்தை வெகு உயரமுள்ள மலையின் சிகரத்தின்மேற் கொண்டுபோய் நிறுக்கும்பொழுது இடை சற்று குறையும்.

27. புகை மோதிரங்கள்.

*ஆடுங்காகித அட்டைகளால் அவ்வட்டைகள் எவ்வளவு அகலமிருக்கிறதோ அவ்வளவு உயரம், நிகளம் அகலமுள்ள ஒரு சிறு பெட்டி செய்து அப்பெட்டிக்கு யாதொரு சந்துமின்றி நன்றாய் ஒட்டிப் பின்பு ஒருபக்கத்தின் மத்தியில் முக்கால் பட்டாணியளவு வட்டமாகத் துளைசெய்து, பெட்டிக்குள் சுருட்டு புகையை நிரப்பிப் பின்பு துவாரத்தை நன்றாய் மூடி வீட்டுக்குள் காற்றில்லா இடத்தில் நின்றுகொண்டு பெட்டியின் வாயைத்திறந்து பெட்டியின் பக்கத்தில் சுண்டு விரலின் முனையால் மெதுமெல்லெனத்தட்ட பெட்டியின் வாயிலிருந்து புகை மோதிரங்கள் புதைவாணம்போல் புறப்படும். சுருட்டுப்புகை அகப்படாவிடின், பெட்டியின் சந்தில் நுழையத்தக்க அவ்வளவு கனமான கறுப்பு கந்தை துணியைச் சுருட்டி ஒருமுனையைக்கொளுத்தி பெட்டிக்குள் போட்டுவிட கந்தைத்துணி உள்ளே புகையப் புகைய பெட்டிக்குள் புகை சேர்ந்துகொண்டேயிருக்கும். எந்நேரம் வேணுமென்றாலும் இவ்வேடிக்கையைக் காட்டலாம்.

28. குருவி கூச்சல்.

ஒரு *கார்க்குத் துண்டைச் சலத்தில் சற்றுநேரம் ஊறவைத்துப் பின்பு ஒரு திரட்சியானபுட்டி, விளக்குச் சிம்னி அல்லது ஒரு கண்ணாடிக்குழாய் இவைகளின்மேல் ஊறின கார்க்குத்துண்டால் பரபரவென்று தேய்க்க குருவிகளெல்லாம் கூட்டமாய்க்கூடி ஒன்றோடொன்று சம்பாஷிப்பதுபோல் கேட்கும். அண்டையில் பூனையிருந்தால் கூவுங் குருவிகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று நாலாபக்கமும் ஓடும்.

29. ஜலதிருஷ்டிக்கண்ணாடி.

ஒன்றின் குறுக்களவு 1-அடி, இன்னொன்றின் குறுக்களவு 1-அங்குலம்உடையதான வட்டமான இரண்டு வெள்ளைக் கண்ணாடி பில்லைகளைச் சேகரித்து, நிகளம் 6-அடி, ஒருபக்கவாயின் குறுக்களவு 1-அடி, மற்றொருபக்கத்துவாயின் குறுக்களவு ஒருஅங்குலம், இவ்வளவினதான வாட்டமாய் இருக்கும் ஒரு தகரக் குழலினிருமுனைகளிலும் மேற்படி கண்ணாடிகளைக் குழலில் சலம் புகாதபடி லப்பத்தினால் நன்றாய்ப் பதிய வைத்து உலர்ந்தபின்பு, குளம், ஆறு, தடாகம், ஏரி இவைகளின் அடியைப் பரிசோதிக்கவேண்டுமானால் குழலின் அகலமுனையைச் சலத்தில்மூழ்த்தி, சிறு கண்ணாடியின் பக்கமாய்ப் பார்ப்போமானால் ஜலத்தினடியிலிருக்கும் எல்லா வஸ்துவும் நன்றாய்த் தோன்றும். இக்கருவி மிகவும்பிரயோசனமுள்ளது. ஜலத்தில் வீழ்ந்தமிழ்ந்துவிட்ட மனிதர் மிருகம் முதலியவைகளைச் சீக்கிரம் எளிதில் கண்டுபிடிக்கலாம்.

இக்கருவியை இரவில் உபயோகிக்கும் பக்ஷத்தில் பரிசோதிக்கவேண்டிய இடத்தண்டை 5, 6 மத்தாப்புகளைக் கொளுத்த அவைகளின் ஒளிசலத்துள் பாய்ந்து குளத்தின் அடித்தரையில் நிலவெரிப்பதுபோல் பிரகாசம் வீசும். அப்பொழுது நன்றாய்ப் பரிசோதிக்கக்கூடும்.

30. விநோத விடுகதை.

ஒரே அளவினதான இரண்டு(Wine glass)வைன் கிளாஸ் அல்லது டம்ப்ளரைச் சேகரித்து, ஒன்றில் ஜலமும் மற்றொன்றில் ‡வேர்க்கடலை எண்ணெயும் நிரப்பி ஓர் மேசைமேல் சாக்கிரதையாய் வைத்து முதல் டம்ப்ளரிலிருக்கும் ஜலத்தை எண்ணெயிருக்கும் இரண்டாம் டம்பளரிலும் இரண்டாம் டம்பளரிலிருக்கும் எண்ணெயை முதல்டம்பளரிலும் மாற்றச் சொல்லவும். மாற்றும்போது நீராலும் எண்ணெயாலும் நிரம்பியிருக்கும் டம்ப்ளர்தவிர மற்ற யாதொரு பாத்திரமும் உபயோகிக்கக் கூடாது. எண்ணெயையாவது சலத்தையாவது ஒரு துளியுங் கீழே கொட்டக்கூடாது.

இதைச்செய்யும்விதம்.—டம்ப்ளரின் வாயைவிட சற்று அகலமான ஒரு மெல்லிய காகித அட்டையை ஜலமிருக்கும் டம்ப்ளர்மேல் வைத்து வலதுகை நடுவிரலால் அட்டையை டம்ப்ளரின் வாய்புறத்தில் மெதுவாய் அழுத்திக்கொண்டு இடதுகையால் டம்ப்ளரைச் சடிசெனக் கவிழ்த்து வலது நடுவிரலை எடுத்துவிட அட்டையானது டம்ப்ளரில் ஒட்டிக்கொண்டதுபோல் நின்றுவிடும். ஜலம் ஒருதுளிகூட வெளியில் புறப்படாது. இதை அப்படியே பிடித்துக்கொண்டு எண்ணெயிருக்கும் டம்ப்ளரின்மேல் இரு டம்பளரின் வாய் ஓரமும் ஒரே நேராயிருக்கும் நிலையில் வைத்துப் பின்பு இரு டம்ப்ளரின் மத்தியில் ஒரு ஓரத்தில் ஒரு சிறுவழி உண்டாகும்படி மெதுவாய் அட்டையைச் சற்று இழுத்து விட்டுவிட மேல் டம்ப்ளரிலிருக்கும் ஜலம் எண்ணெயைவிட மிக கனமானதால் சிறு கம்பிபோல்எண்ணெயில்இறங்கும். எண்ணெய் ஜலத்தைவிட இலேசானதால் எண்ணெயும் ஜலத்தில் கம்பிபோல் ஏறும். இந்தக் காட்சியைக் கண்ணுற்றவர்கள் எல்லோரும் வெகு ஆச்சரியப்படுவார்கள். இச்செயல் முடிந்த பின்பு எண்ணெய்மேல் டம்பளரிலும், ஜலம் கீழ்டம்ப்ளரிலுமிருக்கும். இப்பொழுது இரண்டு டம்ப்ளரின் மத்தியில் யாதொரு போக்கு வரவில்லாதபடி அட்டையை நன்றாய்த் தள்ளி அட்டையை டம்ப்ளரின் வாயில் இடதுகையால் மெல்லென அழுக்கிப் பிடித்துக்கொண்டு வலது கையால டம்ப்ளரைப்பிடித்து மேசையின் ஓர்பக்கத்தில் நிமிர்த்தி வைத்துவிடவும். எனதருமைச் சிறுவர்காள்! இவ்விடுகதையை விடுவிக்கத் தெரிந்துகொள்வதினால் நீங்கள் அடைந்த சாஸ்திர சம்பந்தமான அறிவுக்காக களிப்பீர்களென்று நம்புகிறேன். சகல சாஸ்திர மூலங்களைக்கொண்டு இவைபோன்ற அநேக விடுகதைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பின்னால் வரைவேன்.

(இன்னும் வரும்.) மா. நடேசன்.

* Cork.

‡ ஜலத்தில் மிதக்கக்கூடிய எந்த எண்ணெயையாவது உபயோகிக்கலாம்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

எனது சின்னஞ் சிறு நேசர்களே!

இந்தவிசை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியது விசேஷமாக ஒன்றுமில்லை. போனவிசைசிறுவர்க்கானபக்கத்தில் மந்திரவாதிசெய்த சூக்ஷமத்தைக்கண்டறிந்து தெரிவிக்கும் சிறுவர்க்குப் பரிசளிப்பதாகச் சொன்னது மதுரையில் விவேகசிந்தாமணி வாங்கும் ஒரு நண்பரின் பிள்ளை, சி. குப்புசாமிக்குக் கிடைப்பதாயிற்று. நம் சிறுதோழர் குப்புசாமி யென்பவர் விவேகசிந்தாமணிப் பத்திராதிபருக்கு எழுதிக் கேட்டுக்கொள்ள சென்றமுறை நான் வாக்களித்தபடி குறிப்பிட்ட பரிசுவகை மூன்றில் ஒன்று கிடைக்கப்பெறுவர். இந்த முறை உங்களுக்காக எழுதப்பட்ட கதையொன்றிருக்கிறது. அதைக்கீழே பதிப்பிக்கிறேன்; கவனமாய் வாசித்துப்பார்த்து சூதும் வாதும் எப்படி வேதனைசெய்யும் என்பதை நன்றாய் உணர்ந்தறிந்து நடவுங்கள்.

சூதும் வாதும் வேதனை செய்யும்.

பெங்களூரில் இராமசாமி முதலியார் என்பவர் ஒருவர் வர்த்தகஞ் செய்து கொண்டிருந்தார். அவர்க்கு மாணிக்கம், உருக்குமணி என்றிரண்டு பெண்பிள்ளைகளும் கிருஷ்ணன், கோவிந்தன் என்றிரண்டு ஆண்பிள்ளைகளும் உண்டு. உருக்குமணி நால்வரில் இளையவளாய் நான்கு வயதுடையவளாய் இருந்தாள். கோவிந்தன், கிருஷ்ணன் என்னும் ஆண்பிள்ளைகள் இருவரும் சென்னபட்டணத்தில் தங்களுடைய அத்தையம்மாள் வீட்டிலிருந்து கொண்டு ஒரு கல்விச்சாலையில் படித்து வந்தார்கள். ஒருமுறை இவர்களுக்கு ஒருவாரம் விடுமுறை கிடைக்கவே, பெங்களூரிலுள்ள தங்கள் தாய்தந்தையரைப் பார்த்து வரும் பொருட்டாகப் புகைவண்டி யேறிச் சென்றார்கள். தாய்தந்தையர்களும் இவர்களைக் கண்டமாத்திரத்தில் அதிக பரிவுடனே இவர்களுக்குத் தின்பண்ட முதலியன வாங்கிக்கொடுத்து உபசரித்தார்கள். இவர்களும் அண்டையயல் வீட்டுச் சிறுவர்களுடனே விளையாடிக்கொண்டிருந்தார்கள். இப்படி ஆறுநாள் கழிந்தன. ஆறாவது நாள் சாயரக்ஷை இவர்களைப் பார்த்து இராமசாமி முதலியார் "அடா! பையல்காள்! நாளைப்பகல் பனிரண்டு மணி வண்டிக்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும், திங்கட்கிழமை நீங்கள் பள்ளிக்கூடம் போகவேண்டு மல்லவா? நினைவிருக்கட்டும்" என்று சொன்னார்.

உடனே மூத்தவனாகிய, கிருஷ்ணன் "ஆமாம்" என்று சொல்லிவிட்டுக் கதவை ஒஞ்சரித்துக் கொண்டு சற்று உள்ளே சென்று மெதுவாக "இதென்ன இழவு" என்றான்.

அவன் தம்பி கோவிந்தன் "நாளைக்குத் திருவேங்கடம், நாராயணசாமி என்பவர்களோடு பந்தாடலாமென்று நினைத்திருந்தோமே, ஐயோ, பழுத்துப்போச்சே!" என்றான்.

அப்போது கிருஷ்ணன் "அடே கோவிந்தா! எல்லாரும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்குச் சரியாகக்கணக்குப்பார்த்து அனுப்பிவிடுகிறார்களா, நம்முடைய வீட்டில் தான் பெரிய இலச்சையாக இருக்கிறது" என்று சொன்னான்.

கோவிந்தன் "என்ன அண்ணா? நாளையோடே நமக்கு விடுமுறை சரியாய்ப்போகிறதே. நாளைக்குப் பன்னிரண்டு மணி வண்டிக்குப் போக தயாராக இருக்க வேண்டுமென்று இத்தனை நாளாக நாயனார் சொல்லிக்கொண்டு தானே யிருந்தார், உனக்கு நினைவில்லையா?" என்றான்.

கிருஷ்ணன் "ஆமாம், ஆனால் என்ன? இன்னும் இரண்டு மூன்று நாளைக்கு இங்கேதானே இருக்கச் சொன்னால் ஆகாதோ, முழுகிப்போச்சுதோ?" என்று சொன்னான்.

கோவிந்தன் "இன்னும் இரண்டு நாள் இங்கிருக்கும்படிகேட்பதனால் என்ன பிரயோசனம்? எப்படியானாலும் நாம் போக வேண்டியவர்கள் தானே. சற்றுமுன்னடியாகவே போய்விடலாமே" என்று சொல்ல,

கிருஷ்ணன் "போடாபோ, ஏதோ ஒரு காரணம் நம்முடைய நாயனார் நம்மை நாளைக்கு அனுப்ப விரும்பியிருக்கிறார். அது இன்னதென்று எனக்குத் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. அது கிடக்கட்டும்." என்று சொல்லிக்கொண்டே கதவைப்படிய மூடிவிட்டு இரகசியமாய் "அடே, நாம் இன்னொரு நாள் இங்கே இருக்க ஒரு உபாயம் பண்ணப் போகிறேன்" என்று சொன்னான்.

கோவிந்தன் "அதென்ன? ஏதோ சொல்லு பார்க்கலாம்."

கிருஷ்ணன் "அடபோடா, சுண்ணும்பிசிருக்குது சூக்ஷ்மம், இதெல்லாம் எனக்கு ஆயிரம் அரைக்காற் பணந்தானே. பதினொன்றடித்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மெதுவாய் கம்மென்று போய் கடியாரத்தை நிறுத்திவிடுகிறேன். அப்புறம் நேரமாய் விட்டால், 'ஐயோ! மணிதெரியாமல் போச்சுதே' என்று சொன்னால் தகப்பனார் நம்மை என்ன செய்யப் போகிறார்." என்றான்.

கோவிந்தன்: "ஆமாம் அண்ணா. அது மெய்யாகுமா?"

கிருஷ்ணன்: "ஏன் ஆகாது? கடியாரம் போகாவிட்டால் பன்னிரண்டு அடிக்கிற வேளை நமக்கு எப்படி தெரியும்?"

கோவிந்தன்: "அதன்பேரென்ன? அது மாத்திரம் பொய்யாகாதோ? பெருமோசமாயிருக்கிறதே. நாயனாவுக்கு நாமம் போடப் பார்க்கிறாயே. கடியாரத்தின் சோலிக்குப் போவது சரியல்ல."

கிருஷ்ணன்: "போடா முட்டாள். வேறென்ன செய்கிறதாம். நான் என்ன, யாருடைய தலையையாகிலும் வெட்டி சாய்க்கப்போகிறேனா? குடிமுழுகி விட்டாற்போலப் பேசுகிறாயே. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையா? நிற்கவும் ஆசை ஒன்றுஞ் செய்யவுங் கூடாதென்றால் காரியம் எப்படியாகும். கடியாரத்தில் ஆடுகிற குண்டை அசையாமல் ஒருநாழி இரண்டுநாழி நிறுத்திவைத்தால் ஆருக்கென்ன நஷ்டம்? கடியாரத்திற்குத்தான் என்ன சேதம்? நீ அவ்வளவுயோக்கியனானால் பேசாமல் இரு. செய்ய வேண்டியதை நான் துணிந்து செய்து விடுகிறேன். எப்படியும் உனக்கு லாபந்தானே."

கோவிந்தன் தன்னாலானமட்டும் சொல்லியும் கிருஷ்ணன் அவன் சொல்லைக் கேட்கிறதாயில்லை. இப்படி பேசிக்கொண்டே இருவரும் உறங்கி விட்டார்கள்.

அன்று ராத்திரியில் உருக்குமணியென்பவளுக்கு காய்ச்சல் கண்டது. உடனே வைத்தியனை வரவழைத்துப் பார்த்தபோது அவர் "இது பிரமாதமான ஜன்னியா[illegible]றது. ஆயினும் பெரிதல்ல. குழந்தையை அதிக ஜாக்கிரதையாக இரண்டு மணிக்கொரு முறை ஒவ்வொரு சிட்டிகைப் பிரமாணமாகக் கொடுத்து வாருங்கள். அப்படி என்னவாகிலும் அபாயமான குறிகள் தோன்றினால் ஒரு ஆளை அனுப்புங்கள். பகல் பன்னிரண்டு மணி வரையிலும் வீட்டிலிருப்பேன். பயப்பட வேண்டாம்." என்று சொல்லிப் பத்தியம்பரியாரங்களையுந்தெரிவித்துப்போய்விட்டார்.

காலையில் தூங்கியெழுந்ததும் வீட்டிலுள்ள யாவரும் துக்கமாயிருக்கக்கண்ட இந்தச் சிறுவரிருவரும் தங்கள் தங்கை ஜுரங்கண்டு தவிக்கிறாள் என்றறிந்து அதிக வருத்தப்பட்டார்கள். ஒன்பது மணிக்கு அவர்களுடைய தாயார் சற்று நிம்மதியாக இருந்தார்கள். கிருஷ்ணனும் கோவிந்தனும் இதைக்கேட்ட மாத்திரத்தில் புழைக்கடைத் தோட்டத்தில் சென்று விளையாடிக் கொண்டிருந்தனர். தாயானவள் குழந்தையின் பக்கத்திலிருந்து கொண்டு இமைகொட்டாமல் பார்த்திருந்தாள்.

சற்று நேரங் கழித்தபிறகு முதலியார் பிள்ளைகளைக்கூவி "தயாராயிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

உடனே கிருஷ்ணன் "இல்லை நாயனா. இன்னும் மணியாகவில்லையே. இப்போது தான் கடியாரத்தைப்பார்த்தேன், பதினொன்றேகால் ஆயிற்று" என்று சொன்னான்.

முதலியாரும் "ஆனால் இன்னுங் கொஞ்சநேரம் உல்லாசமாயிருங்கள். பத்திரம் மணியை மறக்கப்போகிறீர்கள்." என்றார்.

என்று சொல்லிக்கொஞ்சதூரம் போனவுடனே கிருஷ்ணன் "அந்தமட்டில் தப்பித்துக் கொண்டோம்" என்றான்.

கோவிந்தன்: "எனக்கு திக்குதிக்கென்றிருந்தது. கைகடியாரத்தை மடியிலிருந்து எடுத்துப்பார்த்திருப்பாரானால் நம்முடைய வண்டவாளம் வெளியாகியிருக்குமே."

கிருஷ்ணன் "அடபோடா, பயங்கொள்ளி! பனங்காட்டுநரி சலசலப்புக்கஞ்சுமா? கைகடியாரத்தைப் பார்த்தால் தானென்ன? பெரியகடியாரம் நின்று போய்விட்டதென்று தானே நினைத்துக்கொள்வார். எப்படியும் இந்நேரம் பன்னிரண்டு மணியாகியிருக்கும். இனிமேல் வண்டி வண்டிதான்."

இது இப்படியிருக்கையில், நோயாய்க்கிடந்த குழந்தையின் பக்கத்தில் இருந்த தாயானவள் மூத்த பெண்ணாகிய மாணிக்கத்தைக் குழந்தையண்டை உட்காரவைத்துத் தன் புருஷனிடம் ஓடோடியும் வந்து "ஐயா! குழந்தைக்குச்சுவாசம் குறைந்து வருகிறது. கை நெருப்புப் பறக்கிறது. உடனே வைத்தியருக்கு ஆளனுப்புங்கள்." என்று சொன்னாள். உடனே வீட்டுவேலைக்காரியை வைத்தியரிடம் அனுப்பினார்கள்.

உடனே கிருஷ்ணனும் கோவிந்தனும் "நாயனா? எங்களுக்குப் புறப்பட மணியாயிற்றா?" என்று கேட்டார்கள்.

அவர் மடியிலிருந்த தம் கைகடியாரத்தை எடுத்துக்கொண்டே "இந்நேரம் மணியாகியிருக்கலாம்" என்று சொல்லி கடியாரத்தைத் திறந்து பார்க்க, "அடடா! இந்நேரம் வண்டிபோயிருக்கும். பன்னிரண்டரையாய் விட்டதே" என்று சொன்னார்.

அப்போது அவர் பெண்டாட்டி "உங்களுடைய கைகடியாரம் சீக்கிரம் போகிறாப்போலிருக்கிறது. பெரிய கடியாரம் இன்னும் பன்னிரண்டு அடிக்கவில்லையே" என்றாள்.

கிருஷ்ணனும் தைரியத்துடன் "ஆமாம் இன்னும் பன்னிரண்டடிக்கவே யில்லை" என்று சொன்னான். தாயார் போய் கடியாரத்தைப்பார்க்க கடியாரம் நின்று போய விட்டதாகக் கண்டாள்.

அது கேட்ட முதலியார் "ஐயையோ! ஒரு பெரிய காரியார்த்தமாகப் பன்னிரண்டுமணி வண்டிக்கு ஒருவரைப்போய் கண்டுபேச உத்தேசித்திருந்தேன், என்ன செய்வேன்" என்று வருத்தப்படுகையில்,

தாயானவள் "ஐயோ! ஐயோ! வைத்தியர் இந்நேரம் வெளியே போய் விட்டிருப்பாரே. அடியம்மா ருக்மணீ! என் குழந்தாய்! என்ன செய்வேன்" என்று கையை முறித்துக்கொண்டு குழந்தையண்டை ஓடினாள்.

அதுகண்ட கிருஷ்ணன் "அம்மா! பயப்படாதே, நான் ஒரே ஓட்டமாக ஓடி வைத்தியனை இட்டுக்கொண்டு வருகிறேன்" என்று ஓடினான். கோவிந்தனும் அவன் பின்னே ஓடினான்.

இருவரும் ஒரே மூச்சாக ஓடி வைத்தியர் வீட்டுக்கதவைத்தட்டி "வைத்தியர் இருக்கிறாரா" என்று அழைத்தார்கள். உள்ளே வைத்தியர் பெண்டாட்டி "பன்னிரண்டே கால்மணிக்குப் புறப்பட்டு வெளியில் வழக்கம் போலப் போய்விட்டார்" என்று சொன்னாள். கிருஷ்ணன் "அவர் யாருடைய வீட்டுக்குப் போயிருக்கிறார் தெரியுமா அம்மா"? என்று கேட்டான்.

அந்நேர வேளையில் ஒரு சிறு பெண்ணோடு பேசிக்கொண்டிருந்த வைத்தியர் பெண்டாட்டியானவள் "முதலில் இன்னார் வீட்டுக்குப் போயிருப்பார் என்பது செம்மையாய்த் தெரியாது. இப்படி வந்துசற்றுநேரம் இருப்பாயானால் எனக்குத் தெரிந்தமட்டில் சொல்லுகிறேன்" என்றாள்.

இதைக்கேட்டதும் உசிர்ச்சுற்றின் மேல் அம்மிவிழுந்தாப் போலச் சற்றுநேரங் காத்திருந்தார்கள். அப்போது மேலே சொன்ன சிறுபெண்ணானவள் தங்கள் வீட்டிற்கு அண்டையில் வசிக்கும் ஒரு ஏழைக் கைம்பெண்ணினுடைய மகள் என்று தெரிய வந்தது.

அந்தப்பெண், வைத்தியர் பெண்டாட்டியை "ஆனால் அந்த வேலை எனக்குக் கிடைக்கும் என்ற எண்ணமில்லையா? அம்மணீ!" என்றாள்.

வைத்தியர் பெண்டாட்டி "ஐயோ பாவம் உன்னைப்பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. என்ன செய்வேன். நீ சொன்னது போல் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வந்திருந்தால் அந்த வேலை உனக்கே கிடைத்திருக்கும். உனக்காக நான் வெகுதூரம் பரிவாகப்பேசினேன். பன்னிரண்டே கால் மணிவரையிலுங்கூடப் பார்த்தோம். அப்படி காத்துக்கொண்டிருக்கும்போது இன்னொருவர் வரவே அவரைப்பேசி அந்த வேலையில் வைத்தாய் விட்டது. சொன்னது சொன்னபடியே அந்தந்த வேளைக்கு அந்தந்த வேலையைச் செய்யாதவர்கள் எனக்குச் சரிப்படுவதில்லை. நீ யேன் அந்த வேளைக்கு வராமற் போனாய்?" என்று கேட்டாள்.

அதற்கு அந்தப்பெண் "அம்மா! நான் முன்னதாகவே வந்தேன். வரும்போது இராமசாமி முதலியார் வீட்டண்டையில் மணியென்னவென்று கேட்டேன். அங்கிருந்த ஆள் கடியாரம் பார்த்துப்பதினொன்றேகாலாயிற்று என்று சொன்னான். அதன்மேல் நான் சரியான வேளைக்குப் போகலாமென்று முன்னும் பின்னுமாகக் கொஞ்சநேரம் உலாவிக்கொண்டிருந்து வந்தேன். ஐயோ! அரைமணி நேரத்திற்கு மேலே ஆய் விட்டதென்றும் அதனால் எனக்குக்கிடைக்கக்கூடிய வேலையை இழக்கலாயிற்றே என்றும் காண என்மனம் துடிக்கின்றது. ஐயோ! என் தாய் இதைக்கேட்டால் கனவருத்தமடைவாளே! என்ன செய்வேன்" என்று சோகித்தாள்.

வைத்தியன் பெண்டாட்டி "இது உன்னால் வந்த தப்பிதமுமல்ல; நல்லது, அந்தப் பிள்ளைகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி அவர்களை நோக்கி வந்தாள்.

அப்போதுகிருஷ்ணன் "ஐயோ! கோவிந்தா, உன் பேச்சைக்கேளாமற் போனேனே. நான் செய்த தந்திரத்தினால் எத்தனை துன்பம் உண்டாயிற்று பார்த்தாயா. இப்படி இந்தப் பன்னிரண்டுமணியை இத்தனை காரியம் பற்றிக்கொண்டிருப்பதுண்டா," என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

வைத்தியன் பெண்டாட்டியும் மூவர் நால்வருடைய பேரைச்சொல்லி அவர்களுடைய வீட்டிற்குப்போய் வைத்தியரைக் கண்டுபிடிக்கலாம் என்று சொன்னாள், அவர்களும் அ

கேட்டதும் தாமதிக்காமல் அங்கங்கே அலைந்து திரிந்து அலுத்து, அதிவேகமாக வீட்டுமுகமாய் வருகிற வைத்தியரைக்கண்டு வண்டியை நிறுத்தி, சங்கதியைச் சொல்லி வைத்தியரை இட்டுக்கொண்டு போனார்கள்.

வைத்தியரும் குழந்தையை நாடி பிடித்துப் பார்த்துவிட்டு, வெளியேவந்து "ஐயோ பாவம்! சிறு குழந்தை, மிஞ்சிப்போய் விட்டது. இனி மனுஷப்பிரயத்தனத்தாலாவது ஒன்று மில்லை. கெட்ட குறிகள் தொடங்கிவிட்டன. நோய்க்கு மருந்து; விதிக்கு மருந்தேது"! என்று சொல்லிப் போய்விட்டார்.

அன்றிரவெல்லாம் கிருஷ்ணனுக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. அவன் எண்ணமென்னமோ சித்தியாயிற்று. இரண்டொரு நாள் பள்ளிக்கூடம் போகத் தடை உண்டாயிற்று. மெய்தான். அதனாலுண்டான நஷ்டம் எவ்வளவு. கடியாரம் டிக் டிக் என்று அடிக்கும் ஒவ்வொரு சப்தமும் அவன் இருதயத்தைத் துடிக்கச்செய்தது. அதைப்பொறுக்கமாட்டாமல் கதவைத் திறந்து வெளியே போய் அவன் தங்கையைப் படுக்கவைத்திருந்த அறைக்கு வெளியே ஒரு தூணின்மேல் சார்ந்து கொண்டு அவ்வறையின் கதவினுடைய துவாரங்களில் தெரியும் விளக்கொளியைப்பார்த்துக் கொண்டிருந்தான்.

இவனைப் பழிக்கின்றதாய்த் தோற்றும் கடியாரந்தவிர அந்த வீட்டில் வேறொன்றின் சப்தமும் கேட்கவில்லை. அதன் சப்தமானது சர்வாந்தரியாமியாகிய சர்வேஸ்வரன் தவிர வேறெவருடைய கண்ணோக்கமும் செல்லாத சமயத்தில், தான் அந்த கடியாரத்தின் குண்டை நிறுத்தின சங்கதியை அந்த கடியாரம் எல்லாருமறிய உரக்கச்சொல்வதான பாவமாகத் தோன்றிற்று. இப்படியாகத்தன் தகப்பனை மோசம் பண்ணத்தலைப்பட்டு இத்தனை பேர்க்குஇத்தனை துக்கத்தையும் துன்பத்தையும் தருவித்தான்.

"இந்த அறையில் எல்லாரும் நிச்சப்தமாயிருக்கிறார்களே. ஒருவேளை குழந்தை தூங்குகிறதோ" என்று பாவில் குழல்போல மனந்தடுமாறிக்கொண்டு அந்த அறையின் கதவைப்பார்த்த வண்ணமாக நின்றுகொண்டிருந்தான். மணியும் அடித்து அடங்கிவிட்டது. ஒரு சப்தமுமில்லை. எங்கே பார்த்தாலும் சில்லென்றிருந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கதவைத் திறந்து கொண்டு தகப்பனார் வெளியில் வந்தார்.

உடனே கிருஷ்ணன் மெல்லென எதிர்சென்று "நாயனா! தங்கை எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான்.

தகப்பனார் "நன்றாய் இருக்கிறாள். ஆனால் அவள் இங்கில்லை. சரியாய்ப் பன்னிரண்டுமணிக்கு ஆத்துமா பிரிந்துபோய் விட்டது." என்று சொன்னார்.

கிருஷ்ணனும் ஒரு க்ஷண நேரம் நிதானித்து "ஐயோ! நாயனா, ஐயோ! நானே அவளுக்குச் சத்துராதியாக இருந்தேன். நானே அவளைக் கொன்றேன்" என்று விம்மியழுது நடந்த யாவற்றையும் நடந்தபடியே சொல்லிவிட்டான்.

அவனுடைய துக்கத்தையும் மனவேதனையையும் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுடைய தாய்தந்தையர் தங்களாலானமட்டும் அவனைத் தேற்றினார்கள். அந்த மனக்கிலேசம் அவனுக்குக் கொஞ்சத்தில் தெளியவில்லை. அப்புறம் நெடுங்காலஞ் சீவித்திருந்தானேனும் பனிரண்டடிக்கிறதைக் கேட்கும் போதெல்லாம் அவனுக்குப் பகீர்என்றிருக்கும்.

சூதும்வாதும் ______ இப்படித்தான் வேதனை செய்யும்.

அறிவைப் பரவச்செய்யும் சபை உபகாரசங்கம்.

அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி) க்கு உபகாரிகளாக ஏற்பட்டவர்கள் அங்கங்கே வேலை செய்து வருகிறார்கள். சென்றமீ நமது சபை மெம்பர் ஒருவர் மதுரைக்குச்சென்று அங்கே நமது சபையின் நோக்கங்களைத் தெரியப்படுத்த உழைத்ததால் அங்குள்ள கனதனவான்கள் உத்தியோகஸ்தர்களெல்லாம் விவேகசிந்தாமணியை ஆதரிப்பவர்களாயிருக்கிறார்கள். இரங்கூனிலும் நமது சபை உபகாரிகள் விடாமுயற்சியெடுத்துழைத்து வருகிறார்கள். விவேகசிந்தாமணியைப் பலப்படுத்தவேண்டிய காரியம் இன்னும் முக்கியமாக விருப்பதால் அறிவைப் பரவச்செய்யும் சபை உபகார சங்கத்தார் செய்யும் வேலைகளை ஒழுங்குபட மேன்பார்வை செய்து நடத்திவர அசந்தர்ப்பமாகவிருக்கிறது. நமது சபை உபகாரிகளாக விருக்க இசைந்தவர்களெல்லாரும் விவேகசிந்தாமணியைப் பரவச்செய்யும் வேலையில் மும்மரமாக ஏற்பட்டுழைத்து வருவார்களென்று கோருகிறோம். விவேகசிந்தாமணிக்கு அடுத்தமாசமுடிவோடு முதல் வருஷம் நிறைந்து இரண்டாவது வருஷந் தொடங்கப்போவதால் இச்சமயம் நமது நண்பர்களும் உபகாரிகளும் அதிக சிரத்தையெடுத் துழைத்து வருவார்களென்று கோருகிறோம். எடப்பள்ளி, கல்வாய் முதலிய இடங்களில் உழைக்கும் உபகாரிகள் அனுப்பிய ரிபோர்ட்டுகளைப் பார்த்துக்களித்

தோம். இந்த மாசம் 6வ திருவாநந்தபுரத்தில் நமது சபை உபகாரியாக விருந்து விவேகசிந்தாமணியை அங்கு பரவச்செய்துழைத்துவந்த ஹைகோர்ட் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ எஸ். சேஷய்யங்கார் அவர்கள் காலஞ்சென்றதை யறிந்து குறிப்பிட மிக விசனிக்கிறோம். அவர் வயதில் 75-க்கு மேற்பட்டவராயினும் நமது சபை விஷயத்தில் அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தளரா முயற்சியாக வுழைத்துவந்த உத்தமர். அவர் இறந்தது நமது சபைக்கு உண்மையில் பெரிய நஷ்டமே. அங்கேயுள்ள நமது இதர நண்பர்கள் அவருடைய ஸ்தானத்தை வகித்து நமது சபை முன்னுக்கு வர வுழைப்பதில் பின்னடையார்களென்று நம்புகிறோம். நூதனமாய்ச் சேரும் உபகாரிகள் அவர்கள் செய்யவேண்டியதென்னவென்று கேட்கிறார்கள். அறிவைப் பரவச் செய்யும் சபை உபகாரிகளின் கடமைகளைக் குறித்து முதலில் விண்ணப்பத்திலும், பிறகு முதல் சஞ்சிகையின் கடைசிப் பக்கத்திலும் வரைந்திருப்பதை இவர்கள் தயவு செய்து கவனிப்பார்களென்று கோருகிறோம். நமது சபையின்நோக்கங்களையும்அவைகளை நிறைவேற்றும் வழிவகைகளையும் சுருக்கமாகப் பகுத்து அட்டையின் இரண்டாவது பக்கத்தில் அச்சிட்டிருக்கிறோம். நூதனமாய்ச் சேரும் உபகாரிகள் முதல்முதல் நமது பத்திரிகையைப் பரவச்செய்ய வழிதேடுவதோடு மற்றப்படியும் அவர்களாலிசைந்தமட்டும் நமது சபையின் நோக்கங்களை நிறைவேற்ற உதவிபுரிந்து உபகரிப்பார்களென்று கோருகிறோம்.

விசேஷக்குறிப்புகள்.

நமதுபத்திரிகை. இந்தமுறைவிஷயங்கள் நாம் குறித்த 32-பக்கத்துக்குள் அடங்காமல் அதிகரித்துவிட்டபடியால் கூட 8-பக்கம் சேர்த்து இந்த சஞ்சிகை மாத்திரம் 40-பக்கம் கொண்டதாகச் செய்திருக்கிறோம். அடுத்தமாசத்தோடு முதல்வருஷம் முடிந்து போகிறபடியால் இந்த வருஷத்துக்குப்பாக்கி செலுத்தவேண்டி யிருப்பவர்கள் உடனே பாக்கியை அனுப்புவதோடு அடுத்த வருஷத்திற்கும் முன்னதாகவே சந்தாதொகையையனுப்பக்கோருகிறோம். இனிமுன்பணம் கட்டுகிறவர்களுக்கு மட்டுமே வருஷத்துக்கு மூன்று ரூபாயாகிய குறைந்த சந்தாப்படி பத்திரிகை யனுப்பப்படும். முதல் மூன்றுமாசத்திற்குள் சந்தா தொகையை யனுப்பத்தவறுகிறவர்கள் வருஷத்துக்கு 4-ரூபாய் விகிதம் கட்டவேண்டும். நமது கையொப்பக்காரர்களெல்லாரும் இவ்விதியை வாசித்து மனதில் வைத்து நடக்கக் கோரப்படுகிறார்கள்.

பெங்கால்ஜூரி கமிஷன். பெங்கால் உதவிக் கவர்னர் ஜூரிவிசாரணை யேற்பாட்டைப்பற்றிச் செய்த உத்திரவைக் குறித்துண்டான அமளிகுமளியில் இந்தியா மந்திரியவர்கள் உத்திரவு செய்தபடி ஜூரிவிசாரணை யேற்பாட்டைப்பற்றி விசாரித்து ரிபோர்ட்டுசெய்ய நியமிக்கப்பட்ட கமிஷன் சபையார் அவர்கள் ரிபோர்ட்டை யெழுதிமுடித்து கவர்ன்மெண்டுக்கனுப்பிவிட்டார்கள். அச்சபைமெம்பர்கள் எல்லாரும் சேர்ந்து சிபார்சு செய்ததின்மேல் இந்தியா கவர்ன்மெண்டார், இந்தியாமந்திரியவர்களுக்கு அது விஷயத்தைப்பற்றித் தெரியப்படுத்தியபின் பெங்கால் உதவிக் கவர்னர் அவர்கள் செய்த உத்திரவை அனுஷ்டானத்தி லில்லாதபடி எடுத்துவிட்டார்களென்று தெரியவருகிறது.

ஹைகோர்ட்டு. கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் பார்கர் ராஜாவின்பேரில் சீமைக்குப் போயிருக்கிறார். அவருடைய ஸ்தானத்தில் தஞ்சை டிஸ்திரிக்டு ஜட்ஜாயிருந்த மிஸ்டர் ஜெ. எ. டேவிஸ் ஹைகோர்ட்டு ஜட்ஜாக ஆக்டிங் வேலை பார்த்து வருகிறார். ஹாண்ட்லி அவர்கள் வேலையைவிட்டு நீங்கிப் பென்ஷன் பெற்றுக்கொண்டு சீமைக்குப் போய்விட்டார்.

இராஜதானி ஸிவில் ஸேர்விஸ். இவ்விராஜதானி ஸிவில் ஸெர்விஸில் மூன்று டிப்டி கலெக்டர் வேலைகளுக்கு நியமனஞ்செய்ய வருகிற ஏப்ரல்மீ முதலில் பி. ஏ. முதல் வகுப்பில் தேறினவர்கள் எம். ஏ. முதலிய உயர்ந்த பட்டம் பெற்றவர்கள் இவர்களில் 25-வயதுக்குட்பட்டவர்கள் போட்டிபோடும் படியான பரீக்ஷை யொன்று நடத்தப்படும். அதில் முதலாகத் தேறியமூவர்க்கும் 250-ரூபாய் சம்பளத்தில் 5-வது கிரேடு டிப்டி கலெக்டர் வேலை கொடுக்கப்படும்.

சென்னை யூனிவர்ஸிடி. 'சென்னை யூனிவர்ஸிடி'என்னும்கல்விச்சங்கத்துஸெனேட் சபைக்கு அச்சங்கத்தார்அளிக்கும் வித்தியா பட்டங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் சேர்ந்து 2-மெம்பர்களை நியமிக்க கவர்ன்மெண்டார் சில விதிகளும் நிபந்தனைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 20-வருஷங்களுக்கு முன் பி. ஏ., பி. ஸி. இ. பட்டம் பெற்றவர்களும் எம். ஏ. முதலான உயர்ந்த வித்தியா பட்டங்கள் பெற்றவர்களும் சேர்ந்துயூனிவர்ஸிடி ஸெனேட்சபைக்கு வருஷத்திற்கு இரண்டு மெம்பர்கள் தெரிந்தெடுத்து நியமிக்கச் சுதந்தரம்கொடுத்திருக்கிறார்கள்.

சட்டநிரூபணசபை சீர்திருத்தம்

இந்தியாவிலுள்ள சட்ட நிரூபண சபைகளைச் சீர்திருத்துவதற்காக சென்ற வருஷம் பார்லிமெந்து சபையார் சட்டமாகப் பாஸ்செய்த இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்ட்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டார் செய்து பிரசுரிக்கவேண்டிய விதிகளெல்லாம் பிரசுரமாய் விட்டன. சட்டநிரூபண சபையில் மெம்பர்கள் கேள்விகள் கேட்பதற்கும், வருஷாந்த வரவு செலவு திட்டக்கணக்குவிவரங்களைப்பற்றி தர்க்கித்துப் பேசவும்இந்தியா கவர்ன்மெண்டாரால்செய்து,இந்தியா மந்திரியவர்களால்அங்கீகரிக்கப்பட்ட விதிகள் போனமாசமே வெளியாய் விட்டன வென்று சொன்னோம். அவைகளைக்கீழே பிரசுரித்துஅவற்றின்பின் சென்னைசட்டநிரூபண சபைக்குமெம்பர்கள் நியமன விஷயமாய் இந்தியாமந்திரியவர்கள் அங்கீகாரம் பெற்று வந்து இந்தியா கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்ட விதிகளையும் பிரசுரிக்கிறோம். சென்னை சட்டநிரூபணசபைக்குகவர்னர், முக்கியசேனாதிபதி, 2-கௌன்ஸில் மெம்பர்கள், அட்வோகேட் ஜெனரல் ஆகிய ஐவரும் அவர்களுத்தியோக முறையில் மெம்பர்களாகவிருப்பதோடுஇன்னும் 20-மெம்பர்கள் அதிகமாய் நியமிக்கப்படுவார்கள். இவர்களை நியமிக்கும் முறையைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் விதிகளைப் பின்னால் காணலாம்.

சென்னை சட்ட நிரூபண சபை விதிகள்.

I. அரசிறை வரவு செலவு திட்டக்கணக்குகளைக் குறித்துத் தர்க்கித்துப்பேசுவதற்கான விதிகள்-4.

அதில் முதலாவது விதிப்படி அந்தந்த வருஷத்து அரசிறை வரவு செலவு கணக்குகள் சட்டநிரூபண சபையில் விளங்க எடுத்துரைக்கப் படுவதுடன் ஒவ்வொரு மெம்பருக்கும் அக்கணக்குகளின் அச்சிட்ட காபி ஒன்று கொடுக்கப்படும்.

2. கணக்குகள் விளங்க வெடுத்துக் கூறப்பட்டபின் சட்டநிரூபண சபையிலுள்ள ஒவ்வொரு மெம்பரும் அக்கணக்கு விவரங்களைக் குறித்துத் தனக்குத் தோன்றும் அபிப்பிராயங்களைத் தெரிவித்துப் பேசலாம்.

3. எல்லாமெம்பர்களும் பேசியானபின் முதலில் அரசிறை கணக்கை விளங்க வெடுத்துக்கூறிய மெம்பர் அவர்களுக்கெல்லாம் பதிலுரைத்து மறுபடியும் பேசச் சுதந்தரமுடையவரா யிருப்பார். அவர் பதிலுரைத்துப் பேசியபின் ப்ரெஸிடெண்டவர்கள் தமக்கு அவசியமாகத் தோன்றும் அபிப்பிராயங்களைத் தெரிவித்து தர்க்கத்தை முடித்துவிடுவார்.

4. சட்டநிரூபண சபை மெம்பர்கள் தர்க்கம் செய்து பேசுவதில் இவ்விராஜதானி கவர்ன்மெண்டாரின் நேரான மேல்விசாரணையிலிருக்கும் அம்சங்களைத் தவிர மற்றவைகளைக் குறித்து ஒன்றும் பேசக்கூடாது.

II. சபையில் கேள்விகள் கேட்பதைக்குறித்து 10 - விதிவிலக்குக ளேற்படுத்தி யிருக்கிறர்கள்.

இவற்றில் முதலாவதுவிதிப்படி. இராஜதானி சட்டநிரூபணசபை மீட்டிங்கில் இவ்விராஜதானி கவர்ன்மெண்டாருடைய நேரான மேல் விசாரணையிலிருக்கும் துரைத்தன விஷயங்களைத் தவிர இதரவிஷயங்கள் இலாகாக்கள் சம்மதமாக யாதொரு கேள்விகளும் கேட்கக்கூடாது. இராஜதானி கவர்ன்மெண்டாருக்கும், கவர்னர்-ஜெனராலுக்கும், அல்லது இந்தியா மந்திரிக்கும் விவாதத்திலிருக்கும் எந்த விஷயத்தைப்பற்றியும் யாதொரு கேள்வியும் கேட்கக்கூடாது.

2-வது விதிப்படி. மேலே குறித்த விலக்குகளுக்குள்பட்டும் கீழே யுரையப்படும் கட்டுப்பாடுகளுக்குள்பட்டும் மெம்பர்களில் யார் என்னகேள்விகள் கேட்டாலும் கேட்கலாம்.

3-வது ஒரு கேள்வி கேட்க விரும்பும் மெம்பர் அக்கேள்வி கேட்குமுன் சட்டநிரூபண சபை காரியதரிசிக்கு பூர்த்தியாக ஆறுநாள் நோட்டீஸ்கொடுத்து அக்கேள்வியையும் பூர்ணமாகஎழுதி அவருக்கனுப்பவேண்டும்.

4. கேள்விகள் கேட்பதில் அவை சங்கதி தெரிந்துகொள்ளக் கேட்கும் கேள்விளாகமட்டு மிருக்கவேண்டும்; ஒரு சங்கதியைப்பற்றி விவாதித்தாவது, அனுமானித்தாவது யாதொரு கேள்வியும் கேட்கக்கூடாது.

5. ப்ரெஸிடெண்டவர்கள் அவருக்கு இஷ்டமானால் யாதொரு முகாந்திரமும் சொல்லாமல் ஒரு கேள்வி கேட்பது அவருடைய அபிப்பிராயத்தில் பொதுநலத்திற்கு விரோதமானதா யிருக்குமென்று மட்டும் சொல்லிவிட்டு அக்கேள்வியைக் கேட்க விடாமல் தடுத்துவிடலாம்; அப்படி தடுத்துவிடப்பட்ட கேள்விகள் சட்டநிரூபண சபை நடவடிக்கைகளில் பதியப்படமாட்டா.

6. ப்ரெஸிடெண்டவர்களுக்குத் தகுதியாகத்தோன்றினால் ஒரு கேள்வியை 6-நாளைக்குக் குறைந்த நோட்டீஸ் கொடுத்துக் கேட்க அனுமதி கொடுக்கலாம்; எந்தக்கேஸிலாவது குறித்த 6-நாளைக்கு மேற்பட்ட காலநோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம்; அல்லது, கேட்க அனுமதிகொடுக்கப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலுரைக்க முன்குறித்த கால அளவைவிட அதிகப்பட்ட காலசாவகாசம் கொடுக்கலாம்.

7. ப்ரெஸிடெண்டு காரியதரிசிக் கனுப்பப்பட்ட கேள்வியைக் கேட்க அனுமதி கொடுத்தபின் அக்கேள்வி சட்டநிரூபண சபையின் நோட்டீஸ் பேபரில் அச்சிடப்படும். அந்த நோட்டீஸில் பதியப்பட்ட கேள்விகளெல்லாம் சபை மீட்டிங்கு கூடியதும், மற்ற விஷயங்கள் எதையும்பற்றி யோசிக்குமுன், நோட்டீஸ் பேபரிலுள்ள வரிசைக் கிரமப்படி கேட்கப்படவேண்டும்.

8. ஒரு கேள்வியை அதை வரைந்தனுப்பியவராலாவது அவரில்லாவிட்டால் அவருக்காக வேறொரு மெம்பராலாவது சபையில் வாசிக்கப்படவேண்டும். அதற்கு ப்ரெஸிடெண்டு தாமேயோ அல்லது தாம் அதற்காக நியமிக்கும் வேறொரு மெம்பரைக் கொண்டோ பதிலுரைப்பார்,

9. நோட்டீஸ் பேபரில் பதியப்பட்ட கேள்வியொன்று சபைகூடிய காலத்தில் ஒருவராலும் கேட்கப்படாவிட்டாலும், ப்ரெஸிடெண்டவர்களுக்கு யுக்தமாகத் தோன்றினால் பொதுநலார்த்தம் அக்கேள்விக்குப் பதிலுரைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

10. இவ்விதிகளின்படி கேட்கப்படும் கேள்விகளுக்குக் கொடுக்கும் மறுமொழிகளின்மேல் யாதொரு விதத்திலும் தர்க்கம்செய்து பிரஸ்தாபிக்க இடங் கொடுக்கப்பட மாட்டாது.

III. மெம்பர்கள் நியமனம் செய்வதற்கான விதிகள்.

சென்னையிலும் மற்ற இராஜதானிகளிலுமுள்ள சட்ட நிரூபணசபைகளுக்கு மெம்பர்கள்நியமனம் செய்யும் விதிகள் இந்தியா கவர்ன்மெண்டாரால் சென்றவாரத்து "இந்தியா கெஜட்"டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. பழைய சட்டப்படி சென்னைசட்டநிரூபண சபையில் அதிகப்படி மெம்பர்களின்தொகை அட்வொகேட்-ஜெனரலைச் சேர்த்து கூ-க்கு மேற்படாமலும் ரு-க்குக் குறையாமலு மிருக்கவேண்டியதென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. புதிய இந்தியன் கௌன்ஸில்ஸ் ஆக்ட்டுப்படி இச்சபையின் அதிகப்படி மெம்பர்களின் தொகை கூ-க்குக் குறையாமலும் உக-க்கு மேற்படாமலு மிருக்கவேண்டிய தென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்நிபந்தனையை யனுசரித்து இச்சபையின் அதிகப்படி மெம்பர்கள் தொகை உக-ஆகச் செய்யப்படும். இம்மெம்பர்களை நியமனம் செய்யும் விஷயமாய்இந்தியாகவர்ன்மெண்டார் தயார்செய்து இந்தியாமந்திரியவர்களால் அங்கீகரிக்கப்பட்டுவந்தபின் "இந்தியா கெஜட்"டில் பிரசுரிக்கப்பட் டிருக்கும் விதிகளின் சாராம்சத்தைக் கீழே பிரசுரிக்கிறோம்:—

(1) அட்வோகேட்-ஜெனரலைத்தவிர மற்றப்படி நியமிக்கப்படும் அதிகப்படி மெம்பர்களில் கூ-க்கு மேற்பட்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக இருக்கக்கூடாது.

(2) அதிகப்படி மெம்பர் ஸ்தானங்களில் 7-ஸ்தானங்களுக்கு நியமனம் செய்வதில் கவர்ன்மெண்டார் பின்வரும் சபைகள் அல்லது சங்கத்தார்களின் சிபார்சை யனுசரித்து நியமனம் செய்தல் வேண்டும்:—

(க) சென்னை நகர் முனிசிபாலிடி.

(உ) சென்னை நகர் முனிசிபாலிடியைத் தவிர மற்ற முனிசிபாலிடிகள் தனியாகவாவது, ஒரு கும்பல், அல்லது கும்பல்களாகச் சேர்ந்தாவது சிபார்சு செய்யும்படி கவர்ன்மெண்டார் இதற்காகத் தெரிந்தெடுத்து விளம்பரம் செய்யும் முனிசிபாலிடிகள்.

(௩) மேலே சொன்னபடி டிஸ்திரிக்ட் லோகல் போர்டுகளில் தனியாகவாவது, கும்பல் அல்லது கும்பல்களாகச் சேர்ந்தாவது சிபார்சு செய்யும்படி தெரிந்தெடுத்துப் பிரசுரிக்கப்பட்ட லோகல் போர்டுகள்.

(ச) வியாபாரிகள், வர்த்தகர், தொழிலாளிகள் சேர்ந்த சங்கம் அல்லது சங்கங்களில் கௌன்ஸிலுக்கு மெம்பர் சிபார்சு செய்யத் தக்கவையாகக் கனம் பொருந்திய கவர்னர் அவர்களால் தெரிந்தெடுத்துப் பிரசுரிக்கப்பட்டவை.

(ரு) சென்னை யூனிவர்ஸிடி செனேட் சபை.

நிபந்தனை.—மேலேகண்ட சங்கங்களில் (க), (உ), (௩), (ச), (ரு), குறிக்கப்பட்டவர்கள் (பின்வரும் எ-வது விதியில் கண்டபடிக்கன்றி மற்றப்படி) குறைந்தது ஒரு மெம்பராவது அவர்கள் சிபார்சின்பேரில் நியமிக்கப்படப் பாத்தியமுள்ளவர்களா யிருப்பார்கள். (க), (ச), (ரு)-ல் குறித்த சங்கங்கள் அவர்களுக்குப் பிரதிநிதியாக ஒரே ஒருவர்தான் சிபார்சு செய்யப் பாத்தியமுள்ளவர்க ளாவார்கள்.

(3.) உத்தியோகஸ்தர்களால் நிரப்பப்படாத பாக்கியிருக்கும் ஸ்தானங்களுக்கு கனம்பொருந்திய கவர்னர் அவர் யுக்தப்படி சிறுபான்மையர்களாய்த் தக்க பிரதிநிதியின்றி யிருக்கும் சமூகத்தார், வகுப்பார்களுக்குப் பிரதிநிதிகளாக விருக்கத் தக்கவர்களைக் கொண்டு தாமே நிரப்பிவிடலாம், ஆனால் இப்படி பாக்கியுள்ள ஸ்தானங்களில் ஒன்று மட்டும் சாதாரணமாய் கவர்ன்மெண்டுக்கு வருஷத்தில் உ0,000-ரூபாய்க்குக் குறையாமல் பீஷ்கஷ் கட்டும் நிலசுவான்களில் ஒருவரால் நிரப்பப்பட்டு வரவேண்டும்.

(4.) சட்ட நிரூபணசபையில் மெம்பர் ஸ்தானமொன்று காலிவிழுந்து அது உ-வது விதியிற் கண்டபடி நிரப்பப்பட வேண்டியதாக விருந்தால் கனம் பொருந்திய கவர்னர், அந்த ஸ்தானத்திற்கு மெம்பர் நியமனம் செய்யத்தக்கவரைப் பொறுக்கிச் சிபார்சு செய்ய தகுதியுள்ள சங்கம் அல்லது சங்கங்களுக்குத் தெரிவித்து அந்த ஸ்தானத்துக்குத் தக்க ஒருவரைப் பொறுக்கிச் சிபார்சு செய்யும்படி கேட்கச் செய்யவேண்டும்,

(5.) மெம்பர் ஸ்தானத்திற்குச் சிபார்சு செய்யும் விதங்கள்:—

(a) முனிசிபாலிடி, டிஸ்திரிக்ட் போர்டு, அல்லது ஸெனேட் சபைகளினுல் அவ்வசசங்கத்தின் மெம்பர்களில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படி தெரிந்தெடுக்கப்பட்டவர் சிபார்சு செய்யப்படத் தக்கவராவர்.

(b) சட்டப்படி நியமிக்கப்படாத சங்கங்கள் அவர்கள் சங்கத்தின் ஆலோசனைக்கு வந்த விஷயங்களைத் தீர்மானிப்பதற்காகவுள்ள அவர் சங்கவிதிகளின் முறைப்படி தெரிந்தெடுத்துத் தீர்மானிக்கபட்டவர் சிபார்சு செய்யப்படுவார்கள்.

(c) முனிசிபாலிடிகள், அல்லது டிஸ்திரிக்ட் போர்டுகள். அல்லது வேறு சங்கங்கள் கும்பலாகச் சேர்ந்து சிபார்சு செயயவேண்டுமானுல் கனம் பொருந்திய கவர்னர் நிர்ணயிக்கும் பிரமாணத்தின்படி, அந்த முனிசிபாலிடி அல்லது, லோகல் போர்டு அல்லது, சங்கத்தார் தெரிந்தெடுத்து நியமிக்கும் பிரதிநிதிகள் பெரும் பான்மையோர் அபிப்பிராயப்படி சுட்ட நிருபண சபை மெம்பர் ஸ்தானத்திற்கு நியமிக்கப்படத் தக்கவர் தெரிந்தெடுத்து சிபார்சு செய்யப்படுவார்.

(6.) ஒரு முனிசிபாலிடி அல்லது பலமுனிசிபாலிடிகள் சேர்ந்து மெம்பர்களை சிபார்சு செய்வதில் அப்படி சிபார்சு செய்யப்படுகிறவர் அந்த முனிசிபாலிடிகளில் ஒன்றின் எல்லைக்குள் சாதாரணமாய் வசிப்பவராக விருக்கவேண்டியது கட்டாயம். இப்படியே டிஸ்திரிக்ட் போர்டுகளால் சிபார்சு செய்யப்படுபவர்கள் அந்த போர்டுகளின் எல்லைக்குள் வசிப்பவராக விருக்கவேண்டியது கட்டாயம்.

(7.) காலியாயிருக்கும் மெம்பர் ஸ்தானத்துக்கு ஒருவரைத் தெரிந்தெடுத்துச் சிபார்சு செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்ட இரண்டுமாசத்திற்குள், அப்படி கேட்டுக்கொள்ளப்பட்ட சபை யல்லது சங்கத்தார் தக்க ஒருவரைத் தெரிந்தெடுத்துச் சிபார்சுசெய்யத் தவறினுல் கனம் பொருந்திய கவர்னர் எந்தவகுப்பு அல்லது ஜனசமூகத்திற்கு பிரதிநிதியாக மதிக்கப்படுகிறதோ அந்த வகுப்பு அல்லது ஜனசமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரைத் தன்னிஷ்டம் போல் நியமனம் செய்யலாம்.

(8.) மெம்பர் ஸ்தானத்திற்குச் சிபார்சு செய்யப்பட்ட ஒருவரை கனம் பொருந்திய கவர்னர் நியமனம் செய்ய மறுத்தால் மறுபடியும் ஒருவரைச் சிபார்சு செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுவார்கள். அதன்மேல் ரு, எ-வது விதிகளிற் கண்டபடி நடந்து கொள்ள வேண்டியது.

(9.) (ஏ) இவ்விதிகள் ஊர்ஜிதத்திற்கு வந்தவுடனே கூடிய சீக்கிரத்தில் உத்தியோகஸ்த ரல்லாதவர்களுக்குரிய எ-மெம்பர் ஸ்தானங்கள் உ-வது விதியிற்கண்ட விவரப்படி சிபார்சு செய்யப்பட்டவர்களால் நிரப்பப்படவேண்டும்.

(பி) உடனே எ-மெம்பர் ஸ்தானங்கள் காலியில்லாவிட்டால் அப்போதப்போது காலியாகும் ஸ்தானங்களை உ-வது விதியிலுள்ள நிபந்தனைக்குள்பட்டு கனம் பொருந்திய கவர்னர் அவர்கள் அவருக்கு யுக்தமாகத் தோன்றுகிற சங்கம் அல்லது சங்கங்களைக் கொண்டு சிபார்சு செய்யச்சொல்லி அச்சிபார்சை யனுசரித்து நியமனம் செய்துவருவார்.

The following is a list Of Patrons, Subscribers and Supporters of the Viveka Chintamani, most of whom have expressed their Sympathy, either in person or through letter, with the objects of the "Diffusion of Knowledge Agency" in response to the "Appeal on behalf of the masses" issued by the said Agency.

Patrons.

Dewan Bahadur S. Subramania Iyer, C. I. E.,
The Luz, Madras.

Rai Bahadur, SrilaSri Thirunganasambantha,
Pandara Sannadhi Avergal, Matathipatti,
Madura.

M R Ry. M. V. Alaghirisamy Naidu Garu,
near West Masi Street, Madura.

Subscribers & Supporters

" T. V. Sivakumara Sastrial B.A, L.T.
Teacher's College, Saidapet.

" Subramania Iyer B. A.
Manager U. C. S. Commr's. office
High Road Egmore.

M R Ry. M. S. Kuppusami Iyer B. A.
Hd. Clerk, Office of the D. P. I.
15. High Road, Egmore.

" M. Viraraghavachariar B. A.
Venkatesa Naick Road, Triplicane.

" C. Singaram Pillay B. A.
No. 30 Ramaswamy Street, Black Town.

" A. Seshia Sastriar Avl. C. S. I.
Dewan Regent, Pudukota.

" S. A. Saminatha Iyer Avl.
Pleader, Tanjore.

" R. Anantarama Iyer Avl. B. A.
5 Copies. President, Taluq Board,
Srivilliputtur.

M R Ry. Madhava Rao,
Clerk Traffic Supt's office,
B. S. Railway, Rangoon.

" Saravanamuttu Pillay,
Assist. Station Master,
Coimbatore.

" Anga Gounder,
Singarampallayam, Coimbatore.

" T. N. Lakshmana Aiyangar,
Pleader Ambasamudram.

" M. Shama Row, M. A.
Assist., Secretary,
Mysore Educational Dept.
Bangalore.

" K. Subramania Pillay Avl.,
நற்றமிழ் இலக்கண வித்வான்
ஸ்கூல் மாஸ்டர், ஆண்டிப்பட்டி,
Periayakulam Taluq.

" W. B. Authimoola Aiyar,
நயினியப்பஞர் தெரு
Chintadrepet, Madras.

" K. G. Sesha Iyer B. A. B. L.
High Court Vakil,
Trivendram.

" A. Periasawmy Pillay Avl.
Sub-Overseer D. P. W.
Mayaveram.

" V. Vythilingam Pillay Avl.,
Sub-Auditor, Comptroller's office,
Rangoon.

" Chinnappa Pillay,
Sub-Auditor, Comptroller's office,
Rangoon.

" Kannuswami Nainar Avl.
Clerk Commissarite office,
Myingyan, *U. Burma.*

" R. Sankara Iyer,
Head Master, Board School,
Chendarapatti, Attur Taluq.

" S. Ramaiyer,
Vadiveeswaram Nagercoil Post.

" A. N. Vedanayagam Pillay,
Clerk Comptroller's office,
Rangoon.

" Paramasivam Pillay,
Clerk, Comptroller's office, Rangoon.

" L. Steevens Iyiah Pillay,
c/o Mr. S. Namasivaya Pillay,
Clerk Budget Section,
Comptroller's office Rangoon.

" D. Mohun Roy Naidu Garu,
Clerk, commissioner's office,
Meiktila, Upper Burmah.

" Markandam Pillay,
Railway Station Master,
Thedaw, Via Rangoon.

Mr. T. A. Arokiam Pillay,
Clerk, Central Jail,
Bassein, Lower Burmah.

M R Ry. C. A. Appadurai Pillay, Compositor,
Govt. Press, Rangoon.

M R Ry. V. A. Vydinatha Iyer,
Ag. 2nd Master, L. F. School, Mangeri.

" G. Srinivasa Row,
Secretary, Union club, Madura.

" A. Rama Rao, B. A. Sub-Registrar,
Thallakulam, via Madura.

" V. Bashyachariyar, B. A., B. L.
High Court Vakil, Madura.

" D. Soundara Raja Iyengar,
Pleader, Madura.

" R. Venketeswara Iyer, Manager,
2 Copies. Native College, Madura.

" P. Subbaroya Iyer B. A.,
First Grade Pleader, Madura.

" M. Venkatasawmy Naidu Garu,
of Madura Now at Madras.

The Secretary,
Technical Institute, Madura.

" S. Narayanaswamy Iyer Avl.,
Son of late Subramania Iyer B.A., B.L.
New Street, Madura.

" M. S. Subramania Iyer Avl. B.A., B.L.
New Street, Madura.

Rai Bahadur R. Ramasubba Iyer B.A., B.L.
High Court Vakil, Madura.

Dr. Kandya Pillay B. A., M. B., C. M.
Assist. Surgeon, Madura.

M R Ry. N. Sundaram Iyer, Pleader,
New Street, Madura.

" E. Streenivasachariar Avl.
Treasury Deputy Collector,
Thanappa Mudally Agraharam,
Madura.

" Venkataranga Iyer Avl.
Sub-Judge, Madura.

" Sreenivasa Iyer Avl. B. A.,
Head Master, American Mission School,
Madura.

" D. S. Krishnaswamy Iyer Avl. B A.
Assist. Inspector of Schools, Madura.

" Streenivasa Row Avl.
Deputy Collector,
New Street Madura.

" G. Jagannadha Iyer Avl, B.A., B.L.
Stationary Sub-Magistrate, Madura.

" C. Sundara Mudaliar Avl.
Head Quarter Inspector,
Goodshed Street, Madura.

" V. A. Ramasamy Iyer Avl.
Huzur Sheristadhar,
Thanappa Mudaly Agrahaarm, Madura.

" S. Chellam Iyer Avl.
Contractor and Mirassidhar,
Thengarai, via Sholavandan, Madura.

" J. M. Nallaswamy Pillay Avl. B.A., B.L.
Dt. Munsiff, Tirupattur (Salem Dt.)

" V. Kameswara Iyer Avl. B. A.,
Professor, Maharajah's College,
Pudukota.

" S. Krishnamachariar Avl.
Sub-Engineer D. P. W. Madura.

M R Ry. A. Coopoosamy Pillay,
Contractor D P. W.
Camp Madanully, Goribidnur Taluq,
Kolar Dt.
" M. K. Vythinatha Iyer B.A., B L.
New Street, Madura.
" C. R. Raghavachariar Avl.
Sub-Registrar, Tiruvadani, Madura.
" M. C. Krishnasamy Iyengar,
c/o M. Rangachariar Esq. M. A.
Trivandram.
" O. N. Krishna Row, Vakil,
Avanashi.
Rev. Sidney Long,
Coimbatoro.
" Annadurai Iyer Avl.
Single Row Street,
Batlagundu, Madura.
" B. M. Vythianathaiyar Avl.
Manager H. M. School, Batlagundu.
" M. Krishnaiyengar,
Secretary, சேதுஜனசங்கம், Devakotta.
" M. A. Saminathanchettiar,
93, Market Street Singaporo.
" P. R. Narayana Iyer Avl.
Assist. Superintendant,
Rev. Survey, Trichinopoly.
" T. Rungasawmy Mudaliar,
Clerk, Chief Commissariat office,
Myingyan, U, Burma.
" M. Krishnasawmy Naidu,
Assist. Supt., Comptroller's office,
Rangoon.
" Ruthna Mudaliar,
Clerk Comptroller's office,
Rangoon.
" Subramania Pillay,
Clerk Comptroller's office,
Rangoon.
" N. Muttukumarasami Pillay,
Late Rev. Inspector, Shermadevi.
" T. S. Vaidyanada Iyer,
Scretary, Students Literary Club,
Karantattangudy, Tanjore.
" V. Krishnasawmy Iyer B. A.
Pleader Madura.
" T. A. Manickam Pillay,
Hospital Assistant Panruti.
" T. A. Swamiah Pillay
Gopeng Perak.

REFRESHMENT AND CONFETIONERY OF THE BEST SORT CAN BE HAD OF H. RAMASWAMIAH.

335, *Thambu Chetty Street*,
Black Town.

The above Refreshment Room was started last year to meet a long felt want in the locality and it has ever since obtained a very satisfactory opinion of the Public. It is situated near the New Law Courts. The Proprietor requests the public to encourage him by giving him their support and patronage.

THE WATERBURY WATCH.

"வாடர்பரி வாட்ச்."

என்பது நீடித்து நிற்கத்தக்கதும், சரியாக ஓடுவதுமான ஓர் நல்ல கைகடிகாரம். இதன்விலை ரூபா 7½யே. இக்கடிகாரம் ஆயிரக்கணக்காகச் சென்னை மவுன்ட் ரோட் அடிஸன் கம்பெனியாரால் விற்கப்பட்டிருக்கிறது. 1886, 1887-வது வருஷங்களில் விலையான கடிகாரங்களில் நூற்றுக் கணக்கானவை இன்னும் சரியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. விலைரூபா ஏழு, அணாஎட்டே (ரூ 7—8—0.)

ADDISON & Co.

SEQUAH'S REMEDIES.

ஸிக்வாவினுடையமருந்துகள் சென்னை மவுன்ட் ரோட்டிலுள்ள அடிஸன் கம்பெனியார் ஷாப்பில் கிடைக்கும். விலை புட்டி 1-க்கு ரூ 1—4—0.

RUBBER STAMPS.

முதல்தரமான ரப்பர் ஸ்டாம்பு வேண்டுமானால் அடிஸன் கம்பெனியாரிடம் போங்கள். எந்தமாதிரியில் வேண்டுமானாலும் கிடைக்கும்.

ADDISON & CO,
Mount Road,
MADRAS.

விளம்பரம்.

டப் அண்ட் கம்பெனி
மவுன்ட் ரோட்டு.

இது நாட்பட்ட எச்சில் தழும்பு, மேகப்படை, ஸ்திரீகளுக்கு அரையில் உண்டாகிற இடுப்புக்கடி, மற்றும் தேகத்தில் உண்டாகிற பல சம்பந்தமான படைகளையும் நீக்கும். இரண்டொரு நாளிலேயே இதன் பிரயோசனத்தை யறியலாம். ஒரு டப்பியின் விலை ரூபா 1. பாக்கிங் சார்ஜ் அணா 2.

காச்சல் கட்டிச் சூரணம்

சகலவிதமான விஷசுரம், மலைநாட்டுச்சுரம் இவைகளால் மெலிந்து வயிற்றில் காச்சற்கட்டிகண்டு வருத்தமடைகிறவர்கள் இச்சூரணத்தைக் காலைமாலை சாப்பிட்டு வரவும். புட்டி 1-க்கு ரூபா. 1—8—0.

கரப்பான் களுக்குக் களிம்பு.

தாய்தந்தையர்களுடைய மேக சம்பந்தத்தினால் சிறு குழந்தைகளுக்குக் கால், கை மேக முதலிய இடங்களில் காணும் சகலவிதமான கரப்பான்களுக்கும் காலைமாலைகளில் மேலுக்குப் போட்டு வரவும்; மருந்து போடுமுன் வெந்நீர் விட்டு அலம்பிவிடவேண்டும். கிரையம் ரூபா 1—0—0.

DUFF& CO.,
Chemists & Druggists,
MOUNT ROAD, MADRAS.

"கற்றோர்க டாமுகப்பர் கல்வி தனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகழ்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழ்வ ரந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம். 1. 1893ஞு ஏப்ரல்மீ இலக்கம். 12.

சந்திரனைப்பற்றிய சிலவிஷயங்கள்.

ஒருகாட்டில் ஓர் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழையில்லாமையால் ஏரி குளங்கள் எல்லாம் வற்றிப்போக தண்ணீர் கிடையாமல் தாகத்தால் வருந்தி நெடுந்தூரம் தேடி கடைசியில் தண்ணீர்தங்கிய தடாகத்தைக் கண்டது. உடனே தன் பரிவாரத்துடன் அதிலிறங்க அங்கே வாசம்பண்ணிக் கொண்டிருந்த முயல்களில் சில யானைகளின் கால்களின் கீழ்ப்பட்டு இறந்தன. மற்றும் சில முயல்களுக்கு கால் கைகள் ஒடிந்தன. இவ்விதம் நாசம்செய்து அந்த யானைகள் போனபிறகு மீதியிருந்த முயல்கள் கூடி வேறோரிடம் தேடிச் செல்லவேண்டுமென்று விசனத்துடன் யோசனைசெய்யத் தொடங்கின. அப்பொழுது அனுபவம் முதிர்ந்த ஒரு கிழமுயல்: 'நன்றாயிருக்கிறது, பூமி உண்டானதுமுதல் நாம் தங்கியிருக்கிற இந்த இடத்தை விட்டுப் போவது அழகாயிருக்கும்! ஏதாவது உபாயம் செய்து இந்த மூடயானைகளை முடுக்கவேண்டுமேயல்லாது வேறு யோசனை கூடாது' என்று சொல்லவே, மற்றமுயல்கள்: 'ஓய், கிழவனாரே! அந்த உபாயம் இன்னதென்று சொல்லும்' என்று பரிகாசமாய்க் கேட்க, அதற்கு அந்த முயல் 'யானைகள் இவ்விடம் வாராதபடி தடுப்பதை எனக்கு விட்டுவிடுங்கள்' என்று சொல்லி அங்கே நின்றும் புறப்பட்டு யானைகள் வரும்வழியில் ஓர் மேட்டில் உட்கார்ந்து கொண்டது. அப்படியே யானைகள் வந்தவுடன் அந்த முயல் 'அடா அரசயானையே!' என்று அதட்டிக்கூவி, 'அடா, நான் சந்திர தேவனுடைய தூதன், நான் அவரிடத்திலேயே எப்பொழுதும் தங்கியிருக்கும் முயல், அவருடைய பள்ளியறையாகிய தடாகத்தை நீங்கள் கலக்கிவிட்டீர்களென்று அவர் உங்களெல்லாரையும் கொல்ல எண்ணியிருக்கிறார்;' என்றுசொல்ல, யானைகள் 'இவர் சந்திரமண்டலத்து முயல், பெரியஇடத்துப் பகைஉதவாது' என்று அன்றுமுதல் அவ்விடத்தைவிட் டொழிந்தன;—என்ற இக்கதையை நாம் பஞ்சதந்திரத்திற் படித்திருக்கிறோமல்லவா? அந்த முரட்டு யானைகளை மோசம்செய்த மூட முயலையே நாம் நமது வானசாஸ்திர பண்டிதரென்று கொண்டு சந்திரனிடத்துத் தோன்றும் கரியஉருவம் முயல்தானென்று தீர்மானம் செய்துவிடலாமா? அல்லது தக்க கருவிகளைக்கொண்டு பரிசோதித்து அறியலாமா? இக்காலத்திலோ தக்க கருவிகளுக்குப் பஞ்சமில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடியென்று ஓர் விதக் கருவியுண்டு. அதன் வழியே தூரத்திலுள்ள பொருள்களை நாம் பார்ப்போமானால் அவைகள் சமீபத்திலுள்ள பொருள்கள்போலக் காணப்படும். இந்தக் கருவியைக்கொண்டு 'அம்பிலிமான்தோசை'யென்று குழந்தைகளுக்கு சிறியதாய் வார்த்துக்கொடுக்கிற தோசைபோலிருக்கிற சந்திரனை நாம் பார்ப்போமானால் நம

க்கு அதுவெகுபெரிதாய்க் காணப்படும். அதில் உயர்ந்த மலைகளையும் வெகு தாழ்ந்த ஆழமான பள்ளத்தாக்குகளையும் நாம் தெளிவாய்க் காணலாம். சந்திரனுக்கு சுயமான ஒளி கிடையாது. சூரியனுடைய ஒளியானது அதில் உள்ள உயர்ந்தமலைகளில்தாக்க, நாம்பேசுகிறவார்த்தையின் சத்தம் சுவர்களில் தாக்கி சிலே (எதிரொலி) உண்டாவதுபோல், அம்மலைகளிலிருந்தும் நமக்குவெளிச்சமானது பிரதிபலிக்கிறது. 'கிருசன் எண்ணெய்' என்று வழக்கத்தில் சொல்லப்படும் நிலத்திராவகம் விட்டு எரிக்கும் சுவர் விளக்குகளில் கண்ணாடிக்குப் பின்னால் தட்டு ஒன்று வைத்திருப்பதை யாரும் பார்த்திருக்கலாம். அந்தத் தட்டு எவ்வளவுக் கெவ்வளவு பிரகாசமாயிருக்கிறதோ அதற்குத் தக்கபடி தீபத்தின் ஒளியும் அதிகம். அந்தத் தட்டு, நிரம்பப் பிரகாசமா யிருந்தால் தீபத்தின் ஒளியைப் பார்க்க கண்கூசும். எப்படிவிளக்கின் வெளிச்சம் அந்த தட்டில் பாய்ந்து அதினின்றும் பிரதிபலிக்கிறதோ அப்படியே உலகத்துக் கெல்லாம் தீபம் போன்ற சூரியனுடைய ஒளியானது தகரத் தட்டுபோல் தாவள்ளியமான சந்திரனிடத்துள்ள மலைகளில் தாக்க "தீம்பால் கதிர்மணிக் குடத்தி னேந்தி வீழ்தரச்சொரிவதேபோல்"* என்றபடி பாலை பளிங்குக் குடத்தி லெடுத்து ஆகாயத்திலிருந்தும் பூமியில் பொழிவதுபோல விளங்குகின்ற நிலவு ஒளியானது உண்டாகிறது. ஆகவே,

(1) வெண்ணிறநறநிறை வெள்ளமென்னவும்
பண்ணிறஞ் செறிந்திடை பரந்ததென்னவும்
உண்ணிறைகாம்பிக் கொழுகிற்றென்னவும்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.
—கம்பர்.

(2) ஆறெலாங் கங்கையேயாய வாழிதாம்
கூறுபாற் கடலேயேயொத்த குன்றெலாம்
ஈறிலான் கயிலையை யினயந்த் வென்னினி
வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே.-கம்பர்.

அதாவது, உலகத்தின் அமிர்த வெள்ளமானது பரவியது போலவும், இனிமையான சங்கீதமே[1] உருவெடுத்து எங்கும் நிறைந்ததுபோலவும், மனிதர் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அன்பானது வெளியே ததும்பி பெருகினது போலவும்[2], குளிர்ச்சி பொருந்திய நிலவானது எங்கும் இனிமையாய்த் தழைக்க, பரமானந்தத்தைத் தரும் அந்த வெளிச்சத்தில் எந்த நதியும் கங்கா நதிபோல் விளங்கிற்று. சமுத்திரங்களெல்லாம் பாற்கடல்போல விளங்கின. குன்றுகளெல்லாம் பரமசிவனது கைலாச பர்வதத்தைப்போல் விளங்கின, என்று அடங்கா குதூகலத்துடன் ஆனந்தபரவசமாய் அளவற்ற புலவர்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் இந்த நிலவு சந்திரனுடைய சொந்தமல்ல. சூரியனிடத்தில் கடன்வாங்கி அது நமக்குச் செய்யும் தானம். ஆயினும் சமுத்திர ஜலத்தையுண்டு பூமியில் மழையாகப்*பொழியும்*மேகத்தை

* உள்ளியுள்ள வெல்லா முவந்தீயுமவ்
வள்ளியோரின் வழங்கின் மேகமே

அதாவது, பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் கொடுக்கிற கொடையாளிகளுக்குச் சமானமாக மேகத்தைச் சொல்லவில்லையா? அதுபோல் சூரியனுடைய ஒளியை நமக்குக் குளிர உதவுகின்ற சந்திரனையும் 'இரவுக்கு அரசியே, தெய்வமே'[3] என்றும், 'ஜகத்ஜோதியே'[4] யென்றும், 'தாரகணத் தலைவனே'[5] யென்றும் பற்பலவாருகக் கொண்டாடத் தடையென்ன இருக்கிறது.

இது நிற்க நமது தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு சந்திரனை இன்னும் பரிசோதிப்போம். சந்திரனில் முயலைக் காணோம். ஆனால் மலைகளுக்குமத்தியி லநேக கெபிகள் இருக்கின்றன. அவைகளில் சூரியனுடையஒளி அதிகமாகத்தாக்காததினால் தூரத்துப்பார்வைக்கு அவைகள் கருப்புக் கோடுகள்போல் தோன்றுகின்றன. இவை தாம் பஞ்சதந்திரத்து யானைக்கு முயல்போல் காணப்பட்டன.

சந்திரன் பந்துபோல் வட்டமானது. அது பூமியைச் சுற்றியோடுகிறது. ஊசியைக்காந்த மிழுப்பதுபோல் உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் மற்றைய பொருள்களையெல்லாம் தன்னிடத்திலிழுக்கிறது. பெரிய பொருளுக்கு சிறியபொருளைக்காட்டிலும்காந்தசக்தி அதிகம். பூமி சந்திரனைவிட மிகப் பெரிதாதலால் பூமி சந்திரனைச் சுற்றுவதற்குப் பதிலாக சந்திரன் பூமியைச் சுற்றிவருகிறது. அதே சந்திரனை மற்ற கிரகங்களும் தங்களிடத்தி லிழுக்கிறபடியால் அது பூமியில் தாக்காதபடி விலகி செக்கில் சுற்றும் எருதுபோல் பூமியைச்சுற்றி வருகிறது. அப்படி யொருதரம் சுற்ற 27-நாள், 7-மணி, 43-நிமிஷம் 11-வினாடி ஆகிறது. சந்திரன் முதலில் ஒரு சிறு வெள்ளிக் கோடுபோல் தோன்றி பிறகு ஸ்திரீகளுடைய நெற்றிபோல் வளைந்து மன்மதனுடைய ஆக்ஞா சக்கரம் எனத் தோன்றி பிறகு தீயோருடைய செல்வம்போல் நாளுக்குநாள் தேய்ந்துவரக் காரணம் அடியில் வரும் படத்தால் அறியலாம்.



பூமியை பூ என்றும் சூரியனை சூ என்றும், சந்திரனை ச என்றும் அடையாள மிடுவோம். புள்ளிக்கோடிட்டுக் காட்டியிருக்கும் வட்டத்தின் வழியே சூரியனை பூமிசுற்றி ஓடுகின்றது. சின்ன வட்டத்தின்வழியே பூமியைச் சந்திரன் சுற்றிவருகிறது. உள் வட்டத்தில் சந்திரன் பூமியைச் சுற்றிவருகையில் சந்திரமண்டலத்தில் சூரியன் ஒளிபடும் பாகத்தை விளக்கிக் காட்டியிருக்கிறது. சந்திரன்பூமியைச்சுற்றிவருகையில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, என்கிற இடங்களிலெல்லாம் அதன் ஒரு பாதி சூரியன் ஒளிபட்டுப் பிரகாசித்தாலும் அதன் பிரகாசமான பாகம் முழுமையும் பௌர்ணமை தினத்தன்று மற்றநாள்களில் பூமியிலுள்ள நமக்குத் தெரிகிறதில்லை. சந்திரன் உள்வட்டத்தில் 1, 2, முதலான ஸ்தானங்களி லிருக்கையில் அதன் பிரகாசமானபாதியில் நமக்குத்தோன்றும்பாகம் அதற்கு மேலுள்ள வெளிவட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது. 1-ல் சந்திரனிருக்கையில் சூரியன்ஒளிபடாத சந்திரனின்பாதி பூமிக்குஎதிரேயிருப்பதால் அன்று சந்திரனிருப்பதே நமக்குத் தோன்றுவ தில்லை. அன்றைக்குத்தான் அமாவாசியை. சந்திரன் தன் வட்டத்தின் வழியே பூமியைச்சுற்றி ஓடி 2-ல் வந்து நிற்கையில் சந்திரனுடைய வெளிச்சமுள்ள பாதியில் கால்பங்கு பூமியில் படுகிறது. (2-குறிப்பிட்ட படத்தைப்பார்க்க) அன்றைக்குத்தான் நாலாம் பிறை. 3-ல் சந்திரனுடைய வெளிச்சமுள்ள பாதியில் அரைப்பங்கும், 4-ல் முக்கால்பங்கும், 5-ல் முழுப்பங்கும் பூமியில் படுகிறது. இப்பொழுது தான் பௌர்ணமை, பிறகு 6-ல் முக்கால்பங்கும், 7-ல் அரைப்பங்கும், 8-ல் கால்பங்கும் படுகிறது. அதன்பிறகு மறுபடி அமாவாசியை. ஆகவே சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றிவருவதற்குள் ஒரு அமாவாசியையும் ஒரு பௌர்ணமையும் உண்டாகிறது. (மேலே, காட்டிய படத்தில் சந்திரன் ஒரு ஸ்தானத்திலிருந்து அடுத்த ஸ்தானத்துக்கு வர சுமார் 3½நாள் செல்லுகிறதென்றறிந்து கொள்ளவேண்டியது.)

சந்திரனுடைய ஒளி சூரியனுடைய ஒளியைக்காட்டிலும் 8 லட்சம் பங்கு குறைந்தது. அது நிரம்பக்குளிர்ந்தது. அதனால்தான் சந்தி

* சிந்தாமணி. 'பாற்கதிர் பரப்பி மீனரசாண்ட வெள்ளி விளக்கத்து' என்றார் இளங்கோவடிகளும். 'பாற்கடன் முகந்து சூரிவான்சொரிந்ததேயாமென' —கம்பர்.

[1] Poerty is Universal. Shelley has the same idea very often e. g. his 'An Ariette for music.'

[2] Shelley has the same in his 'Prometheus Unbound.'

* கம்பர்.

[3] Ben Jonson. [4] Homer. [5] சிலப்பதிகாரம். இவ்வடை மொழிகள் சம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் வெகு சாதாரணம்.

ரனுக்கு "தண்ணன்"—குளிர்ச்சி யுடையவனென்று பெயர்.

சந்திரனுடைய சக்தியைப்பற்றி பலர் பலவிதம் நினைக்கிறார்கள். 'தண்ணன் கதிர்வரவால் பொங்கும் கடல்' * என்றபடி அலைகளுக்குச் சந்திரன் காரணம். பைத்தியம் முதலிய மனோவியாதியும் சிற்சில தேகவியாதியும் பௌரணமையில் அதிகரிக்கின்றன. உலகத்தில் நடக்கிற தற்கொலைகளில் அனேகம் பௌரணமை பிரதமைகளில் தான் நடக்கிறதென்று கணக்குபூர்வமாகத் தெரிகிறது. † தங்களைத் தாங்களே உயிர்மாய்த்துக் கொள்பவர்கள் அந்த தினங்களை நல்முகூர்த்தமாகத்தெரிந்தெடுக்ககாரணம் யாதோ புலப்படவில்லை. சந்திரனுடைய இனிமையையும் அழகையும், குளிர்ச்சியையும், ஒளியையும் பார்க்கும்போது ஆஹா நாம் சந்திரனில் பிறந்தோமா என்று எண்ண முண்டாகலாம். ஆனால் உண்மையில் சந்திரன் பூமிக்கு எவ்வளவோ தாழ்ந்தது.

‡ தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்துபிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்-திங்கள்
கறையிருளைநீக்கக் கருதா துலகில்
நிறையிருளைநீக்குமேனின்று.—

என்றபடி சந்திரன் தன்னுடைய குறையாகிய களங்கத்தை நீக்கிக் கொள்ளாமல் உலகத்து இருளை நீக்குவதுபோல் பெரியோர்கள் தங்கள் குறைகளைக் கூடப் பாராமல் பிறர் குறைகளை நோக்கிக் கவலைப் படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சந்திரனிடத்திலுள்ள குறைவு அதன் களங்கம் மாத்திரமல்ல. அங்கே முதலாவது நாம் சுவாசிக்கத்தக்ககாற்று கிடையாது. அதன் காற்றை ஒரு க்ஷணம் நாம் சுவாசிக்குமுன்னமே தலைசுற்றி மூச்சு அடைத்துத் தத்தளிக்க வேண்டும். 2-வது அங்கே ஒரு பொட்டு ஜலமாவதுகிடையாது. "சாந்த சமுத்திரம்" (The sea of serenity) எனப் பெயர்பெற்ற அநேக சமுத்திரங்கள் இருந்தாலும் அவைகள் போலி சமுத்திரமே தவிர வேறல்ல. அவைகளில் ஒரு துளி ஜலமும் கிடையாது. மேலும் பூமியில் இருப்பதுபோல் அடிக்கடி அடுத்தடுத்து இரவும் பகலும் வருவதில்லை. ஒரே தொடர்ச்சியாக 14-நாள் அல்லது 336 மணி தேசகாலம் பகலும் பிறகு அவ்வளவு நேரம் இரவும் உண்டாகும். சந்திரனிலும் இரவு பகலுக்குச் சூரியனே காரணம். பகலில் அதிக உஷ்ணமும் இரவில் அதிக குளிர்ச்சியும் உள்ளது. பகல் கழிந்து இரவு வரும்போது சூரியன் மறையும். ஆனால் சந்திரனில் அஸ்தமனம் பூமியில் உள்ளதுபோல் அலங்காரமாயிராது.

* "திசைமுகம்பசந்து செம்மலர்க்கண்கள்
முழுநீர்வாரமுழுமெயும் பனித்துத்
திரைநீர்ஆடை இருநிலமடந்தை
அரசுகெடுத்தலம் வருமல்லற்காலை."

என்றபடி 'பூமிதேவிதன்புருஷனை (சூரியனைக்) காணுமல் திசையாகிய தன் நான்குமுகமும் பசப்பூரப்பெற்றுப் புஷ்பங்களாகிய கண்கள் நீர் சொரிய சரீரமுழுதுங் குளிர்ந்து வருந்தப்படும் அஸ்தமனவேளை' யென்று அலங்காரமாய்ச் சொன்னபடி வானமெல்லாம் நாலுபக்கமும் சிவந்து பார்த்தவர் உள்ளத்தை உருக்கத்தக்க அழகு வாய்ந்த அஸ்தமனம் சந்திரமண்டலத்தில் கிடையாது. சூரியன் களைத்தவன் போல் திடீரென்று சந்திரனிடமிருந்து விடைகூடப் பெற்றுக் கொள்ளாது மறைந்து போய் விடும். சந்திரனில் புல்பூண்டு கிடையா. பக்ஷி மிருகம் கிடையா. மனிதன் என்ற பேச்சே கிடையாது. வீசி அடிக்கும் காற்றுக்கிடையாது. ஒருவர்க்கொருவர் பேசினால் கேளாது. ஆனால் பொன் முதலிய உலோகங்கள் ஏராளமாய் உண்டு. அங்கிருக்கும் மலைகள் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பலவர்ணங்களாய் இருந்தாலும் பார்வைக்கு அதிக அருவருப்பாயிருக்கும்.

சந்திரனில் பகலில்கூட நக்ஷத்திரங்கள் புலப்படும். சூரியமண்டலத்திலுள்ள மலைகள் தெரியும்.

* நன்னெறி. Shelley and Shakespeare use this simile very often, so also several others.

† Morselli's 'Suicide.' International Scientific Series.

‡ நன்னெறி.

* சிலப்பதிகாரம்.

நம்முடையபூமி அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு 2-அல்லது 3 கஜகுறுக்களவுள்ள ஒரு கோளமாகத் தோன்றும், சந்திரனில் இரவாயிருக்கும்போது பூமிதான் அதற்கு முக்கிய ஒளியைத்தரும். ஆனால்அவ்வொளி நிலாவைப் போல் பிரகாசமாய் ஆனந்தமாயிராது.

நாம் தப்பித்தவறி சந்திர மண்டலத்துக்குப் போய்விட்டோமானால் இறகு கட்டினவர்களைப்போல் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குத் தாவலாம். பெரிய குன்றுகளைச்சுலபமாய் உருட்டலாம். அநேகமாயிரம் மயில்களை சொற்பநேரத்தில் சுற்றிவரலாம்.நமக்கு அங்கே கீழேகால்பாவுகிறது வருத்தம்.* அங்கே மனிதர்கள் கீழே கால் ஊன்றி நடக்கவேண்டுமானால் நம்மைப்போல் 6 மடங்கு வளர்ச்சியுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

இம்மாதிரி ஜனங்களும் அவர்களுக்கேற்ற மற்ற ஜீவஜெந்துக்களும் சந்திரமண்டலத்தில் ஒருகாலத்தில்வசித்துக்கொண்டிருந்ததாகவும், சந்திரன் ஆதியில் தற்காலத்திலுள்ளபடி மயானக்கரைபோல் பாழாயிருக்கவில்லை யென்றும் பலர் தீர்மானிக்கிறார்கள். அநேக ஆயிரம் வருஷத்துக்கப்பால் பூமியும் இப்பொழுது சந்திரன் இருப்பதுபோல் உயிர்ப்பிராணிகளின் வாசத்துக்கு யோக்கியமில்லாமல் மாறிவிடுமென்று பயப்படுகிறவர்களும் உண்டு. ஆனால் இனிமேல் உண்டாகிற விஷயங்களைப் பற்றித் திட்டமாய்த் தீர்மானிப்பது கேவலம் மனிதர்களாகிய நமக்கு அசாத்தியமன்றோ. அளவற்ற அண்டங்களனைத்தையும் அமைத்துக் காத்து அழிப்பதைத் தமக்கு அநாயாசமான ஓர் 'விளையாட்டர்ய்' †க்கொண்டுள்ள சாக்ஷாத் ஈசுவரனுடைய உட்கருத்தின் இரகசியத்தை அற்பஅறிவினராகிய நாம் அளக்கத் துணிவது 2,40,000 (2-லக்ஷத்து 40 ஆயிரம்) மயில்களுக்கு அப்பால் உள்ள சந்திரனை நமது 2-முழக்கைகளால் எழும்பி எட்டிப்பிடிக்க எத்தனித்தல் போலும்.

பி. ஆர். ராஜமய்யர், பி. ஏ.

* இதற்குக்காரணம் சந்திரனுடைய காந்தசக்தி பூமியுடையதைக்காட்டிலும் குறைந்ததாதலால் அதிலுள்ள பொருள்களின் கனமும் குறைவு. இதை சென்ற பிப்ரவரி மாசத்துச் சஞ்சிகையில் பரக்கக்காணலாம்.

† கம்பர்.

சுதந்தரங்களின் விளக்கம்.

2-ம். அத்தியாயம். (முடிவு)

(326-வதுபக்கத் தொடர்ச்சி)

11. நிலத்தில் மனிதருக்குள்ள சுதந்தரம் மேற்கூறியபடி ஏற்பட்டபிறகு அதிலிருந்துற்பத்தியாகும் மரவர்க்கங்களெல்லாம் நிலத்தின் சொந்தக்காரனுக் குரியதென்பதற்குச் சந்தேகமில்லை. சொந்தக்காரனது அனுமதியில்லாது அவற்றை வேறொருவரும் தங்களுக்குபயோகித்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில், அவற்றின் வளர்ச்சிக்குப்பெரும்பாலும் அவனது பிரயத்தினமும் சாக்கிரதையும் முக்கிய காரணங்களாயிருப்பதாய் நாம் காண்கிறோம். நிலத்தில் சொந்தக்காரனால் வளர்க்கப்பட்டு விருத்தியடையும் நாய், கோழி, முதலிய ஜந்துக்களும் அவனுக்கே சொந்தமாகின்றன. ஒருவராலும் இரட்சித்து வளர்க்கப்படாது காட்டுத்தன்மையில் தாமே விருத்தியடைகின்ற பூண்டுகள், விலங்குகள் விஷயத்தில், அவை தன்னுடைய நிலத்தை விட்டுப்பெயர்ந்து ஓடிப்போகாமல் நிலத்தின் சொந்தக்காரன் காத்துவரக் கூடுமாகில், அவற்றிற்கும் அவனே சொந்தக்காரனாகலாம். இப்படி காட்டுத்தன்மையில் தாமே விருத்தியடைந்துவரும் மரங்கள் மிருகங்களைத் தவிர, உபயோகமுள்ள வேறொரு விளைவுமில்லாத நிலத்தை ஒருவனுடைய பிரத்தியேகசுதந்தரத்திற்குட்படுத்த யாதொரு நியாயமில்லையென்று நிலத்திலுள்ள சுதந்தரத்தைப்பற்றி நாம் மேல் விவரித்திருப்பதனால் விளங்கலாம். ஆகிலும், ஒருவன் தனது முயற்சியினால் இப்படிப்பட்ட நிலத்தையும் விருத்தியடையும்படி செய்வதாக ஏற்படும்பொழுதும், அதிலுள்ள காட்டு மிருகங்களை சனங்கள் வேட்டையாடி உபயோகித்துக்கொள்வதைக்காட்டிலும் அதிகலாபமுண்டாமென்று நிச்சயிக்கக் கூடுமானால்,அனைத்தனத்தார் அந்நிலத்தை விற்றாகிலும் குத்தகைக்கு விட்டாகிலும் உபயோகப்படும்படி செய்ய வேண்டியது.

தரையின்மட்டத்திற்குக்கீழிருந்து அகப்படும் உலோகங்கள் நிலத்தின் சொந்தக்காரனுடைய முயற்சியினால் உற்பத்தியாவதில்லை; ஆகையால்

அவற்றைத் துரைத்தனத்தாருக்குச் சேர்த்து விடவேண்டும். இப்படி கிடைக்கும் உலோகங்கள் அற்பவிலையுள்ளனவாகவும் சாதாரணமாய் எவருக்கும் கிடைக்கக் கூடியனவாகவு மிருந்தால், நிலத்தின் சொந்தக்காரன் அவற்றை துரைத்தனத்தாருடையவும் பிறருடையவும் நிர்ப்பந்தமின்றி தானே எடுத்துக்கொள்ளலாம். அவற்றைக் கண்டுபிடித்துக் கிளப்பி எடுக்கும் முயற்சிக்கு வெகுவாய் மீறியிருக்கும் விலை உயர்ந்த உலோகங்கள் விஷயத்தில், அம்முயற்சிக்குத்தக்க கூலியையும் புதையலைக்கண்டு பிடித்தற்கு விசேஷமாகியஞானமும் பிரயத்தினமும் செலவழிக்கப்பட்டிருந்தால் அதற்குத்தக்க வெகுமதியையுங் கொடுத்து, பாக்கியைத்துரைத்தனத்தார் இராச்சியத்தின் பொது நலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியது; இதற்கு நிலத்தின் சொந்தக்காரனுக்கு யாதொரு சுதந்தரமுமில்லை. நிலத்தின்கீழ் புதைக்கப்பட்டிருக்கும் விலையிலாவது உபயோகத்திலாவது உயர்ந்த உலோகங்களைக்கண்டு பிடித்துக்கிளப்பிஎடுத்தற்குத்தகுந்தவர்களைநியமித்துவேண்டிய முயற்சி செய்துகொள்வதற்கும், தகுந்தபடி புதையல் கிடைத்தால் அதைத்தங்கள் கைவசப்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து கொள்வதற்கும், நிலத்தின் சொந்தக்காரனுடைய சுதந்தரங்களால் துரைத்தனத்தார் ஒருவிதத்திலும் தடுக்கப்படுவதில்லை.

கடலிலும் கப்பலோடத்தக்க ஆழமுள்ள ஆறுகளிலும் ஒருவருக்கும் பிரத்தியேகமாய்ச் சுதந்தரம் உண்டாவதில்லை. ஏனெனில், அவை சனங்களுக்குப் பொதுவாயிருத்தலால் உண்டாகும் பிரயோசனம் பிரத்தியேகமாய்வெவ்வேறு மனிதரின் சுதந்தரங்கட்கு உட்படுவதாலுண்டாவதைக்காட்டிலும் அதிகமென்பதற்குச்சிறிதேனும் சந்தேகமில்லை.

சில விடங்களில் நீரோட்டங்கள், கடல்கள் முதலியன ஒதுங்கிப்போவதாலும் மேடிட்டுப் போவதாலும் அயலிலுள்ள நிலத்தோடு நிலம் சேருகையில், இப்புதிய நிலம் முன்னுள்ளநிலத்தின் சொந்தக்காரனுடைய சுதந்தரத்திற்கு உட்படுவதில்லை; அது முழுவதும் துரைத்தனத்தாரையே சேர்ந்து பொதுநலத்திற்குபயோகப்படவேண்டியது. ஏனெனில், அயலிலுள்ள நிலத்திற்குரியவனுடைய யாதொரு முயற்சியுமில்லாமல் இயற்கையாகவே இப்புதிய நிலம் உண்டாயிற்றென்பது வியக்தமாயிருக்கின்றது.

சொத்துக்குச் சொந்தக்கார னொருவனும், அதை ஒருவாறு உபயோகித்துக்கொள்ளுவதற்குள்ள சுதந்தரத்தையுடையவன் மற்றொருவனுமாய் இருக்கலாமென்பது இதற்கு முன் கூறப்பட்டிருக்கும் சில உதாரணங்களால் விளங்கக்கூடியது. அசையும் பொருள்கள் விஷயத்தில், அவை தங்கள் சொந்தக்காரனல்லாத ஒருவனால் சிலகாலம் உபயோகிக்கப்பட்டு பின் தங்களுடைய சொந்தக்காரனிடம் மீண்டுவருவதினால் மாத்திரமே அவை இச்சங்கதிக்கு திருஷ்டாந்தமாகின்றன வென்று நாமறியலாம். நிலத்திலோ, சொந்தக்காரனுடைய அனுபவத்திலிருந்தும், அவன் அதில் தனக்குள்ள சுதந்தரத்தைச் செலுத்திக்கொண்டு வருகையிலும், பிறரும் அதன்வழியாய் நடத்தல், அதில் தங்களுடைய ஆடுமாடுகளை மேய்த்தல்முதலியசுதந்தரங்களைச் செலுத்திவரலாம். அனேகமாய் தற்காலத்தில் இப்படிப்பட்ட சுதந்தரங்கள் நிலத்தின் சொந்தக்காரனுடைய சம்மதத்தினாலும் சுயேச்சையினாலும் மாத்திரமே பிறருக்குக் கிடைக்கக்கூடியனவா யிருக்கின்றன. இப்படி சொந்தக்காரனுடைய சம்மதத்தாலாவது வேறுவிதத்தாலாவது நிலத்தில் பிறருக்கு சுதந்தரங்களுண்டாகையில், அவற்றை நிறைவேற்றிக் கொள்ளுவதில் சொந்தக்காரனுடைய சுதந்தரங்களை மீறுதும் அவனுக்கு நஷ்டம் விளைக்காமலும் நடந்து கொள்ளவேண்டும்.

நூதன யந்திரங்கள், நூதன கிரந்தங்களாகிய இவற்றை யுக்தியினால் கண்டுபிடித்துஉண்டு பண்ணுகிறவர்களுக்கு அவற்றைப்போன்ற வேறு பிரதிகளை பிறர் உண்டாக்கி லாபமடைவதைத்தடுத்து அவர்கள் மாத்திரம்அவற்றாலுண்டாகும் லாபத்தை அனுபவிக்கும் சுதந்தரத்தைத் துரைத்தனத்தார் ஏற்படுத்த வேண்டியதுநியாய மென்பதைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை. இச்சுதந்தரமும் சொத்திலுள்ள சுதந்தரங்களிலொன்றே. இச்சுதந்தர மில்லாவிட்டால் மனிதர் தங்களுடைய யுக்தி, சக்தி,

அனுபவம் முதலியவற்றைச் செலவழித்து நூதனமான ஞானத்தையும் கருவிகளையும் கண்டு பிடிப்பதில் ஊக்கத்தை யிழந்து விடுவார்கள்; இவ்வூக்கம் மாய்ந்துவிட்டால், உலகத்தில் நாகரீகம் அபிவிர்த்தி யாகாமல் மனிதரின் சுகானுபவத்திற்கு அபாயம் நேரிட்டு விடும். ஆகிலும் இச்சுதந்தரம் சிலகாலம் வரைக்கும்மாத்திரமே மேற்கூறப்பட்ட நூதனகற்பனை செய்பவர்களுக்கு உரியதென்று அறிய வேண்டியது; 30-40 வருஷங்களுக்குமேல் ஒருவரால் கற்பித்து நிர்மாணஞ் செய்த நூதனகருவிகளின் பிரதிகளை யாவரும் உண்டாக்கி விற்றுக்கொள்ளலா மென்று பலதேசங்களிலும் சட்டத்தினால் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் யாதெனில், உலகத்தில் மனிதரின் ஞானமும் நாகரீகமும் படிப்படியாய்விருத்தியடைந்து வருதலால், நாளடைவில் ஒருவரில்லாமற் போனாலும் மற்றொருவர் இத்தகைத்தான நூதன கருவியை யாவது கிரந்தத்தையாவது கண்டுபிடித்து விடுவார்களென்றே நாம் நிச்சயிக்க வேண்டியது.

மனிதர் தம்மில் உடன்படிக்கைகள் செய்துகொள்ளுவதினா லுண்டாகும் சொத்திலுள்ள சுதந்தரங்களைப்பற்றி 3-வது அத்தியாயத்தில் உடன்படிக்கைகளைப்பற்றி எழுதுங்கால் பிரஸ்தாபிப்போம்.

12. கடைசியாக, ஒருவனுக்குச்சொந்தமாய் விட்ட சொத்திலுள்ள சுதந்தரத்தைப்பற்றியாலோசிக்க வேண்டியிருக்கிறது. இவ் வத்தியாயம் 7-வது பிரிவில் பிரஸ்தாபித்திருக்கிறபடி, சொத்திலுள்ள சுதந்தரம் இரண்டு வகைப்பட்டது. அப்பிரிவில் இரண்டாவது வகுப்பிற் சொன்னபடி ஒருவருக்கும் சொந்தமாகாதசொத்திலுள்ள சுதந்தரத்தின் இலக்கணத்தைப்பற்றி இது வரையில் பிரஸ்தாபித்து வந்தோம், இனி சொந்தமாய் விட்ட சொத்திலுள்ள சுதந்தரத்தைப்பற்றி சுருக்கமாய்ச் சொல்லி முடிப்போம்.

இவ்வகுப்பிலடங்கிய சொத்தை சொந்தக்காரனால் தானஞ் செய்யப்பட்டாவது, விற்கப்பட்டாவது, மரணசாதனத்தால் வினியோகஞ் செய்யப்பட்டாவது மாத்திரமே பிறர் அடையலாம். சிலவேளைகளில் சொந்தக்காரன் தன் சொத்தைதனக்கு உபயோகமற்றதென்று களைந்தபின் அதைப்பிறர் தங்களுக்கு உபயோகமுள்ள தென்று நினைத்து சுவீகரித்துக்கொள்ளலாம். இப்படி பொருட்கள் கைவிட்டு கைமாறுவதும் சகஜமே; பின் அவற்றைக் களைந்தவர்க்கு ஒருவித பாத்தியமுமில்லை யென்பதும் உறுதியே.

மேலும் ஒரு சொத்தை ஒருவன் தனது முயற்சியால் அடைந்திரானாயினும், பிறராவது ஜனசமூகத்தாருடைய பிரதிநிதியாகிய துரைத்தனத்தாராவது தடுக்காது நெடுங்காலம் அனுபவித்து வந்தபின்,உண்மையான சொந்தக்காரன் யார் என்பதைக்கண்டுபிடித்தல் வெகு பிரயாசமானபடியாலும், ஒருவன் அச்சொத்து தனதென்று சட்டப்பிரகாரம் ஸ்தாபித்தற்குக் கொண்டுவரும் பிரமாணங்கள் பெரும்பான்மை துர்ப்பலமாகவே இருக்கவேண்டியதாலும்,வீணான சிரமத்தை எடுத்து பின் ஏமாறுதலா லுண்டாகும் துன்பத்தை அடையாமல் சனங்களை இரட்சித்தற்கு வேண்டி நெடுநாளாய் யாருடைய வசத்திலிருக்கிறதோ அவரே அச்சொத்திற்குச் சொந்தக்காராகும்படி சட்டத்தினால் கால நிர்ணயம் செய்யவேண்டியது. இதற்கு தொன்று தொட்டுள்ள உரிமை என்று பெயர். இவ்விதியானது ரோமாபுரி ராச்சியத்தில் துவாதச சாஸனங்கள் என்று வெகு பெயர்பெற்ற புராதனமாகிய விதிகளி லொன்று. ஆனால் அவ்விதியினால் விதிக்கப்பட்டிருந்த காலத்தின் அளவுமிகவும் சுருங்கியதே; அதாவது, சிலவற்றிற்கு இரண்டுவருஷமும் நியமிக்கப்பட்டிருந்தன. நூதன நாகரீகம் விருத்திபெற்றுவரும் மேற்றிசையிலுள்ள சங்கங்களில், தர்மசாஸ்திரத்திற் பயின்றவர் வெகுகாலம் வரைக்கும் காலஹரணத்தினால் கிடைப்பதாகிய சொத்திலுள்ள சுதந்தரத்தைப்பற்றி விதி செய்ய மனமில்லாமலே இருந்தார்கள். அங்கிலேயர் நாட்டில் 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1-வது ஜேர்ஸ் என்னும் அரசன் ஆளுகையில்தான் இவ்விஷயத்தில் முதலில்ஓரொழுங்கு ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முக்கியகாரணம் கிரிஸ்திய குருவரின் ஸமாஜத்தாருடைய மனதின்மையே. தம்ம

தத்தின் இரட்சிப்புக்காக ஐரோப்பாவிலுள்ள கிரிஸ்திய ஜனங்கள் சொத்துக்களை ஏராளமாய் தாங்கள் சேர்ந்த சமயபேதத்திற்குரிய குரவ ஸமாஜத்துக்கு விட்டுவந்ததில் அச்சமுகத்தார் இப்படிவிட்ட சொத்தில் தங்களுக்குள்ள பாத்தியதையை காலஹரணத்தால் எள்ளளவும், இழந்துவிட மனமில்லாதிருந்ததினால், மேற்கூறியபடி விதி ஏற்படுவதைத் தடுத்துக்கொண்டே வந்தார்கள்.

ஒருவன் தொடக்கத்தில் சொத்தை மோசத்தாலாவது பலாத்காரத் தாலாவது தன் கைவசப்படுத்தியிருந்தால் அவன் விஷயத்தில் இவ்விதி புலன்படாதவண்ணம் சட்டம் ஏற்படவேண்டு மென்று விரித்துக்கூற வேண்டியதில்லை. ஆகிலும் இவ்விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டிய விலக்கொன்றுளது. சில தேசங்களில் சிலகாலங்களில் துரைத்தனமுறையே தவறும்படியான கொடுங்கலகங்களுண்டாவதில், சொத்துக்கள் விஸ்தாரமாய் கைவிட்டு கைமாறும்படி சம்பவிக்கலாம். பிற்காலம் குழப்பம் நீங்கி சமாதானம் நிலைபெறுங்கால் நடுவிற் சம்பவித்தவிஸ்தாரமான மாறுபாடுகள் எவ்வளவு அநீதமாயிருந்தாலும் அவற்றை ஒருவாறு பொறுப்பதே நலமென்று துரைத்தனத்தைநிர்வகிப்பவருக்குத் தோற்றினால், அம்மாறுபாடுகளை நிலைபெறச் செய்வது பிழையல்ல. ஏனெனில், மறுபடியும் சொத்தில் விஸ்தாரமான மாறுபாடுகள் செய்யவேண்டியதாய் நேரிடுமாகையால், நாட்டில் ஜனங்களுக்கு அதிருப்திமிகுவதற்கும் மேன்மேலும் கலகங்கள் சம்பவிப்பதற்கும் இடமுண்டாகலாம்.

13. சிலவிதமான சொத்துக்கள் மனிதருக்குள் வழங்குவது அவருக்கு வெகு இழிவானதென்றும் நாகரீகத்தின் விருத்திக்குத்தகாததென்றும் உலகத்தில் நூதன நாகரீகத்தின் விருத்திக்குத் தகாததென்றும் உலகத்தில்நூதன நாகரீகப்பயிற்சியில் தேர்ந்திருக்கிற மேற்றிசையார் அவற்றையிகழ்ந்து வெறுத்துக் களைந்திருக்கிறார்கள். முதலாவது, மனிதனை அடிமையாக்கி அவனது சுதந்தரங்களை பலாத்காரத்தாலோ அல்லது மோசத்தாலோ இழக்கச்செய்து ஆடுமாடுகளைப்போல் விற்றல், வாங்கல், வளர்த்தல், உழைப்பித்தல் முதலானவை தற்காலத்தின் சீரின் மிகுதியாற் சிறப்புற்றோங்கும் சங்கங்களிற் சிறிதேனு மில்லை. 60-வருஷங்களுக்கு முன் அங்கிலேய துரைத்தனத்தார் வெகு பணம் செலவிட்டு, அடிமைகளைவிடுவதால் சொந்தக்காரர் களுக்குண்டாகும் நஷ்டத்திற்குத் தகுந்த ஈடுசெய்து, அங்கிலேயரின் தலைமைக்குட்பட்டிருக்கும் எல்லா நாடுகளிலிருந்தும்இம்மகாபாதகத்தைத் தொலைத்தார். இரண்டாவது, சங்கத்தின் பொது நலத்திற்காக ஏற்பட்டிருக்கும் பொறுப்புடன் கூடிய துரைத்தன உத்தியோகங்களைச் சாதாரண சொத்தைப்போல் விற்று அவற்றைப் பணங்கொடுத்து வாங்குகிறவர்கத அதிகாரத்தைச் செலுத்துங்கால் பெறக்கூடிய வரும்படியைக் கொண்டு லாபமடையும்படி செய்வதாகிய ஏற்பாடு இப்பொழுது அனேகமாய் இல்லை. ஏனெனில், இவ்வேற்பாட்டினால் வருந்தியவருக்கு நாளுக்கு நாள் துன்பம் மிகுவதே தவிர துரைத்தனத்தாருக்காவது பிறருக்காவது ஒரு விதத்திலும் நற்பயனுண்டாவதற்கிடமில்லை. உதாரணமாக, மகம்மதியர் இத்தேசத்தில் ஆண்டு வருகையில் வங்காளம், பாஹார் முதலிய தேசங்களில் ஜமீன்தார்கள் என்னும் ஒப்பந்தக்காரரை நியமித்து அவரால் இவ்வளவு தொகை செலுத்தப்படவேண்டும் என்பதை உடன்படிக்கை செய்து நிர்ணயித்து இராச்சியத்தை மாகாணங்களாய்ப் பிரித்து வரிகளை வசூல் செய்து வந்ததில், அச்சமீன்தார்கள் தங்களுடைய கொடுமையாலும் துராசையாலும் மனஞ்சென்றபடி பணத்தைப் பிடுங்கிவந்ததினால் சனங்கள் மிகுந்த நஷ்டத்தையும் துயரத்தையுமடைந்து வந்தார்கள். மூன்றாவது, சில சாமான்களை யுற்பத்தி செய்வதற்குள்ள சுதந்தரத்தை ஒருவருக்கே கொடுத்துவிடுவதால், அது அவருடைய சொத்தாய் விடுகிறதென்பது தெளிவாய் விளங்கக்கூடிய சங்கதி. முற்காலத்தில் அரசர்கள் தங்களுடையவும்தங்களுடைய அன்பர்களுடையவும் லாபத்தைக்கருதி இவ்வேற்பாட்டை தாராளமாய்க் கொண்டாடி வந்ததினால், அவர் சாமான்களின் விலைகளைத்தம்மனஞ் சென்றபடி உயர்த்திசனங்களை வருந்தச் செய்தார்கள்.

மேற்கூறிய மூன்றுவிதக் கொடுமைகள் இப்பொழுது அனேகமாய் நூதன நாகரீகத்தைக் கொண்டாடிவரும் தேசங்களிலிருந்து அகன்று போய்விட்டன. நமது தேசத்தில் தற்காலத்திய அங்கிலேய அரசாட்சியில் உப்புவரியைத் தவிர இவற்றைப்போன்ற கொடுமைகளில்லையென்று சொல்லவும் வேண்டுமோ? இவ்வுப்புவரியும் நமது துரைத்தனத்தில் நெடுநாள் வழங்கிவருமென்று சொல்லுவதற்கிடமில்லை. அது நீடித்து வாழ்ந்துவந்தால் நம்மவரின் அறிவினமும் முயற்சியின்மையுமே அதற்குக்காரணங்களாகுமேயன்றி, செங்கோற்செலுத்த விரதம் பூண்டிருக்கும் நமது துரைத்தனத்தார் மேல் பிழையைச் சுமத்தமுடியாது.

கி. சுந்தரராமன், எம். ஏ.

அருணாசலக் கவிராயர்.

அருணாசலக் கவிராயர் என்னும் நாமதேயத்தைப்பெற்ற நம் தமிழ்ப் பாவலர், சோழவளநாட்டின்கண் உள்ள தரங்கம்பாடி யென்ற கடற்கரைப் பட்டினத்திற்கு அருகே யிருக்கின்ற தில்லையாடியென்னு மூரிலே சாலிவாகன சகாப்தம் ௧௬௩௪-ம் ஆண்டிற்குச் சரியான கி. பி. 1712-ம் வருடம் பிறந்தவர். இவர் நல்லதம்பிப் பிள்ளை யென்ற தந்தைக்கும் வள்ளியம்மாள் என்ற தாய்க்கும் புத்திரபாக்கியமாக ஜனித்தவர். இவர்க்கு மூத்த சகோதரர் மூவர் இருந்தனராமாதலாலும், வேறு உடன்பிறந்தார்களில்லையாமாதலாலும் இவர் தம் தாய்தந்தையர்க்குக் கடைப்பிள்ளை யாயினராதலின் அதிக அன்பு பாராட்டி வளர்க்கபட்டுவந்தார். இவர் தக்க பருவத்திலேயே வித்தியாரம்பஞ் செய்விக்கப் பெற்றுக் கல்வி கற்றுத் தமக்கு பன்னிரு ஆண்டு போதாலும் தம் இருமுதுகுரவரையும் இழக்குந் துர்ப்பாக்கியம் சம்பவித்தது. சம்பவித்துமென்? நம் கவிராயர்க்கு அச்சிறுவயதிலேயே செந்தமிழணங்கின்மாட்டுள்ள அன்பானது வாரியென ஆரவாரித்து நம் புலவரை வளைந்துகொண்டது. உடனே நம் புலவர் தமது நீர்நாடு நீங்கித் தம்மை நீங்காது பின்றொடரும் அன்புவெள்ளங்கடப்பதற்குப் [1]புகலான [2]புணை தேடப் புறப்படுவான் தொடங்கித் தருமபுர ஆதீனத்திற்குச் சென்று ஆண்டு வசித்த தம்பிரான்மாரிடம் ஓரற்புத [3]நாவாய் பெற்றுத் தமது அற்புக்கடலைக் கடக்கப் புகுந்தார். இவரது "குசைநுனியதனினுங் கூரியமதி"யினைக்கண்ட தம்பிரான்மார் இவர்பான் மிகப் பிரீதியுற்றுக் கைர்வாண திராவிடாந்திர பாஷைகளி லிவரை வல்லுநராக்கினதோடே நின்றுவிடாமல் "சைவசித்தாந்தத் தெய்வ நன்னூலை"யும், அவற்றின்கணுள்ள இரகசியப்பொருள்களையும், ஐயந்திரிபற வோதுவித்தார்கள். இவர் விசேஷமாகத் தமிழிலக்கணங் கற்றதெல்லாம் தருமபுரமடத்தைச் சேர்ந்த அம்பலவாணக்கவிராயரிடத்தென்று சொல்லுப.

2. இவர் வேளாளர்குலத்தைச் சேர்ந்தவர். இவர் சித்தாந்தசைவர் மரபினராயினும் வைணவத்திலு மதிகப் பிரீதியுள்ளவர். மேலு மிவர்தாம் தருமபுர ஆதீனத்திற் கல்வி கற்றபின் அம்மடத் தம்பிரான்மார் இவரைத் துறவியாக்குவான் முயன்றும், நம்புலவர் அவர்கள் கருத்தினுக்கு இசையாராய்த் திரும்பிவிட்டனர். பிறகு இவர் தமக்கு முப்பதாவதுவயதிலே விவாகஞ் செய்துகொண்டு இல்லறம் நன்கு நடத்தற்பொருட்டுக் காசுக்கடை யொன்று ஸ்தாபித்துக்கொண்டும் இராமாயணப் பிரசங்கஞ் செய்துகொண்டும் வந்தனர்.

3. இனி யிதுகிடக்க நங் கவிராயர் தமக்கு 42-வது வயதில் புதுச்சேரிக்கு வியாபார சம்பந்தமாய்ப் புறப்பட்டு ஓரிரவு சீர்காழிமடத்திற்றங்கினதாகவும், ஆங்கு, இவருடைய சகபாடியாகிய சிதம்பரபிள்ளை யென்பார் தாம் பாடுவான் தொடங்கிப் பின் முடிவுபெறாதிருந்த பள்ளென்னும் ஓர்விதப் பிரபந்தத்தை முடிக்கும்படி வேண்டிக்கொண்டதாகவும், அவருடைய வேண்டுகோட்கிணங்கி நம்புலவர் அதனைப் பூர்த்திசெய்து ஒரு வேலையாளிடங் கொடுத்துவிட்டுத் தமது நண்பரிடஞ் சொல்லாது புதுச்சேரிக்குப் போய்விட்டதாகவும், இது கேள்வியுற்ற சிதம்பரம்பிள்ளை யவர்கள், பள்ளினைப்பார்த்து மகிழ்ந்து நம்புலவரைத் தமக்

[1] புகல்=அடைக்கலம். [2] புணை=தெப்பம். [3] நாவாய்=கப்பல்

குச் சமீபத்திலேயே யிருத்திக்கொள்ளும் நோக்கத்தினராய்ப்,புதுச்சேரிக்குப் போன நண்பர் வருமுன் ஒரு வீடுகட்டி,நமது கவிராயருடைய சமுசாரத்தினை யதன்கண் இருக்கும்படி செய்ததாகவும், புதுச்சேரியினின்றும் போதந்த புலவரை யிட்டுக்கொண்டு அப்புது வீட்டிற்குச் சென்றதாகவும், ஆண்டு நம்புலவர் தம்மனைவி முதலாயினோரைக் கண்ணுற்றுக் களிகூர்ந்து, அவ்விடத்திலேயே தம் பின்னாள் முழுவதுந் தங்கிவிட்டதாகவுஞ் சொல்லுபவாதலின் இவர் சீர்காழி அருணசலக்கவிராயர் என்று அழைக்கப் படுகிறாரென்ப.

4. இனி நம்புலவர் சீர்காழியிலிருந்தகாலத்து அநேகப் பிரபந்தங்கள் செய்தனர். மேலே சொல்லிய பள்ளினையொழித்து இவர் செய்த நூல் ஐந்தாகும். அவை சீர்காழிப் புராணம், சீர்காழிக் கோவை, அநுமார்பிள்ளைத் தமிழ், இராமநாடகம், அசோமுகிநாடகம் என்று பெயர் பெறும். இவ்வைந்து பிரபந்தங்களுக்குள்ளே யிவருடைய இராமநாடகம் ஒன்றே யதிகப் பிராதானியத்தை யடைந்து பிரகாசிக்கின்றது.

5. இனி யிவருடைய பிரபந்தங்களைப்பற்றிப் பேசப் புகுவாம். முதலாவது இவருடைய சீர்காழிப் புராணமானது ஏறக்குறைய 1500 கவிகளை யுடையது. இப்புராணத்தில் இவர், சீர்காழிக்குத் துவாதசநாமம் ஏற்பட்டதற்குக் காரணபூதமான கதைகளையும், சிவபிரானுலத்தலத்துத் திருவிளையாட் டயர்ந்ததாகக் கூறப்படும் சில இலீலைகளையும் பற்றி நன்கு விவரித்துக் கூறியிருக்கின்றனர். இப்புராணம் வெகு சுகமாக அமையாதபோதினும், அதிகமாகத் தாழ்ந்த தரத்திற் சேர்ந்ததன்று. சிலவிடங்களிற் செவ்வனேயொழுகாது கடினநடையி லமைக்கப்பட் டிருக்கிறது. இவர் இடை யிடையிற் கூறுங் கற்பனைகளெல்லாம் விசேஷமாகச் சாமாகியமானவை யென்பது பெரும்பாலார் கொள்கை.

6. இரண்டாவதாகிய சீர்காழிக்கோவை யெம் கைக்ககப்படவில்லை. சிலர் சீர்காழிக்குப் புராணமொன்றைத் தவிர்த்து இவர் வேறொன்றுஞ் செய்யவில்லை யென்று கூறுப. இனி யிவருடைய சுதந்தரயூகத்தையுங் கற்பனா சாமர்த்தியத்தையும் பற்றி யோசிக்குமிடத்துக், கோவைப் பிரபந்தஞ் செய்ய இவர் வல்லுநரல்லரென்று போதருமென்று கூறுவாருமுளர்.

7. அநுமார்பிள்ளைத் தமிழ் என்பது வழக்கம் போலப் பத்துப் பருவங்களுடையதாய்க் காணப்படுகின்றது. இது சற்று நல்லநடையில் எழுதப்பட்டிருக்கின்றது. சிற்சில கவிகள் மாத்திரமே நல்லநடை பெறவில்லை. சில கற்பனைகள் படிப்போர்க் காநந்தந் தரத்தக்கன.

8. மேற்கூறிப் போந்த பிரபந்தங்களி லெல்லாஞ் சிறந்ததாயும், விசேஷமாகப் படிக்கபற்வதாயும் இருக்கின்ற இராமநாடகத்தைப் பற்றியேகதேசம் பேசப் புகுவாம். இது கம்பராமாயணக் கதையை நாடகமென நாமஞ் சூட்டி. விருத்தங்களாவும், கீர்த்தனங்களாவும், சீர்காழிக்குச் சமீபத்திலேயுள்ள சட்டைநாதபுரத்தினின்றும் போந்து சங்கீத வித்துவான்களாய்க் காணப்பட்ட வேங்கடராமையர், கோதண்டராமையர் என்னு மிருவருடைய உதவியைக் கொண்டு இராகதாளங்களுக்கு இசைய நம்புலவராலியற்றப்பட்டது. இதை யிவர் தமக்கு அறுபதாவது வயதிற்றான் பாடினாரென்ப. இஃது தற்காலத்திலே மகா-ள-ள-ஸ்ரீ பே. சுந்தரம் பிள்ளை யவர்கள் எம். ஏ. யால் எழுதப்பட்ட நாடகம்போலாது "தொந்திக்கணபதி தோன்றினாரே" என்று குதிக்கும் கூத்தமார்க்கத்திற் பட்டதாயினும் பெரும்பான்மையோரால் படிக்கற்படுதல் யாவர்க்குந் தெரிந்தவிஷயம். இப்புத்தகத்தின்கட்படு மிவருடைய சொல் வன்மையும், நயமுங் "கற்போர்நெஞ்சங் காமுறப் படுத்துங்" தகையன வென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குதலறிக. இது சென்னைப் பட்டினம் மணலி முத்துக்கிருஷ்ண முதலியார் சமுகத்தி லரங்கேற்றப் பட்டதென்ப. இதற்கு ஆதாரமாகச்,

"சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்குவல்லி
தில்லைநாயகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணையாலே
சத்யவா சகனென்று பூமண்டலாதிபர்க
டாமெங்கணுந் துதிக்குஞ்
சகலபா ஷாநிபுண மணலிமுத்துக்ருஷ்ண
சதுரநீ வாழிகண்டாய்
நத்துமலர் குவளைநாண்மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழைமேகநீ
களிநான் பதிநீ பிள்ளைநா னன்னைநீ
நான்கவிஞன் வழுதிநீ காண்
சுத்தமுள ராமாய ணந்தனைக் கொண்டுனது
சமுகமது பெறவருகிறேன் [ட்கவே
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவேன் கே
துணையாக வேண்டு நீயே"

என்ற சீட்டுக்கவியினையும், அரங்கேற்றத்திற்குப்பின் நம்புலவர்பாடிய

"கனந்தந்தான் கனகாபிஷேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத்தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலைதந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசைதந்தா
னினந்தந்தா னிராமகதை யெவர்க்குந்தந்தா
னெனைராமா யணக்கவிரு னெனப்பேர்தந்தா
னனந்தந்தான் மணலிமுத்துக் ருஷ்ணபூப
னகந்தந்தா னிருமையிலுஞ் சுகந்தந்தானே."

என்ற கவியினையுங்கொள்க. இதற்குமுன் இது ஒரு முறை ஸ்ரீ ரங்கநாதர் சந்நிதியில் வாசித்தரங்கேற்றப்பட்டதென்ப.

9. இனி அசோமுகிநாடகமானது விசேஷமாகப் படிக்கற்படாமையானும், இராமநாடகம் போல் அதன்கண் அவ்வளவு சிறப்பின்மையானும் பிறவாற்றானும் விடுத்து மேற்சொல்வாம்.

10. இத்தகைய நங்கவிராயர் தம்மிறுதிக் காலத்துச் சைவ சந்நியாசம்பூண்டு சின்னாள் இரிந்தனர். இவர் கி. பி. 1779-ம் ஆண்டு தமக்கு 67-வது வயதிலே சீர்காழித் தலத்திலே சிவலோகப்பிராப்தியாயினர். இவர்க்கு மூன்று புத்திரர்களிருந்தனராம். இவர் சாமாகிய ஜனர்களான் மிகுதியுங் கொண்டாடற் படுகின்றார்.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி, பி. ஏ.

ஹிந்துக்களின் க்ஷயகதி.

6-வது புத்திக்ஷயம்.

ஹிந்துக்களாகிய நாம் புத்திக்ஷயம் அடைந்திருக்கிறோமென்பதில் சமுசயமில்லை. ஞானம் என்னும் பர்வதத்தின் கொடுமுடியில் ஒருகாலத்தில் வீற்றிருந்த நாம் இப்போது அதின் அடியில் கண்கெட்ட குரு[illegible]ர்போல் [illegible]வித் தத்தளிக்கின்றோம். நாம் சகலவித மேம்பாடடைந்து புத்தியபிவிருத்தி பெற்றிருந்த காலத்தில் கேவலம் மிருகப் பிராயமாயிருந்த ஜனங்கள் இப்போது நம்மிலும் எத்தனையோ மடங்கு அபிவிருத்தி யடைந்து மேலான ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். க்ஷயகதியிலுள்ள நம்முடைய தற்கால புத்தி சக்தியைக் கண்டு இதுபோற்றான் நாம் எப்போது மிருந்தோமென்றும், நமக்கு அதிகபுத்தியுள்ளதாய் ஒருகாலத்தில் வதந்தியுள்ளது நிராதாரமாயுள்ளதென்றும் அன்னியதேசத்தவர்களிற் சிலர் கண்டித்தெழுதியிருக்கிறார்கள். இவ்வகைக் கண்டனைக்கு வரம்பில்லையென்றாலும் நம்முடைய க்ஷயகதியை நாட்டும்மட்டில் நாம் அதை ஆக்ஷேபிப்பதற்கு இடங்காணோம்.

நாம் புத்திக்ஷய மடைவதற்குக் காரணம் அநேகம். நமது பெரியோர்கள் எழுதிவைத்த சாஸ்திரச் சித்தாந்தங்களை ஆக்ஷேபிக்கக்கூடாதென்றும் அவைகளை நிராக்ஷேபமான சித்தாந்தங்களாய்க் கைப்பற்ற வேண்டுமென்றும் நமக்குள் ஒரு அபிப்பிராயம் ஜனித்திருக்கிறது. அந்த அபிப்பிராயத்தால் சிந்தா சக்தி குறைந்து புத்தி க்ஷயப்படுவதற்கும் காரணம் உண்டாயிற்று. வேதம், வேதாகமம், ஸ்மிருதி,புராணம், இதிஹாஸம் என்ற இவைகள் நமக்கு பிரமாணமாயுள்ளன தான். இவைகளில் கூறியிருக்கும் சாஸ்திர சித்தாந்தங்களைத் தர்க்கித்துப் பரிசோதிப்பதால் அவைகளின் யதார்த்த ஸ்திதிமாறிவிடுமா? விடாது. தங்கத்தை எத்தனைவிதம் புடம்போட்டாலும் அதின் நிறமாவது, குணமாவதுமாறுமா? மாறாது; அதுபோல, மேற்கண்ட பிரமாண கிரந்தங்களி லடங்கி யிருக்கும் சித்தாந்தங்களை எவ்வகைப் பரிசோதனை செய்தாலும் அவைகள் உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் அவைகட்கு ஒரு அபாயமும் உண்டாகாது. வியாகரணம், தர்க்கம், கணிதம், சோதிடம், வைத்தியம், பல வகை கலைகள் இவைகளிலடங்கிய சித்தாந்தங்களும் இவ்வாறே பரிசோதனைக்குட்படுவதில் யாதொரு கஷ்டமும் சம்பவியாது. பலமான பரிசோதனைக்கு நடுங்கும் சாஸ்திரங்கள் சாஸ்திரங்களன்று. இவ்வகை சாஸ்திரங்கள் நிலைப்படாவாம்; வருத்தமுயடையா[illegible]

ழுதி யிருக்கும் கிரந்தங்களில் காணப்படுவது, முடிபான கோட்பாடென்று வந்திருப்பதால், மேற்சிந்தைக்கு இடமில்லாமல் புத்திமழுங்கி க்ஷயமடைந்தது. ஓட்டமில்லாத ஜலம் பாசி பற்றி நாறுவதுபோல சிந்தையற்ற சந்ததிகளும் புத்திக்ஷயமடைந்து நாறிப்போக வேண்டும். எறியகாலமாய் நாம் சிந்தையற்று நம்முடைய புத்திக்கும் போக்கில்லாமல் தேங்கிநின்று விட்டபடியால் நமக்கு புத்திக்ஷயம் உண்டாயிற்று. பிரபஞ்சத்தில் சலனமில்லாத நிலை அசாத்தியம். ஒன்று மேற்கதி யடையவேண்டும். இல்லாவிட்டால் அதோகதி யடைய வேண்டும். இரண்டிற்கும் மத்தியில் ஓர்வித நிலையும் சாச்வத மன்று. நாம் மேனோக்கிய சலன மில்லாமல் உள்ளதைக்கொண்டு பரிமளித்து நிலைபெறலாமென்று சோம்பி யிருந்தபடியால் நம்மை க்ஷயகதி பிடித்துக்கொண்டது.

நமது தேசத்தில் வெகுகாலமாய் புஸ்தகம் அச்சடிக்கும் தந்திரம் தெரியாமல் இருந்தது. ஆகையால் வாய்மூலம் சாஸ்திரங்கள் கிரகிக்கவும் கைகொண்டு எழுதி வைக்கவும் நிர்ப்பந்தமுண்டாயிற்று. பெரிய சாஸ்திரங்கள் கைகொண்டெழுதி வியாபகம் பெறுவது வெகு கடினம். ஏடுகளில் எழுதவேண்டிய சிரமத்தை உத்தேசித்து அநேகர் எழுதிப் படிக்க சோம்புவார்கள். இவ்வகை சிரமத்தை உத்தேசித்து நூதனமாய் கிரந்த மெழுதப்பட்டவர்களும் விஸ்தாரமாய் எழுத முயலார்கள். முடிபான சித்தாந்தங்களை மாத்திரம் எழுதுவார்களே யன்றி அவைகளைப்பற்றிய சகல ஆக்ஷேப சமாதானங்களைச் சொல்வதற்கும் முடிபான சித்தாந்தங்களின் ஆதாரங்களான காரணங்களை வரன் முறையாய் எடுத்துக்காட்டவும் இடமுண்டாகாது. அவைகளை வாசிப்பவர்கட்கு பக்திவழிகாட்டி யாவதே யன்றி புத்தியால் தெளிவுண்டாகி அவைகளைக் கைப்பற்றும் சுபாவபிரமாணம் உண்டாகாது. நமது தேசத்தில் சூத்திரங்கள் உண்டா யிருப்பது போல் எந்த இராச்சியத்திலும் உண்டாயிருப்பதில்லை. எவ்வளவு கடினமான கணிதக்கிரியைகளும் 'நீர்ணஸ்ரேய:'முதலிய கணிதவாக்கியங்களில் அடக்கி [illegible] சூத்திர விவகாரம் அங்க கணிதம் பீஜகணிதம் திரிகோணமிதி முதலிய கணித சாஸ்திரங்களிற் கொஞ்சங்கூட ஞானமில்லாமல் கோளங்களின் சுபாவம் சற்றுந்தெரியாம லிருந்தாலும் வினாடி விடாமல் கணிக்க வேண்டிய வாக்கிய முறைகளை நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தி விட்டபடியால் க்ஷேத்திர விவகார முதலிய கணித சாஸ்திரங்களின் மேல் நாட்ட மின்றி அவைகள் மலினதிசைக்கு வந்து விட்டன. அவ்வகை சாஸ்திரங்களை மூலகாரணத்தோடு கற்றறியாத நாம் அவைகளை எவ்வாறு ஞாபகத்தில் வசிக்கவும் விருத்திப் படுத்தவும் கூடும்? பாஸ்கராச்சாரியார் சூரியசித்தாந்தமும் கோளாத்தியாயமும் லீலாவதியும் எழுதி வைக்காவிட்டால் நமக்குள் க்ஷேத்திரவிவகாரம், அங்க கணிதம், பீஜகணிதம், திரிகோணமிதி முதலிய சாஸ்திரங்கள் இருந்தனவோ என்று சந்தேகிக்கக்கூட இடம்வந்திருக்கும். வாக்கிய கணிதத்தின்மேல் மாத்திரம் நாட்டம்நின்று விட்டபடியால் அல்லவா வராஹ மிஹிரர் எழுதிவைத்த பஞ்ச சித்தாந்திகம் இப்பொழுது நஷ்டமாய்ப் போய்விட்டது? வராஹ மிஹிரர், பாஸ்கராச்சாரியார் இவர்கள் எந்த மட்டில் நமது கணித சாஸ்திரங்களை விட்டிருக்கிறார்களோ அந்த மட்டில் தான் இப்பொழுது இருக்கின்றன. அவைகளின் ஸ்வரூபஞானம் நமக்கில்லாதபடியால், அம்மட்டிற்குத் தாழ்ந்தே க்ஷயப்பட்டிருக்கிறோ மென்று சொல்லவேண்டும்.

காரண காரிய சம்பந்தம் நன்றாய் வெளியிடாத சாஸ்திரங்கள் நிலைநிற்காவாம். இதை யுத்தேசித்துத் தான் எதார்த்தங் கண்டு பிடிக்கும் வழிகள் முக்கியமேயன்றி அவ்வழிகள் மூலம் கண்டு பிடித்த எதார்த்தங்கள் முக்கியமில்லையென்று சில ஐரோப்பிய வேதாந்திகள் கூறியிருக்கின்றார்கள். 'நீர்ணஸ்ரேய:'முதலிய கணிதவாக்கியங்கள் நமது முன்னோர்களின்பெருமையைக் காண்பிக்கக் கூடியனவா யிருந்தாலும் அவைகளின் மூலம் நமக்குள் கணிதசாஸ்திரம் மலினமடைந்து அவைகளின் வழியூர்த்தியாய் மறந்துபோகும்படிநேரிட்டிருப்பதால் அக்காரிய நிமித்தம் நமது முன்னோர்களைக் குற்றப்படுத்திப் பேசக்கூட மனம் வருகிறது.

சாஸ்திரங்களின் ஸ்வரூபஞானமும் அவைகளிலடங்கிய விஷயங்களின் காரணகாரிய சம்பந்தமும் ரகசிய வழிகளும் அறிந்த சிலர் அவைகளைப் பிறர்க்குச்சொல்லிக்கொடுத்தால் தமக்கும் தாம் அறிந்திருக்கும் சாஸ்திரங்கட்கும் மகத்துவம் குறைந்துவிடுமென்று அவிவேகமாய் நினைத்து யாவர்க்கும் சொல்லிக்கொடுக்காமல் தம்மோடு தாம் கிரஹித்த சாஸ்திர ரகஸியங்களும் மாண்டுபோகும்படி செய்திருக்கிறார்கள். இவ்வாறு பாரம்பரியமாய் வந்த ரஹஸியங்களெல்லாம் பிறர்க்குச் சொல்லிக்கொடுக்க மனமின்றியும் கிரகிக்கத்தக்க பாத்திரம் இன்றியும் மலினதிசைக்கு வந்து விட்டன. முன்னோர்கள் ஆராய்ச்சி செய்துவந்த பான்மையாக நாம் இப்போது ஆராய்ச்சி செய்கிறதுமில்லை. அல்லாமலும் முற்காலங்களில் செய்திருந்த ஆராய்ச்சிகளின்பலனைக்கிரகித்து மேல் ஆராய்ச்சி செய்வது எளிதே யல்லாமல் அவைகளை உபேக்ஷித்து எல்லாவற்றையும் ஒரு சந்ததியில் கண்டு பிடிப்பது அசாத்தியம். நமக்கு ஆதாரமாய் உண்டாயிருந்த பூர்வசாஸ்திரரகஸியங்களும் அவைகளைக்கிரகிக்க வேண்டிய சாமர்த்தியமும் க்ஷமையும், அவைகளை விருத்தியாக்கவேண்டிய மேனோக்கமும் சிரமமும், அவைகளின் மூலம் கண்டுபிடித்த நூதனசங்கதிகளை எழுதிவைத்துஅவைகளைப்பிறர்க்குப் போதிப்பிக்கவேண்டிய உத்ஸாகமும் மனமும் இல்லாமல் ஆராய்ச்சி செய்யவேண்டிய வாசனையும் இழந்து கேவலம் பசுக்கள் போல் காலந்தள்ளும்படியான வாசனை நமக்கு வந்தபடியால் நமக்கு புத்திக்ஷயம் உண்டாக காரணம் பலித்தது.

அச்சில்லாமல் புஸ்தகம் பெருகுவது கடினம் என்று முன்னமே சொன்னோம். புஸ்தகம் எழுதும் சிரமத்தை உத்தேசித்து இரவலாக புஸ்தகம் வாங்கிக்கொண்டு போனவர்கட்கு அதைத் திரும்பிக்கொடுக்க மனமில்லாமல் பலவகைச் சாக்குப்போக்குச் சொல்லித் தக்க வைக்கவேண்டிய அசத்தியபுத்தி அதனாலேற்பட்டது. இதை உத்தேசித்துத் தான் நீதி ஸ்லோகங்களில் பின்வரும் ஸ்லோகம் எழுதப்பட்டிருக்கிறது.

புஸ்தகம் வனிதாவித்தம் பரஹஸ்தம் கதம் கதம்
அதவா ஹஸ்தலப்தஞ்சஜீர்ணம் நஷ்டஞ்ச கண்டஸ:

அதாவது புஸ்தகமும் ஸ்திரீயும் திரவியமும் பிறர்கையில் அகப்பட்டால் போனது தான் என்றும் ஒருவேளை திரும்பிக் கிடைத்தாலும் அது ஜீரணமாயும் நஷ்டமாயும் மேல் உபயோகத்திற்கு உதவாதபடிக்கும் திரும்பிவருமென்றும் சொலலப்பட் டிருக்கிறது. இதை உத்தேசித்து அநேகர் தங்கள் கைவசமுள்ள புஸ்தகங்களைப் பிறர்க்கு கொடுக்க மனமில்லாமல் தாங்களும் உபயோகிக்காமல் எப்போவாவது தங்கள் குடும்பத்தில் அவைகளை உபயோகிக்கக்கூடிய புத்திமான் ஜனிக்கமாட்டானா என்ற அபிமானத்தின் மேல் மாத்திரம் ஏடுகளை அசைகளிலும் மாளைகளிலும் கட்டியிட்டு ஏடுகள் ஒன்றோடொன்று பற்றிப் பிடித்து எழுத்துகள் திரபித்துப் போகும்படிக்கும் அவ்வாறு புஸ்தகங்கள் நஷ்டப்பட்டுப் போகும்படிக்கும் செய்திருக்கிறார்கள். மழை காலங்களில் சாஸ்திர ஏட்டுகளின் மகத்துவம் தெரியாத சிலஸ்திரீகள் தற்கால ஆவசியகத்தை மாத்திரம் பாராட்டிஏடுகளைத் தீமூட்டுவதற்குஉபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அநேகசாஸ்திரங்களைச்சிதன் தின்று விட்டன. சாஸ்திராப்பியாசமும் ஆராய்ச்சியும் வாசனையும் அபிமானமும் இல்லாவிட்டால் புத்திக்ஷயப் படுமென்பதற்குச் சந்தேக முண்டா?

சுபாவோக்தி அலங்காரமாய் நம்முடைய கவிகள் கிரந்தங்கள் எழுதிவந்த காலங்களில் சாஸ்திர ஆராய்ச்சி குறையவில்லை. அதிசயோக்தி அலங்காரம் பெரிதாக எண்ணி கவிகள் எழுதத் தொடங்கினது முதல் வாஸ்தவ நிலையிலுள்ள விஷயங்களில் கவனமற்று கேவலம் அதிசயமாய்ச் சொல்ல வேண்டுமென்ற ஆக்கிரகத்தின்மேல் கற்பனா சக்தியை வெகு தூரம் விட்டுவிட்டு எவ்வளவு வாஸ்தவக் குறைவும் பிழைநோக்கும் இருந்தாலும் அதில் நின்றும் பின் வாங்காமல் மொட்டைத் தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சிட்ட வண்ணம் கேவலம் சப்த சம்பந்தத்தால் முடிச்சிட்டு வந்தபடியால் ஆராய்ச்சி குறைந்து அபத்தங்களெல்லாம் சுபத்தங்களாக நினைக்கும் அவிவேகமும் அதின் மூலம் புத்திக்ஷயமும் உண்டாகி விட்டது. அதிசயோக்தி அலங்காரங்களாலும்

சிங்கார ஸ்லோகங்களாலும் மனம் கவரப்பட்ட சந்ததிகள் கூர்நோக்கும் ஸூக்ஷ்ம கிராஹியமும் தெளிவான சிந்தையும் தீக்ஷணமான புத்தியும் அருமையான க்ஷமையும் வரும்படி யில்லாத உழைப்பும் வேண்டிய பிரகிருதி சாஸ்திரமுதலிய சாஸ்திரங்களில் கவனமற்று சுபுத்தி நீங்கி தப்பிதபுத்தி பிடிபட்டு அதின்மூலம் சகல புத்தியும் க்ஷயிக்கும்படி காரண முண்டாயிற்று. வாக்குப் பிரமாணமே பிரமாணமாகக் கைக்கொண்ட நாம் வெளியிற் றேடியலைந்து கண்கொண்டு பார்த்தும் காதுகொண்டு கேட்டும் மற்ற இந்திரியங்கள் கொண்டு அறியவும் கூடியவிஷயங்களையும் அவைகள் மூலம் ஏற்படக்கூடிய ஊகங்களையும் விட்டுவிட்டு சப்தரூபமாககிரகிக்கக்கூடிய வியாகரணம்,தர்க்கம், வேதாந்தம், மீமாம்சம் முதலிய சாஸ்திரங்களை மாத்திரம் புஸ்தகங்களில சொல்லி யிருக்கும் மாதிரியில் குருட்டுக்கோழி தவிடு விழுங்கும் பான்மை யாகவும், சிறுபிள்ளைகள் சிலுசிலுப்பை குலுக்கும் பான்மையாகவும் படித்தும் வழங்கியும் வந்தபடியால், படித்தவைகள், தன்புத்தியால் ஜீரணப்படுத்தி தன்னோடு லய மடையாமல் ஒரு மூலையில் குப்பை குவிந்திருக்கும் தன்மையாய் ஒருங்கு சேர்ந்திருந்த தன்றி புத்தி விசாலத்திற்கோ அபிவிருத்திக்கோ இடமில்லாமல் க்ஷயகதி உண்டாயிற்று.

ஆரியர்களாகிய நாம் இந்ததேசத்தில் பரவிப் பெருகிவந்த காலங்களில் நம்முடைய மத சிரேஷ்டத்தையும் சாஸ்திர சிரேஷ்டத்தையும் இந்நாட்டு வாசிகளாகிய பூர்வகுடிகட்கு போதிப்பிக்கும் பொருட்டும் அந்நியமத கண்டனையின் பொருட்டும் சிந்தா சக்தியும் ஆராய்ச்சியும் விருத்தியாகி வந்தது. பிற்பாடு நம்முடைய மத சித்தாந்தங்களும், சாஸ்திர சித்தாந்தங்களும் பெரிதென்றும் பிரமாணமென்றும் பொது சம்மதமும் மதிப்பும் வந்தபிற்பாடு சிந்தா சக்தியும் ஆராய்ச்சியும் குன்றி உள்ளதே போதுமென அடக்கம்வந்து அப்பியாசக் குறையால் புத்திக்கு பலக்குறைவும் க்ஷயகதியும் ஏற்பட்டன. இடைக்காலங்களில் நம்முடைய சுதந்தரம் இருக்கும்போது நூதனமதங்கள் உண்டானதால் அவைகளைக் கண்டிக்க வேண்டிய பிரயத்தனத்தோடு கொஞ்சம் புத்தி அபிவிருத்தியுண்டாயிற்று. பௌத்தமத மில்லாவிட்டால் ஸ்ரீமத் சங்கராச்சாரியாருடைய அவதாரம் வெளிக்கு வந்திருக்கமாட்டாது. பிற்பாடு மகமதியருடைய படையெடுப்புத் தொடங்கின பின்பு நம்முடைய ஜனங்கட்கு கொஞ்சம் கஷ்டதிசை நேரிட்டது. யுக்தியினால் வெல்லும் வழிவிட்டு சக்தியினால் வெல்லும் வழியை மகமதியர் அனுசரித்து வந்ததாலும், நமது திரவியங்களையெல்லாம் கொள்ளையிட்டு வந்ததாலும் பக்குவம் செய்து வைத்திருந்த ஆகாரமுதல் நமக்கு சித்திக்குமென்ற நம்பிக்கையில்லாததினாலும் காலக்ஷேப சங்கடமும் புத்திக்குக் கவலையும் உண்டாயிற்று. அக்காலங்களில் தபோசக்தியாலும் ஈசுவர கடாக்ஷத்தாலும் ஆங்காங்கு அற்புதங்கள் காண்பித்து நம்முடைய முன்னோர்கள் நம்முடைய மதத்தைக்காப்பாற்றிக் கொண்டார்கள். அக்காலங்களில் சாஸ்திர அபிவிருத்திக் கிடமில்லாமல் ஸ்வயரக்ஷை மாத்திரம் நாடப்பட்டு தத்தளித்துவந்தார்கள். இதனாலும் புத்திக்ஷய மடைந்தது. தற்காலத்தில் மகமதியருடைய அக்கிரமத்திற் கிடமில்லாமல் கிருஸ்துவமத துரைத்தனத்தார் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கட்கு யுக்திவாதமும் அநுபோகமும் சத்திய அபிமானமும் பிரமாணம். வெகுஆராய்ச்சியுள்ளவர்கள். இவர்களுடைய யுக்திவாதங்களாலும், ஆராய்ச்சிகளாலும் நமது மதங்களின் எதார்த்த ஸ்திதி அறியவேண்டு மென்ற ஆக்கிரஹத்தினாலும், இவர்கள் ஏற்படுத்தி யிருக்கும் கல்விச்சாலைகளாலும் சிந்தாசக்தியும் ஆராய்ச்சியும் நூதனமாய் தூண்டப்பட்டு நம்மை க்ஷேமப்படுத்தி வருகிறது. இக்காலங்களில் பிரம்மஸ்ரீ வெங்கிடகிரி சாஸ்திரி போன்ற ஹிந்து சாஸ்திரிகளும் சிந்தைசெய்து வெளியிற் புறப்பட்டு பிரசங்கம் தொடங்குகிறார்கள். கிறிஸ்தவமதமில்லா விட்டால் மலையாளத்தில் ஆரிய சித்தாந்த சந்திரிகை யென்ற மாதாந்தப் பத்திரிகையும் சிதம்பரத்தில் பிரம்மவித்தியா என்ற கீர்வாண பத்திரிகையும் சென்னையில் ஹிந்துமத டிராக்ட்டு சபையும் உண்டாயிருக்கா.

அந்நிய ஜாதிக்காரருடைய சந்திப்புண்டாவதால் சகலவிதமான க்ஷயங்களும் உண்டாகும்.

இதைப்பற்றி டார்வின் என்ற இங்கிலீஷ் சாஸ்திரி எழுதியிருப்பதை நான் எழுதியிருக்கும் ஆபரணபைத்தியத்தைப் பற்றிய புஸ்தகத்தில் தர்ஜிமாசெய்து எழுதியிருக்கும் பாகத்தை இங்கே எடுத்துக் காட்டுவது உசிதமென்று நினைக்கிறேன்.

“வெகுநாட் பிரிந்து பிரத்யேகப் பட்டிருப்பதும் இயற்கையில் பிரத்தியேகப்பட்டிருப்பதுமான இரண்டு மானுடராசிகள் முதல்தடவை சந்திக்கும்போது வியாதி உண்டாகிறது. இதற்குக் காரணம் வெளியாகாமல் ரகசியமா யிருக்கிறது. வான்கூவர் த்வீபில் (தீவில்) மனுஷ ராசிகள் நாசமாய்ப் போவதைப் பற்றி வெகு ஸூக்ஷ்மமாய் கவனித்த ஸ்ப்ரோட் டென்பவர் அப்படி நாசம் நேரிடுவதற்குக் காரணமாய்ச் சொல்வதென்ன வென்றால்: ஐரோப்பியர்கள் வந்ததின் மேல் சுதேசிகட்குள் வழக்க பேதங்கள் ஏற்பட்டு அதனால் பிணிகள் வெகுவாய் ஜனிக்கிறதென்பது தான். பார்வைக்கு எவ்வளவோ அற்பமாய்க்காணப்படுகிற பின் சங்கதியின்மேலும் அவர் வலிவைத்துப் பேசுகிறார். அதாவது ஐரோப்பியர்களுடைய வழக்கங்களைக்கண்டவுடன் அவைகள் சுதேசிகட்குப் புதிதாய் இருத்தல் நிமித்தம் மனசு குழம்பி மக்குப்பிடித்துப் போகிறார்கள். முயற்சிக்கு வேண்டிய உத்ஸாகங்களெல்லாம் இழந்து புதிதாகத்தூண்டுதல் இல்லாமல் தீர்க்கிறார்கள்........ அநேக திருஷ்டாந்தங்களில் மனுஷவர்க்கம் நாசமடைவதற்கு வெகுபலமான காரணம் அந்நிய ஜாதிக்காரர் மூலம் ஏற்படும் புதுஸ்திதிகள் தன்மாத்திரையில் கெடுதல் இல்லாவிட்டாலும் அவைகள் நிமித்தம் பழயவழக்கம் மாறுகிறது. அம்மாறுபாட்டால் வருவது முக்கியமாய் குழந்தைகட்குள்வரும் அசௌக்கியமும் உத்பத்தி சக்திக்குறைவுந்தான்.”

மேற்கண்ட ஐரோப்பிய சித்தாந்தத்தால் வெள்ளைக்காரர் வழக்கம் தன்சுபாவத்தில் எவ்வளவு நன்றாயிருந்தாலும் அவ் வழக்கத்துக்காக இந்துக்கள் தங்கள் பூர்வ வழக்கத்தைக் கைவிடும்போது அவர்கட்குப் பிணியும் மந்தபுத்தியும் முயற்சிக் குறைவும் திகைப்பும், உற்பத்தி சக்தி குறைந்து மலட்டு சுபாவம் கூடுதலும் உண்டாகுமென்று வெளியாகிறது, இதற்கு அநுகூலமாகவே நமக்குள் வரவர குழந்தைகள் வியாதிப்பட்டு துர்ப்பலமாகி அகால மிருத்யுவுக்கு இரையாகிறார்கள். பிறவினையாலும் இயற்கையாலும் பிரத்யேகப் பட்டிருக்கும்மநுஷராசிகளின் சந்திப்புண்டாகும்போது அவர்கள் விடும் சுவாசமே ஒருவரது ஒருவர்க்குவிஷமாய்த்தீருமென்று வேறொரு வெள்ளைக்கார சாஸ்திரியெழுதி யிருக்கிறார். இக்காரணத்தாலும் நமக்குள் க்ஷயகதி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற 200 வருஷமாக சம்பந்தம் ஏற்பட்டபடியால் இனிமேல் அபிவிருத்திக்கு வருவதற்குத் தடையில்லை.

பாலிய விவாகத்தாலும், ஆகாரக் குறைவாலும்,வறுமையாலும்,வேகடைசுபாவத்தாலும், குணபேதத்தாலும், கலப்பு சம்மந்தத்தாலும்; அதி சையோகத்தாலும் கள், சாராயம், அபின், கஞ்சாமுதலிய லாஹிரி பதார்த்தங்களாலும் மத சம்மந்தமான சுத்த பக்திவிட்டு மூடபக்தியாலும், நிந்தை சுபாவத்தாலும் அலட்சிய சித்த விருத்தியாலும் குருட்டுப் பிடிவாதத்தாலும் புத்திக்ஷயம் உண்டாகிறது. பாலிய விவாகத்தால் அதி சீக்கிரம் வீரியவிரயமாய புத்திக்கிருப்பிடமாகிய மூளை வளர்ச்சியின்றி வரண்டு பெரிய சாஸ்திரங்கள் படிக்கவும் சிந்தை செய்யவும் சக்தியில்லாமல், சம்சார துக்கத்தால் ஆராய்ச்சியில் பற்றற்று க்ஷயகதி விஸ்தாரமாய் உண்டாகி வருகிறது. முற்காலத்தில் 30-வயசுக்கு மேல் விவாகம்செய்து வந்தபடியால் சாஸ்திரப்படிப்பிற்கும் அபிவிருத்திக்கும் சாவகாச முண்டாயிற்று. ஆகாரக் குறைவாய் தேகத்தில் ஊர்ஜிதம் குறையும் போது நீர்வளம் நிலவளம் இல்லாவித்துப்போல் வரண்டு போய் வளர்கிறதில்லை. அவ்வளர்ச்சிக் குறைவு சந்ததிதோறும் நீடிக்கும்போது க்ஷயகதி அதிகப்படும். ஹிந்துக்கட்கு ஆகாரபுஷ்டி யில்லையென்பதற்கு ரூபகாரமும் வேண்டுமோ ? வறுமையில் சதாதுக்கத்தில் அசப்பட்டு செக்கிலகப்பட்ட எள்ளைப்போல் நசுங்கும்போது புத்தி அபிவிருத்திக்கு இடமேது ? வேகடை சுபாவம் பிடிபடுவது ஆலோசனைக் குறைவாற்றான். ஆலோசனை குறையும்போது புத்திக்கும் க்ஷய

முண்டாகும். குணபேதமும் விசாரக் குறைவால் ஏற்படுவதுதான். கலப்பு சம்பந்தத்தால் புத்திக்ஷயம் உண்டாகிறதைப் பற்றி அதிகம் வியாக்கியானிக்க வேண்டிய ஆவசியகமில்லை வறுமையால் புத்தி அபிவிருத்திக்குத் தடை நேரிட்டாலும், ஆகாரத்திற்குக் கவலை யில்லையென்று வரும்போது புத்தி க்ஷயப்படக்கூடும். இம்மலையாளத்திலுள்ள நம்பூரிபிராமணர்களைப் பார்த்தால் இவ்வபிப்பிராயம் நன்ருய் விளங்கும். இவர்கட்கு எக்காலத்திலும் ஆகாரத்தைப்பற்றிய கவலை யில்லாதபடியால் 16 - வயசானவுடன் புகையிலை முறுக்கி சூத்திர ஸ்திரீகளுடைய சம்பந்தத்தில் ஜோணாயெல்லாம் இழந்து சாஸ்திரத்தில்சற்றும்நாட்டமின்றி காரியங்களில் ஞான சூனியராய்த் தீர்ந்திருக்கிருர்கள். கலப்பு சம்பந்தத்தால் தாழ்ந்த ஜாதிக்கு புத்திசக்தி அதிகரிக்கலாம். ஆனுல் மேல்ஜாதிகாரர்க்கு க்ஷயமுண்டாகும். சோர சம்பந்தத்தால் சில சமயங்களில் புத்திகூடிய சந்ததியுண்டாகலாம். இதற்குக் காரணம் உளம்பூரித்து மனங்கலந்து உத்சாகத்தோடு உண்டாகு சம்பந்தந்தான். கலப்புசம்பந்தத்தால் உண்டாகும் சந்ததிகள் பெரும்பாலும் புத்திக்ஷயமடைந்தே யிருக்கிருர்கள். வெள்ளைக்காரர்க்கும் ஆபிரிக்கா தேசத்தில் காப்பிரிகட்கும், ஹிந்துதேசத்தில் ஹிந்துக்கட்கும், அமேரிக்காவில் 'ரெட் இந்தியர்'க்கும் ஜெனிக்கப்பட்ட கலப்புசந்ததியாகிய சட்டைக்காரர் பெரும்பாலும் க்ஷயப்பட்டவர்களேயன்றி முன்னுக்கு வந்திருப்பதில்லை யென்று ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் என்பவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறுர்.

குதிரைக்கும் கழுதைக்கும் பிறந்த கோவேறுகழுதையும் அபிவிருத்தியடைகிறதில்லை. அதிசையோகத்தால் புத்திக்ஷய முண்டாவது பெரும்பாலும் அச் சையோகத்தா லுண்டாகும் சந்ததிகட்குத்தான். அதிசையோகம் செய்பவர்கள் சற்று நீடித்த பிரமசரியத்தால் இழந்த புத்தி சக்தியையும் ஞாபக சக்தியையும் திரும்ப அடையலாம். ஆனுல் அதிர்ச்சையால் விடவுகொண்ட சுவர்மீது எவ்வளவு சுண்ணும்பு பூசினுலும் பூர்ணமாய் ஒட்டப்படாமல் பலக்குறைவா யிருக்கும் பான்மையாய் அதிசையோகத்தால் தளர்ச்சிகொண்ட புத்தியும் பூர்ணமாய் சௌக்கியத்திற்கு வருகிறதில்லை. சாராயம், கஞ்சா அபின் முதலிய லாகிரிபதார்த்தங்களால் சரீர பலக்ஷயம் புத்திக்ஷயம், ஆயுள் க்ஷயம் வருகிறதென்று இங்கிலீஷ் பார்லிமெண்டு சபையாரே ஒப்புக்கொண் டிருக்கிருர்கள். லாகிரி பதார்த்தங்களால் வரும் தீங்கை உத்தேசித்துத் தான் அதை மகா பாதகங்களில் ஒன்ருய் வகுத்து நமது முன்னேர்கள் விலக்கினுர்கள். தற்கால கலால் ஏற்பட்டால் கட்குடி அதிகரிக்கிறது. இவ்வகை தோஷத்திற்கு அங்கிலேய கவர்ன்மெண்டார் தான் உத்தரவாதி. மூடபக்தியால் பொய் மெய் பகுத்தறியும் சக்தி குறைந்து புத்திக்ஷய முண்டாகிறது. நம்முடைய முன்னேர்க்குள்ளாவது அந்நியஜாதிக்காரர்க்குள்ளாவது என்ன இருக்கப் போகிறதென்று உபேக்ஷித் திருப்பதாலும் புத்திக்ஷய முண்டாகக்கூடும்.

ஸ்திரீகட்குக் கல்விப்பயிற்சி யில்லாமையாலும் நமக்கு புத்திக்ஷயம் ஏற்பட்டிருக்கிறது. க்ஷேத்திர வளமில்லாவிட்டால் என்னபலனுண்டாகும் ?

அவிவேகமான கலியாணங்களாலும் புத்திக்ஷயமுண்டாகிறது. கேவலம் முட்டாள்கள், சித்த பிரமையுள்ளவர்கள் மக்குப் பிடித்தவர்கள், தெளிவில்லாதவர்கள், இவர்கட்கும் விவாகம் செய்து விடுகிருர்கள். இவர்களின் சந்ததிகட்கு என்னபுத்தி யுண்டாகும்.

பெண்களை அவர்கட்கு சம்மதமில்லாத வரன்கட்குக் கொண்டு தள்ளும்போதும், அடுத்த பந்துக்கட்குள்ளே தொடர்ந்து சம்மந்த முண்டாகும்போதும் புத்திக்ஷயமுண்டாகிறது. விருத்தாளுடைய சம்மந்தமும் புத்திக்ஷயத்திற்குக் காரணந்தான். ஆபரணப் பைத்தியத்தாலும் புத்திக்ஷயம் உண்டாகிறது. 'மிச்சம்' பிடிக்கப்பட்ட முதலெல்லாம் ஆபரணத்தில் அடங்கிவிட்டால் புஸ்தகத்திற்குப்பணம் ஏது, வாசிப்பதேது ?

இப்போது ஏற்பட்டிருக்கும் இங்கிலீஷ்க் கல்விப்பயிற்சியாலும் க்ஷயகதிக்குவேண்டியமூலம் இருக்கிறது. கடையாக உள்ள வகுப்பு முதல் முடிபுவரை பரீக்ஷை ஏற்படுத்தி யிருப்பதால் கேவலம் பரீக்ஷையில் ஜெயிக்கவேண்டிய பிரமையேமேலிட்டு இராப்பகலாய் மனனப் படுத்துவதில் ஊர்ஜிதமிழந்து மனனப்படுத்தும் சங்கதிகளை நன்ருய் கிரகிக்க இடமில்லாமல் சப்தரூபமாய் எல்லாவற்றையும் கற்று பரீக்ஷைசெய்த கட்டடத்திற்ருனே எல்லாவற்றையும் கக்கி பரீக்ஷைகழிந்த வுடன் நீரில் மூழ்கி நினைப்பொழிகிருர்கள். இதனுலும் புத்திக்ஷய முண்டாகிறது. இதைப்பற்றி கழிந்த வித்வத் சபாபிர சங்கத்தில் ம-ா-ா-ஸ்ரீ பாஷியமய்யங்கா ரவர்கள் விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லியிருப்பது சரியே.

எஸ். இராமசாமி அய்யர், பி.ஏ., பி. எல்.

மாதர்மஞ்சரி.

VI. மேரி ஸோமர்வில் சரித்திரம்.

2-ம் பாகம்.

1804-ம் வருஷத்தில் மேரி மிஸ்டர் ஸாமுவேல் க்ரேய்க் என்னும் ஒருவரை மணம் புரிந்துகொண்டாள். அவர் கலியாணமான மூன்று வருஷங்களுக்கெல்லாம் இறந்துவிட்டார். புருஷர்களில் தாழ்ந்த மனேசக்தி யுடையவர்கள் ஸ்திரீகளிடத்தில் படிப்பும் புத்திவல்லமையுமிருப்பதைக்காணப் பொறுக்காமல், அவர்கள் அப்படி புத்தி வல்லபமடைவதை யஞ்சி அருவருப்புக்கொள்வது வழக்கம். அப்படிப்பட்டவர்களில் மேரியின் முதற்கணவர் ஒருவராகவிருந்ததாகத் தோற்றுகின்றது. அவர் பெண்களின் புத்தி வல்லபத்தைக் குறித்து மிகத் தாழ்வாய் எண்ணுபவராக விருந்ததோடு,சாஸ்திர சம்பந்தமான விஷயங்களில் ஞானமாவது, ஞானமடைய வேண்டுமென்கிற விருப்பமாவது அவருக்கு இல்லை. புருஷனை விட மனைவி புத்தியிலும் வித்தையிலும் மேம்பட்டவளாக விருந்தபோதிலும், மேரி வித்தியா கர்வமடைந்தவளாகவின்றி,பெண்களுக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்களைக் கைவிடாமல் அதிக அடக்கம்பாராட்டித் தன் புருஷனுக் கினியவளாக நடந்துகொண்டு வந்தாள். 1807-ம் வருஷத்தில் அவள் கணவனிறந்தபொழுது அவளுக்கு வயது 27. இரண்டுபிள்ளைகள் பிறந்திருந்தன. வேறு ஆதரவின்றி இளவயதில் வைதவ்யமடையவே, மேரி தன் குழந்தைகளுடன் அவள் தகப்பன் வீடு வந்தடைந்து, அவருடைய போஷணையின் கீழ் வசித்துவந்தாள். அங்கு வசித்து வருகையில் அவள் அதிக உறுதி ஊக்கத்தோடு கணிதசாஸ்திரம் பயின்று வந்தாள். எடின்பரோ கல்விச் சங்கத்தில் கணிதசாஸ்திர பண்டிதராகிய வாலேஸ் என்பவரிடம் பாடம் கற்றுக்கொண்டு பயனடைந்து அக்காலத்தில் கணிதசாஸ்திரப்பயிற்சி அபிவிர்த்திக்காக ஏற்பட்டிருந்த ஒரு சங்கத்தார் கணித சாஸ்திரத்தில்தேர்ச்சியடைந்தவர்க்களித்த வெள்ளிப்பதக்க மொன்று தனக்குப் பரிசாகக் கிடைக்கும்படியானவிற்பத்தி பெற்ருள்.

அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லாரும், மேரி இஷ்டஜனர் சபையில் கூடிக் குலாவி யுறவாடிச் சந்தோஷித் திருப்பதற்குப் பதிலாக, சாஸ்திரக் கியானத்தில் தேர்ச்சிபெற வேண்டி ஊக்க முடனுழைத்து வருவதைப்பற்றி முறையிட்டு, அவள் அப்படி செய்து வருவது முட்டாள் தனமான குணக்கு நடத்தையாக விருக்கிறதென்று நாலாபக்கத்திலும் அவளை யிடித்துக்கூறிப் புத்தி சொல்லி வந்தார்கள். அவள் உறவினர்களில் கிட்டத்தட்ட எல்லாரும் அவள் படிப்பதும் புத்தி விர்த்திக்கு ஏதுவான முயற்சிகள் செய்வதுமே வேலையாக விருப்பதை யங்கீகரிக்காமல் புகார்செய்து வந்தாலும், 'ஸோமர்வில்' என்னும் பேருடைய அவள் சிற்றப்பா, சிற்றன்னையும், அவர்கள் புத்திரன் 'உவில்லியம் ஸோமர்வில்' என்பவரும் அவளுடைய இதர உறவினர்கள் அவள்படிப்பதற்கு விரோதமாய்க் கத்திய குருட்டுக்கத்தலில்சேர்ந்துகொள்ளவில்லை. அவர்கள் இவளுக்குள்ள படிப்பு விருப்பத்தில் அநுதாபமுள்ளவர்களாய் இவளை மிகப்பக்ஷத்தோடும் பிரீதியோடும் நடத்தி வந்தார்கள். அவர்களுடைய வீட்டில் இவள் சிலகாலம் தங்கநேரிட்ட பொழுது எல்லாம் இவளுடைய மனதுக் கிசைந்ததாக விருக்கக்கண்டு வெகுசந்தோஷத்தோ டிருந்து படிப்பை விர்த்திசெய்து வந்தாள். இப்படிக் கொஞ்சகாலமிருந்துவருகையில் இவளுக்கும் இவளுடைய சிற்றன்னை

பிள்ளை உவில்லியமுக்கும் பரஸ்பர நேசமுண்டாகி வளர்ந்துவர, 1812-ம் வருஷத்தில் இருவரும் மணமுடிக்கப் பெற்றார்கள்.

இந்தஇரண்டாவதுவிவாகமானபின் மேரி 50 வருஷகாலம் அவள்கணவனோ டிருந்து சுகித்து வாழ்ந்தாள். இவளைக்கலியாணம் செய்து கொண்டபோது இப்பேர்ப்பட்ட மனைவிகிடைத்தாளேயென்று இவளுடைய கணவர் பாராட்டிய பெருமையும் சந்தோஷமும் இவர்கள்இல்வாழ்க்கை நடத்திய 50-வருஷகாலத்திலும் குறையாமல் அப்படியே யிருந்துவந்தது. இவ்விவாகம் நடந்தது மேரிக்கும் வெகு சந்தோஷமாக முடிந்தது. அவள் பிறந்தநாள் முதல் அது வரையில் அவள் தன் மனப்போக்கிற்கும் தனது எண்ணங்கள் அவாக்களிற்கும் ஒவ்வாத மனோபாவமுள்ளவர்களோடேயிருந்துகாலந்தள்ளிவரவேண்டியிருந்தது. அவளுடைய ஆயுசுகாலத்தில் இப்பொழுது தான் முதல் முதல் அவள் தன்னிடத்து முற்றும் அனுதாபமுள்ளஒருவருடைய நித்திய சகவாசத்தையனுபவிக்கும் பாக்கியமுள்ளவளானாள். அவளால் உலகுக்குண்டான பாக்கியமெல்லாம் அனேகமாய் அவள் கணவரால் தான். ஏனெனில் அவர் அவளுடைய மனோசக்திகளைத் தூண்டிவிட்டு, அவளுக்கு இருந்த அபூர்வ வல்லமையை வெளிப்படுத்துவதற் கேதுவான எவ்விஷயத்திலும் சந்தோஷமெடுத்துக் கொள்பவராயிருந்தார். அவர் அந்த அம்மாளுக்கு அவ்வளவு ஒத்தாசையாக விருந்து அவள் மனதை உல்லாசப்படுத்தி யிராவிட்டால், அவளிடத்திருந்து தோன்றிய அபூர்வசக்தியவ்வளவும் உலகிற்குப் பயன்படாது அவள் மனத்துள்ளே அமுங்கிக்கிடந்திருக்கு மென்பதைக்குறித்துச் சந்தேகிக்க இடமில்லை. மேரியின் கணவராகிய மிஸ்டர் ஸோமர்வில் இராணுவ வைத்தியராக விருந்தார். சாஸ்திர சம்மந்தமான விஷயங்களில் அபிவிர்த்தியடைய மனதைச் செல்லவிட்டுழைப்பது அவர்மனதுக்கு முற்றும் ஹிதமாயிருந்தது. அவர் கற்றுத் தேர்ந்து கன்றாகப்பயிர்ச்சி பெற்றபுத்திநுட்பமுடையவர். அவர்மனைவிக்கு உதவிபுரிவதே அவருக்குப் பெரும்பாக்கியமெனக் கருதியுழைத்து வந்தவர். மேரி ஸோமர்வில் சாஸ்திரக்கியானத்தில் அதிகவிற்பத்தி யடைந்து சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்கு எளிதில் விளங்கும்படியான புஸ்தகங்களெழுதி வந்த பொழுது, அவர் அவளுக்கு உபயோகமாயிருக்கும் புஸ்தகங்களைப் பெரியபுத்தக சாலைகளிற் சென்று தேடிப்பார்த்து எடுத்து வந்து கொடுப்பதும், அவள் எழுதிய விஷயங்களை திருப்பித் திருப்பி நகல் செய்து கொடுப்பதுமாக அந்தம்மாளுக்குச் செய்த உதவி கொஞ்சமல்ல. அவர்களுடைய புத்திரி சொல்லியபடி "அவளுக்காக அவர் எவ்வளவு தொந்தரவுக்காளாக வேண்டியிருந்தாலும் அதை அவர் தொந்தரவாகப்பாராட்டுவதில்லை. அவர் உழைத்த உழைப்புக்கெல்லாம் பிரீதியே காரணமாயிருந்தது."

மேரி ஸோமர்வில் சாஸ்திர சம்பந்தமாய்எழுதிய கிரந்தங்களினால் உலகப்பிரசித்தியான பிரக்கியாதி பெற்று விளங்கிய பொழுது, முன்னால் அவள் படிப்பில் பிரியமுள்ளவளாய் அவள் மனோபிவிர்த்தியிலே காலத்தைப்போக்கி வருவதைக்கண்டு பரிகசித்த அவள் உறவினர்களெல்லாம் இப்பொழுது அவளைப் பிரமாதமாகத் துதிக்கத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோஷத்தையும் துதிப்பையும் மேரி மதிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அபிப்பிராயம் என்னபெறுமென்று அவளுக்கு நன்றாகத்தெரியும். ஆனால் அவளுடைய கணவர் அவளுக்குப் பேரும் புகழும் வந்ததைப்பற்றிப் பட்ட சந்தோஷத்தையும்பெருமையையும்கண்டு அவள் மனதுருகிப்போனாள். அதைப்பற்றி அவளே பின்வருமாறு எழுதி யிருக்கிறாள்: "என்னுடைய முயற்சி பலித்து எனக்குப் பேரும் புகழும் வந்ததைப்பற்றி என் கணவர் உளம்பூரித்துக் கொண்டாடினதைப்பார்க்க என்மனது உருகிவிட்டது. ஏனெனில் என்னுடைய ஜயகாலத்தைக்கண்டு அவர் சந்தோஷப்பட்டதைப்போல் பதினாயிரத்திலொருவர் கூட அவ்வளவு உண்மையாகச் சந்தோஷப்பட்டிருக்க மாட்டார். இன்னொருவராயின் முதலில் சந்தோஷப்பட்டுப் பிந்தி அசூயை யடையக்கூடும்; அவர் தயாள சுபாவமுடையவரும், பொறாமைப்படும் இழிகுண மற்றவருமா யிருந்தபடியால், அவர் ஆயுள்கால முழுமையும் நான்செய்த காரியங்களிலெல்லாம் மகாபிரீதியோடு அக்கறை யெடுத்துக்கொண்டு வந்தார்."

மேரி ஸோமர்விலுக்கு இப்படிப்பட்ட பேரும் புகழும் கிடைப்பதற்குக் காரணமாயிருந்த புஸ்தகங்களில் முதல்முதல் அவள் எழுதி வெளியிட்டது வான சாஸ்திர சம்பந்த மானது. அதற்கு "வானசூக்ஷ்மம்" (அதாவது, வானத்தில் கிரகங்கள் முதலியன அமைந்திருக்கும் சூக்ஷ்மத்தை விளக்கும்நூல்) என்று பெயரிட்டாள். இப்புஸ்தகம் அவள் எழுத நேரிட்ட விவரத்தைக்கேட்க இனிமையாக விருக்கும். இது வரையில் அவள் தன் மனோ விர்த்தியார்த்தம் படித்து வந்தாளே யன்றி அச்சிட்டுப் பிரசுரிக்கப் புஸ்தகங்கள் ஒன்றும் எழுதியதில்லை. 1827ஆம் மார்ச்சுமீ லார்ட் ப்ரூஹாம் அப்பொழுது பரசித்திபெற்று பரோபகாரமான வேலை செய்துவந்த "உபயோகமான அறிவைப் பரவச்செய்யும் சபை"யின் பேரால் மிஸ்ஸஸ் ஸோமர்விலுக்கு ஒரு கடிதமெழுதினார். அதில் அவன் நியூடன் ஜடதத்துவ சாஸ்திரியார் எழுதிய மிக உயர்ந்தசாஸ்திர நூலாகிய 'ப்ரின்ஸிபியா' என்பதைப்பற்றியும் லாப்லேஸ் என்னும் பேர்பெற்ற தத்துவசாஸ்திரியார் வானசாஸ்திரத்தைப் பற்றி யெழுதிய இன்னொரு புஸ்தகத்தைக் குறித்தும் விவரித்து சில புஸ்தகங்க ளெழுத வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கேட்டுக்கொண்டார். பின் சொன்ன வானசாஸ்திர புஸ்தகத்தைக் குறித்து அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு வரைந்திருந்தார்:—"இங்கிலாந்தில் இம்மகாசாஸ்திர நூலின் பேரைக் கேட்டதன்றி மற்றப்படி இதைப்பற்றியொன்று மறியாதவர்கள் 20 - பேர்கள் இருப்பார்களோ என்னமோ; இதன் பேரைமாத்திரமாவது கேட்ட வர்கள் 100-பேர்கள்கூட இருக்க மாட்டார்கள். மிஸ்ஸஸ் ஸோமர்வில் இப்புஸ்தகத்தைப் பற்றித் தெளிவாக எழுதினால் இந்த இரண்டு தொகைகளின் பின்னும் இரண்டு சுன்னங்கள் சேர்க்கும்படி செய்ய அவளாலாகுமென்று யான் உறுதியாய் நம்புகிறேன்." அதாவது அவள் மூலமாக 2,000பேர் அதைவாசித்தறியவும் 10,000ஜனங்கள் அதைப்பற்றிக் கேள்விப்பட்டறியவும் கூடுமென்று எழுதினார்.

இப்படி அவர் அவளைக் கேட்டுக்கொண்டதைப்பார்த்து மிஸ்ஸஸ் ஸோமர்வில் அதிசயம் பொறுக்கமாட்டாமல் திகைத்துப் போனாள். "கடலேயனையம் யாம் கல்வியா லென்னும் அடலேறனைய செருக்கு"* அவள் மனத்திலுதித்ததே யில்லை. அவள் தன்னுடைய வித்தியா வல்பத்தைப்பற்றி மிகத் தாழ்மையாக மதித்து வந்ததோடு தன்னால் அதிகமாக ஏதாவது செய்ய முடியுமென்கிற நம்பிக்கை யில்லாதவளாயிருந்தாள். அவள் தானாகப்படித்துச் சம்பாதித்துக்கொண்ட அறிவும் கியானமும் கலாசாலைகளில் மகா பண்டிதர்கள் போதனையின் கீழ் பிரத்தியேகமாகப்படித்து விர்த்தியடைந்த வித்வான்கள் அறிவையும், கியானத்தையும்விட எவ்வளவோ குறைந்ததாக விருக்குமென்றும், வானசாஸ்திர விஷயமாகத்தான் எழுத யத்தனிப்பது ஆகாத் துணிகரமாயிருக்குமென்றும் அவள் உண்மையாகவே நம்பியிருந்தாள். ஆனால் லார்ட் ப்ரூஹாம் அவர்களும் அவளுடைய கணவரும் சேர்ந்து அவளுக்கு அடிக்கடிசொல்லி அவளை அவர் கோரிக்கைக் கிணங்கும்படி வற்புறுத்தி வந்ததனால் அவர்கள் வார்த்தைக்கிசைந்து, அவள் அப்புஸ்தகம் எழுத யத்தனம் செய்து பார்ப்பதாகச் சொல்லி அதற்கும் ஒரு நிபந்தனை ஏற்படுத்திக் கொண்டாள். அதாவது,—அவள் எழுதும் விஷயம் அவளை யெழுதும்படி வற்புறுத்தும் அவர்கள் எண்ணியிருக்கும் எண்ணப்படி சரியாக விராவிட்டால், அவ் வெழுத்துப் பிரதிகளை யெல்லாம் உடனே நெருப்பிலிட்டு நாசம் செய்து விட வேண்டு மென்று முன்னிட்டுப் பேசித் திட்டம்செய்து கொண்டாள். இப்படியாக திடீரென்று அவள் ஜீவனவகையும் தொழிலும் நூதனமாக மாறி விட்டது.

இப்படி திடீரென்றுபுஸ்தகமெழுதி கிரந்தகர்த்தாவாகத் துணியும்படி நேரிட்டதற்கு மேலே சொல்லிய தூண்டுதலன்றி அக்காலம் அவர்கள் ஆஸ்தியையெல்லாம்கிட்டத்தட்ட இழந்துவிட்டுக் கஷ்டதிசையி லிருந்ததும் ஓர் தூண்டுதலாயிருந்திருக்குமென்று எண்ணக் கூடியதாயிருக்கிறது. கிரந்தகர்த்தாவாகி புஸ்தக மெழுதிப் பிரசுரிப்பது வழக்க மாய்விடுகிறவரையில் அத்

* நன்னெறி.

தொழிலில் முயற்சிக்கக் கஷ்டதிசையின் உபத்
திரவம் பெரும்பாலும் வேண்டியதா யிருக்கிற
து. தரித்திரத்தின் உபத்திரவ மிருந்தால்
தான் படித்தவர்கள் சாதாரணமாகப் புஸ்தக
மெழுதுவதற் கவசியமான உழைப்பும் பிரயா
சையும் எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய
தூண்டுதலுண்டாகிறது. இல்லாவிட்டால் புஸ்
தகமெழுதிப் பழக்கப்படாதவர்கள் புஸ்தகமெ
ழுத வேண்டுமென்று கொள்ளும் விருப்பம் கா
ரியத்தில் சரிவர நிறைவேறி முடிகிறதில்லை.

சாதாரணமாக கிரந்தகர்த்தா வாவதற்கு இவ்
வளவு இடையூறுகளுண்டானல் மிஸ்ஸஸ் ஸோ
மர்வில் விஷயத்தில் அவ்விடையூறுகள் இன்
னும் மிகுதியாக விருந்தன. மேரி ஸோமர்
வில் இக்காலத்தில் அவளுடைய ஜீவவிர்த்தாந்
தங்களை யெல்லாம் குறிப்பிட்டு வைத்து வந்த
ஞாபகக் குறிப்புப் புஸ்தக மொன்றிருக்கிறது.
அவள் பலகுழந்தைகளைப் பெற்றதாயும் ஒரு
பெரிய குடித்தனத்திற்குத்தலைவியுமாக விருந்த
தால் இத்தருணம் புஸ்தகமெழுதுவதற்கு ஒழி
வுக்காலம் கிடைக்காமல் அவள்பட்ட கஷ்டங்
களையெல்லாம் பற்றி அதில் எழுதி யிருக்கி
ருள். அவள் தன் வீட்டுவேலைகளையும் குடித்
தனக் காரியங்களையும் ஒன்றுவிடாமல் செய்து
விட்டு, வருவார் போவார்க்கு உபசாரஞ்சொல்
லி மற்றும் வீட்டுக்குப் பெரியவளா யிருக்கப்
பட்ட ஸ்திரீ கவனிக்கவேண்டிய விஷயங்களை
யெல்லாம் கவனித்துவிட்டுக் கொஞ்ச நெஞ்
சம் ஒழிந்த வேளைகளிலேயே புஸ்தக மெழுத
உட்காருவாள். அப்பொழுதும் அவ்வேலைக்கு
எத்தனையோ இடையூறுகள் நேரிடும். அக்கா
லத்தில் அவர்கள் பட்டணத்துக்கு எட்டா
மையில் ஒதுக்குப் புறமாயிருந்த 'செல்ஸி'என்
னும் இடத்தில் வசித்துக் கொண்டிருந்தார்கள்.
அவ்வளவு தூரத்தில் வசித்துக் கொண்டிருக்
கையில் அவளைப்பார்க்க வேண்டுமென்று தொ
லைதூரம் நடந்துவந்தவர்களைப் பார்க்காம லனு
ப்புவது குரூரமாயிருக்குமென்று, அவள் வந்த
வர்களையுபசரித்தழைத்துப் பேசிவந்தாள். ஆன
ல் அப்படிச் செய்துவந்ததில் அவளுக்குண்டா
ன தொல்லைகள் கொஞ்சமல்ல. ஏதாவது விளங்
கற்கரிய விஷயத்தைச் சிக்கறுத்து விளங்கவை
க்கும் வகையென்னவென்று முழுமனதோடும்
யோசித்துக் கொண்டிருக்கையில், நல்லெண்
ணமுள்ள நேசர் யாராவது ஒருவர் வந்து வெ
கு சாந்தமாய் "உன்னோடு இரண்டொருமணி
நேரம் உல்லாசமா யிருந்துவிட்டுப் போகலா
மென்று வந்திருக்கிறேன்" என்று சொல்வர்.
இப்பேர்ப்பட்ட தொல்லைகளைப்பற்றி நினைக்கும்
போது அவள் பெருமூச்சுவிட்டுப்புலம்புவாள்.
இப்படி அவளுக்குநேர்ந்த இடையூறுகள் எண்
ணிறந்தவாயினும், அவள் எழுதத் துணிந்த
வானசாஸ்திர விளக்கப் புஸ்தகம் நாளுக்கு
நாள் விர்த்தியடைந்து வந்து ஒரு வருஷத்திற்
குள் பூரணமாய் எழுதி முடிக்கப்பட்டது.
அப்புஸ்தகத்துக்கு அவள் "வான சூக்ஷ்மம்"
என்று பேர்கொடுத்தாள். அப்புஸ்தகம் அச்
சிட்டு வெளியிடப் பட்டதும் அதை யெழு
தின கிரந்த கர்த்தாவுக்குப் பெருங் கீர்த்
தியும் பிரதாபமும் வந்து விட்டது. அக்கா
லத்துள்ள சாஸ்திரக் கியானிகள், சாஸ்திர
விஷயமா யெழுதும் கிரந்த கர்த்தாக்கள் இவர்
களில் முதன்மையானவர்களுக்குச் சமமாக
அப்புஸ்தக மெழுதினவளும் மதிக்கப்பட்டு
அப்படியே பெரும் அந்தஸ்தும் பெற்ருள். உட
னே அவள் அப்பொழுதிருந்த வானசாஸ்திர
சங்கத்திற்கு ஒரு கௌரவ மெம்பராகத் தெரிந்
தெடுக்கப்பட்டாள்.* அதையொட்டி இன்னும்
எல்லாவித கௌரவங்களும் வெகுமானங்களும்
ஒன்றின்மே லொன்ருக அவளுக்கு அளிக்
கப்பட்டன.

அக்காலத்தில் பிரக்கியாதிபெற்று விளங்கிய
சான்ட்ரீ என்னும் சிற்பசாஸ்திரியால் மார்புவ
ரையில் அவளுடைய பதுமையொன்றுசெய்வித்
து அதை "ராயல் ஸொஸைடி" என்னும் மகா
சாஸ்திரஞர்களெல்லாம் சேர்ந்த உந்த சங்கத்
தின் மாளிகையில் வைத்தார்கள். டப்ளின் நகரி
லுள்ள "ராயல் அகாடமி" என்னும்மகா வித்வ

* மேரி ஸோமர் விலோடு சாஸ்திரக்கியானத்தில்
நிபுணத்துவம் பெற்று விளங்கிய இன்னொரு மாதும்
அவ் வானசாஸ்திர சங்கத்துக்கு மெம்பராக நிய
மிக்கப்பட்டாள். அந்த மாதின்பேர் 'கரொலைன்
ஹெர்ச்செல்' அந்த அம்மாளின் சரித்திரத்தைத்தனி
யாக வாசித்தறிந்து கொண்டால் அவளுடைய மகி
மை விளங்கும். ஆனல் அவளைப்பற்றி இங்கு விஸ்
தாரம் பேச சந்தர்ப்பமில்லை.

சங்கத்திலும் இன்னும் அனேக சாஸ்திர சங்கங்
களிலும் அவள் கௌரவ மெம்பராகச் சேர்த்
துக் கொள்ளப்பட்டாள். இக்கீர்த்திப் பிரதாபங்
களெல்லாம் கிடைத்த கொஞ்சகாலத்துக்குப்
பின், 1835-ம் வருஷத்தில் அப்போது அங்கி
லேய முதல்மந்திரியாக விருந்த ஸர் ராபர்ட் பீல்
என்பவர் இவளுடைய சாஸ்திர நிபுணத்துவத்
தை மதித்து சர்க்காரிலிருந்து இவளுக்கு வரு
ஷத்தில் 200-பவுன் உபகாரச் சம்பளம் கொடு
த்தாதரித்தார். இப்படி உபகாரச் சம்பளம்
கொடுக்கப்பட்ட சங்கதி தெரியவந்ததோடு
முன் நேர்ந்ததாகச் சொன்ன நஷ்டத்துக்
குப் பின்னிருந்த அவளுடைய சொந்த ஆஸ்
தியும், அவளுடைய கணவர் பேராலிருந்த
ஆஸ்தியும் அவைகளைக் கொடுத்திருந்த புண்
ணியவான்கள் செய்த மோசத்தால் இழந்
துவிட்ட சமாசாரமும் வந்து சேர்ந்தது. சாஸ்
திரக்கியான அபிவிர்த்தி விஷயமாய் அவள் செ
ய்த உதவியைத் துரைத்தனத்தார் நன்குமதித்
துதவிய உபகாரச் சம்பளம் அவளுக்கு நல்ல
தருணத்தில் கிடைத்தது. சில வருஷங்களா
னபின் இந்த உபகாரச் சம்பளம் லார்ட் ஜான்
ரீஸ்ஸல் மந்திரியாக விருக்கையில் அவரால்
300-பவுனுக உயர்த்தப்பட்டது.

மிஸ்ஸஸ் ஸோமர்வில் இளம்பிராயமுதல்
அவளுடைய ஆயுள்கால முடிவுவரையில் ஸ்தி
ரீகளின் நிலைமையை விர்த்திசெய்து அவர்களை
நல்ல பதவிக்குக் கொண்டுவருவதற்கு ஆஸ்ப
தமான எல்லா விஷயங்களிலும் அனுதாபமுள்
ளவளாய் அவற்றைத்தன்னலானவரையில் ஆத
ரித்து வந்தாள்.

அவள் சுத்தச் சிறு பெண்ணுயிருக்கையில்,
ஸ்திரீகளின் நிலைமையைச்சீர்திருத்தி முன்னுக்
குக் கொண்டுவருவதில் தான் உபயோகமுள்
ளவளாக விருக்கக்கூடும் என்கிற எண்ணத்தி
ஞல் அதிக கஷ்டப்பட்டு வாசிக்கத் தூண்டுத
லுண்டாயிற்று. அவள் 16-வயதுள்ளவளாயிரு
ந்தகாலத்தைக் குறித்து எழுதுகையில் அவள்
பின் வருமாறு கூறுகிருள்:—"நான் செய்துவந்
த முயற்சிகள் எதிலும் பணம் சம்பாதிக்க வே
ண்டுமென்கிற எண்ணம் என் மனதில் உதித்த
தேயில்லை; ஆனல் ஏதாவது ஒருவிதத்தில்
நான் மிக மேலானவளாக வேண்டுமென்
கிற அடங்கா ஆசைமட்டும் எனக்கு அதிகமா
யிருந்தது; ஏனென்ருல் என்னுடைய பால்ய
காலத்தில் ஸ்திரீகள் எவ்வளவு தாழ்ந்த நிலை
மையிலிருந்தார்களோ அதைவிட அவர்கள்
உயர்ந்த நிலைமையிலிருக்கப் பாத்திரர்களாகச்
செய்துகொள்ளும் சக்தி அவர்களுக்கு உண்
டென்பது என் மனதிற் பட்டது. அந்தப்படி
நடந்துகாட்ட வேண்டுமென்று நான் பேரவாக்
கொண்டேன்."

அங்கிலேய நாட்டிலும் அமெரிக்கா நாட்
டிலும் இப்போது ஸ்திரீகளுக்குஅதிக சுத
ந்தரங்கள் வேண்டு மென்று, அச்சுதந்தரங்
கள் அவர்களுக்குக் கிடைப்பதற்காக ஸ்
திரீகளே அனேகர் முன்னிட்டு நின்று அதற்கு
வேண்டிய பிரயத்தனங்கள் செய்துவருகிற
விஷயம் தற்கால உலக வர்த்தமானங்களை
விசாரிக்கும் யாவர்க்கும் தெரிந்தது. மேரி
ஸோமர்வில் காலத்தில் இப்பேர்ப்பட்ட •கக்ஷி
யொன்றும் பலமாக ஏற்படவில்லை. எற்பட்ா
விட்டாலும் இப்பொழுது ஸ்திரீகளுக்கு வே
ண்டிய சுதந்தரங்களாகக் கோரப்படும் பலவிஷ
யங்களில் பிரதமஸ்தராயிருந் துழைத்தவர்கள்
பலர் அக்காலத்திலிருந்தார்கள். ஸ்திரீகளும்
புருஷர்களுக்குச் சமமாயிருந்து சட்டநிர்மாண
சபையில் அவர்களோடு கூடவிருந்து சட்ட
நிரூபணம் செய்யும் சுதந்தரம் வேண்டுமென்று
சொல்லி அதற்காக இன்றைக்கும் செய்துவர
ப்படும் முயற்சி அப்பொழுதே ஆரம்பிக்கப்பட்
டதுதான். பார்லிமெந்து சபைக்கு மெம்பர்
கள் நியமனம் செய்ய ஸ்திரீகளுக்கும் அதிகா
ரம் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் ஜான்
ஸ்டூவர்ட் மில் என்னும் மகான் அப்பொழுதே
பெரு முயற்சிசெய்து வந்தார். 1868-ம் வரு
ஷத்தில் இது விஷயமாய் மிஸ்டர் ஜான்
ஸ்டூவர்ட் மில் முதல்முதல் ஒருமனுத் தயார்
செய்து பார்லிமெந்து சபையாருக்குக் கொடுத்
தார். அம்மனுவில் கையெழுத்திட்டவர்களில்
முதலாவதாக விருந்தது 'மேரி ஸோமர்வில்'
கையெழுத்து. அப்பொழுது செய்யத் துவங்
கிய முயற்சி இன்னும் முற்றும் பயன்பெற வில்
லையாயினும் அக்கக்ஷியைச் சேர்ந்தவர்கள் இன்
றைக்கும் அலுப்பு சலுப்பின்றி விடாமுயற்சி

யாக வுழைத்து வருகிறார்கள். அக்காலத்தில் லண்டன் யூனிவர்ஸிடி' கல்விச்சங்கத்தார் இப்பொழுதைப்போலின்றி, பெண்பாலார்க்கு வித்தியா பட்டங்கள் அளிப்பதில்லை யென்றிருந்தார்கள். இந்த விலக்கு அநியாய மானதென்று சொல்லி பெண்பாலாரும் புருஷரைப்போல் படித்துத்தேர்ந்தால் அவர்களுக்கும் வித்தியா பட்டம் அளிக்கவேண்டு மென்று மேற்படி சங்கத்தார்க்கு முதல்முதல் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்திலும் மேரி ஸோமர்விலுடைய கையெழுத்தைக் காணலாம். இவ்விண்ணப்பம் அப்பொழுது பலிக்காமற் போய்விட்ட போதிலும் அப்புறம் சில வருஷங்களுக் கெல்லாம் இவ் விண்ணப்பத்திற்கண்ட பிரார்த்தனை அளித்துவிடப்பட்டது. ஆகவே மேரி ஸோமர்வில் தன் மனோரதம் இப்படி ஈடேறியதைப்பார்க்க ஜீவித்திருக்காமற் போனது விசனிக்கத் தக்கதே. அப்பொழுது இங்கிலாந்தில் பெண்பாலார்க்கு உயர்தரப்படிப்புச் சொல்லிக்கொடுக்க வேணுமென்று அதற்காகப் பலர் பிரயத்தனஞ் செய்துவந்தாலும், பெரும் பான்மையான ஜனங்கள் அதற்கு விரோதமாகவே யிருந்தார்கள். மேரி ஸோமர்வில் ஸ்திரீகளுக்கு உயர்தரப்படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு அநுகூலமாயிருந்து அது விஷயத்தில் அவள் அநுதாபத்தைக்காட்டி வந்து, அவளிறக்குமுன் கணிதசாஸ்திர சம்பந்தமாகவும் மற்றசாஸ்திரங்கள் சம்பந்தமாகவும் அவளிடத்திருந்த அருமையான புஸ்தகங்களும், சாஸ்திரக் கருவிகளுமடங்கிய அவளுடைய சொந்தப் புஸ்தக சாலையைப்பெண்களின் உயர்தர வித்தியாப்பியா சார்த்தம் அவர்களுக்கென்று பிரத்தியேகமாக ஏற்பட்டுள்ள 'கர்டன் காலேஜ்' என்னும் ஸ்திரீ வித்தியாசாலைக்கு அளித்து மரணசாதன மெழுதி வைத்துக் சென்றாள். அவள் இப்படி யளித்த புத்தகங்கள் அவ்வித்தியா சாலையில் இன்றைக்கும்பெருமையாகக்கொண்டாடப்படுகின்றன. அவளளித்த புஸ்தகங்க ளெல்லாம் அதற்காகச் செய்த நேர்த்தியான கண்ணாடியறையில்அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வறையின்மேல் 'சான்ட்ரி' யென்னும் சிற்பசாஸ்திரி செய்த மேரி ஸோமர்வில் அம்மாளின் மார்புவரையிலுள்ளள பதுமையின் பிரதியுருவமொன்றுஎடுத்துவைக்கப்பட்டிருக்கிறது. அழகும்நேர்த்தியுமான அவள் முகச்சாயலில் பெண் தன்மையும் புத்திவன்மையும் விர்த்தியடைந்து ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வின்றி இரண்டுமிசைந்துபிரகாசிக்கும்தோற்றமானது அவ்வித்தியாசாலையில் படிக்கும் மாணாக்கர்களுக்கு பெண்மையின்குணம் குறி சக்திகள்யாவும் பூர்ணவிர்த்தியடைந்து விளங்கும் பெண்வடிவைக்காட்டும் மனோ பிம்பக் காக்ஷியாக விளங்குகிறது.

மிஸ்ஸஸ் ஸோமர்வில் 'வான சூக்ஷ்மம்' என்னும் புஸ்தகமெழுதிப் பிரசுரித்தபின் 'ஜடத்துவ சாஸ்திரங்களின்சம்பந்தம்'என்று ஒருபுஸ்தகமும், 'பௌதிகபூகோளம்' என்கிற புஸ்தகமும்,'அணுக்களையும் அணுதரிசன முறையையும் குறித்த சாஸ்திரத்தை விளக்கும் நூல்' ஒன்றும் எழுதிப் பிரசுரித்தாள்.

கடைசியாகக் குறித்த புஸ்தகம் அவளுடைய 80-வது வயதுக் கப்புறம் எழுத ஆரம்பிக்கப்பட்டது. அவளுடைய மனோசக்திகள் அவள் விசேஷவயோதிகமடைந்த காலம்வரையில் குறைவுபடாம லிருந்தன. அவள் சாகும் நாள்வரையில்அவளுடைய தேகதிடனும் விசேஷமாகவே யிருந்தது. ஸ்திரீகள் மனோமுயற்சி செய்தால் அவர்கள் தேகபலனுக்குக் குறைவு வருமென்று சொல்லும் போலி வாதத்தின் பிசகை ரூபிக்க அவள் பிரத்தியக்ஷ உதாரணமாக விளங்கினாள். அவள் பிராணன் உடலைவிட்டுப் பிரிந்த அன்றைத் தேதிவரையில் அவள் புஸ்தகமெழுதுவதிலும் வாசிப்பதிலும் வேலையாக இருந்துவந்தாள். இப்படி அவளுடைய கடைசிவாழ்நாள்வரையில 'Theory of Differances' என்னும் கணிதசாஸ்திர நூலெழுதுவதும், 'Quaternions' என்பதைக்குறித்த ஒரு கணிதசாஸ்திர புஸ்தகம் வாசிப்பதும் வேலையாக இருந்தாள். அவளுடைய அந்திகாலத்தில் அவளுக்குக் காதுகேட்காம லிருந்தது ஒன்றைத் தவிர வேறு தேகசக்திக்குறைவு ஒன்றுமில்லாமலிருந்தாள். அவள் சாகுங் காலம்வரையில் வெளியில்போய் நடமாடி அவள் ஜீவனை அநுபவிக்கக் கூடியவளாக விருந்தாள். அவள் சாவதற்குச் சற்றுமுன் தன்ஞாபகக் குறிப்புப் புஸ்தகத்தில் தனக்கு யாதொரு குறைவுமில்லை

யென்றும் தான் சாகப்போகிறகாலம் நெருங்கிவிட்டதால் தான் இவ்வுலகைவிட்டுப் போகச் சித்தமாயிருக்கிறதாகவும் எழுதி, அவளுடைய பெண் அவள்கிட்டஇருந்து செய்துவரு முபசாரங்களைப்பற்றிச் சந்தோஷப்பட்டவளாகக் குறிப்பிட்டுக் கடைசியில் "நான் பூர்ணசந்தோஷமுள்ளவளா யிருக்கிறேன்" என்று குறித்து அவள் ஞாபகக்குறிப்பை மூடிவிட்டு 1872-ளுத்தில் நவம்பர்மீ 29வ இராத்திரி தூங்கிக்கொண் டிருக்கையில் தேக வியோகமானாள். அவள் இறந்தபொழுது அவளுக்கு வயது 92. அத்தனை வயதுசென்ற காலத்திலும் அவள் பொதுவிஷயங்களைப்பற்றி பால்யப்பிராயத்தில் எவ்வளவு அக்கறை யெடுத்துக்கொண்டு வந்தாளோ அவ்வளவு அக்கறையெடுத்துக்கொண்டதாக அவளுடைய தினசரி ஞாபகக் குறிப்புப்புஸ்தகத்தில் அவள்கடைசிநாட்களில்குறிப்பிட்டிருக்கும் சில குறிப்புகளால் தெரியவருகிறது. "எனக்கு வயது மிக அதிகமாக ஆய்விட்டபோதிலும் அப்போதப்போது நடக்கும் சம்பவங்களில் எப்போதும்போல் நான் அக்கறை யெடுத்துக்கொள்பவளா யிருக்கிறேன். சமுத்திரத்தில் காணப்படும் நீரோட்டங்களின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடிக்கப் பிரயாணப்பட்டுப் போயிருக்கிறார்களே, அவர்கள் முயற்சியின் பலன் இன்னதென்று தெரிகிறவரையில் ஜீவித்திருக்க மாட்டேனேயென்று விசனப்படுகிறேன். சுக்கிரனுடைய ஓட்டத்தினால் சூரியனுக்கும் சந்திரனுக்குமுள்ள தூரத்தைக் கண்டுபிடித்துத் தீர்மானிக்கச் செய்துவரும் முயற்சியின்பலனையும் நீலநதியின் முகத்துவாரத்தைக் கண்டுபிடிக்கப் போயிருக்கும் டாக்டர் லிவிங்ஸ்டனுடைய பிரயாணம் சித்திபெற்றதையும் கேட்க ஜீவித்திருக்கமாட்டேனேயென்றும் விசனமா யிருக்கிறது. எல்லாவற்றையும் விட ஆபிரிகாவில் அதி குரூரமான அடிமைவியாபாரம் நடக்கிறதாகத்தெரியவந்து அதை அடக்குவதற்காக 'ஸர் பார்ட்ல் ப்ரீர்' என்பவர் படைசூழப் பிரயாணப்பட்டுப்போயிருக்கிறாரே அதன் முடிவைக் கேட்கும் வரையி லிருக்கமாட்டேனேயென்று மிகவும் விசனிக்கிறேன்"—என்று இப்படி அனேகம் குறிப்புகள் எழுதியிருக்கிறாள். நமக்குள் படித்த புருஷர்களும் அனேகர் வயிற்றுப்பாட்டைப்பார்த்துக் கொண்டு 'கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்' என்றிருக்கிறார்கள். இவள் சாகப்போகிற கிழமாயிருந்தாலும் பொதுஜனாபிமானத்தாலும் வித்தியாபிமானத்தாலும் அவள் ஆயுள்காலத்தில் நிறைவேறாத சில பொது விஷயங்கள் நிறைவேறின சங்கதி கேட்டுவிட்டுப் போவதற்கில்லையே யென்று விசனமுறுவதைக் காண்கிறோம்.

C. V. S.

நடுவேனிற்கனவு.

5-ம் அங்கம்.

(331-வது பக்கத்தொடர்ச்சி முடிவு.)

[பிலாஸ்ட்ரேட் பின்னும் வருதல்.]

பிலாஸ்ட்ரேட்:—என்னாண்டவனே, கூத்தின் ‡முன்னுரைசித்தமாயிருக்கிறது; உத்தரவானால்தொடங்கச்சொல்லுவேன்.

தீஸியுஸ்:—முன்னுரை ஆரம்பிக்கப்படுக. (உள்ளில் காளம் முதலிய வாத்தியம் கோஷித்தல்)

[முன்னுரைகூற க்வின்ஸ் வருதல்.]

முன்னுரை:—*நாங்கள் செய்வது அபசாரமென்னின், நாங்கள் வருவது அவ்வெண்ணத்தோடே. அன்று எங்களுக்குள்ள அற்பத் திறமையைக்காட்ட உண்மையான ஆவலோடு வருவோம்; எங்கள் உத்தேசமதுவே; யோசியுங்கள்; வருகிறோம், செட்ட எண்ணத்தோடு. வரவில்லை நாங்கள் உங்களைத் திருப்திப்படுத்தக்கருதி. உங்கள் சந்தோஷத்லத நாடின

* க்வின்ஸ், தான் கருதியதற்கு நேர் விரோதமான பொருள் தோன்றும்படி, முன்னுரையைப் பதங்களினிடையே தாறுமாறாய் நிறுத்திக் கூறுகிறான். அவன் கருதியது இது:—நாங்கள் செய்வது அபசாரமென்னின், நாங்கள் வருவது அவ்வெண்ணத்தோடன்று. எங்களுக்குள்ள அற்பத் திறமையைக்காட்ட ஆவலோடு வருவோம். எங்கள் உத்தேசம் அதுவே. யோசியுங்கள்; வருகிறோம். கெட்டவெண்ணத்தோடு வரவில்லை. நாங்கள் உங்களைத் திருப்திபடுத்தக் கருதி உங்கள் சந்தோஷத்தை நாடினவர்கள் இங்குவரவில்லை. உங்களை வருத்துவதற்கு. ஆட்டக்காரர்கள் இதோ இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டத்திலிருந்து நீங்கள் அறியக் கூடிய வற்றை அறிந்து கொள்ளலாம்.

‡ கூத்துத்தொடங்குமுன் அவை யடக்கமாக அரங்கத் துள்ளோரை நோக்கிச் சொல்லப்படுவது. முன்னுரை.

வர்கள் இங்கு வரவில்லை. உங்களை வருத்துவதற்கு ஆட்டக்காரர்கள் இதோ இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டத்திலிருந்து நீங்கள் அறியக்கூடியவற்றை அறிந்து கொள்ளலாம்.

தீஸியுஸ்:—இவன் நிறுத்த வேண்டிய விடத்து நிறுத்தாமல் தாறுமாறாய்ச் சொல்லுகிறான்,

லைஸாண்டர்.—முரட்டுக் குதிரைக்குட்டியை நடத்துவதுபோல அவன் இம்முன்னுரையை நடத்தினான்; நிறுத்தும் முறையே அறியான். இதிலிருந்து ஒரு நீதி விளங்குகின்றது: பேசுவது மாத்திரம் போதாது சரியாயும் பேசவேண்டும்.

ஹிப்பாலிடா:—உண்மையில், அவன் முன்னுரையை வாசித்தது குழந்தை புல்லாங்குழல் வாசிப்பதுபோலிருந்தது; ஒழுங்குபடுத்தப்படாத வெறுஞ் சத்தமே.

தீஸியுஸ்.—அவன் பேச்சு ஒரு பின்னற் சங்கிலிபோலிருந்தது. எங்கும் பழுதில்லை, ஆனால் எல்லாம் தாறுமாறு. அடுத்தவன் யார்?

[பிரமஸ் திஸ்பி, சுவர், நிலவு, சிங்கம் வருதல்.]

விவரஞ் சோல்வோன்:—குலமக்களே, இக்காட்சியைக்கண்டு நீங்கள் ஒருவேளை அதிசயிப்பீர்கள். எல்லாம் வெளியாகும் வரையில் உங்களுக்கு அதிசயமாகவேயிருக்கும். நீங்கள் அறிய விரும்புவீர்களாயின், இம்மனிதன் தான் பிரமஸ்; இவ்வழகுள்ளமாது திஸ்பி; சுண்ணாம்பும், மண்ணும் மணலுஞ்சேர்ந்த சாந்தும் பூசிக்கொண்டிருக்கும் இவன்தான் சுவர். இத்துஷ்டச்சுவர்தான் குறுக்கேநின்று காதலர்களைப் பிரித்து வைத்திருந்தது. இச்சுவரின் துவாரத்தின் வழியாக, ஐயோ! பாவம்! தங்கள் இரகசியங்களை ஒருவர் காதுக்குள் ஒருவர் ஓதித் திருப்தியடைந்திருந்தார்கள். லாந்தரும், நாயும், ஒரு கட்டுச்சுள்ளியும் கொண்டிருக்கும் இவன் நிலவு; நிலவில் இக்காதலர்கள் நைனஸ்ஸின் ஸமாதி அருகில் யாதொரு குற்றமுமின்றிச் சந்தித்துத் தம் நேசத்தைப்பாராட்ட நிச்சயித்துக்கொண்டார்கள். சிங்கமென்று சொல்லப்படும் இப்பயங்கரமான மிருகமானது இரவில் முதலில் வந்த உண்மையுள்ள திஸ்பியை வெருட்டித்துரத்தியது. அவள் ஓடுகையில் தன் மேற்றுணியைக் கீழே நழுவவிட, அத்துணியைச் சிங்கம் தன் உதிரம் நிறைந்த வாயாற் கவ்விக்கறையாக்கிற்று. உடனே தைரியமுள்ள இனிய வாலிபனான பிரமஸ் அங்கு வந்து தன் அன்புள்ள திஸ்பியின் மேற்றுணியைக் கண்டு அவள் இறந்தாளென்று நிச்சயித்து உடைவாளையுருவித் தன் மார்பைப்பிளந்து கொதிக்கும் இரத்தத்தை வெளியாக்கினான். பின்னர் முசுக்கட்டைச் செடி மறைவில் நின்ற திஸ்பி அப்பால் வந்து அவனைக்கண்டு அவன் மார்பினின்றும் வாளைப்பிடுங்கித் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். இனி மற்றவைகளைப்பற்றிச் சிங்கமும், நிலவும், சுவரும், இரண்டு காதலர்களும் உங்கள் முன் வந்து எல்லாவிவரமும் சொல்லுவார்கள். (விவரஞ்சொல்லுபவன், திஸ்பி ங்கம், நிலவுபோதல்.)

தீஸியுஸ்:—சிங்கமும்பசேகிறதானால் அதிசயமாயிருக்கும்.

டேமிட்ரியஸ்:—அதிசயம் ஒன்றுமில்லை,என்றாண்டவனே! கழுதையில் அநேகம் பேசமானால் சிங்கத்தில் ஒன்று பேசாதோ?

சுவர்:—இக்கூத்தில், ஸ்நௌட் என்று பெயருள்ள என்னுடைய பங்குக்குச் சுவர்வேஷம் வாய்த்தது. நான் துவாரமுள்ள சுவரென்றும் அத்துவாரத்தின் வழியாகப் பிரமஸ்ஸும் திஸ்பியும் தங்கள் அந்தரங்கங்களைப்பேசிக்கொண்டுவந்தார்களென்றும் பாவித்துக்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இச்சுண்ணாம்பும், கல்லும்,மண்ணும் மணலுஞ் சேர்ந்த சாந்தும், நான் சுவரென்பதைச்செவ்வையாய்க் காட்டுகின்றன; இத்துவாரத்தின் இருபுறமும் பாருங்கள். இதன் வழியாகத்தான் பயந்த அக்காதலர்கள் தம் இரகசியங்களைப் பேசிக்கொண்டு வந்தார்கள்.

தீஸியுஸ்:—சுண்ணாம்பும் மயிரும் இதிலும் செவ்வையாகப் பேசுமோ?

டேமிட்ரியஸ்.—இது வெகு விசித்திரமான சுவர். இப்படிச்சுவர் பேசக் கேட்டதேயில்லை.

தீஸியுஸ்.—பிரமஸ் சுவரினருகில் வருகிறான்; பேசாதிருங்கள்.

பிரமஸ்.—ஓ, ப்யங்காரமான இரவே,ஓ! மைபோல் இருண்ட இரவே, பகலில்லாத காலத்துத் தோன்றுமிரவே! ஓ இரவே, எனது திஸ்பி தான்சொன்னதை மறந்துவிட்டாள்போல் தோற்றுகிறதே. ஓ சுவரே, அவள் தந்தையின் நிலத்திற்கும் என்னிலத்திற்கும் இடையேயுள்ள இனிய சுவரே, காண்போர் காதலிக்குஞ்சுவரே, உன் துவாரத்தைக்காட்டு, நான் எட்டிப்பார்க்கிறேன். (சுவர் இரண்டு விரல்களை உயர்த்தித் துவாரம்போற் காட்டல்.) மரியாதையுள்ள சுவரே, இந்நன்றியை மறவேன். இதற்கு உன்னை வருணபகவான் காப்பாற்றுவாராக. ஆ! நான்பார்ப்பது என்ன? என் திஸ்பியைக்காணேனே. ஓ! துஷ்டச்சுவரே, உன் வழியாய் என் இன்பத்தைக்காணேன். என்னை இவ்வாறு மோசஞ் செய்ததற்கு உன் கல் நாசமுறுவதாக.

தீஸியுஸ்.—இச்சுவர் அறிவுள்ளதாகையால் திருப்பித்திட்டுமென்று தோற்றுகிறது.

பிரமஸ்.—ஐயா, அப்படித்திட்டாது. "மோசஞ் செய்ததற்கு உன் கல் நாசமுறுவதாக" என்பது திஸ்பியின் *இறுதிச்சொற்குறிப்பு. இப்பொழுதுஅவள் வருவாள்; நான் சுவரின்வழியாய் அவளைப்பார்ப்பேன். எல்லாம் நான் சொல்லியபடியே நேரும்; பாருங்கள். அதோ அவள் வருகிறாள்.

திஸ்பி.—ஓ சுவரே, என்னழகுள்ள பிரமஸ்ஸையும் என்னையும் இவ்வாறு பிரித்திருப்பதற்கு என்ன மூளையை எத்தனையோ முறை கேட்டிருக்கிறாய். மயிராலும் சுண்ணாம்பாலும் சேர்க்கப்பட்ட உன்னுடைய கற்களை என்னுடைய சிவந்த உதடுகள் எத்தனையோ முறை முத்தமிட்டிருக்கின்றன.

பிரமஸ்.—ஒரு சத்தத்தைப் பார்க்கிறேன். நான் இப்பொழுது துவாரத்தின் அருகிற்போய்த்திஸ்பியின் முகத்தைக் கேட்கக் கூடுமோ வென்று அறிகிறேன்.

திஸ்பி.—நீ என் காதலனோ? காதலன்தானென்று எண்ணுகிறேன்.

பிரமஸ்.—நீ எவ்வாறு எண்ணினும் நான் உன்னழகுள்ள காதலனே †லிமாண்டரைப்போல் உறுதியுள்ள காதலன்.

திஸ்பி.—நானும் ஹெலனைப்போல் உண்மையான அன்புள்ளவள்.

திஸ்பி.—இவ்விழிந்த சுவரின் துவாரத்தின் வழியாக எனக்கு ஒரு முத்தங்கொடு.

திஸ்பி.—நான் சுவரின் துவாரத்தை முத்தமிடுகிறேன் உன் உதட்டில். முத்தங் கொடுக்கவில்லை.

பிரமஸ்.—நீ இப்பொழுது என்னை நைனஸ்ஸின் ஸமாதி அருகிற் சந்திப்பாயா?

திஸ்பி.—உயிர் இருக்குமோ போகுமோ, எவ்விதத்திலும் நான் உடனே வருவேன்.

(பிரமஸ்ஸும் திஸ்பியும் போதல்.)

சுவர்.—சுவராகிய என் காரியம் ஆய்விட்டது. ஆதலால் சுவர் போகிறேன். (போதல்.)

தீஸியுஸ்.—அடுத் திருந்தவர்களைப் பிரித்திருந்த சுவர் இடிந்து போயிற்று.

டேமிட்ரியஸ்.—சுவர் இப்படி ஒட்டுக்கேட்குமானால் அப்படியிடிக்காமல் தீராது, என்றாண்டவனே.

ஹிப்பாலிடா.—இத்தனை பைத்திய முள்ளதை நான் எங்குங் கேட்டதில்லை.

தீஸியுஸ்.—நாடகங்களில் மிகச் சிறந்த வேடமும் முடிவில் வெறுந் தோற்றந்தானே. மிக இழிந்ததும் கற்பித சக்தியால் தன் குறை நீங்கப்பெற்று, வெறுந் தோற்றத்திலும் இழிந்ததாக ஆகாது.

ஹிப்பாலிடா.—உம்முடைய கற்பித சக்தியால் அப்படி யாகவேண்டுமேயன்றி அவர்களுடைய கற்பிதசக்தியாலன்று.

தீஸியுஸ்.—அவர்கள் தம்மைப்பற்றி எண்ணுவதிலும் இழிவாக நாம் அவரைப்பற்றி எண்ணாதபடி, நம் கற்பிதசக்தியை அவர்களிடத்து உபயோகப்படுத்தினாலே போதும். அப்பொழுது அவர்கள் சிறந்தவர்களாகவே காணப்படுவோர்கள். மனித உருவத்திலும் சிங்க உருவத்திலும் இதோ இரண்டு சிறந்த மிருகங்கள் வருகின்றன.

[சிங்கமும் நிலவும் வருதல்]

சிங்கம்.—தரையில் ஊரும் மிகச்சிறிய சுண்டெலியைக்கண்டும் பயப்படும் படியான மெல்லிய குலமாதர்காள், சிங்கம் கோபத்தோடு கர்ஜிக்கும் பொழுது ஒருவேளை மிக நடுங்குவீர்கள். அப்பொழுது மூட்டுவேலைக்காரனாகிய நான்தான் அக்கொடிய சிங்க வடிவங்கொண்டு வந்திருக்கிறேனென்றும், வேறு சிங்கமில்லையென்றும் நினைத்துக்கொள்ளுங்கள். என்னைச் சிங்கமென்று நினைப்பீராயின் அதைவிட எனக்கு வேறு துக்கமில்லை.

தீஸியுஸ்.—வெகு சாதுவான மிருகம்; நல்ல பகுத்தறிவுடையது.

டேமிட்ரியஸ்.—நான் கண்டவற்றுள் இவ்வளவு நல்ல மிருகம் எங்குமில்லை.

லைஸாண்டர்.—இச்சிங்கம் சௌரியத்தில் பிரத்தியக்ஷ †நரி.

தீஸியுஸ்.—உண்மையே; விவேகத்திலோ, சாட்சாத் வாத்து. நன்று; சந்திரன் சொல்வதைக்கேட்போம்.

* நாடகத்தில் ஒவ்வொருவனும் முந்திப் பேசுபவன் பேச்சின் இறுதிச்சொல்லைத் தான் பேசத்தொடங்குவதற்கு ஒரு குறிப்பாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வது வழக்கம்.

† லிமாண்டர்...ஹெலன்.—பிரமஸ்ஸும் திஸ்பியும் லியாண்டர், ஹீரோ என்ற பெயர்களைத்தப்பாய் லிமாண்டர் ஹெலன் என்று கூறுகிறார்கள். லியாண்டர் என்பவன் தன் காதலியாகிய ஹீரோவைக் காணவேண்டி இரவுதோறும் சமுத்திரக் கால்வாயை நீந்திச்செல்வதுவழக்கமாயிருந்தது. அவ்வாறு நீந்துகையில் ஒருநாளிரவில் நீரில் மூழ்கி இறந்துவிட்டான். அதையறிந்து ஹீரோவும் [illegible] குதித்துவிட்டாள்.

† நரி-மிக்க தந்திரமுள்ளது; சௌரியமேயில்லாதது. [illegible] மௌட்டியத்திற் பெயர்போனது.

சந்திரன்.—இந்த 'லாந்தர்' கோடுடைய பிறை.

டேமிட்ரியஸ்.—அப்படியாயின், அவன் தன்*தலையிற் கொம்பைத் தரிக்கவேண்டும்.

தீஸியுஸ்.—அவன் இளம்பிறையல்லன்; பூரண சந்திரனுதலின் அவன் கொம்புகள் மண்டலத்துள் மறைந்திருக்கின்றன.

சந்திரன்.—இந்த 'லாந்தரை'க் கோடுடைய சந்திரனுகவும் என்னை அச்சந்திரனிலுள்ள மனிதனுகவும் கொள்ளல் வேண்டும்.

தீஸியுஸ்.—எல்லாவற்றிலும் முதிர்ந்த பைத்தியமிது. இந்த லாந்தருள் இம்மனிதனை அடைக்கவேண்டும். அஃதில்லையாயின், இவன் சந்திரனிலுள்ள மனிதனுவதெப்படி?

டேமிட்ரியஸ்.—மெழுகுதிரி முற்றும் எரிந்து விட்டதால், அம்மெழுகுதிரி தன்னை யெரிக்குமெனப்பயந்து அவன் லாந்தருள் நுழையத் துணியவில்லை.

ஹிப்பாலிடா.—இந்தச்சந்திரனைக்கண்டதுபோதும்; வெறுப்புற்றேன். வேஷம் மாறினுல் நலமாயிருக்குமே.

தீஸியுஸ்.—தேய்பிறையின் சிற்றெளியையுடைய இவன் போகுந்தருணம் வருகின்றது. ஆயினும் மரியாதைக்கு குறித்தகாலம் வரும்வரையிற் பொறுப்போமே.

லைஸாண்டர்.—சந்திரனே, மேற்சொல்லுவதைச் சொல்லலாம்.

சந்திரன்.—நான் சொல்வது இதுவே, இந்த லாந்தர் சந்திரன்; நான் அதிலுள்ள மனிதன்; இச்சுள்ளிக்கட்டு என்னுடைய சுள்ளிக்கட்டே, இந்நாய்எனது நாயே.

டேமிட்ரியஸ்.—இவையெல்லாம் சந்திரனுள் இருப்பனவாதலால், லாந்தரினுள்ளும் இருக்கவேண்டும். சும்மா இருங்கள்! இதோ திஸ்பி வருகிறுள்.

திஸ்பி.—இதுதான் நைனஸ்ஸின் ஸமாதி. என் காதலன் எங்கே?

சிங்கம். (கர்ஜித்தல்) ஓ— (திஸ்பி ஓடுதல.)

டேமிட்ரியஸ்.—சிங்கம், நல்ல கர்ஜனை.

தீஸியுஸ்.—திஸ்பி, நல்ல ஓட்டம்.

ஹிப்பாலிடா.—சந்திரனே, நல்ல பிரகாசம், உண்மையிற் சந்திரன் அழகாய்ப் பிரகாசிக்கின்றது.

(சிங்கம் திஸ்பியின் மேற்றுணியை வாயாற் கவ்வி உதறி யெறிந்து ஓடுகின்றது.)

தீஸியுஸ்.—சிங்கம், எலியை உதறுவதுபோல் நல்ல உதறல்.

லைஸாண்டர்.—சிங்கம் போய்விட்டது.

டேமிட்ரியஸ்.—இதோ பிரமஸ் வந்தான்,

[பிரமஸ் பின்னும் வருதல்.]

பிரமஸ்.—இனிய சந்திரனே, உனது வெயிலைக் கண்டு நிரம்பச் சந்தோஷிக்கிறேன்; அழகு நிறைந்து பொன்னிறமாய் ஒளிவீசும் உனது சோபையால் என்னுண்மையுள்ள திஸ்பியின் உருவத்தைக் காண எண்ணுகிறேன். நில்; ஆ! கொடுமை! அடா, ஏழை ஆயுதபாணியே, இப்பெருந்துக்கத்தை உற்றுப்பார். ஐயோ கண்களே, நீர் பார்க்கின்றீரோ? இஃது எவ்விதமாய் இருக்கக்கூடும்? ஆ! என்னழகியதாராவே, ஓ என்னரும்பொருளே, இஃது உனது மேற்றுணியன்றோ? என்ன! இரத்தக்கறை பட்டிருக்கிறதே, ஓ! பயங்கரமான காலபுருஷர்காள், வாருங்கள்; காலஅதிதேவதைகாள் வாருங்கள்; என்னுயிரை வாங்குங்கள், நசுக்குங்கள்; நாசமாக்குங்கள்; எல்லாவற்றையும் முடித்து ஓய்வுற்றிருக்கச் செய்யுங்கள்.

தீஸியுஸ்.—ஒருவனுக்கு அருமைத்தோழன் இறந்திருந்தால் மட்டும், இவன் காட்டும் வருத்தப்பாவனை ஒருவேளை அவனுக்குத் துக்கத்தை யுண்டாக்கலாம்.

ஹிப்பாலிடா.—உண்மையில் எனக்கு அவனைக் காண்பதிற் பரிதாபமுண்டாகின்றது.

பிரமஸ்.—ஓ கடவுளே, சிங்கத்தை என் படைத்தாய்? அவ்விழிந்த மிருகம் எனது அரிய நறுமலரைக்கொய்துவிட்டதே. விருப்பமும் அன்பும் முகமலர்ச்சியுமுள்ள மாதருள் அவள் பேரழகுடையவளாய் வாழ்கின்றவள். இல்லை, இல்லை வாழ்ந்தவள். நான் கண்ணீர்பெருகி இறவேனே? ஓ! வாளே, இரத்தாசயம் துள்ளிக்குதிக்கும் பிரமஸ்ஸின் இடமார்பைப் பிளப்பாயாக. (தன்னைத்தான் குத்திப்பிளந்து சொன்னல்.) நானிதோ சாகிறேன்; இறந்தேன், பறந்து போய்விட்டேன்; என் ஆத்மா இப்பொழுது ஆகாயத்திலிருக்கின்றது. * நாவே உன் ஒளியை இழப்பாயாக, சந்திரனே நீ ஓட்டம் பிடிப்பாயாக. (சந்திரன் போதல்.) நான் சாகிறேன், சாகிறேன், சாகிறேன், (சாதல்.)

தீஸியுஸ்.—இரணவைத்தியன் உதவியால் அவன் இப்பொழுதும் பிழைக்கக்கூடும்.

* கற்பழிந்த மனைவியையுடையவனைத் தலையிற் கொம்புடையனென்று சொல்வதுண்டு.

* நாவே என்றிருப்பது இவ்விடத்தில் முற்றிலும் அசம்பந்தமென்றும் அதற்குப்பிரதியாகச் சூரியனே என்றிருந்தால் பொருத்தமாயாக இருக்குமென்றும் ஒருவர் சொல்லுகிறுர்,

ஹிப்பாலிடா.—திஸ்பி திரும்பிவந்து தன் காதலனைத் தேடிப்பார்க்குமுன் சந்திரன் மறைந்துவிட்டதே.

தீஸியுஸ்.—அவள் அவனை நட்சத்திரப் பிரகாசத்தால் கண்டுகொள்வாள். இதோ அவள் வருகிறுள்: அவளுடைய துக்கத்தோடு கூத்து முடியும்.

[திஸ்பி இன்னுமொருமுறை வருதல்.]

ஹிப்பாலிடா.—அவள் இந்தப் பிரமஸ்ஸின்பொருட்டுத் தன் பிரலாபத்தை அதிகமாய் நீட்டாமற் குறுக்குவாளென்றெண்ணுகிறேன்.

டேமிட்ரியஸ்.—இருவரும் தராசுமுனையாய் நிற்பார்கள். ஒருவருக்கொருவர் தாழ்விலர். அவனைப் புருஷனுகவும் இவளைப் பெண்ணுகவும் நாம் நினைப்பதற்குக் கடவுள் தான் நம்மைக்காப்பாற்ற வேண்டும்.

லைஸாண்டர்.—அவள் தன் இனிய கண்களால் அவனைக்கண்டு கொண்டாள்.

டேமிட்ரியஸ்.—இதோ அவள் பிரலாபிக்கத்தொடங்குகிறுள்

திஸ்பி.—என் நேசமே, உறங்குகிறுயோ? ஓ! பிரமஸ்ஸே, எழுந்திரு. பேசு; பேசு; முற்றும் ஊமையானுயோ? இறந்தாயோ? உன் இனிய கண்களை மூடுவதற்கு ஒரு சமாதி சமைக்கவேண்டும். உன் வெள்ளுதடும், செம்மூக்கும், மஞ்சட்கன்னமும்போயினவே. காதலர்காள், கதறுங்கள். ஆ! ஆ! அவன் கண்கள் வெண்காயம்போல் பைந்நிறமாயிருந்தனவே. காலாந்தகிகாள், அவன் சீட்டைக்கிழித்தீரோ? என்னருகில் வாரும்; பால்போலும் வெளுத்த உமது கையை என்னுதிரத்தில் நனையும். ஓ! நாவே, நீபேசாதே. உறுதியுள்ள கத்தியே, நீ வா; என்மார்பை இரத்தமாக்கு. (தன்னைத்தான் குத்திக்கொள்ளல்.) திஸ்பி முடிகிறுள்; போய்வருகிறேன். நண்பர்களே, நன்மையுண்டாவதாக. (இறத்தல்.)

தீஸியுஸ்.—சந்திரனும் சிங்கமும் இறந்தவர்களை அடக்கஞ்செய்ய இருக்கின்றன.

டேமிட்ரியஸ்.—ஆம்; சுவரும் அதற்காகவே இருக்கிறது.

பாட்டம்.—(எழுந்து நின்று) இல்லை, இல்லை. அவருடைய நிலங்களுக்குக் குறுக்கே நின்றசுவர் அப்பொழுதே போய்விட்டது. எங்கள் கூத்தின் பின்னுரையைப் பார்க்கவேனும், எங்களுள் இருவர் சேர்ந்தாடும் குறக்கூத்தைப் பார்க்கவேனும் விருப்பமிருக்குமோ?

தீஸியுஸ்.—உங்கள் கூத்துக்குப் பின்னுரையே வேண்டுவதில்லை. அவரவர்கள குறைகளைப்பற்றி உபசாரஞ் சொல்ல ஆவசியகமில்லை. ஆட்டக்காரர் எல்லோரும் இறந்தபின் யார்மேற்குற்றஞ்சொல்லுகிறது. இக்கூத்தை யெழுதினேன் பிரமஸ்வேஷம் போட்டுத்திஸ்பியின் முழந்தாட் கச்சால் தன்னைத் தூக்கிக் கொண்டு இறந்திருந்தால் இதுநல்ல துக்கக்கூத்தாய் முடிந்திருக்கும்; உங்கள் பின்னுரை வேண்டுவதில்லை; குறக்கூத்தாட்டம் காண்போம். (ஆடுதல்.) அர்த்தஜாமமணி அடித்தாயிற்று; காதலர்கள் தத்தம் பள்ளியறையடையலாம். இது கந்தர்வர்களின் சஞ்சாரகாலம், இரவில் இதுவரையில் நாம் விழித்ததினுல் விடிந்தபின்பு நெடுநேரவரையில் உறங்குவோமென்று தோற்றுகிறது. இவ்வசம்பந்தக்கூத்துநமக்கு இரவில் இதுவரையில் நல்ல பொழுதுபோக்காயிருந்தது. இனிய தோழர்களே, படுத்துக்கொள்ளுங்கள். இப்படியே நாம் இப்பக்ஷம் முழுவதும் விருந்தும் கூத்துமாய்க் காலம் போக்குவோம். (போதல்)

[பக் வருதல்.]

பக்.—இப்பொழுது பசியால் வருந்தும் சிங்கம் கர்ஜிக்கின்றது. சந்திரனை நோக்கி ஓநாய் ஊளையிடுகின்றது. உடல்கனத்த உழவனே, கடிய வேலைசெய்து களைத்து உறங்கிக் குறட்டைவிடுகின்றுன். இங்கு எரிந்த கணப்புக்கட்டைகள் கனலுந்தழல்களாயிருக்கின்றன. சாகுருவியோ, உரக்கக் கத்தி நோயால் வருந்துபவனுக்கு *முகவாஸத்தை நினைப்பூட்டுகின்றது. கல்லறைகள் வாய்திறக்க அவற்றினின்றும் பேய்கள் புறப்பட்டு மயானத்து மெல்ல நடக்கும் சமயமிது. சூரியன்முன் நில்லாமல் கனவைப்போல் இருட்டைத்தொடர்ந்து சந்திரனுடைய இரதத்தோடு ஓடிச்செல்லும் கந்தர்வர்களாகிய நாமோ, இப்பொழுது களிகூர்ந்திருக்கிறோம். இப்பரிசுத்தமான இடத்தில் சுண்டெலிகூட இனி உலாவுதல்கூடாது. குப்பையைக் கதவின்மூலையினின்றும் கூட்டி ஒதுக்கி இவ்விடத்தைச் சுத்தியாக்க என்னைவிளக்குமாறுங்கையுமாய் இங்கு முன்னுற அனுப்பியிருக்கிறுர்கள்.

[ஓபரானும், டிடேனியாவும், பரிவாரங்களுடன் வருதல்.]

ஓபரான்.—இங்குத் தணலாயிருக்கும் நெருப்பை எரிய விட்டு வீடெங்கும் பிரகாசமுண்டாக்குக. செடியினின்றும் பறவை தத்திவருவதுபோற் கந்தர்வர்காள் நீங்களும் இங்குத் துள்ளி விளையாடுங்கள். நான் பாடும் இப்பாட்டை என்னுடன் பாடிக் குதித்தாடுங்கள்.

* முகவாஸம் என்பதை முகவாசை என்றும் முகந்தீடு என்றும் சிற்சிலர் வழங்குகிறுர்கள்; இது பிரேதத்தின்மேற் போடப்படும் துணி.

டிடேனியா,—ஒவ்வொரு பதத்திற்குமுரிய சுரத்தோடு தமது பாட்டுக்களை ஒருமுறை முதலில் பாடிக்காட்டும்; நாங்களும் அதன்படி பாடுவோம்; கைகோத்தாடுவோம்; எங்கள் காந்தர்வ சிங்காரநடனத்தால் இவ்விடத்தைப் புனிதமாக்குவோம்.

(பாட்டும், ஆட்டமும்.)

ஓபரான்.—பொழுது புலருமளவும் கந்தர்வர்கள் யாவரும் இவ்வரண்மனையிடத்தே உலவித் திரியவேண்டும். நாமிருவரும் அரசன் பள்ளியறையை அடைந்து அரசனரசிகளை வாழ்த்துவோம்; அவர் பெறும் நன்மக்கள் குறையாச் செல்வத்து வாழ்வாராக. அவ்வாறே மூன்று தம்பதிகளும் தம்முள் ஒருநாளும் பிரியாது மனமொத்திருப்பாராக. அவரது நன்மக்களும் உருவத்து வடுவின்றி அவக்குறிகளொன்றுமின்றி மகிழ்வுறுக. இப்பனித்துளியின் புரோக்ஷணையாற் கந்தர்வர் யாவரும் பரிசுத்தராய்ச் சென்று இவ்வரண்மனையின் ஒவ்வொரு மாடமண்டபத்துக்கும் சாந்திசெய்து வருவாராக. இவ்வரண்மனையாளுவோன் தெய்வ அருள் பெற்று இனிதுவாழ்வானாக; இனி நிற்கவேண்டுவதில்லை; யாவரும் போகலாம். விடியற்காலையில் எல்லோரும் என்னை வந்துகாணுங்கள். (ஓபரான், டிடேனியா, பரிவாரங்கள் போதல்.)

பக்.—கந்தர்வர்களாகிய நாங்கள் உங்களுக்குத் தவறிழைத்தோமாயின், நீங்கள் இதுவரையில் இங்கு உறங்கினீர்களென்றும், இங்கு கண்டனவெல்லாம் அவ்வுறக்கத்தில் உங்களுக்குண்டாய தோற்றமென்றும் கருதுக; அப்பொழுது தவறிழைத்தோமென்ற வருத்தம் மாறிவிடும். குலமக்காள், நாங்களியற்றிய இச்சிறு காரியம் கனவைப்போற் பயனிலதென்றெண்ணி எங்களிடத்துக் கடுமை பாராட்டாது இம்முறை பொறுத்தருள்வீராயின், நாங்கள் இனிச் செய்வனவற்றைத் திருந்தச்செய்து உங்களை மகிழ்விக்க முயல்வோம். நான் உண்மையுள்ள பேய் என்பது மெய்யானால், நீங்கள் இப்பொழுது எங்களைச் சீறுது ஒழிவதற்கு நாங்கள் விரைவில் உங்களுக்குத் தக்க கைம்மாறு உதவுவோம். உங்கள் முன் இன்னுமொரு முறைதோன்றச் செவ்விதாயாடி உங்களைமனமகிழ்விப்போம். இது தவறுமேல் பக்கைப பொய்யனென்று அழையுங்கள். நன்று; எல்லோர்க்கும் வந்தனம்; நான் போய்வருகிறேன். எம்மிடத்து வெறுப்பின்றி விருப்பமுடையீராயின் அதை மெய்ப்பிக்க இப்பொழுது என்முன் கைகொட்டிக் களியுங்கள். ராபின் இந்நன்றி மறவாது தக்க கைம்மாறு உதவுவான்,

(முற்றிற்று.)

எஸ். நாராயணஸ்வாமி அய்யர், பி. ஏ.

குடித்தனம் பண்ணுகிற மூன்று விதங்கள்.

2-வது, வரும்படிக்குச் சரியான செலவுசெய்கிறது.

(345-வது பக்கத்தொடர்ச்சி முடிவு.)

சத்தியவதிக்கு இப்படி வேலைக்காரர்களால் நேரிட்ட தொந்திரவையுந்தவிர தன்புருஷனுடைய குணமும் முன்போலில்லாமல் கொஞ்சம் வேறுபட்டதினாலும் சிலவேளைகளில் வருத்த முண்டாயிற்று.

இப்படியிருக்க ஒரு நாள் சத்தியவதி "மாமா இவ்விடத்திற்கு வந்து எவ்வளவு நாளாகிறது" என்று தன்புருஷனைக் கேட்டாள்.

தர்மசீலன்.—"நாமிப்பொழுதிருக்கும் மேலான ஸ்திதியையறிந்து நம்மையெப்படிப் பார்க்கிறதென்று சங்கோசப்பட்டுக்கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. ஆகையால் தான் அவர் இதுவரையில் வரவில்லை" என்றான்.

சத்தியவதி.—"இல்லை, இல்லை அவருடைய குண மதுவல்ல. நாம் அவருக்குச் சொல்லியனுப்பி இன்றைக்கு இவ்விடத்தில் தானே அவரை சாப்பிடச்சொன்னாலென்ன."

தர்மசீலன்.—"இன்றைக்குக் கூடாது. நான் என்னுடைய சிநேகிதர்களாகிய இரண்டு கனவான்களை நம்முடைய வீட்டில் சாப்பிட அழைத்திருக்கிறேன். ஆகையால் மாமாவுக்கு சௌகரியப்படாது."

சத்தியவதி.—"ஆனால் நாளையதினமவரை அழைப்போம்."

தர்மசீலன்.—"அப்படியே செய்: எனக்கு பூரண சம்மதம்" என்று சொல்லிவிட்டுத் தன்வேலைக்காரனை யழைத்துக்கொண்டு கடைக்குப் போய்விட்டான்.

சத்தியவதி சமையல் வேலை யெப்படியாகிறதென்றுபார்க்கச் சமையலறைக்குச்சென்றாள். இப்படிக்கு ஒவ்வொரு விருந்துக்கும் சத்தியவதி தன்னுடைய வேலைக்காரர்களிடத்தில் வெகு சங்கடப்பட்டு வேலை வாங்கிக்கொண்டு தானும் சிலவேளையில்வேலை செய்து வந்தாள். இப்பொழுது சமையலறையிலிருக்கும் பொழுது தெருக்கதவை யாரோ வெகு பலமாயிடிக்கக் கண்டு தன்னுடைய வேலைக்காரியை யனுப்பி ஒருவரையும் உள்ளே விடாமல் தான் வீட்டிலில்லை யென்று சொல்லிவிடும்படி சொன்னாள். வேலைக்காரி சென்ற கதவைத்திறந்தவுடனே யாரோஒருவன் அவள் தடுத்ததைக் கவனிக்காமல் உள்ளே வருவதைக் கண்டு, இப்படி வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது அகப்பட்டுக்கொண்டோமே யென்று வெகு வெட்கமடைந்து சத்தியவதி தனக்கெதிரிலிருந்த வொரு அறையில் புகுந்து ஒளிந்து கொண்டாள். உள்ளேசென்ற பிறகு தன் மாமாவின் குரலைக்கேட்டாள்.

மாமா.—"அவள் வீட்டிலில்லை யென்பது நிச்சயந்தானா?"

வேலைக்காரி.—"ஆம் அய்யா, அவள்வெளியில் போகும்போது நான்பார்த்துக்கொண்டிருந்தேன்."

மாமா.—அவள் போய் எத்தனை நாழிகை யாகிறது?

வேலைக்காரி.—"ஒரு மணியிருக்கும்."

மாமா.—ஆனால் சீக்கிரம் வந்துவிடுவாள். நான் இங்கே யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

வேலைக்காரி.—அப்படியல்ல, சாப்பாட்டு வேளைவரையில் வரமாட்டேனென்று என் எசமானிசொல்லிவிட்டுப்போனாள்.

மாமா.—இதென்ன. இங்கே ராஜாக்கள் வந்து சாப்பிடப்போவதுபோல் சமையலாகியிருக்கிறதே?

வேலைக்காரி.—கொஞ்சம் சிரித்துக்கொண்டு "இல்லை' இரண்டு, மூன்று சிநேகிதர்கள்தான்" என்றாள்.

இப்படியிவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்ட சத்தியவதி பயத்தினால் இன்னது செய்கிறதென்று ஒன்றுந்தெரியாமல் திகைத்து நின்றாள். அவளுக்கு தன்னுடைய மாமாவின் சத்தியந்தவறாத குணங்களெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆகையால் வீட்டிலில்லை யென்றால் ஏதோ வேலையாயிருக்கிறாளென்று சிலர் வழக்கமாய் அர்த்தம்பண்ணிக்கொள்ளுவது போல அவர் செய்யமாட்டாரென்பது அவளுக்கு நன்றாய்த் தெரிந்தது. வேலைக்காரியோ கொஞ்சம் பொய்சொல்லும் படிதான் சொல்லியிருக்க அதிகப்பொய் சொல்லித்தன்னையு மப்பொய்க்குட்படுத்தி விட்டாள். ஆகையால் என்ன செய்கிறதென்று வெருபயப்பட்டுக்கொண்டு சன்னல் வழியாய் வெளியே குதித்துப்போய்விடலாமா வென்று பார்த்தாள். ஆனால் சன்னல் வெகு உயரமாயிருந்தது. இப்படியிருக்க மாமா தன்பிரம்பை மூலையில் வைத்துவிட்டு அங்கிருந்தஒரு சன்னலில் உட்கார்ந்துகொண்டு வேலைக்காரியை தாகத்துக்குத் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார். சத்தியவதி கடைசியில் தான் சும்மா விருந்து விட்டால் மாமா சீக்கிரத்தில் போய்விடுவாரென்று நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது, மாமா, அன்றைய [illegible] பத்திரிகையைக் கேட்டு வாங்கிப்படிக்க ஆரம்பித்தார். என்ன செய்கிறது! சமையல் வேலைகளப்படியே நின்று போய் விட்டன, கடைக்குப்போன புருஷனும் சீக்கிரத்தில் வந்து விடுவான்.

கடைசியில் மாமாவும் பத்திரிக்கை முழுமையும் ஒவ்வொரு எழுத்தாய் வாசித்து முடித்தார்: பிறகு வேலைக்காரியைக் கூப்பிட்டு தான் வந்துவிட்டு சத்தியவதியை பார்க்கமுடியாமல் போனதில் வெகுவருத்தப்பட்டதாக எஜமானியிடத்தில் சொல்லும்படி சொல்லிவிட்டுத் தற்செயலாய் சத்தியவதி ஒளிந்துகொண்டிருந்த அறைக்கதவைத் திறக்கப்போனார். உடனே வேலைக்காரி "அய்யா அய்யா, அதல்ல தெருக்கதவு" என்று சொல்வதற்கு முன்னே கதவுதிறந்து போய்விட்டது. மூலையில் ஆடெடுத்த கள்ளன் போல் விழித்துக்கொண்டு சத்தியவதி நின்றாள். மாமா சற்றுநேரம் ஆச்சிரியத்தால் பிரமித்து நின்று, பிறகு வீட்டிலில்லை யென்றது, தன்னைப்பார்க்கஇஷ்டமில்லாததினால் தான் சத்தியவதியப்படிச் செய்திருக்க வேண்டுமென்று நினைத்து, ஒன்றும் பேசாமல் சத்தியவதியை நிமிர்ந்து பார்த்தார்.

சத்தியவதி.—மாமா, அறைக்குள் புகுந்து ஒளித்துக்கொண்ட பொழுது, நீங்கள் வந்திருக்கிறீர்களென்று எனக்குத்தெரியாது. வேறு யாரோவென்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

மாமா.—"பேசாதே; ஏன் இன்னும் பொய் சொல்ல எத்தனிக்கிறாய்? நீ பொய்சொல்லுவது மல்லாமல் பேதையாகிய உன் வேலைக்காரிக்கும் பொய்சொல்ல கற்பித்தாயே. நான் இதுவரையில் என் சொந்தக் குழந்தைபோல் பாவித்திருந்தேன். இனி இப்படி உனக்கு தொந்தரவு கொடுக்கிறதில்லை. வீட்டிலில்லை யென்று உன் மாமாவுக்கு சொல்லி ஏய்த்துவிடும் படியாக இனி ஒருபோதும் நேரிடாது" என்றுசொல்லிவிட்டு வீட்டுக்குப்போக எத்தனித்தார்.

சத்தியவதி உடனே,—"நீங்கள் போய்விடக்கூடாது மாமா, நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேட்கவேண்டும்."

மாமா.—போதும், போதும், எனக்காக இனி பொய் சொல்லவேண்டாம்.

சத்தியவதி.—ஆனால் என்னைவிட்டு விட்டுப்போய் விடுவதுசரியா? குழந்தையாயிருக்கும்பொழுது தாய் தகப்பனில்லாத தங்களுடைய சகோதரியின் ஒரே பெண்ணாகிய என்னை எடுத்து வெகு பிரியமாய் வளர்க்கவில்லையோ.

மாமா.—"அப்பொழுதெல்லாம் நீ தான் என்னுயிருக்குயிராயிருந்தாய். இப்பொழுது யாரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை." என்றுசொல்லி தன் துணியை யெடுத்துக் கண்ணை துடைத்துகொண்டார்.

சத்தியவதி.—நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்கள். வேறு யாராவது வந்து கூப்பிட்டால் தான் நான் வீட்டிலில்லையென்று சொல்லும்படி வேலைகாரிக்குச் சொல்லியிருந்தேன்.

மாமா.—(கோபத்துடனே) வீட்டிலிருந்து கொண்டேதானே இப்படி சொல்லச்சொன்னாய்.

சத்தியவதி.—எல்லோரும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். அதை ஒரு பொய்யாக நினைக்கிறதில்லையே. வீட்டிலில்லை யென்றால் அயலாரைப்பார்க்க நமக்கு ஸௌகரியப் படவில்லை. யென்றுதான் அருத்தம். அது எல்லாருக்கும் தெரியுமே.

மாமா.—"அறையில் ஒளிந்துகொண்டிருக்கிறாளென்பதும்எல்லோருக்கும்தெரிந்திருக்கவேண்டியதுதானே" என்று சொல்லி கோபந்தணிந்துபோய் சிரிக்கத்தொடங்கி, "ஓ சத்தியவதி அக்கதவைதவறுதலாய் நான் திறந்தபொழுது உன்முகம் எவ்வளவு நன்றாயிருந்தது. நான் கதவைத்திறந்தது நல்லதுதான். நீ பொய்சொன்னதற்காக உனக்கு நல்ல தெண்டனை கிடைத்தது."

சத்தியவதி.—ஆம், மாமா, நான் இனி வீட்டிலிருக்கும்பொழுது இல்லையென்று சொல்லவே மாட்டேன்.

மாமா.—மறுபடியும் சிரித்துக்கொண்டு "வெல்லத்தின்னப்போன எலியைப்போல மூலையில் பதுங்கிக்கொண்டிருந்தாயே. அதிக விஷமம் பண்ணும் சிறுகுழந்தைகளை அறையில் அடைத்து வைப்பதுபோல் நீயும் ஒருமணி நேரம் அடைபட்டிருந்தா யல்லவா".

சத்தியவதி.—என்னுயிருள்ளமட்டும் இதை நினைக்க எனக்கு வெட்கமுண்டாகும்.

மாமா.—பொய் சொன்னால் அப்படித்தான் வெட்கப்படுவாய்.

சத்தியவதி.—ஒருவரும் அதைப் பொய் யென்று நினைக்கிறதில்லை. நாம் வேலையா யிருக்கிறோமென்றும் பிறரைப்பார்க்க முடியாதென்றும் தான் அதற்கருத்தம்.

மாமா.—அப்படியானால் அப்பொழுதே என் அப்படிச்சொல்லியிருக்கக் கூடாது. வேலைக்காரி நீ வெளியில் போயிருக்கிற தாகவும் சாப்பாட்டு வேளை வரையில் நீ திரும்பி வரமாட்டா யென்றும் சொன்னாளே.

சத்தியவதி.—அது அவளுடைய சொந்த கைச்சரக்கு. நான்வீட்டிலில்லையென்று சொல்லச்சொன்னேனே தவிர வேறொன்றுஞ் சொல்லவில்லை.

மாமா.—ஆனால் அவள் பொய்சொன்னாளென்று நீ ஒப்புக்கொள்ளுகிறாயோ.

சத்தியவதி.—தடையில்லாமல் ஒப்புக் கொள்ளுகிறேன்.

மாமா.—வீட்டிலில்லையென்று சொல்லுவதைப் பார்க்கிலும் கொஞ்சம் அதிகப்பொய்யையும் சேர்த்துச் சொல்லுவது பிசகென்று வேலைக்காரிக்குத்தெரியுமோ. பொய் சொன்னாலென்ன? அதிகப்பொய் சொன்னாலென்ன, எல்லாம் சரிதான்.

இப்படி தன்னுடைய மாமாவை சமாதானப்படுத்த முடியாதென்றறிந்து சத்தியவதி தன்மே லெப்பொழுதும் போலவே பிரியமா யிருக்கவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டாள். கிழவருக்கும் தன் கோபம் தணிந்துவிட்டபடியால் "நீ என்னிடத்தில் செய்த தப்பிதத்திற்கு உன்னை மன்னித்து விடுகிறேன். ஆனால் நீ பொய்சொன்ன தப்பிதத்திற்கு சுவாமியைப் பிரார்த்தித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர என்னைக்கேட்பது பிரயோஜனமில்லை" என்று கடுமையாய்ச்சொன்னார்.

பிறகு மாமா வீட்டுக்குப்போக எத்தனித்தவுடனே சத்தியவதி அவரைத் தடுத்து தன் வீட்டில் சாப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். "தங்கள் வீடு வெகுதூர மிருக்கின்றதே. இப்பொழுது நீங்கள்போகக்கூடாது. நாங்களும் நாளை தினம் தங்களைச் சாப்பாட்டுக்கு அழைக்கிறதாகத் தான் நினைத் திருந்தோம். தாங்கள் இப்பொழுது இங்கே சாப்பிடச் சம்மதியாவிட்டால் என்னை நீங்கள் மன்னிக்கவில்லையென்று நினைப்பேன்" என்றாள். மாமாவும் கடைசியில் சம்மதித்தவுடனே சத்தியவதிக்கு மனதிலிருந்த பெரியபாரம் நீங்கினாற்போல நீங்கி உடனே வேறொரு அறைக்கு அவரை யழைத்துக்கொண்டுபோய் கையிலகப்பட்ட பத்திரிகைகளை யெல்லாம் எடுத்து அவருக்குக்கொடுத்து உட்காரவைத்துவிட்டு சந்தோஷத்துடனே சமையல் வேலைகளைப் பார்க்கப்போனாள். கடைக்குப்போன தர்மசீலன் திரும்பி வந்தவுடனே மாமாவைக்கண்டு வெகு சந்தோஷமடைந்தான். அவனோடு கூடவந்த விருந்தாடிகளும் மிகவும் புத்திசாலிகளானபடியால் மாமாவுடைய குணத்தைப்பார்த்து வெகு சந்தோஷமடைந்தார்கள், மாமா கொஞ்சங்கூட பயமில்லாமலும் கர்வமில்லாமலும் பேசினதுமன்றி தனக்குத்தெரியாத விஷயங்களை தெரியாதென்று ஒப்புக்கொள்ள வெட்கப் படவில்லை. இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை கவனித்துச் சந்தோஷ மடைய சத்தியவதிக்கு கொஞ்சங்கூட அவகாசமில்லை. ஏனென்றால் தன்னுடைய புதிதாய் வந்த வேலைக்காரனுக்கு எதை எப்படி பரிமாறுகிறதென்று தெரியாததினால் அடிக்கடி அவனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதா யிருந்தது. சமையலும் நன்றாயிராமல் வெகு கெடுதலா யிருந்தது. கடைசியில் சாப்பிட்டு முடிந்தவுடனே மாமா சத்தியவதியைக் கூப்பிட்டுக் குழந்தைகளைப் பார்க்கப்போவோம் வா என்றார். அப்படியே சென்றவுடனே குழந்தைகள் ஒன்றுக்கொன்று ஆகாரத்துக்காக சண்டைபோட்டுக் கொண்டிருந்ததைக்கண்டு, சத்தியவதியை தனிமையில் இட்டுக்கொண்டுபோய்ச் சொல்லுகிறார்: "இப்படியுட்கார்ந்துகொண்டு நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நான் உனக்குக் கலியாணமாவதற்கு முந்தி நீ தருமசீலனுக்கு வாழ்க்கைப்படுவதைப்பத்தியாக்ஷேபித்தேனல்லவா. அப்பொழுது தருமசீலனுக்கு ஒரு குடித்தனத்தை வைத்து இரட்சிக்கத் திறமை

யில்லை யென்று நினைத்தேன். ஆனால் பிறகு நான் நினைத்தது பிசகென்று தெரிந்தது. நீங்கள் சுகமாயிருப்பதோடுகூட வெகு நல்ல ஸ்திதியிலுமிருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு இது வரை யதிகச்செலவில்லாமல் குடித்தனம் நடந்து வந்தது. இப்போது நீங்கள் செய்யும் செலவைப்பார்க்க எனக்கு வெகு சந்தேகமுண்டாகிறது. இருந்தபோதிலும் உங்களுடைய விஷயம் உங்களுக்கே நன்றாய்த் தெரியுமாதலால்நான் அதுவிஷயத்திலொன்றுஞ் சொல்லவேண்டியதில்லை யென்றெண்ணிச் சில காலமாய்ச் சும்மாவிருந்து விட்டேன். நீங்களிம்மாதிரியேகுடித்தனஞ் செய்யும் விஷயத்தில் பிறகென்னது வருமென்பது எனக்குத் தெரியவில்லை. நானிதற்கு முன்னொருதரம் உங்கள் வீட்டுக்கு வந்தபோது உங்கள் சாப்பாடு வெகு சாதாரணமாயும் நன்றாய்ப் பாகம் பண்ணப்பட்டதாயு மிருந்தது. குழந்தைகளெல்லாம் சந்தோஷத்தோடு சிரித்து விளையாடிக் கொண்டிருந்தன. இன்றைக்கெப்படியிருக்கிறது. நிரம்ப விலையுயர்ந்த உணவுகளைச் சரியாய்ப்பாகஞ்செய்யாமல் கெடுத்துப் பெரியவிருந்து செய்தீர்கள். குழந்தைகளெல்லாம் சரியாய்ப் போஷிக்கப்படாமல் வேறொரு அறையிலடைக்கப்பட் டிருந்தபடியால் சத்தம் போட்டுக்கொண்டு சண்டை செய்துகொண் டிருந்தார்கள். குழந்தைகளின் தாயோ வெகு கவலையுடனே மனவருத்தப்பட்டுக்கொண்டு விருந்து நன்றாய் முடியவேண்டுமே யென்ற ஓரே சங்கதியைப்பத்தி யோசித்துக்கொண்டு கேட்ட கேள்விகளுக்குக்கூட பதில் சொல்லமுடியாம லிருந்தாள்."

சத்தியவதி.—என்ன மாமா இப்படி சொல்லுகிறீர்களே.

மாமா.—ஆம். ஒருக்கால் மற்றவர்களும்இப்படித்தான்செய்கிறார்கள் என்று நீ சொல்வாய். பெரிய பணக்காரர்களுக்கு டம்பமாய்க் குடித்தனம் பண்ணுவதினால் அதிகக்கெடுதல் நேரிடாது. ஆனாலுங்களுடைய ஸ்திதிக்கு அவ்வளவு டம்பமாயிருந்தால் கட்டுமோ?

சத்தியவதி.—தாங்கள் சொல்லுவது வாஸ்தவந்தான். இன்றையதினமெங்களுடையதுரதிஷ்டத்தினால் சமையலெல்லாங் கெட்டுப்போய்விட்டது. வேலைக்காரர்களுக் கொன்றுந்தெரியவில்லை. இருந்தபோதிலும் இனிமேலாவது சரியாக நடக்குமென்று நம்புகிறேன். இப்பொழுது குழந்தைகளுக்காக புதிதாய் ஒருதாதி நியமித்திருக்கிறேன்.

மாமா.—தாதியா! குழந்தைகளை நீயே பார்த்துக்கொள். தாதியிடத்தி லொப்புவித்து விடாதே. குழந்தைகளை வேலைக்காரர்களிடத்திலொப்புவித்து விடுவதைப் பார்க்கும்போது எனக்கு வெகு கோபமுண்டாகிறது. சத்தியவதி, இன்றைக்குனக்கு வருத்த முண்டாகும்படி வெகு சங்கதி சொல்லிவிட்டே னென்று தோன்றுகிறது இவ்விடத்தில் நடந்த விஷயங்களைக்காண எனக்கும் வருத்தமுண்டாகிறது. ஆனால் நானுனக்கிதுவரைச் செய்திருக்கிற நன்மைகளைக் காட்டிலு மதிகமான நன்மையைக் கொடுக்கும்படியான புத்தி மதிகளைக் கொடுப்பதென் கடமை யென்று நினைத்தேன். ஆகையால் கடைசியாய்ச் சொல்லவேண்டிய தென்ன வென்றால்: "அவரவர்களுடையநிலைமைக்குத்தகுந்தபடி குடித்தனம் பண்ணுவது தகுதியே தவிர மேலானவர்களைப் பார்த்து அவர்களைப்போல் குடித்தனம்பண்ண எத்தனித்து முற்றிலும்நடத்தமுடியாமல் போவதிலுபயோக மென்ன:" வென்றுசொல்லிவிட்டுப்போய்விட்டார். அவர் போனவுடனே அவர்சொன்னசங்கதிகளையெல்லாம் நினைத்து சத்தியவதி யழுதுகொண்டிருந்தாள்.

தர்மசீலன்.—"சத்தியவதி, யென்னவிசேஷம்" எனழுதுகொண்டிருக்கிறாய். ஓ, ஓ, எனக்குத்தெரிந்தது. மாமா அதிகச்செலவு செய்வதுபிசகென்றுன்னிடத்தில் பிரசங்கித்தார் போலிருக்கிறது. இன்று நடந்த விருந்தைப்போல அவரெங்கும் பார்த்திருக்க மாட்டார். பணக்காரர்கள் குடித்தனத்தைப்பற்றி யவருக்கென்னதெரியும். நாம் சீக்கிரத்திற் கெட்டுப்போவோமென்று நினைத்துக்கொண்டிருப்பார். உன்னிடத்தி லென்னசொன்னார். சொல்லு பார்க்கலாம்."

சத்தியவதி.—(யழுதுகொண்டு) விருந்து கொஞ்சமும் நன்றாயில்லை யென்று சொன்னார்.

தருமசீலன்.—மாமா சொன்னது வெகு மரியாதையாயிருக்கிறது.

சத்தியவதி.—(கொஞ்சம வெட்கத்துடனே) அவர் சொன்னது வாஸ்தவந்தான். அதினால் தான் எனக்கு வெகு வருத்தமாயிருக்கிறது.

தருமசீலன்.—அதற்காக வருத்தப்படாதே. எல்லாம் நம்முடைய வேலைக்காரர்களுடைய புத்தியின்மையால் வந்ததென்று அவர்களுக்குச் சொல்லிவிட்டேன்.

இதுமுதல் மாமா இவர்கள் வீட்டுக் கடிக்கடி வருகிறதில்லை. சத்தியவதியு மடிக்கடி யவர் வருவதில் என்ன பிரயோசனமென்று நினைக்கத் தலைப்பட்டாள். அந்தவருஷம முடிந்தவுடனே தருமசீலன் கணக்குப் பார்க்கும்பொழுது அந்தவருஷத்தி லொன்றுமமிகுதியாகாமல போனதுமன்றி இதற்குமுன்

கையிலிருந்த முதலுங் கொஞ்சஞ் செலவாய்ப்போய் விட்டதென்று கண்டு வெகு வருத்தப்பட்டு இனி யென்ன செய்கிறதென்று யோசித்துக் கொண்டிருந்தான். சில நாளாய் வரும்படியுங் குறைந்து விட்டது. இச்சங்கதிகளை யெல்லாம் சத்தியவதி யிடத்தில் சொன்னவுடனே அவள் நம்முடைய செலவைக் குறைத்துப்போடலாமென்றாள். ஆனால் ஒவ்வொரு இனமாய்ப் பார்க்கும்போது ஒரு செலவையும் குறைக்க முடியவில்லை. ஒருநாள் சத்தியவதி சொல்லுகிறாள், 'ஆதியிலிருந்த ஸ்திதிக்குநாம் எதிர்பார்க்கக்கூடாத அவ்வளவு நல்ல ஸ்திதியி லிருப்பதே ஒரு சந்தோஷமல்லவா. இதுவரை நாம் வரும்படிக்குமேலிட்ட செலவு செய்யவில்லை''—யென்று இப்படி நிஜத்தை யொப்புக்கொள்ள இஷ்டமில்லாதவர்களாய் சுதர்சனனு மின்னு மற்றவர்களும்அதேவரும்படியில் தங்களைப்பார்க்கிலும் டம்பமாய்க் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே யென்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டார்கள்.

கே. ஜெயராமய்யர், பி. ஏ.

ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதம்.

(திராவிட ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் எழுதியது.)

சிகிச்சை.

(341-வது பக்கத்தொடர்ச்சி.)

மருத்துவக்கலைகள் பிணிகளின் இலக்கணங்களைக் கூறியபின்னர், அவைகளை நீக்கு முபாயங்கள் அல்லது சிகிச்சைகளைக் கூறியிருக்கின்றன. சிகிச்சைகள் மூன்று வகைப்படும், அவையாவன:—

(1) ரசம், கந்தகம், பாஷாணம், பஸ்பம் முதலியவைகளைக் கொண்டு செய்வது தேவகண சிகிச்சை.

(2) விருக்ஷாதி மூலிகைகளை கொண்டு செய்வது மானுடகண சிகிச்சை.

(3) உதிரக்களைதல், அறுத்தல், சுடுதல், காரம்வைத்தல் ஆகிய இவைகளைச் செய்வது இராக்ஷதகண சிகிச்சை.

பிரமாணம்:

"சூதகந்தி தாதுபஸ்மஞ் சொர்ண்னாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்ச்சிகிச்சை-வேதடருஞ்
சத்திரசா ராக்கினிதி சாசாச்சி கிச்சையொன்றே
முத்திறத்த தாகு மொழி"

இம்மூவிதச் சிகிச்சைகளை இன்னதென்றும், இன்னின்ன வியாதிகட்கு இன்னின்னது செய்யப்படுமென்றும், அவைகளின் ஔஷதங்களையும் தொகுத்துக் கூறப்படும்.

தேவகண சிகிச்சை [illegible] பாஷாண பஸ்ப[illegible] ஏறக்குறை[illegible] முற்கூறிய வியாதிகளைக் குபயோகிப்பது. தேவகணத்தார் பாதரசம், ரசாஞ்சனம், ரசகர்ப்பூரம், சாதிலிங்கம், சவ்வீரம், நெல்லிக்காய்க் கந்தகம், வாணக்கந்தகம், தாளகம், லவணம், சிவந்த அரிதாரம், மனோசிலை, மிருதாரசிங்கி, பாஷாணம், ஆகிய இவைகளைச் "சூத்திக்கிரமம்" என்னுஞ் சாத்திர முறைப்படி சுத்திசெய்து தனியாயுங் கொடுப்பதுண்டு. இவைகளில் ரசம், கந்தகம், தாளகம், மிருதாரசிங்கி இவைகளைப் பஸ்மித்தும், அயம், காந்தம், மண்டூரம் இவைகளைச்சிந்தூரித்தும், வங்கத்தைப்பஸ்மித்துஞ் சிந்தூரித்தும், தாம்பிரம், பவளம், சிருங்கி, வெள்ளி, நாகம், சிலாசத்து, சொர்ணம், முத்து, லவணம் இவைகளைப் பஸ்மித்தும், தக்கபிணிகளுக்கு வேண்டு நாள்வரை பத்தியத்துடன் கொடுத்து வருவார்கள்.

மானுடகண சிகிச்சை: விருக்ஷாதி மூலிகைகைக் கொண்டு செய்தல். மூலிகள் நால்வகைத்து. அவையாவன: விருக்ஷம், கொடி, செடி, புல் என்பன. இவைகள் ஒவ்வொன்றினும் வேர், பட்டை, கட்டை, ரசம் இலை, புஷ்பம், பழம், வித்து, எனும்எண்வகைப்பதார்த்தங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும், கசப்பு, உப்பு, தித்திப்பு, கார்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, ஆகிய அறுவகை ருசிகளையும் பெற்றிருக்கும்.

இதற்குப் பிரமாணம்:

ஆதியுரி யுண்ணீரடைமலர்மென் காய்விதையென்
றோதுபதார்த்தமிவையோ ரெட்டும்—பூதலத்தன்
கைப்புவர்ப்புத் தித்திப்புக்கார்ப்புபுளிப்புத்துவர்ப்
பையா றும்பொருந்து மால்."

இத்திறச்சிகிச்சைக்குரிய மரம், செடி, கொடி, புல் இவைகளின் பெயர்களையும், குணங்களையும் "பதார்த்த குணசிந்தாமணி" என்னும் நூலிற் தெளிந்து, சுத்திசெய்து, "சிகிச்சாசாரம்" என்னுஞ் சாத்திரத்தின்படி முப்பத்திரண்டு ஔஷதங்கள் செய்து முற்கூறிய பிணிகளுக்குக் கொடுத்தல் வேண்டும். ஔஷதங்கள் இலகுமுறையாயிருந்தாலும், பக்குவ பாகத்தைப் பொருந்துமானால், அது தேவர்கள் உண்ணத் திருப்பாற்கடலிற் பிறந்த அமிர்தத்திற்கொப்பாகும். கனமான முறையினாற் செய்யப்பட்ட மகா மேக ராசாங்கத்தைலம் போன்ற ஔஷதங்களும் செய்பாகங் கெடுமானால் அக்காலத்தில் சேஷன் கக்கிய விஷத்திற் கொப்பாகும். ஆதலால் ஔஷதங்களை எல்லாம் செய்பாகந்தவறாது செய்தல் வேண்டும்.

பிரமாணம்:

பக்குவபா கத்தையுறு பஞ்சின்மருந்தும் பிழை
பக்குவ பாகத்துப் பருமருந்து—மெய்க்குறுங்க
[illegible] மும்பருஞ் மாழிமருந் துஞ்சேடன்
கக்கால மும்பொருந்துங் காண்."

உதிரங்களைதல்

இராக்ஷதகண சிகிச்சை: இரத்தப் பெருக்குப் போன்ற வியாதிகளில் உள்ள இரத்தத்தைகுழலில் வாதிக், கண்ணாடித் துண்டுகளாற் கீறி, உள்ள இரத்தத்தை எடுத்துவிடல்.

அறுத்தல்: சிலந்தி, பரு முதலியவைகள் பழுத்து, முனைவைத்து இருக்கும்போது உள்ளிருக்கும் சீழை வெளிப்படுத்துதற்குவேண்டும் ஆயுதங்களால் அறுத்துவிடல். மகோதர ரோகத்தில் துர்நீர் அதிகரித்து வயிறெங்கும் வீங்கிச், சுவாசம் வெளிப்படக் கூடாதிருக்கும்போதும், உந்தியின்பால் சிறு துவாரமிட்டு, உள்ள துர்நீரைக் குழலின்வழியாய் எடுத்தல்.

காரம்வைத்தல்: ஆழிபுண் முதலியவைகளுக்குக் களிம்பு, ஒற்றிடம், மோதகம் முதலியவைகளை உபயோகித்தும் பயன்படா திருந்தால், மயிற்றுத்தம், வெள்ளைப்பாஷாணம், கௌரிபாஷாணம் முதலிய காரம் வைத்துக், களிம்பாதிகளை உபயோகித்தும் குணப்படுத்தல்.

சுடுதல்: நரம்பு வியாதிகள், காமாலை முதலிய ரோகங்களுக்கு, மஞ்சள், கருவளையல், எழுத்தாணிக் காம்பு அல்லது இதுபோன்ற ஆயுதங்களைச் சுட்டு ரோகமுற்று வருத்துமிடத்திற்குச் சூடுபோடுதல், இரத்தப்பெருக்கு உதிரங்களைந்தும், பரு முதலியவைகளை யறுத்தும், அழிபுண் முதலியவைகளுக்குக் காரம் வைத்தும், நரம்பு வியாதிகளுக்குச் சுட்டும், வேண்டும் சிகிச்சைகள் செய்தாலொழியக் குணம் முற்று முறாதாகையால், இவைகளைக் கொடுக்கும்தொழில் என்று பயப்படாது செய்தல் நோயுற்றோர் கடமை.

இதுநிற்க: எமது மருத்துவர்கள் சூதமுதலிய மருந்துகளை நிறுத்து அளவிட்டுக் கொடுக்காது, அதிகமாய் வழங்கிவருகிறார்கள் என்றும், மருத்துவக்கலைகளும் அவ்வழித்தென்றும், இக்காலத் தாங்கிலேய சீர்மையுற்ற பல்லோர் குற்றஞ் சாற்றுகிறார்கள். இங்ஙன் குற்றங்கூறுவது போலிமருத்துவர்கட்கல்லது, ஸ்ரீமத் திராவிட ஆயுள்வேதத்திற்கும், ஆன்றோர் அனுபவங்கட்கும் முற்றும் மாறுபடுகின்றது. எங்ஙனமெனில், அவர்கள் மருத்துவகலைகளின் நுட்பங்களை இலேசான் அறியாத குறையால் இதை ஒன்றிரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்கிக் காட்டப்படும். "காமியப்புண்ணுதிய நோய் கண்டாற் சவ்வீரனெனுஞ் சாமியினுமத்தை யுச்சரி" என்றதால், சவ்வீரமெனு மருந்து அதிக வீரியமுள்ளதென்றும், அதிக சிற்றளவிற் கொடுக்குமுறை யாராய்ந்து கொடுக்கவேண்டுமென்பது "சவ்வீரனெனுஞ் சாமியினுமத்தை யுச்சரி" என்னும் இலேசான் சித்தித்தது. வேறொரு செய்யுளில்!

"ஒக்கும்ரச கர்ப்பூர மொன்றே யளவொடுகல்
விக்குவெல்லத் தேழுநா ளீ" என்றதனால், பல

பிணிகளுக்கு ரசகர்ப்பூரத்தை கொடுக்குமளவறிந்து, கரும்பு வெல்லத்திற் கொடுத்தல் வேண்டும் என்று பெற்றது. இவைபோன்ற செய்யுள்களால், மருந்துகள் கொடுக்கும் அளவுகளையும், பருவங்களையும், வேறு நூல்களிற் தெள்ளத்தெளியக் கூறப்பட்டிருக்கின்றது என்றும் அவைகளை ஐயந்திரிபறத் தெரிந்திருத்தல் வேண்டுமென்றும் புலப்படுகின்றது. இவைகள் எல்லாவற்றையும் ஒரே நூலினும், போதுமானமட்டும் கூறப்பட்டு மிருக்கின்றது. அதற்கு "மகா குணபாடம்" என்று பெயர்.

கே. ஸி. துரைசாமி.

நமது பார்வைக்கு வந்த புஸ்தகங்கள்.

செய்யுளிலக்கணம்.

செய்யுளிலக்கணம் என்னும் நாமதேயத்தினையுடைய பிரபந்தமானது அஷ்டாவதானம், பூவை - கலியாணசுந்தர முதலியாராற் செய்யற்பட்டுளது. இந் நூலின் விசேஷ லக்ஷண மென்னெனில்:—முன் னூல்கள்போலச் செய்யுள் ரூபத்தாலமைக்கற்படாது வசந ரூபத்தா லமைக்கற்பட் டிருத்தலேயாம். தற்காலமாணவகர்க்கு வசநரூப விலக்கணங்களே மிகுதியும் பயன்படத்தக்கன வென்று உண்மையினை யுணர்ந்து யாப்பிலக்கணத்தை யாப்பாலமையாது கத்திய ரூபத்தில் நம்புலவர் அமைத்தது மிகவும் சந்தோஷிக்கவேண்டிய விஷயம். முதலில், இந்நூலானது பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில் பிரசுரஞ் செய்யற்பட்டிருக்கிற குணமொன்றே மாணாக்கர்க்கு வாசிக்க வேண்டுமென்ற எண்ணத்தை யுண்டாக்கி, யவர் மனத்தைக் கவருஞ் சக்தியுடைத்தாய்க் காணற்படுகின்றது.

இனியிது நிடக்க. இந்நூலானது இத்தன்மையது என்பதை யெமக்குத் தோன்றியவாறு கூறுகின்றாம். இஃது அமுதசாகரனுரியற்றிய யாப்பருங்கலக் காரிகையைப்போல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்ற மூவியல்களோடே நின்று விடாமல், பாட்டியல் என்று ஓரியல்கூட்டப்பெற்று நான்கியல்களோடு விளங்குகின்றது.

முதல்லாவது உறுப்பியலில் விசேஷமாக காரிகையை யநுசரித்திருக்கின்றார். உதாரணச் செய்யுள்களும் சிறந்தனவாகக் காணற்படுகின்றன. இரண்டாவதாகிய செய்யுளியலில் இலக்கண விளக்கத்தைத் தழுவியிருக்கின்றார். ஈண்டிவ்வியலிற் கூறப்பட்ட வுதாரணச் செய்யுட்களுட் சில நம்புலவராலேயே செய்யற்பட்டனவாகத் தெரியவருகின்றன. சில இவரியற்றிய திருவொற்றியூர்க் கலம்பகத்தி னின்று மெடுத்துரைக்கற்பட் டிருக்கின்றன.

கலிப்பாவி னிலக்கணத்தை யேனைய நூல்களைப் போலாது குழப்பமின்றிச் செவ்வனே யெளிதின் விளங்குமாறு கூறியிருக்கின்றனர். இனி யிவ்வியலின்கண் ஆசிரியப்பாவினினமாகிய வண்ணப்பாவின் இலக்கணமானது தெளிவுற விளக்கற்பட்டிருத்தல் இந்நூற்கொரு சிறப்பிலக்கணமாம். மூன்றாவதாகிய ஒழிபியலில், உறுப்பியல் செய்யுளியல்களிற் கூறாதொழிந்தனவற்றையும், ஆநந்தம் முதலிய தோஷங்களையும்பற்றி விவரிக்கின்றார். இனி நான்காவதாயபாட்டியலில் வீரமாமுனிவர் செய்த தொன்

னூல் விளக்கத்தின் யாப்பதிகாரத்து மூன்றாமோத்தாகிய செய்யுண் மரபியலையும், வைத்தியநாத நாவலர் செய்த இலக்கண விளக்கத்தின் பொருளதிகாரத்து ஐந்தாமியலாகிய பாட்டியலின் முற்பகுதியினையும் அநுசரித்திருக்கிறார்.

இனிப் பொதுப்படப் பேசுமிடத்து நம்புலவர் சுயமாக யாப்பினைப் பாகுபாடுசெய்து நன்கு அமைத்திருத்தல் இப்புத்தகத்தைப் பார்த்த யாவர்க்குந் தெரியும். இதுபற்றி யன்றே பிரம்மஸ்ரீ மி. சேஷகிரி சாஸ்திரியா ரவர்களும், ம-ள-ள-ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்களும் இதின் நயத்தை யெடுத்துப்பேசி யிருக்கின்றனர். நம்புலவர்க்கு முன்னரோ திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் யாப்பினை வசநத்தா லியற்றிப் பாலபோத விலக்கணத்தி னொருபகுதியாக அச்சிட்டிருக்கின்றனர். அதுவே மாணாக்கர்கட்குப் போதுமான அளவினதா யிருப்பினும், பாகுபாடு, வண்ணம், பாட்டியல் இவற்றை நோக்கின், நம்புலவர்செய்த செய்யுளிலக்கணம் அதனினுஞ் சிறந்த தெனப்படும்.

இனியிதுகிடக்க; 1894ஹு பி. ஏ. பரீட்சைக்குப் படிக்குந் தமிழ் மாணாக்கர்க்கு இலக்கண விளக்கத்தினின்றும் செய்யுளியல் என்ற ஒரு பகுதியானது பாடமாக நியமிக்கப்பட்டிருத்தலின், அம்மாணாக்கர்கள் முதலில் நம்புலவர் நூலைப்படித்துவிட்டுப் பிறகு இலக்கண விளக்கம் படிக்கப் புகுவரேல் நலமாயிருக்குமென்றது எமது துணிவு.

வீ. கோ. சூரியநாராயண சாஸ்திரி, பி. ஏ.

—o—

ஆரிய தேசாபிமானக் கும்மி.

இது 20-பக்கங்களடங்கிய ஒரு சிறு புத்தகம். இதில் 100 கும்மிப்பாட்டுகளும், ஒரு துதிவெண்பாவும், ஒரு வாழ்த்துக்கும்மியு மடங்கி யிருக்கின்றன. இது கடைத்தெருப் புத்தகங்கள் போலாது சற்றுயர்ந்த கடிதத்திற் பிரசுரிக்கப் பட்டுளது. இது நம் இந்துஜன சீர்திருத்தத்திற்கு ஏற்பட்ட புத்தகங்களிலொன்றென்று குறிப்பிக்கப்பட் டிருக்கிறது. இது ஆரியர்கள் ஒருமித்து வாழ்ந்திருந்ததையும், பிறகு பிரிந்து பல நாடுகட்குப் போகும்படி நேரிட்டதையும், அவர்களிற் சிலர் இந்தியாவிற்கு வந்ததையும், வந்தபின் மதபேதம் ஜாதிபேதம் முதலியன வேற்பட்டதினாலே யுண்டாகிய கேட்டினையும், தாழ்வினையும், பிறகு பற்பல ஜாதியார்களாற் றோல்வியடைந்து மானமிழந்து வலியிழந்து நம் இந்து தேச ஆரியர்கள் வருந்தினதையும், பிறகு ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டுச் சிறப்படைந்து வருகிறதையும்பற்றி நன்கு சொல்லுகின்றது. கும்மிச்சந்தமும் சொற்போக்கும் நன்றாக அமைந்திருக்கிறது. தற்காலத்தில் இத்தகைய புத்தகங்கள் நம்வீட்டு ஸ்திரீகளிடத்து நாகரீகத்தையும், முன்னிருந்த ஆரியர் நிலைமையின் உணர்ச்சியையும் உண்டாக்கி யநேக விதமான நன்மைகளைச்செய்யும் நோக்கத்தினதாகவுங் காணப்படுகிறது. இப்புஸ்தகம் பெண்பாடசாலைகளில் உபயோகிக்கப்பட மிகவும் ஏற்றதாயிருக்கிறது. இதன் விலை அரை அணாவே. பெண்பாடசாலைகளில் உபயோகிக்க வேண்டி இச்சிறுபுஸ்தகம் மாதிரிக்கு வேண்டுவோர் அரையணா தபால்தலை யனுப்பி இப்பத்திரிகை பிரசுரிக்கும் அறிவைப் பரவச்செய்யும் சபை (ஏஜன்ஸி) யின் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளக் கிடைக்கும்.

சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

(350-வது பக்கத் தொடர்ச்சி.)

31. சுழன்றுகொண்டிறங்கும் மோதிரம்.

சுமார் $\frac{1}{4}$ அங்குலம் கனமுள்ளதும் கையின் சிறுவிரல் நுழையக்கூடியதுமான அவ்வளவுசிறிதான ரப்பர் (Rubber) மோதிரத்தை $\frac{1}{4}$ அங்குலம்கனமான முறுக்கிய ஒரு பஞ்சுநூற் கயிற்றில் கோத்து, கயிற்றின் ஒரு முனையை காலின் பெருவிரலால் மிதித்துக்கொண்டு மற்றொரு முனையைக் கையால் இறுக்கமாயும் செங்குத்தாயும் பிடித்துக்கொண்டு கோத்திருக்கும் மோதிரத்தை கயிற்றின்மேல் கொண்டுவந்து விட்டுவிட கயிற்றின் மூலமாய் சரேலென்று கீழே விழுந்துவிடும். ஆனால் மறுபடியும் மோதிரத்தைக் கயிற்றின் மேற்புறத்தில் கொண்டுவந்து சுழற்றிவிட்டுவிட கயிறு எவ்வளவு நீளமிருந்தாலும் அந்நீள முழுவதும் கரகரவென்று சுழன்றுகொண்டே வெகு விநோதமாய் இறங்கும். இரப்பர் மோதிரமகப்படாவிட்டால் அதற்குப் பதில் யாதாயினுமொரு இலேசான மரத்தில்செய்யப்பட்ட மோதிரத்தை உபயோகிக்கலாம். கயிற்றுக்குப் பதில் ஒழுங்கான ஒருபிரம்புகோலை உபயோகிக்கலாம்.

32. நாம் சுவாசிக்கும் ஆகாயத்தில் * மறைதாபம் உண்டா?

உண்டு. இதை விளக்கமாய் அறியவேண்டின், சுமார் ஒரு அடி நீளமுள்ள மரத்தால் அல்லது ஒரு உலோகத்தால் செய்த ஒரு குழையை எடுத்து, ஒருபக்கத்தை நன்றாய் அடைத்து, குழைக்குள் சக்கிமுக்கிப் பஞ்சு அல்லது ஒரு நெருப்புக்குச்சியை குழலில் போட்டு அது அடியில் தங்க, குழைத்துவாரத்துக்குச் சரியாயும் பிகுவாயும் பிடிக்கிற ஒரு கட்டையைச் சட்டென்று குழைக்குள் செலுத்தினால், உள்ளே இருக்கும் வாயு நெருக்கப்பட்டு அதிவிருந்துண்டான சூட்டினால் பஞ்சு அல்லது நெருப்புக்குச்சி பற்றிக்கொள்ளும். ஆகாயத்தில் உஷ்ணமானது ஈரத்துணியிலிருக்கும் ஜலம்போல் மறைந்திருக்கிறது. ஈரத்துணியைக் கையாலே பிழிய நீர் வெளிப்படுவது போல், ஆகாயமும் நெருக்கப்படுகிறதினால் அதிலுள்ள உஷ்ணம் வெளிக்கு வருகிறது.

33. வெண்கல கத்தீ.

தட்டினால் மணிபோல் ஒலிக்கும் ஒருவெண்கலக் கிண்ணியை மேசையின் மேல் கவிழ்த்து, கறுப்புமெழுகில் ஒருசுண்டைக்காயளவு எடுத்துதட்டையாய்த் தட்டி பாத்திரத்தின் மேற்புறத்தின் நடுவில் அழுத்திவைத்துப் பின்பு சுமார் இரண்டடி நீளமுள்ள மெல்லிய பிரம்புக்கோலின் மேற்புறமுழுவதும் ஷெ

* Latent heat.

மெழுக்கை இலேசாய்த் தடவி பிரம்பின் ஒருமுனையை வெண்கலப் பாத்திரத்தின்மேல் வைத்திருக்கும் மெழுக்கில் பதியவூன்றவைத்து, இரண்டு கை பெருவிரல் சுட்டுவிரலாலும் மாற்றி மாற்றி பால் கறப்பதுபோல் பிரம்பின் மேலிருந்து அடிவரையிலும் விடாது தடவ நாவிதன் ஊதும் சுத்திபோல் வெகு இனிமையும் நாதமுமான ஒலி கேட்கும். இவ்வாறே தவலையிலும் மேளத்தின் மேலும் செய்யலாம். பிரம்புக்குப்பதில் தென்னமரத்து ஈர்க்கை உபயோகித்துக் கொள்ளலாம்.

ஒரு செப்புப்பானையின் வாயை ஒரு மிருகத்தின் ஜவ்வால் மூடி உலர்ந்தபின்பு, தோலின் நடுவில் ஊசித்துவாரம்செய்து அதில் ஒரு குதிரைமயிரை மாட்டி, மயிரில் ரோசனம் தடவி பால் கறக்குமாறு இரு கைப்பெருவிரல் சுட்டு விரலாலும் இழுக்க இராக்ஷதன் உறுமுகிறாப்போல் கேட்கும். சிலதேசங்களில் உழவோர்கள் கழனிகளில் இரவில் வந்து பயிரை நாசம் செய்யும் பன்றி முதலானவைகளைப் பயமுறுத்தித் துரத்த இக்கருவியை உபயோகிக்கின்றனர்.

34. நாக முட்டை.

பொட்டாஷியம் பைக்ரோமேட் ... 2—பாகம்
(Potassium bichromate)
பொட்டாஷியம் நைட்ரேட் ... 1 ,,
(Potassium nitrate)
வெள்ளை சர்க்கரை ... ... 3 ,,

மேற்சொன்ன வஸ்துகளை குறித்தபாகப்படி எடுத்து தனித்தனியாய்ப் பொடிசெய்து ஒன்றாய்க் கலந்து, கலந்த தூளால் சிறு மத்தாப்புகள் செய்து காயவைத்து, ஒரு அறையில் இம்மத்தாப்புகளி லொன்றைக் கொளுத்த, உடனே மத்தாப்பினின்று நாகம் சீறி வெளியில் புறப்படுவதுபோல் புகை புறப்படும். கண்டவர்களெல்லோரும் சர்ப்பமே மத்தாப்பி லிருந்து உதித்ததென்று எண்ணுவார்கள். மேற்கூறிய கலப்புத்திரவியங்களில் பொட்டாஷியம் பைக்ரோமேட்டைப் பொடிசெய்யுங்கால் உண்டாகும் தூசை மூகராதபடி வெகுசாக்கிரதையா யிருக்கவும்.

இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளில் ஸல்போ ஸையனைட் ஆப் மெர்க்குரி (Sulpho Cyanide of Mercury) அல்லது பாரோ சர்ப்பங்கள் (Pharoa's Serpents) என்னும் ஓர் மருந்து விற்கின்றது. அதைக் கொளுத்தினால் மேற்சொன்ன விதமாய் நாகம் உண்டாகிறது. ஆனாலிதைக் கொளுத்தும் போது உண்டாகும் புகையும், கொளுத்தி எஞ்சி நின்ற சாம்பலும் கொடிய விஷமாகையால் அம்மருந்தைக் கொளுத்தும்போது காற்றுத் தாராளமாய் நடமாடும் வீட்டில் வைத்து கொளுத்துவதோடு எரியும்போது உண்டாகும் புகையை மூகராமலும் பற்றி நின்ற சாம்பலை ஒருவருந்தொடாதபடி பற்றி எரிந்தபின் சாக்கிரதையாயிருந்து தொலைதூரத்தில் எறிய வேண்டியது.

35. மலிவான நெருப்புக் கண்ணாடி.

யாராவது ஒரு ஐரோப்பியன் வீட்டுக்குப்போனால் அவன் வீட்டில் வட்டமேஜையின் மீது நடுவில் அலங்காரமாகக்காகிதத்தால்செய்த புஷ்பச்செடிகள், பொம்மைகள்இவைகளைவைத்து உடல் ஸ்தம்பவடிவாயும் மேற்பாகம் கும்மட்டம் வடிவாயுமுள்ள ஒரு கண்ணாடி மூடியைக் காணலாம். இதற்கு இங்கிலீஷ் பாஷையில் டோம் (Dome) அல்லது கிளாஸ் ஷேட் (glass shade) என்று பெயர். இந்த மூடி ஒன்றை எடுத்து அதில் கொஞ்சம் சலம் வார்த்து உச்சிவேளையில் வெயிலில் அசையாது பிடிக்க, சூரியன் கிரணங்கள் சலத்தின் மூலமாய்ச்சென்று அடியில் சற்று தூரத்தில் கண்ணால் பார்க்கக்கூடாத அவ்வளவு பிரகாசமான ஒரு புள்ளியாய்க்கூடும். அப்புள்ளியை பற்றிக்கொள்ளும் எவ்வஸ்துவின் மேலாவது விழவிட, அவ்வஸ்து உடனே தீப்பற்றிக்கொள்ளும்.

இதே பிரகாரம் உடல் உண்டைவடிவாயும், மற்ற பாகம் நீண்டும் இருக்கிற ஒரு கண்ணாடிச் சிமினியில் ஜலம்வார்த்து சிந்தாவண்ணம் சமமாய் வெயிலில் பிடித்து அடியில் தோன்றும் ஒளிப்புள்ளியில் பற்றிக்கொள்ளக் கூடிய எவ்வஸ்துவையாவது பிடிக்க உடனே நெருப்பு அண்டிக்கொள்ளும்.

பளிங்குபோன்ற எவ்வஸ்துக்களின்மூலமாயாவது ஒளி ஊடுருவிச் சென்றால் அது பளிங்கில் எப்பாகம் கனத்திருக்கிறதோ அப்பாகமாய் வளையுந் தன்மையையுடையது. மேற்குறித்த இரண்டு சாமான்களில் சலம் வார்த்த பின்பு ஓரத்தைவிட நடுவில் அதிக சலம் இருப்பதால், ஒளியானது மேற்புறம் புகுந்து நடுப் பக்கமாய் வளைகிறது. இப்படி வளைவதினால் தான்ஒளியின் கிரணங்கள் சற்றுத்தூரம் சென்றுஒன்று கூடி ஒளிப்புள்ளி யாகிறது. ஒரு பூதக்கண்ணாடியையெடுத்து கையால் தடவிப்பார்த்தால் நடுவில் விம்மியும் ஓரம் இலேசாயு மிருக்கும். அநேகர் நெருப்பு பற்றுங்குணம் நெருப்புக்கண்ணாடி செய்யப்பட்ட கலப்புத் திரவியங்களாலுண்டாகிற தென்றும், ஜலம் நீர்க்கட்டி, கடலுப்பு முதலான தெளிந்த பதார்த்தங்களால் செய்யப்பட்ட பூதக்கண்ணாடியை வெயிலில் பிடிக்கின் நெருப்பு பற்றாதென்றும் எண்ணுகின்றனர். இது தப்பிதம். மேற்சொன்னபதார்த்தங்களால் செய்யப்பட்ட பூதக்கண்ணாடிகளால் நெருப்பு தவறாது பற்றும்.

பந்துபோல் திரண்டும் உள்ளே போலாயுமிருக்கும் ஒரு கண்ணாடிக் குவளையில்ஜலம் வார்த்து வெயிலில் பிடிக்க அதுவும் சூரியன்சுடரை கீழேஒன்றாய்ச் சேர்க்கும். அவ்விடத்தில் பற்றிக்கொள்ளக் கூடிய எவ்வஸ்துவையும் பிடிக்க, தீ அண்டிக்கொள்ளும். கண்ணாடி உண்டை போலாயல்லாது கெட்டியாயுமிருக்கலாம். இவ்வுண்டைகளை துப்பாக்கி மருந்து வெடில் மருந்து இருக்கும் இடங்களில் வைக்கக் கூடாது. ஏனெனில், வெய்யில் கண்ணாடியின் மேல் விழுந்தால் அதின் கிரணங்கள் கீழே சென்று ஒளிப்புள்ளியாய்க்கூடி அக்கினியை உண்டாக்கும்.

மா. நடேசன்.

சிறுவர்க்கான பக்கம்.

[விவேக சிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

தாதா எழுதிய கடிதம்.

IV.

பிள்ளைகளே! பெண்மணிகளே! என் கண்ணின் கருமணிகளே!

நான் மூன்றுந்தரம் உங்களுக்குக் கதைசொல்ல வந்தபோது என்தங்கை பள்ளிக்கூடம் போனதைப் பற்றிச்சொல்ல இருந்தேன். ஆனாலும் அப்பொழுது எனக்கு உடம்பு ஒன்றும் சரியாக இல்லாமல் போனதினால் சிலசிறுகதைகளைச்சொல்லி பொழுதுபோகிற வேளையில் உங்களை வீட்டுக்கு அனுப்பி விட்டேன். அதற்கப்புறம் இரண்டுமாசமாக ஒரு பரீக்ஷையின் நிமித்தமாய் உங்களை நேரில் வந்து கண்குளிரப் பார்ப்பதற்கு ஒழிவில்லாமல் "நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்"—"சூதும்வாதும் வேதனைசெய்யும்" என்கிற நீதிக் கதைகளை எழுதித் தபால்மூலமாக அனுப்பினேன். இந்நாளில் கிழங்கட்டுகள் கூடப் பரீக்ஷைகொடுத்துக் கொண்டிருந்தால்தான் காலத்தை நல்லபடி க்ஷேமமாகத் தள்ளிக்கொண்டு போகலாம். நான் கொடுத்த பரீக்ஷையை இன்னதென்று உங்களிடத்தில் சொன்னால் நீங்கள் "இன்னு! தாதா! பதினெட்டு இருவது வயசு பசங்கள் படிக்கிற பரீக்ஷைக்கா இப்ப போனே" என்று பரிகாசம் பண்ணுவீர்கள். என்னுடைய தகப்பனார் நான் நன்றாகப் யடித்துக்கொண்டிருந்த காலத்தில் திடீரென்று ஒரு வியாதிகண்டு இறந்துபோய் விட்டார்; அதனால் நான் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு ஒரு உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு சமுசாரத்தைப்பார்த்துக்கொள்ள வேண்டிய தாயிற்று. இப்போது குடித்தனம் பெருகிவிட்டது: குழந்தைகள் நால்வர் ஆய்விட்டார்கள். எனக்குசம்பளம் வருகிறது போதுமானதாக இல்லை, எங்கள் துரை பெரிய பரீக்ஷை கொடுத்தவர்களுக்கே உயர்ந்த சம்பளங் கொடுக்கிறான். அதனால் நானும் நரைத்துப் பழுத்தவனாகியும் ஒரு பெரிய பரீக்ஷை கொடுக்கும்படியாயிற்று. ஆகையால் நீங்கள் இந்த இளம்பிராயத்திலே தானே சற்று ஊக்கமாகப் படியுங்கள். அதிகவயதாகிவிட்டால் ஒருபக்கம் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு உத்தரவு சொல்வதோடு, ஒருபக்கம் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு இரவில் கண்விழித்து விளக்கின் எதிரில் கஷ்டமான பாடங்களை நிதானமாகப் படிப்பது அதிக வருத்தமாகத் தோன்றும். இதுவுமல்லாமல் பரீக்ஷையில் சின்னஞ்சிறு பிள்ளைகள் நமக்கு மேலே போய்விட்டால் பரீக்ஷைகொடுத்தும் ஒரு சந்தேகம் பக்ஷம் அவமானம்உண்டாகும். ஆகையால் "இளமையிற்கல்" என்பதையும் "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்பதையும் மறவாமல், "நாறுநாள் ஓதி ஆறுநாள் விடத்தீரும்" என்கிறபடியால்பாடம்எதினும் எடதனைக் கைவிடாமல், "ஓதுவதொழியேல்" என்பதையும் "கற்கை நன்றே கற்கை நன்றே" என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு, அகோராத்திரம் கல்வியைப் பாராட்டிக்கொண்டிருங்கள். ஏனென்றால் எப்படியும் "வித்துவான் தனவான்" அல்லவா. இது கிடக்கட்டும்.

இப்பொழுது இளவேனில் என்கிற வசந்தகாலம் வந்துவிட்டது. காற்று அதிக ஆரோக்கியமாக அடிக்கிறது. அதோ தெரிகிற அந்தச் சோலைக்குப் போகலாம் வாருங்கள். சோலையின் சமீபமாகப் போகப் போக எப்படி புஷ்பவாசனை பரிமளிக்கிறது பார்த்தீர்களா. கிளிகள் கொஞ்சுவதையும் குயில்கள் பாடுவதையும் உற்றுக்கேளுங்கள். வீணை வாத்தியங்கூட இதற்குச் சமானமாகுமா. இதோ இந்த மாமரத்தைப் பாருங்கள்: பச்சைக் கம்பளியால் கூடாரம் அடித்திருக்கிறதுபோல் காணப்படுகிறதே: சடைவிரித்திருக்கும் சந்நியாசிகளைப்போல் காணப்படுகிற அந்தக் கூந்தல்பனை மரங்களைப் பாருங்கள். அதோ அந்த குலைதள்ளி யிருக்கிற வாழை மரத்தையும் அதைச்சுற்றி யிருக்கிற கீழ்க்கன்றுகளையும் பாருங்கள்: குலைதள்ளியிருக்கிற வாழையானது கற்றுத் தெளிந்த பெரியோர்களைப்போல வணங்கி நிற்கின்றது: கீழ்க்கன்றுகளானவை, சொன்னாலுங் கேளாமல் சுயபுத்தியுமில்லாமல் கர்வத்துடன் முடுக்கா இருக்கின்ற மூடர்களைப்போல நிமிர்ந்திருக்கின்றன. வேலியில் நிற்கின்ற ஒதியமரத்தைப் பாருங்கள். இது இப்படி பெருகி வளர்கின்றது; என்ன பிரயோசனம். இது பெருத்துத் தூண் ஆகப்போகிறதா. மேலும் மற்ற மரங்களெல்லாம் பச்சைப்பசேலென்று பூத்துத் தழைத்திருக்கிற இந்தக் காலத்தில் இந்த ஒதியமரமானது, சுற்றிலும் பசுமையாக இருக்கிற இனத்தாரைக் கண்டு பொறாமையடைந்து பின்னும் தரித்திரத்தால் அழிந்துபோகிற மனிதர்களைப்போல் இலைமுதலிய ஒன்றுமில்லாமல்கட்டைத்தடியாக நிற்கின்றது. இன்னும் இந்த ஒதியமரமானது, அநேகர் நிறைந்திருக்கிற சபையிலே ஆடைகுலைந்தும் மானமில்லாமலும் நிற்கின்ற அறிவிலிகளைப்போலவும் காணப்படுகின்றது. அதன்பக்கத்தில் நிற்கிற பனைமரத்தைப் பாருங்கள். "தேம்படு பனையின் திரள்பழத்தொருவிதை வானுறவோங்கி வளம்பெற வளரினும் ஒருவர்கிருக்க நிழலாகாதே" என்பதாக இந்த மரத்தைப் பழித்தலாகாது. இதன் ஓலையைக்கொண்டு கூரைவேய்ந்தால்ஒருவரல்ல. ஆயிரம்பேர்க்கும் நல்ல நிழலைத் தருமல்லவா. "கிழமைப்படவாழ்" என்கிற வாக்கியத்துக்கு இராமாநுஜகவிராயர் என்கிற பெரிய வித்துவானானவர் "உன் உடம்பாலும் பிறருக்கே பயன்படும்படி வாழவேண்டும்" என்று அர்த்தம் சொல்லியிருக்கிறார். அந்த வாக்கியத்தின் அர்த்தத்தை இந்தப் பனையினிடத்தில் தான் நான் கண்டிருக்கிறேன். மனிதர்கள் புத்தி உடையவர்களாக இருந்தும் ஒவ்வொரு உபகாரம்செய்வது கஷ்டமாக இருக்கிறது: சில பெரியமனிதர்கள் வாய்திறந்து வாசா கைங்கரியஞ் செய்வதுகூட கஷ்டமாக இருக்கிறது: அல்லவென்று கொஞ்சம் செய்தாலும் அக்கிராரத்து நாயைப்போல பிரதிஷ்டைக்கே செய்கிறவர்களாக இருக்கிறார்கள். அதிலும் சிலர் எதிரிகளால் கொஞ்சநஞ்சம் பிரதியுபகாரத்தை நோக்கியே செய்கின்றவர்களாய் இருக்கிறார்கள். பனங்கிழங்கை மண்ணின்கீழே போட்டுவிட்டால் அதன்மேல் ஒரு கரண்டி தண்ணீர்கூட விடுவதில்லை. அப்படியிருந்தும் அது, எத்தனை கஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுத்துக்கொண்டு வளர்ந்து பெருமை அடைகின்றவர்களைப்போல, ஓங்கிவளர்ந்து, ஒரு பிரதியுபகாரத்தையும் வேண்டாத தலைவள்ளல்களைப்போல, பல பல விதமான பயன்களைத் தருகின்றது. இதனால்தான் இந்த மரத்தைப்பழைய வித்துவான்கள் பூலோக கற்பதரு என்று சிறப்பாகப் புகழ்ந்தார்கள். இன்னும் இங்குள்ள மற்ற மரங்களையும் பாருங்கள். இந்தச் சோலையில் இருப்பது இப்பொழுது எனக்கு எப்படியிருக்கிறதென்றால், "உள்ளேவயிறெரிய உதடுபழஞ்சொரிய" என்பதற்கு விரோதமாய் மனப்பூர்த்தியுடனேமுகமலர்ந்து விருந்திடுகின்றவர்களுடைய வீட்டிலே இருக்கிறதுபோல அதிக சந்தோஷமாக இருக்கிறது. அதோ அந்தக் குளத்தைப்போய்ப் பார்க்கலாம் வாருங்கள்.———இந்தக் குளத்தின் தண்ணீரைப் பார்த்தீர்களா. எப்படி கண்ணாடியைப்போல மாசமருவில்லாமல் தெளிவாக இருக்கிறது. கள்ளங்கபடு, சூதுவாது அறியாதவர்களுடைய மனங்கூட இப்படித்தான் துல்லியமாக இருக்கும். அப்படிப்பட்டவர்களுடைய சிநேகமானது எப்படி மனத்தின் கெடுதியைப் போக்கி நன்மையைக் கொடுக்குமோ அதுபோலவே இந்தக்குளத்தின் தண்ணீரானது, குடிக்கவும் குளிக்கவும் உபயோகப்படுத்தினால், உடம்பின் வியாதியைப்போக்கி சுகத்தைக் கொடுக்கும். இந்தக்குளத்தில் இருக்கிற தாமரையைப்பாருங்கள். இந்தத் தாமரைப் புஷ்பங்களின் குணம் என்னவென்றால்:—பொழுது விடியும்போது மலர்வதும் பொழுதுபோகும்போது மூடிக்கொள்வதுமாம். இந்தத் தாமரை மலர்களின்மேல் சஞ்சரிக்கின்ற அன்னப் பறவைகளைப் பாருங்கள்: கிடைத்தமட்டில் திருப்தியடைந்து, வீண் விவகாரங்களில் பிரவேசிக்காமல் சத்காலக்ஷேபஞ் செய்கிறவர்களைப்போல, மனச்சஞ்சலமில்லாமல் குலவிக்கொண் டிருக்கின்றன. நல்லது, இந்த நெல்லிமரங்களின் நிழலில் உள்ள மணல் மேட்டில் உட்காரலாம் வாருங்கள். என் தங்கை பள்ளிக்கூடம் போய்ப் படித்த வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

என் தங்கைக்கு எட்டுவயதாகும்போது ஒருநாள் என் தகப்பனார் என்னையும் என் தங்கையையும் காற்றுவாங்கும் பொருட்டாக உலாவி வரலாமென்று அழைத்துக்கொண்டு போனார். போகும்போது எங்கள் தெருவிற்கு மூன்றாவது தெருவிலிருந்து சிறு பெண்கள் எண்மரும் பதின்மருமாக கும்பல் கும்பலாய் வருவதைக் கண்டு என் தங்கையானவள் தகப்பனாரை நோக்கி "இந்தப் பெண்கள் எங்கிருந்து வருகிறார்கள்?" என்று கேட்டாள்.

தகப்பனார் "இவர்கள் ஹிந்துபாலிகா பாடசாலையில் படிக்கிற பெண்கள்" என்றார்.

என் தங்கை—"பாலிகாபாடசாலையா?"—

"அதென்ன?" என்று கேட்டாள்.

தகப்பனார்—"பாலிகாபாடசாலை" என்றால் பெண்கள் படிக்கிற பள்ளிக்கூடம்.

என் தங்கை—"அட! இத்தனைநாளாக, பெண்கள் பள்ளிக்கூடம்போய் படிக்கிறசங்கதி எனக்குத் தெரியாதே. எல்லாரும் என்னைப்போல வீட்டில் தாய் தகப்பன்மாரிடத்திலும் அண்ணன் தம்பிமாரிடத்திலும் படிப்பார்கள் என்றல்லவோஇருந்துவிட்டேன். என்னையேன் அங்கே அனுப்பவில்லை."

தகப்பனார்—"இத்தனைநாள் நீ சின்னஞ்சிறிய குழந்தையாயிருந்தாய். அதனால் வீட்டிலே பாடஞ்சொல்லிக்கொண்டு வந்தேன்."

என் தங்கை—"இந்தப்பெண்கள் கையில் குடையும் காலில் ஜோடும் அக்குளில் புத்தகக் கட்டுமாகப் போகிறதைப் பார்த்தால் எனக்கு அந்தப்படியே செய்ய ஆசையாக இருக்கிறது."

தகப்பனார்—"நல்லது பார்க்கலாம்."

என் தங்கை—"நாளைக்கே போகவேண்டும். இல்லாவிட்டால் இராத்திரிக்கு தூங்கமாட்டேன்."

தகப்பனார்—"சாயரக்ஷை வீட்டிற்குப் போனவுடனே உன்னுடைய தாயாரைக் கேள். அவள் சம்மதித்தால் அனுப்புகிறேன். ஆனால்—"

என் தங்கை—"அதெல்லாங் கூடாது. நாளைக்கு எப்படியானாலும் நான் போகவேண்டும்."

தகப்பனார்—"இப்போது புரட்டாசி மாசம், பாடங்களெல்லாம் முக்கால்பங்கு ஆயிருக்கும், தை மாசத்தில் பள்ளிக்கூடம் இருக்காது. சங்கராந்திக்காக விடுமுறை விடுவார்கள். மாசி மாசத்தில் பள்ளிக்கூடந் திறந்து அந்தந்த வகுப்பில் முதலிருந்து பாடங்கள் நடக்கும். நீயும் அப்போதுபோய்ச் சேர்ந்தால் கிரமமாகப் படிக்க முடியும்."

என் தங்கை—"அப்படியானால்நான்போய் படிக்க வேண்டிய பாடங்களை இதுமுதற்கொண்டு எனக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்"

தகப்பனார்—"நல்லது ஆகட்டும்"

இப்படியாகப் பேசிக்கொண்டே நாங்கள் வரும்போது நான் "நாயனா! நான் எப்போது பள்ளிக்கூடம் போகிறது?" என்றேன்.

அதற்கு அவர் "அப்பா! உனக்கு அவசரம் ஒன்றும் இல்லை. பெண்கள் பனிரண்டு வயதுக்குமேல் பள்ளிக்கூடம்போக உதவாது. ஆகையால் அவர்கள் சீக்கிரம் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டியவைகளைப் படிக்கவேண்டும். ஆண்பிள்ளைகள் எப்படியும் பத்துவயதில் பள்ளிக்கூடம்போகலாம்" என்றார்.

நானும்சரிதானென்று பேசாமலிருந்து விட்டேன்.

நாங்கள் வீட்டுக்கு வந்தவுடனே எங்கள் அத்தையம்மாள் எங்கள் வீட்டுக்கு வந்திருந்ததைக்கண்டு அதிகசந்தோஷமாய்க் குதித்துக்கொண்டே அவர்களிடம் ஓடினோம். அவர்கள் எங்களிருவரையும் கையில் ஒருவராக அணைத்துக்கொண்டு முத்தங்கொடுத்து பின்பு மடியிலிருந்து ஒவ்வொரு பணியாரப் பொட்டலம் எடுத்துக் கொடுத்தார்கள்.

எங்கள் தகப்பனார் கை காலலம்பிக்கொண்டு கூடத்தில் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு எங்கள் அத்தையைப் பார்த்து "அம்மா! எப்போது வந்தாய்" என்று கேட்டார்.

அத்தையம்மாள்—"நான் வந்து அரைநாழி யாகிறது" என்றார்கள்.

தகப்பனார்—"அத்தானவர்கள் எப்படி யிருக்கிறார்?"

அத்தை—"க்ஷேமமாயிருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமென்று அதிக அவாவாக இருக்கிறார். பொங்கல் கழித்து வருவார்"

தகப்பனார்—"அம்மா! ஆநந்தவல்லி! குழந்தைகள் எப்படி யிருக்கிறார்கள்? அவர்களை ஏன் அழைத்து வரவில்லை?"

அத்தை—"குழந்தைகள் க்ஷேமந்தான். அதுகள் தகப்பனையும் பாட்டியாரையும் விட்டுவரமாட்டோமென்றதுகள், அதன்மேல் நான் மாத்திரம் தம்பியைத் துணைகூட்டிக்கொண்டுவந்தேன்."

தகப்பனார்—"ஆறுமுகம் என்ன படிக்கிறான்? விசாலாக்ஷி பள்ளிக்கூடம் போகிறாளா?"

அத்தை— "ஆறுமுகம் பள்ளிக்கூடம் போகிறான்: அவன் படிக்கிறது என்னமோ இரண்டாவதோ மூணாவதோ கிளாஸ் என்று சொன்னான். விசாலாக்ஷிக்கு அத்தானவர்கள் வீட்டில் என்னமோ கொஞ்சம் சொல்லிக்கொடுக்கிறார். ஆனாலும் அவளுக்கென்ன, அல்லியரசாணிமாலை - ஏணியேத்தம் - பவழக்கொடிமாலை இதெல்லாம் படிக்கத்தெரியாது. என்னமோ முதல் பாடமாம். அஞ்சாம்பாடமாம். பவுண்டு ஷலிங்கு பென்சாம். அப்புறம் வந்து——"

இதற்குள் என்தங்கை ஓடிவந்து "அத்தே அத்தே! நான் மாசிமாசம் பள்ளிக்கூடம்போகப்போகிறேன். அண்ணாத்தை இப்ப இல்லை: இன்னம் இரண்டு வருஷம் கழிச்சி போகப்போகுது. விசாலாக்ஷியை இங்கே அனுப்பிவிட்டால் நாங்க இருவரும் ஒண்ணா பள்ளிக்கூடம் போவோம்" என்று சொன்னாள்.

அத்தையம்மாள்—"என்னாங்கண்ணாத்தே! இதென்ன என்மருமகளை எப்போ பள்ளிக்கூடம் அனுப்ப போறிங்கோ?"

தகப்பனார்—"அவனுக்கு பத்துவயசாக வேண்டும்."

அத்தை—"ஆ! நல்ல கொள்ளை. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா. பள்ளிக்கூடத்திலே மசிய வேண்டாமா. 'பிள்ளைக்கு வாத்தியாரும் பெண்ணுக்கு மாமியாரும்' என்பாங்க. பெண் எப்படியும் மாமியாரிடத்தில் வட்டத்திற்கு வந்துவிடும். பள்ளிக்கூடம் படிக்கிறபெண்கள் எனக்கு சரிப்படாது: அவர்கள் ராங்கிதீர்ந்து போகிறார்கள். பிள்ளையையல்லவா பள்ளிக்கூடம் அனுப்பவேணும்."

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போது எங்கள் தாயார் எல்லாரையும் சாப்பாட்டுக்கு அழைத்தார்கள். நாங்கள் சாப்பிடப்போய் விட்டோம். நல்லது வெய்யிலாகிறது. மற்ற வரலாற்றை இன்னொருநாளைக்குச்சொல்லி முடிக்கிறேன். வாருங்கள் வீட்டுக்குப் போகலாம்.

கிழவன்,

விசேஷக்குறிப்பு.

நமதுபத்திரிகை.

இந்த மாசமும் விவேகசிந்தாமணிக்குக் குறித்த 32-பக்கத்திற்குமேல் 8-பக்கம் அதிகமாகச் சேர்க்க நேரிட்டிருக்கிறது. தொடர்ந்துவந்த சில முக்கியமான விஷயங்களை முதல் வருஷம் முடியும் இந்த சஞ்சிகையில்தானே ஒருவாறுமுடிக்கவேண்டியதாக விருந்ததால் சிலவிஷயங்கள் மிக நீண்டோடிவிட்டதுபற்றி அதிகப்படி பக்கங்கள் சேர்க்கவேண்டிய தவசியமாக நேரிட்டது. அதுகாரணமாகவே இந்த மாசத்துப் பத்திரிகை வெளிவருவதும் கொஞ்சம் தாமதிக்கலாயிற்று.

அடுத்த சஞ்சிகையோடு விவேகசிந்தாமணி இரண்டாவதுவருஷத்து முதல்நெம்பர் சஞ்சிகை துவக்கமாகிறது. இதுவரையில் அந்தந்தமாசத்து சஞ்சிகை அடுத்தமாசம் முதல்வாரத்தில் வெளியாகி வந்தது. அடுத்துவரும் மேமீ த்து சஞ்சிகை முதல் அந்தந்த மாசத்திலேயே பிரசுரிக்கத் தீர்மானித்து அதற்குவேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறோம். புது ஏற்பாட்டுப்படி 1893 வரு மேமாசத்து சஞ்சிகை இந்த மேமீ 20 அல்லது 25வ வாக்கில் பிரசுரிக்கப்படும். விவேகசிந்தாமணிக்கு விஷயமெழுதுவோர் அவர்கள் அனுப்பும் விஷயம் எந்தமாசத்துச் சஞ்சிகையில் வெளியாக வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதற்கு முன் மாசம் 20வக்குள் அவர்களெழுதிய விஷயங்கள் நமதுகையில் வந்து சேரும்படி தயவுசெய்து முன்னிட்டு அனுப்புவார்களென்று கோருகிறோம். நமக்கு சொந்த அச்சுக்கூடமின்று. நமது பத்திரிகையை கூலிக்கு அச்சிட்டுப் பிரசுரிக்கவேண்டி யிருப்பதால் இப்பத்திரிகைக்கு எழுதும் கனவான்கள், இதற்கு எழுதுவதாற் செய்யுமுதவியோடு, நாம்மேலே கேட்டுக்கொண்ட அதிகப்படி யுபகாரமும் செய் துதவ மனமுவப்பார்களென்று நம்புகிறோம்.

இதுவரையில் நமது பத்திரிகைக்கு எழுதிவந்த கனவான்களுக்கும், நமதுசபைக்கு உபகாரிகளாயிருந்துதவிய கனவான்களுக்கும் நமது பத்திரிகையை வாங்கி ஆதரித்துவந்த கையொப்பக்காரர்கள் அத்தியக்ஷர்களாகிய கனவான்களுக்கும் நாம் நமது ஹிருதயபூர்வமான வந்தனமளிப்பதோடு இவர்களெல்லாரும் இதுவிஷயத்தில் ஒத்துநின்று அடுத்த வருஷத்திலும் நமக்குக் கைகொடுத் தாதரிப்பார்களென்று ஒவ்வொருவரையும் விநய பூர்வமாய்க் கேட்டுக்கொள்கிறோம். நாம் இப்பத்திரிகையைத் துவக்கியபொழுது ஒருவருஷகாலத்திற்கு என்ன நஷ்டம் வரினும் இதைக் கைவிடாமல் தொடுபிடியாய்த் தொட்டு நடத்தி, இவ்வித பத்திரிகை யொன்றிருக்கவேண்டிய தவசியந்தானாவென்று பரீக்ஷை பார்த்திடுவோமென வெளியிட்டோம். நாம் கொடுத்த வாக்குக்குக் குறைவின்றி குறித்த ஒருவருஷகாலமும் கழிந்ததைப் பற்றி மிகச்சந்தோஷப்படுகிறோம். இந்த ஒருவருஷ அனுபவத்தில் இப்பத்திரிகை எல்லா ஜனங்களுக்கும் உண்மையில் அறிவைப் பரவச்செய்யத்தக்கதாவதற்கு இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்களும் அபிவிர்த்தியும் செய்யவேண்டுமென்று நாமறிந்துகொண்டதோடு, இவ்விதமான பத்திரிகையொன்று நிலைபெற்று நடந்துவர வேண்டியது அத்தியாவசியகமென்றும் ஐயந்திரிபற அறிந்துகொண்டோம். ஆனால் பத்திரிகை செலவுக்கு வரவு கட்டிவராமல் அதை நடத்துவோர்க்கு நஷ்டமுண்டுபண்ணுவதாக விருக்கிறது. முதல் வருஷத்தில் நமக்கு நேர்ந்த நஷ்டத்தைப்பற்றி நாம் முறையிடவில்லை. இந்த இரண்டாவது வருஷத்திலாவது இப்பத்திரிகை அதன்மட்டிற்குப் பிடிக்கும் செலவுக்கேற்ற வரவுள்ளதாய், அதை நடத்துவோர்க்கு ஒரு பெரும் பாரமாயில்லாமலிருந்தால் அதுவே நமக்குப் போதுமானது. இது விஷயமாக நாம் பட்ட சிரமத்துக்கும், மனக்கவலை, விசாரங்களுக்கும் அதுவே போதுமான வெகுமானமாம். இப்பத்திரிகை நிலைபெற்று நீடுழிவாழ்ந்து அது ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிவரத் தக்கதாயிருப்பின், அதுவே நாம் இன்னமும் இதுவிஷயத்தில் வேண்டிய சிரமமெடுத்துழைத்துவரப் போதுமான தூண்டுதலாகும்,

நாம் நமது தேக மனோசக்திக்கு இசைந்தவாறு நம்மாலானமட்டும் இப்பத்திரிகையை முன்னுக்குக் கொண்டுவர விடாபிடியாக வுழைத்துவர எப்போதும் சித்தமாகக் காத்திருக்கிறோம். பத்திரிகை யாரம்பித்ததுமுதல் நமது முயற்சியை யாதரித்து இது விஷயம் கடைத்தேறுவதற்கு வேண்டிய உதவிகள் யாவும் புரிந்துவந்த கனவான்கள் யாவரும் மத்தியில் கைவிடாது நின்றாதரிப்பார்களென்றும் உறுதியாய் நம்புகிறோம். அவர்கள் ஆதரவின்றி நாம்நமது அற்ப சக்தியைக்கொண்டு செய்யும் யத்தனங்கள் யாவும் பயன்பெறாதொழியு மென்பது திண்ணமே. ஆதிமுதல் நாம் நம்மிலும் பெரியோர் உதவி இக் நல்விஷயத்தில் நமக்குச் சித்தமாய்க் கிடைக்குமென்னுமுறுதியான நம்பிக்கையாலே இம்மகா பெரியவிஷயத்திற் பிரவேசிக்கலானோம். இன்னமும் அந்நம்பிக்கையுறுதியாலே இது விஷயத்தில் தொடர்பிடியாக நின்று முயற்சிக்கத் துணிகிறோம். கடந்தகாலத்தில் நமது நம்பிக்கை மோசம்போகவில்லையென்று கண்டோம். இனி வருங்காலத்திலு மப்படியே சித்திக்குமென்று நம்புகிறோம். நம்பியே இப்பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தத் துணிகிறோம். அறிவைப் பரவச்செய்யும் விஷயத்தி லபிமானமுள்ள எல்லாரும் ஆளுக்குக் கொஞ்சமாகக் கைகொடுத்து இப்பத்திரிகையின் நோக்கம் நிறைவேறுங்காரியம் இனிதுமுடியுமாறு அவரவர்க்கு இசைந்தமட்டி லுதவிபுரிந் தாதரிப்பார்களென்று பிரார்த்திக்கிறோம்.

இப்பத்திரிகையை இந்தமாசத்து சஞ்சிகை முதல் வெளிஜில்லாக்களிலுள்ள லோகல்போர்டுகள் விசாரணையிலிருக்கும் பாடசாலைகளெல்லாம் அநேகமாக வரப்பெற்று வருவார்கள். பலதாலூகா போர்டுகள் ஏற்கனவே அவர்கள் ஆதரவின்கீழுள்ள பாடசாலைகளுக்குத் தக்கபடி இப்பத்திரிகையில் பல பிரதிகள் வாங்கத் தீர்மானித்து அந்தப்படி சில தாலூகாபோர்டு ப்ரெஸிடெண்டுகள் உத்தரவுமனுப்பிவிட்டார்கள். மற்றும் சில தாலூகாபோர்டு ப்ரெஸிடெண்டுகளின் உத்திரவு சீக்கிரத்தில் கிடைக்கு

மென்று எதிர்பார்க்கிறோம். இன்னும் சில தாலூகா போர்டார்கள் இது விஷயமாய் அவர்களுக்கு நாமெழுதிய கடிதத்திற்கு இன்னும் பதிலெழுதவில்லை. இப்பத்திரிகை 4-வது, 6-வது டிவிஷன் அஸிஸ்டெண்ட் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களால், லோகல் பண்டு பாடசாலைகளுக்கு உபயோகமானதாக ஏற்கனவே சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகை கிடைக்கப்பெறாத லோகல்பண்டு ஸ்கூல்மாஸ்டர்கள் சேர்ந்து அவரவர்கள் தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டுகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டால் போர்டார் செலவில் இப்பத்திரிகை வரப்பெற்றுக்கொள்ளலாம். லோகல்பண்டுகளி லிருந்து யாதொரு உதவியும் பெறாத அந்தரங்க பாடசாலைகளின் தலைவர்கள் தங்கள் சொந்தத்தில் இப்பத்திரிகையை வாங்க ஐவேஜ் போதாமலிருந்தால், அவர்களுக்கு லோகல்பண்டிலிருந்து 'கிராண்டு' மூலமாகத் திரவியசகாயம் கிடைக்குமட்டும் இப்பத்திரிகை அவர்களுக்குக் கொஞ்சம் சரசமாகக் கிடைத்துவர ஏற்பாடு செய்யப்படும். இவ்வேற்பாட்டால் பயன்பட விரும்பும் ஸ்கூல் தலைவர்கள் தங்கள் ஸ்கூலுக்கு சர்க்காரிலிருந்தாவது, லோகல்பண்டிலிருந்தாவது யாதொரு உதவியும் கிடைக்கவில்லையென்பதற்கு ஆதாரவான குறிப்பு அல்லது'ஸர்டிபிகேட்' ஒன்று கூடவைத்து எழுதிக்கொள்ளவேண்டும்.

பழையகையொப்பக்காரர்களில் பத்திரிகைவேண்டாமென்று தெரிவிக்காதவர்க்கெல்லாம் அடுத்தவருஷத்திற்கும் பத்திரிகை தொடர்ச்சியாய் அனுப்பப்பட்டுவரும். அடுத்தவருஷத்திற்கும் கையொப்பக்காரர்களாயிருக்க விரும்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்கிறவர்கள் அடுத்தவருஷத்துக்குரிய சந்தாதொகையை முன்பணமாகக் கட்டிவிடவேண்டும். வருகிற ஜூலை மாசம் முடிவதற்குள் 2-வது வருத்திற்கு முன்பணம் கட்டாதவர் வருஷம் 1-க்கு ரூபா 4-விகிதம் சந்தா செலுத்தவேண்டிவரும். இந்த மூன்றுமாச கெடுவிற்குள் கட்டிவிட்டால் வருஷம் 1-க்கு ரூபா 3. 6மீத்திக்கு ரூபா 1—12—0; இந்தவருஷம் முதற்கொண்டு முன்பணம் கட்டவேண்டிய இவ்விதியைக் கண்டிதமாகஅனுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதால் குறைந்தசந்தா விகிதப்படி பணங்கட்ட விரும்புவோர் காலதாமதம் செய்யாமல் குறித்த தவணை கழிவதற்குள் அவர்கள் சந்தா தொகையை முன்பணமாகக் கட்டிவிடக் கோருகிறோம்.

போனவருஷத்துச் சந்தா பாக்கிவைத்துக்கொண்டிருப்பவர்கள் இந்தமாச முடிவதற்குள் பணமனுப்பாவிட்டால் அவர்களிடத்திலிருந்து வருஷத்துக்கு ரூபா 4-விகிதம் சந்தா வசூல் செய்யப்படும்.

REFRESHMENT AND CONFETIONERY OF THE BEST SORT CAN BE HAD OF
H. RAMASWAMIAH,
335, *Thambu Chetty Street*,
Black Town.

The above Refreshment Room was started last year to meet a long felt want in the locality and it has ever since obtained a very satisfactory opinion of the Public. It is situated near the New Law Courts. The Proprietor requests the public to encourage him by giving him their support and patronage.

The Waterbury Watch.
வாடர்பரி வாட்சு.



இது ஒரு நல்ல கைக்கடியாரம். அனேக வருஷகாலத்துக்குப்பிசகின்றி சரியாக ஓடும். பார்வைக்கு நேர்த்தியானது. ஒரு வருஷத்துக்கு சரியாய் ஓடுமென்று உறுதிப்பத்திரம் கொடுக்கப்படும். சென்ற 6-வருஷகாலங்களில் சென்னைஇராஜதானியில் மட்டும் 16,000 கடியாரங்கள் விலையாகி யிருக்கின்றன. விலை ரூபாய் 7—8—0 தான். தபாற்கூலி 4-அணா. வேண்டுவோர் சென்னை மவுண்டு ரோட்டு அடிஸன் கம்பெனிக்கு எழுதிக்கொள்ளவும்.

ADDISON & CO,
Mount Road,
MADRAS.

டப் அண்ட் கம்பெனி,
மவுண்ட் ரோட்டு.

இது நாட்பட்ட எச்சில் தழும்பு, மேகப்படை, ஸ்திரீகளுக்கு அரையில் உண்டாகிற இடுப்புக்கடி, மற்றும் தேகத்தில் உண்டாகிற பல சம்பந்தமான படைகளையும் நீக்கும். இரண்டொரு நாளிலேயே இதன் பிரயோசனத்தை யறியலாம். ஒரு டப்பியின் விலை ரூபா 1, பாக்கிங் சார்ஜ் அணா 2.

காச்சல் கட்டிச் சூரணம்

சகலவிதமான விஷசுரம், மலைநாட்டுச்சுரம் இவைகளால் மெலிந்துவயிற்றில் காச்சற்கட்டிகண்டு வருத்தமடைகிறவர்கள் இச்சூரணத்தைக் காலைமாலை சாப்பிட்டு வரவும். புட்டி 1-க்கு ரூபா. 1—8—0.

கரப்பான் களுக்குக் களிம்பு.

தாய்தந்தையர்களுடைய மேக சம்பந்தத்தினால் சிறு குழந்தைகளுக்குக் கால், கை மேக முதலிய இடங்களில் காணும் சகலவிதமான கரப்பான்களுக்குங் காலைமாலைகளில் மேலுக்குப் போட்டு வரவும்; மருந்து போடுமுன் வென்னீர் விட்டு அலம்பிவிடவேண்டும். கிரையம் ரூபா 1—0—0.

DUFF& CO.,
Chemists & Druggists,
MOUNT ROAD, MADRAS.